# சுவாமி விவேகானந்தரின்
# ஞான தீபம்

சுவாமிகள் பேசியும் எழுதியும்
அருளியவற்றின்
தமிழாக்கம்

# சுவாமி விவேகானந்தரின்
# ஞான தீபம்

சுவாமிகளின் நூற்றாண்டு விழாப் பதிப்பு

சுடர் – 2

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் :: சென்னை-4

சென்னையில் மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண
மடத்துத் தலைவரால் வெளியிடப்பட்டது.

1847-ஆம் ஆண்டுச் சட்டப் பிரிவு XX-ன்படி
உரிமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

சாதாரணக் கட்டடம் ரூ. 5-00
காலிக்கோக் கட்டடம் ரூ. 6-50

அச்சிட்டோர் :
கபீர் பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை-5.

# முன்னுரை

திருவளர்ந்தோங்கும் பரத கண்டத்திலே அவதரித்து, குரு
வருளும் திருவருளும் பெற்று, ஆணையால் ஊரையும் நாட்டையும்
உலகத்தையும் தம்மைப் போலாக்கும் ஞான ஒளி பரப்பி உய்
விக்கக் கருதினார் வீர மாகுரவர் சுவாமி விவேகானந்தர். அவர்
பரம்பொருளோடு மன்னிக் கிடந்து யோகத் துயிலில் அமர்ந்து
அறிவுற்று விழித்த பின் மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு
வேதாந்தச் சிங்கம் போல மேலை நாடும் கீழை நாடும் திரிந்தார்.
சென்னையிலிருந்து சிக்காகோப் பல்சமயப் பெருமன்றத்திற்குச்
சென்று தொண்டாற்றத் தொடங்கிய காலை, இறைமைப் பண்பாம்
அமுத ஆழியுட்புகுந்து முகந்துகொண்டு, நா வீறுடைய
ஆசாரிய பதத்தில் ஏறினார்; அருட்காளமுகில் வடிவாய் மெய்ப்
போத ஒளியினை மின்னலென வீசினார். அகப்பகைகள் அஞ்சி
நடுங்கி யொழியும்படி அம்முகில்போல அதிர்ந்து, சார்ங்கம்
உதைத்த சரமழைபோலச் சொன்மாரியை அமெரிக்க நாட்டிலும்
ஏனைய நாடுகளிலும் பொழிந்து மக்களை விழித்தெழச் செய்து,
சென்றவிடமெல்லாம் ஞான நற்பயிர் தழைக்கச் செய்து
வந்தனர்.

அப்பெரியார் தம் மாபெருங்குரவரின் திருவடிக்கு இவ்வாறு
ஞானச் சுடர் விளக்கேற்றும் பணியினில் ஈடுபட்டிருந்த போது
அவரது திருவாயினின்றும் திருக்கரத்தினின்றும் வெளிவந்த
ஞான மொழிகள் அத்தனையையும் திரட்டிப் பத்துத் தொகுதிக
ளாக்கித் தமிழ் உலகம் தழைக்குமாறு தமிழாக்கம் செய்து
'விவேகானந்தரின் ஞான தீபம்' எனப் பெயரிட்டுப் பத்துச்
சுடர்களாக வெளியிடும் நோக்கம் பூணலானோம்.

'இராஜ யோகம்' என்ற பகுதியும், 'சமயமும் சமய குரவர்
களும்' என்ற பகுதியும் சேர்ந்தது இரண்டாம் சுடராய் மிளிர்
கின்றது. இவற்றில் 'இராஜ யோகம்' என்பதில் 'ஆசிரியரின்
முன்னுரை' என்பது தவிர ஏனைய பகுதி முழுவதையும் மொழி
பெயர்த்து உதவியவர் ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தர்; இரண்டாம்
பகுதியில் 'சமயம் என்பது யாது?', 'சமய உரிமைகள்', 'சமய
சாதனை', 'தருக்க அறிவும் சமயமும்', 'வேதங்கண்ட சமய
லட்சியங்கள்', 'இந்து சமயம்', என்னும் ஆறையும் ஸ்ரீமதி
கி. சாவித்திரி அம்மையாரும், 'சமயத்தின் பிறப்பு', 'சமயம்—
அதன் முறைகளும் நோக்கமும்', 'விரிவுப் போர்', 'சீடரியல்'

என்னும் நான்கையும் டாக்டர் என். சேஷாத்திரிநாதன் என்பவரும், 'இந்திய சமயக் கருத்து', 'புத்த பெருமான்' என்னும் இரண்டையும் ஸ்ரீ ரா. அரங்கநாதன் என்பவரும், 'புத்தர் உலகத்தாருக்குக் கொணர்ந்த செய்தி' என்பதை ஸ்ரீமத் சுவாமி பரமாத்துமானந்தரும், 'ஒருமையே சமயக் குறிக்கோள்', 'ஆன்மா, இறை, சமயம்', 'உலகம் தந்த சமயப் பெருங் குரவர்கள்', 'ஸ்ரீ கிருஷ்ண பகவான்', 'கிறித்து என்னும் தேவதூதர்', 'மகமது நபி' என்னும் ஆறையும், 'இராஜ யோகம்', 'ஆசிரியர் முன்னுரை'யையும் ஸ்ரீ ரா. தேசிகனும், 'என் குருநாதர்' என்பதை ஸ்ரீமத் சுவாமி சர்வக்ஞானந்தரும் மொழி பெயர்த்து உதவினர்.

இந்நூலைத் தமிழ்த் தாயின் தாளிணையிலே ஆர்வத்தோடு சமர்ப்பிக்கின்றோம். தமிழகத்தார் இதனை மனமுவந்தேற்று, சிரத்தையுடன் பயின்று, திருவருள் பெற்று இன்புறுவாராக.

பதிப்பாளர்

## பொருளடக்


I. இராஜயோகம்

ஆசிரியர் முன்னுரை ... 1

1. தோற்றுவாய் ... 5
2. முதற்படிகள் ... 19
3. பிராணன் ... 29
4. சித்துப் பிராணன் ... 44
5. சித்துப் பிராணனை வயப்படுத்துதல் ... 51
6. பிரத்தியாகாரமும் தாரணையும் ... 56
7. தியானமும் சமாதியும் ... 65
8. இராஜ யோக சங்கிரகம் ... 76

பதஞ்சலி யோக சூத்திரம்

தோற்றுவாய் ... 82

யோக சூத்திரம்

1. சமாதி பாதம் ... 88
2. சாதன பாதம் ... 126
3. விபூதி பாதம் ... 164
4. கைவல்ய பாதம் ... 184

அனுபந்தம் ... 201

II. சமயமும் சமய குரவர்களும்

சமயம் என்பது யாது ? ... 213

சமயத்தின் பிறப்பு ... 228

சமயம்—அதன் முறைகளும் நோக்கமும் ... 234

சமய உரிமைகள் ... 254

சமய சாதனை ... 272

தருக்க அறிவும் சமயமும் ... 290

ஒருமையே சமயக் குறிக்கோள் ... 312

வேதங்கண்ட சமய இலட்சியங்கள் ... 319

இந்து சமயம் ... 334

இந்திய சமயக் கருத்து ... 339

விரிவுப் போர் ... 344

ஆன்மா, இறை, சமயம் ... 348

சீடர் இயல் ... 365

பக்கம்

உலகம் தந்த சமயப் பெருங்குரவர்கள் ... 386
ஸ்ரீ கிருஷ்ண பகவான் ... 408
புத்த பெருமான் ... 420
புத்தர் உலகத்தாருக்குக் கொணர்ந்த செய்தி... 423
கிறித்து என்னும் தேவதூதர் ... 441
மகமது நபி ... 463
என் குருநாதர் ... 468

III. பொருட் குறிப்பகராதி ... 515

# இராஜயோகம்

(முதற் பகுதி)

# இராஜயோகம்

## ஆசிரியர் முன்னுரை

சரித உதயக் காலந்தொட்டு மனித இனத்தினிடையே மாபெரு
நிகழ்ச்சிகள் நடந்துள்ளன என்பது குறிப்பிடப்பட்டிருக்
கிறது. இத்தகைய நிகழ்ச்சிகளின் உண்மையை வலியுறுத்த,
விஞ்ஞானச் சுடர் திகழ்கின்ற சமுதாயங்களிலும் நவீன காலங்
களில் சான்றுகளில்லாமலில்லை. மூட நம்பிக்கையுள்ள அறிவிலி
களிடமிருந்தும் பிறரை வஞ்சித்தொழுகும் மாந்தர்களிடமிருந்தும்
எழுகின்ற மிகுதியான சான்றுகள் காரணமாக அது நம்பத் தகுந்த
தன்று. அற்புதங்கள் என்று கூறப்பட்ட பல நிகழ்ச்சிகளும் ஒன்
றைப் பார்த்து ஒன்று புரியப்பட்டனவே என்று மொழியலாம்.
ஆனால், அவை எதைப் பின்பற்றுகின்றன என்ற வினு
எழுமன்றோ?

எதையும் தக்க ஆய்வின்றி ஒதுக்குவது நேர்மையும் விஞ்
ஞானப் பண்பாடுமுள்ள மனத்தின் சின்னமன்று. வெறு வெளி
ஆராய்ச்சியுடன் நின்றுவிடும் விஞ்ஞானிகள் பற்பல மாபெரு மன
நிகழ்ச்சிகளின் இயல்பை அறியும் ஆற்றல் அற்றவர்களாய்,
அவற்றின் இருப்பைப் புறக்கணிக்கின்றனர்கள். தங்களுடைய
பிரார்த்தனைகள் யாவற்றையும் மேக மண்டலத்திற்கு அப்பா
லுள்ள ஒரு தேவனோ பல தேவர்களோ நிறைவேற்றுகின்றனர்கள்
என்று கருதுபவரைக்காட்டிலும்—அல்லது, தாம் இறைஞ்சுதற்
கிணங்கி அத்தேவர்கள் பிரபஞ்ச முறையை மாற்றிவிடுவார்கள்
என்று நம்புபவர்களைக்காட்டிலும், இந்த விஞ்ஞானிகள்
குற்றவாளிகளாவார்கள்.

பின்னவர்க்கு அறியாமை என்ற புகலுண்டு; இந்தத்
தேவர்கள் மீது சார்பைக் கற்பித்து, ஓர் இழிவு நிலைக்குக் கொண்டு
வந்த குறைபாடுள்ள கல்வித் திட்டமும் ஒரு காரணமென்று
சொல்லலாம். இந்த இழிவு நிலையின் அங்கமாகிவிட்டது இந்தச்
சார்பு. முன்னவர்க்கு இத்தகைய புகல் யாதொன்றுமில்லை.

பல்லாயிரம் ஆண்டுகளாக இத்தகைய நிகச்சிகளைப் பற்றிப்
படித்திருக்கின்றனர்; ஆராய்ச்சி புரிந்திருக்கின்றனர்; இவற்றைப்
பற்றிய பொது உரையும் கண்டிருக்கின்றனர். மனிதனது சமயத்
திறன்களுக்கு நிலைக்களனுயுள்ள வட்டம் முற்றும் துருவி ஆராயப்
பட்டிருக்கிறது. இவ்வாராய்ச்சியால் விளைந்த அனுஷ்டானமே

இராஜயோகமாகும். விளக்கந் தருவதற்குக் கடினமான மன நிகழ்ச்சிகளைப் புறக்கணிக்கும் சில நவீன விஞ்ஞானிகளின் மன்னிக்க முடியாத முறைபோல இராஜயோகம் இவற்றை மறுப்ப தில்லை. அற்புதங்களும், பிரார்த்தனைகளின் நிறைவேற்றமும், நம்பிக்கையில் பிறக்கும் ஆற்றல்களும் உண்மை நிகச்சிகளே யாயினும், அவை மேக மண்டலத்திற்கப்பாலுள்ள தேவன் அல்லது தேவர்களால் ஆவன என்ற மூட விளக்கத்தால் தெளிவுரு என்று மெய்ம்மைக் குருட்டு நம்பிக்கை உள்ளவர்கட்கு இந்த இராஜயோகம் அமைதியாயும் யாதோர் ஐயப்பாடின்றியும் எடுத் தோதுகின்றது. மனித இனத்தின் பின்னணியில் இருக்கின்ற கடலாகிய அறிவாற்றலானது வழிந்தோடும் வாய்க்காலாய் ஒவ் வொரு மனிதனும் திகழ்கின்றான் என்று இது முழங்குகின்றது. விருப்பங்களும் தேவைகளும் மனிதனிடம் உறைகின்றன. இவற்றை நிறைவேற்றும் ஆற்றலும் அவனிடம் உண்டு. எவ்வெவ் விடங்களில் எவ்வெக்காலங்களில் ஒரு விருப்பமோ, தேவையோ அல்லது வழிபாடோ நிறைவுற்றதோ, அது அதீதமான ஒன்றால் ஆகவில்லை; ஆனால், இந்த ஆக்கம் வரம்பு கடந்த சத்திக் களஞ்சியத்திலிருந்து பெருகிற்று என்று இது கற்பிக்கிறது. இயற்கைக்கு அதீதமான ஒன்றன் எண்ணம் ஓரளவுக்கு மனி தனது செயலாற்றலைத் தூண்டலாம். ஆயினும், அது ஆன்மிகத் துறையில் ஞானக் குறைவைக் கொணரும். அது அடிமைத் தனத்தை உண்டாக்கும்; அச்சத்தை எழுப்பும்; மூட நம்பிக் கையை விளைக்கும்; மனிதன் இயற்கையிலேயே பலவீனமானவன் என்னும் பயங்கரமான எண்ணப் படுகுழியில் தள்ளும்.

இயற்கையைக் கடந்தது ஒன்றில்லை; இயற்கையில் தூலத் தோற்றங்களும் சூக்குமத் தோற்றங்களும் உள்ளன என்றே யோகி உரைக்கின்றான். சூக்குமம் காரணமாகும்; தூலம் காரிய மாகும். தூலங்கள் பொறிகளால் எளிதில் உணரப்படுவன. சூக்குமம் அத்தகையதன்று. இராஜயோகப் பயிற்சி சூக்கும அறிவுகளை அடைவிக்கும் வழியாம்.

இந்திரியத் தத்துவத்தின் வைதிக முறைகள் யாவும், பூரணம் வாயிலாக ஆன்ம விடுதலையை எய்துவதையே குறிக்கோளாகக் கொண்டவை. யோகந்தான் இதன் முறை. 'யோகம்' என்னும் சொல் விரிந்த தடத்தைத் தழுவும். சாங்கியமும் வேதாந்தமும் பல்வேறான யோகத்தையே சுட்டுவன.

இந்நூலின் பொருள் இராஜயோகம் என்னும் யோக வகை யாகும். பதஞ்சலியின் யோக சூத்திரங்களே இராஜயோகத்தின்

சிறந்த பிரமாணமும் பாட புத்தகமுமாய் அமைகின்றன. மற்றைய தத்துவ ஆசிரியர்கள் சில அமிசங்களில் சிற்சில இடங்களில் பதஞ்சலியோடு மாறுபடினும், பொதுவாகக் கூறுமிடத்து அவர் கண்ட முறைக்கே தீர்மானமான ஆதரவு அளித்துள்ளார்கள்.

நியூயார்க்கில் வகுப்புகளுக்கு ஆற்றப்பட்ட சொற்பொழிவுகளே இந்நூலின் முதற்பாகம். பதஞ்சலியின் யோக சூத்திரங்களுக்குச் சற்று விரிவான மொழி பெயர்ப்பும் அதன் உடனடியான அமைவுரையும் இரண்டாம் பாகமாகும்.

இயன்றவரை சாத்திர சங்கேத நுணுக்கங்களை அகற்றி, எளிய பேச்சு நடைமுறையைப் பின்பற்றி எழுதவே முயற்சி செய்யப்பட்டுள்ளது. முதற்பாகத்தில் பயிற்சி செய்யும் மாணவர்க்குக் குறிப்பிட்ட சில எளிய முறைகள் கூறப்பட்டுள்ளன. சிலரைத் தவிர்த்து, மற்றவர்க்கு குரு நேரில் சுட்டிக் காட்டினுல் தான் யோகத்தை இன்னலின்றிக் கற்க இயலும் என்பதை அவர்க்குத் தீவிரமாகவும் குறிப்பாகவும் நினைவுறுத்துகின்ருேம். இச்சம்பாஷணைகள் இப்பொருளைப் பற்றி மேலும் அறிய அவாவைத் தூண்டுமாயின் இதனை விளக்கும் ஆசிரியர்க்குக் குறைவில்லை.

பதஞ்சலியின் தத்துவ அமைப்பு, சாங்கியத்தின்மீது நிறுவப்பட்டிருக்கிறது. வேறுபாடுகள் மிகச் சிலவே.

இரண்டு முக்கிய வேறுபாடுகளாவன :—(1) பதஞ்சலி முதற் குருவின் உருவமான சகுண பிரம்மத்தை ஒப்புக்கொள்கிருர். சாங்கியர் ஒப்பும் கடவுளோ, படைப்புச் சக்கிரத்தின் தாற்காலிக அதிகாரம் கொண்ட, கிட்டத் தட்டப் பூரணமான ஒரு புருடராவார்.

(2) யோகிகள், மனமும் ஆன்மா அல்லது புருஷன் போன்று, எங்கும் நிறைந்தது என்று கூறுகின்றனர்; சாங்கியர்களோ, அப்படி மொழியவில்லை.

—ஆசிரியர்

ஒவ்வொரு சீவான்மாவும் உள் நிறைந்த தெய்வத் தன்மை யுடையது.

அகத்தேயும் புறத்தேயும் சார்ந்து நிற்கும் பிரகிருதியை அடக்கி, உள் நிறைந்த தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதே சமயங்களின் நோக்கமாகும்.

கருமம், பூசனை, பிராணனை லயப்படுத்துதல், ஞானநூல் ஆராய்ச்சி—என்னுமிவற்றுள் ஒன்றினுலோ, பலவற்றினுலோ, யாவற்றினுலுமோ இதனைச் செய்து நிறைவேற்றிச் சுதந்திரனுய் இரு.

இதுவே சமயத்தின் முழு உண்மை. கொள்கைகளும், கருமங் களும், நூல்களும், கோயில்களும், பிறவும் இதற்கு உதவி செய்யும் சாதனங்களாய் அமைந்து நிற்பன.

# 1. தோற்றுவாய்

அறிவுத்துறை அனைத்தினுக்கும் அனுபவமே ஆதாரம். பொதுப் பொருளிலிருந்து சிறப்புப் பொருளை அறிதற்கும், சிறப்புப் பொருளிலிருந்து பொதுப் பொருளை அறிதற்கும் வழியாயிருக்கின்ற அனுமான அறிவு அனுபவத்தையே ஆதாரமாகக் கொண்டது. வரையறையாகிய விஞ்ஞான சாத்திரங்கள் என்னும் கலை நூல்களிலே உள்ள உண்மைகளை மக்கள் எளிதில் கண்டறிகின்றார்கள். விஞ்ஞானக் கலையின் முடிபுகள் ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய சொந்த அனுபவத்தினைச் சார்ந்திருப்பன. விஞ்ஞான சாத்திரி எதனையாவது நம்பும்படி சொல்லுவதில்லை; தனது சொந்த அனுபவத்திற்கண்ட சில முடிபுகளைக்கொண்டு நியாய வழியாக அவன் காட்டுகின்ற சித்தாந்தங்களை நம்பும்படி அவன் நமக்கு இயம்புகின்றான். அவ்வண்ணம் அவன் இயம்பும்பொழுது மக்கட்கூட்டத்தினருக்குப் பொதுவாக அமைந்துள்ள அனுபவத்தை ஏற்றுக்கொள்ளும்படியே அவன் நம்மைக் கேட்கிறான். வரையறையான விஞ்ஞான சாத்திரம் ஒவ்வொன்றிலும் மக்களுக்குப் பொதுவாயுள்ள ஆதார நியாயம் ஒன்று அமைந்திருக்கிறது; அது பற்றி அதனினின்று பெற்ற முடிபு உண்மையா, போலியா என்பதை நாம் உடனே காணுதல் கூடும். சமய சாத்திரத்திற்கு அத்தகைய ஆதாரம் உண்டா, இல்லையா என்னும் வினா எழுகின்றது. இவ்வினாவுக்கு உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் மறுமொழி சொல்ல வேண்டியவனாயிருக்கிறேன். பொதுவாக உலகெங்கும் போதிக்கப்படுகிற சமய சாத்திரங்கள் நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டன. அவற்றிற் பெரும்பாலான, வேறு வேறாகிய பூருவபட்சக் கொள்கைகளை மாத்திரம் கொண்டுள்ளன; ஆதலினாலன்றோ சமயங்கள் ஒன்றிற்கொன்று பூசலிடக் காண்கிறோம்? பின்னும் இந்த பூருவபட்சக் கொள்கைகள் நம்பிக்கையை ஆதாரமாக உடையன. மேக மண்டலத்தின் மேலிருந்து பிரபஞ்சம் அனைத்தினையும் ஆட்சி புரிகின்ற பெரிய உருவம் ஒன்று உளது என ஒரு மனிதன் மொழிகிறான். 'பிரமாணம் யாதோ?' என வினவினால், தனது வாய் மொழியே பிரமாணமென்கிறான். இம்மாதிரியே, எனக்கும் சில கொள்கைகள் இருக்கலாம்; அவற்றை நம்பும்படி நான் பிறரைக் கேட்கலாம். 'பிரமாணம் உளதோ?' என ஒருவர் என்னை கேட்குமிடத்துப்

வினவினால், யான் ஒன்றும் கூற முடியாதிருப்பேன். இதனாலே தான் சமயமும், தத்துவ ஞானமும், இந்நாட்களில் இழிபெயரோடு வழங்குவனவாயின. கற்று வல்ல மனிதர் இவற்றை நோக்கி, "இந்தச் சமய பேதங்களெல்லாம் பூருவபட்சக் கொள்கைகள் அடங்கிய வெறுங்குப்பைகளே ; ஒவ்வொரு மனிதனும் தனக்குரிய நவீனக் கொள்கைகளைப் போதிக்கிறான் ; சமயங்களைத் துருவி ஆராய்ந்து நிச்சயிக்க அனைவர்க்கும் பொதுவாகிய அளவுகோல் ஒன்றில்லை," எனக் கூறுவார்போலக் காணப்படுகின்றனர். அப்படியிருந்தும், வேறு வேறு வகையவாகிய பூருவபட்சக் கொள்கைகள் அனைத்தினையும் தன்னகத்தடக்கிய பொதுவாகிய ஆதார நியாயம் ஒன்று உளது. வேறு வேறு நாட்டிலுள்ள வேறு வேறு சமயவாதிகளால் எடுத்து ஓதப்படுகிற வேறுபட்ட கொள்கைகள் பலவற்றையும் துருவிப் பார்த்தால், அவை பொது அனுபவங்களை ஆதாரமாக உடையன என்பதைக் காணலாகும்.

முதலிலே உலகிலுள்ள வேறுபட்ட சமயங்களைப் பாகுபாடு செய்து பார்ப்பீர்களாயின், அவை சாத்திரம் பெற்றன, அஃது இல்லாதன என்னும் இரண்டு வகைகளாகப் பிரிபட்டு நிற்கக் காண்பீர்கள். சாத்திரம் இல்லாத சமயங்கள் பெரும்பாலும் இறந்தொழிந்து போயின; புதியனவாகத் தோன்றிய ஒரு சில, ஒரு சிலரால் மாத்திரம் பின்பற்றப்படுகின்றன. சாத்திரம் உடையவாகிய சமயங்களே மிகவும் வலிமை படைத்துப் பெருந்தொகையான மக்களாற் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. அவை அனைத்திலும் தாம் தாம் கூறுகிற உண்மைகள் தம்மாற் குறிக்கப்பட்ட சில மனிதரின் அனுபவ முடிபுகள் என்னும் ஒத்த கருத்துக் காணப்படுகிறது. கிறித்தவன் உங்களை நோக்கித் தனது சமயத்தை நம்பும்படியும், கிறித்துவை நம்பும்படியும், கிறித்துவை அவதார புருஷராகக் கொள்ளும்படியும், கடவுளிலும், ஆன்மாவிலும், ஆன்மாவுக்கு வரப்போன்ற உயர்நிலையிலும் நம்பிக்கை வைக்கும்படியும் கேட்கின்றான். நியாயங்கேட்டால், "நான் அவற்றை நம்புகிறபடியால்" என்று மாத்திரம் சொல்லுகின்றான். அங்ஙனமாயினும், கிறித்தவ சமயத்தினுடைய தலையூற்றாகிய பிறப்பிடத்தை நோக்கினால், அதுவும் அனுபவத்தை ஆதாரமாக உடையது என்பதைக் காணலாகும். கிறித்து, கடவுளைக் கண்டதாகச் சாற்றினார். அவருடைய சிஷ்யர்கள் கடவுளை உணர்ந்ததாக உரைத்தார்கள். இன்னும் இப்படியே புத்த சமயமும் புத்தருடைய அனுபவத்தைச் செப்புகிறது. அவர் சில உண்மைகளை அனுபவத்திற் கண்டார். அவற்றோடு ஒன்றி நின்றார் ; பின்னர் அவற்றை உலகிற்கு உபதேசித்தார். இந்துக்

களுக்கும் ரிஷிகள் அனுபவத்திற்கண்டு வெளியிட்ட சில உண்மைகளைப் போதித்தார்கள். ஆகவே, உலகிலுள்ள எல்லாச் சமயங்களும், நமது அறிவினுக்கு உறுதியான பொது ஆதாரமாகக் கருதப்படுகிற 'நேர் அனுபவத்தினை' அடிப்படையாகக்கொண்டு கட்டப்பட்டன என்பது தெளிவாகின்றது. சமய ஆசிரியர்கள் கடவுளைக் கண்டார்கள்; தங்கள் ஆன்மாவைக் கண்டார்கள்; தங்கள் எதிர்காலத்தைக் கண்டார்கள்; தங்களுக்குரிய நித்திய அமர வாழ்க்கையைக் கண்டார்கள்; தாங்கள் கண்டவற்றைப் போதித்தார்கள். இந்த ஒரு வேறுபாடு மாத்திரம் உண்டு; இத்தகைய அனுபவங்கள் இக்காலத்தில் நிகழாவென்றும், அவை சமயத்தாபகராகிய சிலருக்கு மாத்திரமே கைவந்தன என்றும், பல சமயங்கள் ஒரு சிறப்புரிமை பாராட்டுகின்றன. இக்காலத்தில், இத்தகைய அனுபவங்கள் ஒழிந்துபோய்விட்டபடியால், சமய சாத்திரத்தை நம்புதலே நமக்கு உரிய வழியென இச்சமயங்கள் பகர்கின்றன. இதனை நான் முற்றிலும் மறுத்துக் கூறுகின்றேன். இவ்வுலகத்திலே அறிவுத்துறையொன்றிலே, ஏதாவதோர் அனுபவம் நடந்திருந்தால், அது முன்னரே கோடிக்கணக்கான முறை நிகழ்ந்திருத்தல் வேண்டுமென்றும், இனி எக்காலமும் அது மீண்டும் மீண்டும் நிகழுமென்பதும் உறுதியாகப் பெறப்படும். ஒரு முறை நிகழ்ந்தது எப்பொழுதும் நிகழ்தல் கூடும். இது இயற்கையின் மாருத விதி.

யோக சாத்திரத்தில் வல்ல ஆசிரியர்கள் சமயத்தைப் பற்றிக் கூறும்பொழுது, அது பண்டையோருடைய அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டது எனக் கூறுவதோடு அமையாது, அந்த அனுபவங்களை எய்தாதிருக்கும் வரையும் ஒரு மனிதனும் தன்னைச் சமயானுஷ்டானமுடையவன் என்று சொல்லுதல் இயலாதெனவும் கூறுகின்ருர்கள். இந்த அனுபவங்களையெல்லாம் அடையும் வழியைக் கற்பிக்கும் நூலே யோக சாத்திரமாகும். சமய உண்மையை ஒருவன் உணர்ந்தாலன்றிச் சமயத்தைப் பற்றிப் பேசுவதனுற் பயனில்லை. ஆண்டவனுடைய பெயரினை முன்னிட்டு எவ்வளவோ சண்டையும் சச்சரவும் குழப்பமும் இருப்பது ஏன்? மற்றக் காரணங்களைவிட, கடவுளுடைய பெயராலே மிகுதியான குருதி சிந்தப்பட்டதேனேவெனில், மக்கள் மூலகாரணத்தை அடைய முயலாது, தங்களுடைய மூதாதைகள் மேற்கொண்ட வழக்கங்களை மனத்தளவில் ஏற்றுக்கொண்டு, அதனுலே திருத்தியடைந்து, மற்றவர்களும் அவ்வண்ணமே கொள்ள வேண்டுமென்று வாதாடுகிறபடியாலென்க. ஆன்மாவை உணராத மனி

தன், ஆன்மா உண்டென்றும், கடவுளைக் காணுத மனிதன் கடவுள் ஒருவர் இருக்கிருர் என்றும் சொல்லுவதற்கு என்ன உரிமை உண்டு? கடவுள் ஒருவர் இருந்தால், அவரை நாம் காணவேண்டும். ஆன்மா உண்டாயின், அதனை நாம் அறியவேண்டும்; அல்லாவிடின் நம்பாமல் இருப்பது நல்லது. உரையும் செயலும் வேறுபட்டிருப்பதினும் வெளிப்படையான நாத்திகவாதியா யிருத்தல் நன்று. 'கற்ருேர்' என்றிருப்போர் சமயத்தையும், தத்துவ ஞானத்தையும், பரம்பொருளைத் தேடுதலையும் வீண் முயற்சி எனக் கொள்ளுவது இக்காலத்து நிகழ்ச்சி; அரை குறையாகக் கற்றவரோவென்ருல், இவை யாவற்றுக்கும் உண்மையிலே ஒரு வகை ஆதாரமும் இல்லை எனவும், உலகிற்கு நன்மை புரிவதற்கு இவை வலிமையுள்ள ஏதுக்களாக இருப்பது மாத்திரமே இவற்ருல் எய்தும் பயன் எனவும் எண்ணுவார்போலக் காணப்படுகின்றனர்; 'மனிதர் ஆண்டவனிடத்தே நம்பிக்கை வைத்தால், நல்லவரும், ஒழுக்கமுள்ளவரும், நல்வாழ்க்கை நடத்துபவரும் ஆவர்,' என்பர். அவர்கள் பெறுகின்ற கல்வி, ஓயாத பொருளற்ற வெறுஞ் சொற்களின்மீது அழியாத நம்பிக்கை வைப்பதேயென நாம் காணும்பொழுது, அவர்கள் இத்தகைய கருத்துக்களைக் கொண்டிருப்பதைக் குறித்து நாம் அவர்கள்மேல் குற்றம் சுமத்தல் கூடாது. வெறுஞ்சொற்களைக்கொண்டு வாழ்க்கை நடத்தும்படி அவர்கள் கேட்கப்படுகின்ருர்கள். அவர்கள் அப்படிச் செய்யக் கூடுமா? கூடுமாயின், மனித இயற்கையிலே எனக்குச் சிறிதும் மதிப்பிருக்கமாட்டாது. மனிதனுக்கு உண்மை வேண்டும்; அவன் உண்மையை அனுபவத்திலே காணவேண்டும்; அவன் அதனை நன்ருகப் பற்றி, உணர்விஞலே தெளிவடைந்து, உள்ளத்திலே அனுபவித்த பின்னர் எல்லா ஐயப்பாடுகளும் நீங்கிவிடுமென்றும், இருளனைத்தும் சிதறுண்டு போமென்றும், கோணல் அனைத்தும் நிமிர்ந்துவிடுமென்றும் வேதங்கள் முழங்குகின்றன. "மக்களே! மேலான உலகத்தில் உறைபவர்களே! அமரநிலையின் ஒரு வழி காணப்பட்டிருக்கிறது. இருளுக்கெல்லாம் அப்பாலாய் இருக்கின்ற ஒருவனைக் காண்பதே இந்த இருளனைத்தையும் கடந்து செல்லுதற்கு வழியாகும்; வேறு வழியில்லை."

இராஜயோகம் என்னும் சாத்திரமானது இந்த உண்மையை அடைவதற்கு உரிய அனுஷ்டான முறைகளை நூன்மரபாக வகுத்து மக்களுக்குத் தருதற்கு முன் வருகின்றது. ஒவ்வொரு கலைஞானமும் தனக்கென உரிய ஆராய்ச்சி முறையைப் பெற்றிருத்தல் வேண்டும். நீங்கள் வான சாத்திரிகளாக வர விரும்பி, ஓரிடத்தில்

உட்கார்ந்துகொண்டு, "வானசாத்திரம், வானசாத்திரம்," என்று பலமுறை ஓலமிட்டாலும், அஃது உங்களிடம் வரப்போவதில்லை. இரசாயன சாத்திரமும் அவ்வாறே. குறிப்பிட்ட ஒரு முறையைக் கைக்கொள்ள வேண்டும். சாத்திரசாலைக்குப் போய் வேறு வேறாகிய பொருள்களை எடுத்துக் கலந்து, ஒன்றாக்கி, அவற்றைப் பரிசோதிக்க வேண்டும். அதிலிருந்து இரசாயன அறிவு உண்டாகும். நீங்கள் வானசாத்திரிகளாயிருக்க விரும்பினால், வான ஆராய்ச்சிக் களத்திற்குப் போய் ஒரு தொலைநோக்காடியை எடுத்து, விண்மீன்களையும் கிரகங்களையும் உற்று நோக்கி ஆராய்ந்தால், நாளடைவில் வானசாத்திரிகளாகலாம். ஒவ்வொரு சாத்திரத்துக்கும் தனியாக உள்ள முறைகளைக் கைப்பற்ற வேண்டும். நான் உங்களுக்கு ஆயிரம் பிரசங்கங்கள் புரியலாம். ஆனால், நீங்கள் செயல் முறைகளைக் கைப்பற்றினாலன்றிச் சமயத்தை அறிந்தவர்கள் ஆக மாட்டீர்கள். எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் வாழ்ந்த அறிவோர் கூறிய உண்மைகள் இவை. அவ்வறிவோர் தூய்மை உடையவர்கள்; தந்நலம் அற்றவர்கள்; உலகுக்கு நன்மை புரியும் ஒரு நோக்கமேயன்றி வேறு நோக்கம் இல்லாதவர்கள். அவர் அனைவரும், புலன்களால் அடைதற்குரிய உண்மைகளினும் உயர்ந்த உண்மை ஒன்றினைத் தாம் கண்டதாகக் கூறுகின்றனர்; அதன் மெய்ம்மையினை ஆராய்ந்து தெளியும்படி நம் அனைவரையும் அழைக்கின்றனர்; பயிற்சி முறையைப் பின்பற்றி நேர்மையாக ஆராயும்படி நம்மைக் கேட்கின்றனர். அவ்வண்ணம் பின்பற்றிய பின்பு அவர் சொல்லுகிற மேலான உண்மையை நாம் காணாதொழிந்தால், அவர் கூறுவதில் உண்மை இல்லையெனத் துணிந்து சொல்ல நமக்கு உரிமையுண்டு; ஆனால், அப்படிச் செய்யுமுன் அவரது வார்த்தையில் உண்மை இல்லையென மறுத்துரைப்பது நியாயமாகாது. பூரண நம்பிக்கையோடு நாம் முயல வேண்டும். குறிக்கப்பட்ட முறைகளைக் கைப்பற்ற வேண்டும். அப்பொழுது, அறிவு விளக்கம் உண்டாகும்.

அறிவைத் திரட்டுமிடத்துப் பொருள்களிடையேயுள்ள பொதுத்தன்மையைக் காண வேண்டியவர்களாய் இருக்கிறோம். பொதுத்தன்மையைக் காணுதல் ஆராய்ந்து உற்றுநோக்குவதை ஆதாரமாகக் கொண்டது. உண்மைகளை முதலிலே உற்றுநோக்கிக் கவனிக்கிறோம். அதன்மேற் பொதுத் தன்மையைக் காண்கின்றோம். அதன்மேல் அவற்றிடையேயுள்ள சித்தாந்த முடிபுகளை எடுத்துக் காட்டுகின்றோம். மனிதனது அகத்தின் இயற்கையையும், எண்ணத்தின் தன்மையையும் அறிந்துகொள்ளுவதற்கு,

முதலிலே அவனது உள்ளத்தில் நிகழ்கின்ற சம்பவங்களை உற்று நோக்கும் சத்தியை நாம் பெறவேண்டும். வெளியுலகில் நிகழ்கின்ற சம்பவங்களைக் கவனிப்பது எளிது. அதற்காகப் பல கருவிகள் ஆக்கப்பட்டிருக்கின்றன. உள்ளுலகத்தின் நிகழ்ச்சிகளை உணருவதற்கு உரிய கருவி நம்மிடத்திலில்லை. ஆயினும், சரியான நூன்முறையாக வகுத்துக்கொள்ள வேண்டுமாயின், உற்று நோக்கிக் கவனிப்பது இன்றியமையாதது என்பதை நாம் அறிவோம். செவ்வனே பாகுபாடு செய்யாவிட்டால், சாத்திர முறையாகச் சொல்லுவது முடியாத காரியமாகும். உற்றுநோக்குவதற்குரிய வழிவகைகளைக் கண்டுபிடித்த ஒரு சிலரைத் தவிர்ந்த ஏனைய மனநூல் வல்லவர் தொடக்கத்திலிருந்தே தம்முள்ளே பிணங்குவதும் இதனுலேதான்.

இராஜயோக சாத்திரமானது உள்ளத்தின் நிலைகளை உற்று நோக்கிக் கவனிப்பதற்கு உரிய வழி வகைகளை நமக்குத் தருவதாக வாக்களித்திருக்கிறது. அங்ஙனம் உற்றுநோக்குவதற்குரிய கருவி மனமேயாகும். உற்றுநோக்கும் சத்தியைச் செவ்வனே வழிப்படுத்தி, உள்ளுலகத்தின் பக்கமாகத் திருப்பினுல், அது மனத்தைப் பாகுபாடு செய்து விஷயங்களைத் தெளிவுபடுத்தும். மனத்தினுடைய சத்திகள் பரந்த ஒளிக்கதிர்களைப் போன்றன. அவற்றை ஒன்று கூட்டினுல், அவை ஒளியைத் தருகின்றன. அறிவைப் பெறுவதற்கு நமக்கு இதுவே கருவி. புற உலகத்திலும் அக உலகத்திலும் ஒவ்வொருவரும் இதனைப் பயன்படுத்திக் கொள்ளுகிருர்கள். விஞ்ஞானி புற உலகத்தை எவ்வளவு கூர்ந்து நோக்குகின்ருனே, அவ்வளவு கூர்ந்த பார்வையுடன் மனநூல் வல்லவன் அக உலகத்தை நோக்குகிருன்; இதற்கு அதிகமான பயிற்சி வேண்டும். இளமைப் பருவம் முதலாகப் புறப்பொருள்களைக் கூர்ந்து நோக்கும்படி நாம் பயிற்றப்பட்டிருக்கிருேம். ஆதலினுல், அகக்கருவிகளை உற்றுநோக்கும் ஆற்றலை நம்முட் பலர் இழந்துவிட்டோம். புறத்தே செல்கின்ற மனத்தின் நோக்கத்தைத் திருப்பி, அதன் வலிமை முழுவதையும் ஒருவழிப்படுத்தி நிறுத்தி, அது தன்னியல்பை அறிந்து பாகுபாடு செய்யும்படி தன்னையே நோக்கச் செய்தல் மிகவும் கடினமான காரியம். ஆயினும், இந்த விஷயத்தைச் சாத்திரிய முறையாக அறிதற்கு இது ஒன்றே வழி.

இத்தகைய அறிவினுல் எய்துகின்ற பயன் என்ன? முதலிலே, அறிவினுல் எய்துகின்ற மிகச் சிறந்த பயன் அறிவேயாகும். வேறு பயனும் உண்டு. அது நம் கவலைகளை எல்லாம் நீக்கிவிடும்.

மனத்தினைப் பாகுபாடு செய்வதனால், மனிதன் ஒரு பொழுதும் அழியாததும், தன்னியற்கையிலே நித்திய சுத்தமானதும், பூரண மானதுமான ஒரு பொருளை நேர் முகமாகக் காண்பான்; அப் பொழுது, அவனுடைய கவலைகள் அகன்றுவிடுகின்றன. அதன் பின் அவன் திருவிலியாக இருக்கமாட்டான். எல்லாக் கவலை களும், அச்சத்தினாலும் நிறைவு பெறாத அவாவினாலும் உண்டா கின்றன. மனிதன் தான் இறப்பதில்லையென அறியும்பொழுது, சாவினால் வருகிற அச்சத்தினின்று நீங்கிவிடுவான். தான் பூரணன் என்பதை அறிந்தபொழுது வீண் விருப்பங்கள் எழ மாட்டா; இவ்விரண்டு காரணங்களும் இல்லாது போய்விடவே, கவலையும் அகன்றுபோம். இந்த உடலிலிருக்கும்பொழுதே பூரண மான ஆனந்தம் உண்டாகும்.

இந்த அறிவை அடைதற்கு ஒரே ஒரு வழி இருக்கின்றது; அது மனத்தினை ஒருவழிப்படுத்துவதாகும். இரசாயன வல்லவன் தன் சாத்திரச் சாலையிலே தான் ஆராய்கின்ற பொருள்களின் மீது மனோசத்தி அனைத்தினையும் ஒன்றுகூட்டி நோக்கி, அவற் றின் இரகசியங்களைக் கண்டறிகின்றான். வானநூல் வல்லான் தன்னுடைய மனோசத்திகளை ஒன்றுகூட்டித் தொலைநோக்காடி மூலமாக வான மண்டலத்தை நோக்குகின்றான்; விண் மீன்களும், ஞாயிறும், மதியும் தம் இரகசியங்களை அவனுக்குத் தெரிவிக்கின் றன. நான் பேசுகிற பொருள்களில் என்னுடைய எண்ணங்களை எவ்வளவு ஒன்று கூட்டுகின்றேனோ, அவ்வளவுக்கு அவற்றைத் தெளிவு படுத்துவேன். நீங்கள் நான் சொல்வதைக் கேட்கின்றீர் கள்; எவ்வளவு உங்களுடைய எண்ணங்களை ஒன்று கூட்டுகின் றீர்களோ, அவ்வளவு தெளிவாக நான் சொல்பவற்றைப் பற்றிக் கொள்ளுவீர்கள்.

மனத்தினுடைய சத்திகளை ஒருவழிப்படுத்தும் ஒரு வழியினா லன்றி, உலகிலுள்ள எல்லா அறிவுகளையும் வேறு எவ்வழியினால் மனிதர் பெற்றனர்? தாக்குதற்கு உரிய வழியை அறிந்து தாக்கு வோமாயின், உலகு தன் இரகசியங்களை நமக்கு வெளிப்படுத்த ஆயத்தமாயிருக்கிறது. மனத்தை ஒருவழிப்படுத்துவதனால் அத் தகைய தாக்கலின் வலிமை ஏற்படுகின்றது. மானிடருடைய மனத்தின் வலிமைக்கு எல்லை இல்லை. மனம் எவ்வளவு ஒருவழிப் பட்டு நிற்கின்றதோ, அவ்வளவு வலிமையை அஃது ஓரிடத்துச் செலுத்துதல் கூடும்; இதுவே இரகசியம்.

மனம் இயல்பாகவே புறத்தே நோக்கி நிற்கின்றபடியால், புறப்பொருள்களின்மீது மனத்தை ஒன்றுகூட்டி நிறுத்துவது

எளிது; காண்பானும் காணப்படும் பொருளும் ஒன்றுயிருக்கும் தன்மையாகிய சமயநூலாராய்ச்சி, தத்துவ நூலாராய்ச்சி, மன நூல் ஆராய்ச்சி என்னும் இவை இத்தகையன அல்ல. பொருள் அகத்தே இருக்கின்றது. மனமே பொருள். மனத்திஞல் மனத்தை ஆராயவேண்டி இருக்கின்றது. தன்னை நோக்கும் தன்மையாகிய ஒரு வலிமை உண்டு என்பதை நாம் அறிவோம். நான் உங்க ளோடு உரையாடுகிறேன்; அதே தருணத்தில், நான் தனியே நின்று நான் பேசுகின்றவற்றைக் கேட்டு அறிகிறேன். ஒரே நேரத்தில் நீங்கள் தொழில் புரிவதும் எண்ணுவதுமாக இருக்கும் பொழுது, மனத்தின் ஒரு பாகம் தனித்து நின்று நீங்கள் நினைப்ப தைக் காண்கின்றது. மனத்தின் வலிமைகளை ஒருவழிப்படுத்தி அதன்மேற்செலுத்திஞல், ஊடுருவிப் பாயும் வெய்யோன் கதிர் களின் முன்னிலையிலே மிக இருண்ட இடங்களும் தம்மிடத்தில் மறைந்து கிடக்கின்ற பொருள்களை வெளிப்படுத்துவது போல, ஒருவழிப்பட்ட மனமும் தன்னிடத்துள்ள மிக ஆழ்ந்த இரகசியங் களை வெளிப்படுத்தும். இதனுல், நம்பிக்கைக்கு ஓர் ஆதாரம் உண்டாகும்; உண்மைச் சமய உணர்ச்சி புலனுகும். நம்மிடத்து ஆன்மா உண்டோ இல்லையோ என்றும், உயிர் வாழ்க்கை ஐந்து நிமிடத்துக்கோ நித்தியத்துக்கோ என்றும், பிரபஞ்சத்துக்கு ஓர் ஆண்டவன் உண்டோ இல்லையோ என்றும் நாமாகவே அறிந்து கொள்ளுவோம். இவை யாவும் நமக்கு வெளிப்பட்டுத் தோன்றும். இராஜயோகம் இதனை உணர்த்த முற்பட்டு நிற்கிறது. மனத்தை ஒருவழிப்படுத்தவும், மனத்தின் மிக ஆழமான பாகங்களைக் காணவும், மனத்தின் உள்ளுறையை ஆராய்ந்து பொதுத்தன்மை கண்டு முடிவு கட்டவும் உள்ள வழி வகைகளைப் போதிப்பதே இராஜயோகத்தின் நோக்கமாகும். ஆதலினுலே, அது நமது சமயத்தைப்பற்றி விசாரிப்பதில்லை. நாம் ஆத்திகர்களோ, நாத் திகர்களோ, கிறித்தவர்களோ, யூதர்களோ, புத்தர்களோ, எவராகவாயினும் இருக்கலாம்; நாம் மானிடராயிருக்கின்றோம்; அதுவே போதுமானது. சமயத்தைத் தேடும் உரிமையும் ஆற்றலும் ஒவ்வொரு மானிடனுக்கும் உண்டு; ஒவ்வொரு மானி டனும் பொருள்களைப்பற்றி வினவும் உரிமையும் வேண்டிய அளவு முயன்ருல் அவற்றுக்கு விடை காணும் உரிமையும் பெற்ற வனுயிருக்கின்ருன்.

இதுகாறும் கூறியவற்ருல், இந்த இராஜயோகப் பயிற்சிக்கு நம்பிக்கை வேண்டுவதில்லையென்பதைக் காண்கிருேம். நீங்கள் ஒன்றினைக் கண்டறியும் வரை நம்பிக்கை வைக்க வேண்டுவதில்லை

என அது சொல்லுகிறது. உண்மையை நாட்ட ஒரு வகை ஊன்றுகோலும் வேண்டுவதில்லை. விழித்திருக்கின்ற நேரத்தில் நாம் காண்கின்ற பொருள்களின் உண்மையை நிறுவுவதற்குக் கனவோ அல்லது மனேபாவனையோ வேண்டுமென்று எண்ணுகிருயா? வேண்டா. இராஜயோகத்தைக் கற்பதற்கு நீண்ட காலமும் இடைவிடாத பயிற்சியும் வேண்டும். அப்பியாசத்தின் ஒரு பகுதி உடலைச் சார்ந்தது; பெரும்பகுதி மனத்தினைச் சார்ந்தது. போகப்போக, மனமும் உடலும் எவ்வளவு நெருங்கிய தொடர்பு உடையனவாயிருக்கின்றன என்பதை நாம் காண்போம். மனமானது உடலின் நுண்ணிய பாகம் என்றும், மனம் உடலிலே தொழில் புரிகிறதென்றும் நாம் கொள்வோமாயின், உடலும் மனத்திலே தொழில் புரிகிறது என்பது நியாயமாகும். உடல் நோய்வாய்ப்பட்டிருந்தால் மனமும் நோய்வாய்ப்படுகிறது. உடல் நலத்தோடு இருந்தால் மனமும் நலனும் வலிமையும் உள்ளதாகிறது. ஒருவன் சீற்றம் கொள்ளும்பொழுது அவனுடைய மனம் கலக்க முறுகின்றது; அம்மாதிரியே மனம் அசைவுற்ருல் உடலும் நலிவடைகின்றது. மக்களுட் பெரும்பாலார் உடலினுடைய ஆணைக்குக் கீழ்ப்பட்டவராயிருக்கின்றனர்; அவர்களுடைய மனம் அதிகம் வளர்ச்சி எய்தாத காரணத்தினுல், மக்கட்கூட்டத்திற் பெரும்பகுதியார் விலங்குகளினின்று ஒரு சிறிதே வேறுபட்டவராயிருக்கின்றனர்; அது மாத்திரமன்றி, மனத்தை அடக்குகின்ற ஆற்றலிலும் சிறு பிராணிகளைவிட ஒரு சிறிது ஏற்றமுடையவரேயாவர். நம்முட் பலர் நமது மனத்தின் மீது ஆணை செலுத்தக் கூடாதவர்களாயிருக்கிரேம். அவ்வண்ணம் ஆணை செலுத்துவதற்கும், உடலையும் மனத்தையும் கட்டுப்படுத்தி நடத்துவதற்கும், உடலத்தைச் சார்ந்த சில உதவிகள் தேவை; உடலைப் போதிய அளவு அடக்கிஞல், மனத்தை வழிப்படுத்த முயலலாம். மனத்தை வழிப்படுத்தி அதை நமது ஆளுகைக்குட்கொண்டு வந்து நாம் விரும்பிய வண்ணம் தொழில் புரியும்படி செய்வோமாயின், நமது எண்ணப்படியே அதனுடைய வலிமைகளை எல்லாம் ஒருமுகமாக்கும் வண்ணம் நாம் அதனைக் கட்டாயப்படுத்தலாம்.

நுண்பொருளாலாகிய அகவுலகத்தின் பருப்பொருட்டன்மையே புறவுலகம் என்பது இராஜயோகியின் கொள்கை. நுண்மையானது, எப்பொழுதும் காரண வடிவமாயிருக்கும்; பருமையானது, காரிய வடிவமாயிருக்கும். புறவுலகு காரியம்; அகவுலகு காரணம். அத்தன்மையாகவே அகத்தே உள்ள நுண்ணிய சத்திகளின் பருமையான பாகங்களே புறத்தேயுள்ள சத்திகளாயிருக்கின்றன.

வற்றை அப்படியே கூறுவேன். குருட்டுத்தனமாக நம்புவது தவறு. சொந்த நியாயத்தையும் யூகத்தையும் கருவியாகக் கொள்ள வேண்டும்; பயிற்சியினாலே, இவை நிகழ்கின்றனவா அல்லவா என்பதை அறிதல் வேண்டும். வேறெந்தச் சாத்திரத்தையாவது கற்றறிகின்ற முறை போலவே இந்தச் சாத்திரத்தையும் கற்க வேண்டும். இதில் மறைவு ஒன்றுமில்லை; கேடு ஒன்றுமில்லை. இது உண்மையாயிருக்கின்ற வரையில் பொதுத் தெருக்களிலே, பட்டப் பகலிலே, இதனை நன்றாகப் போதிக்கலாம். இவ்விஷயங்களை மறைவாக்க முயல்வதனால் பெருங்கேடு விளையும்.

மேற்செல்லுவதற்கு முன், இராஜ யோகத்துக்கு ஆதாரமாகிய சாங்கிய தத்துவத்தைப் பற்றி ஒரு சில விஷயங்கள் சொல்லுவேன்; சாங்கிய தத்துவத்தின்படி, காட்சி உண்டாகும் வழி இதுவாகும். புறத்தேயுள்ள பொருள்களின் தாக்கல்கள் புறக்கருவி வழியாக மூளையிலே பொருந்திய புலன்களின் நிலையங்களை அடைகின்றன. புலன்கள் இவற்றை மனத்துக்குக் கொண்டு செல்ல, மனம் புத்தியினிடத்து ஒப்புவிக்க, அங்ஙனம் பெற்ற புத்தியினிடத்திலிருந்து புருடன் இத்தாக்கலை ஏற்றுக்கொள்ளும் பொழுது காட்சி உண்டாகின்றது. அதன் பின்னர் வேண்டுவதைச் செய்யும்படி புருடன் கருமேந்திரிய நிலையங்களை இயக்குகிறான். புருடன் தவிர்ந்த ஏனையவெல்லாம் சடப் பொருள்களே; புறக் கருவிகளினும் மனமானது நுணுகிய சடப்பொருள். மனம் எதனால் ஆக்கப்பட்டிருக்கிறதோ, அதுவே தன்மாத்திரையாகிய நுண்ணிய பொருளையும் ஆக்கியிருக்கின்றது. இவை நுண்பொருட்டன்மையவாகிப் புறத்தேயுள்ள சடப்பொருளை ஆக்குகின்றன. சாங்கிய முறைப்படியுள்ள மனநூல் ஆராய்ச்சி இதுவே. புறத்தேயுள்ள பருப்பொருளுக்கும் அகத்தேயுள்ள சித்தத்துக்கும் அளவு மாத்திரையிற்றான் வேறுபாடு அமைந்திருக்கின்றது. சடப்பொருள் அல்லாத பொருள் புருடனே. மனம் ஆன்மாவின் கையிலுள்ள ஒரு கருவி. அதன் மூலமாக ஆன்மா புறப்பொருள்களைப் பற்றுகிறது. மனமானது இடையீடின்றி வேறுபட்டு ஊசலாடிக்கொண்டிருக்கிறது. அதனைப் பூரணப்படுத்தினால், அது பல இந்திரியங்களையோ, ஒன்றினையோ, யாதொன்றுமற்ற தன்மையையோ, பற்றி நிற்றல் கூடும். கடிகாரத்தினுடைய ஒலியை நான் மிகவும் கூர்மையாகக் கேட்டுக்கொண்டிருப்பேனாயின், என் கண்கள் திறந்திருப்பினும் நான் யாதொன்றினையும் காணாதிருப்பேன். மனமானது கேள்வி இந்திரியத்தைப் பற்றி

நின்றமையால், காட்சிப் புலனினின்று விலகி நின்றது. ஆனால், எல்லாப் புலன்களையும் ஒருங்கு பற்றி நிற்கும் நிலைமை பூரணப் படுத்தப்பட்ட மனத்துக்கு உண்டு. அது தன் சொந்த ஆழங்களை உள்நோக்கிக் காணும் ஆற்றலுடையது. இத்தகைய உள் நோக்கத்தையே யோகி அடைய முயலுகிறான்; மனத்தின் வலிமைகளை ஒன்றுகூட்டி உள்நோக்குவதனால், உள்ளே நடப்பன வற்றை அறிய முயலுகிறான். இந்த விஷயத்தில் வெறுநம்பிக்கை என்பது இல்லை. தத்துவ ஞானிகளின் ஆராய்ச்சியினாலே அடைந்த முடிபு இது. இக்காலத்து உடல் நூல் வல்லார் புறக் கரணமாய கண்கள் காட்சி இந்திரியமல்லவென்றும், மூளையி லுள்ள ஒரு நரம்பு நிலையமே காட்சி இந்திரியமென்றும் சொல் கின்றனர். ஏனைய புலன்களும் இவ்வாறே; மேலும், இந்திரிய நரம்பு நிலையங்களும் மூளையும் ஒரே வகைப் பொருளினால் ஆக்கப்பட்டன என அவர்கள் கூறுகின்றார்கள். சாங்கியர்கள் சொல்வதும் இதுவே. முந்தியது சட சம்பந்தமான முடிவு; பிந்தியது மனத்தின் சம்பந்தமானது; இரண்டும் ஒன்றே. நாம் செய்யும் ஆராய்ச்சியின் நிலைக்களம் இதற்கு அப்பா லிருக்கிறது.

மனத்தின் வேறு வேறாகிய நிலைகளை நேரிலே காணுதற்கு வேண்டிய நுண்ணிய காட்சித் திறத்தை அடைவதற்கு யோகி முற்பட்டு நிற்கின்றான். அவை அனைத்தினையும் மனத்தினாற் காணவேண்டும். பொறி உணர்வுகள் எவ்வாறு வழிச் செல்கின் றனவென்றும், மனம் அவற்றினை எவ்வாறு ஏற்றுக்கொள்கிற தென்றும், அதுவே பின்னர்ப் புத்திக்கு எவ்வாறு செல்கின்றன என்றும், புருடன் அதனைப் பெற்றுக்கொள்வது எத்திறம் என்றும் ஒருவன் ஆராய்ந்து அறியலாம். ஒவ்வொரு சாத்திரத்திற்கும் தொடக்கத்தில் வேண்டிய சாதனைகள் உள. தெளிந்துகொள் வதற்கு முன்னர்ப் பற்றி நடக்கவேண்டிய முறைகள் உள. இவை இராஜயோகத்துக்கும் உண்டு.

உணவைப் பற்றிய சில ஒழுக்கங்கள் இன்றியமையாதன. எந்த உணவு தூய்மையான மனத்தைத் தருகின்றதோ அதனைக் கொள்ளுதல் வேண்டும். விலங்குக் காட்சிச் சாலைக்குப் போவீர் களாயின், இதன் உண்மையை உடனே அறிந்துகொள்ளலாம். யானைகள் மிகப் பெரிய விலங்குகளாயிருப்பினும், அமைதியும் மென்மையான நடையும் உடையனவாயிருக்கக் காண்பீர்கள். சிங்கமும், புலியுமுள்ள கூட்டருகே சென்றால், அவை ஆறுத லின்றி அலைந்துகொண்டிருக்கக் காண்பீர்கள்; உணவினால்

உண்டாகிய வேறுபாடு எவ்வளவென்பதை அறிந்துகொள்வீர்கள். இந்த உடலிலே தொழில் செய்யும் வலிமைகள் எல்லாம் உணவினுலே ஆயின ; அதனை நாம் தினமும் காண்கிறோம். நீங்கள் பட்டினியிருந்தால், முதலிலே உங்கள் உடல் பலவீனமடையும் ; பூத சத்திகளும் குன்றும் ; சில நாட்களின் பின் மன சத்திகளும் தேயும் ; முதலிலே ஞாபகசத்தி போய்விடும் ; எண்ணுதற்கும் தருக்க முறையாக ஆராய்வதற்கும் இயலாத ஒரு நிலை ஏற்படும். முதலிலே, நாம் என்ன உணவை உண்கிறோம் என்பதைக் குறித்துக் கவனமாயிருத்தல் வேண்டும். நாம் போதிய வலிமை பெற்றுப் பயிற்சியில் தேர்ச்சி அடைந்திருக்கும் பொழுது இந்த விஷயத்தில் அவ்வளவு சிரத்தை கொள்ள வேண்டுவதில்லை வளர்கின்ற இளமரம் அழியாதபடி அதனைச் சுற்றி வேலி அடைப்பார்கள். மரம் வளர்ந்த பின்னர் வேலிகளை எடுத்துவிடுவார்கள். எல்லாத் தாக்கல்களையும் தாங்கி நிற்கும் வலிமை அதற்கு உண்டு.

'யோகியானவன் மிகுந்த புலன் நுகர்ச்சி, கடுந்தவம் என்னும் இரண்டு தீவிரங்களையும் விலக்க வேண்டும். அவன் பட்டினியிருத்தல் கூடாது ; தன் உடலைத் துன்புறுத்தக் கூடாது ; அப்படிச் செய்கிறவன் யோகியாகமாட்டான்,' என்று கீதை சொல்லுகிறது. பட்டினி இருப்பவனும், தூங்காது விழித்திருப்பவனும், அதிக நித்திரை செய்பவனும், அதிகம் உடல் முயற்சி செய்பவனும், ஒன்றும் செய்யாதிருப்பவனும் ஆகிய இவரனைவரும் யோகிகளாகமாட்டார்.

## 2. முதற்படிகள்

இராஜயோகம் எட்டுப் படிகளாக வகுக்கப்படும். கொல்லாமை, வாய்மை, களவு புரியாமை, மனத்தைப் புலன்கள் வழிச் செல்ல விடாது தடுத்தல், பிறர்தருங் கொடையினைக் கொள்ளாமை என்னும் இவை முதற்படியாகிய இயமமாம். உடலையும் மனத்தையும் தூய்மையாக வைத்திருத்தல், கற்பன கற்றல், பெற்றதற்குவத்தல், தவம் புரிதல், உடல் பொருள் ஆவியை இறைவனுக்கு ஒப்புக் கொடுத்தல் ஆகிய இவை இரண்டாம் படியாகிய நியமமாம். இவ்விரண்டின் பின்னர் வருவன ஆசனம் (இருக்கை), பிராணாயாமம் (பிராணனைத் தன்வயப்படுத்துதல்), பிரத்தியாகாரம் (புலன்களைத் தமக்குரிய பொருள்களின் மேற் செல்லவொட்டாது தடுத்தல்), தாரணை (மனத்தினை ஓரிடத்தில் நிறுத்துதல்), தியானம் (நிலை திரியா நினைவு), சமாதி (உறையுணர்வு கடந்து நிற்றல்) என்பனவாம். இயமமும் நியமமும் நல்லொழுக்கத்தின்பால; இவற்றை ஆதாரமாகக் கொள்ளாத வழி ஒரு வகை யோகமும் கைகூடாது. ஒழுக்கம் நிலைப்பட்டுவரப் பயிற்சிப் பயன் கைகூடும். ஒழுக்கம் நிலையில்லாவிடின் ஒரு பயனும் இல்லையாம். மனத்தினாலாவது, சொல்லினாலாவது, தொழிலினாலாவது, யோகியானவன் மனிதருக்கோ, விலங்குகளுக்கோ ஒரு வகைத் தீமையும் விளைத்தல் கூடாது. மேலும், இரக்கம், மனிதர்பால் மாத்திரமன்றி, உலகமனைத்தின்பாலும் செலுத்த வேண்டுவது.

அடுத்தபடி ஆசனம்: அதாவது, இருக்கை. உயர்நிலையடையும் வரை தினந்தோறும் பல உடற்பயிற்சிகள் மனப் பயிற்சிகள் —இவற்றைச் செய்யவேண்டியபடியால், உடலானது வருத்தமின்றி நெடுநேரம் நிலை மாறாதிருக்கத்தக்க ஓர் இருக்கை நிலையைப் பயிலுதல் வேண்டும். ஒவ்வொருவரும் தத்தமக்கு எளிதாகத் தோன்றுகிற ஆசனத்தைக் கைக்கொள்ள வேண்டும். எண்ணத்தில் மனத்தைச் செலுத்தும்பொழுது ஒருவனுக்கு ஒரு வகை இருக்கை எளிதாக இருக்கலாம்; மற்றொருவனுக்கு அது அரிதாயிருக்கலாம். மனத்தோடு தொடர்புள்ள இந்த விஷயங்களை ஆராய்ந்துகொண்டு போம்பொழுது உடலில் பல மாறுதல்கள் உண்டாகுமென்பதனைப் பின்னர் அறிவோம். நாடி நரம்புகளும் வேறுபாடடைந்து, புது இயக்கங்கள் தோன்றும்; உடல் முற்றுமே புதிதாக அமையும். இவ்வேறுபாடுகளிற் பெரும்பாலான (நடு முதுகெலும்பாகிய) முள்ளந்தண்டின் சார்பாகக் கிடக்கும் நாடி

நரம்புகளில் உண்டாவனவாதலால், முள்ளந்தண்டு நிமிர்ந்திருக்கத் தக்கதாய்த் தலையும் உடலும் மார்பும் கழுத்தும் ஒரே நேர்க்கோட்டில் இருக்கத்தக்கதாய் அமைந்த ஆசனமே தக்கதாகும். உடலின் சுமை முழுவதையும் மார்பெலும்புகள் தாங்கி நிற்கத்தக்கதாய்ச் சுகமாக நிமிர்ந்திருப்பது நன்று. மார்பு உள் வளைந்திருக்கும் நிலையில் உயர்வான எண்ணங்களை எண்ணுதல் இயலாதென்பதை அனுபவத்தில் அறிந்துகொள்வீர்கள். இராஜ யோகத்துக்குரிய மூன்ரும் படியாகிய ஆசனம் ஹடயோகத்துக்கு முரியது. ஹடயோகம் உடற்பயிற்சிச் சார்பாகி உடலை வலுப்படுத்துவது. அதற்குரிய பயிற்சிகள் ஒரு தினத்தில் கற்கத் தக்கனவல்ல; நீண்ட காலம் பயின்று அறிய வேண்டுவன. அவை ஆன்மப் பேற்றுக்குரியனவல்லவாதலால், அவற்றின் ஆராய்ச்சி நமக்கு வேண்டுவதில்லை. டெல்சார்ட்டே (Delsarte) முதலிய ஆசிரியர்களியற்றிய நூல்களில் உடலை வேறு வேறு ஆசனத்தில் வைப்பதற்குரிய வழிகளைக் கண்டறியலாகும். இவை உடலைச் சார்ந்தன; மனத்தைச் சார்ந்தனவல்ல. பயிற்சியால் அடக்கியாள இயலாத அவயவம் உடலிலில்லை. பயிற்சியால் இதயத்தின் துடிப்பையும் நிறுத்துதல் கூடும்; உடலிலுள்ள எந்த அவயவத்தையும் விருப்பப்படி அசையப்பண்ணுதல் கூடும்.

மனிதரை நெடுங்காலம் உயிர்வாழச் செய்வதுதான் ஹடயோகத்தின் பயனுகும். உடல் நலனே ஹடயோகியின் முக்கிய இலட்சியமாதலால், பயிற்சி வன்மையினுல் அவன் நோய்வாய்ப் படுவதில்லை. அவன் நீண்ட காலம் உயிர் வாழ்கிருன். நூறு வருடம் அவனுக்கு சிற்றெல்லை; நூற்றைம்பது வயதில் இளமை வாய்ந்தவனுகவும் ஒரு மயிரேனும் நரைக்காதவனுகவுமிருப்பான். அதனுற் பெறும் பயன் அவ்வளவுதான். ஆலமரம் ஐயாயிர வருடம் உயிர் வாழினும், அது ஆலமரமேயன்றிப் பிறிதொன்ருகாது. அங்ஙனமே, ஒரு மனிதன் நெடுங்காலம் உயிர் வாழ்வானேயாகில், அவன் உடல் நலம்பெற்ற விலங்காகக் கருதப்படுவானேயன்றிப் பிறிதொன்ருகக் கருதப்படான். ஆயினும், ஹடயோகிகளுடைய பயிற்சிகளில் இரண்டொன்றைப் பயின்று கொள்வது பயன் தருவதாகும். சான்ருகத் தலைவலியை நிறுத்தும் பொருட்டு வைகறையில் மூக்கினுற் குளிர்ந்த ஜலத்தையுறிஞ்சுவது நல்லதென்பதை அனுபவத்திற் கண்டறியலாகும். அங்ஙனம் பயின்றவர்களுக்கு நாள் முழுதும் மூளை குளிர்ச்சியாகவிருக்கும்; ஜலதோஷமும் வாராது. மூக்கை நீரினுள் வைத்து எளிதாக உறிஞ்சப் பயின்றுகொள்ளலாம்.

நிமிர்ந்திருக்கப் பயின்ற பின்பு சில நூலாசிரியர்களின் கொள்
கைப்படி நாடியைச் சுத்தப்படுத்துவதற்குரிய சில பயிர்ச்சிகளைச்
செய்தல் வேண்டும். சில நூல்களில் இப்பயிற்சிகள் இராஜ
யோகத்திற்குரியவல்லவென்று தள்ளப்பட்டிருக்கின்றன. ஆயி
னும், பாஷியகாரராகிய ஸ்ரீ சங்கராசாரியர் போன்றவர்கள் இப்
பயிற்சி வேண்டுவதென்று சொல்லுகிறபடியால், நாமும் இதனை
ஆராய்வது தகுதியென்றே எண்ணுகிறேன். சுவேதஸ்வதர உப
நிஷத்துப் பாஷியத்தில் ஸ்ரீ சங்கரர் சொல்லியிருப்பதைச்
சொல்லுகிறேன்; "பிராணுயாமத்தில் சுத்தியடைந்த மனம்
பிரம்மத்தில் நிலைக்கிறது. ஆதலால், பிராணுயாமம் இங்குக்
கூறப்படுகின்றது. நாடிகள் முதலில் பரிசுத்தப்பட வேண்டும்.
அதன்பின் பிராணுயாமம் பயிலத்தக்க சக்தியுண்டாகும். வலப்
புறத்து நாசியைப் பெருவிரலினுல் அடைத்துக்கொண்டு இடப்
புறத்து நாசியினுற் கூடியவரை காற்றினை உள்ளிழுத்துப் பூரித்
துப் பிறகு கணப்பொழுது நிறுத்தாமல் உடனே இடப்புறத்து
நாசியை மூடிக்கொண்டு வலப்புறத்து, நாசியினுல் உள்வாங்கிய
காற்று முழுவதையும் வெளிச் செலுத்துக. பின்பு வலப்புறத்து
நாசியினுல் உள்ளிழுத்து இடப்புறத்து நாசியினுல் விடுக. இந்தப்
பயிற்சியைத் தினந்தோறும் காலை, நண்பகற் பொழுது, மாலை,
நள்ளிரவாகிய நான்கு காலங்களில் ஒரு காலத்துக்கு மூன்று
அல்லது ஐந்து முறை செய்தல்வேண்டும். ஒரு பட்சத்தில் அல்
லது ஒரு மாதத்தில் நாடிகள் பரிசுத்தமடையும். பின்பு பிராணு
யாமம் பயிலுதல் கூடும்."

பயிற்சி அவசியம் வேண்டுவது; என்னுடைய சொற்பொழிவு
களைத் தவருமல் நாள்தோறும் பல மணி நேரங்கள் கேட்டு வரி
னும், பயிற்சி செய்யாமல் இருப்பீர்களாயின், உண்மை நிலையை
அடையும் பாதையில் ஒர் அடியேனும் தூக்கி வைக்காதவராவீர்
கள். அனைத்தும் பயிற்சியிலே தங்கியிருக்கின்றன. அனுபவம்
அடைந்த பின்பன்றி உண்மை தெளிவாகாது. நாமாகவே கண்டு
உணர்தல் வேண்டும். விளக்கங்களைக் கேட்டுக்கொண்டிருப்பது
மாத்திரம் போதாது. பயிற்சிக்கும் பல தடைகள் இருக்கின்றன.
அவற்றுள் முதலாவது தடை நோய்வாய்ப்பட்ட உடல். உடல்
நோய்வாய்ப்பட்டிருப்பின் பயிற்சி தடைபடும். ஆதலால், உட
லினைத் தக்க சுகாதார நிலையில் வைத்திருக்கவேண்டும். உண்
ணும் உணவையும் அருந்தும் நீரையும் நெறிப்படுத்த வேண்டும்.
இவற்றோடு—அமெரிக்காக் கண்டத்தில் 'கிறிஸ்தியன் சயன்ஸ்'
(Christian Science) என்று சொல்லுகிற முறைக்கியைய, மனத்

திற் செய்கிற தீர்மானத்தினுல் உடலினைப் பலப்படுத்திக்கொள்ளு தல் வேண்டும். இங்ஙனம் செய்த பின்னர், உடலினைப் பற்றி நினைப்பதே கூடாது. உடல் நலம் கருவியாவதன்றி முடிவாகாது என்பதை மறந்துபோதல் கூடாது. உடல் நலனே வாழ்க்கையின் முடிபென்று கருதுவோமாகில், நமக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடுதான் என்ன? விலங்குகள் ஒருபோதும் நோய்வாய்ப் படுவதில்லையே?

ஐயம் இரண்டாவதாக எழுகின்ற தடையாகும். நாம் காணுத பொருள்களைப்பற்றி என்றும் சந்தேகப்படுகிறோம். எவ்வளவு முயன்ருலும் மனிதன் சொற்களை உணவாகக்கொண்டு வாழ்தல் கூடாது. இப்பொருள்களில் உண்மையிருக்கிறதா, இல்லையா வென்று ஐயமுறல் இயல்புதான். சிலபோது நம்முள் மிகவும் நல்ல வர்களாய் இருப்பவர்களும் சந்தேகத்துக்கு இடங்கொடுத்துவிடு கிருர்கள். சில நாட்கள் பயின்ற பின் பெறுகிற பயன் தைரியத் தையும் நம்பிக்கையையும் தருவதற்குப் போதுமானதாகும். "யோக நூல் கூறுகிற முடிபில் ஒரு சிறு முடிபை அனுபவத்திற் கண்டறிந்தபின் முடிபுகளனைத்தினையும் ஒத்துக்கொள்ளலாகும்," என யோகநூற் பாஷியகாரர் ஒருவர் கூறுகிருர். சில மாதம் பயின்றபின் பிறருடைய மன எண்ணங்களை அறியத்தக்கவர்களா வீர்கள்; அவ்வெண்ணங்கள் உருவத்தோடு புலப்படுதல் கூடும். பின்னும் சேய்மையில் நடக்கிற செய்தியில் மனத்தை நிறுத்தி அதனை அறிந்துகொள்ளுதல் கூடும். காலத்துக்குக் காலம் இவ்வா ருகிய சிறிய சிறிய பயன்கள் கைகூடி, தைரியத்தையும் நம்பிக்கை யையும் தருவனவாகும். மூக்கு நுனியில் மனத்தை நிறுத்திச் சிறந்த மணத்தை உணர்தல் கூடும். சடப்பொருட் சம்பந்த மில்லாமல் மனஉணர்வுகள் உண்டாகக்கூடுமென்பதை நீங்களே அறிந்துகொள்வீர்கள். ஆயினும், இவை எல்லாம் முன்னேற் றத்தை உறுதிப்படுத்த வாயில்களாய் இருப்பனவேயன்றித் தம் மளவிற் பெறவேண்டிய பேறுகளாகா. மோட்ச சாதனமே பெற வேண்டிய பேருகும். உடல், மனம், இயற்கைப் பொருள்கள் இவற்றுக்கு நாம் எஜமானர்களாயிருக்கிறோம். இவை நமக் குரியனவேயன்றி நாம் இவற்றுக்கு உரியேமல்லோம்.

ஒரு தேவனும் ஓர் அசுரனும் ஆன்மஞானம் பெறக் கருதி ஒரு பெரியவரிடம் போயினர். நீண்ட காலமாக அவரிடம் கல்வி பயின்ற பின்னர், பெரியவர் மாணுக்கரிருவரையும் நோக்கி, "நீங்கள் தேடுகிற பொருள் நீங்களேயன்றிப் பிறிதொன்றில்லை," என்று சொல்லி விடை கொடுத்தனுப்பினுர். தொடக்கத்தில் இரு

வரும் தம் உடலே தாம் என்று நினைத்துக்கொண்டு உற்றுர் உறவி னரிடம் போய், 'கற்கவேண்டியவெல்லாம் கற்றுவிட்டோம்; உண்டு உடுத்து இன்புற்றிருப்போம்; பரம்பொருள் நாமேயன்றிப் பிறிதொன்றில்லை,' என்றனர். மயக்க முகில் படர்ந்த பேதை மையே அசுர இயல்பாதலால் அசுரன் இதற்கப்பால் ஒன்றும் சிந்தித்தானில்லை. உடலேகடவுள் என்னும் எண்ணத்தோடு திருப்தியுற்றிருந்தான். தேவனே, இயற்கையிற் சாத்துவிகக் குணத்தை யுடையவன். முதலிலே பிழையாக உடலே தானென்று நினைத்து உண்டு உடுத்து இன்பபோகங்களைத் துய்த்துக்கொண் டிருந்தானாயினும், சிலநாட்கழிந்தபின்னர், ஆசாரியராகிய பெரிய வர் சொன்ன மொழியின் கருத்து வேருயிருத்தல் வேண்டுமென்று நினைத்துப் பெரியவரிடம் வந்து, "ஐயா, இந்த உடலே பரம் பொருள் என்று எனக்கு உணர்த்தினீர்களா? அஃதெங்ஙன மாகும்? உடல்களெல்லாம் அழிந்துபோகும் இயல்பினவல்லவா?" என்றுன். அதற்கு முனிவர் மறுமொழியாக, "நீயே அது; அறிந்துகொள்," என்றுர்.

பின்பு தேவன் உடலை இயக்குகிற பிராண சக்திகளே தானு யிருக்க வேண்டுமென்றெண்ணிச் சிந்திக்கலானுன்; 'உணவு உட்கொண்டால் இவை இயங்குகின்றன; பட்டினிக் கிடந்தால் இவை தளர்ந்து போகின்றன,' என்று நினைத்து மீண்டும் பெரிய வரிடம் போய், "ஐயா, பிராண சக்திகளே பரம்பொருளென்று கருதினீர்களா?" என்று வினவினுன். அதற்குப் பெரியவர், "நீயே அது; அறிந்துகொள்," என்றுர்.

தேவன் பின்பும் சிந்தித்து, "நான்" என்பது மனமாக இருத்தல் கூடுமோ என்று நினைத்துப் பார்த்தான்; அப்பொழுதும் மனம் நல்லெண்ணத்தினுலும், தீயவெண்ணத்தினுலும் பற்றப் பட்டு இடையருது வேறுபாடடைந்துகொண்டு வருதலினுல், அது நித்தியமாகிய பரம்பொருளாதல் கூடாதென்று நினைத்துத் திரும்பவும் பெரியவரிடம் போய், "ஐயா, மாறு இயல்பினதாகிய பரம்பொருள் மனமாயிருத்தல் கூடுமோ? நீங்கள் கருதியது அதுதானே?" என்றுன். அதற்குப் பெரியவர் மறுமொழியாக, "இல்லை, நீயே அது; அறிந்துகொள்," என்றுர். தேவன் ஆழ ஆலோசித்து ஆன்மாவின் உண்மை இயல்பைக் கண்டறிந்தான். அதுதான் மனவாக்குக்கு அப்பாலாய்ப் பிறப்பிறப்பில்லாததாய், வாளினுல் துணிக்கப்படாததாய், நெருப்பினுல் தகிக்கப்படாத தாய், காற்றினுல் உலர்த்தப்படாததாய், நீரினுற் கரைக்கப்படாத தாய், ஆதியற்றதாய், அந்தமற்றதாய், அசைவற்றதாய், தொடு

தற்கரியதாய், முற்றறிவுடையதாய், வரம்பிலாற்றல் உடையதாயிருப்பது. இங்ஙனம் உடலுக்கும் மனத்துக்கும் அப்பாலாய் இருக்கிற தனது நிலைமையை உணர்ந்த தேவன், பூரண திருப்தியை அடைந்தான். அசுரனோ, உடலின்மேலுள்ள பற்றினால் உண்மையை உணர்ந்துகொள்ளவில்லை.

அசுரனையொத்தவர் பலர் இவ்வுலகிலுண்டு ; தேவனையொத்தவருஞ் சிலருண்டு. ஆதலினாலேதான் புலனுகர்ச்சிக்குரிய இன்பங்களைப் பெருகச் செய்கிற வித்தையை ஒருவன் கற்பிக்கமுற்பட்டு வரும்பொழுது அவனைப் பலர் பின்தொடருகின்றனர். ஆன்ம ஞானத்துக்குரிய வித்தையை அறிவுறுத்த வருபவனைப் பின்தொடர்வோர் ஒரு சிலரே. உயர்வான ஞானத்தை விளங்கிக் கொள்ளத் தக்கவர் மிகச் சிலர். இவருள்ளுஞ் சிலரே மேனிலையை அனுபவத்தினாலடைபவர். உடலானது ஆயிரம் வருஷம் இருப்பினும், ஈற்றில் மடிந்துவிடுவதேயாம் என்பதை அறிய வல்லாரும் சிலரே. உடலினை ஒன்று கூட்டி வைத்திருக்கிற சக்திகள் நீங்கினால், உடல் விழுந்துவிடும். ஒரு கணப்பொழுதும் உடலை வேறுபாடடையாமல் வைத்திருக்கத்தக்க மனிதன் எவனுமிலன் ; மாறாத வேறுபாடே 'உடல்' எனப்படுகிறது. கணந்தோறும் வேறுபடுகின்ற நீரினாலமைந்த ஆற்றையொத்ததாகிய உடலானது, உருவம் நிலைத்திருப்பினும் கணந்தோறும் வேறுபட்டுக் கொண்டிருக்கிறது. இங்ஙனமாயினும், உடலினைப் பேணி வலியுள்ளதாகவும் நலன் உள்ளதாகவும் வைத்திருக்க வேண்டுவது அவசியமாகும். ஏனெனில், மேனிலையை அடைவதற்கு உடல் ஒரு கருவியாய் அமைந்திருக்கிறது.

மனித யாக்கை உலகிலுள்ள மற்றெல்லா யாக்கைகளினுஞ் சிறந்தது. தேவர், விலங்கு ஆகிய யாவற்றினும் மனிதன் சிறந்தவன் ; மக்கட்பிறவியிலும் மேம்பட்ட பிறவியில்லை ; தேவர்களும், மனிதராய்ப் பிறந்துதான் மேற்கதியை அடைய வேண்டுபவர்கள். பூரணத்துவம் மனிதனால் அடையப்படுவதேயன்றித் தேவர்களாலும் அடைய முடியாதது. யூத, முகமதிய சமயக் கொள்கையின்படி கடவுள் தேவ தூதர்களையும், மற்றெல்லாப் பிராணிகளையும் படைத்ததன் பின்னர் மனிதனைப் படைத்தாரென்றும், கட்டளைக்கமைந்து எல்லோரும் வணங்க இபிலிஸ் மாத்திரம் வணங்காமலிருந்ததனால், இபிலிஸைச் சாத்தானாகும்படி கடவுள் சபித்தாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மனிதப் பிறப்பே மற்றெல்லாப் பிறவியினும் மேம்பட்டதாமென்னும் உண்மை இந்தக் கதையினுட் பொதிந்துகிடக்கிறது. பிராணிகளும் விலங்குகளும்

தாமசகுண இயல்பினவாதலால், அவை உயர்வான எண்ணங்களைச் சிந்திக்கமாட்டா. தேவர்களும் மேலான இன்ப சுக போகங்களை அனுபவித்துக்கொண்டிருப்பவர்களாதலால், அவர்களுக்கும் ஆன்ம ஞானம் சித்திக்கமாட்டாது. மனித இனத்தினுள்ளும் அளப்பருஞ்செல்வமும், கொடிய வறுமையும் ஆன்ம முன்னேற்றத்துக்குத் தடையாவன. நடுத்தரமான வகுப்பினருள்ளிருந்தே, உலகிற் பெரியோர் தோன்றுகின்றனர். ஏனெனில், நடுத்தர நிலைமையில் மனம் ஆறுதலுற்றுச் சமத்துவமாய் இருக்கும்.

இனிப் பிராணயாமத்தைப் பற்றி விசாரிப்போம்: அதற்கும் சித்தத்தை அடக்குவதற்கும் உரிய தொடர்பு எதுவென்று விசாரித்தல் கூடும். சுவாசமானது அசைந்துகொண்டிருக்கிற உடலாகிய இயந்திரத்தை அடக்கியாளுகிற ஆதாரச் சில்லுப் போன்றிருக்கிறது. பெரிய இயந்திரத்தைப் பார்வையிடுவோமானால், ஆதாரச் சில்லினுடைய அசைவு எங்ஙனம் ஏனைய சில்லுகளுக்கெல்லாம் சென்று சேருகிறதென்பதை உணர்ந்து கொள்வோம். சுவாசமும் ஆதாரச் சில்லினைப்போல உடலின் அவயவங்களுக்கு வேண்டிய வலிமையை மட்டுப்படுத்திக் கொடுத்துக்கொண்டிருக்கிறது.

ஒரு பெரிய அரசனுக்கு ஓர் அமைச்சன் இருந்தான். அந்த அமைச்சன் ஒரு குற்றஞ் செய்தபடியால், அரசன் அவனை உயர்ந்த கோபுரத்தின் அறை ஒன்றினுள் அடைத்துச் சிறையிருத்தினான். மந்திரியின் மனைவி மிகவும் உத்தமி; அவள் இரவிற் கோபுரத்தினடியில் வந்து நின்று துயரத்தோடு கணவனுக்குத் தான் எவ்வகையில் உதவி செய்யலாமென்று அவனை வினவினாள். அதற்கு அவன் மறுமொழியாக, "நாளையிரவு நீ இங்கு வரும்பொழுது தடித்த நீண்ட கயிறொன்றும், திரிக்கப்பட்ட சணக்கயிறொன்றும், நூன்முடியொன்றும், பட்டு நூற்பந்து ஒன்றும், பொறிவண்டு ஒன்றும், சிறிதளவு தேனுங் கொண்டு வருவாயாக," என்றான். கணவனுரைக் கடங்கி நடக்கிற அவ்வுத்தமியும் சொல்லப்பட்ட பொருள்களைத் திரட்டிக்கொண்டு வந்தாள். கணவனும், அவளை நோக்கி, "வண்டின் உடலிற் பட்டுநூலை இறுகக் கட்டி, அதன் தலையில் ஒரு துளித் தேனைப் பூசிச் சுவரின்மீது நேராக வை," என்றான். அங்ஙனம் வைக்கவே, வண்டானது தேனின் மணத்தினாற் கவரப்பட்டு மேனோக்கி நகர்ந்து போயிற்று. அமைச்சன் வண்டிற் கட்டியிருந்த பட்டு நூலைக் கைப்பற்றி மனைவியை நோக்கி நூன்

முடியின் தலைப்பைக் கட்டிவிடும்படி சொன்னான். பின்னர் நூன் முடியின் மறு தலைப்பிற் சணற்கயிறு கட்டப்பட்டது. சணற் கயிற்றிற் பெருங்கயிறு கட்டப்பட்டது. பெருங்கயிற்றின் மூல மாக அமைச்சன் கீழே இறங்கித் தப்பியோடிவிட்டான். பட்டு நூல்போன்றது சுவாசத்தின் இயக்கம். அதனைப் பற்றினால், நாடிகளாகிய நூன்முடியைப் பற்றலாம்; அவற்றின் மூலமாக எண்ணங்களாகிய சணற்கயிற்றைப் பற்றிப் பின்னர்ப் பிராண னாகிய பெருங்கயிற்றைப் பற்றலாம்; அதன் மூலமாக விடுதலை யடையலாம்.

நமது உடலைப்பற்றி நாம் ஒன்றும் அறியோம்; அறியவும் மாட்டோம். உடலினுள் இருப்பதனைக் காணும்பொருட்டு மரித்த உடல்களை வெட்டிப் பார்ப்பார் சிலர்; உயிருள்ள பிராணிகளை வெட்டிப் பார்ப்பார் வேறு சிலர். அவற்றுக்கும் நமது உயிருள்ள உடலுக்கும் சம்பந்தமில்லை. நமது உடலைப்பற்றி நாம் அறிந் தது மிகச் சிறிதே. ஏன் அறியாதிருக்கின்றோமெனின், உள்ளே நடக்கின்ற மிக நுண்ணிய அசைவுகளைக் கூர்ந்து நோக்கும் அறிவு நமக்கு இல்லை. மனம் இப்பொழுதுள்ள நிலையினும் நுண்ணியதாகி உடலினுள்ளே ஆழ்ந்து செல்லும் பொழுது, நாம் அவற்றை அறிந்து கொள்ளுவோம். பருப்பொருளாகத் தோன்றுவனவற்றோடு தொடங்கி நுண்பொருட்காட்சியை அடை தல் வேண்டும். இயந்திரம் அனைத்தினையும் இயக்குகிற சத்தியைப் பற்ற வேண்டும்; அதுதான் பிராணன்; அது மூச்சி னிடத்தே வெளிப்பட்டுத் தோன்றுகிறது. சுவாசத்தைப்பற்றி மெல்ல உடலினுட்புகுந்து பார்ப்போமாயின், உடலை அசைக்கிற நாடி நரம்புகளின் நுண்ணசைவுகளை நேரிற் காண்போம். இவற்றைக் கண்டு இவற்றினது தன்மையை உணரப் பயிலுவோ மாயின், இவற்றை அடக்கியாளத் தொடங்கி, உடல் முழுவதை யும் நமது கட்டளைக் கடங்கி நடக்கச் செய்வோம். வேறுபட்ட நரம்புகளின் இயக்கத்தினால் மனமும் இயங்குகிறதாதலினாலே, ஈற்றில், உடல், மனம் இவ்விரண்டினையும் அடக்கியாண்டு, அவற்றை நம் பணியாளராக்குகின்ற பூரணநிலையை நாம் அடைவோம். அறிவினால் வலிமை உண்டாகின்றது. இந்த வலிமையை நாம் பெறுதல் வேண்டும்; ஆதலால், முதல் பிராணனை வயப்படுத்துகின்ற பிராணாயாமத்தோடு நாம் தொடங்க வேண்டும். பிராணாயாம ஆராய்ச்சி மிக விரிந்தது. அதனை நிறைவாக எடுத்துக் காட்டுவது கடினம் ஆகும். ஆதலால், அதனைப் பாகம் பாகமாக எடுத்துக் காண்போம் :

ஒவ்வொரு பயிற்சியின் கருத்தும் இதுவென்றும், பயிற்சியினாலே உடலிலே இயக்கமுறுகின்ற சத்திகள் இவையென்றும் நாம் படிப்படியாக அறிந்துகொள்ளுவோம். இவை அனைத்தினையும் நாம் அடையலாம். ஆனால், பயிற்சி வேண்டும்; பயிற்சியினாலே பிரமாணம் ஏற்படும். நீங்களே பயின்று தெளிந்து கொள்ளும் வரை நான் எவ்வளவு நியாயங்களை எடுத்துக் கூறினும், அவை உங்களுக்குப் பிரமாணமாகமாட்டா. உடல் முழுவதிலும் ஒரு வகைப் புத்துணர்ச்சி இயங்கக் காணும் பொழுது ஐயம் அனைத்தும் அகன்றுபோம். ஆனால், நாள் தோறும் கடினமான பயிற்சி இன்றியமையாதது. நாள்தோறும் இரு முறையாயினும் பயில வேண்டும்; காலை மாலை நேரங்கள் சிறந்தவை. இராப்பொழுது கழிந்து பகற்பொழுதாகிய வேளையும், பகற்பொழுது கழிந்து இராப்பொழுதாகிய வேளையுமான அந்திக் காலங்களிலே ஓரளவாகிய அமைதி நிலையுண்டு. அமைதிக் காலங்களாகிய காலை மாலை வேளைகளில் நமது உடலுக்கும் அமைதி நிலை அடையுந் தன்மையுண்டு. இயற்கையில் அமைந்திருக்கின்ற இந்த நன்மையைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு இந்த வேளைகளிலே பயிற்சியைத் தொடங்கவேண்டும். பயிற்சி முடியுமுன்னர் உணவு உட்கொள்ளுவதில்லை என்னும் விதியினைக் கடைப்பிடித் தொழுகினால், பசியின் வலிமையினாற் சோம்பல் நீங்கிப் போகும். பயிற்சி செய்து கடவுள் வழிபாடு முடித்தபின்பன்றி உணவருந்துதல் கூடாதென்று இந்தியாவிலே சிறுவர்களையும் பயிற்றுவிப்பது வழக்கம். பயிற்சியில் இது வழக்கத்துக்கு வந்துவிட்ட பின், நீராட்டம் கடவுட்பூசை இவற்றை முடித்த பின்பன்றிப் பசி தோற்ற மாட்டாது.

இயன்ற வரையில் யோகாப்பியாசத்துக்கென்று தனித்த ஓர் அறையைச் சீர்படுத்தி வைத்துக்கொள்ளுதல் வேண்டும். அந்த அறையினுள் துயிலக் கூடாது; அது பரிசுத்தமாயிருத்தல் வேண்டும்; நீராடி உடலையும் மனத்தையும் தூய்மைப்படுத்திய பின்பன்றி அந்த அறையினுள்ளே புகுதல் கூடாது. அந்த அறையில் மலர்களை வைக்கவேண்டும்; இவை யோகிக்கு உகந்த சார்பானவை; மனத்துக்கு உவப்பைத் தருகிற படங்களையும் வைக்க வேண்டும். காலையிலும் மாலையிலும் தூபம் இடவேண்டும். கோபம், சச்சரவு, தூய்மையற்ற எண்ணம் என்னுமிவை அந்த அறையிலே நிகழுதல் கூடாது. உங்களோடு ஒத்த எண்ணமுடையவர்களை மாத்திரமே அந்த அறையினுட்புகவிடலாம். படிப்படியாக அந்த அறை தூய்மையை அடையும். உங்கள்

சித்தங்கலங்கி, நீங்கள் கவலை, துயர், ஐயம் என்னுமிவற்றினல் துன்புறும்பொழுது அந்த அறையினுட்புகுந்தால் உங்கள் மனம் அமைதியை அடையும். இந்தக் காரணம்பற்றித்தான் கோயில்கள் உண்டாயின. சில கோயில்களிலே இன்றும் தூய்மை நிறைந்திருக்கக் காண்கிறோம். பெரும்பான்மையான கோயில்களில் இந்த நிலை முற்றிலும் அழிந்து போயிற்று. தூய இயக்கங்களாலே இடம் தூய்மையடைந்து விளக்கமுற்றிருக்குமென்பது இதன் அடிப்படையான கருத்து. தனித்த ஓர் அறையைச் சீர்படுத்தி வைக்க இயலாதவர்கள் விரும்பிய இடத்தில் பயிற்சி செய்யலாம். பயிலும்பொழுதும் நிமிர்ந்திருந்து முதலிலே தூய ஓர் எண்ணத்தை எல்லா உயிர்களிடத்திலும் செலுத்தவேண்டும். "எல்லா உயிர்களும் உவகையுற்றிருப்பனவாக; எல்லா உயிர்களும் சாந்தமுற்றிருப்பனவாக; எல்லா உயிர்களும் ஆனந்தமுற்றிருப்பனவாக," என்று சிந்திப்பீர்களாக. இவ்வண்ணம் கிழக்கிலும், தெற்கிலும், வடக்கிலும், மேற்கிலும் உள்ள எல்லாப் படைப்புகளின் நலத்தையும் சிந்திக்க வேண்டும். இதனை எவ்வளவு மிகுதியாகச் செய்கிறீர்களோ, அவ்வளவு நலத்தை அடைவீர்கள். பிறருடைய நலத்துக்காக முயல்வதே உங்கள் நலத்தைத் தேடிக்கொள்ளுதற்கு உரிய வழி என்பதையும், பிறருடைய இன்பத்துக்காக முயல்வதே உங்களுடைய இன்பத்தைப் பெருக்கிக் கொள்வதற்குரிய எளிதான வழி என்பதையும் நாளடைவில் உணர்ந்துகொள்வீர்கள். இதன் பின்னர்க் கடவுள்பால் நம்பிக்கையுடையோர் கடவுளை நோக்கி இறைஞ்ச வேண்டும். அங்ஙனம் இறைஞ்சுவதும் பொருள், இன்பம், சுவர்க்கம் இவற்றைக் கருதாமல் ஞானத்தையும் அறிவையுங் கருதியிருக்கவேண்டும்; இதை யொழிந்த பிரார்த்தனைகள் சுயநலத்தின்பாற்படுவன. அதன் பின்னர் உங்கள் உடலை நினைத்து அது சுகமாகவும் வலிமையாகவும் இருப்பதாகக் கருதவேண்டும்; உடல் சிறந்த கருவி. அது வயிரம் போல உறுதியுடையதென நினைக. உடலின் உதவியினலே வாழ்க்கையென்னும் கடலைத் தாண்டுதல் வேண்டும். வலிமையற்றவர் வீட்டின்பத்தை அடையார். பலவீனம் முழுவதையும் உதறித் தள்ளிவிடுக. உம்முடைய உடலையும் மனத்தையும் நோக்கி அவை நலனும் வலிமையும் உள்ளவையென்று அவற்றுக்கு உறுதி கூறுக. எல்லையற்ற தன்னம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்.

## 3. பிராணன்

பிராணுயாமம் என்பது மூச்சைக் குறித்தது எனப் பலர் நினைக்கின்றனர்; அதுவன்று. மூச்சுக்கும் பிராணுயாமத்துக்கும் இடையேயுள்ள தொடர்பு மிகச் சிறிதேயாகும். உண்மைப் பிராணுயாமத்தை அடைவதற்கு நாம் செய்யும் பல சாதனைகளிலே மூச்சும் ஒன்று. பிராணுயாமம் என்பதற்குப் பிராணனைத் தன் வயப்படுத்துதல் என்பது பொருள். இந்தியாவிலுள்ள தத்துவ ஞானிகளுடைய கொள்கைப்படி உலக முழுவதும் இரண்டு பொருள்களால் ஆக்கப்பட்டது. அவற்றினுள் ஒன்று, ஆகாயம்; அது எங்கும் பரந்து எல்லாவற்றிலும் செறிந்திருக்கிறது. உருவமுடையனவாய்ச் சேர்க்கையினுல் எய்துவன யாவும் அந்த ஆகாயத்திலிருந்து பரிணமித்தனவே. ஆகாயமே வாயுவாகிறது. அதுவே நீர்ப்பொருள் ஆகிறது; கட்டிப்பொருள் ஆகிறது. ஆகாயமே ஞாயிறு, புவி, மதி, விண்மீன்கள், வால் வெள்ளிகள் என்பவையாகின்றது; ஆகாயமே மனித உடல், விலங்கின் உடல், தாவரம் எனும் யாவுமாகி, நம்மாற் காணப்படும் வடிவங்களாகிப் புலன்களால் அறிதற்குரிய அனைத்தும் ஆகின்றது. அதனை நாம் காணுதல் இயலாது. அது நுண்ணிய பொருளாயிருத்தலினுலே, எல்லா வகையான பொதுக்காட்சிக்கும் அப்பாலாகி நிற்கின்றது; அது பருப்பொருளாகி வடிவெடுக்கும் பொழுதுதான் நாம் அதைக் காணுதல் கூடும். படைப்புத் தொழிலின் தொடக்கத்திலே ஆகாயம் மாத்திரமே இருந்தது. காலவட்டத்தின் இறுதியிலே, மண், நீர், காற்று ஆகிய அனைத்தும் மீண்டும் ஆகாயம் ஆகும். பின்பும் இவ்வாகாயத்திலிருந்து படைப்பு உண்டாகும்.

இந்த ஆகாயமானது எத்தகைய சத்தியினுலே உலகமாகக் காரியப்படுகிறது? பிராண சத்தியினுலே. ஆகாயமானது அகண்டமாய் இந்த உலகத்தில் எங்கும் பரந்திருக்கிற பொருளாயிருத்தல் போல, இந்தப் பிராணனும் அகண்டமாய் இந்த உலகத்தில் எங்கும் பரந்திருக்கின்ற சத்தி ஆகும். கால வட்டத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் அனைத்துப் பொருள்களும் ஆகாயம் ஆகின்றன; உலகத்திலுள்ள எல்லாச் சத்திகளும் பிராணன் ஆகின்றன. அடுத்த வட்டத்தில் சத்தி என்று சொல்லுதற்கு உரிய அனைத்தும் இந்தப் பிராணனிலிருந்து வெளிப்படுகின்றன. இயக்கமாகத் தோற்றுவது பிராணன்;

புவிக் கவர்ச்சி, காந்தக் கவர்ச்சியாகத் தோன்றுவது பிராணன்; உடலின் தொழில்களாகவும் நரம்பிலுள்ள ஓட்டமாகவும், எண்ணத்தின் வலிமையாகவும் தோன்றுவது பிராண சத்தி. எண்ணம் முதலாக, இழிந்த சத்தி ஈறாக, அனைத்தும் பிராணனுடைய வெளித் தோற்றமே. உலகத்திலுள்ள சத்திகளின் கூட்டம் மனத்தின் சார்பாய் இருப்பினும் சரி; சடத்தின் சார்பாய் இருப்பினும் சரி; அனைத்தும், தாம் தொடக்கத்திலிருந்த நிலையை அடையும்பொழுது, பிராணன் எனப்படுகின்றன. உளதும் இலதும் இல்லாதிருந்த பொழுது, இருள் இருளை மறைத்திருந்த பொழுது, யாது இருந்தது? அப்பொழுது, ஆகாயம் அசைவின்றி இருந்தது. பிராணனுடைய சடவியக்கம் நின்றுபோய் விட்டது. அப்படி இருந்தும், அது உள்ள பொருளாயிருந்தது. காலவட்டத்தின் இறுதியிலே இப்பொழுது உலகத்திற் காணப்படுகிற சத்திகள் எல்லாம் சாந்தமடைந்து இயக்கமற்ற நிலையில் இருக்கின்றன. மற்றக் காலவட்டம் தொடங்கும் பொழுதும் அவை எழுந்து ஆகாயத்தைத் தாக்க, ஆகாயத்திலிருந்து வேறுபட்ட வடிவங்கள் பரிணமிக்கின்றன; ஆகாயம் மாறுபடும்பொழுது, பிராணனும் சத்திகளின் வடிவங்களாக மாறுதல் அடைகின்றது. இந்தப் பிராணனை அறிந்து அடக்கி ஆளுவதே உண்மையிற் பிராணாயாமம் எனப்படுவது.

இது ஏறக்குறைய எல்லையற்ற வலிமையின் கபாடத்தை நமக்குத் திறக்கின்றது. ஒரு மனிதன் பிராணனைப் பூரணமாக உணர்ந்து அதனை அடக்கியாளக்கூடியவனாயிருந்தால், உலகில் உள்ள எந்த வலிமைதான் அவனுடையதாகாது? அவன் ஞாயிற்றையும் விண்மீன்களையும் இடம் விட்டுப் பெயர்க்கக் கூடியவனாயிருப்பான். அவன் பிராணனை அடக்கியாளக் கூடியவனாயிருப்பதனால், அணு முதற் பெரிய சூரியன் இறுதியாக உலகத்திலுள்ள அனைத்தினையும் அடக்கி ஆளுவான். இதுவே பிராணாயாமத்தின் முடிபும் நோக்கமுமாகும். யோகி பரிபூரண நிலையை அடையும் பொழுது, பிரகிருதியிலே அவன் அடக்கி ஆளக்கூடாதது ஒன்றும் இராது; தேவர்களும், மறைந்த ஆன்மாக்களும் அவனுடைய கட்டளைக்கு அடங்கி வருவார்கள். இயற்கையிலுள்ள எல்லா வலிமைகளும் அடிமைகள் போல அவனது கட்டளைக்கு அடங்கி நடக்கும். அறிவில்லாத ஒருவன் யோகியிடத்திலே விளங்கும் இந்த வலிமைகளைக் கண்டு அற்புத நிகழ்ச்சிகள் என்பான்.

இறுதியிலமைந்த பொதுத்தன்மையை விசாரித்து விரிவுகளைப் பின்பு காண விடுவது இந்துக்களுடைய சிந்தையின் சிறப்பிலக்கணமாகும். "எதனை அறிந்தால் யாவற்றையும் அறியலாம்?" என்னும் வினு வேதங்களிலே எழுகின்றது. எதனை அறிந்தால் யாவற்றையும் அறியக்கூடுமோ அதனை நிறுவுவதற்காகவே எல்லா நூல்களும், எல்லாத் தத்துவ சாத்திரங்களும் ஏற்பட்டன. ஒரு மனிதன் இந்த உலகத்தைச் சிறிது சிறிதாக உணரவேண்டுமாயின், அவன் ஒவ்வொரு மணலையும் கவனிக்க வேண்டும். எல்லையற்ற காலம் நடந்தாலும் அவன் எல்லாவற்றையும் அறிதல் இயலாது. அப்படியாயின், அறிவு எங்ஙனம் உண்டாகும்? சிறப்புப் பொருள்களை அறிவதனுல் ஒரு மனிதன் அனைத்தினையும் அறிந்து கொள்ளுதல் எவ்வண்ணம் கைகூடும்? சிறப்புப் பொருள்களின் தோற்றத்துக்குப் பின்னணியில் பொதுத்தன்மை ஒன்று அமைந்திருக்கிறதென யோகிகள் சொல்லுகிருர்கள். எல்லாச் சிறப்புக் கருத்துக்களுக்கும் பின்னே ஒரு பொதுக் கருத்து இருக்கின்றது. பண்பு வடிவாகிய அந்த ஆதாரக் கொள்கையைப் பற்றுவீர்களாயின், அனைத்தினையும் பற்றியவர்கள் ஆவீர்கள். இந்த உலகம் அனைத்தும் ஒன்ருகிய சத்துப் பொருளாக வேதங்களிலே தொகுத்துக் கூறப்பட்டது. அந்தச் சத்துப் பொருளைப்பற்றியவன் உலகம் முழுவதையும் பற்றியவன் ஆவான். அவ்வண்ணமே எல்லாச் சத்திகளும் பிராணசத்தியிலே அடங்குவன. இந்தப் பிராண சத்தியைப் பற்றியவன் இந்த உலகத்திலுள்ள மானச சத்தி, சடசத்தி என்னும் அனைத்தினையும் பற்றியவனுவான். பிராணனை அடக்கி ஆளுபவன், தன் மனத்தை அடக்கி ஆளுவான்; எல்லா மனங்களையும் அடக்கி ஆளுவான்; தன் உடலை அடக்கி ஆளுவான்; எல்லா உடல்களையும் அடக்கி ஆளுவான். ஏனெனில், பிராணனது சத்தி அனைத்தும் வெளிப்பட்டுத் தோன்றும் பொதுப் பொருளாய் விளங்குகிறது.

பிராணனை அடக்கியாளுவது எப்படி என்றறிந்துகொள்ளுவது பிராணுயாமத்தின் ஒரு தனிக் கொள்கையாகும். எல்லா வகையாகிய பயிற்சிகளும் சாதனைகளும் இந்த முடிபையே கருதியவை. ஒவ்வொரு மனிதனும் தானிருக்கும் நிலையிலிருந்து தொடங்கித் தனக்கு மிகவும் அண்மையில் இருக்கிற பொருள்களை அடக்கியாளப் பயிலுதல் வேண்டும். இந்த உடல் நமக்கு மிகவும் அணித்தாய் இருக்கிறது; உலகத்திலுள்ள மற்றப் பொருள்களைக்காட்டிலும் சமீபமாயிருக்கிறது; மனம் இதனினும் அணித்

தாயிருக்கிறது. இந்த உடலையும் மனத்தையும் இயக்குகிற பிராணன், உலகத்திலுள்ள மற்றப் பிராணிகளைவிட நமக்கு மிகவும் அணித்தாயிருக்கிறது. நம்முடைய சடசத்தி சித்த சத்திகளை வெளிப்படுத்தும் பிராணனாகிய சிறிய அலை, அகண்டமாகிய பெருங்கடல் போன்ற பிராணனில் எழுகின்ற அலைகளினுள்ளே, நமக்கு மிகவும் அணித்தாய் இருப்பது. இந்தச் சிறிய அலையை அடக்கியாளுவதிற் சித்தி பெறுவோமாயின், பிராணன் முழுவதையும் அடக்கியாளுவதை எதிர்பார்க்கலாம். இதனைச் செய்து முடித்த யோகி பூரணத்துவத்தை அடைகின்றான்; அதன் மேல் அவன் எந்தச் சத்திக்கும் கீழ்ப்பட்டவனல்லன். அவன் ஏறக்குறைய எல்லாம் வல்லவனும் எல்லாவற்றையும் அறிபவனும் ஆகின்றான். பிராணனைத் தம் வயப்படுத்துவதற்கு முயன்ற மத வகுப்பினரை நாம் எல்லாத் தேசங்களிலும் காணலாம். மானத வைத்தியர், நம்பிக்கை வைத்தியர், ஆவிக்குரியோர், கிறித்தவ விஞ்ஞானிகள், மனோவசியக்காரர் என்னும் பல்வேறு வகையினர் இந்த நாட்டில் இருக்கின்றனர். வேறு வேறாகிய இவர்களுடைய கொள்கைகளை ஆராய்ந்து பார்ப்போமாயின், இவர்கள் அறிந்தோ, அறியாமலோ, பிராணனைத் தன்வயப் படுத்துகிற முறைகளை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை அறியலாம். இவர்களுடைய கொள்கைகள் அனைத்தினுக்கும் சாரமாய் உள்ளது அதுவே. விஷயத்தை அறிந்து கொள்ளாது அந்த வலிமையினையே இவர்கள் தொழிற்படுத்துகிறார்கள். தற்செயலாக இவர்கள் ஒரு சத்தியைக் கண்டறிந்து அதன் தன்மையை அறிந்துகொள்ளாது பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள். பிராணனிலிருந்து எழுவதும், யோகியால் உபயோகிக்கப்படுவதும் அந்த வலிமையே.

ஒவ்வொரு பிராணியிலுமுள்ள உயிராற்றல் பிராணனாகும். பிராணனுடைய மிக வுயர்ந்த—மிக நுண்ணிய—தொழில் எண்ணமாகும். எண்ணமே அனைத்தும் ஆகாது என்பதை நாம் காண்கிறோம். தொழிலின் அடிப்படையாய் இருக்கிற இயற்கை அறிவு என நாம் சொல்லுகிற உணர்வற்ற எண்ணம் இருக்கிறது. கொசுக் கடித்தால் கை தானாகவே இயங்கி அதை அடிக்கிறது. இது எண்ணத்தின் ஒரு வகை வெளிப்பாடு. உடலினுள்ள எதிரியக்கத் தொழில்கள் (Reflex action) அனைத்தும் எண்ணத்தின் இந்த நிலைக்கு உரியன. அறிவோடு கூடிய மற்றொரு நிலை எண்ணத்துக்கு உண்டு. நான் தருக்கம் செய்கிறேன்; யூகிக்கிறேன்; நினைக்கிறேன்; குறித்த சில

விஷயங்களுக்கு உடன்பாடாகவும் எதிர் மறையாகவும் இருப்ப வற்றைக் காண்கிறேன்: எண்ணம் அவ்வளவோடு அமைய வில்லை. தருக்க அறிவு எல்லையினுட்பட்டது என்பதை நாம் அறிவோம்; தருக்க அறிவு ஓர் அளவுவரை செல்லும்; அதற் கப்பால் செல்லமாட்டாது. அது இயங்குகிற வட்டம் குறுகிய எல்லையினுட்பட்டது. அப்படியிருந்தும் இந்த வட்டத்தினுள் விஷயங்கள் வந்து புகுவதைக் காண்கிறோம். வால் வெள்ளி களின் வருகையைப் போல இந்த வட்டத்துக்குள்ளே சில விஷயங்கள் வருகின்றன; நமது தருக்க அறிவு எல்லைக்கு அப்பாற்செல்லா தெனினும், புறம்பே நின்று இவ்விஷயங்கள் வருகின்றன என்பது திண்ணம். இந்தச் சிற்றெல்லையி னுள்ளே வலிந்து புகுகின்ற நிகழ்ச்சிகளின் காரணம் எல்லைக்கு வெளியே உள்ளது. உரையுணர்வு கடந்த இதனிலும் உயர்ந்த நிலையில் மனம் இருத்தல்கூடும். 'சமாதி' என்று சொல்லப்படும் பூரண தியானத்தோடு கூடிய உரையுணர்வு கடந்த அந்நிலையை மனமானது அடையும்பொழுது இயற்கையறிவினாலும், தருக்கத் தினாலும் ஒரு பொழுதும் காணவொண்ணாத விஷயங்களை அது நேர்முகமாகக் காண்கிறது. உடலிலுள்ள நுண்ணிய சத்திகளின் தொழிற்பாடுகளும், பிராணனுடைய வேறு வேறாகிய வெளிப்பாடு களும் முறையாகப் பயிற்றப்படின், அவை மனத்துக்கு ஓர் இயக்கத்தைத் தந்து, அதனை உயரப் போகும்படி செய்து, உரையுணர்வு கடந்த நிலையை அடைவிக்கும். அந்த நிலையி லிருந்து மனம் தொழில் புரியும்.

இந்தப் பிரபஞ்சத்தில் எவ்விடத்திலும் இடையீடின்றித் தொடர்ந்திருக்கும் ஒரு பொருள் உண்டு. சடத் தன்மையிலே நோக்கும்பொழுது இந்தப் பிரபஞ்சம் ஒன்றாயிருக்கிறது; உனக் கும் கதிரவனுக்கும் வேறுபாடில்லை. இம்முடிப்பினை எதிர்த் துரைப்பது பொய்யறிவேயாகும் என விஞ்ஞான சாத்திரிகள் சொல்லுவார்கள். எனக்கும் இந்த மேசைக்கும் உண்மையில் வேறுபாட்டில்லை; பொருட்பிழம்பிலே மேசை ஓரிடம், நான் மற்றோரிடம். பொருளாகிய எல்லையற்ற பெருங்கடலிலே ஒவ்வொரு வடிவமும் ஒவ்வொரு சுழியை நிகர்த்தது. இவற்றி னுள் ஒன்றாவது நிலையாயிருப்பதில்லை. ஓடி வருகின்ற நீரருவி யிலே இலட்சக்கணக்கான நீர்ச்சுழிகள் பொருந்தியிருக்கின்றன. கணந்தோறும் அவற்றிடையேயுள்ள நீர் சில விநாடிகள் சுழன்று வெளியே போய்விடப் புதிய நீர் அவ்விடத்துக்கு வருதல் போல, பிரபஞ்சம் இடையீடின்றி மாறுகிற பொருட்

பிழம்பாய் இருக்கின்றது. அதனிடையே உள்ள வடிவங்கள் அனைத்தும் நீர்ச்சுழி போன்று இருக்கின்றன. ஒரு பொருட்பிழம்பு, மனித உடலாகிய ஒரு சுழியினுள்ளே புகுந்து, ஆங்குச் சில காலம் தங்கியிருந்து, வேறுபட்டுப் பின்பு ஒரு விலங்கின் உடலுட்புகுந்து ஆங்குச் சில ஆண்டு வதிந்து, உலோகக் கட்டியாகிய மற்றொரு சுழியினுள்ளே புகுதல் கூடும். இடையீடின்றி மாறுதல் நடக்கிறது. ஓர் உடலும் நிலையாயிருப்பதில்லை. சொல்லளவிலேயன்றி, எனது உடல் உனது உடல் என்னும் வேறுபாடில்லை. மிகப் பெரிய பொருட்பிழம்பிலே ஒரு சிறு புள்ளி மதி; மற்றொன்று ஞாயிறு; மற்றொன்று மனிதன்; மற்றொன்று புவி; மற்றொன்று தாவரம்; மற்றொன்று உலோகப் பொருள். ஒன்றும் நிலையாயிருப்பதில்லை. அனைத்தும் மாறுகின்றன. சடப்பொருள் நித்தியமாகக் கூடுவதும் பிரிவதுமாயிருக்கின்றது. மனமும் அத்தகையதே. சடம் ஆகாயத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது. பிராணனது நுண்ணிய தொழிலைச் செய்யும்பொழுது, இந்த ஆகாயமே நுணுகிய அசைவுகளோடு மனத்தை வெளிப்படுத்திக் காட்டும். அங்கும் பிளப்பற்ற ஒரே பிழம்பாய் இருக்கும். அந்த நுண்ணிய அசைவை நீங்கள் பெறுதல் கூடுமாயின், பிரபஞ்சமனைத்தும் நுண்ணிய அசைவுகளாலே ஆக்கப்பட்டிருக்கிறதென்பதைக் கண்டுணர்ந்து கொள்வீர்கள். புலன்களோடு கூடியிருக்கும் பொழுது சில மருந்துகள் நம்மை இந்நிலைக்குக் கொண்டுபோகும் வலிமையுடையன. ஸர் ஹம்பிரி டேவி (Sir Humphry Davy) என்னும் விஞ்ஞானியார் கண்ட பேர்போன அனுபவத்தை உங்களுட்சிலர் அறிந்திருக்கலாம். அவர் நகை வாயுவினால் மேற்கொள்ளப்பட்டுப் பிரசங்க நேரத்திலே அசைவற்று மயங்கியிருந்தார்; அதன் பின் பிரபஞ்சமனைத்தும் எண்ணங்களினால் ஆக்கப்பட்டதெனச் சொன்னார். அந்த நேரத்திலே அவரிடத்திலே பருப்பொருள் அசைவுகள் ஒழிந்துவிட, எண்ணங்களென்று சொல்லப்படும் நுண்ணிய இயக்கங்கள் மாத்திரம் முன்னிலைப்பட்டிருந்தன. அவர் தம்மைச் சூழ உள்ள நுண்ணிய இயக்கங்களை மாத்திரம் கண்டார். அனைத்தும் எண்ணமாய்விட்டன. பிரபஞ்சம் முழுவதும் கருத்துக் கடலாய் விளங்கியது. அவரும் பிறரும் அக்கடலிடையே தோன்றிய எண்ணத்தின் நீர்ச்சுழிகள் போலக் காணப்பட்டனர்.

எண்ணமயமாகிய பிரபஞ்சத்திலே ஒற்றுமையுண்டு என்பதைக் காண்கிறோம். இறுதியிலே ஆன்மாவை அடையும்பொழுது

அது ஒன்ருய் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். தூல சூக்குமமாகிய சடத்தின் அசைவுகளுக்கப்பால், எல்லா இயக்க நிலையினையுங் கடந்து, ஒரே ஒரு பொருள் இருக்கிறது. வெளிப் பட்டுத் தோன்றும் இயக்கத்திலும் ஒற்றுமைதானே காணப்படு கிறது. இந்த உண்மைகளை நாம் மறுக்க முடியாது. பிரபஞ்சத்தி லுள்ள சத்திகளின் மொத்தம் என்றும் மாறுபடாதிருப்பது என இக்காலத்துப் பௌதிக சாத்திரம் கூறுகின்றது. இந்தச் சத்தி யின் மொத்தம் இரு வேறு வடிவமாக இருத்தல் கூடுமென்பதும் காட்டப்பட்டிருக்கிறது. அமைதியடைந்து செம்மையுற்று ஒடுங்கியிருக்கும் சத்தியானது பின்பு வேறுபட்ட வலிமைகளாக வெளிப்பட்டுத் தோன்றும்; அதன் பின்பு மீட்டும் ஒடுக்க நிலைக்குச் செல்லும்; அதன்மேல் மீட்டும் வெளிபட்டுத் தோன்றும். நித்தியமாக இவ்வண்ணமே தோற்றவொடுக்கங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும். யான் முன்னர்க் கூறியபடி இந்தப் பிராணனை அடக்கியாளுவதே பிராணுயாமம் எனப்படும்.

மனித உடலிலே சுவாசப்பைகளின் இயக்கத்திலே பிராண னுடைய வெளிப்பாடு சிறப்புறத் தோன்றுகிறது. அது நின்று விட்டால், பொது விதியாக உடலிலே தோற்றும் ஏனைய சத்தி களெல்லாம் உடனே நின்று விடுகின்றன. இந்த இயக்கமானது நின்று விட்ட பின்பும் உடலானது உயிரோடு நிலைத்திருக்கும் வண்ணம் பயின்றுகொண்ட மனிதர் இருக்கின்றனர். பல நாள் களுக்குத் தம்மை மண்ணிலே புதைக்கும்படி செய்து மூச்சு விடாமல் உயிர் வாழ்கிற மனிதர் சிலர் இருக்கின்றனர். தூலத்தின் உதவியைக் கொண்டு சூக்குமத்தையறிந்து, அவ்வாறே மெதுவாக மிகவும் சூக்குமமானதை நோக்கிச் சென்று அடைய வேண்டிய இடத்தை நாம் அடையலாம். சுவாசப்பையின் இயக்கத்தை அடக்கியாளுவது பிராணுயாமமாகும். இந்த இயக்கம் மூச்சினேடு இயைந்து நிற்பது. இது மூச்சினுலாவ தன்று. உற்று நோக்குமிடத்து இது மூச்சினை ஆக்குகின்றது. நீரிறைக்கும் இயந்திரத்தைப் போல இவ்வியக்கமானது காற்றை இழுக்கின்றது. பிராணன் சுவாசப் பைகளை இயக்க, சுவாசப் பைகளின் இயக்கத்தினுலே காற்று உள்ளிழுக்கப்படுகின்றது. பிராணுயாமம் என்பது மூச்சு விடுதல் என்பதன்று; சுவாசப் பைகளை இயக்குகிற தசைக்கட்டுகளின் வலிமையை அடக்கி ஆளுவதாகும். நரம்புகளின் மூலமாகத் தசைக்கட்டுகளுக்குச் சென்று சுவாசப்பையை ஒரு வகையாக இயக்குகின்ற வலிமை பிராணனெனப்படும். அதனை வசப்படுத்துவதற்குப் பயிலும்

முறை பிராணுயாமமாகும். பிராணன் வசப்பட்ட பின்பு உடலிலே பிராண இயக்கத்திஞல் நடக்கின்ற தொழிலனைத்தும் சிறிது சிறிதாக வசப்பட்டு வருவதை நாம் காண்போம். உடலிலுள்ள எல்லாத் தசைக் கட்டுகளையும் அடக்கியாளக்கூடியவஞயிருந்த ஒரு மனிதனை நான் கண்டேன். ஏன் அப்படி இருத்தல் கூடாது? சில தசைக் கட்டுகள் எனது கட்டளைக்கு அமைந்து நடப்பனவெனின், உடலிலுள்ள எல்லாத் தசைக் கட்டுகளும் நரம்புகளும் ஏன் அமைந்து நடத்தல் கூடாது? அதில் இயலாதது என்ன? அடக்கியாளும் வன்மை இப்பொழுது அகன்று இயக்கம் தாஞகவே நடந்து கொண்டிருக்கின்றது. நமது விருப்பப்படி செவிகளை அசைத்தல் நம்மால் இயலாத காரியம். ஆஞல், இது விலங்கினங்களுக்கு இயன்றதொன்றென்பதை நாம் அறிவோம். பழக்கத்திற்குக் கொண்டுவாராத காரணத்திஞல் நமக்கு அந்த வலிமை இல்லை. இதுவே 'கரணத் தொழின் மறப்பு' (Atavism) எனப்படும்.

மேலும், மறைந்திருக்கின்ற இயக்கங்களை வெளிப்படுத் தலுங்கூடும். முயன்று தொழில் செய்து பயிலுவதால் உடலிலே ஓய்ந்து கிடக்கின்ற சில இயக்கங்களைப் பூரணமாக வசப்படுத்தி இயக்குதல் கூடும். இவ்வண்ணம் ஆராய்வோமாயின், உடலின் ஒவ்வொரு பாகத்தையும் பூரணமாகத் தொழிற்படுத்தலாமென் பதையும் இயலாதது ஒன்றுமில்லை என்பதையும் காண்போம். யோகி இதனைப் பிராணுயாமத்திஞலே செய்கிருன். பிராணுயாமப் பயிற்சியிலே மூச்சினை உள்ளிழுக்கும் பொழுது உடல் முழுவதை யும் பிராணஞலே நிறைவுறச் செய்ய வேண்டும் என்பதை நீங்கள் வாசித்திருக்கலாம். ஆங்கில மொழிபெயர்ப்புகளிலே, பிராணன் என்பது "மூச்சு" என மொழிபெயர்க்கப்பட்டிருக் கிறது. அப்படியாயின், மூச்சிஞலே உடல் முழுவதையும் நிறைவுறச் செய்வது எங்ஙனம் கைகூடுமென்று நீங்கள் கேட்கலாம். தவறு, மொழிபெயர்த்தவரிடத்திலுள்ளது. ஜீவசத்தி யாகிய பிராணஞலே உடலின் எல்லாப் பாகங்களையும் நிறைக் கலாம்; அவ்வண்ணம் செய்யக்கூடுமாயின், உடல் முழுவதையும் அடக்கியாளலாம்; உடலிலே காணப்படுகின்ற நோய் துன்பம் அனைத்தினையும் மட்டுப்படுத்தலாம்; அது மாத்திரமன்றிப் பிறருடைய உடலையும் அடக்கியாளலாம். இவ்வுலகத்திலே நன்மை தீமையாகிய அனைத்தும் தொற்றும் தன்மையவை. உங்களுடைய உடல் ஒரு வகை நிலையிலிருந்தால் அந்தத் தன்மையைப் பிறரிடத்தும் தோற்றுவிக்கும் இயல்பு அதனிடத்து உண்டாகும்.

நீங்கள் உடல் நலனும் வலிமையும் கூடியவர்களாயிருந்தால் உங்களைச் சூழவிருப்பவர்களிடத்து நலனும் வலிமையும் உண்டாக்குமியல்பு உங்களுக்கு எய்தும். அவ்வண்ணமே நோய்வாய்ப்பட்டுப் பலவீனமுற்றிருந்தால் உங்களைச் சூழ இருப்போரிடத்தும் அத்தகைய நீர்மையை உண்டாக்குவது உங்களுக்கு இயல்பாகும். ஒரு மனிதன் மற்றொருவனைக் குணப்படுத்த முயலும்பொழுது, தன்னிடத்திலுள்ள நலத்தினை மற்றவனிடத்துச் செறியப் பண்ணுகிறான். இது சுகப்படுத்துதலைக் குறித்த மிகப் பண்டைய கொள்கை. அறிந்தோ, அறியாமலோ பிறருக்கு நலத்தை உண்டாக்கலாம். வல்லமைசாலி, தன்னோடிருக்கும் வலிமையற்றவனை அறிந்தோ அறியாமலோ சிறிது கூடிய வலிவுடையவனாக்குகிறான். அறிந்து செய்தால், இது விரைவாகவும் செவ்விதாகவும் முடியும். ஒருவன் தான் சுகமில்லாதிருப்பினும், ஒரோ வழி பிறருக்கு நலம் செய்யக் கூடியவனாயிருப்பதை நாம் காண்கிறோம். இவ்வண்ணஞ் செய்வோன் பிராணனை ஓரளவுக்கு அடக்கியாளக் கூடியவன்; சிறிது பொழுது பிராணனை ஒரு வகை இயக்கத்துக்குக் கொண்டு வந்து, மற்றொருவனுக்கு அதனை மாற்றிவிடுகின்றான்.

இந்தக் கிரியை தூரத்தில் நிகழ்வதும் உண்டு. இடைவெளியில்லாமையினாலே உண்மையிலே தூரமென்பதில்லை. பிளவுபட்ட தூரம் எங்கு உளது? உனக்கும் ஞாயிறுக்கும் இடையில் என்ன பிளவு இருக்கிறது? தொடர்ச்சியாகிய பொருட்பிழம்பிலே ஞாயிறு ஒரு பகுதி; நீ மற்றொரு பகுதி. ஆற்றிலே ஒரு பாகத்துக்கும் மற்றொரு பாகத்துக்கும் என்ன பிளவு உண்டு? ஆதலினாலே சத்தி ஏன் தூரத்துக்குப் பிரயாணஞ் செய்தல் கூடாது? அதை மறுப்பதற்கு ஒரு நியாயமுமில்லை. தூரத்தில் இருந்து கொண்டு குணப்படுத்துதல் முற்றும் உண்மையே. பிராணனை வெகு தூரத்துக்குச் செலுத்தலாம். ஆனால், இங்ஙனம் உண்மையாகச் செய்வோர் ஒருவரிருந்தால், வஞ்சனை செய்வோர் நூறு பேரிருப்பர். இங்ஙனம் நோயைக் குணப்படுத்துவது, பொதுவாக எண்ணப்படுவது போன்று, அவ்வளவு எளிதன்று; சாதாரணமாக, இங்ஙனம் செய்வோர், மனித உடலின் இயற்கையான நலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். மாற்று மருந்து வைத்தியன் (Allopath) தன்னுடைய மருந்துகளைக் கொடுத்துக் கழிச்சல் வியாதி வந்த நோயாளியைக் குணமாக்குகிறான்; நேர் மருந்து வைத்தியன் (Homeopath) தனது மருந்துகளைக் கொடுத்து முன்னவனைவிடப் பலரைக் குணப்படுத்துகிறான். இயற்கையைத் தனக்கு உதவியாக்குகிறபடியால், நேர் மருந்து வைத்தியன்

மாற்று மருந்து வைத்தியனைவிட அதிக அனுகூலமடையலாம். நம்பிக்கை வைத்தியன் தன் மன வலிமையினலே நோயாளியினிடத்து ஒய்ந்து கிடக்கும் பிராணனை எழுப்பி, இன்னும் எளிதாகக் குணப்படுத்தலாம்.

நம்பிக்கை வைத்தியர்கள், ஒரு மனிதன் நேரில் நம்பிக்கையினலே குணமடைகிருன் என்று எண்ணுகிருர்கள். நம்பிக்கை தன்னளவிலே எல்லா விஷயங்களையும் தன்னுட்கொண்டதன்று. சில நோய்களிலே நோயாளி தனக்கு நோயிருக்கிறதென்பதை அறியாதிருக்கிருன். நோயாளி தான் சுகமாயிருப்பதாக நினைக்கும் இந்நம்பிக்கையே நோயினுடைய அடையாளங்களுள் ஒன்ருகும். அந்த நோயாளி விரைவில் இறந்துவிடுவான் என்பதற்கு இது ஒரு பொதுவான அறிகுறி. இத்தகைய நிலையிலே நம்பிக்கையினலே நலமுண்டாகுமென்பது பெறப்பட மாட்டாது. நம்பிக்கை மாத்திரமே குணப்படுத்துமென்ருல், இத்தகைய நோயாளிகள் குணப்படுவார்களே! உண்மையில் பிராணனே சுகத்தைக் கொடுப்பது. பிராணனைத் தன் வயப்படுத்திய பரிசுத்தனன மனிதன் அதனை ஒரு திரமாகிய அசைவு நிலைக்குக் கொண்டு வந்து அத்தகைய அசைவினைப் பிறரிடத்தும் உண்டாக்கும் ஆற்றலுடையவனுயிருக்கிருன். நாடோறும் நிகழ்கிற நிகழ்ச்சிகளிலே இதனைக் காணுதல் கூடும். நான் உன்ளுேடு உரையாடுகிறேன். நான் எதனைச் செய்வதற்கு முயலுகின்றேன்? எனது மனத்தை ஒரு வகை அசைவு நிலைக்குக் கொண்டுவர முயலுகின்றேனென்றே சொல்லலாம். நான் அந்த நிலைக்கு வருகிற விஷயத்தில் எவ்வளவு அனுகூலப்படுகிறேனே, அவ்வளவுக்கு நான் சொல்லுகின்ற சொற்கள் உங்கள் உள்ளத்திற் பதியும். நான் எந்த நாளிலே நிறைந்த ஆர்வத்தோடு இருக்கின்றேனே, அந்த நாளிலே நீங்கள் எனது சொற்பொழிவை மிகுதியான மகிழ்ச்சியோடு கேட்கின்றீர்கள்; எந்த நாளில் எனக்கு ஊக்கமில்லையோ, அந்த நாளில் உங்களுக்கும் சொற்பொழிவிற் கருத்தில்லை.

உலகத்தை அசைத்த மாபெருஞ் சித்த சக்தி வாய்ந்த மனிதர்கள் தங்களது பிராணனை மிக உயர்ந்த இயக்க நிலைக்குக் கொண்டுவரக் கூடியவர்கள். அவர்களுடைய சித்த சக்தி மிகப் பெரியதும் வலியதுமாய் இருந்த காரணத்தினலே அது ஒரு கணப்பொழுதிலே மற்றவர்களுடைய உள்ளத்தைக் கவரும் ஆற்றல் வாய்ந்தது. ஆயிரக்கணக்கானவர் அவர்கள்பாற் கவரப்பட்டனர். உலகத்தின் அரைவாசி, அவர்கள் நினைத்தது போல

நினைத்தது. உலகிலுள்ள பெரிய தீர்க்கதரிசிகள் தங்களுடைய பிராணனை மிகவும் அற்புதமாக வசப்படுத்தியிருந்தார்கள். இதனால் அவர்களுக்கு மாபெருஞ் சித்த சத்தி உண்டாகியிருந்தது; தங்களுடைய பிராணனை மிகவுயர்ந்த இயக்க நிலைக்குக் கொண்டு வந்தார்கள்; இதனால், உலகத்தை ஆளத்தக்க வலிமை வாய்ந்தவர்களாய் இருந்தார்கள். பிராணனை வசப்படுத்துவதிலிருந்து எல்லா வகையாகிய வலிமைகளும் தோன்றுகின்றன. மனிதர் இந்த இரகசியத்தை அறிவதில்லை. ஆயினும், இது ஒன்றே இந்த விஷயத்தை விளக்குவது. சில வேளை, பிராணன் உங்களுடைய உடலிலே ஓரிடத்து அதிகமாகவோ குறைவாகவோ சென்றிருக்கலாம். இதனால் அதனுடைய சமநிலை வேறுபட்டு விடுகிறது. பிராணனுடைய சமநிலை வேறுபடும் பொழுது நோய் உண்டாகிறது; அதிகப்பட்டிருக்கிற விடத்துப் பிராணனைக் குறைத்துவிடுவது, குறைந்தவிடத்துக்குப் பிராணனைக் கொடுப்பது என்னும் நெறிகளினாலே நோயைக் குணப்படுத்தலாம். உடம்பில் ஒரு பாகத்தில் வேண்டிய அளவுக்குக் கூடியோ குறைந்தோ பிராணன் இருக்கிறது என அறிந்துகொள்வதும் பிராணாயாமத்தின்பாற்படும். உணர்ச்சியானது நுண்மையாகப் பயிற்றப்பட்டிருக்கும் பொழுது, மனமானது கால் விரலிலோ கை விரலிலோ பிராணன் குறைந்திருப்பதை அறிந்து பிராண சத்தியைக் கொடுக்கக் கூடியதாயிருக்கும். பிராணாயாமத்தினுடைய பல வகைப்பட்ட தொழில்களில் இவையும் உள்ளன. இவற்றையெல்லாம் படிப்படியாகவும் பதமாகவும் பயின்றுகொள்ள வேண்டும். வேறு வேறு பூமிகளிலுள்ள பிராணனை வசப்படுத்திச் செலுத்துகின்ற மார்க்கமறிந்து செலுத்துதற்குரிய வழி வகைகளைப் போதிப்பதே இராஜயோகத்தின் நோக்கமாகும். ஒரு மனிதன் தன் சத்திகளை எல்லாம் ஒருவழிப்படுத்தினால், தன் உடலிலுள்ள பிராணனுக்கு எஜமானனாவான். தியானம் செய்யும் பொழுதும் ஒரு மனிதன் தனது பிராணனை ஒரு வழிப் படுத்துகிறான்.

கடலிலே பெரிய அலைகளிருக்கின்றன; மலைகள் போன்ற அலைகளும், அவற்றினும் சிறிய அலைகளும், அவற்றினும் சிறியனவும், மிகச் சிறிய குமிழிகளும் இருக்கின்றன. இவற்றினுக்கு ஆதாரமாக அகண்டமான சமுத்திரமிருக்கிறது. சிறிய குமிழியும் பெரிய அலையும் ஒரே சமுத்திரத்தோடு இணைக்கப் பட்டிருக்கின்றன. அதுபோல ஒரு மனிதன் மிகப் பெரியவனாயிருப்பினும், குமிழிபோலச் சிறியவனாயிருப்பினும், அகண்ட

மாகிய சத்திக்கடலோடு தொடுக்கப்பட்டவனுயிருக்கிருன். எல் லாப் பிராணிகளுக்கும் உள்ள பிறப்புரிமை இது. எங்கெங்கு உயிரிருக்கின்றதோ, அங்கங்கெல்லாம் அகண்ட சத்தியின் களஞ்சியமானது அமைந்திருக்கிறது. பூதக்கண்ணுடிக்கு மாத் திரம் தெரிகின்ற மிக நுண்ணிய காளான் வடிவமாகத் தொடங் கிய உயிர், அகண்டமாகிய சத்திக் களஞ்சியத்திலிருந்து வலிமை யைப் பெற்றுப் படிப்படியாக உருத்திரிந்து, தாவரமாய், விலங் காய், மனிதனுய், இறுதியிலே தெய்வமாகின்றது. இப்படி அடை வதற்குப் பத்து இலட்சம் யுகங்கள் செல்லலாம். ஆனுல், காலந் தான் என்ன? விரைவு மிகுந்தால், ஊக்கத்தோடு கூடிய போராட்டம் மிகுந்தால், காலத்தையே கடந்துவிடலாம். இயற்கை யாக நீண்ட காலஞ்சென்று செய்து முடிக்க வேண்டுவதை முயற்சி வலிமையினுலே விரைவிற் செய்துவிடலாமென்று யோகி சொல்லு கிருன். பிரபஞ்சத்திலுள்ள அகண்டமாகிய சத்திப் பிழம்பி னின்று சிறிது சிறிதாக வலிமையைப் பெற்று, ஒரு மனிதன் நூருயிரம் ஆண்டுகளிலே தேவனுகலாம்; இன்னும் ஐந்நூருயிரம் ஆண்டுகள் கழித்து அதனிலும் உயர்வடைந்து, ஐம்பது நூருயிரம் ஆண்டுகளிலே பரிபூரண நிலையை அடையலாம். வளர்ச்சி விரைவெய்துமாயின், காலம் சுருங்கும். போதிய அளவு முயன்ருல், இந்தப் பரிபூரண நிலையை ஆறு வருஷத்திலோ ஆறு மாதத்திலோ ஏன் அடைதல் கூடாது? இதற்கு எல்லை இல்லை. தர்க்க அறிவு இதனை மெய்ப்பிக்கின்றது. ஓர் இயந்திரம் குறித்த அளவு கரியினுல் ஒரு மணி நேரத்திற்கு இரண்டு மைல் தூரம் ஓடக்கூடுமாயின், கரியின் அளவைக் கூட்டினுல் குறித்த தூரத்தைக் குறைந்த நேரத்திலே கடக்கும். அது போலவே, ஜீவான்மாவும் முயற்சியை அதிகப்படுத்தி இந்த வாழ்விலேயே பரிபூரண நிலையை ஏன் அடைதல் கூடாது? எல்லாப் பிராணி களும் இறுதியிலே அந்த நிலையை அடைதல் வேண்டுமென்பதை நாம் அறிவோம். பத்து இலட்சம் யுகங்கள் காத்திருக்க வேண்டுவது எதற்கு? இந்த உடலிலே இந்த மனித வடிவத் தோடு ஏன் அதனை உடனே அடைதல் கூடாது? அகண்ட ஞானத்தையும் எல்லையற்ற வலிமையையும் இப்பொழுதே நான் ஏன் எய்துதல் கூடாது?

சிறிது சிறிதாக முன்னேற்றமடைந்து மனித இனம் முழுவ தும் பரிபூரண நிலையை அடைதற்குரிய காலம் வரும் வரையும் காத்திராமல் முயற்சி வலிமையினுலே காலத்தைச் சுருக்கி உயர் நிலையை விரைவில் அடைவதற்கு வேண்டிய வழி வகைகளை

மனிதருக்குப் போதிப்பதே யோக சாத்திரத்தின் நோக்கம்; இதுவே யோகியினுடைய உயர்தனிக் கொள்கை. உலகிலே தோன்றிய பெரிய தீர்க்கதரிசிகளும், உண்மையை நேரிற் கண்டோரும், அனுபூதிமான்களும் யாது செய்தார்கள்? ஒரு வாழ்க்கைக் காலத்திலே மக்கட்சாதியாருடைய வாழ்க்கை முழுவதையும் வாழ்ந்து பரிபூரண நிலையை அடைவதற்கு மக்கள் செல்ல வேண்டிய நெறி முழுவதையும் கடந்தார்கள்; ஒரே வாழ்க்கையிலே தங்களைப் பூரணப்படுத்திக்கொண்டார்கள். மற்று எதனைப்பற்றியும் அவர்கள் எண்ணுவதில்லை; ஒரு கணப்பொழுதாயினும் பிற முயற்சிக்காக விடுவதில்லை. இதனால் வழி அவர்களுக்குச் சுருக்கமாய்விட்டது. மனத்தைக் குவியச் செய்வதன் கருத்து இதுதான். ஒன்றுபடுத்தும் சத்தியை அதிகரிக்கச் செய்தல் காலத்தைச் சுருக்குவதற்கு வழியாகும். மனத்தை ஒரு வழிப்படுத்துகிற வலிமையை நாம் அடைவதற்கு உரிய நெறிகளை இராஜயோகம் போதிக்கிறது.

ஆவேச மதத்துக்கும் (Spiritualism) பிராணயாமத்துக்கும் தொடர்பென்ன? ஆவிகளைப் பற்றிய விசாரணைகளும் பிராணயாமத்தைச் சார்ந்தனவே. நம்மாற் காணவொண்ணாத, உடலினின்று பிரிந்த ஆவிகள் இருப்பது உண்மையாயின், அவை நூற்றுக்கணக்காகவும் இலட்சக் கணக்காகவும் நம்மைச் சூழவிருக்கலாம்; நாம் அவற்றைக் கண்டு உணர்ந்து தொடமாட்டாதவர்களாயிருப்போம். நாம் அவற்றினுடைய உடலினுள்ளே போவதும் வருவதுமாயிருக்கலாம்; அவை நம்மைக் காணவுமாட்டா; உணரவுமாட்டா. ஒரு வட்டத்தினுள்ளே மற்றொரு வட்டம் அமைந்திருப்பது போலவும் ஒரு பிரபஞ்சத்தினுள்ளே மற்றொரு பிரபஞ்சம் அமைந்திருப்பது போலவும் இஃது அமைந்திருக்கலாம். நமக்கு ஐந்து புலன்கள் உண்டு. நம்மிடத்திலே பிராணன் ஒரு வகை அசைவோடு இருக்கிறது. அத்தகைய அசைவு நிலையில் உள்ள பிராணிகள் ஒன்றினையொன்று காணுதல்கூடும். உயர்ந்த அசைவு நிலை பொருந்திய பிராணிகளிருந்தால் அவற்றினை நாம் காணுதல் இயலாது. ஒளியின் வலிமை மிகுந்தால் நாம் அதைக் காணுதல் இயலாது. அங்ஙனமாயினும், அத்தகைய ஒளியைக் காணக்கூடிய வலிமை வாய்ந்த கண்களையுடைய பிராணிகள் இருக்கலாம். அசைவுகள் குறைந்திருக்கின்ற ஒளியினை நாம் காணுதல் இயலாது. ஆனால், பூனையையும் ஆந்தையும்போல அவ்வொளியினைக் காணக்கூடிய விலங்குகளுமுண்டு. பிராணனுடைய இயக்கத்திலே ஓர் எல்லையினுட்பட்டிருப்பது நமது காட்சி.

சான்ருக, நம்மைச் சூழவிருக்கும் வாயு மண்டலத்தை எடுத்துக் கொள்ளுவோம்; அது ஒன்றின்மேல் ஒன்ருக அடுக்கப்பட்ட பல அடுக்குகளை உடையது. பூமிக்கு அணித்தாயிருக்கும் அடுக்குகள் மேலுள்ளவற்றினும் கனமுடையன. மேலே போகப் போக வாயு மண்டலமும் நுண்மையாகின்றது. கடலை மற்ருேர் உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம். ஆழப் போகப் போக நீரினுடைய அமுக்கமும் கூடுகின்றது. கடலின் அடியிலே உறைகின்ற பிராணிகள் மேலே வருவதில்லை. வந்தால் அவை துகளாகிவிடும்.

இந்தப் பிரபஞ்சத்தை ஆகாயத்தினுல் நிறைந்த ஒரு கடலாகக் கொள்ளும்பொழுது, பிராணனுடைய தொழிலினுலே வேறு வேறளவுள்ள விரைவினையுடைய இயக்கங்கள் அமைந்த பல அடுக்குகள், அதனிடையே இருப்பதாகக் கொள்ளலாம். மையத்திலிருந்து விலகிச் செல்லச் செல்ல, இயக்கங்களின் விரைவு குறைந்திருப்பதையும், அண்மையிலே மிகுந்திருப்பதையும் காணலாம். ஒருவகை இயக்கத்தை ஒரு பூமி என்று கொள்வோம்; இவ்வாறு பல இலட்சம் மைல் அகன்றதான ஒரு வகை இயக்கம் அமைந்த ஒரு பூமியும், அதற்கப்பால் பல இலட்சம் மைல் அகன்றதான இன்னும் உயர்ந்த பூமியொன்றுமாக, வேறு வேருகிய அசைவுகளைப் பூமிகளாக வகுத்துக்கொண்டால், யாதாயினும் ஒரு பூமியில் வாழ்கின்றவர் ஒருவரை ஒருவர் காணக்கூடிய வலிமை வாய்ந்திருப்பர்; தமக்கு மேலாய் இருப்பவரை அறிந்துகொள்ளமாட்டார். ஆயினும், தொலை நோக்காடியினுலும் பூதக்கண்ணுடியினுலும் நமது பார்வையின் எல்லையை நாம் கூட்டிக்கொள்ளக் கூடியதாய் இருப்பதுபோல, யோகத்தினுலும் மற்ருெரு பூமியின் அசைவினை அடைந்து அங்கு நடப்பவற்றை நாம் அறிந்துகொள்ளலாம். இந்த அறையானது நம்மாற்காண முடியாதவர்களின் உருவங்களால் நிறைந்திருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அவர்கள் பிராணனது ஒரு வகை அசைவு நிலையை வெளிப்படுத்தினுல் நாம் மற்ருெரு வகை அசைவு நிலையை வெளிப்படுத்துகிருேம். அவர்கள் விரைவான ஒரு வகை அசைவு நிலையையும் நாம் அதற்கு எதிரான மற்ருெரு நிலையையும் உடையவர்களாயிருக்கலாம். நாமும் அவர்களும் பிராணனென்னும் ஒரு பொருளினுலே ஆக்கப்பட்டிருக்கிருேம். அனைவரும் பிராணனென்னும் ஒரே கடலின் பாகங்கள். அசைவினுடைய அளவிலே மாத்திரம் வேறுபாடு உண்டு. விரைந்த அசைவுக்கு நான் வருதல் கூடுமாயின், உடனே ஒரு மாற்றம் உண்டாகும். நான் உங்களைக் காணமாட்டேன். நீங்கள் மறைந்துவிடுவீர்கள்; அவர்கள் தோற்றுவார்கள். உங்களுட்சிலர்

இவ்வுண்மையை அறிந்திருக்கலாம். மனத்தை உயர்வாகிய அசைவு நிலைக்குக் கொண்டுவருகின்ற செயலனைத்தும் 'யோக சமாதி' என்பதிலே அடங்கும். மனத்தினது மிகவுயர்ந்த அசைவு நிலைகள் 'சமாதி' என்னும் சொல்லினால் குறிக்கப்படுவன. சமாதியின் கீழ் நிலைகளிலே இப்பிராணிகளின் காட்சியை நாம் பெறலாம். சமாதியின் உயர்ந்த படியிலே, இவை எல்லாம் எப்பொருளினால் ஆகியிருக்கின்றனவோ, அந்த உண்மைப் பொருளை நேரிலே காணலாம். களிமண் உருண்டை ஒன்றினைக் கண்டோர், பிரபஞ்சத்திலுள்ள களிமண் அனைத்தினையும் அறிந்தவராவார்.

ஆவேச மதத்திலுள்ள உண்மைகளையும் பிராணாயாமம் தன்னுள் அடக்கியிருக்கின்றது. ஒரு வகுப்பினரோ, ஒரு கூட்டத்தினரோ யாதாவதொரு இரகசியத்தையோ அல்லது மறைந்து கிடக்கின்ற ஒன்றையோ தேட முயலும்பொழுது உண்மையிலே பிராணனை அடக்குதலாகிய யோகத்தைச் செய்ய முயலுகின்றனர். எவ்வெவ்விடத்திலே சிறப்பாகிய வலிமை தோற்றுகிறதோ, அவ்வவ்விடமெல்லாம் பிராண சத்தி அமைந்திருக்கக் காணலாம். பௌதிக சாத்திரங்களையும் பிராணாயாமத்தினுள் அடக்குதல் கூடும். நீராவி இயந்திரத்தை அசைப்பது எது? நீராவி மூலமாகத் தொழில் செய்கின்ற பிராணனே; மின்சத்தி முதலாகக் காணப்படுவனவெல்லாம் பிராணனிலிருந்து வெளிப்பட்டனவே. பௌதிக சாத்திரமென்பது என்ன? புறக்கருவியினால் தொழிற்படுகிற பிராணாயாமக் கலையே. மானத சத்தியாக வெளிப்படுகிற பிராணனை மனக் கருவிகளால் மாத்திரமே அடக்கியாளலாம். பிராணனது சட தத்துவத் தோற்றங்களைச் சடக் கருவிகளாலே அடக்கியாள முயலுவது பிராணாயாமத்தின்பாலதாகிய பௌதிக சாத்திரமாகும். பிராணனது மனவியக்கங்களை மனக்கருவிகளாலே வயப்படுத்தும் மார்க்கம் இராஜயோகமாகும்.

## 4. சித்துப் பிராணன்

யோகசாத்திரத்தின்படி, முள்ளந்தண்டிலே இடை, பிங்கலை என்னும் இரண்டு நரம்புக் கொடிகளும், முள்ளந்தண்டுக் கொடியினூடே (Spinal Cord) செல்லுகின்ற சுழுமுனை என்னும் துளை பொருந்திய நாளம் ஒன்றும் இருக்கின்றன. இந்த நாளத்தின் அடியிலே யோகிகள் சொல்லுகிற 'குண்டலினிக் கமலம்' இருக்கிறது. அது முக்கோண வடிவினதென்று அவர்கள்




கூறுகிறார்கள். அங்குக் குண்டலினி என்னும் ஒரு சத்தி வட்டமிட்டுக் கிடப்பதாகத் தங்களது குழூஉக்குறியிலே யோகிகள் இயம்புகிறார்கள். குண்டலினி விழித்தெழும் பொழுது, துளை பொருந்திய நாளம் வழியாகத் தனக்கு ஒரு வழியை ஏற்படுத்திக்

கொள்ள முயலும். படிப்படியாக அது மேலெழும் பொழுது மனத்தின் வேறு வேருகிய அடுக்குகள் திறக்கப்படுகின்றன. யோகியானவன் பல வெவ்வேறு காட்சிகளையும், அற்புத வல்லமைகளையும் பெறுகின்ருன். அது மூளையை அடைந்தவுடனே யோகி உடலிலும் மனத்திலுமிருந்து பூரணமாகப் பிரிந்து நிற்கின்ருன். ஆன்மாதான் விடுதலை நிலையிலிருப்பதைக் காண்கிறது. முள்ளந் தண்டுக்கொடி ஒரு நூதன முறையாக அமைக்கப்பட்டிருக்கிறதென நாம் அறிவோம். எட்டு என்னும் இலக்கத்தைக் கிடத்தி வைப்போமாயின், அது (∞) இடையிலே தொடர்புடைய இரண்டு பாகங்களாய் இருப்பதைக் காண்போம். ஒன்றின்மேல் ஒன்ருகப் பல எட்டுக்களை அவ்வண்ணம் அடுக்கினல், அது முள்ளந் தண்டைக் காட்டுவதாகும். இடப்பக்கம் ‘இடை’ எனப்படும். வலப் பக்கம் ‘பிங்கலை’ எனப்படும். முள்ளந்தண்டின் ஊடே செல்லுகிற துளை பொருந்திய நாளம் ‘சுழுமுனை’ எனப்படும். முள்ளந்தண்டுக் கொடியானது பீடிகை எலும்பிலே (Lumbar Vertebrae) முடிகின்ற இடத்தில், ஒரு நுண்ணிய நரம்பு கீழ் நோக்கிச் செல்லும். அந்நரம்பின் ஊடாகவும் குறித்த நாளம் மிக மிக நுண்ணியதாகச் செல்லும். நாளமானது அடைபட்டதாயிருக்கிற கீழ்நுனி தூய நரம்பு மண்டலத்துக்கு (Sacral Plexus) அண்மையிலிருக்கிறது. இக்காலத்து உடல் நூல் வல்லோர் இதனை முக்கோண வடிவினதென்பர். முள்ளந்தண்டு நாளத்திலே அமைந்திருக்கிற வேறு வேருகிய நரம்பு மண்டல மையங்கள், யோகி கூறுகிற வேறு வேருகிய தாமரைகளாகக் கருதப்படலாம்.

அடிப்படையாகிய மூலாதாரத்திலே தொடங்கி மூளையிலுள்ள ஆயிரம் இதழ்த் தாமரையாகிய சகஸ்ராரத்திலே முடிவு பெறுகின்ற பல சக்கரங்களை யோகி குறிப்பிடுகிருன். நரம்பு மண்டல மையங்களைத் தாமரைகளாகக் கொள்வோமாயின், இக்காலத்து உடல் நூலுக்கியைய யோகியினுடைய கருத்தை நாம் எளிதாக உணர்ந்துகொள்ளலாம். இந்த நரம்புக் கொடிகளிலே இரு வகைத் தொழில்கள் உள என்பதை நாம் அறிவோம் ; ஒன்று, தாக்குவது ; மற்றது, தாக்கப்படுவது. ஒன்று, ஞானேந்திரியத்தின் வழிப்பட்டது ; மற்றது கருமேந்திரியத்தின் வழிப்பட்டது. ஒன்று, மையத்தை நோக்கிச் செல்லுவது ; மற்றது, மையத்தினின்று விலகிச் செல்வது. ஒன்று, உணர்ச்சிகளை மூளைக்குக் கொண்டு செல்வது ; மற்றது, மூளையிலிருந்து புறக்கரணங்களை நோக்கிச் செல்வது. ஈற்றிலே இந்த அசைவுகளெல்லாம் மூளையோடு தொடுக்கப்பட்டிருக்கின்றன. மேல் வருகின்ற விளக்கத்தைத் தெளிந்து

கொள்ளும்பொருட்டு இன்னும் பல உண்மைகளை நாம் மனத்தில் வைக்க வேண்டும். முள்ளந்தண்டுக் கொடியானது மூளையை அடையும்பொழுது ஒரு வகைக் குமிழ் வடிவம் (Medulla) ஆகின்றது. இது மூளையோடு தொடுக்கப்படாமல் மூளையிலுள்ள ஒரு வகை நீரிலே மிதக்கின்றது. தலையில் அடிபட்டால், அந்த அடியின் வலிமை குமிழைக் குலைக்காது நீரிலே தணிந்துவிடும். இது மனத்தில் வைத்திருக்க வேண்டிய முக்கியமான உண்மை. இரண்டாவதாக, எல்லாச் சக்கரங்களையும்விட முக்கியமான மூலாதாரம் (அடியிலுள்ளது), சகஸ்ராரம் (மூளையிலுள்ள ஆயிரம் இதழ்த் தாமரை), மணிபூரகம் (நாபியிலுள்ள தாமரை) ஆகிய மூன்றினையும் நாம் கருத்தில் வைக்க வேண்டும். அதற்கடுத்துச் சடதத்துவ சாத்திரத்திலிருந்து மற்றும் ஓர் உண்மையை அறியவேண்டும். நாம் எல்லாம் மின்சாரத்தைப் பற்றியும் அதனோடு தொடர்புள்ள வேறு வேறு வலிமைகளைப்பற்றியும் கேள்வியுற்றிருக்கிறோம். மின்சாரம் இன்னதென்பது யாருக்கும் தெரியாது. அறிந்த வரையில் அஃது ஒரு வகை இயக்கம் என்று மாத்திரம் இயம்பலாம்.

பிரபஞ்சத்திலே வேறு பல வகைப்பட்ட இயக்கங்கள் இருக்கின்றன. அவற்றுக்கும் மின்சாரத்துக்கும் உள்ள வேறுபாடு யாது? இந்த மேசை அசையும் பொழுது இதனிடத்திலுள்ள அணுக்கள் வேறு வேறு திசையை நோக்கி இயங்குகின்றன. அனைத்தினையும் ஒரே திசையை நோக்கி இயங்கச் செய்தால், அது மின்சார சத்தியின் இயக்கமாகும். மின்னியக்கம் ஒரு பிழம்பிலுள்ள அணுக்களை எல்லாம் ஒரே திசையில் இயங்கச் செய்கின்றது. ஓர் அறையினுள்ளே இருக்கின்ற வாயு அணுக்கள் அனைத்தினையும் ஒரே திசையில் இயங்கச் செய்தால், அந்த அறை மாபெரு மின்சாரக் களஞ்சியமாகும். சுவாச உறுப்புகளை ஒழுங்குபடுத்துகின்ற மையமானது நரம்பு மண்டலம் முழுவதையும் அடக்கியாளுகிறது என்னும் உண்மையையும் நாம் உடல் நூலிலிருந்து அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஏன் மூச்சுப் பயிற்சி வேண்டுமென்பதை நாம் இப்போது அறிந்துகொள்ளலாம். இலயப்பட்டு நிற்கின்ற மூச்சினாலே உடலிலுள்ள அணுக்கள் எல்லாம் ஒருவழிப்படுகின்றன. மனமானது சித்தமாக மாறுபடும் பொழுது நரம்பின் இயக்கங்கள் மின்சாரத்தை ஒத்த ஓரியக்கமாக மாறுதல் அடைகின்றன. ஏனெனில், மின்சார இயக்கங் காரணமாக நரம்புகள் திசை நோக்குகின்றன என விஞ்ஞானிகள் காட்டியிருக்கிறார்கள். சித்தமானது நரம்பியக்கமாக மாறுபடும் பொழுது அது மின்சாரம் போன்ற ஒரு

பொருளாகின்றது. உடலிலுள்ள இயக்கங்களெல்லாம் பூரணமாக இலயப்பட்டு நிற்கும்பொழுது, உடலானது சித்த சத்தி நிறைந்த மிகப் பெரிய களஞ்சியத்திற்கு ஒப்பாகிறது. யோகி விரும்புவது இந்த அபாரமான சித்த சத்தியையே. சுவாசப் பயிற்சியைக் குறித்த உடற்கூற்று விளக்கம் இதுவாகும். இந்தப் பயிற்சி உடலிலே இலயப்பட்ட இயக்கத்தை உண்டுபண்ணிச் சுவாசக் கருவிகள் வாயிலாக ஏனைய கருவிகளையும் அடக்கியாள உதவி செய்கின்றது. மூலாதாரத்திலே வளைந்து கிடக்கிற குண்டலினி என்னும் சத்தியை எழுப்புவதே பிராணாயாமத்தின் நோக்கமாகும்.

நாம் பார்ப்பனவும், பாவனை செய்வனவும், கனவு காண்பனவும் ஆகிய அனைத்தினையும் ஆகாயமாகிய வெளியிலே காண வேண்டியவர்களாயிருக்கின்றோம். இது சாதாரண **ஆகாயம்**, **மகாகாசம்** அல்லது **பூதாகாசம்** எனப்படுவது. யோகியானவன் மற்ற மனிதருடைய எண்ணங்களை அறியும் பொழுதும் புலன்களுக்கு எட்டாத பொருள்களைக் காணும்பொழுதும் அவற்றினை மனவெளியாகிய சித்தாகாசமென்னும் மற்றொரு வகை ஆகாயத்திலே காண்கிறான். காட்சியானது தனக்கு விஷயமாகிய பொருளற்றிருக்கும் பொழுதும் ஆன்மா தனது சொந்த இயற்கையிலே ஒளி விடும்பொழுதும் அறிவு வெளியாகிய **சித்தாகாசம்** வெளிப்படுகின்றது. குண்டலினி சத்தி எழுந்து சுழுமுனை நாளம் வழியாகப் புகும்பொழுது காட்சிகளெல்லாம் சித்தாகாசத்திலே நிலைபெற்றிருக்கின்றன. குண்டலினி சத்தி சுழுமுனை நாளத்தின் மேல் நுனியினை அடைந்து மூளையினுள்ளே புகும் பொழுது, பொருளின்றிப் புலப்படுகின்ற காட்சியானது அறிவு வெளியாகிய சித்தாகாசத்திலேயுள்ளது. மின்னியக்கத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, மனிதனானவன் கம்பிகள்* மூலமாகவே மின்சாரத்தை அனுப்பக்கூடியவனாயிருக்கிறான் என்பதைக் காண்போம். இயற்கையோ என்றால், மிகப் பெரிய மின்னியக்கங்களைக் கம்பியில்லாமலே அனுப்புகிறது. கம்பி உண்மையிலே வேண்டுவதொன்றன்று. அஃது இல்லாது கருமம் பார்க்க முடியாமையினால், நாம் அதனைப் பயன்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம்.

அம்மாதிரியே உடலிலுள்ள உணர்ச்சிகளும் இயக்கங்களும் நரம்புகளென்னும் கம்பிகள் மூலமாக மூளைக்குக் கொண்டு செல்

---

* கம்பி இல்லாத் தந்தி கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் இது சொல்லப்பட்டது என்பதை வாசிப்போர் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

லப்படுகின்றன. முள்ளந்தண்டுக் கொடியிலுள்ள ஞானேந்திரிய கர்மேந்திரிய நரம்புகள் யோகிகள் சொல்லுகிற இடை பிங்கலை களாகும். உணர்ச்சி நரம்புகளும் தொழில் நரம்புகளும் செல்லு தற்குரிய பெரிய வாய்க்கால் இவை. மனமானது கம்பியில்லாமல் ஏன் செய்திகளை அனுப்புதல் கூடாது? கம்பியில்லாமல் ஏன் தொழில் புரிதல் கூடாது? இது இயற்கையிலே நடக்கக் காண் கிறோம். இதனைச் செய்யக்கூடுமாயின், சடப்பொருளினது பந்தம் அற்றுப்போகுமென யோகி கூறுகின்றான். இதனைச் செய்வதெப்படி? முள்ளந்தண்டு நடுவிலேயுள்ள சுழுமுனை வழி யாக இவ்வியக்கத்தைச் செல்லும்படி செய்தால், காரியம் கைகூடி விடும். மனமானது நரம்பு மண்டலமாகிய இந்தப் பின்னலை உண்டாக்கி வைத்திருக்கிறது. இதனை உடைத்துவிட்டால், கம்பியின்றியே முயற்சி நடக்கும். எல்லா அறிவும் நமக்கு உரியதாகும்; உடலின் பந்தம் அகன்றுபோய்விடும். ஆதலினாலே சுழுமுனையை அடக்கியாளுவது முக்கியமாகும். துளையாயிருக் கிற அந்த நாளத்தினூடே நரம்புகளின் துணையின்றி மனத்தி னது இயக்கங்களைச் செலுத்தக் கூடுமாயின், காரியம் கைகூடு மெனவும், அது நம்மால் இயல்வதெனவும் யோகி சொல்லுகிறான்.

சாதாரண மனிதரிடத்தே சுழுமுனையின் கீழ்நுனி அடைபட் டிருக்கிறது. அது வழியாக ஒரு தொழிலும் நடப்பதில்லை. அதனைத் திறந்து அது வழியாக நரம்பியக்கத்தைச் செலுத்து வதற்குரிய ஒரு பயிற்சியை யோகி எடுத்துச் சொல்லுகிறான். உணர்ச்சியானது ஒரு நரம்பு மையத்தை அடையும் பொழுது, அந்த மையம் எதிரியங்குகின்றது. தாமாக இயங்கும் நிலையங் களிலே இவ்வெதிரியக்கத்தின் பின் அசைவு உண்டாகும். உணர் வுள்ள நிலையங்களிலே முதலில் காட்சியும் அதன் பின் அசைவும் உண்டாகும். காட்சியனைத்தும் வெளியிலிருந்து வரும் தொழி லுக்கு எதிர்த்தொழில் போன்ற தன்மையவை. அப்படியாயின், கனவிலே காட்சிகள் எழுவது எப்படி? அப்பொழுது வெளியி லிருந்து ஒரு தொழிலும் நடப்பதில்லையே! ஆதலினாலே, புலனுணர்ச்சி இயக்கங்கள் எங்கேயோ ஓரிடத்தில் சுருட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. சான்றாக, நான் ஒரு பட்டினத்தைக் காண்கிறேன். அந்தப் பட்டினம் எவ்வெப்பொருள்களால் நிறைந்திருக்கிறதோ, அவ்வவற்றினின்று வந்த உணர்ச்சி களின் எதிரியக்கத்தாற் பட்டினத்தைப்பற்றிய காட்சி உண்டா கிறது. பட்டினத்திலுள்ள புறப்பொருள்கள் ஒரு வகை இயக்கத்தையுண்டாக்க, அவற்றைக் கொண்டு செல்லுகின்ற

ஞானேந்திரிய நரம்புகள் இயங்கி மூளையிலுள்ள சில அணுக்களை இயக்க, காட்சி உண்டாகிறது. இப்பொழுது எவ்வளவோ காலம் கழிந்து போயினதெனினும், நான் பட்டினத்தை நினைத்திருக்கிறேன். இந்த நினைவும் முன்னர்க் கூறியதையொத்த ஒரு நிகழ்ச்சி தான்; ஆனால் சிறிது வேகம் குறைந்தது. இப்படி வேகம் குறைந்த இயக்கத்தையும் உண்டுபண்ணிய தொழில் எங்கிருந்து எழுந்தது? தொடக்க உணர்ச்சிகளிலிருந்து இது எழவில்லை. ஆதலால், உணர்ச்சிகள் எங்கேயோ அடங்கிக் கிடக்க வேண்டும். அவற்றின் தொழிலினாலே நாம் கனவுக் காட்சி என்று சொல்லுகிற இம்மெல்லிய இயக்கங்கள் உண்டாகின்றன. அடங்கியிருக்கிற இவ்வுணர்ச்சிகள் எல்லாம் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்ற பாத்திரம் மூலாதாரமாகும். இங்கு வட்டமிட்டுக் கிடக்கின்ற சத்தி குண்டலினி எனப்படும். எஞ்சிய சலன சத்தியும் இந்த நிலையத்திலே சேர்த்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், ஆழ்ந்த யோசனை, நூலாராய்ச்சி என இவற்றினைச் செய்த பின்பு மூலாதாரத்துக்கு அணித்தான பாகம் (தூய நரம்பு மண்டலம்) வெப்ப மடைகின்றது. இங்ஙனம் வட்டமிட்டுக் கிடக்கின்ற சத்தியை எழுப்பித் தொழிற்படுத்தி அதனைச் சுழுமுனை நாளம் வழியாகச் செலுத்தினால், அது ஒவ்வொரு சக்கரத்தையும் தாக்க, அவற்றிலிருந்து மாபெரிய எதிரியக்கம் உண்டாகும். சிறிய அளவு சத்தி நரம்பு வழியாகச் சென்று சக்கரங்களிலே எதிரியக்கத்தை உண்டாக்கும் பொழுது, கனவோ, மனோபாவனையோ காட்சியாக உண்டாகிறது. உண்ணோக்கிய தியானத்தினாலே அங்குச் சேமித்து வைக்கப்பட்டிருக்கிற சத்திப் பிழம்பு சுழுமுனை வழியாகச் சென்று சக்கரங்களைத் தாக்கும் பொழுது உண்டாகின்ற எதிரியக்கம் மிகப் பெரியது; கனவோ, மனோபாவனையோ இவை யாவற்றினும் மிக உயர்ந்தது; புலன்களால் காண்கிற காட்சியைவிட மிகுந்த உக்கிரமுள்ளது. அது புலன்களைக் கடந்த காட்சி. எல்லா உணர்ச்சிகளுக்கும் தலைமைத் தானமாயிருக்கின்ற மூளையை அந்தச் சத்தி அடைந்த உடனே ஓரெதிரியக்கம் ஏற்படுகிறது: அதன் பயனாக ஆன்ம நோக்கமாகிய நிறைந்த அறிவு விளக்கம் உண்டாகிறது. குண்டலினிச் சத்தி ஒரு சக்கரத்திலிருந்து மற்றொன்றுக்குச் செல்ல, மனத்தின் அடுக்குகள் ஒவ்வொன்றாகத் திறக்கப்படுகின்றன. யோகியானவன் பிரபஞ்சத்தைச் சூக்குமமான காரண வடிவிலே காண்கிறான். உணர்ச்சியும் எதிரியக்கமுமாகிய பிரபஞ்சத்தின் காரணங்கள் அப்பொழுது அறியப்படுகின்றன.

அதிலிருந்து எல்லா அறிவும் உண்டாகின்றது. காரணத்தை அறிவதனால் காரியத்தின் அறிவு உண்டாவது திண்ணம்.

உரையுணர்வு கடந்த காட்சிக்கும், ஆன்மாவை அடைவதற்கும், தெய்விக ஞானத்தைப் பெறுவதற்கும் ஒரே ஒரு வழியுண்டு ; அது, குண்டலினியை எழுப்புவது ஆகும். அங்ஙனம் எழுப்புவதும் பல வேறு வழிகளினாலே கைகூடும். ஆண்டவனிடத்து அன்பு செலுத்துதலும், பரிபூரண நிலையை அடைந்த அறிஞரின் கருணையும், தத்துவமான ஆராய்ச்சி வலிமையும், குண்டலினியை எழுப்பும் நெறிகளாயிருக்கின்றன. இயற்கைக்கு மேம்பட்ட வலிமையோ, ஞானமோ, எவ்விடத்தில் தோன்றுகிறதோ, அவ்விடத்திற் சுழுமுனை வழியாகக் குண்டலினி சத்தியின் இயக்கம் சிறிது உண்டாகியிருக்க வேண்டுமென்பதை அறிய வேண்டும். ஆனால், இவ்வித மேம்பாடு தோன்றுமிடங்களில், பெரும்பாலும் மக்கள் அறியாமலே செய்யும் சில பயிற்சிகளினால் குண்டலினியின் ஒரு சிறு பகுதி இயக்கமுறுகின்றது. அறிந்தோ, அறியாமலோ, எல்லாத் தெய்வ வழிபாடுகளும் இந்த முடிபுக்கே வருகின்றன. தன்னுடைய வேண்டுகோளுக்கு இறைவனிடத்திலிருந்து தக்க மறுமொழி வருகிறதுஎன்று காண்கிற ஒவ்வொருவனும் தனது சொந்த இயற்கையிலிருந்தே அது நிறைவு பெறுகிறதென்பதை அறிந்து கொள்ளுவதில்லை. தன்னிடத்திலே அடங்கிக்கிடக்கின்ற அளவு கடந்த சத்தியின் ஒரு சிறு பாகத்தை வழிபாடு என்னும் மன நிலையினாலே தானே தொழிற்படுத்துகிறான் என்பதை அவன் உணர்கிறதில்லை. மனிதன் அச்சத்தினாலும், கவலையினாலும் வேறு வேறு பெயரிட்டு வழிபடுகிற சத்தி ஒவ்வொருவரிடத்தும் உண்மையாகவே அடங்கிக் கிடக்கின்ற சத்தியாகுமென யோகி உலகத்துக்கு வெளியிட்டு உரைக்கிறான். நித்தியானந்தத்துக்கு அன்னையாகிய இந்தச் சத்தியை அடைகின்ற நெறியை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். வணக்கம், வழிபாடு, கருமம், கிரியை, அற்புதம் என்னும் இவற்றினது விளக்கமாக எல்லாச் சமயங்களுக்கும் ஆதாரமாகிய முறைகளை இராஜ யோகம் கூறும்.

# 5. சித்துப் பிராணனை வயப்படுத்துதல்

இனிப் பிராணுயாமப் பயிற்சிகளைப் பற்றிப் பேசுவோமாக : யோகிகள் சொல்லுகிறபடி சுவாசப் பையின் இயக்கத்தை வயப்படுத்துவது முதற்படியாகும் என்பதைக் கண்டோம். உட லிலே நிகழ்ந்துகொண்டிருக்கிற நுண்ணிய இயக்கங்களை நாம் உணரவேண்டும். நம்முடைய மனங்கள் புறம் நோக்கிய தன்மைய வாகப் போய்விட்டபடியால் உள்ளே நிகழும் நுண்ணிய இயக்கங் களைக் காணுது போயின. இவ்வியக்கங்களை உணரத் தொடங்கி ஞல், இவற்றை அடக்கியாளவும் தொடங்குவோம் ; நரம்புகள் உடல் முற்றிலும் செறிந்து, உடலிலுள்ள ஒவ்வொரு தசை (Muscle)க்கும், உயிரையும் வலிமையையும் தருகின்றன ; ஆஞல், நாம் அவற்றை உணர்வதில்லை. உணரப் பயின்று கொள்ளலாம் என்று யோகி கூறுகிருன். எப்படி ? சுவாசப் பையின் இயக்கங்களைப் பிடித்து வயப்படுத்திப் போதிய கால எல்லை வரை பயில்வோமாயின், நுண்ணிய இயக்கங்களை வயப்படுத்தும் ஆற்றல் உடையோமாவோம்.

இனிப் பிராணுயாமப் பயிற்சிகளை எடுத்துக்கொள்வோம் : நிமிர்ந்திருங்கள். உடலை நேராக வைத்திருங்கள். முள்ளந்தண்டுக் கொடி முதுகெலும்போடு (Vertebral Column) தொடுக்கப்படா தெனினும், அஃது அதனுள்ளே அமைந்திருக்கிறது. வளைந்து இருப்பீர்களாஞல், முள்ளந்தண்டுக் கொடியைக் கலக்கமுறச் செய்வீர்கள். அது தன்னிச்சையாக இருக்கும்படி செய்ய வேண் டும். எப்பொழுதாவது வளைந்திருந்து தியானிக்க முயலுவீர்களா யின், உங்களுக்கே பெருங்கேட்டினை விளைவித்துக்கொள்வீர்கள் ! உடலின் மூன்று பாகங்களாகிய மார்பு, கழுத்து, தலை என்னுமிவை ஒரு நேராக இருக்கவேண்டும். சிறிது பயிலுவீர்களாகில் இது மூச்சுவிடுவது போல எளிதாகக் கைகூடக் காண்பீர்கள். நரம்பு களை வயப்படுத்துவது இரண்டாவது விஷயம். சுவாசக்கருவி களை ஒழுங்குபடுத்துகிற நரம்பு மையம் மற்றைய நரம்புகளை ஒரு வகையாக அடக்கியாளுவது என்பதை முன்னமே கூறி னேன். ஆதலால், இலயப்பட்ட மூச்சு அவசியமாகின்றது. பொதுவாக நாம் விடும் மூச்சானது தக்க மூச்சென்று சொல்லக் கூடாதது. அது மிக ஒழுங்கீனமானது. தவிர, மூச்சு விடு வதில் ஆடவருக்கும் பெண்களுக்கும் இடையே இயற்கையில் சில வேறுபாடுகள் உண்டு.

அளவுபட்ட முறையாக மூச்சினை உள்ளிழுத்து வெளிவிடுதல் முதற்பாடமாகும். அதனால், உடல் இலயப்படும். இதைச் சிறிது காலம் பயின்ற பின்பு, இதனோடுகூட ‘ஓம்’ என்னும் மந்திரத்தினையோ, பிறிதொரு மந்திரத்தினையோ, சேர்த்துக்கொள்ளுவது நல்லது. இந்தியாவிலே ஒன்றிரண்டு மூன்று நான்கென்று எண்ணுவதற்குப் பதிலாகச் சில பதங்களைப் பயன்படுத்திக்கொள்வது வழக்கம். ஆதலினாலேதான் மனத்திலே ‘ஓம்’ என்னும் பதத்தையாவது, வேறெந்தத் தூய மொழியையாவது பிராணாயாமத்தோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மூச்சினோடு அந்த மொழியானது இலயப்பட்டு இயங்குமாயின், உடல் முழுவதும் இலயப்பட்டு நிற்கக் காண்பீர்கள். ஆறுதல் என்பது என்ன என்பதை அப்பொழுது அறிந்து கொள்ளுவீர்கள். அதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது நித்திரை ஆறுதலாகாது. ஒரு முறை இந்த ஆறுதல் வருமாயின், மிகக் களைப்படைந்த நரம்புகளும் அமைதி பெறுவனவாகும். இந்த அனுபவம் பெற்ற பின்னர் இதற்கு முன் ஒரு பொழுதும் ஆறுதல் அடையவில்லை என்பதை நீங்கள் காண்பீர்கள்.

இந்தப் பயிற்சியின் முதற்பயனாக முகக் குறிப்பிலே வேறுபாடு காணப்படும். இலட்சணமற்ற இரேகைகள் மறைந்துவிடும். அமைதியான எண்ணத்தோடு முகத்திலே அமைதியுண்டாகும். அதற்கேற்ப அழகிய குரலுண்டாகும். கரடு முரடான குரலினையுடைய யோகியை நான் கண்டதில்லை. சில மாதங்கள் பயின்ற பின்பு இந்த அடையாளங்கள் ஏற்படுகின்றன. மேற்காட்டிய சுவாச முறைகளைச் சில நாள் பயின்ற பின்பு, உயர்ந்ததொன்றினை மேற்கொள்ள வேண்டும். இடப்பக்கத்து நாசி வழியாகச் சுவாசப் பைகளை மூச்சினாலே நிரப்புங்கள். அத்தருணத்தில் மனத்தினை இடை நரம்பிலே ஒருவழிப்படுத்தி நிறுத்துங்கள். நரம்பின் இயக்கத்தை முள்ளந்தண்டுக் கொடி மூலமாகக் கொண்டு சென்று, குண்டலினி உறைகின்ற முக்கோண வடிவமாகிய ஆதாரத் தாமரையிலே உரத்துத் தாக்குவதாக நினையுங்கள். அவ்விடத்திலே நரம்பியக்கத்தைச் சிறிது பொழுது நிறுத்திவையுங்கள். அதன் பின்னர் மற்றப் பக்கமாகப் பிங்கலை வழியாக நரம்பியக்கத்தை மெல்லென்று இழுப்பதாகப் பாவித்து, வலநாசி வழியாக வெளியே செலுத்துங்கள். இதனைப் பயில்வது சிறிது கடினமாகக் காணப்படலாம். வலநாசியைப் பெருவிரலால் அடைத்துக் கொண்டு இடப்பக்கத்தினாலே மூச்சினைச் சிறிது சிறிதாக உள்ளிழுத்துப் பெருவிரல் ஆட்காட்டி விரலினாலே இரண்டு நாசிகளை

யும் அடைத்துச் சுவாசத்தைக் கீழே தள்ளிச் சுழுமுனையின் அடியைத் தாக்குவது போலப் பாவனை பண்ணுங்கள். பின்பு பெருவிரலை எடுத்துவிட்டு வல நாசி வழியாக மூச்சை வெளிப் படுத்துங்கள். பின்பு அந்த நாசி வழியாக மூச்சை உள்ளே இழுத்து இரண்டு நாசிகளையும் அடைத்து முன் போலவே செய்க. இந்துக்கள் இதனைப் பயிலும் முறை இந்த நாட்டிலுள்ளவர் களுக்கு அதிகக் கடினமாகத் தோன்றலாம். இந்துக்கள் இளமை முதற்கொண்டு இதனைச் செய்வதால், அவர்களுடைய சுவாசப்பை இதற்குத் தகுதியுடையதாயிருக்கிறது. இங்குள்ளோர் நாலு நொடியோடு தொடங்கி மெல்லென அதிகப்படுத்திக்கொள்வது நல்லது. நாலு நொடிக்கு உள்ளிழுத்து, பதினாறு நொடிவரை உள்ளே நிறுத்தி, எட்டு நொடியில் வெளியே விடவேண்டும். இது ஒரு பிராணாயாமமாகும். அத்தருணத்தில் முக்கோண வடிவமா யிருக்கிற ஆதாரத் தாமரையை நினையுங்கள். மனம் அந்த இடத் தில் ஒன்றுபட்டிருக்கட்டும். மனோபாவனை இதற்குப் பேருதவியா யிருக்கும். இதற்கு அடுத்தபடியாக மூச்சை மெல்லென்று உள்ளிழுத்து, உடனே மெல்லென்று வெளியேவிட்டு அதன் பின்பு மூச்சை வெளியே நிறுத்திவைக்க வேண்டும். இதனையும் முன் சொன்ன கணக்கின்படியே செய்ய வேண்டும். முதல் வகையிலே மூச்சு உள்ளே நிறுத்தப்பட்டது ; இரண்டாவது வகையிலே வெளி யில் நிறுத்தப்பட்டது. இதுவே வேறுபாடு. இரண்டாவதாகச் சொல்லப்பட்டது, எளிதானது. சுவாசப் பையிலே மூச்சினை நிறுத்திவைக்கும் பயிற்சியை மிகுதியாகச் செய்தல் கூடாது. காலையில் நான்கு முறையும் மாலையில் நான்கு முறையும் மாத்திரம் தொடக்கத்திலே செய்யலாம். அதன் பின்பு சிறிது சிறிதாக நேரத்தையும் தொகையையும் கூட்டிக்கொள்ளலாம். அங்ஙனம் செய்வதற்கு வரவர ஆற்றல் உண்டாவதையும் அத்தொழிலிலே ஒரு வகை இன்பம் எழுவதையும் காண்பீர்கள். சாவதானமாக வும், படிப்படியாகவும் நாலிலிருந்து ஆறு எண்ணுந் தொகைக்கு வரலாம். ஒழுங்கீனமாகப் பயின்றால் கேடு விளைதல் கூடும்.

நாடிகளைச் சுத்தப்படுத்துவதற்காக நான் மேலே கூறிய முறைகளிலே முதலிலும் ஈற்றிலும் சொல்லப்பட்ட முறைகள் கடினமானவை அல்ல ; கெடுதி விளைப்பனவும் அல்ல. முதற் பயிற்சியை எவ்வளவு செய்கிறீர்களோ, அவ்வளவு அமைதியை அடைவீர்கள். 'ஓம்' என்னும் எழுத்தை நினைத்தால், நீங்கள் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுதும் பயிலக்கூடியவர்களா வீர்கள். அதனால் உங்களுக்கு நன்மை உண்டாகும். முயன்று

பயின்றால், குண்டலினி ஒரு போது எழும்புதல் கூடும். தினம் இரண்டொரு முறை பயில்வோர்க்கு உடலிலும் மனத்திலும் அமைதியும், அழகிய குரலும் உண்டாகும். இன்னும் மிகுதியாகப் பயில்பவர்களுக்குக் குண்டலினி எழும்; இயற்கை முற்றும் மாறுபடும்; அறிவு விளக்கம் உண்டாகும். அறிவினைத் தேடிப் புத்தகங்களை நாடவேண்டுவதில்லை. உங்கள் மனமே எல்லையற்ற அறிவையடக்கிய புத்தகமாகும். முள்ளந்தண்டின் இரு பக்கங்களிலும் செல்கிற இடைபிங்கலைகளைப் பற்றியும் நடுவாகவுள்ள சுழுமுனையைப் பற்றியும் முன்னமே கூறியுள்ளேன். இம்மூன்றும் எல்லா விலங்குகளிலும் அமைந்திருக்கின்றன. முள்ளந்தண்டுள்ள எல்லாப் பிராணிகளிலும் இந்த மூன்று நாடிகளும் அமைந்திருக்கின்றன. எனினும், சாதாரண மனிதரிலே சுழுமுனை வழி அடைபட்டிருக்க, மற்றைய இரண்டும் உடலின் வேறு வேறு பாகங்களுக்கு வலிமையைக் கொண்டு செல்கின்றன.

யோகிக்கு மாத்திரமே சுழுமுனை திறக்கப்பட்டு இருக்கின்றது. சுழுமுனை நாடி திறந்து மேல் எழுமாயின், நாம் புலன்களுக்கு அப்பாற்செல்லுவோம். மனமானது புலன்களுக்கும் உணர்வுக்கும் அப்பாலாகி நிற்கும்; புத்திக்கும் அப்பாலாகும். தருக்க அறிவு அவ்விடத்தை அடைய மாட்டாது. சுழுமுனையைத் திறக்கச் செய்வதுதான் யோகியினுடைய முதற்கொள்கை. யோகி சொல்லுகிறபடி, சுழுமுனை மார்க்கத்திலே இந்தத் தாமரைகள் அமைந்திருக்கின்றன. முள்ளந்தண்டுக் கொடியின் அடியிலே அமைந்திருப்பது மூலாதாரம் எனப்படும்; அதற்கு மேலாகவிருப்பது சுவாதிஷ்டானம்; மூன்றாவது மணிபூரகம்; நான்காவது அநாகதம்; ஐந்தாவது விசுத்தம்; ஆறாவது ஆஞ்ஞை; மூளையிலுள்ள ஏழாவது ஆயிரமிதழ்த் தாமரையாகிய சகஸ்ராரம். இவற்றிலே இப்பொழுது கீழேயுள்ள மூலாதாரத்தைப் பற்றியும், மிகவுயர்ந்த சகஸ்ராரத்தைப் பற்றியும் நாம் கருதவேண்டும். மூலாதாரத்திலிருந்து வலிமையை எடுத்துச் சகஸ்ராரத்துக்குக் கொண்டு வரவேண்டும். மனித உடலிலுள்ள எல்லா வலிமைகளுள்ளும் 'ஓஜஸ்' எனப்படுவது மிகவுயர்ந்ததென யோகிகள் கூறுகிறார்கள். இந்த ஓஜஸ், மூளையிலே சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு மனிதனுடைய தலையிலே எவ்வளவு ஓஜஸ் கூடியிருக்கிறதோ, அவ்வளவுக்கு அவன் வலிமை படைத்தவனும், அறிவு உள்ளவனும், ஆன்மிக வலிமை சான்றவனும் இருப்பான். ஒரு மனிதன், அழகிய மொழியிலே அழகிய எண்ணங்களை வெளியிட்டாலும், மற்றையோருடைய மனத்திலே அழுத்த

முண்டாகும்படி பேசமாட்டாதவனுயிருக்கின்ருன். மற்ருெருவன், அழகிய மொழி கருத்து என்னும் இவை இல்லாதிருப்பினும், அவனுடைய மொழிகள் கேட்போரைக் கவர்கின்றன. அவனுடைய இயக்கம் ஒவ்வொன்றும் வலிமையோடு கூடியிருக்கின்றது. இது ஓஜஸினுல் ஆகிய வலிமை.

ஒவ்வொரு மனிதனிலும் இந்த ஓஜஸ் குறைவாகவோ நிறைவாகவோ சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. உடலிலே தொழில் புரிகின்ற மிகவுயர்ந்த வலிமைகள் ஓஜஸ் ஆகின்றன. யாவும் உரு வேறுபடுவதனுல் ஆகும் மாற்றமே. மின்சாரமாகவும், காந்தசாரமாகவும் வெளியே இயங்குகின்ற வலிமை, உள்ளேயமைந்த ஒரு சத்தியாக மாறும். தசைகளின் வலிமையாகத் தொழில் புரிகின்ற ஆற்றல் ஓஜஸாக மாறும். காமவிச்சையாக உருவப்படுகின்ற மனித வலிமையை அடக்கி வயப்படுத்திஞல், அது எளிதாக ஓஜஸ் ஆகுமென்றும், மூலாதாரமானது அதனை வழிப்படுத்துவதனுல் அந்த நிலையத்தைச் சிறப்புறக் கருத வேண்டுமென்றும் யோகி சொல்லுகிருன். காம இச்சை வழிச் செல்லுகிற வலிமை முழுவதையும் ஓஜஸாக மாற்ற யோகி முயலுகிருன். கற்பொழுக்கமுடைய ஆடவரும் பெண்டிரும் மாத்திரமே ஓஜஸை மேலெழுப்பி மூளையிலே சேமித்து வைக்கத்தக்கவர். ஆதலால், பிரம்மசரியம் மிக உயர்ந்த ஒழுக்கமாகக் கருதப்பட்டது. பிரம்மசரியத்தில் நழுவினுல் ஆன்மிக சத்தி போய்விடும்; மனவலிமையும், ஒழுக்க வலிமையும் குறைந்து போவதை மனிதன் காண்பான். ஆன்மிக வலிமை சான்ற பெரியவர்களைத் தந்த சமயாசாரியப் பரம்பரைகளிலே பூரணமான பிரம்மசரியம் அவசியமென்று கொள்ளப்பட்டதற்குக் காரணம் இதுவே. இல்வாழ்க்கையை விட்ட துறவிகள் ஏற்பட்டதும் இதனுலேதான். எண்ணத்திலும், உரையிலும், செய்கையிலும் பூரணமான பிரம்மசரியம் இருக்கவேண்டும். அஃதில்லாமல் இராஜயோகத்தைப் பயில்வதனுற் கேடு வந்தெய்தலாம்; பைத்தியம் வரலாம். மக்கள் இராஜயோகத்தைப் பயில்வதோடு தூய்மையற்ற வாழ்க்கையை நடத்திஞல் அவர்கள் எங்ஙனம் யோகிகள் ஆதல் கூடும்?

## 6. பிரத்தியாகாரமும் தாரணையும்

அடுத்தது பிரத்தியாகாரம் எனப்படும். இது என்ன? காட்சி எப்படி வருகிறதென்பதை நீங்கள் அறிவீர்கள். முதலிலே புறக்கருவிகள் இருக்கின்றன. மூளையிலுள்ள நிலையங்கள் மூலமாக உடலிலே தொழில் புரிகின்ற அகக்கருவிகள் இருக்கின்றன. மீட்டும் மனமிருக்கின்றது. இவையெல்லாம் ஒன்றுகூடி, ஏதாவதொரு புறப்பொருளைப் பற்றும் பொழுது நாம் இதனைக் காண்கின்றோம். ஆயினும், மனத்தை ஒருவழிப்படுத்தி ஒரு கருவியோடு மாத்திரம் தொடர்பாக்கி வைப்பது மிகக் கடினம்; மனம் அடிமையாயிருக்கின்றது.

'' நல்லவனாயிரு '', '' நல்லவனாயிரு '', '' நல்லவனாயிரு '' என்று உலகடங்கலும் போதிக்கப்படுவதை நாம் கேட்கிறோம். '' களவாடாதே '', '' பொய் சொல்லாதே '' என எத்தேசத்திற் பிறந்த சிறுவர்களுக்கும் முதியோர் சொல்லுவதைக் காண்கிறோம். ஆனால், தீச்செயல்களைச் செய்யாமல் இருப்பது எப்படியென ஒருவரும் சிறுவர்களுக்குச் சொல்லுவதில்லை. வீண் பேச்சினாற் பயனில்லை. '' ஒரு பிள்ளை ஏன் கள்வனாய் வருதல் கூடாது? களவாடாமலிருப்பது எப்படி? '' என்று நாம் சொல்லுவதில்லை; '' களவு செய்யாதே '' என்று மாத்திரம் சொல்லுகிறோம். அவனுடைய மனத்தை அடக்கியாளப் பயிற்றும் பொழுதுதான் நாம் உண்மையில் அவனுக்கு உதவி புரிகிறோம். மனமானது கருவிகளென்று சொல்லப்படுகிற சில நிலையங்களோடு ஒன்றுபட்டு நிற்கும் பொழுதுதான் எல்லா வகையான அகச்செயல்களும் புறச்செயல்களும் நிகழ்கின்றன. விரும்பியோ, விரும்பாமலோ, மனம் சில நிலையங்களோடு தன்னைத் தொடுத்துக்கொள்ளுகிறது; அதனால், மக்கள் அறிவின்மையான செயல்களும் புரிந்து அல்லற்படுகிறார்கள்; மனம் வயப்பட்டிருந்தால், அப்படிச் செய்யமாட்டார்கள். மனத்தை வயப்படுத்துவதனால் வருகின்ற பலன் என்ன? அது காட்சிக்குரிய நிலையங்களோடு தன்னைத் தொடுத்துக்கொள்ள மாட்டாது. அப்பொழுது இயல்பாகவே உணர்ச்சியும் தொழில் புரியும் சித்தமும் கட்டளைக்கமைந்து நிற்கும். இதுவரையும் தெளிவாய் இருக்கின்றது. ஆனால், இது செய்யக்கூடியதா? ஆம், பூரணமாகச் செய்யக்கூடியதுதான். இக்காலத்திலும் இதனைக் காணலாம். நம்பிக்கை வைத்தியர்கள் கவலையையும், துன்பத்தை

யும், தீச்செயலையும் மறுத்துரைக்கும்படி சொல்லுகிறார்கள். அவர்களுடைய தத்துவ ஆராய்ச்சி ஒருவகைச் சுற்று வழியே. அவர்கள் யோகத்தின் ஒரு பாகத்தை அறியாமலே ஏதோ ஒரு வகையாக அடைந்துவிட்டார்கள். துன்பப்படுதலை மறுதலித்து ஒருவன் தன் துன்பத்தை நீக்கும்படி கேட்கும்பொழுது, உண்மையிலே பிரத்தியாகாரத்தையே ஓரளவு பயன்படுத்துகிறார்கள். எப்படியெனில், புலன்களை மறக்கத்தக்க மனவலிமையை நோயாளியினிடம் அவர்கள் உண்டாக்குகிறார்கள். இங்ஙனமே மனோவசியக்காரரும், நினைவூட்டுதலினாலே நோயாளியினுடைய உள்ளத்தில் அந்த நேரத்திலே ஒருவகை நோயை வருவிக்கும் பிரத்தியாகாரத்தை உண்டாக்குகிறார்கள். மனோவசியக் குறிப்பு, வலியிழந்த மனத்திலேதான் தொழில் புரியும். வைத்தியன் உற்று நோக்குதலினாலோ அல்லது பிறவழியினாலோ மனத்தை ஒரு வகையாகிய மூட நிலைக்குக் கொண்டுவந்தாலன்றி, அவனுடைய குறிப்புகள் தொழில் புரிவதில்லை.

மனோவசியப்பட்ட நோயாளி, நம்பிக்கை வைத்தியம் பெறும் நோயாளி என்பவர்களின் நரம்பு நிலையங்களை மானத வைத்தியன் அடக்கியாளுவது குற்றமாகும். ஏனெனில், அது இறுதியிலே கேட்டினை விளைக்கும். அது ஒருவனுடைய சொந்த சித்த வலிமையினாலே மூளையினுடைய நிலையங்களை அடக்கியாளாமல் மற்றொருவனுடைய சித்தத்திலிருந்தெழுகின்ற சடுதியான தாக்கல்களினால் நோயாளியினுடைய மனத்தைச் சிறிது நேரம் அடக்கி வைப்பதாகும்; கடிவாளத்தைப் பிடித்து, வலியோடு இழுத்து, விரைந்தோடுகின்ற குதிரைகளை நிறுத்துவதுபோலாகாது, மற்றொருவனைக்கொண்டு குதிரைகளுடைய தலையிலே வேகமாக அடித்து, அவற்றைச் சிறிதுகாலத்துக்கு மெல்லென இயங்கச் செய்வதுபோலாகும். இந்தச் செயல்களினால் நோயாளி தனது மன வலிமைகளை இழந்து ஈற்றிலே மனத்தையும் இழந்துவிடுகிறான். மனத்தினைப் பூரணமாக அடக்கியாளுகிற வலிமையை இழந்துவிட மனமானது உருவற்ற, வலியற்ற பிழம்பாகின்றது. நோயாளி பைத்தியக்கார மருத்துவ நிலையத்திற்குப் போக வேண்டியவனாகிறான்.

மனிதன் தன்னைத்தானே அடக்குதல் வேண்டும். அடக்குவோனது சொந்த மனத்தினின்று எழாத அடக்கம் கேடு விளைப்பதோடமையாது எண்ணிய கருமத்துக்கும் முரணாய் முடியும். சடம் சித்தம் ஆகிய இவற்றினின்று விடுபடுகின்ற விடுதலையும், அகம் புறம் ஆகிய இரு வகை இயற்கைகளை அடக்கி ஆளுகின்ற

ஆதிக்கமும் ஆகிய இவ்விரண்டும் ஒவ்வோர் ஆன்மாவும் அடைய வேண்டிய பேருய் இருக்கின்றன. பழைய எண்ணங்களும் பழைய மூடக்கொள்கைகளுமாகிய கனத்த சங்கிலிக் கட்டு இன்னும் அதிகரிக்கும்படி செய்கின்ற தன்மையதாகிப் பிறருடைய சித்த வலிமையினுல் உண்டாகின்ற அடக்கம் கேட்டினையே விளைப்பதாகும். பிறனுடைய சித்த சத்தியினுலே ஒருவனுடைய உள்ளத்தில் ஏற்படுகின்ற அடக்கம் நேராக எய்தியதாயினும், மயக்க நித்திரை நிலையிலே எய்தியதாயினும், பந்தத்தைத் தருமேயன்றி, ஆன்மாவுக்குரிய விடுதலை, ஆதிக்கம் என்னும் இவற்றைப் பெறுகின்ற வழியிலே செலுத்தமாட்டாது. ஆதலின், பிறர் உங்கள்மேல் அதிகாரம் செலுத்த வரும்பொழுது விழிப்பாயிருங்கள். அறியாமையினுலே மற்றொருவனுக்கு அழிவுண்டாக்குவதற்கும் முற்படாதீர்கள். மக்களுடைய மனப்பான்மையைப் புது வழிகளிலே செலுத்துவதனுற் பலருக்கு ஒரு காலத்திற்கு ஓர் அளவாகிய நன்மையைச் சிலர் செய்யக்கூடும் என்பது உண்மையே. அதே தருணத்தில் அத்தகையோர் தாம் அறியாமையினுற் செய்கின்ற குறிப்புகளினுலே இலட்சக்கணக்கான ஆடவர் பெண்டிருடைய உள்ளத்திலே மயங்கிய, செயலற்ற, துயில் நிலையை உண்டுபண்ணி, அவர்கள் தங்கள் ஆன்மாவை இழந்து நாசமடையும்படி செய்கின்ருர்கள். எவனொருவன் மக்களைக் குருட்டுத்தனமாக நம்பும்படி கேட்கிருனே, எவனொருவன் தனது சித்த வலிமையினுலே மக்களைத் தன் வழிக்கு இழுக்கிருனே, அவன் நினைத்துச் செய்யாவிடினும், உண்மையிலே மக்கட்கூட்டத்திற்குத் தீங்கு இழைக்கின்ருன்.

ஆதலால், உங்களது சொந்த மனத்தை உபயோகித்து உங்களது உடலையும் மனத்தையும் நீங்களே அடக்கி ஆளுங்கள். ஒருவன் நோயுற்றவனுலன்றிப் பிறருடைய சித்தசத்தி அவனை இயக்கும்படி செய்தல் இயலாது. குருட்டு நம்பிக்கை வைக்கும்படி சொல்பவர்கள் எவ்வளவு பெரியவர்களாயினும், நல்லவர்களாயினும், அவர்களை வெறுத்துவிடுதல் வேண்டும். குதித்துக் கூத்தாடி ஓலமிடுகின்ற சமயவாதிகள், உலகனைத்தினும் பரந்திருக்கிருர்கள். அவர்கள் ஆடிப்பாடிப் பிரசாரம் செய்வதனுல், அவர்களுடைய கொள்கைகள் தொற்றுவியாதி போலப் பரவுகின்றன. அவர்களும் ஒரு வகை மயக்க நித்திரையை வருவிக்கின்ருர்கள். பற்றக்கூடிய மனத்தினையுடைய மக்கள்மீது அவர்கள் ஒரு காலத்திற்கு ஒரு வகையான அடக்கி ஆளுதலைச் செய்கின்ருர்கள். அதனுல், இறுதியில் நாடு முழுமையும் கீழ்மையடை

யும்படி செய்துவிடுகின்றார்கள். மயக்கத்தோடு கூடிய இத்தகைய புற அடக்கத்தினாலே தோற்றத்தில் மட்டும் நல்லவர்களாகத் தோன்றுவதைவிட, ஒருவரோ ஒரு வகுப்பாரோ கெட்டவராகவே இருந்துவிடுதல் சிறந்ததாகும். நோக்கம் நன்றாயிருப்பினும், தம் செயலின் பொறுப்பினை உள்ளவாறு உணராத சமயவாதிகளாலே மக்கட்கூட்டத்தினர்க்கு விளைந்த கேட்டினை நினைக்கும் பொழுது உள்ளம் பதைக்கின்றது! சங்கீதம் பிரார்த்தனை என்னும் இவற்றின் வலிமையினாலே சடுதியாக ஒரு வகை ஆன்மிகக் கிளர்ச்சியை மக்களுடைய மனத்தில் உண்டாக்குவதனாலே, அவர்கள் செயலற்று, மயங்கி, வலிமையற்று, எந்தக் கேட்டுக்கும் தம்முடைய உள்ளத்தைத் திறப்பவர்கள் ஆவார்கள்; இவ்வண்ணம் மக்களைச் செய்கின்ற மதி கேடர்கள், தாங்கள் ஏதோ அற்புதமான சத்தியினாலே மனிதருடைய இதயங்களை மாற்றி விட்டதாக நினைக்கிறார்கள்; அத்தகைய வலிமை மேக மண்டலத்திற்கு அப்பாலிருக்கும் ஒருவரிடமிருந்து தங்களுக்குக் கிடைத்ததென்று எண்ணுகிறார்கள்; வருங்காலத்திலே அழிவுக்கும், குற்றத்திற்கும், பைத்தியத்திற்கும், மரணத்திற்கும் இயைந்த வித்துகளைத் தாங்கள் விதைத்த செய்கையினை இவர்கள் அறிய மாட்டார்கள். எது உங்களுடைய சுயேச்சையை நீக்கிவிடுகிறதோ, அதைப்பற்றி விழிப்பாய் இருங்கள்! அது தீங்குள்ளது என்பதை யறிந்து, உங்களால் இயன்ற முறையனைத்தையும் உபயோகித்து அதனை அகற்றிவிடுங்கள்.

எவனொருவன் புலன்களோடு தான் விரும்பிய வண்ணம் தனது மனத்தினை ஒன்று கூட்டவோ பிரிக்கவோ வல்லவனாய் இருக்கின்றானோ, அவன் பிரத்தியாகாரத்தை அடைந்தவனாவான். பிரத்தியாகாரம் என்பது "ஒன்று கூட்டுதல்", "தொகுத்தல்" என்னும் பொருளினைத் தரும். அது வெளியே செல்கின்ற மனத்தின் வல்லமைகளைத் தடுத்துப் புலன்களினுடைய அடிமைத்தனங்களினின்று அதனை விடுவிப்பதாகும். அதனை நாம் செய்யக்கூடிய பொழுது உண்மையிலே குணவான்களாவோம்; அப்பொழுதுதான் முத்தியடையும் நெறியிலே அடி எடுத்து வைப்போம். அதற்கு முன்பு நாம் வெற்று இயந்திரங்களே.

மனத்தை அடக்கியாளுவது எவ்வளவு அரிது! மனம் பைத்தியம் பிடித்த குரங்குக்கு ஒப்பாகக் கூறப்பட்டது. எல்லா மந்திகளையும் போல இயற்கையிலே அலைவுடைய மந்தியொன்று இருந்தது. யாரோவொருவர் அதற்கு நிரம்பக் கள்ளினைக்

குடிக்கக் கொடுத்தார். அதன் பின் ஒரு தேள் அதனைக் கொட்டிற்று. ஒரு மனிதனைத் தேள் கொட்டினுல் அவன் ஒரு நாள் முழுவதும் குதித்துத் திரிவான்; அந்த ஏழைக் குரங்கின் நிலையும் மிகவுந் துன்பத்துக்கிடமாய் இருந்தது. அதனுடைய துன்பத்தைப் பெருக்க ஒரு பேயும் அதனுள்ளே புகுந்தது. மந்தியினது அடக்க முடியாத நிலைகுலைவை நாமென்னென்று எடுத்துச் சொல்லலாம்! மனிதனுடைய மனமும் அந்த மந்தியை நிகர்த்தது; இயற்கையிலே இடையீடின்றி இயங்குவது. ஆசை யென்னும் கள்ளினைக் குடிப்பதனுலே, அதனுடைய கலக்கம் அதிகரிக்கின்றது. ஆசை பற்றிய பின்பு, பிறருடைய வெற்றி கண்டு பொருமைப்படுகின்ற எரிச்சலென்னுந் தேள் அதனைப் பற்றுகின்றது. கடைசியாகப் பெருமை என்னும் பேய் உட்புகுந்து எல்லாச் சிறப்பும் தனக்கேயென்று எண்ணும்படி செய்கிறது. அப்படிப்பட்ட மனத்தை அடக்குவது எவ்வளவு அரிது!

சற்று நேரம் வாளாவிருந்து மனத்தைத் தன் வழியே செல்ல விடுவது முதற்பாடமாகும். மனமானது எந்நேரமும் அலைந்து கொண்டிருக்கிறது; அந்த மந்தியைப் போலக் குதிக்கிறது. மந்தி இயன்ற வரையில் குதிக்கட்டும். நீங்கள் சும்மா பார்த்துக் கொண்டிருங்கள். கடிவாளத்தைத் தளர்த்திவிடுங்கள் கொடிய எண்ணங்கள் பல மனத்தினுள்ளே எழும். அத்தகைய எண்ணங்கள் உங்களிடம் இருப்பதைப்பற்றி நீங்களே வியப்புறுவீர்கள். நாள் செல்லச் செல்ல மனத்தினுடைய சீர் கேடுகளும் வரவரக் குறைந்துவிடும். ஒவ்வொரு நாளும் அது அமைதியடையும். முதற்சில மாதங்கள் வரையில் மனத்திலே எத்தனையோ பல எண்ணங்கள் இருக்கும்; சில மாதங்களிலே அவற்றின் தொகை வரவரக் குறைந்து, கடைசியாக மனமானது முற்றிலும் அடங்கிவிடும். ஆனுல், பொறுமையுடன் ஒவ்வொரு நாளும் பயிலவேண்டும். நீராவியைத் திறந்து விட்டால், இயந்திரம் இயங்கவேண்டும். அதுபோல, நம் கண் முன்னே பொருள்களிருந்தால், அவை நமக்குப் புலப்படுகின்றன. ஒரு மனிதன் தான் இயந்திரமல்லன் என நிரூபிப்பதற்குத் தான் ஒன்றிலும் கட்டுப்பட்டில்லை என்பதை எடுத்துக் காட்ட வேண்டும். மனத்தினையடக்கி, அது புலன்களோடு தொடர்ந்து செல்லாதபடி நிறுத்துதல் பிரத்தியாகாரமாகும். இதனைப் பயில்வது எப்படி? இது மிகக் கடினமானது. ஒரு நாளில் நிறைவேறுவதன்று; பொறுமையோடு இடையருது நாம் முயன்ருல், வெற்றி பெறலாம்.

பிரத்தியாகாரத்தைச் சிறிதுகாலம் பயின்ற பிறகு, அடுத்த படியாகத் தாரணையை மேற்கொள்ளலாம். தாரணை யென்பது, குறித்த சிலஇடங்களிலே மனத்தை நிறுத்தி வைப்பது. குறித்த சில இடங்களிலே மனத்தை நிறுத்தி வைப்பதன் கருத்து என்ன? அது, உடம்பின் சில பாகங்களை மனமானது ஏனையவற்றினின் றும் பிரித்து உணரும்படி செய்வது. சான்றாக, உடம்பின் ஏனைய பாகங்களை யொழித்துக் கையை மாத்திரம் தனித்துணரும்படி முயன்று பாருங்கள். மனப்பொருளாகிய சித்தம் ஒரே இடத்தில் நிற்றல் தாரணையாகும். தாரணை பல வேறு வகைப்படும். அத னோடு மனோபாவனையையும் சிறிது சேர்த்துக்கொள்வது நலம். எடுத்துக்காட்டாக, இதயத்திலே ஓரிடத்தை மனத்தினால் நினையுங்கள். அது கடினமாயிருக்கலாம்; ஆங்கு ஒரு தாமரை யைப் பாவனை பண்ணுவது எளிது. அந்தத் தாமரை தன்னொளி யால் நிறைந்தது. மனத்தை அங்கே வையுங்கள். அன்றேல், மூளையிலிருக்கின்ற தாமரையையாவது, யான் மேலே கூறிய சுழு முனையிலுள்ள வேறு வேறு சக்கரங்களையாவது நினையுங்கள்.

யோகி எப்பொழுதும் சாதனை செய்யவேண்டும். அவன் தனித்திருக்க முயல வேண்டும். பல வேறு வகைப்பட்ட மக்க ளுடைய கூட்டுறவு மனத்தை அலையச் செய்யும். மிகுதியாய்ப் பேசுதல் கூடாது; மிகுதியாய்ப் பேசுவதனால் மனம் அலைவுறும். அதிக வேலை செய்தல் கூடாது; ஏனெனில், அதிக வேலையினால் மனம் அலைவுறும். முழுநாளும் கடினமாக வேலை செய்த பின்பு மனத்தை அடக்குவது முடியாது. இந்த விதிகளைப் பின்பற்றி ஒழுகுபவன் யோகியாவான். யோகத்தின் வலிமை பெரியது. சிறிது சாதனை செய்தாலும் பெரிய நன்மை உண்டாகும். அதனால் யாருக்கும் துன்பமில்லை; ஒவ்வொருவருக்கும் நன்மையே கிடைக் கும். யோகம் முதலிலே நரம்புகளின் பதைப்பை அமைதிப்படுத் திச் சாந்தத்தை அளிக்குமாதலினாற் பொருள்களை நாம் தெளி வாகக் காணும்படி செய்யும்; மனப்பான்மை நன்றாகும்; உடல் நலம் பெருகும்; இன்பம் முதலிலே பெறுகின்ற ஒரே அடையாள மாகும்; இனிய குரல் உண்டாகும். குரலிலுள்ள கெடுதல்கள் நீங்கிப்போம். அடையப் போகின்ற பல பேறுகளில் முதலிற் பெறுவன இவை. முயன்று பயின்றால் வேறு பல நலங்களும் கைகூடும். சில பொழுது சேய்மையில் அடிக்கின்ற மணியினது நாதம் ஒன்று கூடித் தொடர்ந்த வொலியாகக் காதிலே விழு கின்றது போன்ற ஓர் ஒலி கேட்கும். சில வேளை சிறிய ஒளிச் சுடர்கள் தோன்றி வரவர விரிந்து நிற்கும். இவை வரும்பொழுது

நீங்கள் விரைந்து பயனடைகின்றீர்கள் என அறிந்துகொள்க. யோகிகளாக வர விரும்பிக் கடினமாகப் பயில்வோர் முதலிலே தங்கள் உணவைப்பற்றிக் கவனமாயிருக்க வேண்டும். நாடோறும் நடத்துகின்ற வாழ்க்கைக்காகச் சிறிய அளவு பயில விரும்பினோர் அதிக உணவு உட்கொள்ளுதல் கூடாது. மற்றப்படி அவர்கள் விரும்பியதை உண்ணலாம்.

விரைவாக முன்னேற்றமடைய விரும்பிக் கடினமாகப் பயில்பவர்கள் உணவைப்பற்றிக் கவனிக்க வேண்டுவது இன்றியமையாதது. சில மாதங்களுக்குப் பாலும் தானியங்களும் மாத்திரமே உணவாகக் கொள்ளுவது நலமாகும். உடற்சூத்திரம் நுண்ணிதாக வருதலினாலே தொடக்கத்தில் சிறிய ஒழுங்கீனமும் நிலைகுலைப்பதாகும். அளவுக்கு மேலாகவோ குறைவாகவோ ஒரு பிடி மிகுதியாய் உண்டாலும் உடல் முழுவதும் துன்புறும். முழு அடக்கம் பெற்ற பின்பு ஒருவன் எதை விரும்பினாலும் உண்ணலாம். ஒருவன் தியானிக்கத் தொடங்கும் பொழுது ஒரு குண்டூசி விழுந்தாலும் அது மூளையிலே இடிமுழக்கம் போலப்படும். கருவிகள் நுண்ணிதாக, காட்சியும் நுண்ணிதாகும். இவையெல்லாம் கடக்கவேண்டிய படிகள். கடைப்பிடியாக முயலுவோர் அனுகூலத்தை அடைவர். வீண் வாதங்களையும் மலைவுகளையும் விட்டுவிடுங்கள். புத்தி சாதுரியமான காய்ந்த வெறும் பேச்சினால் ஏதாவது நன்மை உண்டா? அது மனத்தை நிலைகுலைத்துக் கலக்கிவிடும். நுண்ணிய புலன்களிலுள்ள பொருள்களை அடையவேண்டும். வீண் பேச்சு அவற்றைத் தருமா? ஆதலால், வீண் பேச்சுகளை விட்டுவிடுங்கள். ஆன்ம ஞானத்தை அடைந்தவர்கள் எழுதிய நூல்களை மாத்திரம் படிப்பீர்களாக.

முத்துச் சிப்பியைப் போன்று இருங்கள். சுவாதி நட்சத்திரம் உச்சத்திலிருக்கும் பொழுது ஒரு மழைத் துளி முத்துச் சிப்பியினுள்ளே விழுமாயின், அது முத்தாகும் என்னும் ஓர் அழகிய இந்தியக் கதை உண்டு. முத்துச் சிப்பிகளுக்கு இது தெரியும். ஆதலால், குறித்த விண்மீன் ஒளிவிடும் பொழுது அவை நீரின் மேற்பரப்புக்கு வந்து அருமையான அந்த மழைத் துளியைப் பிடிப்பதற்குக் காத்துக்கொண்டிருக்கின்றன. ஒரு துளி விழுந்துவிட்டால், சிப்பிகள் தம்முடைய ஓட்டை மூடிக் கடலின் அடிக்குப் போய்ப் பொறுமையோடு அந்தத் துளியை முத்தாக்கிக் கொண்டிருக்கின்றன. நாமும் அப்படி இருக்க வேண்டும். முதலிலே கேட்டு, பின்பு சிந்தித்து, அதன் பின்பு எல்லாக் கலக்கங்களையும் விட்டொழித்து, புறத்திலிருந்து வருகின்ற அலைவுகள் கலக்காத

வண்ணம் மனத்தினை மூடி, அகத்தேயுள்ள உண்மையை வளரச் செய்ய வேண்டும். புதுமைக்காக யாதாயினும் ஒரு கொள்கையைப் பற்றி நம்முடைய சத்திகளை வீணாக்கிவிட்டுப் பிறகு ஒரு புதுக் கொள்கையைத் தேடி நிற்பது தீங்கு விளைப்பதாகும். ஏதாவது ஒன்றினை எடுத்து அதை முடிவாகப் பாருங்கள். முடிவு காணுமுன்பு விட்டுவிடாதீர்கள். எவனொருவன் ஒரு கொள்கையைப் பற்றி உன்மத்தனாகின்றானோ, அவன் மாத்திரமே ஒளியைக் காண்பான். இங்கு ஒரு கடி, அங்கு ஒரு கடியாக அலைபவர்கள் ஒன்றினையும் அடையமாட்டார்கள். ஒரு கணம் நரம்பு புளகிக்குமெனினும், அவ்வளவோடு காரியம் நின்றுவிடும். இயற்கைக்கு அடிமைகளானோர் புலன்களை ஒரு பொழுதும் கடந்து செல்ல மாட்டார்.

யோகிகளாக விரும்பினோர் கண்டதைக் கடிக்கும் பழக்கத்தை முற்றும் விட்டுவிடவேண்டும். ஏதாவது ஒரு கொள்கையை எடுத்துக்கொள்க. அது உங்களுடைய வாழ்க்கையின் தனித்த கொள்கையாய் இருக்கட்டும். அதனை நினையுங்கள். கனவிலும் அதனைக் காணுங்கள். அதற்காகவே உயிர் வாழுங்கள். மூளையும், தசைகளும், நரம்பும், உடலின் ஒவ்வொரு பாகமும் அந்த எண்ணத்தினாலே நிறைவுற்று இருக்கட்டும். மற்ற எண்ணங்களை விட்டுவிடுக. வெற்றி பெறுவதற்கு இதுவே வழி. பெரிய ஆன்மிக வீரர்கள் இவ்வழியாகவே உண்டாகியிருக்கிறார்கள். மற்றவர்கள் வீண் பேச்சாம் இயந்திரங்கள். உண்மையிலே நாம் நன்மையடைந்து பிறரையும் நலமடையச் செய்ய வேண்டுமாயின், நாம் ஆழ்ந்து செல்லவேண்டும். மனத்தினைக் கலங்கவிடாது, கலக்கத்தை உண்டாக்குவாரோடு சேராது இருப்பது முதற்படியாகும். குறித்த சிலரும், சில இடங்களும், சில உணவுப் பொருள்களும் வெறுப்பைத் தருவதை நீங்கள் எல்லோரும் அறிந்திருப்பீர்கள். அத்தகைய தொடர்பை விட்டுவிடுதல் வேண்டும். மிகஉயர்ந்த நிலையை அடைய விரும்பினோர் நல்லோர் தீயோர் என்னும் இருபாலாருடைய கூட்டத்தையும் விட்டுவிடுதல் வேண்டும். கடினமாகப் பயிலுதல் வேண்டும். வாழ்ந்தாலுஞ் சரி, செத்தாலுஞ் சரி, என்று இருக்கவேண்டும். பயனைக் கருதாது உட்புகுந்து முயலவேண்டும். நீங்கள் தைரியசாலிகளாயிருந்தால் ஆறு மாதங்களிலே பூரண யோகியாய்விடலாம். ஆனால், யோகத்திலே சிறிய அளவும் மற்ற விஷயங்களிலே சிறிதுசிறிதும் பற்றிக்கொண்டு நிற்பவர் முன்னேற்றமடைவதில்லை. சில பாடங்களை மாத்திரம் படிப்பதனாற் பயனில்லை. சோம்பலும்

மடமையுமாகிய தமோ குணத்திஞல் மூடப்பட்டவராய், யாதொன்றிலும் மனத்தினைப் பதித்து வைக்காது, பொழுது போக்குக்காக ஏதாவது விஷயத்தைத் தேடி அலைபவர்களுக்குச் சமயமும் தத்துவ ஞானமும் பொழுது போக்குப் பொருள்களாகவே காணப்படலாம். இவர்கள் கடைப்பிடி இல்லாதவர்கள்; செவியிற்பட்ட வாசகங்களை நல்லனவென்று சொல்லிப் பின்பு வீட்டுக்குப் போய் முற்றும் மறந்துவிடுபவர்கள். வெற்றிபெறக் கடைப்பிடியும் பெரிய சித்த சத்தியும் வேண்டும். கடைப்பிடி உள்ளவன், "கடலைக் குடித்துவிடுவேன்! எனது சித்த வலிமையினலே மலைகள் நொறுங்கிப்போம்!" என்று சொல்லுவான். அப்படிப்பட்ட வல்லமையையும் சித்த சத்தியையும் வளரச் செய்ய முயன்று வேலை செய்யுங்கள். அடைய வேண்டிய பேற்றினைத் திண்ணமாக அடைவீர்கள்.

## 7. தியானமும் சமாதியும்

இராஜயோகத்தின் இலக்காகிய தியானப் பயிற்சியோடு கூடிய நுண்ணிய படிகளை ஒழிந்த ஏனைய படிகளைப் பற்றிப் பொது வகையாகப் பார்த்தோம். மனிதராகிய நமக்குத் தருக்க வாயிலாக வரும் அறிவெல்லாம் உணர்வோடு கூடியது. இந்த மேசையைப் பற்றிய உணர்வும், உங்களது முன்னிலை இருக்கையும், மேசையைப் பற்றியும் உங்களைப் பற்றியும் நான் அறிந்துகொள்ளும்படி செய்கின்றன. எனது வாழ்வின் பெரும் பாகத்தை நான் உணர்ந்துகொள்ளாமல் இருக்கிறேன். உடலினுள்ளே இருக்கின்ற வேறு வேருகிய கருவிகளையும் மூளையின் பாகங்களையும் ஒருவரும் உணர்ந்து கொள்ளுவதில்லை.

நான் உண்ணும் பொழுது உணர்வோடு உண்ணுகிறேன்; உணவைச் சீரணிக்கும் பொழுது உணர்வின்றிச் செய்கிறேன்; உணவு இரத்தமாகும் பொழுதும் இரத்தம் உடலின் பல பாகங்களுக்குஞ் சென்று வலிமையினைக் கொடுக்கும் பொழுதும் அச்செயல்கள் உணர்வின்றி நடக்கின்றன. அங்ஙனமாயினும், இவற்றையெல்லாஞ் செய்பவன் நானே. இந்த ஓர் உடலிலே இருபது பேர் இருத்தல் இயலாது. எனவே, வேறொருவரும் செய்யவில்லை. நானே செய்கிறேன் என்பதை நானெப்படி அறிவேன்? உண்பதும் சீரணிப்பதும் எனது தொழில் என்றும், உணவினுல் உடலை வலுப்படுத்துவது எனக்காகப் பிறரொருவர் செய்கின்ற தொழில் என்றும் கூறுதல் இயலாது. நாம் உணர்வின்றி இப்பொழுது செய்கின்ற ஒவ்வொரு தொழிலையும் உணர்வு நிலைக்குக் கொண்டு வருதல் கூடுமென்று தெளிவுபடுத்தலாம். இதயமானது நமது கட்டுப்பாடின்றித் துடித்துக்கொண்டிருப்பது போலக் காணப்படுகின்றது; இங்குள்ளார் எவராலும் இதயத்தை அடக்கி ஆளுதல் இயலாது; அது தன்வழியே இயங்குகின்றது. ஆனுல், பயிற்சி வன்மையினுல், மனிதர் இதயத்தையும் அடக்கித் தாம் விரும்பியபடியே அதை மெதுவாகவோ, விரைவாகவோ இயங்கும்படியும் ஏறக்குறைய நின்றுவிடும்படியுஞ் செய்யக் கூடியவராகலாம். ஏறக்குறைய உடம்பின் எல்லாப் பாகங்களையும் அடக்கி ஆளுதல் இயலும். இதனுல் என்ன அறிகின்ருேம்? உணர்வுக்குக் கீழ்ப்பட்ட செயல்களும் நம்மாலேதான் நடக்கின்றன. நாம் அவற்றினை உணர்வின்றிச் செய்கிருேம். மனிதருடைய மனமானது தொழில் புரிகின்ற பூமிகள் இரண்டு உண்டு.

முதலாவது, உணர்வோடு கூடிய பூமி. இங்கு நடக்கும் தொழிலனைத்தும் அகங்கார உணர்ச்சியோடு கூடியவை. இதற்கு அடுத்தது உணர்வற்ற பூமி. இங்கு நடைபெறும் தொழில்கள் அகங்கார உணர்ச்சியின்றி நடக்கின்றன. அகங்கார உணர்ச்சியின்றி நடக்கின்ற மனத்தொழில் உணர்வற்ற தொழிலாகும். அகங்கார உணர்ச்சியோடு கூடியது உணர்வுள்ள தொழிலாகும். கீழான விலங்குகளிலே உணர்வற்ற தொழில், இயற்கை அறிவுத் தொழிலெனப்படும். உயர்ந்த விலங்குகளிலே, அவற்றிலும் மிக உயர்ந்த உயிராகிய மனிதரிடத்தே, உணர்வோடு கூடிய தொழில் விஞ்சியிருக்கிறது.

இவ்வளவோடு முடிந்துவிடவில்லை. மனமானது தொழில் புரியக்கூடிய மிகவுயர்ந்த பூமி ஒன்றுண்டு. அது உணர்வையுங் கடந்து செல்வது. உணர்வற்ற தொழில் உணர்வு நிலைக்குக் கீழாக இருத்தல் போல, உணர்வு நிலைக்கு மேலான மற்றொரு தொழிலும் உண்டு. அதுவும் அகங்கார உணர்ச்சி இல்லாதது. 'நான்' என்னும் அகங்காரம் இடைப்பட்ட பூமியில் மாத்திரம் உள்ளது. மனமானது அதற்கு மேலும் கீழும் இருக்கும் பொழுது 'நான்' என்னும் உணர்ச்சியில்லை. ஆயினும், மனம் தொழில் புரிகிறது. மனமானது அகங்கார உணர்ச்சிக்கு அப்பாற்செல்லும் பொழுது, உரை உணர்வு கடந்த 'சமாதி' நிலை எய்துகின்றது. சமாதியில் இருக்கின்ற ஒரு மனிதன், உணர்வு நிலைக்குக் கீழே போகவில்லை என்றும், அவன் இழிந்து போகாமல் உயர்வடைந்திருக்கிறுனென்றும் நாம் அறிவது எப்படி? இரண்டு நிலையிலும் செயலானது அகங்கார உணர்ச்சி அற்றதாய் இருக்கிறது. செயலின் பயனை நோக்கி, 'எது கீழானது? எது உயர்ந்தது?' என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். மனிதன் ஆழ்ந்து துயிலும் பொழுது அவன் உணர்வுக்குக் கீழான நிலையை அடைகிறுன். முழு நேரமும் அவன் தனது உடலைத் தொழிற்படுத்துகிறுன்; மூச்சு விடுகிறுன்; உடலை அசைக்கிறுன். இவையெல்லாம் அவனது உறக்கத்திலே அகங்கார உணர்வின்றி நிகழ்கின்றன. உணர்வற்றிருந்த அம்மனிதன் துயில் நீங்கி எழும்பொழுது பழைய மனிதனுகவே இருக்கிறுன். அவன் துயில்வதற்கு முன்பு இருந்த அறிவே பின்பும் இருக்கிறது. அது அதிகப்படவில்லை. அறிவு விளக்கம் வரவில்லை. சமாதி நிலையிலோ என்றால், மூடனுய் உட்புகுந்தவனும் ஞானவானுய் வெளிவருகிறுன்.

வேறுபாடு என்ன? ஒரு நிலையிலிருந்த மனிதன் போன வண்ணமே திரும்பி வருகிறுன். மற்ற நிலையிலிருந்து அறிவு

விளங்கிய ஞானியாய்த் தீர்க்கதரிசியாய்க் குணமும் வாழ்க்கையும் மாறிச் சிறந்தோனய் வெளிவருகிருன். பயன் இங்ஙனம் இரு வகைப்படுகிறது. காரியம் மாறுபடவே, காரணமும் வேறுபட்டிருக்க வேண்டும். சமாதியிலிருந்து மனிதன் வரும்பொழுது எய்துகின்ற அறிவு விளக்கம், உணர்வற்ற நிலேயில் எய்துவதை விட, அல்லது உணர்வோடு கூடிய நிலேயில் தருக்க அறிவினலே அடைவதைவிட, மிக உயர்ந்தது. ஆதலால், அது உணர்வினுக்கு உயர்ந்த நிலேயாய் இருத்தல் வேண்டும். இத்தகைய உயர்ந்த நிலே சமாதி யெனப்படும்.

சுருக்கமாகச் சொல்லுமிடத்துச் சமாதியைப் பற்றிய கொள்கை இதுவே. அதனல் பெறும் பேறு என்ன? பெறும் பேறு இதுவாகும்: மனமானது உணர்வோடு கூடி நின்று தொழில் புரிகின்ற தருக்க அறிவு என்னும் பூமி ஒடுங்கியது; எல்லேயுட்பட்டது. மனிதனுடைய தருக்க அறிவு இயங்குகின்ற எல்லே ஒரு சிறு வட்டமாகும். தருக்க அறிவு அதனேக் கடந்து போக மாட்டாது. கடந்துபோக முயல்கின்ற முயற்சி கைகூடாத காரியமாகின்றது. அங்ஙனமாயினும், மக்கள் அரியனவென்று கொள்ளுகின்ற அனேத்தும் தருக்க அறிவாகிய வட்டத்திற்குப் புறம்பேதான் இருக்கின்றன. அழிவில்லாத ஆன்மா உண்டு; கடவுள் உண்டு; இந்தப் பிரபஞ்சத்தை நடத்துகின்ற பரஞான முண்டு என்னும் முடிபுகளேக் குறித்து எழுகின்ற வினக்களெல்லாம், தருக்க அறிவின் எல்லேக்கு அப்பால் உள்ளன. தருக்க அறிவு இவ்வினக்களுக்கு விடையிறுக்கமாட்டாது. தருக்க அறிவு என்ன சொல்லுகிறது? "நான் அறியேன்; உண்டோ இல்லேயோவென்பது எனக்குத் தெரியாது," என்கின்றது. ஆயினும், இந்த வினக்கள் நமக்கு மிகவும் முக்கியமானவை. இவற்றுக்குத் தக்க விடையிறுக்காவிட்டால், மனித வாழ்க்கை நோக்கமற்றதாகும். நன்னடையும், நல்லொழுக்கத்தைப் பற்றிய விசாரணேயனேத்தும், மனித இயற்கையிலே நலமுற்று உயர்ந்தன யாவும், தருக்க அறிவுக்குப் புறம்பே இருந்து வந்த மறுமொழிகளேயே ஆதாரமாகக் கொண்டு ஆக்கப்பட்டன. இந்த வினக்களுக்கு விடைபெற வேண்டுவது அவசியமே. வாழ்வு சற்று நேரத்திற்கு நடக்கின்ற ஓர் விளேயாட்டாயிருந்தால், இந்தப் பிரபஞ்சம் தாமாகவே ஒன்று கூடிய அணுக்களின் சேர்க்கையாயிருந்தால், நான் பிறனெருவனுக்கு நன்மை செய்ய வேண்டுவது எதற்கு? இரக்கம், நீதி, பிறர்க்குதவி என்னும் இவை எதற்காக வேண்டும்? காற்றுள்ள போதே

தூற்றிக்கொள்பவர்கள் போல, ஒவ்வொரு மனிதனும் தன் நலத்தையே கருதியிருத்தல் இந்த உலகத்துக்கு மிகச் சிறந்த தாகுமே! எதிர்பார்ப்பதற்கு ஒன்று இல்லாவிட்டால், நான் என் உடன்பிறந்தோனை ஏன் நேசிக்க வேண்டும்? அவனுடைய கழுத்தினை ஏன் அறுத்தல் கூடாது? இந்தப் பிரபஞ்சத்துக்கு அப்பால் ஒன்றுமில்லையாயின், விடுதலையென்பதின்றிக் கடுமை யான உயிரற்ற விதிகளே உளவாயின், நான் இங்கிருக்கும் பொழுதே இன்பத்தை ஏன் நாடுதல் கூடாது? இந்நாட்களிலே மக்கள் நல்லொழுக்கத்திற்குப் பயன் கருதிய ஆதாரம் உண்டு என்று கூறுவதைக் காண்கின்றோம். இந்த ஆதாரந்தான் என்ன? பெருந்தொகையாயினோருக்குப் பெரிய அளவினதாகிய உவகை யைக் கூட்டி வைப்பதே ஒழுக்கத்துக்கு ஆதாரமாகும் என்பர். நான் ஏன் அப்படிச் செய்யவேண்டும்? எனக்குப் பயன் தருவ தாயின், பெருந்தொகையினருக்குப் பெரிய துன்பத்தை நானேன் வருவித்தல் கூடாது? பயன் கருதிப் பேசுவோர் இந்த வினவுக்கு என்ன விடையளிக்கப் போகின்றனர்? தக்கது எது, பிழை எதுவென நீங்கள் எப்படி அறிவீர்கள்? "மகிழ்ச்சியைப் பெறும் விழைவினாலே உந்தப்பட்டு, நான் ஒரு காரியத்தை நிறைவேற்று கிறேன்; எனக்கு அதற்கப்பால் ஒன்றும் தெரியாது. நான் என் விருப்பங்களை நிறைவேற்றல் வேண்டும்; நீ எதற்காக முறையிடு கிறாய்?'' என்று சொல்வோருக்கு என்ன மறுமொழி கூறலாம்? மனித வாழ்க்கையைப் பற்றியும், நல்லொழுக்கத்தைப் பற்றியும், அழியாத ஆன்மாவைப் பற்றியும், கடவுளைப் பற்றியும், அன்பு இரக்கத்தைப் பற்றியும், நன்மையைப் பற்றியும், யாவற்றினும் மேலாகத் தன்னல மறுப்பினைப் பற்றியும் உள்ள உண்மைகள் எங்கிருந்து வருகின்றன?

எல்லா ஒழுக்க நூல்களும், மனிதனுடைய தொழில்களும், எண்ணங்களும் தன்னல மறுப்பு என்னும் கொள்கையைப் பற்றி நிற்கின்றன. மனித வாழ்க்கையின் கருத்தனைத்தும் தன்னல மறுப்பு என்னும் ஒரு மொழியிலே அடங்கும். நாமேன் தன்னல மற்றிருக்க வேண்டும்? தன்னல மறுப்புக்குத் தேவை எங்குளது? தன்னலமற்றிருப்பதற்கான வல்லமையும் ஆற்றலும் எங்கிருக் கின்றன? பயன் கருதிய அறிவுள்ள மனிதர்களாகிய நீங்கள் பயன் கருதுவதற்கு ஒரு காரணம் காட்டாவிடில், நீங்கள் தருக்க அறிவு வழியில் நிற்கவில்லையென்று நான் சொல்லுவேன். நானேன் சுயநலம் பாராட்டுதல் கூடாது என்பதைத் தருக்க வழி யாகக் காட்டுக. தன்னலமற்றிருக்கும்படி சொல்லுவது கவிச்சுவை

போலப் பொலிவுற்றிருக்கலாம். ஆனால், கவிச்சுவை தருக்க முறையன்று. எனக்கு ஒரு தருக்க முறையைக் காட்டுக. நானேன் தன்னலமற்றிருக்க வேண்டும்? ஏன் நல்லவனாயிருக்க வேண்டும்? யாரோ ஒருவர் சொல்லுகிறாரென்பதை நான் பொருட்படுத்த மாட்டேன். தன்னலமற்றிருப்பதனால் எய்துகின்ற இன்பமென்ன? சுகமென்பது மிகுதியாய் அடையக் கூடிய உவகையென்றால், சுய நலத்தைக் கோருவதே சுகமாகும்; இதற்கு என்ன மறுமொழி? தன்னலவாதி இதற்கு மறுமொழி சொல்லமாட்டான். இந்த உலக மானது அகண்டாகாரமாகிய பெருவெளியிலே ஒரு துளி போன்று இருக்கின்றது; எல்லையற்று நீண்ட சங்கிலியிலே ஒரு கண் போன்று இருக்கின்றது. தன்னலமறுப்பைப் போதித்த மக்கள் இந்தக் கருத்தை எங்கிருந்து பெற்றார்கள்? இது இயற்கை அறிவினால் வந்ததன்று; இயற்கையறிவுள்ள விலங்குகள் இதனை அறியாதிருக்கின்றன. இது தருக்க அறிவாலும் வந்ததன்று; இந்த எண்ணங்களைப் பற்றித் தருக்க அறிவு ஒன்றும் அறியாது. அப்படியாயின், இவை எங்கிருந்து வந்தன?

சரித்திரத்தை ஆராய்ந்து படிக்கும்பொழுது, உலகத்திலே சமய போதனை செய்த பெரிய ஆசிரியர் அனைவருக்கும் பொதுவாய் அமைந்து கிடந்த ஓர் உண்மையைக் காண்கின்றோம். தாம் கண்ட உண்மைகளெல்லாம் தருக்க அறிவுக்குப் புறம்பேயிருந்து வந்தனவென்று அவர் அனைவரும் கூறுகின்றனர். ஆனால், எங்கிருந்து வந்தன என்பதைப்பற்றி அவருட்பலர் அறியார். சான்றாக, அவருள் ஒருவர், சிறகுகளோடு கூடிய தேவதூதனொருவன் மனித வடிவத்தோடு இறங்கி வந்து, "ஓ மனிதனே, இந்தச் செய்தியைக் கேட்பாயாக!" என்று தமக்குச் சொன்னதாகச் சொல்லுகின்றார். மற்றொருவர், ஒளி பொருந்திய தேவனொருவன் கண் முன்னே தோன்றியதாகக் கூறுகின்றார். மூன்றாமவர் ஒருவர், தம் குலத்து முன்னோன் ஒருவன் கனவிலே தோன்றிச் சில விஷயம் சொன்னதாக இயம்புகின்றார்; அதற்கப்பால் அவர் ஒன்றுமறியார். ஆயினும், தருக்க அறிவு வழியாலன்று; தருக்க அறிவுக்கு அப்பாலாகிய ஓர் இடத்திலிருந்து இந்த அறிவு வந்ததென அனைவரும் ஒருமித்துக் கூறுகின்றனர். யோக சாத்திரம் என்ன சொல்கின்றது? இந்த மேலாகிய அறிவு முழுவதும் தருக்க அறிவுக்கும் புறம்பானதென்பது உண்மையே. ஆயினும், இது அவர்கள் உள்ளத்திலிருந்தே உதித்தது என யோக நூல் கூறுகின்றது.

தருக்க அறிவுக்கு அப்பாலாகிய உணர்வு கடந்த நிலை

யொன்று மனத்திற்கு உரிய உயர்ந்த நிலையாய் அமைந்திருக்கிற தென்று யோகி கூறுகிருன். மனமானது இந்த உயர்ந்த நிலையை அடையும் பொழுது தருக்க அறிவுக்கு அப்பாலாகிய இந்த அறிவு மனிதனுக்கு வருகிறது. புலன் கடந்த மிக உயர்ந்த அறிவு அப்பொழுது மனிதனுக்குத் தோன்றுகிறது. தருக்க அறிவுக்கு அப்பாற் சென்று, பொதுவாக மனித இயற்கையைக் கடந்து நிற்கும் இந்த நிலை, இதனுடைய தத்துவத்தையறியாத மனிதனுக்கும் இதற்காகக் காத்து நாடாத முறையில் வந்து எய்தலாம். தற்செயலாக இது தனக்கு எய்தும்பொழுது, வெளியிலிருந்து வருவதாக அவன் தீர்மானிக்கிருன். உணர்வினுக்கு அப்பாலாகி நின்ற மெய்ப்பொருளறிவு வேறுபட்ட நாடுகளிலே ஒன்ருகியிருப்பினும், ஒரு நாட்டில் தேவதூதன் வழியாகவும், மற்ருேரிடத்தில் ஒரு தேவன் வழியாகவும், பின்னுமோரிடத்தில் கடவுள் வழியாகவும் வந்ததாகக் கருதப்படுவது எதனுல் என்பதை இது விளக்குகின்றது. இவற்றின் கருத்து என்ன? அந்த அறிவினை மனமானது தன்னியற்கையிலே கண்டறிந்ததென்றும், அங்ஙனங் கண்ட அறிவினை வேறு வேருகிய மக்கள் தங்கள் நம்பிக்கைக்கும் கல்வி நிலைக்கும் இயைவாக வழங்கினுர்களென்றும் அறிய வேண்டும். உணர்வுக்கு அப்பாலாகிய உயர்நிலையினை இந்த மனிதர்கள் இதற்காகக் காத்து நாடாத முறையில் அடைந்து விட்டார்களென்பதே உண்மையாகும்.

இந்த நிலையிலே காத்து நாடாத முறையில் தவறி விழுவதிற் பெரிய கேடு உண்டு என்று யோகி சொல்லுகிருன். மூளை நிலை குலைந்து போதல் கூடும். எவ்வளவு பெரியவராய் இருப்பினும், இந்தச் சமாதி நிலையை உள்ளவாறு உணராது இதனை அடைந்தோர், இருளிலே அலைந்து தம் ஞானத்தோடு சில புதிய மூடக் கொள்கைகளையும் வெளிப்படுத்தினர்; பகற்கனவுகளுக்குப் பாத்திரர் ஆயினர். முகம்மது நபி என்பவர், தேவதூதனை காபிரியேல் தம்மிடத்து ஒரு மலைக் குகைக்கு வந்ததாகவும், "ஹெருக்கு" என்னும் வான நாட்டுக் குதிரையின்மீது தாம் ஏறிச் சென்று சுவர்க்கத்தைக் கண்டதாகவும் சொன்னுர். இவற்ருேடு முகம்மது நபி அற்புதமான உண்மைகளையும் வெளிப்படுத்தினுர். "குர்ஆன்" என்னும் நூலைப் படித்துப் பார்ப்பீர்களானுல், அற்புதமான உண்மைகளும் மூடக் கொள்கைகளுங் கலந்திருக்கக் காண்பீர்கள். இதற்குக் காரணம் என்ன? அந்த மனிதர் தெய்வத்தினுல் ஆவேசிக்கப்பட்டிருந்தார். ஆயினும், அந்த நிலையை அறிவின்றி அடைந்துவிட்டார். அவர் பயிற்சி

அடைந்த யோகியல்லர். அவர் தாம் செய்வதன் காரணத்தை அறிந்துகொள்ளவில்லை. முகம்மது உலகத்திற்குச் செய்த நன்மை எவ்வளவு என்று நினைத்துப் பாருங்கள். அவருடைய பிடிவாதத்தினாலே விளைந்த தீமை எவ்வளவு என்றும் உன்னிப் பாருங்கள்! அவருடைய போதனையினாலே கொல்லப்பட்ட இலட்சக்கணக்கான மக்களை எண்ணிப் பாருங்கள். தாய்மார் தம் புதல்வரை இழக்க, புதல்வர் அநாதையராக, நாடு முழுவதும் அழிய, பத்து இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள்.

முகம்மது போன்ற பெரிய ஆசாரியர்களுடைய வாழ்க்கையை ஆராய்வதனால், இந்தக் கேட்டினை நாம் உணர்கின்றோம். அங்ஙனமாயினும், அவர்கள் ஆவேசிக்கப்பட்டிருந்தார்கள் எனவும் காண்கின்றோம். ஒரு தீர்க்கதரிசி உணர்ச்சியோடு இயைந்த மனோபாவத்தை அதிகரிக்கச் செய்து சமாதி நிலையை அடையும்பொழுது, அவன் சில உண்மைகளை மாத்திரமன்றிச் சில மூடக்கொள்கைகளையுங் கொண்டு வருகின்றான். அவனது போதனையின் பெருமை உலகிற்கு உதவி செய்வது போல, மூடக்கொள்கை கெடுதியை விளைக்கின்றது. மனித வாழ்க்கையென்று நாம் சொல்லும் பொருத்தமில்லாத கொள்கைகள் நிரம்பிய குப்பையிலிருந்து அறிவைப் பெறவேண்டுமானால், நாம் அறிவையும் கடந்து செல்ல வேண்டும். அதிலும், அதனை ஒழுங்கான பயிற்சியினாலே படிப்படியாகச் சாத்திரியமாகப் பெறவேண்டும். எல்லா மூடக்கொள்கைகளையும் அகற்றிவிட வேண்டும். மற்ற எந்தச் சாத்திரத்தையும் ஆராய்கின்ற முறையின்படியே இந்தச் சமாதி நிலையையும் ஆராய்தல் வேண்டும். அறிவிலே அடிகோல வேண்டும்; அறிவு எவ்வளவுக்குக் கொண்டு செல்கின்றதோ, அவ்வளவுக்குப் போக வேண்டும். அறிவுக்கு வலியற்றபோது உயர்நிலைக்குச் செல்லுகின்ற பாதையை அறிவே நமக்குக் காட்டிவைக்கும். ஒரு மனிதன் தான் அருள்பெற்றவன் எனக்கூறி அறிவில்லாமல் பேசினால், அவனுடைய வார்த்தையை உடனே தள்ளிவிடுக. ஏன்? இயற்கை அறிவு, தருக்க அறிவு, சமாதி என்னும் மூன்றும் உணர்வற்ற, உணர்வோடு கூடிய, உணர்வினைக் கடந்த நிலைகளாக ஒரே மனத்தோடு பொருந்தி இருக்கின்றன. ஒரு மனிதனிடத்தில் மூன்று மனங்களில்லை. ஒரு நிலை மற்றொரு நிலையாக வளர்ச்சி அடைகிறது; இயற்கை அறிவு தருக்க அறிவாகவும், தருக்க அறிவு சமாதியாகவும் முதிர்ச்சி அடைகின்றன. ஆதலாலே, ஒரு நிலை மற்றொன்றினை எதிர்த்து நில்லாது. உண்மையிலே தெய்வத்தின் வழிப்பட்டோர் தருக்க

அறிவை எதிர்க்காது அதனை நிறைவேற்றுகின்றனர். "அழிப்பதற்கன்று; முற்றுப் பெறுவிப்பதற்கு நான் வந்தேன்," என்று பெரிய தீர்க்கதரிசிகள் சொல்லுவது போலத் தெய்விக அருளும் அறிவை நிறைவேற்றத் தோன்றி அதனோடு சமரசப்பட்டு நிற்கும்.

யோகத்திலுள்ள எல்லாப்படிகளும் சாத்திரிய முறையாகச் சமாதி நிலையை அடைவிப்பதற்கு ஏற்பட்டிருக்கின்றன. மேலும், பழைய காலத்தில் இருந்த தீர்க்கதரிசிகள் அருள் ஞானம் பெற்றது போல ஒவ்வொரு மனிதனும் பெறுதல் கூடுமென்பது நாம் அறிய வேண்டிய இன்றியமையாத குறிப்பு. இந்தத் தீர்க்கதரிசிகள் நூதனமானவர்கள் அல்லர். இவர்களும் நம்மைப் போன்ற மனிதர்களே. இவர்கள் பெரிய யோகிகளாய் இருந்தார்கள்; இந்தச் சமாதி நிலையை அடைந்தார்கள். நானும் நீங்களும் இந்த நிலையை அடைதல் கூடும். இவர்கள் விசேஷ மனிதர்களல்லர். ஒரு மனிதன் அந்த நிலையை அடைந்தான் என்பது எல்லா மனிதருக்கும் அது கைகூடுமென்பதற்குச் சான்றுகின்றது. கைகூடுமென்பது மாத்திரமன்றி, ஒவ்வொரு மனிதனும் நாளடைவில் அந்த நிலையை அடையவும் வேண்டும். இதுவே சமய ஒழுக்கமுறையின் முடிபு. அனுபவம் ஒன்றே நமக்கு ஆசான். வாழ்நாள் முழுவதும் வீண் பேச்சுப் பேசித் தருக்கம் புரியலாம். ஆயினும், நாமாக அனுபவித்தாலன்றி, உண்மையைச் சிறிதும் உணரமாட்டோம். ஒரு மனிதனுக்குச் சில புத்தகங்களைக் கொடுத்து அவனை அறுவை வைத்தியன் ஆக்கிவிடுதல் முடியாத காரியம். நான் ஒரு நாட்டைப் பார்க்க விரும்பினால் ஒரு நாட்டுப்படத்தை மாத்திரங் காட்டி என் விருப்பத்தை அடக்கிவிடுதல் இயலாது. உண்மை அனுபவம் வேண்டும். பூரணமான அறிவினைப் பெறுவதற்கு நாட்டுப்படங்கள் ஒரு விருப்பை உண்டாக்கிவிடலாம். அதற்கப்பால் அவற்றினால் பயனில்லை. புத்தகங்களைப் பற்றிக்கொண்டு நிற்பது மனிதனுடைய மனத்தினைக் கீழ்மைப்படுத்துகின்றது. ஆண்டவனுடைய ஞானமானது ஏதோ ஒரு புத்தகத்தின் எல்லையினுள்ளே அடங்கியிருப்பது என்று சொல்வதைக்காட்டிலும் பெரிய தெய்வ நிந்தனை உண்டா? கடவுளை எல்லையற்ற ஞானமுடையவரென்று சொல்லுகிற மக்கள் ஒரு சிறு புத்தகத்தின் அட்டையினுள்ளே அவரை அடக்கிவிடப் பார்ப்பது என்ன துணிவு! ஆண்டவனுடைய ஞான முழுவதையும் ஒரு புத்தகத்தினுடைய அட்டையினுள்ளே காணாத காரணத்தினால் எத்தனை கோடி மக்கள் வீணிலே

கொல்லப்பட்டார்கள்! இந்தக் கொலையானது நடந்துகொண்டிருந்தும் உலகம் புத்தக நம்பிக்கையிலே மிகுதியும் கட்டுண்டு கிடக்கின்றது.

சமாதி நிலையைச் சாத்திரிய முறையாக அறிவதற்கு நான் கூறிய இராஜயோகத்தின் வேறு வேருகிய படிகளைக் கடக்க வேண்டும். பிரத்தியாகாரமும் தாரணையும் நிறைவேறிய பின், தியானம் வருகிறது. மனமானது அகத்தோ, புறத்தோ ஓர் இடத்தில் நிலையாயிருக்கப் பயிற்றப்பட்ட பின்பு, அந்த இடத்தை நோக்கி இடையீடின்றி ஓடுகிற ஒரு தன்மை அதற்கு உண்டாகின்றது. இது தியானம் எனப்படும். தியானத்தின் வலிமை வளர்ந்து காட்சியின் புறப்பாகத்தை அகற்றிவிட்டு உட்பொதிந்த பொருளாகிய அகப்பாகத்திலே நிலைபெற்றிருத்தல் சமாதியாகும். தாரணை, தியானம், சமாதியாகிய மூன்றினையும் ஒன்ருகச் 'சம்யமம்' என்பர். அஃதாவது, மனமானது முதலில் ஒரு பொருளைக் குறித்து ஒருவழிப்பட்டு நின்று, அந்த நிலையிலே ஒரு கால எல்லைக்குத் தொடர்ந்து நிற்குமெனில், இடையருத தியானத்தினுலே பொருளாகிய காரியத்திற்குக் காரணமாகிய காட்சியின் அகப்பாகத்திலே நிலைபெறும். அனைத்தும் அத்தகைய மனத்துக்கு வயப்பட்டு நிற்கும் என்பதே.

இந்தத் தியானநிலை வாழ்க்கையிலே மிக உயர்ந்தது. விருப்பம் இருக்கும் வரையில் உண்மையான இன்பம் எய்த மாட்டாது. தியானத்திலே நிலைபெற்றவர்கள், பொருள்களைச் சாட்சிபோல ஆராய்ந்து நோக்குவதனுல், உண்மையின்பத்தைப் பெறுகிருர்கள். விலங்குக்குப் புலன்களிலும், மனிதனுக்கு அறிவிலும், தேவருக்கு ஆன்மிகத் தியானத்திலும் உவகையுண்டு. இத்தகைய தியான நிலையை அடைந்த ஆன்மாவுக்கு உலகம் உண்மையிலே அழகிய இடமாகின்றது. ஒன்றினையும் விழையாது, ஒன்றிேடும் கலந்து கொள்ளாது வாழ்பவனுக்கு, இயற்கையிலே உண்டாகிற பல வேறு மாறுதல்கள், நிறைந்த அழகுந் தெய்விக அமைப்பும் உடையனவாய்க் காணப்படும்.

தியானத்திலே பின்வரும் கருத்துகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்: ஓர் ஒலி நம் செவியில் விழுகிறது. முதலிலே, வெளியேயுள்ள நாதவியக்கம் உளது. இரண்டாவதாக, அதனை மனத்திலே சேர்ப்பிக்கும் நரம்பின் இயக்கம் உளது. மூன்ருவதாக, மனத்தின் எதிர்ச் செயல் உளது. நாதவியக்கம் முதல், மனத்தின் எதிர்ச் செயல் இறுதியாக உள்ள இந்த வேறுபாடுகளுக்கு வெளிக்காரணமாகிய பொருளைப்பற்றிய அறிவு மனத்

திலே உண்டாகிறது. இந்த மூன்றும் யோக சாத்திரத்திலே சத்தம் (ஒலி), அருத்தம் (கருத்து), ஞானம் (அறிவு) எனப்படுவன. உடல்நூற்குறியீட்டிலே இவை முறையே ஆகாய இயக்கம், நரம்பிலும் மூளையிலுமுள்ள இயக்கம், மனத்தின் எதிர்ச்செயல் எனப்படுவன. இவை மூன்றும் வேறுபட்ட செயல்களாய் இருந்தாலும், தெளிவின்றி ஒன்று கூடிக் கலந்துவிட்டன. உண்மையிலே இவற்றை நாம் தனியாகக் காண்பதில்லை. இவை ஒன்று கூடிய காரியத்தினையே காண்கின்றோம்; இதையே புறப்பொருளென வழங்குகின்றோம். காட்சி ஒவ்வொன்றிலும் இந்த மூன்றும் இருக்கின்றன. இவற்றை ஏன் வேறுபடுத்திக் காணக் கூடாதென்பதற்கு ஒரு வகைக் காரணமும் சொல்லுதல் இயலாது.

முற்கூறிய ஆயத்தங்களினாலே மனமானது வலுவடைந்து வயப்பட்டு நிற்கும் பொழுது நுண்ணிய காட்சிகளைக் காணும் ஆற்றலுடையதாகின்றது. அப்பொழுது மனத்தைத் தியானத்திலே செலுத்த வேண்டும். இந்தத் தியானம் பருப்பொருள்களிலே தொடங்கி வரவர நுண்ணியதாகி, ஈற்றிலே பொருளற்றதாக இருத்தல் வேண்டும். உணர்ச்சிகளின் புறக்காரணங்களைக் காண்பதிலே மனத்தை முதலிலே செலுத்த வேண்டும். அதன் பின் அகத்தேயுள்ள இயக்கங்களையும், அதன் பின் மனத்தினது எதிர்ச் செயலையும் கருதி நோக்க வேண்டும். புலனுணர்ச்சிக்கு ஏற்பட்ட வெளிக் காரணங்களைப் பிரித்துக் காணும் வல்லமை மனத்துக்கு உண்டானால், மனமானது நுண்ணிய உடல்களையும் உருவங்களையும் காணும் வல்லமையைப் பெறும். அகத்தேயுள்ள இயக்கங்களைப் பிரித்துக் காணும் வல்லமையைப் பெற்றால் தன்னிடத்திலும் பிறரிடத்திலுமுள்ள மானத அலைகள் சடப்பொருள் வலிமையாக மாறுவதற்கு முன்பு அவற்றையறிந்து அடக்கியாளும் ஆற்றலைப் பெறும். மனத்தின் எதிர்ச்செயலைக் கண்டுணர்ந்த யோகியானவன், யாவற்றினையும் அறிவான். புலப்படுகின்ற பொருளனைத்தும், எண்ணங்களனைத்தும், இந்த எதிர்த்தாக்கலின் பயனாயிருக்கின்றன. இதனையறிந்த யோகி, தனது மனத்தின் அடிப்படையைக் கண்டவனாவான். அது அவனுக்குப் பூரணமாக வயப்பட்டு நிற்கும். யோகிக்குப் பல வகையான சித்திகள் கைகூடும். ஆனால், அவற்றில் உளத்தைச் செலுத்துவானாயின், முன்னேற்றத்திற்குரிய நெறி தடைபட்டுவிடும். புலன் நுகர்ச்சிப் பொருள்களின் பின்னே ஓடுதலினால் விளையும் கெடுதி அத்தகையது. இந்த அற்புத சித்திகளையும் அகற்றிவிடுகின்ற வலிமை அவனுக்கு இருக்குமாயின், மனக்கடலிலுள்ள அலைகளை முற்றி

லும் அழித்துவிடுகின்ற யோகம் அவனுக்குக் கைகூடும். மனத்தின் அலைவுகளினாலே நிலைகுலையாது, உடலின் அசைவுகளினாலே கவரப்படாது, நிலைபெற்றிருக்கும் ஆன்மா தனது பூரண விளக்கத்தோடு ஒளிவிடும். யோகி, தான் அறிவு நீர்மையாய், அமிர்தத்துவத்தோடு கூடி, எங்கும் வியாபித்து இருப்பதை, எப்பொழுதுமே இருந்து வந்துள்ள தன்மையை, அப்பொழுது அறிவான்.

சமாதி எல்லா மானிடருக்கும் உரியது; விலங்கினங்களுக்கும் உரியது. கீழாகிய விலங்கிலிருந்து உயர்ந்த தேவர் வரையும், அனைவரும் ஒரு காலத்திலே அந்த நிலையை அடைய வேண்டியவரே. அப்பொழுதுதான் அவர்களுக்கு உண்மைச் சமய ஒழுக்க நெறி தொடங்கும். அது வரையும் அந்த நிலையை அடைவதற்கு முயல வேண்டும். அனுபவத்தை அடையாதிருக்கும் வரையும், சமயத்தைக் கொள்பவர்களுக்கும் சமயமில்லாதிருப்பவர்களுக்கும் வேறுபாடு இல்லை. இத்தகைய அனுபவத்தைக் கொண்டு வருவதன்றித் தியானத்தினால் விளையும் நன்மை வேறு யாது? சமாதியடைவதற்கு உரிய ஒவ்வொரு படியும் தெளிவாக ஆராயப் பட்டுச் செவ்விதின் அமைக்கப்பட்டுச் சாத்திரிய முறையாயிருக்கிறது. இவற்றை உண்மையோடு பயின்றால் கருதிய முடிவைத் திண்ணமாக அடையலாம். அப்பொழுது எல்லாத் துன்பங்களும் நின்றுவிடும். எல்லாக் கவலைகளும் அகன்றுவிடும். கருமத்துக்குரிய வித்துகள் எரிந்துபோம். ஆன்மா என்றென்றும் விடுதலையடைந்திருக்கும்.

## 8. இராஜ யோக சங்கிரகம்

இதன்கீழ்க் காணப்படும் இராஜ யோகச் சுருக்கம் கூர்ம புராணத்தை ஒட்டி மொழிபெயர்க்கப்பட்டது.

யோகக் கனல் மனிதனைச் சூழ இருக்கின்ற பாவமென்னும் கூட்டை எரித்துவிடுகின்றது. அறிவு பரிசுத்தமடைய, நிர்வாணம் நேரிலே கிடைக்கின்றது. யோகத்திலிருந்து அறிவு உண்டாகிறது. அறிவு யோகத்துக்கு உதவியாயிருக்கிறது. யோகத்தையும் அறிவையும் எவனொருவன் தன்னிடத்தே ஒன்றுபடுத்துகின்றானோ, அவனை ஆண்டவன் விரும்புகின்றான். மகா யோகத்தைத் தினம் ஒரு முறையாவது, இரு முறையாவது, மும்முறையாவது, இடைவிடாமலாவது யார் பயில்கின்றார்களோ, அவர்கள் தேவர்கள் என்பதை அறிய வேண்டும். யோகம் இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று அபாவம் எனப்படும்; மற்றையது மகாயோகமெனப்படும். ஒருவன் தனது ஆன்மாவைக் குணமற்ற சூனியமாகத் தியானிப்பது அபாவமாகும். ஆன்மாவானது எல்லா அழுக்குகளினின்றும் நீங்கி ஆனந்தம் நிறைந்து கடவுளோடு ஒன்றாயிருப்பதைக் காண்பது மகா யோகமாகும். இவற்றுள் ஒவ்வொன்றினாலும் யோகி ஆன்மாவை அடைகின்றான். யோகியானவன் தன்னையும் பிரபஞ்ச மனைத்தினையும் கடவுளாகக் காண்கின்ற மிகச் சிறந்த மகா யோகத்துக்கு, நாம் படித்தும் கேட்டுமறிகின்ற ஏனைய யோகங்கள் இணையாகமாட்டா. இதுவே எல்லா யோகங்களிலும் மிக உயர்ந்தது.

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன இராஜயோகத்தின் படிகள். இவற்றுள்ளே உயிர்க்கின்னா செய்யாமை, உண்மையுரைத்தல், பிறர் பொருளை விழையாமை, பிரம்மசரியம், பிறனிடத்திலிருந்து ஒரு பொருளையும் பெறாமை ஆகிய இயமம் சித்த சுத்தியை உண்டாக்கும். உளம், உரை, செயல்—இவைகளினாலே பிராணிகளுக்குத் துன்பம் விளைவிக்காதிருத்தல், உயிர்க்கின்னா செய்யாமை (அஹிம்சை) எனப்படும். அஹிம்சையிலும் சிறந்த தருமம் வேறொன்றில்லை. எல்லா உயிர் வாழ்பவைகளுக்கும் தீங்கு விளையாதிருக்கின்ற தன்மையினாலே மனிதன் அடையும் இன்பத்திலும் மிக்கது ஒன்றுமில்லை. உண்மையினாலே கரும பலன்களை அடைகிறோம்; உண்மையிலே யாவும் நிலைபெற்றிருக்கின்றன. உள்ளதை உள்ளபடி சொல்லுதல் உண்மையாகும். வற்புறுத்தியோ, களவாகவோ,

பிறருடைய பொருளைக் கவராதிருத்தல், பிறர் பொருளை விழை யாமை (அஸ்தேயம்) எனப்படும். எப்பொழுதும், எல்லா நிலைமை யிலும், மனம் வாக்குக் காயங்களிலே ஒழுக்கந் தவருதிருத்தல் பிரம்மசரியம் எனப்படும். மிகவுங் கடினமாகத் துன்புறும் பொழுதும், பிறருடைய கொடையைப் பெருதிருத்தல் 'அபரிக் கிரகம்' எனப்படும். ஒரு மனிதன் பிறனொருவனிடமிருந்து ஒரு கொடையைப் பெறும்பொழுது அவனுடைய இதயம் அசுத்த மாகிக் கீழ்மையடைகின்றது. அவன் தன் சுதந்திரத்தை இழந்து கட்டுண்டவனாகிறான். ஒழுங்கான பழக்கங்கள், நன்னடை என்ப வற்றோடு கூடிய நியமம், தவம், கல்வி, மகிழ்ச்சி, தூய்மை, தெய்வ வழிபாடு என்னும் இவை யோகானுகூலத்துக்கு உதவி யாவன. உணவொழித்திருத்தல் முதலியவற்றால் உடலினை அடக்குதல் தவமெனப்படும்.

உடலிலுள்ள சத்துவபாகம் சுத்தமடையும்படி வேதங்களை யும் மந்திரங்களையும் உச்சரித்தல் ஸ்வாத்தியாயம் (கல்வி) எனப் படும். மந்திரங்களை உச்சரிப்பது மூன்று வகைப்படும். ஒன்று வாக்கினால் நிகழ்வது; மற்றது இடைப்பட்ட தன்மையது; மூன்ரு வது மனத்திலே நிகழ்வது. புறத்தே கேட்க உச்சரிப்பது தாழ்ந் தது. மனத்திலே உச்சரிப்பது மிக உயர்ந்தது. இடைப்பட்டதிலே உதடுகள் அசையினும் ஒலி புறத்தே கேட்பதில்லை. மனத்திலே உச்சரித்து மந்திரத்தினது பொருளையுஞ் சிந்தித்தல் 'மானத உச்சாரணை' எனப்படும். இதுவே மிக உயர்ந்தது. புறத்தூய்மை அகத்தூய்மையென இரு வகைத் தூய்மை உண்டென்று அறிஞர் கூறியிருக்கின்றனர். நீராடுதல் முதலான நீர் மண் முதலியவற் றினால் உடலைச் சுத்தி செய்தல் புறத்தூய்மையாகும். உண்மை முதலிய அறங்களால் உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துதல் அகத் தூய்மையாகும். இரண்டும் இன்றியமையாதன. ஒரு மனிதன் அகத்தூய்மையோடு கூடிப் புறத்தே அழுக்குடையவனாயிருத்தல் சாலாது. இரண்டும் பெற முடியாதிருந்தால், அகத்தூய்மையை மாத்திரமாவது நாடவேண்டும். ஆயினும், இரண்டும் பெருத வன் யோகியாகமாட்டான்.

கடவுளுடைய புகழினைப் பரவுதல், சிந்தித்தல், பத்தி பண்ணுதல் என்னுமிவற்றால் கடவுளை வழிபடுதல் வேண்டும். இயமம் நியமம் என்னுமிரண்டினையும் பற்றிப் பேசினேன். அடுத்து வருவது ஆசனம்: மார்பு, புயம், தலை என்னும் இவற்றை நேராக நிறுத்தி உடலினைத் துன்பின்றி வைக்க வேண்டும் என்பதை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

அதற்கு அடுத்தது பிராணாயாமம். ஒருவனுடைய உடலிலுள்ள உயிர்ச் சத்து, பிராணன் எனப்படும். 'ஆயாமம்' என்பது அதனை அடக்கி ஆளுதல். எளியது, நடுத்தரமானது, உயர்ந்தது என மூவகைப் பிராணாயாமம் உண்டு. நிறைத்தல், நிறுத்துதல், விடுதல் எனப் பிராணாயாமம் மூன்று வகைப்படும். அரை விநாடி (பன்னிரண்டு செக்கண்டு) முதலாக ஆரம்பிப்பது குறைந்த பிராணாயாமம். ஒரு விநாடி (இருபத்து நான்கு செக்கண்டு) முதலாகவுள்ளது நடுத்தரமான பிராணாயாமம். ஒன்றரை விநாடி (முப்பத்தாறு செக்கண்டு) முதலாக உள்ளது உயர்ந்த பிராணாயாமம். குறைந்த பிராணாயாமத்தில் உடலில் வியர்வை உண்டாகும். நடுத்தரமானதில் உடல் நடுங்கும். உயர்ந்ததில் உடல் பாரமற்றிருக்க உள்ளத்திலே பேரானந்தம் நிறையும். 'காயத்திரி' எனப்படுவதொரு மந்திரமுண்டு. அது வேதங்களிலுள்ள மிகத் தூய்மையான மந்திரம். "உலகனைத்தினையும் படைத்த தேவனுடைய ஒளி விளக்கத்தை நாம் தியானிக்கிறோம்; அவன் நமது சிந்தையைத் தெளிவு படுத்துவானாக!" இந்த மந்திரத்துக்கு முதலிலும் கடையிலும் ஓங்காரத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு பிராணாயாமத்தில் மூன்று காயத்திரி உச்சரிக்க வேண்டும். எல்லா நூல்களிலும் பிராணாயாமமானது (வெளியே விடுகின்ற) ரேசகம், (உள்ளிழுக்கின்ற) பூரகம், (நிறுத்தி வைக்கின்ற) கும்பகம் என மூன்று வகையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. புலன்களின் கருவியாகிய இந்திரியங்கள் வெளியே தொழில் செய்து வெளிப் பொருள்களோடு ஒன்றுபட்டிருக்கின்றன. அவற்றை வயப்படுத்துவது தொகுத்தலாகிய பிரத்தியாகாரமெனப்படும்.

மனத்தினை இதயத் தாமரையிலாவது தலையின் நடுவிலாவது நிறுத்தி வைப்பது 'தாரணை' எனப்படும். ஓரிடத்திலிருந்து அவ்விடத்தை அடியாகக் கொண்டு ஒரு வகை மன அலைகள் எழுகின்றன; இவை வேறு வகை அலைகளால் விழுங்கப்பட்டுப் போவதில்லை. படிப்படியாக இவை ஓங்கி வர, மற்ற அலைகள் பின் வாங்கி அழிந்து போகின்றன. அதன் பின் பலவாய் இருந்த அலைகள் ஒன்றாகி, மனத்திலே ஓர் அலை மாத்திரம் எஞ்சியிருக்கின்றது. இது 'தியானம்' எனப்படும். ஆதாரமின்றி மனம் முழுவதும் ஒரே வடிவமாய் நிற்பது 'சமாதி' ஆகும். இடம், நிலையம் இவையின்றி எண்ணத்தின் கருத்து மாத்திரமே அப்பொழுது முன்னிலைப்பட்டிருக்கும். மனத்தை ஒரு நிலையத்தில் பன்னிரண்டு செக்கண்டு (அரை விநாடி) வைத்திருப்பது

ஒரு ‘தாரணை’ ஆகும். பன்னிரண்டு தாரணை ஒரு தியானம். பன்னிரண்டு தியானம் ஒரு சமாதி.

நெருப்பிலும், நீரிலும், உலர்ந்த சருகு கிடக்கும் நிலத்திலும், கறையான் புற்றுகள் இருக்கும் இடத்திலும், காட்டு விலங்குள்ள இடத்திலும், அபாயமுள்ள இடத்திலும், நாற்சந்தியிலும், ஓசை மிகுந்த இடத்திலும், கயவர் அதிகமாயுள்ள இடத்திலும் யோகம் பயிலுதல் கூடாது. இது சிறப்பு வகையாக இந்தியாவுக்குப் பொருந்தும். உடல் சோம்பலுற்றுவது நோயுற்றுவது இருக்கும் பொழுதும், மனம் கவலையுற்றிருக்கும் பொழுதும் பயிலாதீர்கள். மறைவான இடத்திற்குப் போய், மக்கள் கூடாத, அழுக்கற்ற, அழகுக் காட்சியோடு கூடிய இடத்தைத் தேர்ந்துகொள்க. உங்கள் வீட்டில் அழகிய அறையைத் தேர்ந்துகொள்ளுதலும் நல்லது. பயிற்சித் தொடக்கத்தில் முன்பிருந்த யோகிகள் அனைவரையும் உங்கள் குருவையும் கடவுளையும் வழிபட்டுத் தொடங்குவீர்களாக.

இனித் தியானஞ் சொல்லப்படுகிறது: தியானத்திற்கு உரிய சில உதாரணங்களுஞ் சொல்லப்படுகின்றன. நிமிர்ந்திருங்கள்; மூக்கு நுனியைப் பாருங்கள். அது எங்ஙனம் மனத்தை ஒரு வழிப்படுத்துகிறதென்பதைப் பின்பு அறிந்துகொள்வீர்கள். காட்சி நரம்பு இரண்டையும் அடக்குவதனாலே எதிர்ச் செயலுக் குரிய வட்டத்தை வழிப்படுத்தி ஈற்றிலே சித்தத்தை வயப்படுத் தலாம். தியானத்திற்குரிய மாதிரிப் பொருள்கள் சில பின் வருவன: சிரத்தின் உச்சியிலே பல அங்குலங்களுக்கு மேலே தருமத்தைப் பொகுட்டாகவும் ஞானத்தை நாளமாகவுங் கொண்ட ஒரு தாமரை இருப்பதாக நினைக. அத்தாமரையின் எட்டு இதழ் களும் யோகி பெறுதற்குரிய அட்டமா சித்திகள். உள்ளேயிருக் கின்ற அல்லிகள் தியாகம். புறத்தேயிருக்கின்ற சித்திகளை மறுத்துவிடுகின்ற யோகி முத்தியை அடைவான். எனவே, எட்டு இதழ்கள் அட்டமா சித்திகள்; உள்ளேயிருக்கின்ற அல்லிகள் இந்தச் சித்திகளைத் துறந்து விடுகின்ற பெரிய தியாகம். தாமரையினுள்ளே பொற்பிரகாசமாய் சர்வவல்லமையோடு கூடித் தொடுதற்கரியராய், ஓங்காரமென்னும் பெயரினையுடையராய், சொல்லுவதற்கு அரியராய், பேரொளியினாலே சூழப்பட்டிருப் பவரை நினைத்துத் தியானிக்க. பின்னுமொரு தியானஞ் சொல்லப் படுகிறது. உங்கள் இதயத்திலே ஒரு வெளியை நினைக. அந்த வெளியிலே எரிந்துகொண்டிருக்கின்ற ஒரு சுடரை நினைக. அந் தச் சுடரை உங்களுடைய ஆன்மாவாகவும் அந்தச் சுடரினுள்ளே

இருக்கின்ற மற்றோர் ஒளியை உங்களுடைய ஆன்மாவுக்கு ஆன்மாவாகிய கடவுளாகவும் நினைக. உங்கள் இதயத்திலே அதனைத் தியானிக்க. பிரம்மசரியம், அஹிம்ஸை, கொடிய பகைவனையும் மன்னித்தல், உண்மை, கடவுளிடத்து நம்பிக்கை என்னுமிவையெல்லாம் வேறு வேறு விருத்திகளாகும். இவை யெல்லாவற்றிலும் நீங்கள் பூரணமடையவில்லை யென்று அஞ்சா தீர்கள். முயன்று தொழில் செய்க. அப்பொழுது அனைத்துங் கைகூடும். யாவனொருவன் எல்லாப் பற்றினையும் எல்லா அச்சத் தினையும், எல்லா வெகுளியினையும் விட்டொழித்து, ஆன்மா முழு வதையும் ஆண்டவனிடத்துச் செலுத்தி, ஆண்டவனிடத்தே சரணாகதி செய்து இதயம் பரிசுத்தமாய் இருக்கிறானோ, அவன் ஆண்டவனிடத்தில் எந்த விருப்பத்தோடு வந்தாலும், அவர் அதனை அவனுக்கு அளிப்பார். ஆதலாலே, ஆண்டவனை ஞானம், அன்பு, தியாகம் என்னும் இவற்றோடு வழிபடுவீர்களாக.

"எவனொருவன் ஒருவரையும் பகைக்காது, எல்லாரிடத் திலும் நட்புப் பூண்டு, அனைவருக்கும் இரங்கி, தனக்கென்று ஒன்றுமில்லாதவனாய், அகங்காரமற்று, இன்பத்திலும் துன்பத் திலும் பொறுமையுடையவனாய், எப்பொழுதும் திருப்தியுடைய வனாய், யோகத்திலே என்றும் முயல்பவனாய், சித்தவலிமை யுடையவனாய், மனத்தையும் புத்தியையும் எனக்கு அளிக்கிறானோ அவன் எனது அன்பு நிறைந்த பக்தன். அவனே என்னை அன்பினோடு வழிபடுபவன். எவனிடத்திலிருந்து ஒரு வகைக் கலக்கமும் வருவதில்லையோ, எவன் பிறராற் கலக்கமுறாது இருக் கின்றானோ, உவகை, வெகுளி, அச்சம், ஆத்திரம் என்னும் இவை எவனிடத்து இல்லையோ, அவன் எனக்கு இனிமை யானவன். ஒன்றினையும் ஆதாரமாகக் கொள்ளாதவனாய், தூயனாய், சுறுசுறுப்புடையவனாய் அனைத்தினையும் விட்டு, நன்மை வரினுந் தீமை வரினும் பொருட்படுத்தாதிருப்பவன் ஒரு பொழுதும் கவலையடைவதில்லை. இகழிலும் புகழிலும் ஒரு படித் தாய் மௌனமாகிய எண்ணத்தோடுகூடிய சிந்தையனாய்ச் சிறிது பெறினும் உவகையுடன் ஏற்றுக்கொள்பவனாய், மனையில்லாத வனாய், உலகமனைத்தினையுந் தனது மனையாக்கினவனாய், எண் ணங்களிலே வேரூன்றியவனாய் இருப்பவன் யோகியாகிறான்."

நாரதரென்னுந் தேவமுனிவர் ஒருவர் இருந்தார். மனிதருக் குள்ளே பெரிய யோகிகளாகிய முனிவர்களிருப்பது போலத் தேவருக்குள்ளேயும் பெரிய யோகிகள் இருக்கிறார்கள். நாரதர் நல்ல யோகி; மிகவும் பெரியவர். அவர் எங்குஞ் சஞ்சரிப்பார்.

ஒரு நாள் அவரொரு காட்டினூடே போகும் பொழுது ஒரு தவசியைக் கண்டார். நீண்ட காலம் ஓரிடத்தில் இருந்து தியானித்ததனுலே அந்தத் தவசியின் உடலைச் சுற்றிக் கறையான் புற்று எழும்பியிருந்தது. அந்தத் தவசி நாரதரை நோக்கி, "எங்கே போகிறீர்?" என்ருன். அதற்கு நாரதர், "சுவர்க்கத் திற்குப் போகிறேன்," என்ருர். "அப்படியானுல், ஆண்டவர் எனக்கு எப்பொழுது இரங்குவார்? நான் எப்பொழுது முத்தி யடைவேன்? கேட்டு வாரும்," என்ருன். நாரதர் சிறிது தூரம் போய் மற்ருெரு மனிதனைக் கண்டார். அவன் ஆடிப்பாடிக் குதித்துக்கொண்டிருந்தான்; "நாரதரே எங்குப் போகிறீர்?" என்ருன். அவனுடைய குரலுஞ் செயலும் பயித்தியக்காரன் குரலும் செயலும் போன்றிருந்தன. நாரதர், "சுவர்க்கத்திற்குப் போகிறேன்," என்ருர். "அப்படியானுல், நான் எப்பொழுது விடுதலையாவேன்? கேட்டு வாரும்," என்ருன். நாரதர் நடந்து சென்ருர். பின்பு அவர் அந்த வழியாகத் திரும்பி வரும் பொழுது புற்று வளர்ந்த மனிதன், "நாரதரே, என்னைக் குறித்து ஆண்டவரிடங் கேட்டீரா?" என்ருன். நாரதர், "ஆம்" என்ருர். "கடவுள் என்ன சொன்னுர்?" என்ருன். "நீ இன்னும் நாலு பிறவியில் முத்தியடைவாய் என ஆண்டவர் கூறினுர்," என்று நாரதர் சொன்னுர். அதைக் கேட்ட மனிதன் அழுது ஓலமிட்டு, "என்னைச் சுற்றிப் புற்று உண்டாகும் வரையும் நான் தியானித்தேன்; அப்படிச் செய்தும் இன்னும் நாலு பிறவி இருக்கின்றனவே!" என்ருன். நாரதர் மற்ற மனிதனிடம் போனுர். அவன், "என் கேள்வியைக் கேட்டீரா?" என்ருன். "ஆம்; கேட்டேன். அதோ ஒரு புளியமரமிருக்கிறதே, அதில் எத்தனை இலைகள் இருக்கின்றனவோ, அத்தனை முறை பிறந்த பின்பு நீ விடுதலையை அடைவாய்!" என்ருர். அந்த மனிதன் மகிழ்ச்சியால் கூத்தாடி, "இவ்வளவு விரைவாக எனக்கு விடுதலை கிடைக்கப்போகிறதே!" என்ருன். அசரீரியாக ஒரு வாக்கு, "மகனே, இந்தக் கணத்திலே உனக்கு விடுதலையுண்டு," என்றது. அவனது இடைவிடா முயற்சிக்குக் கைம்மாறு கிடைத்தது. எல்லாப் பிறவிகளையும் பிறந்து முயல அவன் சித்தமாயிருந்தான். அவனை ஒன்றும் அதைரியப்படுத்தவில்லை. முதல் மனிதனே, நான்கு பிறவியே அதிகமென்று எண்ணினுன்; மேலானபயனை அடைவதற்குப் பல யுகங்களாயினுங் காத்திருக்க விரும்பிய மற்றவனைப் போன்ற கடைப்பிடியுடையவனே மிக உயர்ந்த நன்மையை அடைவான்.

# பதஞ்சலி யோக சூத்திரம்

## தோற்றுவாய்

யோக சூத்திரங்களைத் தொடங்குவதற்கு முன்னர் யோகிக ளுடைய சமயக் கொள்கை அனைத்தினுக்கும் ஆதாரமா யிருக்கின்ற ஒரு பெரிய முடிவினை ஆராய முயலுவோம்: நாம் இப்பொழுது வாழ்கின்ற அளவுபட்ட நிலைக்கு அப்பாலாகி யிருக்கின்ற அளவு கடந்த பூரண நிலை ஒன்று உண்டு என்றும், அந்தப் பூரண நிலையிலிருந்து நாம் தோன்றினேமென்றும், மீட்டும் அந்தப் பூரண நிலையை அடைவோமென்றும் சொல்லுகிற முடிபு ஒன்று உண்டு. இஃது உலகிலுள்ள ஆற்றல் வாய்ந்த பெரியோர்களது ஒருமித்த துணிபாகக் காணப்படுகிறது. இது பூத தத்துவ ஆராய்ச்சியினாலும் ஒருவாறு நிரூபிக்கப்படு கின்றது. இதனை நாம் ஏற்றுக் கொள்ளுமிடத்து, 'பூரண நிலை யும் இப்பொழுது உள்ள நிலையும் ஆகிய இரண்டிலும் எது சிறந்தது?' என்னும் வினா எழுகின்றது. தோற்றத்தோடு கூடிய இந்த நிலை மனிதனால் எய்துதற்குரிய மிக உயர்ந்த நிலையென எண்ணுகின்ற மக்களும் உள்ளார்கள். பேதமற்ற ஒரு பொருளி னின்றும் நாம் தோன்றினேமென்றும், இப்பொழுது அடைந் துள்ள பேதத்தோடு கூடிய நிலை உயர்வுடையது என்றும் புத்திக் கூர்மையுடையோர் பலர் கருதுகின்றனர். பேதமற்ற பூரண நிலை குணங்களோடு கூடாததாதலாலே, அது உணர்வற்ற, உயி ரற்ற, வெறுமையான நிலையாகும் எனக்கொண்டு, இந்த வாழ்வு இன்ப நுகர்ச்சிக்கே உரியது எனவும், ஆதலால், இதனையே பற்றி நிற்கவேண்டுமென்றும் அத்தகையோர் கருதுகின்றனர்.

முதலிலே இந்த வாழ்வைப் பற்றிய ஏனைய விளக்கங்களை நாம் ஆராய வேண்டும். மரணத்தின் பின் மனிதன் முன் னிருந்தபடியே இருப்பானென்றும், தீய பாகம் போய்விட, நல்ல பாகம் என்றும் இருக்குமென்றும் கூறுகிற பழைய விளக்கம் ஒன்று உண்டு. தருக்க முறையாகச் சொல்லுமிடத்து, மனித னுடைய இலக்கு இவ்வுலகமே என்றும், இதினின்றும் ஒரு படி உயர்ந்து தீமை விரவாதிருப்பது சுவர்க்க பூமி என்றும் ஒரு சாரார் கருதுவதாகக் கொள்ள வேண்டும். இந்தக் கொள்கையை நேர் முகமாக நோக்குமிடத்து, இது சிறுபிள்ளைத்தனமான

வெறுங்கொள்கை என்பது வெளிப்படையாகின்றது. தீமையின்றி நன்மை இருக்க முடியாது; நன்மையின்றித் தீமையும் இருக்க முடியாது. எல்லாம் நன்மையாகித் தீமையின்றி இருக்கின்ற ஓர் உலகத்தில் வாழ்வதென்ருல், அது வடமொழித் தருக்க வல்லுநர் கூறுகிற 'ஆகாயக் கோட்டை'யேயாகும். இக்காலத்திலே பல திறப்பட்டோராற் கொள்ளப்படுகிற மற்றுமொரு கொள்கையுண்டு. அஃதாவது, மனிதன் என்றும் திருத்தம் அடைவதற்கு உரியவனுக மேனேக்கிச் செல்வான் என்றும், அவன் அடைவதற்குரிய எல்லேயென்பது ஒன்று இல்லே என்றும் கொள்வதாகும். இக்கொள்கை வெளித்தோற்றத்துக்கு மிகவும் நல்லது போலக் காணப்படினும், உண்மையில் பொருந்தாத கொள்கையாயிருக்கின்றது. ஏனெனில், நேர்க்கோட்டிலே செல்லுகிற இயக்கம் என்பது ஒன்று இல்லே. இயக்கம் அனேத்தும் வட்டவடிவாயிருக்கின்றன. ஒரு கல்லினே எடுத்து விசும்பில் எறிந்துவிட்டு வேண்டிய காலம் பொறுத்திருந்தால், அக்கல் யாதொன்றினுலும் தடைபடாவிடின், மீட்டும் அது நம் கைக்கு வரும். நேர்க்கோடு எல்லேயற்றுச் செல்லும் பொழுது வட்டமாகி முடியும். மனிதனுடைய கதி என்றும் முன்னேறிச் செல்லுவது என்னும் கொள்கை பொருந்தா நீர்மையது. நாம் எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு வேருயிருப்பினும், அன்பு, பகைமை என்பவற்றின் ஆதார நியாயத்தைப்பற்றி இவ்வெண்ணம் தெளிவுபடுத்துகிறது என்பதை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். மின்சார இயந்திரத்திலிருந்து எழுந்த சத்தியானது சுற்றி வந்து மீண்டும் இயந்திரத்தை அடைதல் போல, அன்பும் பகைமையும் தமது பிறப்பிடத்திற்கு வரவேண்டுவன. ஆதலினுல், ஒருவரையும் பகைக்க வேண்டா. ஏனெனில், அப்பகைமையானது உங்களிடமிருந்து எழுந்து நாளடைவில் மீட்டும் உங்களிடமே வரும். நீங்கள் அன்பு காட்டினுல் அந்த அன்பும் செல்லவேண்டிய சுற்றுப் பாதையை முடித்து, மீட்டும் உங்களிடமே வரும். மனிதனுடைய இதயத்திலிருந்து எழுகின்ற பகைமை எண்ணம் ஒவ்வொன்றும், நிறைந்த வலிமையோடு மீட்டும் அவனிடம் வருகின்றது. இங்ஙனம் வருதலே ஒன்றும் தடுக்க மாட்டாது. இவ்வண்ணமே, அன்பின் செயல்களும் திரும்பி வருகின்றன. மேலும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உலகப் பொருள்கள் அனேத்தும் அழிந்துபோவதையே இலக்காகக் கொண்டனவாதலினுல், நித்திய முன்னேற்றம் என்னும் கொள்கை இயலாததாகின்றது. நம்முடைய முயற்சிகளும்,

நம்பிக்கைகளும் அச்சங்களும், உவகைகளும் நம்மை எங்குச்
செலுத்துகின்றன? மரணமே நம் அனைவருக்கும் முடிவு. இதைப்
போல நிச்சயமானது ஒன்றும் இல்லை. அப்படியாயின், எல்லை
யற்ற முன்னேற்றம் எனப்படும் நேரான இயக்கம் எங்கு உளது?
அது சிறிது தூரம் போய் மீட்டும் புறப்பட்ட இடத்துக்கே வருவது.
அண்டப் பிழம்பிலேயிருந்து ஞாயிறு, மதி, விண்மீன்கள்
உண்டாகின்றன. அவை அழிவெய்தி, மீட்டும் அண்டப் பிழம்பா
கின்றன. இவ்வண்ணம் யாவற்றிலும் நடைபெறுகின்றது.
தாவரங்கள் மண்ணிலிருந்து தமக்கு வேண்டிய பொருளை
எடுத்துக்கொண்டு மீட்டும் மண்ணாய்விடுகின்றன. உலகிலுள்ள
உருவம் ஒவ்வொன்றும் சூழவிருக்கின்ற அணுக்களிலிருந்து
உருவாக்கப்பட்டு மீட்டும் அவ்வணுக்கள் ஆகின்றன. இந்த
விதி வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வகையாக நிகழ்கிற
தென்று சொல்லுதல் கூடாது. விதி எங்கும் ஒரே வண்ணமாக
நிகழ்வது. இதனைவிடத் திண்ணமானது ஒன்று இல்லை. இஃது
இயற்கையிலுள்ள விதியாயின், மனத்திலுதிக்கின்ற எண்ணத்
துக்கும் இது பொருத்தமுடையதாகும். எண்ணமும் அறி
வெய்தித் தனது பிறப்பிடத்திற்குப் போகும். நாம் விரும்பி
னும், விரும்பாவிடினும் ஆண்டவன் என்றோ, சுத்தப்பிரம்மம்
என்றோ சொல்லப்படுகிற நமது பிறப்பிடத்துக்குப் போயே தீர
வேண்டும். நாம் அனைவரும் கடவுளிடமிருந்து வந்தோம்;
கடவுளிடமே கட்டாயம் போகவேண்டும். அந்தப் பொருளினைக்
கடவுள் என்று சொல்லாது, சுத்தப்பிரம்மம் என்றோ, இயற்கை
என்றோ சொல்லலாம்; ஆயினும், இவ்வுண்மை மாறுபடா
திருக்கும். எவரிடமிருந்து இந்தப் பிரபஞ்சம் தோன்றுகிறதோ,
பிறந்தன அனைத்தும் எவரிடத்து வாழ்கின்றனவோ, அவரிடத்
துக்கு அனைத்தும் மீண்டு செல்லவேண்டுவனவே. இது ஒன்றே
மாறாத உண்மை. இயற்கை ஒரே மாதிரியாகத் தொழில் புரி
கின்றது. ஒரு மண்டலத்திலே நிகழ்வதே பத்து இலட்சம்
மண்டலங்களிலே வேறுபாடின்றி நிகழ்கின்றது. ஏனைய கிரகங்
களில் நீங்கள் காணுகின்ற நிகழ்ச்சி இவ்வுலகுக்கும் மனிதர்
முதலிய அனைத்தினுக்கும் நிகழக்கூடியது. பெரிய அலையானது
பத்து இலட்சக்கணக்கான சிறிய அலைகளினால் ஆகியது. உலக
வாழ்க்கை பத்து இலட்சக்கணக்கான சிறிய உயிர் வாழ்க்கை
களின் கூட்டம். உலகின் மரணமும் பத்து இலட்சக்கணக்கான
சிறிய பிராணிகளின் மரணத்தினது கூட்டமேயாகும்.

'மீண்டும் கடவுளிடம் செல்வது உயர்நிலையா, அன்று?' என்

னும் வினு இப்பொழுது எழுகின்றது. யோக முறையைப் பின்பற்றிய தத்துவ சாத்திரிகள் அது உண்மையாகவே உயர்வுடையது என்று கூறுகிருர்கள். மனிதனது இக்கால நிலை இழிவானது என்பது அவர்களது கருத்து. மனிதன் முதலிலிருந்த நிலையைவிடச் சிறந்திருக்கிருன் என்று சொல்லும் சமயம் ஒன்ருவது இவ்வுலகில் இல்லை. ஆதியிலே அவன் தூயனுயும் பூரணனுயும் இருந்தான் என்பதும், அதன் பின், இழிவடைந்து பின்னும் இழிவடையக் கூடாத நிலை வந்து எய்தியதனுல், மேனேக்கிச் சென்று தான் செல்வதற்குரிய வட்டமாகிய கதியை முடித்து மீட்டும் முதலில் இருந்த இடத்துக்குச் செல்வான் என்பதும், அனைத்துச் சமயங்களினதும் கருத்தாகக் காணப்படுகின்றன. எவ்வளவு தூரம் கீழாகப் போனுலும், இறுதியிலே அவன் மேனேக்கிச் சென்று தனது பிறப்பிடமாகிய கடவுளையே அடையவேண்டும். ஆதியில் மனிதன் கடவுளிடமிருந்து வந்தான் ; நடுவிலே மனிதனுகிருன் ; இறுதியிலே மீட்டும் கடவுளிடம் செல்வான். துவைத வாதத்தின்படி இவ்வண்ணம் சொல்லவேண்டியிருக்கிறது. அத்துவைத வாதத்தின்படி மனிதன் கடவுளாயிருக்கிருன் ; மீண்டும் அவரையே அடைகிருன். நாம் இப்பொழுது இருக்கின்ற நிலை உயர்வுடையதாயிருந்தால், இவ்வளவு அச்சமும் கவலையும் இருக்கவேண்டுவது எதற்கு ? அவை ஏன் நீங்கிப் போகவில்லை ? இந்த நிலை உயர்வுடையதாயிருந்தால், இது ஏன் முடிந்து போகிறது ? சீர் கெட்டு இழிந்து போகின்ற நிலை உயர்நிலையாயிருத்தல் இயலாது. இந்த நிலையானது மக்களுக்கு மன நிறைவைத் தாராது பேய்க்குணம் மேவி இருப்பதேன் ? நாம் உயர் நிலை அடைவதற்கு இதன் மூலம் செல்லுதல் இன்றியமையாதது என்பது ஒன்றுதான் நாம் சொல்லக்கூடியது. ஒரு விதையை நிலத்திலிட்டால், அது அழிந்துபோக, அதினின்றும் சிறந்த மரம் உண்டாகிறது. ஒவ்வோர் ஆன்மாவும் சிதைவுற்றுத்தான் கடவுளாக வேண்டும். ஆதலாலே, 'மானிடம்' என்று சொல்கிற இந்த நிலையிலிருந்து விரைந்து வெளிப்படுவது நமக்கு நலமாகும். இந்த நிலையிலிருந்து வெளிப்படுவதற்குத் தற்கொலை புரிந்துகொள்வதா ? அன்று. அது கேட்டினை விளைக்கும். நம்மை வருத்துவதும், உலகை நிந்திப்பதும் வெளியேறுவதற்குரிய வழிகளல்ல. துன்பம் என்னும் கழிநிலத்தினூடாக நாம் செல்லவேண்டும் ; விரைந்து சென்றுவிடுதல் நல்லது. மனித நிலை மிக உயர்ந்த நிலையன்று என்பதை எப்பொழுதும் நினைத்திருக்கவேண்டும்.

மிக உயர்ந்தது என்று சொல்லப்பட்ட பூரண நிலையானது, சிலர் நினைத்து அஞ்சுவது போலச் சிலை, சிப்பி இவை போன்ற நிலையன்றென அறிந்துகொள்ளுதல் அரிது. சிலர் சொல்லுகிறபடி உள்பொருளின் நிலை இரண்டேயாகும்: ஒன்று, கல்நிலை; மற்றது கருத்து நிலை. உள்பொருளை இவ்விரு நிலையாக மாத்திரம் வரையறுப்பதற்கு அவர்களுக்கு என்ன உரிமையுண்டு? கருத்தறிவினும் மிக உயர்ந்த நிலை ஒன்று இருக்கிறதன்றோ? ஒளியின் இயக்கம் மிகக் குறைந்திருக்கும்பொழுது நாம் அதனைக் காண்பதில்லை. சிறிது மிகும்பொழுது அது ஒளியாகின்றது. இன்னும் வளர்ந்தால் நாம் அதைக் காண்பதில்லை. நமக்கு அது இருளாய்விடுகின்றது. ஈற்றில் வருகின்ற இருள் முதலில் இருந்த இருளோடு ஒற்றுமைப்பட்டதா? நிச்சயமாய் இல்லை. அவை இரண்டு துருவங்கள் போல வேறுபட்டன. கல்லினது எண்ணமற்ற நிலை கடவுளினது எண்ணமற்ற நிலைபோன்றதா? மெய்யாகவே இல்லை. கடவுள் எண்ணுவதில்லை; தருக்கம் புரிவதில்லை. அவர் ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? அவர் தருக்கம் செய்யும் பொருட்டு அவர் அறிந்துகொள்ளாத பொருள் யாது? கல்லினாலே வாதிக்க முடியாது; கடவுள் தருக்கம் புரியவேண்டுவதில்லை. இதுவே வேறுபாடு. தத்துவ ஞானிகளுள் சிலர் எண்ணத்தைக் கடந்து போக அஞ்சுகின்றனர். எண்ணத்துக்கு அப்பால் அவர்கள் ஒன்றையும் காண்பதில்லை.

தருக்கப் போருக்கப்பால் மிகவுயர்ந்த நிலைகள் இருக்கின்றன. சமய வாழ்க்கையின் முதற்படி உண்மையிலே புத்திக்கு அப்பால் இருக்கிறது. எண்ணம், புத்தி, அறிவு என்னுமிவற்றை நீங்கள் கடக்கும் பொழுது கடவுளை நோக்கி முதலடி எடுத்து வைத்தவர்களாகிறீர்கள். இதுவே வாழ்வில் தொடக்கம். பொதுவாக நாம் வாழ்க்கை என்று சொல்லுவது கருவிலிருக்கும் நிலையாய் அமைந்துள்ளது.

'எண்ணத்துக்கும் தருக்க அறிவுக்கும் அப்பாலாகிய நிலை மிக உயர்ந்த நிலையென்பதற்கு என்ன ஆதாரங்கள் உள?' என்னும் வினா எழுகின்றது. முதலிலே உலகிலுள்ள பெரியோர் அனைவரும், உலகினை வழிப்படுத்தினோர் அனைவரும், வெறும்பேச்சினோடு நில்லாது பெருங்கருமங்களைச் செய்தோர் அனைவரும், எவ்வகைத் தன்னலத்தையும் ஒரு பொழுதும் கருதாதோர் அனைவரும், இந்த வாழ்க்கையானது இதற்கப்பாலுள்ள அகண்டத்தை அடைவதற்கு ஒரு படியாகும் என்று வெளியிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவதாக, அவர்கள் அப்படிச் சொன்னது

மாத்திரமன்றித் தாங்கள் சென்ற வழியிலேயே அனைவரும் செல்லும்படி அதற்குரிய வழிகளையும் தெளிவுபடுத்தினார்கள். மூன்றாவதாக, வேறு வழியில்லை; மற்றொரு வித விளக்கமும் இல்லை. மிக உயர்ந்த நிலை வேறொன்று இல்லை என வைத்துக் கொண்டால், சுழன்றுகொண்டிருக்கிற இந்த உலக வாழ்க்கையால் பயன் என்ன? உலகம் நிலைபெற்றிருப்பதற்கு நியாயம் என்ன? அப்புறம் செல்லக்கூடாவிடின், புலன்களுக்கு எட்டுகின்ற உலகந் தானே நமது அறிவுக்கு எல்லையாகும்? நாம் பிறிதொன்றை விசாரிக்க இடமிராது. இதுவே அஞ்ஞேயவாதம் (agnosticism) என்பது. புலன்களினுடைய சாட்சியை நம்புவதற்கு என்ன நியாயம் உண்டு? ஒருவன் உண்மையிலே தருக்க அறிவுக்கு அப்பாற் பிறிதொன்று இல்லையென்று கொள்வானாயின், அவன் வீதியிலே அசைவற்று நின்று உயிர்விடவேண்டும். தருக்கமே அனைத்துமாயின், சூனிய வாதத்துக்கு இப்பால் நிற்பதற்கு நமக்கு இடமில்லை. செல்வம், புகழ், பெயர் இவற்றை மெய்யெனக் கொண்டு பிறவற்றை அறியேன் என்று சொல்லுகிறவன் மாய்மாலக்காரன். தருக்க அறிவென்று சொல்லுகிற உயர்ந்த மதிலைத் தாண்டிச் செல்லுதல் இயலாது எனக் காண்ட் (Kant) என்னும் தத்துவ சாத்திரியார் ஐயந்திரிபறக் காட்டுகிறார். ஆயினும், இந்திய தத்துவசாத்திரம் முதற்படியாகவே தருக்க அறிவினும் உயர்ந்ததொன்றினைத் தேடி அடைகின்றது. அந்த உயர்நிலையிலேதான் இப்பொழுதுள்ள நிலையின் விளக்கம் காணப்படுகிறது. உலகுக்கு அப்பால் நம்மைக் கொண்டு செல்லத்தக்க ஆராய்ச்சியின் பயன் இதுவே. "தேவரீர் எம் தந்தையார், அறிவின்மைக் 'கடலின் அக்கரைக்கு எம்மைக் கொண்டு செல்லுவீர்," என்பதே சமய ஆராய்ச்சியின் உண்மை; வேறொன்றுமில்லை.

# யோக சூத்திரம்

## அத்தியாயம் 1

## சமாதி பாதம்

अथ योगानुशासनम् ॥ १ ॥

1. இனி யோக விளக்கம் (கூறப்படும்).

योगश्चित्तवृत्तिनिरोधः ॥ २ ॥

2. யோகமெனப்படுவது, சித்தத்தின் விருத்திகளை ஒடுக்குதல் ஆகும்.

ஈண்டு எடுத்துக்கொண்ட பொருளைப் பெரிதும் விளக்க வேண்டியிருக்கிறது. சித்தம் (உள்ளம்) என்பது என்னவென்றும், விருத்திகள் (சுழற்சி, உழல்வு, தடுமாற்றம்) என்பன எவை என்றும் நாம் தெளிவுற அறிந்துகொள்ள வேண்டும். எனக்குக் கண்கள் இருக்கின்றன. கண்கள் தாமாகவே காணமாட்டா. தலையினுள் மூளையிலே கண்களுக்கென இருக்கும் நரம்பு நிலையத்தை எடுத்துவிட்டால், கண்களும் கருவிழியும் அவற்றில் படிகின்ற பொருள் உருவங்களும் முன்னிருந்தபடியே இருப்பினும், கண்கள் நோக்கா. ஆதலால், கண்கள் துணைக்கருவி ஆவனவேயன்றி, காட்சி இந்திரியம் ஆவனவல்ல. மூளையிலுள்ள ஒரு நரம்பு நிலையத்திலே காட்சி இந்திரியம் இருக்கிறது. கண்கள் இரண்டும் மாத்திரம் காணுதற்றொழிலுக்குப் போதியன ஆகா. சில வேளை ஒரு மனிதன் கண்கள் இரண்டும் விழித்தபடியே துயில்கிறான். ஒளியிருக்கிறது. பொருள்களின் உருவம் கண்ணிற்படுகிறது. ஆயினும், மற்றொன்று வேண்டியிருக்கிறது; மனம் இந்திரியத்தோடு இணைந்து நிற்க வேண்டும். கண் புறக்கருவி; மூளையிலுள்ள நரம்பு நிலையமும் மனத்தின் தொழிலும் இன்றியமையாதன. தெருவிலே வண்டிகள் ஓடுகின்றன. அவற்றின் ஒலி உங்கள் காதிற்படவில்லை. ஏன்? உங்கள் மனம் கேள்வி இந்திரியத்தோடு ஒன்றுபட்டு நிற்கவில்லை. முதலிலே கருவியிருக்கிறது. இரண்டாவது இந்திரியம். மூன்றாவது இவற்றோடு கூடிய மனத்தின் தொடர்பு; மனமானது தன்மேற் படிந்த படிவினை எடுத்துக்கொண்டு சென்று, துணிவு செய்யும் கரணமாகிய புத்தியின் முன்னிலையில் வைக்க, அது எதிரியங்கு

கிறது. இவ்வெதிரியக்கத்தோடு அகங்காரம் வெளிப்படுகிறது. இயக்கமும் எதிரியக்கமுமாகிய இவை உண்மையிலே காண்பானு கிய புருஷன் முன்னிலையில் வர, அவன் இவற்றின் கூட்டத்தில் ஒரு பொருளைக் காண்கின்ருன்.

இந்திரியங்களும், மனமும், புத்தியும், அகங்காரமும், அந்தக் கரணம் (உட்கருவி) எனப்படுவன. இவை யாவும் சித்தமாம். உள்ளத்தின் வேறுபட்ட இயக்கங்களே, சித்தத்தில் எழுகின்ற எண்ண அலைகள், விருத்திகள் (சுழிகள்) எனப்படுவன. எண் ணம் என்பது என்ன ? எண்ணம் என்பது பொருத்தும் ஆற்றல், பிரிக்கும் ஆற்றல் போன்ற ஒரு வகைச் சக்தி. இயற்கையிலுள்ள அகண்டமாகிய சத்திக்களஞ்சியத்திலிருந்து சித்தமென்னும் கருவியானது சிலவற்றை எடுத்துத் தொழிற்படுத்தி எண்ணங்க ளாக வெளியே செலுத்துகின்றது. சத்தி நமக்கு உணவிலிருந்து வருகிறது. இயங்குதல் முதலிய தொழில்களுக்கு வேண்டிய வலிமையை உடல் உணவிலிருந்து பெறுகிறது. சூக்கும சத்தி கள், நாம் எண்ணம் என்று சொல்வதனை வெளிப்படுத்துகின்றன. மனம் அறிவுள்ளதன்று. ஆயினும், அது அறிவுள்ளது போலக் காணப்படுகிறது. ஏனெனில், அறிவுள்ள ஆன்மா அதன் பின்னின்று தொழில் புரிகின்றது. நீங்கள் உணர்வுடைய உயிர் ; மனமானது நீங்கள் புறத்தேயுள்ள உலகத்தினைப் பற்றுதற்கு இயைந்ததொரு கருவி. உதாரணமாகப் புத்தகத்தை எடுத்துக் கொள்க. புத்தகமாக அது வெளியே இருக்கவில்லை ; வெளியே உள்ளது அறியவொண்ணுதது. நீரிலே எரிந்த கல்லானது நீரினை அலைகளாக இயக்குவது போல, அறியவொண்ணுதது மனத் தினைச் சென்று தாக்க, மனமானது புத்தகத்தின் வடிவத்தை எதிரியக்கமாகத் தருகின்றது. புத்தகத்தின் வடிவமோ, யானை வடிவமோ, மனித வடிவமோ வெளியிலில்லை. வெளிக் குறிப்பினுல் மனத்தில் உண்டாகிற எதிரியக்கத்தை மாத்திரந்தான் நாம் அறிவோம். பொறியுணர்ச்சிகளுக்கு என்றும் இன்றியமையாது இருப்பதே சடப்பொருள் என ஜான் ஸ்டுவர்ட்டு மில் என்னும் அறிஞர் கூறுகின்ருர். குறிப்பு மாத்திரந்தான் வெளியே உள்ளது. உதாரணமாக, ஒரு முத்துச் சிப்பியை எடுத்துக்கொள்ளுவோம் : முத்து எப்படி உண்டாகிறதென்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒரு கிருமி சிப்பியின் ஓட்டினுள்ளே புகுந்து, ஒரு வகைத் தினவையுண்டாக்குகிறது. சிப்பி, அதைச்சூழ ஒரு வகை மினுமினுப்பான பொருளைக் கக்குகிறது. இதனுல் முத்துப் பிறக்கிறது. நம் அனுபவத்தில் நாம் காண்கிற பிரபஞ்சம்,

நம்மாலாக்கப்படுகின்ற மினுமினுப்பைப் போன்றது. உண்மைப் பிரபஞ்சம் அதற்குக் காரணமாகிய கிருமியைப் போன்றது. சாதாரண மனிதன் இதனைத் தெளிந்துகொள்வதில்லை. ஏனென்றால், அவன் இதை அறிய முயலும் பொழுது தானாகவே ஒரு மினுமினுப்பை உண்டாக்கித் தான் படைத்த மினுமினுப்பைக் காண்கின்றான். இப்பொழுது விருத்திகளென்பன எவை என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். உண்மை மனிதன் மனத்திற்குப் பின்னே இருக்கிறான்; மனம் அவனிடம் உள்ள ஒரு கருவி. அவனுடைய புத்தியே மனத்தில் செறிந்து தோன்றுகிறது. நீங்கள் உங்கள் மனத்திற்குப் பின்னே நிற்கும் பொழுதுதான் மனம் புத்தியுடையதாகின்றது. மனிதன் கைவிடும் பொழுது அது துகளாகி வெறுமையாகின்றது. சித்தம் என்பது என்னவென்பதை நீங்கள் இவ்வண்ணம் அறிந்துகொள்கிறீர்கள். அது மனத்தின் பொருள். எழுகின்ற அலைகளும் சுழிகளும், விருத்திகளெனப்படுவன. இந்த விருத்திகளே நமது பிரபஞ்சம்.

குளத்தின் அடியை நாம் காண்பதில்லை. ஏனெனில், அலைகள் அதன் மேற்பரப்பை மூடியிருக்கின்றன. சிற்றலைகள் அடங்கி நீர் அமைதியாயிருக்கும் பொழுது அடியினைச் சிறிது காணுதல் கூடும். நீர் எப்பொழுதும் கலங்கிக்கொண்டிருந்தால், அடி காணப்படமாட்டாது. அது தெளிந்து அலையின்றிருந்தால், நாம் அடியைக் காணலாம். குளத்தினடியே நமது உண்மை ஆன்மா. குளமே சித்தம். அலைகளே விருத்திகள். மனம் முக்குண வடிவப்பட்டது. இருள் வடிவாகிய தமோ குணம் விலங்குகளிடத்தும், அறிவில்லாத மக்களிடத்தும் காணப்படுவது. அது கேட்டினையே விளைவிப்பது. அத்தகைய மனத்தினுள்ளே வேறு எவ்வித எண்ணமும் புகுவதில்லை. இனி, தொழில் தன்மையான ரஜோ குணமுண்டு. அதன் முக்கிய நோக்கம் வலிமையும் இன்ப நுகர்ச்சியுமாகும். "நான் வல்லமைசாலியாயிருந்து பிறரை அடக்கியாளுவேன்!" என்று எண்ணுவது அதன் நோக்கம். மூன்றாவதாக, அமைதி, பொறுமை என்பவற்றின் வடிவமாகிய சத்துவகுணமுண்டு. அலைகள் ஓய்ந்துவிட மனமென்னும் குளத்திலுள்ள நீர் தெளிவடைகின்றது. அப்பொழுது மனம் தொழிலற்றிருக்கவில்லை; நிறைந்த தொழில் செய்துகொண்டிருக்கிறது. அமைதி நிலையினிலிருப்பது பேராற்றலின் அறிகுறியாகும். தொழில் புரிவது எளிது. கடிவாளத்தை விட்டுவிட்டால் குதிரைகள் தாம் விரும்பிய திசைக்கு உங்களை இழுத்துச் செல்லும். இது யாவராலும் செய்யக்கூடியது. ஓடுங்குதிரையை

நிறுத்திப் பிடிப்பவனே வல்லமைசாலி. விட்டுவிடுவதா, நிறுத்திப் பிடிப்பதா? எதற்கு மிகுந்த வலிமை வேண்டும்? அமைதியாயிருக்கும் மனிதன் என்றால், மந்த புத்தியுடையவன் என்று எண்ணிவிடலாகாது. சோம்பல் முதலியவற்றைச் சத்துவ குணமென்று பிழைபட நினைத்துவிடுதல் கூடாது. மனத்தின் அலைகளை அடக்கியாளுகின்ற மனிதனே அமைதியுள்ள மனிதன். தொழில் செய்தல் இழிந்த வலிமையினின்று தோற்று வதாகும். அமைதி நிலையினிலிருத்தல் உயர்ந்த வலிமையின்பால தாகும்.

சித்தமானது தனக்கு இயற்கையாகிய தூய நிலையை மீட்டும் அடைய முயல்கின்றது. இந்திரியங்கள் அதனை வெளியே இழுக் கின்றன. வெளிச் செல்லும் தன்மையை அடக்கி, அறிவுப் பொருளை நோக்கிச் செல்லுதற்கு உரிய வழியிலே செலுத்துதல் யோகத்தின் முதற்படியாகும். இப்படிச் செய்தாற்றான் சித்தத் தைச் சரியான வழியிற் செலுத்தலாம். சித்தம் கீழான பிராணி முதல் மிகவுயர்ந்த உயிர்ப் பிராணிகளனைத்திலும் செறிந்து இருக்கிறதென்றாலும், மனித வடிவத்திலேதான் அது அறிவாகக் காணப்படுகிறது. மனம் இந்த அறிவு வடிவம் ஆனாலன்றிக் குறித்த படிகளின் மூலம் திரும்பிச்சென்று ஆன்மாவை விடுதலை பெறுவிக்க இயலாததாயிருக்கும். பசுவுக்கும் நாய்க்கும் உடனே முத்தி கிடைப்பது இயலாததாகின்றது. ஏனெனில், அவற்றிற்கு மனமிருந்தாலும், அவற்றின் சித்தம் பகுத்தறிவு வடிவத்தைக் கொள்ள மாட்டாது.

சித்தம் ஐவேறு வகைப்பட்ட வடிவங்களாய் வெளிப்பட்டுத் தோன்றும். அவையாவன, சிதறுண்ட நிலை, இருண்ட நிலை, கொண்டு கூட்டு நிலை, ஒருவழிப்பட்ட நிலை, ஒடுங்கிய நிலை என் பன. சிதறுண்ட நிலை, தொழில் செய்யும் வடிவமாகும். இன்ப துன்பங்களின் உருவமாக வெளிப்பட்டுத் தோன்றுவது அதன் நீர்மை. இருண்ட வடிவம், மந்தமாய்த் தீச்செயலை நாடும். இவற்றினுள், முந்தியது தேவருக்கும் வானவருக்கும், பிந்தியது பிசாசருக்கும் இயற்கையாமென உரையாசிரியர்கள் கூறுவார்கள். கொண்டு கூட்டு நிலை என்பது, யாதாயினுமொரு மையத்தை அடைவதற்கு முயல்கின்ற முயற்சியாகும். தியானித்தற்கு முயலுதல் ஒருவழிப்பட்ட நிலையாகும். தியானத்தில் இருக்கும் ஒடுங்கிய நிலை சமாதியை வருவிக்கும்.

तदा द्रष्टुः स्वरूपेऽवस्थानम् ॥ ३ ॥

3. அப்பொழுது காண்போனுக்குத் தனது சொந்த வடிவத்திலே நிலைபேறு எய்தப்பெறும்.

அலைகள் நின்றவுடனே தடாகம் அமைதியடைகின்றது. நாம் அதன் அடியினைக் காண்கின்றோம். மனத்துக்கும் அவ்வாறே யாகும். அது அமைதியுற்றிருக்கும் பொழுது நமது சொந்தத் தன்மையை நாம் காண்கின்றோம்; பிறிதொன்றினோடு கலந்துகொள்ளாது நாமாகவே இருக்கின்றோம்.

वृत्तिसारूप्यमितरत्र ॥ ४ ॥

4. மற்றப்பொழுதில் உள்ளத்தினது உழல்வோடு ஒன்றுபட்ட உருவம் வந்தெய்தும்.

உதாரணமாக, ஒருவன் என்னை வைகிறான்; இதனால் எனது உள்ளத்தில் ஓர் உழல்வு ஏற்படுகிறது. நான் என்னை அதனோடு ஒன்றுபடுத்துகிறேன். இதனால் கவலை ஏற்படுகிறது.

वृत्तयः पञ्चतय्यः क्लिष्टा अक्लिष्टाः ॥ ५ ॥

5. துன்புளவும், துன்பிலவும் ஆகிய விருத்திகளென்னும் உள்ளத்து உழல்வுகள் ஐவகைப்படுவன.

प्रमाण-विपर्यय-विकल्प-निद्रा स्मृतयः ॥ ६ ॥

6. அவை, மெய்யுணர்வு, மலைவு, திரிபு, தூக்கம், நினைவு என்பன.

प्रत्यक्षानुमानागमाः प्रमाणानि ॥ ७ ॥

7. காட்சியுணர்வு, கருத்துணர்வு, உரையுணர்வு என உணர்வு மூவகைப்படும்.

ஒன்றினுக்கொன்று முரணாகாத காட்சியுளதாய வழி, அதனைக் காட்சிப் பிரமாணம் என்போம். என் செவியிற் புலப்பட்ட தொன்று முன்னரே புலப்பட்டதொன்றினுக்கு முரண்படுமாயின், நான் அதனோடு போராடத் தொடங்கி, அதனை நம்பாது விடுவேன். பிரமாணங்கள் மூன்று வகைப்படுவன: புலன்கள் மயங்காத வழி, நான் காண்பனவும், உணர்வனவும் பிரமாணமாகும். அது பிரத்தியட்சம் (காட்சியுணர்வு) எனப்படும். நான் உலகத்தைக் காண்கின்றேன். அது உள்ள பொருள் என்பதற்கு அக்

காட்சி போதிய பிரமாணம். இரண்டாவது, அனுமானம் (கருத்துணர்வு); நீங்கள் ஓர் அடையாளத்தைக் காண்கிறீர்கள். அந்த அடையாளத்திலிருந்து அதனாற் குறிக்கப்படுகிற பொருளை அடைகிறீர்கள். மூன்றாவது, ஆப்த வாக்கியம் (உரையுணர்வு); இது மெய்யுணர்ந்த யோகிகளால் நேரிலே காணப்படுவது. நாமெல்லாம் அறிவை நாடி முயல்கிறோம். அல்லலுற்று நீண்ட தருக்க அறிவு வழியினாலே மிக முயன்று நாம் அறிவை அடைய வேண்டியவர்களாய் இருக்கிறோம். தூய்மையுடையவனாகிய யோகி இதனைக் கடந்து சென்றுவிட்டான். அவனது மனத்தின் முன்னிலையிலே கடந்தனவும், நிகழ்கின்றனவும், வரப்போகின்றனவும் ஒரே தன்மையனவாய் இருக்கின்றன. அவை அவனால் படிக்கப்படுகிற ஒரு புத்தகம் போன்று இருக்கின்றன. அவன் நம்மைப்போல அல்லலுற்ற முறைகள் வழியாக அறிவைத் தேட வேண்டுவதில்லை. அவன் தன்னிடத்திலே அறிவைக் காண்கின்றான். அவனுடைய சொற்கள் பிரமாணமாய் இருக்கின்றன. சமய சாத்திரங்களையாக்கியோர் இத்தகையோரே. ஆதலால், சமய சாத்திரங்கள் பிரமாணமாகின்றன. இத்தகையோர் இப்பொழுது இருந்தால், அவர்தம் சொற்களும் பிரமாணமாகும். சில தத்துவஞானிகள் ஆப்த வாக்கியத்தைப் பற்றி நீண்ட வாதம் நிகழ்த்தி, 'ஆப்தரென்பாரது உரை பிரமாணமாவது எங்ஙனம்?' என்கின்றனர். அவரது நேர் முகக் காட்சியே பிரமாணமாகும். முக்கிய அறிவுக்கு முரண்படாது இருக்கும் வழி, நான் காண்பது பிரமாணமாகும்; நீங்கள் காண்பதும் பிரமாணமாகும். புலன்களுக்கு அப்பாலாகிய அறிவொன்று இருக்கின்றது. அது மக்களுடைய பண்டைய அனுபவத்திற்கும் தருக்க அறிவுக்கும் முரண்படாதிருக்குமாயின், அந்த அறிவு பிரமாணமாகும். பைத்தியக்காரனொருவன் எனது இருப்பிடத்திற்கு வந்து, தான் தன்னைச் சூழத் தேவர்களைக் கண்டதாகச் சொல்லுகிறான். அது பிரமாணமாகாது. முதலிலே, அது உண்மையறிவாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, அது முந்திய அறிவுக்கு மறுதலையாயிருத்தல் கூடாது. மூன்றாவதாக, அது தன்னை வெளியிட்டுச் சொல்லுகிற மனிதனுடைய குணத்தைப் பொறுத்ததாகும். 'ஒருவன் சொல்லுவதையே கேட்க வேண்டும். அவனுடைய குணத்தைப்பற்றி ஆராய்வது முக்கியமன்று,' என்று சிலர் சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இது மற்ற விஷயங்களில் உண்மையாயிருக்கலாம்; ஒரு மனிதன் தீய ஒழுக்கம் உடையவனாயிருந்தும் வான சாத்திரத்தில் ஒரு சிறந்த விஷயத்

தைக் கண்டுபிடித்திருக்கலாம். ஆனால், சமய சாத்திரங்களிலோ, அப்படியில்லை. தூய்மையற்ற மனிதன் சமய உண்மைகளை அடையும் வலிமை படைத்தவனாகமாட்டான். ஆதலாலே, முதலிலே, நாம் தன்னை ஆப்தனென்று சொல்லுகிற மனிதன் பூரணத் தன்னல மறுப்புடைய தூய்மை வாய்ந்தவனாவென்று பார்க்கவேண்டும். இரண்டாவதாக, அவன் புலன்களுக்கு அப்பாலான நிலையை அடைந்துவிட்டானா என்று அறியவேண்டும். மூன்றாவதாக, அவன் சொல்பவை மக்களின் முந்திய அறிவுக்கு முரண்படாதிருக்கின்றனவாவென்று நோக்க வேண்டும். புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உண்மை, பழைய உண்மையோடு மாறுகொள்ளாது பொருந்தியிருக்க வேண்டும். நான்காவதாக, அவ்வுண்மை ஆராய்ந்து தெளியக்கூடியதாய் இருக்க வேண்டும். ஒரு மனிதன் என்னை நோக்கித் தான் ஒரு தரிசனத்தைக் கண்டதாகவும், நான் அதனை ஒரு பொழுதும் காணுதல் இயலாதென்றும் சொல்லுவானாயின், நான் அவனை நம்பமாட்டேன். அது ஒவ்வொருவரும் தாமாகவே காணக்கூடியதாக இருக்க வேண்டும். தனது அறிவை விலைப்படுத்துபவன் ஆப்தனாகமாட்டான். இங்குக் குறிப்பிட்ட நிபந்தனைகளெல்லாம் நிறைவு பெற்றிருக்க வேண்டும். முதலிலே அந்த மனிதனுடைய தூய்மைத் தன்மையைப் பாருங்கள். அவன் புகழ், பொருள் என்னுமிவற்றை விரும்புபவனல்லனென்றும், தன்னலப் புத்தி அவனுக்கு இல்லை என்றும் அறிந்து கொள்க. இரண்டாவதாக, அவன் உரையுணர்வு கடந்த நிலைமையன் என்பதை அறிய வேண்டும். மூன்றாவதாக, நாம் நம் புலன்களால் பெறுதற்கு அரியதும், உலக நன்மைக்கு இயைந்ததும் ஆகிய ஒன்றினை அவன் நமக்குத் தருதல் வேண்டும். மற்ற உண்மைகளை அது மறுக்கவில்லையென்பதை நாம் காண வேண்டும்; சாத்திரியமான உண்மைகளை அது மறுக்குமாயின், அதனை நாம் உடனே தள்ளி விட வேண்டும். நான்காவதாக, அம்மனிதன் தனித்த கொள்கையனாய் இருத்தல் கூடாது; எல்லா மனிதரும் அடையக்கூடிய ஒன்றினையே அவன் காட்டுதல் வேண்டும். மூவகைப் பிரமாணங்களாவன: பிரத்தியட்சம், அனுமானம், ஆப்த வாக்கியமெனப் படுவன. ஈற்றிற்கூறியதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தல் இயலாது. ஆவேசங்கொண்டவன் என்னும் வார்த்தை பொருத்தமானதன்று. ஏனெனில், ஆவேசமெனப்படுவது புறத்தேயிருந்து அகத்தே வருவது. இந்த அறிவோ, மனிதரிடத்திலிருந்தே வருவது. இதன் நேர்க்கருத்து 'அடைந்தவர்' என்பது.

विपर्ययो मिथ्याज्ञानमतद्रूपप्रतिष्ठम् ॥ ८ ॥

**8. தன்னதல்லாத உருவம் அமைந்திருக்கும் பொய்யறிவு, 'மலைவு' எனப்படும்.**

சிப்பியை வெள்ளியென்று கொள்ளுவதுபோல, ஒன்றினை மற்றொன்ருகப் பிழைபட எண்ணுவதனுல் எழுகின்ற விருத்தி இது.

शब्दज्ञानानुपाती वस्तुशून्यो विकल्पः ॥ ९ ॥

**9. பொருளின்றி, வெறுஞ்சொல்லினைப்பற்றி நிகழ்கின்ற அறிவு 'சொல் மயக்கம்' எனப்படும்.**

சொல் மயக்கமென மற்ருெரு வகை விருத்தியுண்டு. ஒரு மொழி செவிப்படுதலும், அதன் பொருளை ஓர்ந்துணரத் தாமதியாது, உடனே ஒரு முடிவுக்கு வந்துவிடுகிருேம். இது சித்தத்தினது வலியின்மைக்கு அடையாளம். அடக்கம் என்பதைப்பற்றி இப்பொழுது நீங்கள் அறிந்துகொள்ளுவீர்கள். ஒருவன் எவ்வளவு வலி குன்றியிருக்கிருனோ, அவ்வளவு அடக்கம் குறைந்தவனுயிருப்பான். இந்தப் பரீட்சையினுல் உங்களை எப்பொழுதும் சோதித்துப் பாருங்கள். கோபம், கவலை என்னுமிவை வரும்பொழுது சில செய்திகள் செவிப்படுதலினுலே மனம் அத்தகைய விருத்தியை அடைவது ஏன் என ஆராய்ந்து பாருங்கள்.

अभाव-प्रत्ययालम्बना वृत्तिर्निद्रा ॥ १० ॥

**10. இன்மை உணர்ச்சியைப் பற்றுக்கோடாகக் கொண்ட விருத்தி, 'நித்திரை' எனப்படும்.**

நித்திரையும் கனவும் நான்காவது வகை விருத்தியாகும். விழித்துக்கொள்ளும் பொழுது துயின்ருேம் என்பதை நாம் அறிகின்ருேம். காட்சியைப் பற்றித்தான் நினைப்பிருத்தல் கூடும்; காணுததனை நினைப்பது இயலாத காரியம். எதிர்த்தாக்கல் ஒவ்வொன்றும் குளத்திலே எழும் அலையைப்போன்றது. நித்திரை வேளையில் மனத்தில் அலைகளில்லாதிருந்தால், அது உடன்பாடாகவோ எதிர்மறையாகவோ உள்ள ஒரு வகைக் காட்சியும் உடையதாயிராது; அவ்வழி நாம் அவற்றை நினைத்திருக்க மாட்டோம். மனத்திலே நித்திரை வேளையிலே ஒரு வகையான அலைகள் உண்டான காரணத்திஞற்ருன் நாம் நித்திரையை நினைத்

திருக்கிறோம். நினைவு மற்றொரு வகை விருத்தி. அது வடமொழி யில் 'ஸ்மிருதி' எனப்படும்.

अनुभूतविषयासंप्रमोषः स्मृतिः ॥ ११ ॥

11. நினைவு எனப்படுவது நுகர்ந்த பொருளினை நழுவவிடாது உள்ளத்திற் கொள்ளுதல்.

சுட்டுணர்வு (காட்சியறிவு), மலைவு (பொய்யறிவு), சொல் மயக்கம், நித்திரை ஆகிய நான்கினின்றும் நினைவு வருதல் கூடும். உதாரணமாக, ஒரு சொல் உங்கள் செவியில் படுகிறது. அச்சொல் சித்தமென்னும் குளத்திலே எறிந்த ஒரு கல்லை நிகர்த் தது. அஃது, ஓர் அலையை உண்டாக்குகிறது. அந்த அலை தொடர்ச்சியான சில அலைகளை உண்டாக்குகிறது. இது நினை வாகும். அப்படியே நித்திரையிலும், நித்திரை என்னும் ஒரு வகை அலை சித்தத்திலே ஒரு நினைவு அலையை உண்டாக்குகிறது. இது கனவு எனப்படும். விழிப்பு நிலையிலே நினைவெனப்படுகிற ஒரு வகை அலையினது மற்றோர் உருவமே கனவாகும்.

अभ्यासवैराग्याभ्यां तन्निरोधः ॥ १२ ॥

12. பழக்கத்தினாலும், பற்றின்மையினாலும் அவற்றை ஒடுக்க லாம்.

பற்றின்மையை அடைவதற்கு, மனமானது தெளிவும், நன்மையும், நியாய வழியும் உடையதாயிருக்க வேண்டும். பழக் கம் எதற்காகவேண்டும்? செய்யுந் தொழில் ஒவ்வொன்றும், குளத் தின் மேற் பரப்பிலே அசைகின்ற சிற்றலைகளை நிகர்த்தவை. அசைவு அழிந்துபோக, எவை மிஞ்சி இருக்கின்றன? அவை உளத்திற்பதிந்த பதிவுகளாகிய சம்ஸ்காரங்கள். மனத்திலே இத் தகைய பதிவுகள் பல ஒன்று கூடும்பொழுது அவை பழக்கமா கின்றன. 'பழக்கம் இரண்டா மியற்கை,' என்பர். 'முதலி யற்கை'யும் அதுதான். மனிதனுடைய முழு இயற்கையும் அது தான். நாம் எதுவாய் இருக்கின்றோமோ, அது பழக்கத்தின் பயனாக ஏற்பட்டது. அதனால், நமக்கு ஆறுதலுண்டாகின்றது. அது பழக்கமே ஆயிருந்தால், நாம் எந்த நேரத்திலும் ஆக்கவும் அழிக்கவுங் கூடும். இந்த இயக்கங்கள் நம்முடைய மனத்திலே செல்லும் பொழுது, தத்தமது பயனாகிய சம்ஸ்காரங் களை (பதிவுகளை) இட்டுச் செல்லுகின்றன. இந்த அடையாளங்

களின் கூட்டுத் தொகையே நமது குணமெனப்படுவது. எந்த அலை அதிகமாயிருக்கின்றதோ, அந்தக் குணம் நிலை பெறும். நன்மை அதிகப்படின் நன்மையும், தீமையதிகப்படின் தீமையும், உவகையெனில் ஆனந்தமும் ஏற்படுகின்றன. தீய பழக்கங்களை மாற்றுவதற்கு அவற்றிற்கு எதிராகிய நல்ல பழக்கங்களை உண்டாக்குவதே மருந்து. உள்ளத்திற் பதிந்து கிடக்கும் தீய பழக்கங்களை நல்ல பழக்கங்களினுல் அடக்க வேண்டும். இடைவிடாது நல்ல எண்ணங்களையெண்ணி நன்மையைச் செய்துகொண்டிருங்கள். பழுதாகிய எண்ணங்களை அகற்றுவதற்கு அஃதொன்றே வழி. எந்த மனிதனையுந் திருத்த முடியாதவனென்று சொல்லாதீர்கள். பல பழக்கங்கள் சேர்ந்த ஒரு கட்டு ஆகிய குணத்தினை அவன் வெளிப்படுத்துகிருன். புதிய நல்ல பழக்கங்களால் அவற்றைத் தடுத்துவிடலாம். ஒழுக்க நடை மீட்டும் மீட்டும் பழகிய பழக்கங்களாலானது. பழக்கங்களால் மாத்திரமே ஒழுக்க நடையைச் சீர்படுத்தலாம்.

तत्र स्थितौ यत्नोऽभ्यासः ॥ १३ ॥

**13. ஆங்கு, (முற்கூறிய இரண்டினுள்) சித்தம் ஒருவழிப்படுகின்ற நிலை ஏற்படும் பொருட்டுச் செய்யும் முயற்சியானது, 'அப்பியாசம்' (பழக்கம்) எனப்படும்.**

அப்பியாசமென்பது என்ன? மனத்தை அலை வடிவமாகப் போகவொட்டாது தடுத்து, அதனைச் சித்த வடிவமாக நிலைபெறுத்தும் முயற்சியே அப்பியாசமாகும்.

स तु दीर्घकालनैरन्तर्यसत्कारासेवितो दृढभूमिः ॥ १४ ॥

**14. அதுவும் நீண்ட நாள் இடையீடின்றிக் கடைப்பிடியோடு கைக்கொள்ளப்படுமாயின், உறுதியாக நிலைபெறும்.**

ஒடுக்கம், நீண்ட இடையீடில்லாத அப்பியாசத்தினுல் வருவதன்றி, ஒரு நாளில் வந்தெய்துவதன்று.

दृष्टानुश्रविकविषयवितृष्णस्य वशीकारसंज्ञा वैराग्यम् ॥ १५ ॥

**15. காணப்படுவனவும், கேட்கப்படுவனவுமாகிய விஷய நுகர்ச்சிப் பொருள்களின்மீது ஆவலற்றிருப்போன் அப்பொருள்களைத் தன் வயப்படுத்துகின்ற (வசீகர) நிலைமை, 'வைராக்கியம்' எனப்படும்.**

நாமே காண்பனவும், பிறருடைய அனுபவமுமாகிய இரண்டும் நாம் செய்யுந் தொழில்களை இயக்குகின்ற வலிமைகளாயிருக்கின்றன. இவ்விரு வலிமைகளும் மனமாகிய குளத்திலே வேறு வேறாகிய அலைகளை உண்டாக்குகின்றன. இந்த வலிமைகளை எதிர்த்துப் போராடி மனத்தினைத் தடுத்து வைக்கின்ற ஆற்றல் துறவுக்கு உண்டு. நாம் இவற்றைத் துறத்தல் வேண்டும். நான் தெருவில் நடந்துகொண்டிருக்கும் பொழுது, ஒரு மனிதன் வந்து எனது கடிகாரத்தை எடுக்கிறான். அது எனது சொந்த அனுபவம். நான் அதைக் காண்கிறேன். உடனே என் சித்தம் அலைவுறுகிறது; கோபமாகிய வடிவத்தைக்கொள்ளுகிறது. அதனை வரவொட்டாது நான் தடுக்க வேண்டும். அங்ஙனம் உங்களால் தடுக்க முடியாவிட்டால், நீங்கள் ஒன்றுக்கும் பற்றாதவர்கள். முடியுமாயின், உங்களிடம் வைராக்கியமுண்டு. உலக சிந்தையுடையவர்களது அனுபவத்தின்படி, புலனுகர்ச்சிகளே மிக உயர்ந்த பேறுகளாகக் கருதப்படுகின்றன. இவை மிகப் பெரிய சோதனைகள். இவற்றை மறுத்து, மனமானது இவற்றின் வழிச்சென்று அலைவுறாவண்ணம் அடக்குவது 'துறவு' எனப்படும். எனது சொந்த அனுபவத்திலும் பிறருடைய அனுபவத்திலுமிருந்து எழுகின்ற இரு வகைப்பட்ட இயக்க வலிமைகளையும் அடக்கியாண்டு, சித்தத்தை அவற்றினாற் பற்றவொட்டாது தடுத்தல் வைராக்கியமாகும். 'இவை என் வயப்பட்டன. நான் இவற்றின் வயப்பட்டவனல்லேன்,' என்பதை அறிதல் வேண்டும். இத்தகைய மனவலிமையே துறவு எனப்படும். வீடு பேறடைவதற்குப் பற்றின்மையே வழியாயிருக்கின்றது.

तत्परं पुरुषख्यातेर्गुणवैतृष्ण्यम् ॥ १६ ॥

16. பர வைராக்கியம் (மிகவுயர்ந்த பற்றின்மை) எனப்படுவது, குணங்களிடத்தே பற்றற்றிருத்தலாகும். இது காண்போனாகிய (தனது) புருஷனது உண்மைத் தன்மையை அறிவதனால் ஏற்படுகின்றது.

குணங்களிடத்து நமக்கிருக்கும் கவர்ச்சியையும் அகற்றிவிடுவது மிகவுயர்ந்த வைராக்கியமாகும். முதலிலே புருஷன் யாரென்றும், குணங்களெவை என்றும் அறிதல் வேண்டும். யோக தத்துவத்தின்படி இயற்கை முழுவதும் மூவகைத் தன்மைகளால் ஆக்கப்பட்டிருக்கின்றது. ஒன்று, தமோ குணம்; மற்றொன்று, ரஜோ குணம்; மூன்றாவது, சத்துவ குணம். இந்த மூன்று குணங்களும்,

சட உலகத்திலே இருள் அல்லது தொழிலின்மையாகவும், கவர்தல் அல்லது அகற்றுதலாகவும், இவ்விரண்டின் சமநிலையாகவும் காணப்படுகின்றன. இயற்கையிலுள்ள அனைத்தும், எல்லாத் தோற்றங்களும், குறித்த இந்த மூன்று வலிமைகளின் வேறு வேறுகிய கூட்டங்களாய் அமைந்திருக்கின்றன. சாங்கியர்கள், இயற்கையைப் பல வேருகிய தத்துவங்களாக வகுத்திருக்கின்றூர்கள். மனிதனுடைய ஆன்மா இவற்றுக்கெல்லாம் அப்பாலானது; இயற்கையைக் கடந்து நிற்பது. அது ஒளி உடையது; தூய்மையானது; பூரணமானது. இயற்கையில் எவ்வெவ்விடத்தில் அறிவு விளங்குகிறதோ, அவையெல்லாம் இயற்கையிலே இந்த ஆன்மா பிரதிபிம்பிக்கிற தோற்றமாகும். இயற்கை தன்னளவிலே அறிவற்றது. இயற்கையென்பது மனத்தினையும் அடக்கியது என்பதை மறந்துவிடுதல் கூடாது; மனம் பிரகிருதியிலே நிலைபெற்றது; எண்ணம் பிரகிருதியிலே இருக்கிறது. எண்ணம் முதலாக, மிகுந்த தூலமாகிய சடப் பொருளீருக, அனைத்தும் பிரகிருதியிலே இருக்கின்றன. அவை பிரகிருதியின் வெளித் தோற்றம். இந்தப் பிரகிருதியானது மனிதனுடைய ஆன்மாவை மறைத்திருக்கிறது. பிரகிருதி தனது மறைப்பை நீக்கும் பொழுது ஆன்மா தனது சொந்த ஒளியோடு வெளிப்படும். பதினைந்தாம் சூத்திரத்திலே (இயற்கைப் பொருள்களைத் தன் வயப்படுத்துவதெனச்) சொல்லப்பட்ட பற்றின்மையானது, ஆன்மாவினது விளக்கத்திற்குப் பெரிய உதவியாகும். இதற்கு அடுத்த சூத்திரம் யோகியினுடைய முடிபாகிய பூரண ஒடுக்க நிலையை (சமாதியை)க் கூறுகிறது.

वितर्कविचारानन्दास्मितानुगमात् संप्रज्ञातः ॥ १७ ॥

**17. வினைதல், ஆராய்தல், இன்புறல், முனைப்பு (யான் உளன் எனல்) ஆகிய உருவங்களாலே தொடர்பெய்திய சமாதி, உணர்வோடுகூடிய சமாதி எனப்படும்.**

சமாதி இரு வகைப்படும். ஒன்று, (சம்பிரஞ்ஞாத) உணர்வோடு கூடியது; மற்றொன்று, (அசம்பிரஞ்ஞாத) உணர்வோடு கூடாதது. சம்பிரஞ்ஞாத சமாதியிலே இயற்கையை அடக்கியாளுகிற எல்லா வலிமைகளும் வந்தெய்துகின்றன. அது நால்வகைப்படும். முதல் வகை, (சவிதர்க்கம்) வினைவோடு கூடியது. மனமானது ஒரு பொருளை வேறு பொருள்களினின்றும் பிரித்து மீட்டும் மீட்டும் சிந்தித்தலே இது. சாங்கியர் கூறுகிற இருபத்

தைந்து தத்துவங்களை இரண்டு வகையாகிய தியானப் பொருள் களாகப் பகுத்துக் கொள்ளலாம்; முதல் வகை, இயற்கையிலுள்ள அறிவற்ற இருபத்து நான்கு தத்துவங்களாகும்; இரண்டாவது வகை, அறிவோடு கூடிய ஒன்ருகிய புருடன் ஆகும். யோகத்தின் இந்தப் பகுதி நான் உங்களுக்கு முன்னரே சொல்லிய சாங்கிய தத்துவத்தை முற்றிலும் ஆதாரமாகக் கொண்டது. சித்தமென் னும் மானதப் பொருளினின்றும் இயற்றப்பட்ட மனம், புத்தி, அகங்காரம் ஆகிய இவற்றுக்குப் பொதுவாக அமைந்த ஆதார மொன்று உண்டு என்பதை நீங்கள் நினைத்திருப்பீர்கள். இந்த மானதப் பொருளானது இயற்கையிலுள்ள வலிமைகளைக் கைப் பற்றி எண்ணங்களாக வெளிப்படுத்துகின்றது. சடமும் சத்தி யும் ஒன்ருகிய பொருள் ஒன்று இருத்தல் வேண்டும். இது 'அவ்வியக்தம்' எனப்படும். அது படைப்புக் காலத்திற்கு முன்னே இயற்கையினது தோற்ற வேறுபாடில்லாத நிலையாகும். காலவட்டத்தின் இறுதியிலே இயற்கை முழுவதும் இந்த நிலைக்கு வருகின்றது. பின்பு கால எல்லையிலும் இவ்வண்ணம் நிகழும். அறிவு வடிவாகிய புருடன் இவற்றுக்கு அப்பாலாகியிருப்பான். அறிவே ஆற்றல். ஒரு பொருளை நாம் அறியத் தொடங்கிய வுடனே நமக்கு அதன்மேல் ஆற்றல் உண்டாகிறது. அவ்வண் ணமே மனமானது வேறு வேருகிய பொருள்களைக் குறித்துச் சிந்திக்கத்தொடங்கும் பொழுது அவற்றினையாளும் ஆற்றலைப் பெறுகின்றது. புறத்தேயுள்ள தூல பூதங்கள் பொருள்களாக அமைந்த தியானம் சவிதர்க்கமெனப்படும். விதர்க்கம் என்பது வினு; சவிதர்க்கம் வினுவோடு கூடியது. பூதங்களை வினவு வதனுல், தியானிப்போனுக்கு அவை தம்மிடத்து அமைந்த உண்மைகளையும் வலிமைகளையும் தருகின்றன. வலிமைகளைப் பெறுவதனுல் முத்தி வந்தெய்த மாட்டாது. அது இன்பங்களை நாடிய உலக நாட்டமாகும். இந்த வாழ்க்கையிலே உவகையில்லை. இன்பத்தை நாடுவது வீணுகும். இதனை மனிதன் எளிதாகப் பயின்றுகொள்வதில்லை யெனினும், இது மிகப் பழைய பாடம். அவன் இதைப் பயின்று கொள்வானெனின், பிரபஞ்சத்தி னின்றும் விடுபட்டு முத்தனுகிருன். மறைந்து கிடப்பனவாகிய (occult) சத்திகளைப் பெறுவது, உலக சிந்தையை அதிகரிக்கச் செய்து, இறுதியிலே துன்பத்தை அதிகப்படுத்துவதாகும். சாத்திரமெழுதப் புகுந்த பதஞ்சலியார், இந்த சாத்திரத்தினுல் எய்துதற்குரியன அனைத்தையும் எடுத்துக் காட்டவேண்டியவரா

யிருந்தும், இந்த வலிமைகளாகிய சத்திகளைக் குறித்து நம்மை எச்சரிக்கை செய்கிறார்.

மேலும், இதே தியானத்திலே, ஒருவன் பூதங்களைக் காலம் இடம் என்னும் இவற்றினின்றும் நீக்கி, அவற்றின் இயல்பினை அறிய முயல்வானாயின், அது (நிர்விதர்க்க) வினா நீங்கிய சமாதி யாகும். தியானமானது இன்னும் ஒரு படி உயர்ந்து போய், தன் மாத்திரைகளை விஷயமாகக் கொண்டு, அவற்றினைக் காலத்திலும் இடத்திலும் இருப்பனவாகக் கருதுவது (சவிசார) ஆராய்ச்சி யோடு கூடிய சமாதியாகும். அதே தியானத்திலே, காலம் இட மென்பனவற்றையகற்றி, நுண்பொருளாகிய தன்மாத்திரைகளை எண்ணுவது (நிர்விசார) ஆராய்ச்சி நீங்கிய சமாதியாகும். பருப் பொருள், நுண்பொருள் வடிவமாகிய பூதங்களை அகற்றி, அந்தக் கரணங்களையும் மனத்தையும் தியானப் பொருள்களாகக் கொள்ளு தல் அடுத்தபடியாகும். எண்ணுதற்கருவியானது தொழில், சோம்பல் என்னுமிவற்றினின்றும் நீங்கியிருப்பதாகக் காண்பது (சானந்த) இன்புறலோடு கூடிய சமாதியாகும். மனமே தியானப் பொருளாக இருக்கும் பொழுது, தியானமானது முதிர்ச்சி பெற்று ஒரு வழிப்படும். சடப் பொருளின் தூல சூக்குமத்தைப் பற்றிய எண்ணங்களெல்லாம் போய்விடச் சத்துவ நிலையிலே, ஏனைய பொருள்களினின்றும் வேறுபட்டு, நானென்னும் எண்ணம் மாத் திரம் எஞ்சி நிற்கும். இது (சாஸ்மித) முனைப்போடு கூடிய சமாதி யாகும். இதனை அடைந்தவன் வேதங்களிலே கூறப்பட்ட விதேக நிலையை அடைந்தவனாவன். தனது தூலவுடல் இல்லாதிருப்ப தாக அவன் நினைக்கலாம்; ஆனால், நுண்ணிய பொருளாலாகிய உடலொன்று தனக்கு உண்டு என்பது எண்ண வேண்டுவது தான். இந்த நிலையிலிருந்து வீடு பேற்றினையடையாது இயற்கை யிலேயே அமிழ்ந்திருப்போர் ‘பிரகிருதிலயர்’ எனப்படுவார். இங்கும் நில்லாதவர்கள் வீடு பேருகிய கதியினை அடைவார்கள்.

विरामप्रत्ययाभ्यासपूर्वः संस्कारशेषोऽन्यः ॥ १८ ॥

**18. மனத்தின் தொழில்கள் அனைத்தினையும் இடையீடின்றி நிறுத்திப் பழகுவதனால் உண்டாகும் மற்றொரு சமாதியுண்டு. அஃது எய்தும் பொழுதும் சித்தத்திலே சம்ஸ்காரங்கள் மாத்திரம் எஞ்சியிருக்கும்.**

இது உணர்வு கடந்த பூரணமான அசம்பிரஞ்ஞாத சமாதி. இது நமக்கு வீடுபேற்றினைத் தருகின்றது. முதலிற்கூறிய நிலை

வீடுபேற்றினைத் தருவதில்லை; ஆன்மாவை விடுவிப்பதில்லை. ஒரு மனிதன் எல்லாச் சித்திகளையும் பெறலாம்; ஆனால், எய்திய நிலையினின்று மீட்டும் விழுந்துவிடலாம். ஆன்மா இயற்கைக்கு அப்பாற்சென்றாலன்றி அதற்கு ஒரு நிலைபேறு இல்லை. முறை எளிதாகக் காணப்படினும், அடைவது கடினம். மனமானது தன்னைப் பற்றியே சிந்திப்பதே நாம் குறிப்பிட்ட முறை. ஒரு வகை எண்ணத்தினையும் மனத்தினுள்ளே புகவொட்டாது, எண்ணம் வரின் அதனை வெட்டி விழுத்தி, மனத்தினை வெறுமையாக்க வேண்டும்; இதனை நாம் செய்யக்கூடுமாயின், அந்தக்கணமே வீடு பேற்றினை அடைவோம். பழக்கமும் ஆயத்தமுமில்லாத மக்கள் தங்கள் மனத்தை வெறுமையாக்க முயலும் பொழுது அதனைப் பேதைமைக்குக்காரணமாகிய தமசினால் மூடிக்கொள்ளுகிறார்கள். இதனால் மனம் சோம்பலும் பேதைமையும் உடையதாகின்றது. மனத்தை வெறுமையாக்கிவிட்டோமென்று அவர்கள் எண்ணுகிறார்கள். உண்மையில் அங்ஙனம் செய்வதற்கு மிகப்பெரிய வலிமை வேண்டும். மிகவுயர்ந்த அடக்கம் வேண்டும். உலகினைக் கடந்த அசம்பிரஞ்ஞாத சமாதி நிலை வந்தெய்தும் பொழுது, சமாதியானது வித்தில்லாததாகின்றது. இதன் பொருளென்ன? உணர்வோடு கூடிய ஒரு முகப்பட்ட நிலையிலே மனமானது சித்தத்திலுள்ள அலைகளை அடக்கி வைத்திருக்கிறது. இந்த அலைகள் சம்ஸ்கார ரூபமாக அமைந்திருக்கின்றன. வித்துப்போன்ற இந்தச் சம்ஸ்காரங்கள் உரிய காலம் வரும்பொழுது மீண்டும் அலைகளாக மாறுகின்றன. இந்தச் சம்ஸ்காரங்களையெல்லாம் அழித்த பின்னர் மனமே ஏறக்குறைய நாசமாகின்றது. அதன் பின்னர், சமாதி வித்தில்லாததாகின்றது. வாழ்க்கையாகிய மரத்தினை மீண்டும் மீண்டும் உருப்படுத்துவதற்கு வேண்டிய வித்துக்கள் மனத்தில் இருப்பதில்லை; ஓய்வின்றிச் சுழன்று வருகின்ற பிறப்பிறப்பாகிய சம்சார வட்டமும் அற்றுப் போகின்றது.

மனமுமில்லாது, அறிவுமில்லாது, ஒழிந்து போகின்ற நிலை எப்படிப்பட்டதென நீங்கள் கேட்கலாம்? நாம் அறிவு என்று சொல்வது அறிவினைக் கடந்த நிலைக்குக் கீழானது. இரு வேறு அந்தங்களில் உள்ளவை பெரிதும் ஒரு தன்மையனவாய்த் தோன்றுகின்றன என்னும் உண்மையை எப்பொழுதும் மனத்தில் வைத்திருக்க வேண்டும். ஆகாயத்தின் மிகக்குறைந்த அசைவு இருளாயிருக்கும்; இடைப்பட்ட நிலை ஒளியாயிருக்கும்; மிகவுயர்ந்த அசைவு மீட்டும் இருளாயிருக்கும். அது போலவே, அறிவின்மை மிகக்குறைந்த நிலை; அறிவு இடைப்பட்ட நிலை;

அறிவுக்கு அப்பாற் செல்வது மிகவுயர்ந்த நிலை; இரண்டு அந்தங்களும் ஒருபடியாகத் தோன்றுகின்றன. அறிவும் செயற்கையாலெய்திய ஒரு கூட்டப்பொருளே; உண்மைப் பொருளன்று.

மிகவுயர்ந்த ஒருமுகப்பட்ட நிலையை இடைவிடாது பயில்வதனால் எய்துகின்ற பயன் என்ன? அலையோடு கூடிய பழைய சம்ஸ்காரங்களனைத்தும் சோம்பலும் அழிந்து போகின்றன. நன்மைப்பாலனவாகிய சம்ஸ்காரங்களும் அழிந்து போகும்; பொன்னோடு கலந்த பொருள்களையும் அழுக்கினையும் அகற்றுவதற்கு இரசாயன உப்புக்களை வைத்து எரிப்பது இதனை ஒக்கும். களிம்போடு கூடிய உலோகம் உருக்கப்படும் பொழுது களிம்பும் இரசாயன உப்புகளும் ஒருங்கு எரிந்துபோகின்றன. இடைவிடாத பயிற்சியானது பழமையாய் உள்ள குற்றமான சம்ஸ்காரங்களையும் நல்ல சம்ஸ்காரங்களையும் நிறுத்திவிடும். நல்ல சம்ஸ்காரங்கள் தீய சம்ஸ்காரங்களை அகற்றிவிட, ஆன்மாவானது நன்மை தீமையினால் தடைபடாது, எங்கும் நிறைந்திருத்தலும் எல்லா வல்லமையும் எல்லா அறிவும்கொண்டு, தன்னொளியோடு விளங்கும். அப்பொழுது மனிதன் தனக்குப் பிறப்பு இறப்பு இருந்ததில்லையெனவும், மண்ணகமும் விண்ணகமும் வேண்டுவன அல்லவெனவும் அறிவான்; தான் வந்ததும் போனதுமில்லையெனவும், இயற்கையே அசைவுற்றதெனவும், அந்த இயக்கம் ஆன்மாவில் பிரதிபலித்ததெனவும் அறிவான். கண்ணாடியால் பிரதிபலிக்கப்பட்ட ஒளிக்கதிர் சுவரிலே இயங்குகிறது; தான் இயங்குவதாகச் சுவர் மூடத்தனமாக நினைக்கிறது. நம்மனைவருக்கும் அப்படியே சித்தமானது வேறு வேறு உருவங்களாகி இடைவிடாது இயங்குகிறது. நாமே இவ்வேறுபட்ட உருவங்களென்று நாம் நினைக்கிறோம். இந்த மயக்கங்களெல்லாம் அகன்றுவிடும். விடுதலையுற்ற ஆன்மா மன்றுடவோ, இறைஞ்சவோ வேண்டுவதில்லை. அது கட்டளையிடும்பொழுது எதனை விழைகிறதோ, அது உடனே கைகூடும்; எது வேண்டுவதோ அதைச் செய்யும். சாங்கிய தத்துவத்தின்படி கடவுள் ஒருவர் இல்லை. இந்தப் பிரபஞ்சத்திற்குக் கடவுள் ஒருவர் இருத்தல் இயலாதென்று சாங்கிய தத்துவம் சாற்றுகிறது. கடவுள் ஒருவர் இருந்தால், அவர் ஓர் ஆன்மாவாக இருத்தல்வேண்டும். அந்த ஆன்மாவும் பந்தமுற்றதாகவோ, விடுதலையுற்றதாகவோ, இருக்க வேண்டும். இயற்கையினாலே தளையுறப்பட்ட ஆன்மா படைத்தல் கூடுமா? அதுவே அடிமையாயிருக்கின்றதே! இனி வேறு

கோணத்திலிருந்து நோக்கும்பொழுது, விடுதலையான ஆன்மா இந்தப் பொருள்களைப் படைத்துத் தொழில்புரிய வேண்டுவ தெதற்கு? அதற்கு இச்சைகளில்லை; படைக்க வேண்டிய அவசிய மேற்படாது. இரண்டாவதாக, இயற்கையே அனைத்தினை யும் தெளிவுபடுத்துகின்றது. கடவுளைப் பற்றிய ஆராய்ச்சி வேண்டுவதில்லை எனச் சாங்கிய நூல் கூறுகின்றது. கடவுள் இருக்க வேண்டிய அவசியமென்ன? கபிலர் இன்னும் ஒன்று கூறு கிருர்: "பரிபூரண நிலையை அடைந்தும், எல்லாச் சத்திகளையும் பூரணமாகத் துறப்பதற்கு முடியாமையினுலே குறைவுற்றிருக்கிற பல ஆன்மாக்கள் இருக்கின்றன. அவ்வான்மாக்களின் மனமானது இயற்கையிலே அமிழ்ந்து இயற்கைக்குத் தலைமை வகித்து வெளிப்படுகின்றது. அத்தகைய ஆன்மாக்களே தேவர்கள்." சாங்கியர் கொள்கைப்படி நாமெல்லாம் அத்தகைய தேவர்களாவோம்; வேதங்களிலே கூறப்படுகிற கடவுளும் இந்த முத்தான்மாக்களில் ஒருவரேயாவர். அவர்களுக்கு அப்பால் நித்திய முத்தராக இந்தப் பிரபஞ்சத்தைப் படைப்போர் ஒருவர் இலர் என்பது சாங்கியரது கொள்கை. ஆனுல், யோகிகளோ என்ருல், "அப்படியன்று; கடவுள் ஒருவர் இருக்கிருர்; எல்லா ஆன்மாக்களிலும் வேருகிய ஆன்மா அவர்; எல்லாப் படைப் புக்கும் நித்தியமாகிய தலைவர் அவர்; என்றும் இயல்பாகவே தளையின் நீங்கியவர் அவர்; எல்லா ஆசிரியர்கட்கும் ஆசிரிய ரவர்," என்று கூறுகிருர்கள். பிரகிருதியிலே லயப்பட்டவர் களெனச் சாங்கியர் கூறுகிற ஜீவர்களும் உளர் என யோகிகள் கொள்ளுகிருர்கள். பரிபூரண நிலையை அடையாத யோகிகள் அவர்களென்றும், முத்தியை ஒரு கால எல்லைக்குள் அடையா விடினும் பிரபஞ்சத்தின் பாகத்துக்குத் தலைவராக அன்னுர் இருப்பாரென்றும் யோகிகள் கூறுவார்கள்.

भव-प्रत्ययो विदेह-प्रकृतिलयानाम् ॥ १९ ॥

**19.** இந்தச் சமாதி (மிகவுயர்ந்த தியாகத்தோடு இயைந்து நில்லாதவிடத்து) விதேகர்களும் (இந்திராதி தேவர்களும்), பிரகிருதியிலே லயமடைந்தவர்களும் மீட்டும் தோன்றுவதற்குக் காரணமாகின்றது.

இந்திய தத்துவ சாத்திர முறையிலே தேவர்களுடைய உயர்ந்த பதவியை ஒவ்வொரு காலத்தில் வேறு ஆன்மாக்கள்

ஏற்று நடத்துவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அத்தகைய ஆன்மாக்கள் பூரணமடைந்தவைகளல்ல.

श्रद्धा-वीर्य-स्मृति-समाधि-प्रज्ञा-पूर्वक इतरेषाम् ॥ २० ॥

**20. மற்றவர்களுக்கு (இந்தச் சமாதியானது) சிரத்தை, வீரியம், நினைவு, ஒருமுகப்படுதல், மெய்யறிவு என்னும் இவை வழியாக வருகிறது.**

கடவுளர்களுடைய பதவியும் புவனங்களை ஆளுவோர்களுடைய பதவியும் வேண்டாவென வெறுத்து நிற்போர் இவராவர். இவர் மோட்சத்தை அடைகின்றனர்.

तीव्रसंवेगानामासन्नः ॥ २१ ॥

**21. விரைந்து முயலுவோருக்குப் பயன் சீக்கிரம் கைகூடுகிறது.**

मृदुमध्याधिमात्रत्वात्ततोऽपि विशेषः ॥ २२ ॥

**22. கைக்கொண்டு ஒழுகுகிற சாதனுநுஷ்டானங்கள் மெதுவாகவும், நடுத்தரமாகவும், விரைவாகவும் இருப்பதற்கு இயையப் பலனைப் பெறுவதும் வேறுபட்டு நிற்கும்.**

ईश्वरप्रणिधानाद्वा ॥ २३ ॥

**23. ஈசுவரனை வழிபடுதலினால் (இதனை எய்தலாம்).**

क्लेशकर्मविपाकाशयैरपरामृष्टः पुरुषविशेष ईश्वरः ॥ २४ ॥

**24. கவலைகளாலும், செயல், பயன், விருப்பங்களாலும் (முக்காலத்திலும்) தீண்டப்படாதவனும், ஜீவனைவிட வேறானவனுமான புருஷன் ஈசுவரன் (மிகவுயர்ந்த கர்த்தா).**

பதஞ்சலி முனிவர் உரைத்த யோக தத்துவம் சாங்கிய தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டது என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். சாங்கியத்தில் ஈசுவரனுக்கு இடமில்லை; யோகத்தில் உண்டு. ஆனாலும், யோகிகள் படைத்தல் முதலாகிய குணங்களை ஆண்டவனுக்கு ஏற்றிச் சொல்லுவதில்லை; பிரபஞ்

சத்தைப் படைக்கிற கடவுளே ஈசுவரன் எனக் கருதவில்லை. வேதங்களின்படி, பிரபஞ்சத்தைப் படைத்தவன் ஈசுவரன். பிரபஞ்சம் ஒழுங்காக அமைந்திருப்பதால், அது ஒரு சித்தியிலிருந்து வெளிப்பட்டிருக்க வேண்டும். யோகிகளும் கடவுள் வேண்டுமென்று நிறுவுகிறார்கள். ஆயினும், தங்களுக்கென்றுள்ள ஒரு நூதன முறையினால் அதனை அடைகிறார்கள். அவர்கள் சொல்லுவதாவது :

तत्र निरतिशयं सर्वज्ञत्वबीजम् ॥ २५ ॥

**25. மற்றவர்களிடம் வித்து வடிவமாய்த் தோன்றும் பூரண அறிவானது அவனிடம் எல்லையற்றதாய் விளங்குகிறது.**

மனமானது எப்பொழுதும் இரண்டு எல்லைகளிடையே இயங்க வேண்டியதாயிருக்கின்றது. அளவினுட்பட்ட இடத்தை நீங்கள் நினைத்தல் கூடும். ஆனால், அந்த எண்ணமே அளவு கடந்த பரப்பினைப் பற்றிய எண்ணத்தைத் தருகின்றது. உங்கள் கண்களை மூடிச் சிறிய அளவு இடத்தை நினையுங்கள். அந்தச் சிறிய வட்டத்தை நினைக்கும் பொழுதே அதனைச் சூழ்ந்திருக்கும் எல்லையற்ற வட்டத்தை நினைக்க வேண்டியவர்களாயிருக்கிறீர்கள். காலத்தைக் குறித்தும் இவ்வாறேயாம். ஒரு விநாடியைப்பற்றி நினைக. அந்த நினைவோடு எல்லையற்ற காலத்தை நினைக்க வேண்டுவதாகிறது. அறிவும் அவ்வாறேயாம். அறிவு மனிதனிடத்தே சிறு விதையாய் இருக்கிறது. அதனைச் சூழ எல்லையற்ற அறிவு இருக்கிறதாகக் கொள்ள வேண்டும். எல்லையற்ற அறிவு இருக்கிறதென்பதை நமது மனத்தின் அமைப்பே காட்டுகின்றது. இந்த எல்லையற்ற அறிவை யோகிகள் ஈசுவரன் என்பார்கள்.

स पूर्वेषामपि गुरुः कालेनानवच्छेदात् ॥ २६ ॥

**26. அந்த ஈசுவரன் காலத்தினால் அளவு கூறப்படாதிருத்தலால், மிகப்பழைமையான ஆசிரியர்களுக்கும் அவனே குரு ஆவான்.**

அறிவு அனைத்தும் நம்முள்ளே அமைந்திருக்கின்றது என்பது உண்மையே. ஆனால், இவ்வறிவு மற்றோர் அறிவினாலே எழுப்பப்பட வேண்டும். அறிகின்ற வன்மை நமக்கு உண்டு. ஆயினும், அது எழுப்பப்பட வேண்டும். அறிவினை எழுப்பு

தற்கு மற்றோர் அறிவு இன்றியமையாதது என்பது யோகியின் கொள்கை. இறந்த, உணர்ச்சியற்ற சடப்பொருள், அறிவை எழுப்புவதில்லை. அறிவின் தொழிலே அறிவை எழுப்புகிறது. நம்மிடத்திலுள்ள ஆற்றலை எழுப்ப அறிவுடைய உயிர்கள் வேண்டும். ஆதலால், ஞானசாரியர்கள் எப்பொழுதும் வேண்டும். உலகு அவர்களில்லாது இருந்ததில்லை. அவர்களின்றி ஒரு வகை அறிவும் வரமாட்டாது. கடவுளே குருக்களுக்குக் குரு. ஏனைய குருக்கள் எவ்வளவு பெரியவர்களாயிருந்தாலும், தேவர்களாயிருந்தாலும், காரணத்தால் எல்லைப்படுத்தப்பட்டவர்கள். கடவுள் அப்படியல்லர். யோகிகள் இரண்டு நூதன முடிபுகளைக் காட்டுகிறார்கள். முதலாவது எல்லையுட்பட்டதை நினைக்கும் பொழுது மனமானது எல்லையற்றதை நினைக்க வேண்டும். இந்தக் காட்சியில் ஒரு பாகம் உண்மையாயிருந்தால், மற்றப்பாகமும் உண்மையாயிருக்க வேண்டும். ஏனெனில், மனத்திற்குக் காட்சியென்ற அளவில் இரண்டு பாகமும் ஒரே மதிப்புள்ளனவே. மனிதனுக்குச் சிற்றறிவு உண்டு என்பது கடவுளுக்கு முற்றறிவு உண்டு என்பதைக் காட்டுகின்றது. ஒன்றினைக் கொண்டால் மற்றதை ஏன் கொள்ளக்கூடாது? ஆசிரியனின்றி அறிவு கைகூடாதென்பது இரண்டாவது முடிபு. இக்காலத்துத் தத்துவ ஞானிகள் சொல்லுவதுபோல, மனிதனிடத்திலிருந்து வளர்கின்ற ஒன்று, அவனிடத்துள்ளதே. முழு அறிவும் மனிதனிடத்து இருக்கின்றது. ஆனால், அதை வெளிப்படுத்துவதற்குச் சில சார்புகள் வேண்டும். ஆசிரியரல்லாது அறிவைப் பெறுதல் இயலாது. மனித ஆசிரியர், தேவ ஆசிரியர், கந்தருவ ஆசிரியர் என்ற இவரெல்லாம் எல்லையுட்பட்டவர். இவர் அனைவருக்கும் முன்பு இருந்த ஆசிரியர் யார்? கடைசி முடிபாகக் கால எல்லையினுட்படாத குரு ஒருவர் உளர் என நாம் கொள்ள வேண்டுபவர்களாயிருக்கிறோம். அவர் காலத்தினால் எல்லைப்படாதவர்; அளவுகடந்த ஞானத்தையுடைய ஆசாரியர்; முதலும் முடிவுமில்லாதவர். அவர் கடவுள் எனப்படுவர்.

तस्य वाचकः प्रणवः ॥ २७ ॥

27. அவனுடைய 'வாசகம்' பிரணவம் (ஓம்).

மனத்திலுள்ள ஒவ்வொரு கருத்திற்கும் இயைந்த சொல் ஒவ்வொன்று இருக்கிறது. கருத்தும் சொல்லும் பிரிக்கப்படாதன. சொல்லென்று சொல்லப்படுவன ஒரே பொருளின் புறப்பகுதியா

யிருக்க, கருத்து என்று சொல்லப்படுவது அகப்பகுதியாயிருக்கின்றது. சொல்லையும் கருத்தையும் ஒருவராலும் பகுத்தல் கூடாது. மொழியானது சில மனிதரால் நிச்சயித்து உண்டாக்கப்பட்டதென்னும் கொள்கை தவறென்பது விளக்கப்பட்டிருக்கிறது. மனிதன் உள்ள நாள் முதற்கொண்டு சொற்களும் மொழியும் இருந்து வருகின்றன. ஒரு கருத்துக்கும் ஒரு சொல்லுக்கும் உள்ள தொடர்பு என்ன? ஒரு சொல்லோடு பொருந்திய கருத்து ஒன்று எப்பொழுதும் இருத்தல் வேண்டும். ஆயினும், ஒரு கருத்து எப்பொழுதும் ஒரே சொல்லைக் கொள்ளவேண்டுமென்னும் அவசியமில்லை. வேறுபட்ட இரு வகை நாடுகளிலே கருத்து ஒன்றாயிருப்பினும் மொழி வேறாயிருக்கலாம். ஒவ்வொரு கருத்தையும் வெளிப்படுத்த ஒரு சொல் வேண்டும். ஆனால், இந்தச் சொற்கள் ஒரே ஒலியுள்ளனவாய் இருக்க வேண்டுவதில்லை. வேறு வேறு ஜாதியாருக்கிடையே ஒலிகள் வேறு வேறாயிருக்கலாம். "சொல்லுக்கும் கருத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு இயற்கையில் அமைந்ததாயினும், ஓர் ஒலிக்கும் ஒரு கருத்திற்கும் இடையே மாறுபாடற்ற தொடர்பு உண்டென்பதை இது கருதமாட்டாது," எனப் பாஷியகாரர் கூறுகிறார். ஒலிகள் வேறுபடுகின்றன; ஆயினும், ஒலிகளுக்கும் கருத்துகளுக்கும் இடையேயுள்ள தொடர்பு இயற்கையாக அமைந்தது. குறிக்கப்பட்ட பொருளுக்கும் அதனைக் குறிக்கும் அடையாளத்திற்குமிடையே உண்மையான தொடர்பு இருந்தால், கருத்திற்கும் ஒலிக்கும் இடையே உள்ள தொடர்பு பொருத்தமுடையதாகும். அது வரையும் அந்த அடையாளம் பொது வழக்குக்கு வரமாட்டாது. அடையாளமானது குறித்த பொருளை வெளிப்படுத்துகிறது. அந்த அடையாளம் பொருளைப் பல முறையும் வெளிப்படுத்தியதென நாம் அனுபவத்தில் கண்டால், அவற்றிடையே உண்மைத் தொடர்பு இருக்கிறதென்பதை உண்மையாகவே நாம் அறிவோம். பொருள்கள் முன்னிலையில் இல்லாதிருப்பினும், குறியீடாகிய அடையாளங்களைக்கொண்டு ஆயிரக்கணக்கான மக்கள் பொருளினை அறிவார்கள். குறியீட்டுக்கும் குறிக்கப்பட்ட பொருளுக்குமிடையே இயற்கையான தொடர்பு இருக்க வேண்டும். குறியீட்டினை உச்சரித்த பொழுது குறிக்கப்பட்ட பொருள் தோற்றும். கடவுளை வெளிப்படுத்துகின்ற சொல் 'ஓம்' என்பது எனப் பாஷியகாரர் சொல்லுகிறார். இந்தச் சொல்லை ஏன் வற்புறுத்திக் கூறுகிறார்? கடவுளைக் குறிக்கும் சொற்கள் நூற்றுக்கணக்காய் இருக்கின்றன. ஓர் எண்ணம் ஆயிரம் சொற்களோடு தொடர்புபட்டு இருக்கிறது.

கடவுளெனும் எண்ணம் நூற்றுக்கணக்கான சொற்களோடு தொடர்புடையது. ஒவ்வொரு சொல்லும் கடவுளுக்கு அறிகுறியாய் இருக்கின்றது. நல்லது; ஆனால் இந்தச் சொற்களினிடையே ஒரு பொதுத்தன்மை இருக்க வேண்டும். இந்த அடையாளங்களுக்கு ஆதாரமாகிய பொது நிலம் வேண்டும். எது பொதுவான அடையாளமோ, அது சிறந்ததாக அனைத்தினையும் காட்டுவதாக அமைந்திருக்கும். ஓர் ஒலியை உண்டாக்கும்பொழுது, குரலையும், அண்ணத்தையும் ஓர் இசைக் கருவியாக்குகின்றோம். எல்லா ஒலிகளும் தோற்றுவதற்கு ஆதாரமாகி உள்ள இயற்கையொலி ஒன்று உண்டா? 'ஓம்' என்பது அத்தகைய ஒலி; எல்லா ஒலிகளுக்கும் ஆதாரமானது. முதலெழுத்தாகிய அகரம் மூல ஒலியாய் இருக்கின்றது; இதுவே திறவுகோல்: நாவையும் அண்ணத்தையும் தீண்டாது உச்சரிக்கப்படுவது. மகரம் மூடிய உதடுகளால் ஆக்கப்படுவதாய் ஒலி வரிசையில் கடையாகி நிற்பது. உகரமானது வாயினுள்ளேயிருக்கின்ற இசைக்கருவியின் மூலத்தினின்று முடிபுக்கு உருண்டு செல்வது. ஆகவே 'ஓம்' என்பது ஒலியுண்டாகும் வழியினை முற்றிலும் காட்டுகிறது. ஆதலாலே, அடையாளங்களுள் மிக இயற்கையானதும் வேறுபட்ட ஒலியனைத்திற்கும் கருவானதும் அதுவே. இயற்றுதற்குரிய எல்லா மொழிகளின் எல்லையையும் ஆற்றலையும், அது காட்டுகின்றது. இந்த ஆராய்ச்சிகள் ஒருபாலாக, இந்தியாவிலுள்ள வேறுபட்ட சமயக் கருத்துகள் அனைத்தும் 'ஓம்' என்னும் இந்த மொழியினைச் சுற்றியிருக்கின்றன என்பதை நாம் காண்கிறோம். வேதங்களிலுள்ள சமயக் கருத்துகள் அனைத்தும் 'ஓம்' என்னும் இந்த மொழியைப்பற்றி நிற்கின்றன. 'இதனால் அமெரிக்காவுக்கோ, இங்கிலாந்துக்கோ, பிற நாட்டுக்கோ ஆவது என்ன?' எனில், இந்தியாவின் சமய வளர்ச்சியின் ஒவ்வொரு படியிலும் இந்தச் சொல்லானது கைக்கொள்ளப்பட்டு, கடவுளைப்பற்றிய வேறு வேறாகிய எண்ணங்களைக் கருதுவதற்கு உபயோகிக்கப்பட்டது. அத்துவைதிகளும், துவைதிகளும், அத்துவைத துவைதிகளும், பிரிவுபட்டோரும், கடவுள் இல்லையென்பவர்களும், 'ஓம்' என்னும் இம்மொழியைக் கொள்ளுகிறார்கள். 'ஓம்' என்னும் இந்தக் குறியீடு மக்கட் கூட்டத்தினருள் பெரும்பாலாரது சமய நோக்கத்திற்கு அடையாளமாயிருக்கிறது. உதாரணமாகக் கடவுளைக் குறிக்கும் 'God' என்னும் ஆங்கில மொழியை எடுத்துக்கொள்வோம். அது எல்லையுட்பட்ட செயலைக் குறிக்கும்; அதற்கப்பாற்சென்றாற்

குணப்பண்புகளைச் சேர்த்து உருவமுள்ள, உருவமில்லாத, ஒப்புயர்வில்லாத கடவுள் என்று இவ்வாறு சொல்ல வேண்டும். மற்றைய மொழிகளிலும் கடவுளைக் குறிப்பிடும் சொற்கள் இத் தகையனவே. அவற்ருற் குறிக்கப்படுவது மிகச் சிறிது. 'ஓம்' என்னும் இம்மொழி வேருகிய பல குறிப்புகளை உடையது. ஆத லால், இது எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுவது.

तज्जपस्तदर्थभावनम् ॥ २८ ॥

**28. 'ஓம்' என்பதனைப் பல முறையும் உச்சரித்து, அதன் பொருளைப் பாவனை செய்ய வேண்டும்.**

எதற்காகப் பல முறையும் உச்சரிக்க வேண்டும்? சம்ஸ்காரங் கள் மனத்திலே உறைகின்றன என்பதை நாம் மறத்தல் கூடாது. உள்ளத்திலுள்ள பதிவுகளின் கூட்டம் மனத்தில் இருக்கின்றது. அது வரவர மறையுமெனினும், நிலைபெற்று இருக்கின்றது. சரி யான தூண்டுகோல் வரும்பொழுது அது வெளிப்பட்டுத் தோன் றும். அணுக்களின் இயக்கம் ஒருபொழுதும் ஒழிவதில்லை. இந்தப் பிரபஞ்சம் அழிந்து போகும் பொழுது பெரிய இயக்கங்களெல்லாம் மறைந்து போகின்றன. கதிரவனும், மதியும், விண்மீன்களும், ஞாலமும் உருகிப் போக, அணுக்களிலுள்ள இயக்கம் மாத்திரம் மிஞ்சியிருக்கும். ஒவ்வோர் அணுவும் பெரிய உலகம் செய்கின்ற கிரியையினைச் செய்யும். சித்தத்தினுடைய இயக்கங்களும் அடங் கிப் போகும் பொழுது, அதன் அணுவியக்கங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. காலத்திலே தாக்கல் ஏற்படும்பொழுது அவை மீட்டும் வருகின்றன. உச்சரிப்பதென்பதன் கருத்து இப் பொழுது நமக்குத் தெளிவாகலாம். ஆன்மிக சம்ஸ்காரங்களுக்கு நாம் கொடுக்கக்கூடிய மிகப் பெரிய தாக்கல் அதுவாகும். "தூய புருடர்களுடைய கூட்டுறவிலே ஒரு கணப்பொழுது கழிப்பதனுல் ஏற்படும் கப்பலானது பிறவிக் கடலைக் கடக்க உதவும்." அதுவே கூட்டுறவின் வலிமையாகும். 'ஓம்' என்னும் மந்திரத்தை உச்ச ரிப்பதும் அதன் கருத்தை ஆராய்வதும் உள்ளத்திலே நல்ல சேர்க் கையை உண்டாக்குவதாகும். கற்றுத் தியானம் செய்க; சிரவணம் செய்த பின் சிந்தனை செய்க; இதனுல் உங்கள் உள்ளத்தில் ஓர் ஒளி உண்டாகும்; ஆன்மா வெளிப்பட்டுத் தோன்றும்.

ஆனுல், ஒருவன் 'ஓம்' என்னும் மந்திரத்தோடு அதன் பொருளையும் நினைக்க வேண்டும். தீயோருடைய கூட்டுறவை வெறுத்துவிடுக; பழைய புண்களின் தழும்புகள் உங்களிடமிருக்

கின்றன. தீய கூட்டம் அவற்றை வெளிப்படுத்தும்; அது போலவே நல்லோருடைய சேர்க்கை நம்மிடத்திலுள்ள நல்ல சம்ஸ்காரங்களை—உள்ளத்தில் மறைந்து கிடப்பனவற்றை—வெளிப்படுத்துமென்பதை நாம் அறிவோம். நல்ல சேர்க்கையைக் காட்டிலும் தூய்மை மேலானது. உலகிலே பிறிதொன்றும் இல்லை. ஏனெனில், நல்ல சம்ஸ்காரங்கள் அப்பொழுது மேலே வருகின்றன.

ततः प्रत्यक्चेतनाधिगमोऽप्यन्तरायाभावश्च ॥ २९ ॥

**29. அதிலிருந்து தனியாகி (ஆன்மாவை) சேதனனைப் பற்றிய உண்மையறிவும் (விரோதமான தடைகள் இன்மையும்) உண்டாகிறது.**

பிரணவ மந்திரத்தை நினைப்பதனாலும் உச்சரிப்பதனாலும் முதலிலே உண்ணேக்கிய சத்தி அதிகப்படும். மனத்திலும் உடலிலும் ஏற்படும் தடைகள் அகன்றுவிடும். யோகிக்கு எய்தும் தடைகளாவன யாவை?

व्याधि-स्त्यान-संशय-प्रमादालस्याविरति-भ्रान्तिदर्शनालब्धभूमिकत्वानवस्थितत्वानि चित्तविक्षेपास्तेऽन्तरायाः ॥ ३० ॥

**30. நோய், மனச்சோர்வு, ஐயம், ஊக்கமின்மை, சோம்பல் (கண்ட பொருளைக் கைவிட்டயர்தல்), பற்றுள்ளம், மயக்கக் காட்சி, சமாதியை அடையாமை, பெற்ற நிலையினின்றும் விழுந்து விடுதல் என்னுமிவை இடையூறுகளாகும்.**

நோய்: வாழ்க்கைக் கடலைக் கடந்து அக்கரையையடைவதற்கு இந்த உடலம் ஒரு தோணியாய் இருக்கிறது; இதனைக் கருத்தாகப் பார்க்க வேண்டும். உடல் நலமில்லாத மனிதர் யோகிகளாக இருக்க முடியாது.

மனச்சோர்வு: உள்ளச் சோர்வினுல் எடுத்துக்கொண்ட பொருளின்மேலுள்ள நிறைந்த ஊக்கமும் கெட்டுப் போகின்றது. அஃதின்றிப் பயிற்சி செய்தற்கு வேண்டிய மனத் திடமும் ஆற்றலும் எய்த மாட்டா.

ஐயம்: ஒருவன் புத்தியினுற்கண்ட துணிவு எவ்வளவு வலியுடைத்தாயினும், தூரத்தில் உள்ளவற்றைக் காண்டல் கேட்டல் முதலாகிய மானத அனுபவங்கள் எய்தினுலன்றிச் சாத்திரத்தின் உண்மையைப்பற்றி மனத்திலே ஐயங்கள் எழும்.

இத்தகைய தோற்றங்கள் மனத்தை வலுப்படுத்திச் சாதக்னை நன்கு முயலப் பண்ணும்.

பெற்ற நிலையினின்றும் விழுந்துவிடுதல் : பயிலும் பொழுது சில நாள்களுக்கோ வாரங்களுக்கோ மனம் அமைதியடைந்து எளிதாக ஒருவழிப்படும் ; விரைவாக நீங்கள் முன்னேற்றமடைவதைக் காணலாம். சடுதியாக ஒரு தினத்தில் முன்னேற்றம் நின்றுவிடும். திக்குத்தெரியாது திகைப்பீர்கள் ; ஆயினும், கடைப்பிடியாகப் பயிற்சி செய்க. இத்தகைய எழுதல் விழுதல் களினூலே எல்லா வகை முன்னேற்றங்களும் நிகழும்.

दुःख-दौर्मनस्याङ्गमेजयत्वश्वासप्रश्वासा विक्षेपसहभुवः ॥३१॥

**31. சித்தச் சிதறுதலோடுகூடத் துக்கம், மனக்கலக்கம், உடல் நடுக்கம், பெருமூச்செறிதல் ஆகிய இவை உண்டாகின்றன.**

சமாதியைப் பயிலும் பொழுது மனத்துக்கும் உடலுக்கும் பூரண அமைதி உண்டாகிறது. பயிற்சி பிழைபடினும், அன்றி, வேண்டும் அளவு அடக்கமில்லாதிருப்பினும், இந்தக் கலக்கங்கள் உண்டாகின்றன. பிரணவத்தை உச்சரித்தலும் ஆண்டவனிடத்தில் தஞ்சம் புகுதலும் மனத்தினை வலுப்படுத்திப் புதிய ஊக்கத்தைத் தருவன. நரம்பின் நடுக்கம் ஏறக்குறைய எல்லாருக்கும் உண்டாகும். அவற்றைப் பொருட்படுத்தாது பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். பயிற்சி அவற்றைக் குணப்படுத்தி ஆசனத்தை உறுதிப்படுத்தும்.

तत्प्रतिषेधार्थमेकतत्त्वाभ्यासः ॥ ३२ ॥

**32. இவற்றைத் தடுக்கும்பொருட்டு யாதேனும் ஒரு தத்துவத்தில் மனத்தை நிறுத்திப் பழக வேண்டும்.**

சிறிது காலத்திற்கு மனத்தை ஏதாவது ஒரு பொருளின் உருவத்தில் நிலைத்திருக்கச் செய்தால், இந்த இடையூறுகள் அகன்றுவிடும். இது பொதுவாகிய உபாயம் ; மேல் வருகின்ற சூத்திரங்களில் இது விரித்துச் சிறப்பித்துக் காட்டப்படும். ஒரே பயிற்சி எல்லாருக்கும் பொருந்தாதாதலின், வேறு வகைப்பட்ட முறைகள் சொல்லப்படுகின்றன. செயல் முறையாலே ஒவ்வொருவரும் தத்தமக்கு அதிகம் உதவியாயிருப்பதனைக் கண்டறிய வேண்டும்.

मैत्रीकरुणामुदितोपेक्षाणां सुखदुःखपुण्यापुण्यविषयाणां भावनातश्चित्तप्रसादनम् ॥ ३३ ॥

33. இன்புறுவாரிடத்து நட்பும், துன்புறுவாரிடத்து இரக்கமும், நல்லோரிடத்து உவகையும், தீயோரிடத்து (விருப்பு வெறுப்பற்று) நொதுமலாயிருத்தலும் ஆகிய இவற்றைப் பாவித்தலினால் சித்தத்திற்கு அமைதியுண்டாகின்றது.

இவை நான்கும் நமக்கு வேண்டுவன. எல்லோரிடத்திலும் நட்புக்கொள்ள வேண்டும். துன்புறுவாரிடத்து இரக்கம் காட்ட வேண்டும். இன்புற்றவரோடு இன்புறுதல் வேண்டும். தீயோரிடத்து விருப்பு வெறுப்பற்றிருக்க வேண்டும். நமது முன்னிலையில் வருகின்ற எல்லா விஷயங்களிடத்தும் இவ்வகையான பாவனைகள் வேண்டும். பொருள் நல்லதாயிருந்தால், அதனிடத்து நட்புப் பாராட்டுதல் வேண்டும். துன்பப்படுத்துகிறதென்று கண்டால், இரங்குதல் வேண்டும். நல்லதாயிருப்பின், உவகையுற வேண்டும். தீயதாயிருப்பின் (உபேக்ஷையாக) விருப்பு வெறுப்பற்றிருக்க வேண்டும். வேறுபட்ட விஷயங்களிடத்து மனத்தை வேறு வேறு நிலைகளில் வைத்தலினாலே அது பேரமைதியை அடைகின்றது. நமது மனத்தை இவ்வண்ணம் வைத்துக்கொள்ள மாட்டாமையினாலே, நாடோறும் நாம் நடத்துகிற வாழ்க்கையில் நமக்கு இடர்கள் வருகின்றன. உதாரணமாக, ஒரு மனிதன் நமக்குத் தீங்கு செய்தால், நாம் அவனுக்குத் தீங்கு செய்யவேண்டுமென்று எண்ணுகிறோம். இத்தகைய எதிர்ச் செயல்கள், நாம் நமது சித்தத்தை அமைதியாக வைத்திருக்க இயலாதவர்களென்பதைக் காட்டுகின்றன. எதிர்ச்செயலானது இலக்கை நோக்கி அலையெறிந்து வருகின்றது ; நாம் நமது வல்லமையை இழந்துவிடுகிறோம். பகைமை, பொல்லாப்பு முதலாகிய எதிர்ச் செயல்கள் மனத்துக்குக் கேட்டை விளைவிக்கின்றன. தீமையான எண்ணம் ஒவ்வொன்றும், பகைமை முதலிய எதிர்ச் செயல்களும் அடக்கியாளப்பட்டால், நமக்கு வலிவைத் தரும். இங்ஙனம் நம்மை நாமே அடக்குவதனால் நமக்கு ஒரு கேடுமில்லை ; நாம் காத்திராத வண்ணம் அளவு கடந்த நலத்தைப் பெறுகிறோம். பொறுமை வெகுளி என்னும் இவற்றை அடக்குவதால் நல்ல சத்தியைத் திரட்டி வைக்கிறோம். இது உயர்ந்த சத்திகளாக மாறும்.

प्रच्छर्दनविधारणाभ्यां वा प्राणस्य ॥ ३४ ॥

**34. மூச்சினை வெளியே விடுவதாலும் உள்ளே நிறுத்துவதாலும் உள்ளம் அமைதியடையும்.**

பிராணன் என்னும் மொழி வழங்கப்பட்டிருக்கிறது. பிராண
னென்பதற்கு மூச்சு என்பது நேர்க்கருத்தாகாது. பிரபஞ்சத்தி
லுள்ள சத்திக்குப் பிராணன் என்பது பெயர். பிரபஞ்சத்திலே
காணப்படுவனவும், இயங்கித் தொழில் புரிவனவும், உயிருள்ளன
வும் ஆகிய அனைத்தும் பிராணனுடைய தோற்றங்களே. பிரபஞ்
சத்திலே காணப்படுகிற சத்தியின் கூட்டுத்தொகை பிராணன்
எனப்படும். ஒரு காலவட்டந் தொடங்குவதற்கு முன்பு, பிராணன்
ஏறக்குறைய அசைவற்ற நிலையிலே இருக்கிறது. காலவட்டத்தின்
தொடக்கத்தில் பிராணன் தன்னை வெளிப்படுத்த ஆரம்பிக்
கின்றது. இயக்கமாக வெளிப்படுவது பிராணனே. இது மனித
இனங்களிலும் விலங்குகளிலும் நரம்பியக்கமாகக் காணப்படு
கிறது. பின்னும் பிராணனே எண்ணமாகவும் பிறவாகவும்
காணப்படுகிறது. பிரபஞ்சம் முழுவதும் பிராணன் ஆகாயம்
என்னும் இரண்டினாலாகிய சேர்க்கையேயாம். மனித உடலும்
அவ்வாறே. கண்டுணர்கின்ற எல்லாப் பொருள்களும் ஆகாயத்தி
லிருந்து வருகின்றன. வேறு வகைப்பட்ட சத்திகளெல்லாம்
பிராணனிலிருந்து வருகின்றன. இந்தப் பிராணனை வெளியே
செலுத்துவதும் உள்ளே நிறுத்துவதும் பிராணாயாமமெனப்படும்.
யோக தத்துவத்திற்குத் தந்தையாராகிய பதஞ்சலி முனிவர்,
பிராணாயாமத்தைப்பற்றி மிக விரிவான நெறிகளைக் கூறவில்லை.
பிற்காலத்திருந்த மற்ற யோகிகள் இந்தப் பிராணாயாமத்தைப்
பற்றி வேறு பல விஷயங்களைக் கண்டறிந்து அவற்றை ஒரு
பெரிய சாத்திரமாக்கிவிட்டார்கள். பதஞ்சலியார் பல வேறு
மார்க்கங்களுள்ளே இதனையும் ஒன்றாகக் கொள்ளுகிறாரேயன்றி,
இதைப்பற்றி அதிகம் வற்புறுத்திக் கூறவில்லை. காற்றை
வெளியே விட்டு உள்ளிழுத்துச் சிறிது நேரம் அடக்கிக்கொண்
டிருந்தால் மனம் சற்றே அமைதியடையும் என்பது அவரது
கருத்து. பிற்காலத்திலே இதினின்றும் பிராணாயாமமென்னும்
தனிச் சாத்திரம் உண்டாகியது எனக்காண்பீர்கள். பிற்காலத்தி
லுள்ள இந்த யோகிகள் என்ன சொல்லுகிறார்களென்று சிறிது
செவி சாய்த்துக் கேட்போம்: இவற்றில் சிலவற்றை நான்
உங்களுக்கு முன்னமே கூறியிருக்கிறேன். திரும்பவும் மொழி
வதனால் அவை மனத்திலே நன்றாய்ப் பதியலாம். பிராணனென்

பது மூச்சு அன்று என்பதை முதலிலே நினைத்துக்கொள்ள வேண்டும். மூச்சினை இயங்கச் செய்கின்றதெதுவோ, மூச்சுக்கு உயிராயிருப்பதெதுவோ, அதுவே பிராணன். மேலும், பிராண னென்னும் சொல் எல்லாப் புலன்களையும் குறிப்பது. அப்புலன் கள் பிராணன்களெனப்படுவன; மனமும் பிராணன். பிராண னென்பது ஒரு வல்லமையென்பதைக் காண்கின்றோம். ஆயினும், அதனை வல்லமை என்று சொல்லுதல் கூடாது. ஏனெனில், வல்லமை அதனிடத்திருந்து உண்டாகிற ஒரு வெளித்தோற்றம். அதுவே வல்லமையாகவும் இயக்குகின்ற அனைத்துமாகவும் வெளிப்படுகின்றது. சித்தமானது தன்னைச் சூழவிருக்கும் இடங் களிலிருந்து பிராணனை இழுத்து, அந்தப் பிராணனை உடலைக் காப்பாற்றுகின்ற வேறு வேருகிய உயிர்ச் சத்திகளாகவும், எண்ணம், சித்த சத்திகள் முதலிய ஏனைய சத்திகளாகவும் மாற்றி யமைக்கும் இயந்திரமாயிருக்கின்றது. மேலே காட்டப்பட்ட சுவாச முறையினுலே, உடலிலுள்ள வேறுபட்ட இயக்கங்களையும், உடலில் அமைந்திருக்கின்ற வேறு வேருகிய நரம்பியக்கங்களை யும் நாம் அடக்கியாளுதல் கூடும். முதலில் நாம் அவற்றைக் கண்டறிந்து சிறிது சிறிதாக அடக்கியாளுகின்றோம். மனித உடலிலே மூன்று வகையாகிய பிராண இயக்கங்கள் உண்டென்று பிற்காலத்து யோகிகள் கருதுகிறுர்கள். இடை, பிங்கலை, சுழு முனை என்பன இவற்றின் பெயர்கள். பிங்கலை, முள்ளந் தண்டுக்கு வலப்பாகத்திலுள்ளது. இடை, இடப்பாகத்தி லுள்ளது. முள்ளந்தண்டின் நடுவிலுள்ள சுழுமுனை, வெறுநாள மாய் இருக்கும். சாதாரண மனிதரிடத்தே காணப்படுவன இடை யும் பிங்கலையும். இவை வழியாகவே வாழ்வின் தொழில்கள் அனைத்தினையும் நாம் செய்கின்றோம். சுழுமுனை எல்லோரிடத்து மிருப்பினும், யோகியிடத்தேதான் செயல் புரிகின்றது. யோகத் தினுல் உடல் வேறுபாடடைகின்றதென்பதை நினைவில் வைக்க வேண்டும். பயின்றுகொண்டு போவதனுல் வேறுபாடுகள் உண் டாகும்; பயிற்சிக்கு முன்னிருந்த உடல் அவ்வண்ணமே இருப்ப தில்லை. இது நியாயமே; ஏனெனில், ஒவ்வொரு புது எண்ண மும் மூளையினூடாக ஒரு புதிய வாய்க்காலையுண்டாக்கும். பெரிதும் நிலை மாருத தன்மை மனிதருக்கு இயற்கையாய் இருக் கிறதென்பதை இதனுலே தெளிந்துகொள்ளலாம். முன்னுண் டான வழியானது எளிதாயிருத்தலினுலே மனிதருடைய இயற்கை முன்னுள்ள வழியாக ஓடுவது இயல்பு. மனத்தினை ஓர் ஊசியாக வும் மூளையிலுள்ள பொருளை அதன் முன்னிலையில் வைக்கப்பட்ட

மென்மையான பிழம்பாகவும் கொள்ளுவோமாயின், ஒவ்வோர் எண்ணமும் மூளை வழியாக ஒரு பாதையை வகுத்துக்கொள்ளுகிறதென்றும், மூளையிலுள்ள நரை நிறப்பொருள் இவற்றை வேறுபடுத்தி வைக்காதெனின், இப்பாதைகள் மூடுண்டுபோம் என்றும் நாம் அறியலாகும். நினைவுச்சத்தி என்பது இந்தப் பழைய பாதைகளின் மூலமாக எண்ணமானது மீட்டும் செல்லுவதாகும். ஆதலால், நரை நிறப்பொருள் இல்லாவிடின், நினைவும் இல்லாததாகும். எல்லோரும் அறிந்த ஒரு சில எண்ணங்களையெடுத்து அவற்றை ஒன்று கூட்டியும் பிரித்தும் ஒருவன் பேசும் பொழுது, அவன் சொல்வனவற்றைத் தொடர்ந்து செல்வது எளிது. இந்த வாய்க்கால்கள் எல்லோருடைய மூளைகளிலும் இருக்கின்றனவாதலால், இவற்றை அறிவது எளிது. புது எண்ணங்களோவென்றால், மூளையினாலே தொழிற்படுத்தப்படாது அகற்றப்படுகின்றன. பிராணன் புதுப் பாதைகளை அமைக்க முயலும் பொழுது மூளை அதனை விடுவதில்லை. நிலை மாறுதலை எதிர்த்து நிற்பதற்கு நியாயம் இதுவே. பிராணனென்னும் ஊசி எந்த மூளையிலே குறைந்த அளவு பாதைகளை ஏற்படுத்தியிருக்கிறதோ, அத்தகைய மூளை புதிய எண்ணங்களை எதிர்த்துப் போராடும். மனிதன் எவ்வளவுக்கு எண்ணத்தில் ஆழ்ந்தவனாக இருக்கிறானோ, அவ்வளவுக்கு அவனுடைய மூளையிலுள்ள பாதைகள் அதிகப்படுகின்றன. அவன் எளிதாகப் புதுக் கொள்கைகளை அறிந்துகொள்ளுகிறான். புது எண்ணங்கள் மூளையிலே புதிய தழும்புகளை உண்டாக்கிப் புதிய வழிகளை அமைக்கின்றன. யோக சாதனையிலே நோக்கங்களும் எண்ணங்களும் முற்றிலும் புதியனவாயிருத்தலினால், மூளை முதலிலே அவற்றை எதிர்த்து நிற்கின்றது. உலகச் சார்பு பற்றிய சமயக் கருத்துகள் எளிதாக ஏற்றுக்கொள்ளப்படுவதும், தத்துவசாத்திரம் மனநூல் என்னுமிவற்றின் சார்பாகவுள்ள அகத்தியற்கைகள் புறக்கணிக்கப்படுவதும் இதனாலேதான். நாம் வாழ்கின்ற இந்த உலகத்தைப்பற்றி ஆராய்வோமாயின், அகண்ட வஸ்துவானது உணர்வு நிலையிலே வெளிப்பட்டு நிற்கும் தோற்றம் இவ்வுலகமெனக் காண்போம். அகண்ட வஸ்துவின் ஒரு சிறு பாகம் உணர்விற்படுகிறது; அதனை நாம் நமது உலகமென்கிறோம். அதற்கப்பால் எல்லையற்ற அகண்டம் இருக்கிறது. சமய சாத்திரங்கள் உலகமாகிய சிறிய பிழம்பைப் பற்றியும், அதற்கப்பாலுள்ள அகண்டத்தைப் பற்றியும் கூறவேண்டும். இவையிரண்டினுள் ஒன்றினை மாத்திரம் பற்றி ஆராய்கின்ற சமயம் குறைபாடுடையது. இரண்டினை

யும் பற்றி ஆராய வேண்டும். காலதேச நியதிகள் என்னும் கூட்டினுள்ளே அகப்பட்ட அகண்டத்தின் பாகமாகிய இவ்வுலகத்தைப்பற்றிப் பேசுகிற சமயம் நமக்கு நன்ருய்த் தெரிந்தது. நினைவுக்கு எட்டாத காலமுதல் இவ்வுலகத்தைப்பற்றிய எண்ணங்கள் நம்மிடத்தில் என்றும் இருந்து வருகின்றன. அப்பாலாகிய அகண்டத்தைப்பற்றிச் சொல்லுகிற சமயபாகம் முற்றிலும் புதியது. இதனுல் மூளையிலே முற்றிலும் புதிய வாய்க்கால்கள் உண்டாகி வேறுபாட்டினைத் தருகின்றன. ஆதலால், சாதாரண மக்கள் யோகப்பயிற்சி செய்யத் தொடங்கும் பொழுது, தாம் வழக்கமாகச் செல்லும் வழிகளிலிருந்து வேறு படுத்தப்படுகிருர்கள். இந்த அலைவுகளைக் குறைக்கும்பொருட்டுப் பதஞ்சலி முனிவர் இந்த மார்க்கங்களையெல்லாம் கண்டு பிடித்தார். எது நமக்குப் பொருத்தமாகக் காணப்படுகிறதோ, அதனை நாம் பயிலலாம்.

विषयवती वा प्रवृत्तिरुत्पन्ना मनसः स्थितिनिबन्धिनी ॥ ३५॥

**35. புலன்கள் வழியாக அடைகின்ற காட்சி சிறப்புற்றுத் தோன்றுகின்ற தியானத்தினுலும் மனம் அசைவற்ற நிலைக்கு வருகிறது.**

இது இயல்பாகவே தாரணையினுல் ஆகின்றது. மனம் மூக்கு நுனியிலே நிலைபெற்று நின்ருல், சில நாட்களில் மனிதன் அற்புத மான மணங்களை நுகர்கின்ருன்; காதின் அடியிலே நிலை பெற்ருல், ஒலிகளைக் கேட்கத் தொடங்குகிருன்; நாவின் நுனியிலே நின்ருல், அற்புதமான சுவைகளை நுகர்கின்ருன்; நாவின் நடுவிலே நிலைபெறுத்துவதனுல், ஒன்றினைப் பரிசிக்கின்ற அனுபவம் உண்டாகிறது. அண்ணத்திலே, மனத்தை நிறுத்தினுல் அற்புதமான உருவங்களைக் காண்கிற அனுபவம் உண்டாகிறது. யோக சாதனையிலே ஐயப்பாடு உள்ள மனிதன் இவற்றின் உண்மையைக் குறித்து ஐயுறுதல் கூடும். சிறிது பயிற்சி செய்த பின் இந்த அனுபவங்கள் அவனுக்கு உண்டாக, அவன் தனது சாதனையைக் கடைப்பிடித்து நிற்பான்.

विशोका वा ज्योतिष्मती ॥ ३६ ॥

**36. எல்லா வகைத் துயர்களுக்கும் அப்பால் சுடர் விடும் ஒளியினைத் தியானிப்பதனுலும் (இதனை எய்தலாம்).**

இது மற்ருெரு வகைத் தியானம். இதயத் தாமரையை நினை. அதனுடைய இதழ்கள் கீழ் நோக்கி இருக்கின்றன. அவற்றி னூடாகச் சுழுமுனை நாடி செல்கின்றது. மூச்சினை உள்ளே இழுத்துப் பின்பு வெளியே விடும்பொழுது, இந்தத் தாமரையின் இதழ்கள் மேல் நோக்குவதாகப் பாவனை செய்க. இந்தத் தாமரை யின் உள்ளே சுடர் விடும் ஒளி இருக்கிறது. அதனைத் தியானிக்க.

वीतरागविषयं वा चित्तम् ॥ ३७ ॥

**37. பொருளின்மேற் பற்றற்ற சித்தத்தை விஷயமாகக் கொண்டு தியானிப்பதனுலும் (இதனை எய்தலாம்).**

யாரேனும் ஒரு தூய ஆன்மா, உங்கள் மதிப்புக்குரிய பெரியார், பூரணமாகப் பற்றற்றவரென்று நீங்கள் அறிந்த புண்ணிய புருடர் ஆகிய இவருள் ஒருவரைத் தெரிந்தெடுத்து, அவருடைய சித்தத்தைக் குறித்துத் தியானிப்பீர்களாக. அந்தச் சித்தம் பற்றற்று இருக்கிறது. அதனைத் தியானிப்பீர்களாயின், உங்கள் மனம் அமைதியை அடையும். இது செய்ய முடியா தாயின், மற்ருெரு வழி உண்டு.

स्वप्ननिद्राज्ञानालम्बनं वा ॥ ३८ ॥

**38. கனவிலும் துயிலிலும் எய்துகின்ற அறிவைப்பற்றித் தியானிப்பதனுலும் (இதனை எய்தலாம்).**

சில வேளை கனவிலே தேவர்கள் வருவதாகவும், தன்னேடு உரையாடுவதாகவும், தான் பரவசப்பட்ட நிலையில் இருப்பதாக வும், ஆகாயத்திலே இனிய இசை கேட்பதாகவும் ஒரு மனிதன் உணர்வதுண்டு. அந்தக் கனவிலே அவன் ஒரு வகைப்பட்ட ஆனந்த நிலையில் இருக்கிருன். கனவு அவனது உள்ளத்தில் ஆழ்ந்து பதிகின்றது. அந்தக் கனவை உண்மை என்று நினைத்து அதனைப்பற்றித் தியானிப்பீர்களாக. அப்படிச் செய்ய முடியாவிட்டால் உங்களுக்கு இனிமையைத் தருகின்ற யாதா யினும் ஒரு தூய்மையான பொருளைப்பற்றித் தியானிப்பீர்களாக.

यथाभिमतध्यानाद्वा ॥ ३९ ॥

**39. அல்லது உங்களுக்கு விருப்பத்திற்கு எது சிறந்ததாகத் தோன்றுகிறதோ அதைப்பற்றித் தியானிப்பீர்களாக.**

கெடுதியான பொருளினையல்ல ; உங்களுக்கு விருப்பத்தைத் தருகின்ற எந்த நற்பொருளையாவது, நீங்கள் பெரிதும் விரும்புகின்ற இடத்தையாவது, இயற்கைக் காட்சியையாவது, எண்ணத்தையாவது, மனத்தை ஒருவழிப்படுத்துகின்ற எதனையாவது பற்றித் தியானிக்கலாம்.

परमाणुपरममहत्वान्तोऽस्य वशीकारः ॥ ४० ॥

**40. இங்ஙனம் தியானிக்கின்ற யோகியினுடைய சித்தம் மிக நுண்ணிய பரமாணு முதலாக மிகப் பெரிய பரமமகத் ஈறுக எல்லாவற்றையும் தடங்கலின்றிக் காணும்.**

இந்தப் பயிற்சியினாலே மிக நுண்ணிய பொருளையும் மிகப் பெரிய பொருளையும் மனம் எளிதாகத் தியானிக்கும். இதனால் மனத்தின் அலைகள் மிகச் சுருங்கிவிடும்.

क्षीणवृत्तेरभिजातस्येव मणेर्ग्रहीतृग्रहणग्राह्येषु तत्स्थतदञ्जनता समापत्तिः ॥ ४१ ॥

**41. தேய்ந்த விருத்திகளையுடைய யோகியின் மனத்தினுக்குக் கொள்வோன், கொள்ளுதல் (கொள்ளுதற்கருவி), கொள்ளப்படும் பொருள் (ஆன்மா, மனம், புறப்பொருள்கள்) என்னுமிவற்றிலே எதனோடாவது ஒரு வழிப்பட்டு நிற்கின்ற தன்மை ஏற்படுகின்றது ; (வேறுபட்ட நிறப்பொருள்களின் முன்னேயுள்ள) பளிங்கு போல.**

இத்தகைய இடைவிடாத தியானத்தினாலே என்ன பயன் உண்டாகின்றது? முந்தியவொரு சூத்திரத்திலே பதஞ்சலியார் வேறு வேறாகிய தியான நிலைகளைப்பற்றிச் சொல்லியதை நாம் நினைத்திருக்கலாம். முதல் நிலை பருப்பொருளாயிருக்கும். இரண்டாவது நுண்ணியது. அதன்மேல், அதினினும் நுண்ணிய பொருள்களுக்குச் செல்லலாம். இத்தகைய தியானங்களின் பயனாகப் பருப்பொருளைப் போலவே நுண்பொருளையும் நாம் எளிதாகத் தியானிக்கலாம். ஆதலால், யோகி கொள்வோன், கொள்ளப்பட்டது, கொள்ளுதற்கருவி என்னுமிவற்றிற்கு முறையே இயைந்து நின்ற ஆன்மா, புறப்பொருள், மனம் என்னும் மூன்றினையும் காண்கிறான். தியானித்தற்பொருட்டு நமக்குக் கொடுக்கப்பட்ட பொருள்கள் மூன்று உள. முதலாவது, சடப்பொருள் நீர்மையதாகிய பருப்பொருள் ; இரண்டாவது,

மனத்தினைப்போன்ற நுண்பொருள்; மூன்ருவது, சார்புகளோடு கூடிய புருடன்; அதாவது, புருடனன்று; நானென்னும் எண்ணம். பயிற்சியினாலே யோகி இந்த மூன்று தியானங்களி லும் நிலை பெறுகிருன். தியானிக்கும் பொழுது அவன் மற்றைய எண்ணங்களையெல்லாம் விலக்கி வைக்கிருன்; எதனைத் தியானிக் கிருனே, அதனேடு ஒன்றுபட்டு நிற்கிருன்; தியானிக்கும் பொழுது பளிங்குக்கல் போன்று இருக்கின்ருன். பளிங்கின் முன்னே எந்த மலர் வைக்கப்படுகின்றதோ, அந்த மலரோடு பளிங்கு ஒன்றுபட்டு நிற்கின்றது; மலர் சிவப்பாயிருந்தால், பளிங்கும் சிவப்பாய்த் தோற்றும்.

तत्र शब्दार्थज्ञानविकल्पैः सङ्कीर्णा सवितर्का समापत्तिः ॥४२॥

42. சொல்லும், பொருளும், அறிவும் கலந்து நிற்கும் பொழுது அஃது சவிதர்க்க (வினவோடு கூடிய) சமாதியெனப்படும்.

சப்தமென்பது அசைவு; அதாவது, அதனைக்கொண்டு செல் கின்ற நரம்பின் இயக்கம் இங்கே குறிக்கப்பட்டது. இவ்வியக்கத் தின் எதிர்த்தொழில் அறிவு. இது வரையும் நாம் கண்ட வேறு பட்ட தியானங்கள் அனைத்தினையும் பதஞ்சலி முனிவர் சவிதர்க் கம் (வினவோடு கூடிய தியானம்) என்கின்ருர்; வரவர உயர்ந்த தியானங்களைப் பின்னர்க் கொடுக்கின்ருர். வினவோடு கூடிய வற்றிலே, சொல்லும் பொருளும் அறிவும் கலந்து நிற்றலினலே, அறிவோன் அறியப்படுபொருள் என்னும் வேறுபாட்டினை நாம் வைத்திருக்கின்ரேம். முதலாவது, சொல்லாகிய வெளி இயக்கம்; இது புலன்கள் வாயிலாக உட்செல்லும் பொழுது தோன்றுவது, பொருள். அதன் பின்னர்ச் சித்தத்திலுதிக்கும் எதிரலை, அறி வாகும். நாம் பொதுவாக அறிவென்று சொல்லுவது இந்த மூன்றும் கலந்து நிற்பதாகும். இதுவரையும் சொல்லிய தியானங் களில் எல்லாம் இந்தக் கலப்பைத் தியானப் பொருளாகக் கொள்ளுகிரேம். அடுத்த சமாதி இதனினும் உயர்ந்தது.

स्मृतिपरिशुद्धौ स्वरूपशून्येवार्थमात्रनिर्भासा निर्वितर्का ॥४३॥

43. நினைவு பரிசுத்தப்படுவதாலும், தனக்குரியஉருவம் அற்றுப் போவதனாலும், அர்த்தம் மாத்திரம் விளங்குகின்ற சமாதி நிர்வி தர்க்க (வினவோடு கூடாத) சமாதியெனப்படும்.

இந்த மூன்றினையும் பற்றித் தியானிக்கின்ற பயிற்சியாலே இந்த மூன்றும் ஒன்று கூடாத நிலை ஏற்படுகின்றது. நாம் இவற்றைத் தொலைத்துவிடலாம். முதலிலே இந்த மூன்றும் யாவையென அறிந்துகொள்ள முயல்வோமாக. சித்தம் இருக்கின்றது; மனத்தை ஒரு தடாகத்திற்கு ஒப்பென நான் கூறியதை என்றும் நினைத்திருக்க வேண்டும். ஒலி வடிவாகிய சொல், அதன்மேற் பட்டு வருகின்ற அலைக்கு நிகராகும். உங்களிடத்தில் அமைதியான அந்தத் தடாகம் அமைந்திருக்கிறது. நான் 'பசு' என்னும் ஒரு வார்த்தையைச் சொல்லுகிறேன். அச்சொல் செவியில் புகுதலும், அதனோடு சித்தத்திலே ஓர் அலையுண்டாகிறது. அந்த அலை பசுவென்னும் கருத்தை, அதாவது அவ்வுருவமான பொருளை உண்டாக்குகிறது. காட்சி மாத்திரையாக நீங்களறிந்த பசு, உண்மையிலே அகத்தும் புறத்தும் தோன்றிய ஒலிக்குறிப்புகளுக்கு மனத்தின் எதிர் இயக்கமாகத் தோன்றுகின்ற அலையாகும். ஒலிக்குறிப்பு அற்றுப்போக, அலையும் இல்லாது போய்விடுகின்றது. சொல்லில்லாமல் அது ஒருபொழுதும் இருக்கமாட்டாது. ஒலி செவிப்படாமல் பசுவைப் பற்றி நாம் நினைக்கும் பொழுது அதன் வடிவம் எப்படியுண்டாகிறதென்று நீங்கள் வினவலாம். அப்பொழுது ஒலிக்குறிப்பை நீங்களே ஆக்கிக் கொள்ளுகிறீர்கள் என்பதை அறிய வேண்டும். மனத்திலே மெல்லெனப் 'பசு' என்று சொல்லுகிறீர்கள்; இதனோடு ஓர் அலை உண்டாகிறது. இந்த ஒலிக்குறிப்பு இல்லாமல் ஓர் அலையும் உண்டாதல் இயலாது. வெளியிலிருந்து வராவிடின், உள்ளே இருந்தாவது ஒலிக்குறிப்புத் தோன்ற வேண்டும். ஒலியற்றுப் போக, அலையும் அற்றுப் போகின்றது. பின்பு என்ன எஞ்சி இருக்கின்றது? எதிர்ச் செயலின் பயன். அதுவே அறிவு. இம்மூன்றும் நமது மனத்திலே நெருக்கமாக ஒன்று கூடியிருக்கின்றன. இவற்றினை நம்மால் பிரித்தெடுக்க முடியாது. ஒலி வரும்பொழுது பொறிகள் இயங்குகின்றன. எதிர்ச் செயலாக அலை எழுகின்றது. இவை ஒன்றின் பின் ஒன்றாக நெருங்கித் தொடர்ந்து வருதலால், இவற்றை வேறு பிரித்துக் காண்பது அருமையாகின்றது. இந்தத் தியானத்தை நீண்ட காலம் பயின்றால், எல்லாச் சம்ஸ்காரங்களுக்கும் கொள்கலமாகிய நினைவு தூய்மையடைகின்றது. அப்பொழுது இவற்றை வேறு பிரித்துக் காணக் கூடியவர்களாகிறோம். இது வினவோடு கூடாத (நிர்விதர்க்க) சமாதி எனப்படும்.

एतयैव सविचारा निर्विचारा च सूक्ष्मविषया व्याख्याता ॥ ४४ ॥

**44. நுண்ணிய பொருள்களை விஷயமாகக் கொண்ட சவிசார (ஆராய்வோடு கூடிய) நிர்விசார (ஆராய்வோடு கூடாத) சமாதி களும் இதனைக்கொண்டே தெளிவுபடுத்தப்படுகின்றன.**

முன்னதனையொத்த முறையொன்று இங்கும் பயன்படுகிறது. முந்திய தியானம் பருப்பொருள்களைப் பற்றியது. இது நுண் பொருளைப் பற்றியது.

सूक्ष्मविषयत्वञ्चालिङ्गपर्यवसानम् ॥ ४५ ॥

**45. நுண்பொருளின் தன்மை பிரதானத்தை முடிவாக உடையது.**

பூதங்களும் அவற்றால் காரியப்படுவனவும் பருப்பொருள்கள் எனப்படும். தன்மாத்திரைகள் தொடக்கமாக உள்ளவை நுண் பொருள்களாம். கருவிகளும், மனமும், அகங்காரமும், (எல்லாத் தோற்றங்களுக்குங் காரணமாகிய) சித்தமும், சத்துவ ரஜோ தமோ குணங்கள் சமப்பட்டு நிற்கும் நிலையாகிய பிரதானமும், மூலப் பிரகிருதியும், அவ்வியக்தமும் ஆகிய அனைத்தும் நுண் பொருள்களென்று எண்ணப்படுகின்றன. புருஷன் மாத்திரமே இவற்றின் வேறு.

ता एव सबीजः समाधिः ॥ ४६ ॥

**46. இவை யாவும் வித்துடனே கூடிய சமாதிகள் ஆகும்.**

இவை பழைய வினைகளின் வித்தினை அழிப்பதில்லை. ஆதலால், இவை மோட்சத்தைத் தரமாட்டா. இவை யோகிக்கு எதனை யளிக்கின்றன என்பது அடுத்த சூத்திரத்தில் கூறப்பட்டிருக் கிறது.

निर्विचारवैशारद्येऽध्यात्मप्रसादः ॥ ४७ ॥

**47. நிர்விசார சமாதி பரிசுத்தமடையும் பொழுது சித்தத்திலே தெளிவு உண்டாகிறது.**

ऋतंभरा तत्र प्रज्ञा ॥ ४८ ॥

**48. தெளிவு ஏற்பட்டபொழுது உண்டான அறிவானது 'ருதம் பரா' (உண்மையினால் நிறைக்கப்பட்டது) எனப்படும். அடுத்த சூத்திரம் இதனை விளக்கும்.**

श्रुतानुमानप्रज्ञाभ्यामन्यविषया विशेषार्थत्वात् ॥ ४९ ॥

**49. பெரியோருடைய உரையினலும், அனுமானத்தினலும் பெறுகின்ற அறிவு பொதுவாகிய பொருள்களைப் பற்றியது. நாம் இப்பொழுது கூறிய சமாதியிலிருந்து பெறுகின்ற அறிவு உயர்ந்த தன்மையது; அனுமானமும் உரையும் செல்லக் கூடாத இடத்துக்கும் செல்ல வல்லது.**

இதன் கருத்து என்ன? பொதுவாக நாம் பெறுகின்ற அறிவு அனைத்தினையும், நேரிற்காண்பதாலும், அதினின்று அனுமானிப்பதாலும், தக்கோர் கூறும் உரையினலும் அறிகின்ருேம். தக்கோர் என்பதால், யோகிகள் வேத வாக்கியங்களிலே கூறப்பட்டிருக்கும் உண்மைகளைக் கண்டுணர்ந்த முனிவர்களைக் கருதுகிருர்கள். தக்கோருடைய வாய்மொழியாய் இருப்பதே வேதவாக்கியங்களுக்குப் பிரமாணமாகுந் தன்மையைக் கொடுக்கின்றது என்பது அவர்களது கொள்கை. அங்ஙனமாயினும், வேதவாக்கியங்கள் தம்மளவிலே நம்மை மோட்சத்திற்குக் கொண்டுபோக மாட்டா என்பது அவர்களது கருத்து. நாம் எல்லா வேதங்களையும் படிக்கலாம்; ஆயினும், மெய்யுணர்வு பெருதிருக்கலாம். ஆனல், அவற்றின் போதனைகளைச் சாதனைக்குக் கொண்டுவந்தால், நியாயமும், காட்சியும், அனுமானமும், தக்கோர் உரையும் செல்லுதற்கு அரிய உண்மையை நாம் அடைதல் கூடும். இதுவே இச்சூத்திரத்தின் பொருள். சாக்ஷாத்காரமே உண்மையில் சமயமெனப்படுவது. பிரசங்கங்கேட்டல், நூல்களை வாசித்தல், தருக்கம் நிகழ்த்தல் என்றிவையெல்லாம் பூமியைப் பண்படுத்துவது போன்ற ஆயத்தங்களே அன்றி, சமயமெனப்படா. விவேகத்தினலே உடன்படுதலும் எதிர்மறுத்தலும் சமயமாகமாட்டா. புலனுக்குப் படுகிற பொருள்களை நாம் நேரிலே கண்டறிவது போலச் சமயத்தை இன்னும் அதிகச் சிறப்பாக நேரில் கண்டறிதல் கூடும் என்பது யோகிகளுடைய முக்கியக் கொள்கை. கடவுள் ஆன்மா என்ற இத்தகைய சமய உண்மைகள் புறக்கரணங்களாலே காணப்பட மாட்டா. நான் கடவுளை என் கண்களால் காணுதல் இயலாது; என் கைகளால் தொடுதலும் இயலாது; புலன்களுக்கு அப்பாலாகத் தருக்கித்தலும் முடியாது. தருக்க அறிவானது முற்றிலும் தீர்ப்பில்லாத ஓர் இடத்தில் நம்மைச் சேர்க்கிறது. ஆயிரம் ஆண்டுகளாக உலகம் செய்துகொண்டு வருவதுபோல நாம் நமது வாழ்நாள் முழுதும் வாதாடலாம். அப்படியிருந்தும், சமய உண்மைகளை நிறுவவோ, தள்ளிவிடவோ நம்மால் முடியாது என்பதை

நாம் காண்போம். நாம் நேரிலே காண்பதை ஆதாரமாகக் கொண்டு அந்த ஆதாரத்தின்மேல் வாதாட வேண்டும். ஆதலால், காணப்படுகின்ற பொருள்களின் எல்லையினுள்ளேதான் தருக்க அறிவு கட்டுப்பட்டு நிற்கவேண்டும். அதற்கப்பால் அது செல்ல மாட்டாது; நேரில் காணப்படுகின்றதன் எல்லை புலன்களால் காண்கின்ற காட்சிக்கு அப்பாலானது. மனிதன் நேரிற்காண்கிற புலக் காட்சிக்கும் தருக்க அறிவுக்கும் அப்பால் செல்லுதல் கூடுமென்று யோகிகள் சொல்லுகிறார்கள். புத்தியையும் கடந்து அப்பாற்செல்லுகின்ற ஆற்றல் மனிதனுக்கு உண்டு. இந்த ஆற்றல் எல்லா உயிர்களிடத்தும் அமைந்திருக்கிறது. யோகப்பயிற்சியாலே இந்த வல்லமை விழித்தெழுகிறது. அப்பொழுது மனிதன் சாதாரணமாகத் தருக்க அறிவின் எல்லையைக் கடந்து அப்பாற் செல்கின்றான்; எல்லா அறிவுக்கும் அப்பாலான பொருள்களை நேரிலே காண்கின்றான்.

तज्जः संस्कारोऽन्यसंस्कारप्रतिबन्धी ॥ ५० ॥

**50. இந்தச் சமாதியிலிருந்து பிறந்த சம்ஸ்காரமானது ஏனைய சம்ஸ்காரங்களைத் தடுக்கின்றது.**

முந்திய சூத்திரத்திலே, உரையுணர்வு கடந்த நிலையை அடைவதற்குச் சமாதிக்கு அப்பால் போகவேண்டும் என்பதைக் கண்டோம்; மனத்தை ஒருவழிப்படாது தடுப்பன பழைய சம்ஸ்காரங்கள் என்பதுங் கண்டோம். மனத்தை ஒருவழிப்படுத்த முயலும்பொழுது, எண்ணங்கள் அலைந்துகொண்டிருப்பதை நீங்கள் எல்லோரும் கவனித்திருப்பீர்கள். நீங்கள் கடவுளைப்பற்றி நினைக்க முயலும் பொழுதுதான் அந்தச் சம்ஸ்காரங்களும் வெளிப்படுகின்றன. மற்றைய நேரங்களில் அவை அவ்வளவு சுறுசுறுப்பாய் இருப்பதில்லை. அவற்றை வேண்டாவென்று தள்ளும்பொழுதுதான் அவை நெருங்கி வந்து மனத்தினுள்ளே புகுகின்றன. அப்படியிருப்பதற்குக் காரணமென்ன? தியான வேளையிலே அவை மிக்க வலிமையோடு இருப்பது ஏன்? நீங்கள் அவற்றை நெருக்குகிறீர்கள். அவை தம்மிடத்துள்ள வலிமை எல்லாம் காட்டி எதிர்க்கின்றன. மற்ற வேளைகளில் அவை எதிர்ப்பதில்லை. அந்தப் பழைய சம்ஸ்காரங்கள் சித்தத்தினுள்ளே எங்கேயோ ஓரிடத்தில் பாயப்போகின்ற புலிகளைப்போலக் காத்துக் கொண்டிருக்கின்றன. நாம் எந்த எண்ணத்தை எழுப்ப முயலு

கின்றேமோ, அது தனித்து எழும்பும் வண்ணம் அவற்றை நாம் அடக்குதல் வேண்டும். அஃதன்றி, அவையெல்லாம் ஒரே நேரத்தில் மேலெழும்ப முயலுகின்றன. அவை மனத்தை ஒருவழிப்படவொட்டாது தடுக்கின்ற சம்ஸ்காரங்களின் வேறுபட்ட வலிமைகளாகும். அந்தச் சம்ஸ்காரங்களை அழிக்கின்ற வலிமையுடைதாதலாலே, இப்பொழுது குறிக்கப்பட்ட சமாதி பயிற்சிக்குச் சிறந்தது. இந்தச் சமாதியினாலே எழுப்பப்படுகின்ற சம்ஸ்காரம் மிகுந்த வலிமையோடு ஏனையவற்றின் தொழிலைத் தடுத்து அவற்றை மீறவொட்டாது நிறுத்தும்.

तस्यापि निरोधे सर्वनिरोधान्निर्बीजः समाधिः ॥ ५१ ॥

**51. (மற்றைய எல்லாச் சம்ஸ்காரங்களையும் தடுத்து நிற்கின்ற) இதனுடைய ஒடுக்கத்தினாலே அனைத்தும் ஒடுங்கிப்போய்விட, வித்தில்லாத சமாதி வந்து எய்துகின்றது.**

ஆன்மாவைக் காண்பதே நமது நோக்கம் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும். ஆன்மா இயற்கையோடும், மனத்தினோடும், உடலினோடும் கலந்து கிடக்கிறதாதலாலே, நாம் அதனைக் காண முடியாது. மூடன் தனது உடலே ஆன்மா என்று எண்ணுகிறான். கல்விமான் தனது மனமே ஆன்மா என்று நினைக்கிறான். இருவரும் பிழைபட்டவர். ஆன்மா இவற்றோடு கலந்து கிடக்கச் செய்தது யாது? சித்தத்திலே வேறு வேறாகிய அலைகள் எழுந்து ஆன்மாவை மூடியிருக்கின்றன. இந்த அலைகளின் ஊடாக ஆன்மாவினுடைய பிரதிபிம்பம் ஒரு சிறிதை நாம் காணுகிறோம். கோப அலையொன்று இருந்தால் ஆன்மாவைக் கோபமுள்ளவனாகக் காண்கிறோம்; 'நான் கோபிக்கிறேன்,' என்று சொல்லுகிறோம்; அன்பின் அலையாயிருப்பின், அதனிடத்து நாம் பிரதிபிம்பத்தைக் கண்டு, 'நான் அன்பாயிருக்கிறேன்,' என்று சொல்லுகிறோம். வலியிழந்த நிலையில் ஆன்மா பிரதிபிம்பிக்க, நாம் வலியற்றோம் என எண்ணுகிறோம். ஆன்மாவை மூடியிருக்கிற சம்ஸ்காரங்களிலிருந்து இந்த வேறு வேறாகிய எண்ணங்கள் தோன்றுகின்றன. சித்தமென்னுங் குளத்திலே ஓர் அலையேனும் இருக்கும் வரை ஆன்மாவினது உண்மைத் தன்மையைக் காண்பதில்லை. இந்த உண்மைத்தன்மை எல்லா அலைகளும் அடங்கியபின்பன்றிக் காணக்கூடாதது. ஆதலால், பதஞ்சலியார் முதலிலே, அந்த அலைகளின் கருத்து இதுவென எடுத்

துச் சொல்லுகிருர் ; இரண்டாவதாக, அவற்றை அடக்குவதற்கு உரிய நல்ல மார்க்கத்தைக் காட்டுகிருர் ; மூன்ருவதாக, நெருப்பை நெருப்பினுல் அடக்குவது போல, ஓர் அலையை வலுப்படுத்தி மற்றெல்லா அலைகளையும் அடக்கும் நெறியைக் காட்டுகிருர். ஒன்று மாத்திரம் மிஞ்சியிருக்கும்பொழுது அதனை அடக்குவது எளிது ; அது போய்விட்ட பின்பு எய்துவது வித்தில்லாத சமாதியாகும். ஒன்றும் எஞ்சியிருப்பதில்லை. ஆன்மா தனது சொந்த மகிமையோடு விளங்குகிறது. அப்பொழுதுதான், 'ஆன்மா கூட்டுப்பொருளன்று ; பிரபஞ்சத்திலே நித்தியமாயுள்ள தனிப் பொருள்,' என்பதை அறிவோம். அது பிறக்கவுமாட்டாது, இறக்கவுமாட்டாது ; அமிருதத்துவமுடையது ; அழிவற்றது ; என்றும் உள்ள விவேகத்தின் சாரமானது.

## அத்தியாயம் 2

## சாதன பாதம்

तपः स्वाध्यायेश्वरप्रणिधानानि क्रियायोगः ॥ १ ॥

**1. தவம் புரிதல், கற்பன கற்றல், கரும பலனை ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்தல் என்னுமிவை கிரியாயோகமாம்.**

முந்திய அத்தியாயத்தின் ஈற்றிலே கூறப்பட்ட சமாதிகள் அடைதற்கு அரியன. ஆதலால், அவற்றைப் படிப்படியாக அடைதற்கு முயலவேண்டும். முதற்படி கிரியா யோகமாகும். கிரியை என்னும் சொல்லுக்கு வேலை என்பது பொருள். அதுதான் யோகத்தை அடைதற்குரிய வேலையாகும். புலன்கள், குதிரைகள் ; மனம், கடிவாளம் ; புத்தி, சாரதி ; ஆன்மா, ஏறிச் செல்பவன் ; உடல், தேர் ; மனிதனது ஆன்மாவாகிய அதிபதி இந்தத் தேரின் மீது இருக்கிருன். குதிரைகள் வலிமையுள்ளனவாகிக் கடிவாளத் திற்கு அடங்காதிருந்தால், புத்தியாகிய சாரதி அவற்றை மட்டுப் படுத்தமாட்டான். அப்பொழுது தேர் வீணுய்விடும். புலன்களாகிய குதிரைகள் மனமாகிய கடிவாளத்திற்கு வயப்பட்டுப் புத்தியாகிய சாரதியின் கையில் அடங்கி நிற்குமாயின், வண்டி அடைய வேண்டிய இடத்தை அடையும். தவமென்பதன் கருத்தென்ன ? உடலையும் இந்திரியங்களையும் வழிப்படுத்தும்பொருட்டுக் கடிவாளத்தை இறுகப் பிடித்து, அவை தாம் விரும்பும்படி செல்லவொட்

டாது தடுத்துச் சரியான கட்டுப்பாட்டுக்குள் அமைய வைத்த
லாகும். கற்பன கற்றல் என்பது, என்ன? நவீன கதைப் புத்தகங்
களை வாசிப்பதன்று; ஆன்மாவினுடைய மோட்சத்திற்குச்
சாதனமாயிருக்கிற நூல்களைப் படிப்பதே கற்பன கற்றல் ஆகும்.
மேலும், இது வாத நூல்களைக் கற்பதாகாது. யோகியானவன்
ஏற்கெனவே வாதங்களைச் செய்து முடித்துவிட்டான். அது
போதுமென்றறிந்து மனத் திருத்தியடைந்து, தன் துணிபுகளைப்
பெருக்கிக் கொள்வதற்காகவே அவன் கற்கிறான். வாத நூல்
(வாதாடுவதற்கு உரியது), சித்தாந்த நூல் (முடிந்த முடிபானது)
எனச் சமய நூல்கள் இருவகைப் படுவன. மனிதன் முற்றிலும்
அறிவு குறைந்தவனாயிருக்கும் பொழுது, முதலாவது வகையை
எடுத்து உடன்பாடும் எதிர்மறையுமாகத் தருக்கம் பேசி வாதப்
போரிடுகிறான். அது முடிந்தபின் துணிபாகிய சித்தாந்தத்தை
எடுத்து ஒரு முடிபுக்கு வருகிறான். இந்த முடிபுக்கு வருவது
மட்டும் போதாது. இதனை நிலைபெறுத்த வேண்டும். நூல்கள்
எண்ணிக்கையற்றுப் பலவாயிருக்கின்றன. காலமோ, மிகச்
சுருங்கியது. ஆதலால், வேண்டுவனவற்றை மாத்திரம் எடுத்துக்
கொள்வதே அறிவைப் பெறும் இரகசியமாகும். ஒரு முடிபை
நிச்சயித்து அதன்படி வாழ்க்கையை நடத்த முயல வேண்டும்.
அரச அன்னத்தின் முன்னிலையில் பாலையும் நீரையும் கலந்து
வைத்தால், அது பால் முற்றினையுமுண்டு நீரை விட்டுவிடும்.
அவ்வண்ணமே, அறிவு நூல்களிற் பயனுள்ளதைக்கொண்டு பய
னற்றதை விலக்கிவிட வேண்டும். முதலிலே விவேக சாதனைக்கு
உரிய நூல்கள் இன்றியமையாதன. ஒன்றினுள்ளும் குருட்டுத்
தனமாக நுழையக்கூடாது. யோகி வாதநிலையைக் கடந்து, கற்
சிலைபோல அசைவில்லாத ஒரு முடிபுக்கு வந்திருக்கின்றான்.
அந்த முடிபை வலியுறுத்துவதே அவன் வேண்டுவது. யாராயினு
மொருவன் உங்களோடு வாதம்செய்ய முற்பட்டு வந்தால், நீங்கள்
மௌனமாயிருங்கள்; வாதம் செய்யாதீர்கள்; வாதத்துக்கு மறுத்
துரை கூறாது சாந்தமாகப் போய்விடுங்கள். வாதங்கள்
மனத்தை அலையச்செய்கின்றன. புத்தியைப் பயிற்றுவது இன்றி
யமையாதது. வீண் வாதம் செய்வதனாற் பயனென்ன? புத்தி
வலியற்ற கருவி. அது புலன்களால் எல்லைப்படுத்தப்பட்ட
அறிவை மாத்திரமே தருகின்றது. யோகி புலன்களுக்கு அப்பாற்
செல்ல விரும்புகிறான். ஆதலால், புத்தியினால் அவனுக்கு ஒரு
பயனும் இல்லை. அவன் இதனை நிச்சயமாக அறிவான். ஆத
லால், வாதம் பண்ணாது மௌனமா யிருக்கிறான். வாதம் ஒவ்

வொன்றும் அவனுடைய சித்தத்தை நிலை குலைக்கின்றது. இதனுற் கெடுதியுண்டு. வாதம் புரிதலும் நியாயங் காண்டலும் கீழ்ப்படிகளாயுள்ளன. இவற்றுக்கு அப்பால் உயர்ந்த பொருள்கள் பலவுள. வாழ்நாள் முழுவதும், பள்ளிக்கூடச் சிறுவர் போலச் சண்டையிட்டு வாதித்துக்கொண்டிருக்க ஏற்பட்டதன்று. "ஈசுவரப் பிரணிதானம்" என்பது புகழினையோ குற்றத்தையோ நமக்கெனக் கொள்ளாது இரண்டினையும் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டுச் சாந்தியோடிருத்தலாகும்.

समाधिभावनार्थः क्लेशतनूकरणार्थश्च ॥ २ ॥

2. சமாதியைப் பெறும்பொருட்டும், துன்பங்களைக் குறைவுபடுத்தும் பொருட்டும் அது வேண்டுவது.

மனத்தினை அதுவிரும்புமாறு செல்லவிட்டுப் பிழைபட வளர்க்கப்பட்ட குழந்தைகளைப் போல ஆக்கிவிடுபவர் நம்முட் பலருளர். மனத்தை வயப்படுத்தி அடக்கியாளுவதற்குக் கிரியா யோகத்தை இடைவிடாது பயிலுவது இன்றியமையாதது. அடக்கமின்மையினுலே யோகத்துக்குத் தடைகள் எழுந்து நமக்குத் துன்பத்தை விளைக்கின்றன: கிரியா யோகம் வழியாக மனத்தினை நிலைப்படுத்தி, அத்தடைகளை அடக்கி வைப்பதனுல் மாத்திரமே அவற்றை நீக்கலாம்.

अविद्यास्मितारागद्वेषाभिनिवेशाः क्लेशाः ॥ ३ ॥

3. பேதைமை, முனைப்பு, விருப்பு, வெறுப்பு, உயிர்ப் பற்று என்னுமிவை துன்பத்தைத் தரும் தடைகளாம்.

பேதைமை காரணமாக ஏனைய நான்கும் காரியமாக அமைந்து நின்ற ஐவகைத் துன்பங்களே நம்மைக் கட்டுப்படுத்துகின்ற ஐவகைத் தளைகளாவன. இவையே நம் கவலைகளுக்குக் காரணம். வேறு எதுதான் நம்மைக் கவலைப்படுத்துதல் கூடும்? நித்திய ஆனந்தமே ஆன்மாவுக்கு இயற்கையாயுள்ளது. பேதைமை, பொய்க் காட்சி, மயக்கம் என்னுமிவையன்றி, வேறு எதுதான் நமக்குக் கவலையைத் தருதல் கூடும்? ஆன்மாவின் எல்லா வகைத் துன்பங்களும் மயக்கத்தின்பாலனவே.

अविद्या क्षेत्रमुत्तरेषां प्रसुप्ततनुविच्छिन्नोदाराणाम् ॥ ४ ॥

**4. அடங்கியோ, தேய்ந்தோ, மாறி மாறி எழுந்தோ, விரிவுற்றோ நிகழ்கின்ற துன்பங்கள் அனைத்தும் பிறப்பதற்கு இடம் பேதைமையேயாகும்.**

விருப்பு, வெறுப்பு, உயிர்ப்பற்று என்னும் முனைப்பு, இவற்றுக்கெல்லாம் பேதைமையே காரணம். இந்தச் சம்ஸ்காரங்கள் வேறு வேறு நிலையில் இருக்கின்றன. சில பொழுது இவை அடங்கிக் கிடக்கின்றன. "பாலகனைப் போலத் தீங்கற்ற" என்னும் சொற்றொடர் இடையிடையே நம் செவியிற் படுகிறது. அங்ஙனமாயினும், பாலகனிடத்தே பேய்க் குணமாவது, தெய்வ இயல்பாவது அடங்கிக் கிடக்கலாம். அது படிப்படியாக வெளிப்படும். யோகியினிடத்தே முன்னை வினையினாலாகிய சம்ஸ்காரங்கள் மிகத் தேய்ந்து கிடக்கும். அவன் அவற்றை வெளிப்படவொட்டாது தடுக்கிறான். சில சம்ஸ்காரங்கள் தம்மினும் வலியவற்றினாலே நெருக்குண்டு கிடந்து, நெருக்குதற்குக் காரணம் அகன்ற பின்பு வெளிப்படலாம். இந்நிலையே மாறி மாறி எழுகின்ற நிலையாகும். ஈற்றிலே நின்ற விரிவுற்ற நிலையில் சம்ஸ்காரங்கள் தமக்கு உதவியாகிய சார்புகளைக் கொண்டு நன்மையோ தீமையோ ஆகிய வழியிலே பெரிய முயற்சியை அடைகின்றன.

अनित्याशुचि दुःखानात्मसु नित्यशुचिसुखात्मख्यातिरविद्या ॥५॥

**5. நிலைபேறில்லாத, தூய்மையில்லாத துன்பத்தோடு கூடிய, தான் அல்லாதவற்றை முறையே நிலைபேறுடைய, தூய்மையான, சுகத்தோடு கூடிய, தானாகக் கொள்ளுதல் பேதைமை ஆகும்.**

வேறு வேறு வகைப்பட்ட சம்ஸ்காரங்களெல்லாம் பேதைமையைப் பிறப்பிடமாகக் கொண்டவை. முதலிலே பேதைமை என்பது என்ன என்பதை நாம் அறியவேண்டும். தூய்மையால், ஒளி பொருந்திய ஆனந்த மயமான ஆன்மா நானல்ல, தேகமே நான் என்று நாமெல்லாம் நினைக்கிறோம். அது பேதைமை. நாம் மனிதத் தேகமாக எண்ணித் தேகமாகக் காண்கிறோம். இது பெரிய மயக்கம்.

दृग्दर्शनशक्त्योरेकात्मतैवास्मिता ॥ ६ ॥

**6. காண்பானையும் காணுங் கருவியையும் ஒன்று எனக் கொள்ளுவது முனைப்பு ஆகும்.**

நித்திய தூயதாய், எல்லையற்றதாய், மரணமற்றதாய் உள்ள ஆன்மாவே உண்மையிற் காண்போன். இதுவே மனிதனுடைய உண்மைத் தன்மை. கருவிகளாவன யாவை? அவை சித்தமும் புத்தியும், மனமும் இந்திரியங்களுமே. புறத்தேயுள்ள உலகத்தை ஆன்மா பார்ப்பதற்கு அமைந்த கருவிகள் இவை. 'நான் மனம். நான் எண்ணம். நான் கோபிக்கின்றேன். நான் உவகையுறு கின்றேன்,' என்று நாம் சொல்லுகிருேம். நாம் கோபிப்ப தெப்படி? பகைப்பதெப்படி? வேறுபாடற்ற ஆன்மா நாமென் பதை அறிதல் வேண்டும். அது வேறுபாடற்றதாயின், ஒரு கணத்தில் இன்பமாகவும் மற்ருெரு கணத்தில் துன்பமாகவும் இருப்பதெப்படி? அது உருவற்றது; எல்லையற்றது; எங்கும் வியாபித்தது. அதனை எது வேறுபடுத்தும்? அது எல்லா விதி களுக்கும் அப்பாலானது. அதனை எது தாக்குதல் கூடும்? பிர பஞ்சத்திலுள்ள ஒன்றும் அதனைத் தாக்கமாட்டாது. ஆயினும், பேதைமையினுலே நாம் நம்மைச் சித்தப்பொருளோடு ஒன்ருகக் கருதி, இன்பதுன்பம் உறுவதாக எண்ணுகிருேம்.

सुखानुशयी रागः ॥ ७ ॥

7. இன்பத்தை நாடுவது விருப்பமெனப்படும்.

சில பொருள்களிலே நாம் இன்பத்தைக் காண்கின்ருேம். மனம் அவற்றை நோக்கி அருவி போல ஓடுகின்றது. இன்ப நிலையத்தைத் தேடுகின்ற இந்த நாட்டம், விருப்பமெனப்படும். இன்பந் தோற்ருத இடத்தை நாம் ஒரு பொழுதும் விரும்புவ தில்லை. மிகப் புதுமையான பொருள்களில் நாம் சில பொழுது இன்பத்தைக் காணலாம். ஆயினும், முடிபு ஒன்றே. எங்கு இன்பத்தைக் காண்கிருேமோ, அங்கு நமது விருப்பம் செல்லு கிறது.

दुःखानुशयी द्वेषः ॥ ८ ॥

8. துன்பத்தைப் பின் பற்றியது வெறுப்பு ஆகும்.

எது நமக்குத் துன்பத்தைத் தருகிறதோ, அதினின்றும் நாம் உடனே விலக முயலுகிருேம்.

स्वरसवाही विदुषोऽपि तथारूढोऽभिनिवेशः ॥ ९ ॥

**9. தனது சொந்த இயற்கையினுலே ஓடுவதாய் மிக்க அறிவாளிகளிடத்தும் நிலைபெற்றிருப்பது உயிர்ப்பற்று ஆகும்.**

இந்த உயிர்ப்பற்று ஒவ்வொரு பிராணியினிடத்தும் வெளிப் பட்டுத் தோன்றுவதைக் காணலாம். 'மக்கள் உயிர் வாழ்க் கையை விரும்புகிருர்கள்; ஆதலால், மறுமை வாழ்க்கையையும் விரும்புகிருர்கள்,' எனக் கூறி, இதனை ஆதாரமாகக் கொண்டு மறுமையைப் பற்றிய கொள்கையை நிறுவுவதற்கு முயன்ருர் பலர். இந்த நியாயம் அதிக மதிப்புடையதன்று என்பதை நான் சொல்ல வேண்டுவதில்லை. மேலை நாடுகளில், இத்தகைய உயிர்ப் பற்றினுலே மனிதருக்கு மறுமை வாழ்க்கை கற்பிப்பதும் மிருகங் களுக்குக் கற்பியாது ஒழிவதும் புதுமையே. இந்தியாவிலே, இந்த உயிர்ப்பற்ருனது கழிந்துபோன அனுபவத்தையும் முன்னுள்ள பிறப்பையும் காட்டுவதற்கு நியாயமாகக் கொள்ளப்படுகிறது. சான்ருக, நம்முடைய அறிவெல்லாம் அனுபவத்திலிருந்து வரு கிறது என்று கொண்டால், நாம் அனுபவியாததனைப் பாவனை பண்ணவாவது தெளிந்துகொள்ளவாவது முடியாதென்பது நிச் சயமாகின்றது. கோழிக்குஞ்சுகள் பொரித்தவுடனே உணவைப் பொறுக்கத் தொடங்குகின்றன. தாராக் குஞ்சுகள், கோழிகளால் அடைகாக்கப்பட்டு பொரிக்கப்பட்டவுடனே, நீர்மேற் செல்லுதலை யும், தாய்க் கோழி அவை நீரில் அமிழ்ந்துவிடுமென்று நினைப் பதையும் பலமுறை கண்டிருக்கிருேம். அனுபவமே அறிவுக்குப் பிறப்பிடமென்ருல், கோழிக்குஞ்சுகள் உணவைப் பொறுக்கவும், தாராக் குஞ்சுகள் நீரினைத் தமக்குரிய இடமாகக் கொள்ளவும் எங்கே பயின்றுகொண்டன? அது இயற்கை அறிவென்று சொல் வீர்களாயின், அது சொல் மாத்திரையாகுமேயன்றி, விளக்க மாகாது. இயற்கை அறிவென்பது யாது? நம்மிடத்து எத் தனையோ இயற்கை அறிவுகள் இருக்கின்றன. இவ்விடம் கூடி யிருக்கின்ற பெண்டிருட் பலர் யாழ் வாசிக்கப் பழகியிருப்பீர்கள். அவ்வண்ணம் பழகிய நீங்கள் முதலிலே பயிலும்பொழுது நரம்பு களிலே எவ்வளவு கவனமாக விரல்களை வைத்தீர்கள்? பலவருடம் பயில்வதனுலே, இப்பொழுதோ, நண்பர்களோடு உரையாடிக் கொண்டிருக்கும் போதும், உங்களுடைய விரல்கள் எளிதாக இசையை உண்டாக்குகின்றன. அது இயற்கை அறிவாய்விட்டது. நாம் செய்கிற தொழில்களெல்லாம் அவ்வண்ணமே பயிற்சியால் இயற்கை அறிவாக மாறுகின்றன. தாமே நடக்கும் செயலென

நாம் கருதுகின்ற ஒவ்வொன்றும் நியாயத்தினுடைய இழிந்த
நிலையேயாம். யோகக் குழூஉக்குறியிலே, இயற்கையறிவென்
பது, உள்ளடங்கிய நியாயமெனக் கொள்ளப்படும்.

அறிவானது உள்ளடங்கித் தாமே இயங்குகின்ற சம்ஸ்காரங்
கள் ஆகின்றது. இவ்வுலகத்திலே நாம் இயற்கையறிவென்று
சொல்வனவெல்லாம், உள்ளடங்கிய நியாயமேயாம் என்பது முற்
றிலும் தருக்கமுறைக்குப் பொருத்தமாகும். அனுபவமின்றி நியா
யம் வருதல் இயலாது. ஆகையால், எல்லா இயற்கையறிவுகளும்
முந்திய அனுபவத்தின் பயன்களேயாம். கோழிக் குஞ்சுகள் பருந்
தைக் கண்டு அஞ்சுவதும் தாராக் குஞ்சுகள் தண்ணீரை விரும்பு
வதும் முந்திய அனுபவத்தின் பயனாகவே வந்தன. 'இந்த அனுப
வம் ஓர் ஆன்மாவுக்கு உரியதா, அல்லது உடலுக்கு உரியதா? இந்த
அனுபவம் தாராவின் சொந்த அனுபவமா?' என்னும் வினாக்கள்
எழுகின்றன. இக்காலத்து விஞ்ஞான சாத்திரிகள் இது உடலுக்கு
உரியது என்கிறார்கள். யோகிகளோ, இவ்வனுபவம் உடல் வழியா
கச் சென்று மனத்தினின்று எழுவது என்பார்கள். இதுவே மறு
பிறப்புக் கொள்கை எனப்படும். நம்முடைய அறிவெல்லாவற்றை
யும் நாம் காட்சியென்றாலும், நியாயமென்றாலும், இயற்கையறி
வென்றாலும், அவை அனுபவமென்னும் ஒரு வழி மூலமாகவே வர
வேண்டியிருக்கின்றன. இப்பொழுது நாம் இயற்கையறிவென்று
சொல்லுவன பழைய அனுபவத்திலிருந்து எய்தியவை. மீட்டும்
இவ்வியற்கையறிவு நியாயமாக வளர்ச்சியெய்தும். பிரபஞ்சம்
முற்றிலும் இவ்வண்ணம் நடக்கின்றது. மறு பிறப்பைப்பற்றி
இந்தியாவிலே கொள்ளுகிற முக்கியமாகிய நியாயங்கள் இதனை
ஆதாரமாகக் கொண்டன. வேறுபட்ட அச்சங்கள் மீட்டும் மீட்டும்
உண்டாவதனாலே இந்த உயிர்ப்பற்றை வருவிக்கின்றன. பழைய
அனுபவத்தின் துன்பமானது நிலைப்பெற்றிருக்கின்றபடியினாலே
குழந்தை இயற்கையாகவே அஞ்சுகிறது. இந்த உடல் போய்
விடும். இதனைப்போல நூற்றுக்கணக்கான உடல்களை நாம்
அடைந்திருக்கிறோம். ஆன்மாவுக்கு அழிவில்லை எனச் சொல்லு
கிற நன்றாகக் கற்றவர்களும் புத்தியளவிலே துணிந்துகொண்டா
லும், உயிர்ப்பற்று உடையவர்களாயிருக்கக் காண்கிறோம். எத
னால் இந்த உயிர்ப்பற்று உண்டாகிறது? இது இயற்கையறிவு
மாத்திரையாக வந்துவிட்டது என்பதைக் கண்டோம். யோகிக
ளுடைய மனோதத்துவக் குறியீட்டிலே இது சம்ஸ்காரங்களாகி
விட்டதெனச் சொல்லப்படும். நுண்ணியவாய் மறைந்த சம்ஸ்
காரங்கள் சித்தத்திலே அயர்ந்துகிடக்கின்றன. மரணத்தைப்

பற்றிய பழைய அனுபவங்களெல்லாம், நாம் இயற்கையறிவென்று சொல் வனவெல்லாம், உணர்வுக்குக் கீழ்ப்பட்ட அனுபவமாய்விட்டன. அவை சித்தத்தில் நிலைத்து இருக்கின்றன; தொழிலின்றி இருக்கவில்லை. ஆனால், கீழே தொழில்புரிகின்றன. சித்தவிருத்திகளென்னும் மனத்தின் அலைகள் பருப்பொருட்டன்மையாய் இருத்தலாலே, அவற்றை நாம் உணர்ந்து மதிப்பிடுதல்கூடும். அவற்றை எளிதாக அடக்கியாளலாம். நுண்ணியவாகிய இயற்கையறிவுகளைக் கொண்டு என்ன செய்ய முடியும்? அவற்றை அடக்கியாளுவது எப்படி? நான் கோபமாயிருக்கும் பொழுது என்னுடைய மனம் முழுவதும் பெரிய வெகுளியலையாக மாறுகின்றது. நான் அதனை உணர்ந்து, கண்டு, மேற்கொண்டு, எளிதாக வெளிப்படுத்தி, அதனோடு போராடுதல் கூடும். ஆனால், ஆழ்ந்து சென்று காரணங்களைப் பற்றினாலன்றிப் போரிலே பூரண வெற்றி பெறுதல் இயலாது. ஒரு மனிதன் எனக்குச் சில கொடுஞ்சொற்களைக் கூறுகிறான். நான் கோபிப்பதை அறிந்து கொள்ளுகிறேன். ஆனால், என்னை மறந்து கோபத்தோடு என்னை ஒற்றுமைப்படுத்தும் வரையும், நான் முற்றான கோபத்தை அடைவதில்லை. அவன் முதலிலே என்னை நிந்தித்த பொழுது நான் கோபமுறப் போவதாக எண்ணினேன்; கோபம் வேறு நான் வேறாயிருந்தேன். கோபங் கொண்ட பொழுது நானே கோபமாயினேன். இந்த உணர்ச்சிகள் மூளையிலே நுண்ணிய உருவமாயிருக்கும் பொழுதே, இவை நம்மிடத்துத் தொழில் புரிகின்றன என்று உணர்வதற்கு முன்பே, இவற்றை நாம் அடக்குதல் வேண்டும். மனிதருட் பெரும்பாலாரால், வெகுளி முதலிய குற்றங்களின் நுண்ணிய நிலைகள் அறியப்படுவதில்லை. நுண்ணிய நிலைகளென்பவை உணர்வுக்குக் கீழ்ப்பட்ட படிகளிலிருந்து எழுகின்றன. ஒரு குளத்தின் அடியிலிருந்து குமிழி எழும்பொழுது அதனை நாம் காண்பதில்லை. மேற்பரப்புக்கு வந்த போதும் அறிவதில்லை. அது உடைந்து மேற்பரப்பிலே அலையை உண்டாக்கும் பொழுது அஃது அங்கு உள்ளது என அறிகிறோம். அலைகளை நுண்ணிய காரண வடிவமாயிருக்கும் பொழுது பற்றக் கூடுமானால், அவற்றை அடக்கியாளுவது எளிதாகும். தூலமாவதற்கு முன் அடக்காவிட்டால், எந்த விருப்பையும் பூரணமாக வெல்லுதல் முடியாது. விருப்பங்களை அடக்க வேண்டுமானால் அவற்றை வேரிலேயே களைந்துவிட வேண்டும். அவற்றின் வித்துக்களையே பொசுக்கிவிட வேண்டும். வறுத்த வித்து

முளையாதது போல, இந்த விருப்பங்களும் ஒரு பொழுதும் எழ மாட்டா.

ते प्रतिप्रसवहेयाः सूक्ष्माः ॥ १० ॥

**10. அந்தச் சூக்குமமான சம்ஸ்காரங்கள் தமது காரண வடிவாக இலயப்படும் பொழுது வெல்லப்படுகின்றன.**

தூல வடிவமாகப் பின்பு தோன்றுகின்ற சூக்கும நிலைகள் சம்ஸ்காரங்கள் எனப்படுகின்றன. இந்த நுண்ணிய சம்ஸ்காரங்களை அடக்கியாளுவது எப்படி? இவற்றினது காரியத்தைக் காரணமாகப் பிரித்து நோக்குவதனுல், காரிய வடிவாகிய சித்தம், தனது காரணமாகிய அஸ்மிதை (முனைப்பு) ஆக மாறி நிற்கும் பொழுது, சூக்குமமான சம்ஸ்காரங்களும் அதனோடு அழிந்து விடுகின்றன. தியானம் இவற்றை அழிக்க மாட்டாது.

ध्यानहेयास्तद्वृत्तयः ॥ ११ ॥

**11. அவற்றின் தூல வடிவங்கள் தியானத்தினுலே விலக்கப்படுகின்றன.**

இங்ஙனம் எழுகின்ற அலைகளை அடக்கியாளுவதற்குத் தியானம் ஒரு பெரிய கருவியாய் இருக்கிறது. தியானத்தினுலே இந்த அலைகளை மனத்தினைக் கொண்டு அடக்கும்படி செய்தல் கூடும். பல நாட்களாக, மாதங்களாக, ஆண்டுகளாகத் தியானத்தைப் பயின்று, அது ஒரு பழக்கமாகி, நீங்கள் கருதாமலே உங்களிடம் அது நிகழுமாயின், கோபத்தையும் பகைமையையும் அடக்கி நிறுத்துதல் கைகூடும்.

क्लेशमूलः कर्माशयो दृष्टादृष्टजन्मवेदनीयः ॥ १२ ॥

**12. வினைத் தொகுதியானது பேதைமை முதலிய துன்பங்களினின்று பிறப்பது. அது காணப்படுகிற வாழ்க்கையிலும் காணப்படாத வாழ்க்கையிலும் அனுபவிக்கப்படுவது.**

வினைத்தொகுதி என்பது சம்ஸ்காரங்கள் அனைத்தினையும் கூட்டிய தொகை. நாம் என்ன தொழிலைச் செய்தாலும் மனம் அலைவுறுகின்றது. தொழில் செய்து முடிந்தவுடனே அலை

போய்விட்டதென்று எண்ணுகிறோம். அப்படியன்று ; அது நுண்மையாகி, அங்கேயே இருக்கிறது. செய்த தொழிலை நினைவுகூர முயலும் பொழுது அது மீட்டும் வந்து அலையாகின்றது. ஆதலால், அது அங்கேயே இருந்தது. இல்லாவிடின், ஞாபகம் என்பதே இராது. ஒவ்வொரு தொழிலும் ஒவ்வோர் எண்ணமும் நன்மையாயினும் தீமையாயினும், கீழே இறங்கி நுண்மையாகிச் சேர்த்து வைக்கப்படுகிறது. இன்ப துன்பங்களோடு கூடிய எண்ணங்கள் அனைத்தும் துன்பத்தைத் தருகின்ற தடைகளேயாம். ஏனெனில், அவை ஈற்றிலே துன்பத்தையே தருகின்றன. புலன்களிலிருந்து வருகின்ற உவகையெல்லாம் நாளடைவிலே துன்பத்தையே தருகின்றன. நுகர்ச்சியினாலே வேட்கை உண்டாகிறது. அதன் பயனாகத் துன்பம் வந்து எய்துகின்றது. மனிதனுடைய விருப்பங்களுக்கு ஓர் எல்லையில்லை. அவன் விரும்பிக் கொண்டே போகிறான். விருப்பத்தை நிறைவேற்ற இடம் ஏற்படாவிட்டால், துன்பமே பயனாகின்றது. ஆதலால், நன்மை தீமையாகிய இரு வகை சம்ஸ்காரங்களின் தொகுதியையும் யோகியானவன் துன்பத்தைத் தருகின்ற தடைகளென்றே கொள்ளுகிறான். இவை ஆன்மா மோட்சமடைவதற்குரிய வழியைத் தடைப்படுத்துகின்றன.

நாம் செய்கின்ற வினைகள் அனைத்தினுக்கும் நுண்ணிய மூலங்களாய் இருக்கின்ற சம்ஸ்காரங்களும் அத்தகையனவே. அவை இந்த வாழ்க்கையிலாவது இனிமேல் வருகிற வாழ்க்கையிலாவது காரியப்படுதற்குரிய காரணங்களாவன. அந்தச் சம்ஸ்காரங்கள் மிகவும் வலிவுற்று நிற்கின்ற சில காலங்களில் மாத்திரம் அவை விரைவிலே பயனளிப்பதுண்டு. அளவு கடந்த தீச்செயல்களும் அத்தகைய நற்செயல்களும் இந்த வாழ்விலேயே பயனைத் தருதல் கூடும். நல்ல சம்ஸ்காரங்களின் பெருவலிமையைப் பெற்ற மனிதர்கள் மரிக்க வேண்டுவதில்லையெனவும், இந்த வாழ்விலே அவர்கள் தங்கள் உடலைத் தேவ உடலாக்கிக்கொள்ளுதல் கூடுமெனவும் யோகிகள் கருதுகிறார்கள். தங்களுடைய நூல்களிலே யோகிகள் இதற்குப் பல உதாரணங்களைக் குறிப்பிடுகிறார்கள். இத்தகைய மக்கள் தங்கள் உடலில் உள்ள அணுக்களை வேறுபடுத்தி அமைப்பதனால், நோயுறுவதில்லை. நாம் மரணமென்று சொல்லுவதும் இவர்களுக்கு வருவதில்லை. ஏன் இப்படி இருத்தல் கூடாது? சட தத்துவ சாத்திரத்தின்படி உணவு உட்கொள்ளுவதென்பது சூரியனிடத்திருந்து வந்த சத்தியை உடலோடு ஒன்றுபடுத்திக்கொள்ளுவதேயாகும். இந்தச் சத்தி

தாவரங்களைச் சாருகிறது. தாவரங்களை விலங்கினங்கள் தின்ன, விலங்கினங்களை மனிதன் உண்கிறான். நாம் சூரியனிடமிருந்து ஓர் அளவு சத்தியைக் கவர்ந்து நமதாக்கிக் கொள்ளுகிறோம். இஃது இப்படியிருத்தலினால், வலிமையைச் சேர்த்துக்கொள்வதற்கு ஒரே வழிதான் இருக்கிறதென்று கொள்ளவேண்டுமா? தாவரங்கள் மேற்கொள்ளுகிற முறையொன்று; நாம் மேற்கொள்ளும் முறை வேறொன்று; பூமி தன்னிடத்து வலிமையைச் சேர்த்துக்கொள்ளும் முறை மற்றொன்று. ஆயினும், அனைத்தும் யாதோ ஒரு வழியாகச் சத்தியைச் சேர்த்துக்கொள்கின்றன. சாதாரண முறைகளை மேற்கொள்ளாது தாங்கள் விரும்பிய வண்ணம் மனத்தின் வலிமையினாலே சத்தியைச் சேர்த்துக்கொள்ளுதல் கூடுமென்று யோகிகள் சொல்லுகிறார்கள். சிலந்திப் பூச்சியானது தன்னிடத்திலுள்ள பொருளினாலே ஒரு வலையைக் கட்டி, அதன் பின் அவ்வலையினால் கட்டுண்டு, வலையிலுள்ள இழைகள் வழியாக வன்றிப் பிற வழிச் செல்லவொண்ணாது நிற்பது போல, நாமும் நம்மிடத்திருந்து நரம்புப் பின்னல் என்னும் வலையினை ஏற்படுத்தினோம். அதனால் நரம்புகளின் வழியன்றிப் பிற வழியாகத் தொழில் செய்வது நம்மால் முடியாது. அப்படி நாம் கட்டுண்டிருக்க வேண்டுவதில்லையென யோகி சொல்லுகிறான்.

இவ்வண்ணமே உலகத்தின் எந்தப் பாகத்துக்கும் நாம் மின்சாரத்தைச் செலுத்துதல் கூடும். ஆனால், அதனைக் கம்பிகள் வழியாகச் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். இயற்கையானது ஒரு வகைக் கம்பிகளுமின்றிப் பெரிய அளவான மின்சாரத்தை அனுப்பக்கூடியதாயிருக்கின்றது. நாம் ஏன் அப்படிச் செய்தல் கூடாது? நாம் மானத மின்சாரத்தை அனுப்புதல் கூடும். நாம் மனமென்று சொல்லுவது மிகுதியும் மின்சாரத்தை நிகர்த்தது. இந்த நரம்புச் சத்தினிடத்தே ஓர் அளவு மின்சாரம் உண்டென்பது வெளிப்படை. ஏனெனில், அது திசை நோக்குவதாகவும் எல்லா மின்சாரத் தன்மைகளையும் உடையதாகவும் இருக்கிறது. நாம் நமது மின்சாரத்தை நரம்புகள் வழியாக மட்டுமே அனுப்பக்கூடியவர்களாய் இருக்கிறோம். ஆனால், மானத மின்சாரத்தை இந்த உதவியின்றி ஏன் அனுப்புதல் கூடாது? இது முற்றிலும் நம்மால் செய்து முடிக்கக்கூடியதென யோகிகள் சொல்லுகிறார்கள். இவ்வண்ணம் நீங்கள் செய்யக் கூடுமாயின், பிரபஞ்சம் அனைத்திலும் பரந்து நீங்கள் தொழில் செய்யக்கூடியவர்களாய் இருப்பீர்கள். நரம்பு மண்டலத்தின் உதவியின்றி, எவ்விடத்தும், எந்த உடலைக் கொண்டும், நீங்கள்

தொழில் புரியவல்லவர்களாவீர்கள் ; ஆன்மா நரம்பு மண்டல மாகிய வழிகளினூலே தொழில் புரியும்போது ஒரு மனிதன் உயிர் வாழ்கிருனென்று சொல்லுகிறோம். அவை தடையுறும் பொழுது மனிதன் இறந்துவிட்டான் என்று சொல்லுகிறோம். அந்த வழி களோடு கூடியோ, அவையின்றியோ, ஒரு மனிதன் தொழில் புரியக்கூடியவனுய் இருப்பானுயின், பிறப்பும் இறப்பும் அவனுக் குப் பயனற்றனவாகும். உலகிலுள்ள எல்லா உடல்களும் தன் மாத்திரைகளால் ஆக்கப்படுகின்றன. தன்மாத்திரைகள் நிரைப் படுத்தப்பட்டிருக்கிற ஒழுங்கு ஒன்று மட்டுமே அவற்றிடையே வேறுபட்டு நிற்பது. ஒழுங்குபடுத்துபவர்கள் நீங்களாயிருந் தால், நீங்கள் விரும்பிய வண்ணம் உடலை ஒழுங்குபடுத்துதல் கூடும். இந்த உடலை ஆக்கியவர்கள் உங்களையன்றி வேறு யாவர்? உணவை உண்டவர்கள் யார்? உங்களுக்காக வேறொருவர் உணவு உண்பதாயிருந்தால், நீங்கள் நீண்ட காலம் உயிர் வாழ்தல் இய லாது. உணவிலிருந்து குருதியை உண்டாக்கியவர் யார்? நிச்சய மாக நீங்களே. குருதியைச் சுத்தப்படுத்தி நாடிகள் மூலமாகச் செலுத்துபவர் யார்? நீங்களே. நாம் நமது உடலுக்குத் தலைவர் களாயிருக்கிறோம். நாம் அதனுள்ளே வசிக்கிறோம். அதனை எப்படி இளமைப்படுத்துவதென்னும் அறிவினை மறந்துபோய் விட்டோம். நாம் இழிவுற்று, எண்ணமின்றி இயங்குகின்ற தன்மையினராய்விட்டோம்; உடலிலுள்ள அணுக்களை ஒழுங்கு படுத்தும் நெறியை மறந்துபோய்விட்டோம். எண்ணமின்றி இயங்குகின்றவற்றை அறிந்து செய்ய முயல வேண்டும். நாம் தலைவர்களாயிருக்கிறோம். உடற்கட்டை நாம் ஒழுங்குபடுத்த வேண்டும். அங்ஙனம் நாம் செய்யக்கூடியவர்களாகும் பொழுது விரும்பிய வண்ணம் இளமை பெறலாம். பிறப்பு, நோய், மரணம் என்பன நமக்கு உண்டாக மாட்டா.

सति मूले तद्विपाको जात्यायुर्भोगाः ॥ १३ ॥

**13. துன்பத்தின் மூலம் இருக்கும் பொழுது, அதன் பயனுகிய சாதி, ஆயுள், இன்ப துன்ப நுகர்ச்சி என்னுமிவை உண்டாகின்றன.**

காரணமாகிய சம்ஸ்காரங்கள் காரிய வடிவாக வெளிப்பட்டுத் தோன்றுகின்றன. காரணம் அழிந்து காரியமாகின்றது. காரியம் நுண்ணியதாகி மேல் வருங் காரியத்துக்குக் காரணமாகின்றது. மரத்திலிருந்து விதையுண்டாகிறது. அது மற்றொரு மரத்துக்குக்

காரணமாகிறது. மேலும் அப்படியே. நாம் இப்பொழுது செய்கிற கருமங்கள் எல்லாம் பழைய சம்ஸ்காரங்களின் காரியமாயிருக்கின்றன. மேலும் இக்கருமங்கள் சம்ஸ்காரங்களாகி எதிர் காலத்தில் வரும் கருமங்களுக்குக் காரணங்களாகின்றன. இப்படியே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. காரணம் இருக்கும் பொழுது பயன் கட்டாயம் வரவேண்டுமென்று இந்தச் சூத்திரம் சொல்லுகின்றது. அந்தப் பயன் காரணமாக ஒருவன் மனிதனாகவும், தேவனாகவும், விலங்காகவும், பேயாகவும் தோன்றுதல் கூடும். இதுவே சாதியென்பது. இனி இந்த வாழ்க்கையிலேயே கருமப் பயன் வேறு வேறாக வந்தெய்துகின்றது. ஒரு மனிதன், ஐம்பது ஆண்டுகள் உயிர் வாழ்கின்றான். மற்றொருவன், நூறு ஆண்டுகள் வாழ்கிறான். மேலும் ஒருவன், இளமை கழியாது இரண்டாண்டிலே இறந்துவிடுகிறான். வாழ்க்கையில் நிகழும் இவ்வேறுபாடுகளெல்லாம் முந்திய வினையினாலே ஒழுங்குபட்டு நிகழ்கின்றன. ஒரு மனிதன், இன்பத்திற்காகவே பிறந்திருக்கிறான். அவன் நெருங்கிய வனத்திடையே சென்றாலும், இன்பம் அவனை அவ்விடத்திற்கும் பின் தொடர்ந்து செல்கிறது. மற்றொரு மனிதன், எங்குச் சென்றாலும், துன்பம் அவனைப் பின் தொடர்கின்றது. அனைத்தும் அவனுக்குத் துன்பமாகின்றன. இவை எல்லாம் முந்திய வினைகளின் பயனே. யோக தத்துவத்தின்படி எல்லா நற்செயல்களும் இன்பத்தைத் தருகின்றன; தீச்செயல் அனைத்தும் துன்பத்தைத் தருகின்றன. தீச்செயலைச் செய்கின்ற மனிதன், அதன் பயனாகிய துன்பத்தை அனுபவித்தே தீர வேண்டும்.

ते ह्लादपरितापफलाः पुण्यापुण्यहेतुत्वात् ॥ १४ ॥

14. இவை, புண்ணிய பாவங்களைக் காரணமாக உடைமையால், இன்ப துன்பங்களைத் தருகின்றன.

परिणामतापसंस्कारदुःखैर्गुणवृत्तिविरोधाच्च दुःखमेव सर्वं विवेकिनः ॥ १५ ॥

15. (காரண காரியத் தொடர்பினால் ஏற்படுகின்ற) மாறுதல்களினாலும், (நுகர்ச்சிக்குரிய பொருளை இழந்துவிட மனந்தாளாத) தாபத்தினாலும், சுகத்தின் சம்ஸ்காரங்களாலே ஏற்படுகின்ற

இச்சையினுலும், குண விருத்திகளுடைய எதிரிடையினுலும், அறிஞனுக்கு அனைத்தும் துன்பமாகவே இருக்கின்றன.

நல்லறிவுள்ள விவேகியாகிய மனிதன் இன்ப துன்பங்களை ஊடுருவ நோக்கி, ஒன்று மற்றென்றினைத் தொடர்ந்து யாவர்க்கும் நிகழ்கின்ற தன்மையை அறிகிருன் என்றும், வாழ்க்கை முழுவதும் மக்கள் கானல் நீரினைத் தேடி அலைபவர்கள் போல உழல்கிருர்களென்றும் அவர்கள் விரும்பிய பொருள் ஒரு பொழுதும் கைகூடுவதில்லையென்றும் யோகிகள் கூறுகிருர்கள். கணந்தோறும் மக்கள் இறப்பதைக் கண்டும், 'நாம் ஒரு பொழுதும் இறக்கமாட்டோம்' என்றெண்ணிக்கொண்டிருப்பது மாபெரு வியப்பாகுமென, மாட்சிமை பொருந்திய அரசராகிய யுதிஷ்டிரர் கூறுகிருர். எல்லாப் பக்கங்களிலும் மூடர் இருக்கக் கண்டும் நாம் மாத்திரம் சிறப்பு விதியாகக் கல்வியறிவுடையோமென நினைக்கிறோம். எல்லாப் பக்கங்களிலும் உறுதியின்மை இருக்கக் கண்டும், நமது அன்பு மாத்திரம் நிலைபேறு உடையதென்று எண்ணுகிறோம். இஃது எப்படியாகும்? அன்பும் சுயநலத்தைக் கருதியது. கணவனுக்கும், மனைவிக்கும், குழந்தைக்கும், நண்பருக்கும் இடையே ஏற்பட்டுள்ள அன்பும் சிறிது சிறிதாக அழிந்து போகிறதென்று யோகிகள் சொல்லுகிருர்கள். அழிவானது வாழ்க்கையில் எல்லாவற்றையும் பற்றுகிறது. வாழ்க்கையிலுள்ள அனைத்தும், அன்பும் அழிந்து போகிற தருணத்தில், மனிதன் இந்த உலகமுற்றும் கனவு நீர்மையது என்பதை அறிந்துகொள்கிருன். அதன் பயனுக அவன் வைராக்கியத்தைப் பெற்று, அப்பாலிருக்கிற பரம்பொருளை ஓர் அளவுக்குக் காணுதல் கூடும். இந்த உலகத்தை விடுவதனுலே அது எய்தப்படுவதேயன்றி, இம்மையிலே பொருள்களைப் பற்றிக்கொண்டு நிற்பதனுல் அது எய்தப்படுவதில்லை. புலனுகர்ச்சி இன்பங்களையும் சுகானுபவங்களையும் விட்டொழிக்காமல் உயர்வினையடைந்தார் யாருமிலர். இயற்கையிலுள்ள தத்துவங்களிலே ஒன்று ஒரு புறமாக இழுக்க, மற்றென்று மற்றொரு புறமாக இழுத்து, நிலைபேருகிய உவகையை எய்தவொட்டாது தடுப்பதே துன்பத்துக்குக் காரணமாகும்.

हेयं दुःखमनागतम् ॥ १६ ॥

16. மேல் வரப்போகின்ற துக்கமே அகற்றிவிடுதற்குரியது.

சில கருமங்களை அனுபவித்துத் தீர்த்துவிட்டோம்; சில வற்றை இப்பொழுது தொழிற்படுத்துகிறோம்; இன்னும் சில எதிர் காலத்திலே பயனளிக்கும்பொருட்டுக் காத்துக்கொண்டிருக்கின் றன. முதல் வகை கழிந்து போய்விட்டது; இரண்டாவதனை நாம் செய்தே தீரவேண்டும். எதிர் காலத்தில் பயன் தருவதற்குக் காத்துக்கொண்டிருப்பதனையே நாம் வென்று அடக்குதல் கூடும். இதனை நோக்கியே நமது வல்லமை அனைத்தினையும் செலுத்த வேண்டும். சம்ஸ்காரங்களை தமது காரண வடிவாக லயப்படுத்தி அடக்குதல் வேண்டும் எனப் பதஞ்சலியார் கூறுவதன் கருத்து இதுவே.

द्रष्टृदृश्ययोः संयोगो हेयहेतुः ॥ १७ ॥

**17. காண்பானும் காணப்படும் பொருளும் ஒன்று கூடுவதே (விலக்க வேண்டிய) துக்கத்திற்குக் காரணமாகும்.**

காண்பான் யாவன்? மனிதனுடைய ஆன்மாவாகிய புருடன். காணப்படுவது யாது? மனம் முதலாகச் சடப்பொருள் ஈறாக வுள்ள இயற்கைத் தோற்றம் அனைத்தும் இந்தப் புருடனும் மன மும் ஒன்று கூடுவதனாலே இன்ப துன்பங்கள் எழுகின்றன. இந் தத் தத்துவ விசாரத்தின்படி, புருடன் இயல்பாகவே சுத்தன் என் பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். இயற்கையோடு ஒன்று கூடும்பொழுது, பிரதிபிம்பத்தினாலே புருடன் இன்ப துன்பங் களை அனுபவிப்பவனாகக் காணப்படுகிறான்.

प्रकाशक्रियास्थितिशीलं भूतेन्द्रियात्मकं भोगापवर्गार्थं दृश्यम् ॥ १८ ॥

**18. காணப்படும் பொருள், பூதங்களாலும் இந்திரியங்களா லும் ஆக்கப்பட்டு, ஒளியையும் செயலையும் அசைவின்மையையும் தன்மையாகக் கொண்டு, சுகானுபவங்களையும் முத்தியையும் நோக்கமாகவுடையது.**

காட்சிப் பொருளாகிய இயற்கை பூதங்களாலும் இந்திரியங்க ளாலும் ஆக்கப்பட்டது. தூல சூக்குமமான பூதங்களே இயற்கை யாய் அமைகின்றன. ஐம்புலன்களும், மனமும் இவற்றைச் சார்ந் தன: அவை ஒளி (சத்துவகுணம்), செயல் (ரஜோ குணம்), அசைவின்மை (தமோகுணம்) என்னும் தன்மையை உடையன.

இயற்கை முழுவதற்கும் உள்ள நோக்கமென்ன? புருடன் அனுபவத்தை அடைவதேயாம். புருடன் தனக்கு உரிய பெரிய தெய்வத்தன்மையை மறந்து போய்விட்டான். இதற்கு உதாரணமாக ஒரு கதை உண்டு.

தேவராஜனுகிய இந்திரன் ஒரு முறை, ஒரு பன்றியாகிச் சேற்றிலே புரண்டான். அவனுக்கு ஒரு பெண் பன்றியும் பல குட்டிகளும் இருந்தன. அவன் உவகையுற்றிருந்தான். சில தேவர்கள் அவன் கதியைக் கண்டு அவனிடம் வந்து, அவனை நோக்கி, "நீ தேவர்களுக்கு அரசன்; எல்லாத் தேவர்களும் உன்னுடைய கட்டளைக்கு அமைந்து நடப்பார்கள்; நீ ஏன் இங்கு இருக்கிருய்?" என்ருர்கள். அதற்கு இந்திரன், "காரியமில்லை; நான் இங்குச் சுகமாயிருக்கிறேன்; இந்தப் பெண் பன்றியும் குட்டிகளும் இருக்கும் வரையும் எனக்குச் சுவர்க்கம் வேண்டா," என்ருன். தேவர்களுக்கு என்ன செய்வதென்பது தெரியவில்லை. அவர்கள் பன்றிகளை ஒவ்வொன்ருகக் கொல்ல வேண்டுமென்று நிச்சயித்தார்கள். எல்லாம் இறந்து போக, இந்திரன் அழுது புலம்பினுன். பின்பு தேவர்கள் பன்றி உடலைக் கிழித்தார்கள். இந்திரன் அதிலிருந்து புறப்பட்டுத் தான் கண்ட கொடுமையான கனவை எண்ணி நகைத்தான். தேவராஜனுகிய தான் பன்றியாகிப் பன்றி வாழ்க்கையொன்றே வாழ்க்கையெனவும் பிரபஞ்சமனைத்தும் பன்றியாக வேண்டுமெனவும் எண்ணியது அவனுக்கு நகையை விளைத்தது. புருடன் தன்னை இயற்கையோடு ஒன்ருக நோக்கும்போது தான் பரிசுத்தன் என்பதையும், எல்லையற்றவன் என்பதையும் மறந்து விடுகிருன். புருடன் அன்பு செய்வதில்லை. அவனே அன்பு. அவன் உண்டாவதில்லை; உள்ள பொருள் அவனே. ஆன்மா அறிவதில்லை; அதுவே அறிவு. ஆன்மா அன்பு செய்கிறதென்றும், உளதாயிருக்கிறதென்றும், அறிகிறதென்றும் சொல்வது தவறு. அன்பு, உளதாந்தன்மை, அறிவு என்னுமிவை புருடனுடைய குணங்கள் அல்ல. இவையே புருடன். இவை யாதாயினும் ஒரு பொருளின் மீது பட்டுப் பிரதிபிம்பிக்கும் பொழுது, இவை தம்மை அந்தப் பொருளின் குணங்கள் என்று சொல்லலாம். இவை எல்லையற்ற பொருளாகிய பெரிய ஆத்மன் எனப்படும் புருடனது குணங்களல்ல; இவையே ஆன்மா. ஆன்மா, பிறப்பு இறப்பு இன்றித் தனது சொந்த மாட்சிமையிலே நிலைபெற்றிருக்கிறது. அது இழிவெய்திவிட்டபடியால், அதனையணுகி, "நீ பன்றியில்லை," என்று கூறினுல், உடனே உறுமிக் கடிக்கத் தொடங்குகிறது.

கவலையும், அழுகையும், புலம்பலும் நிறைந்த இவ்வுலகத்திலே, கனவு நீர்மையாக மாயையிற்சிக்குண்டு கிடக்கும் நமக்கு எய்துவது இதுவே. சில பொற்கட்டிகளைக் கண்டு உலகம் அவற்றின் பின்னே ஓடுகிறது. நீங்கள் விதிகளாலே ஒரு பொழுதும் கட்டுப்படவில்லை. இயற்கை உங்களுக்கு ஒரு பந்தத்தையும் ஏற்படுத்தவில்லை. யோகி உங்களுக்குச் சொல்லுவது இது; பொறுமையோடு இதனை அறிந்துகொள்க. இயற்கையோடு ஒன்றுபட்டு, மனத்தோடும் உலகத்தோடும் சேர்ந்து நின்று, புருடன் தான் துன்புற்றிருப்பதாக எண்ணுவதை யோகி எடுத்துக்காட்டுகிருன். வெளியேறுவதற்கு வழி அனுபவத்தினூடே அமைந்திருக்கிறதென்பதை யோகி காட்டுகிருன். நீங்கள் இந்த அனுபவத்தைப் பெறுதல் வேண்டும். ஆனுல், விரைவில் இதனை முடித்துவிட வேண்டும். இந்த வலையிலே சிக்கின நாம், இதை விட்டு வெளிப்பட வேண்டும். பொறியிலே சிறைப்பட்ட நாம், விடுதலையடைய முயல வேண்டும். கணவன், மனைவி, நண்பர், சிறிய அன்புக்குரிய பொருள்கள் என்னுமிவற்றின் அனுபவத்தை நாம் அடையவேண்டும். உண்மையில் நீங்கள் யார் என்பதை ஒரு பொழுதும் மறவாதிருந்தால், எளிதாக இவற்றினின்றும் வெளியேறுவீர்கள். இது கணப்பொழுது உள்ள நிலை என்பதையும், நாம் இதனூடாகப் போகவேண்டும் என்பதையும் மறந்துவிடாதீர்கள். இன்பதுன்ப அனுபவமே பெரிய ஆசிரியன். ஆனுல், அது அனுபவமாத்திரையே என்பதை அறிந்து கொள்க. படிப்படியாக முன்னேறிச் சென்று எல்லாப் பொருள்களும் சிறியவையாகின்ற நிலையையடைந்தால் புருடன் பெரியவனுகி நிற்பான். அப்பொழுது பிரபஞ்சமனைத்தும் கடலிலே ஒரு திவலை போலக் காணப்பட்டு, ஒன்று மற்று அழிந்து போகும். பலவேறு வகைப்பட்ட அனுபவங்களினூடாக நாம் செல்லவேண்டும். ஆனுல், நமது மேலாகிய நிலையை ஒரு பொழுதும் மறந்துவிடுதல் கூடாது.

विशेषाविशेषलिङ्गमात्रालिङ्गानि गुणपर्वाणि ॥ १९ ॥

19. வரையறையுடையது, வரையறையற்றது, குறியுடையது, குறியற்றது என்னுமிவை குணங்களின் நிலைகளாகின்றன.

நான் முன்பு கூறியது போல, யோக தத்துவ சாத்திரமானது சாங்கிய தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டது. சாங்கிய தத்துவத்தின்படி, பிரபஞ்சத்தின் அமைப்பைப் பற்றிய குறிப்புகளை

மீட்டும் நினைப்பூட்டுவேன். பிரகிருதியே பிரபஞ்சத்திற்கு முதற் காரணமும், துணைக்காரணமும் ஆகியதென்பது சாங்கியருடைய கொள்கை. பிரகிருதியிலே சத்துவம், ராஜஸம், தாமஸம் என்னும் மூவகைக் குணங்கள் இருக்கின்றன. இருளோடும் அறியாமையோடும் பொருந்தித் தூலமாயிருக்கின்ற பொருள், தமஸ் அல்லது தாமஸம். செயலோடு கூடியது ரஜஸ் அல்லது ராஜஸம். அமைதியோடும் ஒளியோடும் கூடியது சத்துவம். படைப்புக்கு முன்பு பிரகிருதி அவ்வியக்தமெனப்படும். அஃதாவது, வரையறையற்றது; வேறுபாடற்றது. அந்த நிலையிலே நாமரூப பேதமின்றி மூவகைப் பொருளும் சமநிலையாயிருக்கும். இந்தச் சமநிலையானது கலைந்து போய்விட, மூன்று பொருளும் வேறு வேறு வகையாக ஒன்றுகூடுவதனாலே, பிரபஞ்சம் உற்பத்தியாகிறது. ஒவ்வொரு மனிதனிடத்தும் இந்த மூன்று குணங்களும் இருக்கின்றன. சத்துவம் அதிகப்பட்டிருக்கும் பொழுது அறிவு வருகிறது. ராஜஸ குணத்தினால் செயல் உண்டாகிறது. தாமஸ குணத்தினால் இருள், சோர்வு, சோம்பல், அறியாமை என்னுமிவை உண்டாகின்றன. சாங்கியக் கொள்கையின்படி, மூன்று குணங்களும் ஒன்றுகூடிய மிக உயர்ந்த தோற்றம் 'மஹத்' எனப்படும். இது பிரபஞ்சமனைத்திலும் செறிந்திருக்கின்ற புத்தியாகும். ஒவ்வொரு மனிதனுடைய புத்தியும் இதனொரு பாகமாகும். சாங்கிய மனநூலின்படி, மனம் புத்தியினின்றும் முற்றிலும் வேறுபட்டது. எண்ணங்களைத் தொகுத்துப் புத்தியின் முன்பு வைத்தல் மனத்தின் தொழிலாகும். மஹத்தின் பாகமாகிய புத்தி அவற்றை நிச்சயிக்கும். மஹத்திலிருந்து அஹங்காரம் தோற்றும். அதிலிருந்து நுண்பொருள்கள் தோன்றுகின்றன. நுண்பொருள்கள் ஒன்றுகூடுவதால் வெளியேயுள்ள பிரபஞ்சமாகிய பருப்பொருள் ஆகின்றது. புத்தி முதல் கல்லீருகவுள்ள பொருளனைத்தும் தோற்றப்பொருளே. அவை தூல சூக்கும பேதங்களேயாம் என்பது சாங்கியத்தின் முடிபு. சூக்குமமாகிய நுண்பொருள் காரணமாயிருக்கின்றது. தூலமாகிய பருப்பொருள் காரியமாயிருக்கின்றது. சாங்கிய தத்துவத்தின்படி பிரகிருதிக்கு அப்பால் புருடன் இருக்கிறான். இவன் சடப்பொருளல்லன்; புருடன் மற்றொன்றினுக்கும் ஒப்புடையனல்லன்; புத்தி, மனம், தன்மாத்திரை, தூல பூதங்கள் என்னுமிவையுமல்லன். இவற்றினோடு புருடன் தொடர்புடையனல்லன். முற்றிலும் தன்னியற்கையிலே வேறுபட்டு நிற்கிற புருடன், பிற பொருள்களினுடைய சேர்க்கை

யினாலே ஆக்கப்படாதவன். ஆதலால், அவன் நித்தியப் பொருளாய் இருக்க வேண்டும். சேர்க்கையினால் ஆகாதது நாசமடைதல் இயலாது. புருடராகிய ஆன்மாக்களின் தொகை எண்ணிறந்து நிற்கும்.

குணங்களின் நிலைகளை வரையறையுடையது, வரையறையற்றது, குறி மாத்திரம் உடையது, குறியற்றது எனச் சொல்லுகிற சூத்திரத்தை நாம் இப்பொழுது அறிந்துகொள்ளலாம். புலன்களினாலே நாம் அறியக்கூடிய தூலபூதங்களே "வரையறையுடையன" என்பதால் கருதப்படுகின்றன. சாதாரண மக்களுக்குப் புலப்படாத நுண்ணிய பொருள்கள் "வரையறையற்றன." சிறிது காலத்திற்கு யோகாப்பியாசஞ் செய்து வந்தால், காட்சி நுண்ணியதாகித் தன்மாத்திரைகளைக் காணக் கூடுமெனப் பதஞ்சலி முனிவர் சொல்லுகிறார். ஒவ்வொரு மனிதனையும் சூழக் காணப்படுகிற ஒளி ஒன்று உண்டு என்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒவ்வோர் உயிர்ப்பிராணியும் ஓர் ஒளியைத் தருகின்றது. இதனை யோகி காணக்கூடும். நாம் இதனைக் காண்பதில்லை. ஒரு மலர் நுண்ணிய மணத்தின் அணுக்களை இடைவிடாது பரப்புவது போல நாமும் இத் தன்மாத்திரைகளை இடைவிடாது பரப்புகிறோம். நமது வாழ்வில் ஒவ்வொரு நாளும், நாம் செல்லுமிடமெல்லாம் நன்மையையோ தீமையையோ பரப்புகிறோம். காற்று இவற்றினால் நிறைந்திருக்கிறது. கோயில்களையும் ஆலயங்களையும் கட்டவேண்டுமென்னும் எண்ணம், மனிதனுடைய சிந்தைக்கு வந்த காரணமென்ன? கடவுளை வழிபடுவதற்கு ஆலயங்களை ஏன் அமைக்க வேண்டும்? எங்கேயாவது ஓரிடத்தில் ஏன் கடவுளை வழிபடுதல் கூடாது? மனிதனுக்குத் தருக்க அறிவு தெரியாவிட்டாலும் திரளான மக்கள் கூடிக் கடவுளை வழிபடுகிற இடத்தில் நல்ல தன்மாத்திரைகள் நிறைகின்றன என்பதை மனிதன் அறிந்தான். ஒவ்வொரு நாளும் மக்கள் அங்கே போகிறார்கள்; போதலினாலே தூய்மை அடைகிறார்கள்; இடமும், மேலும் மேலும் பரிசுத்தமாகிறது. சத்துவகுணம் அதிகமில்லாதவன், அவ்விடத்திற்குப் போகும் பொழுது, இடத்தின் மாண்பினாலே அவனது சத்துவகுணம் அதிகரிக்கிறது. ஆலயங்களும் பரிசுத்த இடங்களும் சிறப்பெய்தியதன் காரணமிதுவே. ஆனால், அவற்றுடைய பரிசுத்தம் அங்கு வந்து கூடுகிற பரிசுத்தவான்களைப் பொறுத்தது. தீயோர் மாத்திரமே அவ்விடம் போவதாய் இருந்தால், அந்த இடமும் மற்ற இடங்களைப் போலக் கெட்டொழிந்து போகும்.

தேவாலயத்தை ஆக்குபவர்கள் மக்களே என்பதை நாம் மறந்து விடுதல் கூடாது. கட்டடத்தில் ஒன்றுமில்லை. சத்துவகுணம் அதிகமுள்ள முனிவர்களும், தூயவர்களும் தங்களைச் சூழவிருக்கும் பொருள்களில் இரவும் பகலும் அளவு கடந்த பெரிய சத்தியைச் சேர்த்து வைக்கிறார்கள். தனது தூய்மை பிறருக்குப் புலப்படும் வண்ணம் ஒரு மனிதன் சிறந்த தூயவனாகலாம். அவனைத் தொட்டோர் தூய்மையுடையவராகின்றனர்.

அடுத்தபடியாகக் "குறி மாத்திரம் உடையது" எனப்படுவது புத்தியாகும். இதுவே பிரகிருதியிலிருந்து முதலிலே வெளிப்பட்டது. ஏனைய தோற்றங்களெல்லாம் இதிலிருந்து உண்டாவன. இந்த விஷயத்தில் விஞ்ஞான சாத்திரத்திற்கும் சமய நூலுக்கும் பெரிய வேறுபாடிருப்பதாகக் காணப்படுகிறது. பிரபஞ்சமானது புத்தியிலிருந்து வெளிப்பட்டதென்னும் கருத்து, எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாயுள்ளது. கடவுளைப்பற்றி மனநூல் வல்லார் கொண்டிருக்கிற கொள்கையின்படி, புத்தியே படைப்பின் ஒழுங்கில் முதலாயுள்ளது. நாம் சடப்பொருளென்று சொல்வது புத்தியிலிருந்தே தோற்றியது. இக்காலத்திலுள்ள தத்துவ சாத்திரிகள் புத்தியே இறுதியாகத் தோற்றியது என்பார்கள்; அறிவற்ற பொருள்கள் படிப்படியாக விலங்குகளின் உருவத்தோடு பரிணமிக்க, விலங்குகளிலிருந்து மனிதன் தோன்றினான் என்பார்கள்; யாவும் புத்தியிலிருந்து வந்தனவெனக் கொள்ளாது, புத்தியே இறுதியில் வந்தது என்பார்கள். சமயக்கொள்கையும் விஞ்ஞானக் கொள்கையும் ஒன்றினுக்கொன்று எதிரிடையாகக் காணப்படினும், இரண்டும் உண்மையாய் இருக்கின்றன. அ—ஆ...அ...ஆ...அ...ஆ என்று இவ்வாறு செல்லுகிற எல்லையற்ற தொடர் ஒன்றினை எடுத்துக்கொள்வோம். அ முந்தியதா, அன்றேல், ஆ முந்தியதா? குறித்த தொடரை அ—ஆ எனத் தொடங்கி நோக்குமிடத்து, அ முந்தியது. ஆயினும் ஆ...அ என்பது முதலாக நோக்கினால், ஆ முந்தியது. பெறுகின்ற துணிபு நோக்கும் முறையைப் பொறுத்தது. புத்தி வேறுபட்டுச் சடப்பொருள் ஆகிறது. அது மீட்டும் புத்தியிலே அமிழ்ந்து விடுகிறது. இவ்வாறே நிகழ்ந்துகொண்டிருக்கிறது. சாங்கியரும் ஏனைய சமயவாதிகளும் புத்தியை முதலில் வைக்கிறார்கள். அப்பொழுது, புத்தி சடம் என்ற முறையாகத் தொடர்பு ஏற்படுகிறது. விஞ்ஞான நூல் வல்லார் சடத்தை முதலிற்கூறி, சடம் புத்தி என்ற முறையாகத் தொடர்பு காட்டுகிறார்கள். இரு பாலாரும் குறிப்பது ஒரே தொடர்பினைத்தான். இந்திய தத்துவ சாத்

திரமானது, புத்தியையும் சடத்தையும் கடந்து சென்று, புத்திக்கு அப்பாலாயுள்ள புருடனாகிய ஆன்மாவைக் காண்கிறது. புத்தியினுடைய ஒளி புருடனிடத்திலிருந்து இரவலாகப் பெற்ற ஒளியேயாம்.

द्रष्टा दृशिमात्रः शुद्धोऽपि प्रत्ययानुपश्यः ॥ २० ॥

20. காண்போனாகிய புருடன், ஞானம் மாத்திரமாய் இருக்கிறான்; சுத்தனாயிருந்தும், புத்தி விருத்தியை மேற்கொண்டு (விஷயங்களைப்) பார்க்கிறான்.

இதுவும் சாங்கிய தத்துவ முடிபாகும். இத்தத்துவ ஆராய்ச்சியின்படி, மிகவும் கீழ்ப்பட்ட உருவங்கள் தொடங்கிப் புத்தி ஈறாகவுள்ள அனைத்தும் பிரகிருதியாகும். பிரகிருதிக்கு அப்பால் குணங்களற்ற புருடன் உளன். அப்படியாயின், புருடன் இன்ப துன்பங்களை அடைவதுபோலக் காணப்படுவதெப்படி? இது பிரதிபிம்பத்தாலாகிறது. தூய படிகத்துண்டின் அருகில் சிவந்த நிறமான மலரை வைத்தால் படிகம் சிவப்பாய்த் தோன்றுகிறது. அதுபோலவே, ஆன்மாவினுடைய இன்பதுன்பத் தோற்றங்கள் பிரதி பிம்பங்களாயிருக்கின்றன. ஆன்மாவினிடத்தே நிற மொன்றுமில்லை. ஆன்மா பிரகிருதியிலிருந்து வேறுபட்டது. பிரகிருதி ஒன்று; ஆன்மா மற்றொன்று. இவை நித்தியமாக வேறுபட்டிருக்கின்றன. புத்தி சேர்க்கைப் பொருளெனினும், அது உடலைப்போல வளர்ந்து சுருங்கி வேறுபடுகிறதெனினும், அதனுடைய இயற்கை ஏறக்குறைய உடலினைப் போன்றதென்று சாங்கியர்கள் சொல்லுகிறார்கள். உடலிற்கும் விரலிலுள்ள நகத்திற்கும் என்ன பொருத்தமிருக்கிறதோ, அத்தகைய பொருத்தமே புத்திக்கும் உடலுக்குமிடையே உளது. நகம் உடலிலொரு பாகமாயிருக்கிறது. அதனை நூறு முறை களைந்து எறிந்தாலும், உடல் நிலைபெற்றிருக்கிறது. அதுபோலவே, உடலை எத்தனை முறை களைந்தெறிந்தாலும் புத்தி நிலைபெற்றிருக்கிறது. அங்ஙனமாயினும், வளர்ந்தும் சுருங்கியும் வேறுபடும் தன்மையினதாகிய புத்தி, நித்தியப் பொருளாயிருக்க மாட்டாது. எது வேறுபடுகின்றதோ, அது நித்தியப் பொருளாயிருத்தல் இயலாது. புத்தி நிச்சயமாகவே செயற்கைப் பொருள். அதற்கப்பால் வேறொன்று இருக்க வேண்டுமென்பதை இந்த உண்மையே காட்டுகிறது. அது தளையற்றதாயிருத்தல் இயலாது. சடத்தோடு தொடர்

புடைய அனைத்தும் பிரகிருதியில் இருக்கின்றன. ஆதலால், நித்தியமாகப் பந்தப்பட்டிருக்கின்றன. பந்தமற்றவன் யார்? காரணகாரியத் தொடர்புக்கு அப்பாலாகி நிற்பவனே பந்தமற்றவன். மோட்சமென்னும் எண்ணம் மயக்கவுணர்வின்பாற்பட்டது என்பீர்களாயின், பந்தமென்னும் எண்ணமும் அத்தகையதே என்பேன். பந்தமோட்சங்களைப் பற்றிய எண்ணங்கள் நமது உணர்வினுட்படுகின்றன. இரண்டும் நிற்க வேண்டும்; அன்றேல், இரண்டும் விழவேண்டும். ஒரு சுவருக்கு ஊடாகப் போக முயலுவோமாயின், சுவரிலே தலையை முட்டுவோம். சுவர் நம்மைத் தடைசெய்து நிற்பதைக் காண்போம். அப்படி இருந்தும் நமக்கு ஒரு சித்த சத்தி உண்டென்று அறிவோம். அதனை விரும்பிய இடத்துக்குச் செலுத்தலாமென்று எண்ணுகிறோம். ஒன்றுக்கொன்று எதிராகிய இந்த எண்ணங்கள் ஒவ்வொரு படியிலும் காணப்படுகின்றன. நாம் சுதந்திரமுடையோர் என்று நம்ப வேண்டியவராயிருக்கிறோம்; ஆயினும், ஒவ்வொரு கணத்திலும் நமது சுதந்திரமின்மையை உணருகிறோம். ஒரு கருத்து மயக்கத்தோடு கூடியதாயின், மற்றதும் மயக்கத்தோடு கூடியதே. ஒன்று உண்மையாயின், மற்றதும் உண்மையே. ஏனெனில், இவ்விரண்டும் உணர்வு என்னும் ஒரே ஆதாரத்தில் நிற்கின்றன. இரண்டும் உண்மையே என்று யோகி சொல்லுகிறான். புத்தி செல்லுகிற அளவில், நாம் பந்தமுற்றவர்களே; ஆன்மாவைப் பொறுத்த அளவில் சுதந்திரமுடையவர்களே. காரண காரியத் தொடர்புக்கு அப்பாலாயிருக்கும் ஆன்மாவின் உண்மை இயல்பு இதுவே. ஆன்மாவுக்குச் சொந்தமாயுள்ள சுதந்திரமானது, புத்தி மனம் முதலிய வேறு வேறாகிய சடப் பொருள்களின் படலங்களுக்கு ஊடாகச் செறிந்து செல்லுகிறது. அதனுடைய ஒளியே யாவற்றையும் ஒளி விடுமாறு செய்கிறது. புத்தி தனக்கென ஓர் ஒளி இல்லாதது. புறக்கரணம் ஒவ்வொன்றினுக்கும் மூளையிலே ஒவ்வொரு தனி நிலையம் இருக்கிறது. எல்லாக் கரணங்களுக்கும் ஒரு நிலையமென்பது இல்லை. ஒவ்வொன்றும் தனித் தனியாயிருக்கின்றது. அப்படியாயின், நமது காட்சியனைத்தும் சமரசப்பட்டு நிற்பது எவ்வாறு? ஒன்றுந்தன்மையை அவை எங்கே பெறுகின்றன? அது மூளையிலே இருந்தால் கண், காது, மூக்கு முதலிய கருவிகளுக்கெல்லாம் ஒரே நிலையம் இருக்க வேண்டும். ஆனால், ஒவ்வொன்றுக்கும் தனி நிலையம் உண்டு என்பதை நாம் நிச்சயமாக அறிவோம். ஒரு மனிதன் ஒரே நேரத்தில் காண்பதும் கேட்பதும் செய்யலாம். ஆதலால், அவனது புத்திக்கு

ஆதாரமாக ஒரு தனிப்பொருள் இருக்க வேண்டும். புத்தி மூளை யோடு தொடர்புடையது. ஆனால், புத்திக்கும் பின்னாகத் தனிப் பொருளாகிய புருடன் இருக்கிறான். வேறு வேறாகிய உணர்ச்சி களும் காட்சிகளும் இதனிடத்து ஒன்றுபடுகின்றன. வேறுபட்ட காட்சிகளெல்லாம் திரண்டு ஒன்றாகிற நிலையத்திலே ஆன்மா இருக்கிறது. ஆன்மா சுதந்திரம் உடையது. அதனுடைய சுதந் திரமே ஒவ்வொரு கணத்திலும் உங்களுக்குச் சுதந்திர எண்ணத் தைத் தருகிறது. ஒவ்வொரு கணத்திலும் தோன்றுகிற அந்தச் சுதந்திர எண்ணத்தைப் புத்தியோடும் மனத்தோடும் சேர்த்து நீங்கள் தவறு செய்கிறீர்கள். அந்தச் சுதந்திரத்தைப் புத்திக் குரியதாக்க முயலுகிறீர்கள். புத்தி சுதந்திரம் அற்றதென உடனே காண்கிறீர்கள். உடல் சுதந்திரம் உடையதென நீங்கள் நினைக்கிறீர்கள். நீங்கள் எண்ணுவது பிழையெனப் பிரகிருதி உடனே உங்களுக்கு அறிவிக்கிறது. ஆதலால், ஒரே நேரத்தில் பந்த மோட்ச எண்ணங்கள் இரண்டும் கலந்து தோன்றுகின்றன. சுதந்திரம் உடையதையும் கட்டுண்டதையும் யோகி பாகுபாடு செய்து பார்க்கிறான். அவனது அறியாமை அகன்றுவிடுகிறது. புருடன் சுதந்திரம் உடையனெனவும், புத்தியினூடாக வருகிற அறிவின் சாரம் கட்டுண்டது எனவும் அவன் காண்கிறான்.

तदर्थ एव दृश्यस्यात्मा ॥ २१ ॥

21. அறியப்படுவதனுடைய இயற்கை அவன் (புருடன்) பொருட்டு உள்ளது.

பிரகிருதி தனக்கென ஒளி இல்லாதது. புருடன் இருக்கிற வரையும் அது ஒளியாகத் தோற்றுகிறது. ஆனால், அந்த ஒளி மதியினுடைய ஒளியைப் போலப் பிரதிபிம்பத்தால் ஏற்படுவது. யோகிகள் சொல்லுகிறபடி பிரகிருதியின் தோற்றங்கள் எல்லாம் பிரகிருதியினாலே ஆக்கப்படுகின்றன. ஆயினும், புருடனைச் சுதந்திரன் ஆக்குகிற நோக்கம் ஒன்றே அன்றி, வேறு நோக்கம் பிரகிருதிக்கு இல்லை.

कृतार्थं प्रति नष्टमप्यनष्टं तदन्यसाधारणत्वात् ॥ २२ ॥

22. அடைய வேண்டிய கதியை அடைந்துவிட்டவனுக்கு, அது அழிவெய்திவிடுகின்றதாயினும், ஏனையோருக்கு அது அழி வெய்தாதிருக்கின்றது, பொதுவாயிருப்பதாதலின்.

பிரகிருதியினுடைய தொழில் அனைத்தும், ஆன்மா பிரகிருதியிலிருந்து வேறுபட்டதெனக் காட்டுவதற்கேயாம். ஆன்மா இதனை அறிந்த உடனே பிரகிருதி அதனைக் கவர்வதில்லை. முத்தனாகிய மனிதனுக்குப் பிரகிருதி மறைந்துவிடுகிறது. ஆயினும், முடிவிலா ஏனைய உயிர்கள் விஷயத்தில் பிரகிருதி தொழில் செய்துகொண்டே போகும்.

स्वस्वामिशक्त्योः स्वरूपोपलब्धिहेतुः संयोगः ॥ २३ ॥

**23. உடைமையினுடைய தன்மையையும், உடையானுடைய தன்மையையும் அறிவதற்குக் காரணமாயிருப்பது 'சம்யோகம்' எனப்படும்.**

இந்தச் சூத்திரத்தின்படி ஆன்மாவினுடைய சக்திகளும் பிரகிருதியினுடைய சக்திகளும் ஒன்று கூடி வெளிப்பட்டுத் தோன்றுகின்றன. அப்பொழுதுதான் எல்லாத் தோற்றங்களும் வெளிப்படுகின்றன. இங்ஙனம் ஒன்றுகூடி நிற்பதற்கு (சம்யோகத்துக்கு) அறியாமையே காரணம். உடலோடு நம்மை ஒன்றுகூட்டி வைப்பதே இன்ப துன்பங்களுக்குக் காரணம் என்பதை நாள்தோறும் காண்கிறோம். நான் இந்த உடல் அல்லேன் என்பதைப் பற்றிப் பூரணமான நிச்சயமுடையோனாய் இருப்பேனாயின் தட்பவெப்பங்களைப்பற்றிச் சிறிதும் கருதமாட்டேன். இந்த உடல் சேர்க்கையினால் ஆனது. 'எனது உடல் ஒன்று; உனது உடல் ஒன்று; சூரியன் மற்றொன்று,' என்று சொல்லுவது பொய்யறிவே ஆகும். பிரபஞ்சம் அனைத்தும் சடப்பொருளால் ஆகிய கடல். அதில் ஓர் அணு 'நீ' என்னும் நாமத்தைக் கொண்டது. நான் மற்றொன்று; கதிரவன் மற்றொன்று. இந்தச் சடப்பொருள் இடைவிடாது மாறிக்கொண்டிருக்கிறதென்பதை நாம் அறிவோம். ஒரு நாள் சூரியனிடத்திலிருந்த பொருள், அடுத்த நாள் நம்முடைய உடலின் சடப்பொருள் ஆகலாம்.

तस्य हेतुरविद्या ॥ २४ ॥

**24. அதன் காரணம் அவித்தை.**

அவித்தையினாலே குறிப்பிட்ட ஓர் உடலோடு நாம் நம்மை இணைத்துக்கொள்ளுகிறோம். அதனாலே கவலைக்கு உட்படுகின்

றேம். உடலைப்பற்றிய எண்ணம் வீண் மூடக்கொள்கை. இம் மூடக்கொள்கையே நம்மை இன்ப துன்பம் உள்ளவர்களாக்குகிறது. அறியாமையினால் எய்திய மூடக்கொள்கையே நம்மைத் தட்ப வெப்ப இன்ப துன்பங்களை உணருமாறு செய்கிறது. இந்த மூடக் கொள்கையைக் கடந்துசெல்வது நமது கருமமாகும். இதை எங்ஙனம் செய்யலாம் என்பதை, யோகி எடுத்துக் காட்டுகிறான். சில மனோநிலைகளிலே ஒரு மனிதன் எரிக்கப்பட்டாலும் வேதனையை அடையமாட்டான் என்பது, சான்றுகொண்டு விளக்கப்பட்டிருக்கிறது. மனத்தினைச் சடுதியாக உயர்த்தும் செய்கை, சுழற்காற்றுப்போல ஒரு கணத்திலே தோன்றி, மறு கணத்திலே மறைந்துவிடும். யோகத்தின் மூலமாக இதனை அடைவோமாயின், உடலையும் ஆன்மாவையும் நிலைபேறாகப் பிரித்துவிடுகின்ற நீர்மையை அடைவோம்.

तदभावात्संयोगाभावो हानं तद्दृशेः कैवल्यं ॥ २५ ॥

**25. அதன் (அவித்தையின்) இன்மையிலிருந்து விலக்க வேண்டியதாகிய சம்யோகத்தின் நீக்கம் உண்டாகிறது. அதுவே காண்போனுடைய (புருடனுடைய) கைவல்யமாகும்.**

யோக தத்துவத்தின்படி அவித்தையினாலே ஆன்மா பிரகிருதியோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. பிரகிருதியினது ஆதிக்கத்தை நம்மினின்றும் நீக்குவதே நோக்கமாகும். எல்லாச் சமயங்களின் இலக்கும் அதுவே. ஒவ்வொரு சீவான்மாவும் உண்ணிறைந்த தெய்வத்தன்மையுடையது. அகத்தேயும் புறத்தேயுஞ் சார்ந்து நிற்கும் பிரகிருதியை அடக்கி உண்ணிறைந்த தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதே சமயங்களின் நோக்கமாகும். கருமம், பூசனை, பிராணனை லயப்படுத்துதல், ஞான நூல் ஆராய்ச்சி என்னுமிவற்றுள் ஒன்றினாலோ, பலவற்றினாலோ, யாவற்றினாலுமோ இதனைச் செய்து நிறைவேற்றிச் சுதந்திரர்களாய் இருங்கள். இதுவே சமயத்தின் முழு உண்மை. கொள்கைகளும், கருமங்களும், நூல்களும், கோயில்களும், பிறவும் இதற்கு உதவி புரியும் சாதனங்களாயமைந்து நிற்பன. யோகியானவன் பிராணனை லயப்படுத்துவதனாலே இந்த நோக்கத்தையடைய முயலுகிறான். மனத்தை வயப்படுத்தியவன் சடத்தையும் வயப்படுத்துதல் கூடும் என்பது யோகியின் முடிவு. அகத்தேயுள்ள பிரகிருதி புறத்தே
யுள்ள
அதனைப்பற்றி வயப்படுத்துதல்

அரிது. அகவியற்கையை வென்றவன் பிரபஞ்சம் முழுவதையும் அடக்கியாளுவான். அது அவனுக்கு அடிமையாகும். இங்ஙனம் செய்தற்கு உரிய முறைகளை ராஜயோகம் அறிவிக்கிறது. சடப் பிரபஞ்சத்திலே நாம் அறிந்தவற்றைவிட உயர்ந்த சத்திகளை அடக்கியாளுதல் வேண்டும். இந்த உடல் மனத்துக்குப் புறத்தே யுள்ள ஓடு போன்றது. இவை, இரு வேறு பொருள்களல்ல. இப் பியினுள்ளே இருக்கும் உடலும் அதன் ஓடும் போன்றவை; ஒரே பொருளின் இரு வேறு தோற்றமாய் அமைந்தவை. இப்பியி னுள்ளே இருக்கும் உடல் புறத்தேயுள்ள பொருளை எடுத்து ஓட்டினைத் தொழிற்படுத்துகிறது. அவ்வண்ணமாகவே, மனம் என்று நாம் கூறுகிற அகத்தேயுள்ள நுண்ணிய சத்தி புறத்தே யுள்ள பருப்பொருளை எடுத்து வெளியோடாகிய இந்த உடலைத் தொழிற்படுத்துகின்றது. ஆதலாலே, அகத்தை அடக்கி யாளுவோமாயின், புறத்தையடக்கியாளுவது எளிதாகும். இந்தச் சத்திகள் வேறுபட்டன அல்ல. சில சத்திகள் சட சத்தி களென்றும், சில மானத சத்திகளென்றும் சொல்லுவதற்கில்லை. நுண்ணிய சத்திகளின் தூலமாகிய தோற்றமே சட சத்திகள். நுண்ணிய உலகத்தின் தூலமாகிய தோற்றமே சடவுலகம்.

विवेकख्यातिरविप्लवा हानोपायः ॥ २६ ॥

**26. விவேகத்தை இடைவிடாது பயில்வது அவித்தையை அகற்றுவதற்கு வழியாகும்.**

இதுவே பயிற்சியின் உண்மையான குறிக்கோள். நித்தியா நித்திய வஸ்து விவேகத்தினாலே புருடன் பிரகிருதியல்ல, சடமல்ல, மனமல்ல என அறியவேண்டும். அவன் பிரகிருதியன்மையினாலே வேறுபாடு அடைதல் இயலாது. சேர்ந்தும், இடையீடின்றிப் பிரிந்தும், மீண்டும் ஒரு முறை சேர்ந்தும் வேறுபாடு அடைவது பிரகிருதியே. இடையறாத பயிற்சியாலே நாம் விவேகத்தைக் கொண்டு நோக்கும் பொழுது அவித்தை மறைந்துவிடும். அப் போது புருடன், எல்லா அறிவினோடும், எல்லா வல்லமையோடும் எங்கும் வியாபித்துத் திகழ்கின்ற தோற்றத்தோடும் விளங்குவன்.

तस्य सप्तधा प्रान्तभूमिः प्रज्ञा ॥ २७ ॥

**27. அவனுடைய அறிவானது முடிவிலுள்ள எழு வகை நிலங் களிலும் அமைவது.**

இந்த அறிவு வரும்பொழுது, ஒன்றின் பின் ஒன்ருக ஏழு படிகளாய் வரும். இவற்றுள், ஒன்று தொடங்கும் பொழுது நாம் அறிவினை அடைகிருேம் என அறிந்துகொள்ளலாம். முதலிலே, நாம் அறிய வேண்டியவற்றை அறிந்துகொண்டோம் என்பது தோற்றும். மனமானது திருப்தியடையும். நாம் அறிவைத் தேடும் பொழுது உண்மை எங்கே அகப்படும் என இங்கும் அங்கும் நாடுவோம்; காணுமையினுலே மனத்திருப்தியற்றுப் புதிய ஒரு வழியிலே தேடுவோம்; தேடுதல் வீண் என்றும், நம்முள்ளே அறிவனைத்தும் உண்டென்றும், நாமே நமக்கு உதவுவதன்றிப் பிறர் ஒருவரும் உதவுதல் இயலாதென்றும் காண்போம். விவேகத்தைப் பயிலத் தொடங்கும் பொழுது நாம் உண்மையை அணுகி வருகிருேம் என்பதற்கு அடையாளமாக, அதிருப்தி அடைந்த நிலையானது அகன்றுவிடும். நாம் உண்மையைக் கண்டுவிட்டோம் என்றும், நாம் கண்டது உண்மையன்றி வேருென்ருதல் இயலாதென்றும், நிச்சயமாக உணர்வோம். அப்பொழுது (அறிவாகிய) சூரியன் எழுகிறதென்றும், காலைப் பொழுதாகிறதென்றும் அறிந்து தைரியத்தோடு குறிக்கோளை அடையும் வரையும் இடைவிடாது முயல வேண்டும். எல்லாத் துன்பங்களும் அகன்றுவிடுவது இரண்டாம் நிலம் ஆகும். அகத்திலோ, புறத்திலோ, பிரபஞ்சத்திலுள்ள எதுவோ நமக்குத் துன்பத்தைத் தருதல் இயலாததாகும். பூரண அறிவை அடைவது மூன்ருவது நிலமாகும். எல்லா ஞானமும் நமக்குரியவாகும். விவேகத்தினுலே எல்லாக் கடமைகளையும் ஒழித்து, விடுதலை அடைவது நான்காவது பூமியாகும். சித்த சுதந்திரம் என்று சொல்லப்படுவது அதனை அடுத்து வருவது. எல்லாத் துன்பங்களும், தொல்லைகளும், மனத்தின் அலைவுகளும், மலை உச்சியிலிருந்து கீழே விழுந்துவிட்ட கல்லினைப் போல மீண்டு வாராவண்ணம் அகன்று போயின என்பதை நாம் உணர்வோம். அதற்கு அடுத்தபடியாகச் சித்தமானது விரும்பிய பொழுது காரண வடிவாகக் கரைந்து போவதைத் தானே உணர்ந்துகொள்ளும். கடைசியாக ஆன்மாவாகிய நாம் நமது சொந்த நிலையிலிருப்பதாகவும், பிரபஞ்சம் அனைத்தினும் நாம் தனித்திருப்பதாகவும், உடலோ, மனமோ, நம்மோடு தொடர்புபட்டாவது, ஒன்றுபட்டாவது இருந்ததில்லை எனவும் உணர்வோம். அவை தாம் செல்லும் வழியாக முயன்றுகொண்டிருந்தன. அறியாமையினுலே நாம் நம்மை அவற்ருேடு இணைத்து நோக்கினேம். ஆனல், நாம் சர்வ வல்லமையோடும் எவ்விடத்திலும் பரவி, என்றும் இன்பத்தோடும் தனித்து இருந்தோம் எனவும்,

நமது ஆன்மா பூரணனும் பரிசுத்தனும் ஆதலாலே நமக்கு வேறென்றும் வேண்டுவதில்லை எனவும் நாம் காண்போம். நாம் ஆனந்தமே வடிவாயிருப்பதனால், நம்மை மகிழ்ச்சி அடையச் செய்வதற்குப் பிறிதொன்று வேண்டுவதில்லை என்பதை அறிவோம். இந்த அறிவு வேறொன்றினையும் ஆதாரமாகக் கொண்டதன்று எனக் காண்போம். பிரபஞ்சம் அனைத்திலும் நமது அறிவின் முன்னிலையிலே ஒளி பெறாத பொருள் இருக்க முடியாது. இது கடைசி நிலையாகும். யோகி சாந்தத்தினை அடைவான்; அதன் பின் ஒருபோதும் துன்பம் அடைவதில்லை; மயக்கம் அடைவதில்லை; கவலையினாலே தீண்டப்படுவதில்லை. நித்திய ஆனந்தன், என்றும் பூரணன், எல்லாம் வல்லவன் தான் என்பதை அவன் அறிவான்.

योगाङ्गानुष्ठानादशुद्धिक्षये ज्ञानदीप्तिराविवेकख्यातेः ॥ २८ ॥

**28. யோகத்தின் அங்கங்களைப் பயில்வதனாலே மாசு மாய்ந்து போகவே, விவேகம் உண்டாகிறது; அறிவானது ஒளி பெறுகிறது.**

இப்பொழுது சாதனையோடு கூடிய அறிவு சொல்லப்படுகிறது. இதற்கு முன்பு பேசியது மிகுதியும் உயர்ந்த நிலை. அது தனிப் பெருங்கொள்கை; நமது தலைக்குமேல் உயர்வுடையது. உடலையும் மனத்தையும் அடக்குவதை முதலிலே பெறுதல் வேண்டும். அப்பொழுது அந்தக் கொள்கையினிடத்துச் சாதனை நிலைப்பட்டு நிற்கும். உயர்ந்த நிலையை அறிந்துவிட்டால், அதை அடைவதற்கு உரிய முறைகளைப் பயில்வது மாத்திரமே எஞ்சியிருக்கும்.

यमनियमासनप्राणायामप्रत्याहारधारणध्यानसमाधयो-
ऽष्टावङ्गानि ॥ २९ ॥

**29. இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன யோகத்தின் எட்டு அங்கங்கள்.**

अहिंसासत्यास्तेयब्रह्मचर्यापरिग्रहा यमाः ॥ ३० ॥

**30. கொல்லாமை, பொய்யாமை, களவு செய்யாமை, காமத்தை அடக்குதல், பிறர் பொருளைக் கொள்ளாமை ஆகிய ஐந்தும் இயமம் (விலக்கியவொழிதல்) எனப்படும்.**

"பொய்கொலை களவே காமம் பொருள் நசை
இவ்வகை யைந்தும் அடக்கிய தியமம்."

பூரண யோகியாய் இருக்க விரும்புபவன் காம எண்ணங்களை முற்றிலும் விட்டுவிடுதல் வேண்டும். ஆன்மாவுக்குப் பால் வேறுபாடு இல்லை; ஆதலால், காம இச்சைகளினால் அது தன்னை இழிவு படுத்துவது எற்றுக்கு? 'இந்த எண்ணங்களை ஏன் விட்டுவிட வேண்டும்?' என்பதைப் பின்னர்த் தெளிவாக உணர்ந்துகொள்வான். பிறருடைய கொடைகளைத் கொள்ளுகிற மனிதனுடைய உள்ளமானது கொடுப்போனுடைய உள்ளத்தினால் தாக்கப்படுகிறது. அதனால், அவ்வுள்ளம் இழிவடைதல் கூடும். கொடைகளைப் பெறுதல் மனத்தின் சுதந்திரத்தை அழித்து நம்மை அடிமைகளாக்குதல் கூடும். ஆதலால், கொடைகளைப் பெறாதீர்கள்.

एते जातिदेशकालसमयानवच्छिन्नाः सार्वभौमा महाव्रतम् ॥ 31 ॥

31. இவை ஜாதி, தேசம், காலம், சமயம் என்னும் இவற்றால் எவ்விதமும் தடை செய்யப்படாது அனுஷ்டித்தற்கு உரியனவாதலால், எல்லாப் பூமிகளிலும் தொடர்ந்து வருகிற மகாவிரதங்கள் எனப்படுகின்றன.

கொல்லாமை, பொய்யாமை, களவு செய்யாமை, காமத்தை அடக்குதல், பிறர் பொருளைக் கொள்ளாமை ஆகிய இவை எல்லா மனிதராலும், பெண்களாலும், சிறுவராலும், ஜாதி தேச நிலை வேறுபாடின்றி அனுஷ்டிப்பதற்கு உரியன.

शौचसन्तोषतपःस्वाध्यायेश्वरप्रणिधानानि नियमाः ॥ ३२ ॥

32. அகமும் புறமும் தூய்மை, மனத்திருப்தி, தவம், அறிவு நூல் கற்றல், ஆண்டவனைச் சரண் புகுதல் ஆகிய ஐந்தும் நியமம் (விதித்தன செய்தல்) எனப்படுவன.

"பெற்றதற் குவத்தல் பிழம்புநனி யுலர்த்தல்
கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை
பூசனைப் பெரும்பய மாசாற் களித்தலொடு
நயனுடை மரபி னியம மைந்தே."

புறத்தூய்மை உடலைத் தூயதாக்கும்; அழுக்கடைந்த மனிதன் யோகியாயிருத்தல் இயலாது. இதனோடு அகத்தூய்மையும் வேண்டும். இவை முதலாம் அத்தியாயம் 33-ஆம் சூத்திரத்திற் கூறிய ஒழுக்கங்களினால் எய்துதற்குரியன. அகத்தூய்மை, புறத்தூய்மையினும் சிறந்தது. ஆயினும், இரண்டும் வேண்டப்படுவன. அகத்தூய்மையின்றிப் புறத்தூய்மையினாற் பயனில்லை.

वितर्कबाधने प्रतिपक्षभावनम् ॥ ३३ ॥

**33. யோகத்துக்கு விரோதமான எண்ணங்களினாலே தடை ஏற்படும் பொழுது, அவற்றுக்கு மறுதலையாகிய எண்ணங்களை மனத்திடைக் கொண்டு வருதல் வேண்டும்.**

மேலே கூறப்பட்ட நல்லொழுக்கங்களைப் பயில்வதற்கு வழி இதுவே. உதாரணமாக, மனத்திலே கடுஞ்சீற்றமாம் ஓர் அலை எழுந்தால், அதனை அடக்குவது எப்படி? பகையாம் ஓர் அலை எழுமாயின், அன்பினை நினைக. கணவனோடு மிகவும் கோபித்துக் கொண்டிருக்கின்ற ஒரு மாதின் முன்னிலையில் அவளது குழந்தை வருகிறது. அவள் அதனை எடுத்து முத்தமிடுகிறாள். கோபமாகிய பழைய அலை ஒழிந்து போக, குழந்தைமீதுள்ள அன்பாகிய புதிய அலை எழுகின்றது. முந்தியதைப் பிந்தியது அடக்கிவிடுகின்றது. அன்பு வெகுளிக்கு மறுதலையானது. இவ்வண்ணமே களவைப்பற்றிய எண்ணம் வரும் பொழுது, களவு செய்யாமையை நினைக்கவேண்டும். பிறர் தரும் பொருளைக் கொள்ளுவதற்கு எண்ணும்பொழுது, அதற்கு மறுதலையாகிய எண்ணத்தை உண்டாக்கவேண்டும்.

वितर्का हिंसादयः कृतकारितानुमोदिता लोभक्रोधमोहपूर्वका मृदुमध्याधिमात्रा दुःखाज्ञानानन्तफला इति प्रतिपक्षभावनम् ॥ ३४ ॥

**34. கொலை முதலாகிய குற்றங்கள் தன்னாற் செய்யப்பட்டேனும், பிறரைக்கொண்டு செய்விக்கப்பட்டேனும், பிறருடைய செய்கையை ஆமோதித்தேனும் எய்துவனவாய், உலோபம், குரோதம், மோகம் என்னும் இவற்றைக் காரணமாய்க் கொண்டனவாய், குறைந்தும், நடுத்தரமாகியும், பெருகியும் உள்ள அளவினவாய், முடி**

வில்லாத துக்கத்தையும், அஞ்ஞானத்தையும் பயனாக உடையன என்று இவ்வாறு மறுதலையாகிய பாவனையைச் செய்ய வேண்டும்.

நான் ஒரு பொய்யைச் சொன்னாலும், மற்றொருவனைக் கொண்டு சொல்வித்தாலும், பிறனொருவன் அங்ஙனம் செய்வதை ஏற்றுக்கொண்டாலும் ஒரே அளவான பாவம் வந்து எய்தும். அது குறைந்த பொய்யாய் இருந்தாலும் பொய்யேயாம். ஒவ்வொரு கெட்ட எண்ணமும் ஒரு குகையின் மறைவில் இருந்ததேனும், நீங்கள் நினைத்த பகைமையாகிய எண்ணமும் அபாரமான சத்தி யோடு துன்பவடிவமாக ஒருக்கால் உங்களை வந்து சேரும். பகை, பொறாமை என்னும் இவற்றை வெளிவிடுவீர்களாயின், அவை வட்டியோடு உங்களிடம் வந்து எய்தும். ஒரு வலிமையும் அவற்றைத் தடுக்க மாட்டாது. ஒருக்கால் அவற்றை இயக்கி விட்டால், அவற்றுற் பெறும்பேற்றை ஏற்க வேண்டும். இதை நினைத்திருப்பதனால் தீய செயல்களினின்று விலக்கப்படுவீர்கள்.

अहिंसाप्रतिष्ठायां तत्संन्निधौ वैरत्यागः ॥ ३५ ॥

35. ஒருவனிடம் அஹிம்ஸை (கொல்லாமை) நிலை பெற்றால், அவன் முன்னிலையிலே பிறருடைய பகைமையானது நின்றுவிடும்.

ஒரு மனிதன் கொல்லாமையை மேற்கொள்ளுவானெனின். அவன் முன்னிலையில் இயல்பாகவே குரூர குணமுள்ள விலங்கு களும் அமைதியடைகின்றன. அந்த யோகியின் முன்னிலையில் புலியும் ஆட்டுக் குட்டியும் ஒன்று கூடி விளையாடும். நீங்கள் அந்த நிலையை அடைந்துவிட்டால் அப்பொழுதுதான் கொல்லாமை யிலே திடமாக நிலைபெற்றிருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்க.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி,
எல்லா வுயிருந் தொழும்."

सत्यप्रतिष्ठायां क्रियाफलाश्रयत्वम् ॥ ३६ ॥

36. வாய்மை நிலைபெறுவதனால் யோகியானவன் தனக்கும் பிறர்க்கும் கருமமின்றியே கருமப் பலனைப் பெறுகின்றான்.

சத்தியத்தின் வலிமை உங்களிடம் நிலைபெற்றிருக்கும் பொழுது, கனவிலேயும் நீங்கள் பொய்யுரைக்க மாட்டீர்கள்,

உளம், உரை, செயல்—இவற்றிலே உண்மையுடையவர்களாய் இருப்பீர்கள். ஒரு மனிதனை நோக்கி, "நீ ஆசீர்வதிக்கப் படுவாயாக!" என நீங்கள் கூறினால், அந்த மனிதன் ஆசீர் வதிக்கப்படுவான். நோயுற்றிருப்போனை நோக்கி, "நீ நல மடைக!" என்று சொல்லுவீர்களாயின், அவன் உடனே நலமடைவான்.

अस्तेयप्रतिष्ठायां सर्वरत्नोपस्थानम् ॥ ३७ ॥

**37. களவு செய்யாமையில் நிலைபெற்றிருத்தலினாலே யோகிக்கு எல்லாச் செல்வமும் வருகின்றன.**

பிரகிருதியிலிருந்து நீங்கள் எவ்வளவு விலகிப் போகின்றீர் களோ, அவ்வளவுக்கு அவள் உங்களைப் பின் தொடர்கிறாள். முற்றிலும் பொருட்படுத்தாவிட்டால் அவள் உங்கள் அடிமை யாகிறாள்.

ब्रह्मचर्यप्रतिष्ठायां वीर्यलाभः ॥ ३८ ॥

**38. ஒருவன் பிரம்மசரியத்தில் நிலைபெறுவதனால் ஆண்மை யைப் பெறுகிறான்.**

பிரம்மசரியமுடையோனுடைய மூளை அபாரமான வலி மையை உடையது. அவனுக்கு மிகப் பெரிய சித்த சத்தியுண்டு. கற்பில்லாதவிடத்து ஆன்மிக சத்தியிருக்கமாட்டாது. பிரம்ம சரியம் மக்களை அடக்கியாளுகிற அற்புத சத்தியைத் தருகிறது. ஆன்மிக வழியிலே முன்னின்று வழி நடத்தினவர்கள் நிறைந்த பிரம்மசரியம் உடையவர்களாய் இருந்தார்கள். இதுவே அவர் களுக்கு வலிமையைத் தந்தது. ஆதலாலே யோகி பிரம்மசரியம் காக்க வேண்டும்.

अपरिग्रहस्थैर्ये जन्मकथन्तासंबोधः ॥ ३९ ॥

**39. ஒருவன் பிறர் கொடுப்பதைப் பெற்றுக்கொள்ளாமையாகிய வேண்டாமையிலே நிலைபெறுதலினாலே, கழிந்த வாழ்வுகளின் ஞாப கத்தை அடைகின்றான்.**

கொடைகளைப் பெறுதிருக்கின்றவன் பிறருக்குக் கடமைப் படாது, சுயேச்சையும் சுதந்திரமும் உடையவனாயிருக்கின்றான். அவன் மனம் தூய்மையடைகிறது. பெறுகின்ற ஒவ்வொரு கொடையினோடும், கொடுப்போனுடைய தீமையில் ஒரு பாகத்தை

யும் பெறவேண்டும். ஆதலால், கொடைகளைப் பெருதிருப்பவனுடைய மனமானது தூய்மையடைகின்றது ; அது வழியாகப் பழைய பிறவிகளைப் பற்றிய ஞாபகத்தைப் பெறுகின்றது. அப்பொழுதுதான் யோகி வாழ்க்கையின் நோக்கத்திலே பூரணமாக நிலைபெறுகின்ருன் ; தான் பல முறை வருவதும் போவதுமாயிருந்ததை உணர்ந்து, இனிமேல் போக்கு வரவினையொழித்துப் பிரகிருதிக்கு அடிமையாகாது சுதந்திரமாயிருக்க வேண்டுமென்று நிச்சயிக்கிருன்.

शौचात्स्वाङ्गजुगुप्सा परैरसंसर्गः ॥ ४० ॥

**40.** ஒருவன் உள்ளும் புறமும் தூய்மை செய்தலாகிய தூய்மையிலே நிலைபெறுதலினலே, அவனது உடலின்மீது அவனுக்கு அருவருப்பு ஏற்படுகிறது ; பிறருடலைக் கலத்தலும் ஒழிந்து போகிறது.

உள்ளும் புறமும் உடலை உண்மையாகத் தூய்மைப்படுத்துதலால், உடலின்மீது ஒரு புறக்கணிப்பு உண்டாகி அதனை அழகுபடுத்த வேண்டுமென்னுமெண்ணம் அகன்று போகிறது. ஏனையோர் வனப்புடையது என்று சொல்லும் முகம், அறிவொளி இல்லாவிட்டால், யோகிக்கு விலங்கு முகம் போலக் காணப்படும். ஆன்ம ஒளியிருக்குமாயின், அதை மிகச் சாதாரண முகமென்று பிறர் சொன்னலும், யோகி அதனைத் தெய்வத்தன்மை பொருந்தியதாகக் காண்பான். உடலின்மீதுள்ள இச்சையே மனித வாழ்க்கைக்குப் பெருங்கெடுதி பயப்பது. தூய்மையிலே நிலைபெற்றதற்கு முதலிலே காணப்படுகின்ற அடையாளம், உங்களை உடலாக மதியாது விடுதலாகும். தூய்மை எய்தும் பொழுதுதான் உடலைப் பற்றிய எண்ணத்தை நாம் விட்டவர்களாவோம்.

सत्वशुद्धिसौमनस्यैकाग्रयेन्द्रियजयात्मदर्शनयोग्यत्वानि च

**41.** மனத்தின் அழுக்கு நீங்குதலினலே சித்தத் தெளிவும், மனம் ஒரு வழிப்பட்ட நிலையும், புலன்களை வெல்லுவதும், ஆன்மாவைக் காணுவதற்குத் தகுதியுமுண்டாகின்றன.

அகத் தூய்மையைப் பயில்வதாலே சத்துவகுணம் மேலிட, மனமானது ஒருவழிப்பட்டு, உவகையை அடைகின்றது. சமய சாதனை செய்வதனல் முதலிலே எய்துகின்ற அடையாளம், மகிழ்ச்சி அடைவதாகும். குவிந்த முகத்தோடு இருப்பது குன்ம

வியாதியாகுமேயன்றிச் சமய சாதனையாகாது. இன்பத்தோடு கூடிய உணர்ச்சி சத்துவத்துக்கு இயல்பு. சாத்துவிக குண முடைய மனிதனுக்கு அனைத்தும் இன்பத்தைத் தருகின்றன. இது வந்து எய்தும் பொழுது யோகத்திலே முன்னேற்றமடை வதை அறிந்து கொள்க. துன்பமனைத்தும் தாமச குணத்தினால் ஆக்கப்படுகின்றன. ஆதலால், அதனைக் கடிந்துவிடல் வேண் டும். கவலை, தாமசத்தின் பயன்களில் ஒன்று. கட்டுறுதியுள்ள உடலும், இளமையும், இன்பமும், வலிமையும் உடையவர்களே யோகிகளாகத் தகுந்தவர்கள். யோகிக்கு அனைத்தும் இன்பத் தைத் தருகின்றன. எல்லா மனித முகமும் அவனுக்கு மகிழ்ச்சி யையே கொண்டு வருகின்றன. அருள் நெறியில் நிற்கும் மனித னுக்கு அடையாளமது. கவலை, பாவத்தினால் ஆக்கப்படுவது. அதற்குக் காரணம் வேறொன்றுமில்லை. முகில் இருள் படர்ந்த முகங்களுக்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு வேண்டியிருக் கிறது? உங்களுடைய முகத்தில் துன்பமாகிய மாசு படிந்திருக்கு மாயின், வெளியே செல்லாதீர்கள்; கதவைத் தாழிட்டுக்கொண்டு உள்ளேயிருங்கள். வெளியே இந்த நோயைக் கொண்டு செல் வதற்கு உங்களுக்கு என்ன உரிமையுண்டு? உங்கள் மனம் உங்கள் வயப்பட்டு நிற்குமாயின், உடல் முழுவதையும் அடக்கி யாளுவீர்கள். இந்த இயந்திரத்திற்கு அடிமையாயிருப்பதை ஒழித்து, இதனை உங்களுக்கு அடிமைப்படுத்துவீர்களாக. இந்த இயந்திரம் ஆன்மாவைக் கீழே இழுக்காமல் அதற்குப் பெரிய துணையாகும்.

सन्तोषादनुत्तमः सुखलाभः ॥ ४२ ॥

**42. (கிடைத்தது போதுமென்றெண்ணுகிற) மகிழ்ச்சியினாலே மிகவுயர்ந்த இன்பம் எய்துகிறது.**

कायेन्द्रियसिद्धिरशुद्धिक्षयात्तपसः ॥ ४३ ॥

**43. உடலிலும் மனத்திலும் (உள்ள) அழுக்குகளைக் குறைவு படுத்துவதனாலே, தவமானது உடலுக்கும் இந்திரியங்களுக்கும் சித்தியைத் தருகிறது.**

தவத்தின் பயன் உடனே காணப்படுகிறது. தொலைக் காட்சி, தொலை ஒலி கேட்டல் என்னும் இத்தகைய வலிமைகள் சிலபொழுது வந்தெய்துகின்றன.

स्वाध्यायादिष्टदेवतासंप्रयोगः ॥ ४४ ॥

**44. மந்திர ஜபத்திலுலே இஷ்ட தேவதைகளினுடைய தரிசனம் கிட்டுகிறது.**

நீங்கள் அடைய விரும்பிய தேவதை எவ்வளவு உயர்வாக இருக்கிறதோ, அவ்வளவு அதிகமாகப் பயிலவேண்டும்.

समाधिसिद्धिरीश्वरप्रणिधानात् ॥ ४५ ॥

**45. அனைத்தினையும் ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்தலினுலே சமாதி சித்திக்கிறது.**

ஆண்டவனிடத்துச் சரண் புகுவதனுலே சமாதி நிறைவுறுகிறது.

स्थिरसुखमासनम् ॥ ४६ ॥

**46. உறுதியோடும் சுகத்தோடும் கூடிய இருக்கை ஆசனமாகும்.**

இனி ஆசனங் கூறப்படும். உறுதியான இருக்கையில் இருந்தாலன்றிப் பிராணுயாமம் முதலிய பயிற்சிகளைப் பயிலுதல் இயலாது. இருக்கையின் உறுதி என்பது உடலுணர்ச்சியின்றியிருப்பதைக் கருதுவதாகும். சாதாரணமாக உட்கார்ந்த உடனே சில நிமிஷங்களுக்கு உடலிலே பலவகைக் கலக்கங்களும் ஏற்படுகின்றன. பருப்பொருளாகிய உடலினுடைய எண்ணத்துக்கு அப்பாற் போய்விட்டால், உடலைப்பற்றிய உணர்ச்சியே போய்விடும்; இன்பத்தையோ துன்பத்தையோ உணரமாட்டீர்கள்; பின்பு உடலைப்பற்றிய நினைவு வரும்பொழுது அது எவ்வளவோ ஆறுதல் அடைந்திருப்பதை உணருவீர்கள். உடலுக்கு நீங்கள் கொடுக்கக்கூடிய முழு ஆறுதல் அதுவேயாம். உடலை வெற்றி கொண்டு அதனை உறுதியாக வைத்திருப்பதில் அனுகூலப்படுவீர்களானுல், உங்கள் பயிற்சி உறுதிப்படும். உடல் அலைவுறுமாயின், நரம்புகள் அலைவுறும்; மனத்தினை ஒரு வழிப்படுத்துதல் இயலாததாகும்.

प्रयत्नशैथिल्यानन्तसमापत्तिभ्याम् ॥ ४७ ॥

**47. முயற்சியைத் தளர்த்திவிடுவதாலும், அனந்தத்திலே உள்ளத்தைச் செலுத்துதலினுலும் ஆசனமானது உறுதியையும் சுகத்தையும் எய்துகின்றது.**

அநந்தத்தை நினைப்பதனாலே நாம் ஆசனத்தை உறுதிப்படுத்தலாம். பூரணமான அநந்தத்தை நினைப்பது நம்மால் இயலாது. ஆனால், எல்லையற்ற வான வெளியை நினைக்கலாம்.

ततो द्वन्द्वानभिघातः ॥ ४८ ॥

**48. ஆசனத்திலே வெற்றி பெறுவதனால் இருமைகள் நம்மைத் தடுக்கமாட்டா.**

நன்மை தீமை, அனல் குளிர் என்னும் இத்தகைய ஒன்றினுக்கொன்று எதிரிடையாகிய இருமைகள் உங்களைக் கலக்கமாட்டா.

तस्मिन्सति श्वासप्रश्वासयोर्गतिविच्छेदः प्राणायामः ॥ ४९ ॥

**49. இது கைகூடியவுடன் வெளியில் உள்ள வாயுவை உள்ளிழுத்தலாகிய சுவாசமும், உள்ளிருக்கும் வாயுவை வெளிவிடுதலாகிய பிரசுவாசமும் ஆகிய இவற்றினுடைய கதியைத் தடை செய்தலாகிய பிராணாயாமமானது செய்யத்தக்கது.**

ஆசன லயம் ஏற்பட்ட பின்னர், பிராணனுடைய இயக்கத்தைத் தடுத்து அடக்குதல் வேண்டும். அதனால், உடலிலுள்ள பிராண சத்திகளை வசப்படுத்துதலாகிய பிராணாயாமத்துக்கு வருகிறோம். பிராணனை மூச்சு என்று மொழி பெயர்ப்பது வழக்கமாயினும், அது மூச்சு அன்று. பிரபஞ்சத்திலுள்ள சத்திகளின் கூட்டமே அது. ஒவ்வோர் உடலிலும் உள்ள சத்தியாகிய பிராணனது வெளித்தோற்றம், சுவாசப் பைகளின் இயக்கமாய் அமைந்தது. இவ்வியக்கம் மூச்சினை உள்ளிழுக்கின்ற பிராணனாலே செய்யப்படுகின்றது. மூச்சை வசப்படுத்துகின்ற முறையோடு தொடங்குகிறோம். பிராணனைப் பற்றுவதற்கு அதுவே எளிதான வழி.

बाह्याभ्यन्तरस्तम्भवृत्तिर्देशकालसंख्याभिः परिदृष्टो दीर्घ-सूक्ष्मः ॥ ५० ॥

**50. அதனுடைய வேறுபாடுகள், அகத்தும் புறத்தும் அசைவற்ற நிலையிலும் உள்ளனவாய்த் தேசம், காலம், எண் என்னும் இவைகளால் பார்க்கப்பட்டு நீண்டும் சுருங்கியும் இருக்கும்.**

மூவகைப் பிராணாயாம இயக்கங்களுள் ஒன்று மூச்சினை உள்ளிழுப்பது. மற்றது அதனை வெளியே விடுவது. ஏனையது

மூச்சினைச் சுவாசப்பையின் உள்ளேயாவது வெளியேயாவது நிறுத்திவைப்பது. இவை மேலும் தேச காலங்களினாலே வேறுபடுகின்றன. தேசம் என்பது, பிராணனை நிறுத்தி வைக்கின்ற தேகத்தினது பாகத்தைக் குறிக்கும். காலமென்பது, குறித்த ஓர் இடத்தில் பிராணனை எவ்வளவு நேரம் நிறுத்தி வைக்கவேண்டும் என்பதைக் குறிப்பிடும். ஓரியக்கத்தை எத்தனை விநாடி செலுத்த வேண்டுமென்றும், மற்றோர் இயக்கத்தை எத்தனை விநாடி செலுத்த வேண்டுமென்றும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். குண்டலினியை எழுப்புகிற 'உத்காதம்' பிராணாயாமத்தின் பயனாகும்.

बाह्याभ्यन्तरविषयाक्षेपी चतुर्थः ॥ ५१ ॥

**51. வெளியிலும் உள்ளிலும் சென்றுள்ள விஷயங்களை அறிந்து செய்தலையுடைய பிராண நிரோதமானது நான்காவது பிராணாயாமம் ஆகும்.**

சிந்தனையோடு கூடிய நீண்ட பயிற்சியினாலே எய்துகின்ற கும்பகமானது நான்காவது பிராணாயாமமாகும். இது முதல் மூன்றினும் வேறுபட்டதாகும்.

ततः क्षीयते प्रकाशावरणम् ॥ ५२ ॥

**52. அதனால் சித்த ஒளியை மூடுகின்ற மறைவானது தேய்ந்து போகிறது.**

சித்தமானது தன்னியற்கையிலே எல்லா அறிவினையுங் கொண்டது. அது சத்துவ அணுக்களால் ஆக்கப்பட்டது. ஆயினும், ரஜோகுண தமோகுண அணுக்கள் அதனை மூடியிருக்கின்றன. பிராணாயாமத்தினாலே அந்த மறைவு அகலுகின்றது.

धारणासु च योग्यता मनसः ॥ ५३ ॥

**53. மனமானது தாரணைக்குத் தகுதியுடையதாகிறது.**

இந்த மறைவு நீங்கிய பின்னர், நாம் மனத்தினை ஒரு வழிப்படுத்தக் கூடியவர்களாய் இருக்கிறோம்.

स्वस्वविषयासम्प्रयोगे चित्तस्वरूपानुकार इवेन्द्रियाणां प्रत्याहारः ॥ ५४ ॥

**54. இந்திரியங்கள் தத்தம் விஷயங்களைத் தொடர்ந்து நில்லாது, மனத்தின் உருவத்தைப்பற்றி நிற்றல் போல்வது பிரத்தி யாகாரமாகும்.**

இந்திரியங்கள் மனத்தின் வேறு வேருகிய பாகங்களாம். நான் ஒரு புத்தகத்தைக் காண்கிறேன்; உருவம் புத்தகத்தில் இல்லை; என் மனத்தில் இருக்கிறது. புறத்தே உள்ள ஒன்று அந்த உருவத்தை எழுப்புகிறது. உண்மையுருவம் சித்தத்தில் உள்ளது. இந்திரியங்கள் தம்மை நாடுகிற பொருளினுடைய வடிவத்தைக் கொண்டு அவற்ருேடு ஒன்றுபட்டு நிற்கின்றன. மனமானது இவ்வுருவங்களைக் கொள்ளாத வண்ணம் தடுத்தால் அது அமைதியடையும். இதுவே பிரத்தியாகாரம்.

ततः परमा वश्यतेन्द्रियाणाम् ॥ ५५ ॥

**55. அதனுல் புலன்களின் மிக உயர்ந்த அடக்கம் ஏற்படு கிறது.**

இந்திரியங்கள் புறத்தேயுள்ள பொருள்களின் வடிவத்தைக் கொள்வதிலிருந்து தடைபட்டு, மனத்தோடு ஒன்றி நிற்கும் பொழுது, யோகியானவன் பூரண இந்திரிய அடக்கத்தைப் பெறு கிருன். புலன்கள் பூரணமாக அடங்கினுல் எல்லாத் தசைக்கட்டு களும் நரம்புகளும் அடங்குகின்றன. ஏனெனில், இந்திரியங்கள் உணர்ச்சிகளுக்கும் செய்கைகளுக்கும் நிலையங்களாய் இருக் கின்றன. இவ்விந்திரியங்கள் கருமேந்திரியம் ஞானேந்திரியம் என இரு வகைப்படும். இந்திரியங்கள் வசப்பட்டுவிட்டால், யோகியானவன் எல்லா உணர்ச்சிகளையும் செயல்களையும் வசப் படுத்திவிடுகிருன். அதனுல், உடல் முழுவதும் அவனுக்கு அடங்குகின்றது. அப்பொழுதுதான் பிறந்ததனுல் எய்துகின்ற உவகையை ஒருவன் உணரத் தொடங்குகிருன். அப்பொழுது தான் ஒருவன் உண்மையிலே "பிறந்து நலமடைந்தேன்," என்று சொல்லுதல் கூடும். இந்திரியங்களின் அடக்கம் எய்திய பொழுது இவ்வுடல் எவ்வளவு ஆச்சரியமானது என்பதை நாம் உண்மையில் உணருவோம்.

## அத்தியாயம் 3

# விபூதி பாதம்

யோகத்தினால் எய்தற்பாலனவாகிய சித்திகள் சித்திரிக்கப்படும் பாகத்துக்கு இப்பொழுது வந்துவிட்டோம்.

देशबन्धश्चित्तस्य धारणा ॥ १ ॥

1. குறித்த ஒரு பொருளின்மீது மனத்தினை நிறுத்தி வைத்தலே 'தாரணை' எனப்படும்.

உடலின் அகத்திலோ புறத்திலோ உள்ள ஒரு பொருளின் மீது மனமானது நிலைபெற்று அந்த நிலையிலே பொருந்தி நிற்பது தாரணையாகும்.

तत्र प्रत्ययैकतानता ध्यानम् ॥ २ ॥

2. முற்கூறிய விஷயத்திலே இடையறுது ஓடுகிற அறிவு வெள்ளமானது தியானமெனப்படும்.

மனம் யாதாயினும் ஒரு பொருளை நினைக்கவோ, உச்சி, இதயம் முதலிய குறித்தவிடத்தில் நிற்கவோ முயலுகிறது. ஏனைய பாகங்களை ஒழித்து உடலிற்குறிப்பிட்ட ஒரு பாகத்திலிருந்து வருகிற உணர்ச்சிகளை மாத்திரம் பெறுவதில் மனம் அனுகூல மடைந்து நிற்குமாயின், அது தாரணை எனப்படும். அந்த நிலையிலே சிறிது பொழுது நிலைத்திருத்தல் கைகூடுமாயின், அது தியானமெனப்படும்.

तदेवार्थमात्रनिर्भासं स्वरूपशून्यमिव समाधिः ॥ ३ ॥

3. அது தானே குறித்த வஸ்துவின் (அர்த்தத்தை) பொருளினைப் பிரதிபிம்பித்துச் சொரூபம் அற்று நிற்பது சமாதி எனப்படும்.

தியானத்திலே உருவமாகிய புறப்பாகத்தை விட்டொழிக்கும் பொழுது அது வந்து எய்துகின்றது. நான் ஒரு புத்தகத்தைப் பற்றி நினைக்கிறேன் என்று வைத்துக்கொள்வோம். மனத்தினை அதில் நிறுத்திப் படிப்படியாக அதனுள்ளே பொருந்திய உணர்ச்சி

யாகிய கருத்தினை உருவமின்றிக் காண்கிற நிலையை அடைந்து விட்டால் அந்நிலையிலுள்ள தியானம் 'சமாதி' எனப்படும்.

त्रयमेकत्र संयमः ॥ ४ ॥

**4. இம்மூன்றினையும் ஒரு பொருளின்மேல் அப்பியசித்தல் 'சம்யமம்' எனப்படும்.**

ஒரு மனிதன் தனது மனத்தினைக் குறித்த ஒரு பொருளின் மேற்செலுத்தி, அதனை அங்கு நிறுத்தி, நெடுநேரத்திற்கு வைத்து, பொருளினது நுண்ணிய பாகத்தை பிரித்து, அதனையே நோக்குதல் 'சம்யமம்' ஆகும். தாரணை, தியானம், சமாதி யாகிய மூன்றும் ஒன்றன்பின் ஒன்ருக வந்து ஒருங்கு கூடி நிற்பதே இது. பொருளின் உருவம் மறைந்து போக, அதன் கருத்து மாத்திரம் மனத்திலே தரித்து நிற்கிறது.

तज्जयात्प्रज्ञालोकः ॥ ५ ॥

**5. அதனை வெல்வதனுலே அறிவொளி விளக்கம் உண்டா கிறது.**

ஒருவன் சம்யமத்திலே சித்தி அடைவானுனல், எல்லா வல்லமைகளும் அவனுக்குக் கிட்டுகின்றன. இது யோகியி னிடத்து உள்ள பெரிய கருவி. அறிவுப் பொருள்கள் எல்லை யற்று இருக்கின்றன. அவை தூலம், அதிதூலம், மகாதூலம், சூக்குமம், அதிசூக்குமம், மகாசூக்குமம் என்று இவ்வாறு வகுக்கப் படுகின்றன. முதலிலே தூலப் பொருள்களினிடத்துச் சம்யமம் செய்தல் வேண்டும். தூலப் பொருளின் அறிவை அடையத் தொடங்கிய பின்னர், படிப்படியாகச் சூக்குமமான பொருள்களை எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

तस्य भूमिषु विनियोगः ॥ ६ ॥

**6. அதனைப் படிப்படியாக உபயோகிக்க வேண்டும்.**

அதிகம் விரைந்து செல்லாதபடி எச்சரிப்பது இதன் கருத்து.

त्रयमन्तरङ्गं पूर्वेभ्यः ॥ ७ ॥

**7. முன்னர்க் கூறியவற்றைக் காட்டிலும் இம்மூன்றும் அந்த ரங்கமானவை.**

இதற்கு முன்பாக இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம் என்பவற்றை ஆராய்ந்தோம். இவை தாரணை, தியானம், சமாதியாகிய மூன்றினுக்கும் புறத்தேயுள்ள அங்கங்கள். ஒரு மனிதன் இவற்றை அடைவானாயின், எல்லா அறிவும், எல்லா வல்லமையும் பெறுவான். ஆனால், அது முத்தியாக மாட்டாது. இவை மனத்தினை நிர்விகற்பமாக்கமாட்டா. மீண்டும் உடலெடுப்பதற்கு வேண்டிய வித்துகளை இவை விடுவன. யோகி சொல்வதுபோல வித்துகள் வறுக்கப்படும் பொழுதுதான் அவை முளையாதொழியும். அந்த வல்லமைகள் வித்தினை வறுக்கமாட்டா.

तदपि बहिरङ्गं निर्बीजस्य ॥ ८ ॥

8. நிர்ப்பீஜ (வித்தில்லாத) சமாதிக்கு இவைகளும் அங்கங்களே.

வித்தில்லாத சமாதியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இவைகளும் வெளியானவைகளே. மிகவுயர்ந்த உண்மையான சமாதியை நாம் இன்னும் அடையவில்லை; கீழான ஒரு படியிலிருக்கிறோம். நாம் காண்பது போல இப்பிரபஞ்சமும் இதனிடத்துள்ள இந்த வல்லமைகளும் உள்ள பொருள்களாயிருக்கின்றன.

व्युत्थाननिरोधसंस्कारयोरभिभवप्रादुर्भावौ निरोधक्षण-
चित्तान्वयो निरोधपरिणामः ॥ ९ ॥

9. விரிந்த வியுத்தான சம்ஸ்காரங்கள் விழவும், ஒடுங்கிய (நிரோத) சம்ஸ்காரங்கள் எதுவும் பொருந்துகின்ற வேளையோடு சித்தத்துக்குள்ளே சேர்க்கையானது (நிரோத பரிணாமம்) ஒடுக்கத்தின் உருத்திரிதல் எனப்படும்.

அஃதாவது, முதலில் வந்தெய்துகின்ற இந்தச் சமாதி நிலையிலே சித்தத்தினது வேறுபட்ட வடிவங்கள் அடக்கப்பட்டனவாயினும், முற்றும் அடக்கப்படவில்லையென்று சொல்லவேண்டும். ஏனெனில், முற்றும் அடக்கப்பட்டிருந்தால், வேறுபாடுகள் இரா. மனத்தைப் புலன் வழியாக ஓடச் செய்கின்ற வேறுபாடு உளதாயின், யோகி அதனை அடக்க முயலுவான். அவ்வடக்கமே மற்றொரு வேறுபாடாகும். ஓர் அலை மற்றோர் அலையினாலே தடைபட்டு நிற்கும். அடக்கமே ஓர் அலையாதலினால்,

இந்நிலை எல்லா அலைகளும் அடங்கி நிற்கின்ற உண்மைச் சமாதியாகாது. அங்ஙனம் ஆயினும், பொங்கியெழுகின்ற மன நிலையைவிடக் கீழாகிய இந்தச் சமாதி உயர்ந்த சமாதிக்கு மிகவும் அணித்தாயுள்ளது.

तस्य प्रशान्तवाहिता संस्कारात् ॥ १० ॥

**10. அதன் கலக்கமில்லாத பெருக்கு, சம்ஸ்காரத்திலிருந்து உண்டாகிறது.**

நாள்தோறும் இடைவிடாது பயின்று வருதலாலே இத்தகைய மன அடக்கம் தொடர்ச்சியாக அமைகின்றது. மனமானது நிலை பேருன சமாதியைப் பெறுகின்றது.

सर्वार्थतैकाग्रतयोः क्षयोदयौ चित्तस्य समाधिपरिणामः ॥ ११ ॥

**11. பல பொருள்களைப் பற்றுதல் தேய்ந்துபோக, ஒரு வழிப் பட்ட நிலை வந்தெய்துவது சித்தத்தினது சமாதி (பரிணமம்) வடிவம் எனப்படும்.**

மனமானது வேறுபட்ட பல பொருள்களைப் பற்றி அவற்றின் வழிச் செல்லுகிறது. இது கீழான நிலை. ஒன்றினை மாத்திரம் பற்றி ஏனையவற்றையெல்லாம் விலக்கிவிடுகின்ற மேலான நிலை யொன்றுண்டு. இதன் பயன் சமாதியாகும்.

शान्तोदितौ तुल्यप्रत्ययौ चित्तस्यैकाग्रतापरिणामः ॥ १२ ॥

**12. விழுந்த எண்ணமும் எழுகின்ற எண்ணமும் ஒத்திருப்பது சித்தத்தினது (ஏகாக்கிரதா பரிணமம்) ஒரு வழிப்பட்ட வடிவ மாகும்.**

மனம் ஒருவழிப்பட்டு நிற்கிறதென்பதை நாம் எவ்வாறு அறியலாம்? காலத்தைப்பற்றிய எண்ணம் மறைந்துபோம். கால மானது அறியப்படாமல் எவ்வளவு அதிகமாகக் கழிகின்றதோ, அவ்வளவுக்கு நமது உள்ளம் ஒருவழிப்பட்டு நிற்கிறதென்று அறியலாம். சாதாரண வாழ்க்கையிலே நாம் ஒரு புத்தகத்தை ஆழ்ந்து படிக்கும்பொழுது, நேரம் கழிந்து போவதை அறிவ தில்லை. புத்தகத்தைக் கீழே வைக்கும்பொழுது, 'இத்தனை மணி நேரங் கழிந்துவிட்டதே!' என நாம் எண்ணி வியப்பதுண்டு. எல்லாக் காலங்களும் ஒரே நிகழ்காலத்தில் ஒன்று கூடி நிற்கின்

றன. ஆதலால், இறந்த காலமும் நிகழ்காலமும் ஒன்ருகி நிற்கும் பொழுது மனம் ஒருவழிபட்டதென வரைவிலக்கணம் சொல் லப்பட்டது.

एतेन भूतेन्द्रियेषु धर्मलक्षणावस्थापरिणामा व्याख्याताः ॥ १३ ॥

13. பருப்பொருளும் நுண்பொருளுமாகிய பூதங்களிலும் இந் திரியங்களிலும் எய்துகின்ற புறவுருவ வேறுபாடு, கால லக்ஷண வேறுபாடு, நிலை வேறுபாடு என்னுமிவை இதனுல் விளக்கப்படு கின்றன.

சித்த வஸ்துவிலே புறவுருவம், காலம், நிலை என்னுமிவற்ருல் எய்துகின்ற மூவகை வேறுபாடுகளும், பருப் பொருளிலும், நுண் பொருளிலும், பொறிகளிலும், அவற்றுக்கு ஒப்பாக எய்துகின்ற வேறுபாடுகளினுலே தெளிவுபடுத்தப்படுகின்றன. ஒரு தங்கக் கட்டியை எடுத்துக்கொள்ளுவோம். அதனைக் கையிலணியும் காப்பாக மாற்றிப்பின்னர் அதனைக் காதிலணியும் குண்டலமாக மாற்றலாம். இவையே உருவ வேறுபாடுகள். இவற்றைக் கால மாகிய நிலையிலிருந்து பார்த்தால், காலத்தால் எய்துகிற வேறு பாடுகளைப் பெறலாகும். மேலும், காப்போ, குண்டலமோ, ஒளியுள்ளதாகவோ, மங்கலாகவோ, தடிப்பாகவோ, மெல்லி தாகவோ இருக்கலாம். இதுவே நிலை வேறுபாடு. ஒன்பதாம், பதினேராம், பன்னிரண்டாம் சூத்திரங்களிலே சித்த வஸ்து விருத்திகளாக மாறுவது குறிப்பிடப்பட்டது. இது புறவுருவ வேறுபாடு. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றிலும் செல்லுதற்குரியது காலவேறுபாடு. ஒரே காலத்திலே, உதாரணமாக நிகழ் காலத்திலே, தன்மை வேறுபடுவது நிலை வேறுபாடாகும். முந்திய சூத்திரங்களில் சொல்லப்பட்ட தியான முறைகள் யோகிக்குச் சித்த வஸ்துவின் மாறுதல்களை விரும்பிய வாறு அடக்கியாளுகின்ற ஆற்றலைத் தருகின்றன. அதுவே, முன்னர் மூன்ரும் அத்தியாயம் நாலாம் சூத்திரத்திற்கூறிய சம்ய மத்தைத் தர வல்லது.

शान्तोदिताव्यपदेश्यधर्मानुपाती धर्मी ॥ १४ ॥

14. கழிந்து அடங்கியதும், இப்பொழுது எழுந்து நிற்பதும், இனிமேல் வெளிப்படுவதுமாகிய (தருமத்தை) உருவ வேறுபாட்டைத் தொடர்ச்சியாக அனுபவிப்பது (தர்மி) காரணப் பொருள் ஆகும்.

அஃதாவது, காலத்தினுலும் சம்ஸ்காரங்களாலும் காரியப் படுத்தப்பட்டு எப்பொழுதும் வெளிப்பட்டுத் தோன்றுகிற பொருளே காரணப் பொருளாகும்.

क्रमान्यत्वं परिणामान्यत्वे हेतुः ॥ १५ ॥

15. ஒன்றன்பின் ஒன்று எய்துகிற தொடர்ச்சி வேறுபாடு உருத்திரிகின்ற பரிணும வேறுபாட்டிற்குக் காரணமாகிறது.

परिणामत्रयसंयमादतीतानागतज्ञानम् ॥ १६ ॥

16. மூவகைப் பரிணுமங்களின்மீது சம்யமம் செய்தலாலே, கழிந்த காலத்தையும் மேல் வருங்காலத்தையும் பற்றி அறிவு உண்டாகிறது.

சம்யமத்தைப்பற்றிய முந்திய வரைவிலக்கணத்தை நாம் மறந்துவிடுதல் கூடாது. மனமானது பொருளின் புறத்தே தோற்றும் குணங்களை ஒழித்து அதன் அகத் தன்மையோடு ஒன்று சேர்ந்து நின்று, நீண்ட காலப் பயிற்சியினுலே அந்த நிலையிலே உறுதி அடைந்து, விரும்பிய கணத்திலே, அந்த நிலையை அடைவது சம்யமமாகும். அந்நிலையிலே ஒரு மனிதன் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் பற்றி அறிய விரும்புவா ஞயின், மூன்ரும் அத்தியாயம், 13-ஆம் சூத்திரத்தில் சொல்லிய படி, சம்ஸ்கார மாறுதல்களிலே சம்யமம் செய்யவேண்டும். சில, இப்பொழுது நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. சில, தாம் செய்ய வேண்டிய தொழிலைச் செய்து முடித்துவிட்டன. சில, இனிமேல் தொழிலைச் செய்யக் காத்துக்கொண்டிருக்கின்றன; இவற்றின் மீது சம்யமம் செய்வதனுலே, ஒருவன் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் அறிதல் கூடும்.

शब्दार्थप्रत्ययानामितरेतराध्यासात्सङ्करस्तत्प्रविभागसंयमा-त्सर्वभूतरुतज्ञानम् ॥ १७ ॥

17. சொல், பொருள், அறிவு என்னும் மூன்றும் ஒன்று பிறி தொன்ருய்க் கலந்து தோன்றுகின்றன. இவற்றை வேறு பிரித்துச் சம்யமம் செய்வதால், எல்லாப் பிராணிகளினுடைய ஒலிக் குறிப்பையும் அறியும் ஆற்றல் உண்டாகிறது.

சொல் வெளியேயுள்ள காரணத்தைக் குறிப்பது. பொருள் இந்திரியங்கள் வாயிலாக மூளைக்குச் செல்கிற அகவியக்கங்களைக் குறிப்பது. இதன் மூலமாகப் புறத்தேயுள்ள பதிவுகள் மனத்தைச் சேருகின்றன. மனத்தின் எதிரியக்கம் அறிவு எனப்படும். இதனோடு காட்சி வந்து எய்துகிறது. இந்த மூன்றும் கலந்து நிற்பதனால், நமக்குப் புலப்படும் பொருள்கள் தோன்றுகின்றன. நான் ஒரு சொல்லைக் கேட்கிறேன் என்று வைத்துக்கொள்ளுவோம். முதலிலே புறத்தேயுள்ள அசைவு உண்டாகிறது. அதற்குப் பின்பு அகத்தேயுள்ள இயக்கம் இந்திரியங்கள் வாயிலாக மனத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றது. அப்பொழுது மனம் எதிரியங்குகிறது. அப்பொழுது நான் சொல்லை அறிகின்றேன். புறத்தேயுள்ள அசைவு, அகத்தேயுள்ள புலன்களின் இயக்கம், மனத்தின் எதிரியக்கம் என்னும் மூன்றினுடைய கலப்பே சொல்லென்பதை நான் அறிவேன். சாதாரணமாக இவை மூன்றும் வேறு பிரிக்கக் கூடாதன. பயிற்சியிலே யோகியானவன் இவற்றைப் பிரிக்கின்றான். இவற்றையடைந்த மனிதன் எந்த ஒலியின் மீதாவது சம்யமம் செய்தால், அது மனிதரால் ஆக்கப்பட்டதாயினும், விலங்குகளால் ஆக்கப்பட்டதாயினும், அதனுடைய கருத்தை அவன் அறிந்து கொள்ளுகிறான்.

संस्कारसाक्षात्करणात्पूर्वजातिज्ञानम् ॥ १८ ॥

18. சம்ஸ்காரங்களை அறிவதனாலே பழம்பிறப்பைப் பற்றிய அறிவு உண்டாகிறது.

நாம் பெறும் ஒவ்வோர் அனுபவமும் சித்தத்திலே அலை வடிவாயிருக்கின்றது. இது தணிந்து நுண்ணியதாகும். ஆனால், முற்றிலும் இது இல்லாமற் போவதில்லை. இது நுண்ணிய உருவமாயிருக்கிறது. இதனை மீண்டும் அலையாகக் கொண்டுவரக் கூடுமாயின், அது ஞாபகமாகும். மனத்திலுள்ள இந்தப் பழைய சம்ஸ்காரங்களிலே யோகி சம்யமம் செய்வானாயின், பழம்பிறப்புகளை எல்லாம் நினைவு கூர்வான்.

प्रत्ययस्य परचित्तज्ञानम् ॥ १९ ॥

19. பிறனுடைய உடலிலுள்ள அடையாளங்களிலே சம்யமம் செய்வதனால் அவனுடைய மனத்தைப்பற்றிய அறிவு உண்டாகிறது.

ஒவ்வொரு மனிதனுடைய உடலிலும் அவனைப் பிறரிலிருந்து பிரித்துக் காட்டுகிற அடையாளங்கள் இருக்கின்றன. யோகி இந்த அடையாளங்களின்மீது சம்யமம் செய்யும் பொழுது அந்த மனிதனுடைய மனத்தின் தன்மையை அறிகிறான்.

न च तत्सालम्बनं तस्याविषयीभूतत्वात् ॥ २० ॥

**20. மனத்தின் உட்பொருளை அறிந்துகொள்வதில்லை, அது சம்யமத்தின் விஷயமன்றாதலின்.**

உடலிலே சம்யமம் செய்தலினால் மனத்தின் உட்பொருளை அவன் அறிந்துகொள்ளமாட்டான். இதற்கு இரண்டு வகை சம்யமம் வேண்டும். முதலில் உடலிலுள்ள அடையாளங்களிற் சம்யமம் செய்தல் வேண்டும். பின்பு மனத்தையே விஷயமாகக் கொண்டு சம்யமம் செய்யவேண்டும். அப்பொழுது யோகி மனத்திலுள்ள யாவற்றையும் அறிவான்.

कायरूपसंयमात्तद्ग्राह्यशक्तिस्तम्भे चक्षुःप्रकाशासंयोगेऽन्तर्धानम् ॥ २१ ॥

**21. உடலினுடைய வடிவத்திலே சம்யமம் செய்வதால், உருவத்தைக் காண்டல் தடைபட, கண்ணின் ஒளி பிரிந்து நிற்பதனாலே, யோகியின் உடல் கட்புலனுக்குப் படாமற் போகின்றது.**

ஓர் அறையின் நடுவில் நிற்கின்ற யோகி தோற்றமாத்திரையாக மறைந்து போகக்கூடும், அவன் உண்மையில் மறைவதில்லை. ஆனால், ஒருவராலும் காணப்படுவதில்லை. உடலும் வடிவமும் பிரிவுற்ற தன்மையனவாகின்றன. உருவமும் உருவப் பொருளும் பிரிந்து நிற்கக்கூடிய தியான வலிமையை அடைந்த பின்புதான் யோகி இதனைச் செய்யக்கூடும் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். அப்பொழுது யோகி அந்தப் பிரிவிலே சம்யமம் பண்ணுகிறான். வடிவமும் உடலும் ஒன்றுபட்டு நிற்பதனாலே எழுவது காணும் ஆற்றல். ஆதலாலே, வடிவங்களைக் காண்கிற ஆற்றல் இங்குத் தடைபட்டு நிற்கிறது.

एतेन शब्दाद्यन्तर्धानमुक्तम् ॥ २२ ॥

**22. இதனால் பேசப்பட்ட சொற்களின் மறைவும் இவை போன்றனவும் விளக்கப்படுகின்றன.**

सोपक्रमं निरुपक्रमं च कर्म तत्संयमादपरान्तज्ञानमरिष्टेभ्यो वा ॥ २३ ॥

23. விரைவிலே பலனளிப்பது (சோபக்கிரமம்), பிற்பட்டுப் பலனளிப்பது (நிருபக்கிரமம்) எனக் கருமம் இரு வகைப்படும். இவற்றின்மீது சம்யமம் செய்தலினாலும் அரிஷ்டக் குறிகளினாலும் யோகிகள் உடலிலிருந்து உயிர் பிரிகின்ற சரியான நேரத்தை அறிகிறார்கள்.

இப்பொழுது காரியப்படுவனவும், இனிமேல் காரியப்படப் போகின்றனவும் ஆகிய தன் கருமங்களின்மீது யோகி சம்யமம் செய்வதனாலே, தனது உடல் எப்பொழுது விழும் என்பதை அறிகின்றான். எந்த மணி நேரத்தில் எந்த நிமிஷத்திலே தான் இறக்க வேண்டுமென்பதை யோகி அறிகிறான். மரணத்துக்குச் சமீபமாக எய்துகின்ற உணர்வைப்பற்றி இந்துக்கள் முக்கியமான நோக்கமுடையவர்கள். உடலை விட்டுப் போகும்பொழுது வருகிற எண்ணங்கள் அந்த வாழ்வை நிச்சயிக்கின்ற பெரிய சத்திகளாகுமென்பது கீதையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

मैत्र्यादिषु बलानि ॥ २४ ॥

24. மைத்திரி கருணை முதலாகிய (1 : 33) தன்மைகளிலே சம்யமம் செய்வதனால் யோகி அவற்றிலே சிறப்புறுகின்றான்.

बलेषु हस्तिबलादीनि ॥ २५ ॥

25. யானை முதலிய விலங்குகளின் வலிமைகளிலே சம்யமம் செய்வதனால் யோகி அவற்றின் வலிமைகளை முறையே அடைகின்றான்.

இந்தச் சம்யமத்தை அடைந்த யோகி, வலிமை வேண்டுமாயின், யானையினுடைய வலிமையிலே சம்யமம் செய்து அதனை அடைகின்றான். பெறுகிற முறையை அறிந்தால், அளவில்லாத வலிமையை ஒவ்வொருவரும் பெறுதல் கூடும். எல்லையற்ற வலிமை எல்லோருக்கும் உரியதாயிருக்கிறது. அதனைப் பெறுகின்ற முறையை யோகி அறிந்திருக்கிறான்.

प्रवृत्त्यालोकन्यासात्सूक्ष्मव्यवहितविप्रकृष्टज्ञानम् ॥ २६ ॥

26. புலன்களின் தொழிலில் மிகவுயர்ந்து நிற்கின்ற உள்ளொளியிலே (1 : 36) சம்யமம் செய்வதனாலே மிக நுண்ணிய

பொருள், மறைக்கப்பட்ட பொருள், தூரத்தில் உள்ள பொருள் என்னும் இவற்றை யோகி அறிகின்றான்.

இதய கமலத்திலேயுள்ள உள்ளொளியிலே சம்யமம் செய்வதனாலே, அதிக தூரத்தில் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளையும், மலை முதலிய தடைகளினால் மறைக்கப்படுகின்றவற்றையும், மிக நுண்ணிய பொருள்களையும் யோகி அறிகின்றான்.

भुवनज्ञानं सूर्ये संयमात् ॥ २७ ॥

27. கதிரவனிலே சம்யமம் செய்வதனாலே புவனத்தைப்பற்றிய அறிவு உண்டாகிறது.

चन्द्रे ताराव्यूहज्ञानम् ॥ २८ ॥

28. மதியிலே சம்யமம் செய்வதனாலே விண்மீன் கூட்டங்களைப் பற்றிய அறிவு உண்டாகிறது.

ध्रुवे तद्गतिज्ञानम् ॥ २९ ॥

29. துருவ நட்சத்திரத்திலே சம்யமம் செய்வதனாலே எல்லா நட்சத்திரங்களின் இயக்கத்தைப்பற்றிய அறிவும் உண்டாகிறது.

नाभिचक्रे कायव्यूहज्ञानम् ॥ ३० ॥

30. நாபி சக்கரத்திலே சம்யமம் செய்வதனாலே உடலின் அமைப்பைப்பற்றிய அறிவு உண்டாகிறது.

कण्ठकूपे क्षुत्पिपासानिवृत्तिः ॥ ३१ ॥

31. தொண்டைக் குழியிலே சம்யமம் செய்வதனாலே பசி தாகம் அடங்குகின்றன.

ஒரு மனிதன் பசியாயிருந்தால், தொண்டைக் குழியிலே சம்யமம் செய்வானாயின், பசி தீர்ந்துவிடுகிறது.

कूर्मनाड्यां स्थैर्यम् ॥ ३२ ॥

32. கூர்ம நாடியிலே சம்யமம் செய்வதனாலே உடலின் நிலைபேறு வருகின்றது.

பயிற்சி செய்யும் பொழுது உடல் கலக்கமடையாது.

मूर्धज्योतिषि सिद्धदर्शनम् ॥ ३३ ॥

33. உச்சியிலிருந்து எழுகின்ற ஒளியிலே சம்யமம் செய்வதனாலே சித்தர்களது தரிசனம் உண்டாகிறது.

சித்தர்களென்பார் பிரேத ரூப ஆவிகளைவிடச் சிறிது உயர்ந்தவர்கள். யோகி உச்சியிலே மனத்தை வைத்துத் தியானம் செய்வதனாலே சித்தர்களைக் காண்கின்றான். சித்தர்கள் என்னும் மொழி முக்தாத்துமாக்களைக் குறிப்பதுண்டு. இவ்விடத்தில் அந்தப் பொருளைக் குறிக்கவில்லை.

प्रातिभाद्वा सर्वम् ॥ ३४ ॥

34. யோகி மேல் வருவனவற்றைக் காண்டலாகிய பிரதிபையினாலே (பேரொளி விளக்கம்) எல்லா அறிவையும் அடைகின்றான்.

பரிசுத்தத்தினாலே தானாக எழுகின்ற பிரதிபையின் வலிமையினாலே, சம்யமம் இன்றியே இவை எல்லாவற்றையும் பெறுதல் கூடும். ஒரு மனிதன் பிரதிபையின் உயர்ந்த நிலைக்கு எழுந்து விடுவானாயின், அந்தப் பேரொளி விளக்கம் உண்டு, எல்லாப் பொருளும் அவனுக்குத் தெளிவாகின்றன. சம்யமம் செய்யாமலே எல்லாம் அவனுக்கு இயற்கையாய் வருகின்றன.

हृदये चित्तसंवित् ॥ ३५ ॥

35. இதயத்திலே எல்லாச் சித்தங்களையும் பற்றி அறிவு உண்டாகிறது.

सत्त्वपुरुषयोरत्यन्तासंकीर्णयोः प्रत्ययाविशेषो भोगः परार्थत्वात्स्वार्थसंयमात् पुरुषज्ञानम् ॥ ३६ ॥

36. பிறர்பொருட்டாகிய சத்துவமும், தன்பொருட்டாகிய புருடனும் தம்முள்ளே முற்றிலும் வேறுபட்டன. இவற்றை வேறுபடுத்திக் காண்கின்ற அறிவு இன்மையினாலே அனுபவம் உண்டாகின்றது. தன்பொருட்டாகிய புருடனைப்பற்றிச் சம்யமம் செய்வதனால் புருடனைப்பற்றிய அறிவு உண்டாகிறது.

ஒளி, உவகை என்னும் இவற்றை இலட்சணமாகவுடைய பிரகிருதியின் வேறுபாடாகிய சத்துவத்தின் தொழில் அனைத்தும் ஆன்மாவுக்கு உரியனவேயாம். அகங்காரத்தினின்று விலகிய சத்துவம் புருடனுடைய சுத்த அறிவினாலே ஒளிவிடும்பொழுது, அது தன்பொருட்டு இருப்பது எனப்படும். ஏனெனில், அந்த

நிலையில் அது எல்லாத் தொடர்புகளினின்றும் நீங்கித் தன்வயத்த தாகின்றது.

ततः प्रातिभश्रावणवेदनादर्शास्वादवार्त्ता जायन्ते ॥ ३७ ॥

37. அதிலிருந்து பிரதிபை (பேரொளி விளக்கம்), சிரவணம் (உயர்ந்த கேள்வி), வேதனை (உயர்ந்த பரிசம்), ஆதரிசம் (உயர்ந்த காட்சி), ஆசுவாதம் (உயர்ந்த சுவை), வார்த்தா (உயர்ந்த வாசனை) என்னும் இவை பிறக்கின்றன.

ते समाधावुपसर्गा व्युत्थाने सिद्धयः ॥ ३८ ॥

38. வெளிச்செல்லும் தன்மையினதாகிய உலக நிலையிலே, இவை சித்திகளாகக் கருதப்படினும், சமாதிக்கு இவை தடைகளே.

புருடனும் மனமும் ஒன்றுபடுவதனாலே, யோகிக்கு உலக அனுபவங்களின் அறிவு வருகிறது. பிரகிருதியும் புருடனும் இரு வேறு பொருள்களென்னும் அறிவிலே சம்யமம் செய்வானாயின், அவன் புருடனைப்பற்றிய அறிவினைப் பெறுகின்றான். அதிலிருந்து விவேகம் எழுகின்றது. விவேகத்தின் மூலமாகப் பிரதிபையைப் பெறுகின்றான். சுத்த ஆன்மாவை அறிந்து உயர் நிலையாகிய மோட்சத்தை அடைவதற்கு இந்தச் சித்திகள் தடையாகின்றன. இவை வழியிலே காணப்படுவன. யோகி இவற்றை அகற்றிவிடுவானாயின், உயர்நிலையை அடைகின்றான்; இவற்றைப் பெற முயல்வானாயின், முன்னேற்றம் நின்றுவிடுகின்றது.

बन्धकारणशैथिल्यात् प्रचारसंवेदनाच्च चित्तस्य परशरीरावेशः ॥ ३९ ॥

39. பந்தங்களின் காரணங்கள் அவிழ்ந்து போக, யோகியானவன் தொழில் வாய்க்கால்களை (நரம்புகளை) அறிவதனாலே மற்றொருவனுடைய சரீரத்தினுள்ளே புகுதல் கூடும்.

யோகியானவன் தனது உடலிலே தொழில் புரிந்துகொண்டிருக்கும் பொழுதே, இறந்து போன ஓர் உடலினுள்ளே புகுந்து அதனை எழுந்து இயங்கும்படி செய்யலாம். உயிருள்ள ஓர் உடலின் உள்ளும் புகுந்து அந்த மனிதனுடைய மனத்தையும் கருவிகளையும் தடைபடுத்தி, அவனது உடல் மூலமாக அந்த நேரத்தில் தொழில் புரியலாம். புருஷபிரகிருதி வேறுபாட்டின் விவேகத்தி

னாலே யோகி இதனைச் செய்கின்றான். வேறொரு மனிதனுடைய உடலிலே புகவேண்டுமாயின், யோகி அதன்மேல் சம்யமம் செய்து அதனுட் புகுகின்றான். தன் ஆன்மா மாத்திரம் அன்றி, மனமும் எங்கும் வியாபித்திருக்கிறதென்று யோகி சொல்லுகின்றான். எங்கும் பரந்திருக்கின்ற மனத்தின் ஒரு பாகம் அது. இப்பொழுது மனமானது இந்த உடலிலுள்ள நரம்புகளின் மூலமாக மாத்திரம் தொழில் புரியக்கூடும். இந்த நரம்புக் கட்டுகளிலிருந்து யோகி விடுபடுவானாயின், பிறவற்றின் மூலமாகவும் தொழில் புரிதல் கூடும்.

उदानजयाज्जलपङ्ककण्टकादिष्वसङ्ग उत्क्रान्तिश्च ॥ ४० ॥

40. உதானன் என்னும் வாயுவை வெல்லுதலினாலே, நீர், சேறு, முள் என்னும் இவற்றினது சம்பந்தமின்றி இவற்றின்மேல் நடத்தலும், விரும்பிய போது மரித்து மேலே நோக்கிச் செல்லுதலும் உண்டாகும்.

உடலின் மேற்பாகத்தையும் சுவாசப்பையையும் அடக்கியாளுகின்ற நரம்பு மண்டலத்துக்கு உதானன் என்பது பெயர். இதனை வெற்றி கொண்டால், உடல் இலகுவாகின்றது. யோகி நீரில் அமிழ்வதில்லை. முட்களின்மீதும் வாள் நுனியிலும் நடப்பதற்கும், நெருப்பில் நிற்பதற்கும் அவனால் கூடும். அவன் விரும்பியபொழுது இந்த வாழ்க்கையை விட்டுச் செல்லலாம்.

समानजयात्प्रज्ज्वलनम् ॥ ४१ ॥

41. சமானன் என்னும் வாயுவை வெல்லுதலினாலே உடலைச் சுற்றி ஓர் ஒளி உண்டாகிறது.

அவன் விரும்பிய பொழுது உடலிலிருந்து ஒளி உண்டாகும்.

श्रोत्राकाशयोः संबन्धसंयमाद्दिव्यं श्रोत्रम् ॥ ४२ ॥

42. கேள்வியிந்திரியம், ஆகாயம் என்னும் இவற்றினது சேர்க்கையின்மீது சம்யமம் செய்வதனாலே தெய்வக் கேள்வி உண்டாகின்றது.

ஆகாயமும் கருவியாகிய செவியும் உள்ளன. இவற்றின்மீது சம்யமம் செய்வதனால், யோகி தெய்வக் கேள்வியை அடை

கின்ருன். அவன் எல்லாவற்றையும் கேட்கின்ருன். வெகு தூரத்துக்கு அப்பால் மொழியப்பட்டதையும் அவன் கேட்டல் கூடும்.

कायाकाशयोः संबन्धसंयमाल्लघुतूलसमापत्तेश्चाकाशगमनम् ॥ ४३ ॥

43. ஆகாயத்துக்கும் சரீரத்துக்கும் இடையே உள்ள சேர்க்கையின் மீது சம்யமம் செய்வதனுலே, இலவம்பஞ்சு முதலிய மெல்லிய பொருள்களைப் போன்று உடல் இலகுத்துவம் அடையும். இவற்றைத் தியானிப்பதனுலே யோகிக்கு (ஆகாய கமனம்) வான வெளியிலே சஞ்சரித்தல் உண்டாகிறது.

இந்த உடல் ஆகாயத்தினுலானது. ஆகாயமே ஒரு வகையாக உருவெடுத்து உடலாயிற்று. உடற்பொருளாகிய இந்த ஆகாயத்திலே யோகி சம்யமம் செய்தானெனின், அது ஆகாயத்தைப் போன்ற இலகுத்துவத்தை அடையும். அவன் காற்றின் ஊடாக எங்கும் செல்லுதல் கூடும். ஏனையவற்றுக்கும் இவ்வாறே.

बहिरकल्पिता वृत्तिर्महाविदेहा ततः प्रकाशावरणक्षयः ॥४४॥

44. உடலுக்கு வெளியேயுள்ள (அகல்பித விருத்தி) கல்பிதமல்லாத உண்மையான மனத்தினது வேறுபட்ட வடிவம், (மகாவிதேக) உடலினைக் கடந்த பெருநிலை எனப்படும். இதன்மீது சம்யமம் செய்தலினுல் ஒளி வடிவத்தை மறைத்து நிற்கின்ற (ஆவரணம்) மறைப்பானது (கிலேச கர்ம வியாபகத்திரயமானது) தேய்ந்து போகின்றது.

மனமானது மூடத்தனமாகத் தான் இந்த உடலில் மாத்திரம் தொழில் புரிவதாக எண்ணுகிறது. மனமானது எங்கும் வியாபகமாயிருந்தால் ஒரு நரம்பு மண்டலத்தினுல் கட்டப்பட்டு இந்த ஓர் உடலில் மாத்திரம் 'நான்' என்பதை வைக்க வேண்டிய அவசியமென்ன? நான் அவ்வண்ணம் செய்வதற்கு ஒரு நியாயமும் இல்லை. விரும்பியவிடமெங்கும் 'நான்' என்பதை உணர்வதற்கு யோகி வேண்டுகிருன். உடலிலே 'நான்' என்னும் முனைப்புக் கெட்டுப்போகும் பொழுது எழுகின்ற விருத்திகள் 'அகல்பித விருத்தி' அல்லது 'மகா விதேகம்' எனப்படுகின்றன. இந்த விருத்திகளிலே சம்யமம் செய்து வெற்றி பெறுவானுயின், ஒளியை மறைக்கின்ற மறைப்பு நீங்கிவிடுகின்றது. எல்லா இருளும் பேதைமையும் அகன்றுவிடுகின்றன.

स्थूलस्वरूपसूक्ष्मान्वयार्थवत्त्वसंयमाद्भूतजयः ॥ ४५ ॥

45. பூதங்களின் (ஸ்தூலம்) பருப்பொருட்டன்மை (ஸ்வரூபம்) சொந்தவியல்பு, (சூக்ஷ்மம்) நுண்பொருட்டன்மை, (அந்வயம்) குணங்களோடொருப்பட்டிருத்தல், (அர்த்தவத்துவம்) ஆன்மாவின் அனுபவத்துக்குப் பொருட்டாயிருத்தல் என்னும் இவற்றின்மீது சம்யமம் செய்தலினுலே பூதங்களை வெற்றி பெறுதல் உண்டாகிறது.

முதலிலே இந்தப் பூதங்களின் பருப்பொருட்டன்மையிலும், பின்பு நுண்பொருட்டன்மையிலும் யோகி சம்யமம் செய்கிருன். பௌத்தரில் ஒரு சாரார் இந்தச் சம்யமத்தை அதிகமாகச் செய்வார். அவர்கள் ஒரு களிமண் கட்டியை எடுத்து அதன்மீது சம்யமம் செய்து, அது எந்த நுண்பொருள்களால் ஆக்கப்பட்டிருக்கின்றதோ அவற்றைக் காண்கின்றனர். எல்லா நுண்பொருள்களையும் கண்ட பின்னர் அவர்களுக்கு அந்தப் பூதத்தின் மீது வல்லமை உண்டாகிறது. இப்படியே ஏனைய பூதங்களுக்கும். யோகி அவை அனைத்தினையும் வெல்லுதல் கூடும்.

ततोऽणिमादिप्रादुर्भावः कायसंपत्तद्धर्मानभिघातश्च ॥ ४६ ॥

46. அதிலிருந்து அணிமா முதலாகிய அஷ்டமாசித்திகளும், காயசம்பத்தும், உடலின் தன்மைகளால் (பஞ்சபூத தர்மங்களால்) தாக்கப்படாமையும் உண்டாகின்றன.

யோகி அஷ்டமாசித்திகளையும் அடைந்துவிட்டான் என்பது இதனுல் பெறப்படுகின்றது. அவன் தனது உடலை அணுவினைப் போல நுண்ணிதாக்கவும், மலையைப்போலப் பெரிதாக்கவும், காற்றினைப்போல இலகுவாக்கவும், பூமியைப்போல மிகப் பளுவுள்ளதாக்கவும் வல்லவன் ஆகின்ருன். தான் இருந்த இடத்திருந்தே எந்தப் பொருளையும் அடையவும், விரும்பிய யாவற்றையும் அடக்கியாளவும், விரும்பிய எதனையும் வெல்லவும், இவை போன்ற பிற சித்திகளை அடையவும் வல்லவன் ஆகின்ருன். அவனுடைய காலடியில் சிங்கமானது ஆட்டுக்குட்டி போன்று அடங்கிக் கிடக்கும். அவன் விரும்பிய யாவும் நிறைவு பெறும்.

रूपलावण्यबलवज्रसंहननत्वानि कायसंपत् ॥ ४७ ॥

47. கண்ணுக்கினிய உருவமும், அழகும், ஆற்றலும், வைரத்தைப்போன்று கெட்டியான உடற்கட்டும், 'காயசம்பத்து' எனப்படுவன.

உடல் நாசமற்றதாகின்றது. அதற்கு ஒன்றும் தீங்கிழைக்க மாட்டாது. யோகி விரும்பும் வரையும் அதனை ஒன்றும் அழிக்க மாட்டாது. "காலமென்னும் தடியினை முறித்து எறிந்துவிட்டுப் பிரபஞ்சத்தில் தனது உடலோடு வாழ்கின்றான்." அத்தகைய மனிதனுக்கு நோய், மரணம், துன்பம் என்பன இல்லையென வேதம் கூறுகிறது.

ग्रहणस्वरूपास्मितान्वयार्थवत्त्वसंयमादिन्द्रियजयः ४८ ॥

48. (இந்திரியங்களால் அறியுமறிவினது) விஷயத் தன்மை, அவற்றினது சொந்த இயல்பாகிய சத்துவத்தன்மை, (இந்திரியங்களுக்கு ஆதாரமாகிய 'நான்' என்னும்) முனைப்பு, (இந்திரியங்களும் முனைப்பும் முக்குணங்களோடு ஒன்றுபட்டு நிற்றலாகிய) அந்வயம், (புருஷனுடைய அனுபவத்துக்குப் பொருட்டாயிருக்கின்ற) அர்த்தவத்துவம் என்னும் இவற்றின்மீது சம்யமம் செய்தலினால் இந்திரியங்களை வெல்லுதல் உண்டாகின்றது.

புறத்தேயுள்ள பொருள்களைக் காண்டலில் இந்திரியங்களானவை மனத்திலே தமக்குள்ள இடத்தினின்று புறப்பட்டு, அப் பொருள்களை நாடிச் செல்கின்றன. இதனால் அறிவு உண்டாகிறது. இச்செயலில் (அஸ்மிதையாகிய) முனைப்பும் உடன் நிற்கின்றது. யோகியானவன் இவற்றின் மேலும் எஞ்சிய (அந்வயம் அர்த்தவத்துவம் என்னும்) இரண்டின் மேலும் படிப்படியாகச் சம்யமம் செய்தலினாலே இந்திரியங்களை வெல்லுகின்றான். நீங்கள் காண்பதோ தொடுவதோ ஆகிய ஒன்றினை—உதாரணமாக, ஒரு புத்தகத்தை—எடுத்துக்கொள்க. முதலிலே அதன்மீது மனத்தைச் செலுத்தித் தியானம் செய்க. பின்பு புத்தக வடிவமாயிருக்கின்ற அறிவினைப்பற்றி நினைக. அதன்மேல் புத்தகத்தைக் காண்கின்ற ஆன்மாவைப்பற்றி நினைக. மேலும், இம்மாதிரியே இத்தகைய பயிற்சியினாலே இந்திரியங்களை வெல்லலாம்.

ततो मनोजवित्वं विकरणभावः प्रधानजयश्च ॥ ४९ ॥

49. அதிலிருந்து தேகமானது மனோ வேகத்தோடு இயங்கக் கூடிய ஆற்றலும், தேகத்திற்பிரிந்து இந்திரியங்கள் தொழில் புரியக் கூடிய ஆற்றலும், பொருள்களுக்கு மூல காரணமாகிய பிரதானத்தை வெல்லுகின்ற ஆற்றலும் உண்டாகின்றன.

பூதங்களை வெல்லுவதனால் காயசம்பத்து உண்டாவதுபோல, இந்திரிய வெற்றியால் மேலே குறிக்கப்பட்ட ஆற்றல்கள் உண்டாகின்றன.

सत्त्वपुरुषान्यताख्यातिमात्रस्य सर्वभावाधिष्ठातृत्वं सर्वज्ञातृत्वं च ॥ ५० ॥

50. சத்துவத்துக்கும் புருடனுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினைப்பற்றிய விவேகத்திலே மாத்திரம் ஈடுபட்டுச் சம்யமம் செய்கின்ற யோகிக்கு எல்லா வல்லமையும், அறிவும் உண்டாகின்றன.

பிரகிருதி வெல்லப்பட, புருஷன் பிரகிருதிக்கும் தனக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை உணர்ந்து, தான் அழிவற்றவனும், தூயவனும், பூரணனும் எனக் காண்டலினால், சர்வவல்லமையும், சர்வ ஞானமும் அடைகின்றான்.

तद्वैराग्यादपि दोषबीजक्षये कैवल्यम् ॥ ५१ ॥

51. இந்த வல்லமைகளையும் விட்டொழிவதனால், தீமைக்குக் காரணமாகிய வித்துகளும் அழிந்துவிடுகின்றன. இதனால், புருஷனுக்குக் கைவல்யம் ஏற்படுகின்றது.

அவனே தனித்து நின்று சுதந்திரமாகிய நிலையிலே விடுதலை அடைகின்றான். சர்வ வல்லமை, சர்வ ஞானம் என்னும் இவற்றின் எண்ணத்தையும் விட்டுவிடும் பொழுது, அனுபவப் பொருள்களையும் தேவர்களாற் காட்டப்படுகின்ற விருப்பங்களையும் முற்றிலும் நீக்கிவிடுகிறான். இந்த அற்புத சத்திகளையெல்லாம் கண்டு இவற்றை விலக்கிவிடுதலினால் யோகி நற்கதியை அடைகிறான். இந்தச் சத்திகள் யாவை? இவையெல்லாம் வெறுந்தோற்றங்களே. இவை கனவைவிடச் சிறந்தனவல்ல. சர்வ வல்லமை என்பதும் ஒரு கனவே. அது மனத்தினை ஆதாரமாகக் கொண்டது. மனம் இருக்கும் வரையும் அதனை உணரலாம். அடைய வேண்டிய குறியானது மனத்துக்கும் அப்பால் உள்ளது.

स्थान्युपनिमन्त्रणे सङ्गस्मयाकरणं पुनरनिष्टप्रसङ्गात् ॥ ५२ ॥

52. தேவர்களுடைய அழைத்தலினால் யோகி (சங்க) ஆசையையாவது, (ஸ்மய) கர்வத்தையாவது அடைதல் கூடாது.

மீட்டும் (சம்ஸார பந்தமாகிய) தீமை வந்து எய்தும் என்னும் அச்சத்தினுல்.

வேறு தீங்குகளும் உள. தேவர்களும் ஏனைய மேலுலக வாசிகளும் யோகியைச் சோதனை செய்ய வருகின்றுர்கள். முழு விடுதலையை யாரேனும் அடைவதை அவர்கள் விரும்புவதில்லை. எங்களைப் போல, சில பொழுது எங்களிலும் மேலாக, அவர்கள் எரிச்சலுடையவர்களாய் இருக்கிருர்கள். தங்களுடைய உத்தியோகத்தை இழந்து போதலை அவர்கள் அஞ்சுகிருர்கள். நிறைவை அடையாத யோகிகள் இறந்து தேவர்களாகின்றுர்கள். நேர் வழியை விட்டு ஒரு பக்கமாகச் சென்று அவர்கள் இந்தச் சத்திகளை அடைகிருர்கள். அவர்கள் மீட்டும் பிறக்க வேண்டியவர்கள். ஒருவன் இந்தச் சோதனைகளையும் எதிர்த்து நிற்க வல்லவனுயின், நேர் வழியைப் பற்றிச் சென்று விடுதலையை அடைகின்றுன்.

क्षण-तत्क्रमयोः संयमाद्विवेकजं ज्ञानम् ॥ ५३ ॥

**53. காலத்தின் சிற்றெல்லையாகிய கணத்தின் மேலும், அதற்கு முன்னும் பின்னும் நிற்பனவற்றின் மேலும் சம்யமம் செய்தலினுல் விவேகமுண்டாகிறது.**

தேவர்கள், சுவர்க்கபோகம், சித்திகள் என்னும் இவற்றை எல்லாம் விலக்கி மேற்கொண்டு நிற்பது எங்ஙனம் கைகூடும்? நன்மை தீமையைப் பகுத்து அறிகின்ற விவேகத்தினுற் கைகூடும். ஆதலால், விவேக வலிமையைப் பெருக்குவதற்கு உரிய ஒரு சம்யமம் சொல்லப்படுகிறது. காலத்தின் சிற்றெல்லையாகிய கணம் அதற்கு முன்னும் பின்னும் உள்ளது என்னும் இவற்றின்மீது சம்யமம் செய்வதனுல் இது உண்டாகிறது.

जातिलक्षणदेशैरन्यतानवच्छेदात्तुल्ययोस्ततः प्रतिपत्तिः ॥ ५४॥

**54. ஜாதி, இலட்சணம், தேசம் என்னும் இவற்றினுல் வேறுபடுத்தி அறியக்கூடாதெனவும், மேற்குறித்த சம்யம விவேகத்தினுல் அறியப்படுகின்றன.**

நாம் அடைகின்ற துன்பங்களெல்லாம் நித்தியாநித்திய வஸ்து விவேகமின்மையாகிய பேதைமையினுல் உண்டாகின்றன.

நாம் அனைவரும் தீமையை நன்மையாகவும் கனவை உண்மை யாகவும் கொள்ளுகிறோம். ஆன்மா ஒன்று மாத்திரமே உண்மைப் பொருள். நாம் அதனை மறந்து போனோம். உடல் ஒரு பொய்க் கனவு. உடல்களே நாம் என்று எண்ணுகிறோம். இந்த விவேகமின்மையே கவலைக்குக் காரணம். இது பேதைமையினால் உண்டாகிறது. விவேகம் தன்னோடு வலிமையைக் கொண்டு வருகிறது. அதனால் மாத்திரமே உடல் சுவர்க்க லோகங்கள் தேவர்கள் என்று இவ்வாறு வேறுபட்ட எண்ணங்களை விலக்கி விடுதல் கூடும். இந்தப் பேதைமையானது ஜாதி, இலட்சணம், தேசம் என்னும் இவற்றின் மூலமாக வேறுபடுத்திப் பார்ப்பதனால் உண்டாகிறது. சான்றாக, ஒரு பசுவை எடுத்துக்கொள்ளு வோம். ஜாதி வேறுபாட்டினால் பசு நாயினின்றும் பிரித்துக் காணப்படுகின்றது. பசுக்கள் மாத்திரமே இருந்தால் ஒரு பசுவை மற்றொரு பசுவினின்று எதனால் வேறுபடுத்திக் காண கின்றோம்? இலட்சண வேறுபாட்டினால். இரண்டு பொருள்கள் ஒத்த பான்மையவாய் ஜாதியும் இட்சணமும் உடையனவாய் இருந்தால், தேச வேறுபாட்டினால் அவற்றைப் பிரித்துக் காண கிறோம். இந்த வேறுபாடும் நமக்கு உதவா வண்ணம் பொருள்கள் கலந்து கிடந்தால், மேலே குறிப்பிட்ட பயிற்சியினால் எய்துகின்ற விவேகத்தின் வலிமையினாலே நாம் அவற்றைப் பகுத்துணர்தல் கூடும். புருஷன் தூய்மையாகிய பூரணப்பொருள் என்றும், பிரபஞ்சத்திலே இருக்கின்ற தனிப்பொருள் என்றும் கொள்ளு கின்ற கொள்கையை ஆதாரமாகக்கொண்டது யோகிகளுடைய மிகவுயர்ந்த தத்துவஞான ஆராய்ச்சி. உடலும் மனமும் சேர்க் கைப் பொருள்கள். அங்ஙனமாயினும், நாம் அவற்றை என்றும் நம்மோடு ஒன்றுபடுத்திக் காண்கின்றோம். வேறுபாட்டை இழந்துவிட்ட பெரும்பிழை இதுவாகும். இந்த விவேக வன்மை சித்திக்கும்பொழுது மனிதன் இவ்வுலகில் உள்ள மானத சடப் பொருள் அனைத்தினையும் சேர்க்கைப் பொருளெனவும், ஆதலால் அவை புருடனாகாவெனவும் காண்கின்றான்.

तारकं सर्वविषयं सर्वथाविषयमक्रमं चेति विवेकजं ज्ञानम् ॥ ५५ ॥

55. எல்லாப் பொருள்களையும், அவற்றினது எல்லா வேறுபாடு களோடும் (ஒன்றன்பின் ஒன்றாக வருதலாகிய கிரமமின்றி) ஒரே

காலத்தில் தன்னுள்ளே அடக்கி இருப்பதாகிய விவேக ஞானம், (சம்சாரத்திலிருந்து) கரையேற்றுகிற ஞானமாகும்.

யோகியைப் பிறப்பு இறப்பு ஆகிய கடலுக்கு அப்பாற் கொண்டு செல்வதனால், இது கரை ஏற்றுகின்ற ஞானம் எனப் படும். தூலசூக்குமமாகிய எல்லா நிலைகளிலும் பிரகிருதி முழுவதும் இந்த அறிவினுள்ளே அடங்கி நிற்கின்றது. இந்த அறிவில் ஒன்றன்பின் ஒன்ருக வருகின்ற கிரமத்தோற்றம் இல்லை. இது அனைத்தினையும் ஏககாலத்தில் ஒரே பார்வையிற் பற்றுகிறது.

सत्त्वपुरुषयोः शुद्धिसाम्ये कैवल्यमिति ॥ ५६ ॥

56. சத்துவத்தினது சுத்தமும் புருஷனது சுத்தமும் ஒரே தன்மையவாகும்பொழுது, கைவல்யம் வந்தெய்ந்துகின்றது.

ஆன்மா தேவர் முதல், அணு ஈருகவுள்ள யாதொன்றினிடத்தும் தான் தங்கியிருக்கவில்லையென்று அறிந்த பொழுது, பூரணமாகிய கைவல்ய (தனித்திருக்கின்ற) நிலை ஏற்படுகின்றது. சுத்தாசுத்தத்தின் கலப்பாகிய சத்துவம் (புத்தி) புருஷனைப் போலவே சுத்தமாகும் பொழுது அது பெறப்படுகின்றது. யாதொரு குணமுமற்ற பரிசுத்தத்தின் தன்மையைச் சத்துவம் அப்பொழுது பிரதிபிம்பிக்கிறது. அதுவே புருடன்.

## அத்தியாயம் 4

# கைவல்ய பாதம்

जन्मौषधिमन्त्रतपः समाधिजाः सिद्धयः ॥ १ ॥

**1. பிறவியாலும், மருந்துகளினாலும், மந்திர ஜபத்தினாலும், தவத்தினாலும், சமாதியினாலும், சித்திகள் உண்டாகின்றன.**

சில வேளை ஒரு மனிதன் சித்திகளோடு பிறக்கின்றான். இவை அவனால் முந்திய ஜன்மத்திலே தேடப்பட்டன. இந்தப் பிறப்பில் அவற்றின் பயனை நுகர்கின்றான். சாங்கிய தத்துவத்தின் அரிய பெரிய தந்தையாராகிய கபிலமுனிவர் சித்தராய்ப் பிறந்தார் என்பது கூறப்பட்டிருக்கிறது. சித்தர் என்பவர் சித்திகளை அடைந்தவர்.

இரசாயன மருந்துகளினாலும் சித்திகளைப் பெறுதல் கூடுமென்று யோகிகள் சொல்லுகிறார்கள். இரசாயன சாத்திரம், முதலில் இரசவாத சாத்திரமாகத் தொடங்கியதென்பதை நீங்கள் அறிவீர்கள். பரிச மணி, காயகற்பம் என்னுமிவற்றை மனிதர் நாடினர். இந்தியாவில் இராசாயனர் என்னும் ஒரு வகுப்பார் இருந்தனர். 'வேதாந்தமும், ஞானமும், ஆன்மிக உணர்ச்சியும், சமயக் கொள்கைகளும் மிகவும் சரியானவைகளே. ஆயினும், இவற்றை அடைவதற்கு உடலொன்றே கருவியாய் அமைந்தது,' என்பது இவர்களது எண்ணம். உடல் இடையிடையே முடிந்து போய்விடுமாயின், கருதிய குறிக்கோளை அடைவதற்குக் காலம் அதிகம் கழியும். எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் யோகம் பயிலவோ, ஆன்மிக உணர்ச்சியை அடையவோ,விரும்புகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் நெடுந்தூரம் முன்னேற்றம் அடைவதற்கு முன்பு இறந்துவிடுகிறான்; மற்றோர் உடலெடுத்து மீண்டும் தொடங்கிப் பின்பு இறந்துவிடுகிறான். இப்படி இறப்பதிலும், பிறப்பதிலும் மிகுதியான காலம் வீணாகின்றது. உடல் பலமும் பூரணத்துவமும் உடையதாயின், பிறப்பு இறப்பு என்னுமிவை நீங்கிப் போக, ஆன்மிக உணர்ச்சி எய்துவதற்கு நமக்கு நீண்ட நேரம் உளதாகும். ஆதலால், உடலை முதலிலே மிகவும் வலியுடையதாக்க வேண்டும் என்று இந்த இராசாயனர்கள் கூறுகிறார்கள். உடலினைச் சாகா நிலைமையதாக்கலாம் என்பது இவர்களது துணிபு. மனமானது உடலினைத் தொழிற்படுத்துகிறதாயின், ஒவ்வொரு

மனமும் எல்லையற்ற வலிமைக்கு வாய்க்காலாய் அமைந்ததாயின், வெளியிலிருந்து ஒவ்வொரு வாய்க்காலும் பெறுவதற்குரிய வலிமைக்கு ஓர் எல்லை இல்லை. நம்முடைய உடல்களை ஏன் எப்பொழுதும் வைத்துக்கொள்ளுதல் கூடாது? நமக்கு உரியவாகிய எல்லா உடல்களையும் நாமே செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். இந்த உடல் இறந்த உடனே மற்றென்றினைச் செய்ய வேண்டியிருக்கிறது. இது நம்மால் இயல்வதாயின், இப்பொழுதே இவ்விடத்திலே இந்த உடலிலிருந்து புறப்படாமல் ஏன் அவ் வண்ணம் செய்தல் கூடாது? இந்த ஆராய்ச்சி முழுவதும் தக்கதே. மரணத்தின் பின் நாம் வாழ்ந்து வேறு உடல்களைச் செய்யக் கூடுமாயின், இந்த உடலினை முற்றிலும் அழித்து விடாமல் இடைவிடாது வேறுபடுத்தி, ஏன் வேறு உடல்களைச் செய்தல் கூடாது? பாதரசத்திலும், கந்தகத்திலும் மிக அற்புத மான வல்லமைகள் மறைந்திருக்கின்றன வென்றும், இவற்றினுற் செய்த மருந்துகளினுல் மனிதன் தனது உடலத்தை விரும்பிய காலம் வைத்திருக்கலாம் என்றும் இவர்கள் நினைத்தார்கள். மேலும், சிலர், சில மூலிகைகளினுல் விண்ணில் பறப்பது முதலிய வற்றைச் செய்தல் கூடுமென்று எண்ணினுர்கள். இக்காலத் திலுள்ள மிக அற்புதமான மருந்துகள் பலவும், சிறப்பாக உலோக வகைகளை மருந்திலே உபயோகிப்பதும், இராசாயனர் களிடமிருந்து நமக்கு வந்தன. சில யோகிகள், தங்கள் சிறந்த ஆசிரியர்களுக்குள்ளே பலர் இன்னும் தமது பழைய உடல் களோடு வாழ்வதாகச் சொல்லுகிருர்கள். யோக நூல் பேராசிரிய ராகிய பதஞ்சலி முனிவர் இதனை மறுத்துக் கூறவில்லை.

**சொற்களின் வலிமை:** மந்திரங்கள் என்று சொல்லப்படு கின்ற சில தூய சொற்கள் உள. இவற்றைச் சரியான நிலையிலே உச்சரித்து வந்தால், அளவு கடந்த ஆற்றலைப் பெறுதல் கூடும். இரவும் பகலும் எத்தனையோ அற்புதங்களுக்கு இடையே நாம் உறைகின்றோம். ஆதலால், அவற்றினைப்பற்றி நாம் அதிகம் நினைப்பதில்லை. சொற்களின் வலிமைக்கும், மனத்தின் வலிமைக் கும், மனிதனுடைய ஆற்றலுக்கும் எல்லை இல்லை.

**தவம்:** ஒவ்வொரு சமயத்திலும் தவங்களும் விரதங்களும் பயிலப்பட்டு வந்தன என்பதை அறிகின்றோம். இவற்றிலே இந்துக்களுடைய சமயக் கொள்கைகள் அளவு கடந்து சென்றிருக் கின்றன. வாழ்நாள் முழுவதும் கையினை உயர்த்திப் பிடித்த தனுல், அக்கையானது சுருங்கி வற்றிப் போயிருக்கின்ற மனி தரைக் காணுதல் கூடும். இன்னுஞ் சிலர், பகலும் இரவும் நிற்ற

லினலே, அவர் தம் கால்கள் வீங்கித் திமிர்த்துவிடுகின்றன. அவர்கள் வாழ்வார்களாயின், வாழ்நாள் முழுவதும் நிற்க வேண்டியவர்கள் ஆகின்ருர்கள். இவ்வண்ணம் கையினை உயர்த்தி வைத்திருந்த ஒரு மனிதனை நான் ஒரு முறை கண்டேன். முதலிலே அவனுக்கு எவ்வாறு இருந்தது என்று நான் அவனைக் கேட்டேன். தாங்க முடியாத துன்பமாயிருந்ததென்று அவன் சொன்னன். துன்பம் பொறுக்க முடியாது, ஓர் ஆற்றினுள்ளே முழுகிச் சிறிது நேரம் கையை நீரினுள் வைப்பதனல் நோவானது சிறிது தணிந்தது எனக் கூறினன். ஒரு மாதத்தின் பின் அவன் அவ்வளவு துன்புறவில்லை. இத்தகைய பயிற்சிகளினல் சித்திகள் வந்து எய்துகின்றன.

சமாதி : சமாதி யோகத்திற்குறியது. அதுவே இந்நூலின் உயர் தனிக்கொள்கை. அதுவே மிகச் சிறந்த கருவி. முன்பு கூறப்பட்டனவெல்லாம் முக்கியமல்லாதன. அவற்றின் மூலமாக நாம் மிகவுயர்ந்த நிலையை அடைதல் இயலாது. மனத்தினேடும் ஒழுக்கத்தினேடும், ஆன்மிக வாழ்க்கையோடும் தொடர்புடைய அனைத்தினையும் அடைவதற்குச் சமாதியே கருவி.

जात्यन्तरपरिणामः प्रकृत्यापूरात् ॥ २ ॥

2. பிரகிருதி உட்புகுந்து நிறைத்தலினல் ஜாதி (பிறப்பு வகை) வேறுபடுதல் உண்டாகிறது.

பிறவியினலும், மருந்து வகையினலும், தவத்தினலும் இந்தச் சித்திகள் உண்டாகின்றனவென்று பதஞ்சலியார் உரைத்தார். இந்த உடலை எவ்வளவு காலத்துக்கு வேண்டுமாயினும் வைத்திருத்தல் கூடுமென்று அவர் கருதுகிருர்; இந்த உடலை மற்ருெரு ஜாதியாக மாற்றுவதற்கு உரிய காரணத்தினை அதன் மேற் சொல்லுகின்ருர்; இது பிரகிருதி உட்புகுந்து நிரைத்தலினல் ஆகிறதெனக் கூறி, அடுத்த சூத்திரத்தில் இதனைத் தெளிவுபடுத்துகிருர்.

निमित्तमप्रयोजकं प्रकृतीनां वरणभेदस्तु ततः क्षेत्रिकवत् ॥ ३ ॥

3. நல்வினை தீவினைகள் பிரகிருதியின் வேறுபாடுகளுக்கு நேர்க்காரணமாவதில்லை. நீரோடுகின்ற வாய்க்காலுக்குள்ள தடை

களை உழவன் நீக்கிவிட, நீரானது தன்னியல்பிலே ஓடுவதுபோல, அவை பிரகிருதி வேறுபாட்டிற்கு ஏற்பட்ட தடைகளை நீக்கு கின்றன.

வயலுக்குப் பாய வேண்டிய நீர் வாய்க்காலிலே இருக்கிறது. மதகுகள் அதனைத் தடுத்திருக்கின்றன. உழவன் அந்த மதகு களைத் திறந்து விடப் பூமியின் இயல்பாகிய கவர்ச்சியினால் நீர் தானே ஓடுகின்றது. எல்லா முன்னேற்றமும் பூரணத்துவமும் ஒவ்வொரு மனிதனிடமும் அமைந்திருக்கின்றன. பூரணத்துவம் மனிதனுக்கு இயற்கையாய் உள்ளது. அது செல்ல வேண்டிய வழியிற் செல்லாது தடுக்கப்பட்டிருக்கிறது. தடைகளை நீக்கி விடின், பிரகிருதி விரைந்து சென்று, தனது தொழிலைச் செய் கிறது. அப்பொழுது மனிதன் தனக்கு முன்னமே உளவாகிய சித்திகளை அடைகின்றான். தடை நீங்கி இவ்வண்ணம் நிகழும் பொழுது, மிகவும் தீயோரென நம்மாற் கருதப்பட்டோர், மிக நல்லோர் ஆகின்றனர். பிரகிருதியே நம்மைப் பூர்ணத்துவத்தை நோக்கிக் கொண்டு செல்கிறது. நாளடைவிலே அவள் எல்லோரை யும் அங்குச் சேர்ப்பாள். சமய வாழ்க்கையை அடைவதற்காகச் செய்கின்ற முயற்சிகளும் சாதனைகளும் தடை நீக்கத்திற்கு உரியனவே. கதவுகள் திறக்கப்பட்டவுடனே, நாம் நமது பிறப் புரிமையை அடைவோம். இக்காலத்து ஆராய்ச்சியைக் கொண்டு நோக்கும் பொழுது, பண்டு யோகிகள் கூறிய இந்தப் பரிணும வாதக் கொள்கை நன்கு தெளிவுபடும். அங்ஙனமாயினும், யோகி கள் கூறுகிற விளக்கம் சிறந்தது. இக்காலத்து விஞ்ஞான சாத்திரிகள் பரிணுமத்துக்குக் காரணமாகக் காட்டுகின்ற இணை விழைச்சுத் தெரிவு, தகுதியுள்ளன தப்பிப் பிழைத்தல் என்னு மிவை போதிய காரணங்களாகா. உடலை வளர்த்தல், வாழ்க்கைத் துணையைத் தேடுதல் என்னும் இவ்விரண்டும் முற்றுப் பெற்ற ஒரு நிலையை மனித அறிவு அடைந்துவிட்டதாக வைத்துக் கொள்ளுவோம். இக்கால விஞ்ஞான நூலோர் கருத்தின்படி, அப்பொழுது மனிதரது முன்னேற்றமே நின்று போக, மனித இனம் அழிந்து போகும். பிறரை நெருக்குவோன் ஒவ்வொரு வனும், தனது மனச்சாட்சியைச் சமாதானப்படுத்திக்கொள் வதற்கு இம்முடிபு ஒரு வழியைக் காட்டுகிறது. தத்துவ ஞானிய ரென்று தம்மைத் தாமே கூறுவோர் சிலர், தகுதியற்ற தீய மக்களை அழித்து, மனித இனத்தை வாழ வைக்க வேண்டுமென்று சொல்லு கின்றனர் ; தகுதியும், தகுதியின்மையும் ஆராய்வதற்குத் தம்மைத் தாமே நீதிபதிகளாகவும் செய்துகொள்ளுகின்றனர். ஆனால்,

பண்டு இருந்த பெரிய பரிணாம வாதியாராகிய பதஞ்சலி முனிவர்,
பரிணாம வாதத்தின் உண்மையான இரகசியத்தை எடுத்துக் கூறு
கின்றார். ஒவ்வொரு பிராணியும் தன்னிடம் நிறைந்திருக்கின்ற
பூரணத்துவமாகிய எல்லையற்ற அலை வெளிப்பட்டுத் தோன்று
வதற்கு முயலுகிறதென்றும், இந்த உண்ணிறைந்த பூரணத்துவத்
தின் வெளிச்செலவே பரிணாமமாகுமென்றும் அவர் கூறுகிறார்.
சண்டைகளும், ஒருவரை ஒருவர் வெல்லுமாறு செய்கிற முயற்சி
களும் நமது பேதைமையினால் ஏற்பட்டன. கதவினைத் திறந்து
நீரினை உள்ளே விடும் வழியை நாம் அறிந்துகொள்ளவில்லை.
எல்லையற்ற இவ்வெள்ளம் தோன்றுதல் வேண்டும். எல்லா வகைத்
தோற்றங்களுக்கும் இதுவே காரணம். வாழ்க்கைச் சச்சரவுகளும்
சிற்றின்ப விருப்பங்களும் கணப்பொழுது நிலைப்பன ; வேண்டத்
தகாதன ; பேதைமையினால் ஆக்கப்பட்ட காரியங்களெனக் கருதப்
படுவன. இந்தச் சச்சரவுகள் எல்லாம் தீர்ந்த பின்பும், நம்முள்ளே
மறைந்திருக்கின்ற பூரணத்துவமானது, ஒவ்வொருவரும் பூரணத்
துவம் அடையும் வரையும், நம்மை முன்னேறிப் போகும்படி செய்
யும். ஆதலால், முன்னேற்றத்துக்குச் சண்டை சச்சரவு வேண்டு
மென்று நம்புவது நியாயமாகாது. விலங்கிலே மனிதன் மறைப்
புண்டு கிடந்தான். கதவினைத் திறந்தவுடனே மனிதன் தோன்றி
னான். அவ்வண்ணமே மனிதனிடத்தில் தேவன் மறைந்திருக்
கின்றான். பேதைமையாகிய தடைகளிலும் பூட்டுகளிலும் சிறை
யுண்டிருக்கிற தேவன், அறிவாகிய சம்மட்டியினால் தடைகளையும்
பூட்டுகளையும் உடைக்கும் பொழுது வெளிப்பட்டுத் தோன்று
வான்.

निर्माणचित्तान्यस्मितामात्रात् ॥ ४ ॥

**4. ‘அஸ்மிதை’ என்னும் முனைப்பு மாத்திரமே காரணமாகப் படைக்கப்பட்ட சித்தங்களை உண்டாக்குகின்றன.**

நம் நல்வினை தீவினைகளுக்காக நாம் துன்புறுகிறோம் என்பது
கருமத்தைப்பற்றிய கொள்கையாகும். மனிதன் தனது மாண்பை
மீண்டும் பெறும்படி செய்வதே தத்துவ ஞானத்தின் முழு நோக்க
மாகும். எல்லாச் சமய சாத்திரங்களும், ஆன்மாவாகிய மனித
னுடைய மாண்பைப் புகழ்ந்து பாடுகின்றன ; அதனோடு கருமத்
தைப்பற்றியும் போதிக்கின்றன. நல்வினையினால் இது விளையு
மென்றும் தீவினையினால் மற்றொன்று விளையுமென்றும் சொல்லு

கின்றனர். ஆனல், நல்வினை தீவினைகள் ஆன்மாவைத் தொழிற் படுத்துவனவாயின், ஆன்மா மதிப்பற்றதாகின்றது. தீவினைகள், புருஷன் தனது சொந்த இயற்கையை வெளிப்படுத்திக் காட்டுவதற்குத் தடையாகின்றன. நல்வினைகள் தடைகளை நீக்கிவிடப் புருஷனுடைய மாண்பு வெளிப்பட்டு ஒளிவிடுகின்றது. புருஷன் மாறுதல் அடைவதில்லை. நீங்கள் எது செய்கின்றீர்களோ, அது உங்கள் சொந்த இயல்பாகிய மாண்பை அழிப்பதில்லை. ஏனெனில், ஆன்மா ஒன்றினும் தொழிற்படுத்தவொண்ணாதது. அதனுடைய பூரணத்துவத்தினை மறைக்கின்ற ஒரு திரையை வினைகள் உண்டாக்குகின்றன.

தங்கள் கருமத்தை விரைவிலே ஒழித்துவிடக் கருதிய யோகிகள், உடற்றொகுதிகளை (காய வியூகங்களை) உண்டாக்குகிறார்கள். இந்த உடல்களுக்கெல்லாம் வேண்டிய சித்தத்தினை, அஸ்மிதையாகிய முனைப்பிலிருந்து உண்டாக்கிக்கொள்கிறார்கள். இவை அவர்களது முந்திய நிலையாகிய மனத்திலிருந்து வேறுபட்டனவாதலின், 'படைக்கப்பட்ட சித்தங்கள்' எனப்படுவன.

प्रवृत्तिभेदे प्रयोजकं चित्तमेकमनेकेषाम् ॥ ५ ॥

**5. மூலமாகிய ஒரு மனமே படைக்கப்பட்ட பல சித்தங்களினது தொழில்களைத் தூண்டி நடத்துகிறது.**

வேறு வேறாகிய இந்தச் சித்தங்கள் படைக்கப்பட்ட உடல்களில் நின்று, படைக்கப்பட்ட சித்தங்களாய்த் தொழில் புரிகின்றன. நீங்கள் யோகிகளாகும்பொழுது, அவற்றை அடக்கியாளும் இரகசியத்தை அறிந்துகொள்வீர்கள். அது உங்களுடையதாகவே எப்பொழுதும் இருந்தது. நீங்கள் யோகிகள் ஆகும்போதும் அதனை நினைவு கூர்வீர்கள். அப்பொழுது நீங்கள் அதனை விரும்பியவாறு தொழிற்படுத்துதல் கூடும். அண்டம் எந்தப் பொருளினால் ஆக்கப்பட்டிருக்கிறதோ, அந்தப் பொருளினைக் கொண்டே, படைக்கப்பட்ட இச்சித்தங்கள் ஆக்கப்படுகின்றன. மனம் ஒரு பொருள், சடம் மற்றொரு பொருள் என்பதற்கில்லை. அவை ஒரே பொருளின் வேறுபட்ட வடிவங்களே. யோகியினது படைக்கப்பட்ட சித்தங்களையும், படைக்கப்பட்ட உடல்களையும் ஆக்குவது (அஸ்மிதை) முனைப்பு என்னும் நுண்ணிய பொருளே. இயற்கையிலுள்ள இந்தச் சத்திகளின் இரகசியத்தை யோகி

அறிந்துகொண்ட பொழுது, முனைப்பு என்னும் பொருளிலிருந்து பல உடல்களையும் சித்தங்களையும் படைத்துக்கொள்ளுவான்.

तत्र ध्यानजमनाशयम् ॥ ६ ॥

6. அவற்றினுள்ளே தியானத்தினுல் அடைந்த சித்தமே இச்சையற்ற தன்மையை உடையது.

பல வேறு வகைப்பட்ட மனிதரிடத்தே, நாம் காண்கிற பல வேறு வகைப்பட்ட மனங்களினுள்ளே, பூரண தியானமாகிய சமாதியை அடைந்த சித்தமே மிக உயர்ந்தது. மந்திரம், மருந்து, தவம் என்னும் இவற்றினுல் சில சித்திகளை அடைந்தவனுக்கு இன்னும் இச்சைகள் உண்டு. சமாதி நிலையை அடைந்தவன் இச்சையற்றிருக்கிருன்.

कर्माशुक्लाकृष्णं योगिनस्त्रिविधमितरेषाम् ॥ ७ ॥

7. கருமங்கள், யோகிகளுக்கு வெண்மையுமாகா, கருமையுமாகா. மற்றையோருக்கு வெண்மை, கருமை, இவற்றினது கலப்பு எனும் மூவகைக் கருமங்கள் உண்டு.

யோகி பூரண நிலையை அடைந்த பின்னர், அவன் செய்யும் தொழில்களும், அவற்றினுல் ஏற்படும் வினையும் அவனைக் கட்டுப்படுத்தா. ஏனெனில், அவன் அவற்றை விரும்பவில்லை. அவன் தொழில் செய்துகொண்டே போகிருன்; நன்மையான தொழில்களையே செய்கிருன்; பயனைக் கருதுவதில்லை. பயன் அவனைச் சேரமாட்டாது. உயர்நிலையை அடையாத சாதாரண மனிதனிடத்துக் காணப்படுந் தொழில்கள், கருமை (தீவினை), வெண்மை (நல்வினை), இவற்றின் கலப்பு என மூவகைப்படுவன.

ततस्तद्विपाकानुगुणानामेवाभिव्यक्तिर्वासनानाम् ॥ ८ ॥

8. மேற்கூறிய மூன்று வகைக் கருமங்களிலிருந்து வெளிப்பட்டுத் தோன்றுகிற விருப்பங்கள், அந்த அந்த நிலைக்குப் பொருத்தமாகிய சம்ஸ்காரங்களை மட்டும் தழுவி இருப்பன; அத்தருணத்தில் மற்றக் கருமங்கள் தடைபட்டு நிற்கின்றன.

நான் நன்மை, தீமை, கலப்பு என்னும் மூவகைக் கருமங்களைச் செய்தேன் என்று வைத்துக்கொள்ளுவோம். அதன் பின்,

நான் இறந்து வானுலகத்தில் தேவனாய் வருகின்றேன் என்று கொள்ளுவோமாயின், தேவ உடலத்தில் உண்டாகின்ற விருப்பங்கள் மனித உடலத்தில் உண்டாகின்ற விருப்பங்களை ஒத்தனவாகா. தேவ உடல், உண்ணுதல் பருகுதல் செய்வதில்லை. அப்படியாயின், உண்ணுதல் பருகுதல் ஆகிய விருப்பங்களைக் காரியமாகக் கொண்டுள்ளனவும் அனுபவித்துத் தீராதனவுமாகிய பழைய கருமங்கள் என்ன கதியை அடைகின்றன? நான் தேவனாய் வரும்பொழுது இந்தக் கருமங்கள் எங்கே போகின்றன? விருப்பங்கள், தமக்குப் பொருத்தமாகிய சார்புகளைப் பற்றியே வெளிப்படுகின்றன என்பது இதற்கு விடையாகும். சார்பு எதற்குத் தகுதியுடையதோ, அந்த விருப்பங்கள் மட்டுமே தோன்றுகின்றன. எஞ்சியவை சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த வாழ்க்கையிலே தெய்வ விருப்பங்கள் பலவும், மனித விருப்பங்கள் பலவும், விலங்கின் விருப்பங்கள் பலவும் எனக்கு உளவாயிருக்கலாம். தேவ உடலை எடுப்பேனாயின், நல்ல விருப்பங்கள் மட்டுமே வெளிப்பட்டு வரும். ஏனெனில், நான் எய்திய சார்பு அவற்றுக்குத் தகுதியுடையதாயிருக்கும். விலங்கு உடல் எடுப்பேனாயின், விலங்கு விருப்பங்கள் மட்டுமே வெளிப்பட்டுத் தோன்றும். நல்ல விருப்பங்கள் காத்திருக்க வேண்டும். இது எதனைக் காட்டுகின்றது? சார்பினைக் கருவியாகக் கொண்டு விருப்பங்களை அடக்கலாம். சார்புக்குத் தகுதியான பொருத்தமுள்ள கருமங்கள் மட்டுமே வெளிப்படும். கருமத்தை அடக்குவதற்கும் சார்பின் வலிமை பெரியதோர் உபகரணமென்பதை இது காட்டுகின்றது.

जातिदेशकालव्यवहितानामप्यानन्तर्यं स्मृतिसंस्कारयो-रेकरूपत्वात् ॥ ९ ॥

**9. பிறவி, தேசம், காலம் என்னும் இவை விலகி இருந்த போதிலும், விருப்பங்களுக்கு இடையீடில்லாத தொடர்பு உண்டு, நினைவும் சம்ஸ்காரமும் ஒத்திருப்பனவாதலின்.**

அனுபவங்கள் நுண்ணியவாய், சம்ஸ்காரங்கள் ஆகின்றன. சம்ஸ்காரங்கள் புதிய வலிமையை அடையும்பொழுது நினைவாகின்றன. இங்கு நினைவென்பதனாற் பழைய அனுபவங்கள் சம்ஸ்காரங்களாகி, இப்பொழுது நாம் உணர்வோடு செய்கின்ற தொழிலைச்சார்ந்து, தம்மறிவில்லாமலே இயைந்து நிற்கின்ற

நிலையும் கருதப்படும். ஒவ்வோர் உடலிலும், அத்தகைய உடலிைல் சேர்க்கப்பட்ட சம்ஸ்காரத் தொகுதி மட்டும், அந்த உடலில் கருமம் செய்வதற்குக் காரணமாகின்றது. வேறுபட்ட உடலில் அடைந்த அனுபவம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வோர் உடலும் அந்த இனத்திலே தொடர்புபட்டு வந்த வழியிலே இருந்து தொழில் புரிகின்றது. ஆதலால் விருப்பத்தின் வரிசை அழிந்துபோவதில்லை.

तासामनादित्वं चाशिषो नित्यत्वात् ॥ १० ॥

10. வாழவேண்டுமென்னும் விருப்பம் நித்தியமாயிருத்தல் பற்றி, அதற்குத் தொடக்கமில்லை.

எல்லா அனுபவங்களும் இன்பம் பெற வேண்டுமென்னும் விருப்பத்தைத் தொடர்ந்து வரும். புதிய அனுபவம் ஒவ்வொன்றும், பழைய அனுபவங்களால் ஆக்கப்பட்ட சம்ஸ்காரங்களை ஆதாரமாகக் கொண்டனவாதலால், அனுபவத்துக்குத் தொடக்கமில்லை. ஆதலால், விருப்பத்துக்கும் தொடக்கமில்லை.

हेतुफलाश्रयालम्बनैः संगृहीतत्वादेषामभावे तदभावः ॥ ११ ॥

11. காரணம், பயன், பற்றி நிற்குமிடம், பற்றுகின்ற பொருள் என்னும் இந்நான்கும் ஒன்ருகக் கட்டப்பட்டிருத்தலினுல், இவற்றினது இன்மையிலே அதன் இன்மை பொருந்தியிருக்கிறது.

விருப்பங்கள் காரண*காரியத் தன்மையினுல் ஒன்று சேர்ந்திருக்கின்றன. ஒரு விருப்பம் எழுந்தால், அது தனது காரியத்தைச் செய்யாமல் அழிந்து போவதில்லை. மேலும், மனமானது பழைய விருப்பங்களையெல்லாம் சம்ஸ்கார வடிவமாகக் கொண்டிருக்கின்ற பெரிய களஞ்சியம். அவை தொழிற்பட்ட பின்பன்றி அழியமாட்டா. மேலும், புலன்கள் புறத்தேயுள்ள பொருள்களைப் பற்றினுலன்றி, விருப்பங்கள் எழமாட்டா. ஆதலால், காரணம், பயன், பற்றி நிற்குமிடம், பற்றுதற்குரிய பொருள் என்னும் இவற்றை நீக்குதலினுல் மட்டுமே விருப்பம் மறைதல் கூடும்.

* காரணங்களாவன : "துன்பத்தைத் தருகின்ற தடைகளும்" (11.3) செயல்களும் (IV. 7). காரியங்களாவன : "ஜாதியும், ஆயுளும், அனுபவமும்" (11.13).

अतीतानागतं स्वरूपतोऽस्त्यध्वभेदाद्धर्माणाम् ॥ १२ ॥

12. இறந்த காலமும் எதிர் காலமும் தம்மியல்பிலே நிலை பெற்றிருக்கின்றன, இவை செல்லுகின்ற கதியிலே வேற்றுமையுடையவாதலின்.

இல்லாததிலிருந்து உள்ளது வரமாட்டாது. இறப்பும் எதிர்வும் வெளிப்பட்ட வடிவத்தில் இல்லாவிடினும், நுண்ணிய வடிவத்தில் இருக்கின்றன.

ते व्यक्तसूक्ष्मा गुणात्मानः ॥ १३ ॥

13. அவை வெளிப்பட்டும் நுணுகியும் குணங்களின் இயல்பாய் இருக்கின்றன.

சத்துவம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்றும் குணங்களாகும். இவற்றின் பருப்பொருள் வடிவம் தோற்றப் பிரபஞ்சமாகும். இறந்த காலமும் எதிர் காலமும், இந்தக் குணங்கள் வெளிப்பட்டுத் தோன்றுகின்ற வேறுபாட்டிலிருந்து எழுவன.

परिणामैकत्वाद्वस्तुतत्त्वम् ॥ १४ ॥

14. வேறுபாட்டு ஒற்றுமையினுலே பொருளின் உண்மையை அறிதல் வேண்டும்.

பொருள் மூன்ருயிருப்பினும், அவற்றின் வேறுபாடுகள் ஒருங்கு இயந்து நிற்பனவாதலின், எல்லாப் பொருள்களுக்கும் ஒன்ருந் தன்மை உண்டு.

वस्तुसाम्ये चित्तभेदात्तयोर्विभक्तः पन्थाः ॥ १५ ॥

15. அறியப்படும் பொருளானது ஒன்ருயிருந்த போதிலும், காட்சியும் விருப்பமும் வேறுபட்டிருத்தல் கூடுமாதலின், மனமும் பொருளும் வேறு வேருகிய தன்மையன.

நம் சித்தங்களின் வேருகித் தனித்து நிற்பதாகி பொருட் பிரபஞ்சம் ஒன்று உண்டு. இதனுல், பௌத்தர்கள் கூறுகிற திருஷ்டி-சிருஷ்டி வாதம் மறுக்கப்படுகின்றது. வேறு வேருகிய மக்கள் ஒரே பொருளினை வேறு வேறு வகையாக நோக்குகின்ற

காரணத்தால், அது குறித்த ஒரு மனிதனுடைய பாவனையாக மாத்திரம் இருத்தல் கூடாது.*

तदुपरागापेक्षित्वाच्चित्तस्य वस्तु ज्ञाताज्ञातम् ॥ १६ ॥

16. சித்தத்தினது சார்பினை வேண்டி நிற்றலினாலே, பொருள் அறியப்பட்டதாகவும் அறியப்படாததாகவும் இருத்தல் கூடும்.

सदा ज्ञाताश्चित्तवृत्तयस्तत्प्रभोः पुरुषस्यापरिणामित्वात् ॥ १७ ॥

17. மனத்தின் வேறுபட்ட நிலைகள், அதன் தலைவனாகிய புருடனால் என்றும் அறியப்படுவன, அவன் மாறுபடாத தன்மைய னாதலின்.

பிரபஞ்சம், மானதப் பொருளும் சடப்பொருளுமாக அமைந் திருக்கிறதெனக் காட்டுவதே இக்கொள்கையின் சாரமாகும். இவை இரண்டும் இடையீடின்றி ஓடுகின்ற தன்மையனவாயிருக் கின்றன. இந்தப் புத்தகமென்பது என்ன? இடைவிடாது மாறிக் கொண்டிருக்கின்ற அணுக்களின் கூட்டம் இது. ஒரு தொகுதி அணுக்கள் போய்விட, மற்றொரு தொகுதி அணுக்கள் வரு கின்றன. அது ஒரு நீர்ச்சுழி போன்றது. ஆனால், ஒற்றுமைப் படுத்துவது எது? அதனை ஒரே புத்தகமாக்குவது எது? மாறுதல்கள் லயப்பட்டு நிற்கின்றன. அவை ஓர் ஒழுங்காக எனது மனத்துக்கு உணர்ச்சிகளை அனுப்பிக்கொண்டிருக் கின்றன. பாகங்கள் இடைவிடாது மாறிக்கொண்டிருப்பினும், அனைத்தும் ஒன்று சேர்ந்து தொடர்ச்சியான படமாயிருக் கின்றன. மனமே இடைவிடாது மாறிக்கொண்டிருக்கிறது. மனமும் உடலும் ஒரே பொருளிலே இரு வேறு வேகங்களோடு இயங்குகின்ற இரண்டு படலங்கள் போன்றவை. ஒப்பிட்டு

---

* சில பதிப்புகளிலே, இங்கு மற்றொரு சூத்திரமும் காணப்படுகிறது :—

न चैकचित्ततन्त्रं वस्तु तदप्रमाणकं तदा किं स्यात् ।

"வெளியிலுள்ள பொருள் ஒருவனுடைய மனத்தினை ஆதாரமாகக் கொண்ட தென்று சொல்லுதல் கூடாது, தன்னை உண்டுபண்ணின பிரமாணமற்றிருத் தலினாலே, அது இல்லாது போகுமாதலின்."

ஒரு பொருளினைப் பற்றிய காட்சியே, அப்பொருளினது இருக்கைக்குத் தனித்த பிரமாணமாயிருக்குமாயின், மனம் சமாதியிலோ பிறிதொன்றிலோ ஆழ்ந்திருக்கும் பொழுது, அது ஒருவராலும் காணப்படாததாதல் வேண்டும்; அப்பொழுது இல் பொருளென்றே சொல்லவேண்டும். இம்முடிபு பொருத்தமில்லாதது.

—ஆசிரியர்

நோக்கும் பொழுது ஒன்று மெதுவாகவும் மற்றொன்று விரைவாகவும் இருத்தலினால், இரண்டு இயக்கங்களுக்கும் வேறுபாட்டினை நாம் அறிதல் கூடும். சான்றாக, ஒரு புகை வண்டித் தொடரின் இயக்கத்தையும் அதற்கு அணித்தாய் இயங்குகின்ற ஒரு வண்டியையும் எடுத்துக்கொள்ளுவோம். இவ்விரண்டின் இயக்கத்தையும் ஓர் அளவுக்குக் காணுதல் கூடும். ஆனால், இன்னும் சில தேவைப்படும். இயங்காதது ஒன்று உள்ள பொழுதான் இயக்கத்தைக் காணுதல் கூடும். பொருள்கள் இரண்டோ மூன்றோ ஒரு வகையாக இயங்கும் பொழுது விரைந்தியங்குவதன் இயக்கத்தை முதலிலே கண்டு, குறைவாய் இயங்குவதன் இயக்கத்தைப் பின்பு காண்கிறோம். மனம் எப்படிக் காணுதல் கூடும்? அதுவும் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆதலால், அதனிலும் குறைவாக இயங்குகிற ஒன்று வேண்டும். அதன்மேல் இன்னும் குறைவாக இயங்குகிற மற்றொன்று வேண்டும். பின்னும் இப்படியே முடிவு காணுதல் இயலாது. தருக்க சாத்திரத்தின்படி எங்கேயோ ஓரிடத்தில் நிற்கவேண்டும். ஒரு பொழுதும் இயங்காத ஒன்றினை அறிந்து இந்தத் தொடரினை முடிக்க வேண்டும். முடியாத இச்சங்கிலித் தொடராகிய இயக்கத்தின் பின்னே வேறுபாடற்ற நிறமற்ற புருடன் இருக்கிறான். இந்தத் தோற்றங்களெல்லாம், அதனிடத்திலிருந்து பிரதிபிம்பிக்கின்றன, மாயா தீபத்திலிருந்து எழுகின்ற உருவங்கள் ஒரு திரையினை மாறுபடுத்தாது அதன்மேல் விழுவது போல.

न तत्स्वाभासं दृश्यत्वात् ॥ १८ ॥

**18. அது காணப்படுவதாதலின், மனம் தன்னியல்பாகவே ஒளியுள்ளதன்று.**

இயற்கையில் எவ்விடத்தும் அபாரமான சத்தி வெளிப்பட்டுத் தோற்றுகிறது. ஆனால், அது இயற்கையிலே ஒளியுள்ளதன்று; புத்தியுள்ளதன்று. புருடன் மாத்திரமே தன்னியல்பில் ஒளியுள்ளவன். அவனே அனைத்தினுக்கும் ஒளியைத் தருகிறான். புருடனுடைய வலிமையே எல்லாச் சடப்பொருள்களிலும் சத்திகளிலும் செறிந்து நிற்கிறது.

एकसमये चोभयानवधारणम् ॥ १९ ॥

**19. ஒரே தருணத்திலே இரண்டு பொருள்களைக் கிரகித்துக் கொள்ள மாட்டாதாதலின்.**

மனம் தன்னியல்பாகவே ஒளியுள்ளதாயின், தன்னையும் பொருள்களையும் ஒரே தருணத்திலே அறிந்துகொள்ளும். அப்படிச் செய்தல் அதற்கு இயலாது. பொருளை அறியும் பொழுது, தன்னை அறியாதிருக்கிறது. ஆதலால், புருடன் தன்னொளியுள்ளவன். மனம் அப்படித்தன்று.

चित्तान्तरदृश्ये बुद्धिबुद्धेरतिप्रसङ्गः स्मृतिसङ्करश्च ॥ २० ॥

20. ஒரு சித்தத்தை மற்றொரு சித்தம் அறிந்துகொள்ளுகிறதென்றால், அதனை அறிய மற்றொரு சித்தம் வேண்டும். இவ்வாறு முடிவில்லாத சித்தங்கள் ஏற்படும். ஞாபகம் கலக்கமுறும்.

சாதாரண மனத்தினை அறிவதற்கு மற்றொன்று வேண்டுமாதலால், இத்தொடர்பு எல்லையற்றுச் செல்லும். இதனால், ஞாபகம் கலக்கமுறும். நினைவைச் சேர்த்து வைக்கக் களஞ்சியம் இருக்க மாட்டாது.

चित्तेरप्रतिसंक्रमायास्तदाकारापत्तौ स्वबुद्धिसंवेदनम् ॥ २१ ॥

21. சுத்த அறிவாகிய புருடன் நிலை திரியாதிருப்பதால், சித்த வஸ்துவானது அதன் வடிவத்தைக் கொள்ளும்பொழுது, சித்தம் அறிவுடையதாகின்றது.

அறிவு எனப்படுவது புருடனுடைய ஒரு தன்மையன்று என்பதைத் தெளிவுபடுத்தும் பொருட்டுப் பதஞ்சலியார் இதனைச் சொல்லுகிறார். சித்தம் புருடனுக்கு அருகில் வரும்பொழுது, அது புருடனுடைய பிரதிபிம்பத்தைப் பெறுவதுபோலக் காணப்படுகின்றது. அத்தருணத்தில் சித்தம் அறிவுடையதாகிப் புருடனைப் போலக் காணப்படுகின்றது.

द्रष्टृदृश्योपरक्तं चित्तं सर्वार्थम् ॥ २२ ॥

22. காண்பானாகிய புருடனோடும் காணப்படுகின்ற பொருள்களோடும் கூடி இருப்பதனாலே, சித்தமானது நோக்கிய அனைத்தினையும் அறியக்கூடியதாகின்றது.

ஒரு பக்கத்திலே காணப்படுகிற பொருட்பிரபஞ்சம் பிரதிபிம்பிக்கிறது. மற்றப் பக்கத்திலே காண்பான் பிரதிபிம்பிக்கின்றான். அதனால், சித்தத்துக்கு எல்லா அறிவின் மேலும் சக்தி உண்டாகிறது.

तदसंख्येयवासनाभिश्चित्तमपि परार्थं संहत्यकारित्वात् ॥ २३॥

23. அந்தச் சித்தமானது கணக்கிட முடியாத விருப்பங்களினாலே வேறுபடுத்தப்பட்டிருப்பினும், பொருள்களை ஒன்று கூட்டிக் காட்டுவது அதற்கு இயல்பாதலினாலே, அது தன்னிலும் வேறாகிய ஒன்றன்பொருட்டுத் (புருடன்) தொழில் புரிகின்றது.

மனம் பல பொருள்களாலாகிய ஒரு சேர்க்கை. ஆதலால், அது தனக்காகத் தொழில் புரிதல் இயலாது. இவ்வுலகத்தில் எது சேர்க்கைப் பொருளாயிருக்கின்றதோ, அதற்கு நிமித்த காரணமாகிய மற்றொரு பொருள் இருக்க வேண்டும். ஆதலால், மனமாகிய இந்தச் சேர்க்கை, புருடன்பொருட்டு அமைந்துள்ளது.

विशेषदर्शिन आत्मभावभावनानिवृत्तिः ॥ २४ ॥

24. இந்த வேறுபாட்டினை அடைந்த விவேகிக்கு மனத்தினை ஆன்மாவாகக் கொள்ளுகிற காட்சி ஒழிந்து போகிறது.

விவேகத்தினாலே, யோகியானவன், புருடன் மனமல்லன் என்பதை அறிகிறான்.

तदा विवेकनिम्नं कैवल्यप्राग्भावं चित्तम् ॥ २५ ॥*

25. அதன் பின் விவேகத்தோடு கூடிய மனமானது முன்னுள்ள கைவல்ய நிலையை அடைகிறது.

யோக சாதனையினால் விவேகமுண்டாகிக் காட்சி தெளிவடைகின்றது. கண்களிலிருந்து திரைநீங்கிப் போகப் பொருள்களை உள்ளவாறு காண்கிறோம். இயற்கையானது சேர்க்கைப் பொருளென்றும், அது சாட்சியாகிய புருடனுக்கு வெளித் தோற்றங்களைக் காட்டுகிறதென்றும், இயற்கை தலைவன் அன்றென்றும், அதனுடைய சேர்க்கைகளெல்லாம் அகத்திலே அரியாசனமீது வீற்றிருக்கின்ற வேந்தனாகிய புருடன்பொருட்டே நிகழ்கின்றனவென்றும் நாம் அறிவோம். நீண்ட காலப் பயிற்சியாலே அறிவு வந்தெய்த, அச்சம் நீங்கிப் போகின்றது. மனம் கைவல்யத்தை அடைகின்றது.

---

* कैवल्यप्राग्भारं என்றும் பிரதி பேதம் உண்டு. அங்ஙனம் கொள்ளின், "விவேகத்திலே ஆழ்ந்த சித்தமானது கைவல்யத்தை நோக்கிச் செல்கிறது," என்று பொருள் கொள்ள வேண்டும். —ஆசிரியர்

तच्छिद्रेषु प्रत्ययान्तराणि संस्कारेभ्यः ॥ २६ ॥

26. அதற்குத் தடையாக எழுகின்ற எண்ணங்கள் சம்ஸ்காரங்களினுலே ஆகின்றன.

நாம் மகிழ்ச்சி அடைய, வெளியில் உள்ள பொருள்கள் சில வேண்டுமென நாம் நம்பும்படி செய்கின்ற வேறுபட்ட எண்ணங்கள் எல்லாம் பூரணத்துவத்தை அடைவதற்குத் தடைகளாயிருக்கின்றன. புருடன் தன்னியற்கையிலே உவகையுடையவனுயிருக்கின்ருன். பழைய சம்ஸ்காரங்களினுலே அந்த அறிவு மறைந்து போய்விட்டது. இந்த சம்ஸ்காரங்கள் முற்றிலும் தொழிற்பட வேண்டும்.

हानमेषां क्लेशवदुक्तम् ॥ २७ ॥

27. பேதைமை முனைப்பு முதலியவற்றை அழிப்பதற்கு, மேலே (11-10) கூறிய முறைப்படியே செய்தல் கூடும்.

प्रसंख्यानेऽप्यकुसीदस्य सर्वथा विवेकख्यातेर्धर्ममेघः समाधिः ॥ २८ ॥

28. யாவற்றையும் அறிகின்ற அந்த உயர்நிலையிலுள்ள பலனையும் விட்டொழிபவனுக்குப் பூரண விவேகத்தின் பயனுகத் தருமமேக சமாதி உண்டாகிறது.

யோகி விவேகத்தை அடைந்த உடனே, மேலதிகாரத்திற் கூறிய விபூதிகளெல்லாம் அவனுக்குக் கிடைக்கின்றன. யோகி அவற்றை அகற்றிவிடுகிருன். அப்பொழுது அவனுக்கு ஒரு வகை ஒளியாகிய சிறந்த ஞானமொன்று உண்டாகிறது. (இது அறமாகிய மழையைப் பொழிகின்ற) 'தரும மேகம்' எனப் படும். உலக சரித்திரத்திலே சொல்லப்பட்டிருக்கிற பெரிய தீர்க்கதரிசிகள் எல்லாரும் இதனை அடைந்தனர். அவர்கள் அறிவின் ஆதாரம் அனைத்தினையும் தங்களுள்ளே கண்டார்கள். சத்தியம் அவர்களுக்கு மெய்ப்பொருளாய்விட்டது. வலிமைகளால் எய்துகின்ற வீண் விருப்பங்களை எல்லாம் விட்டொழிந்த பின்னர், சமாதானமும், சாந்தியும், முழுத் தூய்மையும் அவர்கள் இயற்கையாய் விட்டன.

ततः क्लेशकर्मनिवृत्तिः ॥ २९ ॥

29. அதிலிருந்து துன்பமும் வினையும் தீர்ந்து போகின்றன.

அந்தத் தரும மேகநிலை வந்து எய்திவிட்டால், மீண்டும் இழிந்து போகிற அச்சமில்லை. யாதொன்றும் யோகியைக் கீழே இழுக்க மாட்டாது. தீமை என்பது அவனுக்கு உண்டாக மாட்டாது. துன்பமும் இல்லை.

तदा सर्वावरणमलापेतस्य ज्ञानस्यानन्त्याज्ज्ञेयमल्पम् ॥ ३० ॥

**30. தரும மேக சமாதி ஏற்பட்டவுடன், துன்பம் விளையாகிய அழுக்குகள் நீங்கிவிட, அறிவு அகண்டமாவதனால், அறியப்படுவது மிகச் சிறியதாய்விடுகின்றது.**

அறிவு அங்கு உளது. ஆனால், அதனை மூடி இருக்கின்ற மறைவு போய்விட்டது. 'ஆகாயத்தைப் போல அகண்டமாகிய எல்லையற்ற அறிவே புத்தநிலை எனப்படுகிற நிலை,' என்று புத்த மத சாத்திரம் ஒன்று கூறுகிறது. இயேசு அதனை அடைந்து கிறித்துவானார். நீங்கள் எல்லோரும் அந்த நிலையை அடைவீர்கள். அறிவு அகண்டமாதலினால், அறியப்படும் பொருள் அற்பமாகிறது. பிரபஞ்சம் அனைத்தும் அதிலுள்ள அறியப்படும் பொருள் யாவும் புருடனுடைய முன்னிலையிலே இன்மையாகின்றன. அறியப்படும் பொருள் அகண்டமாகத் தோன்றுவதால், சாதாரண மனிதன் தன்னை அற்பமாக மதிக்கிறான்.

ततः कृतार्थानां परिणामक्रमसमाप्तिर्गुणानाम् ॥ ३१ ॥

**31. குணங்கள் முடிவினை அடைந்துவிட்டபடியால், அவற்றினுடைய வேறுபாட்டுக் கிரமமானது முற்றுப் பெறுகின்றது.**

ஜாதிதோறும் மாறுதலடைகின்ற குண வேறுபாடுகளனைத்தும் முற்றிலும் நீங்கிப் போகின்றன.

क्षणप्रतियोगी परिणामापरान्तनिर्ग्राह्यः क्रमः ॥ ३२ ॥

**32. கிரமம் எனப்படுவது, தொடரின் முடிவிலே தெளிவாகக் காணப்படுவதும் இடையீடில்லாத கணங்களின் இயைபாக அமைந்திருப்பதுமாகும்.**

கணந்தோறும் உண்டாகின்ற வேறுபாட்டியைபிலே பொருந்தி நிற்கின்ற தன்மையினதாகிய கிரமத்தைப் பதஞ்சலியார் இங்கே விவரிக்கின்றார். நாம் ஆலோசனையுற்றிருக்கும் பொழுது பல கணப் பொழுதுகள் கழிகின்றன. ஒவ்வொரு

கணத்திலும் எண்ணங்களின் வேறுபாடு உண்டாகிறது. ஆயினும், தொடரின் முடிபிலேதானே நான் வேறுபாட்டினைக் காண்கின்றேன். இதுவே கிரமமெனப்படுவது. ஆதலால், சர்வ வியாபகத்தை அடைந்து விட்ட சித்தத்துக்குக் கிரமமென்பது இல்லை. எல்லாம் அதற்கு நிகழ்காலத்திலே நடக்கின்றன. இறந்த காலமும் எதிர் காலமும் இல்லாது போய்விட்டன. காலம் வசப்பட்டு நிற்கிறது. எல்லா அறிவும் ஒரு கணப்பொழுதிலே அதன் முன்னிலையில் நிற்கின்றன. மின்னல் வெட்டுவது போல அனைத்தும் அறியப்படுகின்றன.

पुरुषार्थशून्यानां गुणानां प्रतिप्रसवः कैवल्यं स्वरूपप्रतिष्ठा वा चितिशक्तेरिति ॥ ३३ ॥

33. புருடன்பொருட்டுத் தொழில் புரிகின்ற தமது தன்மையில் நின்று விலகிய குணங்கள், ஒடுங்கு முறையாக ஒடுங்கிவிட, கைவல்யம் வந்து எய்துகிறது; அறிவு வடிவாகிய புருடனுக்குத் தனது சொந்த நிலைபேறடைவதே கைவல்யமெனப்படும் மோட்சம்.

நமது இனிய செவிலித்தாயாகிய பிரகிருதி தனக்குத்தானே ஏற்படுத்திக்கொண்ட சுயநலமற்ற தொழிலானது நிறைவேறி விட்டது. தன்னை மறந்திருந்த ஆன்மாவை அவள் மெல்லக் கைப்பற்றி, இந்தப் பிரபஞ்சத்திலுள்ள அனுபவங்களையும் தோற்றங்களையும் காட்டி, வேறு வேறாகிய உடல்கள் மூலமாக மேலும் மேலும் உயர்ந்த நிலைகளுக்குக் கொண்டுவந்து ஈற்றிலே அவள் தான் இழந்த மாண்பை அடைந்து, தனது இயல்பை நினைவு கூறும்படி செய்து வைத்தாள். அதன் பின்னர், அந்த அன்புள்ள தாய், தான் வந்த வழியே மீட்டும் சென்று, வாழ்க்கையென்னும் பாலையிலே பாதை தெரியாது அலைவுறுகின்ற மற்ற மன்னுயிர் பொருட்டு முயல்கின்றாள். முதலும் முடிவுமின்றி இவ்வண்ணம் அவள் தொழில் புரிகின்றாள். இன்ப துன்பம், நன்மை தீமை என்னும் இவற்றினூடே எல்லையில்லாத ஜீவான்மாக்களென்னும் ஆறு, தன்னையறிந்து பூரணமுறுதலாகிய கடலை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறது.

தமது இயற்கையையறிந்து மெய்யுணர்வெய்தியவர் அனைவருக்கும் மாட்சிமை உண்டாகுக! அவருடைய ஆசீர்வாதம் நம் அனைவர்மீதும் பொருந்துக!

ஹரி: ஓம் தத் சத்.

# அனுபந்தம்

## யோக நூற்குறிப்புகள்

### 1. சுவேதாஸ்வதர உபநிடதம்

இரண்டாம் அதிகாரம்

अग्निर्यत्राभिमथ्यते वायुर्यत्राधिरुध्यते ।
सोमो यत्रातिरिच्यते तत्र संजायते मनः ॥ ६ ॥

6. எவ்விடத்தில் தீயானது கடையப்படுகின்றதோ, எவ்விடத்தில் காற்றானது கட்டப்படுகின்றதோ, எவ்விடத்தில் சோமரசம் ஓடுகின்றதோ, அவ்விடத்திலே ஒரு பூரணமான மனம் படைக்கப்படுகிறது.

त्रिरुन्नतं स्थाप्य समं शरीरं हृदीन्द्रियाणि मनसा सन्निवेश्य ।
ब्रह्मोडुपेन प्रतरेत विद्वान् स्रोतांसि सर्वाणि भयावहानि ॥ ८ ॥

8. மார்பு, கழுத்து, தலை ஆகிய மூன்றனையும் நிமிர்த்தி வைத்து, உடலை நேராகவும் உறுதியாகவும் வைத்து, இந்திரியங்களை மனத்திலுள்ளே செலுத்தி, அறிஞனவன் அஞ்சத் தக்க ஆற்றினைக் கடக்கிறான்.

प्राणान् प्रपीडयेह संयुक्तचेष्टः क्षीणे प्राणे नासिकयोच्छ्वसीत ।
दुष्टाश्वयुक्तमिव वाहमेनं विद्वान् मनो धारयेताप्रमत्तः ॥ ९ ॥

9. நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட முயற்சியினையுடைய மனிதன், பிராணனையடக்கி, அது அமைதியடைந்த பின்பு நாசி வழியாக வெளி விடுகிறான். கடைப்பிடியுள்ள அறிஞனும், முரட்டுக் குதிரைகளை அடக்கியாளுகிற சாரதியைப்போல, மனத்தினை அடக்கிச் செலுத்துகிறான்.

समे शुचौ शर्करावह्निवालुका विवर्जिते शब्दजलाश्रयादिभिः ।
मनोनुकूले न तु चक्षुपीडने गुहानिवाताश्रयणे प्रयोजयेत् ॥ १० ॥

10. மேடு பள்ளமின்றிச் சமமானதும், தூய்மையானதும், பருக்கைக் கல், மணல் என்னுமிவை இல்லாததும், மனிதவொலி நீரருவியினரவம் என்னுமிவற்றினின்றும் நீங்கியதும், மனத்துக்கு நன்மையை நல்குவதும், கண்ணுக்கு இனிமையைத் தருவதும் ஆகிய மலைக்குகையிலும், அத்தகைய தனியிடங்களிலும் மனத்தினை ஒன்றுபடுத்துகிற யோகத்தைப் பயில வேண்டும்.

नीहारधूमार्कानिलानलानां खद्योतविद्युत्स्फटिकशशीनाम् ।
एतानि रूपाणि पुरःसराणि ब्रह्मण्यभिव्यक्तिकराणि योगे ॥ ११ ॥

11. பனிப்படலம், புகை, ஞாயிறு, காற்று, நெருப்பு, மின்மினி, மின்னல், பளிங்கு, மதி என்னும் உருவங்கள் தோன்றிய பின்னர், யோகத்திலே படிப்படியாகப் பிரம்மத்தின் தோற்றமுண்டாகிறது.

पृथ्व्यप्तेजोऽनिलखे समुत्थिते
पञ्चात्मके योगगुणे प्रवृत्ते ।
न तस्य रोगो न जरा न मृत्युः
प्राप्तस्य योगाग्निमयं शरीरम् ॥ १२ ॥

12. மண், நீர், தீ, காற்று, விசும்பு என்னும் ஐந்து பூதங்களினது காட்சி எழுந்த பின்பு யோகம் தொடங்குகின்றது. யோகாக்கினியினாலே ஆக்கப்பட்ட உடலையுடையவனுக்கு, நோய் மூப்பு மரணம் என்னுமிவை வருவதில்லை.

लघुत्वमारोग्यमलोलुपत्वं वर्णप्रसादः स्वरसौष्ठवञ्च ।
गन्धः शुभो मूत्रपुरीषमल्पं योगप्रवृत्तिं प्रथमां वदन्ति ॥ १३ ॥

13. பாரமற்ற (இலகுவான) உடலும், உடல்நலமும், தோலின் மென்மையும், மேனி நிறத்தின் தெளிவும், அழகிய குரலும், உடலின் நறுமணமும், மல மூத்திரங்கள் குறைந்திருத்தலும் ஆகிய இவை யோகாப்பியாசத்தின் முதற்பலனைக எய்துகின்றன.

यथैव बिम्बं मृदयोपलिप्तं तेजोमयं
भ्राजते तत् सुधान्तम् ।
तद्वात्मतत्त्वं प्रसमीक्ष्य देही एकः
कृतार्थो भवते वीतशोकः ॥ १४ ॥

14. பொன்னினுலோ, வெள்ளியினுலோ செய்யப்பட்ட கலமானது முதலில் மண்ணினுல் மூடப்பட்டுக் கிடந்து, பின்பு அழுக்கறத் துடைக்கப்பட்டபொழுது எப்படி ஒளிபோல விளங்குகிறதோ, அப்படி உடலை எடுத்தவன் ஏகான்மனுயிருக்கின்ற ஆன்மாவின் உண்மையை உணர்ந்து நற்கதியடைந்து துன்பமற்றவனுகிருன்.

## 2. யாஞ்ஞுவல்கியர் நூலிலிருந்து சங்கரர் எடுத்துக்காட்டியது

आसनानि समभ्यस्य वाञ्छितानि यथाविधि ।
प्राणायामं ततो गार्गि जितासनगतोऽभ्यसेत् ॥
मृद्वासने कुशान् सम्यगास्तीर्याजिनमेव च ।
लम्बोदरञ्च संपूज्य फलमोदकभक्षणैः ॥
तदासने सुखासीनः सव्ये न्यस्येतरं करम् ।
समग्रीवशिराः सम्यक् संवृतास्यः सुनिश्चलः ॥
प्राङ्मुखोदङ्मुखो वाऽपि नासाग्रन्यस्तलोचनः ।
अतिभुक्तमभुक्तंवा वर्जयित्वा प्रयत्नतः ॥
नाडीसंशोधनं कुर्यादुक्तमार्गेण यत्नतः ।
वृथा क्लेशो भवेत्तस्य तच्छोदनमकुर्वतः ॥
नासाग्रे शशभृद्बीजं चन्द्रातप वितानितम् ।
सप्तमस्य तु वर्गस्य चतुर्थं बिन्दुसंयुतम् ॥
विश्वमध्यस्थमालोक्य नासाग्रे चक्षुषी उभे ।
इडया पूरयेद्वायुं बाह्यं द्वादशमात्रकैः ॥
ततोऽग्निं पूर्ववद्ध्यायेत् स्फुरज्ज्वालावलीयुतम् ।
रूषष्टं बिन्दुसंयुक्तं शिखिमण्डलसंस्थितम् ॥
ध्यायेद्विरेचयेद्वायुं मन्दं पिङ्गलया पुनः ।
पुनः पिङ्गलयापूर्य घ्राणं दक्षिणतया सुधीः ॥
तद्वद्विरेचयेद्वायुमिडया तु शनैः शनैः ।
त्रिचतुर्वत्सरं चापि त्रिचतुर्मासमेव वा ॥

गुरुणोक्तप्रकारेण रहस्येवं समभ्यसेत् ।
प्रातर्मध्यन्दिने सायं स्नात्वा षट्कृत्व आचरेत् ॥
सन्ध्यादिकर्म कृत्वैव मध्यरात्रेऽपि नित्यशः ।
नाडीशुद्धिमवाप्नोति तच्चिह्नं दृश्यते पृथक् ॥
शरीरलघुता दीप्तिर्जठराग्निविवर्धनम् ।
नादाभिव्यक्तिरित्येतल्लिङ्गं तच्छुद्धिसूचनम् ॥
प्राणायामं ततः कुर्याद्रेचकपूरककुम्भकैः ।
प्राणापानसमायोगः प्राणायामः प्रकीर्तितः ॥

* * *

पूरयेत् षोडशैर्मात्रैरापादतलमस्तकम् ।
मात्रैः द्वात्रिंशकैः पश्चाद्रेचयेत् सुसमाहितः ॥
संपूर्णकुम्भवद्वायोर्निश्चलं मूर्ध्निदेशतः ।
कुम्भकं धारणं गार्गि चतुःषष्ट्या तु मात्रया ॥
ऋषयस्तु वदन्त्यन्ये प्राणायामपरायणाः ।
पवित्रीभूताः पूतात्माः प्रभञ्जनजये रताः ॥
तत्रादौ कुम्भकं कृत्वा चतुःषष्ट्या तु मात्रया ।
रेचयेत् षोडशैर्मात्रैर्नासिनैकेन सुन्दरि ॥
ततश्च पूरयेद्वायुं शनैः षोडशमात्रया ।
प्राणायामैर्दहेद्दोषान् धारणाभिश्च किल्बिषान् ।
प्रत्याहाराच्च संसर्गान् ध्यानेनानीश्वरान् गुणान् ॥

"விதிகளுக்கிணங்க ஆசனங்களைப் பயின்ற பின்பு ஓ கார்க்கியே, ஆசனங்களிலே சித்தியடைந்த மனிதன் பிராணுயாமத்தைப் பயில வேண்டும்.

"குசைப் புல்லின்மீது விரிக்கப்பட்ட மான்தோலிலே அல்லது புலித்தோலிலே இலகுவாக உட்கார்ந்து, கணபதியைப் பழம் பலகாரம் முதலியவற்ருல் வழிபட்டு, வல உள்ளங்கையை இட உள்ளங்கையின்மேல் வைத்து, கழுத்தையும் தலையையும் நேராகப் பிடித்து, உதடுகளை இறுக்கி மூடி, கிழக்கு முகமாகவோ

வடக்கு முகமாகவோ இருந்து, கண்களை மூக்கின் நுனியினில் நிறுத்தி, அதிக உணவு உட்கொள்ளாமல், பட்டினியாகவுமிராமல், நாடிகளைத் தூய்மைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யா விடின், பயிற்சி பயன் தரமாட்டாது. வல நாசியும் இட நாசியு மாகிய பிங்கலை இடை என்னுமிவற்றின் சந்திப்பிலே 'ஹூம்' என்னும் பீஜாக்ஷரத்தை நினைத்துப் பன்னிரண்டு மாத்திரை நேரத்திற்கு வெளியேயுள்ள காற்றை இடையினுல் இழுக்க வேண்டும். அதன் பின்பு குறித்த இடத்திலேயே 'ரங்' என்னும் மந்திரத்தோடு யோகி நெருப்பினைப் பாவனை செய்து தியானிக்க வேண்டும். அங்ஙனம் தியானிக்கும் பொழுது (பிங்கலை—வல நாசி) வழியாகக் காற்றினை மெல்ல வெளிவிடுதல் வேண்டும். பின்பு பிங்கலை வழியாக நிரப்பி முன்பு சொன்னபடியே இடை வழியாக மெல்லென வெளிவிடுதல் வேண்டும். இது குருவி னுடைய கட்டளைப்படி ஓர் அறையிலே தனித்திருந்து, இரகசிய மாகக் காலையிலும் நண்பகலிலும் மாலையிலும் நள்ளிரவிலும் நரம்புகள் தூய்மையடையும் வரையும், மூன்று நான்கு ஆண்டு களோ, மூன்று நான்கு மாதங்களோ பயில வேண்டும். உடல் இலகுவாதல், மேனி நிறம் தெளிவாதல், தீவிரமான பசி, நாத வொலி கேட்டல் என்னுமிவை நரம்புகள் தூய்மைப்பட்டதற்கு அடையாளங்களாகும். அதன் பின்னர், ரேசகம் (உள்ளிழுத்தல்), கும்பகம் (நிறுத்துதல்), பூரகம் (வெளியே செலுத்துதல்) என்னும் இவற்ருலான பிராணுயாமத்தைப் பயில வேண்டும்.

"பதினுறு மாத்திரை எல்லையிலே உச்சி முதல் உள்ளங்கால் வரையும் பிராணனை நிரப்பி, முப்பத்திரண்டு மாத்திரை வரையும் பிராணனை வெளியே செலுத்தி, அறுபத்து நான்கு மாத்திரை வரையும் கும்பகம் செய்ய வேண்டும்.

"முதலிலே அறுபத்து நான்கு மாத்திரை கும்பகம் செய்து, பின்பு பதினுறு மாத்திரை பிராணனை வெளியே தள்ளி, அதன் பின் பதினுறு மாத்திரை உடலை நிரப்புகின்ற மற்ருெரு வகைக் கும்பகம் உண்டு.

"பிராணுயாமத்தினுலே உடலிலுள்ள அழுக்குகள் அகற்றப் படுகின்றன; தாரணையினுலே மனத்திலுள்ள அழுக்குகள் நீங்குகின்றன; பிரத்தியாகாரத்தினுலே பற்றினுலேற்படுகின்ற அழுக்குகள் நீங்குகின்றன. சமாதியினுலே ஆன்மாவினது ஈசத்துவத்தை மறைக்கின்ற அனைத்தும் அகன்று போகின்றன."

## 3. சாங்கியம்

### மூன்றும் புத்தகம்

भावनोपचयात् शुद्धस्य सर्वं प्रकृतिवत् ॥ २९ ॥

29. தியான நிறைவினாலே பிரகிருதியின் வலிமை அனைத்தும் தூயவனுக்கு உரிமையாகின்றன.

रागोपहतिर्ध्यानम् ॥ ३० ॥

30. விழைவு நீக்கம் தியானமெனப்படும்.

वृत्तिनिरोधात्तत्सिद्धिः ॥ ३१ ॥

31. உள்ளத்து உழல்வுகளை ஒடுக்குதலினாலே அது சித்திக்கிறது.

धारणासनस्वकर्मणा तत्सिद्धिः ॥ ३२ ॥

32. தாரணையினாலும், ஆசனத்தினாலும், தனக்கு விதித்த கருமங்களைச் செய்தலினாலும் அது சித்திக்கிறது.

निरोधश्छर्दिविधारणाभ्याम् ॥ ३३ ॥

33. வெளிச் செலுத்துவதனாலும் உண்ணிறுத்துவதனாலும் பிராணனை ஒடுக்குதல் கூடும்.

स्थिरसुखमासनम् ॥ ३४ ॥

34. உறுதியாகவும் இன்பத்தைத் தருவதாகவும் அமைந்த இருக்கை ஆசனமாகும்.

वैराग्यादभ्यासाच्च ॥ ३६ ॥

36. பற்றின்மையினாலும் பழக்கத்தினாலும் தியானம் பூரணமாகிறது.

तत्त्वाभ्यासान्नेति नेतीति त्यागाद्विवेकसिद्धिः ॥ ७४ ॥

74. இயற்கையின் தத்துவங்களிலே பழகி "இதுவன்று", "இதுவன்று" எனத் துறந்து நிற்றலினாலே விவேகம் சித்திக்கிறது.

आवृत्तिरसकृदुपदेशात् ॥ ३ ॥

3. ஆசானுரைத்த உறுதி மொழியை அடிக்கடி இடைவிடாது போற்றுதல் வேண்டும்.

श्येनवत् सुखदुःखी त्यागवियोगाभ्याम् ॥ ५ ॥

5. பருந்தானது உண்கின்ற உணவினைத் தானே விட்டொழியுமாயின், இன்பத்தையும், பிறரால் அவ்வுணவு வலிதின் நீக்கப்படுமாயின், துன்பத்தையும் அடையும். அது போல, அனைத்தினையும் தானே விடுபவன் இன்பத்தை அடைகின்றான்.

अहिनिर्ल्वयनीवत् ॥ ६ ॥

6. பாம்பு தனது பழைய தோலை விட்டொழிவதனால் இன்பத்தை அடைகிறது.

असाधनानुचिन्तनं बन्धाय भरतवत् ॥ ८ ॥

8. வீடு பேற்றுக்குக் கருவி அல்லாததனை நினைத்தல் கூடாது. பரதனுக்கு நேர்ந்தது போல அத்தகைய நினைவு பந்தத்திற்கு ஏதுவாகின்றது.

बहुभिर्योगे विरोधो रागादिभिः कुमारीशङ्खवत् ॥ ९ ॥

9. விழைவு, வெறுப்பு முதலியவற்றோடு கூடிய பல பொருள்களின் சேர்க்கை தியானத்துக்கு இடையூறுதல் கூடும்; கன்னியினது சங்கு வளையல் போல.

द्वाभ्यामपि तथैव ॥ १० ॥

10. இரு வேறு பொருளாயினும் அப்படியே.

निराशः सुखी पिङ्गलावत् ॥ ११ ॥

11. ஆசையை அறுத்தோர் இன்பத்தை எய்துவர்; பிங்கலை என்னும் சிறுமியைப் போல.

बहुशास्त्रगुरूपासनेऽपि सारादानाम् षट्पदवत् ॥ १३ ॥

13. பல சாத்திரங்களையும் ஆசாரியர்களையும் கைக்கொண்டொழுகினும், சாரத்தை மாத்திரம் கிரகித்துக்கொள்ள வேண்டும்; தேனீயைப் போல.

इषुकारवन्नैकचित्तस्य समाधिहानिः ॥ १४ ॥

14. அம்பினைச் செய்பவனுடைய சித்தத்தினைப் போல, ஒரு வழிப்பட்டு நின்ற சித்தத்தை உடையவனுக்குச் சமாதி அழிந்து போவதில்லை.

कृतनियमलङ्घनादानर्थक्यं लोकवत् ॥ १५ ॥

15. விதிக்கப்பட்ட நியமங்களிலிருந்து விலகுவதனாலே கருதிய நோக்கம் கைகூடாது போகின்றது; ஏனைய உலகப் பொருள்களைப் போல.

प्रणतिब्रह्मचर्योपसर्पणानि कृत्वा सिद्धिर्बहुकालात्तद्वत् ॥ १९ ॥

19. வழிபாடு, பிரமசரியம், குரு சேவை என்னுமிவற்றினாலே நீண்ட காலத்துக்குப் பின் அனுகூலம் எய்துகின்றது (இந்திரனைப் போல).

न कालनियमो वामदेववत् ॥ २० ॥

20. காலத்தைப் பற்றிய நியமமில்லை; வாமதேவனைப்போல.

लब्धातिशययोगाद्वा ॥ २४ ॥

24. அல்லது பூரணத்துவத்தை அடைந்தவனைச் சேர்ந்திருப்பதனாலே.

न भोगात् रागशान्तिर्मुनिवत् ॥ २७ ॥

27. போகானுபவத்தினாலே விருப்பங்கள் (நீண்ட காலம் யோகத்தைப் பயின்ற) முனிவர்களுக்கும் தணிவதில்லை.

ஐந்தாம் புத்தகம்

योगसिद्धयोऽप्यौषधादिसिद्धिवन्नापलपनीयाः ॥ १२८ ॥

128. மருந்து முதலியவற்ருல் நோய் தீருவது போல, யோகத்தினுலே சித்திகள் அடையப்படுகின்றன. இதனை மறுத்தலியலாது.

ஆறும் புத்தகம்

स्थिरसुखमासनमिति न नियमः ॥ २४ ॥

24. உறுதியும் இன்பமுமுள்ள இருக்கை ஆசனமெனப் படும். வேறு நியமமில்லை.

## 4. வியாச சூத்திரம்

நாலாம் அதிகாரம் முதலாம் பிரிவு

आसीनः संभवात् ॥ ७ ॥

7. இருக்கை நிலையிலே வழிபடுதல் கூடும்.

ध्यानाच्च ॥ ८ ॥

8. தியானத்திலுலே.

अचलत्वञ्चापेक्ष्य ॥ ९ ॥

9. தியானிக்கின்றவன் அசைவற்ற பூமிக்கு ஒப்பாகின்ருன்.

स्मरन्ति च ॥ १० ॥

10. ஸ்மிருதிகளும் அப்படிச் சொல்லுகின்றன.

यत्रैकाग्रता तत्राविशेषात् ॥ ११ ॥

11. எங்கு மனம் ஒருவழிப்படுகிறதோ, அங்கு வழிபாடு இயற்ற வேண்டும்; இடத்தைப்பற்றிய விதியில்லை.

ஏனைய இந்திய தத்துவ சாத்திரங்கள் யோகத்தைப்பற்றிக் கூறுகின்ற கொள்கை, இந்த மேற்கோள்களால் ஒருவாறு அறியப் படுவது.

# சமயமும் சமய குரவர்களும்

(இரண்டாம் பகுதி)

சுவாமி விவேகானந்தர்

# சமயம் என்பது யாது?

ஒரு மாபெரும்புகைவண்டி தண்டவாளத்தின்மீது மிக விரைவாய் ஓடிக்கொண்டிருக்கும் பொழுது, அத்தண்டவாளத்தில் ஊர்ந்து மெல்ல நகர்ந்துபோகிற ஒரு புழு, புகைவண்டி வருகிற வழியை விட்டு அகன்று தன் உயிரைக் காப்பாற்றிக்கொண்டது. ஒரு கணத்தில் நசுங்கிப் போகும் மிகச் சிறிய இந்தப் புழுவோ, உயிருள்ளது. மிகப் பெரியதாயுள்ள புகை வண்டியோ, வெற்று இயந்திரம். புழுவுக்கு உயிர் இருக்கிறது. புகை வண்டி உயிரற்ற ஜடப்பொருளே தவிர, வேறன்று. அதன் ஆற்றல்—வலிவு, விரைவு—யாவும் உயிரற்ற இயந்திரத்தைச் சார்ந்தவைகளே. இவை ஓர் இயந்திர அமைப்பையே சுட்டும். புகைவண்டி படுவதற்கு முன்பே நசுங்கி மாண்டுபோகும் இந்த அற்பப் புழுவும்—தண்டவாளத்தின் மீது மெல்ல ஊர்ந்து செல்லும் இந்த அற்பப் புழுவும்—மிகப் பெரியதாயுள்ள புகை வண்டியோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது எவ்வளவு உயர்ந்ததாய்—கம்பீரமாய்க் காட்சி அளிக்கின்றது! இது அகண்டத்தின் ஒரு சிறிய அமிசமாயிருப்பதால், ஆற்றல் படைத்த புகைவண்டியைக்காட்டிலும் சிறப்புற்றதாயிருக்கிறது. அவ்வாறு இருப்பானேன்? ஒன்று உயிருள்ளதென்றும் உயிரற்றதென்றும் நாம் எப்படி அறிந்துகொள்ளுகிறோம்? இந்த இயந்திரத்தைப் படைத்தவன் இது எப்படி இயங்க வேண்டுமென்று அமைத்தானோ அப்படியே இது இயங்குகின்றது. இதன் அசைவுகள் உயிருள்ளதன் சலனங்களல்ல. உயிருள்ளது, உயிரற்றது—இவற்றின் வேறுபாட்டைக் கண்டுபிடிப்பது எப்படி? உயிருள்ளதில் சுதந்தரம் திகழ்கின்றது; அறிவு மிளிர்கின்றது. உயிரற்றதில் எல்லாம் தளையுண்டு கிடக்கின்றன; அங்கே அறிவுக்கு இடமில்லை. வெற்று இயந்திரங்களிலிருந்து நம்மை வேறாகப் பிரிப்பது சுதந்தரமே. இச்சுதந்தரத்தை அடைவதற்கு நாம் அனைவரும் முயல்கின்றோம். மேன்மேலும் சுதந்தரத்தை அடைவதுதான் முயற்சிகளின் மௌலியாகும். ஏனெனில், முழுச் சுதந்தரத்திலேதான் பூரணத் தன்மை அமைந்திருக்கிறது. அறிந்தோ, அறியாமலோ, சுதந்தரத்தை அடைவதற்குச் செய்யும் முயற்சிதான் எல்லாவித இறை வழிபாடுகளுக்கும் அடிப்படையாயிருக்கிறது.

இவ்வையகத்திலுள்ள வெவ்வேறு வகையான கடவுள் வழிபாடுகளை உற்று நோக்கினுல், பேய்கள், முன்னேர்களின் ஆவிகள்—இவற்றைத் தாழ்ந்த பண்படாத முரட்டு மக்கள் தொழுது வந்தார்கள் என்பது புலனுகும். பாம்பை வழிபடுதல், இனத் தெய்வங்களை வழிபடுதல், மாண்டு மறைந்தவர்களை வழிபடுதல்—இவற்றையும் அவர்களிடையே நாம் காணலாம். இவ்வனைத்தையும் அவர்கள் ஏன் புரியவேண்டும்? அவர்கள், இவை தம்மைக் காட்டிலும் சிறப்புற்றவைகளென்றும், ஆற்றல் படைத்தவைகளென்றும், தங்கள் சுதந்தரத்திற்கு வரம்பு எழுப்பிவிடக் கூடியவைகளென்றும் ஏதோ புலனுகாத முறையில் உணர்கின்ருர்கள்; அக்காரணம் பற்றியே, இவை தங்களை நலியா வண்ணம், இவற்றின் தயவை நாட முயல்கின்ருர்கள்; வேறு முறையாகக் கூறுமிடத்து, மிகுதியான சுதந்தரத்தைப் பெற முயற்சி செய்கின்ருர்கள் என்னலாம். தங்கள் சொந்த முயற்சியாலேயே எய்தக் கூடியவற்றைத் தங்களைவிட மேலான இவை வாயிலாகப் பெறும் பொருட்டு இவற்றைத் திருத்தி செய்கின்ருர்கள்.

ஓர் அற்புதத்தை உலகம் எதிர்பார்க்கின்றது என்பது பொதுவாக இதனுல் சுட்டப்படுகின்றது. நாம் என்ன முயன்ருலும், இப்படி எதிர்பார்க்கும் அவா நம்மை விட்டு அகலுவதில்லை. அற்புதமானவற்றையே—அசாதாரணமானவற்றையே—நாம் எல்லோரும் நாடிக்கொண்டே இருக்கிரேம். மனமென்பது வாழ்வின் பொருளையும் ஓய்வின்றி ஆராய்வதே. கல்வியற்ற மக்களும் அற்புதங்களை விரும்புகின்ருர்கள் என்றே நாம் நவிலலாம். ஆனுல், ஏன் அப்படி விரும்ப வேண்டும் என்ற வினு, பதிலற்று வாளாகிடக்கின்றது. யூதர்கள் ஓர் அற்புதத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பல்லாயிரம் ஆண்டுகளாக இவ்வையகம் அற்புதத்தை எதிர்பார்த்துக்கொண்டேதானிருக்கிறது. இந்தப் பிரபஞ்சம் முழுதும் அதிருப்திதான் குடி கொண்டிருக்கிறது. நாம் ஓர் இலட்சியத்தை வகுத்துக்கொள்கிரேம்; ஆனுல், அதன் அரை எல்லையைக் கடப்பதற்கு முன்பே அதை விட்டு, வேருென்றைப் பற்றுகின்ரேம்; ஏதோ ஒரு குறிக்கோளை எய்துவதற்கு அரும்பாடு படுகின்ரேம்; பிறகு அது நமக்குத் தேவை இல்லையென்பதை உணர்கின்ரேம். அடிக்கடி இந்த அதிருப்தி ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. இந்த அதிருப்தியே நிலைபெறுமானுல், மனத்தில் வேறென்ன இருக்கக் கூடும்? எங்கும் உலாவுகின்ற இந்த அதிருப்தியின் பொருள் யாது? விடுதலை காண்பதே எப்பொழுதும் மனிதனின் குறிக்கோளாதலால், அவன் அதிருப்

தியே அடைகின்ருன். அதை அவன் நாடிக்கொண்டேயிருக்
கிருன். அதை அடைவதே அவன் வாழ்க்கைப் போராட்டமாகும்.
குழந்தை பிறந்ததும், அது இயற்கையின் நியதியை எதிர்க்
கின்றது. தனக்குத் தளை ஏற்பட்டதே என்று அது எதிர்க்கும்
குரல்தான் முதன் முதலாகக் கேட்கின்றது.

இந்தச் சுதந்தர அவாதான் முழுச் சுதந்தரராயிருக்கும் பரம்
பொருளைப் பற்றிய எண்ணம் நமக்கு உதிக்கும்படி செய்கின்றது.
கடவுள் என்ற கருத்து மனித அமைப்பிலேயே அடிப்படையா
யுள்ளது. சச்சிதானந்த வடிவாய்—உண்மை, அறிவு, இன்பம்
இவற்றின் வடிவாய்—கடவுள் இருக்கிருர் என்ற மிக வுயர்ந்த
கருத்து வேதாந்தத்தில் கோயில் கொண்டிருக்கிறது. இந்த
அளவுக்குத்தான் மனம் செல்லக்கூடிய இயல்புடையதாயிருக்
கிறது. அறிவின் சாரமாயும் ஆனந்த வடிவமாயும் அவர் இருக்
கிருர். நாம் உலக நியதியைப் பின்பற்றி, மனித இயல்பை
அடக்கும் முயற்சியில் நீண்ட காலமாய் உள்ளே ஒலிக்கும் குரலைக்
கிளர்ந்தெழாதபடி செய்துவிடுகின்ருேம். ஆனுல், இயற்கையின்
நியதிகளை எதிர்த்து நிற்பதுதான் மனிதனுக்கு இயல்பான
உணர்ச்சியாயிருக்கிறது. இதன் உட்பொருளை நாம் அறியாம
லிருக்கலாம். மனிதத் தன்மைக்கும் ஆன்மிக உணர்ச்சிக்கும்
உள்ள போரும், இழிவான மனத்திற்கும் உயர்ந்த மனத்திற்கும்
உள்ள போராட்டம் நமக்குப் புலனுகாமலே நடக்கின்றன. இத்
தகைய போராட்டம் மனிதனது தனித்தன்மையைச் சிதைவுருது
காப்பாற்ற முயல்கின்றது. நாம் பிறவியிலேயே அடங்காதவர்கள்
என்ற இந்த அற்புத உண்மையை நிரயங்களும் நமக்கு நன்கு
அறிவுறுத்துகின்றன. நாம் பிறந்ததுமே பெருகி விரைந்து
வருகின்ற வாழ்வின் ஓட்டத்தை எதிர்த்து, “எங்களுக்கு ஒரு
நியதியும் வேண்டா,” என்று கூச்சலிடுகின்ருேம். இந்த நியதி
களின் ஆணைக்குக் கீழ்ப்பட்டு ஒழுகுகின்ற வரையில் நாம் இயந்
திரங்கள் போன்றவர்களே. பிரபஞ்சம் நடந்துகொண்டேதா
னிருக்கிறது; அதை நாம் தடுக்க இயலாது. இந்த நியதிகள்
மனித இயல்பாய்விடுகின்றன. மேல் நிலையில் இருக்கும் உயிர்
இயற்கையின் தளையைத் தகர்த்து விடுதலை பெறுவதற்காக
நம்முன் நடக்கும் போரின் சின்னம் தெரிய வருகின்றது.
‘விடுதலை, விடுதலை, விடுதலை,’ என்பதுதான் ஆன்மகீதமாகும்.
ஆனுல், அந்தோ! இயற்கையில் கட்டுண்டு கிடப்பதுதான்
அதன் தலைவிதி போலும்!

பேய் பூதங்கள், பாம்புகள் இவற்றை வழிபடுவது எதற்காக?

ஏதோ அற்புதங்கள் நிகழவேண்டுமென்பதற்காகவா இத்தனை வகையான கொள்கைகளும் உருவங்களும்? 'இதில் உயிர் இருக்கிறது; ஆன்மா இருக்கிறது,' என்று இயம்புகின்றோமே ஏன்? இந்த உயிர்—இந்த ஆன்மா—இவற்றைத் தேடி அறிந்துகொள்ள வேண்டும் என்ற முயற்சியில் ஏதேனும் பொருள் இருக்கவேண்டுமன்றோ? இது பொருளற்ற வீணான முயற்சியன்று. இது விடுதலைக்காக மனிதன் புரிகிற இடையறாத முயற்சியேயாகும். இப்பொழுது நாம் பெற்றிருக்கும் பௌதிக விஞ்ஞானமானது, ஆயிரக் கணக்கான ஆண்டுகளாய் இந்தச் சுதந்தரத்தை எய்துகின்ற முயற்சியிலேதான் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. மக்கள் சுதந்தரத்தைத்தான் விரும்பிக் கேட்கின்றார்கள். ஆயினும், இயற்கையில் சுதந்தரம் என்பது இல்லை; எல்லாம் நியதியே. எனினும், போராட்டம் நடந்துகொண்டேதானிருக்கிறது. ஞாயிற்றிலிருந்து சிறிய அணுக்கள் வரையில் இயற்கை முழுதும் நியதிக்குட்பட்டிருக்கின்றது. மனிதனுக்கும் சுதந்தரமில்லை. ஆனால், அப்படி எண்ணுவதற்கியலாது. தொடக்கத்திலிருந்தே நாம் இந்த நியதிகளைப் பற்றித் தெரிந்துகொண்டிருக்கிறோம். ஆனால், மனிதன் நியதியின் ஆணைக்குக் கீழ்ப்பட்டவன் என்று நம்புவதற்கில்லை; நம்பவும் மாட்டோம். ஆன்மா, 'விடுதலை, விடுதலை' என்று இடையறாது ஓலமிடுகின்றது. கடவுள் முற்றிலும் தளையற்றவர் என்று கருதுகின்ற மனிதன், விலங்கில் எப்பொழுதுமே கட்டுண்டு கிடப்பானோ? அவன் மேற்கதி செல்ல வேண்டுபவனாயிற்றே! இந்தப் போராட்டம் தன் பொருட்டு இல்லையென்றால், அவன் அதைப் பெரிதும் இன்னல் தருவதாகக் கருதுவான். "பிறப்பிலேயே நான் ஓர் அடிமை; நான் தளையில் சிக்கிக்கொண்டிருக்கிறேன். ஆனால், இயற்கையால் தளையுறாத பரமான்மா ஒருவர் இருக்கிறார்; அவர் சுதந்தரமுள்ளவர்; அவர் இயற்கை மீது ஆணை செலுத்துகிறார்," என்று மனிதன் தனக்குள் தானே கூறிக்கொள்ளுகிறான். கடவுளைப் பற்றிய கருத்தும், தளையைப் பற்றிய கருத்தைப் போலவே மனத்தின் முக்கியமான—அடிப்படையான—அமிசமாயிருக்கிறது. இவ்விரண்டும் விடுதலை என்ற எண்ணத்தின் விளைவுகளே. விடுதலை என்ற எண்ணமில்லாமல் செடிக்குக்கூட உயிர் இருக்க முடியாது. செடியும் புழுவும் தனித் தன்மையை அடையக் கிளர்ந்தெழவேண்டி யிருக்கின்றது. அவை தம்மையறியாமலே தொழில் புரிகின்றன. தனக்குரிய வேறான இனம், தன் தத்துவம், தன்னுடைய வடிவம் ஆகிய இவை மாயாம

லிருக்கும்பொருட்டு, செடி செடியாகவே வளர்கின்றது. ஒவ்வொரு படியும் இயற்கையின் ஆணைக்கீழ் அடங்கியிருக்கிறது என்ற கருத்து, சுதந்தரம் என்னும் எண்ணத்தின் மீது அரசு செலுத்துகின்றது; உலகாயதக் கருத்து ஓங்கி வளர்கின்றது; விடுதலை என்னும் எண்ணமும் மேலோங்குகின்றது. இவற்றின் இடையே போராட்டமும் நடந்துகொண்டேயிருக்கிறது. கொள்கைப் பூசல்களைப் பற்றியும் இனச் சழக்குகளைப் பற்றியும் நாம் கேள்விப்படுகிறோமல்லவா? இவை நியாயமாயிருக்க வேண்டுவனவே. இத்தகைய சங்கிலி நீண்டுகொண்டே போகின்றது; போராட்டமும் வளர்ந்துகொண்டே போகின்றது. ஒரே குறிக்கோளை நண்ணுதற்பொருட்டே, எல்லோரும் முயன்று கொண்டிருக்கிறோம் என்பது தேர்ந்துவிட்டால், சழக்குகளுக்கு இடமே இராது. சுதந்தரமே வடிவாயிருப்பவரும், இயற்கைக்குத் தலைவராயிருப்பவருமே கடவுளாவார் என்று நாம் உரைக்கின்றோம். அவரை நாம் மறுக்க முடியாது. ஏனெனில், சுதந்தரம் என்ற எண்ணம் இல்லாமல் சலிப்பதோ, உயிர் வாழ்வதோ முடியாது. சுதந்தர முள்ளவர் என்னும் நம்பிக்கை உங்களிடையே நிகழாவிட்டால் நீங்கள் இங்கே வந்திருக்க இயலுமோ? தளைகளிலிருந்து விடுபடுவதற்காக இடையறாது ஏன் இப்படிப் பாடுபடவேண்டும்?' இதற்குக் காரணம் உயிர் நூலோர்களை வினவினால், அவர்கள் ஒருவேளை பதில் கூறக்கூடும். எல்லாம் தக்கனவே என்று நாம் ஏற்றுக்கொண்டாலும், சுதந்தரம் என்னும் எண்ணம் இருந்துகொண்டேதானிருக்கிறது. இயற்கைக்குட்பட்டிருப்பது எப்படி உண்மையோ, அப்படியே அதினின்றும் சுதந்தரம் பெற வேண்டும் என்பதும் உண்மையாயிருக்கிறது.

தளை விடுதலை, வெளிச்சம் நிழல், நன்மை தீமை—இவை இருந்தே ஆகவேண்டும். ஆனால், தளை என்பது இருந்தால் விடுதலை என்பதும் அதற்குள் கரந்துதானே நிற்கும்? ஒன்று உண்மையாயின், மற்றொன்றும் உண்மையே. இத்தகைய சுதந்தரக் கருத்து மிளிரத்தான் மிளிரும். தளை என்னும் எண்ணத்திலே சுதந்தரம் என்னும் போராட்டம் கரந்து நிற்கின்றது என்பதை நாம் பண்படாத மக்களிடையே காண இயலாதுபோயினும், விடுதலை என்னும் எண்ணம் திகழ்த்தான் திகழ்கின்றது. பாவம், மாசு இவற்றின் தளையோ, பண்படாத காட்டாளின் அறிவிற்கு மிகச் சிறிய பொருளாகத் தோன்றும். ஏனெனில், அவன் இயல்பு விலங்கின் இயல்பினும் மேம்பட்ட

தன்று. அவன் எதிர்த்துப் போராடுவது உடலின் தேவைகளுக்கு அடிமையாக இருப்பதையே; உடலின் விருப்பத்திற்குக் குறைவு ஏற்படக் கூடாதன்றோ? இந்தத் தாழ்ந்த உணர்விலிருந்து மனம், ஒழுக்கம் இவற்றின் உயர்ந்த கருத்திற்கு அவன் உள்ளம் விரிவடைகின்றது. இவைகளும் தளைகளே; ஆன்மிக விடுதலை அடைய உள்ளம் பெரிதும் விழைகின்றது. இங்கே அஞ்ஞானத் திரைவழியே தெய்வ ஒளி மெல்ல ஒளிவிடக் காண்கிறோம். அஞ்ஞான மூட்டம் முதலில் மிகக் கனமான மூட்டமேயாகும்; ஒளி பெரும்பாலும் மறைந்துவிடக்கூடும். எனினும், விடுதலை, பூரணம் ஆகிய இவற்றின் பெருஞ்சுடர் மங்காமலே மிக்க தூய்மையுடன் திகழ்ந்துகொண்டுதானிருக்கிறது. இதற்குத் தான் பிரபஞ்சத்தை ஆள்பவன் என்றும் சுதந்தரமுடைய ஒருவனே என்றும் மனிதன் உருக்கொடுக்கின்றான். பிரபஞ்ச முழுதும் ஒன்று என்பதும், கருத்திற்கேற்ற அளவிலே வேறுபாடே தவிர, பிறிதில்லை என்பதும் அவன் இன்னும் உணர்ந்தானில்லை.

இயற்கை முழுதுமே கடவுளின் வழிபாடுதான். உயிர் இருக்கிற இடமெல்லாம் இந்த ஆன்ம விடுதலையை நாடும் முயற்சியும் காணப்படுகின்றது. இந்தச் சுதந்தரம் கடவுளைத் தவிர வேறில்லை. அனைத்து இயற்கை மீதும் ஆணை செலுத்தும் ஆற்றலை இது அளிக்கின்றது. இது அறிவாலேதான் இயலும். அறிவு முதிர முதிர, நாம் இயற்கையை ஆள்கின்றவர்களாய்த் திகழ்கின்றோம். இந்த வெற்றியே நம்மை வலிவுள்ளவர்களாக்கு கிறது. முழுச் சுதந்தரனும், இயற்கையை வென்றவனும் ஒருவன் இருப்பானேயாகில், அவன் இயற்கையைப் பற்றிய ஞானமனைத்தையும் பெற்றிருக்க வேண்டும். அவன் எங்கும் நிறைந்தவனும், எல்லா அறிவுள்ளவனும் இருக்கவேண்டும். இவற்றோடு சுதந்தரமும் கைகோத்துச் செல்லவேண்டும். இவற்றைப் பெற்ற ஒருவனே இயற்கைக்கு அப்பாற்பட்டவனாய்த் திகழ்கின்றான்.

அருட்செல்வம், முழுச் சுதந்தரத்தினின்று பிறக்கின்ற என்றும் அழியாத பேரமைதி ஆகிய இவைகளே மதத்தைப் பற்றிய மிகச் சிறந்த கருத்தாகும். இக்கருத்து வேதாந்தத்தில் கூறப் பட்ட கடவுளைப்பற்றிய கருத்துகளனைத்திற்கும் அடிப்படையா யிருக்கிறது. அவர் முற்றிலும் சுதந்தரமுள்ளவராயிருக்கிறார்; எவற்றாலும் தளையுறமாட்டார். அவரிடத்தில் யாதொரு மாறுதலு மில்லை. அவரிடத்தில் பிரகிருதி சம்பந்தம் ஒன்றுமில்லை. மாறு

தலைப் பிறப்பிக்கக் கூடியதொன்றும் காண முடியாது. இத்தகைய சுதந்தரந்தான் உங்களிடத்திலும் என்னிடத்திலும் இருக்கிறது. இதுவே உண்மையான சுதந்தரமாகும்.

தம்முடைய என்றும் மாருத - சிறப்புற்றோங்கிய - உண்மையான இயல்பிலேதான் கடவுள் எப்பொழுதும் நிலைப்பெற்றிருக்கிறார். நீங்களும் நானும் அவரோடு ஒன்றாகக் கலக்க முயல்கின்றோம்; ஆனால், இயற்கைமீதுதான் நம் பாதங்கள் ஊன்றி நிற்கின்றன. தினசரி வாழ்க்கைக்கு வேண்டுவனவாகிய அற்பப் பொருள்களுக்கும், பொன்னிற்கும், புகழுக்கும், காமத்திற்கும், தளையை உண்டாக்கும் இயற்கையின் இத்தகைய மாறுதல்களுக்கும் நாம் அடிமையாகின்றோம். இயற்கை ஒளி விடுகின்றது. அதன் ஒளி எதைச் சார்ந்து நிற்கின்றது? ஞாயிற்றிலா, மதியிலா, அல்லது விண்மீன்களிலா? அது சுடர் விடுகின்றதும் இல்லை. கடவுளல்லவா அதற்கு ஒளியை அளித்திருக்கிறார்? எங்கெங்கு ஒளி இருக்கிறதோ - அது கதிரவன் ஒளியோ, அல்லது உணர்வின் ஒளியோ, எதுவாயினும் ஆகுக - அது கடவுளேயாகும். அவர் ஒளிரும்பொழுது, எல்லாம் அவரைப் பின்பற்றி ஒளி விடுகின்றன.

இந்தக் கடவுள் தாமே விளங்கும் பொருளாவார்; உருவமற்றவர்; எல்லாம் அறிந்தவர்; இயற்கையை உணர்ந்தவர்; அதற்குத் தலைவர். எல்லா வழிபாடுகளுக்கும் பின்னணியில் ஓர் இலக்காய் நிற்பவர் அவரே. அறிந்தோ, அறியாமலோ, அவருடைய சங்கற்பத்திற்கேற்றவாறு அவ்வழிபாடுகள் நடக்கின்றன. நான் இன்னும் ஒரு படி மேற்செல்ல விரும்புகின்றேன். நாம் எவற்றைக் கண்டு வியப்புறுகின்றோமோ, எவற்றைத் தீமை என்று கருதுகிறோமோ, அவைகளும் அவரை வழிபடுவனவேயாகும். இதுவும் சுதந்தரத்தின் பகுதியாகும். நான் இன்னும் அச்சுறுத்தும் முறையில் கூறுவேன். நாம் ஒரு தீச்செயலைப் புரியும்பொழுது அதன் தூண்டுதலும் சுதந்தர உணர்ச்சியிலிருந்து பிறந்தது தான் என்று மொழிவேன். அந்த உணர்ச்சி தவறான பாதையில் செலுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் அதை இயங்கச் செய்யும் சுதந்தரம் அங்கே திகழத்தான் செய்தது. இந்தச் சுதந்தரம் பின்னணியில் இல்லாமற் போகுமாயின், உயிர்ச் சத்தியோ, தூண்டுதலோ ஒன்றும் இருத்தல் இயலாது. பிரபஞ்சத்தின் உயிர்த்துடிப்பில் சுதந்திரத்தின் மூச்சு இயங்குகிறது. பிரபஞ்சத்தின் இதயத்தில் ஒருமை என்பது இல்லாவிடில், பிரபஞ்சத்தில் காணப்படும் மாறுதல்களை நாம் அறிந்துகொள்ள இயலாது.

ஆண்டவரைப் பற்றிய இக்கருத்துத்தான் உபநிடதங்களில் கோயில் கொண்டிருக்கிறது. அவை இன்னும் ஒருபடி மேலே சென்று, நாமும் கடவுளும் ஒன்றே என்று உரைக்கின்றன. இக் கருத்து முதலில் நம்மைத் திடுக்கிடும்படி செய்கின்றது. பட்டுப் பூச்சியின் இறகிலுள்ள வண்ணமாகவும் ரோஜா முகையின் மலர்ச்சியாகவும் உள்ள கடவுளே, பட்டுப்பூச்சியிலும் ரோஜாச் செடியிலுமுள்ள சத்தியாய்க் காட்சி அளிக்கின்றார். நமக்குயிர் அளிப்பவரே நம்முள்ளிருக்கும் சத்தியாயும் விளங்குகிறார். அப் பேரொளியிலிருந்துதான் உயிர் உண்டாகிறது. நம்மை அச் சுறுத்தும் மரணமும் அவருடைய சத்தியே. அவருடைய நிழல் மரணமாகும்; அதுவே அமர நிலையாகவும் அமைகின்றது. கருத் துக் குன்றின்மீது இன்னும் சற்று மேலே செல்வோம். பயங்கர மானவற்றைக் கண்டு நடுங்கி நாம் எப்படி ஓட்டம் பிடிக்கின்றோம்! வேட்டைக்கு அஞ்சிப் பதுங்கும் முயல்கள் போல நாமும் ஓடி ஒளிகின்றோம். நமக்கு யாதோர் இன்னலும் இல்லை என்றும் நினைக்கின்றோம். அச்சத்தை விளைவிக்கும் ஒவ்வொன்றினின்றும் உலகம் முற்றும் ஓடுகிறதை உற்று நோக்குவீர்களாக.

ஒரு சமயம் நான் காசிக்குச் சென்றிருந்தேன். பெரிய குளம் ஒருபால், உயர்ந்த சுவர் ஒருபால்—இவற்றின் இடையே நான் போகவேண்டி யிருந்தது. அங்குத் தரையின் மீது பல குரங்குகள் இருந்தன. காசியிலுள்ள குரங்குகள் மிகவும் பெரி யவை; பெரிதும் பொல்லாதவை. என்னை எளிதிற் போகவிடக் கூடாது என்ற எண்ணம் அவற்றின் மனத்தில் முளைத்து விட்டது போலும்! பெரிதும் வலிந்து கூச்சலிட்டுக் கொண்டு அவை என் காலின்மீது பாய்ந்தன. அவை திரளாய் என்னை அணுகவே, நான் ஓடத் தொடங்கினேன். அவை என்னை விடா மல், விரைந்து பின்தொடர்ந்து கடிக்க ஆரம்பித்தன. அவற்றி னிடமிருந்து தப்பிச் செல்ல இயலாது என்பது தோன்றிற்று. அச்சமயம் அவ்வழிச் சென்ற ஒரு மனிதன் என்னைக் கூப்பிட்டு, "ஓடாதீர்கள்; எதிர்த்து நில்லுங்கள்!" என்று கூறினான். நான் திரும்பித் துணிவுடன் அவற்றை எதிர்த்து நின்றேன். அவை பின் தயங்கி ஒரு வழியாய் ஓடிப் போயின. அது நம் வாழ்வு முழுவதற்கும் ஒரு படிப்பினையாகும். நாம் அச்சம் தருபவற்றைக் கண்டு அஞ்சலாகாது. உள்ளம் தளராமல் அவற்றை எதிர்த்துப் போராட வேண்டும். அந்தக் குரங்குக் கூட்டம் போலவே இன்னல்களும், நாம் அஞ்சவில்லையென்றால் நம்மை விட்டு விலகிப் போம். நமக்குச் சுதந்தரம் வேண்டும் என்றால், நாம்

இயற்கையை வென்று அதைப் பெறவேண்டுமேயொழிய, அஞ்சி ஓடுவதனால் அதை எய்தல் இயலாது. அச்சம், இன்னல், அஞ்ஞானம் இவை அகலவேண்டுமானால், இவற்றின்மீது நாம் ஆணை செலுத்த வேண்டும். மரணம் என்பது யாது? எவை பயங்கரமானவை? அவற்றிலும் கடவுளின் வடிவத்தை நீங்கள் காணவில்லையா? நீங்கள் தீமையையும் பேரச்சத்தையும் இடும்பையையும் கண்டு ஓடி ஒளிந்தால், இவை உங்களைப் பின்தொடரும்; எதிர்த்துப் போராடுங்கள். இவை பறந்துபோம். வசதியையும் சுகத்தையும் இவ்வையகம் விரும்பி வழிபடுகின்றது. இடும்பையை ஒருவரும் வரவேற்கத் துணியார். இன்ப துன்பங்களைக் கடந்து செல்வதே சுதந்தரமாகும். ஒருவனால் இவ்வாயிலுக்கப்பாற்போக இயலாது போயின், அவன் சுதந்தரமுள்ளவனாகத் திகழான். நல்லது தீயது ஆகிய இவற்றை எல்லோரும் எதிர்த்தே தீரவேண்டும். கடவுளை நாம் வழிபட முயல்கின்றோம். ஆனால், உடல் இதற்குத் தடையாய் நிற்கின்றது; இயற்கையும், நமக்கும் கடவுளுக்கும் இடையே தோன்றி, நம்முடைய பார்வையை மறைத்துவிடுகின்றது. பேரிடியிலும், அவமானத்திலும் துயரிலும், பாவத்திலும் ஆண்டவரை உணர்ந்து அன்புடன் வழிபடக் கற்றுக்கொள்ள வேண்டும். அறமே வடிவாயுள்ள கடவுளைப் பற்றியே இப்பார் முழுதும் எஞ்ஞான்றும் இயம்புகின்றது. நானே அறமும் பாவமும் சேர்ந்து இயங்குகின்ற ஒன்றைப் பற்றி உலகத்திற்கு ஓதப் போகின்றேன். அவ்வண்ணம் போற்றத் துணிவதே முக்திக்கு வாயிலாகும். அப்பொழுதுதான் இறுதி உண்மை புலனாகும். எல்லாம் ஒன்றே என்ற தத்துவத்திலிருந்து இந்த உண்மை பிறக்கின்றது. ஒன்றைவிட மற்றொன்று உயர்வு என்ற எண்ணமும் மறைந்துவிடும். சுதந்தரத்தின் நியதியை நாம் நண்ண நண்ண, கடவுளையும் நாம் நண்ணுவோம்; அப்பொழுது நம் இன்னல்களும் தேய்ந்து அகன்றுவிடும். நாம் நரக வாயிலையும் சுவர்க்கத்தின் கபாடத்தையும் வேறுபடுத்திக் கூறோம். மாந்தர்களையும் பிரித்து, 'உலகில் யாவரிலும் நானே உயர்ந்தவன்,' என்று உரைக்கவும் மாட்டோம். இப்பிரபஞ்ச முழுவதும் பரமான்மாவின் வடிவமாகக் காணாத வரையில், இத்தகைய தீமைகள் நம்மைச் சூழ்ந்து வாட்டும் வேறுபாடுகளை நாம் வகுத்துக்கொண்டேதான் இருப்போம். ஆண்டவரிடத்திலும், ஆன்மாவிலுந்தான் நாம் ஒருமையைக் காண முடியும். எங்கேயும் கடவுளை உணராதவிடத்து ஒருமைத் தத்துவம் நம்முன் விரியாது.

வனப்பு வாய்ந்த இறகுகளையுடைய இரண்டு பறவைகள் ஒன்றையொன்று பிரியாதவை. ஒரே மரத்தில் ஒன்று மேற்கிளையிலும் மற்றொன்று கீழ்க்கிளையிலும் உட்கார்ந்துகொண்டிருக்கின்றன. கீழ்க்கிளையில் அமர்ந்திருக்கிற அழகிய பறவை, அம் மரத்தின் இனியதும் கசப்புள்ளதுமான கனிகளையும் அருந்திக் கொண்டிருக்கிறது. கசப்பான பழத்தைத் தின்னும் பொழுது அது மிகவும் வருந்துகிறது. சிறிது நேரம் கழித்து மற்றொரு பழத்தைத் தின்று பார்க்கும்போது அதுவும் கசப்பாயிருக்கவே, அது அண்ணாந்து மேலே நோக்குகிறது. அங்கே வீற்றிருக்கிற பறவையோ, இனிய கனியையும் கசப்புப் பழத்தையும் அருந்தாமல், அமைதியுள்ளதாயும், கம்பீரமான தோற்றம் வாய்ந்ததாயும் சுதந்தரமுள்ளதாயும் காட்சி அளிக்கின்றது. கீழேயிருக்கிற பறவை மறந்துபோய் மீண்டும் கசப்பும் இனிப்புமுடைய பழங்களைத் தின்னத் தொடங்குகிறது. இறுதியில் ஒரு பழம் ஒரே கசப்பாயிருக்கவே அது தின்பதைவிட்டு, மேற்கிளையில் இருக்கிற ஒளி மிக்க பறவையை மீண்டும் அண்ணாந்து பார்க்கிறது. மெல்ல மெல்ல அந்தப் பறவையினிடம் சென்று நெருங்கவே, ஒளிக்கதிர்கள் அதன் மீது விழுந்து பரவி அதை மூடிவிடுகின்றன. அது அந்தப் பறவையின் வடிவமாகிறது; சுதந்தரத்துடன் அமைதி போர்த்துக் கம்பீரமாய்த் திகழ்கின்றது. மரத்தில் ஒரே ஒரு பறவைதான் எப்பொழுதும் இருப்பதாகவும் அது காண்கின்றது. கீழ்க் கிளையில் இருக்கிற பறவையோ, மேலேயிருக்கிற பறவையின் நிழலே தவிர வேறன்று. நாமும் கடவுளின் வடிவங்களே. சூரியன் ஒன்றே ஆயினும், பல்லாயிரக்கணக்கான பனித் துளிகளில் பல்லாயிரக் கணக்கான சூரியன்கள் தோற்றமளிப்பது போல, ஆண்டவர் நிழலான நாமனைவரும் எண்ணிறந்தவர்களாய்த் திகழ்கின்றோம். தெய்வத் தன்மை மிளிரும் நம் இயல்பான வடிவத்தை நாம் உணர்ந்துவிட்டால், நிழல்கள் யாவும் மறைந்துவிடும். இப்பிரபஞ்சம் முழுவதையும் நாம் பெற்றாலும், நமக்குத் திருப்தி ஏற்படுவதில்லை. அக்காரணம் பற்றியே எவ்வளவு செல்வத்தைத் திரட்டின போதிலும், உலோபியின் உள்ளம் அமைதி அடைந்தபாடில்லை. கள்வன் களவாடிக்கொண்டேதான் இருக்கிறான். தீச்செயல் புரிபவன் தீச்செயலிலேயே முனைகின்றான். நாமும் தத்துவத்தைக் கற்க முயல்கின்றோம். நம் அனைவர்க்கும் குறிக்கோள் ஒன்றே. சுதந்தரத்தை அடைவதைத் தவிர நமக்கு வாழ்க்கையில் வேறு நோக்கமே இல்லை. அறிந்தோ, அறியாமலோ, நாம் எல்லோரும் பூரணத்தை அடையப் பாடு படு

கிறோம். ஒவ்வோர் உயிரும் அதை எய்தியே தீரவேண்டும். தீச்
செயலிலும் துயரிலும் உழன்று தடுமாறுகின்றவனும் அதை
அடைகின்றான். நரகப் பாதையை நாடுகின்றவனுக்கும் நற்கதி
கிடைக்கும். ஆனால், அதற்கு நீண்ட காலமாகும். அவனை நாம்
காப்பாற்ற இயலுமோ? அவன் சென்னியில் பலமான வாழ்க்கை
யின் இன்னலாம் அடிகள் விழுந்தால், அவன் மனம் ஆண்டவ
ரிடம் திரும்பக்கூடும். தன்னலமற்ற, தூய்மையான, ஆன்மிக
நல்லறப் பாதை இறுதியில் நம் முன் விரியும். எல்லோரும் அறி
யாமல் செய்வதை நாம் விழிப்புடன் புரிவோம். 'நீங்கள் அறி
யாமலே வழிபடும் கடவுளின் இயல்பை நான் உங்களுக்கு
எடுத்துச் சாற்றுவேன்!' என்ற கருத்தைப் பால் ஞானியார்
வெளியிடுகின்றார். இந்தப் படிப்பினையைத்தான் இவ்வையக
முழுதும் அறியவேண்டும். ஒரே குறிக்கோளை அடைவதற்கு
நமக்கோர் உதவி நல்காவிடில், இயற்கையைப் பற்றிய தத்துவங்
கள் கொள்கைகள் இவற்றாலான பயனென்ன? ஒவ்வொன்றிலும்
ஒருமையை அறிகிற உணர்வை நாம் பெறுவோமாக; ஒவ்வொன்
றிலும் மனிதன் தன்னைக் காண்பானாக. கடவுளைப் பற்றக்
குறுகிய நோக்கங்களுடைய சமயிகள் போலவும் மதப் பிரிவினர்
கள் போலவும் நாம் இனிக் கடவுளைத் தொழாமலிருப்போமாக;
இப்பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொன்றிலும் பரமான்மாவைத் தரிசிப்
போமாக. கடவுளை உணர்ந்துவிட்டால், உங்கள் உள்ளத்தில்
நிகழ்கின்ற வழிபாடு போல நீங்கள் எங்கும் பார்ப்பீர்கள்.

முதன் முதல் கடவுளைப் பற்றிய குறுகிய கருத்துகளை அகற்
றுங்கள். ஒவ்வொருவரிடத்தும் ஆண்டவரைப் பார்க்கவேண்டும்.
அவரே எல்லாக் கைகள் வாயிலாகவும் தொழில் புரிகின்றார்; எல்
லாக் கால்கள் மூலமாகவும் நடப்பவரும் அவரே; ஒவ்வொரு வாய்
வழியாகவும் உண்டி அருந்துபவரும் அவரே. ஒவ்வோர் உயிரிலும்
அவர் உறைகின்றார். எல்லா உள்ளங்கள் மூலமும் அவர் சிந்திக்
கிறார். அவருக்குச் சான்று அவரே. அவர் நம்மைக் காட்டிலும்
நமக்கு அணியராயிருக்கிறார். இதை அறிவதே சமய உணர்ச்சி
யாகும். இதுதான் ஆதிக்கமாகும். இதை ஆண்டவர் நமக்கு
அருள்வாராக! இந்த ஒருமை உணர்ச்சி உள்ளத்தில் பாய்கிற
பொழுது நாம் அமரர்களாய்விடுவோம்; பிரபஞ்சத்தோடு
ஒன்றாய்ப் போகவே உடலோடும் அமரர்களாய்த் திகழ்கின்றோம்.
உலக முழுவதும் இலங்கும் ஓர் உயிர் இருக்கிற வரையில், நானும்
அதில் உறைகின்றேன். தளையுறப்பட்ட இந்தச் சிறிய உயிர்
நானல்லேன்; அகண்ட வடிவான பரமான்மாவே. பண்டு இறந்து

போனவர்களுடைய உயிரெல்லாம் நானே. புத்தர், இயேசுநாதர், மகமது இவர்களுடைய ஆன்மாக்களும் நானே. எல்லா ஆசிரியர் களுடைய ஆன்மாக்களும் நானே. கொள்ளை அடித்த கள்வர் களும் நானே; கொலை புரிந்து தூக்கிடப்பட்டவர்களும் நானே. அகிலமும் நானே. அன்பர்களே நிமிர்ந்து நிற்பீர்களாக. இத் தகைய வழிபாடுதான் மிகச் சிறந்த வழிபாடாகும். நீங்கள் அகிலத்தோடு ஒன்றாகிவிட்டீர்கள். அதுவே பணிவாகும்; தரை யில் விழுந்து ஊர்ந்து தன்னை ஒரு பாவி என்று சொல்லுவதன்று. இந்த வேறுபாடாம் திரை அறுந்து விழும்பொழுதுதான், மனிதன் பரிமாணத்தின் மிக உயர்ந்த படியை அடைகின்றான். ஒருமையே மிக உயர்ந்த கொள்கையாகும். 'நான், அவன், இவன்' என்னும் எண்ணமெல்லாம் குறுகியவைகளே; உண்மை யான 'நான்' என்பதைச் சுட்டா. அகிலமும் நானே. இந்தத் தத்துவத்தின்மீது அமர்ந்து அந்தப் பரமரை எப்பொழுதும் உயர்ந்த முறையில் இறைஞ்சுவீர்களாக. கடவுள் பரமான்மா; ஆதலால், பரமான்மாவாகவும், உண்மை வடிவாகவும் அப் பொருள் தொழப்பட வேண்டும். தாழ்ந்த விதமான வழிப்பாட்டி லிருந்தும் மனிதனுடைய உலக சம்பந்தமான எண்ணங்கள் ஆன்ம வழிபாட்டின் நிலையை அடைகின்றன. இறுதியில் அகண்ட அகிலமான பரம்பொருள் ஆன்மாவிலிருந்தும், அது வாயிலாகவும் வழுத்தப்படுகின்றது. அளவுக்குட்பட்டது உலக சம்பந்தமானது. பரமான்மா ஒன்றே அகண்டமானது. கடவுள் பரமான்மா; அகண்டமானவர். மனிதனும் ஆன்மாவே. ஆத லால், அவனும் எல்லையற்றவனே. அகண்டமானது ஒன்றே அகண்டத்தைத் தொழக்கூடிய இயல்பு வாய்ந்திருக்கிறது. எல்லை யற்ற ஒன்றை நாம் தொழுவோமாக. இதுதான் மிகச் சிறந்த ஆன்மிக வழிபாடாகும். மிக உன்னதமான கருத்துகளை ஓர் அனுபூதி ஆக்குவது எத்துணை அரிதாயிருக்கிறது பாருங்கள்! நான் கொள்கை காண்கின்றேன்; பேசி ஆய்கின்றேன்; தத்துவ விசாரம் செய்கின்றேன். அடுத்த கணம் ஏதோ ஒன்று எனக் கிடையே பகையாய் நிற்கின்றது. என்னையறியாமலே சீற்றம் எழுகின்றது. இந்த உலகில் அற்பனாகிய என்னைத் தவிர வேறொன்றும் இருப்பதாகவே எனக்கு நினைவில்லை. 'நான் ஆன்மா; இந்த அற்ப விஷயத்தால் ஆவதென்?' என்ற எண்ண மும் மறந்துபோகிறது. எல்லாம் என்னுடைய விளையாட்டு

என்பதை மறந்துவிடுகிறேன்; கடவுளை மறந்துவிடுகிறேன்; சுதந்தரத்தையும் மறந்துவிடுகிறேன்.

விடுதலைப் பாதையானது கூர்மையான கத்தி போன்றது; நீண்டது; இன்னல் வாய்ந்தது; எளிதில் கடக்க முடியாதது. அறிவு மிக்க சான்றோர் பலர் இதைப்பற்றி அடிக்கடி கூறியிருக்கின்றனர். நம் பலவீனங்களோ, தோல்விகளோ நம்மைக் கட்டுப்படுத்தாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். "எழுமின்; விழிமின்; நீவிர் அடையவேண்டிய குறிக்கோளை நண்ணுகிற வரையில், தயங்கி நிற்காதீர்!" என்று உபநிடதங்கள் சாற்றுகின்றன. கத்தி முனையைப்போலக் கூர்மையாயிருப்பினும், நீண்டு தொலையில் விரிந்துள்ள அந்தக் கடினமான பாதையை நாம் கடப்பது திண்ணம். அப்பொழுது மனிதன் தேவர்களையும் அசுரர்களையும் வென்றவனாவான். பிறர்மீது குற்றஞ்சாட்டுவதில் பயனென்? நம்முடைய இடும்பைகளுக்காக நம்மை நாமே நொந்துகொள்ள வேண்டும்.

அமுதத்தை நாடுபவனுக்கு இருள் தரும் நஞ்சுள்ள கிண்ணந்தானா கிடைக்கும்? அரும்பாடு பட்டு அடைய முயலும் ஒவ்வொரு மனிதனுக்கும் அமுதம் கிடைப்பது திண்ணம். "எல்லா நெறிகளையும், போராட்டங்களையும் விட்டு, என்னையே தஞ்சமாக அடை; நான் உன்னை அக்கரை கொணர்ந்து சேர்க்கின்றேன்; அஞ்சாதே!" என்று பகவானே சொல்லுகிறார். உலகில் நமக்குக் கிடைக்கிற சமய நூல்களிலும் இதே உபதேசக் குரலைத்தான் நாம் கேட்கின்றோம். 'விண்ணிற்போலவே, மண்ணிலும் உனது ஆணை நிறைவேறட்டும்,' என்பதே அந்த அறிவுரையாகும்.

அதே குரலும் ஒரே சுருதியில் பேசும்படி நமக்குக் கற்பிக்கின்றது; ஏனெனில், "இப்பிரபஞ்ச முழுதும் உமது இராச்சியமன்றோ? எல்லாச் சத்திகளும் எல்லாச் சிறப்புகளும் உம்முடையவைகளே; இவைகளெல்லாம் கஷ்டமானவைகளே; மிக மிகக் கஷ்டமானவைகளே. ஆண்டவரே, இக்கணம் உம்மையே தஞ்சமாக அடைகிறேன்; உம் அன்பின்பொருட்டு எல்லாவற்றையும் தியாகஞ்செய்கிறேன். உமது பலி பீடத்தின்மீது என் நற்செயல்களையும் அறச்செயல்களையும் சமர்ப்பிக்கிறேன்; என் பாவங்கள், என் துயர்கள், என்னுடைய நற்செயல்கள், தீச்செயல்கள்— இவை யாவற்றையும் அர்ப்பணம் செய்கிறேன். ஏற்பீராக. நான் உம்மை மறவேன்," என்று நானே சொல்லிக்கொள்ளுகிறேன். "உமது சங்கற்பம் நிறைவேறட்டும்," என்று ஒரு கணம் கூறு

வேன்; அடுத்த கணம், ஏதோ ஒன்று எனக்கு நிகழ்ந்து விடுகின்றது. நான் பெருஞ்சீற்றத்தால் கொதித்து எழுகின்றேன்.

உலகிலுள்ள எல்லாச் சமயங்களுக்கும் குறிக்கோள் ஒன்றே. ஆனால், உபதேசிக்கும் சான்றோர்களின் மொழிகள்தாம் வேறு. பொய் புதைந்த இந்த 'நான்' என்பது மாய முயல வேண்டும்; மெய்ப்பொருளான 'நான்' அல்லது பரம்பொருள் ஆட்சி புரிய வேண்டும். இம்முயற்சிதான் எல்லாச் சமயங்களிலும் காணப் படுகிறது. "நான் ஒருவன்தான் கடவுள்; என்னைத் தவிர வேறு தெய்வங்களை நீங்கள் தொழப் பொறேன்," என்று யூதர் களின் சமய நூல்கள் மொழிகின்றன. கடவுள் என்பவர் ஒருவரே; அவரைத் தவிர வேறொன்றில்லை. "நான் இல்லை; எல்லாம் நீவிரே," என்று நவில வேண்டும். கடவுளைத் தவிர யாவற்றையும் நாம் துறத்தல் வேண்டும். அவர் ஒருவரே செங் கோல் செலுத்த வேண்டும். நாம் மிகவும் போராடினாலும் அடுத்த கணத்தில் சட்டென நம் கால் சறுக்கிவிடுகிறது; உலக அன்னைபால் கைகளை நீட்டி இறைஞ்ச முயல்கின்றோம். நாம் தனியே நிற்க முடியாதென்பதை உணர்கின்றோம். வாழ்க்கை எல்லையற்ற நூலாகும். அதன் முதல் அத்தியாயம் 'எல்லாம் உன் செயல்,' என்பதே; எல்லா அத்தியாயங்களையும் உணராத நிலையில் இந்தப் பூரணத்தை அடைய இயலாது. 'எல்லாம் உன் செயலே,' என்று உரைக்கும் பொழுதே வஞ்ச மனம் அதை எதிர்த்துப் போராடுகின்றது. தாழ்ந்த அகந்தைமீது வெற்றி கொள்ள விரும்பினால், இம்மந்திரத்தையே மீண்டும் மீண்டும் நாம் உச்சரிக்க வேண்டும். வஞ்சகனை வழிபட்டால் நாம் உய்ய முடியுமா? எத்தீச்செயலுக்கும் உய்வுண்டு; நம்பிக்கைத் துரோ கத்திற்கு உய்வில்லை. ஆனால், நாம் நம்பிக்கைத் துரோகம் செய்த கயவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றோம். நம்முடைய உயர்ந்த ஆன்மாவின் குரலிற்குச் செவி சாய்க்க மறுத்தால், நம் மையே நாம் வஞ்சித்தவர்களாகிவிடுவோம்; கம்பீரமாய் அமர்ந் திருக்கும் உலக அன்னையையும் வஞ்சிக்கிற குற்றமும் நம்மைச் சார்ந்துவிடும். எது வந்தாலும் வரட்டும். எல்லாவற்றிற்கும் மேலான அவன் சங்கற்பத்திற்கே உடல் மனம் இவற்றை ஒப்படைத்துவிட வேண்டும். "'எல்லாம் உனது சங்கற்பமே,' என்று ஒரு முறைக்குமேல் மற்றொரு முறை மொழிந்தால் அதுவே பாவமாகும்," என்று ஓர் இந்து தத்துவ ஞானியார் கூறியிருக் கிறார். 'எல்லாம் உன் செயல்,' என்று ஒரு தரம் சொன்னால் போதுமே! ஏன் இரண்டு முறை இயம்ப வேண்டும்? நல

மொன்று என்றைக்கும் நல்லதே. அதை ஒருவரும் எடுத்துச் செல்ல இயலாது. விண்ணிற்போலவே இம்மண்ணிலும் உம் சங்கற்பம் நிறைவேறட்டும். இந்த வையகம் உம் இராச்சிய மன்றோ? எல்லாச் சத்தியும், சிறப்பும் எஞ்ஞான்றும் உமக்கே உரியவை.

# சமயத்தின் பிறப்பு*

பல வகை வண்ண இதழ்களுடன் திகழும் மலர்கள் காற்றில் தம் தலைகளை அசைத்தும், குதித்தும், தாவியும் காட்டில் விளையாடின. ஒளிமிக்க சிறகுடைய வனப்பு வாய்ந்த புள்ளினம் இசைத்தன. இவ்விசை வனத்தின் வெளியிடத்தில் எதிரொலியை எழுப்பிற்று. என் உள்ளத்தில் அமைதியைப் பெய்த இவை—எனக்கு நட்பாயிருந்த இவை—நேற்றிருந்தன; இவை இன்று மறைந்து போயினவே! இவை எங்குச் சென்றனவோ! என் விளையாட்டு நண்பர்கள்—என்னோடு இருந்து என் சுக துக்கங்களைப் பகிர்ந்துகொண்ட நண்பர்கள்—என் இன்பங்களிலும் பொழுது போக்குகளிலும் கலந்துகொண்ட நண்பர்கள்—இவர்களும் எங்கேயோ போய்விட்டார்களே! போன இடம் எங்கே? நான் ஒரு குழவியாயிருந்த அந்நாள் என்னைச் சீராட்டித் தாலாட்டிப் பேணி வளர்த்தவர்கள்—வாழ்நாள் முழுதும் என்னைப் பற்றி ஒரே கவலையுடன் இருந்தவர்கள்—அதாவது எனக்காக எல்லாவற்றையும் புரிய ஆயத்தமாயிருந்தவர்கள்—இவர்களும் மறைந்தார்களே! ஒவ்வொருவரும் போய்விட்டனர்—போய்க்கொண்டிருக்கின்றனர்; இனிப் போவர். ஒவ்வொரு பொருளும் போயிற்று; போய்க்கொண்டிருக்கிறது; இனிப் போகும். 'எல்லாம் எங்குப் போகின்றன?' என்ற வினா ஆதிகால மனிதனுடைய உள்ளத்தில் முளைக்கின்றது. அவன் இதற்கு விடை காண விரைந்து முயல்கின்றான். 'அப்படி முயல்வானேன்?' என்று நீங்கள் வினவலாம். அவன் கண் முன்னே எல்லாம் மடிந்து மண்ணோடு மண்ணாய்ப் போவதை அவன் நோக்கவில்லையா? இவை சென்ற இடந்தேடி ஏன் அவன் மண்டையை உடைத்துக்கொண்டு உள்ளத்தைக் குழப்பிக்கொள்ள வேண்டும்?

எல்லாம் உயிரோடிருக்கின்றன என்பது ஆதிகால மனிதனின் மனத்தில் முதலாக அரும்புகிறது. உருக்குலைந்து அழிதல் என்ற மரணமாம் நிகழ்ச்சி, ஆதிகால மனிதனுக்குப் பொருளற்றதா யிருந்தது.

போனவர்கள் வருவார்கள், சில வேளை திரும்ப வருவதில்லை. ஆகவே, உலகில் வழங்கிவரும் மிகத் தொன்மை வாய்ந்த மொழி

---

* சுவாமிஜி முதல் தடவை அமெரிக்காவுக்குப் போனவுடன் மேலை நாட்டுச் சீடர் ஒருவர் கேட்ட கேள்விக்கு விடையாக எழுதியது.

யில் இறந்துபோவது என்பதும் ஒருவகைப் போதல் என்பதே
குறிக்கப்பட்டிருக்கிறது. இதுதான் சமய உணர்ச்சியின் தொடக்
கம். ஆகவே, ஆதிகால மனிதன், 'இவர்கள் (மாண்டவர்கள்)
எங்கே போய்விடுகின்ருர்கள் ?' என்ற கடினமான வினுவிற்கு
எங்கும் விடை தேடிக்கொண்டிருந்தான்.

உறங்கிக்கொண்டிருக்கும் இவ்வையகத்திற்கு இருளை மாய்க்
கும், ஒளியையும் தட்பத்தை அகற்றும் இன்ப வெப்பத்தையும்
அளிக்கும் காலைக்கதிரவன் மாட்சிமை நிறைந்த மிக்க பொலிவுடன்
தோன்றுகிருன் ; பையப்பையத் தன் பயணத்தை நடத்துகின்
ருன். அந்தோ! இவ்வெய்யோனும் சாய்ந்து கீழே இறங்கி
இறங்கி மெல்ல மறைந்துவிடுகிருன் ! ஆனுல், மறுநாள் போற்று
தற்குரிய ஒளியோடும் கவினேடும் மீண்டும் காட்சி அளிக்
கின்ருன் ! நாகரிகத்திற்கே பிறப்பிடங்களான நைல் நதியிலும்,
டைகிரிஸ் ஆற்றிலும் இருக்கிற தாமரையோ, பரிதியின் கதிர்கள்
படவே தன் கூம்பின இதழ்களை விரித்துக் கண் விழிக்கின்றது.
ஞாயிற்றின் ஒளி தேயத் தேய, இதுவும் கண் அயர்ந்துவிடு
கின்றது. இவ்வண்ணமே வந்தவர் செல்கின்றனர் ; சென்றவர்
மீண்டும் வருகின்றனர் ; தம் தம் கல்லறைகளிலிருந்தும் கிளம்பிப்
புத்துயிர் பெற்று வருகின்றனர் போலும்! இதுதான் எழுந்த
வினுவிற்கு முதன்முதலாக அவன் கண்ட விடை. ஆதலால்,
ஞாயிறும் தாமரையும் மிகு தொன்மை வாய்ந்த சமயங்களில் மிகச்
சிறந்த சின்னங்களாய் இடம் பெறுகின்றன. எத்தகைய
நுண்ணியகருத்தாயிருந்தாலும், அது உருவெடுக்குங்கால், அது
கட்புலனுகக் கூடியதும் தொட்டுப் பார்த்து அறியக் கூடியதுமான
தூல உடைகளைப் போர்த்தே வரும். இதுதான் இதன் நியதி
யாகும். ஒன்று தன் இருக்கையை விட்டு வெளியேறுதல் என்
பது, அதை விட்டு அது அகல்வதன்று; அதற்குள் கரந்து
நிற்பதேயாகும். இதை ஒரு மாறுதல் என்றுதான் கூறவேண்
டும். அல்லது ஒரு கணம் அது உருமாறியிருக்கிறது என்பதே
பொருந்தும். ஒரு பொருள் ஐம்புலன்களையும் தாக்கிக்கொண்டு
மிகுந்த அதிர்ச்சியுடன் மனத்தில் விரைந்து ஒரு புதிய கருத்தை
எழுப்புகிறது. சிந்திக்குமிடத்து இது அதற்கு ஆதாரமாகக்
கருதப்பட்டே தீரும். அதுவே நடுக்கருவாக அமைய, அதைச்
சுற்றிப் புதிய கருத்துப் பரவித் தன்னை உருவாக்கிக்கொள்
கின்றது. முதன் முதலாக இப்படிச் சின்னங்களாய்ச் சமைந்
தவை ஞாயிறும் தாமரையுமே.

எங்குப் பார்த்தாலும் ஆழமான புழைகளிருக்கின்றன.

இவை இருளும் அச்சமும் செறிந்தவை; கீழே எல்லாம் இருண்டு பயத்தை ஊட்டுவனவாயிருக்கின்றன. தண்ணீரின் அடியில் கண்களைத் திறந்து நோக்கினாலும், ஒன்றையும் பார்க்க இயலாது; மேலே எல்லாம் ஒளிப்பிழம்பாய்த் திகழ்கின்றன. இரவிலுங் கூட வனப்பு வாய்ந்த விண்மீன் கூட்டங்கள் ஒளியைச் சொரி கின்றன. நான் அன்பு பாராட்டுகிறவை எங்குச் செல்கின்றன? இருள் மண்டிக் கிடக்கும் கீழே போவது திண்ணமாய் இல்லை; அது செல்வது என்றும் அழியாத ஒளி திகழும் மேல் உலகே யாகும். இதற்கும் ஒரு புதிய சின்னம் தேவையாயிருந்தது. வியப்பைத் தரும் ஒளி வீசும் சுடர்களாம் செந்நாக்கவையுடைய தீயைப் பாருங்கள். அது ஒரு சிறு பொழுதில் காட்டைத் தின்று அழித்துவிடுகின்றது; உணவைச் சமைத்துத் தருகின்றது; இன்ப வெப்பத்தை அளிக்கின்றது. காட்டில் வாழும் விலங் கினத்தை அணுகவொண்ணாது துரத்திவிடுகின்றது. இந்த உயிர் தரும் உயிர்காக்கும் நெருப்பு இந்த நெருப்புச் சுடர்கள் எங்கு நோக்கிச் செல்கின்றன? இவை யாவும் மேலே விரை கின்றன; கீழே அல்ல. மற்றொரு சின்னமாய்த் திகழ்ந்தது தீயே. இந்தத் தீ, ஒளி நிறைந்த இடங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்கின்றது. எஞ்ஞான்றும் ஒளி திகழ் நாடு களுக்குச் சென்றவர்களுக்கும் நமக்கும் ஓர் இணைப்பை இது அமைக்கின்றது. மனித இனத்திடையே திகழும் குறிப்புகளில் மிகு தொன்மை வாய்ந்த ஒரு வழிபாட்டுக் குறிப்புப் பின்வருமாறு தொடங்குகின்றது:

“சோதிப் பிழம்பாய்ப் பொலிந்து நிற்பவர்பால் செல்லும் தீக் கடவுளே, நீ எங்கள் தூதனல்லவா?” இக்காரணத்தால் ஒளி மயமாயிருக்கின்றவர்களுக்கு எவை இன்பத்தைத் தரும் என்று இவர்கள் கருதினார்களோ, அவற்றையும் உண்ணும் உணவையும், அருந்தும் பானத்தையும் தீயிற்சொரிந்தனர். இதுதான் வேள்வி யின் தொடக்கமாகும். ஆதிகாலத்து மனிதர்களின் தேவையைத் தீர்க்குமளவில் இவ்வினாவிற்கு விடை காணப்பட்டது. பிறகு மற்றொரு பிரச்சினை பிறந்தது: உலகில் காணப்படும் யாவும் எங்கிருந்து வந்தன? ஏன் முதலில் தோன்றவில்லை? திடீரென எழும் ஒரு மாறுதலை நாம் பொதுவாக நினைவில் வைத்துக்கொள் கிறோம் என்ற காரணத்தால், சுகமின்மை, துயர், செல்வக் குறைவு இவைபோல, இன்பமும், மகிழ்ச்சியும், செல்வப் பெருக்கும், புல நுகர்ச்சியும் நம் மனத்தின்மீது ஆழ்ந்த பதிவைச் செய்யா. மகிழ்ச்சி, புலநுகர்ச்சி, இன்பம், சுகம்—இவை யாவும் மனிதனின்

இயல்புகளே. இயற்கை ஒட்டத்தைக்காட்டிலும், இந்தத் தன்
மையை மிக்க வன்மையுடன் சிதைக்கும் ஒன்று மனத்தின்கண்
ஆழமான சுவட்டை விடாமற்போகாது. இப்படிக் குலேக்கும்
மரணத்தைப் பற்றிய பிரச்சினையை முதன்முதலாகத் தீர்க்க
வேண்டியிருந்தது.

பின்பு மனிதனின் மிகுதியான முன்னேற்றத்தோடு கூடவே,
'இவை எங்கிருந்து வந்தன ?' என்னும் பிரச்சினையும் பிறந்தது.
உயிர் வாழும் ஒவ்வொன்றும் இயங்குகின்றது. நாமும் இயங்கு
கின்றோம். நம் அவயவங்களை நம் சங்கற்பம் இயங்கும்படி செய்
கின்றது. நம்முடைய சங்கற்பத்தின் ஆட்சிக் கீழ் நம் அவயவங்
கள் வடிவங்களைப் படைக்கின்றன. இயங்குகின்ற ஒவ்வொன்றி
லும் ஆட்டி வைக்கும் கருவி போன்ற ஒரு சங்கற்பம் இருந்தது
என்ற கருத்து, இக்காலக் குழந்தை - மனிதனுக்குள்ளது போன்று
பண்டைக் காலத்து மனிதக்—குழந்தைக்கும் அமைந்திருந்தது.
காற்று ஒரு சங்கற்பத்தை உடையது. மேகமும் இயற்கை அனைத்
தும் தனித்தனி சங்கற்பங்களாலும், மனங்களாலும், ஆன்மாக்க
ளாலும் நிரம்பியுள்ளன. நாம் பல பொருள்களைப் படைப்பது
போலவே, அவை எல்லாவற்றையும் சமைக்கின்றன. அவர்களே
அந்தத் தேவர்களே—இலோஹிம்ஸ் என்று வழங்கப்படுகிற ஒளி
மிக்க தெய்வங்களே—இவையனைத்தையும் அமைத்த படைப்புக்
கடவுளர்களாவார்கள்.

மக்கட்சமுதாயம் வளர்ந்துகொண்டே போகின்றது. சமுதா
யத்தில் ஒரு வேந்தன் தலைவனாய்த் திகழ்ந்தான். இந்தச் சுடர்
களாய்த் திகழும் தெய்வங்களிடையேயும் ஒரு தலைவன் ஏன் வீற்றி
ருந்திருக்கக் கூடாது ? ஆகவே, எல்லாத் தேவர்களுக்கும் ஒரு
தலைவன் இருந்தான் என்று கருத இடமுண்டு. அவன்தான்
இலோஹிம் ஜிகோவா. அவன்தான் தெய்வ நாயகன். அந்தப்
பரம்பொருள் ஒன்றே தன் தனிப்பட்ட சங்கற்பத்தால் எல்லா
வற்றையும் படைத்தது. இந்தச் சுடரொளித் தெய்வங்களையும்
படைத்ததும் அந்த விண்ணவர் கோனே. பற்பல விண்மீன்
களுக்கும் கோளங்களுக்கும் ஆண்டவன் கட்டளையிட்டது
போலவே, இயற்கையின் பற்பல செயல்களைக் கவனித்துவரத்
தேவர்களை அதிகாரிகளாக நிறுவியுள்ளான். சில, மரணத்தைக்
கவனித்து வருகின்றன. வேறு சில, பிறப்பைக் கவனித்து
வருகின்றன. இதைப் போலவே ஒவ்வொரு தெய்வத்திற்குமுரிய
தொழிலுண்டு. ஒரு பரம்பொருள் தன் ஆற்றல் மிகுதியால்
எல்லாத் தெய்வங்களைக்காட்டிலும் உயர்ந்திருக்கிறது என்ற

பொதுவான கருத்து எல்லாச் சமயங்களுக்கும் மூலங்களாய்த்
திகழ்கின்ற ஆரியர், செமிட்டிக்கு—இந்த இனத்தார்களின் சமயங்
களில் கோயில் கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். ஆனால்,
இந்நிலையிலிருந்து ஆரியர்கள் ஒரு புதிய தொடக்கத்தை வகுக்
கின்றார்கள். இது ஒரு பெருஞ்சிறப்பு வாய்ந்த ஏறுமாறான
பாதையாகும். அவர்கள் கண்ட கடவுள், எல்லாவற்றிற்கும்
மேலான உயர்வற உயர்ந்த தெய்வமட்டுமல்லன்; அவன்
விண்ணில் திகழும் நம் தந்தையுமாவான். இதுதான் அன்பின்
அரும்பாகும். செமிட்டிக்குக் கண்ட பர தெய்வமோ, பேரிடி முழக்
கஞ்செய்கிறது; மிகுந்த அச்சத்தை விளைக்கின்றது. தன்
குழாத்தின் நடுவே அளவு கடந்த ஆற்றல் படைத்த தலைவனாய்த்
திகழ்கின்றது. பர தெய்வத்தைப் பற்றிய இத்தகைய கருத்துக
ளோடு அவன் தந்தையாய்க் காட்சி அளிக்கின்றான் என்ற கருத்
தையும் குழைத்துச் சேர்த்து அமைத்துக்கொண்டனர் ஆரியர்.

மக்கட்சமுதாயம் வளர வளர, இவ்விரு சமயக் கோட்பாடு
களுக்கிடையே வேற்றுமை விரிந்துகொண்டே போயிற்று.
மனிதப் பேரினத்தின் ஒரு கிளையான செமிட்டிக்கு இனத்தாரின்
சமய முன்னேற்ற வளர்ச்சி தடைபட்டுவிட்டது. செமிட்டிக்கு
இனத்தார் வழிபடும் இறைவனைக் காண இயலாது. அது மட்டு
மன்று; கண்டால், மரணந்தான் நேரிடும். ஆரியர்கள் உணர்ந்த
தேவனைக் காண இயலும். அதோடு அமையாமல், ஆன்மாவுக்குக்
குறிக்கோளாயும் அவன் திகழ்கின்றான். வாழ்வின் ஒரே நோக்கம்
அவனைக் காண்பதே. தண்டனைக்கஞ்சி மன்னர்க்கு மன்னனாய்த்
திகழும் அக்கடவுளை வழிபடவேண்டும். அவன் வகுத்த விதி
களைப் பின்பற்ற வேண்டும். ஆரியர் தந்தைபால் அன்பு
வைக்கின்றனர்; அதற்கு மேல் தம் துணைக்குரிய தாயையும்
வணங்குகின்றனர்.

'என்னை நேசிக்க வேண்டுமானால், என் நாயையும் நேசிக்க
வேண்டும்,' என்பார்களே, அதைப்போலவே, தந்தையின் உயிர்
களனைத்தையும் நாம் நேசிக்க வேண்டும். ஏனெனில், எல்லாம்
அவன் படைத்தவையல்லவா? செமிட்டிக்கு இனத்தாருக்கு—
செமிட்டிக்கு மக்களுக்கு—இவ்வாழ்வு போர்க்கள
மாய்த் திகழ்கின்றது. இதன்கண் எல்லைப்புற
சோதிக்கும் பொருட்டு ஆண்டவன் மனிதனின் நன்றியைச்
ஆரியனுக்கோ இந்த வாழ்வு ஒரு பாதையாகும். இதன்மூலம்
அவன் வாழ்வின் குறிக்கோளை எய்துவான். செமிட்டிக்கு இனத்
தாருக்குக் கடவுள் நல்கிய பணியைச் செவ்வனே ஆற்றுதல்

போதும்; விண்ணில் இடையரு இன்ப வீட்டை அடையலாம். ஆரியர்கட்கோ, அந்த இன்ப வீடு கடவுளே. செமிட்டிக்கு மனிதனுக்கோ, கடவுளுக்குப் புரியும் பணி ஒரு முடிவை அடைவதற்குரிய கருவியாகும். அந்த முடிபாம் ஊதியம் யாதெனில், மகிழ்ச்சியும் இன்பம் துய்த்தலுமே. ஆரியனுக்கோ, இன்பம் துய்த்தலுஞ்சரி, இடும்பையுறுதலுஞ் சரி, இவை எல்லாம் கருவிகளாயிருக்கின்றன; முடிவு கடவுளேயாகும். செமிட்டிக்கு மனிதன் விண்ணை அடைவதற்குக் கடவுளை இறைஞ்சுகின்றான். ஆரியனோ, கடவுளை எய்துவதற்கு விண்ணைத் துறக்கின்றான். சுருங்கக் கூறுமிடத்து, இதுதான் முக்கியமான வேற்றுமையாகும். ஆரியர்களுடைய வாழ்வின் நோக்கமும் முடிவும் கடவுளைக் காண்பதே. தன் காதலன் முகத்தைக் காண்பதே காதலியின் நோக்கமன்றோ? அவனில்லாமல் அவள் கணமேனும் வாழ்தலரிது. ஆண்டவனே, உன் அருட்பார்வையில்லையேல், ஞாயிறும் மதியும் விண்மீன்களும் தத்தம் ஒளியை இழந்துவிடும்.

## சமயம்—அதன் முறைகளும் நோக்கமும்

உலகச் சமயங்களை ஆராயுங்கால் மனிதன் பின்பற்றும் இரு வகை முறைகளைப் பொதுவாகப் பார்க்கின்றோம். கடவுளிலிருந்து தொடங்கி மனிதனை நண்ணுகிறது ஒரு முறையாகும். அதாவது, முதலிலிருந்தே கடவுளிலிருந்து தொடங்குகின்ற முறையைக் காட்டும் கருத்துகள் கோயில் கொண்டிருக்கிற செமிட்டிக்கு இனச்சமயங்கள் நம்மிடையே உள்ளன. ஆனால், நாம் வியப்புறுதற்கேற்றவாறு இவற்றில் ஆன்மாவைப் பற்றிய எண்ணம் யாதொன்றுமில்லை. பண்டைய ஹீபுரு மக்களிடையே அவர்களுடைய மிக அண்மைக்கால வரலாற்றுப் பகுதிகள் தோன்றும் வரையில் ஆன்மாவைப் பற்றிய யாதோர் எண்ணமும் விரிந்து உருவாகவில்லை என்பது மிகவும் நன்கு குறிப்பிடத் தகுந்தது. ஏதோ ஒரு மனம், சடப் பொருள்களின் அணுக்கள்—இவை கலந்து மனிதன் உருவாகின்றான்; அவ்வளவுதான். மரணத்தோடு எல்லாம் முடிவடைந்துவிடுகின்றன. இது ஒரு புறம் இருக்கட்டும். ஆனால், கடவுளைப் பற்றி நாம் மிகவும் ஆச்சரியப்படும் முறையில் இவ்வினத்தார் ஒரு கருத்தை உருவாக்கியிருக்கின்றனர். இது நாம் ஆளும் முறைகளில் ஒன்றாகும். மற்றொன்று, மனிதன் வாயிலாகக் கடவுளை நண்ணுவது. இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டது, சிறப்பாக ஆரியர்களைச் சார்ந்ததாகும்; முதலில் மொழியப்பட்டது செமிட்டிக்கு இனத்தாரைச் சேரும். ஆரியர்கள் ஆன்மாவிலிருந்து தொடங்கினார்கள். கடவுளைப்பற்றிய அவர்கள் கருத்துகள் முதலில் மங்கலாயும், உருவடையாதனவாயும், மிகத் தெளிவில்லாதனவாயும் இருந்தன. மனித ஆன்மாவைப் பற்றிய கருத்துத் தெளியத் தெளிய, அந்தத் தெளிவுக்கேற்றவாறு கடவுளைப் பற்றிய கருத்தும் ஒளியுற்றது. இக்காரணம் பற்றியே வேதங்களிலே ஆன்மிக முறையிலேயே ஆராய்ச்சி ஏற்பட்டது. கடவுளைப்பற்றி ஆரியர்கள் எய்திய அறிவனைத்தும் ஆன்மா வாயிலாகவே அமைந்தது என்று கூறிவிடலாம். அதனால், அவர்களுடைய தத்துவ வட்டமனைத்தின்மீதும் ஒரு தனிப்பட்ட முத்திரை திகழக் காண்கின்றோம். அகத்தினிடையே தெய்வத்தை நாடும் ஆராய்ச்சியாய் உள்முகமாய் மிளிர்ந்தது. அது அந்தர்முக ஆராய்ச்சியாகும்.

ஓர் ஆரியன் தெய்வநிலையைத் தன் அகத்தின்கண் தேடிக்கொண் டிருந்தான். நாளடைவில் இது ஒரு தனி இயல்பாய்விட்டது. அவர்களுடைய கலைகளிலும் அவர்களிடையே நடைமுறை விவகாரங்களிலும் இத்தகைய நாட்டம் சிறப்பாய்த் திகழ்கின்றது. சமய உணர்ச்சியுடன் இருக்கும் நிலையைக் காட்டும் ஒரு ஐரோப்பியனது படத்தை எடுத்து நோக்குங்கள். அந்தக் கண்டத்து ஓவியப் புலவன் படம் வரையுங்கால் கண்களை மேல் நோக்கியே அமைப்பான். அது இயற்கைக்குப் புறம்பாய் அவன் கடவுளை நாடுவதாகும். அவன் கண்கள் விண்ணையே பார்த்து நிற்கும். ஆனால், இந்தியாவிலோ, அத்தகைய மனிதனின் நயனங்கள் மூடியபடியே சித்திரிக்கப்பட்டிருக்கும். அவன் உள் நாட்டம் உடையவன் போலும்!

அகம், புறம் என்னும் இவைகளே மனிதன் கற்றறிய வேண்டிய இரண்டு பொருள்களாகும். முதலில் இவையிரண்டும் ஒன்றோடொன்று முரண்பட்டவை என்று தோன்றினாலும், புற உலகம் அக உலகமான கருத்துலகத்தால் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சாதாரணமான மனிதனுக்குத் தோன்றும். ஒவ்வொரு நாட்டிலும், சிறப்பாக மேலை நாட்டில், பெரும்பான்மையரான தத்துவ ஞானியர் சடப்பொருளும் மனமும் முரண்பட்ட பொருள்கள் என்ற முன் கூட்டிய தீர்மானத்தோடு தம் ஆராய்ச்சியைத் தொடங்கியிருக்கின்றனர்; ஆனால், நீண்ட கால ஆராய்ச்சியின் இறுதியில் இவ்விரண்டும் ஒன்றை ஒன்று நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன; முடிவில் இவை கலந்து எல்லையற்ற பூரணமாய்விடும். இப்படி அலசிப் பார்த்ததிலிருந்து நான் இவ்விரு வகை நோக்குகளில் ஒன்று உயர்வு, மற்றொன்று தாழ்வு என்று கருதினதாக எண்ணவேண்டா. புற உலகம் வாயிலாக உண்மையை நாட விழைகின்றவர்கள் தவறான பாதையில் செல்லுவதாக நான் கருதவில்லை. அக உலகம் மூலமாக உண்மையை நண்ண விரும்புகிறவர்கள் சற்று உயர்ந்தவர்கள் என்றும் நான் எண்ணவில்லை. இவையிரண்டும் பின்பற்றுகிற இரண்டு ஆராய்ச்சி முறைகளாகும். இவ்விரண்டும் இருக்கத்தான் வேண்டும்; இவ்விரண்டையும் துருவி ஆராயத்தான் வேண்டும். இறுதியில் இவ்விரண்டும் சந்திப்பதை நாம் காண்போம். உடல் உளத்திற்குப் பகையன்று; உளமும் உடலிற்குப் பகையன்று என்பதை நாம் காண்போம். ஆனால், உடல் பயனற்றது என்று கருதும் பலரை நாம் பார்க்கின்றோம். பண்டைக் காலங்களில் ஒவ்வொரு நாடும், உடல் ஒரு நோய்ப் பிண்டம் என்றும், பாவத்

தின் வடிவமென்றும், இவ்வகையான பிணிகளால் மண்டிக் கிடக்
கிறதென்றும் சிந்தித்த மக்களையுடையதாயிருந்தது. எனினும்,
பின்னல், வேதங்களில் கற்பிக்கப்பட்டபடி உடல் மனத்தில்
கரைகிறதென்றும் மனம் உடலில் கரைகிறதென்றும் நாம் பார்க்
கின்றோம். எல்லா மறைகளிலும் ஒரே பொருள்தான் ஆதார
சுருதியாக ஒலிக்கின்றது என்பதை நீங்கள் நினைவில் இருத்திக்
கொள்ள வேண்டும். ஒரு களிமண் உருண்டையின் இயல்பை
அறிவதால், பிரபஞ்சத்திலுள்ள எல்லாக் களிமண்ணையும் உணர்
வது போலவே, ஒன்றான மெய்ப்பொருளை அறிவதால், மற்ற
எல்லாவற்றையும் நாம் தெரிந்துகொள்ள இயலும். ஓரளவு
தெளிவாகக் கூறுமிடத்து, மனித அறிவின் எல்லாவற்றிற்குமே
இப்பொருள் பொருந்தக்கூடியதென்றே மொழியலாம். நாமெல்
லோரும் விரைந்து சென்று நாடுவது அந்த ஒருமையைக் கண்டு
பிடிப்பதேயாகும். நமது வாழ்வின் ஒவ்வொரு செயலும்
லோகாயதமாயிருக்கட்டும், பருப்பொருளாய்ப் பொலியட்டும்,
நுண்பொருளாய் மிளிரட்டும், மிக உயர்ந்ததாய்த் திகழட்டும்,
மிகச் சிறப்பு வாய்ந்த ஆண்மிக ஒளியாய் விளங்கட்டும், ஒரே
இயல்புள்ளதாய் ஒரே இலட்சியத்தை நாடுகின்றது. அந்த
இலட்சியம் யாதெனில், ஒருமையைக் கண்டுபிடிப்பதே. ஒருவன்
தனி வாழ்வு நடத்துகின்றான்; பிறகு மணம் புரிகின்றான். இது
மேற் பார்வைக்குத் தன்னலச் செய்கையாய்த் தோன்றலாம்.
ஆனால், அதே சமயத்தில், இதைத் தூண்டுகின்ற ஒன்று, இதை
இயக்கும் சக்தி, ஒருமையைத் தேர்வதற்கே அமையும். அவ
னுக்கு மக்கள் இருக்கின்றார்கள். நண்பர்களுண்டு. அவன் தன்
தாய் நாட்டின்பால் அன்பு வைக்கிறான்; அந்த அன்பு உலகத்
தின்பால் விரிகின்றது; இந்தப் பிரபஞ்சத்தையே தழுவக் கூடிய
அன்பாய் அது இறுதியில் கனிந்துவிடுகின்றது. நாம் தவிர்க்க
முடியாதபடி அந்தப் பூரணத்தை நோக்கி இழுத்துச் செல்லப்படு
கின்றோம். அந்தப் பூரணத்தைத்தேடும் முயற்சி யாதெனில்,
ஒருமையைக் கண்டுபிடிப்பதே. இந்தச் சிறு அகம் என்பதை
வேரொடும் களைந்து, நம்மை விரிவடையச் செய்துகொண்டே
போகிறோம். இதுதான் குறிக்கோள். பிரபஞ்சம் மிகவும்
விரைந்து நாடுகின்ற முடிவும் இதுவே. ஒவ்வோர் அணுவும்
தனக்கு மிக அண்மையிலுள்ள அணுவை நண்ணி, அதோடு
கலக்க முயல்கின்றது. அணுக்கள் அணுக்களோடு சேர்ந்து,
பெரிய உருண்டைகளாய் மாறுகின்றன. இவ்வுருண்டைகளே
ஞாலங்களாகவும், ஞாயிறுகளாகவும், மதிகளாகவும், விண் மீன்

களாகவும், ஏனைய கிரகங்களாகவும் விரிகின்றன. இவை ஒன்றோடு ஒன்று கலக்க மிகவும் விரிவாய் ஓடுகின்றன. இறுதியில் இப்பிரபஞ்சமனைத்தும்—மனமும் சடப் பொருளுமான இப்பிரபஞ்சம் யாவும்—ஒன்ருய்க் கலந்துவிடும்.

பேரண்டத்தில் மிக விரிவான அளவில் நடக்கின்ற நிகழ்ச்சி முறையே, சிற்றண்டத்திலும் சிறிய அளவுக்கு நடந்துகொண்டு வருகின்றது. இந்தப் பிரபஞ்சம் விரிந்தும் தனித்தும் திகழ்ந்தாலும், ஒருமையையும் பிரிவின்மையையும் நாடி விரைகின்றது. நம் சிற்றண்டங்களிலே ஒவ்வோர் ஆன்மாவும் பிறக்கிறது; எஞ்சி நின்ற உலகத்திலிருந்து தொடர்பில்லாமல், அறுந்து துண்டாய் நின்ருலும், பேரண்டம் போலவே ஒருமையை நாடுகின்றது. எவ்வளவுக்கெவ்வளவு ஓர் ஆன்மா அஞ்ஞானத்தில் ஆழ்ந்து கிடக்கின்றதோ, எவ்வளவுக்கெவ்வளவு அது ஞான ஒளி பெருமலிருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு எஞ்சிய பிரபஞ்சத்தினின்று தான் தனித்து நிற்பதாக அது கருதுகின்றது. மனிதன் தன்னுடைய அஞ்ஞானத்திற்கேற்ப, தான் மாண்டுவிடுவதாகவும், பிறப்பதாகவும் எண்ணுகிருன். இம்முறையில் அவன் சிந்தனை செல்கின்றது; இத்தகைய எண்ணங்கள் அவனது தனித்திருக்கும் தன்மையின் வடிவமேயாகும். ஞானம் பிறந்ததும் மனிதன் அறிவில் முதிர்ச்சி அடைகின்ருன்; அவன் ஒழுக்கமும் விரிகின்றது. பிரிவின்மை என்னும் எண்ணம் தொடங்குகின்றது. மனிதர்கள் உணர்கிருர்களோ இல்லையோ, தன்னலமற்றவராகத் தூண்டும் ஒரு சத்தி இயங்கி அவர்களைத் தூண்டுகின்றது. இதுவே எல்லா ஒழுக்க இயலுக்கும் அடிப்படையென்று மொழியலாம். எந்த மொழியில் அறிவுரை வழங்கப்பட்டிருந்தால் என்ன! எந்தச் சமயத்தில் கூறப்பட்டிருந்தால் என்ன! வையகத்தில் எந்தத் தீர்க்கதரிசியால் நவிலப்பட்டிருந்தால் என்ன! இதுவே கடைந்து திரட்டி எடுக்கப்பட்ட அறநூலின் வெண்ணெயாகும். சுயநலமற்று இருங்கள்; 'எனதன்று உனதே,' என்பதுதான் எல்லா அறநூல்களின் சட்டங்களுக்கும் பின்னணியில் திகழ்வது. தனித்தன்மையின்மை என்பதை உணர்ந்துகொள்ளுவதுதான் இதன் பொருளாகும். நீங்கள் என்னுடைய ஒரு பகுதி. நான் உங்களுடைய ஒரு பகுதி. நான் உங்களைத் துன்புறுத்தினுல், என்னையே துன்பத்திற்கு ஆளாக்கிக் கொள்ளுகிறேன். உங்களுக்கு உதவி செய்யுங்கால், எனக்கே அவ்வுதவியைச் செய்து கொள்ளுகிறேன். நீங்கள் உயிர் வாழ்கின்ற பொழுது எனக்கு இறப்பு இருக்க இயலாது. இந்த உண்மைகளைத் தேர்தல் போதும்.

இந்தப் பிரபஞ்சத்தில் ஏதாவது ஒரு புழு உயிரோடு இருக்கிற நிலையில் நான் மரிக்க இயலுமோ? ஏனெனில், என்னுடைய உயிர் அந்தப் புழுவின் உயிரிலும் மிளிர்கின்றது. அதே சமயத்தில் அது நமக்கு ஒரு பாடங்கற்பிக்கின்றது. நாம் உதவி புரிவதில் நம் சகோதரர்களில் ஒருவரையும் புறக்கணிக்க இயலாது. ஏனெனில், அவர் நலத்தில் நம் நலம் தங்கியிருக்கின்றது.

வேதாந்தம் முழுவதிலுஞ் சரி, மற்றைய சமயத்திலுஞ்சரி, இப்பொருளே தான் ஊடுருவி ஒலித்துக்கொண்டிருக்கிறது. பொதுவாகச் சமயங்கள் மூன்று பகுதிகளாய்ப் பிரிந்து அமைகின்றன என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். முதற் பகுதியில் ஒவ்வொரு சமயத்தின் தத்துவமும், அதன் சாரமும், அதன் கொள்கைகளும் அடங்கியிருக்கின்றன. இந்தத் தத்துவங்கள் புராணத்தில் உருப்பெறுகின்றன. ஞானிகள், வீரர்கள், கின்னரர்கள், தெய்வங்கள், தெய்வ நிலையில் இருப்பவர்கள்—இவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் புராணத்தில் இடம் பெறுகின்றன; இந்தப் புராணத்தின் கருத்தனைத்தும் ஆற்றலை வலியுறுத்தவே அமைந்திருக்கின்றன. சற்று இழிவான புராணங்களில்—ஆதிகால மனிதன் கண்ட புராணங்களில்—இந்த ஆற்றலின் வடிவு ஒருவன் புய வலிமையைப் பற்றி நிற்பதைக் கண்ணுறுகின்றோம். அந்தப் புராணங்களில் சித்திரிக்கப்பட்டவர்கள் புய வலிமை பெற்ற அரக்கர்களே. ஒரு வீரன் உலகமனைத்தையும் வென்றுவிடுவான். மனிதன் அறிவில் முதிர முதிர, புய வலிமையைக்காட்டிலும் ஒரு சத்திக்கு உருக்கொடுக்க வேண்டும். ஆதலால், அவன் போற்றும் வீரர்கள் தங்கள் ஆற்றலுக்கு வேறோர் உயர்ந்த பொருளில் உருக்கொடுக்க வேண்டுமன்றோ? உயர்ந்த புராணங்களில் அறநெறியில் வாழுளும் நிலையில் நிற்கின்ற சான்றோர்கள் திகழ்கின்றார்கள். சிறந்த ஒழுக்கமுள்ளவர்களாகவும் தூய்மை உள்ளவர்களாகவும் தங்களை அமைத்துக் கொள்ளுகிற முயற்சியில் அவர்களுடைய ஆற்றல் புலனுகின்றது. அவர்கள் பொங்கி எழுந்து மோதி வருகின்ற பேரலையாம் தன்னலத்தோடும், நெறிபிறழும் இயல்போடும் தனித்தே போராடி அவ்வலையை முதுகு காட்டிப் பின்வாங்கும்படி செய்துவிடுவார்கள். எல்லாச் சமயங்களின் மூன்றும் பகுதி, உருவவழிபாடு அல்லது சின்ன வழிபாடாகும். அதைச் சடங்கென்றும், வடிவ முறையென்றும் கூறிவிடலாம். வீரர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் கோயில் கொண்டிருக்கும் புராணங்கள் வெளியிடுகிற உண்மையைக்கூட அறிந்துகொள்ளப் போதுமான ஆற்றல்

எல்லோரிடத்திலும் இல்லை. இதைவிடக் கீழ்ப்படியிலுள்ள மனங்களைப் பார்க்கின்றோம். குழவிகள் போன்று அவர்களுக்குப் பாலர் வகுப்புச் சமயங்கள் வேண்டியிருக்கின்றன. எனவே, இத்தகைய உருவவழிபாடுகள் விரிந்தன. ஐம்புலன்கள் தொட்டுப் பற்றி அறியக்கூடிய வடிவங்களைச் சான்றுகளாய்க் கொடுக்க வேண்டிய நிலைக்குச் சமயம் இறங்கிவிட்டது.

ஆகவே, ஒவ்வொரு சமயத்திலும் தத்துவம், புராணம், சடங்கு, என்னும் இத்தகைய படிகள் இருப்பதைப் பார்க்கின்றோம். வேதாந்தத்திற்கு மிகுதியான ஒரு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று வாதிக்கலாம். இந்தியாவில் நற்காலமாக இம்மூன்று முறைகளும் நன்கு வரையறுத்துப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மற்றைய சமயங்களிலோ, தத்துவங்களும் புராணங்களும் பிரிக்க இயலாதபடி ஒன்றோடு ஒன்று பின்னிக் கிடக்கின்றன. புராணங்கள் ஓங்கி வளர்ந்து தத்துவங்களை விழுங்கிவிட்டன; பல நூற்றாண்டுகளின் நீண்ட யாத்திரையில் தத்துவங்கள் மறைந்து போயின. தத்துவத்தின் விளக்கமும் சான்றும் தத்துவத்தையே மறைத்துவிடுகின்றன. மக்களோ, விளக்கத்தையும் தீர்க்க தரிசியையும் சமயப் பிரசாரகரையுமே காண்கின்றார்கள். தத்துவங்கள் பலவாகி, இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன என்றுதான் கூறவேண்டும். இயேசுநாதரை ஒதுக்கிவிட்டுக் கிறித்தவ சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களை மட்டும் ஒருவன் துணிந்து எடுத்து ஓதுவதாக வைத்துக்கொள்ளுவோம்; மக்கள் அத்தகையோனை எதிர்ப்பார்கள்; அவன் தவறு புரிந்ததாகக் கருதுவார்கள்; கிறித்தவ சமயத்தையே தாக்குகின்றான் என்றும் நினைப்பார்கள். இவ்வண்ணமே முகமதிய சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களை மட்டும் ஒருவன் வெளியிட்டால், முகமதியர்களும் இந்தச் சுருதியிலேதான் சிந்திப்பார்கள். ஏனெனில், ஏதோ உருவம் பெற்ற கருத்துகளும் சான்றோர்களுடைய வரலாறுகளும், இருடிகளின் சரிதங்களும் தத்துவங்களை முற்றிலும் பேரிருளில் ஆழ்த்திவிட்டன.

வேதாந்தம் மிகுந்த பயனை அளிக்கும் நிலையில் இருக்கிறது. அது ஒரு தனித்த மனிதனால் வகுக்கப்பட்டதன்று. புத்த சமயம், கிறித்தவ சமயம், முகமதிய சமயம் இவை புரிவனபோல, இருடியும், பிரசாரகனும் தத்துவங்களை விழுங்குவதற்கோ, அல்லது இருளில் ஆழ்த்துவதற்கோ இந்த வேதாந்தம் சிறிதும் இடந்தரவில்லை. தத்துவங்கள் நிலையாயிருக்கின்றன; இருடிகள் சற்றுத் தாழ்ந்த இடந்தான் பெறுகின்றார்கள். இவர்களை வேதாந்தம்

காணவில்லை. உபநிடதங்கள் ஒரு குறிப்பிட்ட இருடியைப்பற்றி உரைக்கவில்லை. ஆனால், பல இருடிகளையும், ஞானப் பெண்மணிகளையும் பற்றி அவை கூறுகின்றன. பண்டைய ஹீப்ரு மக்களிடையே இது போன்ற கருத்து உலவியதாகத் தெரிகின்றது. ஆனால், ஹீப்ரு இலக்கியத்தில் மோசஸ் என்பவர் மிகுந்த விரிவான இடத்தைப் பெறுகின்றார். இத்தகைய இருடிகள் சமயத்துறையில் நாட்டு மக்கள்மீது ஆணை செலுத்துவது தவறு என்பது என்னுடைய கருத்தன்று. ஆனால், உண்மைத் தத்துவ மண்டலத்தின் காட்சியை அறவே மக்கள் இழந்துவிட்டால், அது பேரின்னலை விளைத்துவிடும். தத்துவங்கள் சம்பந்தப்பட்ட வரையில் மிகுதியான உடம்பாடு நமக்கு இருக்கும்; ஆனால், சான்றோர்களைப் பற்றிக் கருத்து மிகவும் வேறுபடும். அவர்கள் நம் உணர்ச்சிகளைத் தூண்டுவார்கள்; தத்துவங்களோ, இவற்றைவிட மேலான ஒன்றைக் கவரும்; நம்முடைய அமைதியான பகுத்தறிவுக்கு விருந்தாய்த் திகழும். தத்துவங்கள் நீண்ட கால இறுதியில் வெற்றி கண்டே தீரும்; அதுதான் உண்மையான பேராண்மையாகும். உணர்ச்சிகள் நம்மைப் பல சமயங்களில் விலங்கின் நிலைக்கு இழுத்துச் சென்றுவிடும். உணர்ச்சிகளே, அறிவின் ஆற்றலைவிட ஐம்புலன்களோடு தான் மிகுதியான தொடர்புள்ளனவாயிருக்கின்றன. ஆதலால், உணர்ச்சிகள் அரசு செலுத்துங்கால், தத்துவங்கள் இருக்கிற இடம் தெரியாமல் போய்விடும். அந்நிலையில் சமயங்கள் வெற்று மத வெறியாயும் இனச் சழக்குகளாயும் மாறி, இழிவான நிலைக்கு இறங்கிவிடும். அரசியல்வாதிகளின் வகுப்புச் சண்டைகள் போலவே இவையும் காட்சி அளிக்கின்றன. மிகவும் அச்சுறுத்தும் மூடத்தனமான கொள்கைகளைப் பின்பற்றி அவற்றை நிலைநாட்டத் தம் சகோதரர்களின் கழுத்தையும் அறுக்க ஆயத்தமாயிருப்பார்கள். அம்மகா புருஷர்களும் தீர்க்கதரிசிகளும் நற்செயலைத் தூண்டும் சக்தியாய்த் திகழ்ந்தாலும், அவர்கள் விளக்கந் தரும் தத்துவங்களை அவர்கள் வாழ்க்கையே புறக்கணிக்குமாயின், அவை பேரின்னல்களை விளைத்துவிடும். இந்நிலை மத வெறிக்கு ஒருவனை உள்ளாக்கிவிடும். இதனால், உலகம் முழுவதும் குருதி வெள்ளமாய்ப் போய்விடும்.

வேதாந்தம் இச்சிக்கலை நீக்கிவிடும். ஏனெனில், அதற்குத் தனிப்பட்ட ஒரே தீர்க்கதரிசியில்லை. அது பல தீர்க்கதரிசிகளைக் கொண்டது. அவர்களை இருடிகள் என்று வழங்குவார்கள். அவர்களை அறிவுமிக்க சான்றோர்கள் என்றும் கூறலாம். 'உண்மை

யைக் கண்டவர்கள்' என்பதுதான் அதன் கலப்பற்ற மொழி பெயர்ப்பாகும். இவ்வுண்மைகளுக்கு 'மந்திரம்' என்று முடி சூட்டியிருக்கின்றனர்.

மந்திரம் என்னும் சொல்லிற்குச் 'சிந்தனையிலிருந்து வழிந்தது,' என்று பொருள் கூறலாம். 'மனத்தால் ஆழ்ந்து சிந்திக்கப்பட்டது,' என்றும் மொழியலாம். இருடியர் என்பவர் இந்த உண்மைகளைக் கண்டவராவர். இவை குறிப்பிட்ட பெயர்களின் செல்வமன்று. ஒருவனோ, ஒருத்தியோ எத்தகைய சிறப்பு வாய்க்கப் பெற்றிருந்தாலும், அவனுக்கும் அவளுக்கும்மட்டுமே இவை உரிய சொத்தல்ல. புத்தபிரான் போல்பவரையும், இயேசுநாதர் போல்பவரையும் உலகிற்கு ஈந்த மிக்க சான்றோர்களும் இவற்றைத் தமக்கே சொந்தமென்று உரிமை பாராட்ட இயலாது. மிகச் சிறந்த சான்றோரான புத்தருக்கு எவ்வளவு உரிமையுண்டோ, அவ்வளவு உரிமை கடையரிலும் கடையனை ஒருவனுக்குண்டு. இயேசுநாதருக்கு எவ்வளவு உரிமை உண்டோ, அவ்வளவு உரிமை நிலத்தில் ஊர்கின்ற ஒரு புழுவுக்கும் உண்டு. ஏனெனில், இத்தத்துவங்கள் பிரபஞ்சப் பொதுவான தத்துவங்களே. இவை ஒருவராலும் படைக்கப்படவில்லை. இவை எக்காலத்திலும் இருந்தே வருகின்றன; இப்பொழுதும் இருக்கின்றன. இவை விஞ்ஞானம் நமக்குக் கற்றுக் கொடுக்கும் விதிகளைப் பின்பற்றி அமைந்தவை அல்ல; படைக்கப்பட்டவையுமல்ல; கரந்தே கிடந்தன; பிறகு வெளியாகின்றன; இயற்கையில் எஞ்ஞான்றும் இருந்து வருகின்றன. நியூட்டன் பிறக்கவில்லை எனினும், இயற்கையின் ஈர்க்கும் சத்தி இருக்கத்தானே செய்யும்? அது இயங்கத்தான் செய்யும். அதையெடுத்து விளக்கி மனித இனத்தின் உணர்வுக்குப் புலனாகச் செய்த பேறு நியூட்டனின் சிறந்த அறிவைச் சார்ந்ததாகும். அந்நிலையிலே தான் இச்சமய விதிகளும், மிகச் சிறந்த ஆன்மிகப் பேருண்மைகளும் இருக்கின்றன. இவை எக்காலத்திலும் இயங்கிக் கொண்டே இருக்கின்றன. வேதங்கள், வீவிலியம், கொரான் போன்ற நூல்களுள் எதுவுமே இல்லையென்று வைத்துக்கொள்ளுவோம். இருடிகளும் தீர்க்கதரிசிகளும் இல்லையென்றே வைத்துக்கொள்ளுவோம். எனினும், இந்த விதிகள் இந்த தத்துவங்கள் இருந்தே தீரும். இவை உள்ளடங்கிக் கிடந்தனவே ஒழிய, வேறில்லை. பிறகு படிப்படியாய் இவை உறுதியாய் இயங்கி மக்கட் சமுதாயத்தை உயர்த்தும் மனித இயல்பையும் உயர் நிலைக்கு உய்க்கும். தீர்க்கதரிசிகளே இவற்றை உணர்ந்தவர்கள்; கண்டுபிடித்தவர்கள். ஆன்மிகத்

துறையில் உண்மைகளைக் கண்டுபிடித்தவர்கள் என்று அவர்களைக் கூறலாம். பௌதிக விஞ்ஞானத் துறையில் எப்படி நியூட்டனும் கலிலியோவும் உண்மையைக் கண்டார்களோ, அப்படியே ஆன்மிகத் துறையில் இந்த இருடிகள் உண்மையைக் கண்டார்கள். இந்த உண்மைகள்பால் இவர்கள் தனி உரிமை பாராட்ட இயலாது. இவை இயற்கை அனைத்திற்கும் பொதுவான செல்வமாகும்.

இந்துக்கள் கூறுவது போல வேதங்கள் எக்காலத்திலும் உள்ளன. அவ்வாறு அவர்கள் கூறும் கருத்து நமக்கு இப்பொழுது விளங்குகின்றது. இயற்கைக்கு எப்படித் தொடக்கமும் முடிவும் இல்லையோ, அப்படியே இந்த விதிகளுக்கு ஆதியுமில்லை, அந்தமும் இல்லை. புவிக்கு மேல் புவிகள் தோன்றும்; மண்டலங்களுக்குள் மண்டலங்கள் பிறக்கும். சில காலம் இவை இயங்கி மீண்டும் குழப்பப்பாழில் ஒன்றிவிடும். ஆனால், பிரபஞ்சம் ஒன்றாய்த்தான் திகழ்கின்றது. கோடிக்கணக்கான மண்டலங்கள் தோன்றும்; கோடிக்கணக்கான மண்டலங்கள் அழிவுறும். பிரபஞ்சம் அப்படியேதான் நிற்கும். ஒரு குறிப்பிட்ட கிரகத்தின் தோற்றம், மறைவுகளின் காலத்தைச் சுட்டலாம். பிரபஞ்சம் சம்பந்தப்பட்ட வரையில், அது கால அளவிற்கு உட்பட்ட பொருள் அன்று. அதுபோலவே இயற்கையின் விதிகள், பௌதிக விஞ்ஞான விதிகள், மனம் சம்பந்தமான விதிகள், ஆன்மிக விதிகள் ஆகிய இவை தொடக்கமும் முடிவும் அற்றவைகளாய் இருக்கின்றன. ஆனால், இவற்றை மனிதன் விளக்க முயன்றதெல்லாம் ஒரு சில ஆண்டுகளிலேதான். அதாவது, ஆயிரக்கணக்கிலே என்று கணக்கிடக் கூடிய கால எல்லைக்குள்ளே என்றுதான் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. மிகப்பரந்த ஒன்று—கால எல்லையில் சிக்காதது—அப்படியேதானிருக்கிறது. ஆகையால், முதன் முதல் வேதங்களிலிருந்து கற்ற பாடம் இதுவே. சமயம் என்பது இப்பொழுதுதான் தொடக்கமாயிருக்கிறது. கங்கு கரையிலா ஆன்மிக ஞானக் கடல் நம்மால் கண்டுபிடித்து விளக்கப்படுவதற்கென்றும் வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கென்றும் நம் முன் விரிந்து கிடக்கிறது. இந்த ஞாலம் பல்லாயிரக் கணக்கிலே இருடிகளைக் கண்டு விட்டது; கோடிக்கணக்கான இருடிகளையும் காணப் போகின்றது.

பண்டைய நாட்களில் ஒவ்வொரு மக்கட் சமுதாயத்திலும் பல தீர்க்கதரிசிகள் தோன்றின காலங்களுண்டு. உலகிலுள்ள ஒவ்வொரு நகரத்தின் ஒவ்வொரு தெருவிலும் இருடிகள் நட

மாடும் காலத்தைக் காணும் தருணம் வரலாம். பண்டைக் காலங்களில் குறிப்பிட்ட தனித்த மனிதர்கள்—இயங்கும் சமுதாயச் சட்டங்களைத் தேர்ந்தெடுக்கும் மனிதர்கள்—இவர்களே தீர்க்க தரிசிகளானார்கள். சமய உணர்ச்சி எய்துவதென்பது, தீர்க்க தரிசியாகத் திகழ்வதே. ஒருவனோ, ஒருத்தியோ, தீர்க்கதரிசியாய் மிளிர்ந்தாலேதான் சமய உணர்ச்சி வாய்க்கப் பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள். இப்படிச் சிந்திக்கும் காலம் வந்துகொண்டிருக்கிறது. இத்தகைய எண்ணங்களைச் சிந்திப்பதிலேயோ, கருத்துகளை வெளியிடுவதிலேயோ சமயத்தின் மருமம் உறைய வில்லை என்பதை நாம் அறிவோம். ஆனால், மறைகள் சாற்றுகிற வண்ணம், அவற்றைக் கண்டு உணரவேண்டும். இதுவரையில் உணரப்பட்டுள்ள கருத்துகளையும் கடந்து மேன்மேலும் புதிய உண்மைகளைத் தேர்ந்து அறிந்து, அவற்றை மக்கட் சமுதாயத் திற்குக் கொண்டு வரவேண்டும். 'சமயக் கல்வி' என்பது, இருடிகளைப் படைக்கும் பயிற்சியேயாகும். பள்ளிகளும் கல்லூரிகளும் இருடிகளுக்காக அமைக்கப்பட்ட பயிற்சிச் சாலைகளாகும். இவ்வையக முழுவதுமே இருடிக் குழாமாய் இலங்கவேண்டும். ஒரு மனிதன் இருடியாகாத நிலையில் சமயம் நகைப்புக்கிடமாகும். ஒரு வசைச்சொல் அம்பிற்கு இலக்காய்ப் போய்விடக் கூடும். சமயத்தைக் காணவேண்டும்; உணரவேண்டும். ஒரு சுவரைக் காண்பது எவ்வளவு தெளிவாயிருக்கிறதோ, அதைக் காட்டிலும் பல்லாயிர மடங்கு விளக்கமான உணர்ச்சியோடு அதைத் தேரவேண்டும்.

சமயத்தின் பற்பல தோற்றங்களின் அடிப்படையாக ஒரே கொள்கைதான் மிளிர்கின்றது. அது ஏற்கெனவே ஒரு படம் போல் வரையப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு விஞ்ஞானமும் ஒருமையைக் கண்டதும், அது முடிவடையும். ஏனெனில், அதற்கப்பால் செல்ல இயலாது. பூரணமான ஒருமையை எய்தியதும் அந்த விஞ்ஞானம் நமக்கு இயம்ப எவ்வகையான விதிகளும் எஞ்சி நிற்கவில்லை. சமயங்கள் புரியவேண்டிய அலுவல், விவரங்களைப் பிரித்துக்காட்டுவதேயாகும். ஏதாவது ஒரு சாத்திரத்தை—சான்றாக இரசாயன சாத்திரத்தை எடுத்துக்கொள்ளுவோம். எல்லா மூலகங்களையும் அமைக்கக்கூடிய ஒரு மூலகம் நமக்குக் கிடைக்குமாயின், இரசாயனம் சாத்திர முறையில் பூரணத்தை அடைந்ததாய்விடும். அப்பால் புரியவேண்டிய செயல் யாது? இந்த ஒரு தாதுவிலிருந்து ஒவ்வொரு நாளும் பல் வகைக் கூட்டுப் பொருள்களைச் சேர்த்து வாழ்க்கையில் பல செயல்களில்

பயன்படுத்திக் கொள்ளும் முறையைக் கண்டு பிடிப்பதுதான் எஞ்சி நிற்கும். அவ்வண்ணமே சமயமும் நிற்கின்றது. பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பே சமய சம்பந்தமான மாபெருங் கொள்கைகளும் அவற்றின் விரிவும், திட்டமும் கண்டுபிடிக்கப் பட்டுவிட்டன. அப்பொழுது 'நானே அவன்' என்ற வேதங்களின் இறுதியான 'மகா வாக்கியம்' என்று வழங்கப்படுகிற ஒன்றை மனிதன் கண்டுவிட்டான். அந்தப் பரம்பொருளில் சடப் பிரபஞ்சமும், மன உலகமும் ஒருமை காண்கின்றன. இந்த மெய்ப்பொருளைக் 'கடவுள்' என்றும் 'பிரம்மம்' என்றும் 'அல்லா' என்றும், 'ஜிகோவா' என்றும், இன்னும் பல பெயர்களைக் கொண்டு திகழ்கிறதென்றும் அவர்கள் வழங்குகின்றுர்கள். இதற்கப்பால் செல்ல இயலாது. நமக்காக அந்த மிகச் சிறப்பான தத்துவம் படம்போல் வரையப்பட்டுவிட்டது. நமது அலுவல் அதன் விவரங்களை நிரப்புவதேயாகும்; நம் வாழ்க்கைப் பகுதிகளுள் ஒவ்வொன்றிலும் அதைப் பயன்படுத்திக்கொள்வதே யாகும். ஒவ்வொருவரும் ஒவ்வோர் இருடியாய் இலங்கும் பொருட்டு இந்தப் பெருஞ் செயலில் இப்பொழுது இறங்க வேண்டும். நம் முன் விரிந்து நிற்பது இம்மாபெரும் பணியே யாகும்.

பண்டைக் காலங்களில் இருடி என்ற சொல்லின் பொருள் யாதென அறியாத மனிதர்களுண்டு. ஏதோ தற்செயலாய்-அதிருஷ்டவசமாய்-ஒரு மனத்தின் தீர்மானத்தின் ஏவுதலாலோ, அல்லது சிறந்த அறிவுச் சத்தியாலோ, மனிதன் உயர் ஞானத்தைப் பெற்ருன் என்று அவர்கள் கருதினர்கள். எத்தகையவனுயிருந்தாலுஞ் சரி; எந்த நிலையில் இருந்தாலும் சரி; இந்த ஞானம் ஒவ்வொருவனுக்குமுரிய பிறப்புரிமை என்பதை இந்த நவீன காலத்தில் மெய்ப்பிக்க முடியும். இந்தப் பிரபஞ்சத்தில் தற்செயல்-அதிருஷ்டவசம்-என்ற ஒன்று இல்லை என்பதை உணர்த்த முடியும். நாம் நினைக்கிறபடி ஒருவனுக்கு ஒன்று தற்செயலாய்க் கிடைக்கிறதாயிருந்தால், அவன் அதற்காகப் பையப் பையவும் திண்ணமாகவும் ஊழிக்காலம்வரை உழைத்தே இருந்திருக்கவேண்டும். அந்நிலையில் நம்மீது எழுகின்ற முழுவினவும் இதுவே. நாம் ஞானிகளாகத் திகழ விரும்புகின்ருேமா? விழைந்தால், நாம் ஞானிகளாய் விடுவோம்.

நம்முன் நிற்கிறது, நம்மனைவரையும் இருடிகளாகத் திகழ வைக்கும் பயிற்சியாம் சிறந்த அலுவலாகும். விழித்த அறிவுடனே, அல்லது அறியாமலோ எல்லாச் சமயங்களின் அமைப்பு

முறைகளும் இந்த இலட்சியத்தை நாடியே பணியாற்றுகின்றன. ஆனால், இம்முறைகளில் இந்த மாறுபாடு இருக்கிறது. நேர்முகமாக ஆன்மீக அனுபவம் இந்தப் பிறப்பிலே காண முடியாதென்றும், மனிதன் இறக்கத்தான் வேண்டுமென்றும், இறந்தபின் மற்றோர் உலகத்தில் ஆன்மிகக் காட்சிகளைக் காணும் காலம் அரும்புமென்றும், இப்பொழுது நம்புகின்ற ஒன்று மெய்ப்பொருளாய்த் திகழுமென்றும் பல சமயத்தவர் பகர்கின்றனர். இப்படி மொழிகின்றவர்களை நோக்கி, 'ஆன்மிகம்' என்ற ஒன்று உண்டு என்று உங்கட்கு எப்படித் தெரியும்? என்று வேதாந்தம் வினவுகின்றது. கண்டறியப்படாதவை காண முடியாதவை இவற்றைப் பற்றிய காட்சிகளைச் சிறிதளவேனும் சிறந்த தனிப்பட்ட யாரோ ஒரு சிலர் இந்தப் பிறவியிலேயே பெற்றிருக்கவேண்டும் என்ற விடையைத்தான் அவர்கள் அளிக்க நேரிடும்.

இப்படி மொழிவதிலும் ஓர் இடர்ப்பாடு எழும். தனிப்பட்ட சிறப்புவாய்ந்தவர்கள் இந்த ஞானத்தைத் தற்செயலாய்ப் பெற்றார்கள் என்றால், அதை நாம் நம்ப இயலுமோ? நமக்கு ஒன்று விளங்காதென்றால் அதைத் 'தற் செயல்' என்று நம்புவது பாவமே ஆகும்.

'ஞானம்' என்பது என்ன? அது தனி இயலை மாய்ப்பதே. ஒரு சிறுவன் ஒரு தெருவிலோ, அல்லது விலங்குக் காட்சிச் சாலையிலோ ஒரு தனிப்பட்ட உருவம் பெற்ற விலங்கைக் கண்ணுறுவதாக வைத்துக்கொள்ளுவோம். அது இன்னது என்பது அவனுக்குத் தெரியாது. பிறகு இத்தகைய விலங்குகள் நூற்றுக்கணக்காக இருப்பதை அயல் நாட்டுக்குச் சென்று உணர்கின்றான். அவன் மனத்திற்கு ஓர் ஆறுதல் ஏற்படுகின்றது. அது எந்த இனத்தைச் சார்ந்தது என்பதும் புலனுகின்றது. நம்முடைய ஞானம் இந்த அடிப்படையான தத்துவத்தை அறிவதே. ஞானமின்மை என்பது அடிப்படைத் தத்துவத்தின் தொடர்பின்றி ஒரு தனிப் பொருளைக் காண்பதேயாகும். அடிப்படைத் தத்துவத்தின் சம்பந்தமில்லாமல் ஒரு பொருள் அல்லது பல பொருள்களை அறிய முற்படும்பொழுது நாம் அஞ்ஞான இருளில் ஆழக் காண்கின்றோம். நாம் உண்மையை அறிகின்றோமில்லை. அவர்கள் மொழிகின்றபடி, இத்தகைய தீர்க்கதரிசிகள் தனிப்பட்ட மனிதர்களென்றும், அப்பாலைப்பற்றிய காட்சியின் ஒளியினைச் சிறிது கண்டார்களென்றும், மற்ற எவர்க்கும் அத்தகைய உரிமை இல்லையென்றும் சொல்கின்ற ஒரு நிலை இருக்குமாயின், நாம் அந்தத் தீர்க்க தரிசிகளை நம்ப இயலாது. ஏனெனில், அவை

பொது விதியின் தொடர்பற்ற தனி விஷயங்களாய் விடும்.
நாமும் அவர்கள் போல இருடியாகின்ற பொழுதுதான் அவர்களை
நாம் நம்புவதற்கு இயலும்.

கடற் பாம்பைப் பற்றி நகைச்சுவை ததும்பும் பேச்சுகளைப்
பத்திரிகைகள் வாயிலாகக் கேட்டிருப்பீர்கள். அப்படி நிகழ்வா
னேன்? அவ்வப்பொழுது நீண்டகால இடைவெளிகளிலே ஒரு
சிலர் வந்து கடற் பாம்பைப்பற்றிய கதைகளைச் சொன்னார்கள்.
ஆனால் அதை மற்றவர்கள் பார்த்ததில்லை. ஓர் அடிப்படையான
குறிப்பிட்ட தத்துவத்தோடு தொடர்புபடுத்திக் கூறவில்லை.
ஆதலால், உலகம் அதை நம்பவில்லை. 'ஓர் இருடி காற்றில்
மறைந்து அது வாயிலாகச் சென்றார்,' என்று ஒருவன் என்
னிடம் வந்து கூறினால், நானும் அதைக் காணும் உரிமை
உள்ளவனாவேன். 'உன் தந்தையோ உன் பாட்டனோ அதைக்
கண்டதுண்டா?' என்று நான் வினவுவேன். அப்பொழுது,
'கண்டதில்லை, ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இத்தகைய
நிகழ்ச்சி நேர்ந்தது,' என்று அவன் விடை அளிப்பான். நான்
அதை நம்பவில்லை என்றால், ஒழிவில் காலமெல்லாம் என்னை
வெந்தீயில் முழுமையாக வறுக்கட்டும் என்று கூறுவான்.

என்ன மூட நம்பிக்கையின் மூட்டை அல்லது திரள் இது!
இதன் விளைவு யாதெனில், நம்மைத் தெய்வ நிலையிலிருந்து
விலங்கியல் நிலைக்கு இழுத்துச் செல்லுவதே. இப்படி எதையும்
நம்ப வேண்டுமானால், பகுத்தறிவு நமக்கு ஏன் அளிக்கப்பட
வேண்டும்? பகுத்தறிவுக்குப் பகையாய் எதையும் நாம் ஏற்றுக்
கொள்ளுவதென்றால், அது மிகப் பெரிதான தெய்வ நிந்தனையை
நிகர்க்கும். கடவுள் நமக்கு நல்கிய பகுத்தறிவாம் செல்வத்தைப்
பயன்படுத்தாமலிருப்பதற்கு நமக்கென்ன உரிமை இருக்கிறது?
பகுத்தறிவின் துணையை நாடிப் பயன்படுத்திக்கொண்டு நம்பாம
லிருக்கும் ஒருவனை ஆண்டவர் மன்னிப்பார் என்பது திண்ணம்
என்று நான் நினைக்கின்றேன். ஆனால், பகுத்தறிவுச் சக்தி
களைப் பயன்படுத்திக்கொள்ளாமல் கண்மூடித்தனமாய் நம்புகிற
ஒருவனுக்கு ஆண்டவர் மன்னிப்புத் தரமாட்டார். அவன் தன்
இயல்பை இழிவுபடுத்திக்கொள்ளுகிறான்; விலங்கின் நிலைக்கு
இறங்கிவிடுகின்றான்; தன் ஐம்புலன்களையும் மாசுறுத்தி மரணம்
எய்துகிறான். நமக்கு அறிவு மிளிர்கின்றது. ஒவ்வொரு நாட்டி
லும் பண்டைய நூல்களில் கூறப்படுகிற சான்றோர்கள் தீர்க்கதரிசி
கள் இவர்களைப் பற்றிய உண்மையைப் பகுத்தறிவு வலியுறுத்து
மாயின், அவர்களிடத்தில் நாம் நம்பிக்கை வைக்கலாம். அத்

தகைய தீர்க்கதரிசிகள் நம்மிடையே தோன்றக் காண்போமாயின், அப்பொழுது நம்பக்கூடும். அவர்கள் தனிப்பட்ட மனிதர்களல்லர்; ஏதோ சில கொள்கையின் விளக்கங்களே தவிர வேறன்று. அவர்கள் அரும்பாடுபட்டார்கள்; அந்தத் தத்துவம் இயற்கையாகவே உருப்பெற்றது. நாமும் அத்தகைய தத்துவம், நம்முளே தோன்றுவதற்கு உழைத்தே தீரவேண்டும். அவர்கள் தீர்க்கதரிசிகளே; நாமும் தீர்க்கதரிசிகளாய்த் திகழ்ந்தால்தான் அவர்களைத் தீர்க்கதரிசிகள் என்று நம்பமுடியும். தெய்வப் பொருள்களை நேரில் அவர்கள் கண்டார்கள். ஐம்புல எல்லைகளைக் கடந்து அப்பாலுள்ள ஒன்றின் ஒளிக்கதிரின் காட்சியைப் பெற்றார்கள். நாமும் இத்தகைய பேற்றை அடைய இயலும் பொழுதுதான் இதை நம்ப முடியும்; அதற்கு முன்பன்று.

இதுதான் வேதாந்தத்தின் ஒரே தத்துவமாகும். சமயம் என்பது 'இங்கே', 'இப்பொழுதே' என்று அது சாற்றுகின்றது. இம்மை வாழ்வு, மறுமை வாழ்வு, உயிர் வாழ்வு, இறப்பு, இவ்வுலகம், அவ்வுலகம் இவற்றைப்பற்றிய வினாக்கள் மூடநம்பிக்கையிலிருந்தும் காய்தல் உவத்தல் (விருப்பு வெறுப்பு) என்ற இரண்டிலிருந்தும் எழுந்தவைதாம். நாமாக எழுப்புகிற தடையைத்தவிர, கால ஓட்டத்தில் யாதொன்றுமில்லை. பத்து மணிக்கும் பன்னிரண்டு மணிக்கும் என்ன மாறுபாடு இருக்கின்றது. இயற்கையில் காணப்படுகிற சில மாறுதல்களைக்கொண்டு நாமே ஒன்றை அமைப்பதைத்தவிரப் பிறிதன்று. கால ஆறு இடையறாது ஓடிக்கொண்டுதான் இருக்கிறது. 'இந்த வாழ்வு, அந்த வாழ்வு' என்று சொல்லிக்கொள்ளுவதில் என்ன பொருள் தங்கியிருக்கிறது? எல்லாம் காலத்தைப் பொறுத்தனவாயிருக்கின்றன; காலப்போக்கில் இழந்த ஒன்றை நாம் ஆற்றும் தொழிலின் விரைவைக்கொண்டு ஈடுசெய்து விடக்கூடும். இக்காரணம் பற்றியே சமயத்தை—ஆன்மிகத் தத்துவத்தை—இங்கேயே உணர்ந்து மெய்ப்பிக்கவேண்டும் என்று வேதாந்தம் விளம்புகின்றது. நீங்கள் ஆன்மிகச் செல்வத்தை அடையவேண்டுமென்றால், ஆன்மிக உணர்ச்சியற்ற நிலையிலிருந்தே தொடங்கவேண்டும். மேன்மேலும் உழைத்துப் பொருள்களை உணர்ந்து, அவற்றை நேரில் நீங்களே காணவேண்டும். இதைச் செய்து முடித்தால்தான் நீங்கள் சமய ஒளியைக் கண்டவர்களாவீர்கள். அதற்கு முன்பு நீங்கள் நாத்திகர்களைவிட,மேற்படியில் இல்லை; அவர்களைவிட இழிவான நிலையில் இருக்கின்றீர்கள் என்றுதான் இயம்பவேண்டும். ஏனெனில், நாத்திகனே, 'இவற்றைப்பற்றி நானறி

யேன்!' என்று நிமிர்ந்து நின்று அச்சமின்றிக் கூறுகிறன். அவனிடம் உண்மை ஒளி வீசுகிறது. மற்றவர்களோ, ஒன்றும் அறிந்திலர். ஆனல், "நாங்கள் சமயப்பற்று மிகுதியும் வாய்க்கப் பெற்றவர்கள்" என்று உலகமெங்கும் முரசடித்துக் கொள்ளு கின்றனர். எத்தகைய சமயம் அவர்களிடத்தில் திகழ்கின்றதோ, அதை ஒருவரும் அறியார். ஏனெனில், அவர்கள் பாட்டி சொன்ன ஏதோ ஒரு கதையை ஆராயாமலே அப்படியே விழுங்கியவர்கள். புரோகிதர்கள், 'இதை நம்பு,' என்று அவர்களிடத்தில் சொல்லி யிருக்கவேண்டும். 'அப்படி நம்பவில்லையேல், யாதாகுமோ நாங்கள் அறியோம்,' என்று எச்சரிக்கையும் அவர்கள் செய் திருக்கவேண்டும். இவ்வண்ணந்தான் இம்முறைகள் செல்லு கின்றன.

சமயத்தை அனுபூதியாக்குவது ஒன்றே தக்க பாதையாகும். அதை, நாம் ஒவ்வொருவரும் கண்டுபிடித்தே தீரவேண்டும். அப் படியானல் இந்த நூல்கள்—உலகில் காணும் ஆன்மிக நூல்கள்—எதற்காக? நாட்டுப் படங்கள்போல அவை நமக்குப் பயன்தரும். என் ஆயுள் முழுதும் இங்கு வருவதற்கு முன்பு இங்கிலாந்துப் படத்தைப் பார்த்திருக்கிறேன். அது எனக்கு இங்கிலாந்தைப் பற்றிய கருத்தை ஓரளவு பெற உதவி அளித்திருக்கிறது. ஆனல், நான் நேரில் கண்ட நாட்டிற்கும் படத்தில் நோக்கிய நாட்டிற்கும் எவ்வளவு பெரிய மாறுதல் இருக்கிறது! அத்தகைய வித்தியாசம் இருக்கிறது ஆன்மிக அனுபூதிக்கும் ஆன்மிக சம்பந்தமான நூல் களைப் படிப்பதற்கும். இந்நூல்கள் படங்களைப்போலக் காட்சி அளிக்கின்றன. பண்டைய மனிதர்களின் அனுபவங்கள், அதே அனுபவங்களைத் துணிந்து பெறுவதற்கும், அம்முறையிலேயே மெய்ப்பொருளைக் கண்டுபிடிப்பதற்கும், இன்னும் அந்த அனு பவங்களைக் காட்டிலும் சிறந்த அனுபூதிகளைப் பெறுவதற்குமுரிய உந்தும் சத்தியாய்த் திகழ்கின்றன.

வேதாந்தத்தின் முதற்கொள்கை இதுதான். அனுபூதிதான் சமயமாகும். அனுபூதிச்செல்வனே சமய உணர்ச்சியைப் பெற்றவன். இப்படி உணராதவன் 'எனக்குத் தெரியாது,' என்று, சொல்லுகிறவனைவிட மேம்பட்டவன் அல்லன்; பார்க்கப் போனல் அவனைவிடக் கீழ்நிலையில் இருக்கிறன். தெரியாது என்று மொழிகிறவனிடம் உண்மை ஒளியாயினும் திகழ்கின்றது. இந்த அனுபவத்தைப் பெறுவதில் ஆன்மிக நூல்கள் மிகவும் துணைபுரியும்; வழிகாட்டிகள்போல மட்டுமன்றி, நமக்கு அறி வுரையும் வழங்கும். பயிற்சி முறைகளைக் கற்பிக்கவுஞ்செய்யும்.

ஏனெனில், ஒவ்வொரு சாத்திரமும் ஒவ்வொரு தனித்த ஆராய்ச்சி முறையை உடையது. 'நான் சமயப் பற்றுள்ளவனாக விரும்பினேன்; இப்பொருள்களைக் காண விழைந்தேன். ஆனால், என்னால் இயலவில்லை. அக்காரணத்தால் நான் ஒன்றையும் நம்பவில்லை,' என்று நவில்கின்ற பல மனிதர்களை உலகில் காண்கின்றோம். படித்த மனிதர்களிடையேயும் இத்தகையோர் இருக்கக் காண்பீர். 'என் ஆயுள் முழுதும் சமய உணர்ச்சி உடையவனாக இருப்பதற்கு முயன்றேன். அதில் ஒன்றுமில்லை' என்று உங்கட்கு உரைக்கின்ற பல பேர்களைப் பார்ப்பீர்கள். அதே தருணத்தில் இந்த நிகழ்ச்சியையும் நோக்குவீர்கள். ஒருவன் இரசாயன சாத்திரத்தில் தேர்ச்சியுள்ளவனாயிருக்கிறான்; அவன் ஒரு பெரிய விஞ்ஞானி ஆவன். இரசாயனத்தைப் பற்றி இயம்புவதாக வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுது நீங்கள் அவனிடம், 'இரசாயனத்தைப்பற்றி நாங்கள் ஒன்றையும் நம்பவில்லை. ஏனெனில், நாங்கள் எங்கள் ஆயுட்கால முழுதும் இரசாயன விஞ்ஞானியாகத் திகழ வேண்டுமென்று முயன்றும் பயன் எய்தினோம் அல்லோம்,' என்று மொழிவீர்களானால், அவன், 'நீங்கள் எப்பொழுது முயன்றீர்கள்?' என்று கேட்பான். நான் படுக்கைக்குத் துயிலச் சென்றபொழுது, 'ஓ இரசாயனமே, என்னிடம் வருவாயாக' என்றேன்; அது வரவில்லை. இதுவும் அதே கதைதான். இரசாயன விஞ்ஞானி உங்களைக் கண்டு நகைத்துவிட்டு, 'அப்பனே, அது வழி அன்று, ஏன் இரசாயனச் சாலைக்குச் சென்று எல்லா அமிலங்களையும் காரங்களையும் எடுத்துக்கொண்டு ஏன் அடிக்கடி உங்கள் கைகளைப்பொசுக்கிக் கொள்ளவில்லை? அப்படிச் சுட்டுக்கொள்ளுவதுதான் உங்களுக்கு இரசாயன வித்தையைக் கற்றுக் கொடுத்திருக்கும்' என்று சொல்லுகிறான். அத்தகைய அரும்பாடு சமய சம்பந்தமாக எடுத்துக்கொள்ளுகிறீர்களா? ஒவ்வொரு சாத்திரத்திற்கும் அதைக் கற்கும் முறை இருக்கிறது. அத்தகைய முறையிலேதான் சமயத்தையும் கற்க வேண்டும். அதற்குரிய முறைகளும் இருக்கின்றன. உலகத்திலிருந்த பண்டைய எல்லாத் தீர்க்கதரிசிகளிடமிருந்தும், ஏதோ ஒன்றைக் கண்டுபிடித்தவனிடமிருந்தும், சமயத்தை ஓர் அனுபூதியாக்கிக் கொண்டவனிடமிருந்தும் ஏதாவது ஒன்றைக் கற்றுக் கொள்ள இயலும்; கற்றே தீரவேண்டும். அவர்கள் தனிப்பட்ட சிறந்த முறைகளை நல்குவார்கள்; இவை மூலமாகத்தான் சமய உண்மைகளை உணர வேண்டும். அவர்கள் வாழ்நாள் முழுதும் போராடினார்கள்; மனப் பண்பாட்டைப் பற்றிய சிறந்த முறை

களைக் கண்டார்கள் ; மிகவும் நன்கு உணரும்படியான நிலைக்குத் தங்கள் நுட்பமான மனத்தை நிறுத்தி வைத்துக்கொண்டார்கள். இந்நிலையிலிருந்து அவர்கள் சமயத்தின் உண்மைகளைக் கண்டு கொண்டார்கள். சமய உணர்ச்சி பெறுவதற்கு, சமயத்தைக் காண்பதற்கு, சமயத்தை உணர்வதற்கு, ஒரு ஞானியாய்த் திகழ் வதற்கு—இம்முறைகளைப் பின்பற்ற வேண்டும்; இவற்றைச் செயல் முறைக்குக் கொணர வேண்டும். இப்படி முயன்ற பிறகு ஒன்றுமில்லை என்று கண்டால்தான், சமயம் சாரமற்றது என்று சொல்ல உரிமை உண்டு ; "முயன்றேன் ; தோல்வியுற்றேன்," என்று கூறக்கூடும்.

இதுதான் எல்லாச் சமயங்களின் செயல்முறைப் பகுதி யாகும். உலகத்திலுள்ள ஒவ்வொரு சமய நூலிலும் இதைத்தான் காண்கின்றோம். அவை தத்துவங்களையும் கொள்கைகளையும் கற்பிப்பதோடு நின்றுவிடவில்லை. ஒழுக்கமுறை இதுதான் என்று தெளிவாய் வரையறுக்கப்படாது போயினும், ஞானிகளின் வாழ்வுகளிலே இவ்வுண்மை உருவெடுக்கப் பார்க்கின்றோம். உண்ணும் உணவையும், பருகும் நீரையும் முறைப்படுத்தி விட்டார்கள். அவர்களைச் சூழ்ந்த பாமர மக்களிலிருந்து அவர் களுடைய முழு உயிர் வாழ்க்கை, அவர்களுடைய பயிற்சி, அவர் களுடைய முறை—இவை யாவுமே மாறுபட்டிருக்கின்றன. உயர்ந்த அவர்களுடைய ஆன்ம ஒளிக்கும் தெய்விகக் காட்சிக்கும் இவைதாம் காரணங்களாய்த் திகழ்கின்றன. இத்தகைய காட்சியை நாம் பெற விரும்பினுல், இத்தகைய முறைகளைப் பின் பற்ற வேண்டும். இடையருப் பயிற்சி, அரும்பாடு—இவைதாம் அந்நிலைக்கு நம்மை அழைத்துச் செல்லும்.

இக்காரணத்தால் வேதாந்தத்தின் திட்டம் இதுவேயாகும். முதன் முதலாகக் கொள்கைகளை நிறுவ வேண்டும். நம்முடைய குறிக்கோளைப் படம் போல் வரைதல் அதன் திட்டத்தைச் சார்ந்ததாகும். பிறகு அந்தக் குறிக்கோளை அடைய வேண்டிய முறையையும் கற்பிக்க வேண்டும். சமயத்தை உணர்ந்து அதை அனுபூதியாக அமைப்பதும் அதன் செயலாகும்.

மேலும் இம்முறைகள் பல்வேருய்த் திகழ வேண்டும். நம் இயல்புகளில் நாம் மாறுபட்டவர்கள். ஒருவருக்குரிய முறையை மற்ருெருவருக்கு அவ்வண்ணமே வழங்குதல் கூடாது. மனங்கள் சம்பந்தப்பட்ட வரையில் நாம் ஒவ்வொருவரும் விசித்திரமான தனித்தனி இயல்புகளைப் பெற்றவர்களாய் இருக்கிருேம். ஆதலால், முறையும் வேறுபடத்தான் செய்யும். சிலரை இயல்

பாகவே மிகவும் உணர்ச்சி வயப்பட்டவராய்க் காண்பீர்கள். வேறு
சிலரைத் தத்துவ ஆராய்ச்சியில் ஆழக்கூடிய இயல்பினராகப்
பார்ப்பீர்கள் ; மற்றுஞ் சிலரைத் தருக்க அறிவு மிகப் பெற்றவர்
களாக நோக்குவீர்கள். எல்லா வகையான சமயச் சடங்கு
களையும் பற்றும் இயல்பினராய் இலங்கும் இன்னுஞ்சிலரைக்
கண்ணுறுவீர்கள். அவர்கள் தொட்டு நுகரக்கூடிய பொருள்
களாய் ஒவ்வொன்றும் கட்புலனுக்குத் தோன்ற வேண்டும். எத்
தகைய சடங்கையோ உருவத்தையோ இவை போன்ற எதையுமே
கவனிக்காத மனிதன் ஒருவனை நீங்கள் காணலாம். இவை உயி
ரற்ற சவமாய்த் தோன்றும். ஆனல், மற்றொருவனே, தன் உடல்
முழுதையும் இரட்சைகளால் போர்த்திக்கொண்டு அச்சுமையைத்
தாங்கிச் செல்லுகிருன். இத்தகைய சின்னங்களை அவன்
மிகவும் விழைகின்ருன். உணர்ச்சி ததும்பும் இயல்புள்ள ஒருவன்,
ஒவ்வொருவருக்கும் அறஞ்செய்ய விரும்புகின்ருன். பிறர் துயர்
கண்டு அவன் அழுகின்ருன் ; மக்கள் மீது அன்பு காட்டுகின்
ருன் ; ஆதலின் இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்ற அவனைப்
போன்ற அனைவருக்குமே ஒரே முறையை அளிக்க இயலாது.
உண்மையை அடைய ஒரே முறை இருக்குமாயின், வேறுவித
மாய் அமைந்த ஒவ்வொரு மனிதனுக்கும் இது மரணத்தை
அளித்துவிடும். அக்காரணத்தால் முறைகள் வேறுபட்டிருக்க
வேண்டும். வேதாந்தம் இதை உணர்கிறது ; உலகத்தின் முன்பு
பல்வேறு முறைகளை விரிக்கின்றது. இவை வாயிலாக நாம்
ஆன்மிகத் தொழிலைப் புரியலாம். நீங்கள் விரும்பும் ஒரு முறை
யைப் பின்பற்ற முயல்வீர்களாக. ஒரு முறை தக்கபடி அமையாத
இடத்து, வேறு முறையைக் கைக்கொள்வீர்களாக. ஒரே
சமயத்தையே பின்பற்ற வேண்டுமென்று பலர் விரும்புவதுபோல
இல்லாமல், இந்தக் கோணத்தில் நின்று பார்த்தோமானல், பல
சமயங்கள் இவ்வையகத்தில் சிறப்புற்ருேங்கி மிகமிகச் சிறப்பைத்
தரும் என்பது நன்கு விளங்கும். பல குருக்கள், பல இருடிகள்,
நம்மிடையே இருப்பது எத்தனையோ நன்மைகளை நல்குமன்ருே?
முகமதியர்கள் இவ்வுலகமனைத்தும் முகமதியர்களாய்த் திகழ
வேண்டுமென்று கருதுகின்ருர்கள். கிறித்தவர்களோ, இஞ்
ஞாலம் கிறித்தவர்கள் உறைவிடமாய் ஒளிர வேண்டுமென்று
உன்னுகின்ருர்கள். பௌத்தர்கள் இப்பார் முழுதும் பௌத்தர்
களாய்ப் பொலிய வேண்டுமென்று நினைக்கின்ருர்கள். " ஒவ்
வொருவனும் விரும்புவானுயின் தனித்து இருக்கலாம். ஆனல்,
இந்தத்தத்துவம்—இந்த ஒருமை—அவன் பின்னணியில் நிற்கும்.

தீர்க்கதரிசிகள் தோன்றத் தோன்றப் புதிய புதிய நூல்கள் மலர மலர, இருடிகள் திகழத் திகழ, புத்தப் புதிய முறைகளும் விரியும். அவ்வளவுக்கவ்வளவு இக்குவலயத்திற்கு நன்மையாகும்'' என்று வேதாந்தம் விளம்புகின்றது. சமுதாய வாழ்க்கையில் எத்தனைக்கு எத்தனை தொழில்கள் இருக்கின்றனவோ, அத்தனைக்கத்தனை அந்தச் சமுதாயத்திற்கு நன்மையுண்டு. ஒவ்வொருவருக்கும் இந்தச் சமுதாயத்தில் பிழைப்பிற்கு வாய்ப்புக் கிடைக்கும். இவ்வண்ணமே கருத்துலகத்திலும் சமய மண்டலத்திலும் எல்லாம் நிகழ்கின்றன. விஞ்ஞானத்தில் பல பகுதிகள் இருப்பது எவ்வளவு நன்மையை அளிக்கிறது பாருங்கள்!

இத்தகைய பலவகைப்பட்ட தன்மையுடன் விரிந்திருக்கும் மனப் பண்பாட்டை ஒவ்வொருவரும் அடைய முடியுமன்றோ! பௌதிக உலகில் பலவிதமான பொருள்கள் நம் முன் விரியும் வாய்ப்பைப் பெறுவது மிகுந்த நன்மையன்றோ! இதனால் நாம் உவக்கும் சிறந்த பொருளை நாம் தேர்ந்தெடுக்க முடியும். இந் நிகழ்ச்சியையே சமய உலகத்திலும் பார்க்கின்றோம். இவ்வுலகில் பல்வேறு சமயங்கள் இருப்பது ஆண்டவருடைய மிகச் சிறந்த அருள் திட்டமாகும். ஆண்டவரே, ஒவ்வொரு நாளும் சமயங்களின் தொகை பெருகிக்கொண்டே போனால் எத்தனை அழகாயிருக்கும்! ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனி சமயம் இருக்குமன்றோ!

வேதாந்தம் இதை நன்கு உணர்ந்திருக்கிறது; ஆதலால், ஒரே மெய்ப்பொருளை உலகத்திற்கு எடுத்து ஓதுகின்றது; ஆனால், பல முறைகளை ஏற்கின்றது. யாரைப் பற்றியும் அது குறை கூறுகிறதில்லை. ஒருவன் கிறித்தவனாயிருக்கலாம்; ஒரு பௌத்தனாயிருக்கலாம்; ஒரு யூதனாயிருக்கலாம்; ஓர் இந்துவாயிருக்கலாம்; எந்தப் புராணத்தையும் நம்பலாம்; நாசரத்தில் தோன்றிய ஞானியை வழிபடலாம்; மெக்காவில் அவதாரமான ஒரு மகானுக்கு ஓர் அடியவனாகத் திகழலாம். இந்தியாவில் பிறந்த ஒரு தீர்க்கதரிசியைப் பின்பற்றுவிட்டாலும் உங்கள்பால் வேதாந்தம் யாதொரு குறையையும் சுமத்தாது. ஒவ்வொரு சமயத்திற்கும் பின்னணியில் நிற்கின்ற ஒரு பெருந் தத்துவத்தைத்தான் அது ஓதுகின்றது. தீர்க்கதரிசிகளும், ஞானிகளும், இருடிகளும் அதன் விளக்கங்களும் தோற்றங்களும் ஆவார்கள். உங்களுடைய ஞானிகளின் தொகையைப் பெருக்கிக் கொள்ளுங்கள். அது குறுக்கே நிற்கப்போவதில்லை. அது மெய்ப்பொருள் தத்துவத்தைத்தான் மொழியப்போகின்றது. நீங்கள் பின்பற்றும்

முறை உங்கள் கையிலேதானிருக்கிறது. எந்த நெறியை வேண்டு மானுலும் பற்றிக்கொள்ளுங்கள். எந்தக் குருவை வேண்டு மானுலும் வழிபடுங்கள். ஆனுல், உங்கள் இயல்புக்கேற்ற முறை யைக் கைப்பற்றிக்கொள்ளுவீர்களாக. அப்பொழுதுதான் நீங்கள் திண்ணமாக முன்னேற முடியும்.

# சமய உரிமைகள்*

ஜனவரி மாதம், 5-ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை

குழவிப் பருவத்தில் காலை இளம்பரிதியின் விரிசோதியின் காட்சியைக் கண்டு மெய் சிலிர்த்து உவகை எய்தியது உங்களுள் பெரும்பாலோருக்கு நினைவிருக்கலாம். அவ்வண்ணமே உங்கள் வாழ்க்கையில் சில சமயம் மிகக் கம்பீரமாய் மறையும் கதிரவனை நின்று உற்றுநோக்கி வியப்பில் ஆழ்ந்திருப்பீர்கள். அதற்கப்பால் என்ன இருக்கக் கூடும் என்று காண, மூடிய திரையைக் கிழித்துக் கொண்டு போகக் கற்பனையாவது செய்து பார்க்க முயன்றிருப்பீர்கள். உண்மையில் இதுதான் அகில பிரபஞ்சத்திற்கு அடிப்படையாய் மிளிர்கின்றது. அப்பாலிருந்து எழுகின்றது; அப்பாலிலேயே அது கரந்துவிடுகின்றது. இந்தப் பிரபஞ்சமனைத்தும் காண ஒண்ணாத ஒன்றிலிருந்து தோன்றி, காண ஒண்ணாத ஒன்றிலேயே மீண்டும் மறைந்துவிடுகின்றது. இருளிலிருந்து ஒரு குழந்தை போல வெளியிலே தவழ்ந்து வருகின்றது; முதுமை எய்திய கிழவன் போல அது மீண்டும் இருளுக்குள் ஊர்ந்து மறைந்துவிடுகின்றது.

[புலன்கட்கும், தருக்க அறிவுக்கும், புத்திக்கும் விளங்கும் இந்த நமது பிரபஞ்சத்தின் இரு மருங்கிலும் வரம்பாய் அமைவது எல்லையில்லாததும், அறியவொண்ணாததும், என்றைக்கும் அறியப் படாததும் ஆன ஒன்றே. தேடுவதும் இங்கே; விசாரணையும் இங்கேயே; உண்மைகளும் இங்கேயே உள்ளன. சமயம் என உலகம் அறியும் ஒளி பிறப்பதும் இங்கேதான். எனினும் சமயம் சிறப்பாக உரியது புலன்கட்கு அப்பாலுள்ள நிலத்திற்கே; ஐம்புல உலகிற்கன்று. அது தருக்க அறிவு அனைத்திற்கும் அப்பாற் பட்டது; புத்திக்குரிய நிலத்தினைச் சார்ந்ததன்று. அது ஒரு காட்சி; ஒரு ஞான ஆவேசம்; அறியப்படாததும், அறியவொண்ணாததுமான ஒன்றிற்குள் மூழ்குதலேயாகும். அதனால் அறியவொண்ணாதது, அறியப்பட்டதினும் மேம்பட விளங்குவதாகிறது. ஏனெனில், அது ஒருகாலும் அறியப்பட்டதாதல் இயலாது. மனித இனத்தின் தொடக்க முதலே மனிதர் மனத்திற்குள் அதைத் தேடி வந்துள்ளனர் என்பது எனது நம்பிக்கை. உலக வரலாற்றின் எப்பகுதியிலேனும் இப்பேருழைப்பும் அப்பாலான இடத்து

* இந்தச் சொற்பொழிவு ஆற்றிய ஆண்டு தெரியவில்லை. இதில் [ ] இந்த அடைப்புக்குள் வரும் பகுதிகள் 'ஒற்றுமையே சமயக் குறிக்கோள்' என்னும் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

இத்தேடுதலும் இன்றி மனிதனது தருக்க அறிவும் புத்தியும் இருந்திருத்தல் இயலாது. சிற்றண்டமாகிய இம்மனித மனத்தில் ஓர் எண்ணம் உதிப்பதை நாம் காண்கிறோம். எங்கிருந்து அது உதயமாகிறது என்பதை யாமறியோம். அது மறையும்போது எவ்விடம் செல்லுகிறது என்பதையும் யாமறியோம். மாபேரண்டமும் சிற்றண்டமும் ஒரே நிலைகளைத் தாண்டிச் சென்று, ஒரே சுருதியில் ஒலித்து, ஒரே தடத்திலே செல்லுவன போன்றவை.

'சமயங்கள் புறத்தேயிருந்தெழாமல், அகத்திருந்தே உதிக்கின்றன,' என்னும் இந்து மதக் கொள்கையை உங்கள் முன்பு எடுத்தோத முயல்வேன். சமய நினைவு மனிதனது அமைப்பிலே அடங்கியதொன்று என்பது எனது நம்பிக்கை. 'எதுவரையிலோ?' எனின், அவனுக்குத் தனது மனத்தையும் உடலையும் விட இயலும் வரையில்; நினைவையும் வாழ்வையும்விட இயலும் வரையில், சமயத்தை விடல் அவனுக்கு ஒண்ணாததேயெனும் அளவிற்கே என்று உரைக்கலாம். மனிதனுக்குச் சிந்தனை இருக்கும் வரையில் இம்முயற்சி இருந்தே தீரும். அதுவரை மனிதனுக்கு யாதேனும் ஒருவகையிலே சமயம் இருத்தலும் கட்டாயமேயாகும். இவ்வண்ணமே இவ்வுலகில் பல்வகைச் சமயங்கள் நிலவக் காண்கின்றோம். இது மனத்தைக் குழப்பும் ஓர் ஆராய்ச்சியே; ஆனாலும், நம்மிற் பலரது கருத்துப்படி ஒரு வீணான விசாரணையன்று. இக்குழப்பத்தின் நடுவே இனிய நல்லதோர் ஒழுங்குள்ளது; வேறுபட்டுப் பகைநரம்பாய் இசைக்கும் ஒலிகட்கிடையேயும் எத்திசைக்கும் ஒரு நல்லிசை உளது; அதனை உற்றுக் கேட்க ஆயத்தம் பண்ணுபவன் அவ்விசையினைச் செவி மடுப்பான்.

வினாக்களுள் மிகப் பெரிய வினாவாக இப்பொழுது கருதக் கூடியது இதுதான்: அறியப்பட்டதும், அறியக்கூடுவதுமான ஒன்றை இரு மருங்கிலும் அறியவொண்ணாததும், அறியப்படாததுமான எல்லையற்ற ஒன்று சூழ்ந்திருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டாலும், அறியப்படாத கங்குகரையில்லாத ஒன்றை நாட முயல்வானேன்? கண்டதைக் கொண்டு நாம் ஏன் திருப்தி அடையக்கூடாது? உண்டி அருந்துவது, நற்பானம் பருகுவது, சமுதாயத்திற்கு ஏதோ ஒரு சிறிய நன்மையை நல்குவது—இவற்றோடு நாம் திருப்தி எய்தி ஏன் வாளா இருத்தல் கூடாது? இத்தகைய கருத்து எங்கும் உலாவக் காண்கின்றோம். மிகக் கற்றறிந்த பேராசிரியர் முதல், குதலைச் சொல் மொழியும் ஒரு சிறு குழவி வரையிலுள்ள மக்களாகிய நமக்கெல்லாம், 'உலகத்திற்கு நன்மை புரிவது ஒன்றே சமயமனைத்துமாகும்,' என்று ஓதப்படுகின்றது. (புலங்கடந்த) அப்பாலொன்றைப் பற்றிய வினாக்களைப் பற்றி நம்மை அல்லற்படுத்திக்கொள்ளுவது பயனற்றதாகும். இப்படிச் சொல்லிச் சொல்லி இது மறுக்கவொண்ணாத உண்மையாய்ப் போவதைக் காண்கின்றோம்.

ஆனல், அப்பால் திகழும் ஒன்றைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்து தான் தீர வேண்டும். இது ஒரு பாக்கியமன்றோ! நம் முன் நிற்பது— நம்முன் தோன்றி நிற்பது—தோன்ருத ஒன்றின் ஒரு பகுதியேயாகும். எல்லையற்ற ஆன்மிக அகண்டத்தின்—நம்முடைய ஐம்புல அறிவு வட்டத்தில் அடங்கியிருக்கிற இந்த அகண்டத்தின்—ஒரு பகுதி அல்லது ஒரு துண்டு போலும் இந்த ஐம்புலப் பிரபஞ்சம். அப்பாலுள்ள ஒன்றை நாம் அறியாத நிலையில், இப்படி நீட்டிக் கொண்டிருக்கிற ஒரு சிறிய துண்டிற்கு எப்படி விளக்கம் தர முடியும்? எப்படி அதை உணர முடியும்? சாக்கரட்டீஸ் ஏதன்ஸ் நகரில் சொற்பொழிவு ஆற்றிக்கொண் டிருக்கும்பொழுது, கிரேக்க நாட்டிற்குள் பிரயாணஞ் செய்துகொண் டிருந்த ஒரு பிர்ராம்மணனைச் சந்தித்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர், 'மனித இனத்திற்குரிய உயர்ந்த படிப்பு மனிதன்தான்,' என்று அந்தப் பிராம்மணனிடம் மொழிந்தாராம். அதற்கு அந்தப் பிராமணன் மறுமொழியாக, 'கடவுளைக் காணுதவரையில் மனிதனை எப்படி அறிந்து கொள்ள இயலும்?' என்று மனத்தில் தைக்கும்படி கூறினனும். இந்தக் கடவுள்—என்ஞான்றும் அறிய முடியாத இந்த ஒன்று—கலப்பற்றதா யுள்ள இந்த ஒன்று—எல்லையற்ற இந்த ஒன்று—பெயரிலாத இந்த ஒன்று—நீங்கள் விரும்புகிற எந்தப் பெயரை வைத்தாலும் அதைக் கொண்டு வழங்க இயலும் இந்த ஒன்றுதான்—தருக்க அறிவுக்கு ஆதாரமாயிருக்கிறது. இது ஒன்றே விளக்கந்தருகின்றது. இதுதான் மூல காரணமாய்த் திகழ்கின்றது. உங்கள்முன் மிகுந்த சடமாயுள்ள எந்தப் பொருளையேனும் எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்து பாருங்கள். பௌதிக சாத்திரங்களில் ஏதாவது ஒன்றை உங்கள் ஆராய்ச்சிக்குப் பொருளாக வைத்து நோக்குங்கள். அது இரசாயனமா யிருக்கட்டும், அல்லது பௌதிக விஞ்ஞானமாயிருக்கட்டும், அல்லது வான சாத்திரமாயிருக்கட்டும், அல்லது உயிர் நூலாயிருக்கட்டும். அதை நுட்பமாக ஆராய்ச்சி செய்வீர்களாக; அந்த ஆராய்ச்சியில் மேன்மேலும் ஆழ்ந்து சென்றால், தூலம் கரையத் தொடங்கும். அது மிகமிக நுண்ணிதாய்ப்போய்விடும். அது ஒரு நிலைக்குவரும்பொழுது தூல சடப் பொருள்களிலிருந்து, அப்பாலுள்ள அருவசைதன்னிய நிலைக்கு ஒரு மாபெரும்பாய்ச்சலை நாம் செய்யாமலிருக்க இயலாது. தூலம் சூக்குமத்தில் இறந்துவிடும். பௌதிக ஆராய்ச்சியும் தத்துவ ஆராய்ச்சியாய்த் திகழ்ந்துவிடும். இத்தகைய நிகழ்ச்சியை ஒவ்வோர் அறிவுத் துறையிலும் நாம் காண்கின்றோம்.]

இவ்வண்ணந்தான் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொன்றும் நிகழ்கின்றது. நம் சமூகம், ஒருவரோடொருவருக்குள்ள தொடர்புகள், நமது சமயம், அறங்கள் என்று நீங்கள் கூறுவன— இவை எல்லாம் ஒரே சுருதியிலேதான் பேசுகின்றன. வெறும் பயனை அடிப்படையாகக் கொண்டு அறங்களின் முறை

அமைப்பை வரையறுக்கும் முயற்சிகள் திகழப் பார்க்கின்றோம். இத்தகைய தருக்க அறிவு கொண்டு வகுக்கக்கூடிய ஓர் ஒழுக்க இயலை யாராவது படைக்க முடியுமா? அத்தகையோனை அறை கூவி வாதுக்கு அழைப்பேன்! "பிறருக்கு நன்மை புரியுங்கள்." "எதற்காக?" "அதுதான் பயனுக்குள் மிகச் சிறந்த பயனாகும்." "பயனா? அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை," என்று ஒருவன் மொழிவதாக வைத்துக் கொள்ளுங்கள். "பிறருடைய கழுத்தை அறுத்து நான் ஏன் பணக்காரனாய்த் திகழக்கூடாது?" என்றும் அவன் கூறக்கூடும். இந்தக் கேள்விக்கு நீங்கள் என்ன விடை அளிப்பீர்கள்? இப்படிக் கேள்வி கேட்டால் ஏரோதுக்கு* மற்றோர் ஏரோது தோன்றினதாகும். இரணியனுக்கு மற்றோர் இரணியன் தோன்றிய கதையாய் அமையுமன்றோ?

பிறருக்கு நன்மை புரிவதில் எனக்கென்ன பயன்? மற்றவர் இன்பத்திற்காக வாழ்நாள் முழுதும் வேலை செய்யும் ஓர் அறிவிலியா நான்? இந்த ஐம்புலன்களுக்கு அப்பால் உலகில் வேறு சத்தி இல்லையென்றால் நானேன் தனியாய் இன்புற்றிருக்கக் கூடாது? போலீஸில் அகப்படாமல் இருக்க முடியும் என்றால் என் சகோதரர்களைக் கொன்று நான் இன்புற்றிருப்பதை யார் தடுக்க முடியும்? இதற்கென்ன விடை அளிப்பீர்கள்? மற்றவருக்கு நன்மை செய்வதில் இன்னது பயன் என்பதை எடுத்துக் காட்டுங்கள். பெரிதும் வற்புறுத்திக் கேட்டால் "நல்லவனாயிருப்பதுதான் நல்லது" என்று கூறுவீர்கள். "நன்மை செய்வது நல்லது" என்று மனிதனுடைய மனத்தில் தோன்றும்படி செய்யும் சத்தி எது? அதுதான் ஆன்மாவின் பெருமையை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. நல்லதனமாயிருப்பதன் அழகு—அதன் உள்ளத்தை ஈர்க்கும்தன்மை—அதன் எல்லையற்ற சத்தி யாவையும் அது நம் கண்முன் விரிவடையச் செய்கிறது. கடவுள் என்று நாம் கூறுவது அதுதான் அல்லவா?

இரண்டாவதாக, இன்னும் சிறிது நுட்பமான விஷயத்தைப் பற்றிப் பேசலாம் என்று நினைக்கிறேன். செவி சாய்த்துக் கேட்க வேண்டும். நான் கூறுவதிலிருந்து விரைவாய் ஒரு முடிவும் செய்ய வேண்டா என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த உலகத்திற்கு நாம் ஒன்றும் பெரிய நன்மை செய்துவிட முடியாது. நன்மை செய்வது என்பது நன்றாகத்தானிக்கிறது. ஆனால்,

* ஏரோது (Herod) என்பவன் இயேசுவைக் கொல்லக் கருதி, பெத்திலகேமில் தோன்றிய குழவிகளையெல்லாம் கொல்வித்த ஒரு கொடுங்கோலன்.

நாம் பெரிதாய் ஏதேனும் செய்துவிட முடியுமா? இந்த நூற்றுக் கணக்கான ஆண்டுகளாகப் பாடுபட்டு நாம் ஏதேனும் சாதித் திருக்கிறோமா? உலகின் இன்பத்தை நாம் சிறித்தாவது மிகுதி யாக்கச் செய்திருக்கிறோமா? மக்களின் இன்பத்திற்காக ஆயிரக் கணக்கான உபாயங்கள் நாள்தோறும் படைக்கப்படுகின்றன. இவ்வண்ணம் பல்லாயிரம் ஆண்டுகளாக நடந்துகொண்டிருக் கிறது. நூறு ஆண்டுகளுக்குமுன் இருந்ததைவிட மக்களின் இன்பம் சிறிதாவது விரிவடைந்திருக்கிறதா? சொல்லுங்கள். அது முடியாது. கடலில் ஓர் அலை மேலெழுமானுல், ஓரிடத்தில் பள்ளமாகத்தானே இருக்கும்? ஒரு நாடு சிறப்புடன் சத்தி பெற்றதானுல், எங்கேயாவது மற்றொரு நாட்டை அது நலியத் தான் செய்யும். இருபது பேர்களைப் பணக்காரர்களாகச் செய்யும் ஒரு யந்திரத்தை உண்டுபண்ணினுல், அது இருபதினுயிரம் பேர்களை ஏழைகளாக்கிவிடும். எங்கும் போட்டி என்பதன் நியதியே இதுதான். சத்தியோ, எங்கும் ஒரே அளவாய்தான் காட்சி அளிக்கிறது. துன்பமே இல்லாமல் இன்பத்தை அடைய முடியும் என்று சொல்வது பொருளற்றது. இந்தச் சாதனங் களினுல் உலகின் தேவைதான் விரிவடைகின்றது. தேவைகள் வளர்ந்தால் திருப்தி என்பது ஏற்படுவதே இல்லை. இந்தத் தேவை—இந்த வேட்கை—எதனுலேதான் அகலும்? இந்த வேட்கை இருக்கும் வரையில் துன்பம் திண்ணமாக உண்டாகும். இன்ப துன்பங்களை மாறிமாறி நுகர்வது வாழ்க்கையின் இயற்கை. ஆயினும், நாம் நன்மை செய்வதற்காகவா இந்த உலகம் இருக் கிறது? உலகில் அதைச் செய்வதற்கு வேறு சத்தி ஒன்றும் இல்லையா? எல்லாம் வல்லவனும், கருணை வடிவினனும், அழியாதவனும், பிரபஞ்சம் முழுவதும் தாங்கிக்கொண்டிருக்கும் பொழுதும் தான் தூங்காமல்—இமை கொட்டாமல்—விழிப்புட னிருக்கும் அந்தக் கடவுள் இப்பிரபஞ்சத்தை நம்மிடம் ஒப் படைத்துவிட்டு மாண்டுபோய்விட்டானு? இந்த எல்லையற்ற விசும்போ, இடையருது விழிப்புடனிருக்கும் அவனது கண் என்னலாம். இந்தப் பிரபஞ்சத்தில் அவன் ஒன்றும் வேலை செய்யவில்லையா?

பிரபஞ்சம் நடந்துகொண்டுதானிருக்கிறது. நீங்கள் ஒன்றும் அவசரப்பட வேண்டா. நீங்கள் ஒன்றும் அதற்காக உங்களை வருத்திக்கொள்ள வேண்டா.

இந்த இடத்தில் சுவாமிகள் ஒரு கதை சொன்னுர்: ஒரு மனிதன் ஒரு பூதத்தைத் தனக்கு ஏவல் புரியும்படி விரும்பினுன்.

ஆனால், அதற்கு எப்பொழுதும் வேலை கொடுக்க அவனால் இயல
வில்லை. இறுதியில் சுருண்ட ஒரு நாய் வாலை நிமிர்த்தும்படி
கட்டளையிட்டுச் சமாளித்துக்கொண்டானாம்.

உலகத்துக்கு நன்மை செய்வது என்பதும் மேற்கூறிய கதை
போன்றதே. ஆகவே, சகோதரர்களே, இப்பல்லாயிரம் ஆண்டு
களாக அந்த நாய் வாலை நிமிர்த்துவதற்காகத்தான் நாமும்
முயன்றுகொண்டிருக்கிறோம். அது வாதநோய் போன்றது.
காலை விட்டு அகற்றினால், தலைக்குச் சென்றுவிடுகிறது. தலையை
விட்டு அகற்றினால், இன்னும் வேறெங்காயினும் செல்லுகிறது.
இப்படிச் சொல்வது ஒன்றிலும் நம்பிக்கையில்லாத ஒரு பயங்கர
மான மனப்பான்மையாக உங்களுக்குத் தோன்றும். அது
அப்படி அன்று. எதிலும் நம்பிக்கை, எதிலும் அவநம்பிக்கை
ஆகிய இரண்டும் தவறுதான். இவ்விரண்டும் மிகவும் தீவிரமான
நிலைமைக்குப் போய்விடுகின்றன. உடுப்பதற்கும் உண்பதற்கும்
மிகுதியாய்ப் பெற்றிருப்பவன் நன்னம்பிக்கை உள்ளவனாகிறான்.
நல்லுணவும் நல்லாடைகளும் இல்லையென்றால், அந்த மனிதனே
ஒன்றிலும் நம்பிக்கையற்றவனாகிறான். பொருளெல்லாம் இழந்து
மிகவும் ஏழையாகும் போதுதான் மனிதர் எல்லாம் சகோதரர்
என்னும் கருத்து மிக்க விரைவுடன் அவன் மனத்தில் உதிக்
கிறது. இதுதான் உலகம். பல நாடுகளுக்குச் சென்று உலகத்தை
இன்னும் விரிவாய்ப் பார்க்கும்பொழுது எனக்கும் வயது
அதிகரிக்க அதிகரிக்க, இந்த நம்பிக்கை அவநம்பிக்கை
இரண்டின் எல்லைக்கோடுகளுக்குச் சென்றுவிடாமலிருக்க முயல்
கிறேன். இந்த உலகம் நல்லதுமன்று; தீயதுமன்று. இது
கடவுளுக்குச் சொந்தம். நன்மைக்கும் தீமைக்கும் அப்பால்
இது மாசற்றுப் பூரணமாயிருக்கிறது. கடவுளின் சங்கற்பப்படி
உலகம் செல்கிறது; பல விதமான இக்காட்சிகளை நமக்குக் காட்டு
கிறது. தொடக்கமும் முடிவுமற்றதாய் இவ்வுலகம் சென்று
கொண்டே இருக்கும். கணக்கற்ற உயிர்கள் இப்பயிற்சிக் கூடத்
திற்கு வந்து பயிற்சி பெற்று, பலத்தையும் பூரணத்துவத்தையும்
அடைய வேண்டும். அதன்பொருட்டுத்தான் இவ்வுலகம் இருக்
கிறது. உலகை மாசற்றதாகப் பரிபூரணமானதாகக் கடவுளால்
செய்ய முடியாது என்பதன்று நமது கருத்து. உலகிலுள்ள
துன்பங்களுக்கு அவர் என்ன செய்வார் என்பதுமன்று. ஓர்
இளம்பெண்ணும் ஒரு பாதிரியாரும் தொலை மானியின் மூலம்
மதியைப் பார்க்கும்பொழுது அதிலுள்ள களங்கத்தைப் பார்த்து
என்ன சொன்னார்கள்? அந்தக் கதை உங்களுக்கு நினைவிருக்

கிறதா? ''அவை சில மாதாகோயில்களின் கோபுரங்களே, சந்தேகமில்லை.'' என்று பாதிரியார் சொன்னார். ''சீசீ! காதலர் இருவர் ஒருவரையொருவர் முத்தமிட்டுக்கொள்ளுகின்றனர். திண்ணமாய் அதுதான்'' என்று அந்த இளம்பெண் கூறினாள். இவ்வுலகத்தின் விஷயத்திலும் நாம் அப்படித்தான் நினைக்கிறோம். உள்ளே இருக்கும்பொழுது நமக்கு உட்புறம் மட்டுந்தான் தெரிகின்றது. நாம் எந்த நிலையிலிருக்கிறோமோ, அந்த நிலையிலிருந்தே நாம் இப்பிரபஞ்சத்தைக் காண்கிறோம். சமையலறை நெருப்பானது நல்லதுமன்று; கெட்டதுமன்று. அதைக் கொண்டு நாம் உணவு சமைத்துக்கொள்ளும் பொழுது அதைக் கொண்டாடி மகிழ்வுறுகின்றோம். நம் விரலை அது சுட்டுவிட்டால், ''பாழாய்ப்போன நெருப்பு!'' என்று கூறுகிறோம். 'ஆகவே, இந்தப் பிரபஞ்சமானது நல்லதுமன்று; கெட்டதுமன்று,' என்று பகர்வதுதான் தக்கது. இந்த உலகம் எப்பொழுதும் இப்படியேதானிருக்கும். உலகில் எல்லாம் நம் நலத்திற்குத்தான் இருக்கின்றன என்ற முறையில் பார்க்கும்பொழுது, அது நல்லது என்று நவில்கிறோம்; துன்பமயமாக இருப்பதாக நினைக்கும் பொழுது அதைக் கெட்டது என்று சொல்லுகிறோம். ஒருவருக்கும் தீங்கு செய்ய விரும்பாமல் கபடமற்று மகிழ்ச்சியுடனிருக்கும் குழந்தைகள் நல்ல நம்பிக்கையோடிருப்பதை நாம் காணலாம். அவர்கள் சிறந்த கனவு காண்பவர்கள். மனத்திலுள்ள எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றிக்கொள்ள இயலாத கிழவர்கள்—அதுவும் உலகில் உழன்று பலபடியாய் அடிபட்டவர்கள் இருக்கிறார்களே—அவர்கள் அடியோடு நம்பிக்கையற்றவர்கள். சமய உணர்ச்சியான தத்துவத்தை அறிய விரும்புகிறது. இந்தத் தத்துவத்தை அறியாமல் வாழ்வது, பயனற்றது என்பதே கருத்தாகும்.

[அப்பாலைப் பற்றிய ஆராய்ச்சியிலே தான் இறுதியில் இழுத்துச் செல்லப்படுகிறதை மனிதன் உணர்கின்றான். அப்பாலை நாம் அறிய இயலாமற் போகுமாயின், நம் வாழ்வு வறண்ட பசையற்ற பாலையாய்ப் போய்விடும்; மனித வாழ்வும் வீணேயாகும். இம்மையில் கிடைக்கக் கூடிய பொருள்களைக் கொண்டு திருப்தி அடைவீர்கள் என்று சொல்லுவது மிக நல்லதாய்த் தோன்றலாம். பசுக்களும், நாய்களும், மற்ற விலங்குகளனைத்தும் திருப்தி அடையவில்லையா? இப்படித் திருப்தி எய்தும் காரணத்தாலேதான் அவை விலங்குகளாய் விளங்குகின்றன. இம்மையுடன் திருப்தி எய்தி அப்பாலைப் பற்றிய ஆராய்ச்சி அனைத்தையும் மனிதன் அறவே விட்டுவிட்டால், மனித இனம் மீண்டும்

விலங்கு நிலைக்குத்தான் போக வேண்டும். சமயந்தான்—அப்பாலைப் பற்றிய ஆராய்ச்சிதான்—மனிதனை விலங்கினத்திலிருந்து பிரிக்கின்றது. மேல்நோக்கும் பிராணி மனிதனே என்பது நன்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றைய விலங்குகளுள் ஒவ்வொன்றும் இயற்கையிலேயே கீழ்நோக்குகின்றது. மேல் நோக்குவது, முன்னேறுவது, பூரணத்தை நாடுவது ஆகிய இவற்றையே 'விடுதலை' என்று வழங்குவோம். தான் எவ்வளவு விரைவில் மேலே செல்ல மனிதன் முயலத் தொடங்குகின்றானோ, அவ்வளவு விரைவில் விடுதலை என்று எண்ணப்படுகிற உண்மைக் கருத்திற்குத் தன்னை உயர்த்திக்கொள்ளுகிறான். அது உங்கள் சட்டைப் பையில் உள்ள காசைப் பொறுத்ததன்று; அணியும் உடையைச் சார்ந்ததன்று; நீங்கள் உறையும் இல்லத்தில் அது தங்கியில்லை; உங்களுடைய மூளையிலுள்ள ஆன்மிகச் செல்வமாம் எண்ணத்திலேதான் ஊன்றி நிற்கின்றது. அதுதான் மனித முன்னேற்றத்திற்குத் துணையாய்த் திகழ்கின்றது. எல்லாப் பௌதிக முன்னேற்றத்திற்கும் அறிவுத் துறையின் முன்னேற்றத்திற்கும் அதுவே மூலமாயிருக்கிறது. எல்லாவற்றிற்கும் பின்நின்று இயங்கும் சத்தியும் அதுவே. மனித இனத்தை முன் செல்லுமாறு தூண்டிச் செலுத்தும் ஆர்வமும் அதுவேயாகும்.]

மனித இனத்தின் குறிக்கோள் என்ன? புலன்களுக்குப் பொருளான இன்பமா? பண்டைக் காலத்தில் சொர்க்கத்திலுள்ளவர்கள் இசைக்கருவிகளை ஊதிக்கொண்டு அரியணை அருகில் வாழ்ந்துகொண்டிருப்பார்கள் என்று கூறுவார்கள். இந்த இலட்சியம் நவீன காலத்தில் மிகவும் ஆண்மைத்தன்மையற்றது என்று தோன்றுகிறது. ஆகவே, அதைச் சிறிது உயர்த்திச் சொல்வதாகக் கருதி இங்கிருப்பது போலவே சொர்க்கத்திலும் மணச் சடங்குகள் உண்டு என்று இயம்புவார்கள். இது முன் கூறியதைக்காட்டிலும் இழிவாகத்தான் தோன்றுகிறது. சொர்க்கத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் கருத்துகள் எல்லாம் மனத்தின் பலவீனத்தைத்தான் காட்டுகின்றன. முதலாவது ஐம்புல இன்பந்தான் வாழ்க்கையின் குறிக்கோள் என்று நினைக்கிறார்கள். இரண்டாவது, புலன்களுக்கெட்டாத இன்பம் ஒன்று இருப்பதாகவே அவர்கள் அறிவுக்குப் புலனாகவில்லை. பிரயோசன வாதிகள் இருக்கிறார்களே, அவர்களைப்போல் இவர்கள் கூறுவதிலும் தகுந்த காரணங்கள் இல்லை. ஆயினும், இக்காலத்திலுள்ள நாத்திகர்கள் பிரயோசனவாதிகளைவிடச் சற்றுச் சிறந்தவர்கள் என்றுதான் செப்ப வேண்டும். கடைசியாக இந்தப் பிரயோசன வாதிகளுடைய நிலை மிக இழிவானதாகவும் குழந்தைத்தனமாகவும் காட்சி அளிக்கின்றது. "இதுதான் நாங்கள் ஏற்படுத்

திய நிலை. உலகம் முழுவதும் இதன்படிதான் நடக்கவேண்டும்,'' என்று இயம்புவதற்கு அவர்களுக்கு என்ன அதிகாரம்? காசு, உண்டி, உடை—இவைகளையே கடவுள் என்று ஓதும் இந்த நிலையினின்றுதான் எல்லாத் தத்துவங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று சாற்ற அவர்கட்கு என்ன அதிகாரம்?

[அருந்துகின்ற உண்டியின் மீது சமயம் சார்ந்ததில்லை; உறைகின்ற இல்லத்தில் அது ஊன்றி நிற்கவில்லை. அடிக்கடி சமயத்திற்குப் பகையாக இந்த மறுப்பைத் தொடுப்பதை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். சமயம் எந்த நலத்தைப் புரியும்? ஏழை மக்களின் வறுமையை அது அகற்றுமோ? அது அப்படிச் செய்ய முடியாதென்று கருதினால் என்ன? அதனால் அது சமயத்தின் மெய்யின்மையை நிலை நாட்டி விடுமோ? நீங்கள் வான சாத்திரத்தின் ஓர் உண்மையைச் சான்று கொண்டு விளக்கிக்கொண்டிருக்கும் பொழுது, ஒரு குழந்தை கூட்டத்தின் நடுவிலிருந்து எழுந்து, 'உங்கள் விளக்கம் ஒரு பட்சணத்தைத் தருமா?' என்று கேட்பதாக நினையுங்கள். அப்பொழுது உங்கள் விடை 'தாராது' என்றுதான் அமையும். அப்பொழுது அந்தக் குழந்தை உங்கள் விளக்கம் பயனற்றது என்றுதான் சொல்லும். இந்த அகில பிரபஞ்சத்தையும் தங்கள் நினைவுக் கோணங்களிலிருந்தே குழந்தைகள் தீர்மானிக்கும்; 'தின்பண்டத்தை அது படைக்குமா?' என்றுதான் அவை நோக்கும். இந்த உலகப் பெருங்குழவிகளும் இப்படித்தான் தீர்மானிக்கின்றன.]

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவர்களே மிகப் படித்தவர்கள் என்றும், அமைதியுடன் தருக்க அறிவு கொண்டு சிந்திக்கத் தகுந்த அறிஞர்கள் என்றும் கருதப்படுகிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்கது.

[மிகச் சிறந்த பொருள்களை ஓர் இழிவான கோணத்திலிருந்து நாம் கருதக்கூடாது. ஒவ்வொன்றையும் அதற்குரிய அளவுகோல் கொண்டே அளந்து பார்க்க வேண்டும். எல்லையற்றதை எல்லையற்ற அளவுகோலைக்கொண்டே அளக்கவேண்டும். மனித வாழ்வு முழுதையும் சமயம் ஊடுருவிச் செல்கிறது; நிகழ்காலத்தை மட்டுமன்று. இறப்பு, நிகழ்வு, எதிர்வு—இம்முக்காலங்களையும் அது தன்னுள் அடக்கிப் பரந்து நிற்கின்றது. அக்காரணம் பற்றியே அழிவற்ற ஆன்மாவுக்கும், அழிவற்ற கடவுளுக்கும் உள்ள இடையறாத தொடர்பாய் அது மிளிர்கின்றது. ஐந்து நிமிட மனித வாழ்வின்மீது அது புரிகிற செயலைக்கொண்டு அதன் மகிமையை அளப்பது தருக்க அறிவுக்குப் பொருந்துமா? உன்னிப் பாருங்கள். சற்றும் பொருந்தாதுதான். இவை யாவும் எதிர்மறையான வாதங்கள்.

இப்பொழுது இந்தக் கேள்வி எழுகின்றது: சமய உணர்சியானது
உண்மையில் ஏதேனும் ஆற்றக்கூடுமா? ஆம், உண்மையில் ஆற்றக்
கூடும் என்றே கூறலாம்.]

சமய உணர்ச்சி இருந்தால் உண்மையில் உண்ண
உணவும் உடுக்க உடையும் கிடைக்குமா? இவற்றைவிடப்
பன்மடங்கு அது செய்யும்; எப்பொழுதும் கிடைக்கச்
செய்யும் என்றும் சொல்லலாம். அதற்கு மேலும் அது
செய்கிறது; மனிதர்கள் அமரத்துவத்தையடையும்படி செய்
கிறது; மனிதனை மனிதனுக்கியிருக்கிறது; இந்த மனிதனுகிய
விலங்கைக் கடவுளாகவே செய்துவிடும். இதைத்தான் சமய
உணர்ச்சி புரிகின்றது. மனித சமூகத்தினின்றும் இந்த
உணர்ச்சியை அகற்றிவிட்டால், அப்புறம் என்னவாகும்?
அப்புறம் உலகம் கொடிய விலங்கினம் வாழும் ஒரே காடுதான்!
புலன்களின் இன்பந்தான் மனித இனத்தின் குறிக்கோள் என்று
கருதுவது மிகுந்த அறிவின்மை என்பதை உங்களுக்கு இப்
பொழுது விளக்கிக்காட்ட முயன்றேன். ஞானமே எல்லா
மன்னுயிர்களுக்கும் குறிக்கோள் என்று முடிவு கட்டலாம் என்று
தோன்றுகிறது. உலக நன்மையின்பொருட்டு தத்துவத்தைக்
கண்டறியப் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பாடு பட்டும் நாம்
மிகுந்த பலன் அடையவில்லை என்பதை உங்களுக்கு எடுத்துக்
காட்டினேன். ஆயினும், மனிதன் ஞானத்தில் அளவுகடந்த
முறையில் முன்னேறித்தான் இருக்கிறுன். அந்த முன்னேற்றத்
தின் பெரும்பயன் சாதாரண வாய்ப்புகளை அடையச் செய்வது
மட்டுமன்று; இந்த விலங்கியல் மனிதனைக் கடவுளாக உருவாக்கு
வதுதான். ஞானத்திலிருந்து பேரானந்தம் பிறக்கிறது. புலன்
களிலிருந்துண்டாகும் ஆனந்தத்தை மிகப் பெரிதாகச் சிறு
குழந்தைகள் கருதுகிறுர்கள். இந்த ஆனந்தத்தைக்காட்டிலும்
அறிவிலிருந்துண்டாகும் ஆனந்தத்தை இன்னும் மிகுதியாய்
நுகர்வது உங்களுள் பலருக்குத் தெரியும் அல்லவா? இரை
தின்னும்பொழுது ஒரு நாய் அடையும் உவகையை உங்களுள்
ஒருவரும் அனுபவிக்க இயலாது. மனிதனுக்கு இன்பம்
எங்கிருந்து வருகிறது? நாயோ, பன்றியோ தீனி தின்னும்
பொழுது மெய்ம்மறந்து நுகரும் மகிழ்ச்சியை நான் மொழிய
வில்லை. பன்றி தின்பதைப் பாருங்கள். அது தின்னும்பொழுது
அந்தத் தீனியிலேயே மனம் ஒன்றி உலகத்தையே மறந்துவிடு
கிறது. அது கொல்லப்படுவதாயிருந்தாலும், தின்னும்பொழுது

ஒன்றையும் கவனியாது. அப்படிப்பட்ட அதன் உவகையை
உன்னிப் பாருங்கள். அந்த ஆனந்தத்தை மனிதன் பெறுவ
தில்லை. அதை அவன் அறிவு இன்பமாக மாற்றிவிட்டான்.
சமய சம்பந்தமான சொற்பொழிவுகளைப் பன்றி கேட்டு இன்
புறுமா? அறிவு இன்பங்களைக் காட்டிலும் அது இன்னும் ஒருபடி
உயர்ந்தது. அதுதான் பேரான்ம நிலை. நமது பகுத்தறிவுக்கும்
புத்திக்கும் அப்பால் சென்று ஆன்மிக விஷயங்களை ஆன்ம
உணர்ச்சியோடு நுகர அந்த இன்பம் கிடைக்க வேண்டும்
என்ருல், இந்த இந்திரிய சுகங்களை நாம் துறக்கவேண்டும்.
அந்தப் பெரும் பயனைத்தான் நான் அனுபவிக்கிறேன்; உலகில்
ஒவ்வொருவரும் அதையே நுகர்கின்றனர். அதை அடையவே
நாம் விரைகின்ருேம்.

[ஒரு விலங்கு தன் ஐம்புல நுகர்ச்சிகளில் திளைப்பதைவிட,
மனிதன் அறிவுத் துறையில் இன்பம் காண்பதை நாம் பார்க்கிருேம்.
தன் அறிவின் இயல்பில் இன்பம் துய்ப்பதைவிட மனிதன் தன்
ஆன்மிக இயல்பில் இன்பம் தேர்வதை நாம் உணர்கின்ருேம். இந்த
ஆன்மிக அறிவே மிகமிகச் சிறந்த ஞானமாகும். இந்த அறிவோடு
தான் பேரானந்தம் பெருகுகின்றது. இந்த ஞாலத்தின் பொருள்க
ளனைத்தும் உண்மை, அறிவு, பேரானந்தம்—இவற்றின் நான்கு
அல்லது ஐந்து படி தள்ளி நிற்கும் நிழல்களும் தோற்றங்களுமாகும்.]

மனித இனம் அனைத்தையும் நேசிக்கும் அன்பிலிருந்து
பிறப்பதே பேரின்பம். ஆன்மாவுக்கு உண்டாகும் இந்த இன்பத்
தின் நிழலேதான் மனிதனுடைய சாதாரண அன்பு. ஆனுல்,
இதுதான் அந்தப் பேரின்பம் என்று தவருக எண்ணிவிடா
தீர்கள். அப்படி நினைத்தால், பெரியதவறு நேர்ந்துவிடும்.
இந்த உடல் சம்பந்தமான இன்பத்தை—ஒருவரையொருவர்
கண்டு அடையும் காந்தம்போல ஈர்க்கும் இம்மோகத்தை—அந்த
ஆன்மிக சம்பந்தமான பேரின்பம் என்று நாம் எப்பொழுதும்
தவருக நினைத்துக்கொண்டிருக்கிருேம். அது அழிவற்ற நிலை
யென்றும் எண்ணிக்கொண்டிருக்கிருேம். அந்த ஞானம்,
பேரின்பம் இரண்டும் ஒன்றுதான். அதையடைவதுதான் நமது
குறிக்கோள். உலகமுழுவதும் எங்கெல்லாம் சமயம் இருக்
கிறதோ, எங்கெல்லாம் இனி உண்டாகுமோ, அச்சமயங்களுக்கு
எல்லாம் பிறப்பிடம் ஒன்றேதான். அதை ஒவ்வொரு நாட்டில்
ஒவ்வொரு பெயர் கொண்டு வழங்குகிருர்கள். அதை நீங்கள்
உங்கள் நாட்டில் தெய்வ ஆவேச உணர்ச்சி என்று சொல்லுகிறீர்

கள். இந்தத் தெய்வ ஆவேச உணர்ச்சி என்பது என்ன? இந்தத் தெய்வ ஆவேச உணர்ச்சியிலிருந்துதான் சமய ஞானம் உண்டாகிறது. சமய உணர்ச்சியானது புலன்களுக்கு மேற்பட்ட நிலையிலுள்ளது என்பதைத் தெரிந்துகொண்டோம் அல்லவா? அதைக் கண்கள் பார்க்க இயலாது; செவிகள் கேட்க இயலாது. மனத்திற்கு அங்கே செல்லச் சத்தி இல்லை. சொற்களும் அதைச் சித்திரிக்கச் சத்தியற்றவை. சமயவுணர்ச்சியின் இலட்சியம் அதுவே. அதிலிருந்துதான் நாம் கூறும் இந்தத் தெய்வ ஆவேச உணர்ச்சியும் உண்டாகிறது. புலன்களுக்கு அப்பால் செல்லுவதற்கு ஏதேனும் ஒரு வழி இருக்கத்தான் வேண்டும் என்பது இதிலிருந்து ஏற்படுகிறது அல்லவா? நம் அறிவினால் அது முடியாது என்பது மிகவும் உண்மை. நமது பகுத்தறிவு யாவும் புலன்களுக்குட்பட்டனவே. இந்திரியங்கள் அறிந்துகொண்டதைத்தான் புத்தியும் ஆராய்ந்து அறிகின்றது. ஆனால், இந்திரியங்களுக்கு அப்பாற் செல்ல மனிதனால் முடியுமா? அறிய முடியாததை அறிந்துகொள்ள முடியுமா? சமயமானது இந்தக் கேள்வியைக் கேட்டுத் தீர்மானிப்பதிலேதான் இருக்கிறது. நம் நினைவுகடந்த காலம் முதற்கொண்டு இந்திரியங்களின் முன் வலிவான மாபெருஞ் சுவர்—அந்தப் பெரிய இடையூறு—இருந்துகொண்டிருக்கிறது. அடிக்கடி கோடிக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் அந்தச் சுவரைத் துளைத்துச் செல்ல அதன்மீது மோதிக்கொண்டிருக்கின்றனர். அம்முயற்சியில் கோடிக்கணக்கானவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்; தோல்வியும் உற்றிருக்கிறார்கள். உலக வரலாறு இதுதான். அதில் வெற்றிபெற்றதையே நம்பாதவர்களும் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்கள் இக்காலத்தில் உள்ள ஐயுறுவாதிகள் என்பவர்கள். முயன்றால் மனிதன் அந்தச் சுவரைக் கடந்து செல்லலாம். மனிதனுக்கு ஐம்புல அறிவு மட்டுமன்றி, புலன்களுக்கு மேற்பட்ட எவ்வளவோ சத்தியும் இருக்கிறது. அதைச் சிறிது விளக்கிக் கூறினால், உங்களிடமும் அத்தகைய பெருஞ் சத்தி இருப்பது உங்களுக்குப் புலனாகும்.

என் கையை நான் ஆட்டுகிறேன். அதை ஆட்டும் பொழுது நான்தான் அதை ஆட்டுவதாக எனக்குத் தெரிகிறது. அதை விழித்த அறிவு என்று சொல்லுகிறேன். நான் கையை ஆட்டுவதாக நினைக்கும் பொழுது என் இதயம் அசைகின்றது. எனக்கு அது தெரியவில்லை. ஆனால், அதை அசையச் செய்பவர் யார்? இரண்டும் செய்பவர் ஒருவராய்த்தான் இருக்கவேண்டும்.

கைகளை ஆட்டும்போது மனிதன் அதைத் தெரிந்தும் தெரியாமலும் செய்கிறான். ஆகவே, அவன் இரண்டு நிலைகளில் நின்றும் வேலை செய்கிறான். ஒன்று விழித்த நிலை ; மற்றொன்று அதற்குக் கீழ்ப்பட்டது. விழித்த அறிவுடன் இல்லாத நிலையில் தோன்றுவதை இயற்கை உணர்ச்சி என்று சொல்லுகிறோம். விழித்த நிலையில் தோன்றுவதை விசாரித்து அறிதல் என்று சொல்லுகிறோம். இந்த விழித்த அறிவுக்கும் மேற்பட்ட நிலை ஒன்றிருக்கிறது. இது சுயப்பிரஞ்ஞையற்ற நிலை போன்றதே என்றாலும், விழித்த அறிவுக்கு மேற்பட்டதேயொழியக் கீழ்ப்பட்டதன்று. இது இயற்கை உணர்ச்சி அன்று ; தெய்விக உணர்ச்சி. இதற்கு உங்களுக்குப் பிரமாணம் இருக்கிறது. உலகில் தோன்றிய மாபெருஞானிகள் . மதாசாரியர்கள் ஆகியவர்களை நினைத்துப் பாருங்கள். வெளியுலகத்தைப் பற்றிய நினைவே இல்லாமல் அவர்கள் சில சமயம் இருந்திருப்பதை அறிவோம். அவர்களுக்கு ஏற்பட்ட ஞானம் இந்த நிலையில் இருக்கும் பொழுது உண்டானது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். படையுடன் ஸாக்ரட்டீஸ் செல்லும் பொழுது வெய்யோன் தன் விரிசோதியுடன் உதிப்பதைக் கண்டார். உடனே அவர் மனத்தில் ஓர் எண்ணத் தொடர்ச்சி உதிக்கவே, தம் நினைவு இல்லாமல் இரண்டு நாள் அந்த வெயிலிலேயே நின்றுகொண்டிருந்தாராம். அம்மாதிரிச் சமயங்களில் அவருக்கு உண்டான ஞானந்தான் உலகுக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே, இந்தச் சமய போதகர்களும், மதாசாரியர்களும் தங்கள் சாதாரண அறிவைக்கடந்து மேலே செல்லும் சந்தர்ப்பங்கள் இவர்கள் வாழ்க்கையில் ஏற்படுகின்றன. இவர்கள் அந்த நிலையை விட்டுச் சொந்த நிலைக்கு வரும்பொழுது ஞான ஒளியோடு 'பொலிவுற்று விளங்குவார்கள். இந்த உலகிற்கு அப்பாலுள்ள இடத்திலிருக்கும் பொருள்களையும் அறிந்துகொண்டு வருபவர்கள் இவர்கள். இவர்களையே 'தெய்விக உணர்ச்சி பெற்ற ஞானிகள்' என்று சொல்லுகிறோம்.

ஆயினும், இதில் ஓர் ஆபத்து இருக்கிறது. நாம் தெய்விக உணர்ச்சி வயப்பட்டிருப்பதாக யார் வேண்டுமானாலும் கூறலாம். அவ்வாறு எத்தனையோ தடவை சொல்லவும் சொல்லுகிறார்கள். ஆனால், அதை நாம் எப்படித் துருவி அறிவது ? தூங்கும் பொழுது நாம் உணர்வற்று இருக்கிறோம். ஓர் அறிவிலி மூன்று மணி நேரம் ஆழ்ந்து தூங்குகிறான். அவன் விழித்தெழுந்ததும் முன் போன்ற அறிவிலியாகவேதான் இருக்கிறான். இயேசுநாதர் அம்மாதிரி ஒரு நிலைக்குச் சென்று மீண்டதும்

ஏசுகிறித்துவாய் மாறினர். ஒன்று இயற்கை உணர்ச்சி; மற்றது தெய்விக உணர்ச்சி. இதுதான் மாறுதல். இயற்கை உணர்ச்சியில் இருப்பது குழந்தை. மற்றதில் உள்ளவன் அனுபவம் முதிர்ந்து மூப்படைந்த மனிதன். இந்த உணர்ச்சியை எல்லோரும் பெறலாம். உலகிலுள்ள எல்லாச் சமயங்களும் இந்த உணர்ச்சியிலிருந்துதான் தோன்றுகின்றன. மேலான ஞானத்திற்கும் இதுதான் பிறப்பிடமாயுள்ளது. ஆயினும், இவ்விதம் மற்றவர்களை ஏமாற்றுகிறவர்களும் இருக்கிறார்கள். இக்காலத்தில் அவ்வாறு ஏமாற்றுகிற இயல்பு மிகுதியாய் இருக்கிறது. என் நண்பர் ஒருவரிடம் மிகவும் சிறந்த படம் ஒன்று இருந்தது. சமய உணர்ச்சியோடு கூடிய செல்வரான மற்றொரு மனிதர் அப் படத்தின் மீது விருப்பம் கொண்டார். ஆனால், என் நண்பர் அதை அவருக்கு விற்கச் சம்மதிக்கவில்லை. அந்தச் செல்வர் ஒரு நாள் என் நண்பரிடம் வந்து, "எனக்குத் தெய்விக உணர்ச்சி உண்டாகிக் கடவுளே என்னிடம் வந்து பேசினார்," என்றார். "கடவுள் என்ன சொன்னார்?" என்று என் நண்பர் கேட்க, "அந்தப் படத்தை எனக்குக் கொடுத்துவிடும்படி சொன்னார்," என்றார் அச்செல்வர். என் நண்பரும் சளைத்தவர் அல்லர்; "ஆஹா! அப்படியா? உங்களிடம் அந்தப் படத்தைக் கொடுக்கும்படி என்னிடமும் இறைவர் வந்து சொன்னார். நீங்கள் செக்குக் கொண்டுவந்திருக்கிறீர்களா?" என்று உடனே கேட்டார். "செக்கா? ஏது செக்கு?" என்று அச்செல்வர் கூறியதும், "அப்படியானால் உங்களுடைய தெய்விக உணர்ச்சி சரியானதன்று. எனக்கு ஏற்பட்ட உணர்ச்சியானது, இலட்சம் டாலருக்குச் செக்குக் கொண்டு வருபவருக்கே அப்படத்தைக் கொடுக்கும்படி சொல்லிற்று. ஆகவே, முதலில் செக்கைக் கொண்டு வாருங்கள்," என்றார். தமது இரகசியம் வெளிப்பட்டு விட்டதென்பதையறிந்த அச்செல்வர், தெய்விக உணர்ச்சி என்று சொல்லுவதை விட்டுவிட்டார். இதில் இம்மாதிரி அபாயங்கள் இருக்கின்றன. போஸ்தன் நகரத்தில் ஒருவன் என்னிடம் வந்து, கடவுளே தன்னிடம் வந்து இந்திய மொழியில் பேசியதாக ஒரு தோற்றம் தனக்கு உண்டாயிற்று என்று சொன்னான். கடவுள் கூறியது என்னவென்று தெரிவித்தால் நான் நம்புவதாகக் கூறினேன். அவன் பொருளற்ற பிதற்றல் ஒன்றை எழுதிக் காட்டினான். அதை அறிந்துகொள்ள எவ்வளவோ முயன்றும் என்னால் இயலவில்லை. "எனக்குத் தெரிந்தவரையில் இப்படிப் பட்ட மொழி இந்தியாவில் ஒருபோதும் இருந்ததில்லை; இனி

இருக்கப் போவதுமில்லை; இத்தகைய மொழி பேசுவதற்குத் தகுந்த நாகரிகம் இன்னும் அங்கு ஏற்படவில்லை,'' என்று நான் சொன்னேன். நம்பிக்கையற்ற ஒரு போக்கிலி, என்று அவன் என்னைப்பற்றி நினைத்திருப்பான்; பேசாமற் போய்விட்டான். அவன் உடனே ஒரு பைத்தியக்கார மருத்துவச்சாலையில் இருப்பதாகக் கேட்டால் எனக்கு வியப்பு ஏற்படாது. அறிவிலிகள், மோசக்காரர்கள் இவ்விருதிறத்தவர்களாலும் இம்மாதிரி அபாயங்கள் உண்டு. ஆனால், அதற்காக நாம் தயங்க வேண்டா. உலகில் எல்லாப் பெரிய விஷயங்களிலும் அபாயம் இருக்கத்தான் இருக்கும். நாம் சிறிது எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். ஆராய்ந்து அறியும் சத்தியே இல்லாத மனிதர்களும் இருக்கிறார்கள். ''என்னிடம் அந்தத் தேவதை பேசிற்று; இந்தத் தேவதை பேசிற்று; இம்மாதிரி தெய்வங்கள் வந்து பேசுவதை இல்லையென்று சொல்ல முடியுமா?'' என்று என்னிடம் ஒருவன் வந்து சொன்னான். நூற்றுக்கு 90 அறிவிலிகள் இதை நம்பிவிடுவார்கள். மறுப்பதற்கு இதில் என்ன இருக்கிறது என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், எதுவேண்டுமானாலும் நடக்கலாம். அடுத்த ஆண்டு இந்தப் பூமியானது அக்கினி நட்சத்திரத்துடன் (Dog star) மோதி அழிந்துபோனாலும் போய்விடலாம். ஆனால், நான் அப்படிச் சொன்னால் அதை நிலை நாட்டும்படி கேட்க உங்களுக்கு அதிகாரமுண்டு. ஒரு தேவதையிடமிருந்து நான் அருள் பெற்றேன் என்றால், நான்தானே அதை மெய்ப்பிக்க வேண்டும்? என்னால் மெய்ப்பிக்க இயலவில்லை என்றால், நான் பேசாமல் இருக்கவேண்டும். இந்த இரண்டு அபாயங்களும் நேராமல் பார்த்துக்கொண்டால் பிறகு நமக்குக் கவலை இல்லை. பலர் வாழ்க்கையில் இம்மாதிரி தெய்வ அருள் ஏற்பட்டதாக நினைத்துக்கொள்ளுகின்றனர். அது நம்மைப்பற்றி மட்டும் இருந்தால் நம் விருப்பம் போல நடப்பதில் ஒரு தடையுமில்லை. ஆனால், பிறர் விஷயத்துடன் அதைச் சம்பந்தப்படுத்தி நாம் நடப்பதாயிருந்தால், அவ்வாறு செய்யுமுன் நன்றாகச் சிந்திக்க வேண்டும். அப்பொழுது அச்சம் இல்லை.

சமய உணர்ச்சியானது இந்தத் தெய்விக உணர்ச்சியிலிருந்துதான் உண்டாகிறது என்பது தெரிகிறது. ஆயினும், இதில் எத்தனையோ அபாயங்களும் இருக்கின்றன. அனைத்திலும் பெரிய அபாயம் அதிக உரிமை கொண்டாடுவது. சிலர் கடவுளிடமிருந்து கேட்டுக்கொண்டுவந்து தாம் நேரே பேசுவதாகச் சொல்கின்றனர். இது காரணமில்லாமலிருக்கிறது. எதுவா

யிருந்தாலும் அது பொதுவானதாயிருக்க வேண்டும். அனைவருக்கும் பொதுவாயில்லாத இயக்கம் ஒன்றுமே இல்லை. ஏனெனில், இந்தப் பிரபஞ்சம் முழுதும் நியதிகளுக்குட்பட்டது. எல்லாம் ஒன்று சேர்ந்து திட்டப்படி அமைந்திருக்கிறது. ஆகவே, ஓரிடத்திலிருப்பது எல்லா இடத்திலுந்தான் இருக்க வேண்டும். ஞாயிறும் விண்மீன் மண்டலங்களும் போலவே தான் சிற்றணுவின் அமைப்பும் காணப்படுகிறது. ஒரு மனிதனுக்குத் தெய்விக உணர்ச்சி ஏற்படுகிறது என்றால், நம் ஒவ்வொருவருக்குமே அது ஏற்படலாம்; அதுதான் சமயம் என்பது. நாம் இப்பொய்த் தோற்றங்கள், ஏமாற்றங்கள், இயக்கங்களுள், ஒன்றிலும் அகப்படாமல் இருக்க வேண்டும்; சமயத் தத்துவங்களை நேருக்கு நேராகக் கண்டு தெளியவேண்டும். விதவிதமான சமயக் கொள்கைகளையும் சம்பிரதாயங்களையும் நம்புவது, ஆலயங்களுக்குச் செல்வது, மத சம்பந்தமான நூல்களைப் படிப்பது ஆகிய இவைகளிலெல்லாம் இல்லை சமய உணர்ச்சி. கடவுளை நீங்கள் கண்டிருக்கிறீர்களா? அன்றேல், ஆன்மாவைத்தான் தரிசித்திருக்கிறீர்களா? இல்லையென்றால் அதற்காகப் பாடு படவாவது செய்கிறீர்களா? அதை இங்கு இப்பொழுதே செய்ய வேண்டும். 'பிறகு பார்த்துக் கொள்ளலாம்!' என்று இருக்கக்கூடாது. எதிர் காலமாவது யாது? முடிவற்ற இந்த நிகழ்காலந்தானே? காலம் என்பது யாது? ஒரு விநாடியே மீண்டும் மீண்டும் நிகழ்வதுதானே? சமய உணர்ச்சி இங்கேயே—இப்பிறவியிலேயே—உண்டாக வேண்டும்.

[இன்னுமொரு வினா எழுகிறது; 'மனிதனது குறிக்கோள் யாது? மனிதன் ஓர் எல்லையில்லாமல் முன்னேறிக்கொண்டேயிருக்கிறான்; அடைய வேண்டிய பூரண நிலை ஒன்று இல்லை என்பது இப்பொழுது உறுதியாகச் சாற்றப்படுகிறது, எப்பொழுதுமே அணுகிக்கொண்டிருக்க வேண்டுவதுதான்; ஆனால், ஒருகாலும் அதை அடைய இயலாது,' என்று இயம்புகின்றனர். இதன் பொருள் ஏதேனும் ஆகுக; இது வியப்பைத் தரக்கூடியதாயிருக்கலாம். ஆனால், அசட்டுத்தனம் இதன் முகத்திலேயே எழுதி ஒட்டப்பட்டிருக்கிறது. ஒரு நேர்கோட்டில் ஏதாவது சலனம் இருக்கிறதா? ஒரு நேர்கோட்டை எல்லையில்லாமல் வரைந்துகொண்டே போனால், அது ஒரு வட்டமாய்விடும். தொடங்கின இடத்திற்கே அது மீண்டும் வந்துவிடும். எந்த இடத்தில் தொடங்கினோமோ, அந்த இடத்திற்கே முடிவாக வரவேண்டும். கடவுளில் நீங்கள் தொடங்கினீர்கள். கடவுள் இடத்திற்கே நீங்கள் மீண்டும் விரைய வேண்டும். இன்னும் என்ன வேலைகள் காத்திருக்கின்றன?

இதை அடைய வேண்டுவதற்குரிய படிப்படியாயுள்ள நுணுக்கமான செயல்களே. இத்தகைய நுணுக்கமான அலுவல்களை, நீங்கள் எஞ்ஞான்றும் புரிந்துதான் தீரவேண்டும்.

இன்னுமொரு வினுவும் எழுகிறது; நாம் ஆராய்ச்சியில் ஆழ ஆழச் சமயத்தின் புதுப் புது உண்மைகளைக் கண்டுபிடிக்க வேண்டி வருமோ? இவ்வினுவிற்கு 'ஆம்,' 'இல்லை' என்னும் விடையே எழும். சமயத்தைப்பற்றி இனி மேலும் அறிய வேண்டிய பொருள் இருக்க இயலாது என்பதை முதன்முதலாக நீங்கள் அறியவேண்டும். அகத்தில் ஒரு புதுமை இருக்கிறது என்று உலகத்திலுள்ள சமயங்களனைத்தும் உரிமை பாராட்டுவதை நீங்கள் காண்கிறீர்கள், தெய்வநிலையில் இரண்டறக் கலக்கின்ற காரணத்தால் மேன்மேலும் முன்னேற்றத்திற்கு இடமில்லை என்று கூறிவிடலாம். அறிவென்பது இந்த ஒருமையைக் கண்டுபிடிப்பதே. ஆடவராகவும் பெண்டிராகவும் உங்களை நான் பார்க்கும்பொழுது பலவிதத் தோற்றத்தைப் பார்க்கின்றேன். உங்கள் யாவரையும் மனித இனம் என்று கூறுபடுத்தும் பொழுது அது ஒருமை காண்கிற விஞ்ஞான அறிவாய்த் திகழ்கின்றது. சான்ருக, இரசாயன சாத்திரத்தை நோக்குங்கள். காணப்பட்ட எல்லாப் பொருள்களையும் அவற்றின் பண்டைய மூலகங்களுக்குக் கொண்டுபோக இரசாயன சாத்திரிகள் முயல்கின்ருர்கள்; இயலுமாயின், அந்தப் பொருள்களனைத்தும் பிறந்த மூலகத்தையும் காண முயல்வார்கள். அதை எய்திவிட்டால், அதற்கப்பால் அவர்கள் போதல் இயலாது. இரசாயன சாத்திரம் பூரணத்தை அடைந்துவிடுமன்ருே? இந்தப் பூரண ஒருமையை நாம் அடையப் பெறுவோமாயின் அதற்கப்பால் வேறு ஒரு முன்னேற்றம் இருக்க இயலாது.]

"நானும் கடவுளான தந்தையும் ஒன்றே," என்று தெரிந்துகொண்டதும் சமயத்தைப் பற்றி முடிவாகக் கூறியாய்விட்டது. உண்மையான 'சமயத்தில் குருட்டு நம்பிக்கை' என்று சொல்லுகிருேமே அத்தகையது ஒன்றும் இல்லை. பெரிய ஆசாரியர் எவரும் அவ்விதம் ஓதவில்லை. மதம் கெட்டுத் தாழ்ந்த நிலையையடைந்தால்தான் அவ்வாறு உண்டாகும். அறிவிலிகளே பெரிய மகாத்துமாக்களைப் பின்பற்றியதாக நடித்து, ஒரு சத்தியும் இல்லாமலே, குருட்டுத்தனமாய் நம்பும்படி முயலுகிருர்கள். அவ்வாறு அறிவில்லாமல் நம்புவது அறிவுறுத்திய ஆன்மாவையே கீழ் நிலையில் உய்த்துவிடும். நாத்திகனுயிருந்தாலும் இருக்கலாம். விசாரித்தறியாமல் மட்டும் ஒன்றையும் நம்பலாகாது. விலங்குகளுக்குச் சமமாக மனிதர்கள் ஏன் கீழ்ப்பட்ட நிலைக்கு வரவேண்டும்? அது உங்களுக்குமட்டும் கெடுதல் அன்று; மனித சமூகத்திற்கே கேடு விளைவிப்பதாகும். தைரியமாய் அறிவினுல்

ஆராய்ந்து பின்னர் நம்புங்கள். சமய உணர்ச்சியானது நம் உள்ளத்திலேதான் இருக்கிறது; கண்டதை நம்புவதில் இல்லை. இதுதான் சமயம் என்பது. இந்த உணர்ச்சியைப் பெற்று விட்டால், நாம் மதப் பற்றுள்ளவர்களாகிவிடுவோம். அதற்கு முன்பு நாம் முற்றிலும் விலங்குகள் போன்றவர்களே. புத்த பகவான் என்ன சொல்லுகிறார்? "கேட்டதையெல்லாம் நம்பா தீர்கள்; முன்னோர்களிடமிருந்து பரம்பரையாய் வந்துள்ள கொள்கைகள் என்று நம்பிவிடாதீர்கள். பலர் குருட்டுத்தனமாய் நம்பினர் என்பதற்காக நீங்கள் ஒன்றையும் நம்பலாகாது. யாரோ பழைய முனிவர் ஒருவர் ஏதோ சொல்லிவிட்டுச் சென்றார் என்றால், அது பெரிதன்று. பழக்கத்திலுள்ள உண்மை என்று அதையே கைக்கொள்ளவும் கூடாது. நம் ஆசிரியர்கள், பெரிய வர்கள் சொல்லுகிறார்கள் என்பதனால் மட்டும் நம்பிவிடலாகாது. ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். முடிவு சரி என்று பட்டு அனை வருக்கும் அது நன்மை பயப்பதாயிருந்தால், அதை ஏற்றுப் பிறகு அதன்படி நடப்பீர்களாக."

## சமய சாதனை *

நாம் பல நூல்களையும் சாத்திரங்களையும் படிக்கிறோம் ; குழவிப் பருவம் முதலே பலவகைக் கருத்துகளைப் பெறுகிறோம் ; அவற்றை இடையிடையே மாற்றி வருகிறோம். கொள்கையளவாம் சமயமென்பதை நாம் அறிவோம். செயலளவாம் சமயம் இன்னதென்பதை நாம் தெரிந்துகொண்டதாகக் கருதுகின்றோம். செயலளவாம் சமயத்தைப் பற்றிய என் கருத்தை உங்கள் முன் இப்பொழுது எடுத்துரைக்கப் போகின்றேன் :

செயலளவாம் சமயத்தைப் பற்றிய பேச்சு நம்மைச் சுற்றி எங்கும் ஒலிக்கின்றது. அதை ஆராய்ந்து பார்க்குமிடத்து, ஒரு கருத்தின் அடிக்கீழ் எல்லாவற்றையும் கொணர இயலுமென்று தோன்றுகின்றது : அதாவது சகோதர மக்கள்பால் பரிவு கூர்தல் என்பதே.

அவ்வளவுதானா சமயமுழுதும் ? ஒருவன் தன் சகோதர மக்கட்கு நன்மை புரிகின்றான். இத்தகைய கிறித்தவ சமய அனுபவ நெறியைப் பற்றி இந்நாட்டில் நாளும் கேள்வியுறுகிறோம். அதுதானோ அத்தனையும் ?

வாழ்க்கையின் குறிக்கோளென்ன ? இந்த உலகந்தானா வாழ்க்கையின் இலட்சியம் ? இதற்குமேல் ஒன்றுமில்லையா ? நாம் இப்பொழுது இருப்பது போலவா இருக்கவேண்டும் ? இதற்கப்பால் ஒன்றுமில்லையா ? யாதொரு தொந்தரவும் அளிக்காமல் தட்டுத் தடங்கலின்றி ஓடுகின்ற இயந்திரந்தானா மனிதன் ? இன்று அவன் நுகரும் துயர்கள்தாமா அவன் அடையக்கூடியவை ? வேறொன்றும் அவனுக்குத் தேவையில்லையா ?

பல சமயங்களின் மிகமிக உயர்ந்த கனவு இவ்வுலகமே. நோய் நொடிகள், ஒரு வகையான துன்பங்கள், வறுமை—இவற்

* இது 1900-ஆம் ஆண்டு, ஏப்பிரல் திங்கள், 18-ஆம் நாள், காலிபோர்னியாவிலுள்ள ஆலமேடாவில் ஆற்றப்பட்டது.

றுள் ஒன்றுமில்லாத காலத்தைப் பற்றித்தான் உலகில் பெரும் பாலார் கனவு காண்கின்றனர். எப்பொழுதுமே அவர்களை நற் காலம் சூழ்ந்திருக்க வேண்டும். செயலளவாம் சமயம் இதுவே. தெருக்களைச் சுத்தம் செய்க; ஒவ்வொன்றையும் நேர்த்தியாக வைத்துக்கொள்க. அதுவே போதும். இதை எல்லோரும் எப்படி நுகர்கின்றுர்கள் என்பதை நாம் காண்கின்ருேம்.

இன்ப நுகர்ச்சிதானு வாழ்க்கையின் குறிக்கோள்? இப்படி யிருக்குமாயின், மனிதனுய்ப் பிறப்பதே ஒரு மாபெருந்தவருகும். நாயையும் பூனையையுங்காட்டிலும் மனிதன் உவகையோடு உணவை உண்ண முடியுமா? விலங்குச் சாலைக்குச் சென்ருல், காட்டு விலங்குகள் எலும்பினின்றும் மாமிசத்தைக் கிழித்துக் கடித்து இழுத்துத் தின்பதைக் காணலாம். ஏன்? பறக்கும் புள்ளாய் மனிதன் பிறக்கலாமே! மனிதனுகத் தோன்றும் தவற்றைப் புரிவானேன்? இந்திரிய நுகர்ச்சிகளைப் பெறுவதற்கே மனிதனுக வேண்டுமானுல், நூற்றுக்கணக்கான ஆண்டுகளாய் அரும்பாடு பட்டதெல்லாம் வீணல்லவா?

செயலளவாம் சமயத்தைப் பற்றிய கொள்கை எங்கே உங் களை அழைத்துச் செல்லும் என்பதை உன்னிப் பாருங்கள். பிறர் பால் பரிவு காட்டுவது மிகச் சிறந்ததே. அதுவே எல்லாம் என்று நீங்கள் கூறுவீர்களாயின், லோகாயதத்தை நாடுகின்ற அபாயத் திற்கு உட்படுவீர்கள். அது சமயமன்று. அது நாத்திகத்தை விடக் கீழ்ப்பட்டது என்றுங்கூட இயம்பலாம். மக்கள் சகோதரர் களுக்காக உழைப்பது, மருத்துவ சாலைகள் கட்டுவது— இவற்றைத் தவிர வேருென்றையும், கிறித்தவர்களே, உங்கள் வேத புத்தகத்தில் நீங்கள் காணவில்லையா? இதோ ஒரு கடைக் காரன் நின்றுகொண்டு, 'இப்படித்தான் இயேசுநாதர் கடையை வைத்திருப்பார்,' என்று கூறுகிருன். இயேசுநாதர் ஒரு கடையையோ ஒரு போக விடுதியையோ ஒரு நாளும் வைத் திருக்க மாட்டார்; பத்திரிகை ஒன்றையும் நடத்தியிருக்கமாட் டார். இத்தகைய செயலளவாம் சமயம் நன்றுதான்; தீதன்று. ஆனுல், இது பாலர் வகுப்புச் சமயம் போன்றிருக்கிறது. இது மேல் எங்கேயும் உங்களை அழைத்துச் செல்லாது.

உங்கட்குக் கடவுள்பால் நம்பிக்கையிருக்குமாயின், நீங்கள் கிறித்தவர்களாய்த் திகழ்ந்து, நாளும் 'உன் திருவுள்ளப்படி நடக்கும்,' என்று திரும்பத் திரும்பத் தோத்திரஞ் செய்வதாயின்,

அதன் பொருளென்ன என்பதை ஒரு கணம் உன்னிப் பாருங்
கள். ‘உன் சங்கற்பப்படி நடக்கட்டும்,’ என்று நீங்கள் நவிலுந்
தோறும், ‘ஆண்டவனே, என் எண்ணம் உன்னால் நிறைவே
றட்டும்,’ என்றுதான் உண்மையில் கருதுகின்றீர்கள். ‘அந்த
அகண்ட மெய்ப்பொருள் தன்னுடைய திட்டங்களை வகுத்துக்
கொண்டுதான் இருக்கிறது. அதுவும் ஏதோ பிழை செய்து
விட்டது; அதை நான் அகற்றப் போகின்றேன்,’ என்று நினைக்
கின்றீர்கள். இது என்ன பேதைமை! இந்தப் பிரபஞ்சத்தைத்
திட்டம் வகுத்துப் படைத்த தெய்வச் சிற்பிக்குக் குற்றவேல் புரி
யும் இச்சிறிய தச்சர்கள் அறிவுரை வழங்கப் போகின்றார்களா?
அவன் இவ்வையகத்தை அழுக்கு மண்டிக்கிடக்கும் பொந்தும்
புதருமாக அமைத்துவிட்டான். அதை நீங்கள் ஒரு வனப்பு
வாய்ந்த அரண்மனையாக மாற்றப் போகின்றீர்களா? இறுதியில்
நாடவேண்டிய இலட்சியம் யாது? புலன்கள் எப்பொழுதேனும்
இலட்சியமாய் இருக்க இயலுமா? புலன் நுகர்ச்சியின்பம் நமக்கு
ஒரு குறிக்கோளா? இந்த வாழ்க்கைதான் ஆன்மாவின்
நோக்கமா? அப்படியாயின், இக்கணமே மரிப்பது நலமாயிற்றே!
இந்த வாழ்க்கை வேண்டாவே! தக்கபடி பூரணமாய் அமைக்கப்
பட்ட இயந்திரமாய் இருப்பதற்குத்தான் மனிதன் படைக்கப்பட்
டிருக்கிறான் என்பது அவன் தலைவிதியாயின், அது மரங்கள்,
கற்கள் போன்ற பொருள்களின் நிலையை அவன் மீண்டும் பெற
வேண்டுமென்பதே ஆகும். ஒரு பசு எங்கேயாவது பொய்
கூறுமா? ஒரு மரம் எங்கேயாவது திருடுமா? அவை நல்ல
இயந்திரங்கள் போன்றவை. அவை தவறுகள் புரியா; எல்லாம்
முடிவடைந்த உலகத்தில் உறைகின்றன. இது செயல் முறைச்
சமயமாயிருக்க முடியாதென்றால், சமயத்தின் குறிக்கோள் யாதோ!
நாம் இயந்திரம்போல வாழ்வது இலட்சியமாயிருக்க இயலாது.
நாம் எதற்காக இவ்வையகத்தில் வந்திருக்கிறோம்? விடுதலையை
யும் ஞானத்தையும் எய்துதற்பொருட்டே பிறந்திருக்கிறோம்.
விடுதலை பெறவே நாம் உண்மையை அறிய விரும்புகின்றோம்.
அதுதான் நம்முடைய வாழ்க்கை; ‘விடுதலை’—‘விடுதலை’ என்
பதேதான் எங்கும் எழும் குரலாகும். விதையினின்றும் செடி
மண்ணைப் பிளந்து விண்ணை நோக்கி நிமிர்ந்து நிற்கிறது.
கதிரவனிடமிருந்து இப்புவிக்குக் கிடைப்பது யாது? நம்முடைய
வாழ்க்கைதான் என்ன? விடுதலைக்காகப் போராடுவதே. சுற்றி
லும் நம்மை இயற்கை அடக்க முயல்கிறது; ஆன்மாவோ, தன்
ஒளியை வெளிப்படுத்த விரும்புகின்றது. இயற்கையோடு

போராட்டம் நடந்துகொண்டேதானிருக்கிறது. இந்த விடுதலைப் போராட்டத்தில் பற்பல பொருள்கள் காலில் மிதிபட்டு நசுங்கி நொறுங்கிப் போய்விடும். அதுதான் உங்களுடைய உண்மை யான துயராகும். "படலங்கள் படலங்களாகப் புழுதிகளும் குப்பை கூளங்களும் போர்க்களத்தில் எழுப்பப்படவேண்டும். நான்தான் வெற்றிக்கொள்வேன்!" என்று இயற்கை முழங்கு கின்றது; "நான்தான் வாகை சூடவேண்டும்!" என்று ஆன்மா பறை சாற்றுகின்றது. "பொறு; நீ அமைதியாயிருப்பதற்குச் சிறிது இன்பம் அளிக்கின்றேன்," என்று இயற்கை இயம்பு கின்றது. ஆன்மா சற்று இன்பம் நுகர்ந்து மையலில் ஆழ் கின்றது; ஆனால், மயக்கந் தெளிந்தபின் விடுதலைக்காக ஓலமிடு கின்றது. பற்பல ஊழிகளாய் ஒவ்வோர் உள்ளத்திலும் விடுதலைக் காக இடையறாது எழும் குரலை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? ஏழ்மையால் நாம் வஞ்சிக்கப்படுகின்றோம். செல்வம் படைத்த வர்களாய்த் திகழ்கின்றோம்; ஆனால், பிறகு நம்முடைய செல்வத் தாலே நாம் ஏமாந்து போகின்றோம். நாம் அறிவிலிகளாயிருக் கிறோம். நாம் கற்று அறிந்துகொள்ளுகிறோம். நம்முடைய அறி வும் நம்மை மோசஞ் செய்துவிடுகிறது. திருப்தி அடைந்த மனிதனை இல்லை. அதுதான் துன்பத்திற்கு வேராகும். அதுவே எல்லா நலன்களுக்கும் மூலமாயும் மிளிர்கின்றது. அதுதான் மறுக்க முடியாத சின்னமாகும். நாளையே இவ்வையகம் அமர நாடாய் மாறினாலும், "இது வேண்டா; வேறு ஏதாவது ஒன்றை அருளுங்கள்," என்று நாம் சொல்லுவோம்.

அகண்டமான இந்த ஜீவான்மாவை அகண்ட வடிவான பர மான்மாவைக் கொண்டுதான் திருப்தி அடையச் செய்ய முடியும். எல்லையற்ற அவா, எல்லையற்ற அறிவினாலேதான் நிறைவேற முடியும். உலகங்கள் தோன்றி மறைந்துவிடும். அதனால் என்ன? ஆன்மா அழிவற்றது; இடையறாது விரிவடைகின்றது. ஆன்மாவிற்குள் உலகங்கள் புகத்தான் வேண்டும். கடலில் நீர்த் திவலைகள் அடங்குவதுபோல அவை ஆன்மாவில் கலந்து மறைந்துவிடுகின்றன. இத்தகைய உலகமா ஆன்மாவின் இலட் சியமாகப் போகின்றது! நமக்குச் சிறிது இயற்கையறிவு இருத் தல் வேண்டும்; இத்துடன் நாம் திருப்தி அடையமாட்டோம். "திருப்தி அடையுங்கள்" என்று கூறுகின்ற கவிவாணர்களுக்கு ஊழிக் காலங்களாக இது பொருளாய் மிளிர்ந்து வருகின்றது. ஒருவரும் போதுமென்ற மனத்தோடு இருந்ததாகத் தெரிய

வில்லை. ஆயினும், பல கோடி தீர்க்கதரிசிகள், 'கிடைத்ததைக் கொண்டு இன்புறுங்கள்,' என்று இயம்பி இருக்கின்றூர்கள்; கவிஞர் பலர் இதன் பெருமையைப்பற்றி இசைத்திருக்கின்றனர். அமைதியும் திருப்தியும் பெறும்படி நாமே நமக்கு அறிவுரை கூறியிருக்கிறேம். எனினும், நமக்குத் திருப்தி கிட்டவில்லை. ஏன்? ஆன்மாவைத் திருப்தி செய்யக்கூடிய பொருள் மேலே விரிந்த விண்ணிலும் இல்லை; கீழே பரந்த பாரிலும் இல்லை. இதுதான் அந்த அழிவற்ற பரம்பொருளின் திட்டம் போலும்! ஏன்? ஆன்மாவின் பேரவாவின் முன் விண் மீன்களும், மேல் உலகங்களும், கீழ் உலகங்களும், இந்தப் பிரபஞ்சம் முழுதுமே நாம் வெறுக்கத்தக்க கொடிய பிணி போலத் தோன்றும். இதுதான் உண்மையான பொருளாகும். இது பொரு ளன்றேல், ஒவ்வொன்றும் தீதே. இதன் உண்மையான முக்கியத்தை, இதன் இலட்சியத்தை உணராதபோது ஒவ் வொரு விருப்பமும் கொடிதே. இயற்கை முழுதும் முழுச் சுதந்திரத்திற்காக ஒவ்வோர் அணுவாயிலாக ஓலமிட்டுக் கொண்டிருக்கிறது.

ஆகவே ஏட்டுச் சுவடிகளில் அல்லாமல் நடைமுறையில் அமையவேண்டிய சமயம் யாது? அந்த விடுதலை நிலையை நண்ணி அதைப் பெறுவதே. அதை எய்துவதற்கு இவ்வுலகம் உதவி புரியுமாயின், நன்று. அவ்வாறன்றி, ஏற்கெனவே உள்ள பல்லாயிரக் கணக்கான பந்தச்சுவரோடு இதுவும் ஒரு பந்தச் சுவராய் எழுமாயின், இது ஒரு பெருந்தீங்காகும். உடைமைகள், படிப்பு, வனப்பு—இவற்றைப் போன்ற அனைத்தும் நம்முடைய இலட்சியத்தை அடைவதற்கு உதவி புரியுமாயின், இவை நமக் குச் செயல் முறையில் பயன்படும். விடுதலையாம் இலட்சியத்தை எய்துவதற்கு இவை உதவாத நிலையில், இவையே நமக்குப் பெரிய தீங்காய் முன் வந்து நிற்கும் என்பது திண்ணம். செயல் முறைச் சமயமென்பது யாது? அது இம்மையிலுள்ளவற்றை யும் மறுமையிலுள்ளவற்றையும் விடுதலைக்காகச் சாதனங் களாய் அமைத்துக்கொள்வதே. ஒவ்வோர் இன்ப நுகர்ச்சி யையும் ஒவ்வொரு மடங்குப் போகத்தையும் பெறுவதற்காக அகண்ட நெஞ்சையும் மனத்தையும் ஒருங்கே விற்கவேண்டி நேர்கிறது.

இவ்வுலகிலுள்ள நன்மை தீமைகளின் முழுக் கணக்கைப் பாருங்கள். அதில் மாறுதல் இருக்கிறதா? பல யுகங்கள் கழிந்து

விட்டன. ஊழிக் காலங்களாகச் சமய சாதனைகள் நடந்துவருகின்றன. ஒவ்வொரு காலத்தும் சிக்கலான பிரச்சினை தீர்ந்துவிடுமென்று உலகம் நினைத்தது. ஆயினும், அந்தப் பிரச்சினையின் சிக்கல் அவிழ்ந்தபாடில்லை; அப்படியேதானிருக்கிறது. வேண்டுமானால், சற்று அது உரு மாறலாம். பல்லாயிரக் கணக்கான கடைகளுக்கு ஈளை நோயையும் நரம்புக் கோளாற்றையும் அது வியாபாரஞ் செய்கின்றது. அது பண்டைய வாதநோய் போலக் காட்சி அளிக்கின்றது. ஓரிடத்திலிருந்து அதை அடித்துத் துரத்தினால், அது மற்றோரிடத்திற்கு விரைகின்றது. ஒரு நூற்றாண்டுக்கு முன் மனிதன் கால்நடையாகச் சென்றான்; அல்லது குதிரையை வாங்கி அதன்மீது சவாரி செய்தான். இப்பொழுது புகை வண்டியில் போவதைக்கொண்டு மகிழ்ச்சி அடைகிறான். ஆனால், முன்னிலும் மிகுதியாய் உழைத்துச் சம்பாதிக்க வேண்டுவதை உன்னி உளம் வாடுகின்றான். இயந்திரம் வேலையைக் குறைப்பது உண்மையே. ஆனால், அது தொழிலாளர்களுக்கு மிகுந்த இன்னலை அளிக்கின்றது.

இதைப் பிரபஞ்சம் என்று வழங்குங்கள்; இயற்கையென்று இயம்புங்கள்; எந்தப் பெயராலும் இதைக் கூறுங்கள். இது ஓர் எல்லைக்குட்பட்டதே. ஒருபொழுதும் இது அகண்டமாயிருக்க முடியாது. அகண்டம் பிரகிருதியாகத் தோன்றவேண்டும் என்றால், காலம், தேசம், காரணகாரியநியதி, இவற்றின் எல்லைகளுக்குட்பட்டுதான் தீரவேண்டும். நம் வயம் இருக்கும் சத்தியோ, ஒரு வரம்பிற்குள் அடங்கியது. ஓரிடத்தில் நாம் இழக்கின்ற சத்தியை மற்றோரிடத்தில் பயன்படுத்திக்கொள்ளுகிறோம். உண்மையைக் கூறுமிடத்து, மொத்தத் தொகை எப்பொழுதும் ஒன்றே. கடலில் ஓரிடத்தில் அலை எழும்பினால், மற்றோரிடத்தில் பள்ளமாயிருக்கும் என்பது உண்மையே. ஒரு நாடு செல்வத்தால் செழிப்புற்றால், மற்றைய நாடுகள் வறுமையுறுகின்றன. நல்லது தீயதைச் சமம் செய்கின்றது. அலைச் சிகரத்தின்மீது ஒரு கணம் அமர்ந்திருப்போன் எல்லாவற்றையும் நல்லதாகவே கருதுவான்; அடி மட்டத்தில் இருப்பவனோ, அனைத்தையும் கெடுதலாகவே எண்ணுகிறான். இவற்றினின்று சற்று விலகி நிற்பவன் தெய்வத் திருவிளையாடல் நடப்பதைக் காண்கின்றான். சிலர் அழுகின்றனர். வேறு சிலர் சிரிக்கின்றனர். சிரித்தவர் அழுகின்றனர். அழுதவர் சிரிக்கின்றனர். நாம் என்ன செய்ய முடியும்? ஒன்றும் செய்யமுடியாது என்பதை நாம் அறிவோம்.

நற்காரியம் செய்யவேண்டும் என்று விழைகின்ற நம்மிடையே எத்தனை பேர் அதைச் செய்து முடிக்கின்றனர்? விரல் விட்டு எண்ணக்கூடிய எவரோ ஒரு சிலரே நற்செயலாற்றுகின்றனர். மற்றவர்களும் நல்லது புரியாமலில்லை. ஆனால், அது கட்டாயத்தினால் நடைபெறுகின்றது. நாம் அசைவற்று நிற்க இயலாது. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு முட்டி மோதப்பட்டு உந்தப்படுகின்றோம். நாம் என்ன செய்ய முடியும்? உலகம் அதே உலகமாய்த்தானிருக்கிறது; இப்புவியும் அதே புவியாய்த்தானிருக்கிறது. நீலத்திலிருந்து கருஞ்சிவப்பாய் அது மாறும். கருஞ்சிவப்பிலிருந்து நீலமாகிவிடும். அது ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழி பெயர்ப்பதை ஒக்கும். ஒரு தீய வரிசை மற்றொரு தீய வரிசையாய் மாறுகிறதைத் தவிரப் பிறிதில்லை. ஒன்றில், ஆறென்றால் என்ன? மற்றொன்றில் இரு மூன்றென்றால் என்ன? காட்டில் உறையும் அமெரிக்க இந்தியன் நீங்கள் கேட்கும் வண்ணம் தத்துவ விசாரத்தைப் பற்றிய சொற்பொழிவைக் கேட்டு இன்புறல் இயலாது. ஆனால், தன் உணவைச் சீரணிக்கும் ஆற்றல் அவனிடத்தில் இருக்கிறது. அவனைத் துண்டு துண்டாக வெட்டினாலும், அவன் அடுத்த கணம் முற்றிலும் உடல் நலத்தைப் பெற்றுவிடுகிறான். ஆனால், உங்களுக்கும் எனக்கும் ஒரு சிறு கீற்றுக் காயம் பட்டாலும், நாம் ஆறுமாத காலம் மருத்துவசாலையில் தங்கும்படி நேர்ந்து விடும்.

பிறப்பமைப்பில் கீழே போகப் போக ஐம்புல இன்பம் மிகுதியாகின்றது. மிகக் கீழ்ப்பட்ட விலங்கினங்களைப் பற்றியும் அவற்றின் தொடு உணர்ச்சியின் ஆற்றலைப் பற்றியும் சிந்தித்துப் பாருங்கள். எல்லாம் தொடு உணர்ச்சியே. மனிதனை நண்ணுகிற பொழுதும் இதே உண்மையைக் காண்பீர்கள். நாகரிக ஏணியில் எவ்வளவுக்கெவ்வளவு கீழ்ப்படியில் அவன் இருக்கின்றானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய ஐம்புல இன்பம் மிகுந்தே காட்டும். பிறப்பமைப்பு எவ்வளவுக்கெவ்வளவு உயர்ந்திருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு ஐம்புல இன்பம் குறைந்து கொண்டே வரும்.

ஒரு நாய் உணவைச் சுவைத்து அருந்தும் தன்மை வாய்ந்திருக்கிறது; ஆனால் தத்துவ விசாரத்தில் ஆழ்ந்திருக்கும் பொழுது பிறக்கும் நுண்ணிய இன்பத்தை அது நுகர இயலுமோ? அறிவினால் நாம் எய்தும் வியத்தற்குரிய இன்பத்தை அது இழந்

திருக்கிறது. ஐம்புல இன்பங்கள் உயர்ந்தவைகளே ; இவற்றைக் காட்டிலும் உயர்ந்தது அறிவில் தோன்றும் இன்பம். பாரிஸ் மாநகரில் ஐம்பது வகையான உண்டிகளை அருந்தும்பொழுது, இன்பம் உண்மையிலே இருக்கத்தான் இருக்கிறது. ஆனால், வான சாத்திர ஆராய்ச்சிக் கூடத்தில் நின்றுகொண்டு, விண்மீன் களை நோக்குங்கால், எத்தனையோ மண்டலங்கள் தோன்றிக் கண் வட்டத்தில் மிதந்து வரும் இக்காட்சியை உன்னிப் பாருங்கள். இவ்வின்பம் அதைவிடச் சிறந்ததாய் இருக்கும். இதில் ஆழ் கின்ற பொழுது உண்டியருந்துவது சம்பந்தமான அனைத்தையும் மறந்துவிடுகின்றீர்கள். உலகப் பொருள்களிலிருந்து நீங்கள் அடைகின்ற இன்பத்தைக் காட்டிலும் இது உயர்ந்ததாய் இருக் கிறது.

மனைவி, மக்கள், கணவன்—எல்லோரையுமே இந்த இன்பத் தில் மறந்துவிடுவீர்கள். இது அறிவிலிருந்து மலரும் இன்பம். ஐம்புல இன்பங்களைக்காட்டிலும் இது சிறந்தது என்பது சாதாரண அறிவுக்கும் விளங்கும். பேரின்பத்திற்காகச் சிற்றின் பத்தை எப்பொழுதுமே துறக்கின்றோம். விடுதலைபெறத் துறத் தல்—இதுவே செயல்முறைச் சமயமாகும். ஆதலால், துறப்பீர் களாக !

உயர்ந்ததை எய்தும்பொருட்டுக் கீழான ஒன்றைத் துறப்பீர் கள். சமுதாயத்தின் அடிப்படை எது ? நல்ல நடத்தை, ஒழுக்க இயல், சட்டங்கள் இவைதாம். அயல் வீட்டுக்காரனது சொத் தைக் களவு கொள்ளும் அவா, அவனை உங்கள் கையால் அடித் தல், எளியோர்களை வாட்டுவதால் நீங்கள் அடையும் இன்பம், பொய் புகன்று அவர்களை வஞ்சிப்பதால் பிறக்கும் தீய இன்பம்— இவற்றை அறவே அகற்றிவிடுங்கள். நல்லொழுக்கம் சமுதாயத் தின் அடிப்படையல்லவா ? நெறி பிறழ்வதை நீக்குதற் பொருட்டே மணச் சடங்கேற்பட்டது. ஒரு காட்டான் மணம் புரிகிறதில்லை. தியாகத்திற்காகவே மனிதன் மணக்கிறான். இப் படியே மேன் மேலும் அடுக்கிக்கொண்டே போகலாம் ; துறக்க ! துறக்க ! தியாகஞ் செய்க ! தியாகஞ் செய்க ! வெறும்பாழுக்கன்று ; வீணுக்கன்று ; உயர்ந்த இன்பத்தை அடைதற்பொருட்டே தியாகம். ஆனால், யார் அதைச் செய்ய இயலும் ? மேலான ஒன்று கைகூடும் வரையில் நீங்கள் தியாகஞ் செய்தல் இயலாது. நாம் எவ்வளவோ பேசலாம் ; அரும்பாடு படலாம் ; பலவற்றைச் செய்துமுடிக்க முயலலாம். மேலானது ஒன்று நமக்குக் கிடைக்கு

மாயின், துறவு தன்னளவிலேயே தோன்றிவிடும்; கீழானது தானாகவே உதிர்ந்துவிடும்.

இதுதான் செயல் முறைச் சமயமாகும். இதைத் தவிர வேறென்ன உளது? தெருக்களைச் சுத்தம் செய்வதும், மருத்துவ சாலைகள் அமைப்பதுந்தானா? அவற்றின் மதிப்பும் இப்படித் துறப்பதிலேதான் தங்கியிருக்கிறது. இத்தகைய தியாகத்திற்கு எல்லையே இல்லை. இந்த அளவுக்குத்தான் செல்லவேண்டும்; இதற்கப்பால் செல்லக்கூடாது என்ற வரம்பை இதற்கு எழுப்புகிற முயற்சியிலேதான் இன்னல் ஏற்படும். ஆனால், இவ்வண்ணத் தியாகத்திற்குக் கரையே இல்லை. கடவுள் திகழ்கின்ற இடத்தில் அவரைத் தவிர வேறொன்றுமில்லை. பிரபஞ்சம் இருக்கிற இடத்தில் கடவுள் இல்லை. இருளும் ஒளியும்போல இவ்விரண்டும் ஒருங்கே சேர்ந்திரா. இதைத்தான் நான் கிறித்தவ சமயத்தினின்றும், அதை அருளிய இயேசு நாதரிடமிருந்தும் அறிந்து கொண்டேன். புத்த சமயமும் இதைத்தான் மொழிகின்றது; இந்து சமயமும் இதைத்தான் எடுத்தோதுகின்றது; மகமது போதித்த சமயமும் இதைத்தான் சாற்றுகின்றது. இருடிகளான சான்றோர்களும், ஞான குரவர்களும் வழங்கியதும் இந்த உபதேசந்தானே! துறக்கவேண்டிய உலகம் எது? இதோ இருக்கிறதே அது; அதைத்தான் நான் எப்பொழுதும் சுமந்து கொண்டே இருக்கிறேன். இந்த உடலேதான் அது. இவ்வுடலை வளர்ப்பதற்காகப் பிறரை அடிக்க் என் கை உவந்து விரைகின்றது. அதை நேர்த்தியாக வைத்துக்கொள்ள வேண்டும்; அதற்கு இன்பம் நல்க வேண்டும். என் உடலின் இன்பத்தைக் கருதியே நான் பிறருக்குத் தீங்கிழைக்கின்றேன்; எத்தனையோ பிழைகள் புரிகின்றேன்.

சிறந்த சான்றோர்களும் மாண்டுபோயிருக்கிறார்கள். அற்ப மனிதர்களும் இறந்திருக்கின்றார்கள். தெய்வங்களும் அழிவுற்றன. மரணம்! மரணம்! எங்கும் மரணந்தான்! கழிந்த எல்லையற்ற காலத்தின் சவக் கல்லறையாய் இவ்வுலகம் காட்சி அளிக்கின்றது. இப்படியிருந்தும், இவ்வுடலை நாம் விடாமல் பற்றிக் கொண்டே வருகின்றோம். இவ்வுடல் மரித்துத்தான் போக வேண்டும் என்னும் உண்மை இருந்தாலும், நாம் ஒருநாளும் இறக்கப்போகிறதில்லை என்று உடலை விடாமல் இறுகப் பிடித்து நிற்கின்றோம். 'நான் இறக்கவில்லை,' என்பதில் ஒரு வகையான

பொருள் உறைந்துதானிருக்கிறது. நம்முடைய தவறு உடலைப் பற்றி நிற்பதே; அழிவற்று நிற்பது நம்முடைய ஆன்மா வாகும்.

நீங்கள் எல்லோரும் உலகாயத மதத்தைச் சார்ந்தவர்களே; ஏனெனில், இந்த உடலைத்தான் நீங்கள் என்று நம்புகின்றீர்கள். ஒரு மனிதன் என்னை நன்ருகக் கிள்ளிவிட்டால், நன்ருய் என்னைக் கிள்ளிவிட்டான் என்றுதான் கூறுவேன். அவன் என்னை அடித் தால், நான் அடிபட்டேன் என்றுதான் இயம்புவேன். இவ்வுடல் நானல்ல என்ருல், நான் ஏன் அவ்வண்ணம் மொழியவேண்டும்? நான் ஆன்மா என்று பகர்ந்தாலும், என்ன ஆகிவிடப் போகின் றது? அப்பொழுதும் நான் இந்த உடல்தான். சடப்பொருளாய் என்னை மாற்றிக்கொண்டிருக்கிறேன். ஆதலால், இந்த உடலைத் துறந்து என்னுடைய உண்மை நிலைக்கு நான் திரும்பிச் செல்ல வேண்டும். நான் ஓர் ஆவி; ஓர் ஆன்மா. அதை ஒரு கருவியும் ஊடுருவிப் பாய்ந்து சிதைக்க இயலாது; ஒரு கத்தியும் வெட்டி வீழ்த்த இயலாது; தீக்கும் அதை எரிக்கும் சக்தி இல்லை. காற்றுக்கோ, அதை உலர்த்தும் ஆற்றலில்லை. அது பிறக்க வில்லை; அது படைக்கப்படவில்லை; அதற்குத் தொடக்கமுமில்லை; இறுதியுமில்லை. இறப்பில்லை; பிறப்பில்லை. அது எங்கும் நிறைந்தது. அத்தகைய ஆன்மாவே நான். இந்தக் களிமண் உருண்டையாம் உடலை நான் என்று நினைக்கிறேன். இக் காரணத்தால் என்னுடைய துயர்கள் யாவும் எழுகின்றன. நான் சடப்பொருளோடு ஒன்றிப்போய் அதன் விளைவுகளை நுகருகிறேன்.

நடைமுறையிலுள்ள சமயமாவது, இந்த உடலும் நானும் ஒன்று என்று நினைப்பதுதான். இந்தத் தவருன எண்ணத்தை அகற்றுங்கள். அதனுல், எவ்வளவு தூரம் நீங்கள் உயர்ந்து முன்னேற முடியும்! இரண்டாயிரம் மருத்துவச்சாலைகளை நீங்கள் நிறுவியிருக்கலாம்; ஐம்பதினுயிரம் பாதைகளை அமைத்திருக்க லாம். ஆனுல், நீங்கள் ஆன்மா என்று உணராவிட்டால், இவற் ருல் யாது பயன்? ஒரு நாயின் மரணந்தான் உங்கட்குக் கிடைக் கும். நாய்க்குரிய உணர்ச்சிகளே உங்களிடம் காணப்படு கின்றன. சடப் பொருளான தான் அழிந்து மண்ணேடு மண்ணுய்க் கலந்துவிடப் போகின்றது என்பதை அறிந்து கொண்டு நாயும் ஊளையிடுகின்றது; அழுகின்றது.

தவிர்க்க முடியாத மரணம், நீரிலோ, காற்றிலோ, அரண்மனையிலோ, சிறைச்சாலையிலோ, எங்கோ காத்துக்கொண்டிருக்கிறது. எது உன்னை அச்சமற்றவனுய்ச் செய்கிறது? நீ உன்னுடைய உண்மை நிலையை உணர்ந்துவிட்டால், எல்லையற்றதாய், இறப்பற்றதாய், பிறப்பற்றதாயுள்ள ஆன்மாதான் நீ என்பதை உணர்ந்துவிட்டால், அச்சத்திற்கு இடமில்லை. அதை நெருப்பு எரிக்காது; எந்தக் கருவியும் மாய்க்காது; எந்த நஞ்சும் அதற்கு இன்னல் விளைவிக்காது. இது வெறுங்கொள்கையன்று. இதை நன்கு மனத்தில் இருத்திக்கொள். இது வெறும் புத்தகப் படிப்பன்று; கிளிப்பிள்ளை திரும்பத் திரும்ப மிழற்றும் பாடமன்று. "கிளிக்கு 'ஆண்டவனே' 'ஆண்டவனே' என்று சொல்லும்படி பாடம் கற்பிக்கலாம். ஆனுல், ஒரு பூனை வந்து அதன் கழுத்தைக் கவ்விஞல் அது எல்லாவற்றையும் மறந்துவிடும்," என்று என் குருநாதர் அடிக்கடி கூறுவார்.

எப்பொழுதுமே பிரார்த்தனை செய்துகொண்டிருக்கலாம்; உலகத்திலுள்ள சாத்திரங்களனைத்தையும் ஓதிக்கொண்டிருக்கலாம்; அத்தனை தெய்வங்களையும் நீங்கள் தொழுதுகொண்டிருக்கலாம்; ஆனுல், ஆன்மாவை நேரில் காணுத வரையில் உங்கட்கு விடுதலை இல்லை. இது வெறும்பேச்சன்று; கொள்கை காண்டலன்று; வாதமன்று; அனுபூதியேயாகும். இதைத்தான் நான் செயல் முறைச் சமயமென்று வழங்குகின்றேன்.

முதன் முதலாக ஆன்மாவைப் பற்றிய உண்மையைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். கேள்வியுற்ற பின், அதைச் சிந்திக்க வேண்டும். அதற்குப் பிறகு அதைப் பற்றித் தியானிக்க வேண்டும். பயனற்ற சர்ச்சைகளும் வாதங்களும் வேண்டா. 'அந்த அகண்ட ஆன்மாவே நீங்கள்,' என்னும் உண்மை நிலை பெற்றுவிட்டால், நீங்கள் உடல் என்பது பிதற்றலாகும். நீங்களே அந்த ஆன்மா. அந்த உண்மை ஓர் அனுபூதியாகத் திகழ வேண்டும். ஆன்மா தன்னை ஆன்மாவாகவே கண்டுகொள்ள வேண்டும். ஆன்மா இப்பொழுது தன்னை உடலாகக் காண்கின்றது. அந்தத் தவறு தலையெடாமல் ஒய்ந்துபோய்விட வேண்டும். எக்கணம் இந்த உண்மையை உணர்கின்றீர்களோ, அக்கணமே நீங்கள் விடுதலை அடைகின்றீர்கள்.

இந்தக் கண்ணுடியைப் பார்க்கும்பொழுது, இதில் தெரிவது வெறுந்தோற்றம் என்பதை அறிந்திருக்கிறீர்கள். விஞ்ஞானி

களுள் சிலர் இது ஒளியும் சலனமும் என்று மொழிகின்றனர். ஆன்மாவைக் காண்பது இதைவிட மிகமிக உயர்ந்த மெய்ப் பொருளை உணர்வதை ஒக்கும். அதுதான் உண்மையான நிலை; அதுதான் உண்மையான உணர்ச்சி; அதுதான் உண்மையான காட்சி. நீங்கள் நோக்குகின்ற பொருள்களனைத்தும் கனவு களைத் தவிர வேறல்ல. அதை இப்பொழுது அறிவீர்கள். பண்டைக் காலத்து ஆன்ம விஞ்ஞானிகளும் இக்காலத்துப் பௌதிக விஞ்ஞானிகளுங்கூட, "அங்கே ஒளியிருக்கிறது. சற்று மிகுதியான ஒரு சலனம் ஓர் அற்புதமான மாறுதலை எழுப்பிவிடுகின்றது," என்று கூறுகின்றனர்.

கடவுளைக் காண வேண்டுமென்றால், ஆன்மாவை நேரில் உணர வேண்டும். இதுதான் செயல்முறைச் சமயமாகும். செயல் முறைச் சமயமென்று நீங்கள் நவில்வது இயேசுநாதர் போதித்த தன்று. "இயல்பில் அடங்கி ஒடுங்கியிருப்பவர்களே அருள் பெற்றவர்கள்; அவர்கட்கே ஆண்டவன் விண்ணுலகம் உரியது," என்று இயேசுநாதர் இயம்பியது வெற்று வேடிக்கைப் பேச்சா? எதைத் தான் நீங்கள் செயல்முறைச் சமயம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றீர்கள்? நீங்கள் கருதும் செயலளவாம் சமயத்தி னின்று ஆண்டவர் எங்களைக் காப்பாற்றுவாராக! உள்ளத் தூய்மையுடையவர்களே அவர் அருளை அடைந்தவர்கள்; அவர் களே ஆண்டவரைக் காண்பார்கள். இதுதானா தெருக்களைச் சுத்தஞ் செய்வதும் மருத்துவச்சாலை அமைப்பதும் போன்ற அலுவல்களைச் சுட்டுகின்றது? உள்ளத் தூய்மையுடன் புரியப் பட்டால் அவை நற்செயல்களே. ஒரு மனிதனுக்கு இருபது டாலர்கள் கொடுத்துவிட்டுத் தன் பெயர் பத்திரிகையில் வந்திருக் கிறதா என்று பார்ப்பதற்கு ஸான்பிரான்ஸிஸ்கோவிலுள்ள பத்திரிகைகளனைத்தையும் வாங்கி விடாதீர்கள். ஒருவரும் உங் கட்கு உதவிபுரிய முடியாதென்று உங்கள் நூல்களிலே நீங்கள் படிக்கவில்லையா? ஏழை மக்கட்கும், துயருறுவோர்கட்கும், வலிமையற்றவர்கட்கும் உதவி அளிக்கும்பொழுது ஆண்டவருக் குச் செய்யும் பணியாகக் கருதி வணங்குவீர்களாக. இதுதான் புரியப்படவேண்டும்; விளைவு முதன்மையன்று. பயன் கருதாது ஆற்றப்படும் செயல் ஆன்மாவிற்கு நன்மையை நல்கும். ஆண்டவர் திருநாடு அன்னவர்க்கே உரியது.

ஆண்டவர் திருநாடு நம் அகத்திலே திகழ்கின்றது. அவர் அங்கே கோயில் கொண்டிருக்கிறார். அவர் ஆன்மாக்களுக்கு

ஆன்மாவாய்க் காட்சி அளிக்கின்றார்; உங்கள் ஆன்மாவில் பரமான்மாவைக் காண்பீர்களாக. இதுதான் செயல்முறைச் சமயமாகும். இதுதான் விடுதலையாகும். இதில் நாம் எவ்வளவு முன்னேறியிருக்கிறோம் என்னும் வினாவை நாமே நம்மைக் கேட்டுக்கொள்ளுவோம். இந்த உடலை எவ்வளவு தூரம் போற்றி நாம் வழிபடுகின்றோம்? கடவுளைப் பரமான்மா என்று எவ்வளவு தூரம் நம்புகின்றோம்? ஆன்மாவாக நம்மைக் கருதுகின்றோமா?—இவ்வினாக்களைக் கொண்டு நம்மை நாமே உசாவுவோமாக.

இதுதான் அகந்தை அற்றிருப்பது; இதுதான் விடுதலையாகும்; இதுதான் உண்மையான வழிபாடு. உங்களை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் செய்ய வேண்டுவது அவ்வளவே. அகண்ட வடிவாயுள்ள அந்தப் பரமான்மா நீங்களே என்பதை அறிவீர்களாக. இதுதான் செயல்முறைச் சமயமாகும். மற்றவை செயல்முறைச் சமயமல்ல. ஏனெனில், அவை யாவும் அழிந்துவிடும். ஆன்மா ஒன்றுதான் அழியாப் பொருளாகும். அது என்றைக்குமுள்ளது. மருத்துவச் சாலைகள் இடிந்து விழுந்துவிடும்; புகை வண்டிப் பாதைகள் அமைத்த அனைவரும் மாண்டுபோவர்; இந்த ஞாலம் சுக்குநூறாய்ச் சிதறிப்போய் விடும். ஞாயிறு மண்டலங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். ஆன்மா ஒன்றே அழியாது நிலைபெற்றிருக்கும்.

அழிந்துபோகக்கூடிய இந்தப் பொருள்கள்மீது விருப்பம் வைத்து அவற்றை நாடுவது உயர்ந்ததா, அல்லது என்றைக்கும் மாறாத ஒன்றை வழிபடுவது சிறந்ததா? எது நாம் செய்யத் தகுவது? அற்ப ஆசைகளுக்காக நம் சத்திகளையெல்லாம் செலவிட்டு அவற்றை அடையுமுன் மரணம் நம்மீது பாய்கின்றதே—அத்தகைய அலுவல்தானா?

எல்லாவற்றையும் வென்று வாகை சூடிய மன்னன் போலவே மரணம் வந்தால் எல்லாவற்றையும் நீங்கள் விட்டுவிட நேரிடும். அம்மன்னனை மரணம் நண்ணியதும் "என் பேழைகளனைத்தையும் என் முன் திறந்துவையுங்கள். அந்தப் பெரிய வைரத்தைக் கொணருங்கள்," என்று அவன் மொழிந்தானும்; அதைத் தன் மார்பில் அணைத்துக்கொண்டு அழுதானும். இப்படி ஓலமிடும் பொழுதே அவன் உயிர் துறந்தான். நாயும் இப்படித்தானே மரிக்கின்றது?

‘நான் வாழ்கிறேன்,’ என்று மனிதன் மொழிகிறான். மரணத்தைப் பற்றிய அச்சந்தான் ஒருவன் தன் உயிரை ஓர் அடிமை போல விடாது பற்றிக்கொள்ளும்படி செய்கிறது என்பதை அவன் அறியான். ‘நான் இன்பம் நுகர்கின்றேன்,’ என்று அவன் இயம்புகின்றான். இயற்கை தன்னை அடிமைப்படுத்தியிருப்பதை அவன் கனவிலும் அறிந்துகொள்ளவில்லை.

இயற்கை நம்மனைவரையும் அரைத்துக் கீழே தள்ளிவிடுகின்றது. நீங்கள் அடையும் ஒரு மடங்கு தீஞ்சுவை இன்பத்தைக் கணக்கில் வைத்துக்கொள்ளுங்கள். இறுதியில் இயற்கை தன்னுடைய அலுவலை உங்கள் மூலம் சாதித்துவிடுகின்றது. நீங்கள் இறந்த பிறகு உங்கள் உடல் மட்கிச் செடி கொடிகள் வளர்வதற்குப் பயன்படுகின்றது. ஆயினும், நாம் அது நமக்கு இன்பம் நல்குவதாகக் கருதுகின்றோம். சக்கரம் இவ்வண்ணந்தான் சுழன்றுகொண்டிருக்கிறது. எனவே, ஆன்மாவை ஆன்மாவாக உணர்வதே செயல் முறைச் சமயமாகும். இந்தச் சிறப்பான கருத்திற்கு நம்மை அழைத்துச் செல்லுகிற மற்றைய எதுவும் நலமே. இந்த அனுபூதி தியாகத்தாலேதான் அடையப் பெறும். தியானத்தாலும், ஐம்புல இன்பத்தைத் துறப்பதாலும், அவற்றின் முடிச்சுகளை அறுப்பதாலும், பிரகிருதியின் ஆணைக்கீழ் நம்மைக் கட்டிப்பிடித்து அடிமையாக்கிவிடும் தளைகளைத் தகர்ப்பதாலும், நாம் அதை எய்துகிறோம். “இந்த உலக வாழ்வு எனக்கு வேண்டா; இந்த ஐம்புல இன்ப வாழ்க்கை வேண்டா; இவற்றை விடச் சிறந்த ஒன்றை நண்ணவேண்டும்,” என்று நினைப்பதே தியாகநிலையாகும். தியானத்தின் ஆற்றலால், முன்பு விளைந்த கேட்டை அகற்ற வேண்டும்.

இயற்கையின் ஆடலுக்கும் பாடலுக்கும் நாம் ஒவ்வொரு கணமும் அடிமையாயிருக்கிறோம். வெளியில் ஓர் ஒலி கேட்டால், அதை நாம் கேட்கப்போகின்றோம்! ஏதாவது ஒரு நிகழ்ச்சி விரியுமாயின், அதை நாம் பார்த்தாகவேண்டும். நாம் குரங்கினங்களாகிவிட்டோம். ஒவ்வோரிடத்தும் இரண்டாயிரம் குரங்குகள் ஒருங்கே உறைந்தால் எப்படியிருக்கும் பாருங்கள்! குரங்கிற்கோ, எதையும் காணும் அவா மிகுதியாயுள்ளது. அதைப்போலவே ஒன்றைக் கேட்காமலும் பார்க்காமலும் நாமும் இருக்க இயலாது; இதைத்தான் இன்பநுகர்ச்சி என்கிறோம். நாம் வழங்கும் சொற்றொடர் மிகவிந்தையாயிருக்கிறது! உலக இன்பத்தை நாமா நுகர்கின்றோம்? நாம் அதை நுகராமலிருக்க இயலாது. இயற்கை

அவ்வாறு நுகரும்படி செய்கிறது. ஓர் இன்பக் குரல் எழுகின்றது. நான் கேட்கின்றேன். அதைக் கேட்பதும் கேளாததும் என் விருப்பம் என்று எண்ணுகிறேன். இது என்ன பேதைமை! 'துன்பப் படுகுழியில் விழுவாய்!' என்று இயற்கை கட்டளையிடுகின்றது. அடுத்த கணம் நாம் துன்பத்தில் ஆழ்ந்துவிடுகின்றோம். ஐம்புல இன்பங்களைப் பற்றியும் சொத்துச் சுதந்தரங்களைப் பற்றியும் நாம் பேசிக்களிக்கின்றோம். ஒருவன் என்னை மிகப்படித்தவன் என்று கருதுகிறான்; மற்றொருவனோ, என்னை அறிவிலியென்று எண்ணுகிறான். ஒன்றையும் அறியாமல் நாம் இந்த இழிவான அடிமைத்தனத்தில் உழன்றுகொண்டிருக்கிறோம்; இருட்டறையில் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டு அல்லற்படுகின்றோம்.

தியானம் என்பது என்ன? மேற்கூறிய அனைத்தையும் எதிர்க்கும் வண்ணம் நமக்களிக்கும் ஆற்றலே அது. 'இந்த வனப்பு வாய்ந்த பொருளைப்பார்,' என்று இயற்கை அழைத்தாலும், நான் அதை நோக்கேன். 'என்ன இனிய மணம்! இதை மோந்து பார்!' என்று இயற்கை மொழிகின்றது. நான் மூக்கைப் பார்த்து, 'அதை மோவாதே!' என்பேன். மூக்கு மோவாது. 'கண்களே, நோக்கற்க!' என்பேன். அவை நோக்கா. இயற்கை மிகப் பயங்கரமான ஒன்றைச் செய்கின்றது. அது என் குழந்தைகளில் ஒன்றைக் கொன்றுவிட்டு, 'போக்கிலி, உட்கார்ந்து ஓலமிடு. துன்பக் கடலில் ஆழ்ந்துவிடுவாயாக,' என்று இயம்பும். நான், 'ஏன் அப்படிச் செய்ய வேண்டும்?' என்று பதிலுரைப்பேன். நான் நிமிர்ந்து நிற்பேன். நான் சுதந்தர வாழ்க்கை நடத்த வேண்டாவா? இந்தத் தியானத்தைச் சற்றுச் செய்து பாருங்கள். தியானத்தில் ஒரு கணம் ஆழ்வீர்களாக; இயற்கையை மாற்றிவிடலாம். இத்தகைய சத்தி உங்களிடத்தில் உறையுமாயின், அதுவே ஆண்டவர் திருநகர்; அதுவே விடுதலை; அதுவே தியானத்தின் சத்தியாகும்.

அதை எப்படி எய்துவது? பல வகைகளில் அதை அடையலாம். ஒவ்வோர் இயல்பிற்கும் ஒவ்வொரு பாதை உண்டு. இது தான் பொதுவான கொள்கையாகும். மனத்தை அடக்குவதே முதன்மையாகக் கருதப்படும். மனம் ஓர் ஏரி போலக் காட்சி அளிக்கின்றது. அதில் விழுகின்ற ஒவ்வொரு கல்லும் அலைகளை எழுப்புகின்றது. நாம் யார் என்பதை உணராவண்ணம் அவை தடுக்கின்றன. முழுமதியின் நிழல் ஏரி நீரில் நன்றாய்த்தான்

விழுகின்றது; ஆனால், நீர்ப்பரப்பு மிகுந்த குழப்பத்தை அடைந்திருப்பதால், அதன் நிழலைத் தெளிவுற நாம் பார்க்க இயலாது போகின்றது. ஏரி அமைதி அடையட்டும்; அலைகளை எழுப்பாமலிருக்கும்படி இயற்கைக்குக் கட்டளையிடுக; அமைதியாயிருப்பீர்களாக. சிறிது பொழுதிற்குப் பிறகு இயற்கை உங்களைத் தொந்தரவு செய்யாமல் விட்டுவிடும். அப்பொழுது உங்களுடைய உண்மை நிலையை உணர்ந்துவிடுவீர்கள். ஆண்டவர் அங்கே ஏற்கெனவே வீற்றிருக்கிறார். ஆனால், மனம் குழப்பமடைந்திருக்கிறது; ஐம்புலன் செல்கின்ற வழியே அது தொடர்ந்து விரைகின்றது; ஐம்புலக் கபாடங்களை மூடிவிட முயன்றாலும், அது எங்கணும் சுழன்றுகொண்டுதானிருக்கிறது. எல்லாம் தக்கனவாய் அமைந்திருக்கின்றன; நான் கடவுளைப் பற்றித் தியானிக்கலாம் என்று நினைக்கும் அக்கணத்தே ஒரு நொடியில் என் மனம் இலண்டன் மாநகரத்திற்கு விரைகின்றது. அதை அங்கிருந்து இழுத்துப் பிடித்தால், நான் முன்பு புரிந்த அலுவல்களைப் பற்றிச் சிந்திக்க அது நியூயார்க்கை நோக்கிப் பறக்கின்றது. தியானத்தின் ஆற்றலைக்கொண்டு இத்தகைய மன ஓட்டங்களாம் அலைகளைக் கிளர்ந்தெழாமல் தடுக்க வேண்டும்.

மெல்ல மெல்ல, படிப்படியாக, நம்மை அடக்கி ஆளும் பயிற்சியில் இறங்க வேண்டும். அது வீண் விளையாட்டன்று; ஒரு நாளில் ஆகிற காரியமுமன்று. பல ஆண்டுகள் கழியக்கூடும். பல பிறவிகளும் தோன்றி மறையலாம். அதைப் பொருட்படுத்த வேண்டுவதில்லை. அதைச் செய்துகொண்டேதானிருக்க வேண்டும். விழித்த அறிவோடும் விருப்பத்தோடும் அதைப் பயின்றுகொண்டே இருக்கவேண்டும். இம்மி இம்மியாக இழந்த இடத்தைப் பெற முடியும். இறுதியில் உண்மையான செல்வத்தை நாமடைவோம். அதை அடைகிற உணர்ச்சியும் நம்மைத் தொடரும். அந்தச் செல்வத்தை நம்மிடமிருந்து எவரும் கவர்ந்து செல்ல இயலாது. அதை ஒருவரும் அழிக்க முடியாது. அந்த இன்பத்தை எந்தத் துயராவது அணுகிக் குலைக்க முடியுமோ?

இத்தனை ஆண்டுகளாகப் பிறரை அண்டி நாமிருந்தோம். ஒருவரால் நமக்குச் சிறிய இன்பம் ஏற்படக்கூடும். ஆனால், அவர் அகலுங்காலை அந்த இன்பமும் அவரோடு போய்விடும்.

மனிதனின் அறிவின்மையைப் பாருங்கள். தன்னுடைய இன்பத்திற்காகப் பிறரைச் சார்ந்து நிற்கின்றானே!

வாழ்க்கையில் எல்லாப் பிரிவுகளும் துயர் மண்டிக்கிடக்கின்றன. இன்பத்தின்பொருட்டுச் செல்வத்தை நம்பலாமா? நிலையற்ற செல்வம் மாறிக்கொண்டுதானே இருக்கும்! உடல் நலத்தைத்தான் நம்புவதற்கு முடியுமா? ஒன்றையும் நம்புவதற்கில்லை. என்றென்றும் மாறாத ஆன்மாவைத் தவிர, மற்றைய எதுவும் இன்றைக்கோ அல்லது நாளைக்கோ இடும்பை விளைப்பது திண்ணம்.

ஆன்மாவைத் தவிர மற்றவை யாவும் மாறிக்கொண்டு தானிருக்கும். மாறுதலாம் சுழலைத்தான் எங்குங் காண்கின்றோம். அழிவிலாத் தன்மையை உங்கள் அகத்திலே தவிர வேறெங்கேயும் பார்க்க இயலாது. என்றைக்கும் மாறாத எல்லையற்ற பேரின்பம் அங்கேதான் திகழ்கின்றது. நமக்கு அதைத் திறந்து காட்டும் வாயில், தியானமே. பிரார்த்தனைகள், சடங்குகள் முதலிய வழிபாடுகளின் வடிவங்கள் யாவுமே தியானத்தின் பாலர் வகுப்புகளேயாகும். கடவுளை இறைஞ்சி ஒன்றைச் சமர்ப்பிக்கின்றோம். 'எல்லாம் ஆன்ம சத்தியை எழுப்புகின்றன,' என்ற ஒரு கொள்கை மக்களிடையே இருந்தது என்று இயம்புகின்றனர். சில மந்திரச் சொற்களை வழங்குதல், மலர்களைத் தூவுதல், உருவங்களை வழிபடுதல், கோயில்களுக்குச் செல்லுதல், தூப தீபங்களைச் சுற்றுவது போன்ற சடங்குகளைப் புரிதல்—இவை போன்ற யாவும் மனத்தை அந்தத் தியான நிலையில் நிறுத்திவிடக்கூடும். ஆனால், இந்த நிலை மனிதனது மனத்தில் தவிர வேறெங்குமே இல்லை என்று மொழியலாம். மக்கள் வழிபாடுகளை ஆற்றுகின்றார்கள் என்பது திண்ணம். உண்மையை அறியாமல் அவர்கள் செய்கின்றதை, நீங்கள் உணர்ந்தே செய்வீர்களாக. இப்படிச் செய்வதுதான் தியானத்தின் ஆற்றலாகும். உங்கள் அறிவு யாவும் எப்படி உங்களை அடைந்தன? தியானத்தின் வலிவாலேதான் நீங்கள் அவற்றைப் பெற்றீர்கள். ஆன்மா தன்னுடைய ஆழ்ந்த அளப்பருங்கடலிலிருந்தே தன் ஞானத்தைக் கடைந்தெடுத்திருக்கிறது. இதற்கும் புறம்பாய் ஏதாவது அறிந்திருக்கக்கூடுமா? இறுதியில் தியானம் நம்மை நம்முடைய உடலினின்று பிரித்துவிடுகின்றது. 'ஆன்மா தன்னை உள்ளவாறு உணர்கின்றது. அது பிறக்கவில்லை. அது அழிவற்றது. அது பிறப்பற்றது,' என்ற ஞானம் அதற்கு உதயமாகிவிடுகின்றது. அதற்குப் பிறகு

அதற்கு யாதோர் இடும்பையுமில்லை ; இவ்வையகந்தன்னில் பிறவிகளில்லை. இனிப்பரிணமிக்க வேண்டிய நிலையும் அதற்கில்லை. எப்பொழுதுமே அது பூரணமாயும் சுதந்தரமுள்ளதாயும் இருந்து வந்திருக்கிறது என்ற அறிவும் அதற்கு ஒளிர்கின்றது.

# தருக்க அறிவும் சமயமும்

(இங்கிலாந்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

உண்மையை உணரும்பொருட்டு நாரத முனிவர் சனற்குமாரர் என்ற இருடியாரை நண்ணினார். நாரதர் முன்பே படித்துத் தெரிந்துகொண்ட விஷயங்களைப்பற்றிச் சனற்குமாரர் உசாவினார். வேதங்கள், வான நூல், மற்றுமுள்ள எத்தனையோ நூல்கள்—இவற்றைப் படித்தும் தமக்கு உளத்தில் அமைதி ஏற்படவில்லை என்று நாரதர் விடையிறுத்தார். பிறகு அவ்விருவரிடையே ஓர் உரையாடல் நடந்தது :

"வேதங்கள், வான நூல், தத்துவ நூல்—இவற்றின் அறிவு முதலிடம் பெறுவதற்கில்லை. இந்நிலையிலேதான் எல்லாச் சாத்திரங்களும் இருக்கின்றன. எந்த அறிவு பிரம்மத்தை உணரும்படி நம்மைச் செய்கின்றதோ, அந்த அறிவே ஒப்புயர்வற்றது; அதுவே, மிகமிகச் சிறந்த அறிவாகும்," என்று சனற்குமாரர் அந்த உரையாடலின் தொடர்ச்சியில் கூறினார்.

இக்கருத்தையே ஒவ்வொரு சமயத்திலும் நாம் காண்கின்றோம். அக்காரணம் பற்றியே, நிகரில்லாத ஞானத்தைத் தனக்கே சமயம் உரிமையாகக் கொள்ளுகின்றது. சாத்திரங்கள் நல்குகின்ற அறிவோ, வாழ்க்கையின் ஒரு பாகத்தையே தழுவி நிற்கின்றது போலும்! சமயம் நமக்கருளும் அறிவோ, அழிவற்றது. அது அறிவுறுத்தும் உண்மையைப் போலவே அகண்டமானது. இத்தகைய முதன்மையைப் பாராட்டுகின்ற சமயங்கள் யாவும் உலகியல் அறிவு அனைத்தும் இழிவானவை என்ற கண்ணோடு பார்க்கின்றன. இது வருந்தத்தக்கதே. இதோடு சமயங்கள் நின்றுவிடவில்லை. உலகியல் அறிவு முன் வந்து விளக்கம் தருகின்ற உதவியையும் இவை புறக்கணிக்கின்றன. ஆகவே, இவ்வையக முழுவதும் உலகியல் அறிவுக்கும் சமய அறிவுக்கும் சழக்குகள் இருந்துகொண்டே வருகின்றன. உலகியல் அறிவு நல்குகின்ற எதற்கும் செவிசாய்க்காமல், தனக்குத்தானே எல்லாவற்றையும் நடத்திச்செல்கின்ற பிழையற்ற பிரமாணம் இருக்கிறதென்று சமய அறிவு உரிமை கொண்டாடுகின்றது; உலகியல் அறிவோ, ஒளிமிக்க தன் தருக்கக் கருவியால் சமய அறிவு தர முன் வரும் எதையும் சிதைக்க விழைகின்றது. இப்போரானது

ஒவ்வொரு நாட்டிலும் நடந்துகொண்டே வந்திருக்கிறது—இன்னும் நடக்கிறது.

அடிக்கடி சமயங்கள் தோல்வியுற்று, அனேகமாய் வேரோடு அழிந்தும் போயிருக்கின்றன. பிரெஞ்சுப் பெரும்புரட்சியின் பொழுது தருக்க அறிவுத் தேவியை வழிபட்டனர். ஆனால், இத்தகைய நிகழ்ச்சியின் தோற்றம் மனித சரிதத்தில் முதன்முதலாக உதயமானதன்று. பண்டைக் காலங்களில் நடந்த நாடகந்தான் மீண்டும் நடைபெறுகின்றது. இக்காலத்தில் அது பெரிய வடிவெடுத்துவிட்டது. முன்பிருந்ததைக்காட்டிலும் பௌதிக விஞ்ஞான சாத்திரங்களுக்கு மிகுதியான சாதனங்கள் இப்பொழுது அமைந்திருக்கின்றன. சமயங்களுக்குரிய சாதனங்கள் குறைந்து தேய்ந்துகொண்டே வருகின்றன. அடிப்படைகளனைத்தும் கீழ் அறுபட்டுப் போகவே, கட்டடம் ஆட்டங்கொடுத்துவிட்டது. இக்காலத்து மனிதனே, தான் வெளிப்படையாக ஏதோ சொல்லிக்கொண்டாலும், தன்னுடைய ஆழ்ந்த உள்ளக் குகையில் 'எதையும் இனி நம்ப இயலாது,' என்றே கருதுகிறான். குருமார் தமக்கெனக் குழு ஒன்று அமைத்துக்கொண்டு, அது வாயிலாகச் சில பொருள்களை வெளியிட்ட காரணத்தினாலோ, எவையோ சில நூல்களில் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன என்பதனாலோ, தன்னைச் சார்ந்தவர்கள் ஒன்றை நம்ப வேண்டுமென்று விழைவதனாலோ, நவீன மனிதன் இத்தகைய செயலைப்புரிய இயலாது என்று எண்ணுகிறான். பொதுமக்கள் நம்புவதொன்றில் தாமும் தம் சம்மதத்தைக் காட்டக்கூடிய சிலர் இருக்கத்தான் இருக்கின்றனர். அவர்கள் ஒன்றையும் சிந்தித்துப் பார்ப்பதில்லை என்பது நாம் திண்ணமாக அறிந்ததேயாகும். அவர்களுடைய நம்பிக்கை என்பதை மொழிபெயர்த்துச் சொல்லுமிடத்து, 'ஒன்றையும் சிந்திக்காமலே நெஞ்சத்து அவலமில்லாமலிருப்பது,' என்று கூறலாம். சமயக் கட்டடங்கள் அனைத்தையும் தூள்தூளாகத் தகர்த்தெறியாமல் இப்போர் நில்லாது போலும்!

'இந்நிலையில் இதை விட்டு விலக ஏதாவது ஒரு வழி உண்டா?' என்பதே ஒரு வினாவாகும். இப்பொருளை எல்லோருக்கும் புலனாகும் வடிவிலே வைத்து ஆராய்வோம். மற்றெல்லாச் சாத்திரங்களும் தருக்க அறிவு கண்ட சாதனங்களுக்கு உட்பட்டு மீளுவதுபோல, சமயமும் ஆராய்ச்சியின் தாக்கலைத் தாங்கி நிற்குமா? உலகிலுள்ள எல்லாச் சாத்திரங்களையும் கண்டறிய எந்த ஆராய்ச்சி முறைகளை நாம் பயன்படுத்திக்கொள்ளுகிறோமோ, அம்முறைகளைக்கொண்டே சமய சாத்திரத்தையும்

ஆய்ந்து அறிய முடியுமா? முடியத்தான் வேண்டுமென்பதே என் திண்ணிய கருத்தாகும். அதை விரைவில் செய்து பார்ப்பதே நலம் என்று நான் எண்ணுகிறேன். அத்தகைய வழிகளைக் கொண்டு அலசி நோக்குவதில் ஒருமதம் அழிவுறுமாயின், அது எப்பொழுதுமே பயனற்றது; போற்றத் தகுந்ததன்று. அதை ஒரு மூட நம்பிக்கை என்றுதான் நாம் கூறவேண்டும். அது எவ்வளவு விரைவில் மறைகின்றதோ, அவ்வளவுக்கு நலமே. அது மாண்டு போவதுதான் நிகழக்கூடிய காரியங்களில் மிக நல்ல காரியமாகும். அதிலுள்ள மாசெல்லாம் அகன்று, சமயத்தின் சிறப்பான அமிசங்கள் ஆராய்ச்சி உலையிலிருந்து வெற்றியுடன் சுடர் விட்டெழும். விஞ்ஞான முறையில் நிறுவப்படும் பௌதிக இரசாயன சாத்திரங்களைப் போலவே, தருக்க அறிவினால் சமயமும் ஆராயத் தகுந்தது. இவற்றின் முடிபுகளைப்போன்ற முடிபையும் சமயத்துறையிலும் எய்தக்கூடும். சமயம் காணும் முடிபோ, விஞ்ஞானம் காணும் முடிபுகளைக்காட்டிலும் மிக்க ஆற்றல் வாய்ந்தது. ஏனெனில், அவைகளைப் போலல்லாமல் உண்மையை மெய்ப்பிப்பதற்கு அகச்சான்றும் கட்டளை, சமயத்திற்கு உண்டன்றோ?

சமயத்தையும் தருக்க அறிவுகொண்டு அலசிப் பார்க்கும் நலத்தை மறுக்கும் மாந்தர் தம்மையே மறுத்துக்கொள்ளுகின்றனர் போலும்! சான்றாக, கிறித்தவ சமயத்தைச் சார்ந்தவன் தன் சமயம் ஒன்றே உண்மையான சமயம் என்று உரிமை பாராட்டுகின்றான். ஏனெனில், தனிப்பட்ட ஒருவருக்கே இது உதயமாயிற்றாம். முகமதியர்களும் இத்தகைய உரிமையைப் பாராட்டுகின்றனர்; தமது சமயந்தான் உண்மையான சமயம் என்று முழங்குகின்றனர். ஏனெனில், இது இன்னாருக்கே உதயமாயிற்று என்பதால்.

ஒரு கிறித்தவன் ஒரு முகமதியனைப் பார்த்துப் பின் வருமாறு கூறுகின்றான்:

"உங்கள் ஒழுக்க இயலில் சில பகுதிகள் எனக்கு முறையல்ல என்று தோன்றுகின்றன. எடுத்துக்காட்டாக, முகமதியன் அல்லாத ஒருவனை முகமதிய மதத்தை வலியத் தழுவும்படி உங்கள் சமய நூல் சாற்றுகின்றது. அவன் அப்படித் தழுவ மறுத்தால் அவனைக் கொன்றுவிடலாம். இவ்வண்ணம் மாய்க்கும் ஒரு முகமதியன் எத்தகைய பாவங்களையும் தீச்செயல்களையும் புரிந்தபோதிலும் அவன் சுவர்க்கம் புகுவது திண்ணம்."

இதற்கு மறுப்பாக முகமதியன் பின்வருமாறு மொழிகின்றான்:

"எங்கள் சமய நூல் இயம்புவதற்கேற்ப நான் நடக்கிறேன். அப்படிச் செய்வது தக்கதே. அவ்வண்ணம் புரியத் தவறினால் அக்குற்றம் என்னைச் சாரும்.''

"எங்கள் சமய நூல் இப்படிப் பகரவில்லையே,'' என்று கிறித்தவன் கூறுகிறான்.

"அதை நான் அறியேன்; உங்கள் நூலில் காணும் பிரமாணத்திற்கு நான் கட்டுப்பட்டவனல்லேன். என்னுடைய நூல் எங்கள் மதத்தைச் சாராதவர்களை மாய்த்துவிடு என்று கட்டளை இடுகின்றது. எது தக்கது, எது தவறு என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? எங்கள் நூலில் குறிக்கப்பட்டதுதான் தக்கதாகும். 'கொல்லாதே' என்று உங்கள் நூல் உரைப்பது தவறுதானே!''

"என் கிறித்தவ நண்ப, நீயும் இதைத்தான் நவில்கின்றாய், யூதர்களுக்கு ஜிகோவா சாற்றினது தக்கது என்று நீ மொழிகின்றாய்; அவர் தடுத்ததை நீ தவறு என்று கருதுகின்றாய். அதே சுருதியிலேதான் நாங்களும் இசைக்கின்றோம். எங்கள் சமய நூலில் சில செயல்களை ஆற்றியே தீரவேண்டும், சில செயல்களைப் புரியவே கூடாது என்று அல்லா இயம்பியிருக்கிறார். எது தக்கது, எது தவறு என்று பார்ப்பதற்கு அவர் அருளியதே எங்களுக்கு உரைகல்லாகும்,'' என்று முகமதியன் கூறுகின்றான்.

ஆயினும், கிறித்தவனுக்கு இதில் திருப்தி ஏற்படவில்லை. குன்றின்மேல் அருளப்பட்ட ஞான நன்மொழியில் மிளிரும் ஒழுக்க இயலோடு குரானில் அலர்ந்திருக்கும் ஒழுக்கத்தை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்று கிறித்தவன் வற்புறுத்துகிறான். இதை எப்படித் தீர்மானிப்பது? சமய நூல்களைக்கொண்டு தீர்மானிப்பது ஒரு காலும் முடியாது. ஒன்றோடு ஒன்று போராடுகின்ற நூல்கள் நீதி மன்றத்தலைவர்களாக இருக்க இயலாது. ஆகவே, இந்த நூல்களைக் காட்டிலும் உலக முழுதும் பொதுவாயுள்ளது ஏதேனும் இருக்கும் என்பதை நாம் திண்ணமாக ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். உலகத்திலுள்ள ஒழுக்க இயல்களின் கொள்கைகளைக்காட்டிலும் சிறந்த ஒன்று திகழ்கின்றது. பலவேறு நாட்டினரிடையே எழும் தெய்வ ஆவேசங்களின் ஆற்றலைத் தீர்மானிக்கக்கூடிய உரைகல்லாய் அது அமைய வேண்டும். நாம் ஒன்றை அச்சமின்றித் தெளிவாய்ச் சாற்றுகின்றோமோ இல்லையோ, நியாயத்தின்பொருட்டுத் தருக்க அறிவைத்தான் நாம் நாடுகின்றோம் என்பது தெளிவாகின்றது.

"ஒரு தெய்வ ஆவேசத்திற்கும் மற்றொரு தெய்வ ஆவேசத்திற்கும் நடுவே நின்று இந்தத் தருக்க அறிவாம் ஒளி நியாயம்

வழங்கக்கூடுமா? ஒரு தீர்க்கதரிசிக்கும் மற்றொரு தீர்க்க தரிசிக்கும் இடையே வாதப்போர் நிகழும் பொழுது இது தன் அளவு கோலைச் சாய்வின்றித் தாங்கி நிற்குமா? எந்தச் சமயமா யிருந்தாலும் அது சம்பந்தப்பட்ட ஒன்றை அறிய இதற்குத் தக்க ஆற்றலிருக்கிறதா?'' என்னும் கேள்விகள் எழுகின்றன. இத்தகைய செயலை இது ஆற்றுவதற்குத் தகுதியில்லாமற் போனால், ஊழிக்காலங்களாக நூல்களுக்கிடையேயும் தீர்க்கதரிசி களுக்கிடையேயும் நிகழ்கின்ற முடிவில்லாத வாதப் போரைத் தீர்த்துவைக்க வேறொன்றினாலும் முடியாது போய்விடும். இந் நிலையில் என்றும் மாறாத ஒழுக்க இயலைப் பற்றிய கருத்து ஒன்று ஏற்படாமல், முரண்பாடுடைய இத்தனை சமயங்களும் முழுப் பொய்களென்றும் எண்ணும்படி நேரக்கூடும். மனிதப் படைப் பின் அமைப்பிலேதான் சமயத்தின் உண்மை சார்ந்து நிற்கின் றது; நூல்களின் மீதன்று. நூல்கள் மனிதனிடத்தினின்று வெளிக்கிளம்பியவை. இவை அவனுடைய படைப்பின் அமைப் பின் விளைவுகளேயாகும். மனிதனே நூல்களைப் படைத்தான். நூல்களால் உருவான மனிதனை இனித்தான் காணப்போகின் றோம்! தருக்க அறிவுகூட மனிதப் பிறவியின் அமைப்பின் பொதுவான காரணத்தின் விளைவைத் தவிரப் பிறிதன்று. அத னிடந்தான் நாம் முறையிட வேண்டும். அந்தத் தருக்க அறிவு அந்த அமைப்போடு தொடர்பு உடையதாயிருந்தாலும், அதை வழுவாமல் பின்பற்றும் வரையிலேதான் நாம் அறிவை நாட வேண்டும். தருக்க அறிவு என்று நாம் எதைக் குறிக்கின்றோம்? உலகியல் கண்டுபிடித்தவைகளைச் சமயத் துறையிலும் செலுத் திப் பார்க்கக் கற்றறிந்த ஒவ்வோர் ஆடவரும் பெண்டிரும் விரும்புகின்றனரல்லவா? அதைத்தான் நான் சுட்டுகின்றேன். தருக்க அறிவின் முதற்கொள்கை, சிறப்பியலொன்றைப் பொது இயல் கொண்டு விளக்குவதே; பொதுவானதை மேலும் பொது வானதன் மூலம் தெளிவுபடுத்துவதே. இறுதியில் உலகப் பொது வாயுள்ள ஒன்றிற்கு நாம் வந்து சேர்வோம். சான்றாக, 'நியதி' என்னும் ஒன்று இருக்கிறதன்றோ? ஏதோ ஒன்று நிகழ்கின்றது. அது இன்னின்ன காரணத்தின் விளைவு என்று அறிந்தால், நாம் திருப்தி அடைந்துவிடுகிறோம். அது நமக்கொரு விளக்கமாய் இருக்கிறது. விளக்கம் என்பது இதுவே. ஒரு தனிப்பட்ட விளைவு நமக்குத் திருப்தி அளிக்கிறதில்லை. பொதுவான பற்பல நிகழ்ச்சி களின் தொகுதி ஒன்றில் இதுவும் ஒன்றே என்று ஏற்படுமாயின், இதுவே விளக்கமாகும். ஓர் ஆப்பிள் விழுந்ததும் நியூட்டனின்

மனம் குழம்பிற்று. எல்லா ஆப்பிள்களும் விழுந்ததைக் கண்ணுற்ற அவருக்கு, புவியின் ஈர்க்கும் சத்தி புலப்படவே, மனத் திருப்தி அடைந்தார். இது மனித அறிவின் ஒரு கொள்கையாகும். நான் ஒருயிருள்ள பிராணியை—ஒரு மனிதனை—தெருவில் பார்க்கிறேன். மனித இனத்தவன் என்ற சற்று விரிந்த கருத்தோடு அவனை நோக்குமிடத்து எனக்குச் சமாதானம் ஏற்படுகின்றது. பொதுவாக ஒன்றை வைத்துக் காணும்பொழுது அவனை மனிதன் என்று நான் உணர்கின்றேன். சிறப்பியலைப் பொது இயலோடு வைத்துக் கருதவேண்டும்; இந்தப் பொது இயலை இதற்கு மேல் விரிந்துள்ள ஒரு பொது இயலைக்கொண்டு ஆராயவேண்டும். ஒவ்வொன்றையும் பிரபஞ்ச அளவுகோல் கொண்டு நாம் சிந்திக்கவேண்டும். இறுதியாக நமக்குக் கிடைக்கிற கருத்து, அகில பிரபஞ்சக் கருத்தாகும். இதுவே மெய்ப்பொருள் சம்பந்தமான கருத்தாகும். இந்த ('சத்') மெய்ப்பொருளே மிக மிக விரிந்த கருத்தாக எண்ணப்படுகின்றது.

நாமனைவரும் மனித உயிர்களே. அதாவது, ஒவ்வொருவரும் மனிதத்தன்மை என்று மொழியப்படுகிற ஒன்றின் அமிசமே. மனிதன், பூனை, நாய் எல்லாம் விலங்குகளே. மனிதன், பூனை, நாய் என்று தனிப்படக் கூறப்படுபவை இவற்றை விட விரிவாயும் பொதுவாயும் கூறப்படும் 'விலங்கு' என்னும் கருத்தின் அமிசங்களாய்விடும். மனிதன், பூனை, நாய், செடி, மரம்—எல்லாமே உயிர் என்ற இனத்தின்கீழ் அமைந்துவிடும். இவை யாவும்—எல்லா உயிர்களும் எல்லாப் பொருள்களும்—'சத்' அல்லது மெய்ப்பொருளில் அடங்கிவிடுகின்றன. அந்த மெய்ப்பொருளிலேதான் நாம் அனைவரும் அடங்கிவிடுகின்றோம். விளக்கம் தருவது என்பது சிறப்பியலிலிருந்து பொது இயலுக்குப் போவதே; அதனுடைய இனத்தை மேலும் மேலும் காண்பதே. இவ்வண்ணமே மனம் பொதுவான கருத்துகளைத் தனித்தனி வகுப்புகளாகப் பிரித்துத் தன் கணக்கிலாப் புருக் கூடுகளாம் அறைகளில் திரட்டி வைத்துக்கொண்டிருக்கிறது. நாம் ஏதாவது புதிதாய் ஒன்றைக் கண்டால், உடனே மனம் தன் அறைகளில் அதைப்போன்ற ஒன்று இருக்கின்றதா என்று தேடிப்பார்க்கின்றது. தேடியது கிடைக்கப்பெறுமாயின், நாம் கண்ட புதிய பொருளை அத்துடன் சேர்த்துவைக்கின்றோம். பிறகு அதைப்பற்றி நாம் தெரிந்துகொண்டதாகக் கூறப்படுகின்றோம். இதைத்தான் அறிவு என்று இயம்புகின்றனர். இதைத்தவிர வேறொன்றில்லை. இதைப்போல ஒன்று இல்லையென்றால், மனம்

அமைதி அடைகிறதில்லை. மனத்தில் ஏற்கெனவே இருக்கிற இதன் இனப்பிரிவு நமக்குப் புலனுகின்ற வரையில் நாம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. நான் முன்பே சுட்டியபடி பொருளைப்பற்றிய அறிவு என்பது, ஏறத்தாழ அதன் இனப்பிரிவைக் கண்டு பிடிப்பதே. இதற்குமேல் ஒரு படியுமுண்டு. ஒரு பொருளைப்பற்றிய விளக்கமென்பது அகத்திலிருந்து வரக்கூடியதே; புறத்திலிருந்து வருவது அன்று என்பதை உணர வேண்டும். ஒருவன் கல்லை உயரத் தூக்கி எறிந்தால் அது கீழே விழுமன்ருே? கல்லை இழுத்துக் கீழே விழும்படி செய்தது ஒரு பூதமென்னும் நம்பிக்கை நீண்ட காலமாய் மக்களிடையே இருந்து வந்தது. இயற்கையில் உண்மையாகவே ஏற்படும் நிகழ்ச்சிகளுக்கு இயற்கையைச் சாராத பேய் பூதங்களே காரணம் என்று மக்கள் கருதினுர்கள். ஒரு பூதம் கல்லைக் கீழே விழும்படி செய்தது, அதிலிருந்தே பிறந்த விளக்கமில்லாததுடன் புறத்திலிருந்து உண்டானதாயுமிருக்கிறது. 'ஈர்க்கும் சத்தி' என்று கூறப்படும் இரண்டாவது விளக்கம், ஒருவாறு கல்லுக்குப் பொருத்தமாயிருக்கிறது. இந்த விளக்கம் புறத்திலிருந்து வாராமல், அப்பொருளிலேயே அடங்கியிருக்கிறது. இக்காலத்துக் கருத்தின் ஓட்டம் இம்முறையிலேதான் செல்கின்றது. சுருங்கக் கூறுமிடத்து, பொருள்களின் விளக்கம் வேறெங்கும் அமையவில்லை; அவைகளிடமே உறைகின்றது என்று விஞ்ஞானம் மொழிகின்றது. பிரபஞ்சத்தில் நடப்பன எல்லாவற்றிற்கும் காரணம் புறத்திலுள்ள உயிர்களோ, பொருள்களோ அல்ல. தான் ஆராய்ச்சியில் கண்ட தோற்றத்திற்குக் காரணமாகப் பூதத்தையோ, பேயையோ ஓர் இரசாயன சாத்திரி நாடவேண்டுவதில்லை. அவ்வண்ணமே, பௌதிக விஞ்ஞானிக்குத் தான் கண்டதை விளக்குவதற்குப் பூதங்கள் பேய்கள் போன்ற எதுவும் தேவையில்லாமலிருக்கிறது. இதைப் போலவே, எல்லா விஞ்ஞானிகளுக்கும் ஒவ்வொன்றும் பொருந்தும். இது விஞ்ஞான சாத்திரத்தின் அமிசங்களில் ஒன்ருகும். சமயத்தை விளக்க இதைப் பயன்படுத்திக்கொள்ளலாமென்று நினைக்கிறேன். இந்த அமிசம் சமயங்களில் குறைவாயிருக்கிறது. அக்காரணத்தால் சமயங்கள் சீர்குலைந்து தூள் தூளாய்ப் போய்க்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு சாத்திரமும் தனக்கு வேண்டிய விளக்கத்தைத் தனக்குள்ளேயே நாடுகின்றது. சமயமோ, அத்தகைய விளக்கத்தைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. பிரபஞ்சத்தினின்றும் வேறுபட்டதான உருவமுள்ள ஒரு தெய்வம் இருப்பதாக ஒரு பழமையான கொள்கை மிகத்

தொன்மைவாய்ந்த காலந்தொட்டே இருந்து வருகிறது. அதைப் பின்பற்றியே பிரபஞ்சத்தினின்றும் முற்றிலும் வேறான கடவுள் இருப்பது எவ்வளவு தேவை என்பதற்கான வாதங்கள் அடிக்கடி எவ்வளவோ நடைபெற்றிருக்கின்றன. இக்கடவுளே தமது சங்கற்பத்தால் இவ்வுலகைப் படைத்தார். இக்கடவுளே எல்லா வற்றையும் ஆள்கின்ற தலைவர் என்று சமயம் கருதுகின்றது. இந்த வாதங்கள் ஒருபுறமிருக்கட்டும். 'கடவுள் எல்லாம் வல்லவர். அருளே வடிவானவர்,' என்று கூறப்பட்டிருக்கிறது எனினும், உலகில் ஏற்றத் தாழ்வுகள் இருந்துதான் வருகின்றன. தத்துவ சாத்திரி இவற்றைப்பற்றி ஒரு பொழுதும் கவலை கொள்ளவில்லை. ஆனால், அடிவேரிலேயே தவறு இருப்பதாக அவன் மொழிகின்றான். விளக்கம் புறவிளக்கமாயிருக்கிறதே தவிர, அக விளக்கமாயில்லை. இந்தப் பிரபஞ்சத்திற்கு யாது காரணம்? இதற்குப் புறம்பாயுள்ள ஒன்று? இந்தப் பிரபஞ்சத்தை ஆட்டிவைக்கின்ற ஓர் உருவமா? கீழே விழும் கல்லைப்பற்றிக் கூறும் சமாதானம் பொருத்தமாய்த் தோன்றாதது போலவே சமயத்தைப்பற்றிய விளக்கமும் நமக்குப் போதவில்லை. இதைத் தவிர வேறு சமாதானம் கூறமுடியாத காரணத்தால், சமயங் களும் உருக்குலைந்து பொடிப்பொடியாய்க் கீழே உதிர்கின்றன.

இதை ஒட்டியே வேறொரு கருத்தும் உண்டு. 'எல்லாவற்றிற் கும் விளக்கம் அதிலேயே அடங்கியிருக்கிறது,' என்று கூறுவது இக்காலத்துப் பரிணாம வாதத்தைச் சேர்ந்தது. பரிணாம வாதம் என்பது, ஒரு பொருளின் இயல்பு மீண்டும் உண்டாவதே. விளை வென்பது காரணத்தின் இன்னொரு வடிவே. விளைவினுள் குடி கொண்டுள்ள சக்திகளெல்லாம் காரணத்திலேயே அடங்கியிருக் கின்றன. இந்தப் பிரபஞ்சமனைத்தும் பரிணாமமே; படைப் பன்று; அதாவது, ஒவ்வொரு விளைவும் அதற்கு முன்னுள்ள காரணத்தினின்றும் ஏற்பட்டதேயாகும். சந்தர்ப்பங்களினாலே தான் மாறுதல் ஏற்படுகிறது. பிரபஞ்சம் முழுதும் இப்படியே தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. இம்மாறுதல்களுக்குள்ள காரணங்களைப் புறத்தில் தேடவேண்டுவதில்லை. அவை அவற்றி னுள்ளேயே கரந்து நிற்கின்றன. ஒரு காரணத்தையும் வெளியே தேடிப்பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. இதுவே சமயத் தைத் தகர்த்துக்கொண்டிருக்கிறது. 'தகர்த்துக்கொண்டிருக் கிறது' என்ற சொற்றொடரால் நான் கருதுவது இதுவே. 'அகில பிரபஞ்சத்திற்கப்பால் ஒரு கடவுள் இருக்கிறார். அவர் வடிவில் மிகப் பெரியவர். இதைத் தவிர வேறில்லை,' என்ற கருத்தைப்

பின்பற்றி நிற்கிற சமயங்கள் ஊன்றி நிற்றல் இயலாது. அவற்றைக் கீழே வீழ்த்தியாகிவிட்டது.

இந்த இரண்டு கொள்கைகளுக்கும் சமாதானம் கூறுதற்குரிய சமயம் உலகில் இருக்கின்றதா என்று வினவினுல், இருக்க இயலும் என்றுதான் நான் கருதுகிறேன். பொதுவியல் கொள்கைக்கு முதன்முதலாகத் திருப்தியாக நாம் இணங்கிச் செல்ல வேண்டும். இதோடு பரிணுமவாதக் கொள்கையையும் பின்பற்றிப் பார்க்க வேண்டும். இறுதியாகவுள்ள ஒரு பொதுத் தத்துவத்திற்கு நாம் வருவதுதான் நலமாகும். இது மிக மிக விரிந்த ஒரு பொதுத் தத்துவமாயிருத்தலோடு நில்லாமல், இவற்றினின்றும் ஒவ்வொன்றும் தோன்றுவதாயும் இது திகழ வேண்டும். மிகக் கீழேயுள்ள விளைவின் இயல்பைப்போலவே தான் இது இருக்கும். மிக மிக உயர்ந்த முடிவான ஆதிகாரணமாய் ஒன்று இருந்தாலும் அதிலிருந்து பிறக்கும் மிகத் தாழ்ந்த காரியங்களும் ஒன்ருகவே இருந்தாக வேண்டும் அல்லவா? எல்லாம் படிப்படியாக விரிகின்ற பரிணுமங்களை. வேதாந்தம் கண்ட பிரம்மந்தான் இந்நிலைக்குத் தக்கதாயிருக்கிறது. இந்தப் பொதுக்காரணந்தான் நாம் இறுதியில் அடையக்கூடிய காரணமாய்த் திகழ்கின்றது. அதற்குக் குணங்களில்லை. அது சத்து, சித்து, ஆனந்தம். (மெய்ப்பொருள், அறிவு, ஆனந்தம்) என்று மொழியப்படுகின்றது. மெய்ப்பொருளே மனம் இறுதியில் அடையக்கூடிய காரணமாயிருக்கிறது. சித்து (அறிவு) என்பது நமக்கிருக்கும் அறிவன்று; மனிதர்களோ, விலங்குகளோ, எய்துகின்ற பரிணுமப்படிகளில் அறிவாக மிளிர்ந்து தன்னைப் புலப்படுத்திக்கொள்ளுகிற ஒன்றின் சாரமாகும். அறிவின் சாரமென்பது எல்லாவற்றிற்கும் அப்பாலுள்ள இறுதி மெய்ப்பொருளேயாகும். எனக்கு அனுமதியளிப்பீர்களானுல், உணர்வையும் அது கடந்து நிற்கிறது என்று நான் நவிலுவேன். இதுதான் 'அறிவு' என்பதாகும். இந்தப் பிரபஞ்சத்தில் எல்லாப் பொருள்களின் மூலமான ஓர் ஒருமைத் தத்துவமாய்த் திகழ்வதும் இதுவே. நவீன விஞ்ஞானம் எதையாவது ஒன்றை மெய்ப்பிக்கின்றது என்ருல், அது இதுதான் என்று என் மனத்திற்குத் தோன்றுகின்றது: மனத்துறையிலும் ஆன்மிக நிலையிலும், பௌதிக இயல்பிலும் நாமனைவரும் ஒன்றே என்பதை விஞ்ஞானம் விளக்குகின்றது. பௌதிக உடல் சம்பந்தப்பட்ட வரையில் நாம் வேறு என்று மொழிவது கூடத் தவருகும். வாதம் புரிதற்பொருட்டு நம்மை லோகாயதர்கள் என்று கருதிக்கொண்டாலும்

இந்த முடிவுக்குத்தான் நாம் வருவோம். இந்தப் பிரபஞ்சம் முழுதும் பிரகிருதியாம் மாபெருங்கடலாகும். நீங்களும் நானும் இக்கடலில் எழுகின்ற சிறிய சுழல்களே. பிரகிருதியின் திரட்சிகள் ஒவ்வொரு சுழலிலும் புகுந்து சுழலின் வடிவத்தை அடைகின்றன; பிறகு பிரகிருதியாகவே வெளியிலே வந்து காட்சி அளிக்கின்றன. என் உடலிலுள்ள பிரகிருதி சில ஆண்டுகளுக்கு முன்பு உங்கள் உடல்களில் இருந்திருக்கக் கூடும். அது சூரியனில் திகழ்ந்திருக்கலாம்; அல்லது ஒரு செடியில் உறைந்திருக்கலாம். இப்படியே எல்லாம் இடையருது மாறிக்கொண்டே வரும் நிலையில், பிரகிருதி இயங்கக்கூடும். 'உன் உடல், என் உடல்' என்று கூறுவதன் பொருள் யாது? எல்லா உடல்களும் ஒன்றே. எல்லாம் ஒரே ஒருமையே. எண்ண இயல்பும் இத்தன்மை வாய்ந்ததே. அந்த எண்ணக்கடலில்—அந்த எல்லையற்ற திரளில்—உங்கள் மனமும் என் மனமும் சுழல்கள் போலிருக்கின்றன. என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்களிலும், உங்கள் எண்ணங்கள் என் எண்ணங்களிலும் புகுந்து கலக்கும் விளைவை நீங்கள் இப்பொழுது நோக்கவில்லையா? நம் எல்லோருடைய வாழ்வுகளும், ஒன்றே. எண்ணத்திலும் நாமனைவரும் ஒன்றே. இதைவிட விரிவான பொதுத் தத்துவம் கொடுக்குமிடத்து, பிரகிருதி எண்ணம் இவற்றின் சாரம் ஆன்மாவில் அடங்கியிருக்கும் சாரமேயாகும் என்று நாம் கூறலாம். இந்த ஒருமையிலிருந்துதான் எல்லாம் வந்திருக்கின்றன. ஆகவே, முடிவில் எல்லாம் ஒன்ருய்த்தான் இருக்க வேண்டும். நாம் முற்றிலும் ஒன்றே. பௌதிக உடலிலும் ஒன்றே; மனத்திலும் ஒன்றே. ஆன்மா ஒன்று உண்டு என்று ஒருகால் நம்புங்காலத்தும், அந்த ஆன்மாவிலும் நாம் ஒன்றே என்று சொல்லத் தேவையில்லை. இந்த ஒருமைதான் உண்மை என்பதை ஒவ்வொரு நாளும் நவீன விஞ்ஞானம் மெய்ப்பித்துக்கொண்டு வருகின்றது. செருக்குடைய மனிதனைப் பார்த்து, 'நீயும் ஒரு சிறு புழுவும் ஒன்றே,' என்று அது மொழிகின்றது. அதினின்று மிகமிக வேறுபட்ட உயிர் என்று உங்களைக் கருதாதீர்கள். நீங்களும் அதுவும் ஒன்றே. உங்கள் முற்பிறவியில் அதுவாகவே நீங்கள் இருந்தீர்கள். நீங்கள் பெருமிதங் கொள்ளுகிற மனித நிலைக்கு அந்த அற்பப் புழு ஊர்ந்து வந்திருக்கிறது. பொருள்களின் ஒருமை என்ற பெருஞ்சிறப்பு வாய்ந்த இந்த ஞான நன்மொழியை—உலகத்திலுள்ள ஒவ்வொன்ருேடும் ஒருமைப்படுத்தும் இந்த ஞான நன்மொழியைக் கற்றுக்கொள்ளுவதுதான் உயர்ந்த படிப்பினையாகும்.

ஏனெனில், நம்மைக்காட்டிலும் உயர்ந்த உயிர்களோடு நாம் ஒன்ருய்ப் போக மிகவும் மகிழ்ச்சியுறுகின்ருேம். ஆனுல், கீழ்ப் பட்ட இனங்களோடு ஒருமை பாராட்ட யாரும் விழைகிறதில்லை. ஒருவனுடைய முன்னேர்கள் மக்கட்சமுதாயத்தால் பாராட்டப் பட்டிருந்தால், அது போதும். அவர்கள் விலங்கின இயல்புள்ள வர்களாயிருந்திருக்கலாம் ; கொள்ளைக்காரர்களாயிருந்திருக்க லாம் ; அல்லது கொள்ளையடிக்கும் பிரபுக்களாயிருந்திருக்கலாம். தாங்கள் அவர்களுடைய மரபைச் சார்ந்தவர்கள் என்று தேடிச் சரித்திர ஆதாரம் காட்ட மக்கள் முயல்வார்கள். நம்முடைய முன்னேர்கள் நேர்மையுள்ளவர்களாயிருக்கலாம்; அவர்கள் ஏழை களாயிருந்தும் கௌரவிக்கத்தக்கவர்களாயிருக்கலாம். ஆனுல், அந்த மரபில் வந்தோம் என்று கூறிக்கொள்ளுவதற்கு எவரும் விரும்புகிறதில்லை. இத்தகைய மக்களின் அறியாமையை என் னென்று இயம்புவது ! ஆயினும், நம் கண்களை மறைத்துக் கொண்டிருக்கிற திரைகள் அகன்று கொண்டிருக்கின்றன. உண்மையின் ஒளி மேன்மேலும் சுடர்விட்டெழத் தொடங்கியிருக் கிறது. இது சமயத்திற்கு ஒரு பெரும்பயன் என்று மொழியலாம். இதுதான் அத்துவிதத்தின் அறிவுரையாகும். அதைப் பற்றித் தான் உங்கட்கு எடுத்துரைத்துக்கொண்டிருக்கிறேன். இந்தப் பிரபஞ்சத்திற்குச் சாரமாயுள்ளது (உயிர்நாடியாயுள்ளது) அந்தப் பரமான்மாதான் ; ஆன்மாக்களுக்குச் சாரமாயுள்ளதும் அதுவே. உன்னுடைய உயிரின் நாடியும் அதுவே. அன்று அன்று ; நீயும் அதுவே (தத்துவமஸி). இந்தப் பிரபஞ்சத்தோடு நீயும் ஒன்ரு யிருக்கிருய். பிறரிடமிருந்து தன்னை ஒருவன் ஒரு மயிரிழை வேறுபடுத்திக்கொண்டாலும் அவன் உடனே துன்புறுகிருன். தானும் பிரபஞ்சமும் ஒன்றே என்ற ஒருமையை உணர்கின்ற வனையே இன்பம் சாரும்.

மிகமிகப் பொதுவாயுள்ள—எல்லாவற்றிற்கும் ஆதாரமா யுள்ள—ஒரு தத்துவத்தைக் குறிப்பிடுகிறபடியாலும், பரிணும நியதிக்கும் ஒத்துவருகின்றபடியாலும், வேதாந்தம் கண்ட சமயம் விஞ்ஞான உலகம் எதிர்பார்க்கின்ற தேவைகளை நிறைவேற்றுவதை நாம் பார்க்கின்ருேம். 'எதற்கும் சமா தானம் அகத்திலேதான் பிறக்க வேண்டும் ; புறத்தினின்று அன்று,' என்னும் கருத்து வேதாந்தத்திற்குத்தான் முற்றிலும் பொருத்தமாயிருக்கிறது. வேதாந்தம் சாற்றும் பிரம்மம்—அது மொழியும் கடவுள்—இவற்றிற்குப் புறம்பில் யாதொன்றுமில்லை—
எள்ளள ... ந்தப் பிரம்மமே. பிரபஞ்சத்தில்

அவன் கரந்து உறைகின்றான்; பிரபஞ்சமாகவும் திகழ்கின்றான். அந்த மனிதனும் நீயே; அந்தப் பெண்ணும் நீயே. இளமைச் செருக்கில் உலாவும் அந்த வாலிபனும் நீயே; தட்டுத்தடுமாறிக் கொண்டு செல்லும் அம் முதிய கிழவனும் நீயே.

அவன் இங்கே காட்சி அளிக்கின்றான். அவனைக் காண்கின்றோம்; உணர்கின்றோம்; அவனிடத்தில் வாழ்கின்றோம்; அவனிடத்தில் திரிகின்றோம்; நம் இருப்பும் அவனே. இந்தக் கருத்து விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் கோயில்கொண்டிருக்கிறது. இறைவன் இப்பிரபஞ்சத்தில் கரந்து உறைகின்றான்; இதன் சாரமாயிருக்கின்றான்; இதன் இதயமாய்த் திகழ்கின்றான்; பொருள்களின் ஆன்மாவாய் வீற்றிருக்கின்றான்; இந்தப் பிரபஞ்சத்தில் தன்னைப் புலப்படுத்திக்கொள்ளுகிறான் போலும்! அந்தச் சச்சிதானந்த எல்லையற்ற கடலில் எல்லாம் உறைகின்றன.

நீங்களும் நானும் அதன் சிறு துண்டுகளே; ஊசி முனைகளே; அதன் சத்திபாயும் சிறிய சிறிய ஓடைகளே; அதன் சிறிய தோற்றங்களே. மனிதனுக்கும் மனிதனுக்குமுள்ள மாற்றமும், தெய்வங்களுக்கும் மனிதனுக்குமுள்ள மாற்றமும், மனிதனுக்கும் விலங்குகளுக்குமுள்ள மாற்றமும், விலங்குகளுக்கும் செடி கொடிகளுக்குமுள்ள மாற்றமும், செடி கொடிகளுக்கும் கற்களுக்கும் உள்ள மாற்றமும் பொருளில் இல்லை. ஏனெனில், மிகச் சிறந்த தெய்வங்களிலிருந்து மிகத் தாழ்ந்த சடப்பொருளின் அணு வரையில் யாவும் எல்லையற்ற அந்தக் கடலின் தோற்றமே. மாற்றம் என்பது அதனதன் செறிவில் அதனதன் அளவிலே தான் உள்ளது. நான் ஒரு கீழ்ப்பட்ட தோற்றமாயிருக்கலாம்; நீங்கள் ஒரு சிறந்த தோற்றமாயிருக்கலாம். ஆனால், இவ்விரண்டு தோற்றங்களிலும் காணும் பொருள் ஒன்றே. நீங்களும் நானும் அந்த வாய்க்காலின் வடிகால்களே. அந்த வாய்க்காலே கடவுள். அந்தக் காரணத்தால் உங்களுடைய இயல்பும் கடவுளே; என்னியல்பும் கடவுளே. உங்களுடைய தெய்வத் தன்மை, உங்களுடைய பிறப்புரிமையாகும். நீங்கள் தூய்மையின் வடிவாயுள்ள தேவனாயிருக்கலாம்; நான் இருண்ட மனம் படைத்த மிகக் கொடிய அரக்கனாயிருக்கலாம். எனினும், என்னுடைய பிறப்புரிமை அந்தச் சச்சிதானந்தப் பெருங்கடலேயாகும்; அதே உரிமை உங்களையும் சார்ந்ததாகும். இன்று உங்களுடைய தெய்வத்தன்மை சற்று மிகுதியாய்ப் புலனாயிருக்கலாம்; சற்றுப் பொறுங்கள். என் தெய்வ இயல்பை நானும் மிகுதியாய் வெளிக்காட்டுவேன். அத்தன்மைகள் யாவும் என்னிடத்தில் உறைந்து

கொண்டுதானிருக்கின்றன. அவற்றிற்குப் புறத்திலிருந்து ஒரு விளக்கமும் தேவையில்லை. இந்தப் பிரபஞ்சமனைத்தும் கடவுளே. அப்படியானால், கடவுள் சடப்பிரகிருதியா? இல்லை. திண்ணமாய் இல்லை. ஐம்புலன்களைக் கொண்டு நோக்குங்கால், கடவுள் சடப்பொருளாகத் தெரிகின்றார்; அறிவுகொண்டு பார்க்குங்கால் அவர் மனமாய்த் திகழ்கின்றார்; ஆன்மாவாய் நின்று ஆராயுங்கால், அவர் பரமான்மாவாய் விளங்குகின்றார். அவர் சடப்பொருள் அல்ல. ஆனால், பிரகிருதியில் எது மெய்ப்பொருளாய் மிளிர்கின்றதோ, அதுதான் அவர். இந்த நாற்காலியில் எது மெய்ப்பொருளோ, அதுதான் அவர். இந்த நாற்காலியை அமைப்பதற்கு இரண்டு பொருள்கள் தேவை. ஐம்புலன்களால் புறத்திலிருந்து கொண்டுவரப்பட்டது ஒன்று; என் மனம் அளித்தது மற்றொன்று; இவ்விரு செயற்கைதான் நாற்காலியாகும். இந்திரியங்களுக்கும் அறிவுக்கும் தனித்து எஞ்ஞான்றும் நின்றது அப்பரம்பொருளேயாகும். அப்பரம்பொருளாம் விரிந்த ஓவியக் கிழிமீது நாற்காலிகளையும், மேசைகளையும், அறைகளையும், வீடுகளையும், உலகங்களையும், மதிகளையும், ஞாயிறுகளையும், விண்மீன்களையும், இன்னும் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொன்றையும் இந்த ஐம்புலன்கள் வரைகின்றன. ஆயினும், நாம் எல்லோரும் ஏன் இந்த நாற்காலியைப் பார்க்கின்றோம்? அந்த ஆண்டவர் மீது, அந்தச் சச்சிதானந்தத்தின்மீது (மெய்ப்பொருள், அறிவு, ஆனந்தம்) பற்பல ஓவியங்களை ஒரே வண்ணமாய் நாம் வரைவானேன்? எல்லோரும் ஒரே முறையாகத் தீட்ட வேண்டிய அவசியமில்லை. ஒரே வகையாகத் தீட்டுபவர்கள் ஒரே இருப்பின் நிலையில் நிற்கின்றார்கள்.

அக்காரணத்தால், ஒருவர் மற்றவர் ஓவியங்களைப் பார்ப்பது போல ஒருவர் மற்றொருவரை நோக்குகின்றனர். ஆனால், உங்களுக்கும் எனக்கும் இடையே கோடிக் கணக்கான பேர்கள் அவ்வண்ணம் சித்திரிக்காமலும் இருக்கக்கூடும். அவர்களையும் அவர்கள் கைகளில் அலர்கின்ற ஓவியங்களையும் நாம் கண்ணுறுவதில்லை. இது ஒரு புறமிருக்கட்டும். மற்றொரு புறத்தில் இக்காலத்துப் பௌதிக ஆராய்ச்சிகள், 'உண்மையாயிருப்பது சூக்குமந்தான்,' என்று விளக்குந் திசையைச் சார்ந்து செல்லுகின்றன என்பது உங்கட்குத் தெரியும். தூலமென்பது தோற்றமே. அது எதுவாயினும் ஆகுக. சமயத்தின் கொள்கை ஏதாவது ஒன்று தருக்க அறிவின் சோதனைக்கு ஈடு கொடுத்து நிற்கிறதாயிருந்தால், அது அத்துவிதமாகத்தானிருக்கவேண்டும். ஏனெனில்,

அது இரண்டு தேவைகளை நிறைவேற்றுகின்றது. வடிவத்திற்கும் அப்பாலுள்ளது; எல்லா விளக்கங்களைக் காட்டிலும் மிகச் சிறந்த விளக்கமாய்த் திகழ்கின்றது; ஒவ்வொன்றிற்கும் பொதுவாயுள்ளது. ஒரு விளக்கம் வடிவமுள்ள ஒரு தெய்வத்தின்கண் முடிவடையுமானால், அவ்விளக்கம் பிரபஞ்சம் முழுதையும் தழுவக்கூடியதாயிருக்க முடியாது. வடிவமுள்ள ஒரு கடவுளைப்பற்றிச் சிந்திக்குமிடத்து, 'அவர் கருணையே வடிவானவர்; எல்லா நலமும் உருவெடுத்தவர்,' என்று நாம் கூற நேரிடும். ஆனால், இவ்வுலகமோ, நல்லதும் தீயதும் கலந்த ஒன்றாகும். நாம் விரும்பியவற்றை வெட்டித் தனியாய் எடுத்துக்கொண்டு, 'இதுதான் எல்லாவற்றிற்கும் விளக்கம் தரும் ஓர் உருவமுள்ள தெய்வம்,' என்று சொல்லி அதை அமைத்துக் கொள்ளுகிறோம். உங்கள் உருவமுள்ள கடவுள் இப்படிப்பட்டவர் அப்படிப்பட்டவர் என்று மொழிவது போலவே, 'அவர் அப்படிப்பட்டவரல்லர், இப்படிப்பட்டவரல்லர்', என்றெல்லாம் கூறவேண்டியிருக்கும் அன்றோ? உருவமுள்ள நல்ல கடவுள் என்று சொல்லுகிற சுருதியிலேயே உருவமுள்ள பேயுமுண்டு என்று நாம் பேச நேரிடும். உருவமுள்ள கடவுளே எல்லாவற்றிற்கும் விளக்கம் தரும் மூலகாரணம் என்ற கருத்து, தக்க கருத்தன்று என்பதை இதிலிருந்து நாம் தெளிவாய்க் கண்டுவிடவில்லையா? இந்த உருவமுள்ள தெய்வத்தைக் கடந்து உருவற்ற ஒரு தத்துவத்தை நாடவேண்டும். அந்த உருவற்ற மெய்ப்பொருளிலேதான் இந்தப் பிரபஞ்சம் தன் இன்ப துன்பங்களோடு உறைகின்றது. இருக்கும் பொருள் எதுவாயிருந்தாலும், அது அந்த அருவமூல தத்துவத்திலிருந்துதான் பிறந்திருக்கிறது. நல்லது கெட்டது முதலியவற்றை நாம் சூடும் அத்தகைய கடவுள் யாராயிருத்தல் கூடும்? நல்லதும் தீயதும் ஒரே பொருளின் இரண்டு தனித்தனி அமிசங்களே—அல்லது இவற்றின் தோற்றங்களே—என்பதுதான் இதன் கருத்தாகும். இவ்விரண்டும் வேறு வேறானவை என்பது, தொடக்கத்திலிருந்தே மிகமிகத் தவறான கருத்தாகும். இவ்வையகத்தின் பெரும்பாலான இடும்பைக்குக் காரணமாயிருக்கிறது இதுவே. தக்கது, தகாதது என்னும் இவ்விரண்டும் தனித்தனியான பொருள்கள்—துண்டு போடப்பட்ட பசையற்ற தனித்தனிப் பொருள்கள். இவ்விரண்டும் தனித்தனியாய் இயங்குகின்றன. நல்லதும் தீயதும் எஞ்ஞான்றும் பிரிக்கக்கூடிய—பிரிக்கப்பட்ட பொருள்கள்—என்ற கருத்துதான் எல்லாத் துயர்களுக்கும் காரணமாயிருக்கிறது. எப்பொழுதுமே ஒன்று நல்லதாய்த் திகழ்கின்றது என்றும், எப்

பொழுதுமே ஒன்று தீயதாய்க் காட்சி அளிக்கின்றது என்றும் எடுத்துக் காட்டக்கூடிய மனிதனைக் காண எனக்கு மிகவும் மகிழ்ச்சிதான். நம் வாழ்வின் சில நிகழ்ச்சிகளை முற்றிலும் நல்லவை—கலப்பற்ற நல்லவை—அல்லது இவை தீயவை—கலப் பற்ற தீயவை என்று சிந்தனை தேக்கிய முகத்தோடு நின்று கூற இயலும் போலும்! இன்று நல்லதாய்த் தோன்றுகின்றது, நாளைக் குத் தீயதாய்க் காட்சி அளிக்கலாம். இன்று தீயதாய் விளங்கு கின்றது, நாளை நல்லதாய் மிளிரலாம். எனக்கு நல்லதாயுள்ளது உங்களுக்குக் கெடுதலாய் அமையலாம். எல்லாவற்றிலுமிருப்பது போல நன்மை தீமையிலும் பரிணமம் உண்டு என்ற முடிவு ஏற் படுகின்றது. பரிணமத்தின் ஒரு நிலையில் ஒன்றை நல்லது என்று நவில்கின்றோம்; மற்றொரு நிலையில் தீயதென்று செப்புகின்றோம். என் நண்பனை மாய்த்த பெரும் புயலைத் தீயதென்றே நான் வழங்குகின்றேன். காற்றிலிருந்த நச்சுக் கிருமிகளைக் கொன்று அதே புயல் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களை மரண வாயிலிருந்து காப்பாற்றியிருக்கக் கூடும். அதை நல்லது என்று அவர்கள் வழங்குகின்றார்கள். நானோ, அதைக் கொடியது என்று கூறுகின்றேன். நல்லதும் தீயதும், நன்மையும் தீமையும் தொடர்பு கொண்டுள்ள தோற்றம் உலகத்தைச் சார்ந்ததாகும். உருவற்ற அந்தக் கடவுள் தீயதும் நல்லதுமான தொடர்புள்ள ஒன்று அன்று என்றுதான் நாம் கொள்ளல் வேண்டும். அவரை நல்லவரென்றோ, கெட்டவரென்றோ இயம்புவதற்கு இயலாது. அவர் அவ்விரண்டிற்கும் அப்பாலுள்ளவர். ஏனெனில், அவர் நல்லவரு மல்லர், கெட்டவருமல்லர். எனினும், நல்லது தீயதைக் காட்டிலும் அவருடைய சற்று நெருங்கிய தோற்றமாயிருக்கிறது.

வடிவற்ற ஒன்றை, உருவமற்ற ஒரு தெய்வத்தை ஏற்றுக் கொள்ளுவதன் விளைவு என்ன? அதனால் நமக்கு என்ன பயன்? மனித வாழ்வில் சமயம் ஒரு சாதனமாயிருக்குமா? நமக்கு ஓர் ஆறுதலாய்க் காட்சி அளிக்குமா? நமக்கு ஓர் உதவியாய்த் திக ழுமா? ஓர் உதவியைப் பெறுவதற்காக ஒன்றை இறைஞ்சும் நமது இதயத்தின் ஆர்வம் யாதாய் முடியுமோ! அவையெல்லாம் போய் விடா; இருக்கும். உருவமுள்ள கடவுளும் இருப்பார்; நல்ல அடிப் படையான முறையில் திகழ்வார். உருவமற்ற கடவுளால் உருவுள்ள கடவுளின் நிலை வலியுறும். உருவமற்ற கடவுள் இல்லாமல் உருவ முள்ள கடவுள் இருக்கமுடியாது என்பதைக் கண்டோம் அன்றோ? இந்தப் பிரபஞ்சத்தை முற்றிலும் விட்டுத் தனித்து நின்ற ஒன்று தன்னுடைய சங்கற்பத்தாலே வெறும்பாழிலிருந்து இந்தப் பிர

பஞ்சத்தைப் படைத்தது என்று மொழிந்தால், அதை மெய்ப்பிக்க
முடியுமோ? பொருள்களின் அத்தகைய நிலை இருக்க இயலாது.
உருவமற்ற ஒன்றைப்பற்றிய கருத்தை நாம் அறிந்தால், உருவ
முள்ள ஒன்றும் அங்குத் திகழலாம். பல்வேறு வடிவங்களுடைய
இந்தப் பிரபஞ்சம் உருவற்ற ஒன்றின் பாடபேதமேயாகும். அம்
மாபெரு நூலை ஐம்புலன்கள் கொண்டு நாம் படிக்கும்பொழுது,
அதை இந்தச் சடப் பிரபஞ்சமென்று பகர்கின்றோம். ஐம்புலன்
களைக் காட்டிலும் மேம்பட்ட ஒன்றைப் பெற்ற ஒருவன் இருப்பா
னாகில், அவன் அதை வேறு முறையில் படிப்பான். நம்முள் ஒரு
வன் மின்சார உணர்வு அடைந்திருப்பானாயின், இந்தப் பிரபஞ்
சத்தை வேறொன்றாகக் காண்பான். அந்த ஒருமையின் வெவ்
வேறு வடிவங்களே இவையாகும். உலகங்களைப்பற்றிய பற்பல
கருத்துகள் யாவும் அந்த முழு நூலின் பல பாட பேதங்களே;
உருவமற்ற கடவுளை உருவமுள்ள கடவுளாக அறிவுகொண்டு
நாம் அடையக்கூடிய மிகச் சிறந்த பாடமாகும். இந்த நாற்காலி
எவ்வளவு உண்மையோ, இவ்வையகம் எவ்வளவு உண்மையோ,
உருவமுள்ள இக்கடவுளும் அவ்வளவு உண்மைதான். அதற்கு
மேலில்லை. முழு உண்மை அது அன்று; உருவமுள்ள கடவுள்
அந்த உருவற்ற கடவுளே என்ற காரணத்தால், அதுவும் உண்மை
தான். மனிதனாய்ப் பிறந்த நான் எவ்வண்ணம் ஒரே சமயத்தில்
உண்மையுள்ளவனாயும் உண்மையற்றவனாயுமிருக்கிறேனோ, அவ்
வண்ணமே அதுவும் இருக்கிறது. உங்கள் கண்களுக்குப் புலனா
வதுபோல, உண்மையில் நானில்லை. இந்தப் பொருளை நீங்களே
தெளிவுபடுத்திக்கொண்டு திருப்தி அடையலாம். நீங்கள்
என்னைப்பற்றிக் கருதுகிறபடி நானில்லை. இப்பொருளிலும்
உங்கள் அறிவுக்குச் சமாதானம் ஏற்படக்கூடும். ஒளி, அதன்
பற்பல அதிர்ச்சிகள், சூழ்நிலையின் இயல்புகள், என் அகத்தே
எழுகின்ற எல்லாச் சலனங்கள்—இவை யாவும் நீங்கள் காண்
கின்றபடி என்னை உருவாக்கத் துணை புரிந்திருக்கின்றன.
இவற்றில் ஏதேனும் ஒன்று மாறுபட்டால், நான் மாறிவிடுவேன்.
வெவ்வேறு ஒளி நிலைகளில் ஒரு மனிதனைப் புகைப்படம் பிடித்
துப் பார்த்து, நீங்கள் உங்கள் அறிவுக்குத் திருப்தி அளிக்கலாம்.
ஆதலால், உங்கள் புலன்கள் ஏற்றவாறு தோன்றுகின்றவனாய்
நான் அமைகின்றேன். இவ்வுண்மைகள் இவ்வாறு இருப்பினும்,
மாறுத ஒன்று இருக்கின்றது. இவை யாவும் மெய்ப்பொருளின்
பல்வேறு நிலைகளே. அந்த உருவற்ற ஒன்றுதான் நான்; அந்த
நான் ஆயிரக்கணக்கான பற்பல மனிதர்களாகின்றேன். நான்

ஒரு குழவியாயிருந்தேன்; ஓர் இளைஞனாய்த் திகழ்ந்தேன்; முதியவனாய்க் கொண்டிருக்கிறேன். வாழ்வின் ஒவ்வொரு நாளும், என் உடல், என் எண்ணங்கள் இவை யாவும் மாறுதல் அடைகின்றன. இத்தகைய எல்லா மாறுதல்களுமிருப்பினும், இவற்றைக்கூட்டி வருகிறது ஒரு தொகுதியாய்விடுகிறது. இந்தத் தொகுதி கூடுவதுமில்லை, குறைவதுமில்லை. இதுதான் உருவமற்ற நான். இந்தத் தோற்றங்கள் அனைத்தும் அதன் பகுதிகள் போலும்! இவ்வண்ணமே இப்பிரபஞ்சத்தின் கூட்டுத் தொகுதியை நோக்கினால், அது அசைவற்றது என்னும் உண்மையை உணர்வீர்கள். ஆனால், இப்பிரபஞ்சத்தைச் சார்ந்த ஒவ்வொன்றும் சலனத்தோடு கூடியதாயிருக்கிறது. ஒவ்வொன்றும் இடையறுது மாறிக்கொண்டே இருக்கிறது. ஒவ்வொன்றும் சலனமடைந்துகொண்டுமிருக்கிறது. அதே சமயத்தில் அசைவு என்பது வேறொன்றைக்கொண்டு வரையறுக்கப்படுவதால், இப்பிரபஞ்சத்தை அசைவற்றதாகக் காண்கின்றோம். அசைவற்ற நாற்காலியை ஒப்பு நோக்குமிடத்து நான் சலனப்படுபவனாயிருக்கிறேன். சலனம் உண்டாவதற்குக் குறைந்தது இரண்டு பொருளாவது இருக்கவேண்டும். இந்தப் பிரபஞ்சம் முழுதும் ஒன்றாக வைத்துக் கருதினால், அப்பொழுது இதற்குச் சலனமில்லை. வேறு எதைக் குறித்து இது சலனமடைவதாகும்? அந்த முழுப்பொருள் மாறுதலற்றது; அசைவற்றது. சலனங்களும் மாறுதல்களும் எல்லையுள்ள தோற்ற உலகிலேதான் காணப்படும். அந்தப் பூரணமாயுள்ளது உருவமற்றது. அதனிடந்தான் அற்பமான அணுவிலிருந்து கடவுள் வரையிலுள்ள பல்வேறு பொருள்கள் காணப்படுகின்றன. இந்த உருவமுள்ள கடவுளைத்தான் உலகத்தைப் படைத்தவரென்றும், இப்பிரபஞ்சத்தை ஆள்கிறவரென்றும் நாம் மண்டியிட்டு வணங்கி இறைஞ்சுகின்றோம். இத்தகைய உருவமுள்ள கடவுளைத் தக்க தருக்க அறிவுகொண்டு நிலைநாட்டிவிடலாம். உருவமற்ற கடவுளின் மிகச் சிறந்த தோற்றமே உருவமுள்ள கடவுள் என்று விளங்கக் கூறலாம். நீங்களும் நானும் அந்த உருவிலாக் கடவுளின் மிகக் கீழ்த்தரமான தோற்றங்களே. நம் உயர்ந்த கற்பனை படைக்கக்கூடிய உருவமுள்ள கடவுளே அதன் உன்னதத் தோற்றமாகும். நானும் நீங்களும் அத்தகைய கடவுளாக இயலாது. நீங்களும் நானும் கடவுளே என்று வேதாந்தம் கூறும்பொழுது அது உருவமுள்ள கடவுளைச் சுட்டவில்லை. சான்றாக, களிமண்ணினின்று பெரிய யானை சமைக்கப்படுகின்றது. அந்தக் களிமண்ணைக்கொண்டே ஒரு சுண்டெலியும்

அமைக்கப்படுகின்றது என்று வைத்துக்கொள்வோம். களிமண் சுண்டெலி களிமண் களிருக இயலாது. ஆனுல், இவ்விரண்டையும் நீரில் போடுங்கள். அப்பொழுது இரண்டும் ஒரே களியாய் விடும். களியாய் இருக்கிற நிலையில் இவை இரண்டும் ஒன்றே. ஆனுல், சுண்டெலியாயும் யானையாயும் காட்சி அளிக்கின்ற பொழுது அழியாத மாறுபாடு இவற்றிடையே இருக்கத்தான் செய்யும். அந்த எல்லையற்ற உருவமில்லாத கடவுள்தான் சான்ருக நாம் காட்டியுள்ள களிமண்ணுகும். இந்நிலையில் இப்பிரபஞ்சத்தின்மீது ஆணை செலுத்துகிற அந்த ஈசனும் நாமும் ஒன்றே. ஆனுல், தோற்றங்களாயிருக்கிற மனிதர்களான நாமோ அவனுக்கு எஞ்ஞான்றும் அடியார்களாய் மிளிர்ந்து அவனை இடையருது இறைஞ்சி வழுத்துபவர்களாய்த் திகழ்வோம். ஆகவே, உருவமுள்ள கடவுள் ஒருவர் வேண்டும் என்பது புலனுகின்றது. இப்படியே கலப்புள்ள உலகில் ஒவ்வொன்றும் காட்சி அளிக்கின்றது. இக்காரணத்தால் சமயம் சற்று உறுதியான அடிப்படையின்மீது நிற்கின்றது என்று மொழியலாம். எனவே, உருவமுள்ள கடவுளைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ருல், உருவமற்ற கடவுளைப்பற்றி நாம் நன்கு உணரவேண்டுவது இன்றியமையாதது என்று சாற்றலாம்.

தருக்க அறிவுச்சட்டம் கூறுவதை முன்பே உணர்த்தினேன். பொது இயலைக் கொண்டுதான் சிறப்பியலை நாம் அறிய முடியும். மனிதனிலிருந்து தொடங்கிக் கடவுள் வரையில் காட்சி அளிக்கின்ற எல்லாச் சிறப்பியல்களும் உருவமற்ற ஒன்றின் மூலமாகத்தான் விளங்கும். எல்லாவற்றிற்கும் மிகமிக உயர்ந்த பொது விளக்கமாயுள்ளது அந்த உருவமற்ற ஒன்றேயாகும். வழிபாடுகள் அகலா. ஆனுல், அவை இன்னும் சிறந்த பொருளோடு விளங்கும். பொருளற்ற தாழ்ந்த கருத்தோடுகூடிய பிரார்த்தனைகள், நம் உள்ளத்திலிருக்கும் பலவிதமான அற்ப ஆசைகளைச் சொற்களில் உருவாக்கும் பிரார்த்தனைகள் ஒரு வேளை நீங்கும்படி நேரலாம். அறிவுள்ள எல்லாச் சமயங்களிலும் கடவுளுக்குப் பிரார்த்தனை செலுத்துவதை அனுமதிப்பதில்லை. தெய்வங்களை வேண்டிக்கொள்வதைத்தான் அனுமதிக்கிருர்கள். அது இயற்கையே. ரோமன் கத்தோலிக்கர்கள் தேவர்களை இறைஞ்சுகின்ருர்கள். அது மிகவும் தக்கதே. ஆனுல், கடவுளையே வேண்டிக்கொள்வது பொருளற்றதாகும். "சிறிது காற்று வீசவேண்டும்; சற்று மழை பெய்யவேண்டும். தோட்டத்து மரங்களில் கனிகள் கனியவேண்டும்," என்றெல்லாம் கடவுளை வேண்டிக்கொள்வது

தக்கதன்று. ஞானிகள் நம்மைப்போன்று சாதாரண மனிதர்களாய் இருந்தவர்கள். அவர்கள் நமக்கு உதவிபுரியலாம். ஆனால், உலகமனைத்திற்கும் தலைவராயிருப்பவரிடம் நம் அற்பத் தேவைகளைப்பற்றிப் பிதற்றுவது அழகன்று. குழவிப்பருவத்திலிருந்தே, "ஆண்டவனே, எனக்குத் தலைவலி ஏற்பட்டிருக்கிறது. அது போகவேண்டும்," என்று கேட்பது பெரிதும் நகைப்புக்கு இடமாகும். எத்தனையோ பேர் இவ்வுலகில் இறந்து போயிருக்கின்றனர். அவர்கள் தேவதைகளாகவும் ஆவிகளாகவும் இருக்கிறார்கள். அவர்கள் பிரார்த்தனைக்கு உதவி புரியட்டும். ஆனால், கடவுளிடம் அற்பப் பொருளை இரக்காதீர்கள். அவரிடம் உயர்ந்த பொருள்களைப்பற்றி வேண்டிக்கொள்ள வேண்டும். கங்கைக் கரையிலிருந்துகொண்டு நீருக்காக ஒரு சிறு கிணற்றை வெட்டுபவன் அறிவிலி அல்லவா? அப்படியே, வைரச் சுரங்கத்தின் அண்மையில் சிறு படிகத்துண்டுகளுக்காக வெட்டிப் பார்ப்பவனும் அறிவிலிதானே? உலகிலுள்ள அன்பிற்கெல்லாம், கருணைக்கெல்லாம் உறைவிடமானவரிடம் அற்ப விஷயங்களை இரத்தல் நம்மை அறிவிலிகளாய்ச் செய்துவிடும். ஆகவே, அவரிடம் நாம் அன்பை, ஒளியை, மனவுறுதியை அருளும்படி வேண்டிக்கொள்வோம். ஆனால், பிறரைச் சார்ந்து நிற்கும் ஆவலும் பலவீனமும் இருக்கும் வரையில் உருவமுள்ள கடவுளை வழிபடும் எண்ணமும் அற்பப் பிரார்த்தனைகளைச் செய்வதும் இருந்தேதான் தீரும். ஆயினும், உயர்ந்த நிலையையடைந்தவர்கள் இவ்வற்ப விஷயங்களைக் கேட்கமாட்டார்கள். 'இது வேண்டும்; அது வேண்டும்,' என்பதை அவர்கள் அறவே மறந்தவர்களாயிருப்பார்கள். அவர்களிடம் உயர்வற உயர்ந்து நிற்கும் எண்ணம் "நான்" என்பது அன்று. "நீங்களே!" உருவமற்ற கடவுளைத் தொழுவதற்கு அவர்களே தகுந்தவர்கள். உருவமற்ற கடவுளைத் தொழுவது எப்படி? அதில் அடிமைத்தனம் இல்லை. "ஆண்டவனே, நான் ஏதுமற்றவன். என் மேல் இரங்கவேண்டும்," என்று வேண்டிக்கொள்ள வேண்டுவதில்லை. பண்டைய பாரசீகக் கவிதை ஒன்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். "என் காதலியைக் காணவந்தேன். கதவுகள் மூடியிருந்தன. நான் தட்டியதும் 'யார் நீ?' என்று உள்ளேயிருந்து ஒரு குரல் கேட்டது. நான் இன்னார் என்பதைக் கூறினேன். கதவு திறக்கவில்லை. நான் மீண்டும் ஒரு முறை கதவைத் தட்டினேன். அதே கேள்வி எழுந்தது. நானும் அதே பதிலைக் கூறினேன். கதவு

திறக்கவில்லை. மூன்றாம் முறை வந்து தட்டியதும் அதே கேள்வி தான் வந்தது. 'அன்பே, நீயேதான் நான்,' என்றதும் கதவு திறந்தது.'' உருவமற்ற கடவுளை மெய்யொளியின் மூலமாய் வழிபட வேண்டும். அப்படியானால், எது உண்மை? 'நான் பிரம்மம்,' என்பதே! 'நான் என்பது நீ அன்று,' என்று நான் கூறினால், அது பொய். 'நானும் நீயும் ஒன்று அல்ல. நான் வேறானவன்,' என்று கூறினால், அது மிகவும் கொடிய பொய். இந்தப் பிரபஞ்சமும் நானும் ஒன்று; ஒன்றாகவே பிறந்திருக் கிறோம். நானும் இப்பிரபஞ்சமும் ஒன்று என்பது என் புலன் களுக்குத் தானாகவே விளங்குகிறது. என்னைச் சூழ்ந்துள்ள காற்றும் நானும் ஒன்று. ஒளி வெப்பம் எல்லாம் ஒன்றே! பரமான்மா என்று தவறாக நாம் நினைக்கும் இப்பிரபஞ்சமும் நானும் எஞ்ஞான்றும் ஒன்றுதான். அந்தப் பரமான்மா, 'பிர பஞ்சத்தில் உறைகின்ற ஒவ்வோர் உயிரின் இதயத்திலும் நான் இருக்கிறேன்,' என்று கூறுகிறார். அழிவற்றவராய் நித்தியராய் என்றும் விழிப்புடன் இருக்கும் அவர் அழிவற்ற மகிமையை உடையவர்; தவறாத சத்தியுடையவர்.

அப்படிப்பட்ட அப்பரமான்மாவும் நானும் ஒன்று என்பது தான், உருவமற்ற கடவுளை வணங்குவது என்பது. அத்தகைய வழிபாட்டின் விளைவு என்ன? மனிதனது வாழ்க்கையே முற்றும் மாறிவிடும். இப்பிறவியில் நமக்கு மிக மிகத் தேவையானது ஆன்மிகச் செல்வம். பாவம், துயரம் என்று நாம் கூறுவதற்கெல்லாம் காரணம் ஒன்றே. அது நமது பலவீனமே. பலவீனத்துடன் அறியாமை வருகின்றது. அறி யாமையோடு துன்பமும் பிறக்கின்றது. நான் கூறிய வழி பாடு நமக்கு ஆன்மிகச் செல்வத்தை அளிக்கின்றது. அப் பொழுது இடும்பைகளைக் கண்டு நாம் நகுவோம். கெட்ட மனி தர்களின் கொடுமையைக் கண்டு சிரித்த முகத்துடனிருப்போம். கொடிய புலியின் இயல்பினூடே நம் ஆன்மாவையே காண்போம். அந்த உபாசனையினால், இத்தகைய பயன் நமக்கு ஏற்படும். ஆண்டவனோடு ஒன்றாய்க் கலந்த ஆன்மாதான் பலமுள்ளதாகும். உங்கள் பைபிளில் தனக்குத் துரோகம் புரிந்தவர்களை மன்னித்து, தன்னைக் கொல்ல வந்தவர்களை ஆசீர்வதிக்கும்படியான அந்த அளவற்ற, எல்லையற்ற ஆன்ம ஆற்றல் ஏசுநாதருக்கு ஏற்பட்ட தாகக் கூறப்பட்டிருக்கிறதே! அது எதனால் என்று நினைக் கிறீர்கள்? ''நானும் என் பிதாவும் ஒன்று,'' என்ற மனோநிலை தான் அது. ''பிதாவே, நான் உம்முடன் ஒன்றானது போல

அவர்களையும் என்னுடன் ஒன்ருகச் செய்யும்,'' என்ற பிரார்த் தனைதான் அது. அதுதான் உருவமற்ற கடவுளுக்கு ஆற்றும் பூசனை யாகும். பிரபஞ்சத்தோடும் அப்பரமான்மாவோடும் ஒன்ருக வேண்டும். அந்த உருவமற்ற கடவுளை மெய்ப்பிக்க ஒன்றும் தேவை இல்லை. நம் இந்திரியங்களைக்காட்டிலும், நம் எண்ணங்களைக்காட்டிலும், இன்னும் அருகிலேயே அவர் இருக் கிருர். அவர் உள்ளிருக்க அவர் மூலமாகவே நாம் பார்க்கிருேம், சிந்திக்கிருேம். எந்தப் பொருளையாவது பார்க்கவேண்டுமானுல், முதலில் அவரைத்தான் பார்க்க வேண்டும். அவரை முதலில் கண்ட பிறகுதான் நான் இந்தச் சுவரைக் காண்கிறேன். ஏனெனில், அவரே மெய்ப்பொருள். யார் யாரைப் பார்க்கிருர்கள்? நம் இதயத்துக்குள் இதயமாய் அவர் இருக்கிருர். உடலும் மன மும் மாறுகின்றன; இன்பம் துன்பம், நல்லது கெட்டது வரு கின்றன; போகின்றன. நாட்கள், ஆண்டுகள் தேய்கின்றன. உலகில் பிறப்பும் இறப்பும் நடைபெற்றுக் கொண்டே இருக் கின்றன. ஆனுல், அப்பரமான்மா பிறப்பு இறப்பு அற்றவரா யிருக்கிருர். ‘‘நான் இருக்கிறேன்! நான் இருக்கிறேன்!'' என்ற அதே குரல் என்றும் மாருமல் அப்படியே கேட்டுக்கொண்டே இருக்கிறது. அவருள்ளிருந்து அவர் மூலமாய் நாம் எல்லா வற்றையும் அறிகிருேம்; எல்லாவற்றையும் பார்க்கிருேம். அவர் மூலமாகவே நாம் இருக்கிருேம்; உயிர் வாழ்கிருேம்; சிந்திக் கிருேம். எல்லைக்குட்பட்டதான அந்த ‘நான்' என்பது என் னுடையது மட்டும் அன்று; உங்களுடையதுந்தான். அந்த ‘நான்' என்பது எல்லா உயிர்களுக்கும் அவை தேவதைகளா யினும், மிக மிகத் தாழ்ந்த உயிர்களாயினும்—அனைத்துக்கும் உரிமையாயிருக்கிறது. படுகொலைகாரனுக்கும் உண்மையே வடி வான சான்ருேனுக்கும் அந்த ‘நான்' சொந்தமாயிருக்கிறது. பணக்காரனே, ஏழையோ, ஆடவனே, பெண்ணே, மனிதனே, விலங்கோ—எல்லாருக்கும் அது சொந்தமேயாகும். அற்பச் சிறிய புழுவிலிருந்து சொர்க்கத்திலுள்ள தேவதை வரையில் அனைவர் உள்ளத்திலும் அப்பரமான்மா கோயில் கொண்டிருக் கிருர். ‘‘நான்தான் அப்பரமான்மா,'' என்று இடையருது சொல்லிக்கொண்டுமிருக்கிருர். ஓயாது கேட்டுக்கொண்டிருக்கும் அக்குரலை உணர்ந்து, நாம் இந்த உண்மையைத் தெரிந்து கொண்டால், இப்பிரபஞ்சத்தின் இரகசியம் நமக்கு வெளியாகும். இயற்கையும் தன் இரகசியத்தை நமக்கு வெளியிட்டுவிடும். அதற்குமேல் நாம் அறிய வேண்டுவது ஒன்றுமில்லை. எல்லாச்

சமயங்களும் தேடிக்கண்டறிய விரும்பும் தத்துவத்தை நாம் இவ்விதம் அறிந்துகொள்வோம். லோகாயதமான சாத்திரங் களைப்பற்றிய அறிவெல்லாம் இவ்வறிவோடு ஒப்பிடப்பட முடி யாதது. உலகியல் அறிவு முதல் இடம் பெருது. உலகத்தலை வரான அப்பரமான்மாவுடன் நம்மை ஒன்றுபடுத்தும் அறிவுதான் உண்மையான அறிவாகும்.

# ஒருமையே சமயக் குறிக்கோள்

(1896ஆம் ஆண்டில் நியூயார்க்கு மாநகரில் ஆற்றிய சொற்பொழிவு)

புலன்கட்கும், தருக்க அறிவுக்கும், புத்திக்கும் விளங்கும் இந்த நமது பிரபஞ்சத்தின் இருமருங்கிலும் வரம்பாய் அமைவது, எல்லையில்லாததும், அறியவொண்ணாததும், என்றைக்கும் அறியப்படாததும், ஆன ஒன்றே. தேடுவதும் இங்கே; விசாரணையும் இங்கேயே; உண்மைகளும் இங்கேயே உள்ளன. சமயம் என உலகம் அறியும் ஒளி பிறப்பதும் இங்கேதான். எனினும், சமயம் சிறப்பாக உரியது புலன்கட்கு அப்பாலுள்ள நிலத்திற்கே; ஐம்புல உலகிற்கன்று. அது தருக்க அறிவு அனைத்திற்கும் அப்பாற்பட்டது; புத்திக்குரிய நிலத்தினைச் சார்ந்ததன்று. அது ஒரு காட்சி; ஒரு ஞான ஆவேசம்; அறியப்படாததும், அறிய வொண்ணாததுமான ஒன்றிற்குள் மூழ்குதலேயாகும். அதனால் அறியவொண்ணாதது, அறியப்பட்டதினும் மேம்பட விளங்குவதாகிறது. ஏனெனில், அது ஒருகாலும் அறியப்பட்டதாதல் இயலாது. மனித இனத்தின் தொடக்க முதலே மனிதர் மனத்திற்குள் அதைத் தேடி வந்துள்ளனர் என்பது எனது நம்பிக்கை. உலக வரலாற்றின் எப்பகுதியிலேனும் இப்பேருழைப்பும் அப்பாலான இடத்து இத்தேடுதலும் இன்றி மனிதனது தருக்க அறிவும் புத்தியும் இருந்திருத்தல் இயலாது. சிற்றண்டமாகிய இம்மனித மனத்தில் ஓர் எண்ணம் உதிப்பதை நாம் காண்கிறோம். எங்கிருந்து அது உதயமாகிறது என்பதை யாமறியோம். அது மறையும்போது எவ்விடம் செல்கிறது என்பதையும் யாமறியோம். மாபேரண்டமும் சிற்றண்டமும் ஒரே நிலைகளைத் தாண்டிச் சென்று, ஒரே சுருதியில் ஒலித்து, ஒரே தடத்திலே செல்லுவன போன்றவை.

'சமயங்கள் புறத்தேயிருந்தெழாமல், அகத்திருந்தே உதிக்கின்றன,' என்னும் இந்து மதக் கொள்கையை உங்கள் முன்பு எடுத்தோத முயல்வேன். சமய நினைவு மனிதனது அமைப்பிலே அடங்கியதொன்று என்பது எனது நம்பிக்கை. 'எதுவரையிலோ?' எனின், அவனுக்குத் தனது மனத்தையும் உடலையும் விட இயலும் வரையில், நினைவையும் வாழ்வையும் விட இயலும் வரையில், சமயத்தைவிடல் அவனுக்கு ஒண்ணாததேயெனும் அளவிற்கே என்று உரைக்கலாம். மனிதனுக்குச் சிந்தனை இருக்கும்

வரையில் இம்முயற்சி இருந்தே தீரும். அது வரை மனிதனுக்கு
யாதேனும் ஒரு வகையிலே சமயம் இருத்தலும் கட்டாயமே
யாகும். இவ்வண்ணமே இவ்வுலகில் பல்வகைச் சமயங்கள்
நிலவக் காண்கின்ருேம். இது மனத்தைக் குழப்பும் ஓர்
ஆராய்ச்சியே ; ஆனுலும், நம்மிற் பலரது கருத்துப்படி ஒரு
வீணுன விசாரணையன்று. இக்குழப்பத்தின் நடுவே இனிய நல்ல
தோர் ஒழுங்குள்ளது ; வேறுபட்டுப் பகை நரம்பாய் இசைக்கும்
ஒலிகட்கிடையேயும் எத்திசைக்கும் ஒரு நல்லிசை உளது.
அதனை உற்றுக் கேட்க ஆயத்தம் பண்ணுபவன் அவ்விசையினைச்
செவி மடுப்பான்.

விணக்களுள் மிகப் பெரிய விணுவாக இப்பொழுது கருதக்
கூடியது இதுதான். அறியப்பட்டதும், அறியக்கூடுவதுமான
ஒன்றை இருமருங்கிலும், அறிய வொண்ணுததும், அறியப்
படாததுமான எல்லையற்ற ஒன்று சூழ்ந்திருக்கிறது என்பதை
ஒப்புக்கொண்டாலும், அறியப்படாத கங்கு கரையில்லாத
ஒன்றை நாட முயல்வானேன்? கண்டதைக் கொண்டு நாம் ஏன்
திருப்தி அடையக் கூடாது? உண்டி அருந்துவது, நற்பானம்
பருகுவது, சமுதாயத்திற்கு ஏதோ ஒரு சிறிய நன்மையை நல்கு
வது—இவற்ருேடு நாம் திருப்தி எய்தி ஏன் சும்மா இருத்தல்
கூடாது? இத்தகைய கருத்து எங்கும் உலாவக் காண்கின்ருேம்.
மிகக் கற்றறிந்த பேராசிரியர் முதல், குதலைச் சொல் மொழியும்
ஒரு சிறு குழவி வரையிலுள்ள மக்களாகிய நமக்கெல்லாம்,
'உலகத்திற்கு நன்மை புரிவது ஒன்றே சமயமனைத்துமாகும்,'
என்று ஓதப்படுகின்றது. (புலங்கடந்த) அப்பாலொன்றைப்
பற்றிய விணுக்களைப்பற்றி நம்மை அல்லற்படுத்திக்கொள்ளுவது
பயனற்றதாகும். இப்படிச் சொல்லிச்சொல்லி, இது மறுக்க
வொண்ணுத உண்மையாய்ப் போவதைக் காண்கின்ருேம்.

ஆனுல், அப்பால் திகழும் ஒன்றைப்பற்றி நாம் ஆராய்ச்சி
செய்துதான் தீரவேண்டும். இது ஒரு பாக்கியமன்ருே? நம்
முன் நிற்பது—நம் முன் தோன்றி நிற்பது—தோன்ருத ஒன்றின்
ஒரு பகுதியேயாகும். எல்லையற்ற ஆன்மிக அகண்டத்தின்—
நம்முடைய ஐம்புல அறிவு வட்டத்தில் அடங்கியிருக்கிற இந்த
அகண்டத்தின்—ஒரு பகுதி அல்லது ஒரு துண்டு போலும் இந்த
ஐம்புலப் பிரபஞ்சம். அப்பாலுள்ள ஒன்றை நாம் அறியாத
நிலையில், இப்படி நீட்டிக்கொண்டிருக்கிற ஒரு சிறிய துண்டிற்கு
எப்படி விளக்கம் தர முடியும்? எப்படி அதை உணர முடியும்?
சாக்கரட்டீஸ் ஏதன்ஸ் நகரில் சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருக்

கும் பொழுது, கிரேக்க நாட்டிற்குள் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த ஒரு பிராம்மணனைச் சந்தித்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர், 'மனித இனத்திற்குரிய உயர்ந்த படிப்பு மனிதன் தான்,' என்று அந்தப் பிராம்மணனிடம் மொழிந்தாராம். அதற்கு அந்தப் பிராம்மணன் மறுமொழியாக, 'கடவுளைக் காணுத வரையில் மனிதனை எப்படி அறிந்து கொள்ள இயலும்?' என்று மனத்தில் தைக்கும்படி கூறினனும். இந்தக் கடவுள்—எஞ்ஞான்றும் அறிய முடியாத இந்த ஒன்று—கலப்பற்றதாயுள்ள இந்த ஒன்று—எல்லையற்ற இந்த ஒன்று—பெயரிலாத இந்த ஒன்று—நீங்கள் விரும்புகிற எந்தப் பெயரை வைத்தாலும், அதைக் கொண்டு வழங்க இயலும் இந்த ஒன்றுதான்—தருக்க அறிவுக்கு ஆதாரமாயிருக்கிறது. இது ஒன்றே விளக்கந் தருகின்றது. இதுதான் மூலகாரணமாய்த் திகழ்கின்றது.

உங்கள் முன் மிகுந்த சடமாயுள்ள எந்தப் பொருளையேனும் எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்து பாருங்கள். பௌதிக சாத்திரங்களில் ஏதாவது ஒன்றை உங்கள் ஆராய்ச்சிக்குப் பொருளாக வைத்து நோக்குங்கள். அது இரசாயனமாயிருக்கட்டும், அல்லது பௌதிக விஞ்ஞானமாயிருக்கட்டும், அல்லது வான சாத்திரமாயிருக்கட்டும், அல்லது உயிர் நூலாயிருக்கட்டும். அதை நுட்பமாக ஆராய்ச்சி செய்வீர்களாக. அந்த ஆராய்ச்சியில் மேன்மேலும் ஆழ்ந்து சென்றால், தூலம் கரையத் தொடங்கும். அது மிக மிக நுண்ணிதாய்ப் போய்விடும். அது ஒரு நிலைக்கு வரும் பொழுது, தூல சடப் பொருள்களிலிருந்து, அப்பாலுள்ள அருவ சைதன்னிய நிலைக்கு ஒரு மாபெரும்பாய்ச்சலை நாம் செய்யாமலிருக்க இயலாது. தூலம் சூக்குமத்தில் இறந்துவிடும். பௌதிக ஆராய்ச்சியும் தத்துவ ஆராய்ச்சியாய்த் திகழ்ந்துவிடும். இத்தகைய நிகழ்ச்சியை ஒவ்வோர் அறிவுத்துறையிலும் நாம் காண்கின்றோம்.

அப்பாலைப்பற்றிய ஆராய்ச்சியிலே தான் இறுதியில் இழுத்துச் சொல்லப்படுகிறதை மனிதன் உணர்கின்றான். அப்பாலை நாம் அறிய இயலாமற் போகுமாயின், நம் வாழ்வு வறண்ட பசையற்ற பாலையாய்ப் போய்விடும்; மனித வாழ்வும் வீணேயாகும். இம்மையில் கிடைக்கக்கூடிய பொருள்களைக்கொண்டு திருப்தி அடைவீர்கள் என்று சொல்லுவது மிக நல்லதாய்த் தோன்றலாம். பசுக்களும், நாய்களும், மற்ற விலங்குகளனைத்தும் திருப்தி அடையவில்லையா? இப்படித் திருப்தி எய்தும் காரணத்தாலேதான் அவை விலங்குகளாய் விளங்குகின்றன.

இம்மையுடன் திருப்தி எய்தி அப்பாலைப் பற்றிய ஆராய்ச்சி அனைத்தையும் மனிதன் அறவே விட்டுவிட்டால், மனித இனம் மீண்டும் விலங்கு நிலைக்குத்தான் போகவேண்டும். சமயந்தான் —அப்பாலைப்பற்றிய ஆராய்ச்சிதான்—மனிதனை விலங்கினத்தி லிருந்து பிரிக்கின்றது. மேல் நோக்கும் பிராணி மனிதனே என் பது நன்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றைய விலங்குகளுள் ஒவ்வொன்றும் இயற்கையிலேயே கீழ் நோக்குகின்றது. மேல் நோக்குவது, முன்னேறுவது, பூரணத்தை நாடுவது ஆகிய இவற் றையே 'விடுதலை' என்று வழங்குவோம். தான் எவ்வளவு விரை வில் மேலே செல்ல மனிதன் முயலத் தொடங்குகின்றானோ, அவ் வளவு விரைவில் விடுதலை என்று எண்ணப்படுகிற உண்மைக் கருத்திற்குத் தன்னை உயர்த்திக்கொள்ளுகிறான். அது உங்கள் சட்டைப் பையில் உள்ள காசைப் பொறுத்ததன்று; அணியும் உடையைச் சார்ந்ததன்று; நீங்கள் உறையும் இல்லத்தில் அது தங்கியில்லை; உங்களுடைய மூளையிலுள்ள ஆன்மிகச் செல்வ மாம் எண்ணத்திலேதான் ஊன்றி நிற்கின்றது. அதுதான் மனித முன்னேற்றத்திற்குத் துணையாய்த் திகழ்கின்றது. எல்லாப் பௌதிக முன்னேற்றத்திற்கும் அறிவுத் துறையின் முன்னேற் றத்திற்கும் அதுவே மூலமாயிருக்கிறது. எல்லாவற்றிற்கும் பின் நின்று இயங்கும் சத்தியும் அதுவே. மனித இனத்தை முன் செல்லுமாறு தூண்டிச் செலுத்தும் ஆர்வமும் அதுவேயாகும்.

அருந்துகின்ற உண்டியின்மீது சமயம் சார்ந்ததன்று. உறை கின்ற இல்லத்தில் அது ஊன்றி நிற்கவில்லை. அடிக்கடி சமயத்திற் குப் பகையாக இந்த மறுப்பைத் தொடுப்பதை நீங்கள் கண்டிருக் கிறீர்கள். சமயம் எந்த நலத்தைப் புரியும்? ஏழை மக்களின் வறுமையை அது அகற்றுமோ? அது அப்படிச் செய்ய முடியா தென்று கருதினால் என்ன? அதனால் அது சமயத்தின் மெய்யின் மையை நிலை நாட்டிவிடுமோ? நீங்கள் வான சாத்திரத்தின் ஓர் உண்மையைச் சான்றுகொண்டு விளக்கிக்கொண்டிருக்கும் பொழுது, ஒரு குழந்தை கூட்டத்தின் நடுவிலிருந்து எழுந்து, 'உங்கள் விளக்கம் ஒரு தின்பண்டத்தைத் தருமா?' என்று கேட் பதாக நினையுங்கள். அப்பொழுது உங்கள் விடை 'தாராது' என்றுதான் அமையும். அப்பொழுது அந்தக் குழந்தை 'உங்கள் விளக்கம் பயனற்றது' என்றுதான் சொல்லும். இந்த அகில பிர பஞ்சத்தையும் தங்கள் நினைவுக் கோணங்களிலிருந்தே குழந்தை கள் தீர்மானிக்கும்; 'தின்பண்டத்தை அது படைக்குமா?' என்று தான் அவை நோக்கும். இந்த உலகப் பெருங்குழவிகளும் இப்

படித்தான் தீர்மானிக்கின்றன. மிகச் சிறந்த பொருள்களை ஓர் இழிவான கோணத்திலிருந்து நாம் கருதக்கூடாது. ஒவ்வொன்றையும் அததற்குரிய அளவுகோல் கொண்டே அளந்து பார்க்க வேண்டும். எல்லையற்றதை எல்லையற்ற அளவுகோலைக் கொண்டே அளக்க வேண்டும். மனித வாழ்வு முழுவதையும் சமயம் ஊடுருவிச் செல்கிறது; நிகழ்காலத்தை மட்டுமன்றி, இறப்பு, நிகழ்வு, எதிர்வு—இம் முக்காலங்களையும் அது தன்னுள் அடக்கிப் பரந்து நிற்கின்றது. அக்காரணம்பற்றியே அழிவற்ற ஆன்மாவுக்கும், அழிவற்ற கடவுளுக்கும் உள்ள இடையறுத் தொடர்பாய் அது மிளிர்கின்றது. ஐந்து நிமிட மனித வாழ்வின்மீது அது புரிகின்ற செயலைக்கொண்டு அதன் சிறப்பை அளப்பது தருக்க அறிவுக்குப் பொருந்துமா? உன்னிப்பாருங்கள். சற்றும் பொருந்தாது தான். இவை யாவும் எதிர்மறையான வாதங்கள்.

'சமயம் உண்மையில் ஏதாவது ஒன்றைச் சாதிக்குமா?' என்பதுதான் இப்பொழுது எழும் வினு. ஆம்; சாதிக்கும். அது மனிதனுக்கு அமர வாழ்வைக் கொணர்கின்றது; அவன் உண்மை நிலையை அவனுடையதாகவே செய்கின்றது; இந்த விலங்கியல் மனிதனை ஒரு தெய்வமாய்த் திகழும்படி செய்கிறது. இதைச் சமயம் புரிய இயலும். மனித சமூகத்தினின்று சமயத்தை நீக்கி விடுங்கள்; எஞ்சி நிற்பது யாது? அது விலங்கினம் மண்டிக்கிடக்கும் ஒரு காட்டைத் தவிரப் பிறிதன்று. மனித இனத்தின் குறிக்கோள் ஐம்புல இன்பமன்று. வாழ்வின் முழு இலட்சியமும் ஞானமே. ஒரு விலங்கு தன் ஐம்புல நுகர்ச்சிகளில் திளைப்பதை விட, மனிதன் அறிவுத்துறையில் இன்பம் காண்பதை நாம் பார்க்கின்ருேம். தன் அறிவின் இயல்பில் இன்பம் துய்ப்பதைவிட மனிதன் தன் ஆன்மிக இயல்பில் இன்பம் தேர்வதை நாம் உணர்கின்ருேம். இந்த ஆன்மிக அறிவே மிகமிகச் சிறந்த ஞானமாகும். இந்த அறிவோடுதான் பேரானந்தம் பெருகுகின்றது. இந்த ஞாலத்தின் பொருள்களனைத்தும் உண்மை, அறிவு, பேரானந்தம்—இவற்றின் நான்கு அல்லது ஐந்து படி தள்ளி நிற்கும் நிழல்களும் தோற்றங்களுமாகும்.

இன்னுமொரு வினு எழுகிறது: மனிதனது குறிக்கோள் யாது? மனிதன் ஓர் எல்லையில்லாமல் முன்னேறிக்கொண்டேயிருக்கிறன்; அடையவேண்டிய பூரண நிலை ஒன்று இல்லை என்பது இப்பொழுது உறுதியாகச் சாற்றப்படுகிறது. 'எப்பொழுதுமே அணுகிக்கொண்டிருக்க வேண்டுவதுதான்; ஆனல், ஒரு காலும் அதை அடைய இயலாது,' என்று இயம்புகின்றனர்.

இதன் பொருள் ஏதேனும் ஆகுக. இது வியப்பைத் தரக்கூடியதாயிருக்கலாம். ஆனால், அசட்டுத்தனம் இதன் முகத்திலேயே எழுதி ஒட்டப்பட்டிருக்கிறது. ஒரு நேர்க்கோட்டில் ஏதாவது சலனம் இருக்கிறதா? ஒரு நேர்க்கோட்டை எல்லையில்லாமல் வரைந்து கொண்டே போனால், அது ஒரு வட்டமாய்விடும். தொடங்கின இடத்திற்கே அது மீண்டும் வந்துவிடும். எந்த இடத்தில் தொடங்கினோமோ, அந்த இடத்திற்கே முடிவாக வரவேண்டும். கடவுளில் நீங்கள் தொடங்கினீர்கள். கடவுள் இடத்திற்கே நீங்கள் மீண்டும் விரையவேண்டும். இன்னும் என்ன வேலைகள் காத்திருக்கின்றன? இதை அடைய வேண்டுவதற்குரிய படிப்படியாயுள்ள நுணுக்கமான செயல்களே. இத்தகைய நுணுக்கமான அலுவல்களை நீங்கள் எஞ்ஞான்றும் புரிந்துதான் தீரவேண்டும்.

இன்னுமொரு வினாவும் எழுகிறது: நாம் ஆராய்ச்சியில் ஆழ ஆழச் சமயத்தின் புதுப் புது உண்மைகளைக் கண்டு பிடிக்க வேண்டி வருமோ? இவ்வினாவிற்கு 'ஆம்'; 'இல்லை' என்னும் விடையே எழும். சமயத்தைப்பற்றி இனி மேலும் அறிய வேண்டிய பொருள் இருக்க இயலாது என்பதை முதன்முதலாக நீங்கள் அறிய வேண்டும். அகத்தில் ஓர் ஒருமை இருக்கிறது என்று உலகத்திலுள்ள சமயங்களனைத்தும் உரிமை பாராட்டுவதை நீங்கள் காண்கின்றீர்கள். தெய்வநிலையில் இரண்டறக் கலக்கின்ற காரணத்தால், மேன்மேலும் முன்னேற்றத்திற்கு இடமில்லை என்று கூறிவிடலாம். அறிவென்பது இந்த ஒருமையைக் கண்டு பிடிப்பதே. ஆடவராகவும் பெண்டிராகவும் உங்களை நான் பார்க்கும்பொழுது, பலவிதத் தோற்றத்தைப் பார்க்கின்றேன். உங்கள் யாவரையும் மனித இனம் என்று கூறுபடுத்தும்பொழுது, அது ஒருமை காண்கிற விஞ்ஞான அறிவாய்த் திகழ்கின்றது. சான்றாக, இரசாயன சாத்திரத்தை நோக்குங்கள். காணப்பட்ட எல்லாப் பொருள்களையும் அவற்றின் பண்டைய மூலகங்களுக்குக் கொண்டுபோக இரசாயன சாத்திரிகள் முயல்கின்றார்கள். இயலுமாயின், அந்தப் பொருள்களனைத்தும் பிறந்த மூலகத்தையும் காண முயல்வார்கள். அதை எய்திவிட்டால், அதற்கப்பால் அவர்கள் போதல் இயலாது. இரசாயன சாத்திரம் பூரணத்தை அடைந்துவிடுமன்றோ? இந்தப் பூரண ஒருமையை நாம் அடையப் பெறுவோமாயின் அதற்கப்பால் வேறு ஒரு முன்னேற்றம் இருக்க இயலாது.

அடுத்தபடி 'இத்தகைய ஒருமையை அடைதல் சாத்தியமா?' என்னும் இன்னொரு கேள்வி பிறக்கின்றது. இந்தியாவில் இத்

தகைய சமயம் தத்துவம் இவற்றின் சாத்திரத்தைப் பெறுவதற் குரிய முயற்சி காலத் தொடக்கத்திலேயே செய்யப்பட்டிருக்கிறது.

மேலை நாடுகளில் சமயத்தையும் தத்துவத்தையும் பிரித்து ஆராய்வது வழக்கமாயிருந்து வருகின்றது ; ஆனால், இந்துக்கள் இவற்றைப் பிரிப்பதில்லை. ஏனெனில், இவையிரண்டும் ஒரு பொருளின் இரண்டு தோற்றங்களே தவிர, வேறல்ல. இவை தருக்க அறிவிலும் விஞ்ஞான உண்மையிலும் வேரூன்றியிருக்க வேண்டும்.

இந்தியாவில் காணப்படும் பண்டைய தரிசனங்களுள் சாங் கிய தத்துவ தரிசனமும் ஒன்றாகும். ஏன் ? உண்மையைக் கூறு மிடத்து, 'உலகத்திலேயே' என்றுகூட நாம் இயம்பலாம். இதற்கு விளக்கங் கூறுகிற மிகச் சிறந்த கபிலர் என்பவரை இந்திய உள நூல்களனைத்திற்கும் தந்தையார் என்று வழங்கலாம். அவர் கற் பித்த பண்டைய தரிசனம், இப்பொழுது எல்லோராலும் ஏற்கப் பட்ட தத்துவ தரிசனங்கள் எல்லாவற்றிற்குமே இன்றும் அடிப் படையாய்த் திகழ்கின்றது. எல்லாத் தத்துவ ஆராய்ச்சிகளும் 'தரிசனங்கள்' என்னும் பெயரால் அறியப்படுகின்றன. வேறு அமிசங்களில் மிக மிக மாறுபட்டாலும், அனைவரும் அவர் கண்ட உள நூலை ஏற்கின்றனர்.

தருக்க அறிவு கொண்டு ஆராய்ந்தால், சாங்கியத்தின் விளைவே வேதாந்தம் என்பது புலப்படும். சாங்கியத்தின் விளை வான இவ்வேதாந்தம், இதன் முடிபுகளின் எல்லைகளை மேலும் அகற்றி அமைக்கின்றது. இதன் பிரபஞ்சத் தோற்றத் தத்துவம் கபிலர் கற்பித்ததை ஒத்திருந்தாலும், துவைதத்தோடு நிற்க வேதாந்தம் உடன்படுவதில்லை. இறுதி ஒருமையை நாடும் ஆராய்ச்சியை அது தொடர்கின்றது. இத்தகைய ஒருமையே விஞ்ஞானம் சமயம் என்பவற்றின் குறிக்கோளாகும்.

## வேதங்கண்ட சமய இலட்சியங்கள்

ஆன்மா பரமான்மாவைப் பற்றியதாயும் சமய சம்பந்தமாயு
முள்ள எல்லாவித கருத்துகளுமே நமக்கு மிகவும் முக்
கியமானவை. சங்கிதையை எடுத்துக்கொண்டு பார்ப்போம்.
பழைய துதிப் பாடல்களை ஒன்று சேர்த்துத் தொகுக்கப்பட்டது
அது ; ஆரியர்களின் பழைமையான இலக்கியம் ; உண்மையில்
உலகிலேயே மிகப் பழைமையான இலக்கியம் என்றுகூடச்
சொல்லலாம். அதைவிடப் பழைமையான இலக்கியம் ஏதோ
அரை குறையாகச் சிறிது இருக்கலாம். ஆனால், இலக்கியம் என்று
கருதக்கூடிய நூல்கள் ஒன்றுமே இல்லை. தொகுத்துப் புத்தகமா
கச் சொல்லக்கூடிய தொன்மையான புத்தகம் அது ஒன்றுதான்.
அப்புத்தகத்திலேதான் ஆரியர்களுக்கு முதன்முதல் ஏற்பட்ட
உணர்ச்சிகள், அவர்களுடைய உயர்தர ஆசைகள், அவர்கள்
பழக்க வழக்கங்களைப் பற்றி எழுந்த கேள்விகள் யாவும் சித்திரிக்
கப்பட்டிருக்கின்றன. தொடக்கத்திலேயே ஒரு நூதனமான
கருத்து நமக்குப் புலப்படுகிறது. அப்பாடல்கள் தேவர்கள் என்று
கூறப்படும் வெவ்வேறு தேவதைகளைத் தோத்திரம் செய்பவை
யாய் அமைந்திருக்கின்றன. இவ்வாறு தோத்திரம் செய்யப்பட்ட
தேவர்கள் இந்திரன், வருணன், மித்திரன், பர்ஜன்யன் முதலிய
அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். பலவிதமான புராண தேவதை
கள் நம் நினைவுக்கு வருகின்றன. புவியில் மழை பெய்யவொட்டா
மற் செய்த அரவத்தைத் தன் வச்சிராயுதத்தால் கொன்று வீழ்த்தி
யவன் இந்திரன். அரவம் மடிந்ததும் மழை பொழிகின்றது. மக்
கள் மகிழ்ச்சியடைந்து இந்திரனை வழுத்துகின்றார்கள். வேள்வித்
தீயை வளர்த்துச் சில விலங்குகளைக் கொன்று அத்தீயில் சமை
யல் செய்து அம்மாமிசத்தை இந்திரனுக்கு வழங்குகின்றார்கள்.
இதைத் தவிர, சோமா என்றொரு கொடியும் இருந்தது. அது
என்ன கொடி என்பது ஒருவருக்கும் தெரியாது. அது இப்
பொழுது அடியோடு மறைந்துபோய்விட்டது. ஆனால், அதைக்
கசக்கியதால் உண்டாகிய பால் போன்ற ஒருவித ரசத்தைப்
புளிக்க வைத்திருப்பார்கள் என்பது அப்புத்தகத்திலிருந்து
தெரியவருகிறது. புளித்துப்போன அந்தச் சோம ரசமானது
போதையை உண்டாக்கக்கூடியது என்பதும் நூலில் காணப்படு
கிறது. அதை மக்கள் இந்திரனுக்கும் மற்றுமுள்ள தேவதைகளுக்

கும் அளித்துவிட்டுத் தாங்களும் அருந்தினார்கள். சில சமயம் அவர்கள் கொஞ்சம் மிகுதியாக அருந்திவிடுவார்கள். தேவதைகளும் இதேமாதிரியே செய்துவிடுவார்கள். இந்திரன் சில சமயம் மிதமிஞ்சிப் பருகி அம்மயக்கத்தில் சம்பந்தமில்லாமல் பிதற்றியதாகக்கூடப் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது. வருணனும் இப்படித்தான். அவன் மிகவும் சத்தி வாய்ந்த தேவதை. தன் பத்தர்களை இந்திரனைப் போலவே காப்பாற்றுவான். அவர்களும் சோமரசத்தை அவனுக்கு அளித்துத் தோத்திரம் செய்கின்றார்கள். இப்படியே ஒவ்வொரு தேவதையும் செய்வதாகக் காணப்படுகிறது. ஆனால், மற்றப் புராணக் கதைகளைவிட, இந்தச் சங்கிதையிலுள்ள புராணக் கதைகள் முற்றிலும் வேறுவிதமாயிருப்பது போல ஓர் எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. அது என்னவெனில், இந்தத் தேவதைகள் ஒவ்வொருவரையும் பற்றிக் கூறும்பொழுது கூடவே பரமான்மா ஒருவர் இருப்பதாக ஓர் எண்ணமும் சேர்ந்திருப்பதுதான். இந்தப் பரமான்மாதான் சில சமயம் உடலற்ற ஆதித்தியன் என்று சித்திரிக்கப்படுகின்றார். · இன்னும் சில சமயங்களில் எல்லாத் தேவதைகளுமே பரமான்மாவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சான்றாக இந்திரனை எடுத்துக்கொள்ளுங்கள். சில நூல்களில் இந்திரனுக்கு உடல் இருக்கிறது. அவன் ஆற்றல் படைத்தவனாயிருக்கிறான்; தங்கக் கவசமணிந்து இப்புவிக்கு வந்து உறைந்து பேய்களையும் அரக்கர்களையும் கொல்வதாகவும் மொழியப்பட்டிருக்கிறது. இந்திரனை மிக உயர்ந்த இடத்தில் வைத்து எல்லா அறிவுடையவனாயும் எல்லா ஆற்றல் படைத்தவனாயும் ஒரு தோத்திரப் பாடல் போற்றுகிறது. இந்திரன் மன்னுயிர் உள்ளங்களையும் அறிந்தவனாயிருக்கிறான். வருணதேவனும் இம்மாதிரிதான். இந்திரன் முன்பு இருந்தது போலவே, அவனும் உலகத்திற்குத் தலைவனாயிருக்கிறான். திடீரென்று அவனும் உயர்ந்த இடத்தையடைந்து எல்லாம் அறிந்தவன், எல்லா ஆற்றலும் படைத்தவன் என்று போற்றப்படுகின்றான். அந்த வருண பகவானைப் பற்றிய ஓர் உயர்ந்த தோத்திரத்தைப் படிக்கிறேன். அதைக் கேட்டபிறகு நான் கூறியது உங்களுக்கு விளங்கும். அது ஆங்கிலக் கவிதையாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதை அப்படியே படிப்பது நலமாம்.

விண்ணிறையோன் அணியன்போல் மிகுவலியால்
நம்செயலை விழியாற் காண்பான்;
மண்ணவர்தம் செயல்மறைத்து மகிழ்வுறினும்
செயல்யாவும் வயங்கும் தேவர்க்(கு);

எண்ணியெவன் நின்றிடினும் இயங்கிடினும்
மறைவிலிடம் இகந்திட் டாலும்
கண்ணரிய தனியறையிற் கரந்திடினும்
கடவுளர்தாம் காண்பர் யாவும்.
சதியிருவர் சூழ்தோறும் தனியிடமாக்
கருதிடினும் சார்வ ராங்கே;
மதிவருண மன்னர்மூன் ருமவராய்ச்
சூழ்ச்சியெல்லாம் வதிந்து தேர்வார்;
பதியவரே வரம்பற்ற பரந்துளவா
னங்கட்கும் பாரி னுக்கும்;
அதிருமிரு கடல்துன்னும் அவரகத்தே;
சிறுகுட்டை அவரது இல்லம்.
விண்ணினின்றும் அப்பாலே வெகுதொலையும்
பறந்துசெல விழைவோ னேனும்
திண்ணமவன் வருணமன்னர் செறுபிடிக்குத்
தப்பியெங்கும் செல்ல மாட்டான்;
மண்ணிடையே வானிழிந்து வந்தஅவர்
ஒற்றரெங்கும் வழுக்கிச் செல்வர்;
நண்ணுமவர் ஆயிரங்கண் ஞாலவரம்
படைந்தறியும் நடக்கும் யாவும்.

மற்றத் தேவைகளைப் பற்றியும் இவ்வண்ணமே சான்றுகளைக் கொண்டு நாம் தெரிந்துகொள்ளலாம். ஒவ்வொருவராய் வந்து ஒரே விதமான முடிவைத்தான் அடைகின்றனர். முதலில் அவர்கள் தேவதைகளாய் இருக்கிருர்கள். பிறகு இந்தப் பிரபஞ்சம் முழுவதும் எவனிடம் உறைந்திருக்கிறதோ, எவன் இப்பிரபஞ்சத்திற்குத் தலைவனுய் அனைவர் உள்ளத்தையும் அறிகிருனோ, அவனது இடத்திற்கு உயர்த்தப்படுகிருர்கள். வருண தேவன் விஷயத்தில் மற்ரெரு கருத்துத் தோன்றியது. ஆனல், அது தோன்றுவதற்குள் ஆரியரின் உள்ளம் அதை உடனே அடக்கிவிட்டது. அதுதான் அச்சம் என்பது. மறை நூலில் ஓரிடத்தில் பாவம் செய்துவிட்டோம் என்று பயந்து அவர்கள் வருணனை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்வதாகக் காணப்படுகிறது. இத்தகைய கருத்துகள் இந்த இந்திய மண்ணில் தோன்றி வளர இடம் பெருமலேதான் இருந்தன. ஏன் என்பது பிறகு உங்களுக்கு விளங்கும். ஆனல், பாவம் அச்சம் இவைகளின் விதைகள் மண்ணில் ஊன்றி முளை விடத் தொடங்கின. இக்கருத்துதான் ஒரே கடவுள் வழிபாடு என்று கூறப்படுகிறது. அது உங்கள் யாவருக்கும் தெரியும். நீண்ட

காலத்திற்கு முன்பே இது இந்தியாவுக்கு வந்து சேர்ந்துவிட்டது. சங்கிதை முழுவதும் இந்தக் கருத்துதான் மிளிர்கின்றது. ஆனால், ஆரியர்களுக்கு அது திருப்தியையளிக்கவில்லை என்பது தெரியவரும். அறிவு வளர்ச்சியற்ற ஒரு பழைய கருத்து என்று அவர்கள் அதை ஒதுக்கிவிட்டு, இந்தியர்களாகிய நாங்கள் நினைப்பது போல நினைக்கத் தொடங்கினார்கள். வேதங்களைப் பற்றியும் அவைகளிலுள்ள குற்றம் குறைகளைப் பற்றியும் ஐரோப்பியர்கள் எழுதியுள்ள நூல்களைப் படிக்கும் பொழுது பழைய கருத்துகளே அவற்றில் முற்றிலும் நிறைந்திருப்பதைக் காண இந்து ஒருவனுக்கு முறுவல் தோன்றத்தான் செய்யும். உருவமுள்ள கடவுளையே மிக உயர்ந்த கருத்தாகப் போற்றுபவர்கள், இந்தப் பண்டைய இருடிகள் தத்துவ விசாரம் செய்த நெறியில் செல்லத் துணியாதது நியாயமே. ஏனெனில், ஒரே தெய்வம் என்ற கருத்து நிரம்பிய சங்கிதையைப் படித்ததும், ஆரியர்கள் அக்கருத்துத் தத்துவ விசாரம் செய்யும் அறிஞர்களுக்கு ஏற்றதன்று என்று எண்ணி, மேலும் உயர்ந்ததான தத்துவத்தை நாடப் பாடுபட்டார்கள் என்பது அவர்களுக்கு விளங்குகிறது. அது மிகுந்த மனிதத்தன்மையோடு கூடியதென அவர்களுக்குத் தோன்றிற்று. ஆயினும், 'இப்பிரபஞ்சம் முழுவதும் அவனிடமே உறைகின்றது. எல்லோருடைய உள்ளங்களிலும் அவனே குடிகொண்டிருக்கிறான்,' என்றெல்லாம் அவர்கள் சித்திரித்தார்கள். இந்தியர்கள் மிகவும் துணிவுள்ளவர்கள்; அச்சமின்றிச் சிந்திப்பவர்கள். அவர்கள் கருத்தின் ஒரு சிறு பொறி மேல் நாட்டுத் தீரர்களான அறிஞர்கள் என்று கருதப்படுபவர்களுக்கும் அச்சத்தை உண்டாக்குகிறது. பேராசிரியர் மாக்ஸ்முல்லர் என்பவர், 'இந்தச் சிந்தனையாளர்கள் மிகுந்து மேலே போய்விட்டார்கள். இவர்களால் மட்டுமே அவ்விடத்தில் மூச்சுவிட இயலும். மற்றவர்கள் மூச்சு விட இயலாமல் திணறிப்போய்விடுவார்கள்,' என்று மிகச் சிறப்பித்து மொழிந்துள்ளார். இந்த ஆன்ம வீரர்கள் தங்கள் அறிவுக்குத் தக்கனவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்தார்கள். இதனால் தாங்கள் இதுகாறும் கொண்டுள்ள நம்பிக்கைகள் எல்லாம் சிதைந்துபோனாலும், அவர்கள் பொருட்படுத்தவில்லை. சமூகம் தங்களைப் பற்றி என்ன நினைக்குமோ, என்ன பேசுமோ என்று கூட அவர்கள் அல்லற்படவில்லை. தங்கள் அறிவால் ஆராய்ந்து தக்கது என்று பட்டதையே எடுத்துக் கூறி அவர்கள் ஓதினார்கள்.

வேத காலத்து இருடிகளின் ஆராய்ச்சியைப் பற்றிக் கூறு முன், வேதங்களிலுள்ள இரண்டொரு நூதனமான விஷயங்

களை எடுத்துக்கொண்டு பார்ப்போம். இந்தத் தேவதைகளுள் ஒவ்வொருவரும் படிப்படியாய் உயர்ந்து முடிவில் பிரபஞ்சத்துக்கு அதிபதியான பரமான்மாவாகவே கருதக்கூடிய நிலையை அடைகிறார்கள் என்பதை விளக்கியாக வேண்டும். இந்தியர்கள் விஷயத்தில் இது புதிதாயிருப்பதால், பேராசிரியர் மாக்ஸ்முல்லர் இதற்கு ஒரு புதிய பெயரை அளித்திருக்கிறார். "Henotheism" என்பது அந்தப் பெயர். நாம் அதற்கு விளக்கம் தேட வேண்டுவதில்லை. மறைநூலில் அது இருக்கிறது. இந்து புராணக் கதைகள் மற்ற நாட்டுக் கதைகளைக்காட்டிலும் ஏன் இவ்வளவு வேறுவகையாயிருக்கின்றன என்ற கேள்வி எழுகின்றது அல்லவா? பாபிலோனிய, கிரேக்க புராணக் கதைகளில் ஒரு தேவதை முயன்று உயர்ந்த இடத்தை அடைந்து நின்றதும், மற்றத் தேவதைகள் எல்லாம் மறைந்து போய்விடுகிறார்கள். மோலக்கர் யாவரிலும் ஜிகோவா உயர்ந்து முதன்மையானவுடன் மற்றவர்கள் எல்லோரும் நினைவை விட்டு அடியோடு அகன்றுவிடுகிறார்கள். கிரேக்க தேவதைகள் விஷயத்திலும் இப்படியேதான். இஸ்யூஸ் பெரியவனாகி உயர்நிலையையடைந்து பிரபஞ்சத்துக்கெல்லாம் ஒரே கடவுளாய்விடுகிறான். மற்றத் தேவதைகள் வெறுஞ்சிறிய தேவதைகளாகிறார்கள். பிற்காலத்திலும் இவ்வண்ணமாய்த்தான் நடந்தது. பௌத்தர்களும் ஜைனர்களும் மதாசாரியர்களுள் ஒருவரையே கடவுளாக ஏற்றிவைத்துவிட்டு, மற்றத் தேவர்களைப் புத்தருக்கும் ஜைனருக்கும் உட்பட்டவர்களாகச் செய்துவிட்டார்கள். உலக முழுவதும் இப்படியேதான் எல்லாம் நடத்துவந்திருக்கின்றன. இதற்கு ஒரே ஒரு விலக்குதான் காணப்படுகிறது. ஒரு தேவதையைப் புகழ்ந்து ஏற்றிவைத்ததும், இக்காலம் அத்தேவதைக்குக் கீழ்ப்படிந்து மற்ற தேவதைகள் நடப்பதாகக் கூறப்படுகிறது. வருணன் எந்தத் தேவதையைத் தோத்திரம் செய்து மேல் இடத்திற்கு ஏற்றிவைத்தானோ, அதே வருணனே அதே உயர்ந்த இடத்தையடைகிறான் என்று வேதத்தின் மற்றொரு பகுதி பகர்கின்றது. அவர்கள் இருவரும் ஒருவருக்குப்பின் ஒருவர் அதே உருவமுள்ள கடவுளின் பதவியைப் பெறுகிறார்கள். புத்தகத்தில் அதற்குச் சமாதானம் காணப்படுகிறது. அது மிகவும் உயர்ந்த ஒரு சமாதானம். அதுதான் இந்தியாவில் வருங்காலச் சிந்தனைகளுக்கெல்லாம் பொருளாயிருக்கிறது. உலகிலுள்ள சமயங்களுக்கெல்லாம் அதுவே பொருளாகும் என்றும் கூறலாம். 'ஏகம் ஸத்; விப்ரா பகுதா வதந்தி—உள்ளது ஒன்றுதான்; ஞானிகள்

அதைப் பல பெயர்கள் இட்டு வழங்குகிருர்கள்.' இந்தத் தேவதைகளைப் பற்றித் தோத்திரப் பாடல்கள் இயற்றும்பொழுது கண்டு உணர்ந்தது ஒரே தெய்வந்தான். கண்டவன் தான் பலவாருகக் கூறியவன். தோத்திரப் பாடகன், கவிஞன், அறிஞன் ஆகியவர்கள் வெவ்வேறு மொழிகளையும், சொற்களையும் கொண்டு ஒரே தெய்வத்தைப் போற்றி இசைத்துள்ளார்கள். 'உள்ளது ஒன்றே. ஞானிகள் அதைப் பல பெயர்கள் கொண்டு வழங்குகிருர்கள்,' என்னும் சொற்ருெடரிலிருந்து பெரிய விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. 'இந்திய தேசம் ஒன்றிலேதான் சமயசம்பந்தமான கொடுமைகள் நடக்கவில்லை; ஒரு மனிதனுடைய மத நம்பிக்கைக்கும் முறிவு விளையவில்லை,' என்ருல், உங்களுள் சிலர் மிகவும் வியப்படைவீர்கள். ஆத்திகன், நாத்திகன், அத்துவைதி, துவைதி ஆகிய எல்லோரும் அங்கே ஒரு தீங்கும் இல்லாமல் இன்பமாய் வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள். லோகாயதர்கள் பிராம்மணர்களின் கோயில்களின் படிகளில் நின்று, தேவர்களுக்குப் பகையாய்ப் ப்ரமான்மாவையே பழித்துப் பேச அனுமதிக்கப்பட்டார்கள். 'கடவுள் என்பதே ஒரு மூட நம்பிக்கை; தேவதைகள், வேதங்கள், சமயம் எல்லாமே தம்முடைய நலத்திற்காக வைதிகர்கள் புனைந்த கதைகள்,' என்றெல்லாம் நாடு முழுவதும் பழித்துப் பேசி வந்தார்கள். அவர்களை யாரும் ஒன்றும் செய்யவில்லை. ஆகவே, சென்ற இடமெல்லாம் புத்தர் இந்தியருக்கு மிகவும் புனிதமான ஒவ்வொன்றையும் பழித்துக் கீழே தள்ள முயன்ருர். நீண்ட ஆயுள் வாழ்ந்துதான் புத்தர் இவ்வுலகம் நீத்துச் சென்ருர். கடவுள் என்ருல் சிரித்துப் பரிகசித்த ஜைனர்களும் அப்படித்தான். 'கடவுள் என்று ஒருவர் எப்படி இருக்க முடியும்? அது வெற்று மூட நம்பிக்கையே,' என்ருர்கள் அவர்கள். இப்படியே எவ்வளவோ சான்றுகள் இருக்கின்றன. முகம்மதியர்கள் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பு சமய சம்பந்தமான கொடுமை என்ன என்பது ஒருவருக்கும் தெரியாது. வேற்று நாட்டவர்கள் தங்களுக்கே ஏதோ தீங்கிழைத்துக்கொண்டதாகவே இந்தியர்கள் கருதினுர்கள். கிறித்தவர்களின் மாதா கோயில்களைக் கட்டுவதற்கு இந்தியர்கள் எவ்வளவு உவகையுடன் உதவி செய்திருக்கிருர்கள் என்பது இப்பொழுதுகூட நன்ருகத் தெரிகின்றதல்லவா? குருதிக் குட்டைகள் ஒரு போதும் ஏற்பட்டதில்லை. இந்தியாவிலுள்ள வைதிகச் சமயத்திற்குப் புறம்பாயுள்ள சமயங்கள்கூடத் தாக்கப்படவில்லை. சான்ருக, புத்த மதத்தைப் பார்ப்போம். சில விஷயங்களில் புத்த சமயம் மிக உயர்ந்த

சமயம் என்று கூறலாம். ஆனால், அதை வேதாந்த மதமாக நினைப்பது பொருளற்றது. கிறித்தவ மதத்திற்கும் சமயப்பணிப் படைக்குமுள்ள வேற்றுமையை யாரும் கண்டுகொள்ளலாம். புத்த மதத்தில் மிகச் சிறந்த பொருள்கள் இருக்கின்றன. ஆனால், அவைகளைத் தக்க முறையில் பேணிக் காப்பாற்ற ஆற்றலற்றவர்களின் கைகளை அவை அடைந்தன. பெரிய தத்துவ ஞானிகளிடமிருந்து கிடைத்த மாமணிகள் சாதாரணச் சந்தைக்கூட்ட மக்களின் கைகளிற் சிக்கின. உலக நன்மையை நல்கும் உற்சாகத்தோடு கூடிய மிக உயர்ந்த எண்ணங்கள் புத்த சமயத்தில் இருந்தன. ஆனால், எதையும் விழிப்புடன் காக்கக்கூடிய அறிவும் சிந்தனையுங்கூட இருக்க வேண்டும் அல்லவா? உலகத்திற்குப் பகை விளைவிக்கும் கருத்துகள் சாதாரண மக்களிடம் சிக்கிவிட்டால், அவை உடனே கீழ்த்தரமாய்விடும் என்பதை நாம் கண்டுகொள்ளலாம். படிப்பும் அறிவுந்தான் எல்லாவற்றையும் அழியாமற் காப்பாற்றுகின்றன. உலகில் முதன்முதல் பிரசாரம் செய்வதற்காகப் புத்த மதந்தான் அப்பொழுது நாகரிகமுள்ள நாடுகள் என்று கருதப்பட்ட இடங்களிலெல்லாம் புகுந்து பரவிற்று அதற்காக ஒரு துளிக் குருதியும் கீழே சிந்தவில்லை. சீன நாட்டில் புத்தமதப் பிரசாரகர்கள் எவ்வளவு கொடுமைக்குள்ளானார்கள் என்பதையும், சீனச் சக்கரவர்த்திகள் ஒருவர் பின் ஒருவராய் ஆயிரக்கணக்கானவர்களை எப்படிக் கொன்று குவித்தார்கள் என்பதையும் நாம் புத்தகங்களிலிருந்து தெரிந்துகொள்ளுகிறோம். அதன் பின் பௌத்தர்களுக்குச் சிறிது நல்ல காலம் பிறந்தது. சீனச்சக்கரவர்த்தி ஒருவர் பௌத்தர்களைத் துன்புறுத்தியவர்களைப் பதிலுக்குத் துன்புறுத்துவதாக வஞ்சினம் கூறவே, அந்தப் புத்த சமயப்பணியாளர்கள் அதை மறுத்துவிட்டார்கள். எல்லாம் இந்த ஒரு வாக்கியத்தின் பயன்தான். அதனாலேதான் நீங்கள் அதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன். 'இந்திரன், மித்திரன், வருணன் என்னும் பெயர் உடையவர் எல்லாரும் ஒருவரே. ஞானிகள் அவரைப் பல பெயர்களிட்டு வழங்கினார்கள்,' என்பதே அந்தச் சொற்றொடரின் பொருளாகும். அது எப்பொழுது எழுதப்பட்டது என்பது ஒருவருக்கும் தெரியாது. இக்கால ஆராய்ச்சியாளர்கள் என்ன வேண்டுமானாலும் மொழியட்டும். அது 8000 ஆண்டுகளுக்கு முன்பு இருக்கலாம்; அல்லது 9000 வருடங்களுக்கு முன்பும் இருக்கலாம். இந்தச் சமய சம்பந்தமான ஆராய்ச்சிகள் எல்லாம் அண்மையில் ஏற்பட்டனவல்ல.

ஆனால், இவைகள் எழுதப் பட்டபொழுது இருந்தது போலவே இன்றும் இளமை மாருமலிருக்கின்றன; முன்னிலும் புதியனவாயிருப்பதாகவே கூறலாம். ஏனெனில், அப்பண்டைய காலத்தில் இப்பொழுது நாம் நினைப்பதுபோல மனிதன் அவ்வளவு நாகரிகம் படைத்தவனுய் இல்லை; ஒரு பொருளைப்பற்றி ஏதோ சிறிது வேறு வண்ணமாய் நினைத்ததற்காகச் சகோதரன் போன்றவனை ஒழித்து விடவேண்டும் என்று எண்ணம் கொள்ளவில்லை. அரக்க இயல்பை அடைந்து, சகோதரர்கள் போன்றவர்களையே கொன்று, உலகத்தைக் குருதி வெள்ளக்காடு ஆக்கவில்லை. மக்கள்மீது காட்டும் பரிவின் பெயரால் கணக்கில்லாத மக்களைக் கண்ட துண்டமாக வெட்டிக் குவிக்கவில்லை. ஆகையாலேதான் இவ் வாக்கியம் அக்காலத்தைக்காட்டிலும் இன்று இன்னும் புதிதாய் உயிரளிக்கும் வாக்கியமாய் விளங்குகின்றது. உண்மையாக இருப்பது ஒன்றே! ஞானிகள் அதைப் பல பெயர்கள் கொண்டு வழங்குகிருர்கள். உலகிலுள்ள எல்லா மதங்களும், அது இந்து மதமோ, புத்தமதமோ, முஸ்லீம், அல்லது கிறித்தவ மதமோ, எந்த மதமாயினும் சரி; அனைத்துக்கும் கடவுள் ஒருவரே? அக் கடவுளைப் பழிப்பவன் தன் கடவுளையே பழிப்பவனுவான் என்று முறையிடுகின்றன. அவர்கள் இந்த முடிவுக்குத்தான் வந்தார்கள். இந்த ஒரே கடவுளை வழிபடுவதென்பது இந்தியர்களின் மனத் திற்குத் திருப்தியையளிக்கவில்லை. அதில் முழு விளக்கமும் இல்லை. தூலமான இப்பிரபஞ்சத்திற்குக் காரணம் தெரியவில்லை. பிரபஞ்சத்தை ஆளுபவர் பிரபஞ்சத்திற்கே காரணமாக முடியுமா? பிரபஞ்சத்திற்குத் தலைவர் பிரபஞ்சத்திற்கே காரணமாக முடியா தென்ருல். அதற்கு வெளியிலுள்ள ஒருவர் காரணமாவது எப்படி? அவர் ஒழுக்கத்திற்கு வழிகாட்டியாயிருக்கலாம்; யாவரையும்விட மிகவும் சத்தியுள்ளவராயிருக்கலாம். ஆனால், அதைக்கொண்டு பிரபஞ்சத்திற்குச் சமாதானம் கூற முடியாது. ஆகவே, முதன் முதல் எழும் பெரிய பிரச்சினை பிரபஞ்சத்தைப் பற்றியதே! "இப்பிரபஞ்சம் எங்கிருந்து உண்டாயிற்று? எப்படி உண்டா யிற்று? இது எவ்வாறு நிலைத்திருக்கிறது?" என்னும் கேள்விகள் எழுகின்றன. இதைப்பற்றிப் பற்பல பாடல்கள் காணப்படு கின்றன. கீழ் வருமாறு கவிதை உணர்ச்சியோடு அது வெகு அழகாய் விவரிக்கப்பட்டிருக்கிறது:

"அங்கே ஒன்றும் இல்லை; ஒன்றுமில்லாமலுமில்லை; வானம் இல்லை, காற்று இல்லை; ஒன்றுமே இல்லை. அனைத்தையும் எது மூடியிருந்தது? எல்லாம் எங்குத் தங்கி இருந்தன? இறப்பு

இல்லை ; இறவாத நிலையுமில்லை. பகல் இரவாகி இரவு பகலாகும்
மாற்றமும் இல்லை.'' மொழிபெயர்ப்பில் கவிதையின் அழகு
மிகவுங் குன்றிக் குறைந்துவிடுகிறது. ''இறப்பு இல்லை. இற
வாத நிலையுமில்லை. பகல், இரவு என்ற மாறுதலுமில்லை.'' வட
மொழியின் ஓசையே இச்சொற்களில் இன்னிசை போன்று ஒலிக்
கின்றது. ''அந்த ஒரு சிறு காற்று, அந்த மறைவு, கடவுள்
என்ற தத்துவம் மட்டும் இருந்தது. ஆனால், அது அசையத்
தொடங்கவில்லை.'' அசைவற்றிருந்தது என்ற கருத்தை நாம்
நினைவில் வைத்துக்கொள்வது நல்லது. ஏனெனில், இக்கருத்தே
பிறகு வளர்ந்து பரவி இப்பிரபஞ்சம் முழுவதும் ஒரே சலனமா
யிருக்கிறது என்னும் இந்தியர்களின் தத்துவ ஆராய்ச்சிக்குக்
காரணமாகிறது. இந்தச் சலன அலைகளானவை குறைந்து
கொண்டே வந்து, மிகவும் நுட்பமாகி, இலேசான நிலையில் சிறிது
காலம் இருப்பதாகக் கூறும் சமயங்களும் உண்டு. மேற்கூறிய
பாடலில் இந்த நிலைதான் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. அது
சற்றும் சலனமில்லாமல் இருந்தது. படைப்புத் தொடங்கும்
பொழுது அது சலிக்க ஆரம்பித்தது. இப்பிரபஞ்சம் முழுவதும்
அதினின்றும் உண்டாயிற்று. ஒன்றையுஞ் சாராத அமைதியாய்
உள்ள அந்த ஒரே ஆன்மா திகழ்ந்தது. அதற்கு அப்பால் வேறு
ஒன்றுமில்லை.

''முதலில் எங்கும் ஒரே இருள்.'' இந்தியாவிலோ, வேறு
வெப்பமுள்ள நாடுகளிலோ உங்களில் யாராவது திடீரென்று
வானம் இருண்டு மழை பொழிவதைப் பார்த்திருந்தால்தான் இச்
சொற்களின் பெருமை விளங்கும். மூன்று மகாகவிகள் இதைச்
சித்திரிக்க முயன்றது என் நினைவுக்கு வருகிறது. ''வெளிச்சம்
இல்லை. ஆனால், கண்ணுக்குப் புலனாகின்ற செறிந்த இருள்
உண்டு,'' என்கிறார் மில்டன் என்னும் கவிஞர். ''ஊசியினால்
துளைக்கக்கூடிய இருள்'' என்று காளிதாசர் மொழிகின்றார்.
வேதத்தில் காணும் இந்த வருணனைக்கு ஒன்றும் ஒப்பாகாது.
''இருளிலே மறைந்து கிடக்கும் இருள்'' எங்கும் வறண்டு
கிடக்கின்றது. உலகம் முழுதும் வெப்பத்தால் அல்லற்பட்டுக்
கொண்டிருக்கிறது. இப்படியே பலநாட்கள் தேய்கின்றன. ஒரு
நாள் பகல் வானத்தின் எங்கோ ஒரு மூலையில் ஒரு சிறு மேகம்
தோன்றுகிறது. சிறிது நேரத்திற்குள் அது முழுவதும் பரவி
விடுகின்றது. இருண்ட முகில்கள் ஒன்றன்மேலொன்று வந்து
குவிந்துகொண்டு ஒரே வெள்ளமாய்ப் பொழிகின்றன. படைப்
பானது சங்கற்பத்தினின்றும் பிறப்பதாகச் சொல்லப்பட்டது.

முதலில் எது இருந்ததோ, அது பிறகு சங்கற்பமாய் மாறிற்று. அந்தச் சங்கற்பமே பிறகு ஆசையாய்த் தோற்றமளித்தது. இந்த ஆசை என்பதுதான் எல்லாவற்றிற்கும் காரணம் என்று மொழியப்படுவதால், நாம் இதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தச் சங்கற்பம் என்பதுதான் புத்த மதத்திற்கும், வேதாந்த மதத்திற்கும் மையக் கல்லாய் இருக்கின்றது. இது பிறகு ஜெர்மானியர்களின் தத்துவ நூல்களிலும் புகுந்து ஷோபனேர் என்பவருடைய தத்துவ விசாரக் கொள்கைகளுக்கு ஆதாரமாயிருக்கின்றது. இங்குதான் முதலில் நாம் அதைத் தெரிந்துகொள்ளுகிறோம்.

"ஆசை என்பது முதன்முதலில் மனத்தில் முளைத்தெழுந்தது. அறிவைக்கொண்டு தங்கள் உள்ளங்களில் தேடிய ஞானிகள் 'சத்து' 'அசத்து' என்னும் இவ்விரண்டிற்கும் இடையே உள்ள பந்தத்தைக் கண்டுகொண்டார்கள். அந்தப் பரமபுருடன் கூட ஒருகால் அறியமாட்டான்," என்று கவிஞர் புதுவிதமான கருத்துடன் கூறி முடிக்கிறார். இந்தக் கவிதையினின்றும் பிரபஞ்சத்தைபற்றிய கேள்வி மிகப்பெரிதாகி அதைப்பற்றிய இந்த ஞானிகளின் சிந்தனையும் வளர்ந்துகொண்டே வந்ததால், வேறு விதமான சாதாரண சமாதானமொன்றும் அவர்களுக்குத் திருப்தியளிப்பதாயில்லை என்பது நமக்குத் தெரியவருகின்றது. பிரபஞ்சத்தைக் காத்தளிக்கக் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பது கூட அவர்களுக்குத் திருப்திகரமாயில்லை என்பதையும் நாம் அறிகிறோம். இக்கருத்துடன்கூடிய வேறு சில பாடல்களும் இருக்கின்றன. இப்பிரபஞ்சம் எப்படி உண்டாயிற்று என்பதும், இதற்குத் தலைவன் ஒருவனைத் தேடிப்பார்க்கும் பொழுது, ஒவ்வொரு தேவதையாய் அவ்வுயர்ந்த தானத்தில் ஏற்றி வைத்தார்கள் என்பதும் அப்பாடல்களில் காணப்படுகின்றன. ஆகவே, ஏதோ ஒரு கருத்தை எடுத்துக்கொண்டு, அதை மிகவும் விரிவாக்கி, முடிவில் இப்பிரபஞ்சம் முழுவதற்கும் காரணமாயிருக்கிறது அது ஒன்றே என்று பாடல்கள் இசைக்கின்றன. ஆதாரத்திற்காக எடுத்துக்கொண்ட கருத்தில் உலக முழுவதும் தங்கி நிலைத்திருப்பதாகின்றது. பிறகு அந்த ஆதாரமே எல்லாம் என்பது ஏற்படுகின்றது. பலவேறு கருத்துகளையும் அவர்கள் இந்த முறையிலே ஆராய்ச்சி செய்தார்கள். உயர்ந்த தத்துவமாகிய பிராணனும் இம்மாதிரி விரிவாகப்பெற்று முடிவில் எங்கும் நிறைந்ததாயும் எல்லையற்றதாயும் இலங்கிற்று. இந்தப் பிராணன் தான் எல்லாவற்றையும் தாங்கும் சத்தியாயிருக்கிறது.

இந்த மனித உடலைமட்டும் இது தாங்கவில்லை. ஞாயிறு மதி இவற்றிலுள்ள ஒளி இதுதான். அனைத்தையும் இயக்கும் சத்தி இதுவே. சில விஷயங்கள் மிகவும் கவின்பெறக் கவிதை உணர்ச்சியோடு சித்திரிக்கப்படுகின்றன. "வனப்பு வாய்ந்த காலைப் பொழுதையும் அவனே நமக்கு அனுப்புகிறான்,'' என்பது போன்ற வரிகள் ஓர் இனிய கீதம் போலவே ஒலிக்கின்றன. முதன்முதல் படைப்புக்குக் காரணமான ஆசையானது தோன்றி விரிவடைந்து, பிறகு கடவுளே ஆயிற்று. ஆயினும், இக்கருத்துகள் எல்லாம் முழுத் திருப்தியை அளிக்கவில்லை. இக்கருத்தை மேலும் மேலும் உயர்த்தி இதற்குக் கவர்ச்சியான ஓர் உருவத்தையும் அளித்தார்கள். "தொடக்கத்தில் அப்பரமான்மா ஒருவர் தாம் உண்டு. அவரே இப்பிரபஞ்சம் அனைத்திற்கும் தலைவராயுள்ளவர். இப்பிரபஞ்சத்தைத் தாங்கி நிற்பவர் அவரே. ஆன்மாவுக்கும், ஆற்றலுக்கும் காரணமாயுள்ள எவரை எல்லாத் தேவைகளும் வழிபடுகின்றார்களோ, எவருடைய நிழல் பிறப்பும் இறப்புமாய்க் காட்சி அளிக்கின்றதோ, அவரை விட்டு வேறு யாரை நாம் இறைஞ்ச முடியும்? எவருடைய சிறப்பைப் பனி படர்ந்த இமயச் சிகரங்களும் எல்லையற்ற நீர்ப் பெருக்கையுடைய மாபெருங் கடல்களும் முரசடிக்கின்றனவோ, அவரை விட்டு வேறு யாரை நாம் வழுத்த முடியும்?'' இப்படி அவர்கள் சித்திரித்தார்கள். ஆயினும், அவர்களுக்குத் திருப்தி பிறக்கவில்லை.

கடைசியாக ஒரு நூதனமான நிலை ஏற்படுவதைக் காண்கிறோம். ஆரியர்கள் இந்த பிரச்சினைக்கு நீண்ட காலமாக வெளியிலிருந்து ஒரு சமாதானத்தைத் தேடிக்கொண்டிருந்தார்கள். மதி, ஞாயிறு, விண் மீன்கள் ஆகிய யாவற்றையும் அவர்கள் ஆராய்ந்து பார்த்தார்கள். இயற்கையிலிருந்து பிரபஞ்சத்திற்குத் தலைவராயுள்ளவர் உருவமுள்ள ஒருவரே என்பதுதான் அவர்கள் தெரிந்து கொள்ள முடிந்தது. அதற்குமேல் வேறொன்றும் தெரியவில்லை. சுருங்கச் சொன்னால், இவ்வுலகிலிருந்து அவர்கள் அறியக் கூடியது "சிற்பி ஒருவன்; அவன் கைகளிலிருந்து உருப்பெற்றது இப்பிரபஞ்சம்,'' என்ற கருத்து ஒன்றுதான். அது தக்க காரணங்களோடு கூடியதாயில்லை என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அப்படி நினைப்பது குழந்தைத்தனமாகவும் தோன்றுகிறது. ஆயினும், இப்பிரபஞ்சத்தை உண்டாக்க ஒருவர் வேண்டும். ஆகவே, வெளியுலகினின்றும் கடவுளைப்பற்றி நாம் இவ்வளவுதான் அறிந்துகொள்ள முடியும் என்பது தோன்றுகின்றது. ஆனால், இது பிரபஞ்சம் ஏற்படுவதற்கு ஏற்ற சமா

தானம் ஆகாது. இப்பிரபஞ்சத்தைப் படைப்பதற்கு வேண்டிய சாதனங்கள் கடவுளுக்கும் முன்பே இருந்திருக்கின்றன. அக் கடவுளுக்கும் உலகத்தைப் படைப்பதற்கு அவை தேவையாயிருந் திருக்கின்றன. இதனுல் அவர் ஓர் அளவுக்குட்பட்டவர் என்னும் பெரிய மறுப்பு உண்டாகிறது அல்லவா? வீடு கட்டுபவன் வீடு கட்டுவதற்கு வேண்டிய பொருள்கள் இல்லாமல் எப்படி வீடு கட்டு வான்? ஆகையால், அவன் அந்தச் சாதனங்களுக்குட்பட்டவனு கின்ருன். அவைகளைக் கொண்டு என்ன செய்ய முடியுமோ அதுமட்டுந்தான் அவன் செய்யக்கூடும். ஆகவே, அமைப்புத் திட்டத்திலிருந்து கிடைப்பது, இப்பிரபஞ்சத்தை ஏற்கெனவே யுள்ள சாதனங்களைக்கொண்டு படைக்கும் ஒரு மகாசிற்பி கடவுள் என்பதுதான். அவர் சுவாதீனமுள்ளவரல்லர். பிறரைச் சார்ந் திருக்கிருர். இவ்வளவுமட்டும் அவர்கள் அறிவு நின்றுவிடும். இவ்வளவோடு பலர் திருப்தியடைந்து நின்று விடுவார்கள். மற்ற நாடுகளிலும் இம்மாதிரியேதான் நடந்தது. நல்ல சிந்தனைச் சத்தி வாய்ந்தவர்கள் மேலும் மேலும் ஆராய்ந்து பார்க்க விரும்பி னுர்கள். ஆனுல், அவ்விதச் சத்தியில்லாதவர்கள் அவர்களை மேலே செல்லவொட்டாமற் தடுத்தார்கள். நற்காலமாக இந்த இந்து தேசத்து ஞானிகள் மண்டையில் அடித்துக் கருத்தைப் புகுத்தக்கூடியவர்கள் அல்லர். அவர்கள் தங்கள் கேள்விக்குச் சமாதானத்தையடைய விரும்பினுர்கள். ஆகவே, அவர்கள் உள்ளே திகழ்வதை அறியும்பொருட்டு வெளியிலிருப்பதை விட்டுச்சென்ருர்கள் என்பது தெரிகின்றது. இந்த வெளிப் பிரபஞ்சத்தை நம் கண்களையும் புலன்களையும் கொண்டு நாம் காணவில்லை என்ற விஷயந்தான் அவர்களுக்கு முதன்முதல் புலப்பட்டது. அந்தக்குறை எது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதே அவர்களுக்கு முதன்முதல் தோன்றிய எண் ணம். உடல், ஒழுக்கம் இவற்றைப்பற்றிய பொருள்களில் அக் குறை இருந்தது. "இப்பிரபஞ்சத்திற்குக் காரணம் எது என்பது நமக்குத் தெரியாது. நமக்குள் ஒரு பெரிய பிணக்கு ஏற்பட்டிருக்கிறதே! அது ஏன்? நீங்கள் புலன்களுக்கு விஷய மானவைகளைப்பற்றிப் பேசுகிறீர்கள்; சமயச் சடங்குகளோடு திருப்தியடைகிறீர்கள். நானே, இவ்வுலகங்களுக்கெல்லாம் அப் பால் உள்ள பேரான்மாவைத் தெரிந்துகொண்டிருக்கிறேன்," என்ருர் அந்த ஞானிகளுள் ஒருவர்.

ஆன்மிகத் துறையைப் பற்றிய கருத்துகள் எவ்வாறு வளர்ச்சி பெற்றன என்பதை உங்களுக்கு ஒருவாறு விளக்

கினேன். அத்துடன் வளர்ந்த மற்ருெரு பொருளைப்பற்றி நான் விரிவாக ஒன்றும் சொல்ல முடியாது. ஏனெனில் நாம் தெரிந்து கொள்ள வேண்டுவதற்கும் அதற்கும் ஒரு சம்பந்தமுமில்லை. ஆன்மிகக் கருத்துகளின் வளர்ச்சியோடு வேள்விகள் போன்ற கருமங்களும் வளர்ந்தன. பழைய மூட நம்பிக்கைகள் எல்லாம் வரவரப் பெருகி எல்லாம் முடிவில் ஒரே கர்ம காண்டமாய்ப் பரிணமித்துவிட்டன. அது மேலும் மேலும் வளர்ந்து இந்தியர்களின் வாழ்வையே பெரும்பாலும் ஒழித்துவிட்டது என்று கூறலாம். அது இன்னும் அழியாமல் எங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் பற்றிக்கொண்டு எங்களைப் பிறக்கும் பொழுதே அடிமைகளாகச் செய்துவிட்டன. ஆயினும், மிகப் பழைய காலம் முதற்கொண்டே இந்தக் கர்மங்கள் கூடாவென்று அவற்றை எதிர்த்து நிகழ்த்தி வந்துள்ள போராட்டத்தையும் அறிவோம் அல்லவா? அதைப் பற்றியுள்ள ஒரு மறுப்புண்டு: சில சமயங்களில் இப்படியேதான் ஆடை அணியவேண்டும்; இவ்விதமாய்த்தான் உணவு அருந்த வேண்டும்; வடிவங்கள் வைத்துப் பகட்டாய்ப் பூசை ஆற்ற வேண்டும் என்பன போன்ற கருமங்கள் எல்லாம் வெளிப்படையான செயல்களே யாகும். ஏனெனில், புலன்களுக்கு விஷயமானவற்றைக் கொண்டு திருப்தியடைந்து, அதற்கு அப்பால் செல்ல நமக்கு விருப்பமில்லாமற் போய்விடுகிறது அல்லவா? மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இது ஒரு பெரிய இன்னலாய் இருக்கிறது. ஆன்மிக சம்பந்தமான விஷயங்களைக் கேட்கும் பொழுதும் நம் இந்திரியங்களைக் கொண்டுதான் நாம் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. கடவுளைப் பற்றியும் இவ்வுலகுக்கு அப்பாற்பட்ட பொருள்களைப் பற்றியும் ஒருவன் சொல்லக் கேட்கிறுன். பத்து நாள்கள் கேட்ட பிறகு, அதனுல் தனக்கு ஏதேனும் மகிழ்ச்சி ஏற்படுமா, பொருள் உண்டாகுமா என்று கேட்கிறுன். ஏனெனில் உவகை புலன்களினுல் ஏற்படுகின்றதல்லவா? ஆனுல், ஐம்புல இன்பம் உண்மைக்கும் நமக்கும் இடையே எழுந்திருக்கும் திரைக்குக் காரணமாயுள்ளவைகளில் ஒன்று என்று எங்கள் தத்துவ ஞானிகள் கூறுகிறுர்கள்.

கருமங்களிற் பற்று, ஐம்புல இன்பங்கள், பல கொள்கைகளை அமைத்தல் முதலியன நமக்குத் தெரியவொட்டாமல் ஒரு திரை போல உண்மையைத் தடுக்கின்றன. மற்ருெரு பெரிய விஷயம் தோன்றிற்று. அது ஆராய்தற்குரியது. அது எப்படிப் பிற்காலத்தில் வியப்புறத்தக்க 'மாயை' என்ற கொள்கையாயிற்று

வேதாந்தம் கண்ட சிறந்த கொள்கை திகழ்கின்றது. உண்மை
எப்பொழுதும் எக்காலமும் இருந்தும், இந்த மாயை என்னும்
திரை அதை மூடி மறைந்திருந்தது என்பது நமக்கு விளங்கும்.

இவ்வாறு ஆரியர்களைச் சேர்ந்த இந்தச் சிந்தனையாளர்கள்
புதிய விஷயம் ஒன்றைச் சிந்தனைக்கு எடுத்துக்கொண்டார்கள்
என்பதை அறிகிறோம். வெளி உலகில் எவ்வளவு ஆராய்ந்தாலும்
தங்கள் கேள்விக்கு விடை கிடைக்காதென்று அவர்கள் தெரிந்து
கொண்டார்கள். ஊழிக்காலம்வரை தேடினாலும் பலன் இல்லை என்
பது அவர்களுக்கு விளங்கிற்று. ஆகவே, அவர்கள் இந்த வேறு
நெறியைப் பற்றினார்கள். இம்மார்க்கத்தின்படி, இப்புலன்களின்
ஆசைகள், கருமங்களிலுள்ள பற்றுதல் ஆகிய யாவும் உண்மைக்
கும் தமக்கும் இடையே ஒரு திரையை விரித்திருப்பதாகவும், அத்
திரையை ஒரு கருமமும் விலக்க முடியாது என்றும் அவர்கள் அறி
வுறுத்தப்பட்டார்கள். அவர்கள் தங்கள் மனத்தையே ஆராய்ந்து
தம்மிடமே மெய்யொளியைக் கண்டுபிடிக்க வேண்டுவதாயிற்று.
வெளி உலகம் ஒன்றும் பயனற்றுப் போகவே, அவர்கள் தமக்
குள்ளே இருக்கும் உலகத்தை அறிய முயன்றார்கள். அதுதான்
உண்மையான வேதாந்த தத்துவ ஆராய்ச்சியாயிற்று. வேதாந்
தத்தின் அடிப்படைக்கல் அதுவேயாகும். அது எல்லாக் கேள்வி
களையும் தம்முள்ளேயே கேட்டுக்கொள்வதாயிருக்கிறது என்பது
நமக்கு விளங்கும். மெய்ப்பொருளை எந்தச் சமயத்திலும் தேட
வேண்டா. அற்புதத்திலும் அற்புதமாயும் ஞானத்திற்கும் இருப்
பிடமாயும் உயிர்ச் சுரங்கமாயுமுள்ள இந்த ஆன்மாவிடந்தான்
அது உள்ளது என்று தொடக்கத்திலேயே அவர்கள் கண்டு
பிடித்துக் கூறினார்கள். இங்கே இல்லாதது அங்கே இருக்க
முடியாது. வெளிப்படையாகத் தெரிவது உள்ளே இருப்பதன்
மங்கலான நிழலே என்பதைப் படிப்படியாக ஆராய்ந்து கண்
டார்கள். வெளியே உள்ள பிரபஞ்சத்திற்குத் தலைவரான கடவுள்
என்ற பழைமையான கருத்தை அவர்கள் பிரபஞ்சத்திற்
குள்ளேயே இருப்பதாகக் கண்டது நமக்குத் தெரியவருகிறது.
அவர் பிரபஞ்சத்திற்கு வெளியே உள்ள கடவுள் அல்லர். அவர்
பிரபஞ்சத்திற்குள்ளேயே இருப்பவர். அவரை அங்கிருந்து
அகற்றி தங்கள் இதயத்திலேயே நிறுவிக்கொண்டார்கள். மனித
னுடைய இதயத்தில் அவனது ஆன்மாவுக்கு ஆன்மாவாய் இருக்
கும் மெய்ப்பொருளாய் அவர் விளங்குகிறார்.

வேதாந்தத் தத்துவத்தை நன்றாக உணர்ந்துகொள்ள
வேண்டும் என்றால், பல உயர்ந்த கருத்துகளைப் புரிந்துகொள்ள

வேண்டும். கான்டு, ஹெகல் இவர்களுடைய தத்துவ விசாரத்தைப்பற்றிக் கூறும் முறையில் வேதாந்தம் இல்லை என்பதை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். அது ஒரே நூலன்று; ஒரே மனிதனால் எழுதப்பட்டதும் அன்று. பல்வேறு சமயங்களில் எழுதப்பட்ட புத்தகங்களுக்கு வேதாந்தம் என்று பெயர் வழங்கப்பட்டிருக்கும். சில சமயம் ஒரு புத்தகத்தில் எவ்வளவோ வேறு விதமான விஷயங்கள் காணப்படும். அவை ஒழுங்கான வகையில் தொகுத்தும் காணப்படா. ஏதோ குறித்து வைத்த கருத்துகள் போலத் தோன்றும். சில சமயம் சாதாரணமான வெளி விஷயங்களுக்கிடையே ஓர் அற்புதமான கருத்து மிளிரும். ஆனால், ஒரு விஷயம் மிகவும் கவனிக்கத்தக்கது. உபநிடதத்திலுள்ள இக்கருத்துகள் எப்பொழுதும் நின்று விடாமல் மேலே வளர்ந்துகொண்டே போகும். அந்தப் பண்படாத மொழியில் ஆன்ம விசாரம் செய்த ஒவ்வோர் இருடியின் மனமும் அதன் சிந்தனைகளும் ஓவியக் கிழியில் தீட்டினாற் போலக் காணப்படுகின்றன. முதலில் அக்கருத்துகள் திருத்தமில்லாமல் இருந்து, பிறகு வரவர நுட்பமாகி, முடிவில் வேதாந்தத்தின் முடிவு எதுவோ அதை எட்டி அடைகிறது; அந்த முடிவுக்குத் தத்துவ விசாரம் பற்றியதான ஒன்று செல்லுகிறது. அதை வேதாந்தம் என்று கூறுகிறோம். முதலில் ஒளி மிக்க தோற்றத்தை உடைய தேவர்களைத் தேடுவதாயிருந்தது, பிறகு பிரபஞ்சம் எப்படி உண்டாயிற்று என்ற கேள்வி பிறந்து அதை ஆராயும்பொழுது பிரபஞ்சம் முழுவதும் ஒன்று என்பது விளங்கும். எதைத் தெரிந்துகொண்டால் எல்லாம் தெரிந்து கொண்டதாகுமோ, அந்தத்தத்துவமே வேதாந்தம் என்னும் பெயர் பெற்றுத் திகழ்கின்றது.

# இந்து சமயம்

என் சமயமாவது கற்பதே. உங்களது வேத ஒளியைக்கொண்டு எனது வேதத்தை நன்கு கற்றேன். எனது சமயத்தைச் சார்ந்த இருண்ட தீர்க்க தரிசனங்கள் உங்களுடைய தீர்க்கதரிசிகளின் உரைகளோடு ஒப்பிடும்போது ஒளி மிகுந்தன. உண்மை யாண்டும் உலகப் பொதுவானதே. உங்கள் அனைவர்க்கும் விரல்கள் ஐந்தே யுள்ளபோது, என் கையில் மட்டும் ஆறு விரல்கள் இருக்குமாயின், எனது கையே இயற்கையின் நோக்கப்படி அமைந்தது என்று நீங்கள் நினையாது, அது இயல்பானதன்று என்றும், நோயுற்றதென்றும் கருதுவீர்கள். சமயத்திலும் அவ்வண்ணமேதான். ஒரு கொள்கையே உண்மையாயிருக்கும் எனின், ஏனைய யாவும் உண்மையற்றவை எனின், அச்சமயக் கொள்கை நோயுற்றதே என்று கூற உங்கட்கு உரிமை உண்டு. ஒரு சமயம் உண்மையாயின், மற்றவையெல்லாம் உண்மையானவையாய்த்தான் இருத்தல் வேண்டும். ஆகவே, இந்து சமயம் எனக்குரியது போன்று உங்கட்கும் உடைமையாம். இந்தியாவில் வாழும் இருபத்தொன்பது கோடி மக்களுள் இருபது இலட்சம் பேர் கிறித்தவரும் ஆறு கோடிப் பேர் மகம்மதியரும், எஞ்சியரனைவரும் இந்து மக்களும் ஆவர்.

இந்துமக்கள் தங்கள் கொள்கைக்கு மிகு தொன்மை வாய்ந்த வேதங்களையே ஆதாரமாகக்கொள்கின்றனர்கள். வேதம் என்னும் சொல் 'வித்' (அறிவது) என்னும் சொல்லிலிருந்து பிறந்தது. வேதங்கள் யாவும் கோவைப்படுத்தப்பட்ட நூல்களேயாகும். எல்லாச் சமயங்களின் சாரமும் இவற்றில் அடங்கியிருப்பதாக நம் மனத்திற்குத் தோன்றக்கூடும். ஆனல், இவற்றிலேயே எல்லா உண்மைகளும் அடங்கியிருப்பதாக நாங்கள் கருதவில்லை. ஆன்மா அழிவற்றது என்பதை இவை கற்பிக்கின்றன. ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வோர் உள்ளத்திலும், என்றும் மாருத நிலையை நாடவேண்டும் என்னும் ஆர்வம் இயல்பாகவே திகழ்கின்றது. இது இயற்கையில் காணப்படவில்லை. ஏனெனில், இப்பிரபஞ்ச முழுதும் எண்ணிறந்த மாறுதல்களின் திறனைத் தவிர வேறன்று. ஆனல், இதிலிருந்து என்றும் மாருத நிலையான

ஒன்று இல்லை என்று நினைப்பது புத்த சமயத்தின் தென்கிளை, சார்வாகம் என்னும் இவற்றின் குற்றத்தைச் சார்ந்ததாகும். "எல்லாம் சடப்பொருள்கள்; சமயம் ஓர் ஏமாற்றம்; ஒழுக்கம், நல்ல தன்மை என்பவை யாவும் பொருளற்ற மூட நம்பிக்கைகள்," என்று சார்வாகக் கொள்கையினர் நினைக்கின்றனர். "மனிதன் தன்னுடைய ஐம்புலன்களுக்குள் சிறைப்பட்டவனல்லன்," என்று வேதாந்தம் அறிவுறுத்துகின்றது. புலன்கள் நிகழ்காலம் ஒன்றைத்தான் ஓர்கின்றன. எதிர்காலத்தையும் இறந்த காலத்தையும் அவை உணரா. ஆயினும், நிகழ்காலம், இறந்த காலம் எதிர் காலம் என்னும் இவ்விரண்டையும் சுட்டுகின்றது. இவை மூன்றும் காலத்தின் எல்லைகளே. கால எல்லைக்கு உட்படாமல் இறந்த காலம் எதிர் காலம் இவ்விரண்டினையும் நிகழ்காலத்தோடு இணைப்பதாயும், புலன்களைக் கடந்ததாயும் ஏதோ ஒன்று திகழவில்லையாயின், நிகழ்காலங்கூட நமக்கு விளங்காமற் போய்விடும்.

ஆனல், ஒன்றையும் சாராது நிற்கின்றது எது? அது நம்முடைய உடலன்று; ஏனெனில், உடல் புறத்தின் நிலையைச் சார்ந்து நிற்பதே. அது மனமும் அன்று. ஏனெனில், சங்கற்ப மயமாயுள்ள மனத்தின் எண்ணங்களும் வேருென்ருல் தூண்டப் பட்டவைகளே. ஒன்றையுஞ்சாராது நிற்பது நம் ஆன்மாவே. சாராது நிற்பது, சார்ந்து நிற்பது, சுதந்தரம், அடிமைத்தனம்— இவற்றின் கலப்பே இவ்வுலகம் என்று வேதங்கள் கூறுகின்றன. இவற்றின் நடுவே ஆன்மா, பூரணமாய், தூய்மையுள்ளதாய், என்றைக்குமுள்ளதாய், எதையும் சாராததாய், ஒளிவிட்டுத் திகழ்கின்றது. அது எதையும் சார்ந்து நிற்கவில்லையென்ற காரணத்தால், அதற்கு அழிவு இருக்க முடியாது. மரணம் என்பது ஒரு மாறுதலாகும். இத்தகைய மாறுதல் புற நிலைமைக் குட்பட்டதேயொழிய, வேறன்று. ஒன்றையும் சாராதது பூரண மாயிருக்க வேண்டும். குறைபாடும் ஒரு நிலையைச் சுட்டுமாத லால், வேருென்றிற்கு அது வசமாயிருக்கிறது. அழிவற்ற அந்தப் பரிபூரணமான ஆன்மா, மிகத் தாழ்ந்த மனிதன், மிக வுயர்ந்த தெய்வம்—இவ்விருவர்க்கிடையேயும், ஒரே வண்ண மாய்த்தான் விளங்க வேண்டும். அந்த ஆன்மா ஒளி விடும் வகையிலேதான் நாம் மாறுதலைக் காண இயலும். ஆயினும், ஆன்மா ஓர் உடலை எடுத்துக்கொள்வானேன்? நமக்கு முகம் பார்க்கும் கண்ணடி எதற்காக? நம் வடிவை நாம் அதில் பார்க் கிருேமல்லவா? இக்காரணம் பற்றியே ஆன்மாவும் உடலை ஏற்

கின்றது. உடலில் ஆன்மாவின் நிழல் படிகின்றது. இந்த ஆன்மாவே கடவுள். ஒவ்வொரு மனித உடலினுள்ளேயும் பூரணமான தெய்வத்தன்மை உறைகின்றது. அண்மையிலோ, சேய்மையிலோ தன் தெய்வநிலையை ஒவ்வொருவனும் உணர்த்தத் தான் போகின்ருன். ஓர் இருட்டறையில் நான் இருக்கும்போது நான் எவ்வளவு மறுத்தாலும், அவ்விருள் நீங்கிவிடுமோ? அது நீங்க வேண்டுமானுல், நாம் ஒரு தீக்குச்சியைத் தேய்க்க வேண்டும். அவ்வாறே நாம் எவ்வளவு குறை கூறி முனகி ஓலமிட்டாலும், குற்றங்குறையுள்ள உடலைப் பழுதற்றதாக்க இயலாது. ஆனுல், வேதாந்தம் கற்பிப்பது என்ன? "உங்கள் ஆன்மாவை எழச் செய்க. உங்கள் தெய்வத்தன்மையை நிலை நாட்டுக. நீங்கள் தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள். சமயம் உண்மையான ஒரு பொருள். இன்னல் வரும்பொழுது அதன் வயப்பட்டு முனகி வருந்தவேண்டுவதில்லை. உங்களுக்குள்ளிருக் கும் ஆன்ம ஒளியை அலரவைத்து விரியச் செய்ய வேண்டும்," என்று நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு ஓதுவீர்களாக.

"மனிதனுடைய நிகழ்காலமும், எதிர் காலமும், அவன் இறந்த காலத்திற்கேற்றவாறு மாறுதலை அடையும். நிகழ்காலம் இறந்த காலத்தின் விளைவேதான்," என்று ஒவ்வொரு சமயமும் உரைக்கின்றது. அது குலமுறையாக ஏற்பட்டது என்று கூறுவதற்கியலாது. ஒவ்வொரு குழவியும் ஏதோ ஓர் அனு பவத்தோடு பிறக்கின்றதே! அது ஏன்? ஒரு குழந்தைக்கு நல்ல பெற்ருேர் அமைகின்றனர். அக்குழந்தை சிறந்த கல்வி பயின்று நல்ல மனிதனுகின்றது. மற்ருெரு குழந்தையோ, குடிவெறி கொண்ட தாய் தந்தையர் வயிற்றில் தோன்றித் தீயவனுய்த் தூக்குமேடையில் மரிக்கின்றது. கடவுள் மீது குற்றம் சாட்டாமல் இந்த வேறுபாட்டிற்கு என்ன காரணம் இயம்புவது? கருணை வாய்ந்த ஒரு தந்தை துயரை நல்கக்கூடிய நிலையில் தன் சேயை நிறுத்துவானேன்? பின்னர்க் கடவுள் எல்லாக் குறைபாடுகளையும் ஈடுபடுத்துவார் என்று கூறுவது தகுந்த காரணமாகாது. ஏனெனில், துயருற இசைவதற்காகப் பரிசளிக்கும் வழக்கம் இறைவனிடமில்லை. "இதுதான் என் முதற் பிறவி" என்று கூறும்போது என் சுதந்தரம் என்னவாயிற்று? முற்பிறவியின் அனுபவமில்லாமல் நான் உலகில் பிறப்பேனுயின் எனக்குச் சுதந்தரமில்லை என்றுதான் கூறவேண்டும். அப்பொழுது எனது பாதை மற்றவர் அனுபவங்கொண்டேதான் வகுக்கப்படும். நானே என் திருவை அமைக்க இயலாமற்போகுமாயின்,

எனக்குச் சுதந்தரமில்லையென்பதுதான் ஏற்படும். இப்பிறவியின் துயராம் குற்றத்திற்கு நானே பொறுப்பாளியாவேன். அடுத்த பிறவியில் நான் புரிந்ததைத் துடைத்துவிடுவேன். ஆன்மா பிறவிகளைச் செய்வதன் தத்துவம் இதுவேயாகும்.

நாம் முற்பிறவியில் புரிந்த கருமத்தின் விளைவோடு இப்புவியில் தோன்றுகின்றோம். நாம் நுகரும் இன்பமோ, துன்பமோ, முற்பிறவியில் செய்த கருமத்தின் விளைவேதான். நற்பிறவிகளைப் பெற்று, இறுதியில் பூரணத்துவத்தை அடைகின்றோம்.

பிரபஞ்சத்திற்கெல்லாம் தந்தையராய், அகண்டமாய், எல்லாம்வல்லவராய் உள்ள கடவுள் ஒருவர் உண்டு என்பதை நாங்கள் நம்புகிறோம். நம் ஆன்மாவும் இறுதியில் பூரணத்துவத்தை எய்தும்பொழுது எல்லையற்றதாகத்தான் வேண்டும். முடிவில்லாத மாறுதலற்ற இரண்டு ஆன்மாக்களுக்கு இடம் இல்லையென்பதால் பரமான்மா ஒருவரே உண்டென்பது தோன்றும். ஆதலால், உருவமுள்ள ஒரு கடவுள் இருப்பதாக நம்புகின்றோம். நாமும் அவரும் ஒன்றே என்பதை உணர்கின்றோம். ஒவ்வொரு சமயத்திலும் மூன்று நிலைகளுண்டு. நாம் கடவுள் எங்கேயோ மிகவும் சேய்மையில் இருப்பதாகக் காண்கிறோம்; பிறகு அவரை அணுகி எங்கும் அவரே நிறைந்திருப்பதை அறிகிறோம்; அவரிடத்தில் உறைகின்றோம்; இறுதியில் நாமும் அவரும் ஒன்றே என்பதைக் கண்டுகொள்ளுகிறோம். கடவுளை உருவமுள்ளவராகக் கருதுவதிலும் உண்மையில்லாமலில்லை. கடவுளை எப்படிப் பாவித்தாலும், தவறில்லை. ஆதலால், எம் மதமும் உண்மைதான் என்று உரைக்கவேண்டும். நம் யாத்திரையில் அவை வெவ்வேறு தங்குமிடங்களே தவிர வேறன்று. கடைசியிற்போய் அடையவேண்டிய குறிக்கோள் வேதங்களில் கூறப்பட்ட கலப்பற்ற முழுக் கருத்தேயாகும். அக்காரணத்தால், இந்துக்களாகிய நாங்கள், ஒவ்வொரு மதத்தையும் பொறுத்துக் கொள்வதோடு அமையாமல், அதை ஏற்றுக்கொள்ளவும் இசைகிறோம்; முகமதியர்களோடு முகமதியராய் மசூதிகளில் தொழுகின்றோம்; ஜொராஸ்திரியர்களோடு ஜொராஸ்திரியராக அக்கினியை வணங்குகின்றோம்; கிறித்தவர்களோடு கிறித்தவர்களாகச் சிலுவைமுன் மண்டியிட்டு வணங்குகின்றோம். எல்லாச் சமயங்களும்—மிகத்தாழ்ந்த உருவ வழிபாட்டிலிருந்து குணங்கடந்த அகண்டம் வரையிலுமுள்ள எல்லாச் சமயங்களும்—

ஆன்மா பிரம்மத்தை உணர்ந்து அறியச் செய்யும் பல முயற்சி களேயாகும்.

ஒவ்வொரு மதமும் அதனதன் பிறப்பையும் அதனதன் சூழ்நிலையையும் பொறுத்ததாயிருக்கிறது. முன்னேற்றத்தில் அவையாவும் ஒரு படியையே குறிக்கின்றன என்பதை நாங்கள் அறிவோம். இச்சமயங்களாம் மலர்களை அன்பு நூலால் தொடுத்து ஆண்டவர் வழிபாட்டிற்காக ஓர் அற்புதமான அலங்கலாய் அமைக்கின்றோம். (அலங்கல் - மாலை)

நான் கடவுள் என்றால், என் ஆன்மா அந்தப் பரமர் உறையும் கோயிலாகும். என்னுடைய ஒவ்வோர் அசைவும் அவருடைய வழிபாடாகத் திகழவேண்டும். அன்பிற்காகவே அன்பு அலரவேண்டும்; கடமைக்காகவே கடமை திகழ வேண்டும். கைம்மாறு கருதாமலும் தண்டனைக்கு அஞ்சாமலும் இருத்தல் வேண்டும். ஆகவே, எங்கள் சமயம் விரிவடைவதைத் தான் குறிக்கும். விரிவடைவதென்பது, பிரம்மத்தை நேரில் கண்டு உணர்வது என்னும் மிக உயர்ந்த பொருளைத்தான் சுட்டும். அது வெறுஞ்சொற்களை முணுமுணுப்பதன்று; மண்டி யிட்டுத் தொழுவதுமன்று. மனிதன் தெய்வத் தன்மையை உணர்ந்து அதைக்காணும் இடையறாத முன்னேற்றத்தில் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே போகவேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

## இந்திய சமயக் கருத்து

[புரூக்லின் (அமெரிக்கா) நகரக் கிளிண்டன் சாலையிலுள்ள பௌச்சு மாளிகையின் கலைக்கூடத்தில், புரூக்லின் அறநெறிக் கழகத்தின் சார்பில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு.]

இந்திய நாடு, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அளவில் பாதிப் பரப்பே கொண்டு இருப்பினும், இருபத்தொன்பது கோடி மக்களைக் கொண்டுள்ளது. இவர்களை முக்கியமாக முகமதியம், பௌத்தம், இந்து சமயம் ஆகிய மூன்று சமயங்கள் ஆட்கொண்டுள்ளன. முதலிற் குறிப்பிட்ட சமயத்தைச் சுமார் ஆறு கோடி மக்களும், இரண்டாவதைச் சுமார் தொண்ணூறு இலட்சம் பேரும் பின்பற்றுகின்றார்கள். இறுதியாகக் குறிப்பிடப்பட்டது ஏறக்குறைய இருபத்தாறு கோடி மக்களால் தழுவப்படுகிறது. இந்து மதத்தின் தலையாய கொள்கைகள், ஆழ்ந்துணரக்கூடிய—சிந்தனைக்குரிய—தத்துவ அறிவு, பிரபஞ்சம் அளவிற்கு அடங்காத வெளிப்பரப்புடையது, அழிவற்றது என எடுத்துக் கூறும் மறை நூல்களின் பல்வேறு பகுதிகளில் அடங்கியுள்ள அறநெறிப் போதனைகள்—இவற்றை ஆதாரமாகக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரபஞ்சத்திற்குத் தொடக்கம் இருந்ததில்லை; இதற்கு இறுதியும் இருக்க இயலாது. பொருள் வடிவில் பேரான்மாவில் சத்தி எண்ணிறந்த உருவங்களில் தோன்றியுள்ளது. அளவுக்கடங்கிய உலகில் அளவற்ற சத்தியின் தோற்றங்கள் கணக்கிலடங்கா. ஆயினும், அளவற்ற பரமான்மாவோ, தனித்து வாழுந்தன்மை, அழிவில்லாமை, மாறுதலுக்குட்படாமை ஆகிய தன்மைகளைக் கொண்டது. அழியாத மெய்ப்பொருளின் முகத்தில் கால ஓட்டம் தன் சுவட்டை விடுகிறதில்லை. மனித அறிவினால் உணரவே முடியாத ஐம்புல உணர்விற்கு அப்பாற்பட்ட அந்தப் பரப்பிலே இறந்த காலமோ, எதிர்காலமோ இல்லை. மனித ஆன்மா அழிவற்றது என வேதங்கள் விளம்புகின்றன. உடல் வளர்தலும் அழிதலும் ஆகிய விதிக்கு உட்பட்டது. வளருந்தன்மையுடைய எதுவும் அழிவது இயற்கை. ஆனால், நம்முள் கரந்து உறையும் ஆன்மாவோ, காலங் கடந்த அளவற்ற வாழ்வின் தொடர்பு உடையது. அதற்குத் தொடக்கமோ முடிவோ இருந்ததில்லை; இருக்க முடியாது. இந்து,

கிறித்தவ சமயங்களிடையே உள்ள வேறுபாடுகளில் முக்கிய மானது இதுவே! கிறித்தவ சமயம் ஒவ்வொரு மனித ஆன்மாவும் உலகத்திற் பிறக்கிற பொழுது உருவாகிறது எனப் போதிக்கிறது. இந்து சமயமோ, 'மனித ஆன்மா அழிவற்ற இறைவனிடமிருந்து சுரந்தது. எனவே இறைவனைப் போலவே அதற்கும் ஆரம்ப மில்லை,' என இயம்புகின்றது. ஆன்மாவின் வளர்தோற்ற விதிகளுட்பட்டு அது ஒரு தன்மையினின்றும் மற்றொன்றிற்குப் பாயுங்கால் பலவேறு தோற்றங்களுடையதாய் இருந்தது—இனியும் இருக்கும். இறுதியில் அது முழுமையை அடைய மாற்றமற்ற நிலையை எய்துகின்றது.

'இஃது இவ்வாறாயின், நம் கடந்த பிறப்புக்களின் நிகழ்ச்சிகள் ஏன் நம் நினைவிற்கு வருவதில்லை?' என்னும் வினா அடிக்கடி எழுப்பப்பட்டுள்ளது. அதற்கு இதுவே எனது விளக்கம்; உணர்வு என்பது, மனக்கடலின் வெளி மட்டத்தையே குறிக்கும். ஆனால், அக்கடலின் ஆழத்தில் இன்ப துன்பங்களாகிய அனுபவங்கள் அனைத்தும் அடக்கப்பட்டுள்ளன. நிலையான ஒன்றைத் தேடுவதே மனித ஆன்மாவின் அவா. மனமும், உடலும், மற்றும் இயற்கையின் படைப்புகள் யாவும் ஓயாது மாறுந் தன்மை உடையனவாயுள்ளன. ஆனால், நம் ஆன்மாவின் தலை சிறந்த நோக்கம், மாற்றமற்ற—நிலையான—முழுமையை அடைந்துவிட்ட ஒன்றைக் காண்பது. காலமற்ற ஒன்றைத் தேடும் மனித ஆன்மாவின் உள்ளமும் இதுவே. நம்முடைய ஒழுக்கம், அறிவு இவற்றின் வளர்ச்சிக்கேற்ப மாற்றமற்ற இறைவனை எய்தும் அவாவும் உறுதிபடும்.

ஐம்புலன்களின் அறிவிற்கு அப்பாற்பட்டவை இருப்பவை யல்லவென்றும், மனிதன் ஒரு தனிபட்ட படைப்பு எனக் கொள்ளல் மெய்யுணர்வேயாகுமென்றும், இக்கால புத்த சமயத் தினர் போதிக்கின்றனர். இதற்கு எதிராக ஆன்ம விஞ்ஞான வாதிகள், ஒவ்வொரு மனிதனும் ஒரு தனிப்படைப்பென்றும், அவனுடைய உள்ள உணர்வுக்கப்பாற்பட்ட வெளி உலகம் அவனுக்கு இல்லாததென்றும் இயம்புகின்றார்கள். இயற்கை சார்புடைமையும், சார்பின்மையும், உலகப் பொருளும், ஆன்ம விஞ்ஞானமும் கலந்த ஒரு கலவையென்பதே இச்சிக்கலுக்கு விடை. நம் மனமும் உடலும் வெளி உலகத்தின் துணையை நாடி நிற்பவை. அச்சார்பு அவற்றின் உறவின் தன்மையால் வேறு படும். ஆனால், உள்ளுறையும் ஆன்மாவோ, இறைவனைப் போலத் தனித்து நிற்குந்தன்மையுடையது. அது நம் மனத்தை

யும் உடலையும் அவற்றின் வளர்ச்சிக்கு ஏற்ப மிகுதியாகவோ குறைவாகவோ ஆட்டிவைக்குந் திறன் படைத்தது.

இறப்பு என்பது ஒரு நிலை மாறுதலே. நாம் (இறந்த பின்பும்) அதே அண்டத்தில் முன் போலவே பழைய விதிகளுக்குட் பட்டவர்களாய் இருக்கிறோம். இதற்கு அப்பாற்பட்ட நிலையை அடைந்து வனப்பிலும் அறிவிலும் மேலான நிலையை எய்தியுள்ள வர்கள் அவர்களைப் பின்தொடர்ந்துவரும் அண்டப்படையின் முன்செல் காவலர்களே. மிக மிக உயர்ந்தோரின் ஆன்மாவும் மிகமிக இழிந்தோரின் ஆன்மாவும் தொடர்புடையவை. அழிவற்ற முழுமையின் விதை எல்லோரிடமும் உள்ளது. நலமே காணும் மனப்பான்மையை நாம் வளர்த்து, எதிலும் உறையும் மெய்ப் பொருளைக் காணவேண்டும். நம் மனம் உடல் இவற்றின் குறை பாடுகளை எண்ணிப் புலம்புதல் யாதொரு பயனையும் நல்காது. துன்பமூட்டும் சூழ்நிலைகளை வெல்ல முயலும் வீரமுயற்சியே நம் ஆன்மாவை உயர்த்தும். ஆன்ம முன்னேற்றத்தின் விதிகளை அறிவதே வாழ்வின் குறிக்கோள். கிறித்தவர்கள் இந்துக்களிட மிருந்தும், இந்துக்கள் கிறித்தவர்களிடமிருந்தும் இவை அறிய லாம். உலகின் புலமைக்கு இவ்விரண்டும் உயர்ந்த கருத்துக்களை வழங்கியுள்ளன.

'உண்மையான சமயம் உறுதியானதேயன்றி, இன்மைச் சார் புடைத்தன்று ; அது தீமை ஒழித்தது மட்டுமன்றி, தொடர்ந்து உயரிய செயல்களைப் புரிவதையும் அடிப்படையாகக் கொண்டது,' என்னும் கருத்துக்களை உங்கள் குழந்தைகளுக்குப் புகட்டுங்கள். உண்மையான சமயம் மனிதர்களின் அறவுரைகளினின்றோ நூல் களைப் படித்தலினின்றோ தோன்றுவதன்று. அது தூய்மையான மாண்புடைய நம் செயல்கள் காரணமாக நம்முள் தோன்றும் ஆன்ம எழுச்சியேயாகும். உலகில் உதிக்கும் ஒவ்வொரு குழந் தையும் தன் முற்பிறப்புகளினின்றும் திரட்டப்பட்ட சில அனுபவங்களைத் தன்னுடன் கொண்டு வருகிறது. அந்த அனுபவத்தின் விளைவை அக்குழந்தையின் மனம், உடல் இவற்றின் வடிவத்தின் மூலம் காணலாம். ஆனால், நம்முள்ளே அரசு செலுத்தும் ஒன்று—விடுதலை உணர்ச்சியைத் தூண்டும் ஒன்று, மனம் உடல் இவைகளைத் தவிர நமக்குள் வேறு ஒன்று இருப்பதைக் குறிக்கிறது. நம்மை ஆட்கொண்டுள்ள ஆன்மா தனித்தியங்கும் தன்மை உடையதாதலின், நமக்கு அது விடுதலை உணர்ச்சியை ஊட்டுகிறது. நாம் விடுபட்டிராவிடில், இவ்வுலகை முன்னேற்ற நம்மால் எப்படி முடியும்? மனித ஆன்மாவின்

முயற்சியே மனித முன்னேற்றத்திற்குக் காரணமென நாம் கருது கிறோம். இவ்வுலகின் நிலையும், நம் நிலையும் ஆன்ம விடுதலையின் விளைவுகளே.

எங்கும் நிறைந்த—எல்லாம் வல்ல—நமக்கெல்லாம் தந்தை யாகிய—இறைவன் ஒருவன் இருக்கிறானென நாம் நம்புகிறோம். அவன் தன் குழந்தைகளை அளவற்ற அன்புடன் காத்து அவர் களுக்கு வழிகாட்டி வருகிறான். கிறித்தவர்களைப் போலவே நாங் களும் உருவக் கடவுள்—சகுணப் பிரம்மம்—என்ற கருத்தை நம்பு கிறோம்; இன்னும் ஒருபடி மேலே செல்லுகிறோம்; 'நாமே அவன்; அவனுடைய தனித்தன்மை நம்முள் தோன்றி நிற்கிறது; அவன் நம்முள் உறைகிறான்; நாம் அவனுள் உறைகிறோம்,' என எண் ணவும் முற்படுகிறோம். எல்லாச் சமயங்களிலும் உண்மையின் கரு இருக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டு, இந்துக்களாகிய நாங்கள் அவைகளுக்கெல்லாம் தலை வணங்குகிறோம். ஏனெனில், இவ்வுலகில் உண்மைக்கருத்துக் கூட்டலிலன்றிக் கழிப்பதில் காணக் கிடைப்பதில்லை. பல்வேறுபட்ட சமயக் கொள்கை களாகிய செம்மலர்களால் தொடுக்கப்பட்ட செண்டையே நாங் கள் இறைவனுக்கு அளிக்க விரும்புகிறோம். பரிசு நாட்டத்தா லன்றி அன்பு காரணமாகவே நாம் இறைவனைக் காதலிக்க வேண்டும். நம் கடமையைச் செய்வதிலும் அதேபோன்று கடமையாற்ற வேண்டுமென்ற எண்ணத்தாலன்றி, பயனை எதிர் நோக்கிப் பணி புரிதல் கூடாது. அழகிற்காக அழகை ஏற்ற வேண்டுமேயன்றிப் பயன் எதிர்நோக்கியன்று. இவ்வழியிலே தான் நம் உள்ளத் தூய்மையின் மூலம் இறைவனை நாம் காண முடியும். பலியிடுதல், மண்டியிட்டுத் தொழுதல், முணு முணுத்தல், ஓதுதல் ஆகிய இவையல்ல சமயம் என்பது. இவை யெல்லாம் பயனுடையனவாக வேண்டுமானால், இவை நம்மை உயரிய மாண்புடைய செயல்களைத் துணிந்து புரிவதற்குத் தூண்டி, இறைவனது முழுமையை உணரும் வண்ணம் நம் எண்ணங்களை உயர்த்த வேண்டும்.

நம் தொழுகைகளில் இறைவன் நம் எல்லோருக்கும் தந்தை யென்பதை ஏற்றுக்கொண்டு, நம் வாழ்வில் ஒவ்வொரு மனிதனை யும் நம்முடன் பிறந்தவனாகக் கருதி அன்புடன் நடத்தாவிடில், அதனால் பெறும் பயன் என்ன? மேன்மையான வாழ்வை அடை யும் வழியைச் சுட்டிக் காட்டவே நன்னூல்கள் இயற்றப் படுகின்றன. ஆனால், தளராத நடையுடன் அப்பாதையில் நாம் செல்லாவிடில், அந்நூல்களாற் பெறும் அறிவு பயனற்றுப்போம்.

ஒவ்வொரு மனிதனது தனித்தன்மையையும் ஒரு கண்ணுடிக் கோளத்திற்கு ஒப்பிடலாம். ஒவ்வொன்றின் நடுவிலும் ஒரே விதமான தூய வெள்ளொளியாகிய இறைவனது பதிப்பு இருக்கிறது. ஆனுல், ஒவ்வொன்றின் கண்ணுடியும் வெவ்வேறு நிறங்களையும் தடிப்பு வேற்றுமைகளையும் கொண்டிருப்பதால், அவ்வொளியின் கதிர்கள் வெளிக் கிளம்புகையில் பல்வேறு தோற்றங்களை அடைகின்றன. எல்லா உள்ளொளிகளும் அளவிலும் அழகிலும் ஒன்றுபட்டவை. நாம் அவற்றிற் காணும் வேற்றுமை அவ்வொளிகளைக் கொண்ட இவ்வுலகக் கருவிகளின் குறையே. நாம் வாழ்வின் இருப்பிலே உயர உயர, அந்தக் கருவியும் மேன் மேலும் தெளிவாக ஒளிவீசும் தன்மையை யடைகிறது.

## விரிவுப் போர்

'விதைக்கு முன்பு மரமா? அல்லது மரத்திற்கு முன்பு விதையா?' என்ற முடிபு காணுத பண்டைய வினு—இருதுறை இடர்ப்பாட்டு வினு—எல்லாவகை அறிவுகளையும் ஊடுருவி நிற்கின்றது. பொருள்கள் உண்டான முறையிலே அறிவு முதலா, சடப்பொருள் முதலா? குறிக்கோளா, அதன் புறத்தோற்றமா? எது முதல்? நமது உண்மையான இயல்பு சுதந்தரமா, நியதிக் கட்டுப்பாடா? நினைவு சடத்தைப் படைக்கின்றதா, சடம் நினைவைப் படைக்கின்றதா? இயற்கையில் காணும் இடையரு மாற்றம் எனும் கருத்து அமைதி என்னும் கருத்துக்கு முன்னதா? அன்றேல் அமைதிக் கருத்து மாற்றக் கருத்துக்கு முன்னதா? இத்தகைய வினுக்கள் விடை காண்டற்கரிய தன்மையன. ஒன்றன்பின் ஒன்ருய்க் கிளர்ந்தெழும் கடலின் அலைகள் போலவே இவ்வினுக்கள் மாருது ஒன்றன்பின் ஒன்ருய்த் தொடர்ந்து போகின்றன. மனிதர்கள் தங்கள் சுவைக்கேற்றவாறு, கல்விக் கேற்றவாறு, தனிப்பட்ட இயல்புகளுக்கேற்றவாறு இந்த வினுக் களில் ஏதாவது ஒன்றின் சார்பாக வாதாடுவார்கள்.

சான்ருக, இயற்கையிலுள்ள பல்வேறு பகுதிகள் இசைந்து போவதைக் கண்ணுற்ருல், இது ஓர் அறிவு திகழ் செயலின் விளைவென்று வாதாடுவர் ஒருபால்; சடப்பொருளாலும் சத்தியாலும் பரிணமப் போக்கில் பிறக்கின்ற அறிவு, இந்த ஞாலம் தோன்றுவதற்கு முன்பே மிளிர்ந்தது என்று இயம்புவதற்கு இயலாது என்று எதிர்த்துப் போர் புரிவர் மற்ருெருபால்; மனத்தில் அரும்புகின்ற குறிக்கோளே உருவத்தின் படைப்புக்குமுன் திகழ்ந்திருக்க வேண்டும் என்று கூறுமிடத்து, பல வகை புற அனுபவங்களே இந்தக் குறிக்கோளைச் சமைத்துத் தந்தன என்று அதே வேகத்தில் சொற்போர் புரியக்கூடும். எப்பொழுதும் நம்முன் நிற்கும் சுதந்தரக் கருத்துதான் எல்லாம் என்று ஒரு புறம் வாதாடினுல், காரணமின்றி ஒன்றுமில்லை என்ற தருக்கத்தால் மனம் சம்பந்தப் பட்டதும், பௌதிகமும் காரண காரியத்தளையால் இறுகத்தகையப் பட்டிருக்கின்றன என்ற உண்மையை வேறு சிலர் மறுபுறம் எடுத்துக் கூறுவார்கள். உடலின் மாறுபாடுகளைப் பார்க்கின்றபொழுது, இவை மனத்தின் சங்கற்பத்தால் தூண்டப்பட்

டவை என்று எண்ணக்கூடும். இந்நிலையில் எண்ணந்தான் இந்த உடலைப் படைத்தது என்பது விளங்கும். ஆனால், உடலில் மாறுதல் தோன்றுகிறபொழுது அது எண்ணத்திலும் மாறுதலைத் தூண்டுகின்றது. இக்காரணத்தால் மனத்தை இவ்வுடலேதான் படைத்திருக்க வேண்டும் என்பதும், அதைப் போலவே இது தெளிவாகின்றது. பிரபஞ்சத்தின் மாறுதல் முன்பிருந்த அமைதி யின் விளைவு என்று வாதித்தால், அதே உறுதியுடன் தருக்க அறிவு கொண்டு இந்த மாறுதலில்லாமை என்ற கருத்துங்கூட ஒரு மாயத் தோற்றமே; இது வேகங்களிடையே காணப்படும் மாற்றத்தால் எழுந்ததே என்று எதிர்வாதப்போர் தொடங்க இயலும்.

இறுதி ஆராய்ச்சியில் அறிவனைத்தும் இந்த முடிவற்ற தீச் சுழலில் சிக்கி உழல்வதைப் பார்க்கின்றோம். எதுமுன், எதுபின் என்று வரையறுத்துச் சொல்ல இயலாத காரண காரியமே இச் சுழலாகும். தருக்க விதிகளைக் கொண்டு சீர்தூக்கிப் பார்த்தால், இத்தகைய அறிவு தவறானதாகும். இந்த அறிவு தவறு என்பதை மெய்ப்பிப்பதற்கு, நமக்கு ஆதாரம் உண்மையான அறிவோடு ஒப்பிடலன்று; இதே முடிவிலாத் தீச்சுழலையே ஆதாரமாகக் கொண்ட விதிகளால் அமைக்கப்பட்ட அறிவைக்கொண்டு விளக் கந் தருவதே. இதுதான் மிக விசித்திரமான உண்மையாகும். நம் அறிவின் சிறப்பியல் யாதெனில், தன் குறையைத் தானே மெய்ப்பித்துக்கொள்ளுவதேயாகும். ஆனால், அது வெறும்பொய் அறிவு என்று பகர்வதற்கில்லை. ஏனெனில், நாம் அறியும் எந்த உண்மையும்—நாம் சிந்திக்கும் எந்த உண்மையும்—இந்த அறி வின் வட்டத்திலேதான் உறைந்து நிற்கின்றது. எல்லா நடை முறைத் தேவைகளுக்கும் இது போதும் என்பதை மறுக்க முடியாது. புற உலகையும் அகவுலகையும் தழுவி நிற்கும் இந்த மனித அறிவு நிலையைத்தான் மாயை என்போம். இது பொய் தான்; ஏனெனில், இது தன்னுடைய தவற்றைத் தானே மெய்ப் பித்துக்கொள்ளுகிறது. அது ஒரு வகையில் மெய்யே; ஏனெனில், விலங்கியல் மனிதனின் தேவைகளுக்கும் போதுமானதாய் அமைந்திருக்கிறது. புற உலகத்தில் செயலாற்றுகின்ற இந்த மாயை, விருப்பு வெறுப்பு என்ற இரண்டு சத்திகள் மூலம் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளுகிறது. அக உலகத்தில்—கருத் துலகத்தில்—ஆசை நிராசை—விருப்பம் விருப்பமின்மை (பிர விருத்தி நிவிருத்தி) என்ற சத்திகள் வாயிலாக இது காட்சி அளிக்கின்றது. இந்தப் பிரபஞ்சமனைத்தும் புறத்தின்பால்

விரைகின்றது. ஒவ்வோர் அணுவும் தன் நடுவட்டத்திலிருந்து ஓட முயல்கின்றது. அக உலகத்தில்—கருத்துலகத்தில்—ஒவ்வோர் எண்ணமும் கட்டுக்கடங்காமல் போவதற்கு முயற்சி செய்கிறது. மேலும், புற உலகத்தில் ஒவ்வோர் அணுவும் மையத்தை நோக்கிச் செல்லுகிற சத்தியால் தடையுறுகின்றது. இந்தச் சத்தியைத்தான் மையத்தை நாடும் சத்தி என்று கூறுவார்கள். எண்ண உலகத்திலும் வெளிநோக்கி விரையும் விருப்பங்களை அடக்கும் சத்தி தடுக்கின்றது.

உருவாகும் விருப்பங்கள்—செயற்படுவதில் மேலும் மேலும் இழுக்கப்பட்டு இயந்திரங்கள் போல இயங்கும் விருப்பங்கள்—விலங்கியல் மனிதனைச் சார்ந்தனவாகும். ஐம்புலத்தளைகளை நீக்குவதற்குவேண்டிய ஓர் ஆர்வம் எழுமாயின், அப்பொழுதுதான் சமய உணர்ச்சி மனிதனின் இதயத்தில் உதயமாகின்றது என்று உரைக்கலாம். புலன்களின் தளைகளில் சிக்காமல் மனிதனுக்குத் தன்னுடைய சுதந்தரத்தை நிலைநாட்டுவதற்கு உதவி புரிவதே சமயத்தின் முழு நோக்கமாகும் என்பதை இதிலிருந்து நாம் அறிவோம். விடுதலையின்பொருட்டு 'நிவிருத்தி' புரியும் முதல் முயற்சியை ஒழுக்கமென்று உரைப்பார்கள். இவ்வகை இழிவைத் தடை செய்வதும் இந்தத் தளையைத் தகர்ப்பதுந்தான் எல்லா ஒழுக்க இயலின் நோக்கமுமாகும். எல்லா ஒழுக்க நெறியும் தக்கன, தகாதன என்னும் இரு பகுதிகளை உடையனவாகும். 'இதைச் செய்; இதைச் செய்யாதே,' என்று கட்டளையிடும். 'இதைச் செய்யாதே,' என்று இயம்பும் பொழுது, மனிதனை அடிமையாக்கும் ஒரு வகை விருப்பத்தைத் தடுக்க அது ஒரு நெறியாய்த் திகழ்கின்றது என்பது விளங்கும். அது 'இதைச் செய்' என்று கட்டளையிட்டால், சுதந்திரம் எய்துவதற்கு மனிதனுக்கு வழி காட்டுதல், மனித உள்ளத்தை ஏற்கெனவே கவ்விப் பிடித்துள்ள இழிவை நீக்குதல், அதன் தளையைத் தகர்த்துத் தள்ளுதல் முதலிய இவை யாவும் அக்கட்டளையின் நோக்கத்தில் அடங்கியிருக்கின்றன என்று கொள்ளல் வேண்டும்.

'மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய சுதந்தரம் திகழ்ந்தால்தான் இத்தகைய அறநெறியைப் பின்பற்ற இயலும் பூரண சுதந்தரத்தை எய்துவதற்கு வாய்ப்புகள் நிகழுமா?' என்ற வினா ஒரு புறம் இருக்கட்டும்; இந்த அகில பிரபஞ்சமுந்தான் விரிவதற்கான போரில் ஈடுபட்டிருக்கின்றது; வேறு முறையாகக் கூறுமிடத்து—சுதந்தரம் அடையப் போராடுகின்றது என்பது மிகத் தெளிவே. ஓர் அணு விரிவதற்குக்கூட இந்த எல்லையற்ற பரந்த வெளி

போதாது. சுதந்தரம் அடைகின்ற வரையில் விரிவுப் போர் இடையருது எஞ்ஞான்றும் நடந்துகொண்டேதானிருக்க வேண்டும். துன்பமகற்றவோ இன்பம் எய்தவோ இந்தச் சுதந்தரப் போர் ஏற்பட்டது என்று சொல்லுவதற்கியலாது. இத்தகைய உணர்ச்சி களற்று மிகமிக இழிவான நிலையில் இருக்கும் பொருள்கள்கூட தாம் விரிவதற்காகப் போராடுகின்றன. பலருடைய கருத்துப்படி இத்தகைய பொருள்களின் விரிவே மனிதனுவன்.

# ஆன்மா, இறை, சமயம்

கழிந்த காலமாம் சாலைகள் வாயிலாக எண்ணிறந்த நூற்றாண்டுகளின் குரல் நம்மை நாடி வந்துகொண்டிருக்கிறது. இமயவரைத் தடங்களில் உறையும் இருடிகளின் குரல்—காட்டில் தனி வாழ்வு நடத்தும் சான்றோர்களின் குரல்—செமிட்டிக்கு இனத்தார்களுக்கு வந்த குரல்—புத்தபிரான் போலவே ஆன்மிகத் துறையில் வானளாவி நிற்கும் பெரியோர்கள் மூலமாகப் பேசின குரல்—இந்த ஞாலத் தொடக்கத்திலிருந்தே மனிதனைத் தொடர்ந்து வந்த ஞான ஒளியில்—எங்கெங்கே ஒருவன் இத்தகைய மனிதனோடு சேர்ந்து இடையறாது உறைகின்றானோ, அங்கங்கே சுடர் விடும் ஒளியில் வாழ்கின்றவர்களின் வாயிலே பிறக்கின்ற குரல்—இப்பொழுதும் நம்மை அணுகிக்கொண்டிருக்கிறது. மலைகளிலிருந்து சுரந்து வரும் சிற்றருவிகள் போல, இக்குரல் நம்பால் விரைந்து வருகின்றது. இந்தச் சிற்றருவிகள் இப்பொழுது மறைகின்றன; மீண்டும் தோன்றுகின்றன; விரைவு மிக்க ஓட்டத்தோடு பாய்கின்றன. இவை யாவும் இறுதியில் ஒன்றாய்க் கலந்து, ஒரு மாபேராற்றல் வாய்ந்த கம்பீரமான வெள்ளமாய்ப் பெருகிவிடுகின்றன. பல்வேறு நாடுகள், குழுக்கள், இவற்றைச் சார்ந்த இருடிகள், தூய்மை வாய்ந்த மனிதர்கள், பெண்மணிகள்—இவர்களுடைய தெய்வ நற்செய்திகளின் சத்தி யாவும் திரண்டு கழிந்த காலத்து ஊது கொம்பின் பேரொலியுடன் நம்முடன் உரையாடுகின்றன. அந்தக் குரல் கொணரும் முதல் நற்செய்தி இதுவே: "சாந்தம் உங்கட்கு வருவதாக! சமயங்களிடையே அமைதி நிலவட்டும். அது பகையைத் தூண்டும் அறிவுரையன்று; எல்லாச் சமயங்களும் கலந்தளிக்கும் ஒன்றுபட்ட நற்செய்தியாகும்."

இந்த உபதேசத்தை முதன்முதலாக நாம் துருவி ஆராய்வோம்: இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே சமயத்திற்குப் பெரும்பாலும் முடிவு காலம் வந்துவிட்டது என்று அஞ்சினார்கள். விஞ்ஞான ஆராய்ச்சியாம் மாபெருஞ்சம்மட்டி அடிகளால், பழைய மூட நம்பிக்கைகள் சீன மட்பாத்திரங்களின் திரள்கள் போலத் தூள் தூள்களாய்ப் போய்விட்டன. எவையோ சில கொள்கைகளின் ஒரு மூட்டையாகவும், பொருளற்ற சடங்குகளாகவும் சமயத்தைக் கருதினவர்கள் கைமறித்து நின்றார்கள். யாது

செய்வது என்பதை அவர்கள் ஓராமல், திகைத்தார்கள்; ஒவ்வொன்றும் தங்கள் கைகளிலிருந்து நழுவக் கண்டார்கள். அஞ்ஞேயவாதம், லோகாயத வாதம் என்னும் வாதங்களாம் பொங்கி எழும் கடல் வெள்ளம் அதன் முன்னுள்ள அனைத்தையும் அடித்துக்கொண்டு போகாமல் நில்லாது என்று ஒரு சமயத்தில் தோன்றிற்று. தாங்கள் கருதியதை மொழிவதற்குக்கூடத் துணிச்சலற்றவர்களாய் அவர்கள் இருந்தார்கள். சமயத்திற்கு வந்த இன்னலிலிருந்து அது மீளாத ஒரு கையறு நிலையில் நிற்கிறதென்றும், சமயத்திற்காக வாதாடுகின்ற வாய்ப்பும் எஞ்ஞான்றும் மறைந்துவிட்டது என்றும் பலர் அஞ்சினர். ஆனால், எழுந்த கடல் வெள்ளம் நமக்கு நன்மையை நல்கிச் சற்றுத் திரும்பிவிட்டது. நம்மை விடுவிக்க ஒன்று தோன்றியிருக்கிறது. அது யாதென வினவுவீராயின், அதுதான் சமய ஒப்பு நோக்கு ஆராய்ச்சியாகும். பல்வேறு சமயங்களைத் துருவி ஆராய்வதால், சாராமிசத்தில் அவை யாவும் ஒன்றே என்பதைக் கண்ணுறுகின்றோம். நான் இளைஞனாயிருந்தபொழுது, எதையும் ஐயுறு நிலை என்னை நண்ணிற்று. சமயத்தைப் பற்றிய அவா முழுவதையும் இழந்துவிடுவேனோ என்று ஒரு சமயத்தில் எனக்குத் தோன்றியது. ஆனால், நற்காலமாகக் கிறித்தவ சமயத்தையும், இசுலாம் மதத்தையும், பௌத்தத்தையும், இவை போன்ற வேறு சமயங்களையும் நான் ஆராய்ந்தேன். எனது சமயம் எனக்குக் கற்பித்த அடிப்படையான தத்துவங்களையே எல்லாச் சமயங்களும் கற்பிக்கின்றன என்பதை உணரும்பொழுது எனக்குண்டான வியப்பை இன்னதென்று இயம்புவதற்கு இயலாமற் போயிற்று. இந்த முறையிலே அது என் உள்ளத்தைத் தொட்டது. 'எது உண்மை?' என்று நான் வினவினேன். இவ்வுலகம் உண்மைதானா? ஆம்; உண்மைதான். ஏனெனில், இதை நான் பார்க்கிறேன். வாய்ப்பாட்டிசை, கருவி இசை—இவற்றினின்று எழுந்த அழகான ஒலிகளை இப்பொழுதுதானே கேட்டேன்? இவை உண்மைதானா? ஆம்; ஏனெனில், இவற்றைச் செவிமடுத்தேன். மனிதனுக்கு உடலும், கண்களும், செவிகளும் இருக்கின்றன என்பதை நாமறிவோம். அவனுக்கு நாம் காண இயலாத ஆன்மிக இயல்பும் ஒன்றிருக்கிறது. இந்த ஆன்மிகத் திறன் கொண்டு பல்வேறு சமயங்களை ஆராயலாம். ஒரு மதம் இந்தியாவின் விரிந்த வனங்களில் கற்பிக்கப்பட்டாலும் சரி; அல்லது, குறுங்காடுகளில் முளைத்தாலும் சரி; அல்லது கிறித்தவருடைய மண்ணில் பிறந்தாலும் சரி; முக்கிய அமிசங்களில் இவை யாவும்

ஒன்றே. இதனால், மனித மனத்திற்குச் சமயம் என்பது உடலோடு அமைந்த ஒரு தேவை என்பது நன்கு புலனாகின்றது. ஒரு சமயத்தை மெய்ப்பிக்கும் தன்மை மற்றைய சமயங்களையும் மெய்ப்பிக்கும் தன்மையைச் சார்ந்து நிற்கின்றது. சான்றாக, எனக்கு ஆறு விரல்கள் இருக்கின்றன; மற்றையவர்களுக்கு இல்லை என்று வைத்துக்கொள்ளுவோம்; இந்நிலை இயற்கையின் இயல்பிற்கு மாறுபட்டது என்று நீங்கள் இயம்பக்கூடும்; 'ஒரே மதம் உண்மையான மதம்; மற்றைய அனைத்தும் பொய்' என்று வாதிப்போரின் கூற்றை இதே தருக்க அறிவு முறையில் ஆராய்ச்சி செய்து பார்க்கலாம். ஆறு விரல்களின் ஓர் இரட்டை போல ஒரே சமயம் இவ்வையகத்தில் காட்சி அளித்தால், அது இயற்கைக்கு மாறாய்த்தான் இருக்கும். அக்காரணத்தால், ஒரு சமயம் உண்மையாயிருக்குமாயின், மற்றைய சமயங்களும் உண்மையாகவே திகழவேண்டும். முக்கியமல்லாப் பொருள்களில் மாறுதல்கள் இருக்கின்றன; ஆனால், சாரமான பொருள்களில் இவை யாவும் ஒன்றாய் மிளிர்கின்றன. என்னுடைய ஐந்து விரல்கள் உண்மையாயின், உங்களுடைய ஐந்து விரல்களும் உண்மையே. எங்கெங்கே மனிதன் வாழ்கின்றானோ, அங்கங்கே அவன் ஒரு நம்பிக்கையைத் திண்ணமாகவே வளர்க்கவேண்டியவனாயிருக்கின்றான்; தன் சமய இயல்பை வளர்த்துத்தான் தீரவேண்டும்.

மேலும், உலகப் பலசமய ஆராய்ச்சிகளில் நான் கண்ட மற்றோர் உண்மை இருக்கிறது. ஆன்மா, இறை இவற்றைப்பற்றிய கருத்தின்கண் மூன்று மாறுபட்ட நிலைகள் உண்டு என்பதை உணர்ந்தேன். அழிந்துபோகின்ற உடலைத்தவிர்த்து, ஏதோ ஒரு பகுதி, அல்லது ஏதோ ஒன்று—நைந்துபோகும் உடல்போல மாறுபடாத ஒன்று—இருக்கிறது என்பதை எல்லாச் சமயங்களும் ஒப்புக்கொள்கின்றன. அந்தப் பகுதி மாறுதலற்றது; எஞ்ஞான்றும் உள்ளது; என்றைக்கும் மாண்டுபோகாது. ஆனால், பிற்காலத்தில் தோன்றிய சில சமயங்கள் என்றும் அழியாப் பகுதி ஒன்றை ஏற்றுக்கொண்டாலும், அதற்குத் தொடக்கமுண்டு என்று கற்பிக்கின்றன. தொடக்கம் உள்ள எதற்கும் திண்ணமாய் ஒரு முடிவும் இருந்தே தீரவேண்டும். சாரமுள்ள பாகமான நமக்குத் தொடக்கமுமில்லை; இறுதியுமில்லை. நம்மனைவருக்கும் மேலாக—இந்த அழியாத்தன்மைக்கு மேலாக—முடிவு காணாத—அழியாத மற்றொரு பொருள் இருக்கிறது. அதுதான் இறை. மனிதனது தொடக்கம், உலகத் தொடக்கம் என்றெல்லாம் மக்கள் பேசுவார்

கள். ‘தொடக்கம்’ என்னும் சொல் காலவட்டத்தின் தொடக்கத்தைத்தான் சுட்டுமே தவிர, வேறன்று. இந்தப் பிரபஞ்சத்தின் தொடக்கம் என்று எங்கும் சுட்டப்படவில்லை. படைப்புக்கு ஒரு தொடக்கம் உண்டென்பது இயலாத காரியம். தொடக்கத்தின் காலம் என்பதை உங்களுள் ஒருவராலும் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. தொடக்கமுடைய ஒன்றிற்கு முடிவுண்டு. “நான் இல்லாத நாளில்லை; நீங்களும் இல்லாத நாளில்லை; உங்களுள் ஒருவராயினும் இனி இல்லாமலிருக்கப்போவதுமில்லை,” என்று பகவத்கீதை அருள்கின்றது. எங்கெங்கே படைப்பு என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறதோ, அங்கங்கே அது ஒரு காலவட்டத்தின் தொடக்கம் என்பதைத்தான் குறிக்கிறது என்று கொள்ள வேண்டும். உங்கள் உடலுக்கு மரணம் ஏற்படும். ஆனால், உங்கள் ஆன்மாவுக்கு ஒருநாளும் மரணமில்லை. ஆன்மாவைப் பற்றிய கருத்தோடு, பூரணத்தைப்பற்றிய கருத்துக்களின் பகுதியும் எழக்காண்கின்றோம். தன் அளவிலே ஆன்மா பூரணமாய்த்தான் பொலிவுற்றிருக்கிறது. ஹிபுருக்களின் புதிய சாசனம், ‘தொடக்கத்தில் மனிதன் பூரணமாய்த் திகழ்ந்தான்,’ என்னும் கருத்தை ஏற்றுக்கொள்கின்றது. தன்னுடைய செயல்களால் தன்னை மனிதன் மாசுறுத்திக்கொண்டான். அவன் தன்னுடைய பண்டைய இயற்கையை—தன்னுடைய தூய்மையான நிலையை—மீண்டும் பெறவேண்டும். உருவகக்கதைகள் வாயிலாகவும் புனையப்பட்ட கதைகள் மூலமாகவும் சின்னங்களைச் சமைத்து, அவற்றின் உதவியாலும் இப்பொருளைப்பற்றி விளக்கந் தருகின்றனர். இத்தகைய கூற்றுகளை நாம் துருவி ஆராயத் தொடங்கினால், மனித ஆன்மா இயற்கையில் பூரணமானதென்றும், அது தன்னுடைய ஆதி பரிசுத்தத்தைப் பெறவேண்டுமென்றும் இவை யாவும் அறிவுறுத்துகின்றன என்பதைக் காண்போம். அத்தகைய தூய்மை நிலையை எப்படி அடைவது? கடவுளை அறிந்தால், அதை எய்துதல் இயலும். ஹிபுரு வேதநூல் கூறுகின்றது இதுவே: ‘மைந்தன் வாயிலாக அன்றித் தந்தையான கடவுளைக் காண்பதரிது.’ இதனால் நமக்கு என்ன விளங்குகின்றது? கடவுளைக் கண்டறிவதுதான் வாழ்வின் இலட்சியமும் அடையவேண்டிய இடமும் ஆகும். தந்தையோடு இரண்டறக் கலப்பதற்கு முன்பே மைந்தனும் தன்மை முதலில் அரும்ப வேண்டும். தன்னுடைய செயல்களால் மனிதன் தன்னுடைய தூய்மையை இழந்துவிட்ட செய்தியை மனத்தில் இருத்திக்கொள்ளுங்கள்; நாம் துன்புறுவதற்குக் காரணம், நம் செயல்களேயாகும். இதற்காகக் கடவுள்மீது குற்

றஞ்சாட்டுவது அழகன்று. இக்கருத்துகளோடு தொடர்புள்ள மற்றொரு கொள்கையும் இருக்கிறது. அதுதான் மறு பிறவிக் கொள்கை. ஐரோப்பியர்கள் இதைச் சிதைப்பதற்கு முன்பே இது உலகப் பொதுக் கருத்தாய்த் திகழ்ந்திருந்தது.

இதைப்பற்றி நீங்கள் கேள்வியுற்றிருக்கக்கூடும்; ஆனால், இதைப்புறக்கணித்துவிட்டீர்கள். மறு பிறவியைப்பற்றிய இந்தக் கருத்து, மனித ஆன்மாவின் அழியாத்தன்மையைப்பற்றிய மற்றொரு கருத்தோடு ஒத்தே நேராய் ஓடிக்கொண்டே இருக்கிறது. ஒரு முனையில் முடிகின்ற ஒன்று, தொடக்கமின்றி இருத்தல் இயலாது; ஒரு முனையில் தொடங்குகின்ற ஒன்றுக்கு முடிவில்லாமலிருக்கவும் முடியாது. மனித ஆன்மாவுக்கு ஒரு தொடக்கம் இருக்கும் என்ற நிகழக்கூடாத மாபெருஞ் செயலை நாம் எப்படி நம்ப இயலும்? மறு பிறப்புக்கொள்கையோ ஆன்மாவின் சுதந்தரத்தைத் தீர்மானமாய் வலியுறுத்துகின்றது. கலப்பற்ற ஒரு தொடக்கம் இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அந்நிலையில் மனிதனிடத்தில் காணப்படும் தூய்மையின்மையாம் சுமை கடவுள்மேல் விழும்; உலகப் பாவங்களுக்கெல்லாம் கருணையே வடிவமாயுள்ள ஒருவரே பொறுப்பாளராய்த் திகழ்ந்துவிடுவார். 'இம் முறையில் பாவம் உலகத்தில் தோன்றுமாயின், ஒருவன் மற்றொருவனைக் காட்டிலும் துன்புறுவானேன்?' என்னும் கேள்வி பிறக்குமன்றோ? கருணையங்கடலாம் கடவுளிடமிருந்து இது வருமாயின், கடவுளுக்கு இத்தகைய பட்சபாதம் எதற்கு? கோடிக்கணக்கான மக்கள் காலடியில் மிதிபட்டுச் சாவானேன்? பசி, நோய், பட்டினி, இடும்பை இவற்றை உண்டு பண்ணுவதற்கு மூலமாயில்லாத மக்கள் உணவின்றித் தவிப்பானேன்? இந்நிலைக்குப் பொறுப்பாளர் யார்? அவர்கள் இதற்கு உடந்தையில்லையென்றால், உண்மையாகவே கடவுள்தான் பொறுப்பாளியாய் இருக்கவேண்டும். ஆதலால், இதைக்காட்டிலும் சிறந்த விளக்கமொன்றுண்டு; அதாவது, ஒருவன் நுகர்கின்ற இடும்பைகளனைத்திற்கும் பொறுப்பாளி அவனே. நான் சக்கரத்தைச் சுழற்றிவிட்டால், அதன் விளைவுக்குப் பொறுப்பாளி நானே அல்லவா? துன்பத்தைக் கொணர்ந்த நானே அதைத் துடைக்க இயலும். இதனால், நாம் பந்தமற்றவர்கள் என்பது தருக்க முறையில் தொடர்ந்து வருகின்றது, 'விதி' என்று சொல்லுவதெல்லாம் ஒன்றுமில்லை. நம்மைக் கட்டாயப்படுத்துவதற்கு யாதொன்றுமில்லை என்றே இயம்பலாம். நாம் செய்த வினைப்பயனை நாமே நீக்கிவிட முடியுமன்றோ?

இந்தக் கொள்கையோடு தொடர்புள்ள ஒரு வழக்கு இருக்

கிறது. அது சற்றுச் சிக்கலாயிருக்கிறபடியால், பொறுமையுடன் செவி சாய்த்துக் கேட்கும்படி உங்களை நான் வேண்டுகிறேன். அனுபவம் வாயிலாக நாம் எல்லா அறிவையும் பெறுகிறோம்; அறிவைப் பெறுவதற்கு அது ஒன்றே பாதையாகும்; அது யாதெனில், விழித்த உணர்வு வட்டத்தில் நிகழ்கின்ற அனுபவமே. இதை விளக்க ஒரு சான்று தரலாம்; ஒரு மனிதன் ஒரு பியானோவில் ஒரு சுரம் வாசிக்கிறான்; இசைக்கருவியின் ஒவ்வொரு கட்டைமீதும் அறிந்தே தன் விரலை அழுத்தி வைக்கிறான்; இந்த முறையைத் திரும்பத்திரும்பப் பயில்கின்றான். அவனுடைய விரல்களின் ஓட்டம் ஒரு பழக்கம் ஆகிவிடுகின்றது. ஒவ்வொரு தனித்த கட்டையின் மீதும் சிறப்பான ஒரு கவனத்தைச் செலுத்தாமலே, அவன் அந்தச் சுரத்தை வாசிக்கின்றான். இதைப் போலவேதான் நாம் சம்பந்தப்பட்ட வரையில் எல்லாம் நிகழ்கின்றன. நம்முடைய சார்புகள் யாவும் அறிந்தே செய்து கழிந்த செயல்களின் விளைவுகளாகும். எவையோ சில சார்புகளோடுதான் குழந்தை பிறக்கின்றது. இச்சார்புகள் எங்கிருந்து வருகின்றன? ஒன்றும் வரையப்படாத மனமாம் பலகையுடன் ஒரு குழந்தையும் பிறக்கிறதில்லை. மனம் ஒன்றும் எழுதப்படாத வெற்றேடாய் இல்லை. முன்னமே இந்தப் பக்கம் வரையப்பட்டிருக்கிறது. பண்டைய கிரேக்க எகிப்துத் தத்துவ ஞானிகள் பதிவுகளற்ற வெற்று மனத்தோடு எந்தக் குழந்தையும் உலகத்தில் தோன்றியதில்லை என்று கற்பித்தார்கள். அறிந்தே புரியப்பட்ட செயல்களால் பிறந்த ஓர் ஆயிரம் சார்புகளோடு கூடவேதான் ஒவ்வொரு குழந்தையும் வையகத்தில் உதயமாகின்றது. இந்த வாழ்விலேயே அவற்றை அது பெறவில்லை. கழிந்த பிறவிகளில் அவற்றைப் பெற்றிருக்க வேண்டும் என்பதை நாம் கட்டாயமாக ஏற்றுக் கொள்ளாமலிருக்க இயலாது. கலப்பற்ற ஒரு முழுத் தீவிர உலகாயதவாதிகூடக் கழிந்த செயல்களின் விளைவுகளே இச்சார்புகள் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தச் சார்புகள் வமிச பரம்பரை வாயிலாக வருகின்றன என்பது ஒன்றைச் சேர்த்தே அவர்கள் வாதிக்கின்றார்கள். நம் தாய் தந்தையர், நம் பாட்டன்மார், நம் கொள்ளுப் பாட்டன்மார்—இவர் யாவரும் வமிச வழித் தத்துவம், அல்லது குலமுறைப்பேறு என்ற நியதியில் நம்மோடு கலக்கின்றனர். வமிச வழித் தத்துவம் என்றே இதற்கு விளக்கம் கூறுவோமாயின், ஆன்மாவைப் பற்றிய கருத்துகளை நாம் சிறிதும் நம்ப வேண்டுவதில்லை; ஏனெனில், உடல் எல்லாவற்றிற்கும் விளக்கந்தருகின்றது. பௌதிகம், ஆன்மிகம் இவற்றைப் பற்றிய

பலவிதமான வழக்குகளிலும், சர்ச்சைகளிலும் நாம் இறங்க வேண்டுவதில்லை. தனித்த ஆன்மாவைப் பற்றி நம்புபவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் செல்லும் பாதை தெளிவாகத்தானிருக்கிறது. தருக்க அறிவு மூலமாக ஒரு நேர்மையான முடிவிற்கு வருகிறதாயிருந்தால், நமக்குக் கழிந்த பிறவிகள் இருந்தே தீரவேண்டும் என்பதை நாம் ஆமோதிக்காமலிருக்க இயலாது. நவீன காலத்து இருடிகளும், சிறந்த தத்துவ ஞானிகளும், பண்டைக்காலத்துச் சான்றோர்களும் கொண்ட நம்பிக்கையும் இதுவேயாகும். யூதர்களிடையே இத்தகைய கொள்கையில் நம்பிக்கை நிலவி வந்தது. இயேசுநாதரும் இந்தக் கொள்கையில் நம்பிக்கை வைத்திருந்தார்; "ஆபிரகாமுக்கு முன்பே நான் இருக்கிறேன்," என்கிறார். மற்றோரிடத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது: "அவதாரமாயிருக்கிறார் என்று கூறப்படுகிற எலியாஸ் தான் இவர்."

பற்பல சந்தர்ப்பங்களிலும், சூழ்நிலைகளிலும் பல நாடுகளிலே வளர்ந்த பல்வேறு சமயங்களின் பிறப்பிடம் ஆசியாவாகும். ஆசிய நாட்டு மக்கள் அவற்றை நன்குணர்ந்திருக்கிறார்கள். ஆனால், தாயகத்தைவிட்டு அவை வெளிப்போந்ததும் அவற்றில் தவறுகள் புகுந்துவிட்டன. கிறித்தவ சமயத்தின் மிக ஆழமான சிறந்த கருத்துகள் ஐரோப்பாவுக்கு நன்கு விளங்கவில்லை. ஏனெனில், கிறித்தவ வேதத்தை எழுதியவர்கள் வழங்கிய கருத்துகளும் உருவகங்களும் ஐரோப்பாவுக்குப் புறம்பானவையல்லவா? மதோனாவின் ஓவியங்களை நம் கருத்தை விளக்குவதற்காக எடுத்துக்கொள்ளுவோம். தான் முன்பே முடிவுக்கு வந்த கருத்துகளுக்கேற்ப ஒவ்வொரு ஓவியப் புலவனும் மதோனாவைச் சித்திரிக்கிறான். இயேசுநாதரின் இறுதி உண்டி ஓவியத்தைச் சித்திரிக்கும் நூற்றுக்கணக்கான ஓவியங்களை நான் கண்ணுற்றேயிருக்கிறேன். இயேசுநாதர் ஒரு மேசைமீது சாய்ந்து அமர்ந்திருப்பதாகச் சித்திரம் வரையப்பட்டிருக்கிறது. இயேசுநாதரோ, மேசை மீது சாய்ந்து அமரவில்லை; மற்றவர்கள் போலவே தாமும் தரையிலேதான் வீற்றிருந்தார். ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு பாத்திரம் இருந்தது. அந்தப் பாத்திரத்திலேதான் ஒவ்வொருவரும் தம் ரொட்டியைத் தோய்த்தனர். அந்த ரொட்டி நீங்கள் இன்று அருந்துகின்ற ரொட்டியன்று. மற்றைய நாட்டாரின் அறிமுகமில்லாத பழக்கவழக்கங்களை உணர்ந்துகொள்ளுவது எந்த நாட்டிற்குங் கடினந்தான். ஆனால், பல நூற்றாண்டுகளாக மாறுதல்களை எய்தியவையும் கிரேக்க ரோம மூலங்களி

லிருந்து பெருகி வந்த ஒட்டுமாசுகளையுடையவையுமான யூதர்களின் பழக்க வழக்கங்களை ஐரோப்பியர்கள் உணர்ந்துகொள்ளுவது இன்னும் எவ்வளவு கடினமாயிருந்திருக்கும் என்பதை உன்னிப்பாருங்கள்! பழங்கதைகளும், புராணங்களும் சூழ்ந்திருப்பதால் வனப்பு வாய்ந்த இயேசுநாதரின் சமயத்தைப்பற்றி மக்கள் பெற்றது மிகக் குறைவே என்பதில் யாதொரு வியப்புமில்லை. அந்த அழகு வாய்ந்த சமயத்தை நவீன வாணிகச் சமயமாகச் செய்ததிலும் யாதோர் ஆச்சரியமுமில்லை.

நான் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு மீண்டும் வருகின்றேன். எல்லாச் சமயங்களும் எஞ்ஞான்றும் இருக்கும் ஆன்மாவின் தன்மையை ஓதுகின்றன. அதன் ஒளி மங்கிப் போயிற்று. அதன் பண்டைய தூய்மையைக் கடவுளை அறிவதால் பெறவேண்டும். இப்படித்தான் மதங்கள் மொழிகின்றன என்பதை நாம் காண்கின்றோம். பல்வேறு சமயங்களில் கோயில்கொண்டிருக்கிற கடவுளைப் பற்றிய கருத்து யாது? கடவுளைப் பற்றிய முதற் கருத்து மிக மங்கலாயிருந்தது. மிகப் பண்டைய நாட்டவர்களுக்கு ஞாயிறு, உலகம், தீ, நீர் போன்ற பல தெய்வங்களுண்டு. இத்தகைய கணக்கிலாத் தெய்வங்களோடு தெய்வங்கள் வெம்போர் தொடுக்கும் நிலையைப் பண்டைய யூதர்களிடையே நாம் பார்க்கின்றோம். யூதர்களும் பாபிலோனியர்களும் வழிபட்ட 'இலொஹிம்' என்ற தெய்வத்தை நாம் காண்கின்றோம்; பிறகு ஒரே தெய்வம் உயர்வற உயர்நிலையில் நிற்க நோக்குகின்றோம். பற்பல மனிதக் கூட்டங்களுக்கேற்றவாறு தெய்வத்தைப் பற்றிய கருத்தும் வேறுபட்டதை உணர்கின்றோம். ஒவ்வொரு மனிதக் கூட்டமும் தன் தெய்வந்தான் உயர்தெய்வமென்று வாதாடிற்று; போரிட்டு அதை மெய்ப்பிக்க முயன்றது. எந்தக் கூட்டம் நன்றாய்ப் போர்புரிய இயலுமோ, அந்தக் கூட்டத்தின் தெய்வந்தான் மேலானது என்பதை நிலைநாட்ட முடியும். இத்தகைய மனித இனங்கள் ஏறக்குறைய விலங்கின் வாழ்வு நடத்தும் நாகரிகமில்லாதனவாகும். படிப்படியாகப் பழைய கருத்துகள் இருந்த இடத்தில் நல்ல நல்ல கருத்துகள் புகுந்து ஆட்சி புரியலாயின. இத்தகைய பழைய கருத்துகள் யாவும் கழிவுப்பண்ட அறைக்குள் புகும் சாமான்கள்போல மாறிவிட்டன; அல்லது மாறிக்கொண்டிருக்கின்றன. பல நூற்றாண்டுகளின் விளைவான வளர்ச்சிதான் இத்தகைய சமயங்களனைத்தும். ஒரு சமயமாவது விண்ணிலிருந்து தாவிக் குதித்துவிடவில்லை.

ஒவ்வொரு சமயமும் சிறிது சிறிதாகவே உருவடைய

வேண்டியிருந்தது. கடவுள் ஒருவரே என்ற கருத்து பிறகு அரும்புகின்றது. அவர் எல்லாம் வல்லவர்; எல்லாம் அறிந்தவர்; இந்தப் பிரபஞ்சத்திற்கே தலைவர். அந்தக் கடவுள் பிரபஞ்சத்திற்கப்பாலுள்ளவர். அவர் விண்ணில் உறைகின்றார். இத்தகைய கடவுள் தம்மை எழுப்பியவர்களுடைய தூலமான கருத்துகளின் போர்வையிலேதான் திகழ்கின்றார். அவருக்கு ஒரு வலப் பாகமுண்டு; இடப்பாகமும் உண்டு. அவர் கையில் ஒரு பறவை அமர்ந்திருக்கின்றது. இது போன்ற தூலமான அமிசங்களைக் கடவுள்மீது சுமத்துகின்றனர். சிற்றினங்கள் கொண்டாடும் தெய்வங்கள் மறைந்தே போயின. அந்த இடத்தில் பிரபஞ்சத்திற்கு ஒரே தலைவரான கடவுள் அமர்ந்துவிட்டார். அவரே தெய்வங்கட்கெல்லாம் தெய்வமாய்த் திகழும் தேவநாதர் என்னும் ஓர் உண்மையை நாம் காண்கின்றோம். ஆனால், அந்தக் கடவுள் பிரபஞ்சத்திற்கப்பாலுள்ள கடவுளே தவிர, வேறல்லர். அவரை அணுகுவதற்கு இயலாது; அவர்க்கு அண்மையில் ஒன்று வரமுடியாது. ஆனால், இக்கருத்தும் பையப்பைய மாறிற்று. அடுத்தபடியாக இயற்கையில் கரந்துறைகின்ற 'அந்தர்யாமி'யான கடவுளை நாம் பார்க்கின்றோம்.

'விண்ணிலுள்ள என் தந்தையே,' என்று புதிய சாசனத்தில் அறிவுரை வழங்கப்படுகின்றது. விண்ணில் உறைகின்ற கடவுள் மனிதனிடமிருந்து பிரிக்கப்படுகின்றார். நாம் புவியின்மீது வாழ்கின்றோம்; அவரோ, விண்ணில் வசிக்கின்றார். பின்பு இயற்கையில் கடவுள் கரந்து நிற்கின்றார் என்று ஓதப்படுகின்றதை நாம் பார்க்கின்றோம். விண்ணில் மட்டுமன்றி, வையகத்திலும் அவர் திகழ்கின்றார். நமக்குள்ளே உறைகின்ற கடவுளும் அவரே. நமக்குக் கடவுள் அண்மையிலிருக்கிறார் என்னும் நிலையையும் நாம் இந்து தத்துவத்தில் காண்கின்றோம். இந்நிலையோடு நாம் நின்றுவிடவில்லை. ஓர் அத்துவித நிலையுமுண்டு. இந்நிலையில், 'நான் வழிபடும் கடவுள் விண்ணிலும் மண்ணிலுமுள்ள தந்தையார் மட்டுமல்லர்; நானும் என் தந்தையாரும் ஒன்றே,' என்றும் மனிதன் கருதுகின்றான்; தன் ஆன்மாவில் தன்னைக் கடவுளென்றே அறிகின்றான்; ஆனால், அவருடைய உருவ விளக்கம் சற்றுக் குறைவாகத் தோன்றுகின்றது. என்னிடத்தில் எவையெல்லாம் உண்மையோ, அவையெல்லாம் அவரே; அவரிடத்தில் எவையெல்லாம் உண்மையோ, அவையெல்லாம் யானே. கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே விரிந்துகிடந்த பள்ளத்திற்குப் பாலம் அமைத்தாய்விட்டது. இம்முறையில்

நாம் கடவுளை அறிவதால், அவருடைய அருள் நகர் நம் உள்ளத்திலேயே நிகழக் காண்கின்றோம்.

முதலில் காணப்படுகிற துவைத நிலையில் தன்னை மனிதன் ஒரு தனித்த சிறிய ஆன்மாவாகக் கருதுகிறான்; தன்னை ஜான், ஜேம்ஸ், அல்லது டாம் என்று வழங்கிக்கொள்ளுகிறான். 'நான் எஞ்ஞான்றும் ஜான், ஜேம்ஸ், அல்லது டாம் ஆகவே திகழ்ந்திருப்பேன்; வேறொன்றாய் இருக்கவே முடியாது,' என்று கூறுகின்றான். ஒரு கொலைகாரன், 'எப்பொழுதுமே நான் கொலைகாரனாகவே இருப்பேன்,' என்று சொல்லிக்கொண்டால் எப்படியிருக்கும்? உன்னிப் பாருங்கள்! அதே நிலையிலேதான் இவனும் இருக்கிறான். ஆனால், காலம் தேயத்தேய, டாம் என்பவன் மறைந்துபோய், தூய ஆதிஜீவன் (ஆதாம்) நிலையை மீண்டும் அடைந்துவிடுகிறான்.

உள்ளத் தூய்மை உடையவர்களே புண்ணியம் புரிந்தவர்கள்; ஏனெனில், அவர்கள் திண்ணமாய்க் கடவுளைக் காண்பார்கள். நாம் கடவுளைக் காண இயலுமா? உண்மையில் இயலாதுதான். அவரை அறிய முடியுமா? அதுவும் உண்மையில் முடியாதுதான். கடவுள் அறியப்படுவாராயின், அவர் கடவுளாயிருத்தல் இயலாது. அறிவு என்பது ஒரு வரம்பைச் சுட்டிவிடுமன்றோ? ஆனால், நானும் என் தந்தையாரும் ஒன்றே; இந்த உண்மையை என் ஆன்மாவில் உணர்கின்றேன். இத்தகைய கருத்துகள் சில சமயங்களில் நன்கு வெளியிடப்பட்டிருக்கின்றன; சில மதங்களில் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளன; மற்றுஞ் சில சமயங்களில் விரிவாக விளம்பப்பட்டுள்ளன. இயேசுநாதர் நல்கிய ஞான நன்மொழிகளை இப்பொழுது இந்நாட்டில் உறையும் மக்கள் அறிந்துகொள்ளவில்லை. என்னை மன்னிக்கவேண்டுகின்றேன்! உண்மையைக் கூறுமிடத்து, எக்காலத்திலுமே அவ்வுண்மைகள் தக்கமுறையில் நன்கு அறியப்படவில்லை என்று நான் மொழிவேன். தூய்மையையும் பூரணத்தையும் அடைதற் பொருட்டு வளர்ச்சியின் பலவிதமான படிகள் முழுதும் இன்றியமையாதவைகளே. சமயத்தின் வெவ்வேறு அமைப்புகள், அடிப்படையான ஒரே கருத்தின் மீதுதான் நிறுவப்பட்டிருக்கின்றன. "ஆண்டவர் அருள் நகர் உன்னுள் திகழ்கின்றது," என்று இயேசுநாதர் இயம்புகின்றார். அவரே, "விண்ணில் இருக்கின்ற எம்முடைய பிதாவே," என்று அவரை விளிக்கின்றார். இவ்விரு மொழிகளுக்குள்ளே தோன்றுகின்ற இடர்ப்பாட்டை எப்படி அகற்றிச் சமரசப்படுத்துவது? இம்முறையில் சமாதானம்

அளிக்கலாம்; பின்னல் கூறப்பட்டதை அவர் பகருங்கால் கற்றறி வில்லாப் பாமர மக்களோடு அவர் பேசிக்கொண்டிருந்திருக்க வேண்டும்: இத்தகைய பாமர மக்கள் சமயக்கல்விப் பயிற்சிக்குப் புறம்பானவர்களல்லவா? அவர்களுடைய மொழியில் ஓதுவது தேவையாயிருந்தது. சாதாரண மக்கள் திரளுக்குத் தூலமான கருத்தே தேவை. அது ஐம்புலன்களால் அறிந்துகொள்ளக்கூடிய ஒன்ருய் இருக்கவேண்டும். இவ்வையகமே மிகவும் போற்றக்கூடிய ஒரு தத்துவஞானியாய் ஒருவன் இருக்கலாம்; ஆனுல், சமயத் துறையில் அவன் ஒரு குழவியே. ஆன்மிகத் துறையில் ஒரு பெரு நிலையை அடையத் தன்னைப் பழகிக்கொண்ட ஒருவனே, ஆண்டவர் அருள்நகர் தன்னுள்ளேயே இருப்பதாக உணர இயலும். அதுதான் மனத்தின்கண் திகழக்கூடிய உண்மையான இராச்சியமாகும். ஒவ்வொரு சமயத்திலும் மேற்பார்வைக்கு முரண்பாடுகளாயும் குழப்பங்களாயும் காட்சி அளிக்கின்ற அனைத்தும், வளர்ச்சியின் பல்வேறு படிகளையே குறிக்கின்றன. அக்காரணத்தால், அவரவர் சமயத்தின்பொருட்டு ஒருவர் மீதும் குற்றஞ் சுமத்துவதற்கு நமக்கு உரிமையில்லை. வளர்ச்சிப் படிகளில் வடிவங்களும் உருவங்களும் தேவையே. இத்தகைய மொழியைத்தான் அந்த நிலையிலுள்ள ஆன்மாக்கள் அறிந்து கொள்ளக்கூடும்.

நான் உங்கள் முன் நிறுத்த விழையும் அடுத்த கருத்து இது தான்; சமயம் என்பது கோட்பாடுகளிலும் பிடிவாதக் கொள்கை களிலும் அடங்கி நின்றுவிடவில்லை. நீங்கள் படிப்பதோ நீங்கள் பிடிவாதமாகப் பற்றுவதோ ஆன கொள்கை முக்கியமன்று; உங்களுடைய அனுபூதிதான் சாலச் சிறந்ததாகும். உள்ளத் தூய்மை உடையவர்களே புண்ணியம் புரிந்தவர்கள்; ஏனெனில், அவர்கள் கடவுளை நேரில் காண்பார்கள்; ஆம்! இந்த வாழ்விலேயே. அதுதான் விடுதலையாகும். வெறுஞ் சொற்களை முணுமுணுப்பதால் இந்நிலையை எய்துதல்கூடும் என்று ஓதுகின் றவர்களுமுண்டு. முத்திக்குப் புற உருவங்கள் வழிபாடு தேவை என்று எந்தப் பெரிய ஞான குரவரும் ஓதினதாகத் தெரியவில்லை. அதை அடையும் ஆற்றல் நம்முள்ளேயே மிளிர்கின்றது. நாம் கடவுளில் உறைகின்ருேம்; அவரிடம் திரிகின்ருேம். கொள்கை களுக்கும் அவற்றின் பிரிவுகளுக்கும் தத்தம் செயல்களைப் புரிவதற்குரிய இடங்களுமுண்டு. அவை ஆன்மத் துறையின் குழவிப் பருவத்தவருக்குப் பயன்படும். அதை நீண்ட கால உதவி நல்கா; தாற்காலிகங்களே. நூல்கள் சமயங்களைப்

படைக்கவில்லை ; சமயங்களே நூல்களைப் படைக்கின்றன. இவ் வுண்மையை நாம் நெஞ்சைவிட்டு அகற்றக் கூடாது. எந்த நூலும் கடவுளை அமைக்கவில்லை. மிகச் சிறந்த நூல்களெல்லாம் தெய்வ ஆவேசத்தில் பிறந்தவைகளே. எந்த நூலும் ஓர் ஆன்மாவை உண்டாக்கவில்லை. இதை என்றும் நாம் மறவாம லிருத்தல் வேண்டும். ஆன்மாவில் ஆண்டவரைக் கண்டு உணர்தலே எல்லாச் சமயங்களின் முடிவுமாகும். அது ஒன்றே உலகப் பொதுச் சமயமாகும். எல்லாச் சமயங்களிலும் அகிலப் பிரபஞ்சத்தையே தழுவக்கூடிய ஒரே ஓர் உண்மையிருக்கு மாயின், அது இங்கேதான் இருக்கிறது என்று சுட்டிக் காட்டுவேன். அது யாதெனில், கடவுளை நேரில் கண்டு உணர் வதே. இலட்சியங்களும் முறைகளும் வேறுபடலாம் ; ஆனால், அதுதான் நடு மையமாகும். ஆரங்கள் ஆயிரம் இருந்தாலென்ன? அவை யாவும் வட்டத்தின் நடுமையமொன்றிலேயே முடிவடை கின்றன. அந்த முடிவுதான் கடவுளை உணர்தல். ஐம்புல உலகத்திற்குப் பின் நிற்பதும், இடையறாது உண்பது பருகுவது பிதற்றுவது ஆகிய உலகத்திற்குப் பின் நிற்பதும், மாய நிழல் களும் சுயநலமும் மண்டிக் கிடக்கும் உலகத்திற்குப் பின் நிற் பதும் அந்த மெய்ப்பொருளேயாகும். நூல்களுக்கப்பால் அது திகழ்கின்றது. எல்லாக் கொள்கைகளையும் கடந்து அது ஒளி வீசுகின்றது. இந்த வையகத்தின் ஆடம்பரங்களனைத்தையும் தாண்டி அது மிளிர்கின்றது. அதைத்தான் உங்களிடத்திலேயே ஓர் அனுபூதியாகச் செய்யவேண்டும். இந்த ஞாலத்திலுள்ள கோயில்களனைத்திலும் ஒருவன் நம்பிக்கை வைக்கலாம் ; உலகத் தில் எழுதப்பட்ட சமயப் புனித நூல்கள் எல்லாவற்றையும் தன் தலையில் திணித்துச் சுமந்து செல்லலாம் ; இப்பாரிலுள்ள எல்லா ஆறுகளிலும் நீராடலாம் ; ஆயினும், ஆண்டவனைப் பற்றிய அறிவு இல்லாத இடத்து, மிகத் தடித்த நாத்திகனாகவே நான் அவனைக் கருதுவேன். ஒருவன் ஒரு மாதா கோயிலுக்கும் போகாமலிருக்கலாம் ; ஒரு மசூதியையும் நாடாமலிருக்கலாம் ; யாதொரு சமயச் சடங்கையும் ஆற்றாமலிருக்கலாம் ; ஆனால், கடவுளைத் தன் இதயத்தில் உணர்ந்து, இந்த உலகத்து ஆடம் பரங்களைக் கடந்து, அப்பால் அவன் சென்றிருப்பானாயின், அவனே ஞானியாய்த் திகழ்வான். அவனே புனிதனாவான். அச்சான்றோனை எந்தப் பெயர் கொண்டாவது வழங்குங்கள் ; அது பொருந்தும். ஒரு மனிதன் எழுந்திருந்து, ‘நானே சரி ; நான் வழிபடும் கோயிலே சரியானது ; மற்றையவர்கள் தவறான

வர்கள்,' என்று சொல்லும் போது, அவனே தவற்றை உடைய வன் என்று நாம் உரைக்கலாம். மற்றவர் அனைவரும் மெய்ப்பிக்கின்ற ஒன்றின்மீதுதான் தான் மெய்ப்பிக்கப் புகும் ஒன்று சார்ந்து நிற்கின்றது என்பதை அவன் உணரவில்லை. மனித இனத்தின்மீது காட்டும் முழு அன்பும் பரிவுமே உண்மையான சமய உணர்ச்சியைச் சோதிக்கும் கட்டளைக் கல்லாகும்; 'நாம் அனைவரும் உடன்பிறந்தோர்கள்,' என்ற போலி உணர்ச்சியால் எழுகின்ற ஓர் உரையை நான் குறிக்கவில்லை. மனித வாழ்வின் ஒருமையை ஒருவன் உணரவேண்டும். தனி உரிமை பாராட்டாத அளவிலே எல்லாக் கொள்கைகளும், கொள்கைகளின் பிரிவுகளும் என்னுடையவைகளே. உண்மையான சமயத்தை நாட, அவைக ளெல்லாம் துணை புரிகின்றன. 'ஒரு சமயத்தைப் போதிக்கிற கோயிலில் பிறப்பது நல்லதுதான்; ஆனால், அதிலேயே மரிப்பது தீதாகும்,' என்ற உண்மையை இதோடு சேர்த்துச் சாற்று கின்றேன். ஒரு குழவியாய்ப் பிறப்பது நலமே. ஆனால், என்ஞான்றுமே குழவியாய் இருப்பது கெடுதலன்றோ? கோயில் வழி பாடுகள், சடங்குகள், உருவங்கள்—இவை யாவும் குழந்தை களுக்கு நன்மை பயக்கும். குழந்தை வளரும் பொழுது, தான் பிறந்த குறுகிய கோயிலைத் தகர்த்துக்கொண்டு வரவேண்டும்; அன்றேல் தன்னை உடைத்துக்கொண்டாவது வெளியிலே ஏக வேண்டும். நாம் எப்பொழுதுமே குழவிகளாகவே இருக்கக் கூடாது. ஒரே சட்டையை வைத்துக்கொண்டு எல்லாப் பருமன் களுக்கும் எல்லா வளர்ச்சிகளுக்கும் அதைப் பொருத்தும் முயற்சியை ஒக்கும், ஒரே மதத்தை எல்லோருக்கும் வழங்குவது.

உலகில் தோன்றும் மதக்கிளைகளின் இருப்பைப் புறக் கணித்து நான் பேசவில்லை. இன்னும் இலட்சக் கணக்கான சமயப் பிரிவுகள் இருக்கட்டும். எத்தனைக்கெத்தனை அவைகள் இருக்கின்றனவோ, அத்தனைக்கத்தனை நமக்குத் தேர்ந்தெடுக்கும் வசதி ஏற்படும். நான் மறுக்கிறதெல்லாம் இதுதான்: ஒவ்வொரு தரத்திற்கோ, தகுதிக்கோ, ஒரே சமயத்தையே வழங்க முயலுவதை நான் எதிர்க்கின்றேன். எல்லாச் சமயங்களும் அடிப்படையான சாரத்தில் ஒன்றே ஆயினும், பற்பல நாடுகளுக் கிடையே தோன்றுகின்ற பலவிதமான சந்தர்ப்பங்களுக்கேற்பப் பல்வேறு உருவங்களை அவை பெறவேண்டும். தனிப்பட்ட சமயம் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும்; புறச் சடங்கு களிலேதான் அவை தனிப்பட்டிருக்க வேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு என் நாட்டில் மிக்க தூய்மை

வாய்ந்த ஒரு சிறந்த ஞானியாரை நான் சந்தித்தேன். நாங்கள் ஞானக் கண்ணிற்கு விளங்கின எங்கள் வேதங்களைப் பற்றியும், உங்களுடைய விவிலியத்தைப் பற்றியும், குர்-ஆனைப் பற்றியும், பொதுவாக உதயமான நூல்களைப்பற்றியும் பேசினோம். பேச்சு முடிந்த தருணத்தில் அச்சான்றோர் மேஜையருகிற் போய் ஒரு புத்தகத்தை எடுக்கும்படி பணித்தார். அந்தப் புத்தகத்தில் பல விஷயங்களோடு ஆண்டு மழை பெய்தலின் முன்னறிக்கையும் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த ஞானியார் அதைப் படிக்கும்படி சொன்னார். பெய்யக்கூடிய மழையின் அளவைப் படித்துச் சொன்னேன். 'இந்தப் புத்தகத்தை எடுத்துக் கசக்கிப் பார்,' என்றார். நான் அப்படியே செய்தேன். 'அப்பனே, ஒரு சொட்டுத் தண்ணீர் வரவில்லையே!' என்றார். 'தண்ணீர் வருகின்ற வரையில் எல்லாம் வெறும் புத்தகந்தான்; எல்லாம் வெறும் புத்தகந்தான்!' என்றார். கடவுளை உணர வைக்காத வரையில் உன் சமயம் பயனற்றதே. சமய ஞானத்தை அடைய நூல்களைப் பயில்வோன் ஓர் அறிவுரைக் கதையை நினைவூட்டுகின்றான். சருக்கரைப் பெரும் பொதியைச் சுமந்த கழுதை அதன் இனிமையை அறியுமோ? (குங்குமம் சுமந்த கழுதை அதன் மணம் அறியுமோ? கழுதைக்குத் தெரியுமோ கருப்பூர வாசனை?)

அவர்களை மண்டியிட்டு, 'பெருந்துன்பம் மண்டிக் கிடக்கும் பாவிகள் நாங்கள்!' என்று ஓலமிடும்படி நல்லறிவுச் சுடர் கொளுத்தலாமா? அப்படிச் செய்யற்க. அவர்களுடைய தெய்வ இயல்பை அவர்கட்கு நினைவூட்டுவோமாக.

நான் உங்கட்கு ஒரு கதை சொல்லுகிறேன்: இரை தேட வந்த சூல் கொண்ட ஒரு பெண் சிங்கம் ஓர் ஆட்டு மந்தையைக் கண்ணுற்று, அவ்வாடுகளுள் ஒன்றின்மீது பாய்ந்தது. அப்பொழுது அது சிங்கக்குட்டி ஒன்றை ஈன்றுவிட்டு, அந்த இடத்திலேயே மாண்டுவிட்டது. அந்த ஆட்டு மந்தையிலேயே அக்குட்டி வளர்ந்து வந்தது; புல்லை அருந்திற்று; ஆடு கத்துவது போலவே தானும் கத்திற்று. தான் ஒரு சிங்கம் என்பதை அது அறவே மறந்துவிட்டது. ஒரு நாள் ஒரு பெரிய சிங்கம் அந்த மந்தையைக் கண்டது. அதனிடையே ஒரு சிங்கம் ஆடு மாதிரி கத்துவதையும் புல்லைத் தின்றுகொண்டிருப்பதையும் அந்தச் சிங்கத்தைப் பார்த்ததும் ஆட்டு மந்தையில் இருந்த அந்தச் சிங்கம் நோக்கி வியப்புற்றது. புதிதாய்த் தோன்றிய அந்தச் சிங்கத்தைப் பார்த்ததும் ஆட்டு மந்தையில் இருந்த அந்தச் சிங்கம் ஆடுகளோடு ஓட்டம் பிடித்தது. ஆனால், வந்த சிங்கமோ, தக்க தருணத்திற்காகக் காத்துக்கொண்டிருந்தது. ஒரு நாள் அந்தச்

சிங்கம் ஆடுகளோடு துயின்றுகொண்டிருந்த சிங்கத்தைப் பார்த்தது; அதைத் தட்டி யெழுப்பி, 'நீ ஒரு சிங்கம்,' என்று உரைத்தது. ஆனால், அந்தச் சிங்கமோ, 'நான் சிங்கமல்லேன்,' என்று மொழிந்து, ஆடு போலக் கத்திற்று. ஆனால், வந்த சிங்கம் அதை ஓர் ஏரிக்கழைத்துச் சென்று தன் நிழலை அந்த நீரில் பார்க்கச் செய்து, தன்னை அது ஒத்து இருக்கவில்லையா என்று வினவிற்று. அது 'ஆம்' என்று ஒப்புக்கொண்டது. வந்த சிங்கம் முழங்கத் தொடங்கிற்று; மற்றச் சிங்கத்தையும் அப்படியே முழங்கும்படி கூறியது. சிங்கம் தன் குரலைப் பரீட்சித்துப் பார்த்தது. அன்னிய சிங்கம் போலத் தானும் பெரு முழக்கம் புரிந்தது. அது இனிமேல் ஓர் ஆடன்று. என் நண்பர்களே, நீங்கள் அனைவரும் சிங்க ஏறுகள் போல ஆற்றல் படைத்தவர்கள் என்பதை உங்கட்கு உரைக்க விரும்புகின்றேன்.

உங்களுடைய அறை இருள் அடைந்திருந்தால், 'இருள்! இருள்!' என்று மார்பில் அடித்துக்கொண்டு ஓலமிடாதீர்கள். ஒளியைப் பெறுவதற்கு ஒரே வழியுண்டு. விளக்கேற்றுங்கள். இருள் மறைந்துவிடும். உங்களுக்குமேல் திகழும் ஒளியை அடைவதற்கு ஆன்ம தீபத்தை உங்கள் அகத்தில் தூண்டுவீர்களாக. பாவமும் மாசுமாகிய இருள் பறந்தோடிப்போம். உங்களுடைய இழிந்த நிலையைப் பற்றிய சிந்தனையை அகற்றி, உங்கள் உயர்ந்த ஆன்ம நிலையை உன்னுவீர்களாக.

* * *

சில வினாக்களும் அவற்றிற்குரிய விடைகளும் பின் தொடர்கின்றன:

அவையிலுள்ள ஒரு மனிதர் எழுந்து "நிரயத் தீயைப் பற்றிய பேச்சைப் பாதிரிகள் நிறுத்திவிட்டார்களேயானால், தங்கள் மக்கள் மீது ஆணை செலுத்த அவர்களால் இயலாது போய் விடாதா?" என்று கேட்டார்.

விடை: அதிகாரத்தை இழப்பது நன்றே. அச்சத்தினால் சமயத்தை ஏற்பவனுக்கு உண்மையான சமயமில்லையென்று தான் சொல்ல வேண்டும். அவனுடைய விலங்கியலை உணர்த்தாது, அவனுடைய தெய்வ நிலையை உணர்த்துவீர்களாக!

வினா: 'ஆண்டவன் அருள் நகர் இவ்வையகத்ததன்று,' என்று எங்கள் குரு தேவர் சொன்னாரே! அதன் பொருள் என்ன?

விடை: 'ஆண்டவன் அருள் நகர் உம் இதயத்தே இலங்குகின்றது,' என்பதுதான் அவர் கூறியதற்கு விளக்கமாகும். அவன் அருள் நகர் இப்புவிமிசை இருக்கிறது என்பதுதான் யூதர்களின் கருத்தாகும். அது இயேசுநாதரின் திருவுள்ளமன்று.

வினா: நாம் விலங்குகளிலிருந்தே தோன்றியிருக்கிறோம் என்பதை நீங்கள் நம்புகின்றீர்களா?

விடை: பரிணாமவாதத்திற்கேற்பக் கீழ் இன உலகங்களிலிருந்தே மேலினத்தோர் விரிந்திருக்க வேண்டும்.

வினா: பண்டைப் பிறவியை உணர்கின்ற யாராவது ஒருவரை நீங்கள் அறிவீர்களா?

விடை: தம் பழம்பிறவிகளைத் தாம் உணர்ந்ததாகக் கூறின சிலரை நான் சந்தித்திருக்கிறேன். தம்முடைய முன் பிறவிகளை உணரக்கூடிய நிலையை அவர் அடைந்திருக்கின்றனர்.

வினா: இயேசுநாதரைச் சிலுவையில் அறைந்தார்கள் என்பதை நீங்கள் நம்புகின்றீர்களா?

விடை: இயேசுநாதர் ஆண்டவரின் அவதாரம். அவரை மாய்க்க இயலாது. அவர்கள் சிலுவையில் அறைந்தது அவரது உருவத்தோற்றம். அது ஒரு கானல் நீரே.

வினா: அத்தகைய தோற்றத்தை அவர் எழுப்ப இயலுமாயின், அது அற்புதங்களிலும் ஓர் அற்புதமன்றோ?

விடை: உண்மைப் பாதையில் அற்புதங்களனைத்தும் முட்டுக்கட்டைகள் என்றே நான் கருதுகின்றேன். புத்தர் பிரானின் சீடர்கள் புத்தரிடம் வந்து அற்புதம் என்று சொல்லக்கூடிய ஒன்றை ஒருவன் புரிந்தான் என்று மொழிந்தார்கள்; 'மிக உயர்ந்த இடத்திலிருந்து கையால் தொடாமலே ஒரு பாத்திரத்தை எடுத்துவிட்டான் அவன். அப்பாத்திரந்தான் இது,' என்று ஒரு பாத்திரத்தைக் காட்டினார்கள். அந்தப் பாத்திரத்தை வாங்கித் தம்முடைய பாதங்களின் அடியில் வைத்து மிதித்து நசுக்கிவிட்டார் புத்தர் பிரான்; 'அற்புதங்கள் மீது உங்கள் நம்பிக்கையை நிறுவாதீர்கள். அழியாத் தத்துவங்களினிடையே நீங்கள் உண்மையை நாடுவீர்களாக!' என்று அகத்தில் திகழும் ஒளியின் இயல்பை—ஆன்மச் சுடரை—அவர்கட்கு நல்கினார். அந்த ஆன்ம ஒளியைப் பின்பற்றுவதுதான் இடரில்லாத நெறியாகும். அற்புதங்கள் யாவும் முட்டுக்கட்டைகளே. நாம் அவற்றைப் புறக்கணித்து உதறித் தள்ளி விடுவோமாக!

வினு: இயேசுநாதர் மலை ஞானச் சொற்பொழிவைப் புரிந்த தாக நீங்கள் நினைக்கின்றீர்களா ?

விடை: அவர் அச்சொற்பொழிவை ஆற்றினதாகவே நான் நம்புகின்றேன். இவ்விஷயத்தில் மற்றவர்களைப் போல நூல்களையே ஆதாரமாகக்கொள்ள வேண்டியிருக்கிறது; ஆனால், வெறும் புத்தகச் சான்றின் ஆதாரம் சற்று ஆட்டங் கொடுக்கக் கூடியதே. அந்த ஞான நல்லுரையில் அடங்கி யிருக்கிற படிப்பினைகளை நமக்கொரு வழி காட்டியாகப் பின் பற்றுவதில் யாதோர் அச்சமுமில்லை. நம்முடைய இதயத்தில் திகழும் ஆன்மாவை எது தொடுகின்றதோ, அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசுநாதர் அவதரிப்பதற்கு ஐந்நூறு ஆண்டுகட்கு முன்பே புத்தர் தம் அறிவுரையை வழங்கினுர். அவர்களுடைய உபதேசங்களனைத்துமே நல் வாழ்த்துகளாகும். அவருடைய உதடுகளிலிருந்தோ அவரது வாழ்விலிருந்தோ யாதோர் அவச்சொல்லும் பிறந்ததில்லை. ஜொராஸ்தரிடமிருந்து யாதொரு வசை மொழியும் எழவில்லை. கன்பூஷியஸ் பிரானிடமிருந்து யாதொரு வெஞ்சொல்லும் வெடித்ததாகத் தெரியவில்லை.

# சீடர் இயல் *

நான் இன்று வகுத்துக்கொண்ட பொருள் சீடரியலாகும். யான் கூறப்போவதை நீங்கள் எப்படி ஏற்பீர்களென்பதை யான் அறியேன். அதை நீங்கள் ஏற்றுக்கொள்வது சற்றுக் கடினமே; ஏனெனில், குரு சீடர்களைப் பற்றி இந்த நாடு கருதுவதற்கும் எங்கள் நாடு கருதுவதற்கும் மிக விரிவான மாறுபாடுகள் உண்டு. ஒரு முதுமொழி என் நினைவுக்கு வருகிறது: ‘பல்லாயிரக்கணக்கான குருக்கள் இருக்கலாம்; ஆனால், ஒரு சீடனைக் காண்பதரிது.’ இது உண்மையென்றே புலப்படுகின்றது. ஆன்மிகச் செல்வத்தை அடைவதில் மிக முக்கியமான அமிசம் சீடனது மனப்பாங்கேயாகும். தக்க மனப்பாங்கு திகழுமாயின், ஞானோதயம் எளிதில் ஏற்பட்டுவிடும். மெய்ப்பொருளைப் பெறுவதற்குச் சிஷ்யருக்கு என்ன தேவை? “மெய்ப்பொருளை அடைவதற்கு ஓர் இமைப்பொழுதே போதும்” என்று சிறந்த ஞானிகள் மொழிகின்றார்கள். அதை அறிகின்ற அளவே பொருந்தும். கனவு கலைகிறது; அது கலைவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கின்றது? நொடிப் பொழுதில் கனவு மறைந்துபோம். மாயை அகன்றுவிடுகின்றது; அதற்கு எவ்வளவு காலம் ஆகின்றது? இமைகொட்டும் நேரம் போதும். உண்மை உணர்கின்றபொழுது பொய் இறப்பதைத் தவிரப் பிறிதொன்றும் நிகழ்வதில்லை. பழுதையைப் பாம்பென்று ஐயுற்றேன்; இப்பொழுது அதைப் பழுதை என்று அறிகின்றேன். எல்லாம் அரை நொடி நிகழ்ச்சிதான். எல்லாம் முடிந்துபோகின்றன. நான் தெளிவடைகிறேன். ‘அதுதான் நீ; அந்த மெய்ப்பொருள் நீயே.’ இதை அறிவதற்கு எவ்வளவு பொழுதாகின்றது?

நாமே கடவுள்; எஞ்ஞான்றும் கடவுளாகவே இருந்தும் இந்நிலையை நாம் உணராது இருப்பது மிகவும் வியப்பன்றோ? இதை அறிவதுதான் இயல்பாகும். நாம் எப்பொழுதுமே அதுவாயிருந்து வருகின்றோம். அதுவாயிருக்கின்றோம் என்ற உண்மையைக் கண்டு பிடிப்பதற்கு ஊழிக் காலங்கள் தேவையில்லை.

ஆயினும், தனக்கே சான்றாய்த் திகழ்கின்ற உண்மையை—

---

* 1900-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள், 29-ஆம் நாள் சான் பிரான்ஸிஸ்கோவில் ஆற்றிய சொற்பொழிவு.

உள்ளங்கை நெல்லிக் கனி போன்ற இந்த உண்மையை—அறிவது கடினமாய்த் தோன்றுகின்றது. உண்மை ஒளிக் கதிரின் மங்கலான கடுகனைய வெளிச்சத்தின் பார்வையைப் பெறுவதற்கு முன்பே பல ஊழிகள் கழிந்துவிடுகின்றன. கடவுளே வாழ்வு; கடவுளே மெய்ப்பொருள். இதைப் பற்றி எழுதுவோம்; இதயத்தின் ஆழத்திலுங்கூட இதை உணர்கின்ருேம். கடவுளைத் தவிர மற்ற அனைத்தும் இல்லை என்று இங்கே, இன்றைக்கு உணர்வோம். அடுத்த நாள் இவ்வுணர்ச்சி மறைந்துபோய்விடும். நம்முள் வாழ்நாள் முழுதும் பெரும்பாலோர் இப்படித்தான் இருந்துவருகின்ருேம்; பொய்யைத்தழுவி உண்மையைப் புறக்கணிக்கின்ருேம். மெய்ப்பொருளை நாம் அறிய விழைகிறதில்லை. நம்முடைய இந்தக் கனவைச் சிதைக்க விரும்பமாட்டோம். இதனுல் என்ன தெரிகின்றது? ஞான குருக்கள் வேண்டுவதில்லை; யார்தான் ஞானத்தைப் பெற ஆவல்கொள்ளுகின்றனர்? மாயையை மாய்த்து மெய்ப்பொருளைக் காண ஆர்வம் கொள்கிறவன் ஒரு குருநாதனிடம் உண்மை ஒளியைப் பெற விரும்பினுல், அவன் ஓர் உண்மையான சீடனுய்த் திகழ வேண்டும்.

ஒரு சீடனுய் இருப்பது எளிதன்று. அதற்குச் சிறந்த ஆயத்தங்கள் இன்றியமையாதவை; பற்பல நிபந்தனைகளை ஏற்று நிறை வேற்ற வேண்டும். வேதாந்திகளால் நான்கு முக்கியமான நிபந்தனைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

உண்மையை உணர விரும்பும் சீடன் இவ்வுலகில்—இம்மையில்—இலாபத்தைத் தரக்கூடிய விருப்பங்களையும், அவ்வுலகில்—மறுமையில்—இலாபத்தை நல்கக்கூடிய அவாக்களையும் அறவே முதன் முதலாகத் துறக்க வேண்டும்.

நாம் காண்பது உண்மையன்று. உள்ளத்தில் விருப்பம் ஊர்ந்து வரும்வரை, நாம் நோக்குவன அனைத்தும் உண்மையல்ல. இதயத்தில் உலகப்பற்று எள்ளளவு இருந்தாலும், உண்மை உதயமாகாது. என் செவிகள் உணர என்னைச் சுற்றிலும் இவ்வுலகம் மடிந்து சிதைந்து போகட்டும்; நான் அதைப் பொருட்படுத்த மாட்டேன். மறுமை வாழ்வும் உருக்குலைந்து அழிந்தாலென்ன? சுவர்க்கம் புக நான் விரும்பேன். இந்தச் சுவர்க்கந்தான் என்ன? இம்மண்ணுலகின் தொடர்ச்சியே தவிரப் பிறிதன்று. இத்தகைய விண்ணகம் திகழாமற்போனுல், இத்தகைய மண்ணகத்தின் பயனற்ற மதியிலா வாழ்வின் தொடர்பாய் அது தோன்ருமற்போனுல், நாம் மிகுதியான நலம் உற்றிருப்போம்; நாம் காண்கின்ற பொருளற்ற சிறிய கனவுகள் விரைவில் சிதைந்து

போயிருந்திருக்கக்கூடும். நீங்கள் சுவர்க்கத்தை அடைவதால் துயரை அளிக்கும் மாயையை நீடிக்கத்தான் செய்வீர்கள்.

சுவர்க்கத்தில் நீங்கள் பெறப்போகும் பயன் யாது? தேவர் களாய்த் திகழ்வீர்கள்; அமுதத்தை அருந்துவீர்கள்; முடக்கு வாயுவும் உங்களை நண்ணும். இவ்வுலகில் காண்பதைவிட அங்குச் சற்றுத் துன்பம் குறைந்திருக்கும்; ஆனால், உண்மை ஒளி மங்கலாய்த்தான் தோன்றும். மெய்ப்பொருளை அறிவ தில் ஏழைகளைவிட மிக்க செல்வம் படைத்தவர்கள் மிகத் தாழ்ந்த வர்களே யாவார்கள். திட்டி வாயில் வழியாக ஓர் ஒட்டகம் நுழைதலுங்கூடும்; ஆனால், ஒரு செல்வம் படைத்தவன் ஆண்டவன் அருள் நகரில் புக இயலாது. தன்னுடைய செல்வம், அதிகாரம், வசதிகள், போக நுகர்ச்சிகள்—இவற்றைப்பற்றிச் சிந்திப்பதைத் தவிர வேறு நேரம் ஒரு பணக்காரனுக்கு அமையாது. பணக்காரர்கள் சமய உணர்ச்சியுடையவர்களாகத் திகழ்வது மிகவும் அரிது. 'ஏன்?' என ஒருவர் வினவலாம். சமயப்பற்று ஏற்படுமாயின், வாழ்வில் இன்பக்கூத்தும் வேடிக்கை யும் நிகழா அல்லவா?

இவ்வண்ணமே சுவர்க்கத்திலும் ஆன்மிகத் துறையில் இறங்குதற்குரிய வாய்ப்பு மிக மிக அரிதாகும். அங்கே மிகுதி யான வசதிகளும் இன்ப நுகர்ச்சியும் இருக்கின்றன. விண்ண வர்கள் தங்களுடைய இன்பக் கூத்தைத் துறப்பதற்கு விருப்ப மற்றவர்கள். அமர நாட்டில் இனி அழுகைக்குரல் கேளாதாம்! கண்ணீர் வடிக்காதவனை நான் நம்பமாட்டேன்; 'இதயம் திகழ வேண்டிய இடத்தில் ஒரு பாருங்கல்லேதான் இருக்கிறது,' என்று தான் இயம்புவேன். விண்ணவர்கட்குப் பரிவில்லை என்பது தெளிவானதே. விண்ணவர் மாபெருங்கூட்டமாய்க் கவலையற்றுத் திரிகின்றனர். நாமோ, இந்தக் கோரமான உலகில் துன்பமுற்று அல்லற்படுகின்றோம். இந்த இடும்பைப் படுகுழியிலிருந்து நம் மனைவரையும் அவர்கள் தூக்கிவிட இயலும். ஆனால், அவர்கள் அப்படி ஒன்றும் செய்வதில்லை. அவர்கள் கண்ணீர் சிந்தி அழுவ தில்லை. அங்கே துயருமில்லை; துன்பமுமில்லை. அக்காரணத்தால் அவர்கள் பிறர் துன்பத்தைப்பற்றிக் கவலைகொள்ளுவதில்லை. அமுதத்தைப் பருகுகின்றனர்; நடனங்கள் இடையறாது நிகழ் கின்றன. வனப்பு வாய்ந்த மனைவிமார்கள் அங்கே காட்சி அளிக்கின்றார்கள். இவை போன்ற இன்பக் காட்சிகள் பெருகிக் கொண்டே போகும்.

இவற்றையெல்லாம் சீடன் கடக்க வேண்டும். மேலும், "இவ்

வாழ்விலுள்ள எதைப் பற்றியும் நான் கவலை கொள்ளமாட்டேன்; இதுவரையில் இருந்து வருகிற சுவர்க்கங்களையும் நான் பொருட் படுத்தேன்; அவற்றுள் எதையும் நண்ணேன்; எந்த வகையான இந்திரிய இன்பத்தையும் நான் விரும்பேன்; உடலோடு நான் ஒன்றுபட விழையேன்; இந்த உடலுடன் இந்தப் பருத்த சதைத் தொகுதியுடன் நான் இருப்பதால், இப்படி உணர்கின்றேன். ஆனல், அதை நம்ப மறுக்கிறேன்,'' என்று சீடன் கூறிக்கொள்ள வேண்டும்.

இவ்வுலகம், சுவர்க்கங்கள் ஆகிய இவை யாவுமே ஐம்புலன் களோடு பிணைக்கப்பட்டவை. ஐம்புலன்கள் இல்லாத நிலையில் இந்த ஞாலத்தைப் பொருட்படுத்தமாட்டீர்கள். சுவர்க்கமும் இவ்வுலகந்தான். மண், விண் இவற்றின் இடையே உள்ள அனைத்துமே புவி என்ற ஒரே பெயரை உடையன. ஆதலால், சீடன் இறப்பு, நிகழ்வு என்னும் இவ்விரு காலங்களைப்பற்றியும் அறிய வேண்டும்; எதிர்காலத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். 'வாழ்வின் செழிப்பு' என்பது என்ன என்பதையும், 'சுகம்' என்பது என்ன என்பதையும் உணர்ந்து, இவ்வனைத் தையும் துறந்து, உண்மை ஒன்றையே உணர முயல்கின்ருன். இதுதான் முதன்முதலாக வகுக்கப்பட்ட நிபந்தனையாகும். இரண்டாம் நிபந்தனைக்கேற்பச் சீடன் தன் அகப்புலனையும் அடக்கியாளும் திறமை வாய்ந்தவனுயிருக்க வேண்டும். வேறு பல ஆன்மிக நற்குணங்களில் வேரூன்றியிருத்தலும் வேண்டும்.

புறப்புலன்கள், கட்புலனுகும் உடலில் பல பகுதிகளில் அமைக்கப்பட்ட இந்திரியங்களேயாகும்; அகப்புலன்களைத் தொட்டு அரிய இயலாது. கண், செவி, மூக்கு ஆகியவைகளை ஒட்டியே அகப்புலன்களுமுண்டு. இவ்விரு புலன்களின் தொகுதி யின் கட்டளைப்படியே நாமும் இடையருது ஆடிவருகின்ருேம். இந்தப் புலன்களுக்கேற்ற புலப்பொருள்களுமுண்டு. இப் பொருள்கள் அண்மையிலிருந்தால் இந்திரியங்கள் அவற்றை உணரும். நம் விருப்பப்படி ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் ஆற்றலு மில்லை; சுதந்தரமும் இல்லை. நம்முடைய பெரிய மூக்கு இருக் கிறது; பக்கத்தில் ஒரு சிறிய மணமும் வீசுகின்றது; கெட்ட நாற்றம் அடித்தால் அதை முகராதே என்று நானே மூக்கிற்கு இயம்புவேன். இயற்கையோ, 'முகர்க' என்று கட்டளை யிடுகின்றது; நான் முகர்கின்றேன். நாம் எந்த நிலைக்கு இறங்கிவிட்டோம் என்பதை உன்னிப் பாருங்கள்! நாமே

நமக்குத் தளைகளை அமைத்துக்கொண்டோம். எனக்குக் கண்கள் இருக்கின்றன ; நல்லதையோ, தீயதையோ நான் கண்ணுற வேண்டும். செவிசாய்க்கும் விஷயத்திலும் இப்படித்தான் நிகழ்கின்றது. என்னை ஒருவர் கசப்புறப் பேசினாலும், அதைச் செவி கேட்டே தீரும் ; என்னுடைய செவி உணர்ச்சி என்மீது அப்படி ஆணை செலுத்துகின்றது. எவ்வளவு துன்பம் அடைகின்றேன் நான் ; . வைகின்றார்களோ, வாழ்த்திப் புகழ்கின்றார்களோ, மனிதன் கேட்டுத்தான் தீரவேண்டும். நான் பல செவிடர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்களுக்குச் சாதாரணமாய்க் காது கேளாது. ஆனால், தங்களைப்பற்றி யாரேனும் பேசினால் செவி எப்பொழுதும் கேட்டுவிடும்.

இந்தப் புற இந்திரியங்களோ, அக இந்திரியங்களோ சீடரின் வயப்பட்டிருக்க வேண்டும். கடினமான பழக்கத்தால் இந்திரியங்களை எதிர்த்தும் இயற்கையின் கட்டளைகளைப் புறக்கணித்தும் நிற்கக்கூடிய நிலையை அடைதல் வேண்டும். அவன் தன் மனத்தை நோக்கி, 'நீ என்னுடைய அடிமை ; நான் உனக்குக் கட்டளையிடுகின்றேன். ஒன்றையும் பாராதே ; ஒன்றையும் கேளாதே,' என்று மொழிந்தால், மனம் ஒன்றையும் பாராது, எதையும் கேளாது. ஓர் உருவமோ, ஓர் ஒலியோ, மனத்தை இயங்கும்படி செய்ய இயலாது. அந்நிலையில் மனம் இந்திரிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றிருக்கும் ; அவற்றினின்றும் தனித்து நிற்கும். இந்திரியங்களோடும், உடலோடும் அது தொடர்பு அற்றுத் திகழும். புறப்பொருள்களால் மனத்திற்குக் கட்டளையிட இயலாது ; மனம் அவற்றோடு தொடர்பு வைத்துக் கொள்ள மறுக்கின்றது. இனிய மணம் அங்கே வீசுகிறது. சீடன் மனத்தைப் பார்த்து, 'அம் மணத்தை முகராதே,' என்று மொழிகின்றான். மனம் அம்மணத்தை உணர்வதில்லை. அவன் இந்நிலையை அடையும்பொழுதுதான் சீடனாய் இருக்கும் தன்மையின் தொடக்கத்திலிருப்பதாகக் கருதுவேன். 'நான் உண்மையை அறிந்தேன்,' என்று யாராவது சொன்னால், 'உனக்குப் புலனடக்கம் இருக்க வேண்டும் ; புலன்மீது உனக்கு வெற்றியிருக்குமானால், இந்திரியங்களை அடக்கிக் காட்டு,' என்றுதான் இயம்புவேன்.

அடுத்தபடியாக மனம் அமைதி அடைய வேண்டும். அது சுற்றிலும் விரைந்து ஓடிக்கொண்டேயிருக்கிறது. நான் தியானிக்க அமரும்பொழுது, உலகத்திலுள்ள மிக இழிவான பொருள்கள் என் முன் தாண்டவமாடுகின்றன. இந்நிலை மிகுந்த

அருவருப்பைத் தருகின்றது. சிந்திக்க வேண்டா என்று நான் விழைந்த சிந்தனைகளை ஏன் இம்மனம் சிந்திக்க வேண்டும்? நான் இம்மனத்திற்கு அடிமையாய்விட்டேன் போலும்! மனம் அமைதியின்றி அடங்காமற்போகும் வரையில் ஆன்ம ஞானம் பெற இயலாது. மனத்தை அடக்கச் சீடன் கற்றுக்கொள்ள வேண்டும். மனத்தின் தொழில் சிந்திப்பதுதான். ஆம், உண்மைதான். அது சிந்திக்க வேண்டா என்று சீடன் விரும்பினுல், அது சிந்திக்கக்கூடாது. அதற்குச் சீடன் கட்டளையிடுகின்ற பொழுது, அது தன் சிந்தனை ஓட்டத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும். சீடனுய்த் திகழ வேண்டுமானுல், இத்தகைய நிலை மிகவும் இன்றியமையாதது.

மேலும், சீடனுக்கு எதையும் பொறுத்துக்கொள்ளும் சக்தி மிகுதியாயிருக்க வேண்டும். வாழ்வு இன்பம் போலத் தோன்றுகின்றது. எல்லாம் யாதொரு தடங்கலின்றிச் சௌகரியமாய்ச் செல்லுகிற வரையில் மனம் ஒழுங்கான முறையில் ஓடக் காண்பீர்கள். ஏதாவது ஒரு தவறு நிகழுமானுல், மனம் தன்னிலையை இழந்துவிடுகின்றது. இது நன்றன்று. துன்புறுகிறேம் என்ற முணுமுணுப்பில்லாமலும், துயரடைகின்றேம் என்ற எண்ணமில்லாமலும், அவற்றை எதிர்ப்பதோ, அவற்றை மாற்ற மருந்து தேடுவதோ இன்னும் பழிக்குப் பழி வாங்குவதோ ஆகிய சிந்தனையில்லாமலும் எல்லாக் கெடுதல்களையும் இடும்பைகளையும் அவன் பொறுப்பானுக. அதுதான் உண்மையான பொறையாகும். அதை நீங்கள் பெறவேண்டும்.

இவ்வுலகில் நல்லனவும் தீயனவும் எஞ்ஞான்றும் இருக்கின்றன. பலர் தீயவை இருப்பதை மறந்துவிடுகின்றனர். அன்றேல் அதை மறப்பதற்காயினும் முயல்கின்றனர். ஆனுல், அவரை ஒரு கேடு பீடிக்குமாயின், அதன் சுமை தாளாது அல்லல் உறுவர். வாழ்வு கைத்துப் போய்விடும். 'தீதே உலகத்தில் இல்லை; எல்லாவற்றையும் நன்மைகளாகவே கருத வேண்டும்,' என்று வேறு சிலர் சாதிப்பர். இதுவும் ஒரு பலவீனமேயாகும். தீதின்பால் ஏற்பட்ட அச்சத்திலிருந்து இத்தகைய கருத்துப் பிறக்கின்றது. ஏதோ ஒன்று கெட்ட மணத்தை அளித்தால், அதன் மீது ரோஜா மலர் நீரைத் தெளித்து அது நறுமணம் வாய்ந்தது என்று நவிலுவானேன்?

நன்றும் தீதும் உலகத்தில் இருக்கத்தான் இருக்கின்றன. உலகில் கடவுள் தீயதையும் வைத்திருக்கிறுர். அவரை மறைத்து அவருக்காக நீங்கள் பரிந்து பேச வேண்டா. 'தீது உலகில் இருப்

பானேன் ?' என்பதைப் பற்றி ஆராய்வது உங்கள் அலுவலன்று. நம்பிக்கை வைத்து நீங்கள் வாளா இருப்பீர்களாக.

என் குருநாதர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் நோய்வாய்ப் பட்ட பொழுது, 'உமது மாபெரு மனச் சத்தி கொண்டு நோயை அகற்றிவிடலாமே!' என்று ஒரு பிராம்மணர் குறிப்பிட்டார். அவர், என் குருநாதர் நோயுற்ற இடத்தின்மீது தம் மனத்தை ஆழச் செய்தால் நோய் குணமாகிவிடுமே என்றும் மொழிந்தார். 'ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட மனத்தை மீண்டும் இந்த அற்ப உடலின்மீது திருப்புவதா ? மிக அழகாயிருக்கிறது !' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் இயம்பினுர். உடலைப் பற்றியும் பிணியைப் பற்றியும் சிந்தனை செய்ய அவர் மறுத்தார். ஆண்டவ னுடைய இடையருத உணர்வாகவே அவர் மனம் திகழ்ந்தது. அவனுக்கே முழுதும் அது அர்ப்பணம் செய்யப்பட்டிருந்தது. வேறு செயலுக்காக அதை அவர் பயன்படுத்தமாட்டார்.

நன்மைகள் என்று கருதப்படும் இந்த உடல் நலம், செல்வம், நீடுழி வாழ்வு—இவற்றின் மீது வைக்கப்படும் மிகுதியான விருப்பம் ஒரு மயக்கமே தவிரப் பிறிதன்று. இவற்றை எய்துதற் பொருட்டு மனத்தை அவற்றின் மீது செலுத்துதல், அந்த மயக்கத்திற்கு மிகுதியான வலிவை ஊட்டிவிடும். இவ்வுலக வாழ்வில் விரிந்து கிடக்கும் கனவுகளையும், மயக்கங்களையும் மீண்டும் மிகுதியாக மறுமையில்—அதாவது விண்ணில்—பெற விழைகின்றோம். மேலும் மேலும் விளைவது மாயையின் மூட்டந் தான். தீமையை எதிர்க்காதீர்கள் ; நீங்கள் இந்தத் தீமைக்கப்பா லுள்ள உயர்ந்த நிலையைச் சார்ந்தவர்கள்.

உலகில் துன்பம் இருந்தே தீரும். யாரும் அதைப் பொறுத்தே தீர வேண்டும். யாராவது ஒருவருக்குத் துன்பம் நல்காது நீங்கள் செயல்புரிய இயலாது. உலக நலங்களை நாடு கின்றபொழுது நீங்கள் தீமையைப் புறக்கணிக்கப்பார்க்கின்றீர் கள் ; ஆனுல், அது மற்றொருவனுல் நுகரப்பட வேண்டியிருக் கிறது. பிறர் தோள்களின்மீது துயர்ப் பாரத்தை ஒவ்வொருவரும் சுமத்தப் பார்க்கின்றனர். உலகிலுள்ள இன்னல்களனைத்தும் என்மீது பாயட்டும். அவற்றை நான் ஏற்றுப் பொறுப்பேன். மற்றவர்கள் இன்பம் துய்க்க விடுதலைபெறட்டும்.

சிலுவை மீது இருந்த சான்றோரை நினைப்பீர்களாக. அவர் தம்முடைய வெற்றிக்காகப் படை படையாகவுள்ள தேவ தூதர் களை அழைத்திருக்கக்கூடும். ஆனுல், அவர் எதிர்த்துப் போராட வில்லை. தம்மைச் சிலுவையில் அறைந்தவர்கள் மீது இரக்கங்

காட்டினர்; ஒவ்வோர் அவமானத்தையும் இடும்பையையும் பொறுத்தார்; எல்லாப் பாவச் சுமைகளையும் தாமே ஏற்ருர்; 'அல்லலுறும் மக்களே, பெருஞ்சுமை தாங்கி நிற்கும் வையகத்தீரே, என்னிடம் வாருங்கள். நான் உங்கட்கு அமைதியை அளிக்கின்றேன்,' என்ருர். இவ்வண்ணம் நடந்துகொள்வதுதான் உண்மைப் பொறையாகும். நம் வாழ்வின் முறையைக்காட்டிலும் அவர் எவ்வளவு உயர்ந்த நிலையில் திகழ்ந்து நிற்கின்ருர், பாருங்கள்! அடிமை வாழ்வு நடத்துகின்ற நாம் அதை அறிய முடியாதபடி அது அப்படி நிமிர்ந்து காட்சி அளிக்கின்றது. என் கன்னத்தில் ஒருவன் அடித்த அத்தருணத்தே என் கை திரும்பி அவனை அடிக்கின்றது. பளீர் என்ற சத்தமும் வெடித்து எழுகின்றது. சிலுவையில் அறையப்பட்ட அந்தப் பெருந்தகையாரின் சிறப்பையும் அருளையும் நான் எப்படி அறிய முடியும்! அதன் பெருமையை நான் உணர முடியுமா?

ஆனல், இந்த இலட்சியத்தை இதன் உயர்ந்த இடத்திலிருந்து நான் கீழே இழுத்துக்கொண்டு வரமாட்டேன். நான் உடலென உணர்ந்து, உடலுக்கு வரும் இன்னலை எதிர்க்கின்றேன். தலைவலி வந்தால் போதும்! அதை நீக்குவதற்கு இந்நீள் உலக முழுதும் சுற்றித் திரிவேன்! இரண்டாயிரம் புட்டி மருந்துகள் அருந்துவேன்! இத்தகைய நான், வியப்புறக்கூடிய மாபெரிய உள்ளம் படைத்தோர்களைத் தெரிந்துகொள்ள இயலுமோ? நான் இலட்சியத்தைக் காண்கின்றேன். அந்த இலட்சியத்தைப் பற்றி எவ்வளவு நான் உணர்ந்திருக்கின்றேன்? இந்த உடலைப் பற்றிய உணர்வு—இந்தச் சிறிய அகந்தையைப் பற்றிய உணர்வு—இதன் இன்பங்கள் துன்பங்கள், புண்கள், சுகங்கள் இவற்றைப் பற்றிய உணர்வு—இவை போன்ற எந்த உணர்வும் அந்த இடத்தை அணுக இயலாது. ஆன்மாவைப் பற்றித் தியானித்த வண்ணமே மனத்தைப் பிரகிருதியிலிருந்து இடையருது நீக்குவதால் அந்த இலட்சியத்தைப் பற்றிய ஒளியின் ஒரு கதிரை நான் பெற முடியும். உலகாயதமான எண்ணம், ஐம்புலன்கள் நுகரும் உலகத்தின் உருவங்கள்—இவற்றிற்கு அந்த உயர்ந்த இலட்சியத்தில் இடமில்லை. எல்லாவற்றையும் அகற்றுவீர்களாக; ஆன்மாவின்பால் உங்கள் மனத்தைச் செலுத்துவீர்களாக. உங்களுடைய வாழ்வு, மரணம், இன்ப துன்பங்கள், உங்கள் பெயர், உங்கள் புகழ்—இவற்றை மறப்பீர்களாக. நீங்கள் உடலுமல்ல; மனமுமல்ல; கலப்பற்ற ஆன்மா என்பதை உணர்வீர்களாக. 'நான்' என்று நான் நவிலும்பொழுது இந்த

ஆன்மாவைத்தான் கருதுகிறேன்; கண்களை மூடிக்கொண்டு 'நான்' என்றதைச் சிந்திக்கும்பொழுது என்ன உருவம் வருகிறது என்று உற்றுநோக்குவீர்களாக. உடலின் உருவம் தோன்றுகின்றதா, அன்றேல் மனத்தின் இயல்பு விரிகின்றதா என்பதைக் கவனிக்க. இவை கண்முன் மிதக்குமாயின், உண்மை யான நான் என்பதை நீங்கள் உணரவில்லை. ஆனால், ஒரு காலம் வரும். அப்பொழுது நீங்கள் 'நான்' என்று இயம்பிய மாத்திரமே, இந்தப் பிரபஞ்சத்தைக் காண்பீர்கள். அந்த அகண்ட மெய்ப்பொருளை நீங்கள் உணர்வீர்கள். அப்பொழுது உங்களுடைய உண்மையான ஆன்மாவைத் தரிசிப்பீர்கள். நீங்கள் அந்த அகண்டப் பொருள் என்பதையும் தேர்வீர்கள். அதுதான் உண்மை. நீங்கள் ஆன்மாவே, ஜடப் பொருளன்று. மாயை என்ற பொருள் ஒன்றுண்டு. அம்மாயையில் ஒன்று மற்றொன்றாகத் தவறான முறையில் கருதப்படுகின்றது. மனிதன் ஜடப்பொருளை ஆன்மாவாக நினைத்துவிடுகிறான். உடல் ஆன்மாவாகக் காட்சி அளிக்கின்றது. அதுதான் மாபெருமாயை. அம்மாயை மறைய வேண்டும்.

சீடனுக்குரிய அடுத்தபடியான தகுதி குருவின்மீது அவன் வைக்கும் நம்பிக்கையும் பத்தியுமேயாகும். குடதிசையில் குரு வெற்று அறிவை ஊட்டுகின்றான். அதோடு எல்லாம் நின்றுவிடு கின்றன. குருவோடு சீடனுக்குள்ள தொடர்போ, வாழ்வில் மிகச் சிறந்தது. என் வாழ்வில் அளவு கடந்த அன்பு வாய்ந்த நெருங்கிய உறவினர் என் குருவே. அவருக்குப் பிற்பட்டவர்களே என் தாயும் தந்தையுமாவார்கள்.

எனது முதல் வணக்கம் என் குருவுக்கே உரியது. 'இதைச் செய்,' என்று என் தந்தையார் இயம்பியதும், 'அதைச் செய் யாதே,' என்று என் குரு கட்டளையிட்டால் நான் அதைப் புரிய மாட்டேன். குரு என் தளைகளை அகற்றி ஆன்மாவை விடுவிக்கின் றார். தாய் தந்தையர் எனக்கு உடலை அளிக்கின்றனர். குருவோ, ஆன்மாவில் ஒரு மறு புதிய பிறப்பை எழுப்புகின்றார்.

எங்களுக்குத் தனிப்பட்ட நம்பிக்கைகளுண்டு. தனித் தகைமைவாய்ந்த அபூர்வமான ஆன்மாக்கள் இருக்கின்றனர் என்பது அவற்றில் ஒன்றாகும். அவர்கள் முன்பே தளைகளி லிருந்து நீங்கினவர்கள்; உலக நன்மைக்காக, உலகத்திற்கு உதவியை நல்குதற்பொருட்டு அவதாரஞ் செய்கின்றவர்கள்; பிறக்கும்போதே பற்றற்றவர்கள்; தங்களுடைய மோட்சத்தை நாடுகிறவர்களல்லர்; பிறருக்கே உதவியை அளிக்கத் தோன்றிய

வர்கள். அவர்களுக்கு ஒருவரும் கற்றுக்கொடுக்க வேண்டுவ தில்லை. குழவிப் பருவத்திலிருந்தே அவர்கள் எல்லாம் அறிந்த வர்கள்; ஆறு மாதக் குழந்தையாயிருக்கும்பொழுதே மிக மிக உயர்ந்த உண்மையை ஓதும் வல்லவர்களாய்த் திகழ்கின்றார்கள்.

மனித இனத்தின் ஆன்ம வளர்ச்சி இத்தகைய பந்தமற்ற ஆன்மாக்களைத்தான் சார்ந்து நிற்கின்றது. இவர்கள்தாம் முதல் விளக்குகள். இவ்விளக்குகள் மூலந்தான் மற்றைய விளக்குகள் ஏற்றப்படுகின்றன. இந்த ஆன்ம தீபம் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது என்பது உண்மையே. ஆனால், பெரும்பாலோரிடத் தில் இது கரந்து நிற்கின்றது. இச்சான்றோர்கள் தொடக்கத்தி லிருந்தே ஒளி வீசும் தீபங்களாவார்கள். இவர்களை நண்ணுகிற வர்கள் தங்கள் உள்ளங்களிலேயே இத்தகைய விளக்குகள் ஏற்றப் படுவதைக் காண்பார்கள்போலும்! ஆனால், முதல் தீபத்தின் ஒளி குன்றுகிறதில்லை; அது ஒன்றையும் இழந்துவிடவில்லை. அது மற்றைய விளக்குகளுக்கு ஒளியை அளிக்கின்றது. கோடிக் கணக்கான தீபங்கள் ஏற்றப்படுகின்றன; ஆனால், சுடரை அளித்த முதல் விளக்கோ, குன்றா ஒளியுடன் சுடர் விட்டுக் கொண்டே இருக்கிறது. முதல் விளக்குதான் குரு. அந்தத் தீபத்தினின்று ஏற்றப்பட்ட விளக்குதான் சீடன். இந்த விளக்கு முறையே குருவாகும். இப்படியே தீபங்கள் தொடர்ந்து குரு சீடர், சீடர் குரு என்னும் வரிசையில் ஒளி விட்டுக்கொண்டே போகும். ஆண்டவனுடைய அவதாரங்கள் என்று வழங்கப்படு கின்ற இச்சான்றோர்கள், ஆன்மிகத் துறையில் வானளாவும் மாபெரிய உருவங்களே. இவர்கள் உலகில் தோன்றித் தங்கள் முதல் சீடர்களுக்குத் தங்கள் ஆற்றலை அளிப்பதால் ஒரு பெரிய ஆன்மிகச் சத்தி வெள்ளத்தைப் பெருகும்படி செய்துவிடுகின்றார் கள். இவ்வெள்ளம் சீடர்கள் வாயிலாகப் பரம்பரை பரம்பரை யாகப் பொங்கிப் பாய்ந்துகொண்டே போகின்றது.

கிறித்தவ மடத்தைச் சார்ந்த மத குரு தம் கையால் தொடுவ தால் மத குரு பரம்பரை வாயிலாகத் தமக்கு வந்த சத்தியை அளிப்பதாக மொழிகின்றார். இயேசுநாதர் தம் சீடர்களுக்கு இந்தச் சத்தியைக் கொடுத்ததாகவும், அவர்கள் மூலமாக இயேசுநாதரின் சத்தி பரம்பரையாகத் தமக்குப் பெருகிவந்ததாக வும் பகர்கின்றார். மத குரு மட்டுமே இதைப் பெறவில்லை; ஒவ்வொருவரிடத்தும் இத்தகைய சத்தி உறைகின்றது என்ற கருத்தை உடையவர்களாய் நாம் இருக்கின்றோம். இந்த மாபெரிய

ஆன்ம சத்தி வெள்ளம் பெருக ஏன் ஒவ்வொருவரும் ஒருவாய்க் காலாகத் திகழக் கூடாது?

ஆனால், முதலில் ஒரு குருவைத் தேட வேண்டும். அவர் உண்மையான குருவாயிருத்தல் வேண்டும். அவர் சாதாரண மனிதர் அல்லர் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுவது நலமாம். உண்மையான குரு உடலல்லர்; உடலைத் தாங்கிய மனிதருமல்லர். உங்கள் கண்களுக்குப் புலப்படுகிறது போல அவரில்லை. அந்தக் குரு மனித வடிவத்தில் வரலாம். அவரிட மிருந்து நீங்கள் சத்தியைப் பெறலாம். சில சமயங்களில் கனவில் தோன்றி அவர் உலகத்திற்குச் சிறந்த பொருள்களை நல்குவார். பலவழிகளாக நமக்குக் குருவின் சத்தி வரக்கூடும். அழிவுறும் நம்மைப் போன்ற சாதாரண மக்களுக்குக் குரு வரத்தான் வர வேண்டும். அதற்குற்ற தகுதியான முயற்சிகளை அவர் தோன்றுகிற வரையில் நாம் புரிந்து கொண்டேதான் இருக்க வேண்டும்.

நாம் சொற்பொழிவுகளைக் கேட்கின்றோம்; நூல்களைப் படிக் கின்றோம்; கடவுளைப் பற்றியும், ஆன்மாவைப் பற்றியும், சமயத் தைப் பற்றியும், மோட்சத்தைப் பற்றியும் வாதிக்கின்றோம்; தருக்க முறையில் ஆராய்கின்றோம். இவை யாவும் உண்மையான ஆன்மிகத் துறைகளாகா. ஏனெனில், ஆன்மிக உணர்வு நூல் களில் இல்லை; கொள்கைகளிலில்லை; தத்துவ சாத்திரங்களில் இல்லை. படிப்பில் இல்லை; தருக்க வாதத்தில் இல்லை; ஆனால், அகத்தில் மலரும் உண்மையான ஆன்ம வளர்ச்சியிலேதான் அது திகழ்கின்றது. கிளிகளும் பொருள்களை மனப்பாடம் செய்து திரும்ப ஒப்பிக்கும். நீங்கள் படித்த பண்டிதராய்த் திகழ்ந்ததால் யாது பயன்? கழுதைகளால் நூல் நிலையங்களைத் தையும் சுமந்து செல்லக்கூட இயலும். உண்மையான ஒளி உதயமாகுங்கால் இதை நூல்கள் வாயிலாகக் கற்க வேண்டுவ தில்லை—இனிப் புத்தகப் படிப்பு வேண்டா. தம்முடைய பெயரைக் கூட வரையத் தெரியாதவர்களும் பூரண ஆன்மிக உணர்ச்சி ததும்பினவர்களாய்த் திகழலாம். உலகத்திலுள்ள நூல் நிலையங் களையே மண்டையில் சுமந்து சென்றாலும், ஆன்மிக ஞானச் செல்வத்தைப் பெறத் தவறிவிடலாம். ஆன்மிக வளர்ச்சிக்குப் படிப்பு ஒரு நிபந்தனையன்று. ஆழ்ந்த புலமையும் தேவை இல்லை. குருவின் கரம் படுதல் போதும். அது வழியாக ஆன்மிகச் சத்தி பாய்ந்து இதயத்தைத் தளிர்க்கச் செய்துவிடும். அப்பொழுது தான் வளர்ச்சி தொடங்கும். இதுதான் ஞானச் சுடர் வெள்ளத்

தில் தோய்வதாகும். அயர்வுற்றுத் தங்காமல் மேன்மேலும் செல்வீர்களாக.

என்னுடைய நண்பர்களுள் ஒருவரான உங்கள் கிறித்தவ சமய போதகர் இயேசுநாதரிடம் எனக்கு நம்பிக்கை உண்டா என்று பல ஆண்டுகளுக்கு முன்பு வினவினர். 'ஆம்; நம்பிக்கை உண்டு,' என்று நான் விடை அளித்தேன்; 'மற்றவர்களைக் காட்டிலும் அவரிடத்தில் சற்றுமிகுதியான மரியாதை உண்டு,' என்றும் உரைத்தேன். அவர், 'அப்படியானால் ஞானப் புனல் ஆடலாமே?' என்றார். நான், 'எப்படி ஞான ஸ்நானம் பெற இயலும்? யாரால் அது அளிக்க முடியும்? உண்மையான ஞானப் புனித நீரை அளிக்கக்கூடிய சான்றோன் எங்கே? "ஞான ஸ்நானம்" என்பது என்ன? வெறுந்தண்ணீரை உங்கள்மீது தெளிப்பதுதானா? பொருளற்ற மந்திரங்களை முணுமுணுத்த படியே தண்ணீரில் உங்களை ஆழ்த்துவதா?' என்றெல்லாம் கேட்டேன். ஞான நீராட்டமென்பது ஆன்ம வாழ்க்கையில் நேர் முகமாகப் புகுவதே. உண்மையான நீராட்டம் ஏற்பட்டால், நீங்கள் உடலல்ல, ஆன்மா என உணர்வீர்கள். இத்தகைய ஞான நன்னீரை எனக்கு அளிக்க இயலுமா, பாருங்கள்! அன்றேல் நீங்கள் கிறித்தவர்கள் அல்ல. பெயரளவுக்கு ஞான நன்னீராட்டத் திற்குப் பிறகும் நீங்கள் அப்படியேதான் இருக்கின்றீர்கள்; யாதொரு மாறுதலும் காணவில்லை. 'இயேசுநாதர் பெயரால் ஞான நீராடினேம்,' என்று சொல்லுவதில் என்ன பொருள் இருக்கிறது? வெற்றுப் பேச்சு—உங்கள் அறிவின்மையால் உலகத்தைக் குழப்பும் வெறும்பேச்சேயாகும். அஞ்ஞான இருளில் ஆழ்ந்துகொண்டே படித்தவர்களாயும் அறிவுள்ளவர்க ளாயும் தங்களைக் கருதுகின்றார்கள் இந்த அறிவிலிகள்; சுற்றிச் சுற்றிச் சுழன்று இங்குமங்கும் தடுமாடுகின்றார்கள். இது குருடர்கள் குருடர்களுக்கு வழிகாட்டுவதை ஒக்கும். [கடோப நிஷத்து, I : ii : 5] கிறித்தவர்களென்று உங்களை வழங்காதீர்கள்; ஞான நன்னீராடல் போன்ற பொருள்களைப் பற்றித் தற்பெருமை கொள்ளாதீர்கள்.

ஆனால், உண்மையான ஞான நீராட்டமும் இயல்பாகவே உண்டு. இயேசுநாதர் உலகத்தில் அவதாரம் செய்து அறிவுரை வழங்கிய தொடக்கத்தில் அது பொலிவுற்றுத் திகழ்ந்தது. ஒளி பெற்ற ஆன்மாக்கள்—அவ்வப்பொழுது இப்புவியின்மீது அவ தாரஞ் செய்கின்ற பெரியோர்கள்—அந்தத் தெய்வக் காட்சியைப் புலப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தவர்கள். இதுதான் ஞான நீராட்ட

மாகும். ஒவ்வொரு சமயத்தையும் பற்றிய வெற்று மந்திரங்களும் சடங்குகளும் தோன்றுவதற்கு முன்பு உலக உண்மையின் கருவைப் பார்க்கின்றோம். காலம் செல்லச் செல்ல உண்மையானது நினைவை விட்டு அகன்று போய்விடுகின்றது. பொருளற்ற உருவங்களாலும் சடங்குகளாலும் உண்மையாம் நற்பயிர் தடையுற்றுத் திணறி மூச்சற்றுப்போய்விடுகின்றது போலும்! சடங்குகளாம் வெற்றுக் கூடுகளே இருக்கின்றன; ஞான நன்மணி மறைந்து போய்விடுகிறது. அது தங்கிய பேழைதானிருக்கிறது. ஞான நீராட்டச் சடங்குதான் எஞ்சி நிற்கின்றது. உயிரளிக்கும் ஞான நன்னீரின் ஆவியை எழுப்பக்கூடியவர்களைக் காணவில்லை. வெறுஞ் சடங்கின் வடிவம் போதாது. உளம் தொடும் உண்மையைப் பற்றிய மெய்ஞ்ஞானம் அடைய நாம் விழைந்தால், நாம் தீட்சை பெறவேண்டும். அதுதான் இலட்சியமாகும்.

குரு எனக்கு உபதேசம் செய்து அந்த ஒளிக்கு என்னை அழைத்துச் செல்ல வேண்டும். எந்த ஞானச் சங்கிலியில் தாம் ஓர் இணைப்பாய் இருக்கின்றாரோ, அந்தச் சங்கிலியில் என்னையும் ஓர் இணைப்பாகச் செய்ய வேண்டும். தெருவில் திரியும் சாதாரண மனிதன் தன்னை ஒரு குரு என்று உரிமை பாராட்டிக் கொள்ள இயலாது. தெய்வ உண்மை ஒளியை நேரில் கண்டு தன்னை ஆன்மா என்று உணர்ந்தவனே குருவாயிருக்க இயலும். வெற்றுப் பேச்சுப் பேசுகின்றவன் குருவாய் அமைய இயலுமோ? பேச்சில் திளைக்கிறவன் நிரம்பப் பேசிக்கொண்டேயிருப்பான்! அவன் ஒரு குருவாய்த் திகழத் திறமை அற்றவனே. சீடனைப் பார்த்து, 'எழுந்துபோ; இனிப்பாவம் புரியாதே,' என்று ஒரு குருவானவர் நல்லுரை வழங்குவாராயின், அவனால் பாவம் புரிய இயலாது—இனிப்பாவம் செய்யும் ஆற்றலும் அவனிடம் இராது.

என்னுடைய வாழ்வில் இத்தகைய சான்றோர்களை நான் கண்டிருக்கிறேன். நான் கிறித்தவரின் வேதத்தைப்போன்ற எல்லா நூல்களையும் படித்திருக்கின்றேன்; அவை யாவும் நாம் இறும்பூது எய்துதற்குரிய நிலையிலேதான் இருக்கின்றன. நம் உயிரைத் தொடக்கூடிய ஆற்றலை நூல்களில் காண இயலாது. ஒரு நொடிப் பொழுதில் நம் வாழ்வையே முற்றிலும் மாற்றக் கூடிய சத்தியை ஞான நல்லொளி பெற்றுத் திகழ்கின்ற ஆன்மாக்களிடத்திலும் அவ்வப்பொழுது தோன்றித் தீபங்கள் போல ஒளிவிடுகின்ற உத்தமர்களிடத்திலுந்தான் காண இயலும். அவர்களே ஞான குரவர்களாய் மிளிரத் தகுதியுள்ளவர்கள். நீங்களும் நானும் வெற்று வாய்ப்பந்தல் போடுகின்றவர்களே;

ஞான குரவர்களாய் இருக்க ஆற்றலற்றவர்கள். நாம் பேச்சால் இவ்வையகத்தைக் குழப்பிக் கேட்டை விளைவிக்கக்கூடிய அதிர்ச்சிகளை எழுப்புகின்றோம்; நம்பிக்கை வைத்து இறைஞ்சுகின்றோம்; அரும்பாடு படுகின்றோம். உண்மையை அடையும் நன்னாள் வரும். நாம் பேசவேண்டிய தேவை அப்பொழுது தோன்றவே தோன்றாது. குருவோ, பதினாறு வயதுச் சிறுவர். எண்பது வயது வந்த கிழவரோ, அவருக்குச் சீடர். அவருக்குச் சிறுவர் உபதேசஞ்செய்கிறார். மோனந்தான் குருவின் பாடம் கற்பிக்கும் முறை. சீடருடைய ஐயங்கள் மீண்டும் எழாமல் அறவே மறைந்து போய்விடுகின்றன.* அவரே உண்மையான குரு. இத்தகைய குருவைக் கண்டதாக உன்னிப்பாருங்கள். அப்பொழுது அவர்பால் உங்களுக்கு எவ்வளவு ஆர்வமும் அன்பும் இருக்கும்! ஏன்? அவர் கடவுளே; அவரைத்தவிர வேறல்லர். அக்காரணத்தால் இயேசுநாதரின் சீடர்கள் அவரைக் கடவுளாகவே போற்றி வழிபட்டார்கள். குருவைச் சீடன் கடவுள் என்றே இறைஞ்ச வேண்டும். அவன் கடவுளை நேரில் கண்டு உணர்கிற வரையில் மனித வடிவெடுத்து நடமாடும் கடவுளைப் பற்றித்தானே அவன் அறிவதெல்லாம் இருக்கும்? வேறு முறையில் அவன் எப்படிக் கடவுளைக் காணமுடியும்?

இயேசுநாதர் பிறந்த பத்தொன்பது நூற்றாண்டுக்குப் பின்பு தோன்றிய அமெரிக்க நாட்டு மனிதன் யூதர் இனத்தைச் சார்ந்தவனல்லன்; இயேசுநாதரையோ, அவர் குடும்பத்தாரையோ பார்த்தவனல்லன். அவன் பின்வருமாறு மொழிகின்றான்: "இயேசுநாதர் கடவுளாவார். அவர்பால் நம்பிக்கை வைக்காமற்போனால், நீ நிரயத்திற்குள் புகுந்துவிடுவாய்." இயேசுநாதரின் சீடர்கள் அவரிடம் வைத்த ஆர்வத்தையும் நம்பிக்கையையும் நாம் அறிய இயலும். அவர் அவர்கட்குக் குருவே. அவர்கள் அவரைக் கடவுளாகவே நம்பினார்கள். பத்தொன்பது நூற்றாண்டுக்கு முன்பு தோன்றிய சான்றோரோடு இந்த அமெரிக்க நாட்டில் பிறந்தவனுக்கு என்ன தொடர்பு இருக்கும்? உன்னிப் பாருங்கள். நான் இயேசுநாதரை நம்பாமற்போவேனாகில் நிரயத்தில் தள்ளப்படுவேன் என்று இந்த இளைஞன் என்னிடம் உரைக்கின்றான். இயேசு நாதரைப் பற்றி இவ்விளைஞனுக்கு என்ன தெரியும்? இவன் பைத்தியக்கார மருத்துவச்சாலைக்குப் போகத் தகுந்தவன். இத்தகைய

* இது தட்சிணாமூர்த்தி தோத்திரத்தைத் தழுவிப் பேசப்பட்டது (12)

நம்பிக்கை போதாது. தன்னுடைய ஞான குருவைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

இயேசுநாதர் மீண்டும் பிறந்து உங்களிடம் வருவார்; அவரைக் கடவுள் என்று வழிபட்டால் எல்லாம் நலமாய்த் திகழும். ஞானகுரு வருகிற வரையில் நாம் அனைவரும் காத்திருக்க வேண்டும். குரு தெய்வமென்றே தொழப்படுவதற்குரியவர். அவர் கடவுளே; அவருக்குச் சற்றும் குறைந்தவரல்லர். அவரை உற்று நோக்கினால் குருவின் வடிவம் மெல்லக் கரைந்து மறைந்து போய் விடும். என்ன எஞ்சி நிற்கும்? குருவின் வடிவச் சித்திரம் கடவுளின் வடிவத்திற்கு இடந்தந்துவிடுகிறது. குருவின் ஒளியுள்ள முகமூடியைப் போர்த்துக் கடவுள் நம்மிடம் வருகின்றார். நாம் சற்றும் சலனமின்றி அவரை நோக்கிய வண்ணமே இருந்தால், அம் முகமூடி அகன்றுவிடும். அப்பொழுது கடவுளேகாட்சி அளிப்பார்.

சச்சிதாநந்தத்தின் வடிவாயும், உயர்ந்த ஞானமே உருவெடுத்ததாயும் மிகச்சிறந்த அருட்செல்வத்தை வழங்கும் வள்ளல் தன்மையின் தோற்றமாயும் திகழ்கின்ற அக்குருவை நான் வணங்குகின்றேன்! அவர் தூய்மை உள்ளவர்; பூரணமானவர்; உயர்வற உயர்ந்தவர். எஞ்ஞான்றும் உள்ளவர்; இன்ப துன்ப எல்லைகளைக் கடந்தவர்; எல்லாக் குணங்களுக்குமப்பால் திகழ்பவர்; எல்லாவற்றிற்கும் மேல் சென்றவர்; சிந்தையைத் தாண்டிக் காட்சி அளிப்பவர். உண்மையான குரு இத்தகைய இயல்புள்ளவர். சீடன் அவரைக் கடவுளென்றே நினைக்கிறான்; அவரை நம்புகின்றான்; அவரை வணங்குகின்றான்; அவர் சொற்படி நடக்கின்றான். வாய் பேசாமலே அவரைப் பின்பற்றுகின்றான். குருவுக்கும் சீடனுக்கும் உள்ள தொடர்பு இத்தகைய தொடர்பாய்த்தான் திகழ வேண்டும்.

சீடன் நிறைவேற்றக் கூடிய அடுத்தபடியான நிபந்தனை இதுதான். விடுதலை உறுவதற்குரிய ஆர்வத்தை எழுப்பும் முறையை அவன் கருத வேண்டும். அது நம்மை வாட்டிவிடும் என்று நாம் நன்கு உணர்கின்றோம். ஆயினும், விட்டில்கள் போலக் கொழுந் தீயில் புகுந்துவிடுகின்றோம். ஐம்புலன்கள் நம்மைச் சுட்டெரிக்கின்றன. அவை நம்முடைய விருப்பத்தை விரியச் செய்கின்றன என்பதையும் அறிகின்றோம். ‘நுகர்ச்சியால் விருப்பம் தணிகிறதில்லை. நெய்யைத் தீயினில் சொரிந்தால் வளருந்தீப்போல, நுகர்ச்சி விருப்பத்தை ஓங்கச் செய்துவிடும்’*

* பாகவதம், IX-XIX-14.

விருப்பம் விருப்பத்தை வளர்க்கின்றது. இதை உணர்ந்தும் அதில் மக்கள் எக்காலத்திலும் ஆழ்ந்துவிடுகின்றார்கள். பிறப்பு தோறும் விரும்பும் பொருள்களை நாடியே அவர்கள் செல்கின்றார்கள்; அதன் விளைவாக மிகவும் துன்புறுகின்றார்கள். ஆனால், விருப்பத்தை அவர்களால் துறக்க முடியவில்லை. தங்களை இந்தக் கோரமான விருப்பமாகிய தளையிலிருந்து விடுவிக்கக் கூடிய சமயத்தையும் தங்கள் விருப்பத்தைத் தணிக்கக் கூடிய கருவியாக அவர்கள் அமைத்துக்கொள்ளுகின்றார்கள். விடுதலை அடைவதற்குப் பதிலாக உடல் நலத்திற்காகவும் செல்வத்திற்காகவும் நீண்ட ஆயுளுக்காகவும் ஆண்டவரை இறைஞ்சுகின்றார்கள். "ஆண்டவரே, என் தலைவலியைப் போக்குவீராக; செல்வத்தை நல்குவீராக; இன்னும் ஏதேனும் அளிப்பீராக," என்ற பிரார்த்தனை ஒலிதான் கேட்கும். நம் காட்சியின் வட்டம் மிகவும் குறுகிவிட்டது போலும்! இழிந்த நிலைக்கு இறங்கிவிட்டதே விலங்கியல்பாய்விட்டது; அது மிருகத்தன்மையை எய்திவிட்டதன்றோ? இந்த உடலுக்கப்பாலுள்ள ஒன்றையும் மனிதன் விழைவதாகத் தெரியவில்லை. இந்தக் கோரமான இழிவை என்னென்று இயம்புவது! இந்தப் பயங்கரமான துன்பத்தை என்னென்று சாற்றுவது! இந்த அற்பத் தசை, இந்த ஐம்புலன்கள், இந்த வயிறு—அந்தோ! இவற்றின் வழிபாடுதானா செய்யத் தகுவது? வயிறு சிற்றின்ப உணர்ச்சி இவற்றின் செயற்கையைத் தவிர, பிரபஞ்சத்தில் வேறென்ன இருக்கின்றது? கோடிக்கணக்கான ஆடவர்களையும் பெண்டிர்களையும் நோக்குங்கள். எதற்காக அவர்கள் வாழ்கின்றார்கள் என்பதையும் பாருங்கள். அவர்கள் விரும்பும் பொருள்களை அகற்றிவிடுங்கள்; தங்கள் வாழ்வை ஒரு பாழாயும், பொருளற்றதாயும், பொறுக்க முடியாததாயும் காண்பார்கள். இந்நிலையிலேதான் நாமிருக்கிறோம். நம்முடைய மனமும் அப்படித்தானிருக்கிறது. வயிற்றுப் பசியையும், காம வேட்கையாம் பசியையும் தணிப்பதற்குரிய வழிகளையும் உபாயங்களையும் இது இடையறாது தேடிக்கொண்டே இருக்கிறது. இதற்கு ஓய்வே இல்லை. எல்லையற்ற துன்பமும் விரிகின்றது. இந்த உடலைச் சார்ந்த விருப்பங்களை நிறைவேற்றுவதால் ஒரு கண இன்பத்தைத்தான் நாம் பெறுகின்றோம். ஆனால், இவை முடிவற்ற இடும்பையை நல்கிவிடுகின்றன. இவை மேற்பரப்பில் அமுதமும் அடியில் எல்லாம் நச்சுமாயிருக்கும் கிண்ணப் பானத்தைப் பருகுவதை ஒக்கும். எனினும், இத்தகைய பொருள்களை நாம் மிக்க ஆர்வத்துடன் நாடுகின்றோம்.

இந்நிலையில் நாம் என்ன செய்யக்கூடும்? இந்தத் துன்பத்தி லிருந்து நம்மை விடுவிப்பதற்குரிய ஒரே பாதை உள்ளது. ஐம் புல இன்பங்களையும் அவாவையும் துறப்பதே உய்யும் வழியாகும். ஆன்மிக உணர்ச்சியை அடைய விரும்பினால் எல்லாவற்றையும் துறக்கத்தான் வேண்டும். இதுதான் உண்மையான உரைகல் லாகும். இந்த உலகத்தைத் துறந்துவிடுங்கள். ஐம்புலன்களின் பிதற்றல் போதும்.

உண்மையான ஒரே விருப்பந்தான் உளது; உண்மையை அறிந்து ஆன்மிக வாழ்வு நடத்துவதுதான் நம் அவாவாய் இருத்தல் வேண்டும். உலகாயதம் போதும்; இந்த அகந்தை ஆட்சி போதும்; நான் ஆன்மிக ஒளி பெற வேண்டும். அந்த விருப்பம் மிகுந்த வலிவுள்ள செறிவு மிக்க விருப்பமாய் இலங்கு வது நலமாகும். கைகளையும் கால்களையும் அசையாவண்ணம் ஒருவனைக் கட்டிப்போட வேண்டும். எரியும் ஒரு கொள்ளிக் கட்டையை அவன் உடல் மீது வைக்க வேண்டும். தன்னுடைய முழு ஆற்றல்கொண்டு அந்தத் தளையை அவன் அறுக்க முயல் வானன்றோ? என்னைச் சுட்டு வாட்டும் இந்த உலகத்தை உதறித் தள்ளக்கூடிய அத்தகைய விருப்பம்—அத்தகைய அமைதியற்ற போராட்டம்—என் உள்ளத்தில் எழுமாயின், அப்பொழுதுதான் தெய்வ உண்மைச் சுடரின் ஒரு கதிர் எனக்குக் கிட்டும் காலம் வந்ததாகக் கருதப்படும்.

என் நிலையை நோக்குங்கள். இரண்டு அல்லது மூன்று டாலர்கள் அடங்கிய பையை இழந்துவிட்டால், அதைத் தேடு வதற்கு இருபது தரம் இல்லத்திற்குள் போய் மீண்டும் திரும்பு வேன். எவ்வளவு கவலை! எவ்வளவு தொந்தரவு! எவ்வளவு போராட்டம்! உம்மில் யாராவது ஒருவர் எனக்கு இடர் செய்தால், இருபது ஆண்டுகளானாலும் அதை நினைவில் வைத்திருப்பேன்; அவரை மன்னிக்க மாட்டேன்; மறக்கவும் என்னால் இயலாது. ஐம்புலன்களுக்குரிய அற்பப் பொருள்களைப் பற்றி இப்படி நான் போராடுகின்றேனே! ஆண்டவரை அறிவதற்காக அவ்வண்ணம் யார் அரும்பாடுபடுகின்றனர்? ''குழவிகள் விளையாட்டில் எல்லா வற்றையும் மறந்துவிடுகின்றன. இள வாலிபர்களோ, ஐம்புல இன் பங்களை நுகர வெறி பிடித்து அலைகின்றார்கள். வேறொன்றையும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. முதியோர்கள் தங்கள் கழிந்த தீச்செயல்களை நினைந்து நினைந்து நைகின்றார்கள்.'' (சங்கரர்) வேறு வகையான இன்பத்தைத் துய்க்க இயலாத அவர்கள் இறந்து போன இன்பங்களை நினைந்து மகிழ்வுறுகின்றார்கள்; அசை

போடுவதுபோலவே பழைய நினைவுகளில் திரும்பத் திரும்பத் தோய்கின்றார்கள். அதுதான் அவர்கள் கண்ட மிகச் சிறந்த வழியாகும். ஐம்புல நுகர்ச்சிப் பொருள்கள்பால் வைக்கும் ஆர்வம் போல, ஆண்டவரைக் காணக் கவலைப்படுவதில்லை.

"கடவுள்தான் உண்மை; அதுதான் மெய்யாகவே இருக்கிறது. ஆன்மா ஒன்றேதான் ஒளிவிடுகின்றது; ஜடப்பொருளே இல்லை," என்று எல்லோரும் இயம்புகின்றனர். ஆனால், அவர்கள் கடவுளிடம் இரக்கும் பொருள்களோ, ஆன்மாவைப் பற்றியவையல்ல. அவர்களுடைய பிரார்த்தனைகளில் ஆன்மா ஜடப் பொருளிலிருந்து பிரிக்கப்படவில்லை. இது மிக இழிவான நிலை தான்; சமயங்கூட இப்படி மாறிவிட்டது. எல்லாம் போலியாய் விட்டன. ஆண்டுகள் கழிகின்றன. ஆன்மிகத் துறையில் ஒன்றும் அடைந்ததாகத் தெரியவில்லை. அந்தப் பரமான்மாவைக் கண்டுபிடிப்பதற்குரிய பசியும் தாகமுந்தான் ஒருவனுக்கு ஏற்பட வேண்டும். ஏனெனில், அது ஒன்றுதான் மெய்ப்பொருளாய் இருக்கிறது. அதுதான் இலட்சியம். அதை இப்பொழுது அடைய இயலாது என்றால், இயலாது என்று சொல்வதால் தவறில்லை. அது இலட்சியமென்பதை நான் நன்குணர்வேன்! ஆனால், அதைப் பின்பற்ற முடியாது என்று சொல்லிக்கொண்டு வாளா (சும்மா) இருத்தல் நீங்கள் செய்யக்கூடிய காரியமன்று. சமயத்தை ,இழிவுபடுத்துகின்றீர்கள்; உங்கள் நிலைக்கு அதைக் கொணர்ந்து நிறுத்துகின்றீர்கள்; 'ஆன்மா, ஆன்மா' என்று சொல்லிக்கொண்டே ஜடப்பொருளை நாடுகின்றீர்கள். நீங்கள் அனைவரும் நாத்திகர்களே. ஐம்புலன்களைத் தவிர வேறொன்றிலும் உங்கட்கு நம்பிக்கை இல்லை. "யார் யாரோ சொன்னார்கள்; எதை எதையோ, மொழிந்தார்கள். ஒரு விளையாட்டுக்காகவாவது அதைப் பரீட்சை செய்து பார்ப்போம். அதிலிருந்து ஏதோ நன்மை பிறக்கலாம்; என் முறிந்த கால் ஒழுங்காய்ப் போய்விடலாம்," என்னும் இம்முறையிலேதான் மக்கள் நடக்கின்றார்கள்.

நோயுற்றவர்களுடைய நிலையோ, மிகத்துன்பமான நிலையாகும். அவர்களே மிகுதியாகக் கடவுளை வணங்குகின்றார்கள். ஏனெனில், கடவுளை இறைஞ்சினால், அவர் தங்கள் நோய்களை அகற்றிவிடுவார் என்று அவர்கள் நம்புகின்றார்கள். அதை முற்றிலும் கெடுதல் என்று சொல்லுவதற்கு இடமில்லை. அவர்களுடைய பிரார்த்தனைகள் உள்ளத்திலிருந்து எழுமானால், அது போதும். மேலும் இத்தகைய பிரார்த்தனை சமயமாகாது என்பதை அவர்

கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். கிருஷ்ண பரமாத்துமா, "நான்கு வகையான மக்கள் என்னை வணங்குகின்றார்கள்," என்று கீதையில் (VII—16) சாற்றுகின்றார். இடும்பையுற்றவர்கள், உலக நலங்களை நாடுகின்றவர்கள், உண்மையை ஆய்வதற்கு விரும்புகின்றவர்கள், உண்மையை உணர்ந்தவர்கள் என்னும் இவர்களே அந்நான்கு வகைகளைச் சார்ந்தவர்கள். இடும்பையுற்றவர்கள் அதை அகற்றி ஆறுதல் பெற ஆண்டவரை அணுகுகின்றார்கள்; நோய்வாய்ப்பட்ட பொழுது நோய் குணமாதற்பொருட்டுக் கடவுளைத் தொழுகின்றார்கள். பொருளை இழந்தவர்கள் அதை அடைதற்பொருட்டுப் பிரார்த்தனை புரிகின்றார்கள். எல்லா வகையான பொருள்களையும் ஆண்டவரிடம் யாசிக்கும் மாந்தர்களும் உண்டு. ஏனெனில், அவர்களுடைய உண்மை, விருப்பம் மண்டிக்கிடக்கும் உண்மையாயிருக்கிறது. பெயர் வேண்டும்; புகழ் வேண்டும்; செல்வம் வேண்டும்; பதவி வேண்டும்; இவை போன்ற அனைத்தும் அவர்கட்கு வேண்டும். "கன்னி மேரி அம்மையே, நான் விழைந்தது எனக்குக் கிடைக்குமாயின், நான் என் காணிக்கையைச் செலுத்துகிறேன்; என்னுடைய பிரார்த்தனை நிறைவேறும்படி செய்தால் நான் கடவுளை வணங்கி ஒவ்வொன்றிலும் ஒரு பகுதியை உனக்குச் சமர்ப்பிக்கின்றேன்," என்று இப்படி உலகாயதமாயில்லாமல் இருக்கிற சிலருக்கு ஆண்டவரிடத்தில் நம்பிக்கை இல்லை. ஆனால், அவரைப்பற்றி அறிய வேண்டுமென்பதை உணர்கின்றனர்; தத்துவ நூல்களைப் படிக்கின்றனர்; சமய நூல்களை ஓதுகின்றனர்; சொற்பொழிவுகளைக் கேட்கின்றனர்; ஆய்வுத்துறையில் என்ன செய்யவேண்டுமோ, அத்தனையும் செய்கின்றனர். அவர்களே உண்மையை ஆய்பவர்கள். இறுதியாகச் சொல்லப்பட்ட இனத்தார்தாம் கடவுளைத் தொழுது அவரை உள்ளபடி உணர்கின்றனர். இந்த நால்வகையான தொழுபவர்கள் கெட்டவர்களல்லர்; நல்லவர்களே. அனைவரும் அவரைத் தொழுகின்றனர்.

ஆனால், நாம் சீடர்களாக முயல்கின்றோம். நம் கண்ணும் கருத்தும் மிக உயர்ந்த உண்மையை அறிவதே. நம்முடைய குறிக்கோளோ, வானினும் நெடியது. 'முழுதும் உணர வேண்டும்,' என்னும் சொற்றொடர் போலவே பல பெருஞ்சொற்களை மொழிந்து விட்டோம். அச்சொற்றொடர்களுக்கேற்ப நம்மை அளந்து கொள்ள வேண்டாவா? ஆன்மாவில் பரமான்மாவை வணங்குவோம்; அதன் மீதே நிற்போம். அடிப்படையும் ஆன்மாவே; நடுவும் ஆன்மாவே; முடிவும் ஆன்மாவே. பிரபஞ்ச

மென்பது எங்குமே இல்லை. வெட்டவெளியில் அது சுற்றி மறையட்டும். அதைப்பற்றி யார் கவலையுறப் போகின்றனர்? ஆன்மாவில் வேரூன்றி நில்லுங்கள். அதுதான் இலட்சியம். அதை இன்னும் அடைய முடியாதென்பதை உணர்கின்றோம். ஆனால், கவலையுறாதீர்கள். கையறுநிலையை நண்ணாதீர்கள். இலட்சியத்தை இழிவான நிலைக்கு இறங்கச் செய்வது அகன்று, உடலைப் பற்றிய சிந்தனை குறைவாயிருக்கிறதா? நீங்கள் ஜடப்பொருள் அல்ல; சைதன்னியமற்ற—மட்கி மடிந்து மங்கலான ஒளியற்ற—பிரகிருதியல்ல என்று எவ்வளவு தூரம் சிந்திக்கின்றீர்கள்? உங்களை ஒளி மிக்க அழிவற்ற ஆன்மாவாகக் கருதி அந்த எண்ணப் பாதையில் மிகுதியாய் எவ்வளவு தூரம் ஏகுகின்றீர்கள்? இவைதாம் சிறந்த முக்கியமான அமிசங்களாகும். எவ்வளவுக்கெவ்வளவு நீங்கள் அழிவற்ற சுடராய்த் திகழ்கின்ற ஆன்மாவாக உன்னுகின்றீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு பிரகிருதியிலிருந்தும், உடலிலிருந்தும், ஐம்புலன்களிலிருந்தும் விடுதலை அடைய மிக்க ஆர்வமுள்ளவர்களாகத் திகழ்வீர்கள். விடுதலை எய்துவதற்குரிய பேரவாவும் இதுவே.

சீடரியல்பின் நான்காவதும் இறுதியானதுமான நிபந்தனை, இதுதான். எது மெய்ப்பொருள், எது பொய் புதைந்தது என்ற பகுத்தறிவு சீடனுக்கு வேண்டும். உண்மையிலே ஒரே ஒருமைப் பொருளே உண்டு. அதுதான் கடவுள். எஞ்ஞான்றுமே இடையறாது ஆண்டவரிடம் மனம் ஈர்க்கப்பட வேண்டும். அவருக்கே அது அர்ப்பணம் செய்யப்படுவதுதான் சாலச்சிறந்தது. கடவுள் ஒருவர்தாம் என்றும் இருக்கிறார்; மற்றொன்றும் இல்லை; பிற தோன்றும், மறையும். உலகத்தைப்பற்றிய எந்த ஆசையும் மாயைதான். ஏனெனில், உலகமும் மாயையன்றோ? கடவுளைப் பற்றிய உணர்ச்சி மனத்திற்கு மேன்மேலும் ஏற்படவேண்டும். காண்கின்ற ஒவ்வொரு பொருளும் பொய்யாய்த் தோன்றுகிற வரையில் கடவுளைப்பற்றிய மனிதனின் உணர்வு வளரவேண்டும்.

ஒருவன் சீடனாக வேண்டுமென்று விழைந்தால், இந்த நான்கு நிபந்தனைகளையும் நிறைவேற்றியாக வேண்டும். இவற்றை நிறைவேற்றாதவரையில், உண்மையான குருவோடு தொடர்பு வைத்துக்கொள்ள அவனால் இயலாது. அவனுக்கு நற்கால வயத்தால், ஒரு குரு கிடைத்தாலும், குரு நல்குகின்ற சத்தி அவனுடைய உள்ளத்தைத் தளிர்க்கச் செய்யாது. இந்த நிபந்தனைகளை நிறைவேற்றுகிற முறையில் இம்மியளவும் விட்டுக்கொடுப்பது என்பது இல்லை. இந்த நிபந்தனைகள் நிறைவேறவே

—இத்தகைய ஆயத்தங்களைப் புரிந்து நிற்கவே—சீடனின் இதயத் தாமரை விரியும்; குருவாம் வண்டும் அங்கு வந்து முரலும். தன்னுடைய உடலிற்குள்—ஏன் தனக்குள்ளேயே—குரு உறைந்து நிற்பதைச் சீடன் அறிகின்ருன். அவனுடைய இதய முகை நெகிழ்கின்றது; அவன் மெய்ப் பொருளைக் கண்டு விடுகிருன்; இந்தப் பெரும்பிறவிக்கடலைக்கடந்து அப்பால் செல்லுகின்ருன்; இந்தக் கொந்தளிக்கும்—அச்சுறுத்தும்—ஆர் கலியை நீந்தி அக்கரை நண்ணிவிடுகிருன். பெருங்கருணையால், பயன் கருதாது, புகழை விரும்பாது முறையே மற்றவர்களையும் இப்பிறவாழியைத் தாண்டுவதற்குப் புணையாய்ப் பொலிந்து தோன்றுகின்ருன்.

## உலகம் தந்த சமயப் பெருங்குரவர்கள் *

இந்துக்களின் கொள்கைக்கேற்ப இந்தப் பிரபஞ்சம் அலைவடிவுகளில் சக்கரம்போலச் சுழல்கின்றது. இது கிளர்ந்தெழுகின்றது; ஓர் உச்சியை அடைகின்றது; பிறகு கீழே இறங்கிச் சில காலம் பள்ளத்திற் கிடப்பதுபோலக் காட்சி அளிக்கின்றது. மீண்டும் அலைக்குமேல் அலைபோல ஓங்கி மறுபடியும் அடங்கிவிடுகின்றது. பிரபஞ்சம் சம்பந்தப்பட்ட வரையில் எது உண்மையோ, அவ்வுண்மையே இதன் ஒவ்வொரு பகுதியிலும் மிளிர்கின்றது. மனித இனத்தின் நிகழ்ச்சிகளின் ஓட்டமும் இப்படித்தான் நிகழ்கின்றது. நாடுகளின் வரலாறும் இவ்வண்ணந்தான் செல்கின்றது. நாடுகள் எழுகின்றன; விழுந்துவிடுகின்றன. எழுச்சிக்குப் பிறகு வீழ்ச்சியைப் பார்க்கின்றோம். வீழ்ச்சியிலிருந்து மிகுதியான ஆற்றலையுடைய உயர்வை உணர்கின்றோம். இத்தகைய ஓட்டம் இருந்து கொண்டேதான் இருக்கும். சமய உலகிலும் இத்தகைய சலனமுண்டு. ஒவ்வொரு நாட்டின் ஆன்மிகத்துறையிலும் எழுச்சியும் வீழ்ச்சியும் இருக்கின்றன. ஒரு நாடு படுகுழியில் விழவே, எல்லாம் சிதைந்துபோய்விடுகின்றன. மீண்டும் அது வலிமையுற்று எழுகின்றது. ஒரு பேரலை கிளர்ந்தோங்குகின்றது. சில வேளைகளில் கடலே பொங்கி எழுந்துவிடும். அந்தக் கொந்தளிக்கும் கடலின் அலைச் சிகரத்தின்மீது தேவ தூதனை ஒளிமிக்க ஓர் ஆன்மா வீற்றிருக்கக் காண்பீர்கள். அவன் படைக்கின்றான்; படைக்கவும்படுகின்றான். இவ்விரு தோற்றங்களும் இப்படி மாறி மாறி வருகின்றன. அவன் அலையை எழுப்பக்கூடிய தூண்டுகோலாயிருக்கிறான்; அப்பொழுது ஒரு நாடு ஓங்குகின்றது. அலைகளை எழுப்புகிற அதே சத்திகளால் அவனும் படைக்கப்படுகின்றான். ஒரு கணம் செயலாக்குகின்றான்; மற்றொருகணம் செயற்படுகின்றான். சமுதா

---

* 1900-ஆம் ஆண்டு, பிப்பிரவரித் திங்கள், மூன்றாம் நாள், கலிபோர்னியாவைச் சார்ந்த பசாடினியாவிலுள்ள ஷேக்ஸ்பியர் கழகத்தில் ஆற்றப்பட்ட சொற்பொழிவு.

யத்தின்பால் தன் மாபெருஞ்சத்தியைப் பாயும்படி செய்கின்றுன். அந்தச் சமுதாயம் அவனையும் உருவாக்கிவிடுகின்றது. இத்தகையவர்களே உலகச் சிந்தனையாளர்கள். இவர்களே வையகத்தின் தீர்க்கதரிசிகள். இவர்களே வாழ்வின் தூதர்கள். இவர்களே ஆண்டவனுடைய அவதாரங்கள்.

"ஒரு சமயந்தான் திகழக்கூடும். ஒரு தீர்க்கதரிசிதான் தோன்றக்கூடும். ஓர் அவதாரந்தான் இருக்கக்கூடும்," என்னும் எண்ணத்தை உடையவனுய் மனிதன் இருக்கிறுன். இத்தகைய கருத்து உண்மையான கருத்து அன்று.

இந்தத் தேவ தூதர்களின் வரலாறுகளை நாம் படிக்கும் பொழுது ஒவ்வொருவருக்கும் தமக்குரிய ஏதோ ஒரு செயலைத் தாம் புரிவதற்கு விதி ஒரு நெறி வகுத்திருக்கிறது என்றும் அந்தப் பங்கைத் தவிர வேறில்லை என்பதையும் நாம் உணர்கின்ருேம். இசையின் கூட்டுச் சுருதியின் அமைப்பிலேதான் ஓர் இயைபு இயங்குகின்றது, ஒரு தனித்த சுரத்தில் அன்று. மனித இனங்களின் வாழ்வின் நுகர்ச்சி வெவ்வேருய் அமைந்திருக்கிறது; அதைப்போல உலகத்தைத் தனி முறையில் நுகர்வதற்கும் ஒவ்வோர் இனமும் பிறந்திருக்கிறது. அது ஒன்றேதான் நுகர்வதற்குத் தோன்றியிருக்கிறது என்று எவரும் துணிந்து உரையார். ஒவ்வோர் இனமும் இந்த நாடுகளாம் தெய்வப் பண்ணில் ஓர் இசையாய்க் காட்சி அளிக்கின்றது. ஒவ்வோர் இனத்திற்கும் செயற்படுத்துவதற்குரிய பணியுண்டு; நிறைவேற்றுவதற்குரிய கடமையுண்டு. எல்லாச் செயல்களும் சேர்ந்தே இச்சிறந்த இயைபாய்த் திகழ்கின்றன.

ஆதலால், தீர்க்கதரிசிகளில் எவருமே உலகத்தின்மீது தம் ஆணையை எஞ்ஞான்றுமே செலுத்தப் பிறந்தவரல்லர். இன்னும் இம்முறையில் ஒருவரும் வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை; எப்பொழுதுமே எவரும் ஆளப்போகிறதில்லை என்பது திண்ணம். ஒவ்வொரு தீர்க்கதரிசியும் தத்தம் பங்கை உலகத்திற்கு அளிக்கின்றுர். அந்தப் பங்களவில் உலகத்தையும் அதன் விதிகளையும் அவர் ஆள்கின்றுர் என்பதும் உண்மையே.

நம்மில் பெரும்பாலோர் ஒரு தீர்க்கதரிசி வாயிலாக அடைகின்ற சமய நம்பிக்கை உடையவர்களாய்ப் பிறவியிலேயே தோன்றிவிடுகிருேம். நாம் தத்துவங்களைப்பற்றிப் பேசுகின்ருேம். இவை யாவும் தக்கவையே. ஆனுல், நம்முடைய ஒவ்

வோர் எண்ணமும், ஒவ்வொரு சலனமும், ஒவ்வொரு செயலும் ஒரு சான்றேன் மூலமாக வருகின்ற ஒரு தத்துவத்தைத்தான் நாம் அறிய முடியும் என்பதைப் புலப்படுத்துகின்றன. உரு வெடுத்த ஓர் இலட்சிய புருஷன் வழியாகத்தான் ஓர் உபதே சத்தை அறிய இயலும். ஒரு முன்மாதிரி இல்லாமல், ஒரு சான் ரேனின் உதவியில்லாமல், ஒரு தத்துவத்தை ஆராய்கின்ற பண் பாடு வளர்ந்திருக்குமாயின், ஆண்டவன் அருளில் எவ்வளவோ நன்ருயிருந்திருக்கக்கூடும். அப்படி நம் பண்பாடு அமைய வில்லையே! மாபெருஞ் சான்றேர்கள்—தீர்க்கதரிசிகள்—அவதார புருடர்கள்—இவர்களுடைய பொன்னடிக்கீழ் நம்முள் பெரும் பாலோர் தம் ஆன்மாவைச் சமர்ப்பித்துத் தஞ்சம் புகுந்துவிடு கின்றனர். இத்தகைய அவதாரங்களே கிறித்தவர்களாலும், பௌத்தர்களாலும், இந்துக்களாலும் வழுத்தப்படுகின்றன. முகமதியர் எத்தகைய தொழுதலையும் தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வந்திருக்கின்றனர். தீர்க்கதரிசிகளோடும், தேவ தூதர் களோடும் வழிபாடு சம்பந்தப்பட்டவரையில் அவர்கள் யாதொரு தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லை; அவர்களுக்கு யாதொரு வணக்கமும் செலுத்தவில்லை. ஆனுல், நடைமுறையில், ஒரு தீர்க்கதரிசிக்குப் பதிலாகப் பல்லாயிரக்கணக்கான ஞானிகள் மக்களால் போற்றப்படுவதை நாம் பார்க்கின்றேம். நாம் உண்மை உரைகளைப் புறக்கணிக்க முடியாதன்றே? பெரியோர் களை வழிபடத்தான் வேண்டும்; அது சாலவும் நன்று. "ஆண்டவரே, இறைவராம் தந்தையாரைக் காட்டுவீராக!" என்று உங்கள் சிறந்த தீர்க்கதரிசியை வேண்டியபொழுது, அவர் திருவாய் மலர்ந்த சொல்லை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். "என்னைக் கண்டவர் இறைவரைக் கண்டவராவர்," என்பதே அவர் கூற்று. அவரை மனித வடிவில் காண்பதைத் தவிர வேறு எவ்வண்ணம் கற்பனை செய்துகொள்ள முடியும்? மனித உருவத் திலேதான் நாம் அவரை உணர முடியும். அது வாயிலாகத்தான் நாம் அவரைக் காண முடியும். இந்த அறையில் ஒளியின் அதிர்ச்சி எங்குந்தானிருக்கிறது; நாம் ஏன் அதை எங்கும் காண இயலவில்லை? அதோ எரிகின்ற விளக்கிலேதான் நீங்கள் அதைக் காணவேண்டியிருக்கிறது. கடவுள் எங்கும் நிறைந்த ஒரு தத்துவந்தான். ஆனுல், ஒரு மனிதக் கடவுள் வாயிலாகத் தான் அவரைப் பார்க்கவோ, உணரவோ இயல்கின்றது. இப் பொழுது இவ்வண்ணந்தான் நம்முடைய அமைப்புத் திகழ்கின் றது. இந்த மாபெருஞ்சோதிகள் கீழே இறங்குகின்றபொழுது,

மனிதன் கடவுளை அடைகின்றான். நாம் வருகிற முறையில் அவர்கள் வாராமல், வேறு வகையில் அவதாரம் செய்கின்றார்கள். நாம் பிச்சைக்காரர்கள்போலத் தோன்றுகின்றோம்; அவர்களோ, அரசர்க்கரசர்கள் போலக் காட்சி அளிக்கிறார்கள். நாமோ, பாதை இழந்து அதை அறிவதற்கு இயலாதவராய்த் தந்தையர்களற்ற அனாதைகள்போல வருகின்றோம். நாம் இதற்கு என்ன செய்து கொள்ள முடியும்? வாழ்வின் பொருளை நாம் அறிந்தோமில்லை. நாம் அதை உணர இயலாது. இன்று ஒரு செயலைப் புரிகின்றோம்; மற்றொருநாள் வேறொன்றைச் செய்கின்றோம்; நீரில் இங்கும் அங்கும் அலைக்கப்படும் சிறிய துரும்புகள்போல அல்லல் உறுகின்றோம்; பெரும்புயலில் அகப்பட்ட இறகுகள்போல எங்கணும் வீசப்படுகின்றோம்.

ஆனால், மனித இன வரலாற்றில் இத்தகைய தேவ தூதர்கள் தோன்றுவதைப் பார்க்கின்றோம். பிறந்த உடனே அவர்கள் தங்களுடைய பணி நன்கு வகுக்கப்பட்டதைக் காண்கின்றார்கள். முழுத் திட்டமும் நிறுவப்படுகின்றது. அதிலிருந்து அவர்கள் இம்மி அளவும் பிறழாமலிருப்பதை நோக்குவீர்கள். அவர்கள் ஒரு பணியோடு இறங்குவதால், அவர்களிடம் ஒரு ஞான நன்மொழியும் மிளிர்கின்றது. அவர்கள் தருக்க அறிவுகொண்டு ஆராயவேண்டுவதில்லை. இந்த ஞான குரவர்களும் தீர்க்கதரிசிகளும் தாங்கள் அளித்த உபதேசத்திற்குத் தருக்கமுறையில் விளக்கந் தந்ததாகக் கேட்டதுண்டா? அல்லது படித்ததுண்டா? ஒருவரும் அப்படிச் செய்ததாகத் தெரியவில்லை. அவர்கள் நேரடியாக உரைக்கின்றார்கள். அவர்கள் தருக்க முறையை மேற்கொள்ள வேண்டுவதில்லை. அவர்கள் உண்மையை நேரில் உணர்ந்தவர்கள். நேரில் கண்ணுற்றதுமன்றி, அவர்கள் உங்களுக்கும் காட்டுவார்கள். நீங்கள் "கடவுள் இருக்கிறாரா?" என்று என்னைக் கேட்டு, நான் இருக்கிறார் என்று விடை அளித்தால், காரணங்கள் கூறுமாறு என்னை வினவுவீர்கள். இந்த எளியவனாகிய நான் என் ஆற்றல்களனைத்தையும் பயன்படுத்தியே காரணம் தர நேரிடக்கூடும். இயேசுநாதரை அணுகிக் 'கடவுள் இருக்கிறாரா?' என்ற வினாவை எழுப்பினால், 'ஆம்' என்று அவர் விடை பகர்ந்திருப்பார். 'அதை மெய்ப்பிப்பதற்கு ஏதாவது சான்று இருக்கிறதா?' என்று உசாவுவீராயின், 'இதோ பார் கடவுளை,' என்று பதில் விளம்பியிருப்பார். நீங்கள் 'இது நேரிற்கண்ட காட்சி; தருக்க முறையில் வந்த காரணமன்று,'

என்பதை உணர்வீர்கள். இது இருட்டில் தட்டுத்தடுமாறி உழல்வதன்று. நேரிற்கண்ட காட்சியின் வலிமை இதில் வீற்றிருக்கிறது. நான் மேஜையைப் பார்க்கிறேன்; எந்தவிதமான அறிவைக்கொண்டும் அதன்பாலுள்ள என் நம்பிக்கையைக் குலைக்க இயலாது. அது என் கண்களால் பருகிய காட்சி. அத்தகைய நம்பிக்கை அது. தங்களுடைய இலட்சியங்களிலும், தங்களுடைய பணியிலும், இவற்றைக்காட்டிலும் தங்களிடத்திலும் அவர்களுக்கு ஒரு பெரு நம்பிக்கை வேரூன்றி நிற்கின்றது. மற்ற எவரைக்காட்டிலும் ஞானப் பிழம்பாய் ஒளிவிடும் இந்தப் பெரியோர்கள் தன்னம்பிக்கை உடையவர்கள். 'உங்களுக்குக் கடவுள்பால் நம்பிக்கை உண்டா? மறு பிறவியில் நம்பிக்கை உண்டா? இந்தக் கொள்கையிலும் அந்தப் பிடிவாதக் கொள்கையிலும் நீங்கள் நம்பிக்கை வைக்கின்றீர்களா?' என இப்படியெல்லாம் மக்கள் தொடர்ந்து கேள்விகளைக் கேட்பார்கள். தன்னிடத்தில் அடிப்படையான நம்பிக்கை இல்லை என்பதுதான் இவ்வினாக்கள் வாயிலாகப் புலனாகின்றது. அந்தோ! தன்னிடத்தில் நம்பிக்கையற்றவனுக்கு மற்று எதிலேதான் நம்பிக்கையிருக்கும்? மக்கள் அவனிடமிருந்து ஏதாவது ஒரு நம்பிக்கையை எதிர்பார்க்க இயலுமோ? எனது இருப்பைப்பற்றியே எனக்கு நிச்சயமில்லை. 'நான் இருக்கின்றேன்; ஒன்றும் என்னை அழித்துவிடாது,' என்று ஒரு கணம் நினைக்கின்றேன்; மறு கணம் இறப்பின் அச்சத்தால் உடல் நடுங்குகின்றேன். ஒரு சமயம் நான் அழிவற்றவன் என்று எண்ணுகின்றேன்; அடுத்த கணம் ஒரு பேய் என் முன் தோன்றுகின்றபொழுது, 'நான் யார்? நான் எங்கே இருக்கிறேன்?' என்பதுகூட எனக்குத் தெரிகிறதில்லை. நான் உயிரோடு வாழ்கிறேனா அல்லது இறந்துவிட்டேனா? அதையும் நான் அறிகின்றேனல்லேன். ஒரு விநாடி நான் ஆன்மிக உணர்ச்சி உள்ளவனென்றும் நெறியுள்ளவனென்றும் கருதுகிறேன். அடுத்த விநாடி என்மீது ஒரு பெருந்தாக்குதல் விழுகின்றது; நான் தோல்வியுற்று மல்லாந்துவிடுகிறேன். 'ஏன்?' என்று ஒருவர் வினவலாம். நான் என்னிடத்தில் நம்பிக்கை இழந்துவிட்டேன்; என்னைத் தாங்குகின்ற அறநெறியாம் முதுகெலும்பு முறிந்துபோய்விட்டதை உணர்கின்றேன்.

ஆனால், இந்தச் சமய குரவர்களிடம் இந்தச் சின்னத்தை எப்பொழுதும் கண்ணுறுவீர்கள். இவர்களிடம் பேரார்வமிகுந்த ஒரு நம்பிக்கை சுடர்விட்டெழப் பார்ப்பீர்கள். அத்தகைய

ஆர்வம் செறிந்த நம்பிக்கைதான் நிகரற்றது என்று நவிலலாம். அதன் இயல்பை நாம் அறிய இயலாது. அக்காரணத்தால் இந்தக் குரவர்கள் தங்களைப்பற்றிச் சொல்லியவற்றிற்கும் பல வகைகளில் விளக்கந்தர முயல்கின்றோம். தாங்கள் தேர்ந்ததற்கு விளக்கங்கூற இருபதினாயிரம் கொள்கைகளை இவர்கள் படைக்கப் பார்ப்பார்கள். சான்றோர்கள் சிந்திக்கும் வண்ணம் நாமும் நம்மைப்பற்றிச் சிந்திக்கிறதில்லை. இயற்கையிலேயே நாம் இவர்களை அறிந்துகொள்ள முடிகிறதில்லை.

மேலும், இந்த ஞானிகள் பேசத் தொடங்கினால், உலகம் இவர்கட்குச் செவிசாய்க்கக் கடமைப்பட்டிருக்கிறது. இவர்கள் அறிவுரை வழங்குகிறபொழுது, ஒவ்வொரு சொல்லும் இதயத்திலிருந்து நேராகவே வழிந்து வருகின்றது. ஒரு பெரு வெடிகுண்டுபோல அது வெடித்தெழுகின்றது. அதற்கும் பின்னணியில் இயங்கும் சத்தி இல்லாமற்போயின், அந்தச் சொல்லினால் பயன் உள்ளதோ? எந்த மொழியைப் பேசினால் என்ன? எப்படி மொழியை அமைத்துக்கொண்டால் என்ன? இலக்கணப்பிழையறக் கூறினாலென்ன? அணி இலக்கணத்திற்கேற்ப நேர்த்தியாக நவின்றாலென்ன? சொல் அலங்காரத்தோடு கூடியிருந்தாலென்ன, கொச்சைச் சொல்லாய்க் காட்சியளித்தால் என்ன? ‘கொடுப்பதற்குரிய பொருள் ஏதேனும் உன்னிடத்தில் உண்டா?’ என்னும் வினாத்தான் எழுகின்றது. வெறுஞ் செவிசாய்ப்பது மட்டுமன்று; எல்லாம் கொடுத்தலும் வாங்கலுந்தான். நல்குவதற்கு ஏதேனும் ஞான நல்லறிவுரை உண்டா? இதுதான் முதன்முதலாகப் பிறக்கின்ற கேள்வியாகும். உங்களிடம் ஏதேனும் திகழுமாயின், அதை ஈதல் நலமாம். சொற்கள் ஆன்மிகச் செல்வத்தைக் கொடுக்கின்றன. சொற்கள் வாயிலாக நல்குவதும் பல முறைகளில் ஒன்றாகும். சில வேளைகளில் நாம் பேசவே மாட்டோம். பண்டைய வடமொழிச் சுலோகம் ஒன்று பின்வருமாறு இசைக்கின்றது: “ஒரு மரத்தடியில் நான் ஒரு ஞான சற்குருவைக் கண்டேன். அவர் பதினாறு வயது கழிந்த இளைஞர். சீடனோ, எண்பது வயது அடைந்த முது கிழவன். மோனந்தான் அறிவுரையாகும். ஐயுற்றவர்களின் சந்தேகங்கள் அனைத்தும் பறந்துபோயின.”

சில வேளைகளிலே இவர்கள் வாய் திறவாமல் சும்மா இருப்பார்கள்; எனினும், மனத்திலிருந்தே மனத்திற்கு உண்மையை நல்குவார்கள். தாங்கள் கண்ட ஞான ஒளியை ஈவதற்கே இவர்

கள் அவதாரம் எடுத்தவர்கள்; இவர்கள் உத்தரவு இடுகிறுர்கள். இவர்கள் தேவதூதர்கள். இவர்களுடைய கட்டளையை ஏற்பதைத் தவிர வேறென்றும் செய்வதற்கில்லே. ஓர் அதிகாரத்துடன் இயேசுநாதர் இயம்பினதை உங்கள் சாத்திரங்கள் ஓதுவது உங்கள் நினேவிற்கு வரவில்லேயா? 'செல்வீர்களாக எங்கணும்; எல்லா நாட்டினர்க்கும் நான் உங்கட்குக் கட்டளேயிட்ட அனேத்தையும் போதித்து அவற்றைக் கவனிக்கும்படி செய்வீர்களாக!' தம்முடைய அறிவுரையிலுள்ள மாபெரு நம்பிக்கை அவர் வழங்கிய புனிதச் சொற்கள் எல்லாவற்றின் அடியிலும் ஓர் ஆதாரச் சுருதிபோல ஒலிக்கின்றது. இவ்வையகம் வாழ்த்திப் போற்றும் தீர்க்கதரிசிகளான இத்தகைய ஆன்மிக மாபெரு வீரர்களிடம் இவ்வியல்பு இலங்கக் காண்பீர்கள்.

இந்த ஞாலத்தில் நடமாடும் தெய்வங்களாய் இந்தச் சமயப் பெருங்குரவர்கள் திகழ்கின்றுர்கள். இவர்களேத் தவிர நாம் யாரை வணங்க முடியும்? கடவுளேப்பற்றிய கருத்தை என் மனத்தில் உருவாக்கப் பார்க்கிறேன். ஆனுல், பொய் புதைந்த மிகவும் அற்பப் பொருளேத்தான் நான் சித்திரிக்க இயல்கின்றது. மனம் சித்திரித்த இத்தகைய கடவுளே இறைஞ்சுவது ஒரு பாவச் செயலாகும். இப்பாரில் தோன்றி வாழ்வு நடத்திய சான்ருேர்களின் உண்மை வரலாற்றைக் கண் திறந்து பார்க்கின்றேன். நான் கடவுளேப்பற்றி உருவாக்குகின்ற எந்தக் கருத்தைக் காட்டிலும் அவர்களுடைய வாழ்க்கையே மிகச் சிறந்த கருத்தாய்க் கவின் பெறக் காட்சி அளிக்கின்றது. யாராவது ஒருவன் என் பொருளேக் களவாடிவிட்டால், அவனேப் பின் தொடர்ந்து போய்ப் பிடித்துச் சிறையில் வைக்கும் என்னேப் போன்ற ஒருவனிடமிருந்து இரக்கத்தைப் பற்றிய எத்தகைய கருத்து ஏற்படும்? உன்னிப்பாருங்கள்! பொறையைப் பற்றியும் பிறர் குற்றங்கண்டு இரங்கி மன்னிக்கின்ற இயல்பைப் பற்றியும் உள்ள என் கருத்து எவ்வளவு ஓங்கி நிற்கக்கூடும்? அக்கருத்து என் இயல்பைக் கடந்து அமைய இயலுமோ? உங்களில் எவர் தம் உடலேக்கடந்து செல்ல முடியும்? உங்களில் எவர் தம் மனத்தின் எல்லேக்கப்பால் விரைந்தேகச் சத்தி வாய்ந்தவர்? உங்களில் எவரும் தாண்டிக் குதித்துவிட முடியாதென்பதை நான் நன்கறிவேன். உங்கள் உண்மையான வாழ்விலிருந்து பிறக்கிற ஒன்றைத் தவிர, தெய்வ அருளேப்பற்றி நீங்கள் எத்தகைய கருத்தை அமைத்துக்கொள்ளக்கூடும்? நாம் நுகராத ஒன்றைப்பற்றி நாம் யாதொரு

கருத்தையும் உருவாக்க இயலாதென்பது திண்ணம். அக்காரணத்தால் கடவுளைப்பற்றிய கருத்தை நான் நன்கு அமைக்கவேண்டும் என்று செய்கின்ற என் மிகச் சிறந்த முயற்சிகள் யாவும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பொய்த்துவிடும் என்பதில் யாதோர் ஐயமுமில்லை. இந்த உரைகள் தெற்றெனப் புலப்படும் உரைகளே; இலட்சியத்தில் பிறந்த கற்பனைகளல்ல. இவை அன்பைப் பற்றியும், இரக்கத்தைப் பற்றியும், தாய்மையைப் பற்றியும் நிகழ்கின்ற உண்மையான செயல்களேயாகும். இவற்றைப்பற்றிய கருத்தைக்கூட என்னால் சித்திரிக்க முடியவில்லை. ஆதலால், இத்தகைய சான்றோர்கள் அடிகளில் வீழ்ந்து இவர்களைக் கடவுளென வணங்குவதில் என்ன வியப்பு இருக்கின்றது? நாம் வேறென்ன புரியக்கூடும்? வெற்று வாய்ப்பந்தல் போட நம்மால் இயலும். இவர்களின் பொன்னடியைப் போற்றுவதல்லாமல் வேறொன்றைப் புரிகின்ற மனிதனை நான் காண விரும்புகிறேன். வெறும்பேச்சு, கண் கூடான காட்சியாய் இருக்க முடியாதன்றோ? கடவுளைப் பற்றிச் சர்ச்சை செய்வது, சகுணம் நிர்க்குணம் என்றெல்லாம் ஆராய்வது முதலியன நலமே. ஆனால், எல்லா நாடுகளுக்கும் எல்லா இனத்தவர்களுக்கும் உண்மையான தெய்வங்கள் இந்த நடமாடும் மனிதத் தெய்வங்களே. மனிதர் மனிதராய்த் திகழ்ந்தவரையில், இந்தத் தெய்வச்சான்றோர்களை வழிபட்டு வந்தனர்; இனியும் இவர்களைத் தொழுவர். உண்மையைப்பற்றிய சிரத்தையும் நம்பிக்கையும் இத்தகைய வழிபாட்டிலேதான் மிளிர்கின்றன. போற்றி வணங்காத ஒரு வெறுந்தத்துவத்தால் யாது பயன் உளது?

நான் உங்கட்குப் புகலப்போகின்ற பொருளின் நோக்கமும் எண்ணமும் இதுவேயாகும். நான் என் வாழ்வில் இத்தகைய பெரியோர்களை வழிபட முடியும் என்பதைக் கண்டேன். இனித் தோன்றக்கூடிய சான்றோர்களையும் நான் வணங்க ஆயத்தமாயிருக்கிறேன். எந்த உடையில் தன் மைந்தன் தோன்றினாலும் அவனை அவன் தாய் அறிந்துவிடுவாள். அப்படி அறியாமற் போனால், அவனுக்கு அவள் தாயல்லள் என்பதை நான் திண்ணமாய் உணர்கின்றேன். 'உண்மையையோ, தெய்வத் தன்மையையோ, கடவுளையோ உலகத்திலுள்ள ஒரே தீர்க்கதரிசியிடந்தான் காண்கின்றேன், மற்றவர்களிடத்தில் இல்லை' என்று கருதுகிறவர்களைப்பற்றி இயல்பான ஒரு முடிவுக்குத்தான் வர இயலும். இப்படி நினைக்கின்ற நீங்கள் ஒருவரிடமும் தெய்வத் தன்மையை

உணரவில்லை என்றும், பிறர் மொழியுஞ் சொற்களைப் பொருள் தேராமல் அப்படியே விழுங்கிவிட்டீர்களென்றும், அரசியல் கருத்துப் போகிற முறையில் சார்ந்து நிற்கும் ஓர் அரசியல் வாதிபோல, ஓர் இனத்தில் ஒன்றிப் போய்விட்டீர்களென்றும் மொழியவேண்டி வருமன்றோ? இது ஒருகாலும் சமயமாகாது. அண்மையில் தீஞ்சுவைத் தண்ணீர் இருந்தாலும், அதைப் பருகாது, உவர் நீரை அருந்தும் அறிவிலார் சிலர் இவ்வுலகில் இருக்கின்றனர். ஏனெனில், இந்த உவர் நீர்க்கிணறு அவர்கள் தந்தையால் வெட்டப்பட்டதாம். என்னுடைய சிறிய அனுபவத்தி லேயே நான் இந்த அறிவைத் திரட்டியிருக்கிறேன். பேய்த் தொழிலைச் சமயம் புரிகின்றது என்று அதன்மீது குற்றஞ்சுமத்தப் பட்டாலும், ''சமயம் பிழை இழைக்கவில்லை,'' என்று இயம்ப லாம். ஒரு சமயமும் மனிதர்களை வாட்டி வதைக்கவில்லை. ஒரு சமயமும் மந்திரக்காரிகளைக் கொளுத்தவில்லை; இத்தகைய தீச் செயல்களை ஒரு சமயமும் புரியவில்லை. இவற்றை ஆற்றும்படி எது மக்களைத் தூண்டிற்று? ஒருகாலும் சமயமன்று; அரசியலே. சமயத்தின் பெயரால் அரசியல் இவற்றில் இறங்கினுல் இது யார் பிழை?

'என்னுடைய தீர்க்கதரிசிதான் உண்மையான தீர்க்கதரிசி!' என்று நிமிர்ந்து நின்றே ஒருவன் நவிலுவானுயின், 'அவன் கூறுவது தக்கதன்று; அவன் சமயத்தின் அரிச்சுவடியைக்கூட அறிந்திலன்,' என்று மொழிந்துவிடலாம். சமயம் வெற்றுப் பேச்சன்று; ஒரு கொள்கை அன்று; அறிவின் சம்மதமுமன்று. அது இதயக்குகையின் ஆழத்தில் ஆண்டவனைக் காண்பதே யாகும். கடவுளைத்தொட்டு உணர வேண்டும். இந்தப் பிரபஞ் சத்தின் பரமான்மாவோடும் அதன் மாபெருந்தோற்றங்களோடும் நம் ஆன்மாவும் நெருங்கிய தொடர்புள்ளது என்பதை நாம் நேரில் காணவேண்டும். உங்கள் தந்தையின் வீட்டிற்குள் புகுந்து அவன் குழந்தைகளைப் பார்த்தும் அவர்களை அறியாம லிருக்க இயலுமோ? அவர்களை அறியாத நிலையில் நாம் ஆண்டவ னும் நம் தந்தை வீட்டிற்குச் செல்லவில்லை என்றுதான் செப்ப வேண்டும். ஒருவன் எந்த உடையில் எப்படித் தன்னை மறைத்துக்கொண்ட போதிலும், தாய் சேயை உணர்ந்து விடுவாள். ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றுகிற மிகப் பெரிய ஆன்ம ஞானக் குரவர்களையும் ஞானப் பெண்மணிகளையும் தேர்வீர்களாக. அவர்கள் ஒருவரோடொருவர்

மாறுபட்டவர்களல்லர் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள். எங்கெங்கே உண்மையான சமயம் சுடர் விடுகின்றதோ, எங்கெங்கே தெய்வத்தின் கரம் படுகின்றதோ, எங்கெங்கே இந்த ஆன்மாவிற்கு ஐம்புலச் சேர்க்கை போல ஒரு நெருங்கிய தொடர்பு பரமான்மாவோடு ஏற்படுகின்றதோ அங்கங்கே எஞ்ஞான்றுமே ஓர் உள்ள விரிவு நிகழும் என்பதில் ஐயமில்லை. அந்த உள்ள விரிவு பரமான்மாவின் சுடர் வெள்ளத்தை எங்கும் உணரும்படி செய்துவிடுகின்றது. இப்பொழுது நோக்கினால் சமய அமிசத்தில் மகமதியர்கள் மிகவும் பண்பாடற்றவர்களா யிருக்கின்றார்கள் என்பது விளங்கும். தீவிரமான இனப்பற்றுள்ள வர்கள் அவர்கள் என்பதும் உண்மையே. அவர்களுடைய சமயக் கொள்கை உரை இதுதான் :—"ஒருவரே தேவர்; மகமது ஒருவரே அவருடைய தேவதூதர்." இதற்கப்பாலுள்ள எதுவும் தீதேயாகும். அதுமட்டுமன்று. அதை உடனே அழித்தே தீர வேண்டும். அவர்களுடைய கொள்கையில் நம்பிக்கை வைக்காத ஆடவர் பெண்டிர் ஒவ்வொருவரையும் ஒரு கண எச்சரிக்கையில் மாய்த்துவிட வேண்டுமாம்! அவர்கள் தொழுவதற்கேற்றபடி இல்லாத எதையும் உடனே தகர்த்துவிடுவதுதான் அவர்களுடைய நோக்கம். வேறொன்றைப் போதிக்கும் எந்த நூலும் கொளுத்தப் படவேண்டும். பசிபிக்குப் பெருங்கடலிலிருந்து அட்லாண்டிக்கு மாகடல் வரையில் விரிந்துகிடக்கும் தடமுழுதும் ஐந்நூறு ஆண்டுகளாகக் குருதி வெள்ளம் பெருக்கெடுத்தோடிற்று! இதுதான் மகமது சமயம் போலும்! ஆனால், இந்த மகமதியர்களி டையே எவரேனும் ஓர் உண்மையான தத்துவ ஞானியார் இல்லா மற்போகார். அவர் இத்தகைய கொடிய செயல்களைக் கண்டித் துப் பேசுவார் என்பது திண்ணம். இப்படி எதிர்த்துப் பேசுவதி லிருந்து அவர்மீது தெய்வத்தின் கரம் பட்டிருக்க வேண்டு மென்பதும், உண்மையின் ஓர் அமிசத்தையாவது அவர் நேரில் கண்டிருக்கவேண்டுமென்பதும் புலனாகாமற் போகா. ஏனெனில், அவர் தந்தை வழியாக வந்த சமயத்தைப் பற்றிப் பேசவில்லை; ஓர் ஆண்தகை போலத் தாம் நேரிற்கண்ட உண்மையைத்தான் உரைக்கின்றார்.

நவீன பரிணாமவாதக் கொள்கையை ஒட்டியே பண்டைய இயல்புவாதக் கொள்கையும் காட்சி அளிக்கின்றது. சமய சம்பந்தமான பழைய கருத்துகளை மீண்டும் நாடுகின்ற இயல்பு நம்மிடையே இருக்கக் காண்கின்றோம். பிழையுள்ளதாயிருந்தா

லும் புதிய ஏதாவது ஒன்றைப் பற்றிச் சிந்திப்போம். இப்படிச் செய்வதுதான் சாலவும் நன்று. இலக்கை நமது அறிவாம் அம்புகொண்டே எய்வோம். நம்முடைய தோல்விகள் மூலமாக நமக்கு ஞானம் பிறக்கும். காலமோ, அகண்டமானது; இந்தச் சுவரைப் பாருங்கள். இந்தச் சுவர் என்றுவது பொய் புகன்றிருக்கிறதா? இது எப்பொழுதுமே சுவராய்த்தான் திகழ்ந்து நிற்கின்றது. மனிதன் பொய் கூறுகிருன்—ஆனுல், ஒரு தெய்வமாகவும் மிளிர்கின்ருன். ஏதாவது ஒன்றைச் செய்வது நலந்தான்; அது பிழை பொதிந்திருந்தாலும், அதைப் பொருட்படுத்த வேண்டுவதில்லே. ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பதைவிட, இது சிறந்ததன்ரே? பசு, பொய் புகல்வதில்லே; அது பசுவாய்த்தான் எப்பொழுதுமே இருக்கிறது. ஏதாவது ஒன்றைப் புரியுங்கள்; ஏதாவது ஒரு புதிய கருத்தைச் சிந்தியுங்கள். நீங்கள் செய்வது தக்கதோ, அல்லது தவரே, அதைப்பற்றிக் கவலே கொள்ளற்க. புதியதாக ஒன்றை எண்ணுங்கள். எங்களுடைய முன்னேர்கள் இவ்வண்ணம் சிந்திக்கவில்லே என்ற காரணத்தால், நான் சும்மா அமைதியாய் அமர்ந்து பையப்பைய என் உணர்வுச் சத்தியையும் என் சிந்தனே ஆற்றல்களேயும் இழந்துவிட வேண்டுமா? இந்த நிலேயில் இறந்து கிடப்பதுகூட நலமன்ரே? சமயம் பற்றிய உயிர் அளிக்கும் சொந்தக் கருத்துகளும், சொந்தத்தீர்மானங்களும் நமக்கு இல்லாமற்போனுல், நம் வாழ்வு எதற்குப் பயன்படும்? நாத்திகர்களுக்குங்கூட உய்விடம் உண்டு. ஏனெனில், மற்றவர்களிடமிருந்து கருத்துகளில் வேறுபட்டாலும் அவர்கள் தாங்களே எதையும் சிந்தித்துப் பார்க்கின்ருர்கள். ஒன்றையும் தாங்களே ஆராயாத மக்கள் சமய உலகில் இன்னும் பிறக்கவில்லே யென்றுதான் மொழியவேண்டும். அவர்கள் வெறுஞ் செடியனேய விலங்கின வாழ்வைத்தான் நடத்தி வருகின்ருர்கள். அவர்கள் சிந்திக்கமாட்டார்கள்; சமயத்தைப் பற்றி அவர்கட்குக் கவலே யில்லே. ஆனுல், சமயத்தில் நம்பிக்கை வைக்காதவன், நாத்திகம் பேசுகின்றவன், கவலேயுறுகின்ருன். அவன் முயன்று அரும்பாடு படுகின்ருன். ஆதலால், ஏதாவது ஒன்றை உன்னுங்கள்; ஆண்டவனே நோக்கி முன்னேறுங்கள்; தோல்வியைப் பொருட்படுத்தாதீர்கள். ஒரு விசித்திரமான கொள்கையைக் கைப்பற்றினதற்காகக் கவலே வேண்டா. 'இவன் விசித்திரமான கொள்கையையுடையவன்!' என்று மக்கள் நகையாடுவார்களே என்று நீங்கள் அஞ்சினுல், உங்கள் மனத்திலேயே அக்கொள்கையை இருத்தி வைத்துக்கொள்வீர்களாக. மற்றவர்களிடம் சென்று அதைப்

பிரசாரம் செய்யவேண்டுவதில்லை. ஆனால், ஏதாகிலும் ஒன்றைப் புரியுங்கள். கடவுள் திசை நோக்கி விரைந்து செல்லுங்கள். ஞான ஒளி வந்தே தீரும். என் வாழ்வில் ஒவ்வொரு நாளும் நீங்கள் எனக்கு உணவை ஊட்டி வருவீர்களாயின், நான் இறுதி யில் என் கைகளின் பயனையே இழந்துவிடுவேன். ஆட்டு மந்தைகளைப்போல ஒருவரை ஒருவர் பின்பற்றுவதன் விளைவு ஆன்மிக மரணமாகும்; செயலற்றுக் கிடப்பதன் முடிவு மரிப்பே யன்றோ? சுறுசுறுப்பாய் இருங்கள். எங்கெங்கே இயக்கம் இருக்கின்றதோ, அங்கங்கே வேறுபாடு நிகழத்தான் நிகழும். வாழ்வின் உண்டிக்குச் சுவையை ஊட்டுவது வேறுபாடாம் குழம் பன்றோ? ஒவ்வொன்றிற்கும் அழகு தருவதும் அதுவே; ஒவ் வொன்றிற்கும் கலையெழில் நல்குவதும் அதுவே. இங்கே எல்லாவற்றையும் கவினுறச் செய்வதும் வேறுபாடே. பல வகையாய் விரிந்திருப்பதுதான் வாழ்வின் மூலமும் சின்னமு மாகும். அதைக் கண்டு நாம் அஞ்சுவானேன்?

தீர்க்கதரிசிகளைப் பற்றி நன்கறிகிற நிலைக்கு நாம் இப் பொழுது வந்திருக்கிறோம். செடியனைய விலங்கின இயல்பின் காட்சி சமயத்தில் ஒருபுறம் தோன்றட்டும். சரித்திரச் சான்றைப் பார்ப்போம். எங்கெங்கே உண்மையான சிந்தனைச் சுடர் மிளிர்கின்றதோ, எங்கெங்கே ஆண்டவன்பால் இதயத்தைத் தொடக்கூடிய அன்பு அலர்கின்றதோ, அங்கங்கே ஆண்டவனை நோக்கி ஆன்மா வளர்ந்திருக்கக் காண்பீர்கள். அடிக்கடி அது பரமான்மாவின் அருட்கதிரைப் பெற்றிருக்கவேண்டும். அந்தப் பரமான்மாவை அறிதற்குரிய நேரிடையான ஒரு கண் காட்சியை ஒரு முறை பெற்றிருந்தாலும் போதும். திடீரென அதன் ஐயங்கள் எஞ்ஞான்றும் மறைந்துவிடுகின்றன; உள்ளத்தின் கோணல்களனைத்தும் நிமிர்ந்து நேராகத் திகழ்கின்றன; எல்லாத் தளைகளும் அறுந்து போகின்றன; கருமத்தின் விளைவுகளும், நம் செயல்களின் விளைவுகளும் பறந்துவிடுகின்றன. ஏனெனில், அண்மைக்கோரண்மையாய், சேய்மைக்கொருசேய்மையாய் நிற் கும்பரமனைக்கண்ணுற்றுவிட்டது. அதுதான் சமயம்; சமயத் தைப் பற்றிய முழுவுண்மையும் அதுவே. மற்றைய யாவும் வெற்றுக்கொள்கையும் பிடிவாதக்கொள்கையுமாகும். கடவுளை நேராகக் காணக்கூடிய நிலையை எய்துதற்குரிய பாதைகளைத் தவிர வேறன்று. கனிகள் சாக்கடையில் இறைந்துவிடுகின்றன; அவற்றைத் தாங்கிய கூடைக்காக நாம் பூசலிடுகின்றோம்.

இருவர் சமயச் சழக்குகளில் இறங்குவாராகில், ‘ நீங்கள் கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா ? அந்தப் பொருளை நேரிற் கண்ணுற்றிருக்கிறீர்களா ?’ என்னும் கேள்விகளை எழுப்புங்கள். ‘ இயேசு நாதர் ஒருவரே ஞானியார் ’ என்று ஒருவர் கூறுகிறார். நல்லது ; அவர் இயேசு நாதரைக் கண்டிருக்கிறாரா ? அவர் தந்தையாராவது அவரைத் தரிசித்திருக்கிறாரா ? ‘ இல்லை ஐயா.’ அவர் பாட்டனாருக்காவது அவருடைய காட்சி கிடைத்திருக்கிறதா ? ‘ இல்லை.’ இல்லை இல்லை என்று சொல்லுகிற நீர்தான் கடவுளைக் கண்டிருக்கிறீரா ? ‘ இல்லை, இல்லை ’. பழங்கள் சாக்கடையில் இறைந்துவிட்டன ; நீங்கள் அவற்றைத் தாங்கிய கூடைக்காகச் சொற்போர் புரிகின்றீர்கள். இவ்வண்ணம் வழக்காடுதல் கண்டு அறிவு மிக்க ஆடவர்களும் பெண்களும் தாங்களே நாணுதல் வேண்டும்.

இந்தச் சிறந்த தேவதூதர்களும் தீர்க்கதரிசிகளும் உண்மை ஒளியில் திகழ்கின்ற உத்தமர்கள். ஏன் ? ஒரு பெருங்கருத்தை உலகத்திற்கு உரைக்கவே ஒவ்வொருவரும் தோன்றியவர். சான்றாக, இந்திய நாட்டின் தீர்க்கதரிசிகளை நோக்குவோம். சமயத்தை நிறுவிய சான்றோர்களுக்குள்ளே அவர்கள் மிகவும் தொன்மை வாய்ந்தவர்கள். முதன்முதலாகக் கண்ணபிரானாரைப்பற்றி ஆராய்வோம் : கீதையைப் படித்த நீங்கள் அந்நூல் முழுதுமே பற்றுதலின்மை என்னும் கருத்தைத்தான் உணர்வீர்கள். பற்று அற்று நிற்பீர்களாக. உங்களுடைய இதய அன்பு முழுதும் ஒருவனுக்கே அர்ப்பணம் செய்வதற்குரியது. யாருக்கு ? எஞ்ஞான்றும் மாறாத ஒருவனுக்கே. அந்த ஒருவன் யார் ? அந்த ஒருவன் கடவுளே. எப்பொழுதும் மாறுதலுறுகிற ஒன்றின்பால் உங்கள் இதயத்தை வைக்கும் தவற்றைப் புரிந்துவிடாதீர்கள். ஏனெனில், அது இடும்பையை விளைக்கும். மனிதன்பால் நீங்கள் அன்பு செலுத்தலாம். ஆனால், அவன் மரிக்கும்போது துன்பந்தான் அதன் விளைவாகும். உங்கள் நண்பனிடம் நீங்கள் அன்பு காட்டலாம் ; மறுநாள் அந்த நண்பனே பகைவனாக மாறிவிடலாம். ஒருத்தி தன் கணவன்மீது அன்பு கொள்ளலாம். ஆனால், ஒரு நாள் அவன் அவளோடு பூசலிடக்கூடும். ஒருவன் தன் மனைவிமீது அன்பைப் பெருக்கலாம். அவள் மறுநாளே இறந்துவிடக்கூடும். இவ்வண்ணம் உலகம் சென்றுகொண்டிருக்கிறது. ஆதலால், கண்ணபிரானார் கீதையில் பின் வருமாறு மொழிகின்றார் : தலைவனான கடவுள் ஒருவனே மாறுகிறதில்லை ; அவன் அருளே பொய்ப்பதில்லை. நாம் எந்நிலையில் இருந்தால் என்ன ?

எதைப் புரிந்தாலென்ன ? எப்பொழுதுமே கடவுள் கருணையுள்ள வராயிருக்கிறார் ; என்றும் மாறாத அருளைக் காட்டும் இதயமுள்ளவ ராய் இலங்குகின்றார் ; அவர் மாறுவதில்லை ; நாம் எதைச் செய்தா லும் சீற்றங்கொள்ளுவதில்லை. நம்பால் எப்படி இறைவர் கோபங் காட்டமுடியும் ? உங்களுடைய குழவிகள் பல குறும்புகளைப் புரி கின்றன. அக்காரணத்தால் நீங்கள் குழந்தைகளின்மீது சீறி விழுகின்றீர்களா ? நாம் எப்படி உருவாகப் போகின்றோம் என்ப தைக் கடவுள் உணராரா ? விரைவில்—இப்பொழுதோ, அல்லது சில நாள் கழித்தோ—நாம் பூரணத்தை அடையப்போகிறோம் என்பதை அவர் அறிவார். அவருக்குப் பொறையுண்டு ; எல்லை கடந்த பொறையுண்டு. அவரை நாம் நேசிக்கவேண்டும். ஒவ் வொன்றிலும் நிறைந்த அவர் வாயிலாகத்தான் நாம் ஒவ்வொன் றின்மீதும் அன்பு செலுத்த முடியும்.

" நீ உன் மனைவிமீது அன்பைச் சொரியவேண்டும். ஆனால், அவள் பொருட்டன்று. அன்புக்குரியவளே, உன் கணவன், கண வன் என்ற முறையில் அன்பு காட்டப்படுகிறவனல்லன். அவன் கண் உறைகின்ற இறைவன்பொருட்டே அவன்பால் நீ அன்பைச் செலுத்தவேண்டும். கணவன் மனைவி இவர்களிடையே அரும்பும் அன்பில் அங்கே காட்சி அளிக்கின்ற ஆண்டவனுடைய அருளி னது உண்மையான கவர்ச்சிதான் மிளிர்கின்றது. ஆனால், மனைவி தன் கணவனை நேசிக்கிறதாகக் கருதலாம்," என்று வேதாந்தம் விவரிக்கின்றது. நம்மைக் கவரக்கூடியவர் அவர் ஒரு வரே. பெரும்பான்மையான நிகழ்ச்சிகளில் உண்மை நிலை மனை விக்குத் தெரியாது. தன்னையறியாமலே அவள் தக்கதே செய்து வருகின்றாள். கணவன்பால் அன்பு வைப்பதெல்லாம் ஆண்டவன் பால் அன்பு வைப்பதேயாகும். அறியாமையால் ஒருவன் அதைப் புரிந்தால் அது துன்பத்தைத் தரும் ; அறிந்தே செய்வானாயின், அது பேரின்ப வீட்டை நல்கும். இதைத்தான் எங்கள் சாத்திரங் கள் சாற்றுகின்றன. எங்கெங்கே அன்பு அரும்புகின்றதோ, எங் கெங்கே உவகையின் ஒளி எழுகின்றதோ, அங்கங்கே ஆண்டவ ருடைய ஒளி நடனத்தைப் பார்ப்பதாக உணர்வீர்கள். ஏனெ னில், அவர் ஆனந்த மயமாயும், அருள் வடிவாயும், அன்பு உரு வாயும் திகழ்கின்றார். அவருடைய ஒளி வீசாமற்போனால், அங்கே அன்பு மலர்தல் இயலாது.

இந்தச் சுருதியில் கண்ணபிரானாருடைய அறிவுரை எஞ் ஞான்றும் பேசுகிறது. இந்த அறிவுரையை அவர் தம் இனத்தா

ரின் உள்ளத்தில் வேரூன்றச் செய்துவிட்டார். இக்காரணத்தால் ஓர் இந்து ஏதோ ஒரு செயலைப் புரிகிறபொழுது, தண்ணீரை அவன் பருகுகிறதாயிருந்தாலும், 'இதில் ஒரு நன்மை திகழுமாஞல் அது ஆண்டவனுக்குச் செல்லட்டும்,' என்று மொழிவான். ஒரு பௌத்தன், ஏதாவது ஒரு செயலைப் புரிவாஞயின், 'இந்த நற்செயலின் மகிமை உலகத்தைச் சாரட்டும். நான் புரிகிற ஒன்றில் நன்மை இருக்குமாயின், அது உலகத்தை அடையட்டும். ஆஞல், வையகத்திலுள்ள தீமைகளனைத்தும் என்பால் வரட்டும்,' என்று இயம்புவான். ஓர் இந்து, 'கடவுள்பால் எனக்குப் பெரு நம்பிக்கையுண்டு,' என்று உரைக்கின்ருன். 'கடவுள் எல்லாம் வல்லவர்,' என்று அவன் கூறுகிருன். 'எங்கேயுமுள்ள ஆன்மாவிற்கோர் ஆன்மாவாய் ஆண்டவன் காட்சி அளிக்கிருன்,' என்று அவன் புகல்கின்ருன். 'என்னுடைய நன்மைகளனைத்தையும் ஆண்டவனிடத்தில் அர்ப்பணம் செய்துவிடுவதுதான் மிகச் சிறந்த தியாகம்,' என்று அவன் சாற்றுகின்ருன். 'அந்த நன்மைகள் யாவும் இந்த முழுப் பிரபஞ்சத்திற்கே சேர்ந்துவிடும்,' என்று அவன் நவில்கின்ருன். இது அவர் அருளிய அறிவுரையின் வடிவத்தின் ஒரு பகுதியாகும். அறிவுரையின் மற்ருெரு பகுதி யாது? எவன் ஒருவன் இக்குவலயத்தின் நடுவில் நின்றுகொண்டு தொழிலாற்றி எல்லாப் பயன்களையும் கடவுளிடத்தில் சமர்ப்பிக்கின்ருனே, அவனை இந்த ஞாலத்தின் தீமை ஒருபொழுதும் தீண்டாது. எப்படித் தாமரை தண்ணீரின் அடியில் பிறந்தும் தண்ணீரின் மேற்பரப்பில் வந்து மலர்கின்றதோ, அப்படியே ஒருவன் உலகத்திலுள்ள அலுவல்களில் தோய்ந்திருந்தே தன்னுடைய கருமங்களின் பலன்களை ஆண்டவரிடம் சமர்ப்பிக்கும் நிலையில் திகழ்கின்ருன்.

தீவிரமான கருமத்தைப் பற்றிப் பேசுகின்ற ஞானகுரு என்னும் முறையில் இன்னமோர் இசையையும் அவர் எழுப்புகின்ருர். 'அல்லும் பகலும் கருமத்தைச் செய், செய், செய்!' என்று கீதை உரைக்கின்றது. 'அந்நிலையில் அமைதி எங்கே தோன்றும்?' என நீங்கள் வினவலாம். 'ஒரு வண்டிக்குதிரை போல வாழ்நாள் முழுதும் இடையருது உழைத்துச் சேணமாம் கடுந்தொழிலின் நடுவிலேயே நான் உயிர் துறக்க நேரிடுமாயின், நான் எதற்காக இங்கே தோன்றியிருக்கிறேன்? ஒன்றும் விளங்கவில்லையே!' என்ற விஞவிற்கு விடை அளிக்கின்ருர் கண்ணபிராஞர். "ஆம்; உண்மையிலேயே நீ அமைதியைக் காண்பாய். கருமத்தை விட்டு

ஓடுவது அமைதிப் பாதையை நாடுவது என்பது ஒருகாலும் இய லாதன்றோ?'' கருமத்தை விட்டொழித்துவிட்டு ஒரு மலை உச்சிக் குச் சென்றுவிடலாமே! அங்குந்தான் உங்கள் மனம் அலைகின் றது; சுழல்கின்றது, சுழல்கின்றது, இடையறுது சுழல்கின்றது. 'பெரியோரே, நேர்த்தியான இடத்தைக் கண்டீரோ? இந்த இமய மலையிலே எத்தனை ஆண்டுகள் சுற்றித் திரிந்திருக்கின்றீர்கள்?' என்று ஒருவன் ஒரு சந்நியாசியை வினவினன். 'நாற்பது ஆண்டுகளாக நான் திரிந்தேன்,' என்று அவர் மறுமொழி கூறி னர். 'தேர்ந்தெடுப்பதற்கும் அமைதியாக உறைவதற்குமுரிய பல வனப்பு வாய்ந்த இடங்கள் இருக்கின்றனவே! நீங்கள் ஏன் அப் படிச் செய்யவில்லை?' என்றான் அவன். 'என்னுடைய மனம் அப் படிச் செய்யுமாறு எனக்கு இடந்தரவில்லையே!' என்றார் அவர். நாம் எல்லோரும் அமைதியைக் காணவேண்டும் என்று கூறு கின்றோம். ஆனல், நம்முடைய மனம் நாம் அதை அடைய இசைவதில்லை.

ஒரு 'டார்டரை'*ப் பிடித்த ஒரு மனிதனின் கதையை நீங் கள் அறிவீர்கள். ஒரு போர் வீரன் ஒரு நகரத்திற்கு வெளியிலே இருந்தான். வீரர்கள் உறையும் விடுதிகளை அணுகியதும், 'நான் ஒரு 'டார்டரை'ப் பிடித்துவிட்டேன்!' என்று அவன் உரத்துக் கூறினன். 'அவனை உள்ளே கொணர்வாயாக!' என்று ஒரு குரல் எழுந்தது. 'அவர் வரமாட்டேன் என்கிறார்,' என்ற விடை எழுந்தது. 'நீயாகிலும் உள்ளே வரலாமே!' என்னும் வினக் கிளம்பிற்று. 'என்னை அவர் 'விடமாட்டேன்' என்கின்றார்,' என்ற ஒலந்தான் கேட்டது. இவ்வண்ணமே நம் மனத்தில் நாமும் ஓர் அரக்கனும் 'டார்டரை'ப் பிடித்துவிட்டோம். நாம் அவனை அடக்கியாள இயலாமலிருக்கின்றோம்; அவன் கீழ் நாமி ருப்பதற்கும் அவன் இசையமாட்டேன் என்கிறான். 'அரக்கர் களைச் சிக்கவைத்துவிட்டோம்; அமைதியாய் இரு; உபசாந் தத்தை அடைவாய்,' என்று நாமனைவரும் அறிவுரை வழங்குகின் றோம். ஒவ்வொரு குழந்தையும் இப்படிக் கூறும்; அதைச் செய்து விட இயலும் என்றும் அது நினைக்கும். எனினும், அது செயற் கரியது. நான் முயன்று பார்த்திருக்கிறேன்; எல்லாக் கருமங் களையும் கடலில் எறிந்துவிட்டு வரைச் சிகரங்களுக்கு ஓடினேன்; குகைகளிலும் அடர்ந்த காடுகளிலும் உறைந்தேன்; இப்படிச் செய்தென்ன பயன்? என்னை விடாத ஓர் அரக்கனைப் பிடித்து

* உருஷியர்களுக்கு அல்லல் கொடுக்கும் பகைவர்கள்.

விட்டேன். இதற்குக் காரணம், உலகப்பற்று என்னைத் தொடர்ந்தே வந்துவிட்டதுதான். அந்த அரக்கன் என் மனத்துள்ளான்; புறத்திலுள்ள குற்றம் புரியாத ஏழை மக்கள்மீது பழியைச் சுமத்தாதீர்கள். 'இந்தச் சந்தர்ப்பங்கள் நல்லவை; அந்தச் சந்தர்ப்பங்கள் தீயவை,' என்று நாம் மொழிகின்றோம். ஆனால், இவற்றிற்கு மூலம் நம் அகத்தினுள் உறையும் அரக்கனே என்பதை நாம் மறந்துவிடுகின்றோம்; அவனை அடக்கிவிட்டோமாயின், எல்லாம் ஒழுங்காய் அமைந்துவிடும்.

அக்காரணம் பற்றியே நம் கருமங்களைப் புறக்கணிக்க வேண்டா என்று கண்ணபிரானார் கழறுகின்றார். ஆண்மையுடன் ஏற்றுப் பயன் கருதாது அவற்றைப் புரிவோமாக. "ஏன்?" என்று கேட்பதற்கும் பணியாளனுக்கு உரிமையில்லை. போர் வீரனுக்குக் காரண காரியங்களை ஆராய்வதற்கு உரிமையில்லை. முன்னேறுவீர்களாக. நீங்கள் ஆற்றப்போகும் தொழிலின் இயல்பின்பால் கவனத்தைச் செலுத்த வேண்டா. ஆனால், "சுயநலமற்றிருக்கிறாயா மனமே!" என்று உசாவுவீர்களாக. சுயநலம் இல்லையாயின், ஒன்றையும் பொருட்படுத்த வேண்டா. ஒன்றும் உங்களைத் தடை செய்ய இயலாது. புரியவேண்டிய செயலில் குதித்துவிடுங்கள். அண்மையில் காத்திருக்கும் செயலைப் புரியுங்கள். இதைப் புரிந்தால், சிறிது சிறிதாக உண்மை உங்களுக்கு உதயமாகும். "எவன் தீவிரமான செயலின் நடுவில் ஆழ்ந்த அமைதியைப் பார்க்கின்றானோ, எவன் ஆழ்ந்த அமைதியின் நடுவில் தீவிரமான செயலைக் காண்கிறானோ, அவனே யோகியாவான்; அவனே மகாத்துமாவாய்த் திகழ்வான்; அவனே பூரணத்தைப் பெற்றவனாவான்."*

இப்பொழுது கண்ணபிரானாருடைய அறிவுரையின் விளைவை நீங்கள் உணர்வீர்கள். இந்தப் பாரின் செயல்களனைத்தையும் புனிதமாக்கிவிடலாம். இந்த உலகில் எந்தத் தொழிலும் இழிவான தொழில் என்று சொல்லுவதற்கு நமக்கு உரிமையில்லை. அரியணைமேல் அமர்ந்திருக்கும் மன்னர்க்கு மன்னன் புரியும் செயல் எவ்வளவு நன்மை வாய்ந்ததோ, அவ்வளவு நன்மை வாய்ந்ததே ஒவ்வொருவரும் புரிகின்ற செயலும் என்பதை உன்னுங்கள். புத்தர்பிரானுடைய மிகப் பெரிய அறிவுரைக்குச் செவி சாய்ப்பீர்களாக; உங்களுடைய இதயபீடத்தில் அது அமர்ந்திருக்க ஓர் இடம்

* கீதை, IV : 18

உண்டு. "சுயநலத்தை மூலத்தோடு களைந்து எறிந்துவிடுங்கள். உங்களைச் சுயநலமுடையவர்களாக்கும் எதையும் வேருடன் அழியச் செய்வீர்களாக. குடும்பம், மனைவி, மக்களும் உங்களுக்கு வேண்டா. இவ்வுலகத்தில் உழலாதீர்கள்; முற்றிலும் சுயநலமற்றவர்களாய்த் திகழ்வீர்களாக," என்று புத்தபிரானார் அருள்கின்றார். தான் சுயநலமற்றவனாய் இருக்க முடியும் என்று உலகப் பற்றுள்ளவன் நினைக்கின்றான்; ஆனால், தன் மனைவி வதனத்தின் மீது தன் பார்வை விழுகிறபொழுது, அந்நோக்கு அவனைச் சுயநலமுள்ளவனாக்கிவிடுகிறது. தாய், தான் முற்றிலும் சுயநலமற்றிருக்க முடியும் என்று எண்ணுகின்றாள்; ஆனால், அவள் தன் சேயைக் கண்ணுறுங்கால் சுயநலம் சூழ்ந்துவிடுகின்றது. இந்த ஞாலத்தில் ஒவ்வொரு துறையிலும் இவ்வண்ணந்தான் எல்லாம் நிகழ்கின்றன. சுயநல அவா எழுகின்ற பொழுதெல்லாம், சுயநலப் பாதையைப் பின்பற்றுகிற பொழுதெல்லாம் அத்தருணமே உண்மையான மனிதன் மறைந்துவிடுகின்றான் என்பது திண்ணம். அவன் ஒரு விலங்காய் விளங்குகின்றான்; ஓர் அடிமையாய்க் காட்சி அளிக்கின்றான். தன்னுடைய மக்கட் சகோதரர்களை அறவே மறந்துவிடுகின்றான். 'நீ முன்பு, நான் பின்பு,' என்னும் சொல் அவன் உதடுகளில் இனி நடனமாடாது; 'நான் தான் முந்துவேன்! மற்றவர் ஒவ்வொருவரும் தத்தம் காரியங்களைக் கவனித்துக் கொள்ளட்டும்,' என்ற சுயநலக் குரலேதான் கேட்கும்.

கண்ணபிரானாரின் நல்லுரை நம் இதயத்தில் இடம் பெறுகின்றது. அந்த அறிவுரை இல்லாமற்போகுமாயின், நாம் சற்றும் செயலற்றுச் சும்மா கிடப்போம். கண்ணபிரானாருடைய உபதேசத்திற்குச் செவி சாய்க்காமற்போனால், அமைதியோடும், உவகையோடும், இன்பத்தோடும், அகச்சான்றைக் குலைக்காமல் எந்தக் கருமத்தையும் நாம் ஏற்க இயலாது. நீங்கள் புரிகின்ற செயலில் தீமை இருந்தாலும் அஞ்சற்க! தீமை இல்லாத செயலே இவ்வையகத்தில் இல்லை. எல்லாம் ஆண்டவன் பொறுப்பே; பயன் நோக்காதீர்கள்.

இது ஒருபுறம் இருக்கட்டும். ஆனால், இன்னோர் அறிவுரைக்கும் நம்முடைய உள்ளத்தில் ஓர் இடம் உண்டு. காலமோ, சிறகடித்துப் பறக்கின்றது; எல்லைக்குட்பட்ட இவ்வுலகமோ, துயர் மண்டிக் கிடக்கின்றது. நீங்கள் அறுசுவை உண்டி அருந்துகின்றீர்கள்; சிறந்த ஆடைகளை அணிகின்றீர்கள்; வசதியான இல்

லங்களில் இன்புற வாழ்கின்றீர்கள். கவலையற்றுத் துயிலும் ஆடவர்களே, பெண்டிர்களே, கோடிக்கணக்கான மக்கள் உணவின்றிப் பசியால் வாடி வதங்கி மடிகின்றதைப்பற்றி ஒரு கணமாவது நினைத்தீர்களா? 'எல்லாம் துன்பம், துன்பம், துன்பம்!' என்னும் பேருரையை உன்னிப் பாருங்கள். குழந்தையின் முதற்குரலைக் கவனிப்பீர்களாக. உலகத்தில் தோன்றியதும் அது ஓலமிட்டு அழுகின்றது. அது ஓலமிட்டு அழுவதற்குரிய இடமே தான். உலகத் துயர் கண்டு உள்ளம் வாடி சான்றோரின் நல்லுரையைச் செவி மடுத்தால், நாம் சுயநலமுள்ளவர்களாக இருக்க முடியாது.

நாசரத்தில் தோன்றி நல்லுரை வழங்கிய மற்றோர் உத்தமரை நோக்குவீர்களாக. "ஆயத்தமாயிருங்கள்; ஆண்டவன் அருள் நகர் அண்மையில் இருக்கின்றது," என்று அவர் போதித்தார். கண்ணபிரானுர் அருளிய உபதேசத்தை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தேன். பற்றுதலின்றிக் கருமத்தைப் புரிய முயல்கின்றேன்; ஆனால், சில வேளைகளில் நான் மறந்துவிடுகிறேன். பிறகு புத்தபிரானுர் போதித்த அறிவுரை திடீரென என் மனத்தகத்தே பாயும். "விழித்திரு; உலகத்தில் உதிக்கின்ற ஒவ்வொன்றும் நீர்க்குமிழியனையது. வாழ்வு முழுவதுமே எஞ்ஞான்றும் இடும்பையே," என்னும் அந்த நன்மொழிக்குச் செவி சாய்ப்பேன்; எதை ஏற்பது என்பதைப்பற்றி எனக்கு ஐயம் ஏற்படும். 'ஆயத்தமாயிரு; ஆண்டவன் அருள் நகர் அண்மையில் இருக்கின்றது,' என்ற நல்லுரை ஒரு பேரிடி முழக்கம்போல எழக் காண்கின்றேன். 'கணமும் தாமதியாதே; நாளைக்கென்று ஒன்றையும் வைத்துக்கொள்ள வேண்டா. திடீரென உனக்குச் சம்பவிக்கும் இறுதிக் காட்சிக்கு இப்பொழுது ஆயத்தமாயிரு.' இந்த அறிவுரைக்கும் இடமுண்டு. இதை நாம் ஏற்கவேண்டும். அந்தத் தேவதூதருக்கு வணக்கம்! ஆண்டவருக்கும் வணக்கம்!

சமத்துவ அறிவுரையை அளித்த தேவதூதரான மகமது நம் முன் காட்சி அளிக்கின்றார். 'அவருடைய சமயத்தில் என்ன நன்மை இருக்கிறது?' என்று ஒருவர் வினவலாம். அதிலொரு நன்மையில்லாமற்போகுமாயின், அச்சமயம் எப்படி உயிர் பெற்று வாழ்ந்திருக்க முடியும்? நல்லது ஒன்றே உயிரோடிருக்கும்; அது தான் எல்லா இன்னல்களையும் கடந்து பிழைத்திருக்கும். நல்லது மிக்க ஆற்றல் படைத்த காரணத்தால், அது எல்லாவற்றையும் எதிர்த்து அழியாமல் நிற்கின்றது. இந்த வாழ்க்கையில் மாசுற்ற

மனிதனுடைய உயிர் எவ்வளவு காலம் நீடித்திருக்கும்? தூய்மை
யுள்ளவன் வாழ்வு மற்றவர்களுடைய வாழ்வைவிட நீடித்திருக்க
வில்லையா? தூய்மைதான் வலிமை வாய்ந்தது; நன்மைதான்
ஆற்றல் மிக்கது. இதில் யாதோர் ஐயமுமில்லை. மகமதின்
சமயத்தில் ஒரு நன்மையும் திகழாமற் போகுமாயின், இவ்வளவு
காலம் அது உயிர் வாழ்ந்திருக்கக்கூடுமோ? மிகுந்த நன்மை
அம்மதத்தில் மிளிர்கின்றது. சமத்துவத்தை உலகிற்கு வழங்கிய
தீர்க்கதரிசி மகமதுதானே? மனிதனது சகோதரத் தன்மையை
யும், மகமதியர் அனைவரும் சகோதரர் என்னும் இயல்பையும்
அவர் மதம் சாற்றுகின்றதன்றோ?

ஒவ்வொரு தீர்க்கதரிசியும், ஒவ்வொரு தேவதூதரும்,
உலகத்திற்கு ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த அறிவுரையை
அளிப்பதை நோக்குகின்றோம். முதலில் அவருடைய உபதேசத்
தைக் கேட்டு அவருடைய வாழ்க்கை வரலாற்றை உற்றுநோக்கு
வீர்களேயாகில், அவருடைய வாழ்க்கை முழுதும் அவருடைய
நல்லுரைக்கு விளக்கமாய் ஒளிவிட்டுத் திகழக் காண்பீர்கள்.

இப்பொழுதோ, அஞ்ஞானத்தில் ஆழ்ந்த அறிவிலிகள்
இருபதினாயிரம் கொள்கைகளை எழுப்புகின்றார்கள்; தங்கள்
மனத்தின் வளர்ச்சிக்கேற்ப அவற்றை விரிக்கின்றார்கள்; தங்கள்
கருத்துக்கியைய விளக்கங்களை நல்குகின்றார்கள். இவை யாவும்
நல்லுரை வழங்கிய சான்றோர்களின் உபதேச மொழிகளென்று
அவர்கள் மீது சுமத்துகின்றார்கள். அவர்களுடைய போதனை
களுக்குத் தங்களுடைய பொருந்தாத உரைகளை வெளியிடுகின்
றார்கள். ஒவ்வொரு தீர்க்கதரிசியின் உபதேசத்திற்கும் அவ
ருடைய வாழ்க்கை பேருரையாய்ப் பொலியப் பார்ப்பீர்கள். அச்
சான்றோர் வாழ்க்கையை நோக்குவீர்களாக. அவர் புரிந்த
அருஞ்செயல்களே அவருடைய உபதேசங்களுக்கு விரிவுரையாய்
விளங்குகின்றன. கீதையைப் படிப்பீர்களாக. அதற்கு வியாக்
யானம் அந்தப்பெருஞான குரவரின் வாழ்க்கையேயாகும்.

பூரணமான சமத்துவமும் சகோதர மனப்பான்மையும்
மகமதியர்களிடையே திகழ வேண்டுமென்ற உண்மையைத் தம்
வாழ்க்கை வாயிலாக மகமது மெய்ப்பித்துவிட்டார். அங்கே
வேறுபாடில்லை; சாதி வேற்றுமை இல்லை; கொள்கை வேற்றுமை
இல்லை; வருண வேறுபாடு இல்லை; பால் வேற்றுமையுமில்லை.
துருக்கிச் சுல்தான் ஆப்பிரிக்காவின் அடிமைச் சந்தையில்

நீகிரோ இனத்தைச் சார்ந்த ஒருவனை விலைக்கு வாங்கி அவனைக் கைவிலங்கிட்டுத் துருக்கிக்கு அழைத்து வரலாம். அந்த அடிமை ஒரு முசல்மானாகிவிட்டால் அவனுக்குப் போதுமான தகுதியும் ஆற்றலும் இருக்குமாயின், சுல்தானின் மகளையே அவன் மணம் புரியலாம். இந்த நாட்டில் நீக்கிரோ இனத்தார்களையும் செவ் விந்தியர்களையும் நடத்துகிற முறையோடு இதை ஒப்பிட்டுப் பாருங்கள்; உண்மை புலனாகும். இந்துக்கள்தாம் என்ன செய்கிறார்கள்? பாருங்கள்—சமயப் பணி ஆற்றும் உங்களு டைய பாதிரிமார்களில் எவரேனும், வைதிக நெறியைப் பின்பற் றும் ஒருவனுடைய உணவைத் தீண்டிவிட்டால், அவன் அதை எறிந்துவிடுவான் என்பது திண்ணம். எங்களுடைய தத்துவம் ஒரு சிகரம்போல் ஓங்கி நிமிர்ந்து நின்றாலும், செயல் முறையில் எங்கள் குறைபாட்டை நீங்கள் நன்கு உணர்ந்துவிடுவீர்கள். மற்றைய இனத்தார்களைக்காட்டிலும் மகமதியர்கள் சிறப்புற்றிருக் கின்றார்கள். இனப்பற்று, வருணப்பற்று முதலியவற்றைப் பொருட்படுத்தாமல், அவர்கள் காட்டுகிற சமத்துவத்திலேதான் —பூரண சமத்துவத்திலேதான்—அவர்களுடைய சிறப்பு வீற் றிருக்கிறது.

இவர்களைக் காட்டிலும் உத்தம தீர்க்கதரிசிகள் தோன்றுவார் களா? அவர்கள் இவ்வையகத்தில் தோன்றுவார்கள் என்பது திண்ணம். அவர்களுடைய வருகையை எதிர்பார்த்து நிற்க வேண்டா. பண்டைய சாஸனங்களிலிருந்து புதிய சாஸனம் தோன்றியது உண்மையே. இந்தப் புதிய சாசனத்தை நிறுவ வந்த தீர்க்கதரிசியாய் நீங்கள் ஒவ்வொருவரும் திகழ்வதையே நான் பெரிதும் விழைகின்றேன். பண்டைய நல்லுரைகள் அனைத்தையும் பயன்படுத்திக்கொண்டு அவற்றோடு நீங்கள் நேரில் கண்ட உண்மைகளையும் சேர்த்து, ஒன்றை அமைத்து, மற்றவர்கட்கும் தீர்க்கதரிசிகளாய் நீங்கள் விளங்குவீர்களாக. ஞானகுரவர் ஒவ்வொருவரும் மாட்சிமை பொருந்தியவரே; ஒவ்வொருவரும் நமக்கு அவருடைய ஞானச்செல்வத்தை விட்டு விட்டு அகன்றிருக்கின்றனர். அவர்களே நாம் போற்றும் தெய்வங்களாவார்கள். அவர்களுடைய அடியார்களாகிய நாம் அவர்களை வணங்குவோமாக. இதோடு நில்லாமல், நம்மையே நாம் போற்றிக்கொள்வோமாக. அவர்கள் தீர்க்கதரிசிகளாயும், ஆண்டவரின் அருட்சேய்களாயும் திகழ்ந்தார்கள் என்றால், நாமும் அத்திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்தாமே? அவர்கள்

தங்கள் பூரணத்தை எய்திவிட்டார்கள். நாமும் அப்பூரணத்தை அடையப்போகின்றோம். இயேசு நாதர் இயம்பிய சொற்களை இதயத்தில் இருத்திக்கொள்ளுங்கள். ஆண்டவன் அருள் நகர் அண்மையில் இருக்கிறது. உண்மையான ஒரு தீர்மானத்தை நாம் ஒவ்வொருவரும் இக்கணமே வகுத்துக்கொள்ளுவோமாக. ''நான் ஒரு தீர்க்கதரிசியாய்த் திகழ்வேன்; ஞான தீபத்தை யேந்திவரும் ஒரு தேவதூதனுய்த் தோன்றுவேன்; ஆண்டவரின் அருட்குழவியாய்ச் சுடர்விட்டெழுவேன்; ஏன், நான் ஒரு தெய்வமாகவே காட்சி அளிப்பேன்,'' என்பதே அத்தீர்மான மாகட்டும்.

## ஸ்ரீ கிருஷ்ண பகவான் *

புத்தசமயத்தைப் பிறப்பித்த சந்தர்ப்பங்களே பெரும்பாலும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்துமாவின் உதயத்தையும் சூழ்ந்திருந்தன. அவைமட்டுமன்றி, அந்நாள் நடந்த நிகழ்ச்சிகளே நம் காலங்களிலும் விரிவடையப் பார்க்கின்றோம்.

ஏதோ ஓர் இலட்சியம் இலங்குகின்றது: மனித இனத்திற் பெரும்பாலோர் அந்த இலட்சியத்தை நண்ணுவதற்குக்கூட இயலாமலிருக்கின்றனர்; அறிவினுற்கூட அதை அவர்கள் சித்திரித்துப் பார்க்க முடியாத நிலையில் அமைந்திருப்பதைப் பார்க்கின்றோம். ஆற்றலுள்ளவர் அதை நிறைவேற்றுகின்றனர். ஆனால், அவர்கள் எளியவர்பால் பல முறைகளில் பரிவு காட்டத் தவறுவதை நாம் கண்ணுறுகின்றோம். ஆற்றலுள்ளவர் முன் எளியோர் பிச்சைக்காரர்போலக் காட்சி அளிக்கின்றனர். சத்திவாய்ந்தோர், பின்னோக்காது முன்னேறிக்கொண்டே போகின்றனர். எளியவர்கள்மீது இரக்கங்காட்டுவதும், அவர்கட்கு உதவி செய்வதுந்தான் மிக உயர்ந்த நிலை என்பதை நாம் உடனடியாக உணர்கிறதும் இயல்பே. ஆனால், பல விஷயங்களில் நாம் இரக்கங்காட்டும் பாதையில் தத்துவ ஞானி குறுக்கே நின்றுவிடுகிறன். இந்த அகண்டப் பெருவாழ்வு, இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கும் சில ஆண்டுகளின் இருப்பைக்கொண்டு தீர்மானிக்கப்படவேண்டும் என்ற கொள்கைப்படி நாம் நடக்க முயன்றால், அப்பொழுது நாம் யாதொன்றும் புரிய முடியாத இரங்கத்தக்க நிலையில் இருப்போம். பின்னே உழன்று வாடும் எளிய மக்களைத் திரும்பிப்பார்க்கக்கூடப் பொழுதில்லை என்பது உண்மையே. ஆனால், இவை இத்தகைய நிலைகளைச் சார்ந்தவையல்ல என்றும், இந்த வையகம் நாம் கற்றுத் தேரக்கூடிய பல பள்ளிகளில் ஒன்று என்றும், அழியா நம் வாழ்வு அநாதியான நியதியால் வார்க்கப் பெற்று உருவடைகிறது என்றும் நாம் முடிவு செய்துவிட்டால், எல்லையற்ற சந்தர்ப்பங்கள் ஒவ்வொருவருக்கும்

* 1900-ஆம் ஆண்டு, ஏப்பிரல் திங்கள், 1 ஆம் நாள் கலிபோர்னியாவில் ஆற்றப்பட்ட சொற்பொழிவு.

காத்திருக்கின்றன என்பதை நாம் நன்கு அறிந்துவிடுவோம். அந்நிலையில் நாம் விரைய வேண்டுவதில்லை. நாம் இரக்கங் காட்டலாம்; எங்கும் சுற்றிப் பார்க்கலாம்; எளியோர்களுக்குக் கைநீட்டி உதவிபுரியலாம்; பின் தங்கியவர்களை முன்னே நிறுத்த இயலக்கூடிய நேரமும் உண்டு.

பௌத்தம் என்ற சொல்லிற்கு வடமொழியில் பொருள் தரக் கூடிய இரண்டு சொற்களிருக்கின்றன; ஒன்றை மொழி பெயர்த்தால், அது சமயத்தைச் சுட்டும்; மற்றொன்றோ, அச்சமயத்தைச் சார்ந்த குழுவினரைக் குறிக்கும். அயல் நாட்டார்கள் 'இந்து சமயம், பிராம்மண சமயம்,' என்று வழங்கினாலும், பகவான் கிருஷ்ணருடைய அடியார்களும், அவர்கள் மரபில் தோன்றியவர்களும் பின்பற்றுகிற சமயத்திற்குப் பெயரே இல்லை என்பது விசித்திரமான செய்தியன்றோ? சமயம் ஒன்றே; ஆனால், பற்பல பிரிவுகளிருக்கலாம். ஒன்றிற்கு ஒரு பெயரைத்தந்து, அதற்கு ஒரு தனி உருவை நல்கி, மற்றைய இனத்திலிருந்து அதைப் பிரித்த அக்கணமே அது ஒரு குழுவாய், கிளையாய்த் திகழ்ந்து விடும். அது சமயமன்று.

ஒரு குழு, தனது கொள்கையைப் பறைசாற்றுகின்றது; தான் சாற்றுகின்ற உண்மையைத் தவிர வேறொன்றில்லை என்று அது விளம்புகின்றது. 'இவ்வுலகில் ஒரு சமயந்தான் நீண்ட காலமாய் இருந்து வந்தது; இப்பொழுதும் இருக்கிறது,' என்று சமயம் கருதுகின்றது. இரண்டு சமயங்கள் திகழ்ந்த காலமே இல்லை. ஒரே சமயந்தான் பல்வேறு இடங்களில் தன் பல்வேறு அமிசங்களைப் புலப்படுத்துகின்றது. அதன் குறிக்கோள், மன்னுயிருக்கு வேண்டிய அதன் திட்டம், ஆகிய இவற்றைப் பற்றித் தக்கபடி அறிவதுதான் நம் செயலாகும்.

இத்தகைய அருஞ்செயலைத்தான் கண்ணபிரானார் ஏற்றார். நம்முடைய கண்களைத் தெளிவுறச் செய்வதும் உயர்ந்து ஓங்கி முன்னேறுகிற மனித இனத்தைப் பரந்த காட்சியுடன் நோக்கச் செய்வதுந்தான் கண்ணபிரானாருடைய தொழிலாகும். எல்லாவற்றிலும் மெய்ப்பொருளைக் காண்கின்ற அவ்வளவு விரிந்த உள்ளத்தை அவரே முதன்முதலாகப் பெற்றிருந்தார். ஒவ்வொருவர்க்கும் வனப்புவாய்ந்த சொற்களை அருள்வதற்கேற்ற திருவாயை எல்லோருக்கும் முன் அவரே பெற்றிருந்தார்.

புத்தபிரான் தோன்றுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தக் கண்ணபிரானார் அவதரித்திருந்தார். இவர் ஒரு

காலத்தில் இருந்தார் என்பதையே நம்பாத பெரும்பாலோரு முண்டு. கிருஷ்ண வழிபாடு பண்டைய சூரிய வழிபாட்டி லிருந்து வளர்ந்தது என்று சிலர் கருதுகின்றனர். கிருஷ்ணர் பலர் தோன்றினதாகவுந் தெரிகின்றது. உபநிடதங்களில் உரைக்கப்பட்ட கிருஷ்ணன் உண்டு; மற்ெறொரு கிருஷ்ணன் வேந்தனுய்த் திகழ்ந்திருந்தானும்; வேறு கிருஷ்ணனோ, படைத் தலைவனுகக் காட்சி அளித்ததாகவும் கூறப்படுகின்றது. இத்தனை அமிசங்களையும் திரட்டி உருட்டி ஒரு கிருஷ்ண வடிவம் அமைக் கப்பட்டிருப்பதைப் பார்க்கின்ேறாம். இது ஒரு பெரும்பொரு ளன்று. ஆன்மிகத்துறையில் ஓர் ஒப்பற்ற சான்றோர் தோன்றி யிருக்கிறார் என்பது ஓர் உண்மை உரையாகும். இப்பெரியோ ரைச் சுற்றிப் பல வகையான கட்டுக்கதைகளைப் புனைந்துவிட்ட னர். இச்சான்றோரைப்பற்றி இப்படி எழுந்த புனித வரலாறு கள்—கதைகள்—இவற்றை இப்பிரானுருடைய குணமாம் வார்ப் பில் மீண்டும் உருக்கி வார்த்தல் வேண்டும். புதிய சாஸனத்தில் அலர்ந்திருக்கிற அத்தனை கதைகளையும், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இயேசுநாதரின் வாழ்வைக்கொண்டும் குணச் சித்திரத்தைக் கொண்டும் மாற்றிச் சமைத்தல் வேண்டும். புத்தபிரானைப் பற்றிய அத்தனை இந்துக் கதைகளிலும் ஒரே ஒரு முக்கியமான சுருதியைத்தான் மாருமல் ஒலிக்கும்படி வைத்திருக் கின்றனர் ;—தமக்கென்று வாழாது பிறர்க்கே தம்மைத் தியாகம் செய்யும் பண்பாட்டொலிதான் அது.

கண்ணபிரானுருடைய நல்லுரையில் இரண்டு கருத்துகள் தலைநிமிர்ந்து ஓங்கி நிற்கின்றன. ஒன்று, மாறுபட்ட கருத்து களின் இயைபு; மற்றொன்று, யாதொன்றிலும் பற்றின்மை. அரியாசனத்தமர்ந்திருந்தாலும், வெம்போர்ப் படைகளை நடத்தி னலும் நாட்டார்களுக்கு மாபெருந்திட்டம் வகுக்குஞ் செயல்களில் ஈடுபட்டாலும் ஒரு மனிதன் மிகச் சிறந்த குறிக்கோளான பூரணத்தைப் பெறுதல் கூடும். உண்மையைக் கூறுமிடத்து, செருக்களத்திலேதான் கண்ணபிரானுருடைய பெருநல்லுரை வழங்கப்பட்டது.

பண்டைய புரோகிதரின் தூற்றுவதற்கிடமானவைகளும் எள்ளி நகையாடக்கூடியவைகளுமான சடங்குகளின் ஆடம்பரத் தின் பயனற்ற தன்மையை ஊடுருவி நன்கு வெளிப்படையாகக் கண்டாலும் அவற்றிலும் சில நன்மைகளை அவர் உணர்ந்தார்.

நீங்கள் வலியவராயிருத்தல் மிகவும் நல்லதுதான். ஆனால், உங்களை எதிர்க்கக்கூடிய வல்லவர்களாய் மற்றவர்கள் திகழ வில்லையே யென்று அவர்மீது சீறி விழாதீர்கள். 'மக்களே, உங்கட்குத் துன்பந்தான் வரும்' என்று ஒவ்வொருவரும் உரைக் கின்றனர். ஆனால், 'உங்கட்கு உதவி நல்க முடியாத எனக்குத் துன்பம் வருவதாக,' என்று யாரேனும் கூறுகின்றனரா? தங்கள் சக்திக்கேற்றவாறு, தங்கள் செயலுக்கேற்றவாறு, தங்கள் அறிவுத்திறனுக்கேற்றவாறு, மக்கள் தங்களால் இயன்றவளவு தக்க முறையில் காரியங்களைச் செய்துதான் வருகின்றார்கள். அவர்களை என் நிலைக்கு உயர்த்த முடியாத என்னைத் துயர் சூழட்டும்!

ஆகையால், சடங்குகள் தெய்வங்களின் வழிபாடுகள், புராணங்கள் எல்லாம் வேண்டுவனவே என்று கண்ணபிரானார் மொழிகின்றார். ஏன்? அவை யாவும் ஒரே குறிக்கோளுக்கே நம்மை அழைத்துச் செல்கின்றன. சடங்குகள், நூல்கள், உருவங்கள் ஆகிய இவை யாவும் அந்தச் சங்கிலியின் இணைப்பு களே. அச் சங்கிலியைப் பற்றிக்கொள்வீர்களாக; அதுதான் முக்கியமான பொருளாகும். நீங்கள் உண்மையுள்ளவர்களா யிருந்து ஏதாவது ஓர் இணைப்பைப் பற்றினாலும் அது போதும்; அதை நெகிழ விடாதீர்கள். மற்றவை தாமே வந்தெய்தும் என்பது திண்ணம்; (ஆனால், மக்கள்) பற்றுகிறதில்லை; எதைப் பற்றுகிறது என்று தீர்மானித்தலிலும் சொற்போர்களிலுமே தங்கள் நேரத்தைக் கழிக்கின்றார்கள். ஒன்றையும் சிக்கெனப் பிடிப்பதில்லை. நாம் எஞ்ஞான்றும் உண்மையைத் தேடி அலை கின்றோமே தவிர, அதை அடைய எப்பொழுதுமே விருப்பம் கொள்ளுகிறதில்லை. இப்படித் திரிந்துகொண்டு உசாவுதலிலே தான் நாம் இன்புறுகின்றோம். நமக்கு மிகுதியான சக்தி இருக் கிறது. ஆனால், இம்முறையிலேதான் அதை வீணாய்ச் சிதற விடுகின்றோம். இக்காரணத்தால் கண்ணபிரானார், 'பொதுவான மையத்திலிருந்து தொங்கவிடப்பட்டிருக்கின்ற ஏதாவது ஒரு சங்கிலியைப் பற்றுவாயாக. ஒரு படி மற்றொரு படியைக் காட்டி லும் சிறந்ததன்று. உண்மையான கொள்கையாயிருக்குமாயின், சமய சம்பந்தமான எந்தக் கருத்தின் மீதும் குறை கூறாதே,' என்று கூறுகின்றார். ஏதாவது ஓர் இணைப்பை இறுகப் பிடித்துக் கொள்வீர்களாக; அது உங்களை மையத்திற்கு அழைத்துச் செல்லும். மற்றவையனைத்தையும் உங்கள் இதயமே உங்களுக்கு

உணர்த்திவிடும். எல்லாக் கொள்கைகளையும் எல்லாத் தத்துவங்களையும் அகத்துறையும் குருவாகிய இறைவர் உங்களுக்குக் கற்பித்துவிடுவார்.

இயேசுநாதர் மொழிந்தது போலவே, கண்ணபிரானும் தம்மைத் தெய்வமெனப் பாராட்டிக்கொள்ளுகிருர். "எனது பாதையை விட்டு ஒருநாளும் அகன்று போவதற்கு எவராலும் இயலாது. எல்லோரும் என்னிடத்தில் வரத்தான் வேண்டும். யார் எந்த வடிவத்தில் என்னை வழிபடவேண்டுமென்று விரும்பினாலும் அந்த வடிவத்தில் நான் அவருக்கு நம்பிக்கை வரும்படி செய்வேன். அந்த வடிவம் வாயிலாக நான் அவருக்குக் காட்சி அளிப்பேன்"—எல்லா மக்களிடத்திலும் அவரது உள்ளம் விரிகின்றது.

கண்ணபிரானுர் ஒன்றையும் சாராமல் தனித்து நிற்கின்ருர். அத்தகைய துணிச்சல் நம்மை அச்சுருத்துகின்றது. ஆனல், நாமோ, ஒவ்வொன்றையும் சார்ந்து நிற்கின்ருேம். நல்ல சொற்கள் சில நமக்கு வேண்டியிருக்கின்றன. நாம் தக்க சந்தர்ப்பங்களின் துணையை நாடுகின்ருேம். ஒன்றையும் சாராது நிற்க—ஏன்—வாழ்வையும் சாராமல் இருப்பதற்கு ஆன்மா விழையுமாயின் அப்பொழுதுதான் அது தத்துவத்தின் உச்ச நிலையாகக் கருதப்படும். அதுதான் பேராண்மையாகும். வழிபாடு அதே இலட்சியத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும். கண்ணபிரானுர் வழிபாட்டை வலியுறுத்துகின்ருர். கடவுளை வழிபடுவீர்களாக.

இவ்வையகத்தில் பல்வேறு வழிபாடுகளை நாம் பார்க்கின்ருேம். நோய்வாய்ப்பட்டவன் ஆண்டவனிடத்தில் மிகுந்த வழிபாடு உள்ளவனுய்த் திகழ்கின்ருன். செல்வத்தை இழந்தவன் அதை மீண்டும் பெறப் பிரார்த்தனை செய்கின்ருன். அன்பு செலுத்தும் பொருட்டே ஆண்டவனைத் தொழுவதுதான் மிக உயர்ந்த பூசனையாகும். 'கடவுள் இருப்பாராயின் உலகில் துன்பம் தோன்றுவானேன்?' என்னும் வினவை ஒருவர் எழுப்பலாம். வழுத்துவோன் மறுமொழி கூறுகின்ருன்: "இந்தப் புவியில் துன்பம் இருக்கிறது என்பது உண்மையே. அக்காரணத்தால், நான் ஆண்டவர்பால் அன்பு காட்டுவதை நிறுத்துவதில்லை. என்னுடைய (துயரைத்) துடைத்தற்பொருட்டு அவரை நான் இறைஞ்சவில்லை. அவர்மீது அன்பு செலுத்துகிறேன்; ஏனெனில், அவர் அன்பு வடிவானவரல்லவா? மற்றைய

(வழிபாட்டின் வகைகள்) இழிவான தரங்களாகும்.'' ஆனால், கண்ணபிரானார் எந்த வழிபாட்டையும் வெறுக்கிறதில்லை. சும்மா அசைவற்று நிற்பதைவிட ஏதாவது ஒன்றைப் புரிவது நலந்தானே? கடவுளை இறைஞ்சத் தொடங்கினவன், படிப்படியாக அவர்பால் அன்பு வைக்கும்பொருட்டே அவரை வழுத்துவான்.

இந்த வாழ்க்கை நடத்திக்கொண்டே எப்படித் தூய்மை அடைகின்றது? எல்லோரும் காட்டிலுள்ள குகைகளுக்குச் செல்லுவோமா? மனம் அடங்காத நிலையில் ஒரு முழையில் உறைந்தும் பயனில்லை. இதே மனம் எல்லாக் குழப்பங்களையும் அங்கேயும் கொண்டுவந்துவிடும். அங்கே இருபது பேய்களைப் பார்ப்போம். ஏனெனில், பேய்களனைத்தும் நம் மனத்தின்கண் உள்ளவைகளே. மனம் வசப்பட்டிருந்தால், எங்கிருந்தாலும் அத்தகைய குகையை நாம் காண இயலும்.

நம் மனச்சார்பே நமக்குத் தகுந்தபடி உலகத்தை தோன்றும்படி செய்துவிடுகின்றது. நம்முடைய எண்ணங்களே பொருள்களை வனப்புறச் செய்கின்றன; நம்முடைய எண்ணங்களே அவற்றைக் கவினற்றனவாகவுஞ் செய்துவிடுகின்றன. இவ்வுலகம் முழுதும் நம் மனத்திலேதான் இருக்கிறது. பொருள்களைத் தக்க கோணத்திலிருந்து நோக்கக் கற்றுக்கொள்வீர்களாக. முதன்முதலாக இந்த உலகத்தை நம்புங்கள். ஒவ்வொரு பொருளுக்கும் பின்னால் ஒரு கருத்துக் கரந்து நிற்கின்றது. ஒவ்வொரு பொருளும் நல்லதாயும், தெய்வத்தன்மை வாய்ந்ததாயும், அழகுள்ளதாயும் திகழ்கின்றது. உங்கள் கண்ணிற்கு ஏதாவது ஒரு தீமை புலப்படுமாயின், நீங்கள் அதைத் தக்க அறிவொளியில் கண்டு அறியவில்லை என்பதுதான் உண்மை. குற்றச் சுமையை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களாக.

உலக முழுதும் சீரழிந்து நாயினும் கீழ் நிலைக்கு வந்துகொண்டிருக்கிறது என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு ஒன்றை நாம் மொழிந்தால், நம்மையே நாம் துருவி ஆராய்ந்து பார்க்க வேண்டும். அந்நிலையில் நாம் பொருள்களை உள்ளபடி நோக்கும் ஆற்றலை இழந்துவிட்டோம் என்பதை உணர்வோம்.

"அல்லும் பகலும் தொழிற் புரியுங்கள். என்னை நோக்குங்கள். நான் இந்தப் பிரபஞ்சத்திற்குத் தலைவன். எனக்குச் செய்யவேண்டிய கடமை ஒன்றுமில்லை. ஒவ்வொரு கடமையும் ஒரு தளைதான். ஆனால், நான் கைங்கரியத்திற்காகவே கைங்

கரியத்தைச் செய்கின்றேன். ஒரு கணம் நான் வேலை செய்வதை நிறுத்துவேனாயின், குழப்பம் ஏற்பட்டுவிடும்.''* உங்கள் வேலையைச் செய்வீர்களாக. அதன் பயனைப் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டுவதில்லை.

இவ்வுலகம் ஒரு பெரிய விளையாட்டாகும். நீங்கள் ஆண்டவருடைய விளையாட்டுத் தோழர்கள். துயரின்றித் துக்கமின்றி உங்கள் பணியைச் செய்துகொண்டே இருப்பீர்களாக. குப்பை கூளங்கள் மண்டிக் கிடக்கும் சிறு மட்குடிசைகளிலும், இன்பப் போகம் பொங்கும் கூடங்களிலும் அவர் திருவிளையாடலை நோக்குவீர்களாக. நீங்கள் மக்களை உயர்த்துவதற்காகப் பாடுபடுகின்றீர்களா? இது விந்தையிலும் விந்தைதான்! அன்னார் இழிந்ததையோ அல்லது தாழ்ந்ததையோ காரணமாகக் கொண்டு உதவி புரியவேண்டா. கண்ணபிரானார் அப்படித் திருவாய் மலர்ந்தருளவில்லை.

நற்செயல் உலகத்தில் புரியப்படாத காரணம் உங்கட்குத் தெரியுமா? என்னுடைய சீமாட்டி வறுமையுற்றவர் வாழ்கின்ற எளிய சேரிகளுக்குப் போகிறாள். ஏழை மக்களுக்கு 'டக்கட்டு' நாணயங்கள் சிலவற்றைக் கொடுத்தபடியே, 'வறுமை வாய்ப்பட்டவனே, இதை எடுத்துக்கொண்டு இன்புற்றிருப்பாய்,' என்று மொழிகின்றாள். மற்றோர் அழகிய பெண்மணியோ, தெரு வழியே சென்று கொண்டிருக்கும்பொழுது ஓர் ஏழை மனிதனைப் பார்க்கின்றாள். அவனிடம் ஐந்து செண்டு நாணயங்களை எறிகின்றாள். இந்தத் தெய்வ நிந்தனையை என்னென்று சொல்லுவது! உங்களுடைய புதிய ஏற்பாட்டில் இயேசுநாதர் தந்த அறிவுரையைப் பெற நாங்கள் பாக்கியம் புரிந்தவர்களாவோம். 'இந்தச் சகோதரர்களில் மிக எளியவர்கட்குப் புரிகின்ற எந்தக் கைங்கரியமும் எனக்குச் செய்ததாகும்,' என்று இயேசுநாதர் மொழிகின்றார். எவருக்கேனும் நீங்கள் உதவி புரிகின்றதாகக் கருதுவீர்களாயின், அது தெய்வத்திற்குச் செய்த குற்றமாகும். 'உதவி புரிகின்றோம்,' என்ற கருத்தை வேரோடு களைந்துவிடுவீர்களாக. எல்லாவற்றையும் தொழுவீர்களாக. கடவுளின் சேய்கள் உங்கள் தலைவரின் குழவிகளாவார்கள். (குழந்தைகளோ, தந்தையின் வேறு வடிவங்களைத் தவிர வேறல்ல.) நீங்களோ, ஆண்டவனுடைய பணியாட்கள். நடமாடும் தெய்வத்தை வழி

* கீதை, III: 22, 23.

படுங்கள். குருடனுயும், முடமாயும், வலிவற்றவனுயும், பேய்க் கோலம் பூண்டு தீமையே உருவெடுத்தவனுயும் உங்களிடம் கடவுள் வருகின்ருர். அவரை வழிபடுவதற்கு எவ்வளவு சிறப்பான வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது! ஏதோ உதவி புரிகின்றீர்கள் என்ற எண்ணம் உங்கள் மனத்தில் முளைத்த அக்கணமே எல்லாவற்றையும் பாழாக்கிவிடுகின்றீர்கள். உங்களையும் இழிவான நிலையில் கொணர்ந்துவிடுகிறீர்கள். இந்த உண்மையை அறிந்து கைங்கரியம் செய்வீர்களாக. 'இப்படிச் செய்வதால் என்ன விளையும்?' என்று நீங்கள் கேட்கலாம். அந்த இதயமுறிவு உங்களுக்கு ஏற்படாது; அந்த பயங்கரமான துன்பம் உங்கள்முன் விரியாது. அப்பொழுது தொழில் வெற்று அடிமைத்தனமாகத் தோன்ருது; அது விளையாட்டாக மாறிவிடும்; உவகை வடிவாகவே அது விளங்கும். பயன் கருதாது பற்றற்றபடியே கைங்கரியம் புரிவீர்களாக. முழு இரகசியமும் அதுவேயாகும். பற்றே உங்களைத் துன்புறும்படி செய்துவிடும்.

வாழ்வில் புரிகின்ற ஒவ்வொரு காரியத்தையும் விட்டு நாம் விலகி நிற்காமல் ஒன்றிப் போய்விடுகின்ருேம். ஒரு மனிதன் என்னைப் பார்த்துக் கொடுஞ்சொற்களைக் கூறுகின்ருன். எனக்குச் சீற்றம் வருவதை நான் உணர்கின்றேன். சில விநாடிக்குள் சீற்றமும் நானும் ஒரே வடிவமாகிவிடுகின்ருேம். பிறகு இடும்பை என்னைத் தொடர்ந்துவிடுகின்றது. ஆண்டவரைச் சிக்கெனப் பற்றுங்கள். மற்றென்றின் மீதும் நீங்கள் பாசம் வைக்காதீர்கள். ஏனெனில், கடவுளைத் தவிர ஏனைய அனைத்தும் பொய்யே. பொய்யைப் பின்பற்றுவது துன்பத்தைத்தான் நல்கும். உண்மையான ஒரே இருப்புத்தான் உண்டு; ஒரே வாழ்வுதான் உண்டு; அதில் பார்க்கப்படுகின்ற பொருளும் (பார்க்கின்ற பொருளும்) இல்லை.

கலப்பற்ற—பற்றற்ற—அன்பு உங்களுக்கு இன்னலை விளைவியாது. நீங்கள் எதையும் செய்யலாம்—மணம் புரிந்துகொள்ளலாம், பிள்ளைகளைப் பெறலாம். ஒன்றும் உங்களை வருத்தாது. 'எனது' என்ற எண்ணத்துடன் எதையும் புரியவேண்டா. கடமைக்காகவே கடமையைச் செய்வீர்களாக; கைங்கரியத்திற்காகவே கைங்கரியத்தில் இறங்குவீர்களாக. அதைப்பற்றி உங்களுக்கென்ன கவலை? தனித்து நிற்பீர்களாக.

பற்றற்ற நிலைக்கு வந்துவிட்டால், இந்தப் பிரபஞ்சத்தின் வியப்புறத் தகுந்த மர்மத்தை நாம் அறிய இயலும். மிகச்

செறிந்த இயக்கமாயும் அதிர்ச்சியுள்ளதாயும் செயல் நிகழத் தொடங்குகின்றது; அதே கணத்தில் அச்செயலில் அமைதியையும் உபசாந்தத்தையும் உணர்கின்றோம். ஒவ்வொரு கணத்திலும் இயக்கமும் ஓய்வும் கைகோத்து நிற்கின்றன. குணமற்றதும் குணமுள்ளதும், நிர்க்குணமும் சகுணமும், அகண்டமும் எல்லையுள்ளதும் ஒரே இடத்தில் திகழக் காண்கின்றோம். அப்பொழுது தான் நாம் இரகசியத்தைக் காண்கின்றோம். "செறிந்த தீவிரமான செயலின் நடுவிலே பேரமைதியையும், பேரமைதியில் செறிந்த தீவிரமான செயலையும் எவன் உணர்கின்றானோ, அவனே யோகியாவான்."* அவன்தான் உண்மையான கரும யோகி, மற்றவர் அல்லர். நாம் ஒரு சிறிய காரியம் செய்கின்றோம், அதற்குள் நமக்கு அயர்வு வந்துவிடுகிறது. ஏன்? காரியத்தைப் பற்றோடு புரிகின்றோம். பற்றில்லாமல் செய்யப்படுகின்ற எந்தக் காரியத்திலும் நம்மிடையே எல்லையற்ற அமைதி விரியாமற் போகாது.

இத்தகைய பற்றற்ற நிலையை அடைவது எவ்வளவு கடினமாயிருக்கிறது! அக்காரணம் பற்றியே மிகத் தாழ்ந்த படிகளையும் முறைகளையும் கண்ணபிரானார் காட்டுகின்றார். ஒவ்வொருவரும் (அவனோ அவளோ) விளைவுகளைக் கவனியாமல் தத்தம் காரியத்தைச் செய்வதுதான் மிக எளிய பாதையாகும். நம்முடைய விருப்பந்தான் நமக்குத் தளை இடுகின்றது. நம்முடைய செயல்களைப் பொருட்படுத்தினால் அவை நல்லவையோ, தீயவையோ—அவற்றை நாம் சகித்தே தீரவேண்டும். நமக்காகப் பாடுபடாமல் ஆண்டவரின் புகழ் பரப்ப நாம் கைங்கரியம் செய்வோமானால், விளைவுகள் தம்முடைய அலுவல்களைத் தாமே கவனித்துக்கொள்ளும். "கருமம் செய்ய உனக்கு உரிமை உண்டு. அவற்றின் விளைவுகள் உன்னைச் சார்ந்தவை அல்ல."† போர் வீரன் விளைவைக் கவனியாமல் செருக்களத்தில் இறங்குகின்றான். அவன் தன் கடமையை ஆற்றுகின்றான். தோல்வி தோன்றுமாயின், அது போர் வீரனைச் சாராது; சேனைத்தலைவனையே அது சாரும். சேனைத் தலைவன்மீது நாம் காட்டும் அன்பிற்காக, கடவுள்பால் நாம் வைக்கும் அன்பிற்காக, நாம் கடமைக்காகவே கடமையைச் செலுத்துவோமாக.

உங்களுக்கு மிகுதியான அறிவாற்றல் இருக்குமாயின்,

---

* கீதை, IV: 18.
† கீதை, II: 47.

வேதாந்த தத்துவத்தைப் பின்பற்றி, ஒன்றையும் சாராது திகழ் வீர்களாக. இப்படிச் செய்ய உங்களால் இயலாமற்போனல், கடவுளைத் தொழுவீர்களாக. அதுவும் உங்கள் சத்தியை மீறி நிற்குமாயின், ஏதாவது ஓர் உருவ வழிபாட்டைப் புரிவீர்களாக. அதற்குப் போதுமான ஆற்றல் இல்லாத இடத்து, பயன் கருதாது ஏதாவது நற்செயலைச் செய்க. ஆண்டவரின் கைங்கரியத் திற்காக ஏதாவது ஒரு பொருளைக் காணிக்கையாகச் சமர்ப்பிப் பீர்களாக. போராடிக்கொண்டே இருப்பீர்களாக. "எனது பலி பீடத்தின் மீது ஓர் இலையையோ ஒரு திவலைத் தண்ணீரையோ, ஒரு மலரையோ வைத்தால் அது எனக்குப் போதும். அவற்றை யெல்லாம் சரிசமமான உவகையுடன் நான் ஏற்கின்றேன்,"* என்பது கண்ணபிரானர் கூற்று. "உன்னல் ஒன்றுமே புரிய இயலாமற் போயின்—ஒரு நற்காரியங் கூட ஆற்ற முடியாது போயின் (ஆண்டவரிடத்தில்) தஞ்சம் புகுக. எல்லாப் பொருள் களின் இதயத்திலும் உறைகின்ற உத்தமன் அவற்றையெல்லாம் தன் சக்கரத்தின்மீது சுழலும்படி செய்கிருன். உனது முழு ஆன்ம சத்தியோடும், இதயத்தின் ஆர்வத்தோடும் அவனிடத்தில் சரணம் புகுக."†

கண்ணபிரானுரால் அன்பைப்பற்றி அளிக்கப்பட்ட பொது வான கருத்துக்கள் கீதையில் காணப்படுகின்றன. அவை பற்றிய அறிவுரைகள், மற்றைய சிறந்த நூல்களிலும், புத்த பிரானும் இயேசுநாதரும் வழங்கிய உபதேசங்கள் போல மிளிர் கின்றன......

கண்ணபிரானுருடைய வாழ்க்கை வரலாற்றைப் பற்றிச் சில சொற்கள் மொழியலாமென்று நினைக்கிறேன். இயேசுநாத ருடைய வரலாற்றைப் பற்றியும், கண்ணபிரானுருடைய வரலாற் றைப் பற்றியும் நாம் ஆராயும்பொழுது மிகுதியான ஒற்றுமை இருக்கப் பார்க்கின்ரும். 'இது அதைப் பார்த்து வரையப் பட்டதா, அல்லது அது இதைப் பின்பற்றி எழுதப்பட்டதா?' என்பதைப் பற்றிய சர்ச்சை நடந்துகொண்டுதான் இருக்கிறது. இரண்டு வரலாறுகளிலும் ஒரு கொடுங்கோல் மன்னன் இடம் பெறுகின்ருன். இவ்விருவரும் ஆயர்பாடியிலேதான் பிறந்தனர். இவ்விருவருடைய பெற்ருேரும் சிறையில் வைக்கப்பட்டனர். இவ்விருவரும் தேவதூதர்களால் காப்பாற்றப்பட்டனர். அந்த

* கீதை, IX : 26.

† கீதை, XVIII : 61—62.

ஆண்டு பிறந்த குழந்தைகள் அனைத்தும் கொல்லப்பட்டன. குழவிப் பருவமும் ஒன்றுய்த்தான் இருக்கிறது...முடிவில் இவ்விருவரும் பிறரால் மாய்க்கப்படுகின்றனர். கண்ணபிரானுர் திடீரென உயிரை இழந்தனர்; தம்மை மாய்த்தவனையும் விண்ணவர் நாட்டிற்கு அவர் அழைத்துச் சென்றுர். இயேசுநாதரும் கொல்லப்பட்டார். அவரும் கொலைஞனுக்கும் அருள் காட்டி அவனை வானுலகத்திற்கு நடத்திச் சென்றுர்.

புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற அறிவுரைகளுக்கும் கீதையில் கோயில் கொண்டிருக்கிற உபதேசங்களுக்கும் பற்பல ஒற்றுமைகள் இருக்கின்றன. மனிதனின் கருத்து ஒரே முறையிலேதான் இயங்குகின்றது.....கண்ணபிரானுர் கூறிய மொழிகளில் இதற்குரிய விடையை நான் உங்கட்குக் காண்பிப்பேன். "எவ்வெப்பொழுது அறம் தேய்ந்து மறம் ஓங்குகின்றதோ, அவ்வப்பொழுது நான் அவதாரஞ் செய்கின்றேன். ஆகையால், எங்கெங்கே ஒரு மகாத்துமா மனித இனத்தை உயர்த்துவதற்காக அரும்பாடு படுகின்றுரோ, அங்கங்கே நான் தோன்றியிருக்கிறேன் என்பதை உணர்ந்து என்னை வழிபடுவாயாக."*

இயேசுநாதராய்த் தோன்றினுல் என்ன, புத்தபிரானுய் அவதரித்தால் என்ன? இந்நிலையில் இத்தகைய பெரும்பிளவு இருப்பானேன்? அவர்களுடைய அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டும். ஆண்டவரே இயேசுநாதராயும், கண்ணபிரானுராயும், புத்தராயும், மற்றைய எல்லாப் பெரிய ஞான குரவர்களாயும் தோன்றினுர் என்று ஓர் இந்திய பத்தன் இயம்புவான். ஓர் இந்து தத்துவஞானி பின் வருமாறு மொழிவான்: "இவர்கள் மகாத்துமாக்கள். இவர்கள் முன்னமே பந்தமற்றவர்கள். விடுதலை உற்றவர்களாய் இவர்கள் திகழ்ந்தாலும், உலகம் துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் பொழுது தங்களுக்கு விடுதலை வேண்டாவென்று மறுக்கின்றுர்கள். இவர்கள் அடிக்கடி வருகின்றுர்கள்; மனித உடலை எடுத்து மனித இனத்திற்கு உதவி புரிகின்றுர்கள். குழவிப் பருவம் முதற்கொண்டே தாங்கள் யார், எதற்காகத் தோன்றியிருக்கின்றனர் என்பது இவர்கட்கு நன்கு தெரியும்.........நம்மைப் போலப் பிறவித்தளையால் இவர்கள் உலகத்தில் அவதாரம் செய்யவில்லை............தங்கள் சுய சங்கற்பத்தாலேயே மனித உருவெடுக்கின்றுர்கள். இவர்களிடத்தில்

* கீதை, IV : 8 ; X : 41.

ஆன்மிக மாபெருஞ்சத்தி இல்லாமல் இருக்க முடியாது. அந்தச் சத்தி வெள்ளத்தை நாம் எதிர்த்து நிற்க இயலாது. மனித இனத்தின் பெரும்பகுதித் திரள் ஆன்மிகச் சுழலால் ஈர்க்கப்படுகின்றது. அந்த அதிர்ச்சி நில்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. ஏனெனில், இத்தகைய மகான்களில் ஒருவர் அதைத்தூண்டியிருக்கின்றனர். இவ்வுலக நாடகத்தின் திருவிளையாடல் முடிவடைகின்ற வரையில், இவ்வதிர்ச்சி தொடர்ந்தே சென்றுகொண்டுதான் இருக்கும்.''

நாங்கள் படிக்கின்ற வாழ்க்கை வரலாறுகளுக்குப் பொருளாய்த் திகழ்கின்ற சான்றோர்கள் போற்றி! போற்றி! இவ்வுலகத்தில் நடமாடும் தெய்வங்களே அவர்கள். இத்தகைய பெரியோர்களையே நாம் தொழவேண்டும். ஆண்டவர் மனித வடிவெடுத்து என்னிடம் வந்தாற்றான் நான் அவரை அறிய இயலும். மனித வரம்பில் அவர் காட்சி அளித்தாற்றான் நான் அவரைக் காண முடியும்...... .....மனிதர்களும்..............விலங்குகளும் ஆண்டவரின் தோற்றங்களாய்க் கருதுமிடத்து, மனித இனத்தின் குரவர்கள் தலைவர்களாவார்கள். அவர்ளே நாம் வணங்கும் குருக்கள். குருக்களே, உங்கள் திருப்பாதம் தொழும் பல கையும் தேவ தூதர்களால் வழுத்தப்படுகின்றன. மனித இனத்தை நடத்தும் தலைவர்களே, போற்றி! போற்றி! மாபெருங் குரவர்களே, போற்றி! போற்றி! தலைவர்களே, எஞ்ஞான்றும் எங்கள் வணக்கங்கள் உங்களுக்கு உரியனவாகுக!

## புத்த பெருமான்

[இது டெட்ராய்ட்டு நகரில் ஆற்றப்பட்ட சொற்பொழிவு]

ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு வகையான ஆன்ம அஞ்சலி போற்றி வளர்க்கப்படுவதைக் காண்கிறோம். புத்த சமயத்தில் பயன் நோக்காத் தொண்டுபுரியும் வகை பெரிதும் முன்னிற்கின்றது. பிராம்மணச் சமய இயலையும் புத்த சமயத்தையும் ஒன்றென எண்ணிவிடாதீர்கள். உங்கள் நாட்டில் நீங்கள் அத் தவற்றைப் புரியக் காரணமுண்டு. புத்தசமயம் எங்களுடைய சமயப்பிரிவுகளுள் ஒன்று. தம் காலத்தில் முடிவற்ற தத்துவ வாதங்கள், தொல்லை மிக்க சமயச்சடங்குகள், முக்கியமாகச் சாதிப்பிரிவுமுறை ஆகியவற்றைக் கண்டு வெறுப்புற்ற கௌதமர் என்ற பெரியாரால் அச்சமயம் நிறுவப்பட்டது. தாம் ஓர் உயரிய குடியில் பிறந்ததால் அவ்வுயர் குடிப்பிறப்பற்ற ஏனையோரைவிடத் தாம் மேலானவர் எனச் சிலர் கூறுகின்றனர். மிக்க ஆற்றல் படைத்த பூசாரிகளின் சூழ்ச்சிகளையும் கௌதமர் வெறுத்தார். உந்தும் சத்தி எதுவுமற்ற ஒரு சமயத்தை அவர் போதித்தார். தத்துவ வாதங்களிலோ, இறைவனைப் பற்றிய கோட்பாடுகளிலோ, அவர் நம்பிக்கை கொண்டாரில்லை. 'இறைவன் ஒருவன் இருக்கிறானா?' என வினவப்பட்ட பொழுதெல்லாம் தமக்குத் தெரியாது எனவே அவர் விடையிறுத்தார்; நல்லொழுக்கத்தைப் பற்றிக் கேட்டால், 'நன்மையே புரிவாயாக; நல்லவனாக வாழ்க,' என மறுமொழி கூறுவார். அந்தணர் ஐவர் அவரை அணுகித் தம் வாதத்தைத் தீர்த்துவைக்குமாறு வேண்டினர். "ஐயா, 'இறைவன் இத்தகையவன். இதுவே இறைவனை அடையும் வழி,' என என் நூல் கூறுகிறது," என்று சொன்னார் ஒருவர். "அவர் கூறுவது தவறு. ஏனெனில், என் புத்தகம் இறைவனை வேறு விதமாகச் சித்திரித்து அவனை அடைய வேறொரு வழியைக் காட்டுகிறது," என்றார் மற்றொருவர். இவ்வாறே மற்றவரும் மொழிந்தனர். புத்தர், அனைவரும் கூறியதை அடக்கத்துடன் கேட்ட பின்பு, ஒவ்வொருவரையும் நோக்கி, "இறைவன் சினங்கொள்கிறான்; ஒருவனுக்குத் தீங்கிழைக்கிறான்; அவன் தூய்மையற்றவன் என உங்கள் சமய நூல்களில் ஒன்றாவது உரைக்கின்றதா?" என வினவினார். "இல்லை ஐயா,

அவையெல்லாமே, 'இறைவன் தூய்மையானவன்; மிக நல்லவன்,' எனவே போதிக்கின்றன,'' என்றனர் அந்தணர். ''அப்படியானால், நண்பர்களே, இறைவன் எப்படிப்பட்டவனென்பதை நீங்கள் தெரிந்துகொள்வதற்கு முன், நீங்கள் நல்லவர்களாக, பரிசுத்தமானவர்களாக மாறவேண்டாவா?'' என்று வினவினார் புத்தர்.

அவருடைய தத்துவத்தை நான் அப்படியே ஆமோதிக்கவில்லை. எனக்குத் தத்துவ வாதங்கள் பல வேண்டும். பெரும்பாலான முறைகளில் நான் வேறுபட்ட கருத்துடையவனாய் இருக்கிறேன். ஆனால், என் கருத்து வேறுபாட்டினால் அம்மனிதரின் அக அழகை என்னால் காண இயலாதா என்ன! உந்தும் ஏது அறவே அற்ற ஒரே ஒரு மனிதர் அவர் ஒருவரே. தாம் இறைவனின் திருவுருவங்கள் என்றும், தம்மைப் பின்பற்றுவோர் மேலுலகெய்துவது திண்ணம் என்றும் நவின்ற சான்றோர் பலர் இருந்திருக்கின்றனர். ஆனால், தம் இறுதி மூச்சுடன் புத்தர் என்ன சொன்னார்? ''யாரும் உங்களுக்கு உதவ முடியாது; உங்களுக்கு நீங்களே உதவி செய்துகொள்ளுங்கள்; உங்களுடைய ஈடேற்றத்தை நீங்களே பாடுபட்டுப் பெறுங்கள்,'' என்று அவர் கூறினார். தம்மைப் பற்றியே அவர் கூறியதாவது: ''எல்லையற்ற ஆகாய வெளியைப்போல அறிவு நிலையைச் சுட்டும் பெயர் புத்தர் என்பதாகும். கௌதமனாகிய நான் அந்நிலையை அடைந்துவிட்டேன். முயற்சி செய்தால் நீங்களும் அந்நிலையை அடையலாம்,'' என்பது. பயன் நோக்கும் பண்பற்ற அவர் மேலுலகஞ் செல்வதையோ, பொருளையோ வேண்டினாரில்லை. அவர் தம்முடைய அரியணையையும் மற்ற எல்லாவற்றையுமே துறந்து, இந்திய நாட்டின் தெருக்களிலே பிச்சையெடுத்து உண்டு, ஆழி போலப் பரந்த இதயத்துடன், மனிதருடையவும் விலங்கினங்களுடையவும் நலனுக்காக அறவுரையாற்றி வாழ்ந்தார். விலங்குகளைப் பலியிடுதலைத் தடுப்பதற்காகத் தம் உயிரையும் விட எப்பொழுதும் ஆயத்தமாய் இருந்த ஒரே மனிதர் அவர் ஒருவரே. அவர் ஒரு மன்னனை நோக்கி, ''நீ ஆட்டுக்குட்டி ஒன்றை வேள்வியில் பலியிடுதல் நீ மேலுலகு செல்லத் துணைபுரியுமென்றால் மனிதனைப் பலியிடுதல் அதற்குமேல் உனக்கு நன்மை பயக்கும். எனவே, என்னைப் பலியிடு,'' என்றார். அம்மன்னன் வியப்படைந்தான். எனினும், அச்சான்றோருக்கோ பயனை நாட உந்தும் யாதோர் எண்ணமுமில்லை. முயற்சியுடைமையின் உயரிய சான்றாக அவர் திகழ்கிறார்.

உழைப்பின் சக்தியால் மிக உயர்ந்த ஆன்ம அறிவு நிலையை எய்த முடியும் என்பதை அவர் அடைந்த உயரிய நிலை எடுத்துக் காட்டுகிறது

இறைவனிடத்தில் நம்பிக்கை கொள்ளுதல் பலருக்கு இவ்வுழைப்பில் உதவுகிறது. ஆனால், கடவுளிடத்தில் நம்பிக்கையில்லாத, தத்துவவாதங்களற்ற, சாதிச்சார்பற்ற, கோயிலுக்கோ ஆலயத்திற்கோ செல்லும் பழக்கமற்ற, உறுதியான உலகவாதி ஒருவனும் மிக மேலான இந்நிலையை எய்த முடியும் என்பதைப் புத்தருடைய வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது. அவரைச் சீர்தூக்கி ஆராய நமக்கு உரிமையில்லை. புத்தருடைய இதயத்தில் ஓர் அணுவளவான பகுதியாவது எனக்கு இருக்கவேண்டுமென நான் விரும்புகிறேன். புத்தர், கடவுளிடத்தில் நம்பிக்கை கொண்டவராகவோ, அற்றவராகவோ இருந்திருக்கலாம்; அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. இறைவனை அன்புடன் இறைஞ்சுவதாலும், தியானத்தாலும், தவத்தாலும் ஏனையோர் அடையும் அதே நிறைவு நிலையை அவரும் அடைந்தார். நிறைவு, நம்பிக்கையினாலே விசுவாசத்தாலே ஆக்கப்படுவதன்று. வெறும் பேச்சினால் ஆவதொன்றுமில்லை. கிள்ளைகளும் பேசும். ஒருவன் தன்னலமற்ற செயலாற்றலால் மட்டுமே நிறைவு நிலையை அடையலாம்.

# புத்தர் உலகத்தாருக்குக் கொணர்ந்த செய்தி

[1900-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள், 18-ஆம் நாள், ஸான் பிரான்ஸிஸ்கோவில் நடைபெற்ற சொற்பொழிவு]

உலக சரித்திரம் வாயிலாக நோக்குங் காலத்துப் புத்த மதம் அனைத்தினும் மிகச் சிறப்புற்றதாகும். ஆயினும், இவ் வுண்மை, தத்துவ ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட மட்டில் பொருந் தாது; சரித்திர சம்பந்தப்பட்ட மட்டிலுமே பொருந்தும். ஏனெ னில், இவ்வையகத்தே தோன்றியவற்றுளெல்லாம் மிக்க வலிமை வாய்ந்த சமய இயக்கமும் மனித சமூகத்தின்மீது மோதி அடித்த வற்றுளெல்லாம் நனிமிகு திறலமைந்த ஞான அலையும் அதுவே. யாதானும் ஒரு வழியிலாவது அச்சமயத்தினால் தனக்கு விளைந்த நலனை உணர்ந்திராத நாகரிகம் எதுவும் இல்லை.

புத்தரைப் பின்பற்றினவர்கள் ஊக்கஞ்செறிந்தவர்களாயும் தங்கள் சமயத்தை எங்கும் பரப்பும் நாட்டம் மிகுந்தவர்களாயும் விளங்கினார்கள். உலகத்துத் தோன்றியுள்ள பல வகைச் சமயங் களுள், அவற்றைப் போற்றிப் பாதுகாத்துவந்தவர்க்குள்ளே, தாய் மதத்தின் குறுகிய எல்லையோடு திருப்தியடையாது முதன் முதலாக வெளி நாடுகட்குச் சென்றவர் பௌத்தரே. புத்த மதத் தைச் சார்ந்தவர் மிகுதொலை வரை சென்று தம் மதத்தைப் பரப் பினர்; நாற்றிசைக்கண்ணும் புறப்பட்டனர்; இருள் மண்டிக் கிடக்கும் திபேத்திற்குச் சென்றனர்; பாரஸீகம், ஆசியா மைனர் எனும் நாடுகட்குப் போயினர்; மேலையுலகத்தைச் சார்ந்த ருஷியா, போலந்து முதலிய பல நாடுகளுக்கும் பிரயாணம் செய் தனர்; சீனா, கொரியா, ஜப்பான் எனும் இடங்கட்கும் சென்ற னர்; பர்மா, சயாம், கிழக்கிந்தியத் தீவுகள் ஆகிய இவற்றிற்கு அப்பாலும் ஏகினர். ஒரு காலத்து அலெக்ஸாண்டர் எனும் வீரர் பல நாடுகளையும் வென்று கொண்டே சென்றபோது, மத்திய தரைக் கடலைச் சார்ந்த உலகத்தை இந்தியாவோடு இணைத்து வைத்தார்; அப்போது இந்தியாவின் ஞானச் செல்வம் அலெக் ஸாண்டர் வகுத்த வாய்க்கால் வழியாக உடனே ஆசியா, ஐரோப்பா எனும் இருகண்டங்களின் பெரும்பகுதியெல்லாம் புகுந்து பரவலாயிற்று. புத்த மதப்போதகர்கள் வெளியேறிப் பற்பல நாட்டினர்க்கும் போதித்துவரலாயினர். அப்போதனை

யின் விளைவாக, மூட நம்பிக்கைகளும் குருமாரின் சூழ்ச்சியும் அந்நாடுகளிலே பரிதியைக் கண்ட பனியென மறையலாயின.

புத்த மத இயக்கத்தின் மாண்பினை ஒழுங்காக அறிய வேண்டின், புத்தர் அவதரித்த காலத்தில் இந்தியாவின் நிலைமை எவ்வாறிருந்தது என்பதை அறிதல் வேண்டும்; கிறித்தவ சமயத்தின் பெருமையை உள்ளவாறு உணர வேண்டின், கிறித்து தோன்றிய காலத்திலிருந்த யூத சமுதாயத்தின் நிலைமையை ஆராய்ந்து காண வேண்டுமென்பது போன்றது அது. கிறித்து பிறப்பதற்கு அறுநூறு ஆண்டுகட்கு முன்பு இந்தியாவில் பொது மக்களின் நிலைமை இன்னவாறிருந்ததென்பதை அறிதல் முதலில் அவசியமாகின்றது. இந்திய நாகரிகத்தின் வளர்ச்சி அக்காலத்திற்குள்ளே முற்றுப்பெற்றுவிட்டது என்பதை நாம் நினைவுறுத்திக்கொள்வோம்.

இந்திய நாகரிகத்தினை ஆராயும்போது அது பலமுறை இறந்தும் மீண்டும் உயிர்பெற்றெழுந்தும் வந்துள்ளது என்பதை நீங்கள் காண்பீர்கள். இது அதற்குரிய சிறப்பியல்பாகும். எத்தனையோ மனித இனத்தினர் புகழொடு கிளம்பி, பின்பு என்றும் தேய்ந்து மறைந்துவிடுகின்றனர். மக்களில் இரு வகையினர் உளர். தொடர்ந்து வளர்ந்துகொண்டே வருபவர் ஒரு வகையினர். வளர்ச்சி முடிவடையப் பெறுகின்றவர் மற்றொரு வகையினர்; சாந்த குணம் நிறைந்த நாட்டினராகிய இந்தியரும் சீனரும் தாழ்வடையினும், பின்னர் மீண்டும் மேன்மை எய்துகின்றனர்; ஆனல், பிறரோ, ஒரு முறை தாழ்ச்சியடைந்ததும், பின்னர் மேன்மை எய்தாது இறந்துவிடுகின்றனர். சாந்தியை வளர்ப்பவர் பேறு பெற்றவரேயாவர்; அன்னர் இப்புவியிலே இன்ப வாழ்க்கை எய்துவார்.

புத்தர் பிறந்த காலத்து இந்தியா ஒரு பெரிய ஞானத் தலைவரை—ஒரு தீர்க்கதரிசியை—அவாவி நின்றது. மிக்க அதிகாரம் வாய்ந்த குருமாரது கூட்டம் ஒன்று முன்னரே தோன்றியிருந்தது. யூதரது சரிதத்தை நீங்கள் நினைவில் வைத்திருந்தீர்களாயின், மிக எளிதாக உங்கட்கு அந்நிலைமை விளங்கும். யூதர்களுக்குள் குருமார், ஞானியர் என்னும் இரு வகை ஞானத் தலைவர் இருந்தனர்; அவர்களுள் குருமார் எனப்படுவார், மக்களை அறியாமையில் நிலைத்திருக்கச்செய்வர்; மூட நம்பிக்கைகளை அவர்களுடைய மனத்துள் திணித்து வருவர். குருமார் ஏற்படுத்தும் பூசனை முறைகள் பொது மக்களைக் குருமார் அடக்கி

யாண்டு வருவதற்குத் துணையாகுமாறே அமைந்திருக்கும். பைபிளில் உள்ள பழைய ஏற்பாடு எனும் பகுதியிலே, குருமார்கள் விதித்து வந்த மூடக் கொள்கைகளை ஞானிகள் எதிர்த்து வழக்காடுதலை எங்கும் நீங்கள் காண்பீர்கள். இப்போராட்டத்தின் பயனாக ஞானிகள் வெற்றியடையக் குருமார்கள் தோல்வியுற்றார்கள்.

கடவுள் உண்டென்று குருமார் நம்புவதோடு, அக்கடவுளை அவர்கள் வாயிலாக மட்டுமே பிறர் அணுகவும் அறியவும் கூடும் என்னும் நம்பிக்கையுடையராகின்றனர். குருமாரது அனுமதியைப்பெற்றுத்தான் மக்கள் கடவுளின் உறைவிடமாகிய தூய தலத்திற்குட் புக முடியும். அவர்கட்குக் காசு வழங்க வேண்டும். அவர்களை வழிபட வேண்டும். எதனையும் அவர்கள் கையில் ஒப்புவித்துவிட வேண்டும். உலக சரித்திரம் முழுவதிலும் குருமாரது இக்குணம் மீண்டும் மீண்டும் முளைத்தெழுந்திருப்பதைக் காணலாம். அதிகாரத்தில் அளவு கடந்த வேட்கையும் புலிக்குரியது போன்ற தணியாப் பேரவாவும் அவர்கட்கு இயல்பாகவே அமைந்துவிட்டன போலும்! குருமார் பிறர்மீது ஆணை செலுத்துகின்றனர்; பிறர்க்கென ஆயிரம் விதிகளை ஏற்படுத்துகின்றனர்; எளிய உண்மைகளைச் சுற்று வழியில் விரித்துரைக்கின்றனர்; தம் பதவிக்குரிய மதிப்பினைக் காப்பாற்றும் பொருட்டு வெறுங் கட்டுக்கதைகளைப் புனைகின்றனர்; இம்மையிலே நல்ல வாழ்வு வேண்டுமாயினும் மறுமையிலே சுவர்க்க வாழ்வு வேண்டுமாயினும், தம் கைக்குள்ளே அது அடங்கியுள்ளதென்பர்; பலவிதக் கிரியைகளையும் சடங்குகளையும் புரியவேண்டும் என்பர். இவை அனைத்தும் வாழ்க்கையைச் சிக்கலாக்கி மூளையைக் குழம்பச் செய்துவிடுகின்றன. சாதாரண எளிய சொற்களைச் சொன்னால், அவற்றைக்கொண்டு மனம் திருப்தி அடையாமல் நீங்கள் வீடு செல்வீர்கள். சொற்களாம் தேனைக்குடித்து முற்றிலும் மயங்கிக் கிடக்கின்றீர்கள்; எவ்வளவுக்கெவ்வளவு உங்களால் ஒன்றை அறிய முடிய இயலவில்லையோ, அவ்வளவுக்கவ்வளவு நீங்கள் அதை உணர்வதாகக் கருதுகின்றீர்கள். குருமாரையும் அவர்களுடைய மூடநம்பிக்கைகளையும் சூழ்ச்சிகளையும் எதிர்த்து ஞானிகள் மக்கட்கு எச்சரிக்கை செய்து வந்துள்ளார்கள்; எனினும், பொதுமக்களிற் பெரும்பாலார் இந்த எச்சரிக்கைக்குச் செவி சாய்க்கக் கற்றுக்கொள்ளவில்லை. கல்வி இன்னும் அவர்கட்கு வந்தபாடில்லை.

மக்களுக்குக் கல்வி மிகவும் இன்றியமையாதது. இந்நாளிற் பலரும், பொதுமக்கள் ஆட்சியைப் பற்றியும் மக்களின் சமத்துவத்தைப் பற்றியும் பேசி வருகின்றனர். ஆனால், ஒரு மனிதன் தான் மற்றெல்லாருக்கும் சமமாவதை எவ்வாறு அறிவான்? அவனுக்கு வலிமை பொருந்திய மூளையும் முட்டாள்தனமான கருத்துகளினின்றும் நீங்கிய தெள்ளிய மனமும் அவசியம் வேண்டும்; தன்னுள்ளே ஆழத்தே புதைந்து கிடக்கும் மெய்ப் பொருளை, பாறைபோல உறைந்து மனத்தை மூடிமறைக்கும் மூடநம்பிக்கைகளின் தொகுதியை அவன் ஊடுருவிச் செல்லல் வேண்டும். அப்போதுதான் எல்லாப் பூரணமும் எல்லா வல்லமைகளும் தன்னுள்ளே முன்னமே அமைந்து கிடப்பதையும், அவற்றைப் பிறர் மூலமாகப் பெறுதல் வேண்டாததொன்றே என்பதையும் அவன் அறிவான். இதை அவன் உணர்ந்த அக்கணமே அவன் விடுதலையடைகிறான். அவன் சமத்துவத்தைப் பெறுகிறான். தன்னைப் போன்றே பிறர் ஒவ்வொருவரும் சமமான பூரணத் தன்மை பெற்றிருப்பதையும், உடற்சத்தியையோ, மனச் சத்தியையோ எவனும் தனது சகோதரன் மீது ஆணை செலுத்தும் அவசியம் இல்லையென்பதையும் அவன் உணர்கிறான். தன்னினும் கீழான மனிதன் எவனும் என்றேனும் இருந்தான் எனும் எண்ணத்தை அவன் நீக்கிவிடுகிறான். அப்போதே அவன் சமத்துவத்தைப் பற்றிப் பேச உரிமையுடையவனாவான்; அதற்குமுன் ஆகான். இது நிற்க.

முற்கூறியவாறே யூதர்களுள்ளே குருமார்க்கும் ஞானியர்க்கும் ஓயாப் போர் நிகழ்ந்துகொண்டேயிருந்தது. குருமார் அதிகாரத்தையும் அறிவையும் தமக்கென்றே உரிமையாக்கிக்கொள்ளுதலை நாடி வந்தனர்; அதன் விளைவாகத் தாமே அவற்றை இழக்கலாயினர். அன்றியும், மக்களின் கால்களில் அவர்கள் பூட்டிய தளைகள் அவர்கள் கால்களையே தளைக்கலாயின. அதிகாரம் செலுத்துபவர் எப்போதும் சிறிது காலத்திற்குள் தாமே அடிமையாவார் என்பது உண்மையன்றோ? இருவருக்கும் நடந்த போராட்டத்தின் முடிவாக நாசரத்தைச் சார்ந்த இயேசுநாதர் வெற்றி பெற்றார். அவ்வெற்றியே கிறித்தவ மதத்தின் வரலாறும். இயேசுநாதர் இறுதியில் குருமாரின் மாய மந்திரத்தையெல்லாம் தலை கீழாய்ச் சாயும்படி செய்துவிட்டார். இப்பெரிய ஞானியார் குருமார்க்குரிய சுயநலப் பேயைக் கொன்றொழித்துவிட்டார்; அவர்களுடைய பிடியினின்றும் மெய்யெனும் ஞான நன்மணியை அகற்றி அதை உலக முழுவதற்குமே ஈந்தார்.

இதனுல், மெய்யைப் பெற விருப்பமுடையார் யாவரும் அதனை அடைய முழுச் சுதந்தரம் பெற்றனர்; வைதிகக் குருமாருள் ஒருவரது இச்சையையோ, பலரது இச்சையையோ எதிர் பார்த்துக் காத்திருக்கும் அவசியம் மறையலாயிற்று.

யூதர் எந்நாளும் தத்துவ ஆராய்ச்சியிற் பெரிதும் ஈடுபட்டிருந்தவரல்லர்; இந்தியரது அறிவின் நுட்பத்தை அவர்கள் பெற்றிருக்கவில்லை. இந்தியரது உளச் சத்தியையும் (யோக சித்தியையும்) அவர் பெற்றிருக்கவில்லை. இந்தியாவில் வாழ்ந்த குருமாராகிய பிராம்மணர் மதிநுட்பத்தையும் மன ஆற்றலையும் உடையராயினர். இவர்களே இந்தியாவின் ஞான வாழ்க்கையின் மலர்ச்சிக்கு அடிகோலினுர்கள். வியத்தகு செயல்களை இவர்கள் இயற்றினுர்கள். அனைவரும் தடையின்றி ஞான முன்னேற்றம் அடையவேண்டும் எனும் பொது நோக்கம் இவர்களுடைய உள்ளத்துக் குடிகொண்டிருந்தது. ஆனுல், நாளடைவில் அது மறையுங் காலமும் அணுகலாயிற்று. இவர்கள் தமக்கே அதிகாரங்களையும் உரிமைகளையும் சொந்தமாக்கிக்கொள்ளத் தொடங்கினுர்கள். ஒரு பிராம்மணன் ஒருவனைக் கொன்ருனுயின், அவனுக்குத் தண்டனை இல்லை. பிறவியினுலே பிராம்மணன் பிரபஞ்சத்திற்கு அதிபதியாவான். மிகக் கெட்ட பிராம்மணனும் வணங்குதற்கு உரியவனே என்று கூறிவரலானுர்கள்.

ஆனுல், குருமார் மேன்மையடைந்து வருங்காலத்தே, கவிஞரும் ஞானியருமான துறவியரும் வாழ்ந்து வந்தனர். எவ்வருணத்தவராயினும், இந்து மதத்தினைச் சார்ந்தார் அனைவரும், மெய்ஞ்ஞானம் பெறும்பொருட்டுத் தம் தொழில்களைக் கைவிட்டுச் சாவுக்கு ஆயத்தமாக்கிக்கொள்ள வேண்டும். அன்னுர்க்கு இவ்வுலகத்து யாதொருபற்றும் இல்லாதொழிகிறது. அவர்கள் இல்லங்களைவிட்டு வெளியேறிச் சந்நியாசிகளாதல் வேண்டும். குருமார் தம் அறிவின் தந்திரத்தால் கண்டுபிடித்துள்ள ஈராயிரம் சடங்குகளுக்கும் சந்நியாசிகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. சிலசொற்களை உச்சரித்தல்—பத்து அசைகளை உச்சரித்தல், இருபது அசைகளை உச்சரித்தல் முதலியவை சந்நியாசிகளுக்குப் பொருளற்றனவாகும். இக்காரணம் பற்றியே, பழங்கால இந்தியாவில் வாழ்ந்த ஞானிகள் (சந்நியாசிகள்) குருமாரின் முறைகளைக் கண்டித்து, கலப்பற்ற உண்மையை எடுத்தோதி வரலானுர்கள். அவர்கள் குருமாரது அதிகாரத்தைத் தகர்க்க முயன்ருர்கள்; ஒருவாறு வெற்றியும் அடைந்தார்கள். ஆனுல், இரண்டு தலைமுறைகளுக்குள் அவர்களுடைய சீடர்கள்

குருமாரின் மூடக் கொள்கைகளையும் சுற்று வழிகளையும் மீண்டும் கைப்பற்றலானார்கள்; தாங்களே குருமார்களானார்கள்; "எங்கள் வழியாகத்தான் அனைவரும் மெய்ப்பொருளை அடைவர்," என்று மொழியலானார்கள். உண்மை மறுபடியும் இறுகிய உறைக்குள் மறையலாயிற்று. மீண்டும் ஞானியர் தோன்றி அவ்வுறையைத் தகர்த்தெறிந்து, உண்மையை வெளிக்கொணர வேண்டியதாயிற்று. இவ்வாறு நிகழ்ந்து வரலாயிற்று. எக்காலத்தும் ஆண்டகையான ஞானி வாழவேண்டும். ஞானி இல்லையாயின், மக்கள் அழிவார்கள்.

குருமார்களின் சுற்றுவழியான முறைகள் எதற்காக இருக்க வேண்டும் என்று வியப்புடன் நீங்கள் கேட்பீர்கள். நீங்கள் ஏன் நேர்முகமாக உண்மையை நோக்கிச் செல்லலாகாது? கடவுளால் அமைக்கப்பட்ட உண்மையைப் பலவகைப்பட்ட சிக்கலான சடங்குகளாலும் வாய்பாடுகளாலும் மறைக்கும் அவசியம் ஏற்படுவதற்கு நீங்கள் அதைக் கண்டு வெட்கப்படும் நிலையில் அது உள்ளதா? அவரது உண்மையை உலகத்தார் முன்பு நீங்கள் ஒப்புக்கொள்ள முடியாதவண்ணம் அவ்வளவு உங்களிடம் வெட்கமூட்டுதற்கேற்ற பொருளா கடவுள்? அப்பரம்பொருளை வைதிக மதச் சார்பும் ஞானச் சார்பும் உடைய பொருளாக நீங்கள் கருதுகின்றீர்களா? உண்மையை ஏற்கத் தகுந்தவர் குருமாரே; பிறரல்லர்! பொது மக்களிடம் அதற்குரிய தகுதி ஏது? ஆதலின், அதன் காரத்தைத் தணிக்க வேண்டுமாம்! அதற்காகச் சற்றுத் தண்ணீர் சேர்த்துப் புகட்டல் வேண்டுமாம்!

(இயேசுநாதர்) மலைமேல் அருளிய ஞான நன்மொழியையும் (கண்ணபிரானது) கீதையையும் எடுத்துக்கொள்ளுவோம். அவை எளிமையின் வடிவமேயாகும். தெருவில் நடப்போருக்கும் அவற்றின் பொருள் விளங்கும். அவை எத்துணைப் பெருமை வாய்ந்தவை! அந்நூல்களுள் உண்மை மிகத் தெளிவாகவும் எளிய முறையிலும் வெளியிடப்பட்டிருப்பதை நீங்கள் காணலாகும். ஆனால், உண்மை அவ்வளவு எளிதாக நேரே காணக்கூடிய பொருளென்று குருமார்கள் ஒப்புக்கொள்வார்களா? அவர்கள் இரண்டாயிரம் சுவர்க்கங்களையும் இரண்டாயிரம் நரகங்களையும் பற்றிப் பேசுவார்கள். அவர்கள் கூறும் விதிகளைப் பின்பற்றினாலன்றி மக்கள் சுவர்க்கத்திற்குப் போகமாட்டார்களாம்! அவ்விதிகளை அவர்கள் பின்பற்றாதுபோயின், நரகத்திற்கே செல்வார்களாம்!

ஆனால், மக்கள் உண்மையை உணர்ந்தே தீர்வார்கள். முழு உண்மையும் அனைவர்க்கும் உணர்த்தப்படின் அது அவர்க்குக் கேடு விளைக்கும் என்று சிலர் அஞ்சுகின்றனர். அவர்களுக்கு உண்மையை உள்ளவாறே கலப்பின்றிக் கூறுதல் கூடாது என்று குருமார் கூறுவர். ஆனால், உண்மையைக் குறைத்தும் திரித்தும் மொழிந்ததால் உலகம் மிக்க முன்னேற்றத்தை அடைந்துவிட்டதா? இப்போது உள்ள நிலையினும் மிகக் கேடான நிலை வேறு யாது இருக்கக்கூடும்? உண்மையை வெளியே கொண்டு வாருங்கள். அது மெய்யாயிருப்பின், நன்மையை விளைக்கும். மக்கள் இதைக் கண்டித்து வேறு வழிகளை எடுத்துரைப்பார்களாயின், அன்னார் மாயமும் மந்திரமும் கைக்கொள்ளுவதற்காக மன்னிப்புக் கேட்பவரேயாவர்.

புத்தர் காலத்தில் மாயமும் மந்திரமும் இந்தியாவில் மண்டிக் கிடந்தன. பொதுமக்களுக்கு எவ்வித அறிவையும் பெற அதிகாரம் அளிக்கப்படவில்லை. ஒரு மனிதனது செவியில் வேதமொழியொன்று புகுமாயின், அவனுக்குக் கடுந்தண்டனை விதிக்கப்படும். பழங்கால இந்துக்கள் கண்டுபிடித்திருந்த ஞான உண்மைகளைத் தம்மிடையே அடக்கிக்கொண்டிருந்த வேதங்களைக் குருமார் மறைபொருள்களாக்கி வைத்திருந்தனர்.

இறுதியாக, ஒருவர்க்கு அது பொறுக்கவொண்ணாததாயிற்று. அவரிடம் அறிவும் சத்தியும் அன்பும்—பரந்த வானம் போன்று அகண்டமாயிருந்த அன்பும்—அமைந்திருந்தன. பொதுமக்களைக் குருமார்களே நடத்திவந்தமையும், குருமார்கள் தங்கள் அதிகாரத்திற் பெருமை கொண்டாடி வந்தமையும் அவரது நெஞ்சை உறுத்தின. ஆதலால், அவர் அதற்காக ஏதேனும் செய்ய விரும்பினார். எவர் மீதும் எவ்வித அதிகாரமும் செலுத்த அவர்க்கு இஷ்டமில்லை. மக்களைப் பிணித்த மனத்தளைகளையும் ஞானத் தளைகளையும் அறுக்க அவர் விழைந்தார். அவருடைய உள்ளம் மிக விரிந்த உள்ளம். நம்மைச் சூழும் பலரிடத்தும் பரிவு காட்டும் நெஞ்சம் நமக்கிருக்கலாம். நாமும் பிறர்க்குதவி புரிய விரும்புகிறோம். ஆனால், நம்மிடம் அதற்குரிய அறிவு இருப்பதில்லை. உதவியளிக்க வல்ல வழிகளையும் சாதனங்களையும் நாம் அறிந்தோமில்லை. ஆனால், அம்மனிதரோ, ஆன்மாக்களின் தளைகளை நொறுக்கும் வழியைக் காணும் அறிவு வாய்க்கப்பெற்றிருந்தார். மக்கள் துன்புறும் காரணத்தை அவர் உணர்ந்தார்; அத்துன்பத்தினின்றும் உய்யும் வழியையும் கண்டறிந்தார். அவர்

எடுத்ததை முடிக்கவல்ல ஆற்றல் படைத்த ஓர் ஆண் மகனுர் ஆவர்; ஒவ்வொன்றையும் முயன்று ஆற்றினுர்; வேறுபாடின்றி அனைவர்க்கும் போதித்து அனைவரையும் ஞான நல்லமைதியை உணரச் செய்தார். ஆண்டகையான புத்தர் அவரே. 'ஆர்நால்டு' என்பார் ஆங்கிலத்தில் இயற்றிய 'ஆசிய ஜோதி' என்னும் காவியத்தினின்றும் புத்தர் சரிதையை—அதாவது புத்தர் வேந்தராய்ப் பிறந்ததும், உலகத் துயரம் அவரை மனம் நையுமாறு வாட்டியதும், இன்ப போகத்தின் மடியில் வளர்ந்து தாலாட்டப்பட்டவரேனும் தம் சுய இன்பத்திலும் நலத்திலும் அவர் ஆறுதல் பெறமாட்டாது போனதும், தம் அரசியும் புதிதாகப் பிறந்த சேயும் பின் தங்க, உலகத்தைத் துறந்து சென்றமையும், ஒவ்வொரு குரவரிடமும் சென்று மெய்ப்பொருளைத் தேடி அலைந்ததும், இறுதியில் அவர் ஞானம் பெற்றமையும் நீங்கள் அறிவீர்கள். அவருடைய நீண்டகால ஞானப் பணியைப்பற்றியும், அவர் தம் சீடர்களைப் பற்றியும், சங்கங்களைப் பற்றியும் நீங்கள் உணர்வீர்கள். இவை யாவும் நீங்கள் அறிந்த பொருள்களேயாகும்.

இந்தியாவிலே குருமார்க்கும் (புரோகிதர்க்கும்) ஞான குரவர்க்கும் இடையே நிகழ்ந்துவந்த போராட்டத்தில் வெற்றி மாலை சூடியவர் புத்தரே. அந்த இந்திய குருமாரைப் பற்றி ஒன்று கூறலாம். அவர்கள் சமயத்தைப் பொருதவர்களாயிருந்தவர்களல்ல; ஒருகாலும் பொறுத்திருப்பவரும் அல்ல. அவர்கள் என்றைக்கும் சமயத்திற்குத் தீங்கிழைத்தவர்களல்ல. அவர்களை எதிர்த்துப் பிரசாரம் செய்ய எவருக்கும் அனுமதியிருந்தது. அவர்களது சமயம் அத்தகையது. அவர்கள் சமயக் கருத்துகளுக்காக என்றேனும் எவர்க்கும் தீயவை செய்தறியார்கள்; ஆயினும், குருமார்கள் அனைவர்க்குமே உரிய மெலிவுகளாம் இன்னதற்கு ஆளானவர்கள். அவர்கள் அதிகாரத்தைத் தேடினவர்கள்; விதிகளையும் கட்டுப்பாடுகளையும் பறையறைந்து சாற்றினவர்கள். சமயத்தை ஏதுவின்றிச் சிக்கலாக்கியவர்கள்; ஆதலால், தங்கள் சமயத்தைப் பின்பற்றியவரது வலிமையை வேரறுத்தவர்கள்.

புத்தர் இந்நோய்க் கட்டிகளையெல்லாம் அறுத்தெறிந்தார்; மாபேருண்மைகளையே பரக்க மொழிந்தார்; வேத தத்துவ சாரத்தையே அனைவர்க்கும் வேறுபாடின்றிப் போதித்தார்; அதை உலகமுழுதிற்கும் அறிவுறுத்தினுர். காரணம் யாதெனில், அவரளித்த பெருஞ்செய்திகளில் ஒன்று மாந்தரின் சமத்துவமே. மாந்தர் அனைவரும் சமமே. ஒருவருக்கும் சலுகையில்லையா?

இல்லை. சமத்துவத்தைப் போதிக்க வந்த சான்றோரல்லரா அவர்?

'ஒவ்வோர் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஞானம் பெற உரிமை உண்டு,' என்பது அவரது போதனை. குருமார்க்கும் மற்றச் சாதியார்க்கும் உள்ள வேறுபாட்டை அவர் ஒழித்தார்; 'மிகத் தாழ்ந்தவரும் மிக உயர்ந்த பேறுகளை அடைய உரிமையுடையவரே,' என்ருர்; நிருவாணம் எய்தும் நெறியை அனைவர்க்கும் திறந்து வைத்தார். அவரது போதனை இந்திய நாட்டினரது துணிவையும் விஞ்சிய துணிவமைந்ததாயிற்று. எந்த அளவினதாய் உயர்ந்த போதனையும் இந்திய நாட்டினரின் உள்ளத்தை அதிரச் செய்ய இயலாது; ஆனாலும், புத்தரது கொள்கையை விழுங்குதல் இந்தியாவிற்கும் கஷ்டமாயிற்று.

அவரது கொள்கை இதுவே: "நமது வாழ்க்கையில் துயரம் இருப்பதேன்? காரணம், நமது தன்னலமே. நமக்கென்றே பொருள்களில் நாம் ஆசையுடையோம்—இதுவே துயரத்திற்குக் காரணம். இதை விட்டுத் தப்ப வழி யாது? தன்னைத் துறத்தலே. 'தான்' என்பது உள்பொருளன்று; நாம் காணும் இது—அதாவது, 'இவ்வியவகாரிக' உலகம்—ஒன்றே இருப்பதெல்லாம். பிறப்பு, இறப்புகளின் சுழலுக்கு ஆதாரமாக ஆன்மா என்பதொன்று இல்லை. நினைவுகள் ஓடைபோலப் பெருகி ஓடுகின்றன; ஒன்றன்பின் ஒன்ருக அவை தொடர்ந்து வருகின்றன.

"ஒவ்வொரு நினைவும் தோன்றி அக்கணமே இல்லாதொழிகிறது. அவ்வளவேயாம்: நினைவுகளை நினைக்கும் கருத்தாவாகிய ஆன்மா என்பதொன்று இல்லை; உடல் எப்போதும் மாறிக்கொண்டே வருகின்றது; மனமும் அறிவும் அத்தகையனவே. ஆதலின், ஆன்மா உண்டென்பது மயக்கத்தாலாகும். சுயநல முழுதும் 'தான்' எனும் ஒரு பொய்த் தோற்றத்தைப் பற்றுவதனுல் எழுகின்றது. 'தான்' (ஆன்மா) எனும் பொருள் இல்லையெனும் உண்மையை நாம் அறிவோமாயின், நாம் இன்புறுவோம்; பிறரையும் இன்பமடையச் செய்வோம்."

புத்தர் போதித்தது இதுவே. அவர் பேச்சளவாக நின்றுவிடவில்லை; தமது உயிரையே உலகத்திற்காக விடத் துணிந்தார். 'ஒரு விலங்கைப் பலியிடுதல் நன்ருயின், மனிதனைப் பலியிடுதல் அதனினும் மிக நன்று!' என்று மொழிந்து அவர் தம்மையே பலியாக வழங்கினுர். அவர் மொழிந்ததாவது: "இந்த மிருகபலி

இன்னெரு மூடக்கொள்கை. கடவுள் ஆன்மா எனும் இரண்டும் இருபெரு மூடக்கொள்கைகளே. புரோகிதர்களால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு மூடக்கொள்கையே இக்கடவுட் கொள்கை. இப்பிராமணர்கள் இயம்புகிறபடி கடவுள் ஒருவர் உள ராளுல், இவ்வுலகில் இவ்வளவு துயரம் இருப்பதேன்? காரண காரிய நியதிகட்கு அவரும் என்னைப்போல் ஓர் அடிமைபோலும்! அந்நியதிக்குக் கட்டுப்படாதவராயின், கடவுள் படைப்பதேன்? இத்தகைய கடவுள் சிறிதும் திருப்திகரமானவராயில்லை. விண்ண வர் நாட்டுத்தலைவர் தமது விருப்பத்தின்படியே இம்மண்ணினை அரசாண்டு வருகின்ருர். இங்குள்ளார் அனைவரும் துயரத்தில் அழுந்தி மாண்டு போகும்படி விட்டுவிடுகிருர். ஒரு கணமேனும் நம்மைக் கண்ணெடுத்துப் பார்க்கும் நல்ல குணமும் அவரிடத்து எக்காலமும் இல்லை. நம் வாழ்வு முழுதும் ஓயாத இடும்பைதான். ஆளுல், இத்தண்டனை போதாதாம்—அதனுல் மரணத்துக்குப் பின் வேறு தண்டனைகள் உள்ள இடங்கட்கும் நாம் செல்ல வேண்டுமாம். இது உண்மையாகவும், இவ்வுலகைப் படைத்த வரை மகிழ்வித்தற்பொருட்டு எல்லா வகையான கிரியைகளையும் சடங்குகளையும் தொடர்ந்து புரிந்து வருகின்ருேம்,'' என்பது.

புத்தர் இன்னும் கூறுகின்ருர்: ''இக்கிரியைகள் யாவும் தவ ருனவை. உலகில் உள்ளது ஒரே இலட்சியமே. எல்லா மயக்கங் களையும் மாய்த்துவிடுக. மெய்யானது எஞ்சி நிற்கும். முகில்கள் அகன்றதும் வெய்யோனின் விரிசோதி தோன்றும். தான் என் பதை எவ்வாறு அழிப்பது? முற்றிலும் தன்னலமற்றவனுகுக. ஓர் எறும்பிற்காகவும் உனது வாழ்வைத் தியாகஞ் செய்ய ஆயத்த மாயிரு. எந்த மூடக் கொள்கைக்காகவும் கருமஞ் செய்யாதே. எந்தக் கடவுளையேனும் உவகையுறும்படி செய்வதற்காகவோ பல ஞென்றை எதிர்பார்த்தோ கருமஞ் செய்தலை விட்டு உனது அகந் தையைக் கொன்று உனது சொந்த விடுதலையை நாடுவதற் காகவே தொழில் செய்க. வணக்கமும், பிரார்த்தனையும், மற்றவை யாவும் அறிவீனம். நீங்கள் 'கடவுளுக்கு நன்றி' என்று கூறு கிறீர்கள். ஆளுல், அவர் வாழ்வது எங்கே? இதனை நீங்கள் அறியமாட்டீர்கள்; எனினும், கடவுள்மீது உங்கட்குப் பித்துப் பிடித்து வருகிறது.''

இந்துக்களுக்குத் தங்கள் கடவுளைத் தவிர வேறெதையும் விட்டுவிட இயலும். கடவுளை இல்லையெனல், பத்தி நிற்கும் இடத்தே அதன் காலடியிலுள்ள ஆதாரமான தரையைப் பெயர்ப்ப

தொக்கும். பத்தி, கடவுள்—இவ்விரண்டையும் இந்துக்கள் விடாது பற்றல் வேண்டும். இவற்றை அவர்களால் ஒருகாலும் விட இயலாது. ஆனால், புத்தரது போதனையிலோ, கடவுள் இல்லை ; ஆன்மா இல்லை ; கருமம் மட்டுமே உள்ளது. எதற்காகக் கருமம்? தனக்காக அன்று ; ஏனெனில், 'தான்' என்பது ஒரு மயக்கமே. இம்மயக்கம் தீர்ந்தபொழுதே நாம் நமது உண்மை இயல்பை எய்துவோம். இத்தகைய சிகரத்தைக் கிளம்பி எட்டக் கூடியவரும் கருமத்திற்காகவே கருமம் செய்யக்கூடியவரும் இக் குவலயத்தில் மிகு சிலரேயாவர்.

ஆயினும், புத்தரின் மதம் விரைவாகப் பரவியது. அதன் காரணம் அவரது வியத்தகும் அன்பே ; மனித இனத்தின் சரித்திரத்திலே முதன்முதலாகப் பரந்த ஒரு நெஞ்சினின்றும் அத்தகைய அன்பு பொங்கி வழிந்து மக்கட்குப் பணி செய்வதோடு நில்லாது, அனைத்துயிர்க்கும் பணிசெய்வதில் ஈடுபட்டு நின்றது, அச்சமயத்தேதான் ; அனைத்துயிர்களும் துயரினின்றும் விடுபடும் நெறியொன்றைக் காண்பதொழிய, வேறெதிலும் கருத்தைச் செலுத்தாத அன்பாயிற்று அது.

மனிதன் கடவுளின்மீது அன்பு செலுத்தி வந்தான். ஆனால், தன் சகோதரனை முற்றிலும் மறக்கலானான். கடவுளுக்காகத் தனது உயிரையேவிடக்கூடிய ஒருவன், வேறு வழி திரும்பித் தனது உடன்பிறந்தோனையும் கடவுளுக்காகக் கொல்லக்கூடியவனாகிறான். அதுவே இவ்வையகத்தின் நிலையாயிற்று. கடவுளின் பெருமைக்காக உலகத்தார்கள் தங்கள் மக்களைப் பலியிடுவார்கள்; கடவுளின் பெருமைக்காக ஆயிரக்கணக்கான உயிர்களை மாய்ப்பார்கள் ; கடவுளின் பெருமைக்காக இப்பாரில் குருதி வெள்ளத்தைப் பாய்ச்சுவார்கள். மற்றொரு கடவுளாகிய மனிதனை நோக்கி அவர்கள் முதன் முதலாகத் திரும்பியது அப்போதே. அன்பு புரிய வேண்டுவது மனிதனுக்கே. மக்கட்பால் பெருகியோடிய ஆழ்ந்த அன்பின் முதல் அலை அதுவே. உண்மையான கலப்பற்ற தனி ஞானத்தின் முதல் அலை அதுவே. அது இந்தியாவிலிருந்து புறப்பட்டு வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் நாடு நாடாகப் பையப் பையப் பரவிப் பலவிடங்களையும் தன் பெருக்கால் நிறைத்தது.

இந்த ஞான குரவர் உண்மையை உண்மையாகவே ஒளி விட்டு விளங்கும்படி செய்ய விரும்பினவர். அதன் வீறினைத் தணித்தலோ, சூழ்நிலைக்கிசைய அதை மாற்றலோ, புரோகிதர்க்

கும் அதிகாரிகளுக்கும் வேந்தர்க்கும் ஏற்றபடி பேசுதலோ அவரிடமில்லை. மூட நம்பிக்கையைச் சார்ந்த பரம்பரை வழக்கங்கள் எவ்வளவு பழமை வாய்ந்தனவாயினும் அவர் இணங்கார்; உருவங்களும் நூல்களும் மிகு தொன்மை வாய்ந்தனவாகும் காரணத்தால் மட்டும் அவர் அவற்றிடம் மதிப்புக் கொள்ளார். சாத்திரங்கள் அனைத்தையும், ஞான சாதனங்களின் வகைகள் அனைத்தையும் அவர் புறக்கணித்துவிடுவார். இந்தியாவில் சமயம் மரபு மரபாகப் போதிக்கப்பட்டு வந்தது வடமொழியிலே; அவ்வடமொழியையும் அவர் தள்ளலானார். காரணம் யாதெனில், அதோடு தொடர்புள்ள மூடக் கொள்கைகளையும் பருகும் சமயம் தம்மைப் பின்பற்றுவார்க்கு வாய்க்கக்கூடாதென்பதே.

நாம் இப்போது ஆராய்ந்துகொண்டிருக்கும் உண்மையை—அதாவது இந்து நெறியை—வேறு வகையாகவும் கருதலாம். புத்தரது 'தான்' அறுதல் எனும் நிலையை மிக நன்றாக அறிய வேண்டின் நமது முறைப்படி அதை நோக்குதல் வேண்டும் என்று நாம் உரிமையோடு உரைக்கின்றோம். உபநிடதங்களிலே ஆன்மா பிரம்மம் எனும் பெருங்கொள்கை முன்னமே இருந்தது. 'தான்' எனும் ஆன்மாவும் ஈசனாகிய பிரம்மமும் ஒன்றே. இருப்பதெல்லாம் இந்த ஆன்மா ஒன்றே; இதுவொன்றே மெய்யாகும். மாயையெனும் மயக்க உணர்வு, இதை நாம் பலவாகக் காணும்படி செய்கின்றது. இருப்பது ஒரே ஆன்மாதான்; பலவல்ல. அவ்வோர் ஆன்மாவே பற்பல வடிவங்களோடு விளங்குகிறது. எல்லா மனிதரும் உண்மையில் ஒருவரேயாதலின், ஒரு மனிதன் மற்றொருவனுக்குச் சகோதரனாகின்றான். 'ஒவ்வொரு மனிதனும் எனது சகோதரன் மட்டுமல்லன்; யானேயாவன்,' என்று ஆரணம் முழங்கும். இப்புவியின் எப்பகுதிக்கு ஊறு விளைக்கினும் எனக்கே ஊறு விளைக்கின்றேன். நான் இப்பிரபஞ்சமாகிறேன். நான் இன்னின்ன பெயருடையேன் என்று நினைத்தலே மயக்கத்தாலேதான்.

நாம் நமது மெய்யான ஆன்மாவை அணுகும் அளவிற்கு ஏற்ப இம்மயக்கமும் மேலும் மேலும் மறைந்து வருகின்றது. எல்லா வேறுபாடுகளும் பாகுபாடுகளும் மறையும் அளவிற்கு ஏற்ற அனைவரையும் ஒரே பரம்பொருளாக உணரும் நிலையும் அணுகி வருகின்றது. கடவுள் உள்ளனர்; ஆனால், அவர் மேகமண்டலத்திலே அமர்ந்திருக்கும் ஒரு மனிதரல்லர்; அவர் சுத்த சைதன்னிய (கலப்பற்ற அறிவு) வடிவானவர். அவர் உறைவது

எங்கே? அவர் உன்னிலும் உனக்கு அண்மையில் உள்ளார். அவர் ஆன்மாவே. கடவுளை உன்னினும் பிரித்து வேறுபட்ட ஒரு பொருளாக எவ்வாறு காண முடியும்? உன்னினும் பிரிந்து வேருன யாதோ ஒரு பொருளாக நினைக்கும்போது நீ அவரை அறியாய்; அவர் நீயே அன்ருே? இதுவே இந்தியாவில் வாழ்ந்த தீர்க்கதரிசிகளின் கொள்கையாகும்.

உன்னை இன்ன பெயருடையை என்றும், உலக முழுவதும் உன்னினும் வேருனது என்றும் நீ நினைப்பது ஆணவமே (அகங்காரமே). நீ என்னினும் வேறுபட்டாயென்று எண்ணுகின்றனை. நீ என்னைப் பற்றி ஏதும் சிந்திப்பதில்லை. நீ இல்லஞ் சென்று உண்டு உறங்குகின்றனை. நான் இறப்பினும் பின்னும் உண்டும் குடித்தும் களித்தும் வருகின்றனை. ஆனுல், உலக முழுதும் துயருறும்போது, நீ மட்டும் உண்மையில் இன்பமாய் வாழ முடியாது. நாம் அனைவரும் ஒரே பொருள். வேறு வேருகப் பிரிந்துளோம் என்னும் மயக்கமே இடும்பைக்கு வேராகும். ஆன்மாவைத் தவிர வேறெதுவும் இல்லை.

'கடவுள் இல்லை; மனிதனே உளன்,' என்பதே புத்தரது கருத்தாகும். எங்கும் வழங்கிவரும் கடவுட்கருத்துக்கு அடிப்படையான மனப்பாங்கை அவர் ஒப்புக்கொள்ள மறுக்கின்ருர்; அம்மனப்பாங்கினுல் மக்கள் பலவீனமும் மூட நம்பிக்கையும் உடையவர்களாகின்ருர்கள். உனக்கு எல்லாவற்றையும் நல்கும்படி கடவுளை இறைஞ்சுவாயாயின், வெளியேறி வேலை செய்வார் யார்? பெரிதும் உழைப்பவர்க்கே ஆண்டவர் துணை புரிவார். இதற்கு மாருன கடவுட்கருத்தைக்கொள்ளுங்கால், நம் நரம்புகள் தளர்ச்சியடைகின்றன; நம் தசைகள் நெகிழ்கின்றன; நாம் பிறர் வசமாகிருேம். 'ஸர்வம் ஆன்ம வசம் சுகம்; ஸர்வம் பரவசம் துக்கம்.' மனிதனுக்குள்ளே அளவற்ற வல்லமை திகழ்கின்றது. அதனை அவன் உணரவும் கூடும். அவன் தன்னை எல்லையற்ற ஒரே ஆன்மாவாக உணரவும் வல்லன். அதைச் செய்தல் இயலும். ஆனுல், நீ அதை நம்புவதில்லை. கடவுளை வேண்டி இறைஞ்சுகின்ருய்; ஆனுல், சுடவேண்டிய மருந்தையும் நனையாவண்ணம் எஞ்ஞான்றும் உலர்த்தி ஆயத்தமாய் வைத்திருக்கிருய் (உன் முயற்சியில் நீ தளர்கிறதில்லை).

புத்தர் போதித்தது இதற்கு மாருன கொள்கையே. "மக்கள் அழுவதற்கு இடங்கொடாதே. இவ்வண்ணமான பிரார்த்தனையும்

பிறவும் அவர்களுக்கு வேண்டா. கடவுள் கடை வைத்துக் கொண்டிருப்பவரல்லர். ஒவ்வொரு மூச்சும்விடும்போதே நீ கடவுளின் நடுவே பிரார்த்திக்கின்றனே. யான் பேசுகிறேன்— இது ஒரு பிரார்த்தனே. நீ கேட்டுக்கொண்டிருக்கின்றனே— அதுவும் ஒரு பிரார்த்தனே. அளவற்ற தெய்விகச் சத்தியி னின்றும் எழும்பாத எவ்வித மனச்செயலோ, உடற்செயலோ உன்னிடம் உண்டா? முயற்சி எல்லாம் ஓயாத பிரார்த்தனேயே யாம். ஒரு சில சொற்களின் தொகுதியை மட்டும் பிரார்த்தனே என்பாயாகில், பிரார்த்தனையை மேலெழுந்தவாரியான முயற்சி யாகச் செய்கின்றனே. அம்மாதிரியான பிரார்த்தனேகளாற் பெரும்பயன் வாராது; உண்மையான பலன் எதையும் அவை தாரா.''

பிரார்த்தனேயென்பது ஒரு மாய மந்திரமா? அதை உச்சரிப் பதனுல், அரும்பாடு படாமலே வியப்பை உண்டு பண்ணும் பயன்களே அடையலாமா? அப்படியன்று. அனேவரும் அரும் பாடு பட வேண்டியவரே; அனேவரும் அந்தக் கரையிலாத சத்தி உறையும் ஆழம்வரை செல்ல வேண்டுபவரே. ஏழையருடைய உள்ளத்தின் அடியிலும் செல்வம் படைத்தோருடைய உள்ளத் தின் அடியிலும் இருப்பது அந்த வரம்பு கடந்த சத்தியே. ஒருவன் ஏதோ அரும்பாடுபடுகிருன் என்பதும், ஆனுல் மற்ருெருவன் சில மொழிகளே உரைப்பதனுலே செயலில் வெற்றி பெறுகிருன் என்பதும் உண்மையல்ல. இவ்வையகமே ஓயாத பிரார்த்தனேயாகும். இவ்வண்ணமாகப் பிரார்த்தனேக்குப் பொருள்கொண்டால் நானும் உடன்படுகிறேன். மொழிகள் அவசியமல்ல. மௌனமான வழிபாடு அதனினும் நலமாம்.

உலகத்தாரில் மிகு பெரும்பாலார் இக்கொள்கைகளின் பொருளே அறிவதில்லே. இந்தியாவிலே ஆன்மா எனும் கொள்கை யிலே யாதேனும் விட்டுக்கொடுக்க இணங்குவதென்ருல், குருக்கள் மாரிடம் அதிகாரத்தைக் கொடுப்பதென்பதும், இருடிகளின் பெருமை வாய்ந்த கொள்கைகளே மறந்துவிடுதல் என்பதுமே பொருளாகும். புத்தர் இதனே அறிவார்; ஆதலின், குருமார் களுடைய கொள்கைகளேயும் பழக்கங்களேயும் முழுதும் ஒதுக்கி விட்டு மனிதனேத் தற்சார்ந்தொழுகச் செய்தார். மக்களுக்குப் பழக்கமாயிருந்த வழிகளே மீறுவது அவர்க்கு இன்றியமையாததா யிற்று; புரட்சிகரமான மாற்றங்களேப் பிறப்பிக்க வேண்டியதா யிற்று. இதன் விளேவாக, யாகத்தை வற்புறுத்தும் சமயம்

இந்தியாவினின்றும் என்றைக்கும் நீங்குவதாயிற்று; பின்னர் ஒரு நாளும் அது மீண்டும் தலை காட்டவில்லை.

புத்த சமயம் வெளிப்பார்வைக்கு இந்தியாவை விட்டு அகன்று விட்டதேயன்றி, உண்மையில் அது நீங்கிவிடவில்லை. புத்தரது போதனையில் அபாயத்தை விளைக்கும் பகுதியும் ஒன்று உள்ளது. அது சீர்திருத்தஞ்செய்யவந்த ஒரு மதம். அது, மிகப் பெரிய ஞான மாற்றத்தை விளைக்கும்பொருட்டுக் கண்டனப் போதனைகள் பலவற்றையும் அளித்த அவர்க்கு இன்றியமையாததாயிற்று. ஆனால், ஒரு மதம் கண்டிக்கும் பாகத்தை வரம்புகடந்து வற்புறுத்துமாயின், அது இறுதியில் அழிவடையும் ஆபத்திற்குத் தன்னை உள்ளாக்கிக் கொள்ளுகிறது. சீர்திருத்த வரும் மதம் ஒன்று சீர்திருத்தத்தை மட்டும் மேற்கொள்ளுமாயின், அது நெடுங்காலம் வாழாது. ஆக்கு முறைகள் மட்டுமே—உண்மையான தூண்டுதலை உண்டுபண்ணும் கொள்கைகள் மட்டுமே—மேலும்மேலும் வாழ்ந்து கொண்டேவரும். சீர்திருத்தம் முடிவு பெற்றதும், ஆக்கப்பகுதியை வற்புறுத்தி வரல் வேண்டும். கட்டடம் முடிந்ததும் சாரத்தை நீக்கிவிட வேண்டும்.

காலம் தேயத்தேய, புத்தரைப் பின் பற்றியவர் அவருடைய போதனைகளில் உள்ள மறுப்புப் பகுதியை அளவிற்கு மிஞ்சி வற்புறுத்தி வரவே, அதனால் தமது சமயத்திற்கே அழிவு தேடிக் கொண்டனர். உண்மையில் அடங்கிய ஆக்கப் பகுதிகளைக் கண்டனப் பகுதிகள் வலிய மூச்சுத் திணறும்படி செய்தன. இவ்வாறு புத்தமதத்தின் பெயரால் ஓங்கி வளர்ந்த அழிக்கும் முறைகளை இந்தியா எதிர்த்துத் தாக்கி விலக்கலாயிற்று. இந்திய மக்களின் நாட்டுக் கருத்துச் செய்த தீர்ப்பு இதுவே.

புத்த சமயத்தின் மறுப்புப் பகுதிகள்—'தெய்வம் இல்லை; ஆன்மா இல்லை,' என்பவை—இறந்தன. தெய்வமொன்றே உள்ளது என்று யான் கூற இயலும். இது உடன்பாட்டு உரையாகும். தெய்வமொன்றே உண்மை. புத்தர் ஆன்மா என்பதில்லை என்று இயம்பும்பொழுது, "மனிதனே, நீ இந்த உலகத்தோடு ஒன்றுவாய்; அனைத்துப் பொருள்களுமாவாய்," என்று நான் மொழிவேன். இது உடன்பாட்டு முறைக்கு எவ்வளவு இணங்கியதாகின்றது! சீர்திருத்தப்பகுதி மாண்டது; ஆனால், ஆக்கப் பகுதி எக்காலத்தும் இறவாது வாழ்ந்துவந்துள்ளது. தாழ்ந்த உயிர்களின்மீதும் கருணை காட்டும்படி புத்தர் போதித்தார். அதன் பின் எல்லா உயிர்களிடத்தும் விலங்கினிடத்தும்

அன்பு காட்டல் வேண்டும் என்று அறிவுரை மொழியாத மதம் எதுவும் இந்தியாவில் தோன்றவில்லை. இந்த அன்பும் கருணையும் அறமும்—வேறெந்தக் கொள்கையைப் பார்க்கிலும் மிகுதியாக இவையே—நமக்குப் புத்த மதம் விட்டுச் சென்ற காணியாட்சி யாயின.

புத்தரது வாழ்வு சிறப்பாக எவரையும் ஈடுபடுத்தக்கூடியது. என் வாழ்க்கை முழுதும் யான் புத்தரிடத்து மிக்க பற்றுள்ளவனு யிருந்துளேன். ஆனுல், அவரது கொள்கையினிடத்து எனக்கு அவ்வளவு பற்றில்லை. வேறெவரைப் பார்க்கிலும் மிகுதியாக அவரது ஒழுக்கத்திற்காக அவரை யான் போற்றுவேன். அத் துணிவும், அந்த அச்சமின்மையும், அப்பேரன்பும் என் னென்பது! அவர் மன்னுயிரின் நலத்திற்கெனவே பிறவியெடுத் தார். பிறர் கடவுளை நாடலாம். பிறர் தமக்கெனவே உண்மையை நண்ணலாம். ஆனுல், அவரோ, தமக்காக உண்மையை அறி தலையும் பொருளாக நினைக்கவில்லை. அவர் உண்மையைத்தேடிய காரணம் மக்கள் துயரில் மூழ்கியிருந்தமையே. 'அவர்கட்கு எவ்வாறு உதவி புரிவது?' என்பதே அவரது கருத்தாயிற்று. அவரது வாழ்க்கை முழுதும் என்றைக்கேனும் தம்மைப்பற்றிய நினைவு எழுந்ததில்லை. அறியாமையும், தன்னலமும், குறுகிய மனப்பான்மையும் செறிந்த மனத்தையுடைய யாம் எவ்வாறு அச்சான்ருேருடைய பெருமையை அறிய இயலும்?

அவரது வியத்தகும் அறிவைப் பாருங்கள்! பொங்கும் உணர்ச்சியால் எழும் கலக்கம் அதில் இல்லை. அரும்பெருந்திறல் வாய்ந்த அவ்வறிவில் மூடநம்பிக்கையே இல்லை. பண்டைய ஏட்டுச் சுவடி ஒன்றை எடுத்துக் காட்டுவதனுலும் உங்கள் முன்னேரிடமிருந்து மரபையொட்டி வந்ததனுலும், உங்கள் நண்பர்கள் உங்களை வேண்டிக்கொள்வதனுலும் ஒன்றை நம்பா தீர்கள்; நீங்களே உன்னிப்பாருங்கள்; உண்மையை நீங்களே நாடுங்கள்; நீங்களே அதனை உணருங்கள்; பின்பு, யாவர்க்கும் அது நன்மையளிக்குமெனக்காணின், உலகத்தார்க்கு அதை நல்குங்கள். இளகிய மூளையுடைய மனிதரும், சோர்வடைந்த மனமுடையோரும், துணிவற்றவரும் மெய்ப்பொருளைக் காண மாட்டார்கள். கட்டுகளினின்று நீங்கியும் விண்ணைப்போல விரிந்த இயல்பு பெற்றும் இருத்தல் வேண்டும். படிகம் போலத் தெளிந்த மனமுடையராதல் வேண்டும். அப்போதுதான் மெய்ப் பொருள் அம்மனத்தினிடத்தே விளங்க இயலும். நம்மிடத்து

எவ்வளவு மூட நம்பிக்கை நிறைந்துள்ளது! உயர்ந்த கல்வியறிவு பெற்றுள்ள நாடாக நினைத்துக்கொண்டிருக்கும் உங்களது நாட்டிலும் உங்களிடம் எவ்வளவு குறுகிய மனப்பான்மையும், மூட நம்பிக்கையும் செறிந்துள்ளன! நாகரிகம் பெற்றிருப்பதாக உரிமை பாராட்டிக்கொள்ளுவது உங்களிடம் ஒருபால் இருக்க, நான் ஓர் இந்துவாயிருக்கும் காரணத்தால் ஒரு முறை எனக்கு அமர்தற்கு ஒரு நாற்காலி அளிக்கவும் இந்நாட்டில் மறுத்தனர் என்பதைச் சற்றே நீங்கள் நினைத்துப் பாருங்கள்!

கிறித்து பிறப்பதற்கு அறுநூறு ஆண்டுகட்கு முன்பு புத்தர் வாழ்ந்த காலத்து இந்திய மக்கள் வியத்தகு கல்வியறிவுள்ளவர்களாயிருத்தல் வேண்டும். அக்காலத்தினர் அளவு மிக்க சுதந்தர முற்ற அறிவு படைத்தவராயிருந்திருக்க வேண்டும். கூட்டங் கூட்டமாய்ப் பொது மக்கள் அவரைப் பின்பற்றினர்கள். வேந்தர்கள் தங்கள் அரியணைகளைத் துறந்தார்கள்; அரசியர் தம் சிம்மாதனங்களை நீத்தனர். நெடுங்காலமாகக் குருமார்கள் போதித்து வந்ததினின்றும் அவ்வளவு வேறுபட்டதும் அதற்கு முழுதும் மாறுனதும் ஆன அவரது போதனையின் பெருமையை உணரவும் அதைப் பின்பற்றவும் மக்கள் திறமை பெற்றிருந்தார்கள். அவர்களுடைய உள்ளங்கள் மிகச் சிறப்பானவகையிலே சுதந்தரமும் விரிவும் அமைந்திருந்தனவாதல் வேண்டும்.

அவரது மரணத்தை நோக்குக. வாழ்க்கையில் அவர் பெருமையுற்றிருந்தது போல மரணத்திலும் பெருமை எய்தினர். உங்களுடைய அமெரிக்க இந்தியரைச் சார்ந்தவனால் அளிக்கப்பட்ட உணவை அவர் அருந்தினர். அச்சாதியர் எதனையும் ஆராயாது உண்ணும் வழக்கமுடையவராதலின், இந்துக்கள் அவர்களைத் தீண்டுவதும் இல்லை. அவர்தம் சீடரிடம், "இவ்வுணவை உண்ணுதீர்; ஆனல், யான் இதை மறுக்க மாட்டாதவனுகின்றேன். அம்மனிதனிடம் சென்று எனது வாழ்க்கையில் யான் பெற்ற அனைத்துள்ளும் மிகச் சிறந்த பணியொன்றை அவன் எனக்கு இயற்றினதாக அவனிடம் சொல்லுங்கள்—அவன் இவ்வுடலினின்றும் என்னை விடுவித்தனன்," என்று மொழிந்தார்; ஒரு கிழவர் வந்து அவரருகே அமர்ந்தார். அவர் அக்குரவரைக் காண்பதற்காகப் பல காதவழி நடந்து வந்திருந்தனர். புத்தர் அவருக்கு உபதேசித்தார். சீடனொருவன் அழுது கொண்டிருந்ததை அவர் கண்ணுற்றபொழுது அவனைக் குறை கூறி, 'ஈதென்ன! இதுதானு எனது போதனையின் பயன்?

பொய்யான தனை வேண்டா. என்னைச் சார்ந்திருத்தல் வேண்டா. இந்த அழியும் உயிரினைப் பொய்யாகப் புகழ வேண்டா. 'புத்தர்' என்பது ஒரு புருடரைக் குறியாது, ஞான நிலையொன்றைக் குறிப்பது. உனது சுய புத்தியை நீ பாடுபட்டு அடைக,'' என்றனர்.

இறக்கும் தருணத்தும் அவர் தமக்கென ஒரு சிறப்பை ஒப்புக்கொள்ள இசையவில்லை. அதற்காகவே யான் அவரை வணங்குகிறேன். புத்தர், கிறித்து என்று நீங்கள் பெயரிட்டு வழங்குவன சில மெய்ஞ்ஞான நிலைகளின் பெயர்களேயாகும். இக்காலத்துத் தோன்றிய ஞான குரவர் அனைவரிலும், அவர் ஒருவரே தற்சார்ந்தொழுகுமாறு சாலவும் போதித்தனர்; நம் பொய்யான ஆணவக் கட்டுகளினின்றும், அதோடு நில்லாது தெய்வமென்றே தெய்வங்களென்றே கூறப்படும் காணவொண்ணு உயிரையோ உயிர்களையோ சார்ந்து வாழும் தன்மையினின்றும் நம்மை விடுவித்தவர் அவரே. நிருவாணம் என அவர் பெயரிட்டு வழங்கிய அந்தச் சுதந்தர நிலைக்குட்புகும் வண்ணம் எல்லோரை யும் அவர் அழைத்தனர். என்றைக்கேனும் ஒரு நாள் அனைவரும் அந்நிலையை அடைந்தே தீரவேண்டும். அப்பேற்றினை எய்துதலே 'மனிதப்பிறவியின் நோக்கத்தை முழுதும் நிறை வேற்றியதாகும்.

# கிறித்து என்னும் தேவதூதர் *

கடலின்மீது ஓர் அலை கிளர்ந்தெழுகின்றது. அவ்வலை கிளம்பிய இடத்தில் ஒரு பள்ளம் விழுகின்றது. அதைவிடப் பெரிய மற்றோர் அலை நிமிர்ந்தோங்குகின்றது. அது முறையே படுத்து விடுகின்றது; எழுந்தும் படுத்தும், படுத்தும் எழுந்தும், விரைந்து அலைகள் எழுகின்றன. நிகழ்ச்சிகளின் ஓட்டத்திலும் இவ்வண்ணம் எழுச்சியையும் வீழ்ச்சியையும் நாம் கண்ணுறுகின்றோம். எழுச்சியை எதிர்நோக்கி நிற்கின்றோமே தவிர, அதன் வீழ்ச்சியை மறந்துவிடுகின்றோம். ஆனால், இவ்விரண்டும் தேவையே; இவ்விரண்டும் பெருமை வாய்ந்தவை என்பதில் ஐயமில்லை. இதுதான் இப்பிரபஞ்சத்தின் இயல்பாகும். நம்முடைய எண்ண உலகத்திலுஞ் சரி, சமுதாயத் தொடர்புகள் விரியும் ஞாலத்திலுஞ் சரி, இன்னும் நம்முடைய ஆன்மிகத் துறையிலுஞ் சரி, மாறி மாறிவரும் எழுச்சி, வீழ்ச்சி ஆகிய இவற்றின் இயக்கம் இவ்வண்ணமே காட்சி அளிக்கின்றது. விரிந்த இலட்சியங்கள்—நிகழ்ச்சிகளின் ஓட்டத்தில் மிகவும் ஆட்சி புரிந்த இலட்சியங்கள்—அணி வகுக்கப்பட்டு முன்னேறுகின்றன. இந்த இலட்சியங்களாம் அலைகள் தணிகின்றன. பழைய கருத்துகளைச் சிந்தித்து அசை போட்டு நம்முடையனவாகச் சீரணித்துவிடுகின்றோம். அவற்றைப் பாதுகாக்கின்றோம். மீண்டும் வலிவைப் பெற்று மேலோங்கப் பார்க்கின்றோம். இப்பொழுது எழுகின்ற கருத்தாகிய அலை முன்னெழுந்ததைவிட மிகவும் பெரியதாய்த் திகழ்கின்றது.

நாடுகளின் வரலாறும் இப்படித்தான் இருக்கிறது. நாம் இன்று மாலை ஆராய்ச்சி புரியப்போகின்ற மகாத்துமாவான தேவதூதர் மிகவும் தாழ்ந்த நிலை என்று தம் இனம் வழங்கும் வரலாற்றுப் பகுதியில் அவதாரஞ் செய்தார். அவருடைய அருள் மொழிகளாலும், அருஞ்செயல்களிலும் ஆங்காங்குக் காணப்படும் குறிப்புக்களிலிருந்து வரலாற்றுக்காட்சிகளின் சில ஒளிக் கதிர்களே நமக்குப் புலனாகின்றன. அந்தச் சான்றோரைப்

---

* 1900-ஆம் ஆண்டில் கலிபோர்னியாவிலுள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் என்னும் இடத்தில் ஆற்றிய சொற்பொழிவு.

பற்றிய செய்திகளனைத்தும் திரட்டப்படுமாயின், அவை இவ் வையகத்தையே நிரப்பிவிடும் என்பது உண்மையாகவே நன்கு உரைக்கப்பட்டிருக்கிறது. அவர் பணியாற்றிய மூன்றாண்டுக்கால வட்டத்தில், ஒரு யுகமே திணிக்கப்பட்டிருக்கிறது என்று மொழிய லாம். அது விரிவதற்கு 1900 ஆண்டுகள் தேய வேண்டும் போலும்! இன்னும் விரிவான காலத்தையும் அது கவர்ந்து கொள்ளலாம்; யார் அறிவர்? உங்களைப்போலவும் என்னைப் போலவும் உள்ள அற்ப மனிதர்கள் மிகச்சிறிய சத்தி பெற்றவர் கள். சில நிமிடங்களில், சில மணி நேரங்களில், சில ஆண்டு களில் நம்முடைய சத்தி அனைத்தும் முடிவடைந்துவிடும். நாம் முற்றிலும் மறைந்துவிடுவோம். ஆன்மிகத் துறையில் வானளாவி நிற்கும் அந்தச் சான்றோரை நோக்குங்கள்! பல ஆண்டுகள், பல யுகங்கள் கழியலாம்; ஆனால், அவர் விட்டுப் போன சத்தியின் அளவை இன்னும் காண முடியவில்லை; அவர் சத்தியும் முற்றிலும் செலவழிந்து போகவில்லை. கூர்ந்து நோக்கினால், ஆண்டுகள் கழியக்கழியப் பின்னும் புதிய ஆற்றலை அது பெறுகின்றது.

இயேசுநாதரின் வாழ்வில் நாம் காண்பது பண்டைய வாழ்வின் முழுதுமேயாகும். இவ்வண்ணமேதான் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வும் கழிந்த வாழ்வாய் விளங்குகின்றது. குலத்தின் மூலமாகவும், சூழ்நிலைகள் மூலமாகவும், தான் கற்ற கல்வியின் மூலமாகவும் மாறிமாறி வரும் தன் பிறவி மூலமாகவும், தன் இனத்தின் பண்டைய இயல்பின் மூலமாகவும் அது வருகின்றது. இந்த முழு வையகத்தின் பண்டைய இயல்பும் ஒவ்வோர் ஆன்மாவின் வதனத்திலும் மிளிரக் காண்கிறோம். இப்பொழுது இலங்கும் நம் நிலையோ, எல்லையற்ற இறந்த காலத் தின் கையில் உருவான விரிவான விளைவென்றே மொழியலாம். நாமோ, நிகழ்ச்சிகளாகிய அழியாத மாபெரு வெள்ளத்தின்மீது வீசுகின்ற குறு அலைகளேயாவோம். ஓய்வுற்றிருக்க இயலாதபடி நம்மை அவை முன்னே மேன்மேலும் ஏகும்படி அடித்துச் சென்றுகொண்டே இருக்கின்றன. நீங்களும் நானும் அற்பப் பொருள்களான நீர்க் குமிழிகளே. சம்பவங்களாகிய சாகரத்தில் மிகப்பெரிய இராக்கத அலைகளும் எப்பொழுதும் உண்டு. உங்க ளிடத்திலும் என்னிடத்திலும் கழிந்த இனத்தின் பண்டைய வாழ்வு சிறிதளவுதான் உருவாகின்றது. பண்டையவை அனைத் தையும் தம்மிடையே உருவாக்கிக்கொண்டு வருங்காலத்தையும் வாவென்றழைக்கும் கரங்கள் படைத்த மிகப் பெரிய சான்றோர்க

ளிருக்கின்றார்கள். அவர்கள் மனித இனத்தின் முன்னேற்ற ஓட்டத்தைச் சுட்டிக்காட்டக்கூடிய கைகாட்டி மரங்களேயாவார்கள். உண்மையிலே இவை வானளாவும் இயல்புள்ளவை. இவற்றின் நிழல்கள் இவ்வையகத்தையே மறைத்துவிடும். இவை அழியாது என்றைக்கும் திகழ்ந்து நிற்கின்றன. அந்தத் தேவர் மொழிந்ததற்கேற்ப, எந்தக் காலத்திலும், ஆண்டவரின் சேய் மூலமன்றி அவரை எவரும் கண்டிலர் என்பது உண்மையே. சேயிடத்தில் அவரைக் காணாது, நாம் எங்கே அவரைத் தரிசிக்க இயலும்? நீங்களும் நானும், நம்மிடையே உள்ள ஏழையிலும் ஏழைகளான மக்களும், மிக இழிந்தோர்களும் கடவுள் வடிவாகி மட்டும் நின்றுவிடாமல், அவர் வடிவின் நிழலையும் புலப்படுத்தி விடுகின்றோம். ஒளியின் அதிர்ச்சி எங்குந்தான் இயங்குகின்றது; ஆனால், அவ்வொளியைக் காண்பதற்கு முன்பு விளக்கேற்ற வேண்டியிருக்கிறது. இந்தப் பிரபஞ்சத்தில் எங்குமுள்ள கடவுளைக் காண்பதரிது. அந்தத் தீர்க்கதரிசிகள், அந்த மனிதத் தெய்வங்கள், அந்த அவதாரங்கள், அந்தக் கடவுள் வடிவத்தைப் பெற்றவர்களாகிய தீபங்களில் ஆடுகின்ற அக்கடவுள் நிழல் மூலந்தான் அவரைக் காண முடியும்.

கடவுள் இருக்கிறார் என்பதை நாமனைவரும் அறிவோம்; எனினும், அவரை நாம் காண்கிறதில்லை; அவரை உணர்கிறதில்லை. ஞான ஒளி தாங்கிய தேவதூதர்களுள் ஒருவரைச் சான்றாக எடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் கடவுளைப்பற்றி இதுவரையில் கொண்ட மிக உயர்ந்த இலட்சியத்தோடு, அந்தச் சான்றோருடைய குணச் சித்திரத்தை ஒப்பிட்டுப் பாருங்கள்; நீங்கள் கருதிய கடவுளைப்பற்றிய எண்ணங்கள், உயர் இலட்சியத்தை எட்டிப்பிடிக்க முடியாது பின்தங்குவதை நீங்கள் அறிவீர்கள். தீர்க்கதரிசியின் உயர்ந்த மனப்பண்பாடு நீங்கள் வகுத்த கருத்துக்களைக் கடந்து நிற்கின்றது. உண்மையிலேயே கடவுள் வடிவெடுத்து வந்தவர்கள் உணர்ந்ததும், உங்கள் முன் எடுத்துக் காட்டாக வைத்ததுமான ஓர் இலட்சியத்தைவிட நீங்கள் கடவுளைப்பற்றி அமைத்துக்கொண்ட இலட்சியம் உயர்ந்ததன்று. இக்காரணத்தால், அச்சான்றோர்களைக் கடவுளென வழிபடுதல் தவறாகுமோ? அந்த மனிதத் தெய்வங்களின் பொன்னடிக்கீழ் வணங்கிநின்று இந்த உலகத்தில் தோன்றியவர்களே தெய்வ வடிவங்கள் என்று வழுத்தினால், அது ஒரு பாவச் செயலாகுமோ? நாம் உருவாக்கிக்கொண்ட எண்ணங்களைவிட அவர்கள் உண்மையாகவே உயர்ந்தவர்கள் என்று கொள்ளுமிடத்து,

அவர்களை வணங்கினால் என்ன தீங்கு வந்துவிடும்? இதில் தீங்கில்லை என்பது மட்டுமன்றி, இம்முறை வழிபாடு ஒன்றே இயலக்கூடியது; இதுதான் திண்ணமான வழிபாடாகும். (உலக சம்பந்தத்தை அறுத்துத்) தனித்த பண்பியல் பாதையில் எவ்வளவு முயன்றாலும்—எந்த முறையைப் பின்பற்றினாலும்—மனித உலகில் நீங்கள் மனிதராய்த் திகழ்கின்ற வரையில், உங்களுடைய உலகம் மனித இயல்பை உடையதே. உங்கள் சமயத்திலும் மனித மணந்தானே வீசும்? உங்களுடைய கடவுளும் ஒரு மனிதப் பண்பாடுடையவராய்த்தானே காட்சி அளிப்பார்? இதில் வியப்பில்லை. கண்முன் நிற்கின்ற ஒரு தூலப்பொருளை விட்டு விட்டுத் தொட்டு நுகர்தற்குரிய ஒன்றின் உருவ மூலத்தைத் தவிர வேறு வகையில் நண்ணுவதற்கரியதும் அறிவதற்கரியது மான ஒரு பண்பியலைச் செயல்முறை நோக்கமுள்ளவர்கள் பின் தொடர்வார்களா? உன்னிப் பாருங்கள்! இக்காரணத்தாலேதான் எல்லாக் காலங்களிலும், எல்லா நாடுகளிலும் ஆண்டவருடைய அவதார புருடர்கள் போற்றி வணங்கப்படுகின்றார்கள்.

யூதர்களின் அவதார புருடரான இயேசுநாதரின் வாழ்வைப் பற்றி நாம் இப்பொழுது சற்று ஆராயப்போகின்றோம். இயேசு நாதர் உலகத்தில் உதித்தபொழுது இரண்டு அலைகளுக்கு நடுவில் விரிந்து நிற்கும் பள்ளமனைய வீழ்ச்சியில்—அதாவது இருப்பதைக் காப்பாற்றிக்கொள்ளும் நிலையில்—யூதர் இருந்தனர் என்பதை நான் குறிக்கின்றேன். அது முன்னேறுகிற துறையில் மனித உள்ளம் சற்று அயர்வுற்றுக் கிடக்கும் நிலையாகும். ஏற்கெனவே உள்ளதைக் கவலையுடன் பேணுகின்ற நிலையும் அதுவேயாகும். மிகச் சிறந்தவையும், பொதுவானவையும், கம்பீரமானவையுமான மாபெரும் பிரச்சினைகளின்மீது உள்ளம் உவந்து நாடாது, அற்ப விவரங்களிலும் கடுகனைய பொருள்களிலும் இறங்கிவிடுகின்றது. ஒரு வாழ்க்கைத் தேக்கம் எழுவதையும் பார்க்கின்றோம். வாழ்க்கைத் தோணியைத் தேக்கத்திலிருந்து ஈர்ப்பாரைக் காணோம். செயலற்று எல்லாவற்றையும் அப்படியே கிடக்கும்படி விட்டுவிடுகின்றோம். உற்றுநோக்குங்கள்! பொருள்களின் இந்நிலைமீது நான் குற்றம் சுமத்தவில்லை; அதைக் குறைகூறுவதற்கு நமக்கு உரிமையுமில்லை. இத்தகைய வீழ்ச்சி இல்லாமற்போகுமாயின், நாசரத்தில் தோன்றிய இயேசு நாதரிடம் உருவெடுத்த இந்த எழுச்சி தோன்ற இயலாததாய் முடிந்துவிடும். இந்தப் 'பாரசீயரும்', 'சாதுசீயரும்' பொய் புதைந்தவர்களாயிருக்கலாம்; இவர்கள் புரியத் தகாத செயல்

களைப் புரிந்திருக்கலாம்; உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசும் வஞ்சகர்களாய்க் காட்சி அளிக்கலாம். இவர்கள் எப்படித் தோன்றினுல் என்ன? இந்த அமிசங்களே இந்தத் தேவ தூதராம் விளைவுக்குக் காரணமாய் இருந்தன. இந்தப் பாரசீயர்களும் சாதுசீயர்களும் ஒரு முனையில் இருந்து தள்ளுகிற சத்தியாய்த் திகழ்ந்தார்கள்; ஆட்டுவிக்கும் அந்தச் சத்தியால் மற்ருெரு முனையில் நாசரத்தில் தோன்றிய இயேசுநாதரின் மிகப் பெரிய அறிவுச் சுடர் வெள்ளம் எழுந்தது.

சமயச் சடங்கு வடிவங்கள், கண்மூடித்தனமாய்ப் பின்பற்றப் படுகிற விதிகள், சமயத் தினசரி விவரங்கள், கிரியைகள்—இவற் றின்மீது மிகுதியாய்ச் செலுத்தப்படும் கவனத்தைக் கண்டு சில வேளைகளில் ஒருவர் நகையாடக்கூடும்; எனினும், இவற்றில் ஒரு வலிமை இருக்கப் பார்க்கின்ருேம். முன்னேறுகிற விரைவில் நம்முடைய ஆற்றலை பல முறை இழக்க நேரிடலாம். உண்மையை உரைக்குமிடத்து, சமய வெறிபிடித்தவன் விரிந்த பண்பாட்டை யுடையவனைக்காட்டிலும் வலிமை படைத்தவன் என்று மொழிய லாம். இக்காரணம் பற்றியே வெறிபிடித்தவனிடத்தில் இந்த நற்குணமிருக்கிறது. சத்தியின் மிகவும் பெரிய பாகத்தைச் சிதறவிடாமல் சேமித்து வைக்கிருன். தனித்த மனிதனிடம் போலவே, மனித இனத்திடையேயும் சேமித்து வைக்கும் பொருட்டே சத்தி திரட்டப்படுகின்றது. இந்த யூத இனத்தார் எங்கணும் புறப் பகைவர்களால் சூழப்பட்டனர்; ரோமர்களாலும், அறிவு உலகத்தில் கிரேக்க உணர்ச்சிச் சார்புகளாலும் மோதப் பட்டு ஒரு மையத்துக்கு ஒதுக்கப்பட்டனர். பாரசீகம், இந்தியா, அலெக்ஸாண்டிரியா என்னும் இந்நாடுகளின் படையெடுப்பு களாகிய அலைகளும் இவர்கள்மீது வீசின. உடல் தாக்குதல், மனத்துறையில் எழக்கூடிய தாக்குதல், ஒழுக்க இயலில் பிறக்கும் தாக்குதல் ஆகிய இத்தகைய தாக்குதல்களுக்கு இவர்கள் உட்பட் டார்கள். இவர்களோடு பிறந்த மாபேராற்றலை—சேமித்து வைத்ததைச் சிதறவிடாமல் காப்பாற்றும் ஆற்றலைக்கொண்டு இவர்கள் எல்லாவற்றையும் எதிர்த்து வந்தார்கள். இன்றுகூட இவர்கள் வழி வந்தவர்கள் அத்தகைய ஆற்றலை இழந்துவிட வில்லை. ஜெருசலத்தின்மீதும் யூதர்களின் வழிபாடுகளைக் காப்பாற்றுகிற முறையின்மீதும் தங்கள் முழுச் சத்திகளையும் செலுத்துமாறு இவர்களுக்கு ஒரு தளை ஏற்பட்டுவிட்டது. திரட் டப்பட்ட அத்தனை சத்திகளும் ஒரே இடத்தில் திரட்டியபடியே நின்றுவிடா அல்லவா? அந்தச் சத்திகள் விரியவேண்டும்; அவற்

றிற்கும் ஒரு போக்கிடம் வேண்டுமன்றோ ? ஒரு குறுகிய எல்லைக்குள், உலகத்தின் எந்தச் சத்தியும் நீண்டகாலம் அடைபட்டிராது என்பது உண்மையே. பிறகு வருகின்ற காலப்பகுதியில் விரிய இயலாதபடி எந்தச் சத்தி வெள்ளத்திற்கும் நீண்ட காலம் அணை போட்டுவிட இயலாது.

யூதர் இனத்திடையே ஒருமுகமாய்த் திரட்டப்பட்ட சத்தி அடுத்த காலப்பகுதியில் சிறந்து சமய வாயிலாக உருவெடுத்து விட்டது. திரண்ட அருவிகள் ஒரு வெள்ளமாய்ப் பெருக்கெடுத்தன. சிறிது சிறிதாக எல்லாச் சிற்றருவிகளும் கலந்து ஓங்கி எழுகின்ற ஒரு மாபேரலையாய்த் திகழ்ந்தன. அந்த அலைச் சிகரத்தின் மீது நாசரத்தில் அவதரித்த இயேசுநாதர் என்னும் உத்தமர் நடனமாடக் காண்கின்றோம். ஒவ்வொரு தீர்க்கதரிசியும் அவரவர் காலக் குழவியென்றே கூறலாம் ; அவருடைய இனத்தின் இறந்தகாலப் படைப்பென்றும் பகரலாம். அவரும் வருங் காலத்தைப் படைப்பவராவர். இன்று காரணமாய் இலங்குவது இறந்த காலத்தின் விளைவாகும் ; எதிர் காலத்தை அமைப்பதும் அதுவேயாகும். இவ்வாறு ஒரு தீர்கதரிசி திகழ்கின்றார். தம்முடைய இனத்தில் எது மிகவும் நலமெனக் கருதப்படுகிறதோ, எது மிகச் சிறப்பு வாய்ந்ததோ, எது இரகசியமாகக் கருதப்படுகிறதோ, எந்த வாழ்வுக்காக ஊழிகளாக அந்த இனம் பாடுபட்டதோ, அவையாவும் அச்சான்றோரிடத்தில் உருவாயின ; அவர் தம் எதிர்கால இனத்தின் தூண்டுகோலாய் மட்டும் இலங்காது, இவ்வையகத்திலுள்ள எண்ணிறந்த மற்றைய இனத்தார்களுக்கும் அவர் ஆட்டிவைக்கும் ஒரு புதிய சத்தியாய்க் காட்சி அளித்தார்.

நாம் இன்னும் ஓர் உண்மையை மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டும். நாசரத்தில் அவதரித்த சிறந்த தீர்க்கதரிசியைப் பற்றிய என் கருத்தோ, கீழ்த்திசை நாட்டாரின் கோணத்தினின்றுதான் கருதப்படும். அந்த நாசரத்தவர் கீழை நாட்டவருள் ஒரு கீழை நாட்டார் என்பதைப் பலமுறை நீங்கள் மறந்துவிடுகின்றீர்கள். அவருடைய கண்கள் நீலக் கண்கள் ; அவர் தலைமயிர் பசும்பொன் நிறமுடையது என்றெல்லாம் அவரைச் சித்திரித்த எல்லா முயற்சிகளும் செய்த போதிலும், அவர் கீழை நாட்டாரேயாவர். கிறித்தவ வேத நூலில் காணப்படுகிற எல்லா உவமைகளும், சொற் சித்திர விளக்கங்களும், காட்சிகளும், குறிப்பிட்ட இடங்களும், மக்களின் சார்புகளும், பாவனைகளும், மக்களுடைய திறன்களும், கவிதையும், உருவக

மும் கீழை நாட்டின் இயல்பைத்தான் இயம்புகின்றன. ஒளி மிக்க நீல வானத்தைப் பற்றியும், மிகுந்த வெப்பத்தைப் பற்றியும், வெய்யோனைப் பற்றியும், பரந்த பாலையைப் பற்றியும் அவை விவரிக்கின்றன. நீர் வேட்கை கொண்ட மக்கள், விலங்குகள், ஆண்களும் பெண்களும் கிணறுகளிலிருந்து தண்ணீர் நிரப்பிக்கொள்ளத் தலை மீது குடங்களைத் தாங்கி வரும் காட்சிகள், ஆட்டு மந்தைகள், உழவர்கள், சுற்றிலும் நிகழ்ந்து கொண்டிருக்கும் பயிர்த்தொழில்கள், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், சக்கரங்கள், குட்டைகள், மாவரைக்கும் இயந்திரங்கள் ஆகிய அனைத்தும் நம்முன் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றக் காண்கின்றோம். ஆசியாக் கண்டத்தில் இவை யாவும் இன்னும் காணக்கூடியவையே.

ஆசியாவின் குரல் எப்பொழுதுமே சமயக் குரலாய் ஒலித்து வருகின்றது. ஐரோப்பாவின் குரலோ, அரசியல் குரலாகும். ஒவ்வொன்றும் தத்தம் துறையில் சிறப்புற்றிருக்கிறது. ஐரோப்பாவின் குரல் பண்டைய கிரேக்க நாட்டின் குரலே. கிரேக்க உள்ளத்திற்குத் தன்னுடைய அண்மைச் சமுதாயமே—தன்னைச் சூழ்ந்துள்ள சமுதாயமே—எல்லாச் சிறப்புமாகும். தன் வட்டத்திற்கப்பாலுள்ள அனைத்தும் நாகரிகமற்றவை என்று அது கருதும். தங்களைத் தவிர மற்றவர்க்கு வாழவும் உரிமை இல்லை என்று கிரேக்கர்கள் நினைக்கின்றார்கள். இவர்களுக்குப் புறம்பாய் இவ்வையகத்தில் இருப்பன யாவும் ஒழுங்குமல்ல, சரியுமல்ல. அவற்றை வாழ வைப்பதற்கு இடந் தருதலும் அழகன்று. மனித இயல்பின் உணர்ச்சிகளில் மிகச் செறிந்தவர்கள், மனித இயல்பிற்கேற்ற ஆர்வம் மிக்க பண்பாடு உடையவர்கள், இக் காரணத்தால் கலையில் மிகத் திளைத்தவர்கள்,—இத்தகைய உலகத்திலேதான் கிரேக்கர்கள் திரிகின்றார்கள். அவர்கள் கனவு காண அக்கறை கொள்ளுகிறதில்லை. அவர்கள் கவிதை கூடச் செயல்முறை உலகத்தை ஒட்டியே நிற்கின்றது. அவர்கள் வணங்கும் ஆண் தெய்வங்களும் பெண் தெய்வங்களும் உலக மக்கள் இனத்தைப் போலக் காட்சி அளிப்பதோடு மட்டுமன்றிப் பெரும்பாலும் நம்மைப் போல எல்லா உணர்ச்சிகளும் ஆசாபாசங்களும் மிக நிரம்பினவாய்த் தோன்றுகின்றன. அவர்கள் எது வனப்பு வாய்ந்ததோ, அதை விரும்பி அதோடு உறவாடுகின்றார்கள். ஆனால், இதை மறந்துவிடாதீர்கள். அவர்கள் போற்றுவது இயற்கையின் புறக்காட்சியே. தரைகளின் வனப்பும், பனிக்கட்டிகளின் வெண்ணிறத் தோற்றமும், மலர்களின்

அழகும், கவின் நிகழ் அமைப்புகளின் சிறப்பும், உருவங்களின் ஒளியும் அவர்களது உள்ளத்தைத் தொடுகின்றன. முகத்தின் பொலிவில் அவர்கள் ஈடுபடுகின்றார்கள். கம்பீரமான மனித உடல் அமைப்பு, இவற்றைவிட அவர்களுடைய மனத்தை அடிக்கடி கொள்ளை கொள்ளுகின்றது. பின்வந்த ஐரோப்பியர் அனைவர்க்கும் கிரேக்கர்கள் ஆசிரியராய்த் திகழ்ந்த காரணத்தால், ஐரோப்பாவின் குரல் கிரேக்கரின் குரலே தவிரப் பிரிதன்று என்று மொழியலாம்.

ஆசியாவில் வேறு வகையான மனித இனத்தைப் பார்க்கலாம். மிக விரிந்த பெரிய கண்டத்தை உன்னிப் பாருங்கள். அதன் மலைகளின் கொடுமுடிகள் முகிற்படலங்களைக் கடந்து அனேகமாய்ப் பரந்த நீல வானின் விதானத்தைத் தொடுவதை நோக்குவீர்கள். மைல்களுக்குமேல் மைல்களாகக் கடலென விரிந்து கிடக்கும் பாலையைப் பார்ப்பீர்கள். அந்தப் பாலையில் திவலைத் தண்ணீரும் தோன்றாது; ஒரு பசும்புல்லின் அலகும் புலப்படாது மண்டிக் கிடக்கும் செறிந்த காடுகளும், கடலை நோக்கி விரைகின்ற மாபெரு நதிகளும், உங்கள் நயனவட்டங்களுக்குள் மிதந்து வரும். இத்தகைய சூழ்நிலையின் நடுவே, கீழ்த்திசையிலுள்ளோர் வனப்பு வாய்ந்தவற்றின்மீதும், மிகவும் உயர்ந்து ஓங்கி நிற்கின்றவை மீதும் வைக்கும் ஆர்வம் வேறு முறையில் வளரத் தொடங்கிற்று. அவர்களுடைய உள்ளம் புறத்தை நாடாது அகத்தையே நாடி நின்றது. இயற்கையை நாடுகின்ற இதே வேட்கையைப் பார்க்கின்றோம்; சத்தியை விரும்புகிற உணர்ச்சியும் எழுகின்றது; சிறப்பைத் தேடுகிற ஆர்வமும் உண்டு. கிரேக்கர்களும் அவர்களுக்குப் புறம்பாயுள்ளவர்களும் கொண்ட கருத்தும் இங்கு மிளிராமலில்லை; ஆனால், கீழை நாட்டவரின் ஆர்வம் ஒரு பெரிய வட்டத்திற்கப்பாலும் பெருகிவிட்டது. ஆசியாவில் இன்றுகூடப் பிறப்போ, வருணமோ, மொழியோ இனத்தை வகுப்பதில்லை. இனத்தை அமைப்பது அதன் சமயமேயாகும். 'நாமனைவரும் கிறித்தவர்கள்; நாமனைவரும் மகமதியர்கள்; நாமனைவரும் இந்துக்களோ பௌத்தர்களோ ஆவோம்,' என்றுதான் தங்களைக் கூறிக் கொள்ளுவார்கள். ஒரு பௌத்தன் சீன நாட்டவனாயிருக்கலாம்; அல்லது பாரசீக நாட்டவனாய்த் திகழலாம். அதனால் யாதொன்றுமில்லை. ஒரே சமயத்தைத் தழுவி நிற்கிற காரணத்தால் அவர்கள் தங்களைச் சகோதரர்கள் என்று கருதுகின்றார்கள். மனித இனத்தைப் பிணைப்பது சமயந்தான். ஒருமையே சமயமாகும்.

இக்காரணத்தால் கீழை நாட்டவர்கள் தெய்வக்காட்சி காணும் இயல்புள்ளவர்கள்; பிறப்பிலேயே கனவு காண்கின்ற தன்மையுமுள்ளவர்கள். நீர் வீழ்ச்சிகள் எழுப்பும் குறு அலைகள், புள்ளினம் சொரியும் இன்னிசை அமுதம், ஞாயிறு, மதி, விண்மீன்கள், இவ்வையகம் ஆகிய இவற்றின் அழகுகள் எல்லாமே இன்பம் பயக்கக்கூடியவைகளே. ஆனால் கீழை நாட்டவர்களின் உளத்திற்கு முழுதும் அமைதி அளிக்கும் அளவிற்கு இவை போதுவனவல்ல. அப்பாலைப்பற்றியும் கனவு காண விரும்புகின்றார்கள்; இம்மையைக் கடந்து செல்ல விழைகின்றார்கள். இம்மையை இவர்கள் பொருட்படுத்துகின்றவர்களல்லர். மனித இனத்தின் பிறப்பிற்கே பல நூற்றாண்டுகளாய்த் தொட்டிலாய் அமைந்தது கீழ்த்திசையேயாகும். அது செல்வவாழ்வின் எல்லா மேடு பள்ளங்களையும் கண்டிருக்கிறது. நாடுகள் ஒன்றை ஒன்று தொடர்ந்து மறைகின்றன. சாம்ராச்சியங்களுக்கு மேல் சாம்ராச்சியங்கள் காட்சி அளித்துக் கால வெள்ளத்தில் மூழ்கிப் போகின்றன. மனித சத்தி, புகழ், செல்வம் ஆகிய எல்லாம் மண்ணொடு மண்ணாய் அழிவுறுகின்றன; அவனுடைய ஆற்றலும் அறிவும் மாய்ந்து எல்லாம் இடுகாடாய்ப் போய்விடுகின்றன. சத்தியின் அழிவு, இராச்சியங்களின் அழிவு, அறிவின் அழிவு ஆகிய இவ்வழிவனைத்தும் திரண்டு எல்லாம் மண்டையோடுகள் மலிந்த இடமாய் விரிகின்றன. கீழை நாட்டானது உள்ளம் உலகப் பொருள்களை இழிவு நோக்கோடு நோக்குகின்றது. இதில் யாதொரு வியப்புமில்லை. என்ஞான்றும் மாறாத ஒன்றை—இறவாத ஒன்றை—இடும்பையும் சாவும் மண்டிக்கிடக்கின்ற உலகின் நடுவே என்றைக்குமுள்ளதும், இன்பமே வடிவானதும், மரிக்காததுமான ஒன்றை—அது இயல்பாகவே காண ஆர்வம் கொள்ளுகின்றது. கீழைநாட்டு ஞானியார் ஒருவர் இந்த இலட்சியங்களை வலியுறுத்துவதில் என்றுமே அயர்வுறுகிறதில்லை. தீர்க்கதரிசிகள் சம்பந்தப்பட்டவரையில் யாதொரு விதிவிலக்குமின்றி ஞான நன்மொழி வழங்கியவர் அனைவரும் கீழை நாட்டவரே என்பது உங்கட்கு நினைவிருக்கலாம்.

இக்காரணம் பற்றியே சான்றோரான இந்த தேவ தூதரிடம் முதன்மையாகக் காணக்கூடிய குறிக்கோள் இதுவேயாகும்: “இந்த வாழ்வன்று; இதைவிடச் சிறந்த ஒன்றைப் பற்றுங்கள்.” கீழைநாட்டு உண்மையான ஒரு மகன் போன்றவர் இக்குறிக்கோளைச் செயற்படுத்துகிறார். மேலை நாட்டார்களாகிய நீங்களும் உங்கள் துறைகளில் செயற்படுத்தும் இயல்புள்ளவர்களாய்த்

திகழ்கின்றீர்கள். இராணுவ அலுவல்களிலும் அரசியல் வட்டாரங்களை ஆள்வதிலும் உங்கள் செயல்முறைத் திறன் செவ்வனே புலப்படுகின்றது. இந்தத் துறைகளில் கீழை நாட்டார் செயல்முறைத் திறன் வாய்ந்தவரல்லர் என்பது உண்மையே. ஆனால், தம் துறையில் செயல் முறைத் திறனைப் பெற்றவர்கள், சமய உணர்ச்சியைச் செயலில் காட்டுவார்கள். யாராவது ஒரு தத்துவத்தைப் போதித்தால், மறுநாளே நூற்றுக்கணக்கான மக்கள் தங்களுடைய வாழ்வுகளிலேயே அதைத் தங்களால் இயன்றவளவு உருவாக்க முயல்வார்கள். ஒரு காலின்மீது நிற்பது ஒருவரை முத்திக்கு அழைத்துச் செல்லும் என்று ஒருவர் ஓதினால், ஒரு காலில் நின்று தவம்புரியும் ஐந்நூறு சீடர்கள் அக்கணமே அவருக்குக் கிடைப்பார்கள். இது நகைப்பிற்கு இடம் தரும் என்று நீங்கள் கூறலாம். ஆனால், உற்று நோக்குங்கள். அத்தகைய செயலின் அடிக்கீழ் ஒரு தத்துவம் கரந்து நிற்பதைப் பார்க்கின்றோம்; அது யாதெனில், கொண்ட கொள்கையைச் செயற்படுத்தும் செறிந்த ஆர்வம் மிக்க இயல்பே. மேலை நாட்டிலோ, முத்தியைப் பற்றிய திட்டங்கள் அனைத்தும் வெற்று அறிவுப் பயிற்சிகளையே சுட்டும். அவர்கள் திட்டங்கள் உருப்பெறா; செயல்முறை வாழ்வில் இடம் பெறா. மேலை நாட்டில் சொல் வன்மையுள்ளவன் மிகச் சிறந்த வெற்றுச் சொற்பொழிவாளனாய்த் திகழ்வான்.

கீழை நாட்டு மைந்தரான இயேசுநாதர், நாசரத்தைச் சார்ந்த இயேசுநாதர்—சிறப்பாக எதையும் தீவிரமாகச் செயல்முறைப்படுத்தும் இயல்பு வாய்த்தவர் என்றே மொழியலாம். நிலையில்லாத உலகத்திலும், அதைச்சார்ந்த பொருள்களிலும், அவருக்கு நம்பிக்கை இல்லை. நவீன காலத்தில் நடப்பது போல நூல்களைத் திரித்து வலியப் பொருள்கொள்ள வேண்டிய அவசியமில்லை. நூல்களைத் திரித்து இழுத்துக்கொண்டே—அதாவது மேலே இழுத்துக்கொண்டு போவதற்கு இயலாமலிருக்கும் வரையில்—நாம் செல்ல வேண்டிய நிலையும் இல்லை. நூல்கள் இந்திய 'ரப்பர்' அல்லவே! அவற்றிற்கு எல்லைகளுண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள். இக்கால ஆடம்பர உணர்ச்சியைத் தணிப்பதற்கிணங்கச் சமயத்தை ஒரு கருவியாக்க வேண்டிய கட்டுப்பாடும் இல்லை.

உற்றுக் கவனியுங்கள். நாம் அனைவரும் ஒழுங்கானவர்களாய் உண்மையுள்ளவர்களாய்த் திகழ்வோமாக. இலட்சியத்

தைப் பின்பற்ற முடியாமற்போனால், நம்முடைய பலவீனத்தை ஒப்புக்கொள்ளுவோம் ; அதை இழிவுபடுத்த வேண்டா ; அதை ஒருவரும் கீழே இழுத்துச் செல்ல முயல வேண்டா. மேலை நாட்டார் இயேசுநாதரின் வாழ்வைப் பற்றித் தரும் பல்வேறு வரலாறுகளைக் கண்டு ஒருவன் உள்ளத்தில் அருவருப்பை அடைகின்றான். அவர் எப்படித் திகழ்ந்தார் என்பதையும் எப்படித் திகழவில்லை என்பதையும் நான் அறியேன்! ஒருவன், அவரை ஓர் அரசியல் வாதியாகக் கருதுவான்; மற்றொருவன் அவரை ஓர் இராணுவத் தலைவராக நினைக்கக்கூடும்; வேறொருவன் ஒரு சிறந்த நாட்டுப் பற்றுள்ள யூதர் என்று நோக்க இயலும். இப்படி அவரைப் பற்றிப் பற்பல சுருதிகளில் மக்கள் இசைக்கின்றார்கள். இவ்வாறு கொள்வதற்கே நூல்களில் ஏதேனும் அத்தாட்சி உண்டா? ஒரு சிறந்த ஞான குரவரின் வாழ்க்கைக்கு மிக உயர்ந்த உரை யாதெனின், அவருடைய வாழ்வேயாகும் : ''குள்ள நரிகள் அடங்குவதற்குப் பொந்துகள் உண்டு; விண்ணில் திரியும் புள்ளினங்களுக்குக் கூடுகள் உண்டு. ஆனால், மனிதனின் மைந்தனுக்கோ (இயேசு நாதருக்கோ) தலை சாய்க்கவுமிடமில்லை. முத்தியை எய்துவதற்கிதுவே வழியாகும்,'' என்று இயேசுநாதர் இயம்புகிறார். அவர் வேறு வழியை நிறுவவில்லை. கந்தையை உடுத்தி, நீறு பூசி (நோன்பு நிலையில் நின்று) இப்படிச் செய்வது இயலாது என்று நாம் ஒப்புக்கொள்ளுவோமாக. நம்மிடத்திலும் நம் உடைமைகளிலும் நாம் இன்னும் பற்று வைத்திருக்கிறோம். உடைமை, பணம், செல்வம்—இவ்வனைத்தையும் நாம் விழைகின்றோம். அந்தோ! நம் நிலை இருந்தவாறு என்னே! நாம் நம்முடைய இழிவான நிலையை ஏற்பதே தகுதியாகும். மனித இனத்தை உயர்த்தவந்த ஞான குரவரை நாம் நாணுறச் செய்யாமல் இருப்பது நமக்கு அழகாகும். அவருக்குக் குடும்பக் கட்டுகளில்லை. ஒளிப் பிழம்பானவரும் மனிதரல்லாதவரா யிருப்பவருமான அவ்விறைவர் விலங்கினத்தோடு உடன் பிறந்த தன்மையைக் கொண்டாடவே இப்புவிக்கு வந்து இறங்கினர் என்று நீங்கள் கருதுகின்றீர்களா? எந்த எந்தப் பொருள்களைப் பற்றி அவர் பேசுவதாக மக்கள் கருதுகின்றார்கள்? அவருக்கு ஆண் பெண்ணைப் பற்றிய கருத்துகள் இல்லை. அவர் ஓர் ஆன்மா அன்றோ? ஆன்மாவைத்தவிர வேறில்லை. மனித இனத்தின் நன்மையின் பொருட்டே ஓர் உடலைத் தாங்கியவர் அவர். உடலோடு கூடிய எல்லாத் தொடர்புகளும் இதைக் கருதியனவேயாகும். ஆன்மாவில் (ஆண் பெண் என்ற) பால் உணர்ச்சி

இல்லையே! இந்த உடல்களை நீங்கிய ஆன்மாவுக்கு விலங்கினத் தோடு யாதொரு தொடர்பும் இல்லை; உடலோடும் சம்பந்தமில்லை. இந்த இலட்சியம் நம்மைக் கடந்து மிகவும் தொலைவில் சுடர்விட் டுத் திகழலாம். அதைப்பற்றிக் கவலையுறுதல் வேண்டா. அந்த இலட்சியமே நம்முடைய இலட்சியமும் என்று ஒப்புக்கொள்ளு வோமாக! அது இன்னும் நண்ணுவதற்கு இயலாததுதான்.

இயேசுநாதருக்கு வாழ்வில் இதைத் தவிர வேறு அலுவல் இல்லை. நாம் ஓர் ஆன்மா என்பதைத் தவிர வேறு எண்ணமு மில்லை. உடல் தொடர்பற்ற—தளையற்ற—எல்லையற்ற—ஆன் மாவே அவர். இதோடு அவர் நின்றுவிடவில்லை. ஆணாகட்டும், பெண்ணாகட்டும்; யூதராகட்டும், இதர சமயத்தவராகட்டும்; செல்வம் படைத்தவர்களாகட்டும், வறுமையுற்றவர்களாகட் டும்; ஞானியாய் மிளிரட்டும், கொடும்பாவியாய்த் தம் முன் நிற்கட்டும்; தம்மிடையே இயங்குகின்ற அந்த ஒரே ஆன்மாவின் வடிவந்தான் ஒவ்வொன்றும் என்று அவர் தம் வியத்தகு மாசறு காட்சிகொண்டு உளந்தேர்ந்தார். இக்காரணத்தால், இத்தகைய பணியைத்தான் அவருடைய வாழ்வு முழுதும் சுட்டிற்று. அவர், அவரவர் ஆன்ம இயல்பை உணரும்படி பணித்தார்; "நீங்கள் தாழ்த்தவர்கள் ஏழைகள் என்றெண்ணும் மூடக்கனவுகளை விட்டு விடுங்கள். காலடியில் வீழ்த்தி நசுக்கப்பட்டதாகக் கருதா தீர்கள்; அடிமைகளாய்க் கொடுங்கோல் ஆட்சி அனைய இன்ன லுக்கு உடன்பட்டதாக உன்ன வேண்டா. ஏனெனில், உங்களி டத்தில் ஒன்று திகழ்கின்றது; அதன்மீது கொடுங்கோல் ஆட்சி யைச் செலுத்த இயலாது; அது நசுக்கப்படாதது; அதற்கு அல் லல் விளைவிக்க இயலாது; அதை எஞ்ஞான்றும் மாய்க்கக் கூடுமோ? அழியாத பரமான்மாவான கடவுளின் மைந்தர்கள் நீங்கள் அனைவரும். ஆண்டவனது அருள்நகர் உங்களிடமே இருக்கிறது என்பதை உணர்வீர்களாக," என்று அவர் சாற்றி யிருக்கிறார். "நான் ஆண்டவரின் மைந்தன் மட்டுமல்லேன்; என் இதயத்திற்கும் இதயத்திற்குள்ளே நானும் என் தந்தையான கடவு ளும் ஒன்றே," என்று உணர்ந்து துணிந்து நின்று உங்களால் உரைக்க இயலுமா? நாசரத்துத் தந்த இயேசுநாதர் இப்படித்தான் இயம்பினார். அவர் இவ்வுலகைப் பற்றியோ, இவ் வாழ்வைப் பற்றியோ, ஒருபொழுதும் கூறினாரில்லை. உலகத்தோடு யாதொரு தொடர்புமில்லை. ஆனால், உலகத்தைத் தம் வசம் செய்து கொண்டு முன்னேறும்படி அதைத் தள்ளித் தம்முடன் இழுத்துச் செல்வார்; சுடர் விட்டெழும் கடவுளின் ஒளியை இந்த வையகம்

முற்றும் அடைகிற வரையில் அதை உந்திக்கொண்டே விரைவார். ஒவ்வொருவரும் தத்தம் ஆன்மநிலையை எய்தும் வரையில், மரணம் இஞ்ஞாலத்தைவிட்டு மறைகிற வரையில், இடும்பைப் பேய் இந்தப் பாரை விட்டுத் துரத்தப்படுகிற வரையில், இந்த அலுவலில் ஈடுபடுவார். இத்தகைய தொடர்பைத் தவிர வேறு எந்தச் சம்பந்தமும் அவருக்கு உலகத்தோடு இல்லை.

அவரைப் பற்றி எழுதப்பட்ட பற்பல வரலாற்றுக் கதைகளை நாம் படித்திருக்கிறோம்; பண்டிதர்களையும், அவர்கள் தந்த நூல்களையும் சிறந்த திறனுய்வையும் நாம் நன்கறிவோம்; ஆராய்ச்சி வாயிலாக அமைக்கப்பட்ட அனைத்தையும் உணர்வோம். 'புதிய ஏற்பாட்'டில் காண்பவை எவ்வளவுக்கு உண்மையெனவும், எவ்வளவுக்குச் சரித்திர சம்பந்தம் பெற்றவையெனவும் துருவி ஆராய நான் உங்கள் முன்வரவில்லை. அவர் பிறந்த ஐந்நூறு ஆண்டுகளுக்குள் இந்தப் புதிய ஏற்பாடு எழுதப் பட்டால் என்ன! இதில் கண்டவை எவ்வளவு தூரத்திற்கு உண்மையாயிருக்கக்கூடும் என்பதைப் பற்றி நாம் கவலை கொள்ள வேண்டுவதில்லை. இவ்வரலாறுகளுக்குப் பின் ஏதோ ஓர் உண்மை திகழ்கின்றது. அந்த ஒன்றைப் பின்பற்றி அதைப் போன்று ஒழுக நாம் விரும்புகின்றோம். பொய்யுரைப்பதற்கும் மெய்யுரைப்பது போன்று நடித்தல் வேண்டும். இல்லாத தொன்றையோ, காணுததொன்றையோ போன்று நடிக்க உங்கட்கு இயலாது. ஓர் உட்கரு இருத்தல் வேண்டும்; மாபெருஞ்சத்தி கீழே இறங்கியிருக்கவேண்டும். வியப்புறும் ஓர் ஆன்ம சத்தியின் தோற்றம் திகழ்தல் வேண்டுமன்றோ? அந்தச் சத்தியைப் பற்றி நாம் மொழியப் போகின்றோம். அந்த உண்மை அங்கே அலர்ந்து நிற்கின்றது. அக்காரணம் பற்றியே புலவர்களின் ஆய்வுரைகட்கு நாம் அஞ்ச வேண்டுவதில்லை. கீழை நாட்டைச் சார்ந்தவனுன நான், நாசரத்து நல்கிய இயேசுநாதரை இறைஞ்சுவதாயிருந்தால், எனக்கு ஒரே வழிதான் உண்டு. அது யாதெனில், அவரைக் கடவுளாகக் தவிர வேறு முறையில் என்னுல் வழிபட முடியாதென்பதே. அந்த முறையில் நாங்கள் அவரை வழிபடுவதற்கு உரிமை இல்லை என்று நீங்கள் கருதுகின்றீர்களா; அவரை நம்முடைய நிலைக்கு இழுத்து ஒரு பெரிய மனிதர் என்ற முறையில் மரியாதைகாட்டுகிறதாயின், அவரை நாம் ஏன் வணங்க வேண்டும்?

"இந்த ஒளியின் குழந்தைகளை—பரமான்ம ஒளியைத்

தோற்றுவிக்கிற குழந்தைகளை—அந்த ஒளியாகவே இருக்கின்ற குழந்தைகளை வணங்குவதால், இவர்கள் நம்மோடு ஒன்றிவிடுகின்றார்கள்; நாமும் இவர்களோடு இரண்டறக் கலந்துவிடுகின்றோம்,'' என்று எங்கள் சாத்திரங்கள் சாற்றுகின்றன.

மனிதன் மூன்று முறைகளால் கடவுளை உணர்வதைக் காண்கின்றீர்கள். ஓர் அரியணை மீது ஓர் உயர்ந்த நீதிமன்றத் தலைவராக மிகத் தொலைவில் விண்ணில் கடவுள் விளங்குவதாகக் கல்வியறிவில்லாதவனது முதிராத அறிவு கருதுகின்றது. அவரை ஓர் தீப்பிழம்பாக மனிதன் நோக்குகின்றான்; பேரச்சத்தை விளைவிக்கக்கூடிய பொருளாகப் பார்க்கின்றான். அது நல்லதுதான்; அதில் ஒன்றும் கெடுதலில்லை. 'மனித இனம் பிழையிலிருந்து உண்மைக்குப் போகவில்லை; உண்மையிலிருந்து மற்றோர் உண்மைக்குப் பிரயாணம் செய்கின்றது,' என்பதை நீங்கள் மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டும். நீங்கள் விரும்பியபடி இப்படியாவது வைத்துக்கொள்ளுங்கள். தாழ்ந்த உண்மையிலிருந்து ஓர் உயர்ந்த உண்மைக்குப் போவதாகக் கருதலாமே தவிர, பிழையிலிருந்து உண்மைக்கு விரைகின்றோம் என்று நினைத்தல் கூடாது. இங்கிருந்து ஞாயிற்றை நோக்கி நேர்க்கோடு வழியாக நீங்கள் போவதாக வைத்துக்கொள்ளுவோம். இங்கிருந்து பார்த்தால் கதிரவன் வடிவத்தில் சிறிய பொருளாகக் காட்சி அளிப்பான். நீங்கள் கோடிக்கணக்கான மைல்கள் மேலேறுவதாக வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுது வெய்யோன் மிக விரிவாகக் காட்சி அளிப்பான். ஒவ்வொரு நிலையிலும் பகலவன் பருத்துக்கொண்டே போவதைப் பார்ப்பீர்கள். பல கோணங்களிலிருந்து பரிதியைக் காட்டும் இருபதினாயிரம் புகைப் படங்களை எடுப்பதாக எண்ணுவோம். இவ்விருபதினாயிரம் படங்களுள் ஒவ்வொன்றும் மற்றொன்றிலிருந்து வேறுபடுமன்றோ? ஆனால், ஒவ்வொன்றும் செஞ்சுடரோனின் புகைப் படமே என்பதை நீங்கள் மறுக்க இயலுமோ? ஆதலால், உயர்ந்ததாயிருக்கட்டும்; தாழ்ந்ததாயிருக்கட்டும்; எல்லாச் சமய அமைப்புகளும் அழியாத ஒளி நிலைக்கு அழைத்துச் செல்லும் பற்பல படிகளேயாகும். அந்த ஒளி கடவுளேயாவர். சிலர் கீழ் நிலையான பார்வையைப் பெறுகின்றனர்; வேறு சிலர் சற்று உயர்ந்த கருத்தை உருவாக்குகின்றனர். இந்த வேற்றுமையைத் தவிர வேறில்லை. சிந்தித்து அறியாத மக்கட்சமுதாயங்களின் சமயங்கள் யாவுமே இப்படித்தான் இருக்கும்; இப்படியேதான் இருந்து வருகின்றன. இந்தப் பிரபஞ்சத்திற்குப் புறத்திலே கடவுள் இருக்கிறு

ரென்றும், அவர் விண்ணில் உறைகின்றாரென்றும், அந்த இடத்திலிருந்து ஆட்சி புரிகின்றாரென்றும், தீயவர்களுக்குத் தண்டனை விதிக்கின்றார் என்றும், நல்லவர்களுக்கு அருள் காட்டுகிறாரென்றும், இவ்வண்ணமே மற்றையவெல்லாம் புரிகின்றாரென்றும் அவை கருதுகின்றன. ஆன்மிகத்துறையில் முன்னேற முன்னேறக் கடவுள் எங்கும் நிறைந்தவரென்றும், அவர் தன்னிடத்திலும் உறைகின்றாரென்றும், அவர் எங்கும் உள்ளவரென்றும் அவர் விண்ணில் திகழ்கிறவரல்லரென்றும், திண்ணமாக ஆன்மாக்களுக்கு ஆன்மாவாய் அவர் இலங்குகிறாரென்றும் மனிதன் உணரத் தொடங்குகின்றான். எவ்வண்ணம் என் உடலை ஆன்மா இயங்கச் செய்கின்றதோ, அவ்வண்ணமே கடவுளும் என் ஆன்மாவை இயங்கச் செய்கின்றார். ஆன்மாவுக்குள் அவர் ஓர் ஆன்மாவாய்க் காட்சி அளிக்கின்றார். முதிர்ச்சி அடைந்த சிலர்—உள்ளத் தூய்மை உற்ற சிலர்—முன்னேறி முன்னேறி இறுதியில் மெய்ப்பொருளைக் கண்டு விட்டனர். "உள்ளத் தூய்மை உடையவர்களே பாக்கியம் புரிந்தோர்கள். ஏனெனில், அவர்கள் கடவுளைக் கண்டே தீர்வார்கள்," என்று புதிய ஏற்பாடு இயம்புகின்றது. இறுதியாக அவர்களும், அவர்கட்குத் தந்தையாரான கடவுள் ஒருவரே என்பதை உணர்ந்து விட்டார்கள்.

இந்த மூன்று படிகளும் அந்த மாபெருங்குரவரால் புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டதை நீங்கள் நோக்குவீர்களாக. "விண்ணில் உறையும் எங்கள் தந்தையீர், உமது திருநாமம் புனிதமன்றோ?" என்று இவ்வண்ணம் அவர் கூறுகின்றார். இதைக் கவனிப்பீர்களாக. இது ஒரு பொதுவான பிரார்த்தனையாகும்; கல்விப் பயிற்சியற்ற பாமர மக்கட்சமுதாயங்களுக்காக இது ஏற்பட்டது! இன்னும் உயர்ந்த வட்டத்தில் இருப்பவர்கட்கு—இன்னும் (ஆன்மிகத்) துறையில் முன்னேறியவர்கட்கு—இதைவிடச் சற்றுச் சிறந்த ஞான நல்லுரையை நல்குகின்றார். "நான் என் தந்தையாரின் இதயத்தில் உறைகின்றேன். நீங்கள் என்னுள் இருக்கின்றீர்கள்; நானோ, உங்களிடம் திகழ்கின்றேன்," என்று அவர் கூறினது உங்கட்கு நினைவிருக்கின்றதா? யூதர்கள் அவரைப் பார்த்து, "நீங்கள் யார்?" என்று கேட்ட பொழுது, தாமும் தம் தந்தையாரும் ஒன்றே என்று அவர் சாற்றினார். அவர் இப்படி மொழிந்தது, அந்த யூதர்களுக்குத் தெய்வ நிந்தையாகத் தோன்றிற்று. அவர் இப்படி மொழிந்ததன் கருத்தென்ன? உங்களுடைய பண்டைய தீர்க்கதரிசிகளாலேயும் இவ்வண்ணமே உரைக்கப்பட்டிருக்கிறது. "நீங்கள் அனைவரும் தெய்வங்களே.

அந்த உயர்ந்த பரம்பொருளின் சேய்களே நீங்கள் எல்லோரும்.'' இந்த மூன்று படிகளையும் கவனிப்பீர்களாக. முதற்படியில் தொடங்கி இறுதிப்படியில் முடிவடைகிறதுதான் உங்கட்கு எளிதாயிருப்பதைக் காண்பீர்கள்.

இந்தத்தேவதூதர் நமக்கு (முத்தி)ப் பாதையைக் காட்ட வந்தார். அந்த மெய்ப்பொருள் வெறும் சடங்குகளிலும் உருவங்களிலும் இல்லை. இடும்பையைத் தரும் சிக்கலான தத்துவப் பிரச்சினைகள் வாயிலாக அந்தப் பரமான்மாவை நீங்கள் அறிய முடியாது. உங்கட்குப் படிப்பு இல்லாமலிருந்தால், நலமாயிருக்கும்; வாழ்வில் ஒரு நூலையும் கல்லாமல் இருந்தாலும், நன்மையாயிருந்திருக்கும். முத்திக்கு இவை யாவும் தேவையல்ல. செல்வம் வேண்டா; பதவி வேண்டா; அதிகாரம் வேண்டா; படிப்புக்கூட வேண்டா. தேவையானது, உள்ளத் தூய்மை ஒன்றே. ஆன்மா தன் இயல்பிலேயே தூய்மை உடையது. அது வேறு வண்ணமாய் இருக்க முடியாதன்றோ? அது கடவுளின் இயல்புள்ளது; அவரிடமிருந்து வந்திருக்கிறது. அது இறைவரின் உயிர்ப்பே என்று விவிலிய நூல் விளம்புகின்றது. ''ஆண்டவரின் ஆன்மா'' என்று குர்-ஆன் கூறுகின்றது. கடவுளின் ஆன்மா என்றேனும் மாசுறக் கூடுமென்று நீங்கள் கருதுகின்றீர்களா? ஆனால், அந்தோ! நம்முடைய நற்செயல்களாலும் தீச்செயல்களாலும் எழுந்த ஊழிப் புழுதிகளும் திரண்ட அழுக்குகளும் அதைப் போர்த்துவிட்டன போலும்! பற்பல தவறான நூல்கள்—பொய் புதைந்த நூல்கள்—பல நூற்றாண்டுகளாகப் படர்ந்த அஞ்ஞானமாம் குப்பை கூளங்களைக் கொண்டு அதன் இயல்பை மறைத்து விட்டன. அந்தப் புழுதிகளையும் மாசுகளையும் அகற்றுவது போதும். அக்கணமே ஆன்மா சுடர் விட்டெழும். ''உள்ளத் தூய்மை உள்ளவர்களே பாக்கியம் புரிந்தோர்கள்; அவர்கள் கடவுளைக் காண்பது திண்ணம். ஆண்டவர் அருள்நகர் உங்களிடத்திலேயே திகழ்கின்றது. அந்த அருள்நகரைக் காண எங்கே தேடித் திரிகின்றீர்கள்?'' என்று அவர் வினவுகிறார். உங்களிடத்திலேயே அது மிளிர்கின்றதே! ஆன்மாவின் மீது மண்டிக்கிடக்கும் அந்த மாசைத் துடைத்தகற்றுங்கள். அதோ அது ஒளி விடுவதை ஓர்வீர்கள். அது ஏற்கெனவே உங்கள் உடைமையாயிற்றே! உங்கட்குச் சொந்த மில்லாத ஒன்றை எப்படி நீங்கள் பெற இயலும்? உங்கள் உரிமைப்படி உங்களையே அது சார்ந்ததன்றோ? அழியாத் தந்தையாரின் மைந்தர்கள்

நீங்கள் ; அமர வாழ்வுப் பரம்பரைச் செல்வத்தைப் பெறப் பிறந்தீர்கள்.

இதுதான் அந்தத் தேவதூதர் வழங்கிய ஞான நன்மொழியாய்த் திகழ்கின்றது. மற்றென்று, எல்லாச்சமயங்களுக்கும் அடிப்படையான துறவேயாகும். உங்கள் ஆன்மாவை எப்படித் தூய்மையாக வைத்துக்கொள்ள இயலும்? துறவாலேதான் அது இயலும். " நல்ல பெரியோரே, அமர வாழ்வைப் பெற நான் என்ன புரிய வேண்டும்?" என்று செல்வம் படைத்த ஓர் இளைஞன் இயேசுநாதரை வினவினன். "உன்னிடத்தில் இருப்பது ஒரு குறைதான். நீ வீட்டிற்குத் திரும்புவாயாக; உன்னுடைய உடைமை அனைத்தும் விற்று ஏழைகளுக்கு அளிப்பாயாக. உனக்கும் விண்ணில் (நீங்காச்) செல்வங்கள் கிடைக்கும். பிறகு நீ என்னிடம் வருவாயாக ; சிலுவையைத் தாங்கி என்னைப் பின் பற்றுவாயாக," என்றார் இயேசுநாதர்.

இப்படி மொழியக் கேட்ட அவன் துயருற்றான் ; மனம் நொந்து அகன்றுவிட்டான். ஏனெனில், அவனுக்கு நிரம்ப வீடு வாயில்களுண்டு. அவன் இருந்த நிலையிலேதான் நாமும் பெரும் பாலும் ஏறத்தாழ இருக்கின்றோம். அந்தக் குரல்—எல்லாவற்றையும் துறப்பாய் என்ற குரல்—அல்லும் பகலும் ஒலித்துக்கொண்டுதானிருக்கிறது. நம்முடைய இன்பங்களுக்கு நடுவே, நம்முடைய பேருவகைகளுக்கு இடையே, உலகப் பொருள்களின் சூழலிலே இவற்றைத் தவிர எல்லாவற்றையும் மறந்ததாக நாம் நினைக்கின்றோம். இவற்றின் பூசலிடையேயும் ஓர் அமைதிக் குணம் அரும்புகின்றது. அப்பொழுது, "எல்லாவற்றையும் துறந்து என்னை நாடுவாய்," என்னும் குரல் நம் செவிகளில் ஒலிக்கக் கேட்போம்.

"இந்த வாழ்வைக் காக்க முயல்வோர் அதை இழக்கத்தான் இழப்பார்கள் ; என்பொருட்டு இவ்வாழ்வைத் துறப்போர் இழந்த பொருளைப் பெறுவார்கள்," என்றதற்கேற்ப ஆண்டவர் பொருட்டு இந்த வாழ்வை இழப்பவர்கள் அமர வாழ்வைக் காண்பார்கள். எல்லாப் பலவீனங்களுக்கிடையேயும் ஓர் ஒய்வுக் குணம் எழுகின்றது. அப்பொழுது, "உன் உடைமைகள் அனைத்தையும் துறந்து ஏழை மக்கட்கு ஈந்து என்னைப் பின்பற்றுவாய்," என்னும் குரல் எழுகின்றது. இந்தத் துறவற இலட்சியத்தைத் தான் அவர் ஓதுகின்றார். இந்தத் துறவு நெறியைத்தான்—இந்தக் குறிக்கோளையேதான்—உலகத்திலுள்ள தீர்க்கதரிசிகளும் வழங்கு

கின்றார்கள். 'துறத்தல்' என்பது என்ன? அறநெறியில் ஒரே இலட்சியந்தான் இலங்குகின்றது. அது யாதெனில், தன்னலமின்மையே. தன்னலமற்று இருப்பீர்களாக. முற்றிலும் தன்னலமற்றிருக்கும் இயல்புதான் நம் இலட்சியமாகும். வலக்கன்னத்தில் அறைந்தால், அவன் இடக்கன்னத்தையும் காட்டுகின்றான். ஒருவன் தன் சட்டையைப்பற்றி இழுத்துக்கொண்டு அப்பால் அகன்றால், அவன் தன் உடையையும் அவனுக்கு நல்குகின்றான்.

இலட்சியத்தைக் கீழே இழுத்துத் தள்ளாமல், நம்மால் இயலும் வரையில் சிறந்த முறையில் நாம் கருமம் புரிய வேண்டும். அந்த இலட்சியம் இங்கே இலங்கக்காண்பீர்கள். எந்த மனிதனிடத்தில் அகந்தை வேரொடு மாய்க்கப்பட்டிருக்கிறதோ, எவனிடத்தில் சொத்துச் சுதந்தரங்கள் அகன்றிருக்கின்றனவோ, 'நான், எனது' என்று வழங்கப்படுவதற்கு எவனிடத்தில் ஒன்றுமில்லையோ, எவனிடத்தில் துறவு முழுதும் மிளிர்கின்றதோ, எவனிடத்தில் தன்னழிவு திகழ்கின்றதோ, அவனுக்கே கடவுள் காட்சி அளிக்கின்றார்; ஏனெனில், அகந்தை அவனிடத்தில் மறைந்துபோய்விட்டது; நசுக்கப்பட்டுவிட்டது; முற்றிலும் அழிந்தே போய்விட்டது. இத்தகையோனே இலட்சிய புருடனாவான். அந்த நிலையை இப்பொழுது அடைய முடியாது போயினும், அந்த இலட்சியத்தைப் போற்றி வணங்குவோம். தட்டுத்தடுமாறியாகிலும் பையப்பைய அந்த இலட்சியத்தை எய்துதற்பொருட்டு முயல்வோமாக. மறு நாளே அதை அடையக் கூடும்; அல்லது ஓராயிரம் ஆண்டு கழித்தாயினும் கூடும்; எனினும், அதை நண்ணியே தீர வேண்டும்; அது முடிவு மட்டுமன்றிச் சாதனமாயுந் திகழ்கின்றது. சுயநலமற்று, முற்றிலும் அகந்தையற்று இருப்பதே முத்தியாகும். சுயநலமற்றவனிடத்தில் மனித இயல்பு மாய்ந்துவிடுகின்றது; தெய்வ நிலைதான் எஞ்சி நிற்கின்றது.

இன்னுமொரு குறிப்பை வெளியிட நான் விரும்புகின்றேன். மனித இனத்தின் போதகர் அனைவரும் சுயநலமற்றவர். "நீங்கள் வழங்கும் ஞான நன்மொழி மிகவும் கவின் பெற்றுத் திகழ்கின்றது; அது ஒன்றுதான் பூரணத்தை அடைவதற்குப் பாதையாகும் என்று நம்புகிறேன். நான் அந்த நெறியைப் பின்பற்ற ஆயத்தமாயிருக்கிறேன். ஆனால், நீங்கள் ஒருவரே ஆண்டவர் பெற்ற மைந்தர் என்று கருதி உங்களைவழுத்தும் அக்கறை எனக்கில்லை," என்று நாசரத்து இயேசுநாதர் நல்கிய நல்லுரை வழங்

கிக்கொண்டிருக்கும் பொழுது ஒருவன் மொழிவதாக வைத்துக் கொள்ளுவோம்: அப்பொழுது நாசரத்து நல்கிய இயேசு நாதரின் விடை யாதாயிருக்கும்? "மிகவும் நல்லது! தம்பி, இலட்சியத் தைப் பின்பற்றி உனது பாதையில் முன்னேறுவாயாக. என்னுடைய போதனையைப் போற்றினுலென்ன, போற்ருது போனு லென்ன? அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. நான் ஒரு கடைக்காரனல்லேன்; சமய வாணிகனுமல்லேன்; நான் உண் மையைத்தான் வழங்குகின்றேன். உண்மை எவருக்குமுரிய சொத் தன்று; எவரும் தமக்கென்று உண்மைக்கு உரிமை பாராட்ட இயலாது. உண்மை கடவுளேயாகும். முன்னேறுவாயாக," என்பதே அவ்விடையாய் இருக்கும்.

இப்பொழுது அவருடைய அடியார்கள் என்ன சொல்லுகின் ருர்கள்? "உபதேசங்களைச் செயல் முறைக்குக் கொண்டுவந்தா லென்ன, வாராது போனுலென்ன? அவரைப் போற்றுங்கள். அவரைப் போற்றினுல், நீங்கள் (நரகவாயிலினின்று) காப்பாற்றப் படுவீர்கள்! அன்றேல், உங்கட்கு விடுதலை இல்லை," என்று அவர்கள் மொழிகின்ருர்கள். இவ்வுண்மை—அவர்களுடைய குரு நாதரின் நல்லுரை—முழுதும் இழிவடைந்துவிட்டது. (உபதே சத்தை மறந்து) அவருடைய தனித்தகைமைக்காக எல்லாப் போராட்டமும் நிகழ்கின்றன. இத்தகைய வேறுபாட்டைச் சுமத்துவதால், எந்தச் சான்ருேரைப் போற்றிக் கௌரவிக்க வேண்டுமென்று கருதினுர்களோ, அவருக்கே வெட்கக்கேட்டை விளைத்துவிடுவார்கள். நாணத்தால் இத்தகைய கருத்திலிருந்து வெட்கிக் குன்றிப்போய் அவரே விலகியிருப்பார் என்பதை அவர்கள் அறியவில்லை. உலகத்தில் அவரை ஒருவன் நினைவில் இருத்தினுல் என்ன, இருத்தாமற்போனுலென்ன? அதைப்பற்றி அவர் கவலைப்படுவாரா? ஞான நன்மொழியை வழங்கவேண்டி யிருந்தது; அதை அவர் வழங்கினுர். அவர் இருபதினுயிரம் வாழ்வுகள் வாய்க்கப் பெற்றிருந்தாலும், உலகில் மிகவும் ஏழை மைப்பட்டவர்பொருட்டு அத்தனையும் இழந்திருப்பார் என்பது திண்ணம். இலட்சக்கணக்கான வெறுக்கப்பட்ட சமாரித்தர் களின் பொருட்டு—(பிறருக்கு நல்லுதவி புரிதலையே விரதமாகக் கொண்ட சமாரித்தர்களின் பொருட்டு) தாம் கோடிக்கணக்கான கொடுவதைகளுக்கு இலக்காஞலும் தம்முடைய உயிர்த்தியாகம் அவருக்கு முத்தியை அளிக்கும் ஒரே வழியாயிருப்பின், அவர் களுள் ஒவ்வொருவரின் பொருட்டும் அவர் தம் உயிரை இழந் திருப்பார். இந்த அருஞ்செயலை எவரும் அறிய இயலாது என்ற

விருப்பத்துடன் இவ்வனைத்தையும் புரிவார். ஆண்டவர் ஆற்றி வரும் செயல்போல யாவரும் உணராதபடி அமைதியாய், மௌன மாய், அவரது கருமம் அமையும். அவருடைய அடியார்கள் என்ன சொல்லுகிறார்கள்? "நீங்கள் பூரணமான சுயநலமற்ற மனிதர்களாய்த் திகழலாம். ஆனால், எங்களுடைய குருநாத ருக்கு, எங்களுடைய ஞானியாருக்கு நல்கவேண்டிய பெருமையை நல்காதபோது, அனைத்தும் பயனில்லாதனவாகும்," என்று பகர் கின்றார்கள். "ஏன்? இந்த மூட நம்பிக்கைக்கு, இந்த அஞ்ஞா னத்திற்கு மூலமென்ன?" என்று ஒருவர் வினவலாம். "ஆண்டவரால் ஒரே முறைதான் தம்மைப் புலப்படுத்திக் கொள்ள இயலும்," என்று அவர் அடியார்கள் நினைக்கின்றார்கள். இக்கருத்திலேதான் முழுத்தவறும் தங்கியிருக்கிறது. மனிதராய்த் திகழ்கிற உங்களிடத்திலேயே அவர் காட்சி அளிக்கின்றார்; இயற்கை முழுவதும் இதைத்தான் நாம் காண்கின்றோம். ஒரு நிகழ்ச்சி ஒரு முறை ஏற்படுமாயின், அது முன்பும் நிகழ்ந் திருக்கவேண்டும்; அது எதிர்காலத்திலும் நிகழ்ந்தே தீரும். சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படாதது ஒன்றுமே இயற்கையில் இல்லை.

இந்தியரும் ஆண்டவரின் அவதாரங்களைப்பற்றி இதே கருத் தைத்தான் கொள்ளுகின்றனர். மனங்கவரும் அவதார புருடர் களுள், கண்ணபிரானும் ஒருவராவர். அவர் வழங்கிய ஞான நன்மொழியான பகவத்கீதையை நீங்கள் படித்திருப்பீர்கள். "நான் பிறப்பிலி; மாறுதலில்லாத இயல்புள்ளவன்; எல்லா மன் னுயிர்க்கும் நானே தலைவன். எனினும், என் பிரகிருதியை அடக் கிக்கொண்டு என்னுடைய மாயையினால் நான் உருவெடுக்கின் றேன். எவ்வெப்பொழுதெல்லாம் அறம் தேய்ந்து, மறம் வளர் கின்றதோ, அவ்வப்பொழுதெல்லாம், நான் அவதாரஞ் செய் கின்றேன். ஒவ்வொரு யுகத்திலும் நல்லோரைக் காத்தற் பொருட்டும், தீயோரை அழித்தற்பொருட்டும், அறத்தை நிலை நாட்டுதற்பொருட்டும், நான் உருவெடுக்கின்றேன்,"* என்று அம்மாயவர் அருளிச்செய்கின்றார். எப்பொழுதெல்லாம் இவ் வையகம் கீழ்நிலையை அடைகின்றதோ, அப்பொழுதெல்லாம் அவர் இதைத் தூக்கி முன்னேறும்படி செய்கின்றார். காலத் திற்குக் காலம், இடத்திற்கு இடம்—இவற்றிற்கேற்ப அவர் வரு கிறார். இன்னொரு சுலோகத்தில் இந்தச் சுருதியிலேயே அவர்

* கீதை, IV : 6, 7, 8

இசைக்கின்றார். "எங்கெங்கே மாபேராற்றல் வாய்ந்தவரும் தூய்மையுள்ளவருமான ஒரு மகாத்துமா மனித இனத்தை உயர்த்துவதற்காக அரும்பாடு படுகின்றாரோ, அவர் என்னுடைய சிறப்பிலிருந்து உதயமானார் என்பதையும், நான் அவர் மூலம் அங்கங்கே இயங்குகின்றேன் என்பதையும் உணர்வாயாக," என்கின்றார். இக்காரணம் பற்றியே நாசரத்து நல்கிய இயேசு நாதரிடம் கடவுளை உணர்கிறதோடு நில்லாமல், அவருக்குமுன் தோன்றிய சான்றோர்களிடத்திலும், அவருக்குப் பின் வந்த உத்தமர்களிடத்திலும், இனி வருங்காலத்தில் உதயமாகப் போகும் எல்லாப் பெரியார்களிடத்திலும் நாம் அவரைக் கண்டு கொள்ளுவோமாக. நம்முடைய தொழுதலுக்கு எல்லையுமில்லை, தளையுமில்லை. அகண்டமாய்த் திகழும் அந்தப் பரம்பொருளின் தோற்றங்களே இவர் அனைவரும். அனைவரும் தூய்மை உள்ள வர்; சுயநலமற்றவர்; அரும்பாடுபட்டவர்; ஏழை மக்களான நமக்காகத் தம் உயிரைத் துறந்த உத்தமர். அவர்களுள் ஒவ் வொருவரும் நாம் இழைத்த தீச்செயலின் பாவத்தை அகற்றுதற் பொருட்டுத் தாம் அந்தச் சுமையை ஏற்று, இன்னல்களை அடைந் தனர். நமக்கு மட்டுமா? நமக்குப் பின்வரும் மக்களுக்காகவும் அவர்கள் துயரச் சுமைகளைத் தாங்கினார்கள்.

ஒரு முறையில் பார்ப்போமானால், நீங்களனைவரும் தீர்க்க தரிசிகளே. உங்களுள் ஒவ்வொருவரும் ஞானியே. நீங்கள் உலகச் சுமையை உங்கள் தோள்களின்மீதே சுமக்கின்றீர்கள். அவரவர் தத்தம் சிறிய சுமையைப் பொறுமையாய்த் தாங்காத ஓர் ஆணையோ ஒரு பெண்ணையோ நீங்கள் பார்த்ததுண்டா? அந்தச் சான்றோர்கள் மாபெரு வீரர்கள். பரந்த பாரையே அவர்கள் தங்கள் புயங்களில் தாங்கி நின்றார்கள். விண்ணை அளாவித் திகழும் அவர்கள் முன்னிலையில் நாம் அனைவரும் வாமனர்களே; இதில் யாதோர் ஐயமுமில்லை; ஆனால், அவர்கள் புரிகின்ற செயலையே நாம் ஆற்றுகின்றோம். நம்முடைய சிறிய வட்டங்களிலே, நம்முடைய சிறிய இல்லங்களிலே, நம் சிறிய சிறிய புனிதமாக்கும் தியாகமாம் சுமையை, சிலுவைகளைத் தாங்குகின்றோம். எவ்வளவு தீயவனாயினும், எவ்வளவு பயனற்ற வனாயினும், அவனும் இத்தகைய சிலுவையைத் தாங்காமலிருத்தல் இயலாது. எத்தனை பிழைகள் புரிந்தாலென்ன, எத்தனை தீய எண்ணங்களைக் கருத்தில் கொண்டால் என்ன, எத்தனை கொடுஞ்செயல்களைச் செய்தாலென்ன, நம்மிடையே ஒரு தெய்வ ஒளி திகழும் ஒரு சிறிய இடமுண்டு. ஒரு தங்க இழை—தெய்வத்

தோடு நம்மை எப்பொழுதும் பிணைக்கும் இழை—எங்கேயோ இன்னும் இலங்கிக்கொண்டுதான் இருக்கிறது. அந்தத் தெய்வப் பிணைப்பு அறுந்த அக்கணமே எல்லாம் முற்றிலும் அழிவுறும் என்பது திண்ணம் என்பதை அறியுங்கள். நம்மால் எவரும் அழிய முடியாத காரணத்தால், எவ்வளவு தாழ்ந்த இழிவான நிலையி லிருந்தாலும் இதயத்தின் இதயத்திற்குள் எங்கேயோ ஒரு சிறிய ஒளி வட்டம்—நம்மைத் தெய்வத்தோடு சேர்த்து வைக்கும் ஒளி வட்டம்—இருக்கிறது என்பதை உணரக்கூடும்.

எந்த மனித இனத்தைச் சார்ந்தவராயிருந்தாலும் சரி; எந்த நாட்டைச் சார்ந்தவராயிருந்தாலும் சரி ; எந்தக் கொள்கை யைக் கொண்டவராயிருந்தாலும் சரி ; இவர்களுடைய வரலாறு களையும் ஞான நன்மொழிகளையும் பெற்ற காரணத்தால், பண் டைய தீர்க்கதரிசிகளைப் போற்றி வணங்குவோமாக. தெய்வத் தன்மை வாய்ந்த ஞானிகளே, ஞானப் பெண்டிர்களே, போற்றி! போற்றி! எந்தக் குலத்தில் பிறந்தால் என்ன? எந்த வருணத் தைச் சார்ந்தால் என்ன? எந்த இனத்தில் தோன்றினுல் என்ன? மனித இனம் முன்னேற முயலும் சான்ருேர்களே போற்றி! போற்றி! நம் பின் வருபவர்கட்குத் தன்னலங்கருதாது நற்செய லாற்றும் வருங்காலத்து நடமாடும் தெய்வங்களே, போற்றி! போற்றி! போற்றி!

சுவாமி விவேகானந்தர்

# மகமது நபி

[1900-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள், 25-ஆம் நாள் பிரான் ஸிஸ்கோ வட்டாரத்தில் ஆற்றப்பட்ட சொற்பொழிவு.]

புத்த பிரானர், இயேசுநாதர், மகமது நபி இவர்கள் அருளிய அறிவுரைகளை ஒருமைப்படுத்துகின்ற ஞான நன்மொழி யாய்க் கண்ணபிரானரது உபதேசம் காட்சி அளிக்கின்றது. இம் மூவருள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை எழுப்பினர்; அக் கருத்துச் செல்லும் இறுதி வரையில் அதைத் தொடர்ந்தனர். மற்றைய தீர்க்கதரிசிகளுக்கு முன்பே கண்ணபிரானர் தோன்றித் தம் உபதேசத்தைப் புரிந்துவிட்டார் [ஆனல், இம்முறையில் நாம் மொழியலாம்.] கண்ணபிரானருடைய அறிவுரை மிகப் பண்டை யதே ஆயினும், அவருக்கு முன்பு மிளிர்ந்த கருத்துகளையே அவர் ஒருமைப்படுத்தினர் என்று கூற இடமுண்டு. கண்ணபிரானர் வழங்கிய உபதேசமோ, முன்னேறுகிற புத்த மதமாகிய பேரலை களில் ஒரு சமயம் முழுகி மறைந்துபோய்விட்டது. ஆனல், இந்த அறிவுரை இப்பொழுது இந்தியாவுக்கே ஒரு தனிச் சிறப் புற்றதாய்த் திகழ்கின்றது. நீங்கள் விழைவீர்களாகில், மகமதை என் சொற்பொழிவுக்குப் பொருளாக்கி இம்மாலையில் அந்த அரே பிய நாட்டு உயர்ந்த தீர்க்கதரிசியாரின் தனிப்பட்ட அருஞ்செய லைப்பற்றிப் பேசுவேன்.

மகமது இளைஞராயிருந்தபோது............சமயத்தைப்பற்றி மிகுதியான கவலை கொண்டதாகத் தெரியவில்லை; பொருள் திரட்டுவதில் விருப்பங்கொண்டதாகத்தான் காணப்படுகின்றது. பேரழகு வாய்ந்த வாலிபராகவே எல்லோரும் அவரைக் கருதினர். செல்வமிக்க ஒரு கைம்பெண் இருந்தாள். அவள் அந்த வாலிபர் மீது காதல் கொண்டு அவரை மணந்தாள். மகமது உலகத்தின் பெரும்பகுதிக்கு மன்னர்க்கு மன்னராய்த் திகழ்ந்த பொழுது, உரோம பாரசீக சாம்ராஜ்யங்கள் அவர் பொன்னடிக்கீழ்க்கிடந் தன. அப்பொழுது அவர்க்கு மனைவியர் பலர் இருந்தனர். எந்த மனைவியைத் தாம் மிகவும் நேசிக்கிருரென ஒருநாள் அவரைக் கேட்டபொழுது அவர் தம் முதல் மனைவியையே சுட்டிக்காட்டி ஞர். ஏனெனில், முதன் முதலாக அவளே அவரிடத்தில் நம் பிக்கை வைத்தாள். பெண்களுக்குத்தான் நம்பிக்கை உண்டு......

நீங்கள் சுதந்தரத்தை அடையலாம்; எல்லாவற்றையும் பெறலாம்; ஆனால், பெண்களின் நம்பிக்கையாம் இயல்பைமட்டும் இழந்து விடாதீர்கள்......பாவம்! வெற்றுருவ வழிபாடு, போலிப் பிரார்த்தனை, மூடநம்பிக்கைகள், நரபலிகள்—இவற்றைக் கண்ணுற்ற மகமதுவின் உள்ளம் நோயுற்று நைந்துவிட்டது. யூதர்கள் கிறித்தவர்களால் இழிவான நிலைக்கு வந்துவிட்டார்கள். ஆனால், தம்முடைய நாட்டு மக்களைக்காட்டிலும் இன்னும் கீழ்நிலைக்குக் கிறித்தவர்கள் இறங்கிவிட்டார்கள்.

நாம் எப்பொழுதுமே விரைகின்றோம். ஆனால், ஏதாவது ஒரு பெருஞ்செயல் ஆற்றப்படவேண்டுமாயின், அதற்குரிய சிறப்பான ஏற்பாடுகள் வேண்டும்......அல்லும் பகலும் ஆண்டவரை இறைஞ்சின பிறகுதான் மகமதுபிரானுக்குத் தெய்வக் கனவுகளும் காட்சிகளும் தோன்றத் தொடங்கின. ஒரு கனவில் காபிரியேல் அவர் முன் தோன்றி, அவரே உண்மையைத் தாங்கிச் செல்லும் தேவதூதர் என்று இயம்பினார். இயேசுநாதர், மோசஸ், மற்றுமுள்ள தீர்க்கதரிசிகள் ஆகிய இவர்களுடைய ஞான நற்செய்திகள் அனைத்தும் மறைந்துபோய்விடும். ஆதலால், மகமதுவே உண்மையை உலகத்தாருக்கு வெளியிட வேண்டுமென்று காபிரியேல் அவருக்குக் கட்டளையிட்டார். இயேசுநாதர் பெயரால் கிறித்தவர்கள் அரசியல் கருத்துகளைப் பிரசாரஞ் செய்கின்றார்கள். பாரசீகர்களோ, துவைதக் கொள்கையைப் பரப்புகின்றார்கள்.

''ஒருவரே தேவர்; எல்லாவற்றிற்கும் தலைவர் அவர் ஒருவரே. ஒப்புயர்வு அற்றவர் அவரே. கடவுள் என்றால், அவரே கடவுள். அதில் ஒரு விளங்காத தத்துவமோ, சிக்கலான ஒழுக்க இயல்போ இல்லை. உயர்வற உயர்ந்தவர் அவரே. மகமது ஒருவரே தேவதூதராவார்.''

மகமது தாம் கண்ட உண்மையை மெக்காவின் தெருக்களில் பிரசாரஞ்செய்யத் தொடங்கினார்—மெக்கா மக்கள் அவரைத் துன்புறுத்தத் தொடங்கினார்கள். எனவே, அவர் மதீனா நகருக்கு ஓட்டம்பிடிக்க நேர்ந்துவிட்டது. அவர் போர் புரியலானார். அந்த இனத்தார் ஒன்றாய்க் குழுமிவிட்டனர். ஆண்டவர் பெயரால் மகமதுவின் சமயமாம் பெருவெள்ளம் வையக முழுதும் பரவிற்று. வெற்றியுறும் மாபெருஞ்சத்தியை என்னென்று சாற்றுவது?

மக்களே, உங்களிடத்தில் மாற்ற முடியாத கருத்துகள் வேரூன்றிவிட்டன. மூடநம்பிக்கைகள் உங்களிடத்தே மண்டிக் கிடக்கின்றன. விருப்புக்கும் வெறுப்புக்கும் நீங்கள் இரையாகி

விட்டீர்கள். இத்தகைய தூதர்கள் கடவுளிடமிருந்துதான் கீழே இறங்கியிருக்க வேண்டும். அன்றேல், இத்தகைய பெருமை அவர்களிடத்தில் இருந்திருக்க இயலுமா? நீங்கள் குற்றங்களையும் குறைபாடுகளையுமே ஆராய்கின்றீர்கள். ஒவ்வொருவருக்கும் குறைபாடுகள் உண்டு. யாருக்குத்தான் அவை இல்லை? யூதர்களிடம் பல குறைகளை நான் சுட்டிக் காட்டக்கூடும்.... ஈக்கள் அழுகிச் சீழ்வடியும் புண்ணைத்தான் நாடுகின்றன. தேனீக்களோ, மலரிலுள்ள தேனையே தேடுகின்றன. ஈக்களின் நெறியைப் பின்பற்றுதீர்கள்; வண்டின் பாதையையே நீங்கள் தொடர்வீர்களாக.

தீர்கதரிசியான பிறகுங்கூட மகமது பெண்டிர் பலரை மணந்தனர். பெரியோருள் ஒவ்வொருவரும் இருநூறு மனைவிமாரையும் ஏற்கலாம். உங்களைப் போல வானளாவி நிற்கும் பெரியவர்களுக்கு ஒரு பெண்ணைக்கூட மணம் புரிய அனுமதி நல்க மாட்டேன். சான்றோர்களுடைய இயல்புகளோ, மிகுந்த மர்மங்கள் வாய்ந்தவை; அவர்களுடைய முறைகளோ, தேடரிய அறிவு வட்டத்திற்கப்பாலுள்ளவை. அவர்களை நாம் சீர்தூக்கிப் பார்க்கலாகாது. மகமதுவின் பெருமையை இயேசுநாதரால் ஒருவேளை அளக்க இயலும். நீங்களும் நானும் அப்படிச் செய்ய முடியுமோ? சிறிய குழவிகளான நாம் அத்தகைய சான்றோர்களின் பெருமையைப் பற்றி எப்படித் தெரிந்துகொள்ள இயலும்?

மகமதிய சமயம் சாதாரண மக்களுக்கு ஓர் உபதேசமாய் உதித்தது. சமத்துவமே அதன் முதற்கொள்கையாகும். ஒரே சமயந்தான் உண்டு. அதுவே அன்பு நெறி. இனத்திற்கோ வருணத்திற்கோ, இது போன்ற பிறிதிற்கோ அங்கு இடமில்லை. அதைத்தழுவுவீர்களாக. செயல் முறையில் கொண்டுவரக்கூடிய இயல்பு அதன்கண் இருந்த காரணத்தால், அது வெற்றி அடைந்தது......அந்த உயர்ந்த உபதேசம் முழுவதும் எளிதில் அறியக்கூடிய நிலையில் திகழ்ந்திருந்தது. விண்ணையும் மண்ணையும் படைத்த அந்த ஒரே கடவுளை நம்புங்கள். வெறும் பாழிலிருந்தே எல்லாம் அவரால் உண்டுபண்ணப்பட்டன. வினக்களை எழுப்பாதீர்கள்......

அவருடைய மசூதிகள் 'புராட்டஸ்டன்டு' கிறித்தவர் தொழும் இடங்கள் போல இலங்குகின்றன...... அங்கே இசை கேளாது; ஓவியங்கள் காட்சி அளியா; படங்கள் கண்களைக் கவரா. ஒரு மூலையில் ஒரு பீடமிருக்கும். அந்தப் பீடத்தின் மீது 'குர்-ஆன்' வைக்கப்பட்டிருக்கும். தொழுவோர் அனை

வரும் ஒரே வரிசையில் நிற்பர். அங்கே பாதிரி இல்லை; 'பார்சன்' இல்லை; 'பிஷப்பு' இல்லை. ஓதுகின்றவன், கூடியிருப்பவர்கள் மருங்கில் நிற்க வேண்டும். குர்-ஆனில் சில பகுதிகளில் மிக்க கவின்பெற்று மிளிர்கின்றன......

இந்தப் பண்டைய சான்றோர் அனைவரும் கடவுளால் அனுப்பப்பட்ட தேவதூதரே. நான் கீழே தரையில் விழுந்து இவர்களை வணங்குகின்றேன்; இவர்களுடைய திருவடிப் பொடியைப் போற்றிப் பூசிக்கொள்ளுவேன். ஆனால், இவர்கள் மறைந்து விட்டார்கள்......நாமோ, உயிரோடு வாழ்கின்றோம். நாம் முன்னேற வேண்டும். சமயம் என்பது இயேசுநாதரின் மடமுமன்று; முகமது நிறுவிய மசூதியுமன்று. ஒன்றைப் பார்த்து அப்படியே குரங்கினம் போலப் பாவனை செய்வது மிகச் செவ்வனே அமைந்தாலும், அது உண்மையாக இருக்க இயலாது. இயேசுநாதரைப் போலப் பாவனை செய்யாதீர்கள்; இயேசுநாதராகவே திகழ்ந்துவிடுங்கள். இயேசுநாதரைப் போலவோ, புத்தபிரானரைப் போலவோ, மற்றவர்களைப் போலவோ நீங்களும் மகிமை வாய்ந்தவர்கள் என்பது உண்மையே. அந் நிலையை அடையாமலிருந்தால், நாம் ஆர்வத்துடன் முயன்று அவர்களாக மாறுதல் வேண்டும். இயேசுநாதரைப் போலவே நான் இலங்க வேண்டுவதில்லை; நான் ஒரு யூதனாய்ப் பிறக்கத் தேவையுமில்லை .....

உங்களுடைய இயல்பிற்கேற்றவாறு அதை வஞ்சிக்காது உண்மையாய் நடப்பதே மிகச் சிறந்த சமயமாகும். உங்களிடத்தில் உங்கட்கு நம்பிக்கை வேரூன்றி நிற்கட்டும். நீங்கள் இல்லாமற்போனால், கடவுள் இருப்பாரா? அல்லது எதுதான் உலகத்தில் இருக்கும்? எங்கிருந்தாலும் இந்த மனந்தானே அந்த அகண்டத்தை அறிகின்றது? நான் கடவுளைக் காண்கின்றேன்; அதனால், அவர் இருக்கிறார் என்பதை உணர்கின்றேன். நான் கடவுளைப் பற்றிச் சிந்திக்க இயலாத நிலையிலே (என்னளவில்) கடவுள் இல்லை என்றுதான் கொள்ள வேண்டும். நம் மனித இனத்தின் முன்னேற்றத்தின் கம்பீரமான ஏறு நடை இதுவே யாகும்.

இந்த மகாத்துமாக்கள் பாதையில் வழி காட்டிகளாகக் காட்சி அளிக்கின்றார்கள். இவர்கள் வழி காட்டிகளே தவிர வேறல்லர். 'தம்பி, முன்னேறுவாய்,' என்று இவர்கள் மொழிகின்றார்கள். நாமோ, இவர்களை இறுகப் பிடித்துக்கொண்டுவிட்டோம்; இவர்களை விட்டகன்று போக எஞ்ஞான்றும் விழைவதில்லை. நாம்

தனியே சிந்தனையில் ஆழ விரும்புவதில்லை; நமக்காகப் பிறர் சிந்திப்பதை நாம் விரும்புகிறோம். தம்முடைய ஞானப் பணியை இறைவரின் தூதர் நிறைவேற்றுகின்றனர்; ஞானப் பாதையில் ஆர்வத்துடன் முன்னேறுங்கள்,' என்று நமக்கு நவில்கின்றனர். ஆனால், நாம் ஓர் ஆண்டிற்குப் பிறகு, வெற்று உபதேசத்தைப் பற்றிக்கொண்டு அயர்வுற்றுத் துயில்கின்றோம்.

சிரத்தையைப் பற்றியோ, நம்பிக்கையைப் பற்றியோ, கொள்கையைப் பற்றியோ பேசுவது யார்க்கும் எளிது; ஆனால், ஐம்புலப் பெருவெள்ளத்திற்கு அணை அமைத்தே நமது நற்குணமாம் கட்டடத்தை நிறுவச் செய்வது அருஞ்செயலாய்விடும். நாம் ஐம்புல அரட்டர்களுக்கு இரையாகிவிடுகின்றோம்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் வஞ்சகர்களாய்க் காட்சியளிக்கின்றோம். சமயம் ஒரு வெறுங்கொள்கை அன்று; ஒரு சட்டதிட்டமும் அன்று. அது இடையறாது செல்லும் ஒரு வளர்ச்சியேயாகும். கொள்கைகளும் விதிகளும் நம் பயிற்சிக்காக ஏற்பட்டவைகளே. அந்தப் பயிற்சியால் நாம் வலியுற்று, இறுதியில் தளைகளை அறுத்தெறிந்துவிட்டு, விடுதலை எய்துகிறோம். பயிற்சிக்காகக் கொள்கை பயன்படுமே தவிர, அதனால், வேறு பயன் உளதோ?......பயிற்சியால் ஆன்மா பூரணத்தை அடைகின்றது. 'எனக்கு நம்பிக்கை வந்துவிட்டது!' என்று நீங்கள் உணர்கிற அக்கணமே அத்தகைய பயிற்சியும் ஓய்ந்துவிடும்.

"எவ்வெப்பொழுது அறம் தேய்ந்து, மறம் வளர்கின்றதோ, அவ்வப்பொழுது நான் மனித வடிவம் எடுத்து அவதாரஞ்செய்கின்றேன். நல்லோர்களுக்கு மோட்சத்தை நல்குவதற்கும், தீயோர்களை மாய்ப்பதற்கும். ஆன்மிகத்தை வேரூன்றச் செய்வதற்கும் ஒவ்வோர் யுகத்திலும் நான் வருகின்றேன்." *

ஞானச்சுடர் தாங்கும் இத்தகைய மகிமை வாய்ந்தவர் தேவதூதர் அல்லரா? நம்முடைய ஞான குரவர்கள் இவர்களே. நம்முடைய மூத்த உடன்பிறந்தோர்களும் இவர்களே என்பதில் யாதோர் ஐயமுமில்லை. ஆனால், நம் தனி வழியே நாம் போக வேண்டுமன்றோ?

---

* கீதை, IV: 7, 8

# என் குருநாதர்

(நியூயார்க்கில் ஆற்றப்பட்ட சொற்பொழிவு)

"தருமம் எவ்வெப்பொழுது குன்றி அதருமம் மேலோங்குகின்றதோ, அவ்வப்பொழுது மனித இனத்தின் நன்மையின் பொருட்டு நான் உலகில் தோன்றுகின்றேன்," என்று பகவத் கீதையில் கண்ணபிரானுர் அருள்கின்ருர். வளர்ச்சி மிகுதியாலும், புதிய சந்தர்ப்பங்கள் கூடி இயங்குவதாலும், ஒரு நூதனமான ஒழுங்கு முறை எப்பொழுதெல்லாம் இவ்வையகத்திற்குத் தேவையோ, அப்பொழுதெல்லாம் வல்லமை வாய்ந்த பேரலை ஒன்று கிளர்ந்தெழுகின்றது. ஆன்மிகம், உலகியல் ஆகிய இவ்விரு துறைகளிலும் மனிதன் செயலாற்றுகின்ற காரணத்தால், ஒழுங்கு முறையாம் அலைகள் இவ்விரு துறைகளிலும் ஓங்கி வீசக் காண்கின்ருேம். ஒருபால் உலகியல் துறையில் ஓர் ஒழுங்குமுறையைப் பார்க்கின்ருேம். இந்த ஒழுங்குமுறைக்கு இக்காலத்தில் முக்கிய ஆதாரமாயிருப்பது ஐரோப்பாக் கண்டமாகும்; ஒருபால் ஆன்மிகத் துறையிலும் ஓர் ஒழுங்குமுறையை நாம் நோக்குகின்ருேம். உலக சரித முழுதுமே இதற்கு அடிப்படையாயிருந்து வருவது ஆசியாவாகும். ஆன்மிகத் துறையில் மற்ருேர் ஒழுங்கு முறையை மனிதன் இன்று வேண்டி நிற்கிருன். உலகியல் எண்ணங்கள் தம் சிறப்புறச் சிகரத்தின் மீதும் வன்மை உச்சி மீதும் வீற்றிருக்கும் இந்நாளிலே—பிரகிருதியைச் சார்ந்த வாழ்க்கை வளர்வதனுல் தன் தெய்விகத் தன்மையை இழந்து பணம் திரட்டும் கருவியாகத் தன்னை ஆக்கிக்கொள்ளும் இந்நாளிலே—ஓர் ஒழுங்கு முறை இன்றியமையாதது. தெய்விகக் குரல் ஒலிக்கத் தொடங்கிவிட்டது. சூழ்ந்துவரும் லோகாயத மேகங்களை அடித்துத் துரத்துவதற்கான ஒரு சத்தி பிறந்துவிட்டது. அது செயலாற்றவும் ஆரம்பித்துவிட்டது. இச்சக்தி குறுகிய கால அளவிலேயே மனித இனத்திற்கே அதன் தெய்வ நிலையின் நினைவைக் கொணர்ந்து விடும். இச்சத்தி தொடங்குகின்ற இடமும் ஆசியாவாகும்.

நம்முடைய உலகம் தொழிலின் பிரிவுத் திட்டத்தின் மீது அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு மனிதனே எல்லாவற்றையும் தனக்குரியனவாக்கிக்கொள்வான் என்பது வீண் பேச்சேயாகும்.

அங்ஙனமாகவும் மக்கள் எவ்வளவு சிறுபிள்ளைத்தனமாக இருக்கின்றார்கள்! குழந்தை தன் அறியாமையால் விளையாட்டுக் கருவிகளே இவ்வுலகில் தான் விரும்பக்கூடிய சிறந்த பொருளென நினைக்கின்றது. அவ்விதமே உலகப் பொருளால் மேன்மையுற்றிருக்கும் ஒரு நாட்டு மக்கள், அது ஒன்றே விரும்பி அடையத் தக்கது எனவும், அதுவே வளர்ச்சிக்குக் காரணமெனவும், அதுவே நாகரிகத்தின் பாற்படுமெனவும் நினைப்பதோடு, பிற நாட்டார் அந்த உலகச் செல்வத்தையும் ஆற்றலையும் பெற விரும்பாமலும் பெருமலும் இருப்பின், அவர்கள் உயிருடன் வாழவே தகுதியற்றவர்கள் எனவும் அவர்கள் இருப்பே பயனற்றது எனவும் நினைக்கின்றார்கள்; ஆயினும் இம்மை உலகில் வெற்று நாகரிகம் முற்றும் பயனற்றதென வேறொரு நாட்டார் கருதவும் கூடும். 'சூரிய மண்டலத்தின் கீழேயுள்ள அனைத்தையும் அடையப் பெற்றிருந்தும், ஆன்மிக விஷயத்தில் பற்றுக் கொள்ளாதிருந்தால் உண்டாகும் பயன் யாது?' என்று முன் ஒருமுறை உலகிற்கு உபதேசித்த குரல் கீழ்த்திசையினின்றும் எழும்பிற்று. இதுவே அத்திசையின் குறிக்கோள். மற்றது மேல் நாட்டாரின் நாட்டமாகும்.

இந்நோக்கம் ஒவ்வொன்றும் மிக்க பெருமை படைத்ததாகவே இருக்கின்றது. ஒவ்வொன்றும் புகழ் வாய்ந்ததே. இப்பொழுது நாம் விரும்பும் சீர்திருத்தமானது, இவ்விரண்டு நோக்கங்களையும் சமரசப்படுத்துவதாம். அது இவ்விரண்டு இலட்சியங்களையும் ஒற்றுமைப்படுத்துவதாயிருக்கும். மேல் நாட்டார்க்குப் புலன்களாற் பெறக்கூடிய உலகம் எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மையாக மிளிர்கிறது, கீழைத் தேசத்தவர்க்கு அதியான்மிக உலகு. அவசியமானதும் விரும்பத்தக்கதுமான பொருளையும் ஆன்மிக விஷயங்களிலே கீழ்த்திசை நாட்டான் காண்கிறான். வாழ்க்கையை உண்மையாகத் தெளிவுபடுத்தும் ஒவ்வொன்றையும் அவன் இதில் காண்கிறான். மேற்றிசை நாட்டானுக்கு, கீழ்த்திசை நாட்டான் கனவு காண்பவனைப் போலத் தோன்றுகிறான். ஆனால், கீழ்த்திசை நாட்டவனுக்கோ, அழியும் விளையாட்டுக் கருவிகளுடன் பொய்ம்மை வாழ்க்கையை நடத்தும் குழந்தைபோன்ற மேலை நாட்டார் வாழ்க்கை, கனவு போலத் தோன்றுகிறது. வயது முதிர்ந்த ஆடவரும் பெண்டிரும், விரைவிலோ, சிறிது தாமதித்தோ, தவறாமல் அழிந்து போகக்கூடிய சிறு சடப்பொருளை மிகப் பெரிதாகப் பாராட்டுவதை நினைக்குந்தோறும் இவன் புன்னகை கொள்கிறான். ஒவ்வொரு

வரும் மற்றவரைக் கனவு காண்பவராக நினைக்கின்றனர். எனினும், மனித இனத்தின் முன்னேற்றத்திற்கு மேனாட்டு இலட்சியம் எவ்வளவு அவசியமோ, அவ்வளவுக்குக் கீழ்த்திசை நாட்டார் இலட்சியமும் இன்றியமையாததே. அன்றியும், கீழ்த்திசை நாட்டுக் கொள்கையே மிக்க நன்மை பயக்க வல்லது என நான் கருதுகின்றேன். இயந்திரங்கள் எப்போதும் மனித இனத்தை இன்புறச் செய்ததில்லை; செய்யப்போவதுமில்லை. எவர் இதை நம்பச்செய்ய முயலுகின்றனரோ, அவர், இன்பங்கள் இயந்திரத்தையே சார்ந்திருப்பதாகச் சாதிப்பர். ஆனால், இன்பமோ, மனத்தில் இருக்கின்றது. எவர் தம் மனத்திற்குத் தலைவராய் இருக்கின்றனரோ, அவர் இன்பமுள்ளவராவர்; மற்றெவருமல்லர். இருக்கட்டும்; இவ்வியந்திர சத்தி என்பது தான் என்ன? ஓடும் மின்சார சத்தியை ஒரு கம்பியின் மூலம் செலுத்தக்கூடிய ஒரு மனிதனைப் பெரியவன் என்று ஏன் மதிக்க வேண்டும்? அவன் நுண்ணறிவுடையானென ஏன் கருதப்படல் வேண்டும்? இதைப்பார்க்கிலும் இலட்ச மடங்கு அதிகமான விசித்திரங்களை இயற்கை ஒவ்வொரு கணமும் இயற்றவில்லையா? ஆகவே, அந்த இயற்கைத் தாயை அடிபணிந்து ஏன் வணங்கக் கூடாது? நீ அகில பிரபஞ்சத்தின் மீது ஆணை செலுத்தும் ஆற்றல் படைத்திருப்பினும் உலகின் ஒவ்வோர் அணுவையும் நீ வசப்படுத்தி இருப்பினும், உனக்கு அவற்றினால் உண்டாகும் பயன் என்ன? உன்னை இன்புறச் செய்யும் சத்தி உன்னுள்ளே இருந்தாலொழிய—உன்னையே நீ வென்றாலொழிய—அவை உன்னைச் சிறிதும் இன்புறச் செய்யா. மனிதன் இயற்கையை வெல்லுவதற்கென்றே பிறந்தவன். இஃது உண்மை. ஆனால், மேலை நாட்டார், இயற்கையெனின், சட சம்பந்தமான வெளிப் பிரபஞ்சமெனவே கருதுகின்றனர். வெளிப் பிரபஞ்சம், தன் மலைகளாலும், கடல்களாலும், ஆறுகளாலும், அளவுகடந்த சத்திகளாலும், கணக்கிட முடியாத மாறுபாட்டாலும் கம்பீரத் தோற்றத்தையுடையதென்பது உண்மையே. எனினும், ஞாயிறு, மதி, விண்மீன்கள்—இவற்றைவிடப் பெரியதும் நாம் வாழும் இந்த உலகினைக்காட்டிலும் சிறந்ததும், வெளிப் பிரபஞ்சத்தை விஞ்சியதும், நம்முடைய இச்சிறு வாழ்க்கையைக் கடந்து அப்பாற் செல்லக்கூடியதுமான வேறு ஒரு கம்பீரத் தன்மை மனிதனுக்குள்ளே இருக்கின்றது. இத்துறையிலும் நாம் அறிந்து கொள்ளவேண்டிய விஷயம் பல இருக்கின்றன. மேலை நாட்டவர் வெளிப் பிரபஞ்சத்தில் திறமை பெற்றிருப்பது

போலக் கீழை நாட்டார் ஆன்மிகத் துறையில் சிறப்புற்றிருக்கின்றனர். ஆகவே, ஆன்மிக—சமய சம்பந்தமான—சீர்திருத்தம் வேண்டும் போதெல்லாம் இது கீழை நாட்டவரிடமிருந்தே தோன்றுவது பொருத்தமாகின்றது. கீழை நாட்டவர்கள் இயந்திர (தொழில்) விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமெனின் மேலை நாட்டாரது அடிக்கீழ் அமர்ந்து பாடம் கேட்டல் வேண்டும் என்பதும் உண்மையே. அதேபோல, மேலை நாட்டாரும் ஜீவான்மா பரமான்மாக்களைப் பற்றியும் அண்ட சராசரத்தின் உண்மைப் பொருளைப் பற்றியும் அறிந்துகொள்ள விரும்பினுல், பாரத மக்களின் பொன்னடிக் கீழ்த் தங்கி அறிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

ஆன்ம சத்தியாகிய இவ்வித அலையை—மதச் சீர்திருத்தமெனும் ஓர் அலையை—இந்தியாவில் எழுப்பிவிட்டிருக்கும் ஒரு பெரியாரது வாழ்க்கைச் சரித்திரத்தைப் பற்றி உங்களுக்குச் சொல்லப்போகின்றேன். இப்பெரியார் வாழ்க்கையைப் பற்றிப் பேசுவதன்முன் இந்தியாவின் இரகசியத்தைப் பற்றியும் இந்தியாவின் குறிக்கோள் யாது என்பதைப் பற்றியும் உங்களுக்கு ஒரு சிறிது அறிவிக்க முயலுகிறேன்.

அளவு கடந்த சடப்பொருளின் சேர்க்கையால் மயக்குண்டு குருடுபட்ட கண்களையுடையவர்கள், உண்பதற்கும் களிகொள்வதற்குமெனவே தங்கள் வாழ்நாள் உள்ளதென நினைப்பவர்கள், பொன்னும் பூமியுமே ஒருவன் பெறுதற்குரிய பேறெனக் கருதுபவர்கள், இந்திரிய இன்பமே அடையத் தகுந்த இன்பமெனக் கருதுபவர்கள், பணத்தையே பகவானுகப் பாவிப்பவர்கள், இவ்வுலகில் உள்ளவரையில் சுக ஜீவியாயிருந்து பின் மரணத்தோடு அனைத்தும் முடிகின்றதெனக் கொள்பவர்கள், ஆன்மிக விஷயமான உயர்நோக்கத்தை ஒரு சிறிதும் சிந்தியாத மனமுடையவர்கள் (உலகாயதர்), தங்கள் வாழ்க்கையைச் சூழ்ந்திருக்கும் பொருள்களையன்றி மேலானது வேறு ஒன்று இருப்பதாக நினையாதவர்கள் ஆகிய இத்தகையோர்கள் இந்தியாவை நோக்குவார்களாயின், ஏழைமை, அசுத்தம், குருட்டு நம்பிக்கை, அறியாமை, கடுந்தோற்றங்கள் ஆகிய இவைகளே எங்கும் நிறைந்திருப்பதாகக் காணக்கூடும். ஏனெனில், அறிவுடைமை, நாகரிகம் என்பனவெல்லாம், உடை, கல்வி, சமூகவொழுக்கம் ஆகியவைகள் என்றே இவர்கள் மனத்திற்குப் படுகின்றன. இம்மேலை நாட்டவர் புறப்பொருள் வளர்ச்சிக்கான எல்லா

முயற்சிகளேயும் பயன்படுத்திக்கொள்வது போல, கீழை நாட்டார் அதற்கு மாறுபட்ட ஆன்ம ஞான நன்னெறியில் மனத்தைச் செலுத்தியிருக்கின்றனர். உலக சரித்திரத்திலேயே வேற்று நாட்டவரை வெல்வதற்கெனத் தமது எல்லையைக் கடவாதவர் பாரத நாட்டாரே யாவர். உலகத்திலுள்ள மனிதர்களில், பிறருக்குரியவற்றைப் பெறவிரும்பாதவர் கீழை நாட்டவரே. அவர்களது நாடு செழிப்பாயிருப்பதோடு, அவர்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழும்படி உழைத்துச் செல்வம் திரட்டிய குற்றமும் உடையவராய் இருக்கிருர்கள்! இக்குற்றமே பிற நாட்டார் இந்திய நாட்டைக் கொள்ளேயடிக்கும்படி தூண்டுவதா யிற்று. தங்களே அநாகரிகரென்று பிறர் நினைத்தாலும், தங்களேக் கொள்ளேயடித்தாலும், பாரத மக்களுக்குத் திருப்தி தான். அவர்களோ, கடவுளுண்மையை உலகமெங்கணும் பரவச் செய்வதும், மனித சுபாவ இரகசியங்களே அனைவர் முன்னும் எடுத்துச்சொல்வதும், மனிதனே மூடியிருக்கும் திரையைக் களைந்தெறிவதுமாகிய செயலேயே மேற்கொண்டார் கள். ஏனெனில், உண்மை இலட்சியம் அவர்களுக்குத் தெரியும். மேலும் இச்சடத்திற்குப் பின், பாவத்தால் பாதிக்கப்படாததும், குற்றத்தால் குறைபடாததும், காமத்தால் கெடாததுமான உண்மைத் தெய்விக சத்தியுள்ள மனிதன் மிளிர்கின்ருனென்பதை அவர்களறிந்துள்ளார்கள். இத்தெய்விகத் தன்மை இன்னும் எத்தகையதெனின், நெருப்பால் எரிக்க முடியாதது; நீரிஞல் நனைக்கப்படாதது. மரணமும் இதை மாய்க்க முடியாது. மேலே நாட்டவர்களின் இந்திரியங்களுக்கு உலகப் பொருள்கள் எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மையுடையதாகும் பாரத மக்களுக்கு மனிதனுக்குப் பின்ஞல் இருக்கும் தெய்விக சத்தி. வெற்றி முழக்கத்துடன் பீரங்கியின் முன்னே குதிப்பதற்கு நீங்கள் (மேஞட்டார்) தைரியங்கொள்வது போலவும், நாட்டுப் பற்ருலே தாய் நாட்டிற்காக உங்களது உயிரையும் தியாகம் செய்யத் துணிவு கொள்வது போலவும், அவர்கள் கடவுளின் பெய ரால் எதைச் செய்வதற்கும் உறுதிகொள்கின்ருர்கள். இவ்வுலகம் கற்பஞ சத்தியிஞல் ஆனதென்றும், இங்கு நடைபெறுவன அனைத்தும் கனவு போன்று அழியும் இயல்பின என்றும் ஒருவன் கூறும்போது, அவன் நம்புவதும் நினைப்பதும் உண்மையென மெய்ப்பிப்பதற்காகத் துணிமணிகளேயும் சொத்துச் சுதந்தரங் களேயும் களைந்தெறிந்துவிடுவதும் பாரத நாட்டிலேயே நிகழக் கூடியதாம். ஜீவன் அழிவற்றவன் என்று ஒருவனுக்கு விளங்கும்

போது அவன் ஓர் ஆற்றங்கரையில் அமர்ந்து நீங்கள் ஒரு சிறு துரும்பை வீசியெறிவதைப் போலத் தன் உடலைக் களைந்தெறிய விரும்புகின்றதும் அவ்விடத்திலேதான். இத்தகைய செயல் களிலேதான் அவர்களுடைய (பாரத மக்களின்) வீரம் திகழ் கின்றது. தங்கட்குச் சாவே இல்லையென்று உணர்ந்திருப்பதால், அவர்கள் மரணத்தை உடன் பிறந்தோன் போல மிக்க அன்புடன் எதிர்பார்க்கின்றார்கள். பல நூற்றாண்டுகளாக அயல்நாட்டு நலிவாலும், படையெடுப்பாலும், கொடுங்கோல் ஆட்சியினாலும் தோல்வியுறாமல் செய்த அந்தப்பேராற்றல் அதில் தங்கியிருக் கிறது. அச்சமூகம் இன்னும் உயிர் வாழ்கின்றது. மிகக் கொடுமையான இன்னல் தோன்றிய காலத்தும் ஆன்மிகத்துறை யில் மாபெரு வீரர்களாய்த் திகழும் சான்றோர்கள் தோன்றாம லில்லை. அரசியல் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் மிகமிகப் பெரிய குரவர்களை மேலைநாடு தோற்றுவித்திருப்பது போல, ஆன்மிகத் துறையில் வியன்ஞான குரவர்களை ஆசியா பிறப்பித்திருக்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர்கள் செலுத்தும் ஐரோப்பிய அதிகார வெள்ளம் இந்தியாவில் பாயத் தொடங்கிய காலத்திலே, மேனாட்டு வெற்றிப் போர்வீரர் உடை வாள் ஏந்திய கைகளுடன் இருடிகளின் மரபில் வந்த மக்களைப் பார்த்து, 'காட்டு மிராண்டிகள்' எனவும் 'கனவு காணும் சமூகம்' எனவும், அவர்கள் மேற்கொண்டுள்ள மதம் மூட நம்பிக்கையாலாயது எனவும், மக்கள் பெருமுயற்சியாலும் தியாகத்தாலும் அடையும் கடவுள் ஆன்மா என்ற இன்னவைகள் எல்லாம் பொருளற்ற வீண் சொற்களே எனவும், பின்பற்றிவரும் துறவு நிலைமையெல்லாம் பயனற்றன எனவும் ஏளனஞ் செய்து மெய்ப்பிக்க முயன்ற பொழுதிலே, 'மிக நெடுங்காலமாக எங்கள் சமூகம் நிலைத்து நடத்திய வாழ்க்கை வீணோ? பழைய சாத்திரங் களைக் கிழித்தெறிந்தும் தத்துவங்களைத் தீயிட்டுக் கொளுத்தியும், சமய போதனை செய்யும் ஆசாரியர்களை அகல ஓட்டியும், கோயில் குளங்களை இடித்து வீழ்த்தியும், மேனாட்டவரைப் போன்று எங்கள் வாழ்க்கையையும் அமைத்துக்கொள்ள வேண்டுமோ?' என்ற இத்தகைய கேள்விகள் கலாசாலையில் பயின்றுவந்த வாலி பர்களின் உள்ளத்திலே ஊசலாடத் தொடங்கின. கத்தி முனையி னாலும், துப்பாக்கியினாலும், அதிகாரத்தாலும், செல்வத்தாலும் மதத்தைப் பரப்பிய மேனாட்டு வெற்றி வீரன், பழைய வழிகளெல் லாம் உருவ வழிபாடும் குருட்டு நம்பிக்கையுமேயன்றி வேறில்லை

யென்று சொல்லவில்லையா? மேனாட்டு நாகரிக முறையிலே தோற்றுவித்த பள்ளிக்கூடங்களில் தங்கி வாசித்து வந்த சிறுவர்களின் உள்ளத்திலே மேற்கூறியவை ஆழப் பதிந்திருந்ததனால், அவர்கள் தங்கள் தாய் நாட்டுப் பழக்க வழக்கங்களைப் பற்றிச் சந்தேகப்படத் தொடங்கியதில் வியப்பு ஏதுமில்லை. ஆனால், குருட்டு நம்பிக்கைகளைக் களைந்தெறிந்துவிட்டு உண்மையை நாடுவதற்கான வேறு முயற்சிகளைக் கைக்கொள்ளுவதற்கு மாறாக, 'மேனாட்டார் நினைப்பதும் மொழிவதும் எழுதுவதும் என்ன?' என்பதே உண்மையின் சான்றாகிவிட்டது. 'ஆசாரியர்கள் அகன்றுவிட வேண்டும்! வேதங்கள் தீயினால் வெந்து அழிய வேண்டும்! ஏனெனில், மேனாட்டார் இவ்விதம் கூறுகின்றனர்,' என அச்சிறுவர் பகருவாராயினர். இவ்விதம் தோன்றிய குழப்பத்தினிடையே பெயரளவிலே சீர்திருத்தமென்று சொல்லும் ஓரலை இந்தியாவிலே கிளம்பிற்று.

நீ உண்மையில் சீர்திருத்தக்காரனாக இருக்க விழைவாயாகில், கீழ்க்காணும் மூன்று அம்சங்களைப் பெற்றிருக்க வேண்டும். முதலாவது பரிவுதான். உன் சகோதரர்களிடம் நீ உண்மையில் பரிவு கொண்டிருக்கின்றனையா? உலகத்திலே அறியாமையும் குருட்டு நம்பிக்கையும் துன்பமும் நிறைந்திருப்பது குறித்து உண்மையில் நீ சிந்திக்கின்றனையா? மனிதர் அனைவரும் உன் சகோதரர் என்பதை உண்மையில் நீ உணர்கின்றனையா? இவ்வித எண்ணம் உன் உள்ளெல்லாம் பாய்ந்து பரவியிருக்கின்றதா? இவ்வுணர்ச்சி உன் இரத்தத்துடன் கலந்து உடல் முழுதும் ஓடுகின்றதா? இவ்வுணர்ச்சி உன் இதயத்துடனும் நாடியுடனும் சேர்ந்து துடிக்கின்றதா? உன் உடலின் ஒவ்வொரு நுண்ணிய பகுதியிலும் நரம்பிலும் இவ்வெண்ணம் ஓடிப் பரவுகின்றதா? நீ பரிவு என்ற எண்ணமே நிறையப் பெற்ற ஒருவனாய் இருக்கின்றனையா? இப்படி இருப்பாயாகில், நீ சீர்திருத்தக் காரனாவதற்கு முதற்படி ஏறியவனாவாய். அடுத்தபடியாக, நீ இவைகளுக்கேதேனும் மாமருந்து கண்டுபிடிக்கின்றனையா என்பதை எண்ணிப்பார். பண்டைய கொள்கைகள் முற்றும் குருட்டு நம்பிக்கையாய் இருந்திருக்கலாம்; எனினும் இக்குருட்டு நம்பிக்கைக் குவியல்களின் உள்ளும் புறமும் பொற்கட்டிகளும் உண்மைகளும் பொதிந்து கிடக்கின்றன. மாசில்லாமல் அப்பொன்னை மட்டும் காப்பதற்கான வழி ஏதேனும் புலனாயிற்றா? அதாவது, குருட்டு நம்பிக்கையான அழுக்குகளே இல்லாமல் உண்மைப் பொருளைக் காப்பதற்கான நெறியேதும் கண்டுபிடித்

துள்ளனையா? இவ்விதம் நீ செய்வாயாகில், இரண்டாவது படி ஏறியவனுவாய். மூன்ருவதாக, உன்னை உந்தும் கருத்து எப்படிப்பட்டது? பொன்னின் மீதுள்ள பேராசையாலும் புகழ் அதிகாரம் இவற்றின் மீதுள்ள வேட்கையாலும் நீ தூண்டப்பட வில்லை என்பதை நிச்சயமாக நம்புகின்றனையா? உலகமனைத் துமே ஒன்று சேர்ந்து உன்னை நொறுக்கித் தள்ளுவதானுலும் உன் கொள்கையில் உறுதியாக நின்று கடமையைச் செய்ய முடியும் என்று உன்னுல் உறுதிகூற முடியுமா? உன்னுடைய தேவை எதுவென்பது உனக்குத் தெரியுமா? நீ உயிரே போய் விடக்கூடிய நிலையிலிருக்கும்போதும், கடமை ஒன்றையே செய்யக்கூடியவன் என்பதை நீ நிச்சயமாக நம்புகின்றனையா? உனது உயிரைத் தாங்கியிருக்கும் வரையிலும், இதயத் துடிப்புக் குறையும்வரையிலும், நீ கொண்டதை விடாது செய்வாய் என்பதையும் உண்மையாக நம்புகின்றனையா? அப்பொழுதே நீ உண்மைச் சீர்திருத்தக்காரன் ஆவாய்; அப்பொழுதே ஆசாரியன் ஆவாய்; மனித இனத்திற்கே தலைவன் ஆவாய்; ஓர் அருட்சத்தியாய்த் திகழ்வாய். ஆனுல், மனிதனே, பொறுமை யற்றவனுகவும் குறுகிய நோக்கமுடையவனுகவுமே பெரும்பாலும் இருக்கின்ருன்! சிறிது பொறுமையுடனிருக்க அவனுக்கு அமைதி யில்லை; உற்று நோக்கி உண்மை உணரும் வன்மையும் அவனி டம் இல்லை. அவன் ஆளுவதற்கு விழைகின்ருன்; பயனை மிகு விரைவிற்பெற விரும்புகின்ருன். ஏன்? பயனைத் தானே நுகர ஆவல் கொள்கின்ருன். பிறரைப் பற்றிய கவலை உண்மையில் ஒரு சிறிதும் அவனுக்கில்லை. கடமையைக் கடமையின் பொருட்டே செய்வதை அவன் விரும்புகிறதில்லை. "பணி செய் வதற்கே உனக்கதிகாரமுண்டு; பலனுக்கன்று," என்று கண்ண பிரானுர் கூறுகின்ருர். பயனைப் பெறுவதில் ஏன் பற்றுக்கொள்ள வேண்டும்? நாம் புரியவேண்டிய பணிகள் நமக்கானவை; பலன்கள் வருகிறபடி வரட்டும். ஆனுல், மனிதனுக்கோ, பொறுமையில்லை. அவன் எந்தத் திட்டத்தையும் கைக்கொள்ளு கிருன். உலகெங்கணுமுள்ள பலர் பெயரளவில் சீர்திருத்தக்காரர் என்னும் இவ்வகுப்பைச் சார்ந்தவரே.

நான் மேலே மொழிந்தபடி இந்தியாவிலே மிக விரைவாக மோதிப் பாய்ந்து பரவிய மேனுட்டு லோகாயத வெள்ளத்தால் இருடிகள் கண்ட மேலான தத்துவங்கள் எல்லாம் அடித்துக் கொண்டு போகப்படுமோ என்னும் அச்சம் நிரம்பியிருந்த காலத்திலே, சீர்திருத்தம் வேண்டும் என்னும் எண்ணம் பாரத

மக்களுள் ஒரு சாராருக்குண்டாயிற்று. இதைப்போன்ற மாறு பட்ட பல்லாயிரம் அலைகளின் கடுந்தாக்கல்களையும் இந்திய சமூகம் தாங்கியிருக்கின்றது. கடந்த அவ்வலைகளின் தாக்கல் களோடு ஒப்பிட்டுக் கூறினால் மேனாட்டு லோகாயதமாகிய இது அற்ப பலமுள்ளதாகவே கருதத் தகுந்தது. பல நூற்றாண்டு களாகப் பேரலைகள் ஒன்றன்மேலொன்றாய் எழும்பி நாட்டிலிருந்த ஒவ்வொன்றையும் உடைத்துப் பொடி செய்து தள்ள முயன்றிருக் கின்றன. வாள்கள் ஒளி விட்டன; 'அல்லாஹு அக்பர்!' என்ற குரலின் சத்தம் வானத்தையும் கிழித்துச் சென்றது. எனினும், இந்துக்களின் இலட்சியங்களை ஒரு சிறிதும் குலைக்க முடியாமலே இவ்வெள்ளப்பெருக்கெல்லாம் அடங்கின.

இந்திய சமூகம் அழிக்க முடியாதது. அழிவின்றியே அது நிற்கின்றது. ஆன்ம தத்துவம் அதனது பின் அணியில் இருக் கும் வரையிலும், மக்கள் தமது தெய்விகத் தன்மையைக் கைவிடாதவரையிலும், வருங்காலத்திலும் அழிவின்றியே அது நிற்கக்கூடும். அவர்கள் ஏழைகளாய் இருக்கலாம்; பிச்சைக் காரர்களாய் வறுமை நோய்வாய்ப்பட்டும் இருக்கலாம்; அசுத்த மும் ஆபாசமும் அவர்களைச் சூழ்ந்திருக்கலாம்; எனினும், அவர்கள் தங்கள் கடவுளைக் கைவிடாமலிருக்கட்டும். தாங்கள் மஹரிஷிகளின் புத்திரர்கள் என்பதை மறவாதிருக்கட்டும். மேலை நாட்டிலே வீதியில் திரியும் ஒருவன், தான் கொள்ளைக்காரத் தலைவனது சந்ததியில் வந்தவனென்று சொல்லிக்கொள்ள விரும்புவது போல, இந்தியாவில் அரியணைமீது விற்றிருக்கும் மன்னர்க்கு மன்னன், காட்டிலே உறைந்து, மரவுரியுடுத்து, காய்கனிகளைத் தின்று, கடவுளுடன் கலந்து பேசிய ஓர் ஏழை முனிவரின் மரபில் வந்தவனென்று சொல்லிக்கொள்வதில் பெருமை கொள்கிறான். இம்மாதிரிச் சந்ததியையே நாங்கள் விரும்புகிறோம். பரிசுத்தம், தெய்விகம் என்பன இவ்வளவு சிறப்பாகப் போற்றப்படும் வரையில் இந்தியா அழிவுறாது நிலைத்து நிற்கும்.

மாக்ஸ்முல்லர் என்னும் பெரியார், 'பத்தொன்பதாம் நூற் றாண்டு' என்னும் பெயர் கொண்ட பத்திரிகையின் இதழொன் றிலே 'உண்மை மகாத்துமா' என்னும் தலையங்கமிட்டு எழுதிய கட்டுரையை உங்களிற் பலர் படித்திருக்கக் கூடும். ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்க்கை, அவர் உபதேசங்களுக்கோர் எடுத்துக்காட்டாய் இருப்பதால், கேட்போருக்கு இன்பம்

ஊட்டுகின்றது. எல்லா விஷயங்களிலும் இந்தியாவிற்கு முற்றிலும் மாறுபட்ட மேலை நாட்டில் வசிக்கும் உங்களுக்கு இந்தியர் வாழ்க்கை சிறிது நூதனமாகத் தோன்றலாம்; ஏனெனில், மேலை நாட்டு வாழ்க்கையில் நிறைந்துள்ள சுறுசுறுப்பான வழி முறைகளும் ஒழுங்குகளும் இந்தியாவில் உள்ளவற்றைக் காட்டிலும் முற்றும் மாறுபட்டுள்ளன. உங்களிற்பலர், முன்னமே கேள்விப்பட்ட பொருள்களில் புதிதாக விளக்கந் தரக்கூடியவை சில இருப்பதனாலே மேலும் கூர்ந்து நோக்கத் தக்கவை உண்டு.

பல திறப்பட்ட சீர்திருத்தங்கள் இந்தியாவில் பரவத் தொடங்கிய காலத்திலே வங்காள தேசத்திற்குத் தொலையிலுள்ள சிற்றூரில் வசித்து வந்த ஓர் ஏழைப் பார்ப்பனருக்கு 1836-ஆம் ஆண்டு, பிப்பிரவரி மாதத்திலே ஒரு குழந்தை பிறந்தது. அக் குழந்தையின் தாய் தந்தையர் வைதிகப் பற்றுள்ளவர். ஓர் உண்மை வைதிகப் பிராம்மணருடைய வாழ்க்கை, இடை யறாத தியாகம் நிறைந்ததாகும். இலெளகிக காரியங்களில் எவையோ இரண்டொன்றே அவரால் புரியக்கூடும். வைதிகப் பார்ப்பனர் இலெளகிகங்களில் அதிகமாக ஈடுபடுதல் கூடாது; பிறரிடமிருந்து பரிசு ஏதும் பெறுதல் கூடாது. அவ்வித வாழ்க்கை எவ்வளவு கடுமை பொருந்தியது என்பதை நீங்களே யூகித்துக்கொள்ளலாம். பிராம்மணர்களைப் பற்றியும் புரோகித முறைகளைப் பற்றியும் நீங்கள் நன்கு கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; எனினும், விசித்திரமான இச்சிறு கூட்டத்தினர் பல்லாயிரக் கணக்கிலுள்ள தம் மக்களை ஆளுவது எங்ஙனம் என்பதைப் பற்றி உங்களுக்குள் சிந்தித்துத் தெரிந்து கொள்பவர் ஒரு சிலரே இருக்கக்கூடும். பார்ப்பனரே ஏனைய வகுப்பாரினும் பரம ஏழைகள்; எனினும், அவர்கள் ஆற்றல் முழுதும் அவர்களது தியாக வாழ்க்கையால் உதித்ததாகும். உலகத்திலேயுள்ள புரோகிதர் களுள் இவர்களே மிக்க வறிஞர்கள்; அதனாலேயே சர்வசத்தி வாய்ந்தவர்களாய் விளங்குகின்றார்கள். இவ்வறுமையிலும் ஒரு பார்ப்பனி, உண்ணுவதற்கு யாதும் கொடாமல் பட்டினியுடன் எந்த ஏழையையும் தன் ஊர் வழியாகச் செல்ல விடமாட்டாள். தனக்குள்ளதைக் கொடுத்தேனும் பசியை ஆற்றித் திருப்தி கொள் வாள். அதுவே அன்னையொருத்தியின் உயர்ந்த கடமையென இந்தியாவில் மதிக்கப்படுகின்றது. அவள் தாயாய் இருப்பதா லேயே தன்னைக் கடைசியாகப் பேணிக்கொள்ள வேண்டியிருக் கின்றது; தன் முறை வருவதற்கு முன் மற்றவர் எல்லாம் உண

வருந்திவிட்டனரா என்று அவள் கவனித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, இந்தியாவில் தாய் தெய்வமாகக் கொண்டாடப்படு கின்ருள். நாம் எடுத்துக்கொண்ட பொருளிலே வரும்படியான மேற்குறித்த மாதரார் ஒருண்மையான தாய்க்கு உதாரணமா யிருந்தார். சாதியின் மேன்மைக்குத் தக்கவாறு கட்டுப்பாடு களும் அதிகமிருந்தன. மிகத் தாழ்ந்த சாதி மக்கள் தாங்கள் விரும்பியபடி எதையும் உண்ணவும் அருந்தவும் கூடும். ஆனுல், சமூகப் படியிலே மனிதன் உயர்வு அடைவதற்கேற்ப வாழ்க்கை யில் மேன்மேலும் கட்டுப்பாடுகளும் அதிகரிக்கின்றன. மிக வுயர்ந்த சாதியாராக—பிராம்மணராக—இந்தியாவின் பரம்பரைப் புரோகிதராக—உயர்வடையும்போது அவர்களது வாழ்க்கை பல வழிகளில் கட்டுப்பட்டு விடுகின்றது. மேலை நாட்டுப் பழக்க வழக்கங்களோடு ஒப்பிட்டு நோக்குமிடத்து, அவர்களது வாழ்க்கை இடையருத தவம் நிறைந்ததாகின்றது. இந்தியர்கள் உலகத்திலுள்ள ஏனைய சமூகத்தினின்றும் முற்றிலும் மாறுபட்ட வர்கள் என்று மொழிய, ஆங்கிலேயரைப் போலவே அவர்களும் செயலாற்றுவதில் உறுதியுடையவர்களே; அவர்கள் உறுதி மிகப் பரந்துமிருக்கின்றது; ஒரு நோக்கத்தைக் கைக்கொண்டால், முடிவு வரைக்கும் அதில் ஈடுபட்டு அதிலிருந்து ஏதேனும் பய ஞென்றைப் பெறும் வரையில் தலைமுறை தலைமுறையாகக் காப்பாற்றிவருகின்ருர்கள். ஒரு கருத்தை அவர்களிடத்தில் தெரி வித்து விட்டால் அதைத் திரும்பப் பெறுவது—அதனை மாற்று வது—மிகமிகக் கடினம்.

அதைப்போலவே புதிய எண்ணங்களை ஏற்றுக்கொள்ளச் செய்வதும் இயலாததாகும். தம்முடைய அறிவு வட்டத்திலும் உணர்ச்சிச் சூழ்நிலையிலும் வாழ்கின்ற காரணத்தால் அவ்வைதிக பிராம்மணர்களது வாழ்க்கை முற்றிலும் தனிப்பட்டிருக்கின்றது. அவர்களது வாழ்க்கைக்கான நுட்பங்களுடன் கூடிய விதிகளெல் லாம் எங்களது பழைய சாத்திரங்களிலே மிக விரிவாகக் கூறப் படுகின்றன. அவைகளில் பொது விதிகளைக்கூட விடாது வயிர உறுதி போலச் சிக்கெனக் கைப்பற்றித் தங்கள் வாழ்க்கையில் அனுசரிக்க முயலுவார்கள் அவர்கள்; தங்களது சாதியைச் சேர்ந்த ஒருவனுல் அன்றிப் பிறரால் சமைக்கப்பட்ட உணவை உண்பதிலும் பட்டினி கிடப்பதே சிறந்தது என எண்ணிச் சும்மா இருந்துவிடுவார்கள். இங்ஙனமிருப்பதோடுகூட அவர் கள் ஆழ்ந்த மனேபாவமும் தீவிர சிரத்தையுமுடையவர்கள். தாங்கள் அனுசரிக்கும் வைதிக முறை முற்றிலும் சரியான

தென்று உறுதியாக அவர்கள் நம்புவதாலேயே அவ்வளவு தீவிர
பத்தியும் தெய்விக வாழ்க்கையின் சத்தியும் அவர்களிடம் பன்
முறையும் வெளித் தோன்றுகின்றன. அவர்கள் விடாப்பிடியாகக்
கைப்பற்றும் வழி முறையனைத்தும் சரியல்லவென்று நாம் அனே
வரும் எண்ணக்கூடும்; ஆனால், அவர்களுக்கோ, அவைகளில்
ஒவ்வொன்றும் சிறந்ததென்றே தோன்றுகின்றது. சான்ருக,
நெருக்கடியான காலங்களிற்கூட ஒருவன் தரும சிந்தனையுடன்
இருக்க வேண்டுமென்று எங்கள் சாத்திரங்களிலே எழுதப்
பட்டுள்ளது. ஒருவன் பிறருடைய உயிரைக் காப்பதற்காகப்
பட்டினி கிடந்து உயிரை விடுவதும் முறையான செய்கையாகும்.
அப்படியே செய்ய வேண்டும் எனவும் இந்துக்களால் கருதப்படு
கின்றது. ஒரு பார்ப்பனன் உயிர் போகுங்காலத்திலும் இவ்
வுண்மையை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டுமென எதிர்
பார்க்கப்படுகின்ருன். தன்னிடம் இருந்த சிறிது உணவையும்
யாசகன் ஒருவனுக்குக் கொடுத்துவிட்டு ஒரு குடும்பம் முழு
வதுமே பட்டினி கிடந்து இறந்துவிட்டதாக மகாபாரதத்தில்
கூறப்பட்டுள்ளது. சிறந்த அந்தத் தானத்தின் அற்புதமான
பழைய கதை, இந்திய இலக்கியங்களைக் கற்றவருக்கு ஞாபக
மிருக்கலாம். இது மிகைபடக் கூறியதொன்றன்று; ஏனெனில்,
இன்றும் இந்தியாவிலே இவ்விதச் சம்பவங்கள் நடைபெற்றே
வருகின்றன. என்னுடைய குருநாதரின் தாய்தந்தையர் குணமும்
பெரும்பாலும் இதைப் பின்பற்றியே இருந்தது. அவர்கள்
முற்றிலும் ஏழைகள்; என்ருலும், வறிஞர் பலருக்கு உதவி
செய்யும் பொருட்டு என் குருநாதரின் தாயார் பன்முறை பட்டினி
கிடந்ததுண்டு. அத்தன்மை வாய்ந்த அப்பெரியாருக்கு ஒரு
மைந்தர் பிறந்தார். பிறந்தது முதலே அவரது செயல் விசித்திர
மாய் இருந்தது. அவர் பிறந்தது முதலே பழம்பிறப்புணர்ச்சி
யுடனிருந்தார். எதற்காகத் தாம் இவ்வுலகில் பிறந்திருக்கின்ரு
ரென்பதையும் அவர் அறிந்திருந்தார். அதை நிறைவேற்றும்
பொருட்டுத் தமது முழு ஆற்றலையும் பயன்படுத்தினர்.

இளமையிலேயே அவர் தம் தந்தையாரை இழந்துவிட்டார்.
எனினும், அச்சிறுவர் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார்.
ஒரு பார்ப்பனச் சிறுவன் பள்ளிக்கூடம் போக வேண்டுவது
அவசியம். கல்வி கற்று அறிவைப் பெறுவதைத் தவிர அவன்
வேறெதிலும் கருத்தைச் செலுத்தக்கூடாதென்று அச்சமூகம்
அவனைக் கட்டுப்படுத்துகின்றது. நாட்டின் பல பாகங்களில்
இன்னும் செயல் முறையிலிருந்து வருவதும் சிறப்பாகச் சந்நி

யாசிகள் சம்பந்தப்பட்டதுமான பழைய காலத்துப் படிப்பு முறையானது, இக்காலப் படிப்பு முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாயிருக்கின்றது. மாணவர்கள் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுவதில்லை. அறிவு வளர்ச்சி பெறுதல் தெய்விகம் பொருந்தியதாகக் கருதப்பட்டமையாலே—அவ்வளவு பரிசுத்தமானதாலே—ஒருவனும் அதை விலைக்கு விற்கலாகாதென எண்ணப்பட்டது. அறிவு யாதொரு பயனையும் கருதாமல் இலவசமாக நல்கப்பட வேண்டும். ஆசிரியர் ஊதியமின்றியே மாணவர்களுக்குக் கல்வி புகட்டி வந்தனர். அவர்களுட்பெரும்பான்மையோர் தம் மாணவர்களுக்கு உணவும் உடையும் கொடுத்து ஆதரித்தும் வந்தனர். செல்வம் படைத்தோர் தத்தம் இல்லங்களில் நடைபெறும் மணங்களிலோ, சிரார்த்தச் சடங்குகளிலோ, அவ்வாசிரியர்களைப் பெருங்கொடைகளால் ஆதரித்து வந்தனர். சிற்சில வெகுமதிகளைப் பெற அவர்களே முதல் உரிமையாளர்களாகக் கருதப்பட்டு வந்தார்கள். இதன் விளைவாக அவர்கள் செல்வமுடையோர் முதலியோர்களுடைய மக்களை ஆதரித்துக் கல்வி கற்பிப்பதைக் கடனாகக் கொண்டார்கள். ஆகவே, எப்போதாயினும் ஒரு மணம் நடைபெற்றால், அது ஒரு செல்வரின் இல்லத்திலே நடைபெறின், அங்கு அப்பண்டிதர்களெல்லாம் அழைக்கப்படுவார்கள். பற்பல பொருள்களைப் பற்றித் தருக்கம் செய்விப்பது வழக்கம். இவ்விதம் கூடிய பண்டிதர்களது கூட்டத்திற்கு இளைஞராகிய என் குருநாதர் ஒரு முறை சென்றிருந்தார். ஆங்கு அவ்விளைஞரது வயதுக்கு எட்டக்கூடாதனவாகத் தருக்க சாத்திரம் வான சாத்திரம் முதலிய அரிய விஷயங்களைப் பற்றி வாதம் புரியப்பட்டது. முன்னரே யான் கூறியாங்கு, அவர் விசித்திரச் சிறுவராகையாலே, அவர்கள் கற்றுணர்ந்த அறிவினாலாய பயன் இதுவாயிருக்கலாமென அறிந்துகொண்டார். 'ஏன் இவ்வளவு கடுமையாக இவர்கள் தருக்கம் செய்கின்றார்கள்? ஏனெனில், காசுக்காகவே! எவனொருவன் மற்றவர்களினும் கல்வித்திறம் வாய்ந்தவனாய் இங்குக் காண்பிக்கக்கூடுமோ அவனுக்கு ஒரு ஜதைத் துணி கிடைக்கும். அவ்வளவே! இதற்காகத்தான் இவர்கள் இவ்வளவு கடுமையாகத் தருக்கம் செய்கின்றார்கள். இவ்வற்பப் பயனுக்காகப் போரிடும்படி செய்யும் கல்வி கற்க இனி ஒரு போதும் பள்ளிக்குப் போகேன்!' என்று தீர்மானித்தார். அப்படியே அவர் பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிட்டார். அதுவே அவரது பள்ளிக்கூடப் படிப்பின் முடிவாகும். ஆனால், கல்வியிற்சிறந்த ஒரு தமையனார்

அவருக்கு இருந்தார். தம்மிடமேனும் படிக்கட்டுமென்று கல்கத்தாவிற்கு அவர் தம்பியாரை அழைத்துச் சென்றார். ஆனால், கல்கத்தா சென்ற சில நாட்களுக்குள்ளே இலௌகிகக் கல்வியின் குறிக்கோள் அனைத்தும் உலகவியல் சம்பந்தப்பட்ட முன்னேற்றத்திற்கு உரியதேயன்றிப் பிறிதன்று என்பதை நன் குணர்ந்துகொண்டபடியால், அச்சிறுவர் கற்பதை அறவே விட் டொழித்து, ஆன்மஞான அறிவை அடைவதிலேயே தம்மை முற்றிலும் ஈடுபடுத்திக்கொள்ள உறுதி செய்துகொண்டனர். தந்தையார் இறந்த பிறகு குடும்பம் மிக்க வறுமை நிலையுற் றிருந்தது. ஆதலால், அவர் தாமே சம்பாதித்து வாழ்க்கை நடத்த நேர்ந்தது. அதனால், அவர் கல்கத்தாவிற்கருகேயுள்ள தட்சிணேசுவரம் என்னும் ஓரிடத்திற்குச் சென்று, கோயில் அருச்சகர் தொழிலில் அமர்ந்தார். ஒரு பிராம்மணன் கோயிற் குருக்களாக வருவது இழிதொழிலாகக் கருதப்பட்டது. எங்கள் கோயில்கள் உங்கள் நாட்டிலுள்ள மாதா கோயில்கள் போன் றவையல்ல. நீங்கள் கருதுகின்றபடி அவை தொழுகைக்கான பொது இடங்களாகமாட்டா. உண்மையைக் கூறுமிடத்து, பொதுத் தொழுகையென்பதே இந்தியாவில் இல்லை. பெருஞ் செல்வர்களால் தங்கள் மதப்பற்றின் சிறந்த அறிகுறியாகவே கோயில்கள் கட்டப்படுகின்றன.

அதிகச் சொத்துடையவனாய் ஒருவன் இருந்தால், ஒரு கோயில் கட்ட விரும்புவான்; அதில் கடவுளை ஞாபகப்படுத்தும் ஓர் அடையாளத்தையோ அன்றிக் கடவுளவதாரத்தின் உருவ மொன்றையோ நிறுவி, கடவுளின் பேரினாலே பூசை செய்வதற்கு அதை அர்ப்பணம் செய்துவிடுவான். அக்கோயிலில் நடை பெறும் பூசையானது ரோமன் கத்தோலிக்கரது மாதா கோயில் களில் நடக்கும் பூசையைப் பெரும்பாலும் ஒத்திருக்கும். மாதா கோயில்களில் நடைபெறும் 'மாஸ்' போலவே, ஆங்கு வேத பாராயணங்கள் நடைபெறும். தெய்வ உருவத்தின் முன்னர்த் தீபாராதனைகள் செய்யப்படும். நாம் ஒரு பெரியாரைக் கௌர விப்பதுபோல அந்த உருவத்தையும் மேன்மைப்படுத்துவார்கள். கோயிலில் நடைபெறுவன இவ்வளவே. கோயிலுக்குச் செல்லும் ஒரு மனிதன் ஒருபோதும் கோயிலுக்கு ஏகாதவனிலும் பெரிய வன் என்று கருதப்படுவதில்லை. இந்தியாவிலே மதமானது ஒவ் வொருவனது தனிப்பட்ட விஷயமாகக் கருதப்படுகின்றதனால் கோயிலுக்கேகாதவனே உண்மையில் மிக்க பத்தி வாய்ந்தவ னென மதிக்கப்படுகிறான். ஒவ்வொருவனும் தன் தன் இல்

லத்திற் சிறு கோயில் ஒன்றையோ, அதற்கென ஓர் அறையையோ ஏற்படுத்தி, ஒவ்வொரு காலை மாலையும் அதனுள் ஒரு மூலையில் அமர்ந்து பூசை செய்துவருகின்ருன். இது முற்றிலும் மானச பூசையாகும். ஏனெனில், பிறருக்கு அவன் என்ன செய்கிருன் என்பது தெரியவராது. அவன் செய்வதொன்றும் செவியிற்படாது. அங்கு உட்கார்ந்துகொண்டு கைவிரல்களை ஒரு விதமாக அசைத்துக்கொண்டோ, நாசித் துவாரங்களை மூடியும் திறந்தும் விபரீத முறையிலே மூச்சு விட்டுக்கொண்டோ இருப்பதாக மாத்திரம் மற்றவர் கண்களுக்குப் புலப்படும். அவன் உடன் பிறந்தோனுயிருப்பினும், இதற்குமேல் ஒன்றும் தெரிந்துகொள்ள இயலாது. ஒவ்வொரு வேளை அவன் மனைவியும் அவன் செய்வதென்ன என்பதை அறியாமலிருக்கலாம். இவ்விதம் எல்லா வழிபாடுகளையும் ஒவ்வொருவனும் தனது இல்லத்திலே தனித்து இருந்து செய்து வருகிருன். தங்களது வீடுகளில் அதற்கென அறையொன்றை அமைத்துக்கொள்ள இயலாதவர்கள், ஆற்றங்கரைகள் அல்லது ஏரி அல்லது கடலுக்கருகில் வாழ்ந்தால், அங்குப் போய்த் தெய்வத்தை வழிபட்டு வருவார்கள். சிற்சில சமயங்களில் கோயில்களுக்குப் போய் உருவங்களைக் கும்பிடுவதும் உண்டு. கோயில்களுக்கு அவர்கள் செய்ய வேண்டிய கடமை அவ்வளவோடு முடிந்து விடும். ஆகவே, எங்கள் நாட்டில் பண்டைக்காலமுதல் மனு முதலிய ஸ்மிருதிகளின் விதிப்படியும் கோயில் குருக்களாக அமருவது இழிதொழிலெனக் கருதப்பட்டு வந்ததன் காரணம் உங்களுக்கு இப்பொழுது புலப்பட்டிருக்கலாம். இவ்வளவு தாழ்ந்த தொழிலை ஏற்றுக்கொண்ட ஒரு பிராம்மணன் நிந்திக்கத் தகுந்தவனுகிருன் என்று சில சாத்திரங்களும் முறையிடுகின்றன. இந்நிந்தனைக்குக் காரணம் வேருென்றும் உண்டு. தெய்விக விஷயங்களை வாணிபச் சரக்குகளாக மாற்றிவிடுகின்றதனுலே, மத சம்பந்தமான காரியங்களைச் செய்வதற்குச் சம்பளம் பெறுவதென்பது, கல்வி கற்பிப்பதற்குக் காசு வாங்குவதினும் மிகப் பலமாக மறுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, வறுமையால் உந்தப்பட்டு, யாதும் வழி காணமாட்டாதவரே கடைசியாகக் கைக்கொள்வதான கோயிற்குருக்கள் தொழில் ஒன்றை ஏற்றுக்கொள்ள நேர்ந்த போது அச்சிறுவர் எவ்வளவு மன வேதனை அடைந்திருப்பாரென்பதை நீங்களே யூகித்துக்கொள்ளலாம்!

வங்காள மாவட்டத்திலுள்ள கவிஞர் பலருடைய கவிகள், சாதாரண மக்களிடையே எங்கும் பரவி, அவை கல்கத்தா

நகரின் கடைத்தெருக்களிலும் ஒவ்வோர் ஊரிலும் பாடப்பட்டு வருகின்றன. அவைகளில் பல பத்திச் சுவை வாய்ந்த பாடல்களாம். அப்பாடல்களின் உட்கருத்து, பெரும்பாலும் இந்தியாவிற்கே உரித்தாகும் என்று சொல்லப்படும் கடவுளை நேரில் காண்பதே. இவ்வுட்கருத்தைக் கொள்ளாத சமய நூலே இல்லை. ஒருவன் கடவுளை நேரில் காண வேண்டும்; கடவுளை உணர வேண்டும்; அவரைப் பார்க்க வேண்டும்; அவருடன் பேசவும் வேண்டும்; இதுவே சமயமெனப்படும். கடவுள் காட்சிகளைக் கண்ட புனித மகான்களின் சரித்திரங்கள் இந்தியா எங்கணும் நிறைந்துள்ளன. இவ்விதக் கருத்துகளே (கடவுளை அனுபூதி வாயிலாய் அடைவதே) அவர்களது சமயத்தின் ஆதார நிலையமாய் இருக்கின்றன. பழைய காலத்து நூல்களும் சாத்திரங்களும் ஆன்மஞான உண்மைகளை நேருக்குநேர் கண்ட பெரியார்களால் எழுதப்பட்டவைகளாகும். இப்புத்தகங்கள் வெற்று அறிவுக்காக எழுதப்பட்டனவல்ல. தருக்க முறையிலே இவற்றை உணர்ந்துகொள்ள முடியாது. உண்மையை நேரில் கண்ட பெரியார்களால் எழுதப்பட்டதனாலே, தம்மையும் அப்பெரியார்களது நிலைமைக்குத் தகுந்தவாறு உயர்த்திக்கொள்ளுபவர்களால் மட்டிலும் இவைகளைத் தெரிந்து கொள்ள முடியும். இப்பிறப்பிலே கடவுள் சாக்ஷாத்காரம் அடையக்கூடும் என்றும், அஃது அனைவராலும் எய்தக்கூடிய தென்றும் அவைகள் சாற்றுகின்றன. இவ்வித நிலையை அடைவதற்கு மனம் திரும்புவதையே நான் சமயத்தின் தொடக்கமென்று சொல்லுவேன். இதுவே எல்லாச் சமயங்களினுடைய முக்கியக் கருத்து. ஆகவே, பேசுவதில் திறமை வாய்ந்த ஒருவனோ, அன்றி வாதம் புரிந்து யாவரும் நம்புமாறு உண்மையை விளக்குவதில் வல்ல ஒருவனோ, சமயத் தொடர்பான மிக உயர்ந்த கருத்துகளைப்பற்றி உபதேசம் செய்யும்போது செவி சாய்த்துக் கேட்பார் ஒருவரும் இல்லாமற் போய்விடுகின்றனர். ஆனால், மற்றொரு மனிதர், மிகவும் ஏழை; தம் தாய்மொழியிலும் நன்றாய்ப் பேசத் தெரியாதவர். எனினும், அவரது வாழ்நாளிலேயே சமூகத்தில் பாதிப்பேர் அவரைக் கடவுளெனக் கும்பிட்டு வருகின்றனர். ஒருவன், தன்னை அனுபூதியென்னும் உயர்நிலைக்கு உயர்த்திக்கொண்டான் என்றால், மதமானது அவனுக்கு வெற்று மனோபாவனையுடன் நின்றுவிடுவதில்லை. சமயம், ஆன்மாவின் அழியாத தன்மை, கடவுள் என்னும் மிக உயரிய உண்மையை ஒருவன் வறிதே இருட்டிலே தேடிக்கொண்டிருக்கவில்லை என்பது வெளிவந்துவிட்டால், அத்தகையோனைப்

பார்ப்பதற்காக இந்தியாவிலே நாற்றிசைகளிலுமிருந்து மக்கள் திரண்டு வருகின்றுர்கள் ; நாளடைவில் அவனைக் கடவுளெனவே கருதி வணங்கத் தலைப்படுகின்றுர்கள்.

மேற்கூறிய சிறுவர் பூசை செய்ய அமர்ந்த கோயிலிலே ஆனந்த உருவினளாகிய உலகத்தாயின் உருவம் ஒன்று ஆராதனை செய்யப்பட்டு வந்தது. அவர் வழக்கம்போலக் காலை மாலைதோறும் பூசனையாற்றி வருகிற காலத்தில், இவ்வித எண்ணங்கள் நாளடைவில் அவர் மனத்தில் குடிகொண்டன : "இவ்வுருவத்தில் ஏதேனும் உண்மை இருக்கின்றதா ? ஆனந்த மயியாகிய தேவி இருப்பது உண்மைதானு ? அவள் இருந்து இந்த உலகத்தை நடத்துகின்றுள் என்பது திண்ணந்தானு ? இவை எல்லாம் கனவு மாத்திரமோ ? மதம் என்பதில் ஏதேனும் உண்மை இருக்கின்றதா ?" இத்தகைய ஐயங்கள் இந்துக்களின் குழந்தைகளுக்கு எழுவதுண்டு. நாம் செய்வனவெல்லாம் உண்மையா என்னும் ஐயந்தோன்றித் தெளிதல் இந்திய நாட்டிற்கே உரியதாகும். கடவுள், ஆன்மா இவைகளைப் பற்றிய எல்லையற்ற தத்துவங்கள் எப்போதும் எங்கள் நூல்களில் இருந்த போதிலும், இவற்றுள் ஒன்றுலும் நாங்கள் திருப்தி அடைவ தில்லை. தத்துவங்களோ, சாத்திரங்களோ எவையும் எங்களைத் திருப்தி கொள்ளச் செய்யா. ஆன்மாவை நேரிற்காண்டல் அல்லது அனுபூதி என்னும் ஒன்றே எங்கள் ஆயிரக்கணக்கான மக்களது மனத்தையும் கவருவதாய் உள்ளது. 'கடவுள் இருக் கிறுர் என்பது உண்மையா ? உண்மையில் இருக்கிறுர் என்றுல், என்றுல் அவரைக் காண இயலுமா ? உண்மையை நான் நேரில் அறிய முடியுமா ?' இவை எல்லாம் மேலைநாட்டவரின் மனத்திற்குச் செயல்முறைக்கப்பால் உள்ளவை என்று தோன்றலாம் ; ஆனுல், எங்களுக்கோ, இவை யாவும் செயலாக்கக் கூடிய உண்மை களாகும். இவ்வுண்மைகளுக்காக—இவைகளைப் பெறுவதற்காக —எங்கள் நாட்டவர் உயிரையும் துறந்துவிடுவர். இது சாதாரண மாகத் தெரிந்துகொள்ளுதல் என்னும் வார்த்தையின்பாற் படாதது ; அறிவின் அனுமானமாகாதது ; வெறுந்தருக்க வாயி லாக அடையப்பெறும் முடிபல்லாதது ; இருட்டில் தேடப் படாதது ; ஆனுல், உண்மையில் நேரிற்கண்டு அறியப்படுவது ; புலன்களுக்கு இப்புறவுலகு உண்மையாய்த் தோன்றுவதைக் காட்டிலும் பன்மடங்கு கண்கூடாய் இருப்பது. இவ்வுண்மையை உணரப் பண்டைக்கால முதலே குகைகளில் உறைவதற்கு எத்தனை மாந்தர் இன்ப சுகத்தையும் பெருமித வாழ்வையும்

துறந்து சென்றனர்! எத்தனை ஆயிரக்கணக்கான மாந்தர் புண்ணிய நதிக்கரையிலே உட்கார்ந்து கண்ணீர் சொரிவதன்பொருட்டு வீடு வாயிலை விட்டுச் சென்றுளார்! இவைகளெல்லாம் நீங்கள் அறியாதனவல்ல. நேரிற்காண்பதற்காகவே அவர்கள் எத்துணைத் துன்பங்களுக்கும் ஆளாகின்றார்கள். அவர்களது துன்பக் கண்ணீருக்குக் காரணங்களை உங்கள் முன் எடுத்துரைக்க இது ஏற்ற பொழுதன்று. இவ்வொரே விஷயம் அப்பெரியாரது உள்ளத்தில் ஊன்றிப்பதிந்துள்ளது என்பது மாத்திரம் உண்மையாகும். ஆயிரக்கணக்கானோர் கொல்லப்படுவர்; எனினும், ஆயிரக்கணக்கான மாந்தர் உயிரை விடுவதற்கும் ஆயத்தமாயிருப்பர். இந்த ஒன்றைப் பெறும் பொருட்டே பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் இந்து சமூகத்தார் அனைவரும் தம் வாழ்க்கையை வெறுத்துத் தியாகம் செய்து வருகின்றனர். இதன்பொருட்டு ஒவ்வோர் ஆண்டிலும் ஆயிரக்கணக்கான இந்து மக்கள் தங்கள் வீடு வாயில்களைத் துறந்து விடுகின்றார்கள். இன்னும் எண்ணிறந்தோர், இதனாலுண்டாகும் இன்னல்கள் காரணமாக இறந்துபோகின்றனர். மேலை நாட்டானுக்கு இவையனைத்தும் கனவு போலத் தோன்றலாம். இவ்வித நோக்கத்தின் காரணமும் நான் அறிந்ததொன்றே. ஆனால், நான் மேலை நாட்டில் வசித்துளேன் என்றாலும், இவ்விஷயம் உண்மையில் செயல் முறையாக அடையக்கூடியதெனவே இன்றும் நான் கருதுகின்றேன்.

கடவுளை நேரிற்காண வேண்டுவதைத் தவிர்த்து ஏதேனும் ஒரு கணப்போதாகிலும் நான் வேறெண்ணம் கொள்வேனாகில், அக்காலம் எனக்குப் பெருநஷ்டத்தை விளைக்கும். வியப்பைத் தரும் விஞ்ஞான சாத்திரத்திற் சிறிது கருத்தூன்றுவேனாகில், அதுவும் பயனற்றதே. வாழ்வோ, நீரிற்குமிழி போன்று அழிதற்பாலது. மக்கள், தேவர்களைப் போன்ற நுண்ணறிவு படைத்தவராயிருப்பினும், விலங்குகளையொப்ப அறிவற்றவராயிருப்பினும், எல்லாரும் அழிவதுண்மை. உடுக்க உடையில்லாது கந்தலைக் கட்டும் அளவு வறுமையுற்றிருந்தாலும், ஈடுமெடுப்புமில்லாத செல்வம் படைத்தவராயிருப்பினும், மாள்வது திண்ணம். மேலை நாட்டுப் பெரிய நகரங்களின் விசாலமான தெருக்களிலொன்றில் அற்பனாய் வாழ்ந்தாலும், கோடிக்கணக்கான மாந்தரையாளும் முடி தரித்த கோமானாயிருந்து வாழ்ந்தாலும், முடிவில் மரணம் நிச்சயமே. ஆரோக்கியம் நிறைந்தவராய் இருப்பினும், மிகவும் கேடான நிலையில் இருப்பினும் உடலழிவு நிச்சயம். மிகுந்த கவிதை உள்ளம் ததும்பும் இயல்

புடையவனுயிருப்பினும், குரூரத்தன்மை நிறைந்தவனுயிருப் பினும், அழிவது உண்மை. எனினும், இம்மயக்கத்திலிருந்து விடுபடும் வழி உளதென்று இந்துக்கள் இயம்புகின்ருர்கள். அது தான் கடவுள்; அதுவே சமயம் என்பதாம். இஃது உண்மை யாஞல், வாழ்க்கையின் உண்மை விளக்கப்பட்டதாகின்றது; வாழ்க்கை, இன்பம் தரக்கூடியதும் நுகரக்கூடியதும் ஆகின்றது. இல்லையெனில், அது பயனற்ற சுமையாய்விடும். இதுவே எங்கள் கருத்து. மற்றப்படி எவ்வளவு பெரிய தருக்கமும் இதனை மெய்ப் பித்துக் காட்டமாட்டாது. தருக்கங்களெல்லாம் ஒருண்மையை நம்பத்தக்கதென எடுத்துக் காட்டுவதோடு நின்றுவிடுகின்றன. ஒரு துறையிலிருக்கும் சிறந்த ஆராய்ச்சியின் விளைவும் ஒருண் மையை அனுமானிக்கச் செய்கின்றதேயன்றி, அதற்கு மேல் எதை யும் செய்வதில்லை. மிக உயர்ந்த பெளதிக சாத்திர விளக்கமெல் லாம் அனுமானங்களாய் இருக்கின்றனவேயன்றி, உண்மையை இன்னும் கண்டவையல்ல. இந்திரியங்களால் அனுபவ வழியில் உணரக் கூடியவைகளே உண்மைகளாகும். உண்மைகளின் இருப்பை உள்ளத்தினுல் அறியவேண்டும். மதத்தை மெய்ப் பித்துக் காட்டும்பொருட்டு அதை நாம் காட்சியில் உணரக் கூடியவர்களாய் இருக்கின்ருேம். கடவுள் ஒருவர் உளரென்பதை மனமார நம்புவதன்பொருட்டு நாம் அவரது இருப்பை உணர் கிருேம். சமய உண்மைகள் உளவென்பதை நம்புவதற்காக நாம் மதத்தை உணர்வது அவசியமாகின்றது. அதனை உணர்வது மிகவும் நீண்ட தருக்கங்களாலோ வேறெவற்றினுலோ அல்ல; ஆனுல், நம் மன உணர்ச்சியே இவ்விஷயங்களை மெய்ப்பித்துக் காட்டும்; ஏன்? நம்பிக்கையைக் கற்பாறை போல அசைக்க முடியா உறுதியுடையதாக்கும். அதுதான் நான் கொண்ட கருத்து; அதுவேதான் இந்துக்களின் கருத்தும்.

கடவுளைக் காணவேண்டுமென்னும் இந்த எண்ணம் மேலே மொழியப்பட்ட சிறுவரையும் ஆட்கொண்டதனுல், அவரது முழு ஆற்றலும் ஒருங்கு குவிந்து அதில் ஈடுபட்டது. ஒவ்வொரு நாளும் அவர் விம்மியழுது, "அன்னய், நீ இருப்பது உண்மை தானு, அல்லது கவி வாணரது கனவேயோ? அருளன்னை என் பவள் கலங்கிய நெஞ்சத்தவரது கற்பனைதானு? அல்லது உண்மையில் மெய்ப்பொருள் என்பதொன்று உண்டா!" என்று ஏங்கிப் பரிதவிப்பார். நூல்களென்றும் கல்வியென்றும் நாம் எவற்றைக் கருதுகின்ருேமோ, அவற்றுள் ஒன்றையும் அச்சிறுவர் அறிந்திலரென்பது நாம் முன்னரே தெரிந்த உண்மை. ஆகவே,

அவர் எவ்வளவு இயற்கைக் குணம் வாய்க்கப் பெற்றவராயும், எவ்வளவு திடமனமுடையவராகவும், அயலார் கருத்து எதுவும் கலவாத அவ்வளவு தூய எண்ணங்கள் உள்ளவராயும் இருந்தார்! பல்கலைக்கழகத்திற்குச் சென்று கல்வி பயிலாததால் அவர் தாமாகவே சிந்தனை செய்யும் சத்தி வாய்க்கப் பெற்றிருந்தார். நமது வாழ்க்கையில் அரைப்பங்கு கலாசாலைகளில் கழிக்கப் படுவதாலே, நாம் பிறர் கருத்துகளைத் திணிக்கப்பெற்றவர்களாய் இருக்கின்றோம். சற்று முன் குறிப்பிட்ட மாக்ஸ்முல்லர் எழுதிய கட்டுரையிலே, "அவர் தூய சுய அறிவு வாய்க்கப்பெற்றவர்; எந்தப் பல்கலைக்கழக எல்லைக்குள்ளும் கல்வி பயிலாததே அவர் சுய அறிவு வாய்க்கப்பெற்றதன் ரகசியமாகும்," என்பது கவின் பெற எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. என்ருகிலும் கடவுளைக் காணக்கூடுமா என்று அவரது உள்ளத்தை மிக உறுதியாய்ப் பற்றியிருந்த அவா நாளுக்குநாள் வலிமை பெற்று, இறுதியில் கடவுளைத் தவிர்த்து வேறொன்றையும் கருதாதபடி செய்து விட்டது. ஆகவே, பூசையை முறைப்படி செய்துவர அவரால் இயலவில்லை. அவர் பன்முறை தேவியின் உருவத்தின் முன்னர் நைவேத்தியம் படைக்க மறந்துவிடுவார்; சில வேளைகளில் தீபாராதனை செய்யத் தவறிவிடுவார்; வேறு சில நேரங்களில் மற்றையவற்றை மறந்து மணிக்கணக்காகத் திருவிளக்காரதியைத் தேவியின் திருமுன்னர்ச் சுற்றிக்கொண்டிருப்பார்.

"தாயே, நீ இருப்பது உண்மைதானு? உண்மையாயின், நீயேன் வந்து என்னுடன் பேசுகின்றுயில்லை? நீ இறந்துபட்டனையோ?" என்ற இந்த எண்ணமே அவர் மனத்தில் இடையருது குடிகொண்டது. சில சமயம், நம்மிற்சிலருக்கும், பயனற்ற —உயிரற்ற—தருக்கங்களிலும், உண்மைப் பயனென்றையும் தாராத புத்தகப் படிப்பிலும் சலிப்பேற்பட்டு, அறிவு ஆவேசங் கொண்ட வேளைகளில் இத்தகைய கடவுட்சிந்தை உண்டாவதுண்டு. (அபினி உண்பவனது அகக்களிப்பு—போதை—ஒரு வகை ஊக்கந்தருகிறது. பழக்கமான குறித்த காலத்தில் அபினி கிடையாவிடின், அவன் இறந்துவிடுவான். இது போன்ற அறிவு வெறியும் நமக்கு அவசியந்தான்.) கடவுட்சிந்தையுண்டாகும் போது நாமும், 'பரந்த இவ்வுலகத்திலே உண்மையறிவை எனக்குப் புலனுக்குவாரொருவரும் இலரோ? சழக்குகளும், சச்சரவுகளும், மிகுந்த இவ்வுலகத்தில், நான் யாரை உண்மையாக நம்பிப் பின் பற்றுவேன்? கடவுளே, நீ இருப்பது உண்மையாயின், நேரே வந்து என்னேடு பேசலாகாதா? ஆண் பெண்

என்ற வேறுபாடின்றி அனைவர்க்கும் உரிய கடவுள் நீயேயாயின், நீ நேரில் வாராமல் உன் தூதர்களை அனுப்புவது முறையோ? நேரில் வந்து உன் குழந்தை ஆயத்தமுள்ளவனா அல்லனா என்பதை அறிவிக்கக் கூடாதா?' என்று உளம் நைந்து கரையலாம். இத்தகைய எண்ணங்கள் மனம் நைந்து அயர்வுற்ற கணங்களில் நம்மனைவர்க்கும் வரக்கூடியவைகளே. ஆனால், அடுத்த கணம் நாம் எல்லாவற்றையும் மறந்துவிடுகிறோம். ஏனெனில், நம்மைச் சூழ்ந்திருக்கும் பொருள்கள் நம்மனத்தைக் கொள்ளை கொள்ளும் முறையில் அமைந்திருக்கின்றன.

ஒரு கணத்தில் மட்டும் துறக்கத்தின் கபாடங்கள் திறக்கப்பட்டன போல எல்லாம் காட்சி அளிக்கும். நாம் பேரின்பப் பேரொளியில் மூழ்குவதாகக் காண்போம். ஆனால், நம்முடைய விலங்கின இயல்பு இத்தகைய தெய்விகக் காட்சிகளை நம் மனத்தை விட்டு உதறித் தள்ளிவிடும். மீண்டும் விலங்கின் தன்மையாகிய கீழ் நிலையை எய்தியும், குடிப்பதும், உண்பதும், இறப்பதுமாகி இவற்றையே அடிக்கடி தொழிலாகக் கொண்டும் இறுதியில் அழிந்துவிடுகின்றோம்.

எளிதாகத் தம் குறிக்கோளினின்றும் கீழிறங்காமல் மெய்ப்பொருளை ஒரு முறை நாடத் தொடங்கிவிட்டால், அவர் இடையில் மனத்தை ஈர்க்கும் கவர்ச்சி ஏற்பட்டாலும், முன் வைத்த கால்களைப் பின்வாங்க மாட்டாத தனித்தகைமை வாய்ந்த சான்றோர்கள் நம்மிடையே இல்லாமலில்லை. அவர்கள் 'என்றைக்கேனும் உயிர்போவது திண்ணம். ஆதலால், மாண்புடைய வெற்றியில் அது மறையட்டும். மனிதனின் இழிந்த இயல்பை அடக்கி ஆளுதல், வாழ்க்கை, மரணம், நல்லது, தீயது முதலிய பிரச்சினைக்கு வழிகாணுதல்—இவற்றைவிடச் சிறந்த வெற்றி ஏதேனும் உண்டோ உலகில்?' என்று கூறுகின்றனர்.

கடைசியில் அச்சிறுவர்க்குக் கோயிற்பூசை செய்யவே முற்றிலும் இயலாது போயிற்று. அவர் கோயிலையும் அதன் வேலையையும் விட்டகன்று, அருகிலிருந்த சிறியதோர் காட்டுக்குட் சென்று ஆங்கு உறையலானார். அச்சமயத்தில் எப்போது கதிரவன் தோன்றினான், எப்பொழுது மறைந்தான் என்பதும், தாம் எப்படி வசித்தாரென்பதும் அவருக்குத் தெரியாது போயினவென்று பிற்காலத்தில் பன்முறை அவர் என்னிடம் கூறியிருக்கின்றார். அவர் தம்மைப்

பற்றிய எண்ணமில்லாமல் உணவை மறந்துவிடுவார். அந் நாட்களிலெல்லாம் அவரது உறவின் முறையார் ஒருவர், மிக்க அன்புடன் அவரைக் கவனித்து, வாயில் உணவை வைத்துத் திணிப்பார். அதை அவர் தமக்குத் தெரியாமலே அருந்தி வரலாயினர்.

அல்லும் பகலும் இவ்வண்ணமே அச்சிறுவருக்குக் காலம் சென்றது. ஒரு நாள் முழுதும் கழிந்து மாலை நேரத்தில் கோயிலிலே நடைபெறும் பூசை மணியின் நாதமும், அப்போது மக்களால் இசைக்கப்படும் பாட்டுகளின் குரலோசையும் அக் காட்டில் இருக்கும் அச்சிறுவர் காதில் படும்போது அவை மேன் மேலும் அவரைத் துன்பக் கடலில் மூழ்கச் செய்யும். அப் பொழுது அவர், ''மற்றொரு நாளும் வீணிற்கழிந்துவிட்டதே! ஆனால், அன்னாய், நீ இன்னும் என் முன் வந்து எனக்குத் தரிசனம் தந்தருளவில்லையே! இவ்வற்ப வாழ்க்கையில் மற்றொரு நாள் போய்விட்டதே! நாதனே, இன்னும் மெய்ப்பொருளைக் கண்டபாடில்லை!'' என்று ஏங்கி அழுவார்; தேவி தரிசனம் கிடைக்கவில்லையென்னும் தாங்க முடியாத இம்மன வேதனையால் தமது முகத்தைப் பலமுறை பூமியில் மோதிப் புலம்பியும் வாய் விட்டலறியும் பின்வருமாறு தேவியைப் பிரார்த்தனை செய்வார்: ''அம்பிகே, என் ஆருயிர் அன்னையே, என்னுள்ளிருக்கும் ஆன்ம சத்தியை வெளிப்படுத்துவாயாக. உலக மாதாவாகிய உன்னையன்றி வேறொன்றையும் நான் விரும்பாமலிருக்கும்படி செய்வாயாக!''

உண்மையில் அவர் தமது குறிக்கோளுக்கேற்ப நடக்கலா யினர். அனைத்தையும் அவள்பொருட்டு அர்ப்பணம் செய்தா லன்றி உலக அன்னை தரிசனம் தருவதில்லையென்பதை அவர் கேள்விப்பட்டிருந்தார். அம்பிகை அனைவரிடமும் வர விரும்பு கிறாள்; ஆனால், மாந்தரோ, அவளை இலட்சியம் செய்யாமல், மூடத்தனமாகப் பற்பல அற்பப் பொருள்களுக்காகப் பிரார்த்தனை புரிகின்றனர் எனவும், அவர்கள் தங்களுடைய சிற்றின்பங் களையே தேடி அலைகின்றார்களே அல்லாது, அன்னையை அடைய விரும்புகின்றதில்லையெனவும், உண்மையில் வேறு எண்ணம் சிறிதுமில்லாமல் முழு மனத்துடன் விரும்புவார்களாகில் அக் கணமே தேவியும் அவர்களுக்கு அருள்புரிவாள் எனவும் அவர் கேள்விப்பட்டிருந்தார். அவர் தமது அந்த எண்ண மயமே ஆகி, தேவியையன்றி வேறொன்றையும் வேண்டாத எண்ண

மயமாகி, அதனைச் சடவுலக வாழ்க்கையிலும் தவருது பின்பற்ற முயன்ருர்; உள்ளம், உரை, செயல் இம்மூன்றிலும் அனுசரிக்க முயன்ருர், அவ்வெண்ணத்தைப் பின்பற்றி வந்தார்; தம்மிட மிருந்த சிறிது சொத்தையும் தூர எறிந்துவிட்டு, 'இனிக் காசை ஒரு போதும் கையினுல் தொடுவதில்லை,' என்று விரதம் கொண் டார். காசைக் கையினுல் தொடுவதில்லை என்னும் இச்சபதம், அவரது வாழ்க்கையில் இயற்கையாய் அமைந்துவிட்டது. உங்களுக்கு இது ஒரு மாய வித்தையாகத் தோன்றலாம். ஆனுல், அவரது பிற்கால வாழ்க்கையில், அவர் உறங்கிக்கொண்டிருக்கும் போது ஒரு காசு கொண்டு அவரைத் தொடுவேனுகில் அவர் கைகால்கள் வளைந்துபோம்; உடல் முழுதுமே பாரிச வாயு தாக்கினுற்போன்று உணர்ச்சியற்றுப் போய்விடும். அவர் மனத்திலெழுந்த மற்ருெரு விஷயமென்னவென்ருல், 'காமம் ஒரு பெரும்பகையாகும்,' என்பதே. 'மனிதன் ஆன்மாவாவன்; ஆன்மாவோ, ஆண் பெண் என்ற பால் வேற்றுமையற்றது; ஆண் பெண் என்ற வேற்றுமையும், செல்வமுமாகிய இரண்டு எண்ணங்களும் தேவியைத் தரிசிப்பதினின்றும் தடுக்கின்றன,' என அவர் கருதினுர். இப்பிரபஞ்சம் முழுதும் உலக அன்னை யின் வெளித் தோற்றமே. அம்பிகை ஒவ்வொரு பெண்ணின் உடலிலும் உறைகின்ருள். 'ஒவ்வொரு பெண்ணும் ஜகதம்பிகை யின் அமிசமாயிருக்க, ஒரு மாதை நான் எப்படி மனைவியாக எண்ணுதல் கூடும்?' என்பதே அவரது கொள்கை. பெண்டிர் ஒவ்வொருவரும் பராசத்தியாகவே அவருக்கு விளங்கினர். பெண்ணுரு ஒவ்வொன்றிலும் தேவியைத் தவிர்த்துப் பிறிதொன் றும் காணக்கூடாத நிலையை அவர் அடைந்தார். அவர் இக் கொள்கையை வாழ்க்கை முற்றிலும் அனுசரித்து வந்தார்.

மனித இனத்தைப் பற்றிக்கொள்ளும் மாபெரு வேட்கை யாகும் இது. "குழந்தாய், ஓரறையில் பொற்குவியல் ஒன்றும், அதற்கடுத்த மற்ருேர் அறையில் ஒரு திருடனும் இருப்பதாக நினைத்துக்கொள். அத்திருடனுக்கு உறக்கம் வரும் என்று எண்ணுகிருயா? வரவேமாட்டாது. அவ்வறைக்குச் சென்று எப்படி அப்பொற்குவியலைக் கைக்கொள்வதென்னும் ஒரே நினைவுடன் அவன் இருப்பானல்லவா? அதேபோல, 'இத் தோற்றங்களுக்குப் பின்னுல் உண்மைப் பொருள் ஒன்று உளது; கடவுள் ஒருவர் இருக்கின்ருர். ஒப்பிட்டு நோக்குங்கால் இந்திரிய இன்பம் யாவும் வீண் விளையாட்டு. அழிவேயற்ற எல்லையற்ற இன்பம் பயக்கற்பாலதாம் ஒன்றுளது,' என்பதைத்திண்ணமாக

அறிந்த ஒருவனால் அதையடையப் பெருமுயற்சி செய்யாமல் சும்மா இருக்கமுடியுமா? ஒரு கணப்போதேனும் சிரமப்படாமல், முயற்சி செய்யாமல் நின்றுவிடுவானா? அதை அடைய வேண்டும் என்னும் ஒரே ஆவல் நிறைந்த பித்தனாய் விடுவானல்லவா?'' என்று அப்பெரியாரே என்னிடம் கூறியுள்ளார். இத்தெய்விகப் பித்து அச்சிறுவரை இறுகப் பற்றிக்கொண்டது. அச்சமயத்தில் அவருடைய ஐயங்களையகற்றிச் சாதனை வழிகளைக் காட்ட, குரு எவரையும் அவர் அடையவில்லை. அனைவரும் அவரைப் பித்தர் என்றே கருதி வந்தனர். இஃது உலகில் சாதாரணமாக நடைபெறும் விஷயந்தான். ஒருவன் உலகத்தின் வீண் பெருமைகளை ஒழித்துவிடுவானாகில், அவன் பித்தன் என்று கருதப்படுகிறான். ஆனால், அவனைப் போன்றவரே உலகத்தில் உயர்ந்த புருஷராவர். இந்த நம் உலகத்தையே ஆட்டிவைக்கும் சத்திகள் எல்லாம் அவ்விதப் பைத்தியத்திலிருந்தே தோன்றியிருக்கின்றன. இனிமேல் ஆட்டிவைக்கப்போகிற சத்திகள் அவ்விதப் பைத்தியத்திலிருந்து தான் வந்துதீரும்.

மெய்ப்பொருளை அடையவேண்டும் என்னும் ஓயா முயற்சியிலேயே நாட்களும், வாரங்களும், மாதங்களும் கழிந்து வந்தன; சிறுவர் தெய்வக் காட்சிகளையும் காணத் தலைப்பட்டார். அவருடைய உண்மை இயல்பின் இரகசியங்கள் அவருக்குப் புலப்படலாயின. இத்தனை காலமாக மூடி இருந்த திரைகள் ஒன்றன்பின் ஒன்றாகக் களைந்தெறியப்படுவன போலத் தோன்றின. ஜகதம்பிகையே குரவராய் அமர்ந்து அச்சிறுவர் விரும்பிய உண்மைகளை அறிய வழி காட்டினாள். இந்தச் சமயத்திலே கட்டழகுள்ளவளும், நிகரற்ற கல்வித் திறமை வாய்ந்தவளுமான ஒரு மாது அங்கு வந்து சேர்ந்தாள். அம்மாதைக் குறித்துப் பிற்காலத்தில் அம்மகா புருஷர், "அவள் கல்வியறிவு உடையவளல்லள்; ஆனால், அவள் கல்வியின் உருவமாகவே திகழ்ந்தாள்; அது மாத்திரமன்று; மனித வடிவந்தாங்கிய கல்வித் தேவியே யாவாள்,'' என்று கூறுவது வழக்கம். இங்கும் இந்தியர்களின் உயர்ந்த மனோபாவனையைக் காணலாம். இந்திய மாதர்கள் தம் இயல்பான அஞ்ஞான வாழ்க்கையின் இடையிலேயிருந்தும், மேனாடுகளில் கூறுகிறபடி சுதந்தரமற்ற வாழ்க்கையின் மத்தியிலிருந்தும், அவர்களிடையே மிக உயர்ந்த தெய்விகப் பெண் மக்கள் தோன்றுகின்றார்கள். அவள் ஒரு சந்நியாசினியாவள். எங்கள் நாட்டில் பெண்பாலாரும் உலகைத்துறந்து, சொத்துச் சுதந்தரங்களைத் தூர எறிந்து, மணம் செய்துகொள்ளாமல், தம்

காலமனைத்தையும் கடவுள் வழிபாட்டிலேயே கழித்து வருவது உண்டு. தட்சிணேசுவரக் காட்டில் வசித்து வந்த சிறுவரைப் பற்றிக் கேள்விப்பட்டபோது அவரைக் காண அவ்வம்மை தானே அவ்வடவிக்குச் சென்றாள். அவளுடைய உதவியைத்தான் சிறுவர் முதன்முதலாகப் பெற்றார். அவள் அச்சிறுவரைக்கண்ட அளவிலேயே அவரது இன்னல் இன்னது என்பதைத் தெளிவாக உணர்ந்துகொண்டு அவரைப் பார்த்து, "குழந்தாய், இவ்விதப் பைத்தியங் கொண்டவனே பாக்கியம் பெற்றவனாவன். இந்த உலகத்தார் அனைவருமே பித்தர்; சிலர் பொன்னுக்கும், ஒரு சிலர் மண்ணுக்கும், வேறு சிலர் புகழுக்கும், மற்றும் சிலர் சிற்றின்ப நுகர்ச்சிக்கும், இன்னும் சிலர் நூற்றுக்கணக்கான பிறவற்றிற்குமாகப் பித்துண்டு உழல்கின்றனர். அவர்கள் பொன்னுக்கும், அல்லது மகளிரின்பங்களான அற்ப விஷயங்களை யடையவும், அயலாரை அநியாயமாக அடக்கியாளவும், பெருநிதி படைத்த குபேரன் ஆகவும், கடவுளை யொழிந்த இவ்வற்பப் பொருள்களின் பொருட்டு முட்டாள்தனமாகப் பித்தேறி அலைகின்றார்கள். ஒவ்வொருவரும் தம்மைப் போன்றவர் நிலையைத் தான் அறிந்துகொள்ள முடியும். ஒரு மனிதன் பொன்னை யடையப் பித்துப்பிடித்து அலைவானாயின், அவனிடம் அனுதாபம் கொள்பவரும் அவனுக்குக் கூடுமான உதவிபுரிபவரும் பலர் இல்லாமற் போகவில்லை. பைத்தியக்காரர்கள் புத்தி தடுமாறிய நிலையையே விவேக நிலை என்று கருதுவதுபோல, இப்பொன் பைத்தியம் கொண்டவனே சரியான மனிதன் என்பார்கள். ஆனால், ஒருவன் ஆருயிர் ஆகிய எல்லாம்வல்ல இறைவனிடத்தில் பித்துக்கொண்டிருப்பானாகில், அவனை மனிதர் எங்ஙனம் அறிந்துகொள்ள இயலும்? 'மூளை கலங்கியவன்; அவனிடம் நமக்கொரு காரியமுமில்லை' என்று புறக்கணிக்கின்றனர். ஆகவே, குழந்தாய், பொன் முதலான அற்ப விஷயங்களில் பித்துக்கொள்ளும் இயல்புள்ள மாந்தர் உன்னைப் புத்தி தடுமாறினவன் என்று கூறுகின்றனர். ஆனால், உண்மையில் உன் பித்தே தக்கதாகும். பகவானிடம் பத்தி கொண்டவனே பாக்கியவான் ஆவன். அத்தகையோர் மிகச் சிலரே," என்று கூறினாள். அம்மாது சிரோமணி பல ஆண்டுகள் அச்சிறுவருடன் இருந்து, இந்து மதத்தின் பல்வேறு நெறிகளை அளித்து, யோக வழிகளையும் பயிலும்படி செய்தாள். அவளது இவ்வுதவி இந்தியாவின் ஆன்ம ஞானமாகிய, ஆற்றல் பொருந்திய ஓர்

ஆற்றை ஒழுங்குபடுத்தி வழி நடத்தியது என்று சொல்லும்படி இருந்தது.

சின்னுட்களுக்குப் பின் அதே வனத்திற்கு இந்தியாவில் பிச்சை ஏற்றுண்ணும் வகுப்பைச் சார்ந்தவரும், பெரும்படிப் பாளரும், ஆன்ம விஞ்ஞானியருமான ஒரு சந்நியாசியார் வந்து சேர்ந்தார். அவர் அரிய கொள்கையை அனுசரிப்பவர்; இவ் வுலகம் உண்மையில் இருப்பதாக நம்பாதவர். அவரது இக் கருத்தை வாழ்க்கையில் நடத்திக்காட்டும்பொருட்டே அவர் ஒரு போதும் கூரையின் கீழ்ப் போகமாட்டார்; புயற்காற்ருனுலும், வெய்யோன் வெப்பமானுலும் வேறுபாடின்றி வெளியிலேயே வாழ்ந்து வருவார். அத்துறவியார் நம் சிறுவருக்கு வேதாந்த தத்துவங்களை உபதேசித்து வரும் நாட்களில்—என்ன ஆச்சரி யம்!—சீடர் குருவைக்காட்டிலும் சில விஷயங்களில் மேம்பட்ட அறிவுடையவராய்த் தோன்றலாயினர்! அத்துறவியார் பல மாதங்கள் அச்சிறுவருடன் உறைந்து, பிறகு அவருக்குச் சந்நியாசம் கொடுத்துப் பிரிந்து போய்விட்டார்.

சிறுவர் கோயிற்பூசாரியாய் இருந்துவரும் நாட்களில், அவரது விபரீத வழிபாட்டினைக் கண்ணுற்ற மாந்தர் அனைவரும் அவரை மூளை கலங்கியவர் எனவே கருதினர். அவருடைய உறவினர் அவரைத் தமதூருக்கு அழைத்துச் சென்று, அவரது சித்தம் மாறித் தெளிவடையும் என்னும் கருத்துடன் ஒரு சிறு பெண்ணை மணம் புரிந்தனர். ஆனுல், மணமானதும் சிறுவர் திரும்பவும் காளிகோயிலுக்கு வந்து, நான் முன் கூறிய தம்மு டைய பைத்தியத்தில் மேன்மேலும் ஆழ்ந்துபோனுர். எங்கள் நாட்டிலே சிற்சில வேளைகளில் சின்னஞ்சிறுவர்களாயிருக்கும் போதே பெற்ருேர்கள் தங்கள் சிறுவர் சிறுமிகளுக்கு மணம் செய் விக்கும் வழக்கம் உண்டு. இதனுல், சிறுவர்களுக்கு யாதொரு சுதந்தரமுமில்லை. ஆனுல், இவ்விவாகம் ஒப்பந்த அளவேயாகும். ஏனெனில், மணமான பின்னும் சிறுவனும் சிறுமியும் (மண மகனும் மணமகளும்) தத்தம் பெற்ருேருடனேயே வாசம் செய்து கொண்டிருப்பார்கள். பெண் தக்க வயது அடைந்த பின்னரே உண்மையான விவாகம் நடைபெறும்; அப்போதுதான் மண மகன் மணமகளைத் தன் வீட்டிற்கு அழைத்து வருவது வழக்கம். எனினும், குறிப்பிட்ட அப்பெரியாரோ, தமக்கு ஒரு மனையாள் உண்டு என்பதையே முற்றும் மறந்துபோயினர். நெடுந்தூரக் கிராமத்திலிருந்த அவர் மனைவியார், தம் கணவர் மத விஷயத்தில்

தீவிரமாக ஈடுபட்டிருக்கின்ருர் என்றும், பலரால் பைத்தியக்காரர் என்று கருதப்படுகிருர் என்றும் கேள்விப்பட்டு, அதனுண்மையைத் தாமே நேரிற்கண்டறியத் துணிந்து, கொழுநர் இருக்குமிடத்திற்குக் கால் நடையாக நடந்து செல்லலானுர். ஆணே, பெண்ணே, எவராயிருப்பினும், மத சம்பந்தமான வாழ்க்கையில் ஈடுபட்டுச் சந்நியாசம் கொள்வாராகில், எல்லா உலகக் கடமைகளிலிருந்தும் விடுபட்டவர்களாய்விடுவது எங்கள் நாட்டிலுள்ள பொது விதியாயினும், அப்புருஷர் தம் மனைவியார் தம்முன் வந்து நின்றதும், மனைவியாராகிய அவர் தமது வாழ்க்கையில் உரிமையுடையவர் என்று ஏற்றுக்கொண்டு, "என்னைப் பொறுத்த வரையில் எல்லாப் பெண்டிரிடத்திலும் தான் குடிகொண்டிருப்பதாக ஜகன்மாதா எனக்குக் காட்டியிருக்கிருள். ஆகவே, மகளிர் அனைவரையும் என் அன்னையாகக் காணக் கற்றுக்கொண்டிருக்கிறேன்; அதே அன்னையாகத்தான் உன்னையும் நான் காண்கிறேன். ஆனல் உன்னை எனக்கு மணம் செய்வித்திருக்கிறபடியால், நீ என்னை இலௌகிக வாழ்க்கைக்கு இழுக்க விரும்புவாயானல், அதற்கு நான் தடையேதும் செய்வதற்கில்லை," என்று சொல்லி, அம்மாது சிரோமணியின் பாதங்களில் வீழ்ந்து பணிந்தார். அப்பெண்மணியாரோ, தூய்மையான ஆன்ம சொரூபியாகையாலே, தம் கணவரது நிலைமையையும் குறிக்கோளையும் அறிந்து, அவரிடம் பரிவு காட்டத் தெரிந்துகொண்டார். ஆகவே, அவர் தம் கணவரைப் பார்த்து, இலௌகிக வாழ்க்கை நிலைக்கு அவரை இழுத்துவிடத் தாம் விரும்பவில்லையென்றும், அவருக்குத் தொண்டு புரிந்து அவரது பெருமையை அறிந்துகொள்ளவே அங்கு வந்ததாகவும் பதிலுரைத்தார். அது முதல் அம்மாதரசியார் அவரது மிக நெருங்கிய சீடர்களுள் ஒருவராய் அமர்ந்து அவரைத் தெய்வாமிசம் பொருந்தியவராகக் கருதிப் பூசித்து வந்தார். இவ்விதமாகத் தம் மனைவியாரது சம்மதத்தினுலேயே அப்பெரியார் தமக்கேற்பட்டிருந்த கடைசித் தடங்கலும் அகன்று தாம் விரும்பியபடி வாழ்வதற்குச் சுதந்தரரானுர்.

இரண்டாவதாக, பல வேறு மதங்களின் உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆசை அவரைப் பிடித்து வாட்டத் தொடங்கியது. அதுவரையில் தமது சொந்த மதத்தைத் தவிர்த்து வேறெந்த மதத்தைப் பற்றியும் அவர் அறிந்தவரல்லர்; பிற மதங்கள் எத்தகையன என்பதை அறிய ஆவல் கொண்டபடியால், அவ்வம்மதங்களின் ஆசாரியர்களைத் தேடத் தலைப்பட்

டார். இந்தியாவிலுள்ள நாங்கள் ஆசாரியர் என்று கூறும்போது நீங்கள் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டுவதொன்றுண்டு: அஃதாவது, நாங்கள் எவரை ஆசாரியர் என்கிறேமோ, அவர் ஏட்டுப் படிப்பு மட்டுமுடையவர் அல்லர்; அனுபூதி வாய்ந்தவராவர்; பிறரால் அன்றி உண்மையைத் தாமே நேரிற்கண்ட பெரியார் எனவே கொள்கிறேம். என் குருநாதர் மகம்மதிய பக்கிரியைக் கண்டு, அவருடன் வாழ்ந்து, அவர் போதித்த சாதனங்களிற் பழகி வந்தார்; இச்சாதனங்களும் உண்மையாக அனுசரித்து வந்தபோது தாம் முன்னமே பெற்றிருந்த அனுபூதி நிலைக்கு அழைத்துச் சென்றதை உணர்ந்து ஆச்சரியப்பட்டார். இயேசுநாதர் உண்மையில் போதித்த மதத்தையும் அனுஷ்டித்தபோது இதுபோன்ற அனுபவத்தையே அடையலானார்; தமக்குத் தெரிந்த எல்லா மார்க்கங்களிலும் இறங்கி, அவ்வவற்றில் கூறிய வண்ணம் முழு ஆர்வத்துடன் ஈடுபடலாயினர். அவ்வம்மார்க்கங்களிற் சொல்லப்பட்டபடி எல்லா விஷயங்களிலும் ஒரு சிறிதும் வழுவாது நடந்து வந்தபோது கடைசியாக அவ்வொரே முடிவு அவர்க்குப் புலனாயிற்று. இவ்விதம் தமது சொந்த அனுபவத்தின் மூலமாக எல்லாச் சமயங்களின் முடிபும் ஒன்றே எனவும், ஒவ்வொரு மதமும் ஒன்ருன அவ்விலட்சியத்தையே போதிக்கின்றதெனவும், அனுசரிக்கும் முறையிலும், முக்கியமாக மொழியிலுமே வேற்றுமை இருக்கின்றதெனவும் அவர் அறிந்து கொண்டார். ஒவ்வொரு மதத்திற்கும் அதனதன் உட்பிரிவினைகளுக்கும் நடுநாயகமாய் இருப்பது ஒரே இலட்சியந்தான். மாந்தர் தத்தம் சுயநலத்தின்பொருட்டே பூசல் இடுகின்றனர். உண்மைப் பொருளை அறிய அவர்கள் விரும்பாமல், கடவுளுக்குத் தாமிட்ட பெயர்க்கே ஆத்திரப்படுகின்றனர். இரு சமயங்களும் ஒரே உண்மையைத்தான் போதிக்கின்றன; என்ருலும், ஒருவன், "அஃது உண்மையாகாது; ஏனெனில், என் பெயருள்ள முத்திரையை அதில் நான் போடவில்லை. ஆகவே, அவனுக்குச் செவி சாய்க்க வேண்டா," என்கிருன். பிற மதத்தானும், "அவன் கூறுவதைக் கேட்க வேண்டா. அவன் கூறுவது நான் கூறுவதைப் பெரும்பாலும் ஒத்திருப்பினும், அவன் என்னுடைய பேரிஞலேயே போதிக்கிருனில்லை; ஆகையால், அவனுக்குக் காது கொடுக்கலாகாது," என்று மொழிகின்ருன்.

இதுவே என் குருநாதர் கண்ட உண்மையாகும். பிறகு தன்னடக்கம் என்பதைப் பின்பற்றலானார்; ஏனெனில், ஒவ்வொரு மதத்திலும் 'நானல்லேன்; எல்லாம் நீயே,' என்னும் ஒரு

பொருளே போதிக்கப்பட்டிருக்கின்றது. எவனொருவன், ‘நானல்லேன்,’ என்கிருனே, அவனது இதயத்திலேயே பகவான் உறைகின்ருன். எவ்வளவுக்கெவ்வளவு ‘நான்’ என்னும் இவ்வகங்காரம் சாகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு மிகுதியாக ஆண்டவன் அவனிடம் குடிகொள்கிருன். இந்த ஒரு விஷயமே உலகத்திலுள்ள எல்லா மதங்களினுடைய இலட்சியம் எனத் தெரிந்துகொண்டு அதைத் தமது வாழ்க்கையில் நிறைவேற்றத் தொடங்கினர். எதையேனும் செய்ய விரும்பினுல், முன்னமே நான் கூறியபடி அவர் அக்காரியத்தின் அதிநுட்பமான தத்துவங்களோடு நின்றுவிடாமல், அடுத்த கணத்திலே அதை அனுஷ்டானத்தில் கொணர்ந்துவிடுவார். ஈகை, சமத்துவம், பிறமக்களின் உரிமை, என்றின்ன அதிஅபூர்வ சூக்ஷ்ம விஷயங்களைப்பற்றிப் பேசும் மாந்தர் பலரை நாம் காண்கிருேம். எனினும், அவை அவ்வளவும் தத்துவத்தோடு கூடிய வெறுஞ்சொல்லளவில் நின்றுவிடுகின்றன. இத்தத்துவங்கள் அனைத்தையும் தம் வாழ்க்கையில் அனுஷ்டித்து வந்த ஒரு பெரியாரைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. எதுவொன்று தமக்கு உண்மையெனத் தோன்றுகின்றதோ, அதைத் தமது வாழ்க்கையில் பின்பற்றும் அபூர்வ சத்திவாய்ந்தவராய் இருந்தார் அவர்.

அப்பெரியார் உறைந்து வந்த காட்டுக்கருகில் ஒரு பறைச்சேரி இருந்தது. இந்தியாவில் இலட்சக் கணக்கான பறையர்கள் இருக்கின்ருர்கள். அவர்கள் மிகமிகத் தாழ்ந்த மக்களாகையினுலே, பார்ப்பனன் ஒருவன் தன் வீடு விட்டு வெளி வந்ததும் ஒரு பறையனைக் கண்கொண்டு பார்த்துவிட்டால், அதனுலுண்டாகும் கெடுதலை அகற்றுதற்காக அன்று முழுதும் பட்டினி கிடந்து சில மந்திரங்களை ஓத வேண்டுமென்று எங்கள் நாட்டு நூல்களிற் சில கூறுகின்றன. சில நகரங்களிலே பறையர்கள் வீதி வழியாகச் செல்ல நேருமாளுல், அவர்கள் தாங்கள் பறையர்கள் என்பதற்கு அறிகுறியாகக் காக்கையிறகொன்றைத் தலையிற் செருகிக்கொண்டு, “உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்; வீதி வழியாகப் பறையன் செல்கிருன்,” என்று உரக்கக் கூவுவதுண்டு. என்ன ஆச்சரியம்! இம்மொழிகளைச் செவியுற்றதும் மக்கள் மந்திரசத்தி போல மாயமாய்ப் பறந்தோடிவிடுவதைக் காண்பீர்கள்! ஏனெனில், தற்செயலாக அவனைத் தொட்டுவிட்டால், நீராடவும் துணிகளை மாற்றவும், வேறு பிற செய்யவும் நேருகின்றன. தன்னுடைய மெய் தீண்டலால் பிறர் அசுத்தமாகிவிடுகின்றனர் என்பதை ஒவ்வொரு பறையனும் ஆயிரக்கணக்கான

வருடங்களாக நம்பி வருகின்ருன். அத்தகைய பறையன் ஒருவன் வீட்டிற்கு என் குருநாதர் சென்று அவனது வீட்டைச் சுத்தம் செய்வதற்கு அனுமதி கேட்பார். நகர வீதிகளின் அழுக்கை அகற்றுவதும், ஒவ்வோர் இல்லத்தின் அசுத்தத்தையும் அப்புறப்படுத்துவதுமே பறையர்களின் தொழில். அவன் வாயில் வழியாக உள்ளே செல்லக்கூடாது; புறக்கடை வழியாகத்தான் நுழைந்து செல்லவேண்டும். அப்படி வந்து அசுத்தங்களை எடுத்துப்போனதும் அவன் வந்ததால் உண்டாகும் மாசை அகற்றுவதற்காக நீர் தெளித்து அத்தலத்தைப் புனிதப்படுத்துவது வழக்கம். பிறப்பினுல் ஒரு பார்ப்பனன் தெய்வத் தன்மைக்கு அறிகுறியாய் இருக்கிருன். பறையனே, அதற்கு முற்றிலும் எதிரிடையான இழிநிலைக்கு உதாரணமாகின்ருன். அத்தகைய பிராம்மண குலத்திலுதித்த என் குருநாதர், ஒரு பறையனது வீட்டின் அசுத்தங்களை அப்புறப்படுத்துவதற்கு அனுமதி கேட்பார். பறையனே, அதற்கு ஒரு சிறிதும் சம்மதிக்க மாட்டான்; ஏனெனில், அவ்வித இழிதொழிலை ஒரு பார்ப்பனனைச் செய்ய விடுத்தால், அது தங்களுக்கு மகா பாதகத்தை விளைவித்துத் தங்களைப் பூண்டற அழித்துவிடுமென்று பறையர்கள் நம்புகின்ருர்கள். பறையன் அவ்விதம் செய்ய இடம் கொடுக்காததாலே, ஸ்ரீ ராமகிருஷ்ணர் நள்ளிரவில், அவனும் அவன் வீட்டாரும் அயர்ந்து உறங்கிக்கொண்டிருக்கும்பொழுது வீட்டிற்குள் நுழைவார். அவருக்கு அப்பொழுது தலைமயிர் நீண்டு வளர்ந்திருந்தது; துடைப்பத்திற்குப் பதிலாக அம்மயிர்கொண்டு துடைத்து, "அன்னய், என்னைப் பறையனுக்கும் அடிமையாக்குக; பறையனிலும் தாழ்ந்தவன் நான்—என்னும் உணர்ச்சியை என்னுள் எழுப்புவாயாக," என்று உலக அன்னையைப் பிரார்த்தனை செய்துகொண்டே அப்பறையன் வீட்டுக்கொல்லையைக் கழுவுவார். "அடியாரைப் பூசிப்பவர்களே என் பத்தர்களிற் சிறந்தவர்கள்; அவர்களெல்லோரும் என் குழந்தைகளாகையால், அவர்களுக்குத் தொண்டு செய்வதே எனது உரிமையாகும்," என்ற தெய்வ வாக்கே இந்து சாத்திரங்களின் உள்ளக் கிடக்கை.

என் குருநாதர் இங்ஙனம் அனுசரித்த சாதனைகள் பலவாகும்; அவை அனைத்தையும் எடுத்துரைப்பதென்பது இப்போது இயலாத காரியம். ஆகவே, அவரது சரித்திரத்தைச் சுருங்க உரைக்க விரும்புகிறேன். நாற்பது வருஷ காலம் இவ்விதம் தாம் பலவிதமாகப் பயின்று வந்தார். ஆன்மா, பால் வேற்றுமை

யற்றது; அஃது ஆணுமன்று; பெண்ணுமன்று. ஆகையாலே, இப் பால் வேற்றுமை தம்மிடமிருந்து முற்றும் நீங்கப் பெறும் போதுதான் சமய வாழ்க்கையில் பூரணத்தன்மை அடைய முடியு மென்று அவர் உறுதியாய் நம்பியிருந்தார். சரீரத்திலேயே ஆண் பெண் என்ற வேற்றுமை உளது; ஆன்மாவை அடைய ஆர் வம் கொள்ளும் ஒருவன், அதே சமயத்தில் ஆண் பெண் வித்தி யாசம் கொள்ளுதல் கூடாது. ஆடவராகப் பிறந்ததனாலே அப் புருஷர், எல்லா விஷயத்திலும் தம்மைப் பெண் தன்மையுள்ளவ ராகக் கருதலானார். தம்மிடமிருந்து பால் வேற்றுமை முற்றிலும் அகலும் வரைக்கும் பல வருஷகாலம் அவர் தம்மை ஒரு பெண் ணாக நினைத்து, பெண்போல உடுத்து, பெண்போலப் பேசி, ஆடவர் செய்யும் செய்கைகளை விடுத்துப் பெண்டிருடைய காரி யங்களைக் கைக்கொண்டு, உயர்குலப் பெண்டிர்களுடன் அந்தப் புரத்தில் வசிக்கலானார்; இவ்விதச் சாதனையால் ஆண் பெண் வேற்றுமையை அறவே நீக்கினார். அவரது வாழ்க்கை முழுதும் இங்ஙனம் மாறிவிட்டது. மேலை நாட்டிலே பெண்களைப் போற்று வது எதன்பொருட்டு? பொதுவாக அவர்களது இளமைக்கும் கட்டழகிற்குமே. ஆனால், அப்பெரியார் பெண்களை ஏன் பூசித்தா ரென்றால், அவர் மகளிர் ஒவ்வொருவர் முகத்திலும் உலக அன்னை யைத் தவிர்த்து வேறொன்றும் காணவில்லை. சமூகத்தினரால் புறக்கணிக்கப்பட்ட பொது மகளிரது முன்னிலையில் நின்று கொண்டு அவர்கள் கால்களில் வீழ்ந்து, "அம்பிகே, என் ஆருயிர் அன்னையே, ஒரு வடிவத்தில் நீ பொதுமகளாயும், மறு வடிவத்தில் ஜகதம்பிகையாயும் விளங்குகின்றாய்; அத்தகைய உனக்கு வணக்கம்! வணக்கம்!" என்று கண்களில் நீர் பெருகச் சொன்னதை நான் கண்ணாரக் கண்டுளேன். என்ன பரமா னந்த வாழ்க்கை! எல்லாச் சிற்றின்ப ஆசைகளும் அகன்று விட்டன; ஒவ்வொரு பெண்ணையும் அன்பு வணக்கத்தோடு நோக்குவது! ஒவ்வொரு மகளிரின் முகமும் மாற்றப்பட்டு மனித இனத்தையே காப்பாற்றும் ஆனந்த மயமான அன்னை ஜகதம்பி கையே அம்முகத்தில் ஒளிவிடச் செய்வதான வாழ்க்கை அது! இவ்வித வாழ்க்கையே நாம் விரும்பத்தக்கது. பெண்களிட மிருக்கும் தெய்விகத் தன்மையை மறைக்க முடியுமென்று எண்ணுகிறீர்களா? அது ஒருபோதும் முடியாது; இனி ஒரு போதும் இயலாது; சலிக்காது எப்போதும்போல் உறுதியாய் நிற்கின்றது. அது குற்றத்தை வெளிப்படுத்தத் தவறுவதில்லை. பொய் வேடத்தைப் பகிரங்கப்படுத்தப் பின் வாங்குவதில்லை;

உண்மை வேடத்தை உண்மையாக உணருகின்றது ; ஆன்மிக ஒளியைத் திண்ணமாக அறிந்துகொள்கின்றது. உண்மையான ஆன்மஞானம் அடைய வேண்டுமானால், இவ்விதத் தூய்மை வேண்டுவது மிகமிக அவசியமாகும்.

சிறிதும் மாசு மறுவுக்கிடமில்லாத அவ்வளவு கண்டிதமான பரிசுத்தத்தன்மை அவர் வாழ்க்கையில் மிளிர்ந்தது. நமக்கெல்லாம் இருந்து வரும் வாழ்க்கைத் துன்பங்கள் அவருக்கில்லாது போயின. தமது ஆயுளில் முக்கால் பாகம் செலவு செய்து அதி சிரமத்துடன் சம்பாதித்த ஆன்மஞான நன்மணிகளை எல்லாம் மனித இனத்திற்கு நல்குவதற்குச் சித்தமாயிருந்தனர்.

அதன் பிறகு அவர் தமது பணியைச் செய்யலானார். அவரது உபதேசங்களும் உபந்நியாசங்களும் விசித்திரமானவைகள். எங்கள் நாட்டிலே ஆன்மஞான குரு ஒருவர் கடவுளாக மதிக்கப் பட்டுப் பத்தி பூர்வமாகப் பூசிக்கப்படுபவராவர். எங்கள் தாய் தந்தையர்களுக்குங்கூட அவ்வளவு மரியாதை நாங்கள் செய்வ தில்லை. தாயும் தந்தையும் நமது உடலை மாத்திரம் தருகின்றனர். ஆனால், குருவோ, மோட்சத்திற்கு வழி காட்டுகின்றார். நாங்கள் அவருக்கு ஆன்மஞான வழியில் தோன்றிய குழந்தைகளாவோம். மிக உயர்ந்த நிலையடைந்த ஆசாரியர் எங்கேனும் இருக்கின்றார் என்று கேள்விப்பட்டால், இந்துக்களெல்லாம் அங்கே சென்று, அவரைச் சூழ்ந்துகொண்டு, அவரைப் பயபத்தி பணிவுடன் பூசிக்கின்றனர். அத்தகைய அபூர்வ ஆசாரியராய் விளங்கினார் அப்பெரியார் ; எனினும், தாம் ஒரு பெரிய மதபோதகர் என்னும் எண்ணம் சிறிதும் கொண்டவரல்லர் ; யாவையும் இறைவியே இயற்றிவருகிறாள், தாமியற்றவில்லை என்று எண்ணினார்.

" நன்மை பயக்கத்தக்க வார்த்தைகள் எவையேனும் எனது வாயினின்றும் வந்தால், அவை என்னுடையவைகளல்ல ; அன்னையே அங்ஙனம் பேசுகிறாள்," என்று எப்பொழுதும் அவர் கூறுவதுண்டு. அதுவே தம் வேலைகளைப்பற்றியும் அவருக்கிருந்த உட்கருத்து. தமது முடிவு காலம் வரை அவர் இந்த மனோபாவத்தைச் சிறிதும் மாற்றினாரில்லை. அவர் எவரையும் தேடிச் சென்றதில்லை. 'முதலில் நல்லொழுக்கத்தையும் ஆன்ம ஞானத்தையும் தேடிக்கொள் ; வரவேண்டிய பலன்கள் தாமே வந்தெய்தும்," என்பது அவரது கொள்கை.

" தாமரை மலர்ந்ததும், தேனைப் பருகத் தேனீக்கள் தாமே வந்து சேர்கின்றன ; அதே போல, உன் ஒழுக்கமாகிய தாமரை

முழுதும் மலரட்டும். அதனுடன் பலன்கள் தாமும் பின்பற்றி வருவது திண்ணம்,'' என்பது அவரது பிரியமான உவமையாகும். இது அனைவரும் கற்கவேண்டிய பெரியதொரு படிப்பினை. என் குருநாதர் நூற்றுக்கணக்கான முறை இப்படிப்பினையை எனக்குப் போதித்தார்; எனினும், இதை நான் அடிக்கடி மறந்துவிடுகிறேன்.

சிந்தனையின் அபார சத்தியை அறிந்தவர் ஒரு சிலரே. ஒரு மனிதன் குகையொன்றில் புகுந்து தன்னை முற்றிலும் அடைத்துக்கொண்டு மிக உன்னதமான ஓரெண்ணத்தை மாத்திரம் எண்ணிவிட்டு இறந்துபட்டாலுங்கூட, அந்த எண்ணமானது குகையின் சுவர்களைத் துளைத்துக்கொண்டு ஆகாயத்தின் மூலமாகப் பரவி, இறுதியில் மனித இன முழுவதிலும் ஊடுருவிப் பாய்கின்றது. அவ்வளவு அபாரமானதாகும் சிந்தனா சத்தி என்பது. ஆகவே, உங்களுடைய கருத்தைப் பிறருக்குரைக்க அவசரப்படாதீர்கள். கொடுப்பதற்கு ஏதேனும் முதலில் சம்பாதித்துக்கொள்ளுங்கள். கொடுப்பதற்கு ஏதேனும் வைத்துக் கொண்டிருப்பவனே உபதேசம் செய்பவனாவான்; ஏனெனில், உபதேசம் வெற்று வாய்ப்பேச்சன்று; உபதேசம் என்பது சில கொள்கைகளை வெளியிடுவது மாத்திரமன்று; ஆனால், நம்முடைய சுபாவத்தை—தன்மையைப் பிறருள் செலுத்துவதேயாகும். ஒரு மலரை எங்ஙனம் நான் உமக்குக் கொடுக்கக் கூடுமோ, அதே போன்று ஆன்ம ஞானமும் அவ்வளவு உண்மையாகப் பிறருக்களிக்கக் கூடியதே. இவ்வுவமானம் முற்றிலும் உண்மை. இவ்விஷயம் இந்தியாவில் நெடுங்காலமாய் இருந்து வருகின்றது. மேலைநாட்டில் தீர்க்கதரிசிகளின் தொடர்ச்சியில் இருக்கும் நம்பிக்கையும் கொள்கையுமே இக்கருத்திற்கேற்ற அத்தாட்சியாகும். ஆகவே, முதலில் ஒழுக்கம் சம்பாதித்துக் கொள்க—அதுவே நீங்கள் செய்யவேண்டிய உயர்ந்த தருமம். மெய்ப்பொருளை நீங்கள் தெரிந்து கொண்டவர்களாய் இருங்கள். பின்னர்ப் பலர் உங்களை நெருங்குவர். அப்போது நீங்கள் அவர்களுக்கு உபதேசம் செய்யலாம். உண்மையில் அவர்கள் எல்லோரும் உங்களிடம் வந்து சேர்வார்கள். நீங்கள் அவர்களைத் தேடிச் செல்லும் அவசியமில்லை. இதுவே என் குருநாதரின் மனோபாவனை.

அவர் எவரையும் குறை கூறியது இல்லை. நான் பல ஆண்டுகள் அவருடன்
எனினும், எந்த மதத்தைக்

குறித்தேனும் அவரது வாயிலிருந்தெழுந்த நிந்தனை மொழிகளை நான் கேட்டதே இல்லை. ஒவ்வொரு மதத்தினிடத்தும் அவருக்கு அபிமானம் இருந்தது. அவர் எல்லா மதங்களிலும் சமரசத்தைக் கண்டறிந்தவர். ஒருவன் ஞானியாயிருக்கலாம்; பத்தியுள்ளவனுகவோ, பெரிய யோகியாகவோ, அன்றிக் கருமத்தில் சித்தி பெற்றவனுகவோ இருக்கலாம்; உலகத்திலுள்ள பல்வேறு மதங்களும் இப்பாவனைகளில் ஏதேனும் ஒன்றைக் குறிக்கின்றன. எனினும், இவ்வெல்லாப் பாவனைகளையும் ஒரே மனிதன் அடையும்படி செய்யலாம்; இவ்வுயர்ந்த நிலையைத்தான் இனி வருங்கால மனித இனம் அடையப் போகின்றது. இதுவே அவரது கொள்கை. ஒருவரையும் அவர் குறை கூறவில்லை. எல்லோரிடத்தும் அவர் நன்மையைத்தான் கண்டார்.

அவ்வபூர்வ மனிதரைத் தரிசிக்கவும் அவருடைய மொழிகளைக் கேட்கவும் மாந்தர் ஆயிரக்கணக்காக வந்துகொண்டிருந்தனர். அவர் வாயினின்றும் எழுந்த ஒவ்வொரு வார்த்தையும் சர்வசத்தியும் இயற்கைப் பேரொளியும் வாய்க்கப் பெற்றிருந்தது. பேசப்படுவதில் அன்று; பேசும் மொழியிலும் விசேஷம் இல்லை. அவர் கூறும் ஒவ்வொரு வார்த்தையிலும் குடிகொண்டிருக்கும் ஆன்ம சத்தியே அம்மொழிகளுக்கு அவ்வளவு உணர்ச்சியைத் தருகின்றது. இவ்வுண்மையைச் சிற்சில சமயம் நாமும் உணருகின்ருேம். மிகுந்த சொல் வன்மைப் பொருந்திய சிறப்பான சொற்பொழிவுகளைக் கேட்கின்ருேம். பொருத்தமுள்ள தத்துவ ரீதியோடு கூடிய தருக்கங்களைக் கேட்கின்ருேம்; எனினும், வீடு சென்றதும் கேட்டனவெல்லாம் மறந்து போகின்றன. சில நேரங்களிலே சிற்சில சொற்கள், சாதாரண மொழியிலே பேசப்படுவன, நமது செவியகம் புகுந்தவுடனே அவை நமது உள்ளுக்குள்ளே புகுந்து உயிருடன் ஒன்றி நம்மை விட்டகலாத பலன்கள் தருகின்றன. எவன் ஒருவன் தான் பேசும் வார்த்தைகளின் மூலமாகத் தன் சத்தியைச் செலுத்தக் கூடியவனு யிருக்கின்ருனே, அவனுடைய சொற்கள் வீண் போகின்றதில்லை. ஆனுல், அவன் சிறந்த ஆன்ம சத்தி பெற்றவனுய் இருக்க வேண்டும். எல்லா உபதேசங்களும் கொடுப்பதிலும் வாங்குவதிலும் நிலைத்திருக்கின்றன. குரு கொடுக்கின்ருர்; சீடன் கொள்கின்ருன். ஆனுல், கொடுப்பதற்கு குரு தம்மிடம் ஏதேனும் வைத்திருக்க வேண்டும்; அதே போலச் சீடனும் அதைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவனுக இருக்க வேண்டும்.

அப்பெரியார் கல்கத்தா நகரினருகே வசிக்கலானூர். அந் நகரம் இந்தியாவின் தலைநகராகவும், பல்கலைக் கழகங்களின் முதன்மை பெற்ற பட்டணமாகவும் விளங்குகின்றது. அக் கழகத்திலிருந்து ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான நாத்திகர் களும் லோகாயதவாதிகளும் வெளி வந்துகொண்டிருந்தனர். அக் கலாசாலை மனிதர்கள் நாத்திகராயும், ஐயுறுவாதிகளாயும், அஞ் ஞேயவாதிகளாயும் இருந்தாலும், அப்பெரியாரிடம் வந்து அவர் உபதேசங்களைக் கேட்பது வழக்கம். நானும் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவர் கூறுவதைக் கேட்கச் சென்றேன். யாதொரு சிறப்புமில்லாத ஓர் சாதாரண மனிதராகவே அவர் எனக்குத் தோன்றினூர். அவர் சர்வ சாதாரணமான மொழியிலே பேசக் கண்ட நான், "இம்மனிதரும் ஒரு பெரிய ஆசாரியராய் இருக்க முடியுமா!" என்று ஐயுற்றேன். அவர் அருகிற் சென்று, என் வாழ்நாள் முழுதும் பலரைக் கேட்டதான, "ஐயா, நீர் கடவுளைக் கண்டதுண்டா!" என்னும் கேள்வியையே அவரிடத்திலேயும் கேட்டேன். அதற்கு, 'ஆம்' என்று மறுமொழி கூறினூர். 'தேவரீரால் அதை மெய்ப்பிக்க முடியுமா?' என்றேன். 'முடியும்' என்று சொல்ல, 'எப்படி?' என்று வினவினேன். "நான் உன்னைக் காண்பது போலவே அவரையும் காண்கின்றேன்; அதிலும் மிகமிகத் தெளிவாகக் காண்கின்றேன்," என்றூர் அம் மகான். உடனே அது என் மனத்திற் பதிந்தது. ஏனெனில், கடவுளைக் கண்டிருக்கிறேனென்று தைரியமாகச் சொல்லக்கூடிய மனிதரை அப்போதுதான் நான் முதன் முதலாகக் கண்டேன். மதம் என்பது அனுபவத்துக்குத் தகுந்த உண்மைதான் என்றும், உலகின் இருப்பை உணருவதினும் காண்பதினும் பார்க்க ஆயிரம் மடங்கு தெளிவாக அறியப்படுவதென்றும் தைரியமாகக் கூறக் கூடிய மனிதரை முதன்முதலாக அப்போதுதான் கண்டேன்.

அப்பெரியாரிடம் நான் அடிக்கடி போய்க்கொண்டிருந்தேன். நாளடைவில் சமயம் என்பது பிறருக்குக் கொடுக்கக்கூடிய பொருள் என்பதையும் நான் தெளிவாகக் கண்டேன். கை பட்டால் போதும்; கடைக்கண் பார்வையே போதும்; ஒருவ னுடைய வாழ்க்கை முழுவதையுமே மாற்றிவிடக் கூடும். புத்த பிரான், இயேசுநாதர், மகமது முதலியவர்களும் பழைய காலத்துப் பல வேறுன விண் சுடரனைய மகான்களும் ஒரு மனிதனைப் பார்த்து, "நீ பரிபூரணனுகக் கடவாய்!" என்று கூறியவளவிலே பூரணத் தன்மையடைந்தான் என்பதை நான் நூல்களின் மூல மாய்ப் படித்திருந்தேன். ஆனூல், இப்போதே அது உண்மை

என்று எனக்குத் தெரிந்தது. அப்பெரியாரை நான் நேரிற் கண்ட வுடன் என்னுடைய ஐயங்கள் யாவும் பறந்துபோயின. "உலகத் திலுள்ள மற்றெந்தப் பொருளினும் மதம் என்பது உண்மை யாகவும் தெளிவாகவும் உறுதியாகவும் பிறருக்குக் கொடுத்தலுங் கூடும், பெறுதலுங் கூடும்," என்று என் குருநாதர் கூறுவது வழக்கம். உண்மையில் அஃது பிறருக்குக் கொடுக்கக் கூடியதாகும். ஆகவே, முதலில் ஆன்ம ஞானியாகுக. கொடுப்பதற்கு ஏதேனும் கொஞ்சம் சேமித்துக் கொள்ளுக. பிறகு உலகினருக்குக் கொடுக்க முன்வரலாகும். மதம் என்பது வெற்றுவாய்ப் பேச் சன்று; வெறுங்கொள்கைகளும் அனுமானங்களுமல்ல; ஆசாரம் என்பதுமன்று. சமயம் சம்பிரதாயங்களையும் சமூகங்களையும் ஆதாரமாகக் கொண்டதில்லை. ஆன்மாவிற்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தமே மதமெனப்படுவது; ஆகவே, எப்படி அதை மக்கட் சமூகமாக்க முடியும்? அப்படிச் செய்யின், வாணிப நிலைமைக்கு வந்து சீர் குன்றிப்போம். எங்கு மதம் வியாபாரத் தோரணையிலிறங்கி விடுகின்றதோ, அங்கு ஆன்ம ஞானம் அழிந்து போய்விடுகின்றது. கோயில் கட்டுவது, தொழுகைச் சாலைகள் நிருமிப்பது, அன்றிப் பொது வழிபாடு என்னும் இன்னவைகளிலே மதம் தங்கி இருக்கவில்லை. அது புத்தகங் களிலும், வாய்ப் பேச்சிலும், பிரசங்கங்களிலும், பொதுச் சங்கங் களிலும் காணப்படமாட்டாது. மதமெனப்படுவது ஆன்மானு பூதியேயாகும். உண்மையை நாமே உணரும்வரை மற்றேதும் நம்மைத் திருப்திகொள்ளச் செய்யாது என்பது நாம் அறிந்த தொன்று. எவ்வளவுதான் நாம் வாதம் புரிந்தாலும், எத்தனை முறைதான் காதுகொண்டு கேட்டாலும், நம்மைத் திருப்தி செய்விப்பது ஒன்று மாத்திரமே. அவ்வொன்றுதான் சுவானு பூதி—தனக்குத்தானே உண்மையை உணர்தல். இவ்வனுபூதி, முயற்சி செய்தால் ஒவ்வொருவராலும் அடைதற்பாலதே. மதத் தைச் சுவானுபவமாக்குவதுதான் முயற்சிக்கு முதற் படியாயிருக் கும் துறவாகும். நம்மால் எவ்வளவு கூடுமோ, அவ்வளவு துறந்துவிட வேண்டும். இருளும் ஒளியும், சிற்றின்பமும் பேரின்பமும் ஒருபோதும் ஒன்றிச் செல்லா.

ஒரே சமயத்தில் ஆண்டவனுக்கும் பேய்க்கும் தொண்டு செய்தல் இயலாது. வேண்டுமானால், மக்கள் முயற்சி செய்து பார்க்கட்டும். இவ்விதம் முயற்சி செய்த இலட்சக்கணக்கான மாந்தரை உலகமெங்கணும் நான் கண்ணுற்றிருக்கிறேன். அவர்கள் முயற்சி யாவும் பாழ்பட்டுப் போகின்றன. சாத்திரங்

களிலே உண்மையென்று சொல்லக்கூடிய வார்த்தை ஒன்று உள தானுல், அதுவே துறவெனப்படுவது—கடவுளின் நிமித்தம் அனைத்தையும் தியாகம் செய்துவிடுவது. இது நீண்டதும் கடினமுமான ஒரு காரியமாகும். எனினும், இப்போதே இதைச் செய்ய மேற்கொள்ளுங்கள். சிறிது சிறிதாக இதன் முடிவை அடைதல் வேண்டும்.

உலகமெங்கணும் உள்ள பல்வேறு சமயங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டும், பகையுடனுமிருப்பனவல்ல; அவற்றுள் ஒவ்வொன்றும் நித்தியமான ஒரே மதத்தின் பல்வேருன வழிகளாகும். அழிவற்ற அம்மதம், இயற்கையின் நிலைமைக்குத் தக்கவாறும், பல வேறு சாதியாருடைய எண்ணத்தின் தகுதிக்கேற்றவாறும் பின்பற்றப்பட்டு வருகின்றது. இதுவே நான் என் குருநாதரிடமிருந்து கற்றுணர்ந்த வியப்பை எழுப்பும் மிக முக்கியமான இரண்டாவது கொள்கையாகும். என்னுடைய சமயம் என்றும், உன்னுடைய சமயம் என்றும், எங்கள் நாட்டு மதம் என்றும், உங்கள் நாட்டு மதம் என்றும் தனித்தனியே இருந்ததில்லை. பல சமயங்கள் எப்போதும் இருந்தது இல்லை. இருப்பது ஒரே சமயந்தான். முடிவேயற்ற இவ்வொரே மதம் அழிவற்று இருந்து வருகின்றது. இனிமேலும் நித்தியமாகவே இருந்து வரும். இவ்வொரு மதமே பல்வேறு நாடுகளிலே பல்வேறு வகையாகத் தோன்றுகின்றது. ஆகவே, ஒவ்வொரு மதத்திற்கும் நாம் வணக்கம் செலுத்துவோமாக. எவ்வளவு கூடுமோ, அவ்வளவு நமது வாழ்க்கையிலும் பின்பற்ற முயலுவோமாக. சமயமானது வமிச பரம்பரைக்கும் நிலப் பாகுபாட்டிற்கும் ஒப்ப அமைந்திருப்பதோடல்லாது ஒவ்வொருவருடைய சத்திக்கேற்பவும் வெளிப்படுகின்றது. ஒருவனிடம் மதம் தீவிர கருமமாகத் தோன்றுகிறது. மற்ருெருவனிடத்திலோ, அது ஆழ்ந்த பத்தியாக வெளிப்படுகின்றது. பிறனொருவனிடத்தில் சிறந்த யோகமாகவும், ஏனையோரிடத்தில் ஞானமாகவும், பிறவாகவும் வெளிப்படுகின்றது. ஆகவே, பிறரைப் பார்த்து, "உமது வழிமுறை குற்றமுடையது," என நாம் குறை கூறுதல் தவருனதாகும். பத்தியே சுபாவமாகவுடைய ஒருவன், பிறருக்கு எப்பொழுதும் நற்கருமத்தைப் புரிபவன், சமய வழியிற் செல்வதில்லையென்று நினைப்பதுண்டு. ஏனெனில், தான் போகும் மார்க்கத்தை அவன் பின்பற்றுகிறதில்லையாதலால், அவன் பிழைபட்டவனுகிவிடுகிருன். ஒரு தத்துவ ஞானி, "ஆ! கருணாநிதியான கடவுளைக் குறித்து இவ்வறிவற்ற மக்களால் என்ன தெரிந்துகொள்ள முடியும்?

அவனிடத்தில் பத்தி செலுத்தத்தான் அறிந்துள்ளனரா ? தாங்கள் கூறுவது இன்னதென்றே இவர்களுக்குத் தெரியாது,'' என்று கூறுவானாகில், அவன் பிழைபட்டவனாவான் ; ஏனெனில், அவர்களுடைய வழிமுறைகள் ஒழுங்கின்பாற்படலாம் ; அவனுடையதும் முறைமையானதாக இருக்கக்கூடும். உண்மையானது ஒன்றேயானாலும், அது பல விதமானதென்று சொல்லவுங்கூடும். அவ்வொரே உண்மை பல்வேறு நிலைமைகளுக்கு ஏற்றவாறு பல விதமாகத் தோன்றுகின்றது என்னும் முக்கிய இரகசியம் ஒவ்வொருவரும் அறியவேண்டிய உண்மையாகும். ஆகவே, எவரிடத்தும் பகைமை பாராட்டாது, எல்லோரிடத்தும் அளவுகடந்த அனுதாப சிந்தை கொள்ளவேண்டும். உலகத்திலே பல்வேறு இயல்புள்ள மக்கள் பிறக்கும் வரையில் அவ்வொரே மதமும் அவர் தகுதிக்கு ஏற்றவாறு அமைக்கப்பட வேண்டியிருப்பதும் நாம் அறியக் கிடக்கின்றது. ஆகவே, ஒருவரோடொருவர் சகிப்புடையவர்களா யிருக்க வேண்டுமென்பதும் புலனாகின்றது. வேற்றுமையில் ஒற்றுமையிருப்பது இயற்கை. இயற்கையானது எல்லையற்ற பல மாறுதல்களுடன் கூடி உளது. அந்த அளவு கடந்த மாறுதல்களினூடேயும் மிக நுட்பமானதும், மாறுதலற்றதும், கலப்பில்லாததுமான ஒற்றுமைத் தன்மை அமைந்திருக்கின்றது. அதேபோல ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஏகத்துவம் இலங்குகிறது. பிண்டம் அண்டத்தினது நுட்பமான தோற்றமேயாகும். இவ்வளவு மாறுதல்களிருப்பினும், இவைகளினூடே நிரந்தரமாகச் சமரசம் பரவியிருக்கின்றதென்பதும் உண்மையாகும். இதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. இக்கருத்தே மற்றெல்லாக் கொள்கைகளைப் பார்க்கிலும் இந்நாளில் மிக அவசியமாக வேண்டற்பாலதென எனக்குத் தோன்றுகிறது. மத வேற்றுமைக்கே இருப்பிடமான ஒரு நாட்டிலிருந்து வந்துள்ளேனாகையால், என் இளமை முதற்கொண்டே உலகிலுள்ள பல சமயங்களைப் பற்றியும் நான் அறிந்திருக்கின்றேன்.

மார்மன் சாதியினரும் இந்தியாவில் பிரசாரம் செய்ய வந்தனர். எல்லோருக்கும் அது நல்வரவு கூறிற்று! அந்நாடே மதப் பிரசாரத்திற்கு ஏற்றதாயுள்ளது. அங்கேயே மற்றெந் நாட்டினும் சமயம் வேரூன்றிப் பதிகின்றது. நீங்கள் வந்து இந்துக்களுக்கு அரசியல் சம்பந்தமாகப் பேசினால், அதை அவர்கள் அறிந்துகொள்வதில்லை ; ஆனால், நீங்கள் மதப் பிரசாரம் செய்ய வருவீர்களாகில், அது எவ்வளவு விசித்திர

மானதாயிருப்பினும், நூற்றுக்கணக்காகவும் மிக விரைவில் மக்கள் உங்களைப் பின்பற்றுவார்கள் ; உங்கள் வாழ்நாளிலேயே நீங்கள் ஓர் உயிர் வாழும் கடவுளாகவும் ஆகிவிடுவதற்கான சந்தர்ப்பங்கூட வாய்க்கும். அதுபற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன் ! இந்த ஒன்றே நாங்கள் இந்தியாவில் வேண்டி நிற்பது.

இந்துக்களுக்குள்ளே மதப் பிரிவுகள் பல வகைப்பட்டனவாகவும் எண்ணிக்கையில் மிகுதியாகவும் உள்ளன. அவைகளுட் சில மேற்பார்வைக்கு ஒன்றுக்கொன்று மிகவும் முரண்பட்டனவாய் இருக்கின்றன. எனினும், இவை யாவும் ஒரே மதத்தின் பல தோற்றங்களே என்பதையும் அப்பிரிவினைகள் கூறுகின்றன. "பல்வேறு ஆறுகள் பல வேறு மலைகளிலிருந்து பிறந்து நேராகவோ வளைந்தோ ஓடிக் கடைசியில் கடலில் கலக்கின்றன. அதேபோல, பல வேறு பிரிவினைகள் தம் தம் கருத்துகளுடன் இறுதியில் நின்னையே வந்து அடைகின்றன," என்பது வெறுங் கோட்பாடன்று ; ஒவ்வொருவராலும் ஒப்புக்கொள்ளத்தக்க உண்மையாகும்.

ஆனால் ஏதோ ஆதரவு காட்டிப் பேசும் முறையிலிருக்கக் கூடாது. இத்தகைய இயல்பை நாம் சிலரிடம் காண்கின்றோம். "இவை வேறு இனத்தார் மதங்களா யிருக்கலாம். இவற்றிலும் நல்ல பொருள்கள் இருக்கின்றன," எனச் சிலர் ஆதரவு காட்டிக் கூறுவர். சரித்திரங்காணாத பரிணாமத்தின் சிறிய துண்டுகள் தாம் மற்றைய மதங்கள்; எங்களுடைய மதமோ, எல்லாவற்றினது பூர்த்தியாகும் என்று வியத்தகு விரிந்த எண்ணத்தையுடைய வேறு சிலர் சாற்றுவர்.

மதங்களினுள்ளே பழமையாயிருப்பதனாலே தன் மதமே சிறந்ததென ஒருவன் மொழிகின்றான். மற்றெல்லாவற்றிலும் வெகு சமீபத்தில் ஏற்பட்டதால் தனதே சிறந்ததென்று பிறனொருவன் வழக்காடுகிறான். ஒவ்வொரு மதமும் மற்றவற்றைப்போலவே பிறவிக் கடலிலிருந்து மீட்கும் சத்தி வாய்ந்ததாய் உள்ளதென்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்து கோயில்கள் அல்லது கிறித்தவ ஆலயங்கள் முதலியவற்றிலுள்ள மாறுபாடு என்று நீங்கள் கேள்விப்பட்ட அனைத்தும் வெறும் மூட பத்தியின் தொகுதியேயாகும். அந்த ஒரே கடவுளே எல்லோரையும் திருப்தி செய்கின்றார் ; ஓர் உயிரைக் காப்பாற்றவோ, அன்றி அதற்கு முத்தியளிக்கவோ, நீங்களோ, அன்றி நானோ, அல்லது ஒரு

குறிப்பிட்ட எந்தக் கூட்டத்தினரோ பொறுப்பாளிகளல்ல. எல்லாம் வல்ல அந்த ஒரே கடவுளே எல்லோருக்கும் பொறுப்பாவார். தாங்கள் கடவுள் நம்பிக்கையுடையவர்கள் என்று தாங்களே பறை சாற்றிக்கொண்டு, அதே சமயத்தில் கடவுள் எல்லா உண்மையையும் ஒரு சிறு கூட்டத்தினருக்கே தெரிவித்துள்ளார் எனவும், அவர்களே ஏனைய மக்கட்டொகுதி முழுதுக்கும் இரட்சகர்களெனவும் எப்படிக் கருதக்கூடும் என்பது பற்றி என்னால் ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை. எங்ஙனம் இதை மதம் என்று சொல்வது ? நேருக்கு நேர் காண்பதே—அனுபவமே—மதம். ஆனால், வெறும்பேச்சு, நம்புவதற்கு மாத்திரமே முயல்வது, இருட்டில் வீணைத் தடவிக் கொண்டிருப்பது, முன்னோர்கள் மொழிகளைக் கிளிப்பிள்ளைகள் போல முணுமுணுப்பது முதலியனவே மதம் என நினைப்பதும், மத உண்மைகளிலிருந்து வெற்று அரசியல் விஷயங்களைத் தேடிக்கொள்வதென்பதும் ஒருகாலும் மதமாகா. ஒவ்வொரு மதத்திலும்—எங்களினின்று மிகவும் புறம்பானவர்களென்று நாங்கள் கருதும் மகமதியர் மதத்திலும்–எப்போதேனும் மதத்தை அனுபவமாக்க முயலும் ஒருவர் தோன்றினால், அவர் வாயிலிருந்து, "எல்லோருக்கும் பொதுவான கடவுள் நீரே ; எல்லோருடைய இதயத்திலிருப்பவரும் நீரே ; நீரே எல்லோருக்கும் வழி காட்டுபவராயும், ஆசாரியராயும் இருக்கின்றீர் ; நாங்கள் கவனிப்பதினும், இவ்வளவென்று கூற முடியாதபடி மிகுதியாக உம் குழந்தைகளின் இருப்பிடத்தைப் பராமரித்து வருகின்றீர்," என்னும் மிகச்சிறந்த மொழிகள் வெளி வருகின்றன. எந்த மனிதனுடைய நம்பிக்கையையும் கலைக்க முயற்சி செய்யாதீர்கள் ; கூடுமானால், வேறு நன்மை ஏதேனும் புரியுங்கள். உங்களால் முடியுமானால், ஒரு மனிதன் உயர்ச்சியடைய உதவுங்கள். ஆனால், அவனது இயற்கையிலுள்ளதைச் சிதைத்துவிட வேண்டா. வேண்டுமெனில், ஒரு கணப்போதினுள்ளே தம்மை ஆயிரம் மனிதராக மாற்றிக்கொள்ளவும் எவரால் இயலுமோ, அவர் ஒருவரே ஒருண்மை ஆசாரியராவர். விரும்பிய அளவிலே தாம் மாணவனது நிலைமைக்கு இறங்கி வந்து, தமது ஆன்ம நிலையை மாணவனது ஆன்ம நிலைக்கு ஏற்றவாறு மாற்றி, மாணவனது கண் கொண்டு பார்க்கவும், அவனது செவி கொண்டு கேட்கவும், அவனது மனத்தினாலே எண்ணவும் எவரால் கூடுமோ, அவரே ஓர் உண்மை ஆசாரியர் ஆவர். அவ்வித ஆசாரியரே உண்மையாகப் பிறருக்குப் போதிக்கக்கூடும். வேறு எவராலும் போதிக்க

முடியாது. அழித்தல் முறை, நாத்திகவாதம், தகர்த்தெறிதல் முதலிய இயல்போடு கூடிய உலகின் கண்ணுள்ள ஆசாரியர்கள் ஒரு சிறிதும் நன்மை செய்யமாட்டார்கள்.

இந்த உடலிருக்கும் போதே மனிதன் பரிபூரணத் தன்மையை அடைய முடியும் என்பதை என் குருநாதரது சந்நிதியிற் கண்டு கொண்டேன். அவர் வாயினின்றும் சாப மொழிகள் ஒருபோதும் வெளி வந்ததில்லை; என்றும் அவர் எவரையும் குறை கூறியதும் இல்லை. அவருடைய கண்கள் ஒரு சிறிதும் தீமையைக் காணக் கூடாதனவாயிருந்தன; தீமையை எண்ணும் சத்தி முழுதையும் இழந்ததாய் இருந்தது அவரது மனம். எங்கும் நன்மையைத் தவிர்த்து வேறொன்றும் அவர் கண்டதில்லை. கண்டோர் வியக்கும் படியான அவ்வளவு தூய்மை, எண்ணும்போதே அச்சத்தை விளை விக்கும் அவ்வளவு கடின தியாகம்—இவையே ஆன்ம ஞானத் தின் மறை பொருளாவன. "கருமத்தினாலன்று; குழந்தைகளைப் பெற்று வமிசத்தை விருத்தி செய்வதாலன்று; பெருந்தனத்தாலு மன்று; பற்றின்மை, தியாகம் ஒன்றினாலேயே அமிருதத்தை (அழியாத் தன்மையை) அடைய முடியும்," என்று வேதங்கள் விளம்புகின்றன. "உன்னிடத்திலுள்ள அனைத்தையும் விற்று ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டு என்னைப் பின் பற்று," என்கிறார் இயேசு பெருமான். இவ்விதமாகவே எல்லா முனிவர் களும், தீர்க்கதரிசிகளும் எடுத்துக் கூறியிருப்பதோடு, இவ் வுண்மையைத் தம் வாழ்க்கைகளிலும் பின்பற்றியுள்ளனர். துற வில்லாமல்—தியாகமில்லாமல்—உயர்ந்த ஆன்ம ஞானத்தை எங்ஙனம் அடைதல் முடியும்? எவ்விடத்திலிருந்த போதிலும் மதக்கொள்கை எல்லாவற்றிற்கும் பற்றின்மையே—தியாகமே பின்னணியாகும். எங்கெங்குத் தியாகம் குறைபட்டுகின்றதோ, அவ்விடத்திலெல்லாம் இந்திரியங்கள் மதத்தில் உட்புகுந்து ஆன்ம ஞானத்தை அழியும்படி செய்வதை நீங்கள் பார்ப் பீர்கள்.

அப்பெரியார் தியாக உருவினராகவே விளங்கினார். எங்கள் நாட்டிலே ஒருவன் சந்நியாசம் பெற விரும்பின், அவன் உலக சம்பந்தமான சொத்துச் சுதந்தரங்களையும் பட்டம் பதவிகளையும் முற்றிலும் நீக்கிவிட வேண்டுவது இன்றியமையாததாகும். எங்கள் குருநாதரும் அவ்வாறே அதைத் தமது வாழ்க்கையில் உண்மையாக நிறைவேற்றினார். 'நம்மிடமிருந்து அவர் ஏதே னும் ஒரு பரிசு பெற இசைந்திருப்பாரானால் நாம் மிகவும் பாக்கிய

வந்தராய்விட்டிருப்போம்!' என்று எண்ணிய மாந்தர் பலர் இருந்தனர். அவர் அங்கீகரிப்பதாய் இருந்தால், அவர்கள் ஆயிரக் கணக்கான ரூபாய்களும் கொடுத்திருப்பார்கள். ஆனால், அவரோ, அத்தகைய மாந்தரிடமிருந்து தாம் விலகிச் செல்வது வழக்கம். அவர் பெண், பொன் ஆசைகளை முற்றிலும் வென்று விளங்கிய தீரராய்த் திகழ்ந்தார். அவர் இவ்விரண்டின் எண்ணங்கள் ஒரு சிறிதுமே இல்லாது விளங்கினர். இந்நாட்டிலே அத்தகைய பெரியார்கள் இருக்க வேண்டுவது மிக அவசியம். 'அவசியமானவை' என்று சொல்லிக்கொண்டும், அவற்றைத் தகுதிக்கதிகமாகப் பெருக்கிக்கொண்டும், அவைகளில்லாமல் ஒரு சில நாட்கள் கூட உயிர் வாழ முடியாதென்று கருதியும் மாந்தர் வாழ்க்கையை நடத்தும் இந்நாட்களிலே. இத்தகைய பற்றின்மை —இத்தகைய தியாகம்—வேண்டுவது அவசியமே. இப்படிப்பட்ட இக்காலத்திலே உலகத்திலுள்ள கடவுள் நம்பிக்கையற்ற மனிதர்கள் முன்பு ஒருவர் எழுந்து பிரபஞ்சத்தில் உள்ள பெருந்தனத்தையோ பெரும்புகழையோ ஒரு சிறிதும் கவனியாது உலகில் வாழ முடியுமென்பதை மெய்ப்பித்துக் காட்ட வேண்டுவது அவசியமாகும். அவ்வித மனிதர் இருந்தே வருகின்றனர்.

அவரது வாழ்க்கையின் மற்றொரு அமிசமாய் விளங்கியது பிறரிடத்தில் மிகுந்த அன்பு செலுத்துவதாகும். என் குருநாதர் வாழ்க்கையின் முதற்பாகம் ஆன்ம ஞானம் சேகரிப்பதிலும், எஞ்சிய நாட்கள் அதைப் பிறர்க்குப் பகிர்ந்து கொடுப்பதிலுமாகச் செலவழிக்கப்பட்டன. எங்கள் நாட்டிலே ஒரு சந்நியாசியையோ, அன்றி மத குருவையோ காணச் செல்லுங்கால் மக்கள் உங்களைப்போன்ற வழக்கங்களை அனுசரிப்பது இல்லை. ஏதோ ஒன்றைப் பற்றிக் கேட்பதாகச் சிலர் அவரிடம் வருவர். ஏதேனும் ஒரு கேள்வி கேட்பதற்கோ அவர் வாயினின்றெழும் ஒரு வார்த்தையைக் கேட்பதற்கோ நூற்றுக் கணக்கான மைல்கள் கால் நடையாக நடந்து வருவர் சிலர். "நான் மோட்சமடைவதற்கான ஒரு வார்த்தையைக் கூறுங்கள்," என்று கேட்பர் மற்றும் சிலர். இவ்வித நோக்கத்தோடேயே எங்கள் நாட்டில் மதகுருவைக் காணச் செல்வது மரபு. எங்கு அப்பெரியார் அதிகமாகக் காணப்படுவரோ, அவ்விடத்திற்குத் திரள்-திரளாக மக்கள் யாதோர் ஆசார நியதியையும் கைக்கொள்ளாது வருவார்கள். அவரை ஒரு மரத்தடியில் இருக்கக் கண்டால், அவ்விடத்திலேயே ஒரு கேள்வியைக் கேட்பார்கள். ஒரு கூட்டம் செல்வதன் முன்

மற்றொரு கூட்டம் வந்து சேர்ந்துவிடும். ஆகவே, ஒரு மனிதர் அதிகமாகப் போற்றப்படுவாராகில் சிற்சில வேளைகளில் அல்லும்-பகலுமாக அவருக்கு ஓய்வு ஒழிவு இரா. இடைவிடாமல் அவர் பேசிக்கொண்டேயிருக்கவேண்டும். மணிக்கணக்காக மாந்தர் வந்துகொண்டேயிருப்பர். அவரும் அவர்கள் அனைவர்க்கும் உபதேசித்த வண்ணமாகவேயிருப்பர்.

ஆகவே, மாந்தர் திரள்-திரளாக அவரிடம் ஐயம் தெளிய வந்தனர். அவரும் நாளின் இருபத்துநான்கு மணியில் இருபது மணி நேரம் பேசிக்கொண்டிருப்பர். இது இரண்டொரு நாட்கள் மாத்திரம் நடந்ததன்று; மாதக் கணக்காக, ஓயாது உழைத்ததன் பயனாய்த் தம் உடல் உடைபட்டுப் போகும்வரைக்கும் அவர் உப தேசம் செய்த வண்ணமாகவேயிருந்தார். மாந்தரிடம் இருந்த அவரது அளவு கடந்த அன்பு, ஆயிரம்-ஆயிரமாகத் தம் உதவியை நாடியவர்களுள் அற்பமான ஒருவனுக்கும் உதவி செய்ய மறுத்தது இல்லை. அதன் பயனாய் நாளடைவில் அவரது தொண்டையில் கொடிய வியாதி தோன்றத் தலைப்பட்டது. அப்போதும் அவரை இவ்விதத் தொண்டிலிருந்து தவிர்க்க முடியாது போயிற்று. தம்மைக் காணும்பொருட்டு மக்கள் ஆவல் கொண்டு நிற்கின்றார் கள் என்று அவர் கேள்விப்பட்டவுடனே அவர்களை உள்ளே விடும்படி வற்புறுத்தி, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதிலளித்து அனுப்புவார். இவ்விதம் உடல் தாங்குவதற்கு அதிக மான பணிகளைத் தவிருமாறு தடுத்த காலத்தில் அவர், "நான் அதுபற்றிக் கவலைப்படவில்லை. ஒரு மனிதனுக்கு உதவி செய் வதன் பொருட்டு இவ்விதம் ஆயிரம் யாக்கைகளையும் இழந்து விடத் தயங்கமாட்டேன்; ஒரே மனிதனுக்கு உதவி செய்வ தென்பதானாலும் அது புகழத்தக்க காரியமே," என்று பதி லளிப்பதுண்டு. அவருக்குச் சிறிதும் ஓய்வே கிடையாது போயிற்று.

ஒரு முறை ஒருவர் வந்து அவரைப் பார்த்து, "சுவாமி, நீங்களொரு பெரிய யோகியன்றோ? ஏன் மனத்தை ஒரு சிறிது உங்கள் சரீரத்தின் மீது செலுத்தி நோயை நீக்குதல் கூடாது?" என்று வினவினர். முதலில் அவர் அதற்குப் பதிலொன்றும் அளிக்கவில்லை. திரும்பவும் அதே கேள்வி கேட்கப்பட்டபோது, அவர் அமைதியுடன், "நண்ப, உன்னை ஒரு ஞானி என்றே நினைத்தேன். ஆனால், நீயும் உலகமாந்தரைப் போன்றே உரையாடுகின்றனை. முன்னமே இம்மனம் இறைவன்பால்

அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. அதைத் திரும்ப எடுத்து ஆன்மாவின் வெறுங்கூடாகிய உடலின் மீதா செலுத்த வேண்டு மென்கின்றாய்?'' என்று மறுமொழி பகர்ந்தார்.

இவ்விதம் அவர் போதனை செய்துவரும்போது விரைவிலே உடலை விட்டுப் போய்விடுவார் என்னும் செய்தி வெளியே எங்கும் பரவிய காலத்திலே மக்கள் முன்னிலும் திரள் திரளாக அவரிடம் வரத் தலைப்பட்டார்கள். இத்தகைய பெரிய ஆன்ம போதகரிடத் திற்கு இந்தியாவில் மக்கள் எவ்விதம் வருகின்றார்கள் என்பதைப் பற்றியும், எவ்விதம் அவர்களைச் சூழ்ந்துகொண்டு அவர்கள் உயி ரோடிருக்கும்போதே அவர்களைக் கடவுளர்களாக்கிவிடுகின்றார்கள் என்பதைப் பற்றியும் உங்கள் மனத்தால் எண்ணிப் பார்க்கவும் முடியாது. அவர்களது ஆடையின் விளிம்பைத் தொடுவதற் காகவே ஆயிரக்கணக்கானோர் காத்துக்கொண்டிருப்பர். இவ் விதம் பிறர்பாலுள்ள தெய்வத்தன்மையைக் கண்ணியப்படுத்து வதாலேயே நம்மிடையேயும் தெய்விகம் மிளிர்கின்றது. எது ஒன்றை விரும்பி மனிதன் போற்றுகின்றானோ, அதை அவன் அடைவது நிச்சயம். இதே உண்மை எல்லாச் சமூகங்களுக்கும் பொருத்தமாகின்றது. இந்தியாவிற்குச் சென்று தேசீய சம்பந்த மான பிரசங்கம் செய்வீர்களாயின், அது எவ்வளவு சிறப்பானதா யிருப்பினும் அதைக் கேட்க வருவோர் மிகச் சிலராகவேயிருப் பார்; ஆனால், சமயத்தைப் பற்றிப் போதனை செய்யுங்கள்; வெற்று வார்த்தைகளோடு நில்லாது அதனை வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுங்கள். அப்போது உங்களைத் தரிசிப்பதற்கும் உங்கள் பாதங்களைத் தொடுவதற்கும் நூற்றுக் கணக்கானோர் கூடிவிடுவார்கள்.

அப்புனித மகான் ஒரு வேளை சீக்கிரம் தங்களை விட்டுப்போய் விடக்கூடுமென்று மக்கள் கேள்விப்பட்டபோது முன்னிலும் மிகுதியாய் வந்து சூழத்தலைப்பட்டார்கள். என் குருநாதரும் தமது உடலைப் பற்றிய கவலை சிறிதும் கொள்ளாது, அவர்களனை வர்க்கும் போதனை செய்த வண்ணமாகவேயிருந்தார். இதை எங்களால் தடுக்க இயலாது போயிற்று. பலர் வெகு தொலைவி லிருந்து வந்திருந்தமையால் அவர்களுக்கு மறுமொழி பகராமல் அவர் துயில் கொள்ளமாட்டார். "என்னால் பேச முடிந்த வரைக்கும் நான் அவர்களுக்குப் போதனை செய்தே தீர வேண்டும்,'' என்று அவர் சொல்வது வழக்கம். இந்தத் தமது வாக்குக்கு ஏற்றவாறே அவர் நடந்தும் வந்தார். ஒரு நாள்,

அன்று தமது உடலை நீத்துவிடப் போவதாகக் கூறி, மிக உயர்ந்த வேத மந்திரமொன்றை உச்சரித்த வண்ணம் சமாதியில் புகுந்து விட்டார்.

அவருடைய கருத்தையும் அவர் உலகுக்குக் கொண்டுவந்த புனிதமான செய்தியையும் அறிந்தவர்களுள் ஒரு சிலரே உலகினர்க்குப் போதிக்கும் சத்தி வாய்ந்தவர்களாய் இருந்தனர். அவருடைய சீடர்களுள், சில வாலிபர்கள் முற்றுந் துறந்த சந்நியாசிகளாகி அவர் விட்டுச் சென்ற கைங்கரியத்தை மேற்கொண்டு நடத்தச் சித்தமாயிருந்தனர். அவர்களை நசுக்குவதற்கான முயற்சிகள் பல செய்யப்பட்டன. ஆனால், குருநாதரது அருட்சத்தி அவர்கள்பால் இருந்தமையால், அவர்கள் உறுதியுடன் நின்றார்கள். புனித வாழ்க்கையோடு அவர்கள் பல ஆண்டுகள் தொடர்புற்றிருந்தமையாலே தங்கள் இடம் விட்டகலாமல், உறுதியுடன் நின்றார்கள் அவ்வாலிபர்கள். அவர்களுள் சிலர் பெருஞ்செல்வர் குடும்பத்திலிருந்து வந்தவராயிருப்பினும், தாம் பிறந்த அந்நகர வீதிகளிலேயே பிச்சையெடுத்துச் சந்நியாசிகளாய் வாழ்ந்து வந்தார்கள். தொடக்கத்தில் அவர்கள் பல எதிர்ப்புகளுக்கு ஆளானார்கள். ஆனால், அவர்கள், சிறிதும் தளர்ச்சிகொள்ளாமல் உறுதியாய் நின்று, நாளடைவில் இந்தியாவெங்கணும் அப்பெரியாரது உபதேச மொழிகளைப் பரவச் செய்தார்கள்.

அம்மனிதர் வங்காள தேசத்தின் ஒரு சிறு கிராமத்திலே பிறந்து, கல்வி சிறிதுமில்லாமலே தனித்த திட சங்கற்பத்தாலேயே மெய்ப்பொருளை நேரிற்கண்டு, அதைப் பிறர்க்கும் கொடுத்து, அது மேல் நிலைபெற்று நிற்பதற்காகச் சில வாலிபர்களையும் வைத்துச் சென்றுளார்.

இன்று இந்தியாவின் கோடிக்கணக்கான மக்கள் எல்லாரும் ஸ்ரீ ராமகிருஷ்ணரை அறிந்துள்ளார். அது மாத்திரமல்லாமல், அப்பெரியாரது மாபெருஞ்சத்தி இந்தியாவிற்குப் புறம்பேயும் பரவியுள்ளது. இவ்வுலகத்தில் எங்கேனும், ஒருண்மை வார்த்தையையோ, அன்றி ஆன்ம சம்பந்தமான வார்த்தையையோ நான் பேசி இருப்பேனாயின், அதற்கு நான் அவருக்குக் கடமைப்பட்டவனாயிருக்கிறேன்; பிழைகள் எவையேனும் பேசியிருந்தால், அவைகள் என்னுடையனவேயாகும்.

“ கோட்பாடுகளைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். ஆசாரங்கள், சம்பிரதாயங்கள், கோவில் முதலியவைகளைப் பற்றிக் கவனிக்க

வேண்டா. ஒவ்வொரு மனிதனுள்ளுமிருக்கும் சாரமான சத்துப் பொருளாகிய தெய்வத் தன்மையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவை ஒன்றுமில்லாது போய்விடுகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு இத்தெய்விகத் தன்மை ஒருவனிடத்தில் அதிகரிக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு நன்மை செய்யும் சத்தியும் அவனிடம் பெருகும். முதலில் இதைச் சம்பாதித்துக்கொள்ளுங்கள். ஒருவரையும் குறைகூற வேண்டா. ஏனென்றால், எல்லாக் கொள்கைகளும் சம்பிரதாயங்களும் தம்முள் ஏதோ சிறிது நன்மையையும் வைத்துக் கொண்டிருக்கின்றன. மதமென்பது வெற்று வார்த்தையன்று; பேரும் சம்பிரதாயங்களுமல்ல. ஆனால், அது ஆன்ம அனுபவமே என்பதை உங்கள் வாழ்க்கையில் நிதரிசனமாகக் காட்டுங்கள். ஒன்றை அனுபவித்தவர்களாலேயே அதன் உண்மையை அறிந்துகொள்ள முடியும்; ஆன்ம ஞானம் அடைந்தவர்களே அதைப் பிறர்க்கும் அளிக்க முடியும். அவர்களே மனித இனத்திற்குப் பெரிய ஆசாரியர்களாய் விளங்குவார்கள். அவர்களே ஞானவொளியின் சத்தியாவார்கள்,'' என்பதே ஸ்ரீராமகிருஷ்ணர் இக்கால இந்தியாவிற்குக் கொண்டுவந்த செய்தியாகும்.

இவ்விதப் பெரியோர்கள் எந்த நாட்டில் மிகுதியாகத் தோன்றுகிறார்களோ, அந்த நாடு மேன்மையடைவது திண்ணம். எந்தத் தேசத்தில் இவ்வித மனிதர்களே இருப்பதில்லையோ, அது அழிவது திண்ணம்; அதை எதுவும் காப்பாற்ற முடியாது. ஆகவே, என் குருநாதர் மனித இனத்திற்குக் கொண்டுவந்த செய்தி என்னவென்றால், ''சமய வாழ்க்கையைக் கைக்கொண்டு நீயே மெய்ப்பொருளை நேரில் காண்பாயாக,'' என்பதாகும். உங்களுடைய சகோதரர்களுக்காக உங்களை முற்றிலும் கொடுத்து விட வேண்டுமென்றும், அவர்களிடத்திலே அன்பைப் பற்றி வெற்று மொழிகள் மாத்திரத்திலே காண்பிக்காமல், நீங்கள் அம்மொழிகளைக் காரியத்திலும் காட்டும்பொருட்டு ஈடுபட வேண்டுமெனவும் அவர் விரும்புவார். தியாகத்திற்கும் நேரில் கண்ட அனுபவத்திற்குமான காலம் வந்துவிட்டது. அதன் பிறகு உலகத்திலுள்ள சகல சமயங்களிலும் சமரசத்தைக் காண்பீர்கள்; சண்டைக்கு அவசியமில்லை என்பதையும் தெரிந்துகொள்வீர்கள்; அதன் பிறகு மனித இனத்திற்கு உதவி புரியச் சித்தமாவீர்கள். எல்லாச் சமயங்களுக்கும் மூலாதாரமாயிருக்கும் ஒற்றுமைத் தன்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டி (உலகமெங்கணும்) பரவச் செய்வதே என் குருநாதரின் உட்கருத்தாகும். மற்ற ஆசாரியர்களோ, பிரத்தியேகமாகத் தங்கள் பெயரால் விளங்கும் இதர

மதங்களைப் போதித்தார்கள்; ஆனல், பத்தொன்பதாம் நூற்ருண்டின் இப்பெரிய ஆசாரியரோ, தமக்குச் சொந்தமானது என்று எதையும் பேசவில்லை. உண்மையில் உலகிலுள்ள மதங்கள் யாவும் ஒரே மதத்தின் அங்கங்கள் என்பதைத் தம் அனுபவ வாயிலாய் அறிந்திருந்தமையினல் யாதொரு மதத்தையும் இவர் இகழ்ந்தவரல்லர்.

# பொருட் குறிப்பகராதி


அ

அஞ்ஞேயவாதம், 87, 349, 502

'அடவிசம்' (கரணத் தொழிலின் மறப்பு), 37

அநாகதம், 54

அப்பியாசம், (இதற்கு விளக்கம்) 97

'அலபதி' (மாற்று வைத்தியம்), 37

அஸ்மிதை (இதன் விளக்கம்), 188

ஆ

ஆசனம், 19, 161, 206

ஆசிய ஜோதி, 430

ஆஞ்ஞை, 54

ஆர்நால்டு, 430

ஆவேச மதம் (Spiritualism), 41, 43

இ

இடை (இதன் விளக்கம்), 44, 45

இந்திரன் (பன்றியான கதை), 141, 320

இபிலிஸ், 24

இயமம், 19, 153, 354, 357, 363

இயேசு நாதர், 363, 374, 378, 389, 398, 417, 418, 426, 428, 442, 444, 450, 452, 457, 459, 466.

இராமகிருஷ்ண பரமஹம்ஸர், 371, 477, 497, 512

இராஜயோகம் (இதன் விளக்கம்), 1, 2, 3 (அனுஷ்டான முறைகள்), 8, 10 (பயிற்சிக்கு நம்பிக்கை வேண்டுவதில்லை), 12, 13, 14 (அக உலகத்தின் சர்ச்சை), 19 (முதற்படிகள்), 21, 23, 25, 27, 29 (பிராணனைப் பற்றிய கூற்று), 31, 33, 35, 37, 39, 41, 43, 44 (சித்துப்பிராண விளக்கம்), 45, 47, 49, 51, 53, 54 [படிகள் (1) மூலாதாரம் (2) சுவாதிஷ்டானம் (3) மணிபூரகம் (4) அநாகதம் (5) விசுத்தம் (6) ஆஞ்ஞை (7) சகஸ்ராரம்] 54 55. (பிரத்தியாகாரம் தாரணை), 57, 59, 61, 63, 64 (தியானமும் சமாதியும்), 65, 67, 69, 71, 72, 73, 75 (சங்கிரகம்), 76 (இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி), 77, 78, 81

இலண்டன், 287

இலோஹிம்ஸ், 231, 358 (ஒளிமிக்க தெய்வங்கள்)

உ

உபேக்ஷை, 113

'உண்மை மகாத்துமா', 476 (மாக்ஸ்முல்லர் இராமகிருஷ்ணரைப்பற்றி எழுதிய கட்டுரை)

எ

எதிரியக்கம் (Reflex Action), 32

எரோது (Herod), 257

ஓ

ஓம், 110 (அதன் மகிமை)

க

கடோபநிஷத்து, 376 (குருடர் குருடர்களுக்கு வழிகாட்டல்)

கண்ணபிரான், 399, 400, 402 (பயன் கருதாப் பணி), 403, 404, 417 (அன்புடன் ஒரு மலரை அளித்தல்), 418 (கண்ணபிரானுடைய வாழ்க்கைக்கும் இயேசு நாதரின் வாழ்க்கைக்கும் ஒற்றுமை

கணபதி, 204

கபிலர், 318

கா

காசி, 220 (இந்நகரில் நடந்த சம்பவம்)

காபிரியேல், 70
காயத்திரி, 78 (இதற்கு விளக்கம்)
காளிதாசர், 327 (இருவரைப் பற்றி)
கான்ட், 87, 333

கி

கிறிஸ்தியன் சயன்ஸ், 22
கிறிஸ்து, 6, 439, 441

கீ

கீதை, 18 (உடலைத் துன்புறுத்தக் கூடாது), 383 (நான்கு வகையான மக்கள்) 467, (அவதாரம்) 468

கு

கும்பகம், 205
குண்டலினி, 44, 47
குர்ஆன், 36, 70, 241

கூ

கூர்ம புராணம், 76 (இதை ஒட்டிய ராஜயோகச் சுருக்கம்)

கை

கைவல்ய பாதம், 184

ச

சகஸ்ராரம், 46 (விளக்கம்)
சங்கராசாரியார், 21, 203
சப்தம், 120 (இதன் விளக்கம்)
சம்யமம், 165
சமாதி, 19, 64, 66, 71, 72, 75, 91, 99, 122 [(1) சம்பிரஞ்ஞாத (2) அசம்பிரஞ்ஞாத] 101, 104, 124, 128, 164, 166, 184, 199, 206
சமாதி பாதம், 87
சனத்குமாரர், 289

சா

சாக்கரட்டீஸ், 256, 314
சாங்கியம், 3, 16, 103, 143, 206, 273, 318
சாங்கியர்கள், 17
சாத்தான், 24
சாதன பாதம், 126

சி

சித்தம், 91 [(1) சிதறுண்ட நிலை (2) இருண்டநிலை (3) கொண்டு கூட்டுநிலை (4) ஒருவழிப்பட்ட நிலை (5) ஒடுங்கிய நிலை]
சித்துப் பிராணன், 44, 51
சிதாகாசம், 47

சு

சுவாதிஷ்டானம், 54 (விளக்கம்)
சுவேதாச்சுவர உபநிஷத்து, 21, 201
சுழுமுனை, 47 (விளக்கம்)

செ

செமிட்டிக்கு, 232, 233 (செமிட்டிக்கு ஆரியர் இவர்களுக்கிடையே உள்ள வேறுபாடு), 348

டெ

டெல்சாட்டே, 20 (ஆசனத்தைப் பற்றி)

டே

டேவி (ஸர் ஹம்பிரி), 39

தா

தாரணை, 56, 164, 204, 206

தி

தியானம், 79, 91, 104, 116, 119, 121, 134, 164, 206, 209

நா

நாசரத்து, 404
நாரதர், 80, 81 (விடுதலையைப் பற்றி) 289 (நாரதருக்கும் சனத்குமாரருக்கும்)

நி

நியமம், 19, 154
நியூட்டன், 241
நியூயார்க்கு, 3, 287, 312, 468

ப

பத்தொன்பதாம் நூற்றுண்டு, 476 (பத்திரிகை)

பதஞ்சலி, 3, 82, 105, 114, 199

பா

பாகவதம், 379. (விருப்பம் விருப்பத்தை வளர்க்கின்றது)

பி

பிங்கலே, 44, 45 (விளக்கம்) 205

பிரெஞ்சுப் புரட்சி, 291 (அறிவுத் தேவியை வழிபடுதல்)

பிரத்தியாகாரம், 19, 56, 61

பிரணவம், 107 (ஓம்—இதன் விளக்கம்)

பிராணுயாமம், 19, 21, 25, 29, 31, 35, 36, 39, 43, 52, 56, 78, 114, 160, 161, 162, 204

புத்தர், 6 … 422, 423 (வெளிநாட்டில் ஞானப் பணி) 424, 429, 430, 431, 432, 433, 435, 436, 438 …

பூதாகாசம், 4 …

பூரகம், 205

பைபிள், 425 …

மணிபூரகம், … கம்)

மாக்ஸ்முல்லர், 479

மார்மன், 525

மி

மில்டன், 327 (இருளேப் பற்றி)

மு

முக்குணம், 140, 141, 142, 143 [(1) ஒளி - சத்துவ குணம் (2) செயல் - ரஜோ குணம் (3) அசைவின்மை - தமோ குணம்]

முகமது நபி, 70, 71, 224, 405, 463, 464

முள்ளந்தண்டுக்கொடி, 44 (Spinal Cord)

மூ

மூலாதாரம், 47, 54

யா

யாஞ்ஞவல்கியர், 203

லோ

லோகாயத வாதம், 349

வி

…சுத்தம், 54

…பூதி பாதம், 164—183 (சித்திகளைச் சித்திரிப்பது)

வியாச சூத்திரம், 209

விவிலியம் (பைபிள்), 241, 361

ஜெ

…லம், 445

ஷோ

…னர், 328

ஹ

…ாகம், 20

…ாகிகள், 20

ஹெ

…, 333

…ஹருக்கு, 70 (முகமது ஏறிச்சென்ற குதிரை)

ஹெஞேதியிஸிம், 323

ஹோ

ஹோம்…